பரப்பிரஹ்மணே நம:

ஆரியர்

திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்.

இஃது

கோயமுத்தூர் கலாநிதியின் பத்திரிகாசிரியரும், ஸ்ரீ பெரும்பூதூர், திருநாராயணபுரம், திருப்பதி, காஞ்சி, காசி, அவந்திகாதி திவ்ய ஸ்தலமகத்துவங்கள், ஆஸ்திகமதசித்தாந்தம் முதலான மத விருக்ஷம், கலியுகதர்மம், புனர்விவாஹபுண்ணியம், வேதாந்தசூரியோதயம், கோதையர் கொம்மி, பெண்களின் சரித்திரம், பூர்வ இந்துசமயம், பிரம்மோபாசனபத்ததி, ஆரியர் சங் கேதசாஸ்திரம், சாமுத்திரிகா சாஸ் திரம், தருக்கசாஸ்திரம், தக்ஷிண இந்தியா சரித்திரம், பலிஜவாரி புராணம், இந்து பைபில் என்னும் ஆரியர் வேதம், விவசாய சாஸ்திரம், பிரம்மசமய சரித்திரம், ஆரியர் ஆசாரம், ஷை சித்தாந்தம் முதலான கிரந்தங்களின் கர்த்தரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஓர் அங்கத்தினருமாகிய

சேலம் - பகடால நரசிம்மலு நாயுடவர்களால்

இயற்றப்பெற்று,

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

[இரண்டாம் பதிப்பு]

விலை ரூபா 2.



PRINTED BY P. NADAMUNI NAIDU PURSAWALKAM MADRAS
1918.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

இப் புத்தகத்தின் முதற்பதிப்பை 22 வருஷங்களுக்கு முன்பு பதிப்பித்தனன். இந்நாட்டார் மூர்த்தி ஸ்தலம் தீர்த்த ஸ்தலம் முதலானவைகளைத் தரிசிப்பதில் அதிக அவாவுடையவர்களென்பது திண்ணம். ஆயினும் அவற்றின் ஆதி உற்பத்தி விவரத்தையும் மத்தியகால தற்கால ஸ்திதிகளையும்பற்றி விசாரிப்பது அபூர்வம். தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளமாகிய நான்கு பாஷைகளைமாத்திரம் அறிந்த இத்தென்னாட்டார் வங்க கலிங்க காஷ்மீர ஹிந்து ஹிந்துஸ்தானி கூர்ஜரம் மஹாராஷ்டிரம் முதலான பாஷைகளைப் பேசும் தேசங்களிலுள்ள திவ்யஸ்தல திவ்யதீர்த்த திவ்ய பருவதப் பிரதேசங்களினுடைய பிரபாவத்தைச் சாங்கோபாங்கமாகக் கேட்டறிவது அசாத்தியம். இக்குறைவை நீக்கும்பொருட்டே இப்புத்தகத்தைப் பதிப்பித்தனன். இக் கருத்தை அறிந்த தமிழ்நாட்டார் தாங்கள் வடதேசயாத்திரை செய்யும்போதெல்லாம் இப் புத்தகத்தை வாங்கிக்கொண்டு தமது யாத்திரைத் தோழனாகக் கொண்டுபோய்ப் படித்து அதிற் கண்டபடி அநுஷ்டித்துச் சுகயாத்திரை செய்ததைப்பற்றி எனக்கு அநேகவந்தன கடிதங்களை எழுதிக் கொண்டாடினார்கள். ஆகவே, இதன் இரண்டாவது பதிப்பைச் சுத்தப்பிரதியாகத் திருத்தியும், நான் முன் பதிப்பில் உகைமோசமாக விட்டிருந்த சில திவ்ய ஸ்தலங்களின் சரித்திரங்களைச் சேர்த்தும், அந்தந்த விடங்களிலுள்ள விசேஷ கட்டிட நதி பர்வதங்களின் படங்களைச் சேர்த்தும் பதிப்பிக்க எண்ணினேன். எண்ணினுமென்ன? இடையில் வந்துள்ள பல தொல்லைகளினால் எனது எண்ணத்தை முற்றும் முடிக்கக்கூடவில்லை. ஆயினும் முதற்பதிப்பைவிட இதில் அநேக நூதன விஷயங்களைச் சேர்த்துக் கூடியவரையில் சுத்தப்பிரதியாகப் பதிப்பித்திருக்கின்றதன்றியில், அநேக அன்பர்களுடைய வேண்டுகோளின்படி எனது உருவப்படத்தையும், ஒரு இந்தியப் படத்தையும் இதில் சேர்த்திருக்கின்றேன். அந்த இந்தியப்படத்தில் குறித்திருக்கும் பட்டணங்களின் விவரத்தை அப்பட்டணங்களின் முன்னிற்கும் எண்களிலுள்ள இப்புத்தகத்தின் பக்கங்களில் பார்க்கக் காணலாம்.

முதற்பதிப்புப் புத்தகங்களை ஏராளமாக வாங்கி உற்சாகப்படுத்திய அன்பர்களும் ஏனையோரும் இந்த இரண்டாம் பதிப்பையும் வாங்கி உற்சாகப்படுத்தினால் கூடிய சீக்கிரத்தில் மூன்றாம் பதிப்பைத் தக்க படங்களோடும் விஷயங்களோடும் பதிப்பிக்கச் சித்தமாக இருக்கின்றனன்.

கோயமுத்தூர்
கலாநிதி ஆச்சிரமம்.
19.3ஹு மேமீ 15உ

இங்ஙனம்:
சே. ப. நரசிம்மலு நாயடு.

நான்முகம்.

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராகிய ஜகதீசுவரர் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசராயும், அபார சக்தியுடையவராயும், அபார கருணையுடையவராயும் இருந்து சிருஷ்டித்த சகல ஜீவகோடிகளிலும் மானவ ஜாதியாராகிய நம்மைச் சிறந்த பிறவிகளாகப் படைத்து நமக்கு இகலோக சுகமென்றும், பரலோக சுகமென்றும் இரண்டுவித சிரேஷ்ட சுகங்களையும் நியமித்திருக்கின்றனர். இவ்விருவகைச் சுகங்களுக்குக் காரணமாகிய அறம், பொருள், இன்பம், வீடென்னும் புருஷார்த்தங்களை யடையும்படி நாம் பிறந்தவிடத்திலேயோ, மற்றும் இவ்வுலகத்திலிருக்கும் வெவ்வேறு தேசம், நாடு, நகரம், மலை முதலான விடங்களிலேயோ சஞ்சரித்து, முன்சொன்ன நான்கில் அறம், பொருள் இன்பம் என்னும் மூன்றுவித பேறுகளை யநுபவிப்பதோடுங்கூட, அந்தந்தத் தேசம், நாடு, நகரம், தீபம், மலை முதலான விடங்களிலிருக்கும் பூசாரம், ஜலசாரம், சீதோஷ்ணம், காற்று முதலானவைகளும், தாதுவர்க்கம், கந்தமூலம், கிரிமிகீடகம், பக்ஷி, மிருகாதி மாந்தர்களின் விசித்திர விநோதமான ரூப குண பேதங்களைக் கண்டும் கேட்டும், இவைகளுக்கு ஆதிமூலமாகிய பரமேசுவரருடைய பெருமையை யறிந்து மேற்படி மூன்றுவித சுகங்களாகிய சிற்றின்பங்களைச் சிறுகச்சிறுக விட்டு, பேரின்பமாகிய வீட்டையடையப் பிரயத்தனப் படச்செய்வதேயாம். இவ்வித பிரயத்தனத்துக்கு இகலோக யாத்திரை என்று பெயர். இந்த இகலோக யாத்திரையின் உத்தேசமெல்லாங்கூடித் தேகசுகத்தையும், மனோவிஞ்ஞான விருத்தியையும், ஆத்மோன்னத ஸ்திதியையும் தெய்வபக்தியையும் விருத்தியாக்குங் காரணமாயிருத்தலால், இதற்குத் திவ்யதேச யாத்திரையென்று சொல்லப்பட்டது. இவ்விதமான உலகயாத்திரையின் பயனை யநுபவித்த பிறகு, இதற்கு மேலான சாஸ்வதானந்த சுகத்தை யடைவதற்குப் பரலோக யாத்திரை என்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர். இதைச் சற்று ஆழ்ந்து யோசிப்போமாகில் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் இகலோக யாத்திரையும், பரலோக யாத்திரையும் இன்றியமையாததாய் ஈசுவரர் நியமித்திருப்பது ஸ்பஷ்டமாகும். இவ்விருவகை யாத்திரைகளில் இகலோக யாத்திரையானது பிரத்தியக்ஷத்தில் கண்டு அநுபவிக்கத் தக்கதாயும், பரலோக யாத்திரைக்குப் படிக்கட்டாயும் இருக்கிறது. ஆனதுபற்றியே, நமது ஆரியர் இந்த இகலோக யாத்திரையைப் பலவிதமாகச் சிறப்பித்து பாகவதம், பாரதம் முதலான கிரந்தங்களிற் சொல்லி

யிருக்கின்றனர். அவற்றின் கருத்தையே ஞானாமிர்தமென்னும் பத்திரிகையிலிருந்து இங்குப்பதிப்பிக்கின்றனன். அதாவது:—

"திவ்யஸ்தல யாத்திரை சித்த சுத்தியையும் இஷ்ட சித்திகளையும் ஒரு தலையாக விளைக்குமென்பது யுக்திக்கும் அநுபவத்திற்கும் முழுதும் இசைந்த சத்திய சங்கதியேயாம். ஒருவன் திவ்விபஸ்தல யாத்திரைசெய்ய உத்தேசிக்குங் காலத்திற்றானே இகபோக வைராக்கியமும், பாரமார்த்திக விருப்பும் அவனிடத் துளவாகின்றன. அந்த யாத்திரை யுத்தியோக மாத்திரையாலே ஒருவனுக்கு அங்ஙனம் இகபோக வெறுப்பும் பரவாழ்வின் விருப்பும் உதிக்குங்கால், அவன் தன் வாசஸ்தலம்விட்டு அந்நிய ஸ்தலங்களுக்கு யாத்திரைபோக மனம் ஒருப்பட்டு, சில நியம சங்கற்பத்தோடு வெளிப் புறப்பட்டு நடக்கின்றான். இனி அங்ஙனம் நியம சங்கற்பத்தோடு வழிக்கொண்டு நடக்கும் அவன் அந்நிய திவ்யஸ்தலங்களை அடைந்து ஆங்காங்குத் தங்கிச் செல்கின்றுழி, ஆங்காங்கு நேர்தரும் மலை, கடல், ஆறு முதலியனவும், மக்கள், விலங்கு, புள், மரம், பிறவும் ஆகிய தெய்வ சிருட்டி வைபவங்கள் பல கண்டு மிக்க அதிசய மனத்தனாய், அமல சின்மய முதல்வன் அளவில் அறிவாற்றல் நினைந்துபோற்றி அப்பரன்பால் முன்னையினும் அன்புவழிபாடு மிக வுடையவனாகின்றான். அதுவொன்றோ, அங்கங்கே தான் சந்திக்கும் நல்லோர் பலருடன் லோகவியாபார வியற்கைகளையும், ஆன்மலாப சாதன முறைகளையும் பற்றி நன்கு விசார சம்பாஷணைஞ் செய்து, அறியாதன பல அறிந்து ஆனந்த மடைகின்றான். அதுவொன்றோ, அவன் அங்ஙனம் சாதுசங்க சம்பாஷணைத்தினால் தான் அடைந்த அறிவுகளெல்லாவற்றையும், தன் விவேக மதியோடு சார்த்திச் சிந்தித்துத் தெளிந்து, அவை தனக்குக் கைவல்யம் ஆதற்கு வேண்டும் சாதக உதவிகள் பலவும் அங்கங்கே அச்சாதுக்கள் அருளால் எளிதில் பெற்றுய்தற்குச் சக்தனுமாகின்றான். அவன் யாத்திரை குறித்து எழுதற்கு முன்னர்த் தன்னூரிற் பற்றியிருந்த பந்துக்கள் முதலிய உயிர்ப்பற்றும், வீடு விளைநில முதலியனவும், தன தானிய முதலியனவுமாகும் பொருட்பற்றும், மெல்லமெல்லத் துறந்து, அவைபற்றிவருங் கவலைகளும், துக்கங்களும் பெரிது மிலனாய் மனத்திடம் நன்குபெற்று ஆனந்த வாழ்வில் ஒருமை யுறுகின்றான். முன்னெல்லாம் தான் கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும், உண்டதே யுண்டும், மோந்ததே மோந்தும், உடுத்ததே யுடுத்தும், அவை தன் முயற்சியால் வருவனவென்று ஐம்புலவழியே நம்பி, அதில்

முழுகிநின்ற அவன், அவை ஆண்டாண்டுப் புதிது புதிதாய்ப் பலவாறு விடாது பொருந்தித் தனக் கநுபவமாதல் கண்டு பண்டைவினைக் கிடாகப் பரமன் கூட்டி யூட்டுமாறிதுவாகும், இது நம் முயற்சியான் நாட்டப்படுவதன்று, இந் நுகர்ச்சி யென்று அப்பேறுபற்றி முறுகுதலின்றி, அதற்கு வேறாய்த் தொடர்பின்றி ஒழுகும் கடன்முறை யுடையனாகின்றான். இனி அவன் யாத்திரைபோய்த் தங்கிச்செல்லும் ஸ்தலங்களில் மக்கள் முதலிய உயிர்ச்சார்பும் மற்றைப் பொருட்சார்பும் அவன் தன்னை மிகப் பிரபந்தித்துத் துடக்குறுவிக்கமாட்டா. என்னை? அவன் அங்கங்கே நீடுதங்காமல் அவையெல்லாம் புறம்பாயொழியச் சடுதியில் போக்கொருப்பட்டு இடம் பெயர்ந்து செல்லும் யாத்திரை ஒழுக்கினனாதலினென்க. இந்தப்பிரகாரம் யாத்திரையினால் பொய்ப்பற்று நீங்கி, மெய்ப்பற்று மிகுதலின் அவன் சித்தமாசற்றுச் சுத்தி மிகவுடையனாய் இஷ்டசித்திகள் பெற்று மேம்படுகின்றான். இம்முறையினால் திவ்விய ஸ்தல யாத்திரை மாந்தர்க்குச் சித்த சுத்தி முதலியன தப்பாது விளைவிப்பதோர் ஞானசாதனமாகும் என்பது யுக்தி யநுபவசித்தமாக இனிது அறியப்படுதலின், அது சுருதி மொழி மாத்திரையாய் வருவதொன்றன்று; சுருதி, யுக்தி, அநுபவ மூன்றற்கும் ஒத்ததாய் வரும் சாதநச்செயலேயாம் என்று கடைப்பிடிக்க.

இனி மனிதர் தேசயாத்திரை செய்யாமல், தாந்தாம் பிறந்த பிறந்த ஸ்தலங்களிற்றாமே வசித்தல் செய்வாராயின், அவர்க்கு மேற்கூறிய நன்மைகளும், சித்தசுத்தியும், தத்துவ உணர்வும் எய்தமாட்டா. இனி ஸ்தாவர ஜீவாத்மாக்களைக் காட்டிலும் சங்கம ஜீவாத்மாக்களுக்கு மேம்பாடு அதிகமுண்டாகுதல், அவைகள் ஓரிடத்திலே நிலையுறுதலின்றி வசிக்குமிடம் விட்டு மற்றோரிடம் போய் உலாவி, இஷ்டபூர்த்தியுறும் போக்கியதை உடையனவாதல் பற்றியேயாம். இனி அச்சங்கமங்களுள் மனிதர் மேம்பாடு அதிக முடையராகுதல் தாம் விரும்பிய நன்மைகளை விரும்பியபடி பல தேசயாத்திரை போய்ப் பலவாறு கண்டு, தேர்ந்து அடையும் போக்கியதையுடையராதல்பற்றியேயாம். மனிதர் தேசயாத்திரையை விரும்பாது தாந்தாம் பிறந்த பிறந்த ஸ்தலங்களையே அபிமானித்து விடாறுபற்றியிருந்து ஜீவித்து இறந்து ஒழிவாராயின், அவர் மற்றை மிருக முதலிய சங்கமங்களினும் தாழ்ந்தவராதலோன்றே, ஸ்தாவரங்களினும் கடையாராய்த் தம்முயர் பிறவி விருதாவாகக் கழித்துப் பழிக்கவும் படுவர்." பேறும்,

இந்தத் திவ்வியதேச யாத்திரையின் பெருமையை யறிந்தோர் இத்தேயத்து ஆரியர் மாத்திரமல்ல. ஐரோப்பா, அமெரிக்கா தேயங்களிற் சிறந்த தத்துவஞானிகளும், கவிகளும் அறிந்து அதைச் சிறப்பித்து எழுதியிருக்கின்றனர். அதற்கு லார்டு பேகன் (Lord Bacon) சாஸ்திரியார் யாத்திரையின் பிரயோஜனத்தைப்பற்றியும், அதைச் செய்யும் விதத்தைப்பற்றியும் பின்வருமாறு எழுதியிருக்கின்றனர்:—

"யாத்திரையினால் சிறியோர்க்குக் கல்வியும், பெரியோர்க்கு அநுபவமும் முடிவு பெறும். ஒரு தேசத்தில் புகுமுன் அதன் பாஷையைச் சற்றேனும் அறியாதவன் அதில் தனித்து யாத்திரை செய்யப்புகாமல் அத்தேசத்தையும் அதன் பாஷையையும் அறிந்த புலவரையேனும், கௌரவமுள்ள ஊழியரையேனும் துணையாய்க்கொள்ளின் நலம். ஏனெனில் அவர் அங்குள்ள நற்காட்சியின்னவை, நற்கேண்மை யின்னோர், மெய்மனப் பயிற்சிக ளின்னவை என விளக்கிக் காட்டுவார். இல்லெனின், சிறியோர் கண்மூடிகள்போல் சென்று யாதுங் காணாது வருவர். கடலுங் ககனமுமன்றி மற்றொன்றுந் தோன்றாத கடற்பிரயாணத்தில் தினசரி யெழுதுவோர் அளவற்ற காட்சியுள்ள கரைத்துறையில் அதை யெழுதாதிருப்பது விந்தையா யிருப்பதுமன்றி, திருஷ்டத்தைக் காட்டிலும் அதிருஷ்டமே குறிக்கச் சிறந்தனபோலும். அரசரின் சபைகளும், முக்கியமாய்த் தர்பாரும், வழக்குகளைத் தீர்க்கின்ற நியாயஸ்தலங்களும், குருக்கள்மார் சபைகளும், கோவில்களும், மடங்களும், அவற்றிலுள்ள புதுமைகளும், கோட்டை நகர் அரண்களும், அகழ்முதலான காவல்களும், கப்பல்நிலைத் துறைகளும், புராதன கட்டடங்களும், புஸ்தகச்சாலைகளும், கற்றோர் சபைகளும், சர்ச்சாப் பிரசங்கங்களும், கப்பல்களும், தோணிகளும், பெரியநகர் அரண்மனைகளும், உத்தியாவனங்களும், ஆயுதச்சாலைகளும், பண்டமாற்றிடங்களும், பண்டகசாலைகளும், குதிரைப்பந்தயங்களும், மல்லயுத்தங்களும், படைகளின் பயிற்சிகளும், பெரியோர் அணுகுகின்ற சிங்கார நாடகங்களும் அணிபாடைக் களஞ்சியங்களும், மந்திரச்சபைகளும், புதுமை யற்புதங்களும், இவைபோல ஆங்காங்கே சிறந்தனவெலாம் நற்காட்சியாம்; ஆகலின், புலவரும், ஊழியரும் இவையெல்லாம் ஆராய்ந்து காட்டவேண்டும். வெற்றியுற்சவங்களும், பொய்க்கோலம், திருவிழவு, மணமரணச் சங்கங்களும், கொலையாளி தண்டனையும் இத்தன்மையானவை எனத் தாமாய் விளங்குவதால் குறிப்பாகக்

காட்டவேண்டாம். ஆயினுமவற்றைப் பாராமுகமும் செய்ய வேண்டாம். சொற்ப யாத்திரையினால் அதிக விஷயங்களை யறியவேண்டும். சிறுவன் முன் கூறியவாறு அந்நாட்டுப் பாஷையை ஒருவாறறிந்திருப்பதுமன்றி அந்நாட்டை முன் னறிந்த புலவரையும்,ஊழியக்காரரையும் கைக்கொண்டுசெல்ல வேண்டும். அந்நாடுகளின் வரலாற்றை விளக்கிக் காட்டவல்ல ஒருபடமேனும், புஸ்தகமேனும் கையிலிருப்பின் அவன் விசாரணைக்குஅதுஒருதிறவுகோல்போலும்.தினசரியும்எழுத வேண்டும். அந்தந்த நகரத்தின் சிறப்பிற் கியைந்தபடி, அதி லிருக்கவேண்டுமேயன்றி அதிககால மிருக்கவேண்டாம். ஒரு நகரிலுள்ளவரை, அடிக்கடி இருப்பிடத்தை மாற்றுவதால், அறிமுகம் எளிதில் வாரும். தந்நாட்டாரை வரைந்தந்நாட்டின் மேன்மக்களுடன் புசிக்க, நாடுவிட்டு நாடு மாறுங்கால், அங் குள்ள பெரிய மனிதருக்கு ஒப்படைப்புக் கடிதங்கள் பெற் றுக்கொண்டு போவதினால், தான் விரும்புமவற்றை எளிதிற் காணவும் அறியவும் கூடும். இவ்வாறுகில் சொற்பசஞ்சாரத் தால் அதிக லாபமடையலாம். யாத்திரையில் கொள்ளவேண் டிய நண்பர்களில் மந்திரிகள், ஸ்தானாபதிகள், இவர்களின் நட்பு வெகு பயனுள்ளதாகும். எப்படியெனில், அவனிவ்வாறு சஞ்சரிப்பது ஒருநாடாயினும், பலநாடுகளின் வரலாற்றைக்கிர கிக்கலாம். சுற்றுப்பக்கங்களிலுள்ளநாடுகளில் பேரும்,பிரதிஷ் டையும் பெற்றுவிளங்கியிருக்கிறபெரியமனிதர்களைக் காண்பத னால்,அவர்கள் அப்பெயரையும்,பிரதிஷ்டையையும் பெற்றிருப் பதுநியாயமோஅநியாயமோவென்பதைஅறியலாம்.சண்டைக ளினின்றும் வெகு ஊக்கத்துடன் விலகுக. இச் சண்டைகள் சாதாரணமாய்ப் பெண்களையும், சுகத்தையும், இடத்தையும், சொற்களையும் பற்றினவாயிருக்கும். யாத்திரை செய்வோர் கோபிகளுடன் பேசுங்கால் வெகு ஜாக்கிரதையா யிருக்கவே ண்டும். இல்லெனில் அவர்கள் வலியப் போருக்கிழுப்பார். யாத்திரை செய்வோன் சுவதேசத்துக்கு மீண்டபிறகு தான் சஞ்சரித்த நாடுகளை மறந்துவிடாமல் அங்குள்ள சிறந்த நண் பர்களுடன் எழுத்துமூலமாய்நட்பைப் பயிலவேண்டும்.அவன் யாத்திரை செய்தானென்பது பாஷையினால் விளங்க வேண்டு மேயன்றி வேஷத்தினாலல்ல. வலியக்கதை சொல்வதினும், கேட்டோருக் குறைப்பது உசிதம். ஒருவன் சொந்த ஆசாரக் கோட்பாடுகளை நீக்கி அவன் சஞ்சரித்த நாட்டினவற்றைக் கைக்கொண்டதாக விளக்கவேண்டாம். ஆயினும் அன்னிய

தேசத்தில் கிரகித்த நல்லொழுக்கங்களாலும் கோட்பாடுகளாலும் சுவதேசத்தினவற்றை யலங்கரிக்கலாம்" இது நிற்க.

இப் பூவுலகத்தை எல்லாம் சுற்றிப்பார்த்து பரமேசுவரருடைய பெருமையை அறிந்துய்ய எம்மை இயற்கை யறிவு பல வருஷங்களாகத் தூண்டியது. தூண்டினும் என்ன? கடவுளது கிருபையும், காலானுகூலமும், தேகதாருட்டியமும், திரவிய சகாயமும் பொருந்தி யிருந்தாலன்றி திவ்வியதேச யாத்திரை செய்துவருதல். கஷ்டசாத்தியம். ஆகவே, இப் பூவுலகம் முழுதையுஞ் சுற்றிப்பார்க்க விருப்பங்கொண்டயான் இந்தப் பிரபஞ்சத்தின் பிரதான தேசங்களில் ஒன்றும், எனது ஜனன தேசமுமாகிய இந்த இந்துதேசத்தையாகிலும் சுற்றிப்பார்க்க வரங்கொடுக்க வேண்டுமென்று சர்வேசுவரரைச் சதாவேண்ட, அவரது கிருபையால் இத்தேசத்தின் சில விசேஷ பாகங்களைப் பார்க்கப் பாக்கியம் பெற்றேன். அப்படிப்பார்த்த விடங்களின் பெருமைகளைப்பற்றிப் பல வருடங்களாக வழக்கமாய் எழுதிக்கொண்டுவரும் எனது தினசரித்திரப்புஸ்தகத்தில் ஆங்கிலேய பாஷையில் எழுதி வைத்தேன். அவைகளைக் கண்டும் கேட்டும் உள்ள அன்பர்கள் அவைகளைப் பிறரும் படித்தும் கேட்டும் போய்ப் பார்த்துவரப் பிரயோஜன மாகுமென்று அறிவித்ததால், அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்து எனது கலாநிதிப் பத்திரிகையில் பக்ஷம் தோறும் பதிப்பித்து வந்தேன். இவைகளைப் படித்த அன்பர்கள், இது இத்தேச யாத்திரை செய்வோருக்கு ஒரு வழிகாட்டு நூலாக உதவுமென்று கேட்டுக்கொண்டமையால், இப்போது புத்தக ரூபமாகப் பதிப்பித்தேன். இதன் அட்டவணையினால் இதிலடங்கியிருக்கும் நாடு, நகரம், மலை, மாகாண முதலானவைகளின் மேன்மையான சங்கதிகள் விவரமாகும். இடையில் சம்பவித்த பல வேலைகளால் யான் இத் தேசத்தில் யாத்திரைசெய்து கண்ட நாடு நகரங்களின் பெருமைகளையெல்லாம் ஒரே புத்தகத்தில் முடிக்கக் கூடாமையால், இதை முதற்பாகமாகப் (Vol. I.) பதிப்பித்து, மற்றவைகளை இரண்டாம் பாகமாகப் (Vol. II.) பதிப்பிக்கத் துணிந்தேன். பெரியோர் இதில் காணும் பிழைகளைப் பொருட்செய்யாமல் குணங்களையே நாடுவார்களென்று நம்புகின்றனன்.

கோயமுத்தூர்: 1889ளு ஜனவரிமீ 30உ

இங்ஙனம்:
சே. ப. நரசிம்மலு நாயுடு.

வடதேசத்தில்
யாத்திரைசெய்ய விரும்புவோர்க்குச்
சில விசேஷக் குறிப்புகள்.

1. வடதேசத்தில் விசேஷமாகக் குளிர் அதிகமாகையால் குளிர்காலத்தைப் பார்க்கிலும் உஷ்ணகாலமே யாத்திரைக்கு உத்தமம். மழைகாலத்தைவிடக் குளிர்காலம் மத்திமம்.

2. யாத்திரை செய்வோர் போதுமான தேகதாருட்டியமும், திரவியசகாயமும், புருஷசகாயமும் இருந்தாலன்றி, பெண்டுபிள்ளைகள், விருத்தர், வியாதியஸ்தர் முதலானவர்களை விட்டுத் தாம் மாத்திரம் போய்வருவது உத்தமம். பெண்டுபிள்ளைகளோடு போவது மத்திமம். வியாதியஸ்தர், வயோதிபர்களைக் கூட்டிக்கொண்டு போதல் அதமம்.

3. வடதேசங்களில் பெரும்பான்மையான பட்டணங்களில் அரிசி, பருப்பு, புளி முதலான சாமான்களும், பாத்திரங்களும் ஏராளமாக விருப்பதால், அவைகளை இங்கிருந்து வண்டிச்சத்தம் கொடுத்துக்கொண்டுபோவது வீண் செலவும், வீண் வருத்தமுமே.

4. யாத்திரைக்காரர் தமக்கு இன்றியமையாத துணிமணிகளை மாத்திரமே கொண்டுபோதல் உத்தமம். அளவுக்கு மிஞ்சிய துணிமணிகளைக் கொண்டுபோவோருக்கு வண்டிகளிலும், வாடகை வீடுகளிலும் வருத்தங்களதிகமாகும்.

5. நல்ல கம்பிளி உடைகள், பூட்சுகள், இரவில் தூங்கக் கம்பிளி, படுக்கை, போர்வைக் கம்பளம், பிளேக், பேதி, ஜுரம் முதலான வியாதிகளைக் கண்டிக்கும் காம்பர்டைன், குளோராடைன், கொயினா, சுக்கு, திப்பிலி, மிளகு முதலான மருந்துகளையும் வேண்டியவரையில் கூடக் கொண்டுபோதல் உத்தமம்.

6. தென்தேசத்து கரன்சி நோட்டுகள் (நாணயக் கடிதங்கள்) வடதேசத்தில் விசேஷமாகச் செலவாவது கஷ்டசாத்

தியாகையால், கூடியவரையில் ரூபாய் பணங்களையும், சொற்ப நோட்டுகளையும் கொண்டுபோதல் உத்தமம்.

7. மணியார்டர் என்னும் சர்க்கார் தபால் நாணயம் இப்போது வழங்குவதால், வேண்டியபோது தமது சொந்த தேசத்து வீட்டுக்காரர்களுக்கும், பந்துக்களுக்கும் தெரிவித்துத் தொகையை(தந்தித்தபால்மூலமாகவும்) பெற்றுக்கொள்ளலாம்.

8. கங்கை, யமுனை, சரயூ, கிருஷ்ணை முதலான நதிகளில் அடிக்கடி முழுகுதலும், சூரிய உஷ்ணம் அதிகரிப்பதற்கு முன் முழுகுதலும் நல்லதல்ல.

9. தீர்த்தக்கரைகளிலும், ஸ்தலங்களிலும் பூஜாரிகள், பண்டாக்கள், கங்காபுத்திரர்கள், கயாவாளிகள் அதிகமாக விருந்துகொண்டு பணங்களைப் பிடுங்கிவிடுவார்கள். ஜாக்கிரதையாக விருந்து சிக்கனமாகச் செலவு செய்தல் உத்தமம்.

10. யாத்திரைக்காரர் தங்கும் தர்மசாலைகளிலும், சில கட்டடங்களிலும் விபசார ஸ்திரிகளும், திருடர்களும் இருக்கிறார்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை! மேலும், அத்தருமசாலைக்கு அருகிலிருக்கும் கடைகளிலேயே போஜனாதி சாமான்களை வாங்கும்படிக் கட்டாயப்படுத்துவார்கள். அந்தச் சாமான்களோ அநியாயமும், அதிக விலையாகவுமிருக்கும். ஜாக்கிரதையாகவிருத்தல் உத்தமம்.

11. பிரயாணஞ் செய்யும்போதும், மற்றவிடங்களில் தங்கும்போதும் பழையசாதம், தயிர், மிட்டாய், கொய்யாப்பழம், இலந்தைப்பழம், யாம்பழம், நெல்லிப்பழம், அன்னாசிப்பழம் முதலானவைகளை உண்டால் உடனே வியாதிவரும். மிளகு ரசத்துடன் புதிய சாதம், தேநீர், காப்பிநீர், ரொட்டி முதலானவைகளை மிதமாகச் சாப்பிடுதல் உத்தமம்.

12. இராக்காலங்களில் சீக்கிரம் சாப்பிட்டுக் கட்டிலின் மீது கம்பளப்போர்வையுடன் படுத்துக்கொள்ளுதல் உத்தமம். நெருப்புக் கணப்புச்சட்டியில்குளிர்காய்வதும் நலந்தரும்.

13. காசி, ஆக்ரா, டில்லி முதலான சில பெரிய பட்டணங்களில் தாசி வேசிகளும், சால்வைத் துப்பட்டாக்களும்,

சில்லரைச் சாமான்களும் அதிகம். அவைகளை விரும்பாமல் வெறுத்துத் தூரத்தில் தள்ளுதல் உத்தமம்.

14. வடதேசங்களில் ஒற்றைமாட்டுவண்டி, ஜட்கா வண்டி முதலான சில்லரை வண்டிகள் கிடையா. எக்காவென்ற ஒக்காத வண்டியும், கோச்சு வண்டிகளுந்தா னிருக்கின்றன. கஷ்டத்துடன் கஷ்டப்பட்டு கோச்சுவண்டிகளை வாடகைக்குக் கொண்டுபோகுதலே உத்தமம்.

15. வேடிக்கை விநோதங்களையும், ஸ்தலமகத்துவங்களையும் அறியவிரும்பில், அந்தந்த நாடுகளின் சுயபாஷை, இங்கிலிஷ் பாஷை முதலானவைகளைத் தெரிந்த வழிகாட்டிகளுக்கு யாதாவது சிறிது பொருள் கொடுத்தால் கொண்டு போய்க் காட்டுவார்கள்.

16. யாவரிடத்திலும் மரியாதையாகவும் அன்பாகவும் பேசினுல் வேண்டிய உதவிகள் பெறலாம்.

புகைவண்டி முதலானதுகளில் ஏறுவோருக்குச் சில விசேஷக் குறிப்புகள்.

17. தென்தேசங்களின் புகைவண்டிகளைப் பார்க்கிலும், வடதேசத்தின் புகைவண்டிகள் பெரும்பாலும் இராக்காலங்களிற் போவதால், யாத்திரைக்காரர் வண்டி ஏறுவதற்கு அரை மணி நேரம் முந்தியே போய் டிக்கெட்டுகளை (சிட்டுகளை) வாங்கிக்கொள்ளுதல் உத்தமம்.

18. வடக்கே சில ஸ்டேஷன்களில் டிக்கெட்டு கொடுப்போரும், போலீசு பாரா கொடுப்போரும் இனம் கேட்பார்கள். யாதாவதுசொற்ப திரவியங்கொடுத்தால் வேண்டிய உதவி செய்வார்கள். இது கெட்ட வழக்கம். ஆயினும், யாத்திரைக்காரர் மேலான அதிகாரிகளுக்கு இக்கெடுதியைத் தெரிவிக்கக் காலமில்லாமையால் விதியின்றி அனுசரிக்கவேண்டியிருக்கிறது.

19. புகைவண்டி யேறும்போது கொண்டுபோகும் சாமான்களை (Goods) வண்டிகளிற்போட்டுப் பலவித நஷ்டமடை

வதைப் பார்க்கிலும், இரண்டு பணம் அதிகம் கொடுத்துத் தான் போகும் வண்டியுடன் கொண்டு போகுதல் உத்தமம்.

20. 2-வது வகுப்பு வண்டியிற் போவோர், மிட்டாய், சாதம், காய்கறி முதலான பதார்த்தங்களைக் கொண்டுபோய்த் தின்று வண்டியை அசங்கியப்படுத்தலும், சுருட்டு குடித்தல், வெற்றிலை போடல், தேகத்தில் போதுமான உடையில்லாதிருத்தல், அடிக்கடி எச்சில் துப்பல் முதலான காரியங்கள் இதர பிரயாணிகளுக்கு முக்கியமாக ஐரோப்பியர்களுக்கு அருவருப்பை யுண்டாக்கும். இதைச் சுதேச யாத்திரைக்காரர் கவனித்தல் உத்தமம்.

21. மூன்றாவது வண்டியில் ஏறிப்போவோரும் மேற்படி காரியங்களைச்செய்தாலும், இதர பிரயாணிகளுக்குக் கஷ்டநிஷ்டூர முண்டாகும்படிப் படுத்துக்கொள்ளல், மலமூத்திராதிகளைக் கழித்தல், வண்டி போகும்போது எச்சல் துப்பல் முதலானவைகள் இதரர்களுக்கு மனவருத்தத்தை யுண்டாக்கக்கூடும். இது விஷயத்தில் எச்சரிக்கையாக விருத்தல் உத்தமம்.

22. ஸ்டேஷன் மாஸ்டர் முதலான புகைவண்டி உத்தியோகஸ்தர்களிடம் மரியாதையுடனும், அன்புடனும் பேசினால், அவர்கள் வேண்டிய உதவிசெய்வார்கள்.

23. புகைவண்டிகளில் யாராக விருக்கினும் விருத்தருக்கும், வாலிப குழந்தைகளுக்கும், வியாதியஸ்தர்களுக்கும், ஸ்திரிகளுக்கும் முதலில் உட்கார இடங்கொடுத்துப் பிறகு தாம் உட்காருதல் உத்தமம்.

24. யாத்திரை செய்வோர் தாம் காண விரும்பும் நாட்டின்விருத்தாந்தம், படம் முதலானவைகளை முன்னதாகவே கூடக் கொண்டுபோகுதல், (உஜ்ஜயினி, குவாலியூர், ஜயப்பூர் முதலான விடங்களில் வேறு வேறுவித நாணயங்கள் வழங்கி வருதலால், அந்த நாணயங்களையும் முன்னதாகவே சம்பாதித்துக்கொண்டு போகுதல்) உத்தமம். அங்காங்குத் தாங்கள் காணும் அதிசயங்களை அன்றாடம் எழுதிவைப்பது நலம். அந்தந்த நாடுகளின் பெரிய மனுஷர்களையும், விசேஷ காரியங்களையும் அறியவேண்டுமானால், அந்தந்த விடங்களிலிருக்கும் போஸ்டு(தபாலாபீஸ்),பெரிய பாடசாலைகள், பொதுஜன வாசகச்சாலைகளுக்குப் போனால் தெரிந்துகொள்ளலாம்.

25. வடதேசத்தில் ரெயில்வே சில்லரைச் சிப்பந்தி சேவகர்களும் வண்டிக்காரர்களும் பொதுவாக வடதேசத்தார்களில் பெரும்பாலார் மூடர்களும். முன்கோபிகளுமானபடியால், அவர்களிடம் நயமாகவும், மரியாதையாகவும் பேசினால் நன்மை படையலாம்.

26. யாத்திரைக்காரர் செய்யும் காரியங்களனைத்தும் ஈசுவரனைத் தியானித்துச் செய்துவந்தால் எண்ணிய காரியம் எளிதிற் கைகூடும்.

இங்ஙனம்:

சே. ப. நரசிம்மலு நாயடு.

சிறப்புப்பாயிரம்.

இஃது

கோயமுத்தூர் மஹாவித்வானும், மும்மணிக்கோவை முதலான கிரந்தங்களின் கர்த்தரும், டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டுகளின் வக்கீலும், கோயமுத்தூர் தேவஸ்தான கமிட்டியின் கௌரவ காரியதரிசியுமாகிய

ம-ா-ா-ஸ்ரீ கந்தசாமி முதலியாரவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

சீர்பெறு கங்கை சிறந்திடு காசி
ஏர்பெறு பிதிர்கட் கியைதரு கயையுடன்
வடநாட் டுள்ள வளம்பெறு தலங்களும்
தென்னாட் டுள்ள சிலதலங் களுஞ்சென்
றாங்காங் குள்ள அதிசயம் பலவளந்
தேங்குறு முன்னைத் தேச சரித்திரம்
தற்கா லத்தின் சரித்திரம் பாடை
கற்குநர் நடையுடை கைத்தொழின் முதலிய
யாவையுந் தெளிவுற வாராய்ந் தமைத்துச்
சேவையி னிமித்தந் தேயயாத் திரையிற்
செல்லுநர் செல்லுழிச் செய்வன தவிர்வன
வல்லுந ராகி வழிபெறற் பொருட்டுத்
தாமின் புறுவ துலகின்புறல் கண்டு
காமுறல் கற்றறிந் தார்கடஞ் செயலெனு
மெள்ளலில் பெருமை வள்ளுவர் திருமொழிக்
கிலக்கிய மாக நலத்தரு திவ்ய
தேசயாத் திரைதான் செய்திடு சரிதமென்
றூசில் பெயர்நிறீஇ யளித்தன னொருநூல்
மித்திரன் இராங்க சாமிநா யுடுதவப்
புத்திரன் என்றும் பொதுநலப் பிரியன்
குலாதிபர் வாழுங் கோயமா நகரான்
கலாநிதிப் பத்திரி காசிரி யன்சீர்
பெற்றிடு பிர்ம்ம சமாஜப் பெற்றியன்
கொற்றவர் மதிக்குங் குணம்பல வுடையோன்

கணிதநூல் தருக்கநூல் கானநூல் முதலிய
அணிபெறச் சுருக்கி யச்சிட் டுதவினோன்
ஆங்கில யந்துடன் ஆந்திரந் தமிழென
சங்கியற் பாடைக ளெழில்பெற உணர்ந்தோன்
பரவுறுஞ் சேலம் பகடால
நரசிம்ம நாயுடு நராதிபன் றனே.

கோயமுத்தூரிலிருக்கும் ம-ா ா-ஸ்ரீ கணபதிபிள்ளையவர்கள் குமாரரும், டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டுகளின் வக்கீலுமாகிய
ம-ா-ா-ஸ்ரீ

வீராசாமி பிள்ளையவர்களா லியற்றப்பட்ட

நிலைமண்டிலவாசிரியப்பா.

மூநிலக மொராஞ்சி முழங்கிய திரையிற்
பகலொளி பொதிந்த பன்மணி வரன்றி
யரிமணற் கரைதொறு மெறிபுனற் கடலும்
விரிநிழற் றெய்வத நறுமலர்த் தருவின்
வேர்படிந் தெங்கும் பேர்பெறு கங்கை
சந்தமார் யமுனை சிந்துகோ கருணி
முதற்பல புனித நதிப்பெரு வளமை
மல்கிய விமய மால்வரைத் தொடரு
மெல்லையா வுடைய விந்திய தேச
மன்னவர் தம்மிற் பன்னரும் பெருமை
துன்னிய ராஜ சுதந்தரி யேக
சக்ர வர்த்தினி துக்க நிவர்த்திசெய்
மங்காப் பிரபல செங்கோற் காதல
மாதுவிக் டோரியாள் மணிமுடி சூடி
யேதமி லாட்சி யிசையுற நடாத்தும்
பாரதமா கண்ட மருவிய குடிகள்
சுதந்தர மென்னு மிதம்பெறக் கருதி
வங்காளத் தலைமை வளநக ரதனிற்
பொங்கமாக் கூடிப் பொலிந்தபே ரவைக்கோ
ரங்கமாச் சேர வழகொடு மேன்மை
துங்கமாக் கொண்ட தொன்மைசேர் கோய
மாநக ரதிற் ராநக மலர்ந்த

வேண்டுகைக் கிசைந்து மேவிய பெருமை
பூண்டமெய்த் திறலான் புண்ணிய சீலன்
வசையறு செய்கை யிசையுறக் கற்றோன்
செந்தமிழ் தெலுங்கு செறிந்தவைங் கிலிய
மிந்தமுப் புணரி யிரும்புனல் பருகிப்
பெருமழை பொழியும் பிரசண்ட மேகம்
தாணிபர் மகிழுந் தருமதி யூகன்
தேசாபி மானி திகழ்பரப் பிரம்ம
பூசா துரந்தர பொதுநலப் பிரியன்
நண்புறும் பகடால நரசிம்ம பூபன்
கண்டப விடம்படு கவினெலாந் திரட்டிக்
காணு மாந்தர் கண்டது போலப்
பூணு வுவகை பூண விசைந்த
விரிதமிழ் நடையில் விரவிய யாத்திரைச்
சரிதமென் றொருநூல் சாற்றின னஃது
நேருற வமைந்து சீர்பெற விளங்கிக்
கற்றவர்க் கின்பந் தெற்றென நல்கி
யருமையுற் றதிக பெருமைபெற் றதுவே.

சாற்றுக்கவிகள்.

கோயமுத்தூர்

மா-ா-ா-ஸ்ரீ சின்னையபிள்ளையவர்கள் குமாரரும், ஷெயூர் ஆர். சி. ஹைஸ்கூலின் தமிழ்ப்பண்டிதருமாகிய மா-ா-ா-ஸ்ரீ சாமிநாதபிள்ளையென்று அழைக்கப்படுகிற

வீராசாமிபிள்ளையவர்களா லியற்றப்பட்ட

ஓரடியெதுகை விரவிய

நேரிசையாசிரியப்பா.

மலர்பல வினமொரு கொடியிடை மலர்ந்தாங்
கிலகுறு கிளவையின் றெழில்பெற வவண்முத
லல்லது மவனு மசனமாந் தானு
கல்லதைக் குழைத்த காளை யாகையான்
நமக்கொரு சொந்தத் தமப்பெரு மருக
னாகென வுற்றனி யதிமகிழ் வொடுமணத்
திகழ மிமய மெழிலுற வடக்கணே
தெற்கணே குமரியின் றெற்கெலை குமரியுங்
கடலொடு கவினக் கடலே மேல்கீழ்
எல்லைபா நிலவுமிந் * நாவ லத்திடைத்
தொல்லையிற் றேவ தாயமா பாடை
வளர விளங்கிய வளமைச் சங்க
மொழிவிர வோங்கிய குளிர் † சக தம்புயம்
‡ காளி கட்டங் கயாபிருந் தாவன
மீஇனி கிருட்டின னருளு § துவரை
வடமது ராபுரி இடமகல் பிரயாகை
ஏனைய பலநக ரினமில் வளமும்
நதிகேத் திரமே நடையுடை மொழியே
மதிகாட் சிகளை மாண்பவை பலவே
சரிதமோ டங்கை யுரியவா மலகமாக்
காட்டிடு மிந்நூற் கண்ணுறு திறமதைச்

---

* நாவல் = நாவலந்தீவு = இந்ததேசம் = India.
† சகதம்புயம் = காசி = Kasi or Benares.
‡ காளிகட்டம் = கல்கத்தா நகரம் = Calcutta.
§ துவரை = துவாரகாபுரி = Dwaraka.

சேட்டுமா மணிப்பணிச் சேடனு முரைந்துரைத்
தந்த முறச்சி ரந்த மறிகலா
துடல நெளிவுற வுயர்நாப் பிளவுறக்
கடனுடை யங்கனை கான்மல ரேதொடு
தலைபெற நிறீஇத் தவமியற் றுவனல்
சாச்சு வதியுந் தானிலை காணா
திராச்சுவ மானமா மிடையுற் றனனே
அகத்தியன் குறுகினா னுதவ னொளித்தான்
மகத்தர சாயிர மலர்விழி பெற்றான்
தேவ குருவொடு சேரும் புதனும்
பாவகன் மதியொடு படுவா னாயினர்

ஆகையின்,

அடியேன் புகழ்திலீங் கடிமே யாகுமென்
றென்றும் புகன்றில னன்றுடை யிஃது
செய்தவன் யாரெனிற் செப்புதுங் கேண்மோ
கைதவ மறியான் கலாநிதி யதிபன்
தேசோப காரி ஆசார னேரி
யாதிபர் மகிழு மோதுறு கொடையினன்
பொதுநலப் பிரியன் விதுமுக வேனில்வேள்
* பொதுமகா ஜனசபை போற்ற வெழுந்தவன்
பதுமைநீங் காதுறை பாழியா கத்தினன்
வேதங்க ளெல்லாம் வேத முதற்பொருள்
ஒன்றே யெனவு முணர்ந்து மறந்தே
நின்றழிந் தொழியு நிலையிலாத் தேவரைப்
போற்றுறு பவர்போற் போற்றா தொருபரப்
பிரமமே பழிச்சும் பிரம சமாஜி
ஆத்திக மேற்றியே நாத்திகங் கிழித்ததான்
நாத்திகந் தழைவுற நாட்டிய கனகனை
விழ்த்தி யுரங்கிழி வித்தக னாயினன்

அதனான்,

அரசர்கள் விரும்பு மறிஞன்
நரசிம்ம னோர்கவென் னன்பின னன்றே.

---

* பொதுமகாஜனசபை = Congress.

இஃது
கும்பகோணம் புரொவின்ஷியல் காலேஜில்
தமிழ்ப்பண்டிதராக இருந்த திரிசிரபுரம் மஹாவித்துவான்
சி. தியாகராஜச் செட்டியாரவர்கள் மாணாக்கரும்,
கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய கும்பகோணம்
ம-ா-ா-ஸ்ரீ ஆர். சபாபதிப்பிள்ளையவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

திருமரு மார்பத் தொருபெருந் தேவன்
உந்தியந் தாமரை வந்த வாரண
நான்முகத் தொருவன் மேன்முறை நாளின்
வகுத்தபல் லண்டத் தொகுப்பினுட் சிறந்த
நிலவுல கத்திற் குலவுமாப் பதிகளின்
இறந்தவர் பிறவாத் திறந்தரு மென்னச்
சிறந்தவர் கூறு மறந்தழை தெய்வக்
காசியை முதலுப கேசிநா யகனும்
அங்கையி னேமிகொள் செங்கண்மா யவனும்
இடங்கொளுந் திருநக ரடங்கலுங் காணூஉ
ஆங்காங் குற்ற தேங்குபல் வளனும்
தேவர்கள் பரவுங் கோவர்த் தனமுதல்
எண்ணில்மால் வரைகளி னண்ணுமாச் சிறப்பும்
கங்கையா தியபன் மங்கல தீர்த்தமும்
மேவுவார் நடையுடை பாவனை யெவையும்
காணுவார் காணப் பேணுவார்க் கன்றியும்
பார்க்குஞ் செயலிலா தார்க்குந் தெளிவுறக்
கண்டவற் புதமெலாங் கண்ட வாறே
தெற்றெனப் புலமையி னற்றமிழ் நடையிற்
சொன்னபம் பொருணயந் தன்னுபு விளங்க
யாத்திரைச் சரிதமென் றியாத்தொரு நூலைப்
பருப்பொரு ளனைத்தையும் விருப்புறு வார்தமக்
கொருப்படக் காட்டுந் தருப்பணம் போல
அளவில்பே ரின்பி னுளமகிழ்ந் தளித்தனன்
மேவுமச் சிரீபோ னிபாவனோ வென்னின்
அம்புதி பமுதமொன் றும்பர்நா டுடைத்தென
இம்பரவ் வமுதமும் பம்புபு கிடந்து

தொகுதமி னதனை நகுதல்செய் தொளிரும்
மேயசீர் பலவுறு கோயமா நகரான்
எம்மதத் தோருஞ் சம்மத மேயென
மதவிருக் கம்முத விதமுறு கணிதநூல்
கீதநூல் தருக்க நீதிநூ லியாவும்
இச்சையி னுலகோர்க் கச்சிட் டுதவினோன்
நிலாவி விளங்கு கலாநிதிக் காசான்
பொதுநல விருப்போ டிதமொழி பகர்வோன்
கேட்டோர் பின்னும் வேட்டு வேட்டுப்
பாவுறப் புகலும் பிரசங்க சாகரம்
நல்லன வெல்லாம் புல்லு மில்லம்
அல்லன வெல்லா மகற்றும் பெருவளி
சான்றோ ரவையி னேன்ற மாமணி
செந்தமிழ் தெலுங்குமுந் தாங்கி லேயம்
இந்தநன் மூன்று மிருந்திடு பேழை
பொறைகுணந் தவமெய் யுறையுங் களஞ்சியம்
எல்லாந் தானு மிருக்கும் பரமெனச்
சொல்லார் பொருளே சுகிக்கு மாலயம்
ஞாலம் புகழுஞ் சேலம் பகடால
நரசிம்ம நாயுடென் றியாரும்
உரைசெயுஞ் சீர்த்தி யுயர்பெரி யோனே.

இஃது
திருஞானஸ்தல பரம்பரை இயற்றமிழ்ப்புலவரும், கோயமுத்தூர்
கேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய பிரம்மஸ்ரீ
பாலை பாரதி,

முத்துசாமி ஐயரவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

மணித்திரை கொழித்திடும் வாரிதி யுடுத்த
பணித்தலை கிடந்திடும் பாரினிற் சிறந்த
குலக்கிரி யெட்டினுட் குலவுநீ ளிமயா
சலத்தினைத் தொட்டுத் தண்கடற் சேது
இடைப்பல பலவா யியைந்திடு தலங்களில்
அடியேம் நடந்திடி னறமுதற் பயனருள்
கயையரி துவார காபுரி காஞ்சி

உயர்வுறு மதுரா வேங்கட மயோத்தி
பதித்தவர் பிறப்பினை மறுத்திடுங் காசி
செறித்தக லாடங் களை தெறும்பிர யாகையே
பால்வதரி காசிரம் வந்திகா மாயா
காண விளைந்திடு கவினுகோ காணமும்
கோகுல விருந்தா வனங்குரு கேத்திரம்
ஆகுல மொழித்திடு மத்திறு புரியே
இன்னன மாதல மான்மிய விபற்கையாம்
அன்னவை காண வவாவுறு கருத்தால்
மன்னவர் மணிமுடி வயங்கொளி படர்தாள்
அன்னைவிக் டோரியா வணிபுகழ் பரவ
செங்கோல் செலுத்திடும் சென்னைபம் பாயுடன்
பங்காள நாடருங் பரவு காங்ரேசெனும்
மகாசபைக் கேகிட மதித்திடும் ப்ரபுக்களிற்
சகானு பவங்களைத் தெரிந்துசார் ப்ரபுவாம்
சொற்றிறந் தெரிந்த சுடர்மணி விளக்கம்
கற்றறிந் தவர்புனை கதிர்மணி மகுடம்
வடகலை தென்கலை வடுகு கன்னடம்
அடர்துளுக் குடனல வாங்கிலப பாஷையின்
இலக்கணத் துறைவழா திலக்கியத் திறமெலாம்
சலக்கண மாயறி சகசிர முடியோன்
கருவிநூ லறிவுநூல் கணிதநூற் றருமநூல்
விரவிய சிற்பநூல் மேவுகாந் தருவநூல்
பிரபல மாகவே பெருகுநூற் பொருளெலாம்
பெருமழை யெனப்பொழி ப்ரசண்ட கார்மேகம்
பிறமத கண்டனன் பிரம சமாஜன்
அறிவில ரகத்திரு ளறவெழு பானு
உலகினுக் கிசைந்த பொதுநல மியற்ற
வலனுற ரூபனும் மதியுள விதானன்
விண்மணிக் கிடுபல வெண்கவி ரிக்குநேர்
தண்மலர்ச் சினையசைத் தலங்குதண் டலைகளும்
மாமணித் திருமகள் வதிவுகாட் டிடமலர்
தாமரைத் தடங்களும் சாலிபார் பண்ணையும்
மதிபக டேர்ந்திடும் மாடநீ ளிறைகளார்
துதிபெறு கோயமுத் தூரினிற் செழித்து

நிலாவிளை நேமியின் செய்தியை யுணர்த்துங்
கலாநிதிப் பத்திரா திபரொனுங் கனவான்
சேலம் பகடால நரசிம்ம நாயடுவென
ஞாலமேற் கியாதியை நாட்டிடு முரவோன்
மாந்த ரியற்கையும் மாதல வியற்கையும்
ஏய்ந்தபல் பொருள்களி னியற்கையும் வரைந்துமே
காசியாத் திரையெனும் காரணக் குறியிட்
டாசிலா நூலொன் றாக்கின னதனலம்
எடுத்துரை செய்ப வெவர்களோ
இடத்தினைக் கொண்டவர் செப்புவாய் மின்னே.

இஃது
கோயமுத்தூர் டிஸ்திரிக்டு முனிசிப் கோர்ட்டு வக்கீல்
ம-ா-ா-ஸ்ரீ மஹாவித்வான் சந்திரசேகரம் பிள்ளையவர்கள் குமாரரும்,
ம-ா ா-ஸ்ரீ மஹாவித்வான் கந்தசாமி முதலியாரவர்களின்
மாணாக்கரும், கோயமுத்தூர் லண்டன் மிஷன் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதருமாகிய ம-ா-ா-ஸ்ரீ

திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

மணிதிகழ் பஃறலை வாளராச் சுமந்த
வணிதிகழ் நெடுந்திரை யகனில வலயத்
தெவ்வுயிர் படியினு மவ்வுயிர்க் கிரங்கி
யிருங்கதி யளிக்கும் பெருஞ்சுர நதிமான்
நெடுந்திரை யெறிய உடுவெனத் திகழு
முத்தக ணிறையப் பெற்றநற் காசியுந்
தம்பிதிர் கணங்கட் கொண்புன விறைக்க
வம்புவி மாந்தர் அனுகுமா கயையும்
மங்காச் செல்வ வளம்பெற் றுயர்தரு
வங்கா ளப்பெயர் மாப்பெருந் தலமு
மற்றும் வடக்க ணுற்றபல தலமுந்
தென்னாட் டுள்ள திருத்தலஞ் சிலவுஞ்
சென்றுகண் டாங்கு திகழுதி சயங்கள்
அன்றுள செய்தி யான்றிரு வாலயம்
மாயவன் கோயில் மடந்தடம் சாலை
இறங்குவார் தங்கி யின்புறா உ மிடங்கள்
அறம்பயி லியல்பு அமைந்துள செங்கோல்

நீர்வளம் பாடை நிலவள முதலா
ஏர்வளர் கைத்தொழில் எழில்பெறு வர்த்தகம்
இன்னன பிறவு மன்னிடத் தொகுத்துத்
தேயயாத் திரையின் நேயமிக் குறிஇப்
பல்பயன் குறித்துச் செல்குன ரிடரொரீஇ
சென்றுவந் தினிது சிறந்திடன் பொருட்டு
நன்றுநன் றென்று நானிலம் புகல
தேசயாத் திரைதான் செய்திடு சரிதமென்
றேசில் பெயர்நிறீஇ யியற்றின னொருநூல்
நற்றவத் திரங்க சாமிநா யுடுவவற்
குற்றசற் புத்திர னுலகோப காரன்
மங்கிடாச் சீர்த்தி வளர்ந்துபல் வளமார்
கொங்குநன் னாட்டிற் குளிர்பூங் காவல்
பெட்டையி னாடல் பிரிக்குமா மந்தி
கிட்டிமேய பணிலக் கின்னிகை யேந்தி
முக்கனிச் சாறு முகந்தினி தளிப்ப
வக்கணை மூட லகன்றுற வாடும்
அரசக் கானத் தமலனூ ரருகில்
முரசெக் காலும் முழங்கிடு தொன்னகர்
தாயி லொத்தார் தயையுள மாந்தர்வாழ்
கோயமுத் தூரிற் குடிகொளுங் குணவான்
நிலாவென விளங்கு கலாநிதிக் கதிபன்
நாத்திகர் தம்மை நலிந்திட மறுத்தே
ஆத்திக நாட்டு மருநூற் கருத்தன்
இந்து சமய மெனப்பெய ரியனூல்
தந்த சமர்த்தன் தர்க்கநூற் கதிபன்
பற்பல நூல்கள் பகர்ந்தினி தளித்த
சிற்பனன் வேந்தர் விரும்பிடு குணத்தோன்
தீந்தமிழ் தன்றொடு சேர்ந்தவாங் கிலியம்
ஆந்திர முதலா வறிந்திசை பெற்றோன்
நாஷனல் காங்கிரெஸ் நற்சபை தனக்குத்
தேசப் பிரதிநிதி யாகமுன் சென்றோன்.
ஞாலமான முகமெனுஞ் சேலமா நகரான்
பரவுறுங் கீர்த்திப் பகடால
நரசிம்ம நாயுடா நண்பன் றனே.

இஃது

கோயமுத்தூரைச் சார்ந்த சாமக்குளம் வித்துவானும் ம-ா-ா-ஸ்ரீ
மஹாவித்துவான் கந்தசாமிமுதலியாரவர்கள்
மாணாக்கருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ

வெங்கடரமண அய்யங்காரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அகடால பத்திரநேர் மடவார்வாழ் சேலநக
ரமர்ந்து பூவு
குகடால மிசைபெருகும் பொழிற்கோவை நகரிலிநாட்
குடிகொண் டுய்வோன்
பகடால நரசிம்மப் பெயர்பொறுத்துத் தமிழ்நூல்கள்
பலசெய் தொற்றைச்
சகடாலப் பரிதிலெவயில் தருநிலத்திற் புகழ்பெரிது
தரித்த மேலோன். (க)

காசிகயை வங்காள முதற்பலவாந் திருத்தலங்கள்
கண்டங் குள்ள
மாசில்திரு மூர்த்திதல தீர்த்தமடஞ் சாலைமுதல்
வளங்க ளெல்லாம்
ஏசில்பல மாந்தர்நனி யுணர்ந்துய்தற் கொருநூலின்
றியற்றித் தந்தான்
பேசிடிலின் னோன்பெருமை புனறருமைம் முகிலதனிற்
பெரிதா மம்மா. (உ)

ம-ா-ா-ஸ்ரீ வித்துவான்

நாகூர்-மு. செவத்தி மரைக்காயரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீரோங்கு நெடுவரைத்தாய் நீணதித்தாய் தடநகர்த்தாய்ச்
சிறந்து வைகிப்
பாரோங்கு பலகண்டத் தாளும்பா தகண்டமிகப்
பயன தென்ன
நீரோங்கு கண்டமதன் வடதிசையாத் திரையினெழூஉ
நிலவப் போந்து

தாரோங்கு தோள்விட்டப் பலவளனுங் கண்கூடாத்
தழைக்கப் பார்த்து. (௧)

இந்தியா வெனுமிவண்வா ழெவர்களுக்கு மறாநன்மை
பென்றும் பூப்ப
வந்தியா வருமேவனுங் கூடுசபைக் காதாரம்
வருத்தும் வண்ணம்
பந்தியா நின்றநிது வென்னவொரு திருக்கிரந்தம்
பண்ணி யாண்டு
முந்தியா வருங்களிப்பக் கைமாறு கருதாம
லுபகரித்தோன். (௨)

திறங்காட்டு மனந்தளராத் தேசோப காரியெனச்
செழும்பேர் பூண்டு
நிறங்காட்டு கலாநிதியைத் தடங்கோய முத்துரி
னிலவச் செய்து
புறங்காட்டு தகையினராய்த் தந்தேசச் செழிப்புகவாப்
பொறாமை யோரைக்
கறங்காட்டு மாறூட்டிக் கனத்தபெருஞ் சபைக்கெல்லாங்
கண்ணாய் நிற்போன். (௩

உரைக்குமிள மையிலணிந்த மங்கலநா ணொரீஇக்கவின்வி
ளொழிந்து மேனி
திரைக்குமிப லகன்றுமறு மணத்தின்ப முளங்குளிரத்
திளைப்பச் செய்தோ
னிரைக்குழுபர் பலசமயத் துளும்பிரம சமாஜத்தை
நெடிய காலம்
வரைக்குமுல கினினிறுவ விராப்பகலா யுழைத்ததிக
மகிமை வாய்ந்தோன். (௪)

பலன்மேவு மதவிருத்த மென்னுமொரு நூன்முதலாப்
பலநூற் செய்து
நிலன்மேவு மாறநிறீஇப் பண்டிதருங் களிப்பெய்த
நிறைத்துத் தன்சீர்
குலன்மேவு மணிவிளக்கிற் குலவுமொரு தனிவள்ளல்
குறைதீர் செல்வ
நலன்மேவு சேலநா சிம்முலுநா யுடுவென்னு
நாவ லோனே. (௫)

இந்நூலாசிரியர் கோயமுத்தூரைச்சார்ந்த இடிகரை, வட்டமலை பாளையம், செங்காளிபாளையம் முதலான கிராமக்குடிகளால் ஸ்தாபிக்கப்பட்ட தேசாபிமானி சபையில் இந்த யாத்திரை மகத்துவத்தையும் பொதுவாக இராஜகிய விஷயங்களையும் பற்றி உபந்நியாசம் செய்தபோது அங்குள்ள வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ நம்புசாமி ஐயரவர்கள்

இயற்றிய கவி.

மகாராஜராஜஸ்ரீ சேலம்வாழ் பகடாலு
மதியூகி நரசிம்மலு
மாராய டவர்க ளின்னுடனது மித்திரர்
மனங்களின் புருவதாக
வட்டமலை யென்னுமா நகர்தனில் தேசாபி
மானியாஞ் சபைமத்தியில்
வருடித்த மாரியா லறிவிலா மூடராம்
வாடியசெஞ் சாலியலவும்
சுகமாகி வளமாகி கதிரோங்கி விளையுமென்
சொல்லலாம் வல்லநிபுணர்
சொல்லரிய தமிழ்தெலுங் காங்கிலோ ஆரியந்
துலுக்குமுத லாம்பாடையிற்
சொல்லியே யெல்லவர்க ளல்லல்தீ ரச்செயும்
சுந்தரக் கிருபநேயன்
சுதேசாபி மானியாம் சபைகளுள் வருடிக்கும்
சொல்லரிய கருணைமேகம்
ஜகமெலாம் புகழுநற் கல்கத்தா பம்பாயிற்
சேர்ந்தகாங் கிரஸ்சபையில்
சென்றவர்க் கறியவே மன்றுடி யாவையும்
தெரிவித்த ஜீவரத்னம்

தாரோங்கு தோள்விம்மப் பலவளனுங் கண்கூடாத்
தழைக்கப் பார்த்து. (க)

இந்தியா வெனுமிவன்வா ழெவர்களுக்கு மறுநன்மை
யென்றும் பூப்ப
வந்தியா வருமெவனுங் கூடுசபைக் காதாரம்
வருத்தும் வண்ணம்
பந்தியா நின்றதிது வென்னவொரு திருக்கிரந்தம்
பண்ணி யாண்டு
முந்தியா வருங்களிப்பக் கைமாறு கருதாம
லுபக ரித்தோன். (உ)

திறங்காட்டு மனந்தளராத் தேசோப காரியெனச்
செழும்பேர் பூண்டு
நிறங்காட்டு கலாநிதியைத் தடங்கோய முத்தூரி
னிலவச் செய்து
புறங்காட்டு தகையினராய்த் தந்தேசச் செழிப்புகவாப்
பொறுகும யோகரைக்
கறங்காட்டு மாறூட்டிக் கனத்தபெருஞ் சபைக்கெல்லாங்
கண்ணாப் நிற்போன். (ஙு)

உரைக்குமிள மையிலணிந்த மங்கலநா ணொரீஇக்கவின்வி
ளொழிந்து மேனி
திரைக்குமிப லகன்றுமறு மணத்தின்ப முளங்குளிரத்
திளைப்பச் செய்தோ
னிரைக்குமுபர் பலசமயத் துளும்பிரம சமாஜத்தை
நெடிய காலம்
வரைக்குமுல கினினிறுவ விராப்பகலா யுழைத்ததிக
மகிமை வாய்ந்தோன். (ச)

பலன்மேவு மதவிருக்க மென்னுமொரு நூன்முதலாப்
பலநூற் செய்து
நிலன்மேவு மாநதிநீ இப் பண்டிதருங் களிப்பெய்த
நிறைத்துத் தன்சீர்க்
குலன்மேவு மணிவிளக்கிற் குலவுமொரு தனிவள்ளல்
குறைநீர் செல்வ
நலன்மேவு சேலநா சிப்முனா புடுவென்னு
நாவ லோனே. (ரு)

இந்நூலாசிரியர் கோயமுத்தூரைச்சார்ந்த இடிகரை, வட்டமலை பாளையம், செங்காளிபாளையம் முதலான கிராமக்குடிகளால் ஸ்தாபிக்கப்பட்ட தேசாபிமானி சபையில் இந்த யாத்திரை மகத்துவத்தையும் பொதுவாக இராஜகீய விஷயங்களையும் பற்றி உபந்நியாசம் செய்தபோது அங்குள்ள வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ நம்புசாமி ஐயரவர்கள்

இயற்றிய கவி.

மகாராஜராஜஸ்ரீ சேலம்வாழ் பகடாலு
மதியூகி நரசிம்மலு
மாநாய டவர்க ளின்னுடனது மித்திரர்
மனங்களின் புருவதாக
வட்டமலை யென்னுமா நகர்தனில் தேசாபி
மானியாஞ் சபைமத்தியில்
வருடித்த மாரியா லறிவிலா மூடராம்
வாடியசெஞ் சாலியலவும்
சுகமாகி வளமாகி கதிரோங்கி விளையுமென்
சொல்லலாம் வல்லநிபுணர்
சொல்லரிய தமிழ்தெலுங் காங்கிலோ ஆரியந்
துலுக்குமுத லாம்பாடையிற்
சொல்லியே யெல்லவர்க ளல்லல்தீ ரச்செயும்
சுந்தரக் கிருபநேயன்
சுதேசாபி மானியாம் சபைகளுள் வருடிக்கும்
சொல்லரிய கருணைமேகம்
ஜகமெலாம் புகழுநற் கல்கத்தா பம்பாயிற்
சேர்ந்தகாங் கிரஸ்சபையில்
சென்றவர்க் கறியவே மன்றுடி யாவையும்
தெரிவித்த ஜீவரத்னம்

சென்னைமா நகரினுங் கும்பகோ ணத்திலும்
சேர்மகா ஜனசபையிலும்
செய்தஉபந் நியாசமதில் தேசாபி மானமே
தெரியவரு வித்தமேகம்
தகைமைசேர் கவர்னராம் ராபர்ட்டு பூர்க்குடன்
தனக்கே வருத்தமாபோல்
தடைசெய்து பாரஸ்டு லாக்களை திருத்தென
தந்திரஞ் செய்யும்நிபுணர்
சகலரும் அறியவே கலாநிதி வளங்குறற்
சாதுகுண சங்கலாலன்
தனக்குவந் தனம்சொல சகசிரச் சென்னியுள
சக்கிரி தனக்குவசமோ.

ஓம்

பரப்பிரஹ்மணேநம:

திவ்விய தேசயாத்திரையின்

விஷய அட்டவணை.

திவ்விய தேசயாத்திரையின் விஷய அட்டவணை

முற்றிற்று.

TO

The Wellwishers

OF THE

Indian National

(Social Political & Religious)

Congress.

TO WHICH

MY HEART & SOUL

HAS CLUNG

AMIDST MANY DIFFICULTIES AND TRIALS,

The Following Pages are Dedicated

OUT OF PURE AFFECTION AND DEVOTED LOYALTY,

உ

கடவுள் துணை.

சேலம், பகடால, நரசிம்மலு நாயடவர்கள்

பரதகண்டத்தின் பிரதான பட்டணங்களாகிய

காசி, கயா, பர்த்வான், சின்சுரம், கல்கத்தா, அயோத்தி, பைஷா பாத்து, லக்ஷ்மணபுரி, கான்பூர், ஆக்ரா, டில்லி, வடமதுரை, கோகுல பிருந்தாவனம், கோவர்த்தனம், இராஜபுடாணு, ஜயபூர், உஜ்ஜினி, இந்தூர், பஞ்சவடி, பம்பாய், பூனு, பண்டரிபுரம்

முதலான விடங்களிற் செய்த

திவ்விய

தேசயாத்திரை சரித்திரம்.

ஸ்ரீ பரமேசுவரருடைய கிருபையால் எங்கும் பிரித்தானிய ரென்று புகழ்பெற்றோங்கும் ஆங்கிலேயருடைய செங்கோலுக்குட்பட்ட ஆரியவர்த்தமாகிய இவ்விந்துதேசத்தின் குடிகளை அந்தச் செங்கோலின் கீழ் இதுவரையில் அனுபவித்து வந்த சுக வாழ்வைப்பார்க்கிலும், பின்னும் பல சுதந்திரங்களையும், பெருமையையும், பிரதிஷ்டையையும், பெற்றுச் சுகமாக வாழ்விக்கச் செய்யக்கருதி, பங்காள இராஜதானியின் பிரதான பட்டணமாகிய கல்கத்தா நகரில் கி.பி. 1886-ம் ௵-ம் டிசம்பர்௴ 27-28-29-தேதிகளில் மஹா ஜனங்களால் கூட்டி வைக்கலான இந்துஜன சமூஹ மகாசபைக்குக் கோயமுத்தூர் டிஸ்டிரிக்ட்டின் பிரதிநிதியாகப் போய்வரும்படி எம்மையும் வேறு சிலரையும் அங்குளளார் நியமித்தார்கள். அப்படி நியமிக்கலான பிரதிநிதிகள் பலருக்கும் சில பல அசந்தர்ப்பங்களைப்பற்றிப் போகக்கூடாமையா யிருந்

படியால், நாம் மாத்திரம் போய்வரச் சம்பவித்தது. அதைப் பற்றி ஆப்தர்கள் சிலரிடம் யோசிக்கையில், சிலர், எமது தேகஸ்திதியையும், காலஸ்திதியையும், காசின் செலவையும் யோசித்து இந்தப் பெரிய யாத்திரையைச் செய்வது கஷ்டசாத்தியமென்று சொன்னார்கள். சிலர், எம்மை நோக்கி, தேசக்ஷேமத்துக்கு உழைக்க விரும்புவோர், தமது தேகஸ்திதி முதலானவைகளைக் கருதிப் பின் வாங்கல் நன்று அன்றென்றும், மேலும் பத்திரிகையைப் பிரசுரஞ் செய்வோர் பல தேசங்களையும் பிரத்தியக்ஷமாகப் பார்த்துத் தெளியவேண்டுமென்றுஞ் சொன்னார்கள். இவ்விரு வகுப்பான ஆப்தர்களுடைய கருத்துக்களைக் கொண்டு இரண்டொரு நாள்கள் இரவும் பகலுமாக யோசித்துப் பார்த்ததில், கேவலமாகிய எமது சொந்த சுகலாபத்தைக் கருதி இவ்விடத்தில் வாழ்வதைப் பார்க்கிலும், பரதகண்டத்தின் பல்லாயிரம் பிரஜைகளுடைய பொதுநலத்தைக் கருதி எமது சொந்த சுகவாழ்வை அலக்ஷியம் செய்தல் சுகிர்தமென்று பூரணமாக விளங்கியபடியால், பிரயாணத்துக்குப் பிரயத்தனப்பட்டோம். அப்படிப் பிரயாணம் செய்கையில், சில பல ஹேதுக்களால் பெண்டு பிள்ளைகளாகிய எமது சம்சாரத்துடன் சஞ்சாரம் செய்யச் சம்பவித்தது; அப்படிச் சம்பவிக்கவே, நடை உடை பாஷை போஜனம் பாவனையாதிகளில் பலவிதமாகப் பிரகாசிக்கும் பரதகண்டத்தின் வடதேசத்துக்குப் பலவிதத்திலும் பேதமான பாவனைகளையுடைய சம்சாரத்தோடு எப்படிப் பிரயாணம் செய்து மறுபடியும் திரும்பி வருவோமென்று மனம் சஞ்சலித்தது; மேலும், அந்தக் காலம் கடுங்குளிர்காலமானபடியால் புத்தியைப் பிரமிக்கச் செய்தது. இபபடிப் பலவித இக்கட்டுக்கள் பிரத்தியக்ஷமாக இருந்தும், பொதுநலத்தைக் கருதிப் பாடுபடப் பிரவர்த்தித்த எமக்கு ஸ்ரீபரமேசுவரருடைய கிருபையும், பெரியவர்களுடைய ஆசிர்வாதமும் பூரணமாக இருக்குமென்று திடங்கொண்டு, நாம் கி. பி. 1886௵ டிசம்பர்௴ 5-ந் தேதியாகிய பானுவாரம் பகல் (மேட்டுப்பாளையத்திலிருந்து) கோயமுத்தூருக்கு வரும் இரண்டேமுக்கால் மணி மெயில் புகைவண்டியில் சம்சார சமேதராக ஏறினோம். அப்போது எமது பந்துமித்திரர்கள் ஸ்டேஷனில் திரளாகக் கூட, ம-ா-ா-ஸ்ரீ குழந்தைவேலு பிள்ளை முதலானவர்கள் எமக்குச் சுயாத்திரைப் பலன் கிடைக்கச் சுவாமியைப் பிரார்த்தித்தார்கள். இதேமாதிரியாக ம-ா-ா-ஸ்ரீ விஜயரங்க

முதலியாரவர்களும் மற்றும் சிலரும் போத்தனூரிலும், ம-ா-ா-ஸ்ரீ இராமலிங்க ரவுத்து முதலானவர்கள் ஈரோடு ஸ்டேஷனிலும், ம-ா-ா-ஸ்ரீ இராவ் சாகிப் நரசிங்கராயர் முதலானவர்கள் சேலத்திலும், இன்னும் பலர் பலவிடங்களிலும் சந்தோஷ மூட்டியதினால், நமது தேசத்தாருக்குத் தேசாபிமான ஞானம் பிறந்து பிரகாசிக்கிறதாகப் பூரண நம்பிக்கை ஏற்பட்டது. கோயமுத்தூரிலிருந்து சென்னை ரெயில்வே கம்பெனியாருடைய முடிவு ஸ்தானமாகிய ரெய்ச்சூர் வரையில் ஆள் ஒன்றுக்கு ரூபா 5—15—2 கொடுத்துச் சீட்டு வாங்கியபடியாலும், கோயமுத்தூருக்கும் ரெய்ச்சூருக்கும் 571 மைல் தூரமாகையாலும், இடையில் அரக்கோணம் என்னும் இடத்தில் ஒரு பகல் தங்கவேண்டியிருந்தமையாலும், அவ்விடத்தில்போய்த் தங்கி அவஸ்தைப்படுவதிலும், அதற்கடுத்த ஆர்க்காட் என்னும் ஸ்டேஷனில் எமது தமையனார் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்து சம்சார சமேதராக வாழ்ந்து வந்ததால், அவர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டு போகலாமென்ற நினைவிருந்தமையாலும், டிசம்பர்மீ 6-ந்தேதி ஜாமம் சுமார் 4-மணிக்கு ஆர்க்காட்டில் இறங்கினேம்.

ARCOT—ஆர்க்காடு.

இந்த ஆற்காடு, ரெயில் ஸ்டேஷனுக்கு ஐந்துமைல் தூரத்திலும், சென்னைக்கு 65-மைமயில் தூரத்திலுமிருக்கும் புராதனப்பட்டணம். கிளைவ் பிரபு பிரசித்திபெற்ற திவ்விடமாம். இங்கே பெரிய கோட்டை ஒன்றும் அதற்கு டில்லி தர்வாஜா என்ற ஒரு வாசலும் இருக்கிறது.

அன்று காலை ஸ்டேஷனுக்கு அடுத்திருக்கும் அழகிய ஏரியில் ஸ்நானம்செய்து அன்னபானுதிகளை உண்டும், எமது தமையனார் முதலானவர்களுடன் பேசிக்கொண்டிருந்தும், அன்று மாலை சுமார் நாலரைமணி (பாஸெஞ்ஜர்) வண்டியில் ஏறிச் சுமார் ஆறுமணிக்கு அரக்கோணம் ஸ்டேஷனைச் சேர்ந்தோம். அவ்விடம் சுமார் ஏழு மணிக்குச் சென்னையிலிருந்து ரெய்ச்சூருக்குப் போகும் மெயில் வண்டி வந்தது; அதில் நமது இந்து தேசாபிமானிகளில் சிறந்தவரும், சேலம் செய்த தவப்பயனால் ஜனித்தவருமான எம். ஏ., பி. எல்., பட்டம் பெற்ற ஸ்ரீ இராமசாமிமுதலியாரவர்கள், பப்ளிக் சர்விஸ் கமிஷனரில் ஒருவராக நியமிக்கப்பட்டு லாகோருக்குப் போகவந்தார். அவரைக் கண்டு கைலாகுக் கொடுத்து, ஆனந்தித்து

க்ஷேமசமாசாரங்களையும், அவர் இந்த இராஜதானியில் பிரதிநிதியாகச் சீர்மைக்குப் போய்வந்தபிறகு பார்க்காமல்போன அசந்தர்ப்பங்களையும்பற்றிப் பேசியபிறகு வண்டி ஏறினோம். அந்தப் புகைவண்டி ரேணுகுண்டா (திருப்பதி) பால்பள்ளி ஸ்டேஷன்களுக்கு வரவே, சகிக்கக்கூடாத குளிர், பிரயாணிகளைப் பலவிதத்திலும் வருத்தியது. நாம் குளிர்தேசங்களுக்கென்று பூட்ஸ்கள், கம்பிளி முதலான உடுப்புகள் ஆகியவற்றைக் கொண்டுபோயிருந்தும், அவைகள் லக்கேஜ் வண்டியில் அகப்பட்டுக் கொண்டமையால், நாங்கள் அணிந்திருந்த சாதாரண நூல் துணிகள் கடுங்குளிரைத் தடுக்கக்கூடவில்லை; ஆகவே, கஷ்டத்தோடு சகித்துக்கொண்டு மறுநாள் பகல் சுமார் பனிரெண்டுமணிக்கு ரெய்ச்சூர் ஸ்டேஷனைச் சேர்ந்தோம்.

RAICHUR—ரெய்ச்சூர்.

இந்த ரெய்ச்சூர் ஸ்டேஷன் சென்னைப்புகைவண்டிக் கம்பெனியாருடைய கடைசி ஸ்டேஷனாக இருக்கினும், இது ஐதிராபாத் கவர்ன்மெண்டாருடைய அதிகாரத்துக்குட்பட்டிருக்கிறது. அந்த ஐதிராபாத் போலீசாதி உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலார் கருப்புக் கம்பளிகளுக்கு மஞ்சள் கம்பிளிக் கரைகள் வைத்துத் தைத்த உடைகளைத் தரித்துக்கொண்டும், பெரியவாள்களையும், கத்திகளையும், பெருத்து நிமிர்ந்து நிற்கும் மீசைகளையும் வைத்துக்கொண்டும் நின்றார்கள். இந்த ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் இரண்டொரு மைல் தூரமிருப்பதால், புகைவண்டி ஸ்டேஷனுக்கு அடுத்த கிராமத்திலிருக்கும் சத்திரத்தில்தான் பிரயாணிகள் தங்கவேண்டியிருக்கிறது. அந்தச் சத்திரம் ஆறு அறைகள் உள்ளதாயும், இடையில் வழிவிடப்பட்டு இரண்டு பக்கம் போதுமான குறுகிய தாழ்வாரங்கள் உள்ளதாயும், சமையல் முதலானவைகளுக்கு இரண்டொருசிறியவெளித்தாழ்வாரங்களுடையதாயும், ஒரு தருமகுணமுடைய சேட்டவர்களால் கட்டப்பட்டது. இந்த ரெய்ச்சூரிலிருந்துதான் பம்பாய் முதலான வடமேற்கு வடகிழக்குத் தேசங்களுக்குப் போக வசதியான (G.I.P.R.) ஜி. ஐ. பி.ஆர். பெரிய இந்தியா புகைவண்டி புறப்பட ஆரம்பிப்பதால் ஏராளமான பிரயாணிகள இங்கே சதா வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கிறார்கள். இத்தன்மையான கும்பலான பிரயாணிகளுக்கு இஷ சத்திரம் போதாதாகையால் அநேக பிரயாணிகள் மரங்களினடிகளிலும், அடுத்திருக்கும்

ஏரிக்கரைகளிலும் சமையல் செய்துகொண்டு அவஸ்தைப் படுகிறார்கள். இந்தப்பிரயாணிகள் இராத்திரிகாலங்களில் படுக் கஷ்டம்கொஞ்சமல்ல. இப்படிப்பட்ட இடத்தில் விசாலமான தருமசத்திரங்களைத் துரைத்தனத்தாராகிலும், அல்லது வேறு தருமபிரபுக்களாகிலும் கட்டிவைத்தால் வெகு ஜனோபகார மாகவிருக்கும். இந்தக்கிராமம் சிறிதாகவிருந்தாலும் அரிசி, பருப்பு, காய்கறி, கோதுமை, மா முதலான வஸ்துக்களை விலை சரசமாகக்கொள்ளலாம். அடுத்து அடுக்கான கரடுகளுக்கிடை யிலிருக்கும் ஏரியானது அழகானதாயும், ஸ்நானபானாதிகளுக் கேற்றதாயுமிருக்கின்றது. இதற்குச் சமீபத்தில் புராதனமான ஒருமலைக்கோட்டையிருக்கிறது. இந்த கோட்டையின் இரண்டு பக்கத்துச் சுவர்களும் 290 அடி உயரமுள்ள மலையடி மதில்கள். இதற்குள்ளிருக்கும் மதில்கள் ஸ்ரீ விட்டல மகாராஜரால் கி.பி. 1294ஆம் நவம்பர்மீ 28உ கட்டியதாக ஸம்ஸ்கிருத பாஷையில் சாசனமாக எழுதிச் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாசனமானது ஷை கோட்டையின் மேற்கு வாசலின் உன்னதமான 41½ அடி நீளமுள்ள கல்லில் செதுக்கப்பட் டிருக்கிறது; மேலும் கி.பி. 1563ஆம் முதல் 1619 வருடத்துக் குள் நடந்த அனேக சங்கதிகளும் செதுக்கப்பட்டிருக்கின் றன. மலைக்கோட்டையின்மேல் 21 அடி நீளமுள்ள விநோத மான ஓர் பீரங்கியும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ரெய்ச் சூரில் 1881ஆம் 13575 குடிகள் இருந்தார்கள். இங்கு பளபளப்பான மண் பாத்திரங்களையும், பாதரக்ஷைகளையும் செய்து விற்கிறார்கள். இந்த ரெய்ச்சூரில் நாம் மேற்படி சேட்டவர்களுடைய சத்திரத்தில் தங்கிச் சாப்பிட்டு ஸ்டே ஷன் மாஸ்டருடைய சகாயத்தினால், இராத்திரியில் தூங்குவ தற்கு நல்ல இடம் கொடுக்கப்பட்டுச் சுகமாகத் தூங்கினோம். மறுநாள் (டிசம்பர்மீ 8உ காலை) ஷை ரெய்ச்சூர்ச் சத்திரத் திலேயே சாப்பிட்டு அந்த ஸ்டேஷனிலிருந்து பனிரெண்டு மணிக்குப் புறப்பட்டு (ஜி. ஐ. பி. ஆர்.) புகைவண்டியில் போக ஆள் ஒன்றுக்கு ரூபா 12-8-0 சத்தமாகக் கொடுத்து ஜப் பல்பூருக்குச் சீட்டைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். அனுபோகமில்லாத ஆக்கிரத்தினால் கோயமுத்தூரிலிருந்து அரிசி, பருப்பு, புளி, மித்தளைத் தட்டுமுட்டு, பட்டுத்துணிக ளோடு கூடிய சாமான்களை லக்கேஜில் போடப்போனதில், அதிகப் பணச்செலவாவதைக்கண்டு அவசரத்துக்கு அவசி யமான சாமான்களைக் கூட்ஸ்வண்டியில் அனுப்பும்படி ஷை

ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒப்பிவித்துவிட்டு வண்டியேறி னோம். நாம் ஏறிய வண்டியில் பாய்கானு முதலானவைகள் சுத்தமாக விருந்தன; மேலும் குளிர் முதலான உபத்திரவங் களுக்குப்பயந்து பூட்ஸ்கம்பிளி முதலான உடைகளைத் தரித் துக்கொண்டதினால் சுகமாயிருந்தது. நாம் புறப்பட்ட அந்த வண்டியில் சென்னைக் கவர்னராகவிருந்து கெட்டபெயரெடு த்த ஸ்ரீ கிராண்டு டப்பு கவர்னரும் புறப்பட்டுவந்தார். அந்த வண்டியானது அன்று இராத்திரி பனிரெண்டு மணிக்கு டோண்டு (DHOND) என்னும் ஸ்டேஷனில்சேர, நாங்கள் ஏறி வந்த வண்டியிலிருந்து இறங்கி (Dhond & Munmar State Railway) டோண்டு மன்மார் ஸ்டேட் ரெயில் வண்டியில் ஏறி னோம். அப்போது குளிரால் பட்டகஷ்டம் கொஞ்சமல்ல.

MUNMAR—மன்மார்.

மறுநாள் காலை 11 மணிக்கு மன்மார் என்னும் பெரிய ஜங்ஷன் ஸ்டேஷனில் இறங்கினோம். இது பம்பாய்க்கு 162 மைல் தூரத்திலும் டோண்டு ஜங்ஷனுக்கவும் இருக் கிறது. அதைவிட பிரயாணிகள் தங்கிச் சமையல் செய்து சாப்பிட வேறு வசதியான இடம் வெகு தூரத்தி லிருப்ப தால் இங்குத் தங்கினோம். இந்த மன்மார் ஸ்டேஷன் ஜி. ஐ. பி. ஆர். என்னும் புகைவண்டிப் பாதையைச் சார்ந்த வட கிழக்கு, தென்கிழக்கு, சிறு பெரு ரெயில்கள் தங்குமிட மாகையால், இந்த ஸ்டேஷன் பெரிய கட்டடமாயும், அடு த்தகிராமம் கூடியவரையில் பெரியதாயும், சுமார் 1500 வீடு களும், கடைகளும் உடையதாயுமிருக்கின்றன. இவ்விடத்தில் அரிசி, புளி முதலானவைகள் கொஞ்சம் கிராக்கியாயிருந்தா லும், தயிர், பால் முதலானவைகள் நயமாக விற்கப்படுகின்றன. ஸ்டேஷனுக்கு அடுத்திருக்கும் இரண்டொரு சத்திரங்கள் பிரயாணிகள் போய்ப் பொங்கிச் சாப்பிட்டுப் போவதற்கு மாத்திரம் உபயோகப்படுமேயன்றி, மற்றப்படி படுக்க உடுக்க வசதியானவைகளல்ல. உயுத்த காலங்களிற் சுதேச பட்டாள த்தார் தங்கத்தக்க ரெஸ்டு காம்பு என்னும் இடமும் இருக் கிறது. கிராமத்துக்குள் வாடகைக்கு வீடுகள் அகப்படினும் இடைக்கிடை இந்துஸ்தானி விபசார ஸ்திரீக ளிருப்பதால் வாலிபர் மனதைக் கெடுக்கக் கூடும். இந்தக் கிராமமானது சமதரைக்கு 800 அடி உயரமுள்ளதாக விருப்பதால், சீதோ ஷ்ண ஸ்திதி தேகாரோக்கியகரமாக விருக்கிறது. சற்றுப்

பக்கங்களில் சுதார கிரிகளைப்போன்று அழகிய மலைகளும் அவைகளின் மத்தியில் 80 அடி முதல் 90 அடிவரை உயர முள்ள கருட கம்பங்களைப் போன்ற இயற்கைக் கல் ஸ்தம் பங்களும் நீண்டிருக்கிற காக்ஷி வெகுவிநோதமாகவிருக்கிறது. இவைகளுக்கிடையில் அழகிய ஊற்று ஜல நீர் சிறிய ஆறாக கிராமத்தினருகே ஓடுகின்றது. அதற்கு அடுத்த மேட்டில் அழகான ஒரு மஸ்ஜிது கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கிராம சத்திரத்தில் நான்கைந்து மணிநேரமிருந்து ஸ்நானபா னாதி போஜனங்களை முடித்துக்கொண்டு, அன்று சாயங் காலம் 4-மணிக்கு வரும் பாஸென்ஜர் வண்டியில் ஏறினோம். இந்தவிடத்தில் காசி, கயா, பிரயாக், முதலான விடங்களில் இருந்து பிரயாக் வாளிகள், கயாவாளிகள், பண்டிஸ் பண்டாக் கள் என்னும் பிராமணர்கள் மேற் க்ஷேத்திரங்களுக்கு அழை க்க ஏஜண்டுகளாய் ஏராளமாக வந்து வருத்தியதனால், எமது விலையுயர்ந்த சஹகாரியாக விருந்த தூரவீக்ஷிணி (Binocular) என்னும் கண்ணாடியை யிழந்தேன்; மேலும் எமக்கும் எம் மைச் சார்ந்தவர்களுக்கும்,மராட்டி இந்துஸ்தானி பாஷைகள் சுத்தமாகத் தெரியாது. ஆகையால், இந்த மன்மார் கிராமக் கடைகளில்பலவிதமாகவருந்தினோம்; ஆதலால்.இனிப்போகப் போக அதிகமாகவருந்தவேண்டுமென்று பயந்து பலபாஷை களைப் பேசத் தெரிந்தவரும், முன் சென்னை வாசியுமான ம-௱-௱-ஸ்ரீ இரங்கராவுஎன்னும்பிராமணருக்குப் புகைவண்டிச் சீட்டுவாங்கிக்கொடுத்து எம்முடன் அழைத்துக்கொண்டுபோ னோம். அன்று இராத்திரி,பத்துமணிக்கு புஷாவல் (Bhusawal) என்னும் பெரிய ஸ்டேஷனைச் சேர்ந்தோம். இந்தப் புஷாவல் ஸ்டேஷனிலிருந்து நாகப்பூருக்குக் கிளைப் புகைவண்டிப் பாதை சேர்வதால், இந்த ஸ்டேஷன் விசாலமானதாக விருக் கிறது. போதுமான அவகாச மில்லாமையால் அவ்விடத்தில் இறங்காமல் நேராகப் புறப்பட்டோம். அன்று இராத்திரி அதிகமான குளிர் இல்லை.

SOHAGPUR—ஷாக்பூர்.

மறுநாள் (டிசம்பர்மீ 10-ம் தேதி) காலை $10\frac{1}{2}$-மணிக்கு ஷாக்பூரில் இறங்கினோம். இந்த ஷாக்பூருக்குச் சுமார் நூறு கெஜ தூரத்தில் அழகான சத்திரமிருக்கிறது. அதில் பாதிப் பாகம் ஆங்கிலேயர் தங்கும் முசாபர் பங்களாவாகவும்,பாதிப் பாகம் சுதேசிகள் தங்கிச் சமையல் செய்து சாப்பிடுமிடமாக

யும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். இந்தச் சத்திரத்துக்குக் கால்மைல் தூரத்திலிருக்கும் மைதானத்தில் இங்கிலீஷ்சேனைகள் அடிக்கடி வந்து தங்குகிறார்கள். இந்த மைதானத்துக்குச் சுமார் ஒரு மைல் தூரத்தில் ஷாக்பூர் என்னும் பெரிய கிராமமிருக்கிறது. இதற்குப் போவோர் பாடந்தி என்னும் ஓர் சிற்றாறைக் கடந்துபோகவேண்டும். அதற்குப் பாலம் இல்லாமல் வருஷாகாலத்தில் வழிப்போக்கர்கள் வருந்தவேண்டியிருக்கிறது. இப்போது ஒரு சிறு பாலம் கட்டப் பிரயத்தனப்படுகிறார்கள். இதற்கு 5-மைல் தூரத்தில் முஹோலி என்னும் ஒருகோட்டை இருக்கிறது. அங்குச் சிவராத்திரி உற்சவகாலத்தில் 3000 ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். இந்த ஷாக்பூர் பம்பாய் இராஜதானியில் தானா ஜில்லாவைச் சார்ந்தது. பம்பாய்க்கு 54-மைல் தூரத்திலிருக்கிறது. ரெயிலில் மெயில்வண்டியில் போவோருக்கு பதினான்கு அணாவும், சாதாவண்டியில் போவோருக்கு ஒன்பது அணாவும் (3-ம் வகுப்பு) சத்தமாக இருக்கிறது. பிரயாணிகள் இந்தப் பெரிய கிராமத்தில்தான் அரிசி பருப்பு முதலான வஸ்துக்களை வாங்கவேண்டும். எம்முடன் கொண்டுபோன தட்டு வகையராப் பித்தளைச்சாமான்களையும், அரிசி, பருப்புமுதலான தின்பண்டங்களையும் நேராக அலகாபாத்துக்கு அனுப்பும்படி கூட்ஸ் வண்டியில் போட்டுவிட்டபடியால் அரிசி, பருப்பு முதலானவைகளை அதிக கிராக்கியான விலைக்கு இவ்விடம் வாங்கியதன்றியில், சமையல் பாத்திரங்களையும், பாத்திரம் ஒன்றுக்கு ஒரு அணாவாக வாடகை கொடுத்து வாங்கினோம். இந்தக் கிராமத்தில் புருஷர்களும் ஸ்திரீகளும் அழகுள்ளவர்களாக விருக்கினும், அசுத்தமான உடைகளைத் தரித்துக்கொண்டு இந்துஸ்தானி, மராட்டி, குஜராத்தி முதலான நான்கைந்து பாஷைகளைக் கலந்த ஒரு விதபாஷையைப் பேசுகிறார்கள். இதில் வர்த்தகப் பொருள்கள் ஏராளமாக விருக்கிற தன்றியில், வாரந்தோறும் குதிரைகள் முதலானவைகளை விற்கும் கால் நடைகளின் சந்தை கூடுகின்றது. கிராமத்தின் சுற்றுப்பக்கங்களிலிருக்கும் டானிவா என்னும் மலைச்சாரல்களில் புலி, கடம்பை, காட்டெருமையாதி மிருகங்களை வேட்டையாடுவதற்கு அநேகர் வருகிறார்கள். இதற்குச் சுமார் ஆறு மைல் தூரத்திலிருக்கும் சோப்பூர் என்னும் இடத்தில் அந்தப் பிராந்தியங்களுக்கு வேண்டிய ஒரு வித துணிகளை செய்கிறார்கள். நாங்கள் சத்திரத்துக்கடுத்த சேந்துகிணற்றில் ஜலம் சேந்தி ஸ்நானம்செய்து சாப்பிட்டோம்.

சத்திரத்துக்குச் சமீபத்தில் மலஜலபாதிகளைக் கழிக்கத் தகுந்த விடமில்லாமையால், வெகுதூரம் போக வேண்டியிருக்கிறது. நாம் ரெயில் ஸ்டேஷனுக்கு வரவே அவ்விடத்திய ஸ்டேஷன் மாஸ்டர் தயவுடன் தம்மிடமிருந்த பைநீர் (Pioneer) பம்பாய் கெஸட்டு (Bombay Gazette) முதலான பத்திரிகைகளை வாசிக்கக் கொடுத்தார். அவைகளை வாசித்துக் கொண்டிருக்க, மாலை ஐந்துமணிக்கு மெயில் புகைவண்டி வர, அதில் ஏறி அன்று இராத்திரி சுமார் 11-மணிக்கு ஜப்பல்பூர் ஸ்டேஷனைச் சேர்ந்தோம்.

JABALPUR—ஜப்பல்பூர்.

ஜப்பல்பூரானது பெரிய G. I. P. ரெயில்வே ரோட்டும், E. I. R. ஈஸ்டு இந்திய ரெயில்வே ரோட்டும், சந்திக்கும் இடமாயும், நர்மத ஜில்லாவைச்சார்ந்த பிரிகிஷிய கனரவர்கள்ளுடைய பிரதானமான சிவில் மிலிடெரி பட்டணம். இது பம்பாய்க்கு 616 - மைல் தூரத்திலும், கல்கத்தாவுக்கு 784 - மைல் தூரத்திலும் இருக்கிறது. பம்பாய்க்கு மெயில் வண்டி சார்ஜ் ரூபா 9-10-0. சாதாரண வண்டி சார்ஜ் 6 ரூபாய். கல்கத்தாவுக்கு 6 ரூபாய் 13 அணு சார்ஜ். சென்னையிலிருந்து 1228-மைல் தூரத்திற்கு ரூபா 13-3-0 சார்ஜ். இந்த ஜப்பல்பூரில் கமிஷனர், டிப்டி கமிஷனர், அசிஸ்டண்டு கமிஷனர், சூபரின்டெண்டண்டு இஞ்சினீர், டெலகிராப், ரெயில்வே உத்தியோகஸ்தர்களிருக்க அரண்மனைகளைப்போன்ற அழகிய கட்டடங்கள் இருக்கின்றன. இவ்விடம் தக்கிஜெயிலும், கைத்தொழிற் பாடசாலையும் இருக்கின்றன. அவைகளில் கூடாரங்கள், ஜமுக்காள முதலான துணிகளை செய்கிறார்கள். இதற்கு 11 - மைல் தூரத்தில் புகழ்பெற்ற ஸ்படிக மலைகளும், நான்குமைல் தூரத்தில் நர்மதா நதியும் இருக்கிறது. புகைவண்டி ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரத்திலிருக்கும். ஜப்பல்பூரானது, தேகசவுக்கியமான இடமாக இருப்பதால், இதில் ஐரோப்பிய சுதேசபட்டாளங்கள் இருக்கின்றன.

இந்த ஜப்பல்பூர் பார்க்கத்தக்க ஒருபெரிய பட்டணமாயிருக்கிறது. இதைப் பார்த்துப்போக யாம் ஆவல்கொண்டிருந்தும், இந்த ஸ்டேஷனிலிருந்து (The East India Railway) பெரிய கிழக்கு இந்திய புகைவண்டி பிரயாணம்

ஆரம்பிப்பதால், இந்தப் பிரம்மாண்டமான ஸ்டேஷனில் பல
வகுப்பான பிரயாணிகள் கும்பல் கும்பலாகக் கூட்டம் கூடி
யிருந்தார்கள்; அதனால் யாம் வந்த ஜி. ஐ பி. ஆர். புகை
வண்டிப் பிரயாணிகளையும், முக்கியமாக எம்முடன் வந்த
ஸ்திரீகளையும் வெளியில்கொண்டுபோக அனுகூலப்படவில்லை;
மேலும், பெரிய மழையும் பெய்யத் தொடங்கிய தன்றியில்
அந்த அர்த்த ராத்திரி காலத்தில் சம்சாரத்துடன் பலவிதத்
தாலும் புதிதான ஜப்பல்பூருக்குள் போக எமதுமனந்துணிய
வில்லை; ஆகவே, எமது சம்சாரத்தைபிறகு ஓர் மறைவான
விடத்தில் நிற்கவிட்டு, அலகாபாத்துக்கு ஆள் ஒன்றுக்கு ரூபா
2—15—6 கொடுத்து ரெயில் சிட்டு வாங்கப்போய் அந்த
அபரிமிதமான கும்பலில் அடிபட்டு இடிபட்டு அவஸ்தை
யுடன் டிக்கெட்டுகளை வாங்கினோம். இந்த ஜப்பல்பூர்முதல்
பங்காள பாபுகள்தாம் புகைவண்டி ஸ்டேஷன் மாஸ்டர்க
ளாகவும், மற்ற சிப்பந்திகளாகவு மிருக்கிறார்கள். அந்தக்
கிழக்கிந்தியப் புகை வண்டிகள் சென்னைப் புகைவண்டிகளைப்
போலவே பெரிதாக இருக்கினும், கம்பார்டுமெண்டுகளை
(அறைகளை) இரும்புச் சலாகைகளினால் தடுத்திருக்கிறார்கள்.
எமக்குக் கூடியவரையில் நல்லவண்டியகப்பட்டது. மறுநாட்
காலை (டிசம்பர்மீ 11-ந் தேதி) சுமார் 8-மணிக்கு மகா இரம
ணியமான யமுனா நதியின்மேல் கட்டப்பட்ட ரெயில் பாலத்
தைக் கடந்து 8½-மணிக்கு அலஹாபாத்தென்னும் ஸ்டேஷ
னைச் சேர்ந்தோம்.

ALLAHABAD—அலஹாபாத்து.

இந்த அலஹாபாத்து ஸ்டேஷன்: டில்லி முதலான
விடங்களிலிருந்து கல்கத்தாவுக்குப் போக்கு வரத்துச் செய்
யும் புகை வண்டிகளும், சென்னை பம்பாய் முதலானவிடங்
களிலிருந்து போக்கு வரத்துச்செய்யும் புகைவண்டிகளும்
தங்குமிடமாகஇருப்பதன்றியில், லெப்டினென்டு கவர்னர்முத
லானவர்களும் தங்குமிடமாகையால், ரெயில் ஸ்டேஷன் பிரம்
மாண்டமானதாயும், சிறந்த வடிவானதாயுமிருக்கிறது. ஜப்பல்
பூரில் எம்மைத் தொடர்ந்த மழையானது அலஹாபாத்தில்
அதிகரித்தபடியால், பக்கிகளென்னும் இரட்டைக் குதிரை
வண்டிக்காரர்கள் சாதாரண காலத்தில் ஒரு ரூபாய் வாடகை
க்கு வருவதைவிட்டு அப்போது இரண்டுரூபாய்கேட்டார்கள்.
அந்தப் பக்கிகளைவிட எக்கா என்னும் ஒற்றைக் குதிரை வண்

டிகளிருக்கினும், அவைகள் நமது சென்னை ஜட்கா வண்டிகளிலும் சிறியனவாகவும், சீர்கெட்டதாகவும் இருக்கின்றன. நாம் இரண்டு பக்கிகளை வாடகைக்குக்கொண்டு ஸ்டேஷனுக்கு மூன்று அல்லது நான்கு மைல் தூரத்திலுள்ள ஸ்நானபானாதிகளுக்குச் சவுக்கியமான தாராகம் என்னும் பாகமாகிய கங்கையின் கரைக்குப்போனோம். எமக்கு வழிகாட்டியாக வந்த ஸ்ரீ இரங்கராவவர்கள் கங்கை யமுனைக்கு அதிக சமீபமாகிய மூன்றடுக்கு மெத்தையுள்ள ஜம்னு மஹால் என்னும் பெரிய வீட்டில் எங்களை இறக்கிவைத்தார்கள். மழையினால் துணிகள் முதலான சாமான்கள் நனைந்துபோய்விட்டன. இவ்விடம் பகலில் பெய்த மழையினாலும், இரவில் பெய்த பனியினாலும் நாங்கள் பலவிதமாக வருந்தவேண்டிவந்தது. அதாவது கோயமுத்தூரை விட்டுப் புறப்பட்ட (டிசம்பர்மீ 5உ முதல் இந்த அலகாபாத்தைச் சார்ந்த (டிசம்பர்மீ 11உ வரையில் கூடிய) ஏழு நாள்கள் வரையில் இரவையும் பகலையும் பெரும்பாலும் புகைவண்டிகளிலேயே கழித்துத் தக்கபோஜனத்தையும் நித்திரையையும் அசட்டை செய்துவிட்டபடியால், தேகம் மெலிந்து எமக்கு ஜலதோஷமும், இருமலும் கண்டு அவஸ்தைப்பட்டதன்றியில், எமது குடும்பத்தாரும் பலவிதத்திலும் வருந்தினார்கள். மேலும், ரெய்ச்சூரிலிருந்து அலகாபாத்துக்கு அனுப்பிய எமது துணி மணி தட்டு முதலான சாமான்கள் வந்து சேரவில்லை. ஆகவே, இந்த அலகாபாத்தில் ஒருவாரம் தங்கிச் சற்று இளைப்பாறத் தீர்மானித்தோம். இப்படித் தங்கிய இந்த ஒரு வார காலத்தை வீண் போக்காமல் இந்தத் திவ்விய தேசத்தின் பூர்வ(வைதிக) சரித்திரத்தை விசாரித்தறிவதில் இரண்டு நாட்களையும், தத்கால ஸ்திதியை யறிய இரண்டு நாட்களையும், இதன் விவசாயம், கைத்தொழில் வர்த்தகம் முதலானவைகளையறிய இரண்டு நாட்களையும், இதன் குடிகளுடைய நடையுடை பாவனைகள், கோயில்கள், மண்டபங்கள், கச்சேரிகள், கட்டடங்கள், தோட்டங்கள்,ரோட்டுகள் முதலானவைகளைப் பார்த்தறிய இரண்டு நாட்களையும் செலவிட்டேம். இப்படி ஒருவாரகாலத்தில் இந்த அலகாத்தைப்பற்றித் தெரிந்துகொண்ட சங்கதிகளையெல்லாம் திரட்டி எழுதினால் இது ஓர் பிரம்மாண்டமான புராணமாக முடியுமாகையால், இனி அந்தப்பாகங்களில் யாத்திரை செய்ய விரும்புவோர் முக்கியமாக அறிந்திருக்கவேண்டிய விசேஷமான சில விஷயங்களை

மாத்திரம் எமது டைரியிலிருந்தெடுத்துச் சுருக்கமாக எழுதுகிறோம்.

இந்தப் பிரயாகையின் (அலகாபாத்தின்) மஹத்துவம் அல்லது பூர்வசரித்திரம்.

பிரபஞ்ச சிருஷ்டிக்கு முன்பு பரமாத்துமாவானவர் பாலரூபத்துடன் இவ்விடத்திலிருந்த அக்ஷயவடபர்ணம் என்னும் ஆலிலையின்பேரில் வீற்றிருந்ததாகவும், இந்த ஆதிவடமாகிய ஆலமரம் அன்று முதல் அழியாமலிருப்பதால், அக்ஷயவடமென்று பெயர்பெற்றதென்றும், ஆகவே, அது பிரம்மஸ்வரூபமானதென்றும், பிரபஞ்ச சிருஷ்டியான பிறகும் இந்த விருக்ஷம் பொன்மயமாய்ப் பிரகாசிக்க, ஸ்ரீ விஷ்ணுவானவர் இதை யடுத்து ஜ்வலித்ததாகவும், ஆனதுபற்றி இந்த ஸ்தலம் பிரபஞ்சத்தில் பெருமை பெற்ற புண்ணிய பூமிகளிற் சிறந்ததென்றும், இப்படிப்பட்ட விடத்தில் செய்யும் சற்கருமம் ஒன்று அக்ஷயமாகுமென்றும் எண்ணிப் பூர்வத்தில் பிரம்மாவானவர் இங்கே பத்து அசுவமேதயாகங்கள் செய்ய மாதவமூர்த்தியானவர் பிரசன்னராகி வேண்டிய வரங் கொடுக்கிறேன் என்று வாக்குத்தத்தம் செய்ததாகவும், அப்போது பிரம்மாவானவர் இந்த ஸ்தலமானது விஷ்ணு க்ஷேத்திரமென்று பெயர் பெற்றிருப்பதோடு கூடத் தனது பெயரும் சம்பந்தப்பட்டு பிரகாசிக்க வேண்டுமென்று வேண்டினதாகவும், அதற்கு அவரும் சம்மதித்து இனிமேல் இந்த ஸ்தலம் விஷ்ணு பிரஜாபதி க்ஷேத்திரமாகுமென்று பெயரிட்டதாகவும் புராணசித்தமாக விளங்குகிறது.

இந்த இடத்துக்கு தசாசுவமேத கட்டம் என்று இப்போதும் பெயர் வழங்கிவருகிறது. மேலும் பூர்வத்தில் பிரபாகர மூர்த்தியானவர் சாயாதேவிக்குக் கருப்பம் தரிக்கும்படி செய்தபிறகு அந்தத் தேவி தபசு பண்ணினதாகவும், அப்போது சூரியபகவான் அந்தத் தேவியைச் சேரவிரும்பியதாகவும், அதற்கு அந்தத் தேவி சம்மதிக்காமல் தடுக்கவே, ஆதித்தன் மிதமிஞ்சிய மோகத்தினால் சாயாதேவியைச் சமீபித்ததாகவும், அப்படிச் சமீபிக்கவே ஜ்வலித்த உஷ்ணத்தினால் மேற்படி தேவியின் கருப்பம் தாங்கமாட்டாமல் பாதி பஸ்மமாகவும், பாதி பிண்டமாகவும் போய்விடச் சாயாதேவியுடன் சூரியபகவானும் பரவசமடைந்ததாகவும், அப்போது

ஹரி ருத்திரர்கள் பிரசன்னராகி வந்து, ருத்திரமூர்த்தியானவர் தமது பராசக்தியை அந்தப் பிண்டத்தில்ஆவாஹனம்பண்ணி அதிலிருந்து ஒரு புருஷனை ஜனிப்பித்து, அந்தப் புருஷனுக்கு எமதருமராஜன் என்று பெயரிட்டு, அந்தஎமனைத் தென் தேசத்துக்கு அனுப்பிப் பாவிகளை சிக்ஷிக்கும்படி நியமித்ததாகவும், அப்போது மஹாவிஷ்ணுவானவர் மேற்படி பிண்டத்தின் பாதிப்பாகமாகிய சாம்பலில் தமது சக்தியை ஆவாஹனம்செய்து யமுனை என்கிற பெயருடன் ஒரு ஸ்திரியை ஜனிப்பித்து அந்த ஸ்திரியை நதிரூபமாக்கி உலகத்தாருடைய பாவங்களைப் போக்கும்படி நியமித்ததாகவும், அப்படியே அந்த ஸ்திரியானவள் நதிரூபமாக அந்த இடத்துக்கு வர இவளழகைக்கண்டு மாதவமூர்த்தியானவர் மோகித்துப் பாரியாளாகக் கொண்டதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இராமாயணாதி சில கிரந்தங்களில் பகிரதர் கங்கையைப் பூலோகத்துக்குக் கொண்டுவரும்போது கங்கை இவ்விடத்தில் பிரவேசிக்க, யமுனை எதிர்கொண்டு போய்க் கங்கையை வணங்கித் தன்னுடன் கலந்து பிரவாகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, கங்கை யமுனையை நோக்கி, "ஏ! பாவாய்! நீ பிரதிஷ்டை பெற்றவள்; நான் உன்னுடன் கலந்து பிரவாகித்தால் உனது பெயர்மாத்திரம் பிரபலமாகுமேயன்றி எனதுபெயர் மழுக்கமடைந்து விடுமென்று பயங்குகிறேன்" என்று சொல்ல, யமுனை கங்கையை நோக்கி, "ஏ தேவி! பயப்படாதே; இந்த க்ஷேத்திரமுதல் பெயர் உன்னுடையதாம், வாகினி ஸ்வரூபம் என்னுடையதாமாகும்" என்று சொல்ல, அதன்மேல் கங்கையும் யமுனையும் இவ்விடத்தில் சங்கமமானதாகவும் அன்றுமுதல் கங்கையின் ஜலம் வெண்மையாகவும், யமுனையின் ஜலம் இளநீல வர்ணமாகவும் இருந்தாலும், சமுத்திரத்தில்போய்ச் சேருகிற வரையிலும் கங்கையென்னும் பெயரையே பெற்றதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றியும், பிரம்மாவானவர் அசுவமேதயாகங்கள் செய்தபிறகு இந்த ஸ்தலத்தை ஸ்தோத்திரத்தோடு வர்ணிக்கத் தொடங்கி முடிக்கமாட்டாமல் மயங்க, தமது குமாரத்தியாகிய சரசுவதி அதை முடித்துக்கொடுப்பதாகச் சொல்லி முயல, அக்கலைமகளும் முடிக்கமாட்டாதவளாகி வெட்கியதாகவும், அப்போது அந்தப் பிரம்மலோகத்தில் திரிமூர்த்திகள் உலகரக்ஷணார்த்தமாக யோசனை செய்ய, அப்படிப்பட்டவர்களுடைய முகத்தைப் பார்க்க சரஸ்வதி பயங்கி நிற்கும்

காலத்தில் படபன் என்னும் இராக்ஷதன் பிறந்து அதிக பசியினால் வருந்தி உலகத்தாரை இம்சைசெய்யப் பிரவேசிக்க அவனது உபாதியை நீக்கச் சரஸ்வதியானவள் பிரம்மலோகத்தை விட்டுச் சுந்தர ரூபத்துடன் வீணாகானம் செய்துகொண்டு பூலோகத்தில் அந்தக்கொடிய இராக்ஷதன் முன் வர, அவன் கண்டு மோகிக்க, பசியால் வருந்துபவனாகிய உன்னை விவாகம் செய்துகொள்ளப் பயப்படுகிறேனென்று சரஸ்வதி சொல்ல, அந்தப் பசியை நீதான் தீர்க்கவேண்டுமென்று இராக்ஷதன் வேண்ட, அவன் பசிதீர்க்கச் சமுத்திர ஜலத்தைப் பானம்செய்யும்படி அழைத்துக்கொண்டு போய்விட்டு, அந்தக் காதகனை விட்டுத் தப்பித்துக்கொண்டு இந்தப் பிரயாகை ஸ்தலத்தைக் காணவந்ததாகவும், அப்போது கங்கை யமுனைகள் இந்த சரஸ்வதியை இவ்விடத்தில் நடிக்கக்காணவேண்டுமெனக்கருத, அப்போது சரஸ்வதி: இந்த இடத்தை வர்ணிக்கப் பந்தயம்போட்டுப் பிரதிஷ்டை பெறுமையால் பிரம்மாவானவர் பரிகாசம் செய்வாரென்றெண்ணிப் பகிரங்கமாகத் தோன்றாமல், கங்கை யமுனைகளுக்குள் அடக்கமாகிப் பிரவாகத்தில் விளையாடியதாகவும், ஆ மூன்று நதிகளும் இந்த இடத்தில் சங்கமமானதால் மோக்ஷ லக்ஷ்மி தலைமயிரின் மூன்று பின்னலாகவும், அக்ஷய வடமாகிய ஆலமரம் மேற்படி மூன்று பின்னல்களின் குச்சமானதாகவும், ஆகவே திரிவேணியென்று பிரகாசிக்கிறதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது கங்கை யமுனை இவ்விரண்டும் இந்த இடத்தில் சங்கமமானது முதல் அந்த இரண்டு நதிகளும் உலகத்தாருடைய பாவங்களைக் கத்தரிக்கக் கத்தரிக்கோல்களானதாகவும், அக்கோல்களுக்கு இடை பிடி ஆணியில்லாமையால் அந்தரவாகினியான சரஸ்வதி ஆணிஸ்தானத்தைப் பெற்றதாகவும், இந்த மூன்று உறுப்புகளும் கூடிய கத்திரியைப்போன்ற திரிவேணியென்பது உலகத்தாருடைய சகல பாவங்களையும் கத்தரிப்பதாகப் புராணப் பிரசித்தம். பிரம்மாவானவர் அசுவமேத யாகங்களைச் செய்தபோது அநேக பெரியோர்களை அழைப்பித்து யாகங்களின் பயனையறியும்படி செய்தபடியால் இதற்குப் பிரயாகையென்று பெயருண்டாகியதாம்.

கங்காநதியின் பெருமை.

இந்தக் கங்காநதியானது ஹிமாசல மலையின்மேல் உற்பத்தியாகின்றது. இதன் புராணவிருத்தாந்தம் யாதெனில்:—

கபிலரிஷியின் கோபத்தினால் பஸ்மமாக்கப்பட்ட சகரருடைய 60,000 குமாரருடைய சாம்பலைப் புனிதமாக்கப் பகீரதருடைய பிரார்த்தனைகளுக் கிணங்கி, பரலோகத்திலிருந்தும் மஹாவிஷ்ணுவின் கால்விரலிலிருந்து உற்பத்தியாகிப் பூமியில் விழ, அதன் வேகத்தினால் பூமி பாழ்த்துப் போகாதபடி, பரமசிவன் சிரசால் தாங்கி அதன் வேகத்தைக் குறைத்ததாகவும், ஆகவே, இந்த கங்கைக்குப் பகீரதிநதி என்னும் பெயருண்டாகியதாகவும், பிறகு பூமியில் விழுந்தபோது ஜானுவின் தபசைக் கெடுத்ததனால் அவர் கோபித்துக் கங்கைமுழுதையும் குடித்துவிட்டதாகவும், பிறகு அநேகருடைய பிரார்த்தனைகளுக் கிணங்கிக் குடித்த நீரைக் காதில் வழிந்துவிடும்படிச் செய்ததனால் இதற்கு ஜானுவி என்ற பெயருண்டானதாகவும், கங்கையானது ஹிமவத்பருவதராஜனுக்கு ஜேஷ்ட குமாரத்தியாகவும், அவள் தங்கை உமையாகவும், அந்த உமையைச் சந்தனுமஹாராஜன் விவாஹம் செய்துகொண்டு பீஷ்மர் அல்லது காங்கேயரைப் பெற்றதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கங்கையானது ஹிமாசலத்தில் கங்கோத்பத்தி என்னும் இடத்தில் ஓங்காரவடிவான பனிக்கட்டிக் குகையிலிருந்து உற்பத்தியாகி, பிறகு 13,800 அடிகள் உயரத்திலிருந்து கீழே ஓடி வந்தும், பிறகு ஹரித்துவாரத்தினிடம் 1024 அடிகள் உயரத்திலிருந்து ஓடிவந்து பூமியில் விழுந்தும், காசிப்பட்டணத்துக்கு 350 அடிகள் உயரத்தில் ஓடியும், பிறகு வங்காளத்தைச் சார்ந்த கல்கத்தாவுக் கருகில் பிரம்மபுத்திரா நதியோடு கலந்து வங்காளக்கடலில் விடுகின்றது. இதன் நீளம் 1560 மைல்கள். இதன் அகலம் இடத்துக்கிடம் வித்தியாசப்பட்டாலும், ஹரித்துவாரமுதல் கப்பல் யாத்திரை செய்யக்கூடிய ஆழமும் அகலமுமுள்ளதாய் இருக்கிறது. இந்தக் கங்கைக்குள் அநேக கிளை நதிகள் வந்துகூடினும், அவைகளில் கங்கைக்கு வலது கரையிற் சேரும் யமுனையும், இடது கரையில் வந்து சேரும் குமதி, கோகிரா, குண்டகி நதிகளே சிறந்தவை. இப்படிப்பட்ட விசேஷ நதிகள் சேர்ந்து கங்கை பெரிய நதியாகியதால், அதன் பாய்ச்சலில் ஏராளமான நெல் முதலான தானியங்கள் விளைவாகி அதன் கரையோரங்களில் ஹரித்துவார், கார்வால், கான்பூர், அலகாபாத்து, காசி, லக்ஷ்மணபுரி, பைசாபாத், அயோத்தியா, பாடலீபுரம், கல்கத்தா முதலான பெரியபட்டணங்கள் கட்டப்பட்டு, இலக்ஷக் கணக்கான ஜனங்கள் குடிபுகுந்து சுகமாக வாழ்ந்து வருகிறார்கள்,

இந்தக் கங்கையின் ஜலம் பயிர்களுக்கும் பிராணிகளுக்கும் பெரும் பிரயோஜனத்தைத் தருவதோடு, அதன் ஜலம் அநேக வியாதிகளையும் நீக்கித் தடுத்துச் சுகாரோக்கியமாக வாழச் செய்கின்றபடியால் இதைப் பரிசுத்த நதியாகக்கொண்டாடி வருகின்றனர்.

இதன் ஸ்தலபுராணம் பன்னிரண்டு அத்தியாயங்களை யுடையதாகவும், ஒன்று நூறு அத்தியாயங்களை யுடையதாகவு மிருக்கிறது. இந்த இடத்திலே பிராணத்தியாகம் செய்பவர்கள் ஜன்மாந்திரத்தில் விரும்பிய சித்திகளைப்பெற்று அனுபவித்து மறுபடியும் இந்த க்ஷேத்திரத்தில் ஜனித்துப் பிறகு பிறவித் துன்பமில்லாமல் பேரானந்தத்தை யனுபவிப்பார்களென்று மேற்படி புராணத்தில் சொல்லியிருப்பதால், இக்காலத்திலுங் கூட அநேக தபசிகள், சந்நியாசிகளாக வந்து தவம் செய்து அந்தரங்கமாகக் கங்கையில் இறங்கி இறந்துபோவதாகப் பிரஸ்தாபம். மேலும், முசுகுந்த பிரம்மசாரி என்னும் ஓர் தபசி தான் மண்டலாதிபதியாக வேண்டுமென்று கருதி, சுயஇர்சையின்படி தனது தேகத்தில் பாதி பாகத்தைப் பத்தலாய் அறுத்து யக்கியத்தில் ஆகுதிசெய்து பிராணனை விட்டதாகவும், அவருடைய சிடர்களும், தாமும் அந்தத் தேசிகருக்கே மறு ஜன்மத்திலும் மந்திரிகளாக இருக்கவேண்டு மென்றும், அப்போது பூர்வஜன்ம ஞானமு மிருக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்து, அந்த ஸ்தல மகத்துவத்தை எட்டு ஸ்லோகங்களால் பாடி, அப்போது கடலை,பொரி இவற்றைவருத்து விற்றுவந்த கிழவியினிடம் கொடுத்துவிட்டு ஷை யாகத்திலே விழுந்து பிராணனை விட்டதாகவும், பிறகு மறு ஜன்மத்தில் அந்த முசுகுந்தனென்னும் பிரம்மசாரி ஆக்பர் பாதுஷாவாகப் பிறந்து டில்லிச்குச் சக்கிரவர்த்தி யானதாகவும், சிடர்கள் மந்திரிகளானதாகவும் அந்த மந்திரிகள் இந்தவிடத்தில் வந்து பொரி விற்று ஜீவனம் செய்துவந்த கிழவியினிடம் தாம் முன் ஜன்மத்தில் எழுதிக்கொடுத்த எட்டு சுலோகங்களை வாங்கிக் கொண்டுபோய் ஆக்பர் பாதுஷாவுக்குக் காட்ட, அவர் ஆச்சரியப்பட்டு அன்றுமுதல் அந்த ஸ்தலத்துக்கு அலகாபாத்து—அல்லா=கடவுள், பாத்து=பட்டணம், கடவுள் (பிரத்தியக்ஷமாக வதிந்தவரும்) பட்டணம் என்று பெயரிட்டு, அன்னியர் அதைக் கெடுக்காதபடி 1575ஆம் ஒரு அழகான கோட்டையைக் கட்டினதாகச் சொல்லுகிறார்கள். இந்தக் கோட்டைக்கு மத்தியில் சுமார் 30 அடிகள் உயரமுள்ள ஜயஸ்தம்

பத்தை நாட்டி அதில், 240ல் பௌத்தமத சக்கிரவர்த்தியாக இருந்த அசோகவர்த்தனருடைய சரித்திர சாதனங்கள் வெட்டிப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அந்தக் கோட்டை கங்கை யமுனை சங்கமமாகும் இடத்தில் கட்டியிருந்தபோதிலும் எப்படிப்பட்ட பிரவாகத்துக்கும் இடிந்துபோகாமல் இன்றளவும் புதிதாகவே தோன்றுகிறது. கலிகால தோஷத்தினால் பொன் ஆலமரம் திரிவேணியில் மறைந்துவிட்டபடியால் அதற்குப் பதிலாக ஒரு ஆலமரத்தைக்கோட்டையில்பிரயாகைஈசுவரன்லிங்கங்களுக்கு இடையில் நட்டுப் பயிர்செய்து பாதுகாத்துப் பூஜைசெய்து வருகிறார்கள். இந்த ஆலமரம் 1500 வருஷங்கள் வயதுடையதென்று சொல்லப்படுகின்றது. அதற்கு இரண்டே கிளைகள் மேல் வளர்ந்தவிதமாக இருக்கின்றன. அடிமரத்தைத் துணியால் மூடி வைத்திருப்பதோடு அந்தத் துணி மறைவுக்குக் கீழ் இரண்டு பாதங்கள் கற்களால் செய்வித்து ஸ்ரீராமர் பாதங்கள் என்று சொல்லியும் பூஜைசெய்தும் வருகிறார்கள். இந்த ஆலமரத்தினிடத்தில் "திரிவேணிமாதவம் சாம்பம், பாரதுவா சஞ்சவாசுகம், வந்த அக்ஷயவடாம், சேஷம் பிரயாகம் தீர்த்தநாயகம்" என்னும் சுலோகத்தைச் சொல்லுகிறார்கள். இந்த ஸ்லோகத்தின்படி எட்டு இடங்களுக்கு யாத்திரை செய்யவேண்டும். சோமேசுவரர் ஆலயம் மாத்திரம் யமுனைக்கு அக்கரையிலிருக்கிறது. ஒரு காலத்தில் இந்தப்பிரயாகை ஸ்தலத்தில் தானதருமங்களை வாங்கினால் மகா தோஷமென்று பயந்து பிராமணர்கள் வேறு இடங்களுக்கு விலகிப் போய்விட்டார்களாம். பிறகு பாதுஷாவின் அதிகாரஸ்தர்களுடைய முயற்சியினால் கனோஜி பிராம்மணர்களைத் தருவித்து அவர்களுக்குப் பூஸ்திதிகளைக் கொடுத்து ஸ்தலத்தார்களாக்கினார்களாம். அவர்களுக்கு இப்போது பிரயாகை வாசிகளென்று பெயர். இவர்களன்றியில் கட்டிவார்களென்ற ஒரு வித பிராம்மணர்கள் சங்கமஸ்தானத்தில் விசுப்பலகைகளைப் போட்டுக்கொண்டும்,கொடிகளைக் கட்டிக்கொண்டும், குடை மறைவுகளிலிருந்து யாத்திரை வாசிகளுக்கு உபசாரங்களைச் செய்து ஜீவனம் செய்கிறார்கள். மேலும் பஞ்சதிராவிடர்களைச் சார்ந்த மஹாராஷ்டிரர்களும்,தெலுங்கர்களும் டாணிகளென்னும் பெயருடன் வதிந்து வருகிறார்கள். இந்த ஸ்தலத்தில் எமதுவிதிய என்கிற கார்த்திகை மாதம் சுத்த துவிதியதினத்தில் எமதருமராஜன் தனது சகோதரியான சர

ஸ்வர்க்கத்தைக் காணுவதற்கு வருவதாகவும், அக்காலத்தில் யமுனா நதியில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கும், அவர்களுடைய வமிசத்தார்களுக்கும் எமதண்டனை யில்லாமல் விடுவதாகவும் வரங்கொடுத்ததாய், ஸ்தல புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதால், அந்தத்தினத்தில் லக்ஷக்கணக்கன ஹிந்துக்கள் நாலாபக்கங்களிலிருந்து வந்து ஸ்நானஞ்செய்கிறார்கள். மேலும் இந்த இடத்திலேபுருஷர்களுடன்கூட வரும் கன்னிசழியாத பெண்களும் வேணிதானம் செய்யவேண்டும். வேணிதான மென்றால், தலைமயிரின் பின்னலைக் கத்தரித்துத் தானம் பண்ணுதலாம். இது விஷயத்தில் சிலருக்கு அபிப்பிராயங்கள் பேதப்பட்டு, மயிர்ப் பின்னலின் சிறிது பாகத்தை மாத்திரம் கத்திரித்துக் கங்கையில் போட்டுவிடுகிறார்கள். அந்த மயிர் மிதக்காமல் அடியில் மூழ்கி விடுகிறது; ஆகையால், யாத்திரைக்காரரைப் பிரயாகைவாசிகள் வந்தழைக்கும்போது க்ஷவரகனும் வந்தழைக்கச் சேருகிறான். முதலில் எவன்வந்தழைக்கிறானோ அவனிடத்திலேயே க்ஷவரம் செய்துகொள்ளவேண்டும். அதற்குக் கட்டணம் ஏற்பட்டிருக்கிற தன்றியில், தருமார்த்த பாகப்பொருள்முதலானவைகளைக்கொடுத்தல்வேண்டும். யாம் வீட்டிலேயே க்ஷவரம் செய்துகொண்டபடியால் நாலணா கொடுத்தோம். அந்த க்ஷவரகன் க்ஷவரம் செய்த பிறகு, கழுத்து கை கால் முதலானவைகளை நீவிப் பிடித்து கஸரத்து செய்கிறதன்றியில், நாம் சமையல் செய்யும்படியான இடத்துக்கெல்லாம் தாராளமாக வருகிறான். நமது ஜலாதி பாத்திரங்களைச் சாதாரணமாகத் தொட்டுக்கொள்ளுகிறான். இவ்விதமாக அந்தேசாசார மிருக்கிறது; மேலும், இந்தப் பிரயாகையில் வைதிக கர்ம சங்கற்பத்தில் தென்தேசத்தைப் போலவே பரதகண்டே என்கிறதை மட்டும் சொல்லி "ஆரியவர்த்த தர்திரகத பிரம்ம வார்த்தைகதேசே, விஷ்ணு பிரஜாபதி க்ஷேத்ரே, ஷட்கோணமத்தியே, அந்தர்வேதியாம், பாகிருத்தியாம், பஸ்சமபாகே, காளிந்திய உத்திரதீரே வடஸ்சய பர்வதிக் பாகே விக்கிரமசகே, பவுத்தாவதாரே வியநாம சம்வச்சரே" என்று சொல்லிப் பிறகு தக்ஷணதேசரீதியாய் மாசம், திதி முதலானவைகளைச் சொல்லுகிறார்கள்.

கடைசியாக ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் திக்கு விஜயம் செய்தபோது இந்தப் பிரயாகைக்கு வந்து சந்நியாசத்தை ஸ்தாபித்ததாகவும், அப்போது கவுட பிராம்மணர்கள் அவருக்குச் சிடர்களாகி மதுமாமிசங்களைக்கொண்டு ஆசாரிய சுவாமி

களுக்கு பிக்ஷை செய்விக்க, அவர் அதை அன்புடன் அங்கீகரிக்க, சீடர்கள் மமதையால் தாமும் மதுமாமிசங்களை மிதமிஞ்சி உபயோகப்படுத்தினதாகவும், ஆசாரியர் கண்டு அவர்களுக்குப் புத்தி வருவிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன், ஒருநாள் கன்னான் உலையில் ஜலத்தைப்போல் காய்ந்து கரைந்திருந்த ஈயத்தை இருகரங்களால் வாரிக்குடிக்க, சீடர்களான கவுட சந்நியாசிகள் பார்த்துப் பயந்து, தாங்கள் அவரைப் போல் சமதரிசன மஹாத்துமாக்களல்லவென்று சொல்ல, ஆசாரியர் பார்த்து இன்ப துன்பங்களின் தாரதம்மியத்தைக் கருதும் மனோதிடமில்லாத நீங்கள் பிரஷ்டாளாகக் கடவதென்று சபித்ததாகவும், அந்தப் பத்து சந்நியாசிகளும் அநேக சீடர்களைச் சேர்த்துக்கொண்டு தேசாயிகள் அல்லது தேசநாமிகளென்னும் பெயரைப் பெற்றுப் பிறகு மஹாஜனங்களென்னும் சாவுகாரிகளாகி விசேஷ வர்த்தகங்களைச் செய்துவந்ததாகவும், இந்த கோஷாயிகள் வானு, ரணு, கிரி, பர்வத, சாகர, பார்த்தி, புரி சரசுவதி, தீர்த, ஆஸ்ரமம் என்னும் பத்து ஆஸ்ரமங்களுக்குட்பட்டவர்களாகி, ஆக்பர் பாதுஷா அவர்களால் விடப்பட்ட மானியங்களை யனுபவித்துக் கொண்டு சுகஜீவனம் செய்துவந்ததாகவும், பிறகு வந்த மகமதிய மன்னர்கள் மத துவேஷத்தினால் இவர்களை வருத்தியதாகவும், முக்கியமாக அயோத்தி, லக்ஷ்மணபுரியின் நபாபு டில்லி பாதுஷாவை சாமதுரோகம் பண்ணி, ஹிந்து சந்நியாசிகள் முதலானவர்களுக்குத் தருமமாக விடப்பட்டிருந்த மானிய ஸ்திதிகளை யெல்லாம் பிடுங்கிக்கொண்டு ஹிந்துஜன சமூஹத்தாரை மகம்மது மதத்தை அநுஷ்டிக்கும்படிக்கும், அவர்களைப்போலவே நடையுடை பாஷைகளை யநுஷ்டிக்கும்படிக்கும் கட்டாயப்படுத்தி வருத்தினதாகவும், பிறகு 1801-வருஷம் ஈஸ்டு இந்திய கம்பெனியென்னும் ஆங்கிலேய வர்த்தகக் கூட்டத்தார் ஷை நபாபின் இஷ்டத்தினால் ஷை பிரயாகையைப் பெற்று அதிலிருந்த ஆக்பர்பாதுஷா கட்டிய கோட்டையைப் பலப்படுத்தி, பரதபூர் முதலான ராஜாக்களைப் பத்திரப்படுத்தினதாகவும் தெரியவருகிறது.

இப்போது பிரயாகையென்னும் அலகாபாத்து வடமேற்கு மாகாணங்களின் பிரதான பட்டணமாகி, கங்கை யமுனை சங்கம மாகுமிடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கங்கை யமுனை இவற்றின் சங்கம காக்ஷி வெகு விநோதமும், ஆச்சரியகரமுமாக விருக்கின்றது. இவ்விடத்தில் கங்கையானது சுமார் ஒரு

மைல் அகலமுள்ளதாயும், அதைக் கடந்துபோக ஒரு படகு பாலமும் கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டணம் சுமார் எட்டு மைல் சுற்றளவுள்ளதா யிருப்பதோடும், 1,05,000 ஜனங்கள் வசிக்கின்ற பெரிய பட்டணமாயு மிருக்கிறது. இவ்விடத்தில் ஹிந்துக்கள் மஹமதியர்கள் என்னும் வித்தியாசத்தைக் கண்டு பிடிப்பது கஷ்டம். பஞ்ச கவுட பிராம்மண புருஷர்களுடைய நடையுடை பாவனைகள் மகம்மதியர்களைப் போலவே யிருக்கிறதன்றியில், இந்துஸ்தானி பாஷையையே பொதுவாக வழங்கி வருகிறார்கள். இந்தப் பஞ்ச கவுடர்களுடைய ஸ்திரீகள் ரவிக்கைகளைப் போடாவிட்டாலும், முக்காடு இல்லாமல் வெளியில்வருகிறதில்லை. ஆறுமுழநீளமும், நான்கு முழ அகலமுமுள்ள வெள்ளை அல்லது செங்காவித் துணிகளைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். பெரும்பான்மையான ஸ்திரீகள் சுந்தரவதிகளாய் அதிக அழகாக இருந்தாலும், அவர்கள் உடைகளை அழுக்கு இல்லாமல் சுத்தமாக வைப்பது அபூர்வமாகையால், அவர்களுடைய அழகை அழுக்குத் துணிகள் கெடுத்துவிடுகின்றன. இவ்விதம் அழுக்குத் துணிகளையும் போதுமான நீளமுமற்ற துணிகளையும் தரித்துக்கொண்டிருந்தாலும், பிராதக்கால கங்காஸ்நானம் புருஷர்களுக்கு முந்திச் செய்யாமல் விடுகிறதில்லை. மேலும் தங்களுடைய போஜன பாத்திரங்களை வெகு சுத்தியாகத் தேய்த்துக் கழுவிச் சுசிகரமாக வைத்துக்கொள்ளுகிறார்கள். அன்றியும் அநேகர் சிவபூஜையை பக்தி பூர்வமாகச் செய்துவருகிறார்கள். தென்தேசத்து ஸ்திரீகள் வஸ்திராபரணங்களின்பேரில் மிதமிஞ்சிய பிரியத்தைப் பாராட்டுவதைப்போல, இவ்விடத்திய ஸ்திரீகள் பாராட்டுகிறதாகத் தோன்றவில்லை. இத்தியாதிகளால் நமது தென்தேசத்து ஸ்திரீபுருஷர்கள் போகப் பிரியர்களென்றும், இந்தப் பிரயாகை வாசிகள் போஜனம் பக்திகளில் பிரியமுடையவர்களென்றும் நிர்மாணிக்கவேண்டியிருக்கிறது. முக்கியமாகத் தென்தேசத்தாருடைய பாத்திரங்களின் அழுக்கும், பிரயாகை ஜனங்களுடைய வஸ்திரங்களின் அழுக்கும் சமம் என்றும், தென்தேசத்தாரின் வஸ்திர சுத்தியும் பிரயாகை தேசத்தாரின் பாத்திர சுத்தியும் சமமென்றுஞ் சொல்லலாம்.

வேளாண்மை உணவு முதலியன.

பிரயாகையின் பெரும்பாகமான பூமி உழவுத் தொழிலுக்கு உத்தமமானதாகத் தோன்றாவிடினும், கங்கை நதியின் வண்டல் மண் வெகு சாரமானது. கோதுமை, கடுகு முதலானவைகள் அதிக உழைப்பில்லாமல் விஸ்தாரமாக விளைந்து அதிக லாபத்தைக் கொடுக்கிறது. கத்திரி, உருளைக்கிழங்கு, முட்டகோஸ், காலிப்பலவர், பட்டாணி, மிளகாய், வெங்காயம், இஞ்சி, பொதினா, கொத்தமல்லி, கொய்யா, அன்னாசி முதலான காய்கறிகள் பழவர்க்கங்கள் விசேஷமாகப் பெருத்துப் பார்வைக்கு அழகாகவும், சில சமயங்களில் ஆச்சரியகரமான உருவங்களாகவும் விளைகின்றன. இவ்விடத்திய கொய்யாப்பழம் நமது தேசத்துப் பெரிய தேங்காயின் பருமனுள்ளது. அந்தப் பெரிய பழங்களை அதை அடுத்த இரண்டு இலைகளுடன் பிடுங்கிக்கொண்டுவந்து பைசாவுக்கு (மூன்று தம்பிடிக்கு) ஐந்தாறு அல்லது ஏழெட்டு விற்கிறார்கள். இந்த தேசத்தார் கோதுமைமாவில் செய்யப்பட்ட பூரிகளென்னும் சிறிய பலகாரங்களைக் புளிகாரமில்லாமல் வேகவைத்துத் துவரம் பருப்பைத் தொட்டுக்கொண்டும், சில சமயங்களில் தயிரைத் தொட்டுக்கொண்டும் சாப்பிடுகிறார்கள். சில சமயங்களில் மிட்டாய் முதலானவைகளால் காலம் கழிக்கிறார்கள். இவ்விடத்திய மாடுகளும், எருமைகளும் பருத்துத் கொழுத்து அழகாகத் தோன்றுகின்றன. அவைகளுக்குத் தட்டுகளைச் சிறிய துண்டுகளாக வெட்டிக் கழனி நீரில் ஊரவைத்து அந்த நீரோடு கடித்துக் குடிக்கச்செய்கிறார்கள். போக்குவரவு செய்வதற்குப் பக்கிகளென்ற நான்கு சக்கிரங்களுடைய கோச்சு வண்டிகளுக்கு இரண்டு குதிரைகளைக் கட்டி உபயோகிக்கிறார்கள். சாதாரண ஜனங்களுக்கு ஏக்கா என்னும் ஒருவித ஒற்றைக் குதிரை வண்டிகள் விசேஷமாக இருக்கின்றன. இந்த வண்டிகளில், இரண்டு பெயர்கூட நன்றாக உட்கார்ந்து போவதற்குச் சுகமான வசதி கிடையாது. தென்தேசத்து ஒற்றை மாடு, இரட்டை மாட்டு வண்டிகளைப்போல் செய்துகொண்டு சுகப்படத் தெரியாமலிருப்பதன்றியில், கபிலை ஏற்ற மிறைக்கும் மாடுகளைப் பின்போகப் பழக்கிவைக்காமல், ஒவ்வொரு இறைப்புக்கும் மாடுகளை அவிழ்த்துக் கொண்டுபோய்க் கட்டிக் காலத்தை வீணாக்குகிறார்கள். இந்தக் குடியானவர்களுக்கு இது விஷயத்தில் இரண்டொரு தடவை யாம் சொல்லிக்

கொடுக்கும் அந்த வழக்கத்தை அனுசரிக்க அவர்கள் பிரியங் கொள்வதாகத் தோற்றவில்லை.

நகரின் லக்ஷணம்.

இந்த அலகாபாத்தின் சகர் அல்லது சவுக்கு வெகு அழகாக இருக்கிறது. இந்தப் பாகத்தில் வீதிகள் விஸ்தாரமானவைகளாகவும், வரிசை வரிசையாகவும் 3, 4, 5, 6, 7 அடுக்கு மெத்தைகள் பெரும்பாலும் மகம்மதியர்களுடைய கட்டிட பாவனைகளை யுடையவைகளாகவு மிருக்கின்றன. கட்டிடங்களின்கீழ் அடுக்குகளில் பலவித வியாபார வஸ்துக்களடங்கிய கடைகளும், வர்த்தகர்கள் வசிக்கும்படியான வீடுகளு மிருக்கின்றன. மேல் மெத்தைகளில் பற்பல தேசங்களின் பற்பல விதமான தாசிவேசிகள் சிங்காரமாக உடுத்திக்கொண்டும், சோப்பாக்களிலும் நாற்காலிகளிலும் உட்கார்ந்துகொண்டும், உக்காக்களை குடித்துக்கொண்டும், வீதிகளில் நடக்கப்பட்ட பாட்டைசாரிகளைப் பார்த்துக்கொண்டு மிருக்கின்றனர். இந்தச் சதுரங்கமான வீதிகளுக் கிடையில் புராதனமும் பெருமையுமான மார்க்கட்டிருக்கின்றது. இந்த மார்க்கட்டில் துணிமணிகளும், நவதானியங்களும் காய் கறி பழவர்க்கங்களும் எதேஷ்டமாக விற்கப்படுகின்றன. பிரதிதினமும் சாயரக்ஷைகளில் இந்த மார்க்கட்டிலும், மற்றும் அடுத்த கடை வீதிகளிலும் ஏராளமான ஜனங்கள் கும்பல் கும்பலாக நடந்து போவதற்கும் வழியற்று நிற்கிறார்கள். இந்த அலகாபாத்தில் விசேஷமான கைத்தொழில்களில்லாவிட்டாலும் வர்த்தகம் அதிகம். இந்த அலகாபாத்தில் வசிக்கும் அங்கிலேயர்கள் சுதேசிகளுடைய வாசஸ்தானத்துக்கு வெகுதூரமான கானிங் நகரில் (Canning Town) விசாலமும் இரமணீயமுமான பங்களாக்களில் குடியிருக்கிறார்கள். இந்த கானிங்குடவுனும் சுதேசிகள் வசிக்குமிடத்திற்கும் இடையில் ஈஸ்ட் இந்தியா ரெயில் பாட்டை யிருக்கின்றது. இந்த இங்கிலீஷ்காரர்கள் குடியிருக்கும் பாகத்தின் பாதைகள் முக்கியமாக கானிங்கு, ஆல்பர்ட்டு, எல்ஜின், ஜிஸ்டோ, ஸ்டேன்லி, மேயோ, லாயல் முதலான வீதிகள் அதிக விசாலமானவைகளாகவும் ஒவ்வொரு பாதையில் கட்டை வண்டிகள், குதிரை வண்டிகள், மனுஷர்கள் போக்குவரத்துச்செய்ய வகுக்கப்பட்டு மா, அரசு, வேப்ப மரங்கள் வைத்துப போதுமான நிழலைத்தரும்படி செய்திருக்கிறார்கள். இவ்விடத்தில் (ஷூனோர் ஸ்டேடான்) என்னும்

ஒரு வித செங்கற்களால் கட்டப்பட்ட பிரம்மாண்டமான ஒரு ஹைகோர்ட்டு கட்டடமிருக்கிறது. இவ்வளவு அழகான ஹைகோர்ட்டுகல்கத்தாவிலும்கிடையாது. இந்தக்கட்டடத்தையும் இதன் நீதிபதிகளிற் சிறந்த ஜஸ்டிஸ் ஸெடிரெய்ட் என்பவரையும் காண நாம் வெகுநாளாகப் பிரியப்பட்டிருந்ததால், டிசம்பர்மீ 15-தேதி போய் அந்த நீதியதிபரைக் கண்டு சந்தோஷப்பட்டதன்றியில், அந்த ஐகோர்ட்டின் அழகையும், அதில் அப்போது ஒரு விசேஷ வழக்கைப்பற்றி வாதித்துக்கொண்டிருந்த பண்டிதர் வித்தியா ரத்தினமவர்களையுங் கண்டு சந்தோஷமடையலானோம். மிஸ்டர் ஸ்டிரெயிட் நீதியதிபர் லார்டு பேகன் நூலாசிரியரைப் போன்ற முகமுடையவர். எந்தக் காரியத்தையும் ஆழ்ந்து யோசிப்பவராகவும் தோன்றுகிறார். பண்டிட் வித்தியாரத்தினம் அவர்கள் சிறந்த படிப்பாளியாகவும், நியாய தோரணையை தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுபவராகவு மிருக்கினும், கைகால் முதலான அங்க ஆட்டங்களை அதிகமாக உபயோகப்படுத்துகிறார். டிசம்பர்மீ 16-தேதி அலகாபாத்து காலேஜ் ஹால் என்னும் வித்தியாசாலையைப் போய்ப் பார்த்தோம். அது இந்து தேசத்திலிருக்கும் வித்தியா விஷயமான கட்டடங்கள் எல்லாவற்றிலும்பெரிதும்,பெருமையும் சிற்பசாஸ்திரநிபுணர்களால் (க்ஷ்ணோர்கற்களால்) கட்டப்பட்டதுமான கட்டடம். இந்தக் கட்டடத்தின்முதல்பாகத்தின்(சபாமண்டபத்தின்)மேல்தாழ்வார ஓரங்களில் அந்தக்கட்டடம் கட்டுவதற்குப்பொருளுதவி செய்த ஜெயப்பூர் முதலான மஹா இராஜாக்களுடைய பெயர்கள் வெள்ளை ஸ்படிக பலகைக் கற்களில் ஞாபகச் சின்னங்களாக எழுதப்பட்டிருக்கின்றன. உட்பாகங்களில் சகலவித தருமசாஸ்திர கிரந்தங்கள் அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. கிழக்குப் பாகத்திய கட்டடங்களில் சாஸ்திர பயற்சிக்கேற்ற இன்றியமையாத இயந்திர கருவிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கலாசாலையில் டில்லி, மதுரா, கான்பூர், லக்னோ, அயோத்தி, பனாரிஸ் முதலான இடங்களின் வாலிபர்கள் பி. ஏ. முதலான உயர்தர பரீட்சைக்காக வந்து வாசிக்கின்றனர். அந்த உயர்தர வித்தியார்த்திகளில் சிலர் எமது பூட்சையும் சல்லடம் முதலான உடைகளையுங் கண்டமாத்திரத்தில் நாம் ஹிந்துவோ மற்றெந்த ஜாதியோவென்று சந்தேகித்தார்கள். பிறகு எம்மைச் சென்னை இராஜதானியிலிருந்து வந்த ஹிந்துவென்று தெரிந்த பிறகு, கல்வி விஷய

மாகவும், கல்கத்தா நேஷனல் காங்கிரஸ் விஷயமாகவும், ஒரு பிரசங்கம் செய்யச் சொல்லிக் கோரிக்கொண்ட பிரகாரம் நானும் மறுநாள் போய்ப் பிரசங்கம் செய்ய அவர்கள் கேட்டுச் சந்தோஷப்பட்டு நன்றியறிவைக் காட்டினார்கள். இந்தக் கலாசாலையன்றியில் இந்த அலகாபாத்தில் (Mayo Hall) மேயோ ஹால், (Sultan Kushru's Serai) சுல்தான் குஷ்ரூஸ் செரியும், (Begum Jehangar) பேகம் ஜிஹாங்கர் முதலான கட்டடங்களும், 1870ஆ இத்தேசத்துக்கு வந்த டியூக் அப் எடின்பர்க்கு பிரபுவின் ஞாபகச் சின்னமாகக் கட்டிய ஆல்பர்டு பார்க்கு தோட்டமும், கண்டோன்மெண்டிலிருக்கும் மாக்பரசன் பார்க்கு தோட்டமும் சிரேஷ்டமானவை. விக்டோரியா பப்ளிக் தோட்டம் முதலானவை பார்க்கத் தகுந்தவை. நாம் கோயமுத்தூரிலிருந்து இந்த அலகாபாத்துக்குப் போய்ச் சேருகிறவரையில் கடுங்குளிராலும், மழையினாலும் நிரம்ப அவதிப்பட்டதன்றியில், தகுந்த போஜனமும், தகுந்த ஆகாரமில்லாமையாலும், ஜலதோஷம், இருமல் முதலானவைகளால் வருந்தியதாலும், மெய்ச்சூரிலிருந்து அலகாபாத்துக்கு அனுப்பிய அரிசி, பருப்பு, பாத்திரம், புடவை முதலான சாமான்கள் வந்து சேராமையாலும், இந்த அலகாபாத்தில் டிசம்பர்மீ 11-தேதி முதல் 17-தேதி வரையில் இருக்கவேண்டி வந்தது. இந்த ஆறு தினங்களில் இந்தப் பட்டணத்தின் பெரும்பாகத்தைப் பார்வையிட்டோம். எமக்கு இந்துஸ்தானி பாஷை தெரியாவிட்டாலும், தென்தேசத்தைச் சார்ந்த கும்பகோணம் அப்பாசாமி சாஸ்திரிகள், கிருஷ்ணசாஸ்திரிகள், பார்வதிபாய் அம்மாள் முதலானவர்கள் விடுதிக்குப் போய்த் தமிழ்ப்பாஷை பேசிவந்ததன்றியில், இரங்கூனில் இரத்தின வியாபாரம் செய்யும் ம-ா-ா-ஸ்ரீ இரத்தின முதலியார் முதலானவர்கள் எமது ஜாகைக்கு வந்து பேசிக்கொண்டிருப்பார்கள். இந்த அலகாபாத்தில் 12 வருஷத்திற்கு ஒருதடவை கும்பமேலா உற்சவத்திற்கும், பிரதி வருஷம் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடக்கும் மகமேலா உற்சவத்திற்கும் இலக்ஷக்கணக்கான ஜனங்கள் வந்துகூடுகிறார்கள். இந்த அலகாபாத்தானது பம்பாய்க்கு 844 மைல்கள் தூரத்திலிருப்பதால் மெயில் வண்டி மூன்றாம் வகுப்புக்கு ரூபா 13-1-0-ம், கல்கத்தாவுக்கு 514 மைல்கள் தூரத்திலிருப்பதால் ரூபா 5-1-10-ம், மெய்லுக்கு ரூபா 9-1-0-ம் ஆக ரெயில் சார்ஜ் கொடுக்கவேண்டும். சென்னைக்கு 1456 மைல்

கள் தூரத்திலிருப்பதால் மூன்றும் வகுப்புக்கு ரூ. 23-7-3 சார்ஜ் கொடுக்கவேண்டும்.

பிரயாகையில் பேய் ஓட்டியது.

இந்தப் பிரயாகையிலுங்கூட ஜனங்கள் பேய்முதலான துஷ்டபிராணிக ளிருப்பதாகப் பயப்படுகிறார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாக: எமக்குத் துணையாக அழைத்துக்கொண்டு போன ம-ள-ள-ஸ்ரீ இரங்கராவ் அவர்களுடைய தமக்கையாராகும் பார்வதிபாய் அம்மாளுடைய குமாரத்தியாகிய வேணுபாய் என்னும் ஓர் பாலிய விதவை யிருக்கின்றனள். அழகிலும் கல்வியிலும் சிறந்த இந்த வாலிபப் பெண்ணின் புருஷன் இரண்டொரு மாதங்களுக்குமுன் கங்கைக்கரையோரம் ஸ்நானத்துக்குப் போகையில் வகைமோசமாகக் கங்கையில் விழுந்திறந்து கண்ணுக்குக் காணாமல் மறைந்தான். இந்த வாலிபப்பெண் கர்ப்பவதியாயும், அதிக வாலிபமாயு மிருப்பதைக் கருதித் தலைமயிர் எடுக்காமல் விட்டிருந்தார்கள். இந்த அழகிய பெண் இரவில் படுக்கும்போதெல்லாம் இறந்துபோன தன் புருஷன் சாயாரூபமாக வந்து "நீ வர வேண்டும்! நீ வரவேண்டும்! உன்னை நான் விடமாட்டேன்" என்று கூப்பிடுகிறதாகத் தன் தாயாரிடம் சொல்லிக்கொண்டிருந்தாள். டிசம்பர்மீ 13 தேதி இராத்திரி படுக்கைக்குப் போன அந்தப் பெண் வாயிலடக்கிய பீடி (அதாவது வெற்றிலைப் பாக்குக் காசுக் கட்டித்தாள் சேர்த்துச் சுண்ணாம்புடன் பைசாவுக்கு மூன்று பட்டிகளாக விற்கும் வெற்றிலை) மெல்லுமுன் ஸ்மரணைதப்பிப் பிரேதமாகக் கிடந்தனள். மறுநாள் (டிசம்பர்மீ 14-தேதி) காலை 11-மணி வரையிலும் படுக்கையைவிட்டு அசையாமலிருக்கத் தாயாராகிய பார்வதிபாய் பார்த்துப் பயந்து அழுதகண்ணும் சிந்தியமூக்குமாக எம்மிடம் வந்து முறையிட்டனர். அப்போது அந்தம்மைக்கு வீட்டில் யாதொரு புருஷசகாய மில்லாதிருந்தமையால், நாமும் எமது டாக்டர் கிருஷ்ணசாமி ராவுத்தும், எமது பண்டிதர் தேவதத்தரும் ஓடிப்போய்ப்பார்க்க, புத்திபுலனாதி தொழில்களற்றுச் சுவாச ஓட்டமும் அறியக்கூடாமலிருந்தது. நாடியும் அடங்கிவிட்டது. உடனே கட்டிலின்மீதிருந்த பிரேதத்தைப்போன்ற பெண்ணை வெளியில் கொண்டுவரச்செய்து, எமது டாக்டரைக்கொண்டு பூதகவிசத்தைப் போடச்செய்

னும், அது தக்கபடி உடனே வேலை செய்யவில்லை. ஆனால் அந்த பார்வதிபாயம்மாளும் மற்றும் சுற்றிலுமிருந்த அந்தேசத்து கோஷாய் ஸ்திரீகளெல்லாம் "இறந்துபோன புருஷன் வந்து இப்படிச் செய்திருக்கிறான்; ஆகவே இந்தப் பிசாசை ஓட்டவேண்டும்" என்று கெஞ்சியழுதார்கள். அவர்களுக்கு வியாதியின் நியாயத்தை எவ்விதமாய்ச் சொல்லியும் நம்பவில்லை. கடைசியாக டாக்டர் கிரீன்பண்டிதர் கருத்தைப் போல் மூடபக்தியிலிருக்கும் ஜனங்களுக்கு மூடபக்தியை யனுசரித்து வைத்தியம் செய்வது உத்தம மென்பதைக் கருதி, ஒருபிடி வேப்பிலைக்கொத்தைக் கொண்டுவரச்சொன்னோம். எமக்குப் பேயோட்டும் மந்திரத்தில் நம்பிக்கையில்லை. ஒருவேளை யிருக்கினும் எமக்குத் தெரியாது. ஆகவே ஜகதீஸ்வரனுடைய பெயரைச்சொல்லி வேப்பிலையை முகத்துக்கு நேராகச் சில நிமிஷங்கள் வீசினோம். உடனே கிட்டிக்கொண்டிருந்த பற்களும் வாயும் திறக்க, கண்களும் திறக்க, கை கால்கள் நடிக்க, புத்தியற்றுக் கிடந்தவள் எழுந்து உட்கார்ந்து எம்மை விழிகளால் மிரட்டிப் பிரமித்துப் பார்க்கத் தொடங்கினள். சுற்றிலுமிருந்த ஸ்திரீபுருஷர்கள் எமது மந்திரத்தை மெச்சி ஆச்சரியப்பட்டு, இந்தப் புருஷபூதம் இனி எப்போதும் வாராமல் தடுக்க யந்திரங்கட்டிக் காப்பாற்ற வேண்டுமென்று செப்புத்தகடுகளை எம்மிடம் கொடுத்தார்கள். அந்தத் தகடுகளில் இன்னமந்திரம் எழுதுவதென்று எமக்குத் தெரியவில்லை. கடைசியாக அந்தப்பெண் பிரேதமாகாமல் தப்பிப் பிழைத்ததால் எங்களுக்கும் பூரண சந்தோஷமாயிற்று. இதனால் வேப்பிலையின் பிரயோஜனமும், ஜகதீசுவரருடைய அருளும் வெளியாகாமற்போகாது.

இந்தப் பிரயாகையில் நாங்கள் வசித்த "ஜம்னு மஹால்" என்னும் வீட்டுக்குப் பிரதிதினமும் ஆள் ஒன்றுக்குக் காலணவீதம் வாடகை கொடுத்தோம். இவ்வளவு சுலபமான வாடகையிருப்பதற்குக் காரணம், அவ் வீட்டின் காவலாளியாகயிருக்கும் மனுஷனே. அவ்வீட்டின் கீழ்க்கட்டிடத்தில் அரிசி முதலான பண்டங்களின் கடையை வைத்துக்கொண்டு நமக்கு வேண்டிய சாமான்களை அதிக லாபத்துக்கு விற்பதினாலும், அவனிடம் அல்லாமல் வேறுவிடங்களில் பொருள் வாங்க இடங்கொடாமையாலும் அந்த மனுஷனுக்கு நல்ல லாபமிருக்கிறது. இந்த லாபத்தைக் கருதியே வீட்டு வாடகை சுலபமாக இருக்கிறது. டிசம்பர்மீ 17-ந்தேதி காலை

8-மணிக்கு அலகாபாத்தைவிட்டுக் காசிக்கு ஆள் ஒன்றுக்கு ரூ. 1 அணா 5-கொடுத்து ஈஸ்டர் புகைவண்டியிலேறி அன்று 12-மணிக்கு மோகல்ஷெரி என்னும் ஸ்டேஷனுக்கு வந்து, அவ்விடமிருந்து ஆறுமைல் தூரமுள்ள சிறு கிளைப்புகை வண்டியால் 2 மணிக்குச் சேர்ந்தோம். காசியைச்சார்ந்த கங்கையைத் தாண்டப் படகுபாலங் கட்டப்பட்டிருந்தாலும், பிறகு சந்துகளில் போய்ப் பிரயாசைப்பட நேரிடுமென்றெண்ணி ஒரு பெரியபடகுக்கு இரண்டுரூபாய் வாடகை பேசிப் பிரம்மகட்டடத்தில் ஐந்து மணிக்கு இறங்கினோம். இவ்விடத்தில் கங்கையினுடையவும், காசி கட்டிடங்களினுடையவும் காக்ஷி ஆனந்தகரமாயிருந்தன.

பிரயாகையில் கங்கை யமுனை சங்கமமாகிற இடத்தில் ஸ்நானஞ்செய்து பிரார்த்தித்தது.

மாக்ஷிமை பொருந்திய ஓ கங்காநதியே! உனது பெருமையை யென்னவென்று புகழுவோம். நீ இந்த உலகத்திலிருக்கும் பருவதங்களிலெல்லாம் மஹா உயர்ந்த பருவதமாகிய ஹிமவத்கிரியில் ஜனித்து, சமுத்திரமட்டத்திற்குச் சுமார் 1500 அடி உயரமுள்ள கார்வால் நாட்டையடுத்த தேவ பிரயாகில் அலகநந்தாவுடன் கலந்து, பாகீரதி முதலான சிறு நதிகளோடு சேர்ந்து ஹரித்துவாராதி திவ்விய தேசங்களில் பிரவேசித்து, கங்கை என்ற கம்பீரமான பெயரைப் பெற்றாய். மேலும் எத்திறத்தோரும் புகழத்தக்க யமுனா, சரஸ்வதி, சம்பல், சோன், இராமகங்கா, குமதை, கோகிரா, கண்டகி, கவுசகி முதலான சிறந்த கிளைநதிகளை யுடையதாய், பிரயாகை, காசி, பாடலீபுரம், காளிகட்டம் முதலான சிறந்த நகரங்கள் நின்னையடுத்து நிரந்தரமான கீர்த்தியை யடையும்படி செய்திருக்கின்றாய்; இம்மட்டோ! ஆயிரத்து அறுநூறு மைல் நீளமும், சிலவிடங்களில் மூன்று மைல்களுக்கதிகமாக அகலமு முடையதாய்த் திவ்வியமான ஜலத்தோடு சமுத்திரபோல் பிரகாசிக்கிறாய்! நினது ஜலமோ குடிக்கக் குடிக்கத் தெவிட்டாத தெள்ளமுதைப் போலிருக்கிறது. நினது ஜலத்தைக் கோடிக்கணக்கான க்ருமிகீடகாதிகளும், பக்ஷி மிருகாதி பிராணிகளும், இலக்ஷாதிலக்ஷமான ஜனசமூகத்தாரும் ஜீவாதாரமாகக்கொண்டிருக்கின்றனர். நினது கனிமணமோ கண்ணைப் பகட்டு

கின்றது. நின் பெயரைச் சொல்லிப் பிழைப்பவர் அநேகர் நின்பிரதாபம் பிரபஞ்சத்தாருக்கே பிரபலம்; ஆகவே நின்னை பிரம்மஸ்வரூபமென்றும், பாவநாசனியென்றும் புகழ்ந்து புனிதராக்கிக்கொள்ளப் பல்லாயிரம் ஜனங்கள் பற்பல தேசங்களிலிருந்து வந்துகொண்டே யிருக்கின்றனர். ஓ ஜிவநதியே! நின்னை யாம் பாவநாசனி, பரப்பிரம்ம ஸ்வரூபமென்று நம்பாவிட்டாலும், பரமாத்மாவினால் சிருஷ்டிக்கப்பட்ட ஓர் சிறந்த சிருஷ்டியென்றும், அந்தச் சிருஷ்டிகர்த்தாவின் அற்புத சக்தியைக்காட்டும் ஓர் ஆசாரியனைப் போலிருக்கிறாயென்றும் நம்புகிறோம். நீ எமது தேகத்திலும் வஸ்திரங்களிலும் நிறைந்துள்ள அழுக்குகளை நீக்கிச் சுத்தப்படுத்தி, அப்படிச் செய்வதினால் எமது மனதும் சுத்தியடைந்து மங்களஸ்வரூபனாகிய பரமேசுவரனது மஹிமா பிரதாபத்தை மனனஞ்செய்ய சஹகாரியாக நிற்பாய்! இந்தப் பேருதவிக்காகவே நீ படைக்கப்பட்டிருக்கிறாய். இதை அறிந்தே நாம் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கின்றோம். ஆரியர்கள் புகழும் ஓ அற்புத நதியே! நினக்கு மங்களமுண்டாவதாக.

யமுனா நதிக்கரையிற் செய்த பிரார்த்தனை.

ஓ அழகிய யமுனா நதியே! உனது அழகை யென்னவென்று புகழ்ந்து கொண்டாடுவோம். காளிதாசன், பவபூதி, தண்டி முதலான கவிராஜர்களும், வித்துவான்களும், இரசமஞ்சரி, இரசபிரகாசனாதி, சிங்கார அலங்கார கிரந்த கர்த்தர்களும், தியாகராஜாதி அந்திர பாகவதோத்தமர்களும் நின்னைப் புகழ்ந்தது இன்றுதான் பிரத்தியக்ஷமாயிற்று. இந்திர நீல வர்ணமும், இரம்பை, மேனகை முதலான அப்ஸரஸ்திரிகளுடைய மேனிகளைப்போலவும், இடைக்கிடை மின்னற்கொடிகளைப்போல மின்னி இரமணீயமாகப் பிரகாசிக்கும் நினது சௌந்தரியத்தன்மையை எப்படி எமது நாவால் பாடியாடிக் கொண்டாடுவோம்? நினது மணிநீலா மின்னும் மணிகளோடு மஹாமேடைபோல ஒளிர்ந்தவையாயும், மினிட்டுக்கு ஓர் வர்ணமாக மின்னி மோஹநாபஞ் சொளளச்செய்கின்றன. ஓ மோஹனசுந்தரி! நின் கரைதுறைகள் இயற்கையானவைகளாகத் தோன்றாமல் செயற்கையானவைகளாகவும், இளந்தோன்றும் பசும்புல் பூங்கோதுமைகளாலும் பிரகாசிக்கிறதன்றியும், நினது கரைகளில் இயற்கையாக அமைந்திருக்கும் லதை

கிரஹங்களில் குயில்களும், கிளிகளும், சக்கிரவாஹப் பக்ஷிகளும் தீங்குரலெடுத்து இனிய கீதங்கள் பாடி நடிக்கின்றன. பல வர்ணங்களுடைய வண்டுகளும் ரீங்கார ராகம் பாடுகின்றன. பத்மாருதமோ மடைதிறந்துவிட்டதைப்போல் வீசி ஆநந்தமடையச் செய்கின்றது. ஓ மனோரஞ்சிதமான யமுனே! இனி நினது பெருமையைக் கண்டவர்கள் வேறு மங்கையர் மோகங் கொள்வரோ! கொள்ளார் !! கொள்ளார் !!! மங்களஸ்வரூபராகிய மணவாளனாகும் பரமேசுவரனைக் கொண்டாடி அவரோடு ஜீவாத்துமாக்களாகிய நாயகிமார்கள் கூடிக்குலாவிக் கொண்டாடி நடித்தாட நீ தகுந்த சாதனமாக ஜொலிக்கிறாய்! ஓ ஆரியர்களுடைய அழகிய நதியே! நீ பல்லாண்டு பல்லாண்டாக இப்படிப் பிரகாசிப்பாயாக.

கங்கையமுனை சங்கமத்திற்செய்த பிரார்த்தனை.

ஓ மாட்சிமை பொருந்திய கங்காநதியே! ஓ இரமணீயமான யமுனா நதியே! நீங்களிருவருங் கூடும் (சங்கமம்) இந்தப் பிரயாகையில் பரமாத்துமாவைத் தியானஞ்செய்ய உதவி செய்வீர்களாக. ஓ கங்கையே! நீ பிரம்மாண்டமான பெரிய நதி. நினது ஜலம் சுத்த வெண்மையாகப் பிரகாசிக்கின்றது. ஓ அழகிய யமுனே! நீ சுந்தரமும் சிறிதுமான நதி. நினது ஜலம் இந்திரநீலவர்ணமாகப் பிரகாசிக்கின்றது. நீ கங்கையிற் கலந்தபிறகாகிலும் பிரம்மாண்டமும் சுத்த வெண்மையுமான கங்காஜலத்தைப்போலாவாய் என்று பார்த்தோம். ஆனாலப்படியாகக்காணோம். கங்கையில் கலந்தபிறகும் நினது இந்திர நீலவர்ணம் ஸ்பஷ்டமாகத் தோன்றுகிறது. இதனால் பிரம்மாண்டமாகிய பரமாத்துமாவில், அழகிய சிறிய ஜீவாத்மா கலந்தபோதிலும் இரண்டும் ஒன்றாகாமல், அநந்தமும், சுவதந்திரமும், பரிபூரணமுமான பரமாத்துமாவும்; சிறிதும், அபூரணமும், பரதந்திரமுமான ஜீவாத்துமாவும் வேறு வேறானதாகவும், பிறகு வெகுதூரம் போகப்போகச் சிலவிஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில் பேதமற்றதாகத் தோற்றுவிப்பதால் பரிசுத்த விசிஷ்டாத்துவைத ஞானம் பிரபலமாகப் பிரகாசிக்கின்றது; ஆகவே நீங்கள் ஆசாரியர்களைப் போலிருந்து அடியேனை ஆசீர்வதியுங்கள்.

அங்குச் செய்த பிரம்ம பிரார்த்தனை.

ஓ பரமாத்மாவே! நின்னை இன்று இந்தப் பிரயாகை யென்னும் அழகிய நதிகளுக்கிடையில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்ய என்ன புண்ணியஞ் செய்தோம். நினது அற்புதமான படைப்புகளாகிய இந்தப் பிரம்மாண்டமான கங்கை யமுனை கூடும் சங்கமத்தில் நினது அற்புத விலாசத்தைக் கொண்டாட எத்தனையோ வருஷங்களாகவும், மாதங்களாகவும், தினங்களாகவும் காத்துக்கொண்டிருந்து இன்று வாய்த்ததற்கு ஹிருதய பூர்வகமான வந்தனம் செய்கிறோம். இப்படிப்பட்ட அற்புத காக்ஷியான இடத்திலல்லவா ஆதி ஆரியர்களும், எதிகளும், தபோநிதிகளும், முனிவர்களும் நின்னைத் துதித்துக் கொண்டாடிக் குதூகலமடைந்தார்கள். இப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலத்தில் பாப பந்தங்களினால் பரதவிக்கும் அடியேமும் வந்து நின்னைப் பிரார்த்தனை செய்ய, அருள் பொழிந்ததற்கு என்ன விதமாகத் துதித்துக் கொண்டாடுவோம். பிரயாகையாகிய இந்தவிடத்தில் எம் பாதங்கள் வைத்த நாள்முதல் எமது பாபதாபங்கள் பறந்தோடத் தொடங்கின. இது சத்தியம். சத்தியமென்று சங்கநாதமும், பம், பம் என்று கோஷமிடுகின்றது. ஆகவே, தயாளுவாகிய எமதப்பனே! இனிமேலாகிலும் இந்த உடலைச் சார்ந்த கண், காது, மூக்கு, வாய் முதலானவைகளால் எவ்வித பாவங்களும் செய்யாதவிதமாகக் கடாக்ஷித்து அடியோரது ஜனனத்தை சிரேஷ்டமாக்கிச் சதா சாதுவாகவும், நினது பரம பக்தராகவும் செய்துகொள்வாய். ஓம் சச்சிதாநந்த ஹரிః.

பிதா விஷயமாகச் செய்த பிரார்த்தனை.

பூஜ்பனைக்குரிய பிதாவே! அடியேம் இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் வந்து பரமபிதாவாகிய பரமேசுவரனைப் பிரார்த்தனை செய்யும்படி அடியேமைப் பெற்றெடுத்து வளர்த்து அனுக்கிரகித்ததற்கு என்ன பிரதிபுபகாரம் செய்யப் போகிறோம். ஓ! கனம் பொருந்திய தந்தையே! தங்கள் தகப்பனாராகிய எமது பாட்டனாரும், தங்கள் பாட்டனாராகிய எமது முப்பாட்டனாரும், மற்றும் இப்போது பிதுர்தேவர்களாகப் பரலோகத்தில் பிரகாசிக்கும் இருபத்தொரு தலைமுறையோர்களும் இந்தப் பிரபஞ்சத்தில் எவ்வளவோ கம்

பிரமாக வாழ்ந்துவந்த வரிசை மன்னர்களால் பரிசும் மேன்மையும் பெற்றுப் பிரகாசித்துப் புகழை நாட்டினார்கள். அவர்கள் சந்ததியாராகிய அடியேம் அவர்களைப்போலப் பிரபஞ்சப் பெருமைகளைப் பெற்றுப் பிரகாசிக்காவிட்டாலும் கேவலம் எமது தேசத்துக்கும் தேவனுக்கும் தொண்டு செய்யும்படியான பாக்கியசாலியாயினேம். இனி இதைவிடவோ விசேஷமென்ன விருக்கின்றது. தங்கள் சந்ததியில் ஜனித்த அடியேமைக் கேவலம் பிரபஞ்சத்துக்குரிய பிராகிருத இந்திரிய சுகங்களில் மூழ்கிப் பதிதராகிப் பெரியோர்களுடையவும், பிதுர்தேவதைகளுடையவும் பெயரையும் பெருமையையுங்கெடுத்துக் கெட்டவரென்று பெயரைப் படைக்காமல் பரமேசுவருடைய பக்தராகிப் பிரயாகையாகிய இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் பரமேசுவரனையும், பிதுர் தேவதைகளையும் தியானிக்கும்படி ஜன்மமெடுத்ததற்குப் பரமேசுவரனைப் பிரார்த்தனை செய்வதன்றியில் பிதுர் தேவதைகளாகிய உங்களையும் தியானிக்கிறேம். உங்கள் சந்ததியாகிய அடியேமை ஆசீர்வதியுங்கள். எமது அன்புள்ள தந்தையே! தாங்கள் இந்த உலகத்திலிருக்கும்போது தங்களுக்குப் பலவிதமான வருத்தங்களைக்கொடுத்து வருத்தினேம். இனி அசரீரிகளாக மோக்ஷ மண்டலத்திலிருக்கும் உங்களை வருத்துவது தருமமல்ல; ஆகையால், அடியோமையும், அடியோரது சந்ததியாகிய தங்கள் சந்ததியையும் ஆசீர்வதியுங்கள். ஓம் பிதுர்தேவோபவஃ.

தாயார் விஷயமாகச் செய்த பிரார்த்தனை.

ஓ அன்புள்ள தாயே! தங்கள் பெயர் இலக்ஷுமியம்மாள். அந்தப் பெயருக்குத் தக்க குணங்கள் யாவும் தங்களிடம் கண்டேம். தங்களுடைய அழகையும், அன்பையும், பதிவிரதா தருமத்தையும், சத்தியத்தையும், பக்தியையும் என்னவென்று புகழ்ந்து பெருமையடைவேம். உலகத்தில் எத்தனையோ சிறந்த மாதர்களைக் கண்டேம். ஆயினும் தங்களைப்போல ஒருவரையுங் கண்டிலேம். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு இவைகளை ஆபரணங்களாகக்கொண்டு அடியேமைப் பெற்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து எம்மைக்காகத் தாங்கள் பட்ட கஷ்டங்களை இன்று நினைக்கும்போதும் எனது கண்ணீர் ஆறாகப் பெருகு

கின்றதே. அருமைத்தாயே! இனி நான் உங்களைப் பார்த்தமைக்காகத் தாங்கள்பட்ட கஷ்டங்களுக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேம். இந்த ஜன்மத்தில் காணேம்; ஆகையால இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் உங்களைத் தியானிக்கிறேன். தாங்கள் எம்மையும், எமது வீட்டாரையும் ஆசீர்வதித்து ரக்ஷியுங்கள். ஓம் மாத்ருதேவோபவ.

எமது தேசத்தார் விஷயமாகச் செய்த பிரார்த்தனை.

கனம்பொருந்திய ஆரியதேசத்து ஆதி மஹாத்மாக்களே! மஹரிஷிகளே! எதிந்திரர்களே! தங்களுடைய தேசத்தில் அடியேமும் ஒருவனாக ஜனித்து, தங்களுடைய அதிக மேன்மையான கிரந்தங்களையும், சாஸ்திரங்களையும் ஆராயும்படியானதற்கு இந்தப்புண்ணியக்ஷேத்திரத்தில் உங்களைத் தியானித்து வந்தனம் செய்கிறேம். அடியேமை ஆசீர்வதியுங்கள். ஓ உத்தம புருஷர்களே! வாலிபமாக இருந்தது முதல் நாளது வரையில் அடியேமுக்குக் கல்வி கேள்விகளைப் போதித்த உபாத்தியாயர்களே! குருமார்களே! ஆசாரியர்களே! சிநேகிதர்களே! உங்களுடைய பேருதவிக்குப் பதில்செய்யச் சக்தியற்று இந்தப்புண்ணிய க்ஷேத்திரத்தில் உங்களைத் தியானித்து வந்தனம் செய்கின்றேம். அடியேமை ஆசீர்வதியுங்கள். ஓ கோயமுத்தூர் மஹாஜனங்களே! அடியேம் உங்களுடைய அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரரென்று மதித்து தேசாபிமானத்தொழிலைச் செய்யும்படி கலிகட்டணத்துக்கு அனுப்பினீர்கள். நாமும் அதற்கிசைந்துவருகையில் இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தைத் தரிசிக்க இடமாயிற்று. ஆகவே உங்களையும் எமது பெரிய உபகாரிகளாக மதித்து உங்களுக்குப் பூரண சுகவாழ்வைப் பிரசாதிக்கும்படி இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் பரமாத்துமாவைத் தியானிக்கிறேம். அவரும் அப்படியே பிரசாதித்தருள்வாராக. ஓ கோயமுத்தூரே! உனக்கு மங்களமுண்டாவதாக. ஓம் தத் சத். ஹரி ஓம். நிற்க,

---

இந்த 1910 ௵ வரையில் இந்தியாதேசசிரேஷ்டதேசாதிபதியாகிய லார்டு மிண்டோ பிரபுவைக்கொண்டு ஒரு ஞாபகச்சின்ன ஸ்தம்பமும், மிண்டோ பிரபு தோட்டமும் அந்த அலகாபாத்தில் சில தேசாபிமானிகள் கூடி ஸ்தாபித்திருக்கிறார்கள். அந்த ஞாபக ஸ்தம்பத்தின் நான்கு பக்கங்களிலும், மாட்சிமைதங்கிய மஹா விக்டோரியா சக்கரவர்த்தினி

யவர்களும், எட்வர்டு சக்கரவர்த்தியவர்களும், இத்தேசக் குடிகளுக்குக் கொடுத்த சுரூபராஜ்ஜிய பரிபாலன சாசனங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

நைமிசாரணியம். (Nainital)

இந்த அலகாபாத்துக்குச் சமீபத்தில் ஜப்பல்பூர் ரெயில் மார்க்கமாக நைமிசாரணியம் என்னும் சிறந்த மலைநாடிருக்கிறது. இது ஜப்பல்பூருக்கு 224 மைல்கள் தூரத்தில் ஒன்பது மணி நேரத்திற் போகக் கூடியது. இந்த யமுனையின்மீது 16 கண்களுள்ள கர்டர் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த ரூபா, 1-2-0, 0-12-0 கொடுத்து டாங்காக்களில் மலையின்மீது ஏறும்போது சுற்றுப்பக்கங்களின் காக்ஷியற்புதமானதாகஇருக்கிறது. கத்தகோடம் வழியாகப் போகும் டாங்காவுக்கு 15 ரூபாய். அங்கிருந்து 22 மைல்கள் தூரம் இருக்கிறது. மத்தியில் போசலாஸ்டாலி என்னும் இடத்திலிறங்கி இளைப்பாறுதல் வழக்கம். மலையின்மீது கவர்ண்மெண்டுகட்டடத்திலிருந்து சுற்றுப்பக்கத்தில்விளங்கும் ஹிமாசலத்தின்காக்ஷி இதில்எழுதி முடியாது. இங்கு, சினசிகரம், கிர்கோதண்ட, ஜபபாதம், தேவபாதம் என்னும் ஐந்து மலைகளின் மத்தியிலிருக்கும் சரோவரமானது கப்பிரயாயுள்ளது. இங்கு அனேக பாடசாலைகளும், கோவில்களும், டப்ரின் ஆஸ்பத்திரியும் இருக்கின்றன. இங்கே விழும் மலையின் அருவிகள் அற்புத காக்ஷியுடன் இருப்பதன்றியல் சரோவரத்தின் ஓரங்களில் கந்தக உஷ்ணஜல ஊற்றுகளு மிருப்பதால் அனேக வியாதியஸ்தர்களும் வருகிறார்கள். இந்த நைமிசாரணியம் மஹா தபசிகளும் ரிஷிகளும் வதிந்த இடமாதலால் ஏராளமான யாத்திரைக்காரர்கள் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்குப் பிஹாரிலால்குஞ்சிலால் தருமசத்திரம் இருக்கிறது. ஷை நைமிசாரணியம் கல்கத்தாவுக்கு 504 மைல்கள் தூரத்திலிருக்கிறது. மூன்றும் வகுப்புக்கு ரெயில் சார்ஜ் ரூபா. 5-6-0 ஆகிறது.

காசி (KASI) பனாரீஸ் (BENARES).

இந்தக் காசிப் பட்டணம், எமக்கும் எமது வீட்டாருக்கும் நூதன ஸ்தானமானபடியால், எங்களுக்குத் துணைவர்களாக இருக்க ம-ா-ா-ஸ்ரீ இரங்கநாதனையும், ஸ்ரீ இராமபாஹற என்னும் ஓர் காசிப் பிராமணனையும் ரெயில்

சார்ஜ் கொடுத்து அழைத்துக்கொண்டுபோனோம். இவர்களில் இராமபாஹு என்னும் பிராமணர் காசி ஸ்தலவாசியாகையால், எங்களையும் எமது வீட்டாரையும் தாம் வதிந்துவரும் பெரிய மாடி வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோனார். அந்த வீடு துர்க்கா கட்டத்திற்கடுத்த பிரம்மாண்டமான ஏழடுக்கு மெத்தை வீடு. எமக்கு ஷை வீட்டின் மூன்றாவது அடுக்கில் ஜாகை தயார்செய்து கொடுத்தார். அந்தவிடத்தில் வேணுபாய் என்னும் ஓர் மராட்டிய பிராமண வாலிபவிதந்து ஸ்திரீ எமக்கு வேண்டிய உபசார வார்த்தைகளைச் சொல்லித் தகுந்த பாத்திரம் முதலான சாமான்களைத் தயார்செய்து கொடுத்தார்கள். இந்த அம்மை குவாலியர் ஸமஸ்தானத்தில் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்து, சிறுபிராயத்தில் கல்விகற்றுக் கலியாணஞ் செய்துகொள்ள, தமது புருஷன் யாதோ ஓர்வித தொத்து வியாதியினால் இறந்துவிட, இந்த வாலிபப்பெண் தனது அண்ணன் தம்பிமார்களின் மனைவிகளுடைய ஹிம்சையைச் சகிக்கமாட்டாதவளாய், ஒண்டி வழியாகப் புறப்பட்டு இந்தக் காசி க்ஷேத்திரத்திற்கு வந்து, பிரதிதினமும் கங்கா ஸ்நானம் செய்தும், சிவபூஜைகளையும் விஷ்ணு நாமஸ்மரணைகளையும் செய்துகொண்டும், தமது ஜீவனத்துக்கு அவ்விடம் வரப்பட்ட யாத்திரைக்காரர்களுக்குவேண்டிய உபசாரங்களைச்செய்தும் காலங்கழிக்கிறதாகக் கேள்வி. இந்த அம்மைக்குச் சுமார் 25 வயது இருக்கலாம். இயற்கையான அழகோ இரதிக்குச்சமமாகச் சொல்லலாம். இவர் இயற்கை அழகைப் பெற்றிருப்பதைப்போலவே, இயற்கை அறிவையும்பெற்றிருக்கின்றனர். இவ்வளவு இருந்தும் யாது பிரயோஜனம்? இப்படிப்பட்ட வாலிபப்பெண் தான் உள்ளளவும் கேவலம் சந்நியாசியாக இருக்கவேண்டி வந்ததைப் பார்த்தும் எவர் மனந்தான் துடிக்காது? இந்த அம்மையும், இவரது சஹகாரியாகிய இராமபாஹு என்னும் பிராமணரும் எங்களுக்கு வேண்டிய சாமான்களை உடனுக்குடனே தயார்செய்து கொடுத்தமையால், சமையல் செய்து உண்டு படுத்து உறங்கினோம். இந்தக் காசிப்பட்டணத்தில் பிரயாகையில் இருப்பதைப்போல அவ்வளவு கடுங்குளிர் இல்லாவிட்டாலும், காலை மாலைகளிலும், முக்கியமாக இராக்காலங்களிலும் கணப்பு (நெருப்பு) சட்டி அருகிலில்லாவிட்டால் குளிரின் வருத்தம் அதிகமாயிருந்தது. இந்தக் காசிப்பட்டணம் நமது இந்துமதசம்பந்தத்தில் பலவிதத்திலும் சிறந்த பட்டணமாதலால்

இந்த விடத்தில் 1887ஸு டிசம்பர்மீ 17உ முதல் டிசம்பர்மீ 22-ம் தேதிவரையில் இருந்து இதன் பூர்வ சரித்திரத்தையும், தற்கால ஸ்திதியையும் பற்றி விசாரித்தறிய விரும்பினோம். அந்த விருப்பத்திற்கிணங்க சிற்சில புராணங்களின் சரித்திரங்களாலும் கேள்வியினாலும் தெரியவந்த சங்கதிகளை இதனடியில் எழுதுகிறோம்.

காசியின் பூர்வ சரித்திரம்.

இந்தஸ்தலத்திற்குக் காசியென்றும், வாரணாசியென்றும், அவிமுக்தமென்றும், ஆநந்தவனம் அல்லது ஆநந்தபுரியென்றும், உருத்திரவாசமென்றும், மாமசானமென்றும், கௌரிமுகமென்றும் பலபெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பெயர்கள் வழங்குவதற்குக் காரணம்.

எதனிடத்துப் பரமாத்மா ஞானமாகிய தேஜோ பிரகாசித்துக்கொண்டிருக்கிறதோ அதற்குக் காசியென்றும், அதாவது சிருஷ்டி சங்கற்பமாகாததற்குமுன் நிர்குண பிரம்மம் ஜ்வலித்துக்கொண்டிருந்ததாயும், பிறகு பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் அகம்பூர்வம் அகம்பூர்வம் என்று விவாதம் நேரிட்டு அந்தஜோதி ரூபத்தைப்பார்த்து இருவரும் சாந்தப்பட்டதாகவும், அப்படிக் காசித்தெரிந்த இந்தஸ்தலம் அநாதியானதால் காசியென்று பெயர்பெற்றதாகவும், வருணை, அசி என்னும் இரண்டு நதிகளுக்கிடையில் இருந்ததனால் வாரணாசி என்று பெயர்பெற்றதாகவும், சிவபெருமான் இந்த அநாதியான க்ஷேத்திரத்தைவிட்டு நீங்க இஷ்டமில்லாமல் ஒரு லிங்கரூபத்தில் மறைந்திருந்ததனால் அவிமுக்த க்ஷேத்திரமென்று பெயர்பெற்றதாகவும், அந்த ஜோதிலிங்கம் இவ்விடத்தில் பஞ்சக்ரோசாத்மகமாக இருப்பதாகவும், ஆதியில் இந்த ஜோதி பூதத்துக்கு ஆதாரயோக்கியமானதாகவும், பிரம்மாதிகள் இவ்விடத்தில் தபசுசெய்து சகல இஷ்ட சித்திகளையடைந்ததாகவும், அவர்களால் அந்த லிங்கங்கள் வணங்கப்பட்டதாகவும், அகஸ்தியர் முதலான ரிஷிகள் இவ்விடத்தில் சச்சிதாநந்தத்தை யடைந்ததாகவும், ஆகவே, ஆநந்தவனமென்று பெயர் பெற்றதாகவும், தேவர் மக்களாதிகளுக்கு வேண்டிய சகலவித சுகபோக்கியங்கள் இவ்விடத்தில் அடை

யக்கூடியதாயிருப்பதால் ஆநந்தபுரியென்று பெயர் பெற்றதாயும், கிழக்கு முதலாகிய நான்கு திக்குகளில் அநேக உருத்திரர்கள் வசித்து வருதலினாலும், காசியிலிருக்கும் பிராணிகள் உருத்திரரூபமாய் இருத்தலினாலும், உருத்திரவாசம் என்று பெயர் பெற்றதாகவும், பிரமாண்டம் முதல் காரிய பிரபஞ்சங்கள் ஒடுங்கும் இடமாதலால் மகாமசானம் என்று பெயர் பெற்றதாகவும், மகாபிரளயங்களில் ஜோதிஸ்தம்பத்திற்கு இது வாசயோக்கியமானபடியால் திரிகுணாத்மகமான மூன்று முள்ளுகளைப்போல் கோணங்களுண்டான ஆயுதத்துடனே இந்த பூமி பொறுக்கப்பட்டதால் திரிகண்டகவிராஜிதம் என்று பெயர் பெற்றதாகவும், காஞ்சி முதலான சக்திபீடங்களில் இந்தக் காசி முதற்பீடமானதால் கௌரிமுகம் என்று பெயர்பெற்றதாகவும், ஸ்காந்தபுராணத்தின் காசிகாண்டம் ஐந்து அத்தியாயங்களிலும் பதுமம், இலிங்கம், பிரமாண்டம், தீர்த்தசிந்தாமணி, திரிஸ்தலிசேது, ஸ்மிருதிகௌஸ்துபம், காசிமகத்துவம் என்னும் கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

வேறொரு புராணத்தின் கருத்தாவது: ஒருகாலத்தில் பிரமாவும் சிவனும் தமக்குள் யார் உயர்ந்தவரென்று விவாதஞ் செய்ததில், சிவபெருமான பிரம்மாவின் ஒரு சிரசை வெட்டியதால், பிராம்மணர்களையும் சிருஷ்டிக்கும் பிரம்மாவின் சிரசு, வெட்டிய பிரம்மஹத்தியினால், சிவனுடைய கரத்தைப் பற்றிக்கொண்டதாகவும், அச்சிரசைத் தன் கையைவிட்டு நீக்க அநேக திவ்யஸ்தலங்களுக்குப்போய்க் கிரித்தனஞ் செய்தும் அச்சிரசின் சுமை நீங்காமல் கடைசியாகக் காசிப் பட்டணத்தில் வந்து தவஞ்செய்ய, அந்தச் சிரசு சிவன் கையை விட்டு நீங்கியதாகவும், இப்படிச் சிவனது பிரம்மஹத்தியும் சிரசின் பளுவும் நீங்கப்பெற்ற இடம் மகா பரிசுத்தமான இடமானமையால், இங்கு வரப்பட்டவர்களுடைய பாவச்சுமைகள் நீங்குமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது என்பதேயாம்.

இந்த ஸ்தலம் அவிமுக்த க்ஷேத்திரமானதால் கங்கையானவள் விஸ்வேசுவரருடைய அநுக்கிரகத்தைச் சம்பாதித்து, அவிமுக்தத்தில் பிரவேசித்து, அந்த க்ஷேத்திரத்திலிருக்கிற எவ்வித ஜந்துக்களுக்கும் உபத்திரவங்களும் பாவப்பிணிகளுமில்லாமல் செய்வதாக உடன்படிக்கைசெய்து பிரவேசித்ததாக ஸ்தலமகத்துவத்தில் சொல்லப்பட்டிருப்பதால்,

பத்மபுராணத்தில்: இந்தக் காசியின் பெயரை உச்சரித்தால் எமவாதனை நீங்கிச் சற்கதிக்கு ஏதுவாகுமென்றும், காசி என்கிற இரண்டக்ஷரங்களை ஸ்மரிக்கின்றவன் சிவலோகத்தையடைவான் என்றும், ஸ்காந்தபுராணத்தில்: காசி! காசி! என்று இரண்டுதரம் சொல்லுகிறவன் பரிசுத்தனாகிறான் என்றும், எவன் காசியென்று செபிக்கிறானோ அவன் பரமயோகியாகிறான் என்றும், பிரம்மாண்டபுராணத்தில்: இக்காசி க்ஷேத்திரத்தைத் தரிசித்தவர்களும், அல்லது இதன் மகத்துவத்தைக் கேட்டவர்களும், வாசித்தவர்களும் பிரபஞ்சத்திலிருக்கும் சகல மான்மியங்களையும் போய்க் கண்டுகேட்டால் எவ்வித பலன் கிடைக்குமோ அவ்வித பலன்கள் கிடைக்குமென்றும், லிங்காதிபுராணங்களில்: இந்த ஸ்தலத்தைக் கண்டவர்களுக்குப் பிரம்மஹத்தி முதலான கொலைகளின் பாவங்கள் நீங்கி சாயுஜ்யபதவி கிடைக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

காசி ஸ்தலமகத்துவம் இவ்விதமிருக்க, இவ்விடத்திய தீர்த்த மகிமையும் விசேஷமாகவிருக்கிறது. அதாவது:—

பிரம்மாவினால் படைக்கப்பட்ட எல்லாத் தீர்த்தங்களிலும் சுவிது க்ஷேத்திரமாகிய பிரயாகைதீர்த்தம் விசேஷமுடையதென்றும், அப்பிரயாகையிலும் இந்தக் காசியிலிருக்கிற தீர்த்தங்கள் விசேஷமுடையனவென்றும், இந்தத் தீர்த்தங்களிலும் பஞ்சநதி, மணிகர்ணிகை, காசிபிரயாகை, ஞானவாவி, கங்கை என்பவைகள் விசேஷமானவையென்றும் முன்னோர் சொல்ல இப்போதும் கொண்டாடிவருகின்றனர்.

இவற்றின் விவரம்.

பஞ்சநதி தீர்த்தம்:—பஞ்ச பிரம்மஸ்வரூபமென்றும் ஆதியில் தன்மநதியும், தூதபாவையுஞ்சேர்ந்து ஒருநதியாகியதாகவும், அதனோடு கிரணையும், கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்றுஞ் சேர்ந்து பஞ்சநதியானதாகவும், இது மூன்றுலகுக்கும் பிரசித்தியாகி இதில் ஸ்நானஞ் செய்கிறவர்களுக்குப் பவுதிகமான சரீரம் நீங்கித் திவ்விய சரீரம் கொடுக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

இதைப்பற்றிக் காசிகாண்டத்தில் சொல்வதாவது.

வேதசிரன் என்னும் இருஷியின் குமாரத்தி தனக்கொரு நாயகனைவேண்டிப் பலகாலம் தபசுசெய்து எல்லாத் தீர்த்தங்களினுடைய பாவத்தைப் போக்கியதால் தூதபாவை யென்ற பெயரைப் பெற்றதாயும், அவளை இயமன் காந்தர்வ விவாகம்செய்ய விரும்ப, அவள் தன் பிதாவின் உத்திரவின்றி ஒப்பேன் என, நீ சிலையாகுக வென்று சபிக்க, அவளும் இயமனை ஜலரூபமாகுக வெனச்சபித்துப் பிதாவினிடம் சொல்ல, அவர் நீயும் சந்திரகாந்த சிலாரூபத்தை யடைந்து அந்த நதியோடு பிரவாகிப்பாயென்று சொல்ல, அவளும் அப்படியே செய்ய, சூரியனுடைய தபசினால் அவனது வேர்வை கிரணை யென்னும் நதியாகி அதனோடு கலக்க, பிறகு கங்கை யமுனை சரசுவதியும் கலந்து பஞ்சநதியாயிற்றாம். ஆதியுகத்தில் இதற்குத் தன்மநதியென்றும், இரண்டாம் யுகத்தில் தூதபாவை யென்றும், மூன்றாம் யுகத்தில் விந்துதீர்த்தமென்றும், இக்கலியுகத்தில் பஞ்சநதி என்றும் பெயர் பெற்றதாம்.

மணிகர்ணிகை.

ஒருகாலத்தில் விஷ்ணுவானவர் தமது சக்கிரத்தினால் தீர்த்தமுண்டாக்கித் தவஞ் செய்யுங்கால் பார்வதிசமேதராகச் சிவபெருமான் அவ்விடத்துக்கு வர, அப்போது பார்வதியின் கர்ணிகாமணி யென்னும் காதோலை அந்தத் தீர்த்தத்தில் வீழ்ந்து சிவபெருமான் தேடினதாயும், அதை விஷ்ணுவானவர் மாயையினால (மைத்துனர் முறைமையைப் பாராட்டிப்)பரிஹாசம் செய்ய மறைத்ததாகவும், அதனால் சிவபெருமானுடைய மனத்தையும், பார்வதியின் மணிகர்ணிகையையும் ஆக்கிரஹித்ததினால் இது எல்லாத் தீர்த்தங்களினுஞ் சிறந்ததாயும், காசியிலிருக்கிற எல்லாத் தீர்த்தங்களும் இதில் ஸ்நானம் செய்து பாவம் தீர்த்துக்கொண்டதாயும், சக்கரத்தினால் உண்டாகியதால் சக்கரதீர்த்தமென்றும், திருமேனி வியர்வையால் உண்டானதால், சூரியதீர்த்தம், பிரம்மதீர்த்தமென்றும் சொல்லுகிறார்கள்.

காசிபிரயாகையின் மகிமை.

தசாசுவமேதத்தில் ஆலடங்கேசுரர் சமீபத்தில் கங்கை, யமுனை, சரசுவதியென்னும் இம்மூன்றில் கங்கை உத்திரவாகினி

யாயும், யமுனை பூர்வவாகினியாயும், சரசுவதி அந்தர்வாகினியாயும் வருதலால் இக்கக் காசிபிரயாகை சர்வகாமியங்களையுங் கொடுக்கும் காமியதீர்த்தமென்று பெயர் பெற்றதாய்க் காசிகாண்டம் பிரம்மகைவர்த்தம் முதலான நூல்கள் கூறுகின்றன.

ஞானவாவி.

ஸ்ரீ விசுவேசுவரருக்குச் சமீபத்திலிருக்கிற ஞானவாவியென்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்கின்றவர்கள் ஞான சம்பத்தை யடைவார்களென்று சொல்லப்படுகின்றது. இதன் விவரமாவது:—ஆதியில் ஈசான உருத்திரர் அங்குத் தவஞ்செய்யுங்கால் சூலத்தினல் ஒரு வாவியை யுண்டாக்கி அவ்வாவியில் தீர்த்தமெடுத்து விசுவேசுவரருக்குக்காட்டி அவ்வாவிக்கரையிலிருந்து தவஞ் செய்ததாகவும், அவர் தவத்திற்குச் சந்தோஷமடைந்து விசுவேசுவரர் பிரசன்னராய், இந்த வாவியில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு ஞானசம்பத்தைக் கொடுப்பதாக வரங்கொடுத்ததாகவும் காசிகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விடத்திய கங்கையின் மகிமை.

கங்கையானது சத்தியலோகத்தில் திலீபபுத்திரன் பகீரதன்பொருட்டு மஹாவிஷ்ணுவின் பாதவிரலினின்று முதித்துப் பூமியில் வந்து, சிவபெருமானல் சிரசால் வகிக்கப்பட்டு, எல்லா நதிகளுக்குஞ் சிரேஷ்டமாகி, சிவராஜதானியாகிய காசியின் கீழ்ப்பாகத்தில் உத்திரவாகினியாய்த் திரும்பி விசுவேசுவரர் அனுக்கிரகம் பெற்று அதி பரிசுத்தையாய்ப் பின்பு பூர்வாக்கினைச் சென்றதாகச் சனற்குமாரசம்மிதை கூறுகின்றது. மேலும் கிருதயுகத்தில் எல்லாத் தீர்த்தங்களும் பரிசுத்தமுள்ளனவென்றும், திரேதாயுகத்தில் புஷ்கரம் விசேஷமுடையதென்றும், கலியுகத்தில் கங்கையே விசேஷமுடையதென்றும் பவுஷியபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கங்கையின் கரையோரமாக வருணகட்டம், இராசகட்டம், திரிலோசன கட்டம், துர்கா கட்டம், தசாசுவமேதகட்டம், கேதாரகட்டம், அனுமகட்டம், அசிகட்டம் என்றுதி பெயர்களால் அநேக புண்ணியகட்டங்களிருக்கின்றன. இவை நிற்க:—

காசி க்ஷேத்திரத்திலிருக்கும் தேவர்கள்.

இந்தக் காசிக்ஷேத்திரத்தில்: ஸ்ரீ துண்டிவிநாயகர், ஸ்ரீ தண்டபாணி, ஸ்ரீ விசுவேசுவரர், ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ விசாலாக்ஷி, ஸ்ரீ காலபைரவர், ஸ்ரீ பிந்துமாவதர் முதலான விசேஷ சன்னிதிகளிருப்பதன்றியில், எண்ணிறந்த சிவலிங்கங்களும் மகிமை பெற்றவைகளாயிருக்கின்றன. இச்சிவலிங்கங்களில் ஓங்காரேசர், திரிலோசனர், மஹாதேவர், கிருத்திவாசர், சிரத்திநேசுபர், சந்திரேசர், கேதாரேசர், தன்மேசர், காமேசர், விஸ்வகர்மேசுரர், மணிகர்ணேசர், அவிமுக்தேசர், விசுவேசர், அமிர்தேசர், தாரகேசர், ஞானேசர், கருணேசர், மோக்ஷத்துவாரேசர், சொர்க்கத்துவாரேசர், பிரமேசர், இலாங்கலீசர், விருத்தகாலேசர், இடபத்துவேசர், சண்டீசர், நந்திகேசர், மகேசர், சோதிரூபேசர், சங்கமேசர், சுரலீநேசர், மத்திமேசர், இரணியகர்ப்பேசர், ஈசானேசர், கோபிரேக்ஷேசர், விடபத்துவேசர், உபசாந்தேசர், ஜம்புகேசர் முதலிய நாற்பத்திரண்டு இலிங்கங்களும் சிரேஷ்டமானவைகளாகவும், இவைகளைத் தரிசிப்பதற்கு நாற்பத்திரண்டு லிங்க யாத்திரையென்றுஞ் சொல்லுகிறார்கள். யாத்திரை செய்பவர் முதலில் மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து முத்திமண்டபத்திலிருந்து மோதன், பிரமோதன், சுமுகன், துன்முகன், கணநாயகன் என்னும் பஞ்சவிநாயகரை நமஸ்கரித்து, விசுவேசுவரரைப் பூசித்து, பின்பு சங்கற்பஞ்செய்து, மௌனத்தோடு மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து, மணிகர்ணிகேசர் முதலான தேவர்களைப் பூசித்து, பிறகு ஞானவாவியில் ஸ்நானஞ்செய்து, நந்திகேசர் தாரகேசர் முதலான தேவர்களைப் பூசித்து, பிறகு மோதாதி பஞ்சவிநாயகரையும், விசுவேசுவரரையும், அன்னபூரணியையும் பூசித்து முத்திமண்டபத்திலிருந்து தாமிருக்கும் இடம்போய் அன்னதானம் செய்யவேண்டும்.

இந்தக் காசிக்கடுத்த கங்கையில் ஸ்நானம் செய்யும்போது சொல்லும் சங்கல்பமாவது.

ஆரியாவர்த்தைகதேசே, அவிமுக்தா, வாரணாசி க்ஷேத்ரே, அசிர்வருணீமேபா, மத்திமே, மகாஸ்மசானே, ஆநந்தவனே, கவுரிமுகே, திரிகண்ட கவிராஜிதே, பாகீரதியாகபஸ்சமே

நீரே, பவத்தாவதாரே, விக்ரமசகே, விரோதி விகிருதிநாம சம்வச்சரே என்று சொல்லுகிறார்கள்.

காசி க்ஷேத்திரத்தின் தேவர்களுக்குமுன் சொல்லுகிற சுலோகம்.

விஸ்வேசம் மாதவம் துண்டிம், தண்டபாணிஞ்ச பைர வம், வந்தேகம் காசிம் குகாம் கெங்காம் பவானிம், மணிகர்ணி காம்.

இந்தக் காசியின் தேவர்களுடைய மகிமை.

ஸ்ரீ துண்டி விநாயகர் மகிமை.

ஸ்ரீ துண்டிவிநாயகர் காசியில் எல்லாப் பாவங்களையும் எல்லா விக்னங்களையும் போக்குகின்றவர். எல்லாப் போகங்களையும் கொடுக்கின்றவர். இவர் விசுவேசருக்கு மிகுந்த பிரியமுள்ள புத்திரர். இவருக்கு மதுரமான மோதகம் முதலிய வற்றை நிவேதித்துத் தோத்திரஞ்செய்து எவர்கள் வழிபாடு செய்கின்றார்களோ இவர்கள் புத்திரருக்குச் செய்யும் உவகை தந்தைதாயர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கு மாதலால் துண்டிவிநாயகரது கிருபையோடு, அன்னபூரணி விசுவேசர் கிருபையுமாக மூன்று பிரயோசனத்திற் கருகராகின்றார்களாம்.

ஸ்ரீ தண்டபாணி மகிமை.

ஸ்ரீ தண்டபாணி கணங்களுள்ளும், தேவருள்ளும், மனுடர்களுள்ளும் முதன்மையுள்ளவர், இவர், காசியில் மரிக்கின்றவர்களுக்கு எமவாதனைவராமல் காக்கும்படியான தண்டத்தைத் தரித்திருக்கின்றவர். காசிவாசிகளை இரட்சிக்கின்றவர். தருமாத்துமாக்களுக்கு விசுவேசர் பிரமோபதேசம்பண்ண இவர் திவ்விய சரீரங் கொடுப்பர் என்று சொல்லுகிறார்கள்.

ஸ்ரீ விசுவேசுவரர் மகிமை.

ஸ்ரீவிசுவேசலிங்கம் சோதிலிங்கங்களுக்கெல்லாம் மேலான இலிங்கம். இவ்விலிங்கம் பிரமவிட்டுணுவாதி தேவதைகளை

இரட்சிக்குமித்தம், தானே தோன்றி, மோக்ஷ லக்ஷ்மிக்கு வாசஸ்தானமாகிய திவ்விய விமானத்திருக்கின்றது. ஆதலால், இந்தக் காசி மூன்று லோகத்துக்கும் விசேஷமான சிவராஜதானியென்னும் பெயரையுடையது. இதில் தேவாதி தேவராகிய ஸ்ரீவிசுவேசரைப் பூசித்தலிற் பரிசதோஷமில்லை. பூசிக்கின்றவர்கள் எல்லாப் பாவங்களினின்றும் நீங்கி எல்லாப் புண்ணியங்களையு முடையராய், துக்கரூபமாகிய சமுத்திரத்திலமுந்தியிருத்தலினின்றும் நீங்கிச் சுகரூபமாய்நிரதிசய இன்பமுடைத்தாயிருக்கின்ற வீட்டையடைதற் குரியராகின்றார்கள். இந்த விசுவேசரைத் தரிசித்து அன்னிய தேசத்தையடைந்தவன் ஜன்மாந்தரத்தில் மோக்ஷமடைதற்குச் சந்தேகமில்லை. இந்த விசுவேசருடைய மோக்ஷ லக்ஷ்மிக்கு வாசஸ்தான விமானத்தையுங் கலசத்தையுந் தரிசித்தவனது மகா பாவங்கள் நீங்கிப்போகின்றன. விமானத்திலிருக்கின்ற விடபக்கொடியைத் தரிசித்தவன் விசுவேசர் பிரசாதத்துக்கு அதிதியாகின்றான். இந்த விமானத்தைப் பக்ஷிகள் பிரதக்ஷிணஞ் செய்தாலும் அவை முத்தான்மாக்களாகின்றனவாம்.

காசிகாண்டத்திலிருக்கின்றனவாகக் கூறப்பட்ட முத்திமண்டபம், சிங்காரமண்டபம் ஐஸ்வரியமண்டபம், ஞானமண்டபம் இவைகளுள் இக்காலத்து முத்திமண்டபமாத்திரம் விளங்குகின்றதாம்.

ஸ்ரீ அன்னபூரணி மகிமை.

மோக்ஷத்தை விரும்பினவருக்கு மோக்ஷத்தையும், தருமத்தை விரும்பினவருக்குத் தருமத்தையும், அருத்தத்தை விரும்பினவருக்கு அருத்தத்தையுங் கொடுக்கும் பாதபத்மத்தையுடைத்தான ஸ்ரீஅன்னபூரணிதேவி காசியில்வசிக்கின்றவர்கள் பெற்ற பொருளைப் பரிபாலனஞ் செய்தலும், பெறாத பொருளை யடையச் செய்தலுமாகிய யோக க்ஷேமங்களைச் செய்து விசுவேசர் கருத்தின்படி மோக்ஷசம்பத்தைப் பிக்ஷையாகக் கொடுக்கின்றவள் என்று சொல்லுகிறார்கள்.

ஸ்ரீ காலபயிரவர் மகிமை.

ஸ்ரீகாலபயிரவர்: காசியில்வசிக்கின்றவர்களுடைய விக்கினங்களையும், பாவங்களையும் போக்குகின்றவர். இவரைக் காசியில்

வழிபடல் மோக்ஷத்திற்குக்காரணம். அதனால் எல்லாப்பாவங்களும் நசிக்கும். விசவேசரிடத்திற் பக்தியுடையவர்களும், இவரிடத்திற் பக்தியுடையராதல் வேண்டும். பக்தி பண்ணுதவர்களுக்கு மேன்மேலும் விக்கினங்களுண்டாம். யார் எதை விரும்புகின்றார்களோ அவர் இவரைச் சேவித்தலால் அப்பலனை யடைவார்களாம்.

ஸ்ரீ பிந்துமாதவர் மகிமை.

ஸ்ரீபிந்துமாதவர் காசிவாசிகளைப் பரிபாலனஞ் செய்கின்றவர். காசியிற் பிரியமுள்ளவர். இவரைத் தரிசித்தாற் காசிவாசத்திற் கேதுவும், மோக்ஷசாதகமு முண்டாகின்றனவென்று சொல்லுகிறார்கள்.

காசியில் செய்யும் நைமித்திக யாத்திரை விவரம்.

திதியாத்திரை.

சுக்கிலபக்ஷத் திரிதிகையில் நவகவுரிகட்கும், சதுர்த்தசியில் ஐம்பத்தாறு விநாயகருக்கும், பஞ்சமியில் சப்தரிஷிகட்கும், இருவகை அஷ்டமியில் எட்டு வயிரவருக்கும், அஷ்டமி சதுர்த்தசி இரண்டில் நவதுர்க்கைக்கும், நவமியில் சண்டிகைக்கும், ஏகாதசி துவாதசியில் விஷ்ணுமூர்த்திகளுக்கும், பர்வம் சந்திரபுட்கரணியில் சந்திரேசருக்கும், அமாவாசை கபிலதாரையில் இடபத்துவசேசருக்கும் செய்யும் யாத்திரை திதியாத்திரையாம்.

வாரயாத்திரை.

ஆதித்தவாரத்தில் பன்னிரண்டு சூரியர்களையும், சோமவாரத்தில் ஞானவாவியில் ஸ்நானஞ்செய்து விசுவேசரையும், ஆவணிமாதம் சோமவாரத்தில் கேதாரேசரையும், சுக்கிரவாரத்தில் சுக்கிரேசரையும், சனிவாரத்தில் சனீஸ்வர லிங்கத்தையும் தரிசித்துச் செய்யும் யாத்திரை வாரயாத்திரை யெனப்படும்.

நக்ஷத்திர யாத்திரை.

புதவாரம் சதுர்த்தசி பரணிநக்ஷத்திரத்தில் இயமதீர்த்த ஸ்நானமும், இயமலிங்க தரிசனமும், புதவாரம் துவாதசி கிர

வன நக்ஷத்திரத்தில் சங்கமதீர்த்த ஸ்நானமும், சங்கமேஸ்வர தரிசனமுஞ் செய்தல், நக்ஷத்திர யாத்திரையாம்.

மாச யாத்திரை.

சித்திரைமாசத்தில் பிரதிதினமும் காமகுண்ட ஸ்நானமும் காமேசர் தரிசனமும், வைகாசி மாதத்தில் விமலதீர்த்த ஸ்நானமும் விமலேசர் தரிசனமும், ஆனி மாதத்தில் உருத்திரவாசதீர்த்த ஸ்நானமும் உருத்திரவாசேசர் தரிசனமும், ஆடி மாதத்தில் இலக்ஷுமி தீர்த்தஸ்நானமும் இலக்ஷுமி தரிசனமும், ஆவணி மாதத்தில் காமாக்ஷி தீர்த்த ஸ்நானமும் காமாக்ஷி தரிசனமும், புரட்டாசி மாதத்தில் கபால மோசன தீர்த்த ஸ்நானமும் சூலதங்ப தரிசனமும், ஐப்பசி மாதத்தில் மார்க்கண்ட தீர்த்த ஸ்நானமும் மார்க்கண்டேசர் தரிசனமும், கார்த்திகை மாதத்தில் பஞ்சகங்கா ஸ்நானமும் விந்து மாதவர் தரிசனமும், மார்கழி மாதத்தில் பிசாசமோசன தீர்த்த ஸ்நானமும், கபர்த்தேசர் தரிசனமும், தைமாதத்தில் தனதீர்த்த ஸ்நானமும் தனேசர் தரிசனமும், மாசிமாதத்தில் பிரயாகை தீர்த்த ஸ்நானமும் பிரயாகேசர் தரிசனமும், இன்னும் கோடிதீர்த்த, கோடிலிங்க தரிசனமும், பங்குனி மாதத்தில் கோகர்ணதீர்த்தஸ்நானமும், கோகர்ணேசர் தரிசனமுமாக ஒவ்வொன்றும் ஓர்மாதம் பிரதிதினமும் ஸ்நானமும் தரிசனமுஞ் செய்தல் மாசயாத்திரையாம்.

இருது யாத்திரை.

சங்கத்துவார சமீபத்தில் துவாரகாபுரியும், பிந்துமாதவர் சமீபத்தில் காஞ்சிபுரியும், வருணை சமீபத்தில் மதுராபுரியும், இராமேஸ்வர சமீபத்தில் அயோத்தியாபுரியும், கிர்த்திவாசேசசமீபத்தில் அவந்திகாபுரியும், அசிசங்கமேஸ்வரர் சமீபத்தில் மாயாபுரியமாகிய இவைகள் காசியிற் பிரகாசித்திருக்கின்றன.

பஞ்சக்குரோச யாத்திரை.

கங்கா ஸ்நானமும், நித்திய யாத்திரையுஞ் செய்து காசிவாசஞ் செய்கின்றவர்கள், சோதிலிங்கமயமாய்ப் பஞ்சக்

குரோச பரிமாணமுள்ள காசியை தக்ஷிணாயனம் உத்தராயணம் என்னும் அயனங்களி லிரண்டிலாவது வருடாந்தத்திலாவது சோதிலிங்கமயமாய்ப் பஞ்சக்குரோச பரிமாணமுள்ள காசியைப் பிரதக்ஷிணஞ் செய்வது பஞ்சக்குரோச யாத்திரையாம்.

இக்காசியைப் பிரதக்ஷிணஞ் செய்தால் மூன்று லோகத்தையும் பிரதக்ஷிணம் பண்ணின பலனைக் கொடுக்குமென்றும், காசியிற் செய்த பாவங்களுக்குப் பரிகாரமுமாமென்றுஞ் சொல்லுகிறார்கள்.

காசியின் (பனாரிஸின) தற்கால ஸ்திதி.

இந்தக் காசிப்பட்டணமானது நேபாள தேசத்தைச் சார்ந்த பாகங்களுக்குத் தெற்காயும், பண்டல்கண்டு நாட்டுக்கு வடக்காயும், சுமார் பத்துமைல் விஸ்தீரணமுள்ள அழகிய நகரம் இக்காசி நகரத்துக்கு வடவண்டையில் வருணை என்னும் ஓர் சிறுநதியும், தென்னண்டை அசி என்கிற ஓர் சிறுநதியும் கால்வாய்களைப்போலப் பாய்ந்து கங்கைநதியில் சங்கமமாகின்றன. அசி என்கிற சிறுநதியைச் சிறு கால்வாயென்றுதான் சொல்லலாம். இவைகளுக்கு மத்தியிலிருக்கப்பட்ட பூமிக்கு வாரணாசி என்று சொல்லுகிறார்கள். இந்த அசிக்கும் வருணைக்கும் மத்தியில் கங்காநதியானது வில்வளைவாகப் பிரவாகிக்கிறது. இந்தக் கங்கைக்கு மேற்குக் கரையில்தான் காசிப்பட்டண மிருக்கிறது. அசிவருணமத்தியில் கேதாரகட்டமுதல் இராசகாடுவரைக்கும் நாகபூர், சிந்தியா, ஹோல்கார், நேபால், அஹல்யாபாய் முதலான மஹாராஜர்களும் இராஜாமஹிஷிகளும் அநேக லக்ஷம் பொன்களை அலக்ஷியமாக எண்ணிச் செலவுசெய்து கங்கை ஸ்நானத்துக்கு வசதியான கட்டடங்களையும், சிவபிரதிஷ்டைக்கு ஆலயங்களையும், வசிக்க விசாலமான வீடுகளையும் (சுனார் ஸ்டோன் முதலான) கற்களால் சிற்பலங்காரமுள்ள பிரம்மாண்டமான கட்டடங்களைக் கட்டியிருக்கின்றனர். இக்கட்டடங்களுள் ஸ்ரீதாருணீசி அஹல்யாபாயும் வேறு சில கோஷாயிகளும் கட்டியிருக்கும் கட்டடங்கள் ஆச்சரியகரமானவைகள். யாத்திரைக்காரர் கிழக்கிந்தியப் புகைவண்டி தங்கும் இடத்தைவிட்டுக் காசி நகருக்குள் பிரவேசிக்கப் புறப்பட்டால், கங்கைக்கரையோரமாக மூன்று மைல் தூரம்வரை

யில் கட்டப்பட்டிருக்கும் ஸ்நானகட்டங்கள், மண்டப மாடமாளிகை கூடகோபுரங்கள் இவற்றின் காக்ஷிகளைப் பார்க்கலாம். அந்தக் கட்டங்களில் வண்டிகள் போகமாட்டாதாகையால் நடக்கச் சக்தியற்றவர்கள் அந்தக் கங்கையில் ஏராளமாகவிருக்கும் சிறுபடகுகளை வாடகைக்குக் கொண்டுபோய்ப் பார்த்தால் பூரண சந்தோஷத்தை அடைவார்கள். அசிமுதல் வருணைவரைக்கும் மத்தியில் ஆயிரம் இரண்டாயிரம் பிராமணர்கள்வரையில் அந்தக் கட்டடங்களில் விசுப்பலகைகளைப் போட்டுக்கொண்டும், குடைகளின் நிழலிலிருந்துகொண்டும், உபசார திரவியங்களான சந்தன புஷ்ப விபூதி கோபி சந்தனங்களை வைத்துக்கொண்டும் இருக்கிறார்கள் இவர்களன்றியில் கெங்காபுத்திரர்கள், காட்டியர்கள், டாணியர் என்றும் பஞ்சதிராவிடபஞ்சகௌடாள முதலான பிராம்மண யாசகர்கள் பத்துப் பதினையாயிரம் பெயர்கள்வரையிலிருக்கிறார்கள். இந்தக் கட்டங்களில் எங்குப் பார்த்தபோதிலும் ஆயிரக்கணக்காக ஸ்நானம் செய்பவர்களும், சங்கற்பம் செய்பவர்களும், சுவாமி தரிசனத்திற்கு உயர்ந்திருக்கும் படிக்கட்டுகளில் ஏறிப் போகப்பட்டவர்களும், இறங்கி வரப்பட்டவர்களுமான ஜனங்களின் காக்ஷி வெகுவினோதமாகவிருக்கிறது. திரிலோசன கட்டத்தருகில் சகல தானியவகைக் கடைகளிருக்கின்றன. இராஜ கட்டத்தண்டை முக்கியமான ஆயச்சாவடி இருக்கிறது. துர்காகட்டத்தண்டை காலபயிரவர், தண்டபாணி ஆலயங்களிருக்கின்றன. பஞ்சகங்கா கட்டத்தண்டை பிந்துமாதவர் ஆலயமிருக்கிறது. இவ்விடத்தில் பெரிதான ஒரு மஸ்ஜிது இருக்கிறது. இதைப்பற்றிப் பின்னிட்டுச் சொல்லுவோம். மணிகர்ணிகா கட்டத்தில் கங்காபுத்திரர்களும் குஜராத்தியர்களும் இருக்கிறார்கள். கேதார கட்டத்தண்டை கங்காளிகளென்றும் தென்தேசத்தாரிருக்கிறார்கள், துர்கா கண்டத்தண்டை வீடுகள் ஆறு ஏழு அடுக்குமாடி வீடுகளாகவிருக்கிறதன்றியில், மஹாஜனங்கள் என்றும் சவுகார்களிருக்கிறார்கள். கங்கைக் கரையோரத்தில் பிரம்மாண்டமான படிகள் நாளாவட்டத்தில் முன்னுக்குத் தள்ளிக்கொண்டு வந்துவிட்டபடியால், கங்கையின் அகலம் குறைந்து ஆழம் அதிகமாகிவிட்டது. ஆனால் கட்டப்பட்ட கட்டடங்கள் கங்கைப் பிரவாகத்தால் அடிபட்டுப் போகாமல் பலமான கற்களால் பந்தோபஸ்தாகக் கட்டப்பட்டிருக்கின்றன. துர்கா கட்டமுதல் சவுக்குக்குப் போகிறவழியில் அகலமான ரோ

ட்டுகள் கிடையா. எல்லாம் சிறு சந்துகளாகவே இருக்கின்றன. இப்படிச் சந்துகளாக விருக்கினும், வீடுகள் மாத்திரம் ஐந்தடுக்கு, ஆறடுக்கு, ஏழடுக்கு மெத்தைகளாகக் காக்ஷிக்குக் கப்பிரமாகவும் ஆச்சரியகரமாகவும் இருக்கின்றன. இவைகளில் 8000 வீடுகள் பிராம்மணர்களுக்குச் சொந்தம். நிகழ்ந்த கானிஸ்வாரி கணக்கின்படி 2,00,0000 ஜனங்கள் குடியிருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது இந்தக் காசியில் 1480 கோயில்களும், சில பொதுக் கட்டடங்களுமிருக்கின்றன. இவற்றில் அநேகம் தென்தேசத்துக் கோயில்களைப்போலப் பெரிதும் அழகுள்ளதுமல்ல. ஆயினும், வைதீக விஷயமாக அல்லாமல், கேவலம் லௌகீக விஷயமாகக் காக்ஷியின்பொருட்டு யாத்திரை செய்வோர் பார்க்கத்தக்க சில கோயில்களையும், கட்டடங்களையும் பற்றி இதனடியில் எழுதுகிறோம்.

யாத்திரை செய்வோர் பொருளுள்ளவர்களாக இருக்கும்பக்ஷத்தில் அந்தக் காசிப்பட்டணத்தில் ஏராளமாகவிருக்கிற எக்கா என்னும் ஓர் குதிரை கட்டிய வண்டியையாகிலும், அல்லது இரண்டு குதிரைகள் கட்டிய பக்கியென்னும் வண்டியையாகிலும் வாடகைக்கு வைத்துக்கொள்ள வேண்டும். எக்கா என்னும் வண்டிகள் தென் தேசத்தாருக்கு வசதியானதாகத் தோற்று. ஆகவே, பக்கியென்னும் கோச்சுவண்டியை வைத்துக்கொள்ளுதல் உத்தமம். இந்தப் பக்கிகளில் முதல் வகுப்புப் பக்கிகள், இரண்டாவது வகுப்புப் பக்கிகளென இரண்டு வகுப்புகளுண்டு. முதல் வகுப்புப் பக்கி வண்டிக்கு மணி ஒன்றுக்குப் பத்தணாவாகவும், இரண்டாவது வகுப்புப் பக்கி வண்டிக்கு ஆறணாவாகவும் வாடகை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பிறகு கொண்ட மணி முதல் செல்லும் அரை மணிக்கு முறையே 5, 3 அணாவாகவும் வாடகை கொடுக்கவேண்டும். யாத்திரைக்காரர் இப்படிப்பட்ட பக்கி வண்டியை வாடகைக்குக் கொண்டு இராஜ பஜார் (Raja Bazaâr) வழியாகக் காசி நகரத்துக்குள் பிரவேசிப்பது உத்தமம். அப்படிப்பிரவேசிக்கும் யாத்திரைக்காரருக்கு முதலில் காணப்படும் கட்டடம், பழைய தங்கசாலையே. இது இப்பொழுது காசி மஹாராஜாவுடைய வசத்திலிருக்கிறது. இது 286 அடி நீளமும், 95 அடி அகலமுமுள்ள நீண்டு குறுகிய கட்டடம். இப்போது இதில் நாணயங்களைச் செய்வ

தில்லை. ஆனால் 1857ஆ நடந்த கலகத்தில் அப்போது காசியிலிருந்த இங்கிலீஷ்காரர்கள் அடைக்கலம் புகுந்த இடமாகையால், அந்த ஞாபகச்சின்னார்த்தமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக்கட்டடத்தின் பெரியஅறையில் ஹென்றி காரி தக்கர் (Henry Carry Tucker, Commissioner) என்னும் துரையவர்களுடைய பெரிய படம் வைக்கப்பட்டிருக்கிறது. இவர் சுதேசிகளுக்குப் பல நன்மைகளைச் செய்த படியால், சுதேசிகள் இன்றளவும் அவரை ஸ்துதித்துக் கொண்டாடுகிறார்கள்.

NANDESWAR KOTEE—நந்தேசுவர் கோடி.

பிறகு யாத்திரைக்காரருடைய காக்ஷிக்கு அந்த இராஜ பஜாரில் தங்கசாலைக்கு வடக்கே நந்தேசுவர கோடி என்னும் கட்டடம் இருக்கின்றது. 1799ஆ காசிப்பட்டணத்தில் ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் டேவிஸ் (Davis) என்பவர் வஜிர் அலி (Wazir Ali's) சேனைகளை சட்டியினால் தாக்கியவிடம். ஆகவே இதுவும் மஹாராஜருடைய வசத்திலிருக்கிறது.

QUEEN'S COLLEGE.

இராணியார் கலாசாலை.

காசிப் பட்டணத்துக்குள் காக்ஷிக்குக் கம்பீரமாகத் தோன்றும் கட்டடம் "குயின்ஸ் காலேஜ்" என்னும் கலாசாலையே. இது ஐரோப்பியர் சிற்ப சாஸ்திரத்தை யனுசரித்து 1847ஆ நவம்பர்மீ முதல் தேதியில் கடைக்கால் போட்டு, 1853ஆ கட்டி முடிவுபெற்றது. இதற்கு 1,27,000 ரூபாய் செலவிடப்பட்டது. இத்தொகையில் பெரும்பாகம் துரைத்தனத்தாராலும், சிலபாகம் கைமொப்பத் தொகையாலும் கொடுக்கப்பட்டது. இந்தஅழகிய கட்டடம் முழுதும் (Chunar Stone) சூனர் கற்களால் கட்டப்பட்டுக் கட்டடத்தின் சுற்றிலும் நாகரி எழுத்துக்களில் சமஸ்கிருத பிரமாணங்கள் செதுக்கப்பட்டுச் சிறந்துவிளங்குகின்றது. இக்கட்டடத்தின் சிற்ப சாஸ்திரியாராகிய மேஜர் கிட்டோ (Major Kitto R. E.) என்பவர் கட்டடத்தின்மேல் விசித்திர விநோத வளைவு கண்ணாடியைப் பதிக்கும்போது வளைவு இடிந்து விழுந்த காயத்தினால் இறந்தார். கட்டடத்தின் மத்திய ஹாலின் உயரம்

75 அடி. கட்டடத்தின் மேல்மெத்தையின்மீது போய்ப்பார்த்தால் காசிப்பட்டணத்தின் காக்ஷி வெகு விநோதமாக இருக்கிறது. கட்டடத்தின் மத்திய மண்டபம் (Navo) 60 அடி நீளம், 30 அடி அகலமுள்ளதாயும், இருபுரத்தின் மண்டபம் (Transpet) 40 அடி நீளம், 20 அடி அகலமுள்ளதாயு மிருக்கிறது. இந்தக்கட்டடம் இந்துதேசத்தில் இப்போது சிறந்து விளங்கும் கட்டடங்களில் ஒன்று. கலாசாலைக்குள் ஸ்ரீ இராஜேந்திர நாராயணசிங்கு என்பவருடையவும், மேற்படி கலாசாலையின் சிரேஷ்ட பண்டிதராகவிருந்த டாக்டர் பாலன்டைன், (Doctor Baluntine), மிஸ்டர் டன்கின் (Mr. Dankin), மேஜர் கிட்டோ (Major Kitto) என்பவர்களுடையவும் சித்திர உருவப்படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கலாசாலையில் இத்தேசத்து ஆகமவேத இதிகாசாதி கிரந்தங்களையும், ஏனைய தேசத்தாருடைய ஆகமவேதபுராண இதிகாசாதி கிரந்தங்களையும் எவ்வளவோ பொருள் செலவிட்டு வாங்கி வாசிப்பவர்களுடைய உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், சமஸ்கிருதம், பார்ஸி, அரபி முதலான பாஷைகளும் பத்ததிரீதியாகப் போதித்துவரப்படுகின்றன. இந்தக் கலாசாலையில் கல்விகற்றுத் தெளிந்த பண்டிதர்கள் பிரபலமாகப் பிரதிஷ்டைபெற்றவர்கள். கலாசாலையைச் சுற்றிலும் அழகான உத்தியாவனங்க ளிருக்கின்றன. அருகிலிருக்கும் ஒரு சிறுகுளத்தில் முதலைகளை வளர்த்துவருகிறார்கள். கலாசாலையின் வடபாகத்தில் பிரம்மாண்டமான ஒரு கல் ஸ்தம்பம் நாட்டப்பட்டிருக்கிறது. இது 1853-வருஷம் காஜிபூரில் கண்டெடுக்கப்பட்டும், பிறகு காசிக்குக் கொண்டுவரப்பட்டும், 1854௵ மேமீ வடமேற்கு மாகாணம் லெப்டினெண்ட்டு கவர்னராகிய ஹானரபில் ஜேம்ஸ் தாமஸால் (Honarable James Thomas) நாட்டப்பட்டது. இது பூர்வம் அசோக மஹாராஜாவின் காலத்தில் செய்யப்பட்டு அவரது அரண்மனையிலிருந்ததாம்.

THE PRINCE OF WALES' HOSPITAL.

பிரின்ஸ் அப்வேல்ஸ் ஆஸ்பத்திரி.

இந்த இராணியார் கலாசாலைக்குப் போகிற வழியில் கி. பி. 1876—77-ம் வருஷம் மாக்ஷிமைதங்கிய விக்டோரியா சக்கிரவர்த்தினியவர்களுடைய ஜேஷ்ட புத்திரரும், இளவர

சருமாகிய ஸ்ரீ பிரின்ஸ் அப் வேல்ஸ் இராஜகுமாரர் காசி க்ஷேத்திரத்தைதரிசித்தபோது, அவரால்கடைக்கால்போடப் பட்டு, சிரேஷ்ட தேசாதிபதிகளிற் சிறந்தவராகிய அப்பன் ரிப்பன் பிரபு (Lord Ripon) அவர்களால் கிரஹப்பிரவே சம் செய்விக்கலான ஒரு அழகிய தருமவைத்தியசாலை இருக் கின்றது. இதற்கு பிரின்ஸ் அப் வேல்ஸ் ஆஸ்பத்திரி என்று பெயர். இந்தக் கட்டடத்திற்குப் பிடித்த செலவு தொகை முழுதும் சுதேச தரும பிரபுக்களால் கொடுக்கப்பட்டது.

THE CENTRAL HINDU COLLEGE.

இந்து மத்தியதர கல்விச்சாலை.

இப்போது நமது தேசத்தில் தியசாபிகள் சபை என் னும் ஒருவித மதக்கொள்கையின் தலைவராகிய ஸ்ரீ அன்னிபி ஸெண்டு அம்மையாருடைய பெருமுயற்சியினால், இந்நாட்டு வாலிபருக்கு வைதிக, லௌகிகக் கல்வியைக் கற்பித்துக்கொடு க்க ஒருபெரிய கலாசாலையையும், பெண்களுக்கு ஒரு பாட சாலையையும் ஸ்தாபித்து அவைகட்குச்சுமார்நான்கு இலக்ஷம் ரூபாய்வரையில் அநேகரிடம் வாங்கி மூலதனமாக வைத்துக் கல்வி கற்பித்து வருகின்றனர். அந்த மூலதனத்தில் சுமார் 75,000 ரூபாய்வரையில் அந்த அன்னிபிசண்டு அம்மையவர் களால் கொடுக்கப்பட்டதாம். இப்போது இந்தப் பாடசாலை கள் பிரபலஸ்திதியில் இருக்கின்றன.

THE TOWN HALL.

நகரமண்டபம்.

இந்தத் தருமவைத்தியசாலைக்கருகில் கி. பி. 1870-வரு ஷம் ஜனவரிமாதம் இந்தக் காசிக்ஷேத்திரத்தைத் தரிசித்த ஸ்ரீ விக்டோரியா சக்கிரவர்த்தினி அவர்களுடைய துவிதிய குமாரராகிய ஸ்ரீ டியூக்அப் எடின்பர்க் (His Royal Highness the Duke of Edinburgh) என்பவருடைய விஜய ஞாபகச் சின்னமாக விஜயநகரம் மஹாராஜாஅவர்களால் கட்டி வைக்கலான நகரமண்டபம் (Town Hall) இருக்கிறது. இது 112 அடி நீளமும், 32 அடி 8 அங்குல அகலமுமுள்ளது. மத்திய ஹாலின் விஸ்தீரணம் 73 அடி. மத்திய முக்கிய வாச

லின் இருபுறங்களிலும் பெரிய அறைகளிருக்கின்றன. இந்த அறைகளுள் ஒன்றில் ஹானரெரி மாஜிஸ்திரேட்டு கச்சேரி செய்துவருகிறார். இப்படி நகரமண்டபத்தை மாஜிஸ்திரேட்டு கச்சேரிக்கு உபயோகப்படுத்தக் கொடுத்தது உத்தமமாகத் தோற்றவில்லை. இவ்விடத்தில் யாத்திரைக்காரர் தமது வண்டியைவிட்டிறங்கி "சவுக்கு" என்னும் கடைவீதியின் வழியாய் நடந்துவரவேண்டும். இதுவரையில்தான் காசிப்பட்டணத்தின் வெளிப்பாகம். இனி, காசிப்பட்டணத்தின் உட்பாகத்தில் பிரவேசிக்கவேண்டுமானால் வண்டிகள் போகக்கூடிய ரஸ்தாக்கள் கிடையா. பெரும்பாலும் சிறிய சந்துகளானபடியால் யாத்திரைக்காரர் நடந்துபோதல் உத்தமம். அப்படி நடந்து போகும்போது முதலில் காணப்படும் கட்டடம் பெருத்து வெண்மையாகத் தோன்றுவது மஸ்ஜிதே, அதாவது மஹம்மதியர்களுடைய தேவாலயம். இது அரங்க்ஸீப் என்னும் மகமதிய சக்கரவர்த்தியினால் ஸ்ரீ விசுவேசுவரர்கோயிலுக்கு முன்பக்கத்தில் கட்டப்பட்ட கட்டடம். இது ஹிந்து தேவாலயங்களிருக்கும் இடத்திற்கு வெகு சமீபத்தில் கட்டப்பட்டதனால், இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் அடிக்கடி பல சண்டைகளுண்டாக ஹேதுவாயிருக்கின்றது. இந்தக் கட்டடம் கட்டும்போது அவ்விடமிருந்த இந்துதேவர்களையெல்லாம் கொண்டுவந்து இதற்குப் படிகளாக உபயோகப்படுத்த உத்தரவானதாகவும், அப்போது ஜோதி சொரூபமாக விளங்கிய விசுவேசுவரர் அடுத்திருந்த ஞானவாவி என்னும் குளத்தில் குதித்துப் பாதாளத்தில் மறைந்துவிட்டதாகவும் சொல்லுகிறார்கள். இந்துக்களுடைய மனஸ்தாபத்தினால் இப்போது ஷை மஸ்ஜிதுக்குப்போக முன்வாசலில் வழியைக் காணோம். இந்த இடத்திற்குப் போகும்போது யாத்திரைக்காரர் தமக்கு உதவியாக வரும்படி அவ்விடம் விசேஷமாகவிருக்கும் பண்டாக்கள் என்னும் பிராமணர்களில் ஒருவரைக் கூட்டிக்கொண்டு போனால் வழிகாட்டியாக வந்து அடுத்திருக்கும் இந்த தேவாலயங்களின் சரித்திரங்களை விவரமாக அறிவிப்பார். இந்தப் பண்டாக்களென்னும் பிராமணர்களுக்கு ஏதேனும் சிறிது பொருளுதவி செய்தால் திருப்திகரமாகப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படி ஒரு பண்டாவையாகிலும், அல்லது வேறு ஒரு அந்த ஸ்தல வாசியையாகிலும் கூட்டிக்கொண்டு பத்துப் பன்னிரண்டு கஜதூரம் போனால் அங்கே ஆறரையடி உயரமுள்ள நந்தி விக்கிரகம்

தோற்றுகின்றது. அந்த நந்தி விக்கிரகத்துக்குச் சமீபத்தில் ஞானவாவி யிருக்கிறது.

THE JNANA VAVI.

ஞானவாவி.

இந்த ஞானவாவியில்தான் விசுவேசுவரர் மகம்மதியர் கலைபயில் வந்து விட்டதாகக் கொண்டிருப்பதால், இந்தக் கிணற்றை விசேஷ தீர்த்தமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கிணறு சுமார் பத்துப்பதினைந்து அடி சுற்றளவுள்ளதாயும், சுற்றிலும் தனித்துச் சிறப்பாகச் செதுக்கிய சித்திரக்கல் கைப்பிடிச்சுவருள்ளதாயு மிருக்கிறது. பூஜை செய்பவருடைய புஷ்பாதி பத்திரங்கள் கிணற்றில் விழுந்து ஜலம்கெட்டுப்போகுமென்று அருகிலிருக்கும் அர்ச்சகராகிய பிராமணர்கள் ஒருவெள்ளைத் துப்பட்டியினால் கிணற்றை மூடிக் கொண்டிருக்கின்றனர். அப்படியிருந்தும் கிணற்றில் கணக்கற்ற புஷ்பபத்திராதிகள் விழுவதனால் ஜலம்கெட்டுச் செவ்விள வர்ணமாகவிருக்கின்றது. அந்த ஜலத்தை யாத்திரைக்காரர் மஹா தீர்த்தப்பிரசாதமாக உட்கொள்ளுகிறார்கள். ஒரு உத்திரணி தீர்த்தத்துக்குநூற்றுக்கணக்கான ஜனங்கள் ஒருவர் மேலொருவர் விழுந்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். இந்தத் தீர்த்தத்தைக் கொடுப்பவர்கள் கோடீசுவரர்களாக விருக்கிறார்கள். கிணற்றைச்சுற்றிலும் நாற்பதுகால்மண்டபம் ஒன்று இருக்கிறது. இது கி. பி. 1828ஸு ஸ்ரீமது தவுல்தராவ் சிந்திய மஹாராஜா அவர்களுடைய மனைவியார் கட்டிவைத்தனர். இந்த மண்டபத்தில் பிச்சைக்காரர்கள் அதிகம்.

THE GOLDEN TEMPLE OF VISHVESHWAR NATH.

விசுவேசுவரருடைய சுவர்ணாலயம்.

அந்த நாற்பதுகால் மண்டபத்திலிருந்து கிழக்குத் திக்காகப் போனால் ஸ்ரீ விசுவேசுவரருடைய விநோத விசித்திர சிற்பலங்கார முள்ளதும் வெண்மையானதுமான ஸ்படிகக் கற்களினால் இந்தூர் மஹாராணி அஹல்யாபாய் அம்மாளால் கட்டப்பட்ட கட்டடமிருக்கிறது. இந்தக் கோயிலின் பிரகாரத்துக்குள் பிரவேசித்தால், கோயிலின் அந்தப்புரங்கள் காணப்படுகின்றன. அவைகளுக்கெதிரில் பலவித புஷ்பக் கடைகள்

மலிந்திருக்கின்றன. அந்தக் கடைகளில் ரோஜா, துலுக்க சாமந்தி, வில்வ பத்திரங்கள் கலந்து ஒருமுழ நீளமுள்ள புஷ்பமாலைகளைக் கட்டி ஒரு சிறிய மூங்கிற்றட்டில் வைத்து, பைசா ஒன்றுக்கு (மூன்று தம்பிடிக்கு) ஒரு புஷ்பத் தட்டை விலைக்குக் கொடுக்கிறார்கள். அந்தக் கடைகளுக்கு அடுத்திருக்கும் "நவபத்கானா" என்னும் இடத்துக்குச் சென்றால் 51 அடிகள் உயரமுள்ள சுவர்ணமயமான கோபுர மண்டபம் கம்பீரமாகத் தோற்றுகின்றது. அந்தக் கோபுர மண்டபம் தென்தேசத்துத் தேவாலய கோபுரமண்டபங்களைப் போலிராமல், வாழைப்பூ உருவான ஸ்தூபிகளை யுடையதாயும் அதன்மேல் ஜண்டா ஒன்று கட்டப்பட்டதாயு மிருக்கின்றது. இந்தக் கோயிலுக்குள் அநேக லிங்கங்கள் இருந்தபோதிலும், விசேஷமானது விசுவேசுவரலிங்கமே. இது சுமார் பத்துப் பன்னிரண்டு அடி சதுரசுற்றளவுள்ள ஸ்படிகக் கற்களால் கட்டி அமைத்த தொட்டியின் மத்தியி லிருக்கிறது. இதன் உயரம் சுமார் ஒருமுழ மிருக்கலாம். இது இளநீலங்கலந்த ஸ்படிகமாகத் தோற்றுகின்றது. இவ்விடத்தில் பக்திமான்களும், முக்கியமாக யாத்திரைக்காரர்களும் கும்பல் கும்பலாகக் கூடி. ஒருவர்மே லொருவர் விழுந்து பூஜை செய்கிறார்கள். பூஜைசெய்ய விரும்புகிறவர்கள் ஒருகையில் கங்கையின் தீர்த்தத்தையும், ஒருகையில் பூஜாதிரவியபாத்திரத்தையும் எடுத்துக்கொண்டுவருகிறார்கள். இந்தப் பூஜாதிரவியபாத்திரம்: புஷ்பம், சந்தனம், குங்குமம், அக்ஷதைமுதலானவைகள் வைப்பதற்குவசதியானது. பூஜைசெய்வதற்குத்தென்தேசத்துத்தேவாலயங்களி லிருப்பதைப்போல நியமனமான அர்ச்சகரும், அவஸ்தைகளு மில்லாமையால், யாத்திரைக்காரர் யாவரும் சர்வ சுவதந்திர முடையவர்களாகித் தாமே விசுவேசுவர லிங்கத்தின்மீது கங்கையின் தீர்த்தத்தை விட்டு, பிறகு புஷ்ப வில்வாதிகளை வைத்து வணங்கி, தமது சிரசைமோதி ஒத்திக் கொண்டு அபிஷேகமான தீர்த்தத்தைக் கண்களில் ஒத்திக் கொள்ளுகிறார்கள். அப்போது அருகிலிருக்கும் விருஷபங்கள் பயமற்று அந்தப்புஷ்பாதி பத்திரங்களை உடனுக்குடனே தின்றுவிடுகின்றன. யாத்திரைக்காரர் அந்த விருஷபங்களையும் தடவிக்கொடுத்து வணங்கி முத்தமிட்டு வருகிறார்கள். அவைகளுக்கு அந்தப் புஷ்பாதிகளே ஜீவனோபகாரமாகவிருக்கின்றன. இந்த விசுவேசுவரர் கோயிலுக்கு மூன்று கோபுரங்க ளிருக்கின்றன. அவைகளில் இரண்டு. பாலசூரியன் ஜனிக்

ரும் கிழக்குத் திசையை நோக்கி ஜகஜ்ஜோதியாக ஜாஜ்வலிக்கின்றன. இந்தக் கோபுரங்கள் சுத்தமான பசும்பொன் தகடுகள் என்று கேள்வி. இவை இப்போது இங்கிலாந்து தேசத்திலிருந்து உருஷியா தேசத்தில் திரிவதாகச் சொல்லும் டுலிப்சிங்கு மஹாராஜா அவர்களுடைய தந்தையாராகிய இரஞ்சித்சிங்கு மஹாராஜா அவர்களால் செய்விக்கப்பட்டதாம். இப்படியே நேபாள இராஜா அவர்களால் அலங்கார மணிகளும் மண்டபங்களும் 7 அடி உயரமுள்ள நந்தியும் ஐதிராபாத்து இராணியாரால் சிவாலயமும் கட்டப்பட்டிருக்கின்றன.

SANISCHWARAR.

சநீஸ்வரர்.

யாத்திரைக்காரர் இந்த விசுவேசுவரருடைய ஸ்தலத்தைப் பார்த்துக்கொண்டு திரும்பினால், அருகில் பூஜா விஷயங்களுக்கேற்ற சில பல கடைகளிருக்கின்றன. இவைகளுக்கு இடதுபக்கத்தில் சநீஸ்வரர் கோயிலிருக்கின்றது. அந்தச் சனீசுவரருடைய சிரசுமாத்திரம் சுத்த வெள்ளியால் அமைக்கப்பட்டிருக்கிறது. உடலைக் கண்டிலேம்.

ANNAPURANI.

அன்னபூரணி.

அந்தச் சனீஸ்வரரைவிட்டுத் திரும்பினால், அன்னபூரணியின் ஸ்தல மிருக்கின்றது. அதற்குச் சரியான வாசலில் அநேக மாடுகள் கும்பல் கும்பலாக நிற்பதால் யாத்திரைக்காரர் அந்த வழியாகப் போகாமல் குப்பையாதி அசங்கியங்களால் நிறைந்த அடுத்த சந்து வழியில் போகவேண்டியிருக்கிறது. இந்த அழகிய சிறியகோயில் கி. பி. 1721ல் பெஷ்வாதேசத்து பாஜிராவ் அவர்களால் கட்டப்பட்டது. இந்தக் கோயில் பிரகாரத்துக்குள் சூரியநாராயணர், கணேசர், கவுரிசங்கரர், அநுமார் ஆகிய மூர்த்திகளின்நான்கு சிறிய கோயில்கள் இருக்கின்றன. அன்னபூரணி விக்கிரஹம்சுமார் இரண்டுமூன்று முழ உயர மிருக்கலாம், அந்த விக்கிரகத்தின்மேல் அதிக நகைகள் கிடையா. அநந்தமான ஸ்திரீகள் தாமே பூஜை செய்து தமது சிரசுகளை அம்மையின் பாதத்தில் மோதிக்கொள்ளுகிறார்கள். எதிரிலிருக்கிற மண்டபம் அலங்காரமான

தாகவிருந்தாலும், மாடுகளுடையவும், மிதமிஞ்சிய ஜலத்தினுடையவும் கலப்புகளால் கசகசவென்று அசங்கியப்படுத்திவைக்கிறார்கள்.

இந்தக் காசிக்ஷேத்திரம் பிரபஞ்சத்தில் புராதன ஸ்தலமென்றும், இதைப் பார்த்தமாத்திரத்தில் சகலவிதமான ஜனங்களுடைய சகலவித பாவபந்தங்கள் நீங்கிவிடுமென்றும், தொன்றுதொட்டு பல சிறந்த புராண கிரந்தங்களில் சொல்லப்பட்டும் அனுஷ்டிக்கப்பட்டும், அனேக காத மைல்கள் தூரத்திலிருக்கும் அநந்த லக்ஷம் ஜனங்களால் அடிக்கடி தரிசிக்கப்பட்டும் வரும்போது, அப்படிப்பட்ட ஸ்தலத்தையும், முக்கியமாக அந்த ஸ்தலத்தின் தேவாலயங்களையும் கண்களால் பார்த்துச் சகிக்கக்கூடாதவிதமாக அசங்கியப்படுத்தி வைத்திருப்பது அநியாயமே! இனிமேலாகிலும் நமது சுதேசிகளும், முக்கியமாய் துரைத்தனத்தாரும் இதுவிஷயத்தில் எச்சரிக்கையாகவிருத்தல் உத்தமம்.

இந்த அன்னபூரணி சன்னிதியைவிட்டுப் பக்கத்திலிருக்கும் மான்வலைவான சிறுசந்தில் பிரவேசித்தால் யாத்திரைக்காரருடைய காக்ஷிக்கு ஒரு அழகான கணபதி விக்கிரஹம் காணப்படும். இந்த விக்கிரகத்திற்குச் கரசரணாதிகள் வெள்ளி கவசங்களால் மூடப்பட்டு, முகத்துக்குக் காவிக்கல் வருணம் பூசப்பட்டிருக்கிறது. யாத்திரைக்காரர் பிறகு இந்த மத்திய தேவஸ்தானத்தைவிட்டு வலதுகைப் பக்கமிருக்கும் சந்து வழியாகப் புறப்பட்டால் தசாஸ்வமேதகட்டத்துக்குப் போகலாம். இவ்விடத்தில் சிற்பிகள்: லிங்கங்கள் முதலான விக்கிரகங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். யாத்திரைக்காரர் இந்த விடத்தைவிட்டுச் சற்றுயர்ந்திருக்கிற படிகளின் மீது ஏறிச் சந்து வழியாகப் போனால், பெரிய ரஸ்தாவுக்குப் போகலாம். ஆனால், இந்த இடத்திலிருந்து பார்த்தால், அரங்கவலீப், விசுவேசுவரருடைய கோயிலையிடித்த பாகங்கள் காணப்படும். இந்தப் படிகளுக்கு மேலிருக்கும் கட்டடத்தில் கார்மிகேல் லைபிரெரி (Carmichal Liberary) என்னும் வாசகசாலை இருக்கிறது. இது 1874ஆ காசிராஜா அவர்களால் கடைக்கால் போடப்பட்டு ஷை இராஜா அவர்களுடையவும் விஜயநகர மஹாராஜா அவர்களுடையவும், வேறு தருமவான்களுடையவும் தருமத்தொகையால் கட்டி அக்காலத்தில் கவர்னர்ஜனரலவர்களுடைய ஏஜெண்டாகவிருந்த அந்த கார்

மிகேல் துரைமகன் பெயரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. யாத்திரைக்காரர் சுமார் பத்து நிமிஷத்தில் நடக்கக்கூடிய தூரத்திலிருக்கும் கட்டம் வழியாக வந்தால் அவ்விடத்தில் நல்ல தங்கத்தைக் கேவலம் மெலிந்த பட்டுக்கம்பிகளைப்போல் அடித்து, சரிகை செய்யும் வேலைக்காரரையும், அவர்களுடைய ஆச்சரியமான வேலைத்திறத்தையும் பார்க்கலாம். இந்தச் சரிகையானது காசிப்பட்டணத்தில் நெய்யும் விலையுயர்ந்த பீதாம்பரங்கள், துஷால்கள், துப்பட்டாக்கள் முதலான வஸ்திரங்களில் சேர்த்து நெய்து விற்கப்படுகிறது. இந்தச் சரிகை வேலை இடங்களுக்குச் சமீபத்தில், தசாசுவமேதகட்டம் இருக்கிறது. சுதேச யாத்திரைக்காரருக்கு இது ஒரு விசேஷமான இடம். பிரம்மாவானவர் அசுவங்களைக்கொண்டு யாகஞ்செய்து பரமபதத்துக்கு வாசல் வழிபாக்கியதாகச் சொல்லுகிறார்கள். காசிக்ஷேத்திரத்தைத் தரிசிப்போருக்கு விசேஷமாகிய பஞ்சஸ்தலங்களில் இது ஒன்று. சூரிய சந்திர கிரஹண காலங்களில் இவ்விடத்தில் இலக்ஷக்கணக்கான ஜனங்கள் ஸ்நானம் செய்யவருகிறார்கள். பரிசுத்தமான ஸ்தலமென்று சொல்லப்பட்ட இப்படிப்பட்டவிடத்தில் இக்காலத்தார் காசிநகரத்தின் சாக்கடை முதலானவைகளைவிட்டு அசங்கியங்களைச் செய்துவருவது அக்கிரமமே.

MAN MANDIRA OBSERVATORY.

மான்மந்திர நக்ஷத்திராலயம்.

பிறகு யாத்திரைக்காரர் கட்டத்தின்மீதேறி விநோதங்களைப்பார்க்க விரும்பினால் அவர்கள பார்வைக்கு இடதுபாகமாகக்காணப்படும் மான்மந்திர நக்ஷத்திராலயத்தை அவசியம் பார்க்கவேண்டும். இந்த நக்ஷத்திராலயத்துக்குக் கட்டங்களின் வழியாகப் படிக்கட்டுகளின்மீதேறிப்போனால் சாக்கடைநாற்றம் சகிக்கக்கூடாதபடி யிருப்பதால், பின்பக்கத்திலிருக்கும் சந்துவழியாகப்போதல் உத்தமம். இந்த ஆச்சரியமான கட்டடம் இராஜபுட்டானாவைச்சேர்ந்த அம்பர்நகரத்தின் அரசராகவிருந்த மானசிங்க மஹாராஜரால் கட்டப்பட்டது. இந்த மஹாராஜருக்குப் பின் அந்தப் பட்டத்தையடைந்த இராஜா ஜீவசிங்கவர்கள் 1719-ம் வருஷம் முதல் 1748-ம் வருஷம் வரையில் இருந்தபஞ்சாங்கங்களைத் திருத்திக்கொடுக்கவேண்டுமென்று (Mahamud Shah) மகம்மது ஷா கேட்டுக்கொள்ள,

அதற்காக இந்த நக்ஷத்திராலயங் கட்டப்பட்டது. இந்தக் கட்டடத்திலிருக்கும் கணிதகோள இயந்திரக்கருவிகளை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருவிகளில் வித்தியா இயந்திரம் (Bhittiyantra a small Quadrant) 11 அடியும் 9 அடி 14 அங்குல நீளமும், 1 அடி $1\frac{1}{2}$ அங்குலஅகலமு முள்ளதாயிருக்கிறது. இந்த இயந்திரத்துக்கு வடகிழக்கே (Yantra Samarat) சமரத இயந்திரம் என்னும் பெயரால் செங்கல்லுகளால் கட்டப்பட்டிருக்கிறது. இது 36 அடி நீளமும் 4 அடி 6 அங்குல அகலமு முள்ளதாயிருக்கிறது. இதன் மேல்பாக வடமூலையை நோக்கி நிழலையறிய உதவியாயிருக்கிறது. இந்த இயந்திரத்துக்குக் கிழக்கே மத்தியான ரேகாசக்கிர இயந்திரம் (Equinoctial Circle) இருக்கிறது. இதற்குச் சமீபத்தில் இயந்திர சமதார்த்தம் (Yanbu Samarat) கருவி இருக்கிறது. இதற்குச்சமீபத்தில் ஓரங்குல மொத்தத்துடன் இரும்பினால் செய்யப்பட்ட சக்கிர இயந்திரமிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் தினசார இயந்திரம் (Dignasa Yantra) இருக்கின்றது. இந்தக் கட்டடத்தின் கீழ்ப்பாகத்தின் வீட்டில், கந்தமூலப் புஷ்ப பதார்த்தத்தினால் மூடப்பட்ட தண்ணீர்த்தொட்டி ஒன்றிருக்கிறது. இதில் பல வர்ணபேதங்களைச் செய்வதாகச் சொல்லுகிறார்கள். யாத்திரைக்காரர் தசாசுவமேத கட்டத்தை விட்டு வந்தால் பிறகு பார்க்கத்தகுந்தது கேதார கட்டம்.

KEDARA GHAT.

கேதார கட்டம்.

இவ்விடத்தில் பங்காளிகள் அநேகர் இருக்கிறார்கள். இது அவர்களுக்கு மஹாமுக்கிய ஸ்தலம். இதன் மகிமையாவது :—ஓர் காலத்தில் காசிப் பிராம்மண யோகீசுவரரான ஒருவர் இமாலயமலையிலிருக்கும் கேதாரநாதரைச்சேவிக்கவேண்டுமென்று அதிக ஆசைகொண்டவராகவிருந்தும் நடந்து போகச் சக்தியற்றுத் தவிக்கும்போது அந்தக் கேதாரநாதரே சந்நியாசி வேஷத்துடன் வந்து, அந்த யோகியின் சாதத்தையும் சாப்பிட்டு, அவருக்கு வேண்டிய வரம் தந்து, அந்த இடத்தைத் தரிசிப்பவருக்கு இமாலயமலையில் தம்மைக்காணும் அடியார்களுக்குக் கொடுக்கும் வரங் கொடுப்பதாக வாக்களித்தாராம். இப்போது இவ்விடத்தில் ஒரு பெரிய சிவாலயம்

இருக்கிறது. இந்த ஆலயத்துக்கு அடி கட்டத்தில் கவுரிகுண்டம் என்னும் சிறுகுளமிருக்கிறது. இதில் ஸ்நானம் பண்ணினால் ஜ்வரம், சிரபேதி முதலானவை நீங்குவதாகப் பிரஸ்தாபம். இதற்கு மேற்குப்பாகத்தில் மானசசரோவரம் என்னும் சிறு தடாகம் இருக்கிறது. இந்தத் தடாகத்தைச் சுற்றி 60-சிறிய கோயில்களிருக்கின்றன. சமீபத்தில் 42 அடி நீளமுள்ள ஒருகல்ஸ்தம்பம் நாட்டப்பட்டிருக்கிறது. இது பிரதிதினமும் வளருகிறதாகச் சொல்லுகிறார்கள். யாத்திரைக்காரர் பிறகு துர்காகுண்டத்தின்வழியாகப்போதல் உத்தமம். இது பார்க்கத்தக்கவிடம். சவுகிகாட்டு (Chauki Ghat): இந்தவிடத்தில் நாகர்பூசை விசேஷமாக நடக்கிறது. இந்த நாகர் பூசையில் எருமைப்பாலே ஆராதனைக்கு விசேஷமாக வழங்கிவருகிறார்கள். இவ்விடத்தில் நாககுஹ என்னும் பெயரால் ஒரு பெரிய குளம் இருக்கிறது. இது, செதுக்கிய கற்களால் ஆச்சரியமான தோற்றமுடையதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் குளத்துக்கு மேற்குப்பாகத்தில் நாகர் பிரதிமை வெகு அலங்காரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சவுகிகாட்டுக்குச் சமீபத்தில் பத்துக்கைகளையுடைய துர்காதேவி விக்கிரகத்தையும்பார்க்கலாம். யாத்திரைக்காரர் இந்தக்கட்டங்களின் வழியாக வந்தால் நேபாள தேசத்தாருடைய கட்டங்களைப் பார்க்கலாம்.

MANIKARNIKA GHAT.
மணிகர்ணிகா கட்டம்.

மேலே குறிப்பிட்ட வழியாகவந்தால் மணிகர்ணிகா கட்டம் காணப்படும். இந்தக் கட்டத்தின் பெருமையை முன்னரே கூறியிருக்கின்றோம். இதுமுதல் அரிச்சந்திரகட்டம் வரையில் இடைக்கிடை மசானகட்டங்களாகக்கொண்டு கணக்கற்ற பிரேதங்களைத் தகனம் செய்கிறார்கள். அந்தப் பிரேதங்களுடைய அகலநீளத்துக்குத் தக்கபடிவிறகுமுதலானவைகளை வைத்துத்தகனஞ்செய்யாமல்பாதிதேகத்துக்குமாத்திரம் நெருப்புப்படும்படி கட்டைகளையடுக்கி அதில் பிரேதத்தை வைத்துச் சுட பிரேதத்தின் கால்கள் நெருப்பினால் துண்டங்களாகிக் கீழே விழ, அவைகளை மறுபடியும் எடுத்து நெருப்பில்போட்டுச் சுடுகிறார்கள். சில சமயங்களில் அதிக பிரேதங்கள் வந்துவிட்டால், வெந்தது பாதியும் வேகாதது பாதியுமாக எடுத்துக் கங்கையில் ஸ்நானபானம் செய்பவருக்கு மே

லே தாக்கி அசங்கியப்படுத்துகிறார்கள். இதைத் தடுப்பதற்கு முயற்சி செய்வாரில்லை. சத்தியகீர்த்தியென்று புகழ்பெற்ற அரிச்சந்திரமகாராஜர் புலையனுக்கு அடிமையாகி மயானத்தைக் காத்தவிடமாகிய (அரிச்சந்திரர் தங்கினவிடமாகிய) இவ்விடத்தில் இப்போது ஒருலிங்காலயம் இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தில் இக்காலத்தில் காசிப்பட்டணத்தின் சாக்கடைகளைக் கொண்டுவந்துவிட்டது அவ்விடத்திய அதிகாரிகளுக்குத் தருமமல்ல. இந்த அரிச்சந்திர கட்டத்துக்கு அருகில் அநேக சமாதிகள் பெரியகற்களால் கட்டப்பட்டு, பலகைக்கற்களால் மூடப்பட்டிருக்கின்றன. இந்தச் சமாதிகளில், எவரை அடக்கம் செய்ததெனில், சக்தி என்னும் பெயரால் பூர்வம் புருஷரோடு சஹகமனமான பதிவிரதைகளின் சமாதிகள் என்று சொல்லுகிறார்கள். மணிகர்ணிகா கட்டத்தண்டை ஒரு சிறிய குளம் இருக்கிறது. இதைச் சுற்றிலும் அநேக புருஷர்களும் ஸ்திரீகளும் ஸ்நானம்செய்து சந்தியாவந்தனங்களைச் செய்கிறார்கள். இதன் ஜலமும் கெட்டுப்போயிருக்கிறது. காசிக்ஷேத்திரத்தில் பிரவேசித்தவுடனே முதலில் ஸ்நானம்செய்யவேண்டிய கட்டம் இதுவேயாகையால், இவ்விடத்தில் எப்போதும் ஆயிரங்கணக்கான ஜனங்களிருக்கிறார்கள். கிரஹணாதி காலங்களில் இவ்விடத்தில் ஸ்நானத்துக்கு வரும் ஜனங்களுக்குக் கணக்கில்லை. இந்த மணிகர்ணிகா கட்டத்துக்கருகில் சாரண படுகை இருக்கிறது.

CHARAN PADUKA.

சாரண படுகா.

இது வட்டமாகி ஒருவித பிருந்தாவனம்போல உயர்ந்திருக்கிற கல் கட்டடம். இதன் மேற்பாகத்தில் மார்பில் ஸ்டோன் (Marble Stone) ஸ்படிகக்கல்லால் மூடப்பட்டு அந்தக் கல்லின்மேல் இரண்டு பாதங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை மஹாவிஷ்ணுவின் பாதங்கள் என்றுசொல்லி ஒருபிராமணர் பூஜை செய்துகொண்டு இருக்கிறார். இவை சற்றேறக்குறைய பாரிஸ்நாதர் மலையின்மேல் (Mount Parishnath) ஜயின முனிவருடைய பாதங்களைப்போல் தோற்றுகின்றன. இவ்விடத்தில் கங்காதீர்த்தம் துளசி முதலானவைகளால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து பூஜைசெய்கிறார்கள். இவ்விடத்தில் அர்ச்சகருக்கு மூன்று பைசாக்கள்

(ஒன்பது காசுகள்) கொடுக்கவேண்டும். இந்தச் சாரணபடுகையைத்தாண்டிச் சற்று வருவோமாகில் யாத்திரைக்காரருடைய காட்சிக்கு அரங்கசிப்பினால் கட்டப்பட்ட பிரம்மாண்டமான மஸ்ஜிது இருக்கிறது. அந்தவழியாக வந்தால் பஞ்சகங்காகட்டம் இருக்கிறது.

PANCHA GANGA GHAT.

பஞ்சகங்கா கட்டம்.

இந்தப் பஞ்சகங்கா கட்டத்தின் பெருமையைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். ஆனால் இவ்விடத்திலிருக்கிற அரங்கசிப்பின் மஸ்ஜிதைப்பற்றி மாத்திரம் சொல்லுவோம். இந்த மஸ்ஜிதின் இருபக்கங்களிலிருக்கும் மினர் என்னும் இரண்டு கோரி அல்லது சாசன ஸ்தம்பங்களைப் போன்ற சதுர வளைவு ஸ்தூபிகள் (The minars) ஆச்சரியமான கட்டடங்களாகவிருக்கின்றன. இந்த மஸ்ஜிதானது பஞ்சகங்கா கட்டமாகிய கங்கையின் கரையில் கட்டப்பட்டு யாத்திரைக்காரருடைய திருஷ்டியை இழுப்பதனால், இஷ்டமுள்ளவர்கள் இதைப் போய்ப் பார்க்கலாம். அரங்கசீப் என்பவர் இந்துக்களுடைய மதங்களுக்கு ஜன்மவிரோதி என்றும், இந்துக்களுக்கு அபாயமூலமாகவும், சாந்தரூபமாகவும் தம்மதத்தைப் போதிக்காமலும், பலவிதத்திலும் கட்டாயப்படுத்தியும், இந்துக்களால் மகா பரிசுத்தமான விடங்களென்று எண்ணப்பட்டுப் பக்திபூர்த்தியாகக் கொண்டாடப்பட்ட இடங்களையெல்லாம் அநியாயமாக இடித்துத் தமது கோயில்களைக்கட்டிக் குடிகளைக் கஷ்டப்படுத்தினவரென்றும், ஆகவே ஸ்ரீ காசிவிசுவேசுவரர் கோயிலிருக்கும் இடத்திலும் இப்படிப்பட்ட வேலை செய்தாரென்றும் முன்னமே சொல்லியிருக்கிறோம். இந்தப் பஞ்சகங்கா கட்டத்தை இந்துக்கள் மகா பரிசுத்தமானவிடமென்று எண்ணியிருக்க, அப்படிப்பட்ட விடங்களிலிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணருடைய பெரிய கோயிலுக்கருகில் இந்தபெரிய மஸ்ஜிதையும், அதைச்சார்ந்த (Minars) மினரிஸ் என்னும் சதுரவளைவு ஸ்தூபிகளையும் கட்டினார். இப்படிப்பட்ட இந்தக்கட்டிடம் இவ்விடத்தில் கட்டியதனால் இந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் மனஸ்தாபம் அதிகரித்து அதிக ஜனங்கள் தொழுகைக்குப் போவதில்லை. வெள்ளிக்கிழமைகளில்மாத்திரம் சிலர் வந்து தொழுகிறார்கள். இந்த

மஸ்ஜிதின் ஸ்தூபிகள் கங்காநதி நீர்மட்டத்திலிருந்து 250 அடி உயரமுள்ளதா யிருக்கின்றன. ஆகவே இவ்வளவு உயரமான பிரம்மாண்ட கட்டடம், கங்கைநதியோரத்தில் கட்டியதற்குக் கடைக்கால் அதிகமாக வெட்டிப்போட்டிருக்கவேண்டும். இதுபற்றியே இதன் அஸ்திவாரம் பாதாளம் கண்டதென்று சொல்லுகிறார்கள். யாத்திரைக்காரர் படகைவிட்டிறங்கி எதிரில் காணப்படும் படிக்கட்டுகளின் வழியாக ஏறிவந்தால், புராதனமான அரசவிருக்ஷம் (Pipal Tree) காணப்படுகிறது. அதைச்சுற்றிலும் கிழக்குமேற்காகப் பக்தர்கள் விருக்ஷ பிரதக்ஷணம் சுற்றிவரத்தக்க தாழ்வாரம் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தத் தாழ்வாரத்தில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் சஹஸ்ரநாமங்களைச் சொல்லிக்கொண்டு சுற்றிவருகிறார்கள். யாத்திரைக்காரர் திரும்பி ஏறிட்டுப்பார்த்தால் அவர்களுக்கு முன்பாகத்தோன்றும் வில்வளைவான மத்திய மந்திரத்தின் இரண்டு வாசல்கள் தெரிகின்றன. இந்த வாசல்களில் கங்கைக்குச் சமீபத்திலிருப்பதுதான் போகவர அனுகூலமுள்ளதாக விருக்கிறது. வடக்குப்பாகத்திலிருக்கும் (Minar) மினார் என்னும் ஸ்தூபி அதிக அபாயமான ஸ்திதியிலிருக்கிறதாகச் சிலர் சொல்லுகிறார்கள். நாம்போய்ப் பார்த்ததில், அப்படி அபாயகரமானதாக விருப்பதாய்க் காணப்படவில்லை. இது கட்டப்பட்டு எத்தனையோ வருஷங்களாகியும், அநேக மழைகளுக்கும், பிரம்மாண்டமான கங்கையின் பிரவாகங்களுக்கும் தப்பிக்கொண்டிருக்கிற தன்றியில், கட்டடம் முழுதும பலமான கற்களால் கட்டப்பட்டும் இரும்புத் தண்டங்களால் தாக்குகள் கொடுக்கப்பட்டுமிருக்கின்றன. மேலும்,இது 1844—45-ம் வருஷத்தில் செப்பனிடப்பட்டிருக்கிறது. இதன்மேலேறுவதினால் அபாயமில்லாவிட்டாலும் படிக்கட்டுகள் உயர்ந்திருப்பதனால் கஷ்டமிருக்கலாம். கங்கைநதிமுதல் (Minars) மினார்ஸ் தூபிகளின் தாழ்வாரம் வரையில் 251 படிகளிருக்கின்றன. அதாவது கங்கைமுதல் மஸ்ஜிது தாழ்வாரம்வரையில் 120 படிக்கட்டுகளும், மஸ்ஜிது தாழ்வாரம்முதல் மேல்கோப்புவரையில் 45 படிக்கட்டுகளும், மேல்கோப்பு முதல் (Minars) மினார்ஸ் தூபிகள வரையில் 86 படிக்கட்டுகளும் ஆக 251 படிக்கட்டுக ளிருக்கின்றன. இந்த (Minars) மினார்ஸ் தூபிகளின் அடிமட்டம் 8¼ அடி விஸ்தீரணமும், மேல் தாழ்வாரம் ஏழடி ஏழு அங்குலமும், மஸ்ஜித் தாழ்வாரம் முதல் மேல் கோப்பு 45 அடிக

ளும், மேல் கோப்பு முதல் (Minars) மினார்ஸ்தூபிகள் 77 அடிகளும், (Minars) மினார்ஸ்தூபிகள் தாழ்வாரம் முதல் (Pinnacle) சிகரம் 20 அடிகளும் ஆக அந்த (Minars) மினார்ஸ்தூபிகளின் உயரம் 142 அடிகளுமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த உயர்ந்த மஸ்ஜிதானது மூன்றடுக்குகளாக விருப்பதால் அவைகளின் மேலேறிப் பார்த்தால் காசிப்பட்டணத்தின் காக்ஷி வெகு விநோதமாக விருக்கிறது. இந்த உயர்ந்த கட்டடத்தில் ஏறிப்போவதனா லுண்டாகும் கஷ்டம், மேலேறிப் பார்க்கும் காக்ஷியினால் தீருமென்று சொல்லலாம். இந்த மஸ்ஜிதையும் பஞ்சகங்கா கட்டத்தையும் விட்டு யாத்திரைக்காரர் சமீபத்திலிருக்கும் வில்வனோவான சந்து ரோட்டில் பிரவேசித்தால் பயிரவர் கோயில் தோன்றுகிறது.

BHAIRNATH.

பைரவநாதர்.

இந்தப் பைரவநாதர் அப்ராகிருதரூபமாகவிருந்து தம்மைப்போலவே அப்ராகிருதரூபமான சுனகத்தின்மீது சவாரி செய்து காசிப்பட்டணத்துக்கு எவ்வித குறைவு குற்றங்கள் சம்பவிக்காதபடி பாதுகாப்பதாகச் சொல்லுகிறார்கள்; ஆனதுபற்றியே இப்போது சுனகமுகமான பைரவநாத விக்கிரகத்தினிடம் ஒரு நாயையும் வளர்த்தி வருகிறார்கள். இவ்விடத்தில் நாய்களைப் பரிசுத்தமான பிராணிகளாக எண்ணிப் பாதுகாத்து வருகிறார்கள். இப்படியிருக்க, காசிப்பட்டணத்தின் முனிசிபாலிடியார் நாய்களை அடித்துக் கொல்பவர்களுக்குச் சொற்ப வெகுமதி கொடுத்துக்கொண்டுவருகிறபடியால், நாய்களை அடித்துக் கொல்பவர்கள் தம் பார்வைக்கு எதிர்ப்படும் நாய்களைப் பிடித்துக் கொண்டுவந்து இந்த பைரவநாதர் க்ஷேத்திரத்தில் கொண்டுவந்தால், அவன் நாய்களைக் கொலை செய்யாதிருக்கவேண்டி (யாத்திரைக்காரரும் பைராகிகளும்) பொருள்கொடுத்து நாய்களை விடுதலைசெய்து விடுகிறார்கள். இப்படி ஜீவனம் செய்பவர்களும் தனவந்தர்களாக விருக்கிறார்கள். பிரதிதினமும் கோஷாயிகள் கணக்கற்ற நாய்களைப் போஷித்து வருகின்றனர். இந்த க்ஷேத்திரத்திலிருக்கும் அர்ச்சகர், வலதுகையில் மயிலிறகுகளின் கத்தையையும், இடதுகையில் கொட்டங்கச்சியை (தேங்காய் தொட்டியையும் வைத்துக்கொண்டு யாத்திரைக்காரருடைய முகங்களில் மைல்

இரகுகளால் தடவிக் கொடுக்கிறார்கள். அப்படித் தடவி வருவதில் பேய் பிசாசுகள் பிடிக்காவாம். இடது கையிலிருக்கும் பாத்திரத்தில் காணிக்கையை வாங்கிக்கொள்ளுகிறார்கள். இந்தவிடத்தில் கங்கையின் தீர்த்தத்தையும் புஷ்பங்களையும் போட்டு, நாட்டுச்சாராயத்தை வைத்துப் பூஜை செய்கிறார்கள். இந்தப் பைரவநாதர் க்ஷேத்திரம் கி. பி. 1825ஸு பூனை தேசத்து இராஜாராயரால் ஜீர்ணோத்தாரம் செய்யப்பட்டது. யாத்திரைக்காரர் சமீபமான டெலிகிராப் ஆபீசுக்கருகிலிருக்கும் தமது வண்டிக்குவந்து (Town Hall) நகரமண்டபத்தின் வழியாகப்போனால் இராஜகாட் கோட்டையைக் காணலாம்.

RAJGHAT FORT.

இராஜகாட் கோட்டை.

இந்த இராஜகாட் கோட்டையில் இப்போது ஒரு மகமதிய நபாபின் சமாதி தவிர வேறு அதிசயங்கள் இல்லை. இது காசி இராஜாக்களுடைய புராதன கோட்டை. இந்தக் கோட்டை சம்பந்தமாக ஒரு விநோத கதை சொல்லப்படுகிறது. அதாவது:—பூர்வத்திலிருந்த ஒரு காசி இராஜாவானவர் பிரதிதினமும் ஒவ்வொரு மகமதியனைத் தமது இஷ்ட தெய்வத்துக்குப் பலி கொடுத்துக்கொண்டு வந்ததாகவும், ஒரு நாள் காஜிமியா என்னும் வீரனுடைய முறை வந்தபோது அவன், தன்னைப் பலியிடுவதற்குமுன் அந்தத் தெய்வத்தினிடம் பேச விரும்பியதாகவும், அப்படியே பேசவிட்டபோது, அந்தத் தெய்வம் தாம் நரபலி கோரியதில்லையென்றும், அந்த இராஜன் தனது இஷ்டப்பிரகாரம் செய்து வருவதாகவும் சொல்ல, அந்த காஜிமியா, தன் கையிலிருந்த வாளால் இராஜனைக்கொன்று, கோட்டையைப் பிடித்துக்கொண்டான் என்பதே. அந்த வீரனுக்காகப் பிரதி வருஷம் ஓர் உற்சவம் நடப்பதாகவும் கேள்வி. சிலர் இது கட்டுக்கதையென்று சொல்லுகிறார்கள். இப்போது இந்தக் கோட்டை காசிராஜாவின் சுவாதீனத்திலிருக்கிறது. அந்தக் கோட்டையை விட்டுப் பக்கத்திலிருக்கும் (Hotel) சாப்பாடு சத்திரத்தின் வழியாக வந்தால் அவ்விடத்தில் புராதனமான ஓர் கல்ஸ்தம்பமிருக்கிறது.

LAT BAHIRO.
லாத் பஹிரியோ.

இந்த ஸ்தம்பத்துக்கு லாத்பஹிரியோ என்று சொல்லு கிறார்கள். இதை இந்துக்கள் தம்பமென்றும் மஹமதி யர்கள் நிமாசுக்காக அரங்கஜீப்பு காலத்தில் செய்யப்பட்ட தென்றுஞ்சொல்ல இருதிறத்தாருக்கும் பிரமாதமான சண்டை கள் உண்டாகி மண்டைகள் உருண்டதாகத் தெரியவருகிறது. இது எட்டடி உயரமுள்ளதாயும், சிவப்பு வர்ணம் பூசப்பட்ட தாயும் இருக்கிறது. இப்போது இந்துக்கள் இதற்குக் கங்கை ஜலம்விட்டுச் சுற்றிவந்து பூஜை செய்கிறார்கள். இவ்விடத்தில் ஒரு சுனகத்தை வைக்கப்பட்டு பூஜை நடந்து வருகிறது. இந்தக் கல் ஸ்தம்பத்தைத் தாண்டிவந்தால் கபிலர் மோக்ஷ தடாக மிருக்கிறது.

KAPILA MOCHANA TANK.
கபிலமோக்ஷண தடாகம்.

இந்தத் தடாகத்தில் காசி யாத்திரை செய்தவர்கள் க்ஷே க்ஷேத்திரத்தை விட்டுப்போகும்போது அந்தப் பஞ்ச காசிப் பலன் பூரணமாக வேண்டுமென்று கடைசியில மூழ்கும் இடம். இது முன்சொன்ன நமாஸ் இடத்துக்குத் தெற்கே இருக்கிறது. யாத்திரைக்காரர் இவ்வளவு தூரம் பார்வையி ட்ட பிறகு தாம் தங்கியிருக்கும் இடத்துக்குப் போய்ச் சற்று இளைபாறி மறுநாள் பிரவேசித்து மற்ற வேடிக்கை விநோத ங்களைப் பார்க்கப் பிரவேசித்தால் தேகத்துக்கும் மனதுக்கும் சுகத்தைக் கொடுக்கு மாகையால் அப்படியே செய்வது உத்த மம். பிறகு சக்திக்குத் தக்கபடி செய்யலாம். யாத்திரைக்கா ரர் மறுநாள் காலே இராஜாபஸார் வீதி வழியாக வந்தால் (Chait Ganj Thana) சய்த்கங்காடாணாவைக் காணலாம். இவ்விடத்தில் 1781ளு ஆகஸ்டுமீ 16உ கொலை செய்யப் பட்டிறந்தஅநேக இங்கிலீஷ் காரர்களுடைய ஞாபகசின்னங் கள் சவரில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த வீரர்கள் யாரோ தெரியவில்லை. ஒருவேளை வாரன்ஹேஸ்டிங்கைச் சார்ந்தவர்க ளாக விருக்கவேண்டும். இந்த இடம் இப்போது ஓர் காடாக விருக்கிறது. இதற்குச் சமீபத்தில் மாதவதாஸ் தோட்டமிருக்

கிறது. இதுதான் விஜயர் அஸியுடன் வாரன் ஹேஸ்டிங்ஸ் தாக்கிய இடம். இதற்குச் சமீபத்தில் கவுடிஸியா வீதி இருக்கிறது. இந்த வீதியில் சர்ச்சுமிஷன் வகுப்பைச் சார்ந்த ஒரு கிறிஸ்தவர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது.

SHIVALA GHAT.

சிவாலய கட்டம்.

மேலே குறிப்பிட்ட கிறிஸ்து கோயிலுக்கருகில் சிவாலயகட்டம் இருக்கிறது. இவ்விடத்தில் கோஷாயிகள் ஆயிரக்கணக்காக விருக்கிறார்கள். இவ்விடத்திலிருக்கும் கோட்டையில் 1781ஆம் வாரன்ஹேஸ்டிங்ஸ் சயித்சிங்கைச் சிறையில் வைத்ததாகக்கேள்வி. இந்தக் கோட்டையின் வடக்குச் சுவற்றில் ஐந்து ஜன்னல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஜன்னல்களின் வழியாக சயித்சிங்கு தப்பித்துக்கொண்டு போனதாக வதந்தி. அப்போது அநேகர் கொல்லப்பட்டு அவர்களுக்குச் சமாதிகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

TULSI GHAT.

துளசிகட்டம்.

மேலே குறிப்பிட்ட கோட்டைக்கருகில் துளசிகட்டம் இருக்கிறது. இந்தக் கட்டத்தில்தான் சாக்ஷாத் வால்மீகரே அவதார புருஷராக வந்து இராமாயணத்தை ஹிந்தி பாஷையிற் சுருக்கமாகச்சொன்ன மஹா பக்திசிரேஷ்டராகிய துளசிதாசர் வதிந்து ஷெ இராமாயணத்தை யெழுதியது. இந்தத் துளசிதாஸருடைய இராமாயாணம் மகா பரிசுத்தமான கிரந்தமாக வடதேசத்தாரால் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த மகாத்மாவினுடைய ஆச்சிரமம் அசி நதிக்கரையின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. அது இப்போது ஜீரணமான ஸ்திதிக்கு வந்திருக்கிறது.

ASI GHAT.

அசிகட்டம்.

மேலே குறிப்பிட்ட துளசிகட்டத்திற் கருகில் அசிகட்டம் இருக்கிறது. இது அசியும், கங்கையும் சங்கமமாகிற இடத்தில் கட்டப்பட்டு இருப்பதனால், காசி க்ஷேத்திரத்தில் பிரபலமான பஞ்சஸ்தலங்களில் ஒன்று. இவ்விடத்தில் அசி

யானது 40-அடி அகலமுள்ளதாகவிருந்தாலும்,ஜேஷ்ட ஆஷாட (செப்டெம்பர்) மாதங்களில் இலக்ஷக் கணக்காக ஜனங்கள் ஸ்நானம் செய்யும் இடமாக இருக்கிறது.

RAMNAGAR.

ராம்நகர்.

மேலே குறிப்பிட்ட அசிகட்டத்திலிருந்தே ராம்நகர் என்னும் கோட்டைக்குப் போகவேண்டும். இது கங்கை நதிக்கு அக்கரையில் இருக்கும் அழகான கோட்டை. இந்தக் கோட்டையை சயித்சிங்கு மகாராஜர் கட்டத்தொடங்கி தற்காலத்தில் அவ்விடம் வசிக்கும் காசிராஜரால் முடிவு பெற்றது. இந்தக் கோட்டை கங்காநதிக்கரையின்மேல் 60 அடி உயர்ந்து அழகாகத் தோன்றுகிறது. நதியின் ஜலத்தால் கோட்டையின் சுவர்களுக்குக் கெடுதி வராதபடி 8-இருப்புத் தாக்குகள் உதைக்கால்களாக மோதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கோட்டையின் இடது பாகத்திற் புலி முதலான மிருகங்கள் மரக்கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. கோட்டையின் மத்தியவழியாகயாத்திரைக்காரர் போனால் ஆஸ்தான மண்டபமிருக்கிறது. இவ்விடத்தில் அநேக ஆச்சரியமான காக்ஷிப்பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அருகிலிருக்கும் அறைக்குள் போய்ப்பார்த்தால் பட்டணத்தின் காக்ஷி வெகு விநோதமாகத் தோற்றுகிறது. இந்த இராமநகரமென்பது வர்த்தக வளமுள்ள ஒரு கிராமம். இதில் ஒரு பெரிய விதிமட்டும் இருக்கிறது. எதிர்க்கேட்டுக்கருகில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதனருகில் ஒரு அழகிய தோட்டமும், துர்க்கையின் கோயிலும் இருக்கிறது. இந்தத் துர்க்காகோயில் 95-அடி உயரமுள்ளதாய் முன்சொன்ன சயித்சிங்கினால் கட்டத்தொடங்கி இப்போதுள்ள இராஜரால் முடிவுபெற்றது.

DURGA KUND.

துர்கா குண்டம்.

யாத்திரைக்காரர் பட்டணத்துக்குள் பிரவேசித்தால் துர்காகுண்டத்தைக் காணலாம். இவ்விடத்தில்ஆடுமாடுகளின் பலி அதிகமாக நடக்கிறது. அந்தக் கோயிலுக்கெதிரில் "நவபத்கானு" இருக்கிறது. இவ்விடம் தினம் ஒன்றுக்கு மூன்று

தரம் பூஜைக்காக மணி அடிக்கிறார்கள். இந்தத் தார்க்காருண்டம் கோயிலுக்கருகில் இருக்கும் புராதன புளியமரத்தில் ஆயிரக்கணக்கான குரங்குகளிருக்கின்றன. இவைகளை முனிசிபாலிடியார் பிடித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த மரத்துக்கருகில் 12 கம்ப மண்டபமிருக்கிறது. இவ்விடத்தில் இரண்டு பெரிய மணிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்று மிரசாபூர் கலெக்ட்டரால் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டதாம். இந்தத் தார்க்காக்ஷேத்திரம் நட்டோர் மஹாராணியவர்கள் 100 வருஷங்களுக்கு முன் கட்டியது.

BELAPUR.

பெலாபுரம்.

மேற்படி தார்க்காருண்டத்திற்குச் சமீபத்தில் பெலாபுரம் இருக்கிறது. இவ்விடத்தில் விஜயநகரம் மஹாராஜருடைய அரண்மனையிருக்கிறது. இந்த அரண்மனைக்கு எதிரில் ஓர் இரதம் இருக்கிறது. இதைத் தாண்டிவந்தால் (Jana Narian's College) ஜனநாராயணர் கலாசாலை இருக்கிறது. இது சர்ச்சுமிஷனைச் சார்ந்தது. இப்போது 400-பிள்ளைகள் வாசிக்கிறார்கள். இதைப் பார்த்துக்கொண்டு "சிக்ரா" என்னும் வழியாக வந்தால் கிறிஸ்தவர் கிராமம் இருக்கிறதன்றியில், சர்ச்சுமிஷனைச்சார்ந்த போதனை பாடசாலையும், அனாதைகள் பாடசாலையும், 1847ஆ கட்டப்பட்ட 83 அடி நீளமும், 40 அடி அகலமுமுள்ள கிறிஸ்தவர் கோயிலும் இருக்கின்றன. இப்போது இந்தக் காசிப்பட்டணத்தில் பாப்டிஸ்டு (Baptist) மிஷனைச் சார்ந்த விடுகளும், பாடசாலைக் கட்டடங்களும், மாதுதாஸ் தோட்டத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் ஸம்ஸ்கிருத பாஷையையும் இங்கிலீஷ் பாஷையையும் கற்பிக்கின்றனர். சதார்பஸார் வீதியில் பாப்டிஸ்டு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் (Church Mission) சர்ச்சுமிஷனைச் சார்ந்த ஸ்திரீ போதனை பாடசாலையும், ஜனானா போதகருமிருக்கிறார்கள். லண்டன் மிஷனைச் சார்ந்த (London Mission) பெரியகலாசாலையும் சிறிய பள்ளிக்கூடமும், ஜட்ஜி துரையவர்களுடைய கோர்ட்டு வீதியில் கட்டப்பட்டு இவற்றில் 400 பிள்ளைகள் வாசிக்கிறார்கள். இந்த வகுப்பான கிறிஸ்தவர்களுக்குப் பெண் பாடசாலையிருப்பதோடு ஜனானா போதகர்களுமிருக்கிறார்கள். மேலும் வெஸிலியன் மிஷனைச்

சார்ந்தவர்களும் கிறிஸ்து மதத்தைப் போதித்துவருகிறார்கள். இப்படிப் பலவகுப்பான மிஷன் வகுப்பார்கள் பலிதமாகப் போதித்துவந்தாலும், இந்துக்கள் விசேஷமாக கிறிஸ்துமதத்தில்சார்வது கஷ்டசாத்தியமாகவிருக்கிறது. இதற்குக்காரணம், இந்தக் காசிக்ஷேத்திரத்திலிருக்கும் பிராம்மணர் முதலான உயர்குலத்து இந்துக்கள் தமக்குத் தாழ்மையான சூத்திரர்களைக் கவுரவமாக மதித்து, அன்போடு ஆதரித்து, வைதீக விஷயங்களைப் போதித்து வருவதனால், சூத்திரரான இந்துக்கள் தமது பூர்வ இந்துமதத்தின் பெருமையையும், பிராம்மணர்களுடைய பெருமையையும் மேன்மையையும் அறிந்து அதைவிட்டு அன்னிய மதத்தாருடைய போதனைகளுக்குச் செவிகொடுப்பதில்லையென்று தோன்றுகிறது. மேலும்இந்தக் காசிப்பட்டணம் ஒருகாலத்தில் புத்தமதஸ்தர்களுக்கும் முக்கியமான பட்டணமாக விருந்ததாகத் தோற்றுகிறது. அந்த மதஸ்தர்களுடைய கட்டட ஞாபகச்சின்னங்களைப் பார்க்க விரும்புவோர் பார்னு (Barna) என்னும் கற்களால் கட்டப்பட்ட பாலத்தின் வழியாகச் சாரநாதம் (Saranath) என்னும் இடத்துக்குப் போகவேண்டும். அவ்விடத்தில் அநேக சர்க்கார் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வழியாகப் போனால் எக்ஸிகூடிவ் இஞ்சினீர் வீட்டிற்கெதிரில் சூரியகடிகாரம் (Sundial) கட்டப்பட்டிருக்கிறது. இது 1784௵ கவர்னர் ஜனரலாகவிருந்த வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் உத்திரவினால் கட்டப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கடியாரத்தின் மேற்பாகத்தில் இங்கிலாந்தைச்சார்ந்த கிரீன்விச் (Greenwich) நக்ஷத்திர சித்தாந்த நியமனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்துக்கொண்டு போனால் "சாரநாதம்" என்னுமிடம் காசிக்குமூன்றுமைல்தூரத்திலிருக்கிறது. அல்லது ரஸ்தாவின் வழியாகப்போனால் 5 மைல் தூரமிருக்கிறது. இவ்விடத்திலிருக்கும் புத்தருடைய கட்டடங்களின் பெருமைப் பலநூற்றாண்டுகளாகக் கொண்டாடப்பட்டதன்றியில் இப்போதும் அவை அதிசயிக்கத்தக்கவைகளாயிருக்கின்றன. இந்தக் கட்டடங்களின் பெருமையைப்பற்றி, கி. மு. 399 வருஷங்களுக்கு முன்னும், கி. பி. 629—645 வருஷங்களிலும் சீனதேசத்து யாத்திரைக்காரர்களாகிய பாஹையின் (Fa Hain) என்பவரும், இயோன்சாங் (Hiouen Thsang) என்பவரும் வெகுபிரபலமாக எழுதியிருக்கிறார்கள். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் கட்டப்பட்ட இக்கட்டடங்

களின் பெருமை இக்காலத்தாரும் வியக்கத்தக்கவையென்று சொல்லலாம். இப்போது சவுகிண்டி (The Chan Kundi) என்னும் கோபுரமும், டாமக் Dhamek) என்னும் கோபுமும் முக்கியமானவைகள். இவைகளில் "சவுகிண்டி" என்பது 100 அடி உயரம் உயர்ந்து அழகாகத் தோன்றும் செங்கல் வளைவு கோபுரம். இதை, ஹூமையூன் சக்கிரவர்த்தி தரிசித்தபோது ஞாபகச்சின்னமாகக்கட்டியதாகச்சொல்லுகிறார்கள். இதற்குள் 300 அடி உயரமுள்ள புராதன புத்தர் கோபுரம் பாதாளத்திலிருந்து கட்டப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அது நமக்கு அகப்படவில்லை. டாமக் (Dhamek) என்பது பூர்வம் புத்தரானவர் நியாயப்பிரமாணங்கள் செய்தவிடமென்று சொல்லுகிறார்கள். இது 90 அடி சுற்றளவும் 110 அடி உயரமுமுள்ள வளைவான கோபுரகட்டடம். இந்தக்கட்டடத்தின் கீழ்ப்பாகம் 45 அடிவரையில் சூலர்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றது. இந்தப்பாகம் வெகு விநோத சித்திராலங்காரமாகச் செதுக்கப்பட்டு, அடியில்பதினைந்து அடி உயரத்துக்குப் புத்தர் தபசு செய்யும் பாவனையான பிரதிமைகளசெய்துவைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்தக் கட்டடத்தில் பலகுகைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளிலும் புத்தமத தபசிகள் தவம் செய்து வந்ததாகக் கேள்வி 1835—36ஞ ஜனரல் கன்னிங்ஹாம் (General Cunningham) என்பவர் தோண்டிப்பார்க்கும் போது, இந்தக்குகைகளுக்குள் சிறுகோயில்களும் தபசிகளின் வாசா யோக்கியமான சிறு இல்களும் குகைகளும் காணப்பட்டன. கி. பி. பத்தாம் நூற்றாண்டில் மதவிஷயமாக ஒருபெரிய கலகம் உண்டாகி அப்போது இந்த ஆச்சிரமங்கள் அழிக்கப்பட்டதன்றியில அநேக தபசிகளும் கொல்லப்பட்டார்கள். அன்றுமுதல் அநேக புராதன நாணயங்களும், நகைகளும் பிரதிமைகளும் அகப்பட்டுக்கொண்டு வந்ததாகவும் வதந்தி. இந்தக்கட்டடத்திற்கு மேற்கே மூன்று குளங்கள் இருக்கின்றன. இம்மூன்றில் ஒன்றில் புத்தர் தமது பாத்திரங்களைச் சுத்திசெய்தும், ஒன்றில் வஸ்திரங்களைச் சுத்திசெய்தும், ஒன்றில் தமது தேகத்தைச் சுத்திசெய்தும் வந்ததாகச் சொல்லுகிறார்கள். மேலும் இந்தக்கட்டடத்தின் கிழக்குமேற்குத்திசைகளில் பயங்கரமான பெரியகுகைகள் வெகுதூரம் போகின்றன. மேற்கு வாசல் 1884ஞ மூடிவிடப்பட்டது. கிழக்குத் திசைக் குகைக்குள் தீவட்டிப் பந்தங்களை வைத்துக்கொண்டு போகவேண்டும். உள்ளே விசேஷமாகக் காக்ஷிப்பொருள்க

ளில்லாவிட்டாலும், பாம்பு முதலான விஷ ஜந்துக்கள் ஏராளமாக விருக்கின்றன. யாத்திரைக்காரர் வெகு ஜாக்கிரதையோடு போகவேண்டும். இப்போதிய இந்துக்கள் இந்தக்கட்டடத்தை மகா பரிசுத்த ஸ்தலமாக எண்ணி வணங்கிவருகிறார்கள். வடக்குப்பாகத்தில் தங்கமுலாம் பூசப்பட்டிருக்கிறது. இதற்குச்சமீபத்தில் ஜயினமதஸ்தர்கோயிலிருக்கிறது. இதில்கறுப்பு ஸ்படிகக் கல்லினுற்செய்து வைக்கப்பட்ட பெரிய புத்தவிக்கிரகம் இருக்கிறது. கோயிலுக்குள் சிற்பாலங்காரமான சித்திரவேலைகள் கற்களில் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலில் ஒருபிராமணர் அர்ச்சகராகவிருக்கிறார். இவர் யாவருக்கும் தாராளமாகத் தரிசனம் செய்துவைக்கிறார். இவ்விடத்தில் பிராமணரும், புத்தரும், ஜைனரும் சமாதானமாகி அன்னியோன்னியர்களானார்களாம். இதனால்தான் பிராம்மணர் இவ்விடத்தில் அர்ச்சகராக விருக்கிறார். இந்தக் கட்டடத்துக்குக் கிழக்குப்பாகத்தில் ஒருசிறிய பங்களாவிருக்கிறது. இவ்விடத்தில் நீலிமருந்து காய்ச்சுகிறார்கள். இதைப் பார்க்க விரும்புவோர் அந்தக் கட்டடத்திலிருக்கும் ஓவர்சியரிடம்உத்திரவுகேட்டால் அவர் அதிகபிரியத்துடன் கொண்டுபோய்க் காட்டுகிறார். இந்தக் கட்டடத்தைச் சுற்றிலும் இருக்கும் புலங்களில் அவுரி, பட்டாணி, துவரை, கோதுமை, கரும்பு முதலானவைகள் ஏராளமாக விளைவதைப் பார்க்கலாம். மேலும், அழகான பெரிய கத்தரிக்காய்கள், முட்டைகோஸ், காலிபிளவர், நூல்கோல், கடுகு முதலானவைகளும் வெகு பெருமையான ரூபத்துடனும் தளதளப்புடனும் விளைந்து காக்ஷிக்கு விநோத ரம்மியமாகவிருக்கின்றன. இவ்விடத்திய பூசாரம் வெகு வளப்பமாயிருக்கிறது.

இப்படி மதவிஷயத்திலும் வித்தியா விஷயத்திலும், கட்டடங்களின் விஷயத்திலும் சிறந்த இந்த காசிப்பட்டணத்தின் இராஜ பரிபாலனத்தைப்பற்றி அறிய யாத்திரைக்காரர்கள் விரும்புவார்களாகையால், அதுவிஷயமாகச் சில சங்கதிகளைச் சொல்லுகிறோம். அதாவது:—

இந்தக் காசிப்பட்டணமானது இந்தப் பூலோகத்தில் பெருமைபெற்ற பல பட்டணங்களிலெல்லாவற்றிலும் புராதனமானதென்றும், ஆதி பட்டணமென்றும் சிவபுராணங்களிலும், வேறு நூல்களிலும் சொல்லப்பட்டிருந்தாலும், அதைப்பற்றிக் காலக்கிரமத்துடன் அறிவிக்கும் சரித்திரம்

அகப்படவில்லை. ஆயினும் ஏனைய நாட்டாரின் சரித்திரத்தை அறிந்தவர்களுக்கு இந்தக் காசிப்பட்டணம் கி. மு. 1200 வருஷங்களுக்கு முன்பே அதாவது ரோமலஸ் (Romolus) என்பவன் உரோமக (Rome) இராஜ்ஜியத்தின் அஸ்திவாரம்போடுவதற்கு 500 வருஷங்களுக்கு முன்பே உலகப் பிரசித்தமான பட்டணமென்று தெரியவரும். மேலும் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் அவதரித்த சக்கியமுனி என்னும் பவுத்தமத ஸ்தாபகருடைய சரித்திரத்தைப் பார்ப்பவருக்கும் இந்தக் காசிப்பட்டணம், அந்தப் புத்தருடைய அவதாரத்துக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே சிறந்து சிரேஷ்ட பட்டணமாக விருந்ததாகத் தெரியவருகிறது. எப்படியெனில், மஹா ஜீவகாருண்ணியராயும், சத்தியம், சாந்தம், சுசீலம் முதலான குணங்களுக்கு ஆதி ஆதார கர்த்தராயும், "நிர்வாணம்" என்னும் தசையாகிய விதேக ஜீவன் முக்தராக ஜீவலித்த புத்தரானவர் தமது சிறந்த சமயத்தை இந்து தேசத்தின் சிரேஷ்ட நகரங்களிற் போய்ப் பிரசங்கஞ் செய்து வந்ததைப் போலவே, இந்தக் காசிப்பட்டணத்திலும் போய்ப் பிரசங்கம் செய்ய, அப்போது இந்தக் காசிப்பட்டணத்திற்கு இராஜாவாகவிருந்து செங்கோலைச் செலுத்திவந்த மகா மதியூகி என்னும் மன்னர், இந்த மதம் சிரேஷ்ட மதமென்று எண்ணித் தழுவி ஏனையோரையும் தழுவி வரும்படிசெய்து இந்தக் காசிப்பட்டணத்தையே பவுத்த சமயத்தாருடைய பட்டணமாக்கிவிட்டார். இப்படிப் பவுத்த மதம் இந்தக் காசிப்பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிறகுதான் சீனதேசத்து யாத்திரைக்காரர் வந்து இந்த பவுத்த மதத்தைப் பார்த்துக்கொண்டுபோய் பர்மா, மங்கோலியா, சீனு, ஜப்பான் முதலான தேசங்களில் பரவும்படிச் செய்ததாகச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தக்காலத்தில் காசிபட்டணமானது ஏனைய தேசத்து வர்த்தகப் பொருள்களாற் சிறந்து மஹோன்னதமான தசையிலிருந்தது. இப்படி இந்தப் பவுத்தமதமானது இந்தக் காசிப்பட்டணத்தின் பதினோராம் நூற்றாண்டு வரையில் பிரபலமாக விருக்கும்போது அசோக மகாராஜன் (King Azoka) பவுத்தமத பிடிவாதமுள்ளவனாகி, பிராம்மணர்களைப் பவுத்த மதத்தைக் கட்டாயமாக அநுசரிக்கவேண்டுமென்று வருத்தப்படுத்த, அநேக பிராம்மணர்கள் பயந்து கனோஜி சமஸ்தானத்துக்கு (Kingdom of Kanaj) குடி புகுந்து தகுந்த உத

விலையைப் பெற்றுப் பலத்த மதஸ்தர்களின்மேல் மனவருத்த முண்டாகி மதவிஷயமாகச் சண்டை நடந்து, பிராம்மணர் பலம் பெற்று ஜயசீலரானார்கள். இப்படிப் புத்தமதஸ்தரும், பிராம்மண மதஸ்தரும் சண்டை செய்துகொண்டு தேசத்தில் ஐக்கியங் கெடவே, அன்னிய நாட்டாராகிய மகம்மதியர் இந்த தேசத்தின்மேல் படையெடுத்துவரக் காரணமாயிற்று.

கி. பி. 1194ல் மகமதுகோரி (Mahomed Ghory) படையெடுத்துவந்துடில்லிப்பட்டணத்தில் மகம்மதுஇராஜ்ஜியத்தை ஸ்தாபித்துப் பிறகு இந்தக் காசிப்பட்டணத்தின்மீது படையெடுத்து வந்து கொள்ளையிட்டு அநேக பெரிய கட்டிடங்களையும் ஆயிரக் கணக்கான கோயில்களையும் இடித்துக் குடிகளைப் பலவிதமாக வருத்தினான். கி. பி. 1676ல் அவுரங்கசிப் என்பவன் காசிப்பட்டணத்தின்மீது படையெடுத்துப் போய்க் கொள்ளையடித்தான். அநேக தபசிகளையும், பைராகிகளையும், கொலை செய்வித்ததன்றியில், அநேக பரிசுத்தமான கோயில்களை இடிப்பித்தும், அந்தவிடங்களில் மஸ்ஜீதுகளைக் கட்டுவித்தும்,அநேக அடாத வரிகளைபபோட்டும் குடிகளைப் பலவிதத்திலும் வருத்தப்படுத்துகையில்,அனேகர் இந்த அவுரங்க ஜிப்பினிடம் நேரில் கண்டு முறையிடப்போனபோது அவர்களை யானைகளை விட்டு மிதிப்பித்துங் கொல்லுவித்தான். இந்தக் குரூரனால் காசிப்பட்டணத்தார் பட்ட கஷ்ட நிஷ்டூரங்கள் சொல்லுந் தகைமைத்தன்று.

கி. பி. 1772ல் அயோத்தியாவின் அரசனான நவாப் விஜயர் (Nawab Viziar) என்பவன் ரோஹிலரை (Rohillas) ஜயிக்கப் பிரயத்தினப்பட்டு இந்தக் காசிப்பட்டணத்தையும் கொள்ளையிட்டான். கி. பி. 1775ல் காசியில் இராஜாவாக விருந்த சயித்சிங்கு, தான் ஆங்கிலேயரால் உதவி பெறுதற்காக (இதற்கு முன்) காசிப்பட்டணத்தின் ஜமீன்தாரராக விருந்தவர்கள மாதாந்திரம் ஒரு லக்ஷம் ரூபாய் கொடுத்துக் கொண்டு வந்ததைப்போலத் தானும் கொடுத்துக்கொண்டு வர, கி. பி. 1780ல் இங்கிலீஷ்காரர், ஐதரலி, பிரான்சுக்காரர், தானியர், மஹராஷ்டியர் முதலானவர்களிடம் சண்டை செய்த செலவுக்காக அதிக பணச்செலவாகி, ஐம்பது லக்ஷம் ரூபாய் கேட்க, இராஜன் இல்லையென்று சொல்ல, கி. பி. 1781ல் வாரன்ஹேஸ்டிங்க்ஸ் காசிப் பட்டணத்துக்குப்

போய், சிவாலயகாட்டில் கோட்டையிலிருந்த இராஜனைத் தாக்க, அந்த இராஜன் குடிகளுடைய சகாயத்தினால் தப்பித்துக்கொண்டு 20,000 காப்புச்சேனையோடு சூனார் (Chunar) கோட்டையில் போய்த்தங்கி, பிறகு குவாலியூரில் (Gwalior) 29 வருஷகாலம் அடைக்கலம் பெற்று வாழ்ந்துவந்தான். இந்தச் சண்டையில் வாரன் ஹேஸ்டிங்ஸ்ஸுக்கு யாதொரு லாபமும் கிடையாது. இதன்மேல் மஹிம நாராயணர் (Mahib Narrain) என்பவரை இராஜாவாக நியமிக்க அவர் கி. பி. 1796௵ இறந்துபோக, அவர் குமாரர் பட்டத்தை அடைய அவரும் கி. பி. 1805௵ இறந்துவிட, அவருடைய குமாரராகிய இப்போதிருக்கும் மகாராஜர் ஈஸ்வர பிரசாதநாராயணர் G. C. S. I. என்பவர் பட்டத்தை அடைந்தார்.

இந்தக் காசிப்பட்டணத்தில் இங்கிலீஷ் இராஜாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு அநேக இராஜ கைதிகளை அடைத்து வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. அதாவது:—

சிற்றின்பத்திலேயே தம் வாழ்நாட்களையெல்லாம் வீணாட்களாகக் கழித்துவந்த அயோத்தியாவின் நபாபாகிய விஜயாலியை வெல்லெஸ்லி (Marquis of Wellesly) என்பவர் கி. பி. 1798௵ சிங்காதனத்தைவிட்டு நீக்கிக் காசிப்பட்டணத்துக்குக் கொண்டுவந்து வாரன்ஹேஸ்டிங்ஸ் குடியிருந்தவிடத்தில் வைக்கப்பட்டான். அப்போது காசிப்பட்டணத்தில் மிஸ்டர் செரி (Mr. Cherry) (Political Agent to the Governor General) என்பவர் தானாதிபதியாகவிருந்தார். மிஸ்டர் டேவிஸ் (Mr. Davis) என்பவர் ஜட்ஜியாகவிருந்தார். கி. பி. 1799௵ ஜனவரி மாதம் 13உ விஜயாலி என்னும் நபாபு தானாதிபதியை உத்தரவு கேட்கப்போவதாகச் சொல்லி, மிஸ்டர் செரி வீட்டுக்குப் போய் சலாம் செய்ய, மிஸ்டர் செரி என்பவர் அந்த நவாபின்பேரில் சந்தேகமற்று, சாப்பித் தண்ணீரைக் கொடுத்து இளைப்பாறும்படி மரியாதை செய்ய, உடனே நபாபின் சர்தார் ஒருவன் மிஸ்டர் செரியைப் பிடித்துக்கொள்ள, அப்போது நபாப் தனது பெரிய கத்தியைக்கொண்டு ஒரே வெட்டாக வெட்டிக்கொன்றான்.

அப்போது கூடவிருந்த Mr. Evans) மிஸ்டர் இவான்ஸையும் அவருக்குப் பக்கத்திலிருந்த மிஸ்டர் கான்வே (Mr. Conway) என்பவரையும் கொன்று போட்டார்கள். பிறகு நந்தீசுவரர் கோட்டியிலிருந்த மிஸ்டர் டேவிஸ் என்

னும் ஐட்ஜின்பக் கொல்லப்போக அவர் தம் மனைவி மக்களை மாடியின்மீது அனுப்பிவிட்டு ஆறடி நீளமான ஈட்டியால் தாக்கித்துரத்தி அதனால் காசியிலிருந்த ஆங்கிலேய குடிகள் எச்சரிக்கைப்பட்டுத்தப்பித்துக்கொள்ளும்படிசெய்தார். பிறகு சமீபத்திலிருந்த ஜெனரல் எரிஸ்கின் (General Eriskin) என்பவர் சேனை பலத்துடன் வந்து தாக்க விஜயாலி இராஜபுடானாவுக்கு ஓடிப்போய் ஜெயப்பூர் இராஜனிடம் அடைக்கலம் பெற்றான். பிறகு கர்னல் காலின்ஸ் கையிலகப்பட்டான்: இந்தக் கலகத்தில் காசிப் பட்டணத்திலிருந்த சிவிலியனாகிய மிஸ்டர் கிராஹாம் (Mr. Graham) என்பவரும், மிஸ்டர் ஹில் (Mr. Hill) என்னும் ஷாப்புக்காரரும் அடிபட்டு இறந்தார்கள். டளஹஸி கவர்னர் ஜனரல் (Lord Dalhousi) என்பவருடைய கோணலான கருத்துக்களினால் சிப்பாய்களுக்குள்ளும் மனவருத்தங்களுண்டாகி. சண்டைகள் நடக்கவே பிரிகேடியர்ஜெனரல்பான்சான்பாய் (Brigadiar Genaral Ponsonby) என்பவருடைய முயற்சியால் தடுக்கப்பட்டது. மேலும் சீக்கியருடன் இரண்டாம் சண்டை செய்தபோது காசிப் பட்டணத்தில் சிறையாக வைக்கப்பட்ட சர்தார் சூரத் சிங்கு (Sirdar Surat Sing) என்பவர் காலத்தில் சீக்கியருக்கும் அங்கிலேயருக்கும் பிரமாத சண்டை நடக்கும்போலிருந்தாலும் அந்த சூரத்சிங்கின் முயற்சியால் கலகங்கள் முடிவுபெற்றன. இப்போது இந்தக் காசிப்பட்டணம் இங்கிலீஷ் இராஜாங்கத்தில் யாதொரு சிறு சண்டைகளுமற்று வடமேற்கு மாகாணங்களிற் சிறந்த ஒரு ஜில்லாவாக விருந்து குடிகள் யாவரும் சமாதானத்தோடும் சமய சுதந்திரத்தோடும் சுகப்பட்டுக் கொண்டு வருகிறார்கள்.

வர்த்தக விஷயம்.

—o—

இப்போது இந்தக் காசிப்பட்டணம் வர்த்தக விஷயத்திலும் சிறந்து விளங்குகின்றது. உயர்ந்த விலையுள்ள பீதாம்பரங்கள், சால்வைகள், கின் காப்புகள், பட்டுவேலைகள் முதலானவை சரிகைகளால் செய்யப்படுகின்றன. இந்த வேலைகள் பெரும்பான்மையாக மதன்புரா (Madanpura) என்னும் இடத்திலிருக்கும் மகம்மதியரால் செய்யப்படுகின்றன. இவைகளின் வேலைத்திறத்தையும், விநோத காட்சியையும் நேரில் பார்த்தவர்களுக்கே தெரியவரும். கோதுமை

யும் நீலி மருந்தும் ஏராளமாக ஐரோப்பா கண்டத்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பித்தளைச் சாமான்களின் வேலைகள் எதேஷ்டமாக நடக்கின்றன. பித்தளையினால் கோயில்களைப் போலவும், மண்டபங்களைப் போலவும், பலவிதத் தட்டுமுட்டுகளைப்போலவும், விளையாட்டுக் கருவிகளைப் போலவும், தங்கமயமான விநோத காக்ஷிப்பொருள்களையும், பலவித சித்திர விநோத சித்திராலங்கார முள்ளவைகளாகச் செய்து ஏராளமாக ஐரோப்பா முதலான தேசங்களுக்கு ஏற்றுமதியாகி வருகின்றன. காசிப்பட்டணத்தில் இந்தப் பித்தளைச் சாமான்களின் காக்ஷி வெகு விநோதமாக விருக்கிறது. இவைகளன்றியில் பலவித மரங்களில் செய்த விநோதமான விளையாட்டுக் கருவிகள் விற்பனையாகி வருகின்றன. நேபாள தேசத்திற்கடுத்த மோரங்கி என்னும் இடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட உருத்திராக்ஷங்களை ஏராளமாக விற்பனை செய்கிறார்கள். உணவுக்கு வேண்டிய முதல் தரமான அரிசி, கோதுமைமா முதலான தானியங்கள் ஏராளமாக விற்கப்படுகின்றன. கத்தரி, முள்ளங்கி, முட்டகோஸ், நூல்கோல், காலிப்பூ,பச்சைப்பட்டாணி,இஞ்சி முதலானவைகள் பெருத்துப்பார்வைக்கு அதிசயப்பொருள்களைப்போலத் தோன்றுகின்றன. இவ்விடத்தில் கொய்யாப் பழங்கள் தேங்காய்களைப்போலப் பெருத்து அவற்றின் இரண்டு இலைகளோடு பைசாவுக்கு நாலைந்து ஆறேழு விதமாக விற்கிறார்கள். கிச்சிலி, மணிலா, இலந்தை முதலான பழங்கள் பெருத்துப் பார்வைக்கு விநோதமாக வைத்து விற்கிறார்கள். இவ்விடத்தில் குளிர் அதிகமானபடியால், இராக்காலங்களில் கனப்புச் சட்டிகளையும் கஞ்சா உக்காக் குடுக்கைகளையும் எல்லா ஜாதியாரும் பக்கத்தில் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். கஞ்சா, குடாக், உக்கா குடுக்கைகளை விற்பதற்கே தனிமையான ஒரு கடைவீதி இருக்கிறது. தென் தேசத்தைப்போல் மூக்குப்பொடியில் சுண்ணாம்பு, நெய் முதலானவைகளை விட்டுக் கடைந்தெடுக்காமல் வெறும் புகையிலைத் தூளை சூரணத்தைப்போலிடித்து அத்துடன் கந்தம் கமழ்கின்ற வாசனைத் திரவியங்களைக் கலந்து உலாஸ் என்னும் பெயரால் பைசாவுக்கு இரண்டு பலம் தூளைக் கடிதப் பொட்டளமாக விற்கிறார்கள். இந்தத் தூள் ரபீர் என்னும் கந்தப்பொடி தூளைபபோலிருக்கின்றது. மூக்கிற்போட்டால் மண்டை மூளையையே ஆட்டி விடுகின்றது.

இந்த மூக்குக்குள் விற்கும் கடைவீதியில்தான் அத்தர், புனுகு முதலான வாசனைத் திரவியங்களையும், பலவித புஷ்பங்களையும், சாரங்தா முதலான வாத்தியக்கருவிகளையும் தாம்பூலப் பட்டிகளையும் விற்கிறார்கள். இந்தத் தாம்பூலப் பட்டிகளுக்குப் பிடி என்று பெயர். இதில் மூன்று பழுத்த வெற்றிலைகளைச் சுத்தமாகத் துடைத்து, குலாபி முதலான அத்தர்களைத் தடவி அதனுள் கொஞ்சம் காசிக்கட்டித் தூளும், கொட்டைப் பாக்குத் துண்டுக ளிரண்டும் ஏலக்காய், கிராம்பு முதலானவைகளும் அடங்கியிருக்கின்றன. இதன் விலை பட்டி ஒன்றுக்கு இரண்டு அணா. வாயிற்போட்டு மென்றால் கமகமவென்று வாசனையைத் தருகின்றது. இந்தச் சுகந்த தாம்பூலக் கடைகளின்மேல் மாடியைப் பார்த்தால் பற்பல தேசத்து அதாவது, காஸ்மீரம், டில்லி, கனோஜி, மஹாராஷ்டிரம், குஜராத்தி, வங்காளி, தக்கணி தேசத்தின் தாசிகள் தேவலோக இரம்பைகளைப்போலவும், அப்ஸரஸ்திரீகளைப்போலவும் பிரகாசிக்கும்படி செய்து, உயர்ந்த விலையுள்ள சோபாக்களிலும், நாற்காலிகளிலும் சாய்ந்துகொண்டும், சிலர் உக்காக்களைக் குடித்துக்கொண்டும், சிலர் சாரங்தா முதலான வாத்தியக் கருவிகளுடன் இனிய இராகங்களைப் புகட்டிப் பாடிக்கொண்டும், பாட்டைசாரிகளின் புத்தியைக் கெடுக்கிறார்கள். மேலும் ஒவ்வொரு கட்டிடத்தின் கீழ்ப்பாகத்தில் பல பையன்கள் நின்றுகொண்டு ஷை பரத்தையர் வீட்டிற்குள் வரும்படி பேரம்பேசிப் பலத்காரப்படுத்துகிறார்கள். ஆகையால், வாலிபர்கள் அந்த வீதியில் போகாமலிருத்தல் உத்தமம். இந்தக் காசி க்ஷேத்திரத்திற்கு வந்த எதிகளும், பக்திமான்களும் அதை விட்டுப் போகக்கூடாதென்று புராண விதி யிருப்பதால், அநேக எதிகளும், சன்னியாசிகளும் ஏராளமாக விருப்பதன்றியில், கல்கத்தா முதலான பிராந்தியங்களிலிருக்கும் பக்திமான்களான பங்காளிகள், தாம் சம்பாதித்த பொருளையும் அல்லது பென்ஷன் சம்பளத்தையும் ஆதாரமாகக்கொண்டு இந்தக் காசிப்பட்டணத்திலேயே தமது காலத்தைப் போக்கிவிடத் துணிந்து வந்துவிட்டபடியால், இப்போது பத்தாயிரத்துக்கு அதிகமான பங்காளிகள் வந்து குடியிருக்கிறார்கள். இவர்களிருக்கும் இடத்துக்குப் பங்காளிடோலா என்று பெயர். மஹா சத்திய கீர்த்தி என்னும் ஹரிச்சந்திரரை விற்ற கடை வீதியாகிய ஹரிச்சந்திர பஜார் கடைவீதியில் சகல பொருள்களும்

சரியான விலைக்கு விற்கப்படும் என்னும் கருத்தினால் அநேக மஹாராஷ்டிர தேசத்தார்கள் வந்து குடியிருக்கிறார்கள். இவ்விடத்தில் பலகடைகளை நாணயங்களாக வழங்கிவருகிறார்கள். இப்படி இந்தக் காசிப்பட்டணத்துக்கு ஏனைய நாட்டிலிருந்து ஏராளமான ஜனங்கள் குடியிருக்க வந்ததினால், ஜன அடர்த்தி அதிகமானதன்றியில் தேசாதேசத்தின் திரவியமும் ஏராளமாக வந்து சேர்ந்திருக்கிறது. எந்தப் பெரிய வீடும் ஏழடுக்குள்ள பெரிய மாடி வீடாகவிருந்தாலும், ஒடு. வீடுகளில் பகல் காலத்திலும் விளக்குகள் இல்லாமல் பிரவேசிக்கக்கூடாத இருட்டாக விருக்கின்றன. அதோடு கூட மலமூத்திராதிகள் வெளியில் போக வகையற்றுப் பெரிய கிணறுகளைப் போல பாய்காலுக்களைக் கட்டிப் பல நூற்றாண்டுகளாக அதில் நிரப்பிவருகிறதினால் நாற்றம் அதிகரித்து வியாதிக்குக் காரணமாகவிருக்கிறது. மேலும் இந்தக் காசியில் மூன்றுவித கஷ்டங்க ளிருக்கின்றன. அதாவது, ராண்டி, சாண்டி, படீல் என்பவைகளே. ராண்டி—என்பன விதவைகள். அதாவது இந்தக் காசிக்ஷேத்திரம் மஹா புண்ணிய ஸ்தலமாகையால், இவ்விடத்தில் வந்து கங்கா ஸ்நானம் செய்தும் விச்வேசுவருடைய தரிசனம் செய்தும் காலம் கழித்தால், இன்னமொரு ஜன்மத்துக்காவது அழியாத சுமங்கலிகளாக விருக்கலாமென்று புராணவிதி இருப்பதால், குவாலியூர், டில்லி, காஷ்மீரம், குஜராத்தி, பூனா, சத்தார் முதலான தேசங்களின் பாலிய விதந்து ஸ்திரிகள் பிதாமாதாக்களிடம் சொல்லிக்கொள்ளாமலும், அண்ணன் தம்பி மனைவிமாருடன் சண்டையிட்டுக்கொண்டும், இந்தக் காசிக்கு ஓடிவந்து விடுகிறார்கள். இப்படி வரும் அநாதரவான ஸ்திரிகள் இந்தக் காசிக்கு வந்தவுடனே பண்டாக்களென்னும் கங்கா புத்திரர்கள் கையில் சிக்க, அவர்கள் பிதுர், பர்த்தா சிராத்தங்களைச் சிலநாள்வரையில செய்வித்து, பிறகு கெட்ட நடவடிக்கைகளுக் குட்படுத்தி விபசாரிகளாக்கியும், தமது பத்னி மக்களுக்கு வேலைக்காரிகளாக்கியும் விடுகிறார்கள். பண்டாக்களுடைய மனைவிமார்கள் அந்தப்புரங்களிலிருந்து இராணிவாசிகளாக விருப்பதால், அவர்களுக்கு இந்த விபசார விதந்து ஸ்திரிகள்தான் வேலை செய்துவருகிறார்கள். இந்தக் காசி க்ஷேத்திரம் மஹா புண்ணிய க்ஷேத்திரமாகையால், விபசாரத்தைத் தோஷமாகப் பாராட்டக்கூடாதென்று சிலர் சொல்லுகிறார்கள். இது என்ன நியாயமோ தெரிய

வில்லை? ஆகையால், பரிசுத்தத்தையும், பரமேசுவரருடைய பக்தியையும், இயற்கையாக விரும்பும் இத்தேசத்தார் இந்தக் கெட்ட வழக்கத்தைக் கட்டாயமாக நின்று தடுத்தால், நூற்றுக்கணக்கான பாலிய விதந்து ஸ்திரீகள் பரிசுத்தமுள்ளவர்களாகிப் பரத கண்டத்தைப் பெருமைப் படுத்துவார்கள். இரண்டாவது சாண்டி=என்பன விருஷபங்கள். அதாவது அநேக பக்திமான்கள் நல்ல விருஷபங்களை வாங்கி விசுவேசுவரருக்கு விட்டுவிடுவதனால், அவைகள் ஒவ்வொரு சந்தியிலும் நூற்றுக்கணக்காக நின்றுகொண்டு நடக்கப்பட்டவர்களுடைய கைகளிலிருக்கும் பண்டு பலாதிகளைப் பிடுங்கித் தின்று வருத்திவிடுகின்றன. மூன்றாவது படீல்=என்பன படிகள். எந்தக் கட்டத்துக்குப்போனபோதிலும் பல அடுக்குள்ள படிகளை ஏறி இறங்கிப் போகவேண்டும். அவைகள், நடந்து நடந்து தேய்ந்து சற்றுத் தப்பினால் விழுந்து காயப்படுத்தும்படியா யிருக்கின்றமையால், காலத்துக்குக் காலம் சித்தாரிகளால் கொத்து வைத்தல் நலம். இத்தியாதி சில குறைவுகளிருந்தபோதிலும், இந்த ஆச்சரியமான பட்டணத்தை அனைவரும் கொண்டாடத்தக்கதென்று அங்கிலேயரே சொல்லுவார்கள். இந்தக் காசிப்பட்டணத்தின் பெரிய மெத்தைகளின்மீது ஏறிப்பார்க்கில் எங்குப் பார்த்தபோதிலும் மாடமாளிகை கூட கோபுரங்களும், (அவற்றின்மீது) பஞ்சவர்ணக் கிளிகளும், பல வர்ணப் புராக்களும் பறந்து வந்து பாடியாடி நடித்து ஆநந்த மூட்டுவதன்றியில், எப்படிப்பட்டவர்களும் பிராதக் காலத்தில் கங்கா ஸ்நாநம் செய்து, அழகிய செந்தூர திலகமிட்டு, ஒரு கையில் கங்கையின் தீர்த்தத்தையும், ஒரு கையில் வில்வம் புஷ்ப முதலானவைகளுடன் எதிரில் காணப்படும் அநந்த ஆயிர லிங்கங்களுக்கு கங்கையின் ஜலத்தைவிட்டுப் புஷ்பங்களைப்போட்டுக்கொண்டும் பயபக்தியுடன் போவதன்றியில், எந்தக்கோயில் மூடப்பட்டிருக்கிறதோ அந்தக் கோயிலின் வாசற்படியிலாவது கங்கை ஜலத்தையும், புஷ்பங்களையும் போட்டு, சுத்தியாகவும் சுந்தர முகத்துடனும் பயபக்தியுடனும் போகும் காக்ஷியைப் பார்ப்பவருக்கே பிரத்தியக்ஷமாகுமேயன்றி எழுதுவதனால் முடியாது. மேலும் பெரும்பான்மையான சூத்திரர்களும் மாமிச பக்ஷணத்தைவிட்டுச் சுத்தமுள்ளவர்களாகவிருக்கிறார்கள். ஆகவே இங்கேத் துளசிமணிகளைத் தரித்த கோபாலரிடத்தில் சகலஜாதியாரும் ஜலத்தை வாங்கி ஸ்நானபானத்துக்கு உபயோகிக்

கிறார்கள். அன்றியும், தரும அன்னசத்திரங்கள் அறுபதுக்கு மேலிருப்பதனால் அன்ன தரித்திரமென்பதே கிடையாது. ஆனதுபற்றியே இது ஆநந்தபுரி என்று பெயர் பெற்றது. தூர்க்கா கட்டத்தண்டை நாம் தங்கியிருந்த வீட்டுக்காரராகிய ஸ்ரீ இராமாசாஸ்திரிகளும், வேறுபாய் அம்மாளும் எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததன்றியில், சுமார் நூறு பிராமணர்களுக்குச் சந்தர்ப்பணை செய்விக்கவேண்டுமென்று தூண்டியதைப்போலவே 1886ளு டிசம்பர்மீ 20உ பிராமண சந்தர்ப்பணை செய்வித்தோம். நாம் கொடுத்த தொகை கொஞ்சமானபோதிலும், அதைக்கொண்டு "பஞ்சபக்குவான னம்" பலகாரங்களுடன் நூறு பிராம்மணர்களுக்கும் திருப்திகரமாகச் செய்வித்தார்கள். பஞ்சபக்குவான்ன மென்னவெனில், புளியோதரை, சர்க்கரைப்பொங்கல், தயிர்ச்சாதம், காரச்சாதம், கசப்புச்சாதம் என்றுதி பெயர்களால் வெகு பக்குவமாகவும், ருசிகரபோக நியகரமாகவும் செய்ததன்றியில், பேடா, பூடா, பூந்தி, வடைமுதலான மிட்டாய் வகைகளையும், காய்கறி கிரைவகைகளையும் வெகு ருசிகரமாகச் செய்து திருப்திகரமாக்கினார்கள். இந்தச் சந்தர்ப்பணத்தில் வேத வேதாந்தங்களைக் கற்றுத்தெளிந்த வயோதிக வைதிகரான பிராம்மணர்கள் யாவரும் ஒரு வரிசையாக உட்கார, அநேக சுமங்கலி பிராம்மண ஸ்திரீகள் ஒரு பக்கமாக உட்கார, நமக்கும் ஒரு பக்கத்தில் இலைகளைப்போட்டார்கள். இதனால் இங்கே திருஷ்டி தோஷமில்லைபோலத் தோன்றுகிறது. மஹா உத்தமோத்தமர்களான பிராம்மணர்கள் புசிக்கும்போது நாம் அருகிலிருக்கக்கூடாதென்று வேறுமறைவான இடத்திற்குப்போய் உட்கார்ந்தோம். உடனே வேதியர்கள் பிரம்மாநந்தமே பொழிவதுபோல் சாமவேதசுரங்களையும், பாட்டுகளையும் அரைமணி நேரம் பாடிய பிறகு சாப்பிட்டார்கள். சாப்பிட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் நான்கு அணு தக்ஷிணையாகக் கொடுக்க அவர்கள் அதிகதிருப்திகரமாகப் பெற்றுக்கொண்டுஆசிர்வதித்துப் போனார்கள். இந்தக் காசிப்பட்டணத்தில் வேத வேதாந்தங்களை முற்றுமறிந்த வித்வசிரோன்மணிகளும், அநேக வேத பாடன பாடசாலைகளும் இருக்கிறதன்றியில், "காசிவர்த்தமானம்" "பண்டிதன்" என்னும் தேசபாஷா பத்திரிகைகளையும் பிரசுரம் செய்து வருகிறார்கள். மேலும் பல பத்திரிகைகளை வாசித்து விருத்தி யடையும்படியான வாசகச் சாலைகளும் அநேக மிருக்கின்றன. நாம் தங்கியிருந்த தூர்க்கா

கட்டத்தண்டை, மஹா புத்திமான்களாலும், பெரிய மனுஷர்களாலும் பொது நலத்தைக் கருதி "சர்ஜன சமாஜம்" அல்லது, காசி வர்த்தக வாசகச் சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் அநேக சுதேச பாஷா புத்தகங்களும், பத்திரிகைகளும், சில அங்கிலேய பாஷா புத்தகங்களும் பத்திரிகைகளும் வைக்கப்பட்டுப் பிரதிதினமும் அநேக சுதேசிகள் வந்து படித்துப்போவதன்றியில், பிரதி வாரந்தோறும் உபந்நியாசங்களையும் செய்து வருகிறார்கள். இந்தச் சபைக்கு நாம் இரண்டு மூன்று தடவை போய்ப் படித்துக்கொண்டு வந்ததில், அந்தச் சபையின் காரிய நிர்வாக சபையார் எம்மை நோக்கி இராஜாங்க விஷயமான சில கேள்விகளையும், தக்ஷிண தேசத்து மதவிஷயமாகச் சில கேள்விகளையும் கேட்டும், ஆரியர் மதத்தின் ஆதிஸ்திதியையும், மத்தியகால ஸ்திதியையும், தற்கால ஸ்திதியையும் பற்றி ஓர் உபந்நியாசம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். இந்தச் சபையார்கள் பெரும்பாலார் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களும், சாஸ்திர நிபுணர்களுமாக விருப்பதைப்பற்றி பம்பாயைச் சார்ந்த சட்ட நிருபண சபையைச் சார்ந்தவரும், ஐகோர்ட்டு ஜட்ஜியும், மஹா வித்வ சிரோன்மணியுமாகிய ஹானரெபில் மஹாதேவ கோவிந்த ராநெடி M. A., B.L., என்பவரும் இந்தச் சபையில் உபந்நியாசம் செய்து போனார். இப்படிப்பட்ட இடத்தில் சொற்பமாக இங்கிலிஷ்பாஷையையறிந்த நாம் உபந்நியாசம் செய்யத்துணிவது சாத்தியப்படாதென்று தடுத்தும், அந்தச் சபையார் கேளாமையால், 1882௵ டிசம்பர்மீ 20உ உபந்நியாசித்தோம். அந்த உபந்நியாசத்தினால், இந்த ஆரியர் வேதத்தின் பெருமை இன்னதென்றும், அது ஆதிகாலத்தில் இருந்த ஸ்திதியையும், மத்திய கால ஸ்திதியையும், தற்கால ஸ்திதியையும், புராணங்கள் பிறந்த காரணத்தையும், அவைகளால் உண்டான சாதக பாதகங்களையும், இப்போது இத்தேசத்தின் பல மதங்களின் கருத்துகளையும் முக்கியமாகத் தென்தேசத்தில் அவதார புருஷர்களாகத் தோன்றின நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலான பக்தி சிரேஷ்டர்களுடைய கிரந்தங்களினால் தக்ஷிணதேசம் சீரும் சிறப்பும் பெற்றதையும், சாங்கோபாங்கமாகச் சொன்னோம். எல்லாரும் கேட்டுச் சந்தோஷித்துச் சிலாகித்ததன்றியில், இராஜாங்க விஷயமாக (முக்கியமாக) ஏழைக்குடியானவர்களுடைய கஷ்ட நிஷ்டூரத்தை நீக்கக் கல்கத்தா காங்கிரஸ் சபையில் (எம்மை) காசி[illegible]

க்ஷேத்திரக் குடியானவர்களுடைய பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இதனால் நமது இந்துதேசத்தாருக்குள் தேசாபிமானம் விருத்தியாகிக் காசிப் பட்டணத்துக்கு வெகு தூரத்திலிருக்கும் கோயமுத்தூர் வாசியாகிய எம்மிடம் அவர்களுக்கு நம்பிக்கையுண்டானது ஆச்சரியம். அந்த எமது உபந்நியாசத்தைக் கேட்க அந்தக் காசி க்ஷேத்திர வாசிகளாகிய அநேக பண்டிதர்களும் பெரிய மனுஷர்களும் வந்திருந்தார்கள். அந்த உபந்நியாசசாலத்தில் (பெனரீஸ் காலேஜ்) காசி கலாசாலையில் ஸமஸ்கிருத பாஷா பண்டிதரும், சாங்கிய சாஸ்திர நிபுண சிரோன்மணியும், அரபி, பார்சி, ஹிந்துஸ்தானி, இங்கிலீஷ்பாஷைகளை நன்கறிந்தவருமாகிய ஸ்ரீ பிரம்மஸ்ரீ இராமமிஸ்ரி சாஸ்திரி சுவாமிகள் சபாநாயகராக வீற்றிருந்தார். மேற்படி சபையின் தலைவரும், விஜயநகரம் ஸமஸ்தானம் மாஜி மந்திரியுமாகிய பண்டிதர் இராமச்சந்திரராவ் நாது அவர்கள், காரியதரிசி பாபு சன்னுலால்ஜீ ஜோதிஷியவர்கள், உதவி காரியதரிசி விஷ்ணுபாஜி ராஜாவாடியவர்கள், மானேஜர் சவுலராமபாலகிருஷ்ண சர் நாயக்கரவர்கள், டி. பிளீடர் பண்டிதர் சங்கரநாதவர்கள், பெனரிஸ் காலேஜ் முகந்தாசாரவர்கள், வசுதேவராவ் கார்தேயவர்கள், கோவிந்தராவ் நாது அவர்கள், சவுகார் காசிநாத் பண்டுஜஞர்கரவர்கள், பாபு மோஹனலால்கதரி, டாக்டர் பலவந்தராவ் சாஹிபவர்கள், கிருஷ்ணராவ் நாயரவர்கள், அமதாபாத் சோட்டாலாலவர்கள், நரோத்தம தாசவர்கள், ஸ்ரீதரராவ் படோத்கர், பண்டிதர் இராஜாராம சாஸ்திரி டொங்காரவர்கள், பண்டிதர் தாமோதரதேவ் அவர்கள், கோவிந்தராவ் பிங்கலேயவர்கள், விஜயநாதராவ் தேசபண்டிதரவர்கள், வில்லாலராவ் சர் நாயகவர்கள், பாலகிருஷ்ணராவ் ஜோதிஷி, டோண்டிராஜராவ், சதாசிவராவ் மசாஹோத்ரி, கோபால கிருஷ்ணர் முதலான பெரிய மனுஷர்களும் வந்து கேட்டு ஆநந்தித்தனர்கள். சபாநாயகர் உபந்நியாசத்தின் கருத்தை ஹிந்துஸ்தானி பாஷைக்காரருக்கு அந்தப் பாஷையில் விவரமாகச் சொல்லி வியந்துகொள்வதாகவும், உபந்நியாசகருக்கு சபையார் வந்தனம் சொல்லி வாழ்த்த வேண்டுமென்றும் சொன்னார் பிறகு காசி சமஸ்கிருத காலேஜ் பாலமுகத்தாசாரியரும், காரியதரிசி பாபு சன்னுலாய் ஜோதிஷியவர்களும், டி. பிளீடர் பண்டிதர் சங்கரநாதவர்களும் உபந்நியாசத்தின் பெருமையையும் உபயோகத்தையும்பற்றி இங்கிலீஷில்

புகழ்ந்து பேசிச் சபையார் செலவில் சந்தனபுஷ்பமாலை தாம்பூலாதிகளைக் கொடுத்து எம்மைப் பிரதிநிதியாக அனுப்பிய கோயமுத்தூர் மகாஜனங்களையும் கொண்டாடினார்கள்.

மேலும் அந்தச் சபையார்கள் நாம் காசி க்ஷேத்திரத்திலிருந்த வரையில் அவர்களுடைய மானேஜரைக்கொண்டு அந்த மகாக்ஷேத்திரத்தில் நாம் கண்டு அதிசயிக்கத்தக்க காக்ஷிப்பொருள்களைக் காணும்படி பல இடங்களுக்குக் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டி ஆநந்த மூட்டினார்கள்.

அலஹபாத்தாகிய பிரயாகையில் நாம் தங்கி இருந்த இடத்தில் பார்வதிபாயம்மாளுடைய குமாரத்திக்குப் பிடித்திருந்த பேயை யோட்டியதாக முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா? இந்தக் காசிப்பட்டணத்திலும் நாம் தங்கியிருந்த இடத்திலிருந்து எமக்கு வேண்டிய சகாயத்தைச் செய்து வந்த பாலிய விதந்துவாகிய வேணுபாயம்மாளுக்கும் (1885ளு டிசம்பர்மீ 21உ இராத்திரியில் மேல்மாடியில் படுத்திருக்கும்போது) பூத பிசாசு ஆவேசம் வந்து அதிக ஆர்ப்பாட்டம் செய்தனள். அது சங்கதியை உடனே நமது டாக்டர் வந்து சொல்ல, நாம் போய்ப் பார்த்ததில் இந்த ஆவேசம் பிரயாகையில் வந்த மாதிரியாக இராமல், ஆட்டபாட்டங்களோடு வந்து அவதிப்படுத்தியது. அந்த அர்த்த இராத்திரியில் வேப்பிலையு மகப்படாது. அகப்பட்டாலும் அந்தப் பேயை யோட்ட மந்திரமும் தெரியாது. அந்த மந்திரமிருப்பதாகவும் நமக்கு நம்பிக்கையுமில்லை; ஆகவே, அக்கம்பக்கத்தாருடைய மனோதிருப்தியின் பொருட்டு, மஹாதேவனாகிய மஹாத்துமாவின் மகிமையை மனதில் மனனம் செய்து எமது மூந்தானையை அஷ்டமாதின் முகத்துக்கு நேரே வீசினோம். வீசவே, அந்த மங்கையானவள் தனக்கு இயற்கையாகவமைந்த அதிசயிக்கத்தக்க அழகு முகத்தையும், இயற்கையாகப்பெற்ற இனிய சாந்த குணத்தையும், மாற்றிக்கொண்டு ருத்திர முகமாகவும், சிறுங்குங் குணமாகவுங்கொண்டு விழிகளை உருளச்செய்து எம்மை முறைத்துப் பார்த்து கைகளை ஏறெடுத்து மெய்யைவிதிர்த்து மேக கர்ச்சனையைப்போல் சப்தித்து அழுதாள். இந்தக்கோர ரூபத்தைப் பார்க்கும் எவருக்கும் பயத்தையும் பச்சாதாபத்தையும் கொடுத்தது. பிறகு பரமேசுவரருடைய தியான மந்திரத்தினால் க்ரமேண நீங்கியது. பிறகு இந்தம்மைக்கும், மந்திரத்

தகடு கட்டும்படி கேட்டுக்கொண்டார்கள். இப்படி இந்த பாலிய விகந்துகளுக்கு இந்தப்பிடையான வியாதி பலதடவைகளில் வந்து வருத்துவதாகத் தெரியவருகின்றது.

நாம் காசிக்ஷேத்திரத்தி லிருந்தபோது செய்த பிரார்த்தனை.

ஓ! கம்பீரமுள்ள காசிக்ஷேத்திரமே! உனது பெருமையையும் புகழையும் பல புத்தகங்களின் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும் பலவிதங்களாகப் படித்துப் படித்து நின்னைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கவேண்டுமென்று பதினைந்து வருஷகாலங்களாகப் பலவித பிரயத்தனங்கள் செய்து வந்தோம். இன்றுதான் பலன் கிடைத்தது. படித்த பாவனையாகவும், கேட்ட குறிப்புகளுடனும் காணக் கொடுத்துவைத்தோம். கணக்கற்ற ஜனங்கள் யாது காரணத்தைக் கருதி, கடும் பிரயாசைப்பட்டு நின்னிடம் வருகிறார்கள்? யாது பயனைக் கருதி எண்ணிறந்த ஜனங்கள் நின்னிடம் வருகிறார்கள்? நினது பெருமைபெற்ற மந்திரமாளிகை மச்சுவீடுகளைப்பற்றியா? நின்னிடத்தில் பிரபாகரர்களைப்போல் பிரகாசிக்கும் சுவர்ணகோபுரமண்டப மந்திரங்களைப்பற்றியா? நின்னிடம் குடிகொண்டிருக்கும் கணக்கற்ற காசுபணம் கனக திரவியங்களைப் பற்றியா? நின்னிடம்வசித்துவரும் சுந்திரமுகமும் சுகிர்தகுணமும்உள்ளமுழுடையஸ்திரீபுருஷர்களைப்பற்றியா? நின்னிடம் அகப்படும் சந்தனம் புனுகு கஸ்தூரி கலவை தாம்பூலாதிகளைப்பற்றியா? நின்னிடம் விளையும் நிகரற்ற நறுமலர் நந்தவனங்களைப்பற்றியா? நின்னிடத்திற் செய்யப்படும் நிகரற்ற சரிகை பித்தளை சால்வை செங்கல்லாதிகளைப்பற்றியா? நின்னிடத்தில் நெடுநாளாக நிலைபெற்றிருக்கும் நான்குவேதம் ஆகமாவ வியாகரண நடன அலங்கார சிங்காரகிரந்தகலாசாலைகளைப்பற்றியா? நின்னிடம் நடித்து நாடெங்கும் புகழ் பெறும் நாடகப் பெண்களைப்பற்றியா? நின்னிடத்தில் நவநவமாக ஜனிக்கும் கவிகள், கலைக்கியானிகளைப்பற்றியா? நின்னிடத்திலகப்படும் நாவுக்கு ருசியான நளபாக நவரச பதார்த்தங்களைப் பற்றியா? இல்லை! இல்லை!! ஒருகாலுமில்லை. கடல்ஞாலத்தார் தாம் தெரிந்தும் தெரியாமலுஞ் செய்த பாவ கர்மங்களைப் போக்கிக் கொள்ள வல்லவோ! ஆம்! பாவ தாபத்தினால் பரதவிக்கும் பரதகண்டத்தின் பல பாகத்தார்

பல்லாயிரம் பல்லாயிரம் ஜனங்களாக வந்துகொண்டே யிருக்கிறார்கள்! ஆம்! பாவ தாபங்களைப் போக்கிக்கொண்டு பாவனராகப் பிரகாசிக்கப் பல்லாயிரம் பல்லாயிரமாக ஜனங்கள் நின்னைச்சார்ந்த வருணா கட்டம், இராஜ கட்டம், திரிலோசன கட்டம், துர்க்கா கட்டம், பஞ்சகங்கா கட்டம், மணிகர்ணிகா கட்டம், தசாசுவமேத கட்டம், கேதார கட்டம், அனுமகட்டம், அசிகட்டம் முதலான அநேக கட்டங்களில் நின்று கங்கையில் மூழ்கி கருணாநிதியாகிய பரமேசுவரனைப் பலவிதமாகப் பிரார்த்திக்கிறார்கள். ஆகவே, அடியேனும் அடியேமைச் சார்ந்தவர்களும் எமது பாவங்களைப் போக்கிக்கொள்ள உதவி செய்வாய்! காசியாகிய நீ ஓர் இரமணியமான க்ஷேத்திரம். நின்னைத் தழுவிப்போகும் கங்கையும் ஓர் கம்பீரமான நதி, நீங்களிருவரும் தேவர்கள் அல்லர்; ஆகவே பாவதாபங்களை நீக்க உங்களால் முடியாது. இது உண்மை. ஆனால் உங்களிருவருடைய மகத்துவத்தையும், மகத்துவம் பெற்ற உங்களிடம் வந்த மண்டலத்தின் மாயமோகங்களையும், மோசபாச பாவகாரியங்களையும் நீக்க மகா புருஷோத்தமனாகிய பரமேசுவரனைப் பிரார்த்தனை செய்தால் அந்தப் பிரார்த்தனைகளால் மக்களின் பாவதாபங்கள் போகுமென்று முன்னோர் சொல்லியிருப்பதால், மகத்துவம் பொருந்திய நீங்கள் எங்களுக்குச் சகாயிகளாக நின்று உதவி செய்யுங்கள். உங்களிடம் வந்து வரும் வித்துவான்களென்ன? கவிகளென்ன? ஞானிகளென்ன? தபசிகளென்ன? எதிகளென்ன? ஜகத் சம்பந்தமான சகல சுகதுக்கங்களை விட்டு வந்த சன்னியாசிகளென்ன? இவர்களுடைய முகார விந்தங்களில் விளங்கும் பிரம்ம தேஜஸ்ஸைக் கண்ட மாத்திரத்தால் எமது பாவதாபங்கள் நீங்கிப் பரிசுத்தராக்கத் தூண்டுகோல்களாக விருக்கின்றன. இப்படிப்பட்ட மஹா புருஷர்கள் வசிக்கப் பெற்ற உங்கள் பெருமையை என்னென்று சொல்லுவேன்! நீங்கள் வாஸ்தவமாக மகத்துவம் பெற்ற படைப்புக்கள். ஆகையால் உதவி செய்யுங்கள்.

பிரம்ம பிரார்த்தனை.

ஓ! பாவதாபங்களைப் போக்கும் புருஷோத்தமனே! நின்னை இந்தக் காசி க்ஷேத்திரத்தை யடுத்த கங்கைக் கரையாகிய பிரம்ம கட்டத்தில் நின்னை ஸ்துதிக்கப் பாக்கியனு

னேம்! கம்பீரம் பொருந்திய கங்கை நதியின் கரைதுறையாகிய இந்தக் காசிக்ஷேத்திரமும், இதில் இதோ என்முன் நிற்கும் பிரம்மாண்டமான கோயில்களை, கோபுரங்கள், மண்டபங்கள், மந்திரங்கள், மாளிகைகள் மாதிரி மாதிரியான மாடங்களாலும், மகத்துவமுள்ள சுவர்ண கலசங்களாலும் பலவித விநோதங்களாகப் பிரகாசிக்கின்றன. சுந்திர வடிவும், சுகிர்த உல்லாசமான ஸ்திரீகளும், பிரம்மதேஜசும், பிரம்மபாராயணமும் உடைய புருஷசாதுக்களும் பரபரப்புடன் வந்துகொண்டும் போய்க்கொண்டு மிருக்கிறார்கள். பஞ்சவர்ணமுள்ள பலவிதக் கிளிகளும், பார்க்கப் பார்க்கப் பாசங் கொள்ளத்தக்க புறாக்களும் படிக்குப்படி குதித்துக் கூடி நாடி பாடிப் பறந்து வருகின்றன. பாலசூரியன் தனது பலகலைகளைப் பார்க்கும் பலபதார்த்தங்களின்மீது படச்செய்து அப்படிப்படும் பிரகாசத்தினால் பதார்த்தங்கள் யாவும் பலகோடி சூரியர்களைப் போல் பிரதிபிம்பித்துப் பகட்டுகின்றன. அருகில் நிற்கும் விருக்ஷங்கள் யாவும் விகசிதமான நறுமலர்களால் நடிக்கின்றன. இப்படி இந்தப் பிரபஞ்சப்பொருள்கள் யாவும் பலவிதமாகப் பாடி யாடி நாடி நடித்தாலும், அவைகளால் எமது பாவதாபங்கள் போகுமென்று தோற்றவில்லை. யாதோ ஒருவஸ்துவினால் கிஞ்சிற்றுப் பாவம் போகுமென்று எண்ணினால், மற்றோர் வஸ்துவினாலதிகம் ஜனிக்குமோவென்று பயம் ஜனிக்கிறது. ஆகவே எந்த வஸ்துவாகிய ஒருவஸ்துவை அண்டினோருக்கு எவ்வித பயமும் ஜனிக்காதோ! எந்த வஸ்துவாகிய ஒருவஸ்துவை நாடினோருக்கு எவ்வித பாவதாபங்கள் நாடாதோ அந்தவஸ்து நீயேயாகையால் நாம் உன்னை நாடினேம்! உன்னை யாம் எப்போது நாடினேமோ அப்போது நாம் நின்னவன், நீ எம்மவன், ஆகவே, எம்மை நாடிய எம் குலதெய்வமே! எம் மனம், வாக்குங் காயத்தால் தெரிந்து செய்த பாவங்களையும், தெரியாமல் செய்த பாவங்களையும் போக்கிப் பாவனராக்கி, பரமஞானிகளுடையவும் பரமபக்தர்களுடையவும் சுகாநந்தநிலை யெப்படிப்பட்டதோ, அப்படிப்பட்ட சுகாநந்த நிலையைத் தரும்படி பக்திபூர்வகமாகப் பிரார்த்தித்து இந்தப் பிரம்மாண்டமான கங்கையை நினது ஸ்வரூபமாகப் பாவித்து நினக்குள் முழுக அருள்புரிவாய்! எப்படிப் பிரபஞ்ச கங்கையில் முழுகினோருக்குத் தேக சம்பந்தமான மலமூத்திராதி அழுக்குகள் நீங்கிச் சுத்தியாகுமோ, அப்படியே பரலோக கங்கையாகிய நின்னில் முழ்குவோருக்கு மனோ சம்பந்தமான

பாவதாபாதி அழுக்குகள் நீங்கிப் பரிசுத்தமான பொன்மய மாவது உண்மையல்லவா! ஆகவே, இதோ நின்னில் மூழ்கு கிறேம். ஓம் ஜெங்கெங்கா! ஓம் ஜெக்காவி! ஓம் ஜெ சச்சிதா நந்த ஹரிః! ஓம் பிரம்ம கிருபாஹி கேவலம். ஓம் தத் சத். ஓ கிருபாகர! அடியோரது பாவதாபங்களை நீக்குவதைப்போ லவே அடியாளைப்பெற்று வளர்த்த தாய் தந்தை தாதா முத் தாதா பாட்டி முப்பாட்டி மற்றும் இருபத்தொரு தலைமுறை பிதுர்தேவதர்களாகவிருக்கும்பெரியோர்களுடைய பாவதாபங் களையும் நீக்குவாய்! அடியோருடைய ஆசாரியர்களுடையவும், ஆரிய மஹரிஷிகளுடையவும் பாவதாபங்களையும் நீக்குவாய். கடைசியாக எமது தேசத்தின் சகல ஜனங்களுடையவும் பாவதாபங்களையும் நீக்கிப் பரிசுத்தராக்குவாய்! ஓம் தத் சத்.

பஞரிவ்வ (காவி) பக்ஷிகளுடன், பிரம்மோபாஸியின் (நமது) சல்லாபனை (அலங்கார கற்பனை).

காசினியிற் சிறந்த காசிப்பட்டணத்தில் ஒருநாள் காலை நடுங்குளிரால் வருந்திக் காலை வந்தனத்துக்காக வீட்டின் ஐந் தாவது மாடி (மெத்தையின்) மீது ஏறி அதினின்று காசிப் பட்டணத்தின் கம்பீரமான கட்டிடங்களையும், மாடமாளிகை கூடகோபுரங்களையும், அந்த மாடமாளிகை மச்சுவீடுகளின் மீது மங்களகரமான முகாரவிந்தங்களுடைய மாதர்சிகா மணிகள் தம் பொன்மணிகள் (அருணோதயத்தின் பிரகாசத் தினுல் பிரதிபலித்து) ஒளிவிட்டுக் குலுங்கநடந்து உல்லாச மாக உலாவி வரவும், அவர்களுக்குச் சமீபத்தில் (காசிப்பட்ட ணத்தில் பெருந்த) பலவித புருக்களும், பஞ்சவர்ணக்கிளி களும் கும்பல் கும்பலாக வந்து கூடிப்பாடி நடிக்கவும் கண் டதிசயித்துப் பிரதாபத்தோடு அப்போதுதான் பிறந்து பிர காசிக்கும் பாலசூரியன்முன் பத்மாசனம் வைத்துட்கார்ந்து பிரம்மத்தியானம், பிரம்ம பிரார்த்தனைசெய்து பேரின்பத் தையடைந்து ஆநந்தித்துக்கொண்டிருக்கையில், இரண்டு அழ கிய பக்ஷிகள் எமக்கு அதிகசமீபத்தில் வந்து தங்கின. அவற் றில் ஒன்று இந்திர நீலாதி வர்ணங்களால் பிரகாசிக்கும் பஞ்ச வர்ணக்கிளி. மற்றொன்று பாலினும் வெளுத்த (லெக்கா) பெட்டைப்புரு. இவைகளுடைய சுந்தரத் தன்மையைப் பார் க்கப் பார்க்கப் பசந்தாக விருந்தன. பார்வைக்கே இவ்வளவு அழகாகவிருக்கும் இப்பக்ஷிகளின் பேச்சுகள் எப்படியிருக்கு

மோமென்று எண்ணி ஏக்கத்தோடு அழைத்தேம். அவைகள் எம் ஏக்கத்தைக்கண்டோ, மற்றெந்த ஹேதுவைப் பற்றியோ பலநாள் எம்மோடு ஊடாடி உறவாடிப் பழகிய பக்ஷிகளைப் போல் ஓடிவந்து ஒன்று எமது வலது துடையின்மீதும், மற்றொன்று இடது துடையின்மீதும் உட்கார்ந்து, எமது முகத்தை யேறிட்டுப் பார்த்து, எமது பாலகன் பாலிகையைப் போல பால்வடியும் முகப்பாவனையைக் காட்டிற்று. நாமும் அவ்விதமாகவே பாவித்து, இருகரங்களால் தடவிக்கொடுத்து முத்தமிட்டு கொஞ்சிக்குலாவி "எம் கண்மணிகளே! நீங்கள் யாவர்? எங்கிருந்து வந்தீர்? எம்மீது உங்களுக்கித்தனை பிரியமேது? உங்களிருப்பிடமெங்கு? நீங்கள் ஜதை ஜதையாக (ஆணும் பேடையுமாக) விருப்பது சஹஜமாக விருக்க, இனத்துக்கொன்றாய் (தனித்தனியாய்) பிரிந்திருக்க வேண்டுவதென்னே?" என்றேம்; அப்போது பஞ்சவர்ணக்கிளி எம்மைப் பார்த்து, "ஓ பிரம்மோபாசியே! நான் பிறந்தவிடம் அவாசிகண்ணதாப மானசதீர்த்தம். நானும் என் கணவனாகிய ஆண் பக்ஷியும் கூடிக்குலாவி கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துக் காலங்கழிக்கக் கருதி ஒருநாளிரவில் நாங்கள் தங்கியிருந்த அசோகமரத்தின்மீது படுத்திருக்க, அம்மரப் பொந்தில் வதிந்துகொண்டிருந்த காலநேமி என்னுங் கொடிய சேடன் என் கணவனைக் கடித்துக்கொன்றான். நான் அதைப்பார்த்துப் பதைத்துப் பிராணனைவிட யோசிக்கையில், மானசதீர்த்தத்திலிருந்து ஒருசப்தம் ஜனித்தது. அஃதென்னவெனில்:—பதிவிரதையாகிய பஞ்சவர்ணக்கிளியே! நீ புருஷ சுகமறியாத பேதை. நீபிரபஞ்சத்தாருக்குப் பிரம்மக்கியானத்தைப்போதித்து,பாவப்பிணிகளை நீக்கித் திவ்வியதேசங்களிற்சென்று சஞ்சரித்து "சரசி" என்னும் பெயரைப் பெற்று, சுவர்க்காதி இன்பங்களிலும் சிறந்த சாஸ்விதாநந்த பதவியைப்பெறுவாய். இன்றுமுதல் நீ பார்வைக்குப் பக்ஷியாகத் தோற்றினும், நீ உண்மையில் தேவதூதி. நீ இனி உலக ஆசாபாசங்களையும், உன் இனத்தாரையும் விட்டும் ஏகாங்கியாகி உன்னைப்போன்ற தேவதூதிகளுடன் சேர்ந்து "ஏகமேவாத்விதீயத்தைப் படனஞ்செய்யும் பரமஞானிகளுடைய திருக்கூட்டத்தைச்சார்ந்து, உனது சரசவார்த்தைகளால் சாதுக்களை சந்துஷ்டியடையச் செய்வாய்"என்று பொருள்பட்டது. அன்றுமுதல் அந்த விதிப்படிச் செய்து பல திவ்யதேசங்களில் திரிந்து இந்தக் காவிரிக்ஷேத்திரத்திற்கு வந்தேன். இவ்விடத்திலிருக்கும் ஏரா

ளமான எம்மினத்தார் உலக நடனங்களில் உல்லாசராகி உயர்ந்த உப்பரிகைகளில் வதிந்துவரும் உத்ஸாகத்தால் ஏகாங்கியாகிய என்னை யாரும் சட்டைசெய்யவில்லை. நானும் அவர்களை நத்தாது எங்குப் பிரமத்தியானமும், பிரம்ம பாராயணமும் புலப்படுமோவென்று பெரிய கோபுரத்தின்மீதிருந்து பார்த்துக்கொண்டிருக்க, பிரம்ம கிருபாஹி கேவலம் என்னும் சப்தம் கேட்டுத் தங்களிடம் வந்தேன்" என்றது.

உடனே "லெக்காவென்னும் பேடைப்புறு எம்மைப் பார்த்து: "ஹே! பிரம்மோபாசியே! நான் பம்பா தீர்த்தத்தை யடுத்த ஓர் சம்பகாரணியத்திலிருக்கும் மதனகாமினியென்னும் மரத்தின்மீது எனது நாயகனோடு கூடிக்குலாவி கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சுபொரித்து வாழலாமென்றிருக்கச்சே "கூகைராஜன்" என்னும் பெயர் கொண்ட ஓர் பைரி பரபரப்புடன் பறந்துவந்து எனது புருஷனைத் தூக்கிக் கொண்டு பறந்துபோயிற்று. அதைக் கண்டு பதைத்து அந்தப் பைரியைத் துரத்திப் பதிவிரதாபலத்தினால் பலமடங்கு பலனைப்பெற்று இறகுகளால் தாக்கியடிக்கத் துறத்திக்கொண்டு போனேன். அந்த பைரி, பம்பா தீர்த்தத்திலிருக்கும் ஓர் முட்மரப்பொந்தில் புகுந்தது. அப்படிப் புகுவதற்குள் பிடித்தழுத்திய பிடியினால் என் புருஷன் பிராணன் நீங்கியது. இந்த ஏக்கத்தினால் இனி உயிர் துறப்பதே உத்தமமென்றெண்ணித் தீர்த்தக்கரையில் கண்ணீர்விட் டழுதுகொண்டிருக்க அந்தத் தடாகத்திலிருந்த அழகிய அம்சபக்ஷி வந்து: "என்னுருயிரே! என் குலக்கொழுந்தே! நீ அழுவதேதுக்கு? உன் கஷ்டமென்ன? உனக்கேதுக்கு இந்த வியாகூலம்?" என்று வினவ, நான் நடந்த நடவடிக்கைகளை நிகழ்த்தினேன். அப்போது அடிநடையில் அழகிய அம்சபக்ஷி என்னைத் தேற்றி, "என் அருமைக் கண்மணியே! நீ அழவேண்டாம். இதோ இந்த பம்பா தீர்த்தத் தலவாசி ஒருவர் பிரம்மயோக நிஷ்டராய் சம்பக மலர் விருக்ஷத்தினடியில் புலியாசனத்தின்மீது விற்றிருக்கிறார். அவர் இந்தத் தீர்த்தத்துக்கும் இதையடுத்த வனங்களுக்கும் தலைவர். இந்தத் தீர்த்தத்திலும், வனங்களிலும் வசிக்கும் பிராணியாதிகளுக்குச் சம்பவிக்கும் பிணி மூப்புச் சங்கடங்களைத் தீர்க்கச் சர்வ சன்னத்தராகவிருக்கிறார். இந்தத் தீர்த்த வாசிகளாகிய நமக்கு அவர் தந்தை. அன்றொரு வேடன் இந்த வனசஞ்சரியாகிய ஓர் மடமானைக் கொன்றது நிமித்தம்

அவனைச் சபித்து மறுபடியும் மடமானுக்குப் பிராண பிச்சை கொடுக்கச் செய்தார். ஆகையால், உன் குறைகளை யவரிடம் சொல்லும்" என்று அம்சபக்ஷி அறைந்து அப்புறம் போயிற்று. அம்சபக்ஷி சொன்ன அமிர்தம் பொழியும் அரிய வார்த்தைகளின்படி அந்தச் சம்பகமலர் விருக்ஷத்தினடிக்குப் போனேன். அங்குப் புலியாசனமும், தர்ப்பாசனமும், சமித்து, அக்னிகுண்டம், பிரம்மதண்டம், கமண்டலம் முதலானவைகளிருந்தனவே யொழிய, மஹா புருஷனாகிய தீர்த்தவாசியைக் காணேன். அந்தப் பெருமரத்தைச் சுற்றிப் பார்த்தேன். அதன் வலமிடமாக ஸ்திரவீணை, சரவீணை யென்னும் இரண்டு யாழ்க்கருவிகளுக்கு சப்த சுருதிகளைக்கூட்டி மரத்தில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஸ்திரவீணையானது, யாதொருவருடைய தூண்டுதலின்றி கேவலம் அங்கு வீசிய தென்றலாகிய மந்தமாருதத்தினால் மோதப்பட்டு மோஹன ராகத்தால் மறைவிதிகளை மொழிந்தன. அந்த மொழிகளின் கருத்து இது—"மண்ணுலகம் விண்ணுலகமென்று இரண்டுண்டு. மண்ணுலகத்தில் மக்கள் நரகர் வசிக்கிறார்கள். விண்ணுலகில் தேவர்கள், கின்னரர்கள் வசிக்கிறார்கள். மண்ணுலகின் மகத்துவமெல்லாம் மாயா சம்பந்தமானவை, என்றால் க்ஷணபங்குரமானவை. மண்ணுலகில் முடிசார்ந்த மன்னரும், மற்றுமுள்ளோரும் முடிவில் பிடிசாம்பலாவது சத்தியம். விண்ணுலகவாசிகள் சதா ஜகதீஸ்வரருடைய கிருபையில் மூழ்கி நித்தியசூரியர்களாகப் பிரகாசிப்பார்கள். ஆகையால், மண்ணுலக ஆசையை விட்டுவிடு. மண்ணுலகில் புருஷர் சதமல்ல, பெண்டிரும் சதமல்ல, பிள்ளைகளும் சதமல்ல, பொருள்களும் சதமல்ல, பிராணனும் சதமல்ல, எல்லாம் அவித்தை, எல்லாம் அஞ்ஞானம், எல்லாம் மாய்கை. இதை நம்பி மோசம் போகாதே! இதுவே போதனை. இதுவே படிப்பினை. இதுவே சாஸ்திரம். இதுவே சட்டம். இதுவே சத்தியமென்று துவனித்தது. இது இப்படி இருக்க:— ஒரு வானம்பாடிப்பறவை வந்து, சரவீணையில் கோற்கப்பட்டிருந்த மெட்டு மணிகளை களாக்கனிகளாகப் பாவித்துக்கொத்த, அதிலிருந்து ஆரபிராகம் ஜனித்தது. அதன் கருத்தாவது:—"ஓ அழகிய புருவே! நீயேன் உன் புருஷனுக்காக விசனப்படுகிறாய், உலக சம்பந்தமான உன் புருஷன் என்றைக்கிருந்தபோதிலும் சாகத்தானே வேண்டும்! நேற்று இருந்தவன் இன்று இல்லை யென்னும் பெருமையுடைய இந்த உல

கத்தில் விசனப்படுவது விந்தை! நீ வியாகூலப்படவேண்டாம். நீ சுகிர்த அலங்காரமுடைய ஜீவி. சாந்தம் என்பதே உருவாக வந்த ஜீவி. இன்னும் புருஷ சம்பர்க்கமறியாத பக்ஷி. ஆகையால் இன்றோடு நீ ஏகாங்கியாகிப் பல திவ்யதேசங்களுக்குச் சென்று பிரம்மக்ஞானிகளைத் தரிசித்து, இனி பக்ஷி ஜென்மமெடுக்காமலிருக்க பிரம்ம பிரார்த்தனை செய்து, பிரம்ம ஞாநியாகப் பிரகாசிப்பாய்" என்பதேயாம். அன்றுமுதல் சுத்த சந்நியாசியாகப் பல திவ்யதேசங்களைச் சுற்றிப் பிரம்ம நிஷ்டர்களைப்பார்த்துப் பரவசமடைந்து இந்தப் பனாரிஸ் பட்டணம் வந்தேன். இந்தப் பட்டணத்தில் பலகோடி புருக்கள் பிரபுக்களுடைய ஆதரணையினால் பெருமை பெற்று பெரிய மண்டப கோபுரங்களில் கூடிக்குலாவி வாழ்கின்றன. உலகப் பற்றுள்ள அவைகளை யான் சேர இஷ்டமில்லை. ஏகாங்கியாக ஆதோ நிற்கும் ஆலமரத்தின்மீது வீற்றிருக்க, பிரம்ம கிருபாஹி கேவலம் என்னும் பிரம்ம மந்திரம் காதில் விழுந்தமையால், தங்களிடம் வந்தேன்" என்றது. இந்த ஸ்திதியில் எம் மனது என்னமாயிருக்கவேண்டும். ஆநந்த பாஷ்பம் பொழிய அகமகிழ்ந்து அவ்விருபக்ஷிகளை இருகரங்களிலும் ஏறவிட்டுப் பார்த்து "ஓ! அழகிய பஞ்சவர்ணக்கிளியே! உனக்குச் சுசி என்று பெயரிட்டது எவ்விதத்திலும் தகும். உனது கொஞ்சு மொழிகளை எந்தப்பாஷையில் வர்ணிப்பேம். உனது தேக அழகை எந்தச்சொற்களால் சிங்காரிப்பேம். உனது மூக்கின் அழகை யெந்தமொழிகளால் முடிப்பேம். பாவ கருமங்களால் புண்பட்ட எம்கரங்களால் உன்னைத் தொடத்தகுமோ. நீ தேவருலகவாசி. நீ நினைத்தபோது நினது அழகிய இறக்கைகளால் பறந்து தேவர் லோகத்துக்கேகி, முமுட்சுகளாகிய முனிவர்களுடைய முகத்தை மலர்போல் எண்ணி, அவர்கள் சத்தியம் ஜொலிக்கும் செவ்விதழ்க்கனிகளை பருகித்தேக்கறிந்து தேகம் புளகாங்கிதம் கொண்டபிராணி! அப்படிப்பட்ட முகத்தை, மஹாபாவ இச்சைகளால் நிறைந்த எமது முகத்தால் மோதிப் பொய்களால் நிறைந்த உதடுகளால் முத்தமிட்டது அபசாரமே. இந்த அபராதத்தை க்ஷமிக்கவேண்டும். உன்னைச் சாதாரண கிளியாக மதித்தேம். நீயோ தேவலோக பக்ஷி. தேவதூதியைப்போல எமக்குத் தேவசமாசாரத்தைச் சொல்லவந்தாய். தேகக்கூண்டினால் மூடப்பட்டுத் தவிக்கும் ஹிருதயக் கிளியாகிய யாம் நின்னோடுவந்து நமது பேராநந்த பெரும்வள்ளலைத் தனியே துதித்துக் கொண்டாடுவதெப்படி?

உனக்குக் கூண்டுமில்லை, கட்டுமில்லை, பந்தமில்லை, சந்ததியில்லை. சரசமே உருவாகவந்து, சதானந்த யோகியாகவிருக்கிறாய். நாமோ தேகக்கூண்டினால் மூடப்பட்டு கண் மூக்குச் செவியாதி வலைகளால் வருந்தி, சம்ஸாரமென்னும் பறந்து வைரிகளால் துரத்தப்பட்டுத் தத்தளிக்கிறோம். இத்தன்மையான யாம் கடைத்தேறுவதெப்படி? உன்னைப்போல் பந்தங்களினின்று விடுபட்டு எதேச்சையாக எம்பெருமானைத் துதிப்பதெப்போதோ? ஏ! இனிய வார்த்தைகளைப்பேசும் இளங்கிளியே! நீ பிரம்ம லோகத்துக்குப் பறந்து போகும்படியான இறக்கைகளை உடைத்தாயிருக்கிறாய். எமக்கு அவ்வித சாதனங்களில்லை. ஆகையால், எம்மீது கிருபைகூர்ந்து எம்பெருமானிடம்போய், எம் கூண்டாகிய உலக பாசபந்தங்களைவிட்டு நீக்கும்படி சிபார்சுசெய்து, எப்போதும் எம்பெருமானை நாடும்படி செய்வாய். இப்படிச்செய்தால், உனக்குச் சுகிர்தமுண்டாகும். சிரேஷ்ட பதவிகிடைக்கும். சாந்தமே உருவாகவந்த சுகிர்தாலங்காரமுள்ள புறாவே! உனக்கேன் இந்த அழகு அமைந்தது? துல்லியவடிவான நீ மலர்ந்த மல்லிகையைப்போலிருக்கிறாய்! உனது சதா சாந்தகுணத்தினால் உனதுதேகம் இவ்வளவு அழகாகவும், சுசீலமாகவுமிருக்கிறதோ? அல்லது நீ தேவலோகத்தில் சஞ்சரிப்பதனால் இவ்வளவு சிறப்பாகத் தோன்றுகின்றாயோ! நீசம்பகாரணியத்தில்பிறந்ததினால் உனது சப்பட்டைகள் சண்பகமலர்களைப்போ லிருக்கின்றனவோ! உனது கண்ணழகென்ன? உன்கால் அழகென்ன? உன்கண்டத்தின் அழகென்ன! நீதேவலோகத்துக்கு அடிக்கடி பறந்துபோய், தேவ சமாசாரத்தைக் கொண்டுவந்து உலகத்தாருக்கு விரிப்பதனால், இவ்வளவு சாந்தமும், இவ்வளவு சொரூபம், இவ்வளவு சுகிர்தமும், இவ்வளவு சுசீலமும் பெற்றாயோ! அந்தோ! அழகிய புறாவே! பரிசுத்தமும் துல்யமும் வெண்மையுமான உன்னைப் பாவகருமங்களால் பந்தப்பட்ட எமது கைகளால் தொட்ட அபராதத்தை க்ஷமிப்பாய்! நீ விண்ணுலகிலும், மண்ணுலகிலுமுள்ள உத்தம பதிவிரதா ஸ்திரீகளுடைய முகாரவிந்தங்களை மதித்து புருஷசம்பர்க்கமறியாத பரிசுத்த பாலிக கன்னிகைமார்களின் உதடுகளில் முத்தமிட்டு பிரம்மக்கியானத்தைப் போதிக்கும் பரமதேவ தூதி. அப்படிபபட்ட உன்னைப் பொய் விபசாராதி எச்சில்களால்நிறைந்தஎமது உதடுகளால் முத்தமிட்டது அபசாரமன்றோ! அந்த அபராதத்தையும் க்ஷமித்து, உன்னைப்போல் சுத்தவெண்மையான மனதும்

அழகான ஹிருதயமும், உண்டாகும்படி தேவலோகத்துக்குப் போய் பரமேசுவரனுக்குத் தெண்டனிட்டுக் கேட்டுக்கொண்டதாகச் சொல்வாய். நீ இறக்கைகளை உடைய ஜந்து. நினைத்த மாத்திரத்தில் தேவலோகத்துக்குப் போகக்கூடிய வல்லமை யுனக்கிருக்கிறது! மேலும், நீ கட்டுக்காவல் கூண்டு முதலான பந்தங்களைவிட்டு நீங்கியபக்ஷி. நாமோ தேகமென்னுங் கூட்டில் அடைக்கப்பட்டு கண் காது முதலான இந்திரிய வலைகளால் சிக்கித் தவிக்கிறோம். ஹிருதய பக்ஷியாகிய நாம் தனியே பறந்துபோகப் பலவிதமாகப்பிரயத்தினப்பட்டும், பந்துக்கள் முதலான பாசவலைகளால் எம்மைத்தடுத்து அடிமையாக்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த நிர்ப்பாக்கியதசையில் நாம் நின்னோடு எப்படித் தனியாகப் புறப்பட்டு வருவோம்? ஆகையால் அன்புள்ள பக்ஷியே! நீயாகிலும்போய் எம் பாப தாபங்களை நீக்கும்படி நமதப்பனிடம் தூது சொல்வாய்! நீ சாந்தஸ்வரூபி! சுகிர்த அலங்காரி! சுத்த சைதன்ய வஸ்துவுக்குச் சமீபத்துக்குப் போகக்கூடியவள்! ஆகையால் நீ எமக்கு எப்போதும் தூதியாகவிருந்து உதவிசெய்வாய். ஓம் தத் சத்.

இந்தக் காசிப்பட்டணமானது அயோத்தியா ரோஹில்குந்து ரெயில்வேக்கும், வங்காள வடமேற்குரெயில்வேக்கும், மத்தியில் கங்காநதியின் வடக்குப்பாகத்தில் இருக்கிறது. பம்பாயிலிருந்து 938 மைல்கள் தூரத்திலும், கல்கத்தாவிலிருந்து 476 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. மொகல்ஷரிக்கு 7 மைல் தூரத்திலும், ஷஹரான்பூருக்கு 513 மைல்கள் தூரத்திலு மிருக்கிறது. அவைகட்கு ரெயில்வே மூன்றும் வகுப்பு சார்ஜுகள் முறையே ரூ. 0-1-6, ரூ 4-9-6, ரூ. 4-6-6-ம், சென்னையிலிருந்து 1352 மைல்கள் தூரத்திற்கு மூன்றும் வகுப்புக்கு ரூ. 17-5-0-ம் ஆகிறது.

கயாவுக்குப் பிரயாணம்.

1886௵ டிசம்பர்மீ 22௳ மாலை சுமார் 5 மணிக்கு எமது சாமான்களை எல்லாம் கட்டிக்கொண்டு கயாவுக்குப் புறப்பட்டோம். அப்போது இருட்டுக்காலத்தில் கங்கை நதியைப் படகுகளின் மூலமாய் கடந்துபோகப் பெண்கள் பயந்தார்கள். டொப்ரிஸ் ரெயில்வே பிரிட்ஜ் என்னும் புகை

வண்டிக்காரர்கட்டும் பெரியபாலம் கட்டி முடியவில்லை. ஆகையால் படகு பாலத்தின் மூலமாகக் கங்கையைக் கடந்துவந்தோம். இவ்விடத்திய படகுபாலம், பிரயாகையின் படகு பாலத்தைப்பார்க்கிலும் பந்தோபஸ்தானதாயும், பரப்புள்ளதாயும், பாட்டைசாரிகளும் பக்கி முதலானவைகளும் பயமில்லாமல் போக்குவரத்து செய்யக்கூடியதாயுமிருக்கிறது. இந்தப் பாலத்தைக் கடப்போர் நபர் ஒன்றுக்கு ஒரு பைசாவையும் (மூன்று தம்பிடிகளையும்), பக்கி ஒன்றுக்கு 2 அணாவையும் சுங்கவரியாகக் கொடுக்கவேண்டும். இவ்விதமாக வரியைக் கொடுத்து காசி ஸ்டேஷனைச்சேர்ந்து, ஆள் ஒன்றுக்கு ரூபா 2-8-9 வீதமாகச் சத்தம் கொடுத்து கயா ஸ்டேஷனுக்கு டிக்கட்டுகளை வாங்கினோம். கயாபட்டணம் எமக்குப் புதிதாகையாலும், கயாவாளிகளுடைய கொடுமைகள் அதிகமென்று கேட்டிருப்பதாலும், எமக்குத் துணையாக விருக்கும்படி ம-ா-ா-ஸ்ரீ காசிராம் சாஸ்திரிகளையும், ம-ா-ா-ஸ்ரீ பிரயாகை ரங்கராவையும் (டிக்கட்டுகள் வாங்கிக்கொடுத்து) கூட்டிக்கொண்டு புகைவண்டி ஏறினோம். அந்த வண்டி இராத்திரி 12-மணிக்கு மோகல்ஷேரி என்னும் (ஜங்ஷன்) பெரிய ஸ்டேஷனுக்குப் போய்த் தங்கி இறங்க (East India Train) கிழக்கிந்திய புகைவண்டி வர ஒருமணிக்கு மேலாகியது. பிறகு அதிக தாமதப்பட்டுவந்த அந்தவண்டியில் ஏறி, சுமார் ஜாமம் 4-மணிக்கு (Bankipure) பான்கீபூர் என்னும் (ஜங்கஷன்) பெரிய ஸ்டேஷனுக்குப்போய், அவ்விடத்திலிருந்து (Gaya) கயாவுக்குப்போகும் கிளை இருப்பு வண்டிக்காக வாராவதியின் மேல் நின்று விடியுமளவும் வருந்தினோம். இந்த பான்கீபூர் பாட்டனா என்னும் பாடலீபுரத்திற்குப் பிரதான பட்டணமாகவும், கல்கத்தாவிலிருந்து 338 மைல்கள் தூரத்திலிருக்கும் ஸ்டேஷன் பெரிய ஜங்ஷன் ஆனபடியினால், நாலாபக்கத்திலிருந்து வரும் வண்டிகளின் ஜனங்கள் ஆயிரக்கணக்காகத் தங்கித் தவிக்கிறார்கள். அதிலும் இவ்விடமிருந்து கயாவுக்குப் போகும் கிளைப்பாதைக்குப் போகவேண்டுமானால் குறுக்கே ஆகாயத்தை அளாவும்படி கட்டியிருக்கும் பெரிய பாலத்தையும், பயங்கரமான இருட்டிலும், பயங்கரமான பனியிலும் படுங்கஷ்டம் பகையாளிக்குப் பொருந்தினாலும் பார்க்கச் சகிக்கக்கூடாததே. நாங்கள் போன காலம் மார்கழிமாதமாகிய கடுங் குளிர்கால மானபடியால், அன்று அந்த பயங்கரமான வாராவதியின்மேல் பெண்டு பிள்ளைகளுடன் பட்ட

பாடு பாவாணராலும் பாடி எழுதி முடியாது. மார்கழி மாதத்தின் கூடு பனியானது எமது மார்புத் துணிகளையும் மேல் துணிகளையும் பெரு மழையினால் நனைத்ததைப் போலாக்கி நடுங்கி நின்று, பிறகு காலை 5-மணிக்கு கயா வண்டியில் ஏறி (1887ஆு டிசம்பர்மீ 23உ காலை 9½-மணிக்கு) 57-மையில் தூரத்திலிருக்கும் கயா ஸ்டேஷனில் இறங்கிப் பார்க்கவே, முன் நாம் கேட்டிருந்தபடியே கயாவாளிகள் என்னும் கூட்டத்தார் கும்பல் கும்பலாக வந்து சூழ்ந்துகொண்டார்கள். ஆனால் எம்மோடு கூட துணையாக வந்த இராமசாஸ்திரிகளும் இரங்கராவ் அவர்களும் அந்த கயாவாளிகளுக்கு இடங்கொடாமல், இரண்டு பக்கி வண்டிகளைத் தயார் செய்துகொடுத்து அந்தக்கயாவில் மகா சாது புருஷரும், பிரபல புரோஹிதருமாகிய ஸ்ரீ கிருஷ்ணபடங்கர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய், பால்குனிநதிதீரத்திலிருக்கும் ஸ்ரீ ராமபாத சன்னதிக்கு அடுத்த பெரிய மாளிகையில் எமக்கு ஜாகா செய்து கொடுத்தார்கள். அன்று மத்தியானம் (3½) மூன்றரை மணிக்கு காப்பித் தண்ணீரைக் குடித்து இளைப்பாறினோம். அன்று பட்ட கஷ்டத்தினால் சமையல் செய்யச் சக்தியிலலாமையால் அன்று இராத்திரி உபவாசமாகப் படுத்துக்கொண்டோம்.

GAYA—கயாவின் பூர்வசரித்திரம் அல்லது மகத்துவம்.

இந்தக் கயாவின் பூர்வ சரித்திரம் அல்லது மகத்துவமானது வாயுபுராணத்திலும், கருடபுராணத்திலும் சுமார் எட்டு அத்தியாயங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் கருத்தாவது:—“சுவேதவராக கற்பத்தில் பிர்ம்மாவானவர் தாவரஜங்கமங்களைச் சிருஷ்டிக்குங்கால், அசுரர் சிருஷ்டி வகுப்பில் நீண்ட தேகமும், காத்திர உருவமான கயாசூரன் என்னும் ஒரு ராக்ஷஸனையும் சிருஷ்டித்தார். அவன் தனது இராக்ஷஸ ஜன்மத்துக்குரிய தாமசாதிகுணங்களற்றுப் பரிசுத்தவானாகவிருக்க கோலாகலகிரியில் உசுவாச நிசுவாசமின்றிக் கடுந்தவம் செய்தான். அப்போது திரிமூர்த்திகள் முதலான தேவர்கள் வந்து பார்த்து அதிசயித்து அவனது தேகம் பிரபஞ்சத்திலிருக்கும் எல்லாவிதத் தீர்த்தங்களிலும், புண்ணிய ஸ்தலங்களிலும், புண்ணிய பருவதங்களி

னும், தருமங்களிலும் பரிசுத்தமானதாக விருக்கும்படி வரங் கொடுத்தார்கள். அப்போது திரிமூர்த்திகளில் ஒருவரான பிரம்மாவானவர் அந்த இராக்ஷதனை சாந்தப்படுத்தக் கருதி வந்து "உன் தேகம் அதிக பவுத்திரமானதாக விருப்பதால், உன் தேகத்தின்மீது ஓர் யாகம் செய்யவேண்டுமென்று கேட்க, அதற்கு அவன் சம்மதித்து இந்த (கயா) க்ஷேத்திரத்தில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டான். அப்போது பிரம்மாவானவர் யாக வஸ்துக்களையும், ஓதா, அக்கிரி, இருத்துவிக்குகளாக காசிபராதி முனிவர்களையும் சிருஷ்டித்து கயாசூரனுடைய சிரசில் செய்யும் யாகசாலையில் யக்கியஞ் செய்வித்தனர். அப்பொழுது அவனுடைய சிரசு அசைந்தது. அப்போது பிரம்மாவானவர் தன் மரீசியின் புத்திரியாயும், மரீசியின் பத்தினியுமாகிய தன்மி என்பவள் தனது கணவனது சாபத்தினால் சிலையாகிச் சத்தியலோகத்தி லிருந்தவளை யமதருமராஜனால் கொண்டுவரச்சொல்லி அந்தகயாசூரன் சிரசின்மேல் வைப்பிக்க, அப்போதும் அந்த சிரசு பின்னுஞ் சலித்துக்கொண்டே இருந்தது. அப்போது பிரம்மாவின் யாகத்தைப் பரிபூரணம் செய்ய, திரிமூர்த்திகளும் மற்ற தேவதைகளும் வந்தார்கள். (ஈசான விஷ்ணு கமலாசன &c.,) என்னும் சிரார்த்த காலத்தில் சொல்லப்படுகிற சுலோகப் பிரகாரம் விஷ்ணுவானவர் கோதாதர சுவரூபராகி சலித்துக் கொண்டிருந்த கயாசூரனுடைய சிரசின்மேல் வைக்கப்பட்ட சிலையின்மேல் தமது காலை வைக்கச் சிரசினுடைய நடுக்கம் நிற்க, பிரம்மாவானவர் யாகத்தைப் பூர்த்தி செய்துகொண்டார். அப்போது அந்த கயாசூரன் மஹா விஷ்ணுவை நோக்கித், தாம் கேட்கும் வரத்தைக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அஃது யாதென, மஹாவிஷ்ணுவாகிய தாங்கள் இப்போது சேவை சாதித்த கோதாதர சுவரூபராக இந்த க்ஷேத்திரத்திலிருந்து, இந்த க்ஷேத்திரத்தை எல்லாத்தீர்த்தங்களிலும், எல்லாத் திவ்விய ஸ்தலங்களிலும் சிரேஷ்டமானதாக்கி இதைத் தரிசிப்பவர்களுடைய சகலவித பாவங்களைப் போக்கி பாவனமாக்கியும், "பிராம்மணேன பிண்டம் தத்தியா கயாசிரே" என்னும் சுலோகத்தின்படி எவர் வந்து பிண்டமிட்டாலும், அவர்களுடைய நூற்றொரு கோத்திரத்தார்களும் கடைத்தேறும்படிச் செய்யவேண்டுமென்றுங் கேட்க, மஹாவிஷ்ணுவானவர் சகல தேவதைகளின் சம்மதிப்படி அவ்வரங்களைக் கொடுத்து, அன்றுமுதல் விஷ்ணுவானவர் அந்த

கேதாதரரூபமாய் அதாவது பரம பிதுர்சுவரூபமாய், இவ்விடத்தில் செய்யும் சிரார்த்த கருமங்களை அங்கீகரித்துக்கொண்டு பிதுர்தேவர்களுக்குத் தேவாதிதேவனாகி விளங்குகிறார் என்பதேயாம். ஆனதுபற்றியே இந்தஇடத்தை கயாக்ஷேத்திரமென்றும் இப்போதும் பிரதிதினமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து பிண்ட பிரதானங்களைச் செய்துவருகிறார்கள்.

கயாவின் தற்கால ஸ்திதி.

இவ்விடத்தில் அஷ்டகயா செய்யவேண்டியவிதமெப்படியெனில்:—(1) இந்த க்ஷேத்திரத்தில் பிரவேசித்தவுடனே அழகாக அருகில் ஓடும் பல்குணி நதியில் ஸ்நானஞ் செய்து, உபவாசமாக விருந்து, விஷ்ணு பாதத்தைத் தரிசனம் செய்ய வேண்டும். இந்த விஷ்ணு பாதத்தின் ஆலயம் பால்குணி நதியின் கரையில் கருத்த கற்களால் வெகு நேர்த்தியாகக் கட்டப்பட்டு, அதன் ஸ்தூபிகள் வாழைப்பூ வடிவமாகித் தங்க கலசத்தோடும், கொடி (ஜண்டாவோடும்) ஜுவலிக்கிறது. அதற்கு அதிக சமீபத்தில் கேதாதர சுவாமி சன்னதி இருக்கிறது. இந்த கேதாதர சுவாமி விக்கிரகம் சுமார் இரண்டு முழ உயரமும், சுவரில்சாய்ந்த பாவனையாகவும்வைக்கப்பட்டிருக்கிறது. விஷ்ணுபாத கோயிலுக்குள் இரண்டு மூன்று கெஜ சுற்றளவுள்ள தொட்டியில் ஒரு பாறையின்மேல், ஓர் பெரிய மனுஷனுடைய பாதத்தைப்போல் பதியப்பட்டிருக்கிறது. அந்தப் பாதத்தை உற்றுப்பார்க்கில், இயற்கையான பாதத்தைப் போலிருக்கிறதே யொழிய, செயற்கையான பாதத்தைப் போல் பிரகாசிக்கவில்லை. மகா பூஜை காலத்தில் இந்தப் பாதத்துக்குக் குங்குமரேகை முதலான சிங்காரங்கள் செய்து கொண்டாடுவதன்றியில் அதைச் சிறிய வெள்ளைத் துண்டு துணிகளில் பதிப்பித்து பூஜையில் வைத்துக்கொள்ள யாத்திரைக்காரர்கள் ஐந்தாறு அணா கொடுத்து விலைக்கு வாங்குகிறார்கள். இந்த விஷ்ணு பாதத்தை யாவரும் தொட்டுச்சுயமாக பூஜை செய்துகொள்ளலாம். இவ்விடத்திலும் மாடுகளின் உபத்திரவம் அதிகம். பூஜைக்குக் கொண்டுபோகிற புஷ்பங்களைப் பிடுங்கித் தின்றுவிடுகின்றன. இந்தப் பாதத்தைச் சுற்றிலுமிருக்கும்தொட்டிக்குத் தஞ்சாவூர்மகாராஜரால்வெள்ளித் தகடுகளைக்கொண்டு மூடப்பட்டிருக்கின்றன. கோயிலுக்

குள் சேரும் தண்ணீரும் கசகசவென்றிருக்கிறது. வெளியில் அழகான கல்மண்டபமிருக்கிறது. இதில் ஜெயப்பூர், பரதபூர் முதலான இராஜாக்களுடைய படங்கள் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் சிலகயாவளிகள கனப்புச் சட்டிகளோடு காவல் செய்கிறார்கள். இந்த விஷ்ணு பாதத்துக்குச் சமீபமாய் அஷ்டபாதங்கள் ஒரு பெரிய சிலையின்மேலிருப்பதாக ஒரு பெரிய மண்டபம் கட்டியிருக்கிறது. இந்தக் கட்டிடமும், விஷ்ணுபாத ஆலயமும் மற்றும் அருகிலிருக்கிற பல ஆலயங்களும் மஹா தரும பத்தினியாகிய அஹல்யாபாய் அம்மாள் அவர்களால் கட்டி வைக்கப்பட்டன. இந்த ஆலயம் 8 அடி நீளமும், 100 அடி உயரமுமுள்ள கோபுரத்தை யுடையதாய் 3,00,000-ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்டது. அந்த அம்மாள் அவர்கள் இந்த விடத்தில் செய்த அன்னதான தருமங்கள் அநந்தம் அவைகளில் ஒன்றுகூட இப்போது கிரமமாக நடந்து வருவதாகத் தோன்றவில்லை.

(2) இரண்டாம்நாள் பல்குனிநதியில் சிராத்தம் செய்ய வேண்டும். பிண்டங்களைப் பல்குனி நதியில் வைக்கவேண்டும். இதற்குக் கயாவளிகள் என்றவர்களைத் தவிர வேறு புரோஹிதர்களை வைத்தால் பிரமாதமான சண்டை சச்சரவுகளுண்டாகும்.

(3) மூன்றாம் நாள் கயா பட்டணத்துக்குச் சுமார் ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள பிரேத பருவதத்துக்குப்போய்ப் பிண்டப்பிரதானங்கள் செய்யவேண்டும். இந்தப் பிரேத பருவதமானது முன்சொன்ன தன்மி என்னும் பதிவிரதையின் சிலையே இப்படிப் பருவதமாகி விட்டதென்று சொல்லுகிறார்கள். இந்தப் பர்வதத்துக்குப்போக அடிவாரம்வரையில் நல்ல ரோட்டுகள் போடப்பட்டு, பக்கிகளென்னும் இரட்டைக் குதிரை கோச்சு வண்டிகள் போய்வருகின்றன. இந்த வண்டிகளுக்குக் காசியிலிருப்பதைப்போலவே சத்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தப் பருவதத்தின் அடிவாரத்தில் பிரம்ம குண்டம் என்னும் அழகிய தடாகம் கட்டப்பட்டிருக்கிறது. ஜலம் மாத்திரம் கெட்டுப்போயிருக்கிறது. சமீபத்திலுள்ள அழகான ஸ்ரீராமர்சன்னிதியில் ஸ்படிகக் கற்களினால்செய்யப் பட்ட விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் பிண்டை பிச்சி என்கிற கடைக்காரன் ஒருவன் அந்தத்தினத்தில் பிண்டப்பிரதானங்களிடவேண்டிய சாமான்களைத் தயார்

செய்து வைத்துக்கொண்டு இரண்டு ரூபாய் விலைக்குக் கொடுக்கிறான். அந்தப் பிண்டசாமிக்கிரிகளில் பிராம்மணர்களுக்கு அரிசியும், மற்றவர்களுக்கு மாவும், எள்ளும், தர்ப்பையும், தேனும், நெய்யும் ஒரு மண்பாத்திரத்தில் வைத்துக்கொடுக்கிறான். இந்தச் சாமான்களை "சேட்ஷி" என்கிற புரோகிதன் எடுத்துக்கொண்டு பிண்ட மிடுவோருடன் மலைமேல் வருகிறான். அப்படி வருபவனுக்கு இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டும். இந்தப் பிரேதபர்வதத்துக்கு நேபாள தேசத்து மஹாராஜா லக்ஷக்கணக்கான பொருளைச்செலவுசெய்து பழைய படிகளைச் சுமார் 350 படிகளாகப் புதுப்பித்துக் கருங்கல் சுண்ணாம்புக் காரையினால் கைப்பிடிச்சுவர்களை வைத்துக் கட்டியிருக்கிறார். இவ்வித வழியானது நேர்த்தியாகவும் பந்தோபஸ்தாகவும் இருந்தாலுங்கூட, செங்குத்தாக இருப்பதால் ஏறி இறங்குவது கஷ்டமாகவிருக்கிறது. மலையின்மேல் ஜலங்கிடையாது. தங்குவதற்குப் பெரிய புளியமரங்களிரண்டிருக்கின்றன. அவ்விடத்திலிருந்து பார்த்தால் கயாவின் சுற்றுப்பக்கத்தின் காக்ஷி வெகு இரமணியமாக விருக்கின்றது. பூர்வம் பாடலிபுரத்தைச் சார்ந்த சம்பகாரணிய மிதுவேயாகையால், மயில் முதலான பலவித பக்ஷிகளும், மான்முதலான பலவித மிருகங்களும் துள்ளி நடித்துத் திரிந்துவிளையாடும் வேடிக்கையை என்னென்று சொல்லுவோம். இவ்வித காக்ஷிகளைப் பார்வையிட்டதும் மலையின்மீது ஏறியதனாலுண்டாகிய கால்நோய் தெரியாமல் களிப்புண்டாயிற்று. இந்தமலையின் ஓர்மண்டபத்தில் இராமலிங்கம் என்னும் பெயரால் ஒரு சிவலிங்கம் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சமீபத்தில் ஒருமண்டபத்தின் கீழ் சுவர்ணரேகை இருக்கிறது. இது ஒருவித வர்ணக்கல் என்று நமக்குத் தோன்றுகிறது. இந்த மலையில் பிரேத கயாவளிகள் என்று வேறொரு வகுப்பார் இருக்கிறார்கள். இவர்கள் பிண்டப்பிரதான மானவுடனே பம் என்ற பெயருடனே கையைத் திருப்பி வாயிலடித்துக்கொண்டு உங்களுடைய பிதுர்க்கள் மோக்ஷஸ்தர்களானார்கள் என்று சுபம் சொல்லி அதிக பணங் கொடுக்கச்சொல்லி வருத்துகிறார்கள். இந்தக் கயாவளிகள் யாவரெனில்:—பூர்வத்தில் பிரம்மாவானவர் யாகத்தின்பொருட்டு ரித்துவிக்குகளைப் படைத்தாரே அவர்களுடைய சந்ததியார்களென்று சொல்லுகிறார்கள். இவர்கள் தங்கள் மனைவிமார்களை இராணிவாசிகளாய் அந்தப்புரங்களில் வைத்துக் கேவலம் போகத்துக்குமாத்திரம் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய கையால் தொட்ட

ஜலத்தை புருஷர்கள் தொடக்கூடாதென்றுசொல்லி வெளி நாடுகளிலிருந்து ஓடிவந்துவிடும் விதந்து ஸ்திரீகளைக்கொண்டு சமையல் முதலான வேலைகளைச் செய்துகொள்ளுகிறார்கள். இந்த விதந்து ஸ்திரீகளில் அநேகர் விபசாரிகளாகத் தோன்றுகின்றனர்.

(4) நான்காவது நாள் பிரேதபர்வதத்துக்குப் போகிற வழியில் சாய்புகஞ்சுக்குச் சமீபத்தில் இராமபர்வதம் என்னும் சுமார் 150-படி உயரமுள்ள ஒரு சிறுமலை இருக்கிறது. இந்த மலையின்மேல் நான்கு இடங்களில் பிண்டப்பிரதானங்கள் செய்யவேண்டும். இந்த மலையின்மேல் சிவமந்திரம், இராமமந்திரம் என்னும் சிறுகோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடத்திலும் பிரேத கயாவளிகள் பம் என்கிற சப்தத்தினால் சுபலம் சொல்லுகிறார்கள். இந்த மலையின்மேலும் ஜலங்கிடையாது. அஷ்டகயா செய்யாதவர்களை இந்த மலையின்மேல் விடுவதில்லையென்று தகரார் செய்கிறார்கள். மலையைவிட்டிறங்கி அடிவாரத்தில்மூன்றுவிடங்களில்பிண்டப் பிரதானங்கள் செய்யவேண்டும்.பிரதிபிண்டப் பிரதானமானவுடனே காருணியம் என்னும் நாற்பது தர்மபிண்ட பிரதானங்களையும் செய்யவேண்டும்.

(5) ஐந்தாம் நாள் பஞ்சதிகத்பம் என்கிற பெயரினால் ஐந்து ஸ்தலங்களைச் சித்தப்படுத்தி சாயிபுகஞ்சுஎன்னும் இடத்துக்குச் சமீபத்திலிருக்கிற தீர்த்தக்கரையில் வந்து பிண்டப்பிரதானம் செய்து சமீபத்திலிருக்கிற சூரியர் சன்னிதியில் தரிசனம் செய்வித்துக்கொண்டு வந்து கேதாரசுவாமிக்கு முன்பாகப் பிண்டப்பிரதானம் செய்வித்து ஷை சுவாமிக்கு அபிஷேகம் பூசைகளைச் செய்துகொண்டும், கொஞ்சந்தூரத்திலுள்ள பிதாமயேசுரர் சன்னிதிக்கு வந்து தரிசனஞ் செய்தும், பிரேத கயாவளிகளைப் பூசைபண்ணி வணங்கியும், பல்குனி நதிக்கு வந்து பிண்டப்பிரதானங்கள் செய்து வணங்க வேண்டும். இந்தப் பாகமாகிய பல்குனிநதிதீரத்தில் அநேக பெரிய கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். அநேகர் "டைேக்" என்னும் பெயரால் விசாலமான ஆசார மண்டபங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

(6) ஆறாம்நாள் தர்மாரணியம் என்னும் பவுத்தகயாவிடத்துக்குப்போய்ப் பிண்டப்பிரதானங்கள் செய்யவேண்டும். இது கயாபட்டணத்துக்குச் சுமார் பத்துமைல் தூரத்திலிருக்கிறது. இதுபெரிய வூர். இவ்விடத்தில்தான் ஆதிபுத்தரான

வர் ஜலித்து தேசுடபிரம்மவாதத்தைப் போதித்த விடமென்று தோன்றுகிறது. இப்போது இவ்விடமிருக்கிற பிரம்மாண்டமான புராதன பவுத்தகரு என்னும் அரசமரத்தின் கீழ்ப் பவுத்தருடையகோயில் கட்டப்பட்டு, அநேக பிரதிமைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஜகநாதர் என்னும் பெயரால் ஒரு கோயிலுங் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் நான்குதடவை பிண்டப்பிரதானங்கள் செய்யவேண்டும்.

(7) ஏழாம் நாள் தர்மாரணியத்துக்குச் சமீபத்திலிருக்கிற பிரம்மசரசுக்குப்போய்ப் பிண்டப்பிரதானங்கள் செய்து காக்கைபலி, ஏமபலி, சுவர்ணபலி என்று மூன்று பலிகளைச் சமீபத்திலிருக்கிற மண்டபத்தில் போட்டு அருகிலிருக்கும் புராதன மாமரத்தைச் சுற்றிவந்து வணங்கவேண்டும்.

(8) எட்டாம்நாள் விஷ்ணுபாதசன்னிதிக் கருகிலிருக்கிற அஷ்டாதேச பாதத்தின்பேரில் பதினெட்டுதரம் வெவ்வேறாகப் பிண்டப்பிரதானங்கள்செய்து அந்தப் பாதங்களுக்கருகில் நந்திதீபம் என்னும் நெய் விளக்கு வைத்து, பிதுர் தேவதைகள் எந்த லோகத்திலிருந்தபோதிலும் சுபலங் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டும்.

(9) ஒன்பதாம் நாள் பல்குணி சிராத்தத்தைப்போலவே விஷ்ணுபாதத்தை நோக்கி அன்னசிராத்தம் முடித்து, விஷ்ணுபாதத்தின்மேல் பிண்டப்பிரதானங்கள் செய்யவேண்டும். அந்தப் பிண்டங்களைக் கொண்டுவந்து விஷ்ணுபாதத்தின்பேரிற் போடவேண்டும். போட்டவுடனே பசுமாடுகள் அவைகளைத் தின்றுவிடுகின்றன. இந்தக் காலத்தில் பிராம்மணர்களுக்குப் பசுதானங்கள் கொடுக்கவேண்டும்.

(10) பத்தாம் நாள் வடசிராத்தம் செய்யவேண்டும். இந்த அக்ஷயவடவிருக்ஷம் விஷ்ணுபாத சன்னிதிக்குச் சுமார் ஒரு மைல் தூரத்தில ஓர் மேட்டின்மே லிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் ருக்மணிகுண்டம், கதாலோலம் என்னும் இரண்டு சிறுகுளங்க ளிருக்கின்றன. இவ்விடங்களில் முதலில் பிண்டப்பிரதானங்களைச் செய்து பிறகு அக்ஷயவடவிருக்ஷத்தருகில இருக்கும் மண்டபத்தண்டையும் விருக்ஷத்தினடியிலும் செய்யவேண்டும். இந்த அக்ஷய வடவிருக்ஷம் எத்தனையோ யுகங்கள் கண்டதென்று கண்டவுடனே சொல்லலாம். வெகு புராதன காலத்து மராமதையால் மேல்மரம்

வற்றலாகி அடிவேர்கள் மாத்திரம் தழைத்து வருகின்றன. இந்த விருக்ஷத்தை எவராகிலும் தொட்டு நஷ்டப்படுத்தாத படி சுற்றிலும் சுவர்களும் கதவும் வைத்துப் பூட்டிப்போட்டிருக்கின்றனர். இந்த வடசிராத்தம் செய்து வடவிருக்ஷத்தின் அடியில் பிண்டப்பிரதானம் செய்த பிறகு கயாவளிக்குப் பிரம்மகல்பித பிராம்மண பூஜைசெய்து பிதுர்தண்டனை யென்னும் பெயரால் கையில் ஒரு புஷ்பமாலையைப் போட்டுச் சுற்றிக்கட்டி, தமது சொத்து இவ்வளவென்றும், எவ்வளவு கொடுக்கிறாய் என்றும் கேட்டுச் சாயந்தரம் வரையில் அவஸ்தைப்படுத்துகிறார்கள். முதலாவது இந்த கயாவளிகள் காலையில் ஸ்நானம்செய்தும் சாப்பிட்டும் தாம்பூலம் போட்டுக்கொண்டும்குதிரைச்சவாரியில்இந்தவிடத்திற்கு வருகிறார்கள். வரும்போது ஒரு நார்மடியைக் கையில் கொண்டு வந்து, வடவிருக்ஷத்துக்குச் சமீபத்தில் வந்தவுடனே சவாரி உடைகளைக் களைந்து ஒரு இடத்தில் வைத்துவிட்டு, இந்த நார்மடியைக் கட்டிக்கொண்டு, சிராத்த கருமங்களைச் செய்விக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்குப் பசிவருத்தம் தெரிகிறதில்லை. ஆனால் சிராத்தம் செய்பவருடைய சங்கடம் தெரியாமல், சாயுங்காலம் வரையில் வருத்திக் கடைசியாகக் கொடுத்ததை வாங்கிக்கொண்டு புஷ்பமாலையை அவிழ்த்து, முதுகிலடித்து உன் பிதுர்க்கள் சொர்க்கத்தை அடைந்தார்கள் என்று சுபலம் சொல்லுகிறார்கள். இவ்விடத்தில் எப்படிப்பட்ட தனவந்தர்கள் வந்தபோதிலும் கயாவளிகளிடம் படும் கஷ்டம் கொஞ்சமல்ல. இந்தக்கயாவளிகளில் மஹா நல்லவரான கிருஷ்ணபடங்கர் அவர்கள் எமது தமக்கை முதலானவர்களுக்கு அக்ஷயவட சிராத்தம் செய்வித்த போது யாதொரு வம்புவிரோதங்கள் செய்யாமல் சுமார் 35 ரூபாய்க்குள் செய்வித்து யாதொருதொந்திரவுங் கொடாமல், நமக்குவேண்டிய உதவிகளனைத்தையும் செய்து உபசரித்தார். இவ்விடம் பிண்டப்பிரதானங்கள் செய்து ஜாகைக்குப் போகும்போது ஒருவிதமான கீச்சிடு சப்தமான நாகசுரங்களை ஊதிக்கொண்டும் கொட்டுமுழக்கங்களுடன் மரியாதைசெய்து கொண்டும்போய்விடுகிறார்கள்.

(11) பதினோராம் நாள் அஷ்ட தீர்த்தங்களென்னும் இராமகயா என்கிற ஒரு சிறு மலையின் கீழிருக்கும் மதுசிரவம் என்னும் தீர்த்தத்திலும், கயாசிரசி என்கிற இடத்திலும், கூபகயா என்கிற சிறிய கிணற்றண்டையும், பிருட

பிரஷ்டம், ஆதிகயா, உபத்கம், பிமகயா, கோஷ்பதம், வைதுருணி என்றுதி பத்து ஸ்தலங்களிலும் பிண்டப்பிரதானங்கள் செய்யவேண்டும். இந்தப் பிண்டப்பிரதானங்கள் அஷ்டகயாவைச் சார்ந்தவைகளல்ல. இப்படிப்பட்ட உபதீர்த்தங்கள் ஆயிரக்கணக்காக விருப்பதால் கயாவளிகள் பணத்தாசைக்காகச் செய்யச் சொல்லி உபதேசிக்கிறார்கள். இந்த உபதீர்த்தங்களில் பிண்டப்பிரதானங்களைச் செய்யாமல்விட்டபோதிலும், இராமசாகரம் என்னும் தீர்த்தத்திலாவது கட்டாயமாகச் செய்யச்சொல்லிவருத்துகிறார்கள். இவ்விடத்தில் செய்தேதீரவேண்டும்.

(12) பன்னிரண்டாம்நாள் நியூன பரிபூரண விஷ்ணுபத சிராத்தத்தை விஷ்ணுபாதத்தின்மேல் அபிஷேகம் செய்து, ஒரு லக்ஷம் துளசிகளைக்கொண்டு அர்ச்சனைசெய்து அந்தக் குப்பலின்பேரில் பிண்டப்பிரதானங்கள் செய்யவேண்டும். இத் தென்தேசத்தார் சுத்த சிராத்தம் என்று சொல்லிப் பஞ்சதிராவிடர்களே பிரமணார்த்தம் சொல்லிமுடித்துவிடுகிறார்கள். இது விஷயத்தில் கயாவளிகள் சண்டைச்சச்சரவுகள் செய்கிறதில்லை.

(13) பதின்மூன்றும் நாள் பல்குணி நதியிலும், சாவித்திரி என்கிற மடுவிலும் உதயகாலத்தில் ஸ்நானம் செய்து சமீபத்திலே இருக்கிற சிறிய ஆலயத்தில் காயத்திரி தேவதையைத் தரிசித்தும் தியானித்தும், பிராதக்கால சந்தியாவந்தனங்களை முறைப்பிரகாரம் செய்யத் தப்பிய பாபங்களைப்போக்கும்படிபிரார்த்தித்தும்,சமீபத்தில்பிரம்மயோனி என்ற பெயருள்ள சிறுமலையின்கீழே யிருக்கிற காயத்திரி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மத்தியானிகம் செய்துகொண்டு சுமார் இரண்டு மைல் உயரமுள்ள ஷை பிரம்மயோனி பருவதத்தின்மீதேறி அவ்விடத்தில் யோனிரூபமாக விருக்கும் துவாரத்தில் (இனி ஜன்மங்களெடுக்காதபடி) நுழைந்து வந்து தியானித்து மலையைவிட்டிறங்கி, சுமார் இரண்டு மைல் தூரத்திலிருக்கும் தருமாரணியம் என்னு மிடத்திலிருக்கும் சரசுவதி நதியில் ஸ்நானம்செய்து சந்தியாவந்தனம் செய்யவேண்டும். இப்படிச் செய்வதனால் திரிசந்தியா காலங்களில் நேர்ந்த பாவங்கள் போகுமாம்.

பஞ்சகயை செய்கிறவிதம்.

முதல்நாள் பல்குனிநதியில் சிராத்தம் செய்தும், இரண்டாம் நாள் முன்சொன்ன பஞ்சதீர்த்தங்களில் பிண்டப்பிரதானங்கள் செய்தும், மூன்றும்நாள் விஷ்ணுபாதத்தின் மீது சிராத்தம் செய்தும், நாலாம்நாள் விஷ்ணுபாதக்ஷேத்திரத்திற்குக் கிழக்கே இருக்கிற சிறிய வடவிருக்ஷத்தண்டையிலிருக்கும் தருமசாலையில் சிராத்தம் பிண்டப்பிரதானம் இவற்றைச்செய்தும் கயாவளிகளிடம் சுபலம் பெற்றுக்கொள்ளுதலாம்.

ஏகோதிஷ்டம் செய்கிற விதம்.

முதல்நாள் பல்குனிநதி சிராத்தம் செய்தும், இரண்டாம் நாள் விஷ்ணுபதி சிராத்தம் செய்தும், விஷ்ணுபாதத்தின்மேல் பிண்டப்பிரதானங்களைச் செய்தும், உடனே அந்த விஷ்ணுபாதத்தருகிலேயே கயாவளிகளிடம் சுபலம் பெற்றுக்கொள்ளுதலுமாம்.

பல்குனி சிராத்தம்.

முதல்நாள் பல்குனிநதியில் சிராத்தம்செய்து பிண்டப்பிரதானமானவுடனே கயாவளிகளிடம் சுபலம் பெற்றுக்கொண்டு பிண்டங்களைப் பல்குனி ஊற்று ஜலத்தில் கலக்கிவிடுதலாம்.

கயாவில் சொல்லுகிற சங்கல்பம்.

“வைவஸ்த, மன்மந்தரே, மேரு தக்ஷணதிக்பாகே, ஆரியவர்த்தாந்திகத மகததேசே, கயாகேதாத்திரி க்ஷேத்ரே, கோலாஹலபர்வதே, மதுவனே, விக்கிரமசகே, பவுத்தாவதாரே, பிரஹஸ்பத்தியமானேன — நாமசம்மச்சரே, ஆத்மஹிரதயேடோத்திர, சத்குலோத்தாரணார்த்தம்” என்று சொல்லுகிறார்கள். இந்த சங்கல்பத்தைச் சொல்லும் கயாவளிகளுடைய மதம் என்னவென்று விசாரணை செய்ததில், அவர்கள் சுமார் 600 அல்லது 700 வருஷங்களாக மத்துவமதத்தை யனுஷ்டித்து வருவதாகத் தெரியவருகின்றதன்றியில்

ஸ்ரீ சக்தி பூரணாசாரியர் சுவாமிகளுடைய மடத்தைச் சார்ந்தவர்களாகவும் தோன்றுகிறார்கள். மதவிஷயத்தில் மாத்திரம் மத்துவமதத்தைச் சார்ந்தவர்களாக விருக்கினும், ஆசாராதி பல விஷயங்களில் தென்தேசத்து மத்துவமதஸ்தர்களுக்கு வேறுபட்டவர்களாக விளங்குகிறார்கள். இவர்கள் பேசும் பாஷைத் து மாத்தி என்று சொல்லுகிறார்கள். மகததேசத்தில் மகிமைபெற்றதாகிய இந்தக் கயாவிலும் அநேக சிறிய கோயில்களும் தீர்த்தங்களு மிருக்கின்றன. அவைகளில் மங்களாகவுரி, கயாசுரி என்னும் இரண்டு சக்தி சன்னதிகள் இருக்கின்றன. இவைகளில் ஆடுமுதலான பலிகள் விசேஷமாக நடக்கின்றன. மங்களாகவுரி க்ஷேத்திரத்தைப் பதினெட்டுப் பீடங்களில் ஒன்றாகக்கொண்டு விசேஷமாக வணங்கி வருகிறார்கள்.

இந்த கயாக்ஷேத்திரம் மகததேசத்தில் மேன்மை பெற்ற பட்டணங்களிற் சிறந்ததாகையால் இதைச் சுற்றிலும் இராஜகிருகி, சவுணசிரமம், புனப்புனகாநதி, லோகாதண்டம், வைகுண்டம் என்றாதி பெயர்களால் அநேக திவ்விய ஸ்தலங்களும் தீர்த்த நதிகளு மிருக்கின்றன. அநேக ஜனங்கள்வந்து தரிசிக்கிறார்கள். மேலும் பான்கிபூரிலிருந்து கயா பட்டணத்துக்கு வருகிறவழியில் புனப்புனகா என்கிற ஜீவநதி யோடுகின்றது. இந்த நதியில் ஸ்ரீராமபிரானுடைய பத்தினியாகிய சீதாபிராட்டியார்ஒருகாலத்தில் வந்து ஸ்நானம் செய்ததுகாரணமாக பரிசுத்தமான நதி யாகியதால், கயாவுக்குப் போகப்பட்ட யாத்திரைக்காரர் முதலில் இந்த நதியின் கரைமீது இறங்கி க்ஷவரம் செய்துகொண்டுப் ஸ்நானம்செய்து சங்கல்பம்செய்துகொண்டுந்தான் கயாக்ஷேத்திரத்தில் பிரவேசிக்கவேண்டும். இப்போதும் அநேக ஜனங்கள்வந்து இறங்குகிறார்கள். இறங்குபவருக்கு வசதியான வனங்களும் தோப்புகளு மிருக்கின்றன. இந்தக்கயாபட்டணம் பூர்வத்தில் மகிமை பெற்ற மிதிலையோடுகூடிய மகததேசத்தைச் சார்ந்தது. இந்த மகததேசம் ஆதியில் ஜனகர்முதலான மஹாராஜர்களாலும், பிறகு அசோகாதி மஹாராஜர்களாலும் செங்கோல் செலுத்தப்பட்டதன்றியில், ஸ்ரீராமருடைய பத்தினியாகிய சீதை முதலானவர்கள் ஜனித்தவிடமாயுமிருக்கிறது. மேலும், பிரபோதசந்திரோதயம், பஞ்சதந்திரம் முதலான சிறந்த நூலாசிரியர்களுடைய ஜனனஸ்தானமாகிய ஷண்பகாரணியமும் இதுவே என்று தோன்றுகிறது. கடைசிபாகப் பவுத்த

மதத்தை ஸ்தாபித்த புத்தருடைய ஜனன ஸ்தானமும் இந்த கயா க்ஷேத்திரமென்று சரித்திரங்களால் தெரியவருகின்றது. இப்போது பங்காள ராஜதானியைச்சார்ந்த லெப்டினெண்ட் கவர்னர் அதிகாரத்துக் குட்பட்ட பேஹார் மாகாணத்தின் பிரிவாகிய இந்த கயா க்ஷேத்திரம் ஒரு ஜில்லாவாக விருக்கிறது. இந்தக் கயாபட்டணம் இப்போது சாஹிப்கஞ்ஜ (Sahibgange) என்றும், இலஹாபாத்து (Elahabad) என்றும் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றது. இலஹாபாத்து என்பது பல்குனி நதியோரத்திலிருக்கும் கோயில்களும், கயாவளிகளுடைய வீடுகளும் கடைகளும் அடங்கியவிடம். இந்தப் பாகத்தில் விஸ்தாரமான வீதிகளில்லை. ஆனால் அநேக கட்டிடங்கள் செங்கல் காரையால் தென்தேசத்து வீடுகளைப்போல் கட்டப்பட் டிருக்கின்றன. சந்து ரோட்டுகளில் அசங்கியம் அதிகம். பெரும்பான்மையாக ஸ்திரீபுருஷர்கள் அசங்கிதமான உடை முதலியவற்றைத் தரித்துக்கொண்டு பார்வைக்கு விகாரமாக இருக்கிறார்கள். தனவந்தர்கள் மாத்திரம் காஸ்மீரம்சால்வைகளையும் துப்பட்டாக்களையும் போட்டுக்கொண்டு லக்ஷணமாக விருக்கிறார்கள். கெட்டுப்போன நெய் மிட்டாய் முதலானவைகளின் நாற்றம் அதிகம். இந்தப் பாகத்தில் குடியிருக்கும்பெரும்பான்மையான குடிகள் புரோஹிதம், வைதிக விஷயங்களிலேயே பிரவர்த்தித் திருப்பதால், இவர்கள் தங்களுடைய சுத்தி சுசிகரத்தைப்பற்றிக் கவனிக்கிறதில்லைபோல் தோன்றுகிறது. சாஹிப்கஞ்ச என்பது புகைவண்டி ஸ்டேஷனுக்கும், இலஹாபாத்தென்னும் பாகத்துக்கும் இடையி லிருக்கின்றது. இந்தப் பாகத்தில் இங்கிலீஷ்காரர்கள் வந்து குடியிருப்பதால் சாஹிப்கஞ்சு என்று பெயர்பெற்றது. இந்த சாஹிப்கஞ்சானது அகலமும் அழகுமான ரோட்டுகளை யுடையதாயும் வரிசைவரிசையாகவும் சதுரங்கபட்டணமாகவும் கட்டப்பட் டிருக்கிறது. காசிப்பட்டணத்தைப்போல் வீடுகள் ஏழடுக்கு எட்டடுக்குகளுள்ளதா யிராவிட்டாலும், நான்கைந்தடுக்குகளுடன் மண்ணாலும் செங்கல்களாலும் கட்டப்பட் டிருக்கின்றன. வர்த்தகம் விசேஷமாக நடக்கின்றது. சகல பதார்த்தங்களும் நயமான விலைக்கு அகப்படுகின்றன. உக்கா குடுக்கைகளையும், உக்கா குடிக்கும் மருந்துகளையும், கஞ்சாவையும் மலைகளைப்போல் குவித்துவைத்து அவைகளுக்காக இரண்டு மூன்று பெரிய கடைவீதிக ளிருக்கின்றன. இப்போது சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளும், சுமார் 43,45,10

ஜனங்கள்வரையில் இருக்கிறதாகத் தெரியவருகிறது. இந்தப் பாகத்திய ஸ்திரீபுருஷர்கள் சுத்தமாகவும் லக்ஷணமாகவும் இருக்கிறார்கள். இவ்விடத்திலும் பல தேசத்து தாசிவேசிகள் சிங்காரித்துக்கொண்டும் மாடிகளின்மீது உக்காக்களைக் குடித்துக்கொண்டும் வழிப்போக்கர்களை மயக்குகிறார்கள் இது பெரிய ஷகரானபடியினால் ஜட்ஜி கோர்ட்டும், மாஜிஸ்திரேட்டு கோர்ட்டும், தபாலாபீசும், ஆஸ்பத்திரியும், பாடசாலையும், இன்னும் அநேக பெரிய கட்டடங்களுமிருக்கின்றன. இந்த சாஹிப்கஞ்சுக்குச் சமீபத்திலிருக்கும் இரமணா (Rawana) என்னும் இடத்தில் ஆங்கிலேயர் குடியிருக்கிறார்கள். இந்த நகரத்தைச் சுற்றிலும் ஒருவிதக் கருங்கல் குன்றுகள் விசேஷமாக விருப்பதால், அவைகளைக் கொண்டுவந்து கூசாக்களாகவும், படிக்கற்களாகவும், கல்வங்களாகவும், செம்பு, படி முதலான தட்டுமுட்டுகளாகவும், சிவலிங்கங்களாகவும்பொம்மைகளாகவும் வெகு நயமான வேலைப்பாடாகச் செய்து குறைந்தவிலைக்கு விற்கிறார்கள். இதே மாதிரியாகவே இராசகிரி, டிகாரி என்னும் சுற்றுப்பக்கத்து மலைகளில் அகப்படும் பளிங்குக் கற்களைக் கொண்டுவந்து அவைகளையும் மேற்சொன்ன விதமாகத் தட்டுமுட்டு சாமான்களாகச் செய்து விற்பதன்றியில், சிவலிங்கங்கள் மற்றும் பலவிதமான பிரதிமைகள், குண்டுமணி குளிசங்களையும் செய்து விற்பனைசெய்கிறார்கள். மேலும் வெள்ளி, பித்தளை, தாம்பிரம் முதலான லோகங்களில் தட்டுகள் செய்து அவைகளில் ஸ்ரீராமருடைய பாதத்தைப்போலப் பதிப்பித்து விற்பதால் யாத்திரை செய்யும் இந்துக்கள் இவற்றை ஏராளமாக வாங்குகிறார்கள்.

பூசாரவிவரம்.

இவ்விடத்தில் பூமியானது விவசாயத்துக்கு வளப்பமானதாயிருக்கின்றது. கோதுமை, துவரை முதலான தானியங்கள் எதேஷ்டமாகவும் செழிப்பாகவும் விளைகின்றன. மஷ்டாசி பருப்பு என்று ஒருவித புது தானியம் வெள்ளைக் களிப்பான பூமியில் செழிப்புடன் வளருகின்றது. இதோடுகூட ஒரு தினுசு சோளமும், பட்டாணியும் அதிக உழைப்பில்லாமல் களிமண் பாங்கான பூமியில் விளைகிறதன்றியில், அலிசல் என்னும் எள்ளைப்போன்ற ஒருவித தானியமும், லாகி என்னும் ஒருவித பருப்பு தானியமும் கொடிவிட்டுப் புஷ்பித்து விஸ்தாரமாக விளைகின்றன. இவ்விடத்தில் பெரும்பா

லும் ஒரே ஏற்றத்தை உபயோகிக்கிறார்கள். அதாவது ஏற்ற மரத்தின் ஒரு பக்கத்தில் பளுவான மண் கட்டி அல்லது கல்லைக்கட்டி, மற்றொரு பக்கத்தில் சாலையைக் கட்டி ஒரே ஆள் நின்றுகொண்டு தண்ணீர்பாய்ச்சப்படுகின்றது. இதற்கு டெக்கில் என்று பெயர். இவ்விடத்தில் இலந்தைப் பழங்கள் பெரிய கொய்யாப் பழங்களைப்போலப் பெருத்து ருசிகரமானவைகளாக விருக்கின்றன. இலுப்பைப் புஷ்பத்தினால் ஒருவித சாராயத்தைக் காய்ச்சுகிறார்கள். ஆலமரத்தைப் பூஜைசெய்கிறார்கள். சாப்பிடுவதற்குவிசேஷமாக இலைகளகப் படாததலால் பெரும்பான்மையாரும் கிண்ணிகளில் சாப்பிடுகிறார்கள். கசகசா,போஸ்தகாய் இவைஅபரிமிதமாகவிளைகின்றன. இவ்விடத்தில் நல்ல வெற்றிலை யகப்படுவது அரிதாக விருக்கிறது. ஆகையால் இரண்டொரு வெற்றிலைக்கு வாசனைத் திரவியத்தைத் தடவி காசுக்கட்டி பாக்குத்தூண்டுடன் விற்கிறார்கள். இந்த கயாக்ஷேத்திரம் சுமார் 95 வருஷங்களுக்குமுன் இராஜா மித்திரசித் சிங்கு என்னும் ஜமீன்தாரருக்குட்பட்டு, சுமார் ஐம்பதுலக்ஷம் ரூபாய் வருமானத்தையடைந்து கம்பெனியாருக்கும் மூன்று லக்ஷம் ரூபாய் பேரில் கட்டிக்கொண்டு வந்தார். பிறகு லார்டு காரன்வாலிசு காலத்தில் முழுதும் இங்கிலிஷ்காரர் வசமாகிவிட்டது. இப்போதும் அநேக ஜமீன்தாரர்களிருப்பதன்றியில், கங்கா விஷ்ணு சோடிலால் முதலான புரோஹிதர்களும் கோடீசுவர்களாகி பெரிய ஜமீன்தாரர்களைப்போல ஆயிரக்கணக்கான ஆள் மாகாணங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விடத்திய ஜனங்களில் பெரும்பாலும் பருவம் கிட்டுமுன் அதாவது அதிக வாலிபராக விருக்கும்போதே மிதமிஞ்சி ஸ்திரீ போகத்தில் பிரவேசிப்பதால் அண்டவாயு, கால்வீக்கம், மகோதிரம் முதலான கொடிய வியாதிகளால் அநேகர் வருந்துகிறார்கள்.

இன்னும் சில நாள்கள்வரையில் இந்தக் கயாவிலிருந்து பார்க்கலாமென்று எண்ணமிருந்தாலும், கல்கத்தா காங்கிரஸ் சபைகூடும்நாள் (டிசம்பர்மீ 27-ந்தேதி) சமீபித்து விட்டபடியால்,எமது எண்ணப்படி இருந்து இளைப்பாறக்கூடவில்லை. அன்றியும் சம்சார சமேதராய் கல்கத்தாவுக்குப் போக யோசித்திருந்ததில், அப்போது கல்கத்தாவில் வாந்திபேதி யென்னும் கொடிய வியாதி ஜனித்து அநேகரைக் கொன்று வருவதை (Gaya Varthamani) கயாவர்த்தமானி, (Pioneer) பயனீர், (Indian Mirror) இந்தியன் மிரர், என்னும் சமாசார பத்திரி

கைகள் முறையிட்டழுததால், இப்படிப்பட்ட அசந்தர்ப்ப
மான காலத்தில் பிள்ளைகுட்டிகளுடனும் ஒப்வற்றப்பிராயாண
த்தின் அலைச்சலினால் போதுமான அன்ன ஆகார நித்திரை
யற்று அவதிப்பட்ட பெண்டுகளையும், அந்தக்கல்கத்தா பட்ட
ணத்துக்குக் கூட்டிக்கொண்டுபோக மனம் துணியவில்லை.
மேலும், எம்மோடு கூட. கூட்டிக்கொண்டு வந்த வைத்திய
ரையாவது நமக்குச் சகாயமாகக் கூட்டிக்கொண்டு போகலா
மென்று யோசித்ததில், நாம் போன காலத்தில் கயாவிலிருக்
கும் பிள்ளைகள் பெண்டுகளுக்கு யாதாவது வியாதி முதலான
அபாயங்கள் சம்பவித்தால் திக்கில்லாமல் அவர்கள்
அலைவார்களே என்னும் பயமும் வருத்தியது. அதோடு
கூட அலைந்து வந்த ஆயுள்வேதக்காரரும், பேதி வாந்தி புகு
ந்த இடத்துக்குவர முன்னும் பின்னும் யோசிக்கிறதாகத்
தோன்றினபடியால், கடைசியாக எமது சுகதுக்கங்களையும்
தேக காப்பையும், சர்வேசுவரருக்கு அடைக்கலமாகச் செய்
துவிட்டு தேசாபிமானிகள் கூடும் கல்கத்தாவுக்குப் போகத்
தீர்மானித்தோம். நாம் ஒண்டியாகப் போவதால், வழியிலும்
ஊரிலும் யாதாவது வியாதி கண்டால் திக்கில்லாமல் தவிக்க
வேண்டி வருமென்று நமது டாக்டர் சுரம் கொள்ளைநோய்
முதலானவைகளைக் கண்டிக்கும் சில பல மருந்துகளைத் தயார்
செய்து எமது பெட்டியில் வைத்ததன்றியில், நாம் நெடுந்
தூரம் அன்னபானாதிகளற்று யாத்திரை செய்யவேண்டிய
தைக் கருதி, வழியில் சாப்பிட "பூரி" என்ற கோதுமை அப்
பங்களையும், ஒரு கூசா காப்பித்தண்ணீரையும் தயார் செய்து
கொடுத்தார். இவைகளைப் பெற்றுக்கொண்டு எமது பெண்டு
பிள்ளைகளையெல்லாம் அந்தக் கயாவின் புரோஹிதர்களில்
மகா உத்தம ஸ்வபாவசரான ஸ்ரீ கிருஷ்ணபடவ்சாவர்கள்
கிருஹத்தில் அவராதரவிலே விட்டு, அவர்களுக்குத் துணை
யாக நமது வைத்தியர், எம்முடன் வந்த பிரயாகை இரங்கரா
யர், காசி இராமசாஸ்திரிகள் இவர்களையும், வாசலைக் காப்பதற்
குத் தேவதத்தன் என்னும் சுத்தவீரனையும் காவலாக வைத்
தும் (1905௵ டிசம்பர்மீ 25உ காலை 6-மணிக்கு) புறப்
பட்டோம். நாம் கோயமுத்தூரிலிருந்து கொண்டுபோன
(Boots) பூட்சு ஜோடுகள் சிறிதாகவிருந்து கால்களைக் கடி
த்து நடப்பதற்குக் கூடாமற்போனபடியால், இரண்டு ரூபா
யில் பெரிய ஜப்பான் பூட்சுகளை வாங்கிக்கொண்டு கயா ஸ்டே
ஷனுக்கு வர, அவ்விடம் அப்போதுதான் வந்துநின்ற (மெ
யில்) புகைவண்டியில் கூடலூர் ஜில்லாவின் பிரதிநிதிகளாகிய

ம-ா-ா-ஸ்ரீ தெய்வநாயக முதலியாரவர்கள், ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தசாமி நாயடுகாரு முதலானவர்கள் சம்சார சமேதராக வந்து இறங்கினார்கள். அவர்களுக்குத் தகுந்த ஜாகை முதலானவைகளைத் தயார்செய்து கொடுக்கும்படி இராமசாஸ்திரிகளுக்குச் சொல்லித் திட்டப்படுத்தி, கயாவிலிருந்து கல்கத்தாவுக்கு 12½ ரூபாய் கொடுத்து (இண்டர்மீடியட் கிளாஸ்) ஒரு டிக்கட்டு வாங்கிக்கொண்டு, பகல் 12 மணிக்கு வண்டியேறி அன்று பகல் 2-30-மணிக்கு பான்கீபூர் என்னும் ஜங்க்ஷன் ஸ்டேஷனைச் சார்ந்து, அப்போது அவ்விடம் வந்த ஈஸ்டரன் ரெயில் வண்டியிலேறி 3-30-க்கு (Patna) பாடலீபுரத்துக்கு வந்து சேர்ந்தோம்.

புராதன பாடலீபுரம் என்னும் பாட்னாவானது கங்கைக்கு வலது பக்கத்தில் இருக்கிறது. வாயு புராணத்தின்படி இது அஜாதசத்துருவின் பேரனாகிய இராஜ உத்வாசுவாவினால் ஸ்தாபிக்கப்பட்டதாம். அந்த அஜாதசத்துரு கவுதம புத்தருடைய சஹகாலவாசி. இந்தப் பட்டணத்தை வந்து பார்த்து மேகஸ்தின் என்பவர் இதை 24 மைல்கள் சுற்றளவுள்ளதாகவும், 570 கோயில் கோபுரங்களையுடையதாகவும் இருந்ததாகச் சொல்லியிருக்கிறார். சினதேச யாத்திரிகரான ஹியூன்திசாங்கு என்பவர் வந்து பார்த்து இதைச் சிறப்பித்து எழுதியிருக்கிறார். மகம்மதியர் இராஜாங்கக்காலத்தில் அவரங்கஜீபுனுடைய பேரன் சாஅஜீம் ஆண்டுவந்தபோது, அவர் ஞாபகச்சின்னமாக மேற்குப்பாகத்தில் சாஅஜீம்என்னும் ஒரு கோரி கட்டப்பட்டு அங்கே வருஷத்தில் 5000 பெயர்களும் மோஹரம் பண்டிகைக்காலத்தில் 1,00,000 ஜனங்களும்வந்து கூடுகிறார்கள். இது கல்கத்தாவுக்கு 332 மைல்கள் தூரத்திலிருக்கிறது. இந்த பாட்னாவுக்கு 50 மைல் தூரத்தில் மொகாமா ஸ்டேஷன் இருக்கிறது. அங்கு 6-30க்குச் சேர்ந்தோம். மொகாமா ஸ்டேஷனிலிருந்து பார்ட்வான் வழியாகக் கல்கத்தாவுக்குப் போகும் (Chard) லைன் (கார்டு) என்ற லைப்பாதையும், மாங்கிர், ஜம்மலாபூர் முதலானவைகளின் வழியாகப் போகும் (Loop) லூப் லைன் என்ற வளைவுப்பாதையும் பிரியும் பெரிய ஜங்க்ஷனானபடியால் இந்தவிடத்தில் புகைவண்டியானது ஒரு மணிக்கு அதிகமாகவே நிற்கிறது. ஆகையால் இவ்விடத்தில் சிற்றுண்டியை உண்டு இளைப்பாறலாமென்று கூசாவின் மேல்மூடியைப் பிடுங்கப் பிரயத்தினப்பட்டதில், அது ஸ்கூருவைத்த மூடியானபடியாலும், அது

வளைவுதப்பி மாட்டிக்கொண்டதாலும் என்ன உபாயம்செய்து பிடுங்கப்பார்த்தும் வரவில்லை. ஆகவே அதை யெடுத்து மூலையில் போட்டுவிட்டுப் பூரியை யெடுத்து உண்ணப்பார்க்கையில் அவைகள் தித்திப்புப்பதார்த்தங்களாகையால் அந்தக்கொடிய குளிர்காலத்தில் வாயில் போட வாயே விரும்பவில்லை. அந்த ஸ்டேஷனில் குழாய் ஜலம் வைத்திருந்தாலும் அதைத்தொட்டால் குளிர்ச்சியினால் தேள் கொட்டுவதைப்போ லிருந்தபடியால் அதையும் குடிப்பதற்குச் சரிப்படவில்லை. கடைசியாக அந்த இராத்திரியெல்லாம் உபவாசமாக விருக்கவேண்டி வந்தது. ஆனால் நாம் ஏறிப்போன வண்டியில் ஒரு துரைசானியும், இரண்டு துரைமார்களும் வந்தபடியால் அவர்களோடு மதவிஷயமான சில விஷயங்களைப்பற்றி சல்லாபனை செய்து கொண்டுபோக, பிறகு இராஜாங்க விஷயத்தைப்பற்றிப் பேச வந்து கடைசியாக, "இத்தேசத்தார் நன்றிகெட்டவர்கள்" என்று ஒரு வெள்ளைக்காரன் சொல்ல, அதை நாம் மறுக்க, இருவருக்கும் கைகுத்துச் சண்டை வரும்போலத் தோன்றிற்று. நாமிருந்த (கம்பார்டுமென்டில்) வகுப்பில் எம்மைத் தவிர சுதேசி யாருங் கிடையாது. எம்மோடு எதிர்த்த வெள்ளைக்காரர்களோஇருவர். அதிலும்பெரியஉத்தியோகஸ்தர்களாயும்திடகாருட்டியர்களாயுமிருந்தார்கள். இப்படிக்கிருந்தும்பயப்படாமல் வாக்குவாதம் செய்து அவர்கள் இந்தேசத்து ஜனங்களின்மீது சுமத்த நினைத்த கெட்ட அபிப்பிராயத்தை நியாயவாயிலாக எடுத்துக்காட்டிப் பிறகு சுமார் பனிரெண்டு மணிக்குக் குளிரின் உபத்திரவத்தினால் மெய்மறந்து தூங்கினோம். வண்டியானது மறுநாள் காலை சுமார் ஐந்து மணிக்கு (Burdwan) பர்ட்டுவான் ஸ்டேஷனைச் சேர்ந்தது.

BURDWAN.
பர்த்துவான்.

ஒரு பகலும் ஒருஇரவும் அன்னபானாதிகளற்று அவதிப்பட்டதினாலும், மலஜலபாதைகளைக் கழிக்க வகையற்றுப் போனதினாலும், அந்த வண்டியிலேயே நேராகக் கல்கத்தாவுக்குப் போகச் சரிப்படாமையாலும், அந்த பர்ட்வான் ஸ்டேஷனில் இறங்கினோம். இறங்கினதும் (மூன்று மணி காலத்துக்கு) $1\frac{1}{2}$ ரூபாய் சத்தத்தின்பேரில் ஒரு (பக்கியை) இரட்டைக் குதிரை கோச்சு வண்டியை வாடகைக்குக்கொண்டு ஏறி, அந்தப் பர்த்துவான் ஊருக்குக் கடைசியில் போய்

ஒருவிசாலமானபுலத்தில் மலஜலபாதைகளைக் கழித்துக்கொண்டு, அருகிலிருக்க அழகிய தடாகத்தில் ஸ்நானம் செய்து, அந்த பர்த்துவான் இராஜாவின் புகழ்பெற்ற சிங்கார வனமாகிய உத்தியாவனத்துக்குள் பிரவேசித்தேம். அந்த உத்தியாவனத்தைப்போல் அவ்வளவு அழகிய சிங்காரவனத்தை இந்த இந்துதேசத்தில் மற்றெங்கும் கண்டதில்லை. கல்கத்தாவிலிருக்கும் (Zoo) ஜூலிஜிகல் தோட்டமும், டில்லியிலிருக்கும் விக்டோரியா தோட்டமும், பிருந்தாவனத்திலிருக்கும் குஷ்ம சரோவரமும், ஜெயப்பூரிலிருக்கிற ராமநிவாஸ் என்னும் தோட்டமும், ஆக்ராவிலுள்ள டாஜ்மஹால்தோட்டமும் ஆச்சரியகரமானவைகளென்று சொல்லக்கூடினும், இந்த பர்த்துவானிலிருக்கும் இராஜ தோட்டத்தை அமைத்த விதமே அதிக ஆச்சரியகரமானதென்று யாவரும் சொல்லுவார்கள். இந்தத் தோட்டத்துக்குள் பிரவேசித்தவுடனே இந்த உலகத்திலிருக்கும் பலவித மிருகங்கள், பக்ஷிகள், பிராணிகள் முதலானவைகளை வெகுபுத்திசாலித்தனமாக அமைத்தும், வனத்தில் பலவிதமான விருக்ஷங்களை வைத்தும், அவைகளிடம் போய்ப்பார்க்க நயகாரையினால் சிறுபாதைகள் ஸ்படிகக் கற்களைப்போல் கட்டியுமிருக்கிறார்கள். மத்தியில் அற்புதமான அமைப்புடன் தடாகமும், அதைச் சுற்றிலும் அடுக்கடுக்காக அமைக்கப்பட்ட படிகளும், அந்தத் தடாகத்தின் ஒவ்வொரு மூலையில், ஸ்படிகக்கற்களால் ஸ்திரி பிரமாண சிங்கார ஸ்திரி பிரதிமைகளை நிற்கவைத்தும், தடாகத்தின் மத்தியில் சஞ்சலமற்றுச் சம்சாரம்செய்ய மூன்றடுக்கு மெத்தையுள்ள சிங்கார மந்திரமும் கட்டப்பட்டிருக்கின்றது. சுற்றுப் பக்கத்தின் காக்ஷி பார்ப்பவர்களுக்கே பரிஷ்காரப் படுமேயன்றி புத்தகத்தில் எழுத முடியாது. இப்படிப்பட்ட தடாகத்தையும் உத்தியா வனத்தையும் பார்த்து பச்சப்பசேரென்றிருக்கும் பாக்குமரங்களின் அடியில் உட்கார்ந்து அருணோதய பிரம்ம பிரார்த்தனையும், பிரம்ம தியானமும் செய்துகொண்டு பர்த்துவான் பட்டணம் பார்க்கப் பிரவேசிக்க, பசியின் உபத்திரவம் பொறுக்கக்கூடாமையால், பட்டணத்தின் உக்கடத்தில் பங்காளிப் பிராமணர் பணம் பெற்றுப் போஜனம் போடும் சத்திரத்தில் போய்க் கேட்க அந்தப் பங்காளி பிராமணர்: 8 அணு கொடுத்தால் பத்துமணிக்குச்சாப்பாடு போடுவதாகச் சொன்னர். எமக்கோ பங்காள பாஷை சுத்தமாகத் தெரியாது. அவருக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் பாஷையின் பொறுக்கு மொழிகள் மாத்திரம் தெரியும். ஆகையால் சமிக்

கைகளினால்தெரிவித்த 8-அனுவையுங் கொடுத்து,நாம்மாமிச பக்ஷணியல்லவென்றும், கந்தமூல பதார்த்தங்களால் தயார் செய்யும்படியும் சொல்லிப்போனோம். ஏனெனில் பெரும் பான்மையான பங்காளிகள் மாமிசபக்ஷணிகளானபடியால் முன் ஜாக்கிரதை செய்யவேண்டி வந்தது. இந்த பர்த்வான் பட்டணமானது பங்காள இராஜதானியைச் சார்ந்த ஒரு (டிவிஷன்) பாகம். பிர்பூம் (Birbhum), பான்குரா, (Bankura), மதனபூர் (Madanapure), ஹுக்ளி(Hugli) முதலானவைகள் கூடி 2,224 சதுரமைல்களுள்ள மாகாணங்கள் இதைச் சார்ந்தவைகள். இதற்குக் கிழக்கே கப்பல் யாத்திரை செய்யும்படியான ஹுக்ளிநதி ஓடுவதன்றியில், பாகிரதி நதியும் ஓடுகின்றது. இந்தப் பாகங்களில் உப்பும், மீன்களும், அதிகமாக வியாபாரமாகி வருவதன்றியில்; இரும்பு, புகைவண்டிக்கரி, பருத்தி, புகையிலை, நீலிமருந்துச்சாயம்,டாச்சா சில்க்கென்னும் கோராப்பட்டுத் துணிகள் ஏராளமாக வியாபாரமாகி வருகின்றன. நெல், உருளைக்கிழங்கு, ஆமணக்கு, கரும்பு முதலானவைகள் ஏராளமாக விளைகின்றன. பர்த்துவான் பட்டணமானது தாமோதர நதியின் (Domodara) மேல் கட்டப்பட்டுச் சுமார் 98050 வீடுகளும், சுமார் 70000 ஜனங்களுமுள்ள அழகிய பட்டணம். பட்டணத்தின் மத்தியில் அந்த இராஜாவின் அழகான அரண்மனை கட்டப்பட்டிருக்கிறது. நகரெங்கும் ரோட்டுகள் செம்மையாகப் போடப்பட்டும்,திபஸ்தம்பங்கள்நடப்பட்டும், குழாய்ஜலம் கொண்டுவரப்பட்டும் அழகாக விருக்கின்றது. இந்தவிடம் கி.பி. 1760ஸு மியர்காசிமினிடம் சமாதான உடன்படிக்கை செய்தபோது அங்கிலேயர் வசமாகி 1765ஸு ஷாஹாலம் என்னும் சக்கிரவர்த்தியால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இப்போது பெயருக்கு மாத்திரம் இராஜபட்டம் பெற்ற ஒரு ஜமீன்தார் வசத்திலிருக்கிறது.இவருக்கு வருஷத்தில் சுமார் 1,30,000 ரூபாய் வரையில் வருமானமுண்டு. 1843ஸு 25,000 ரூபாய்களை மெடிகல் காலேஜ் விஷயமாகவும், வித்தியா உதவி விஷயமாகவும் செலவிட்டதன்றியில், 12,600 ரூபாய் செலவில் பர்ட்டுவான் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பாதிப் பணம் குடிகளால் வரவு. இப்போது கவர்ன்மெண்டு பாடசாலையொன்றும், சர்ச்சுமிஷன் பாடசாலை யொன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டணத்தை யெல்லாம் சுற்றிப்பார்த்து அவ்விடத்திய பிரம்மஸமாஜ மந்திரத்துக்குப் போய் அதன் காரியதரிசியைத் தேடிப்பார்க்க, அகப்படாமையால்

புகைவண்டி போகும்காலம் சமீபித்ததினிமித்தம் திரும்பி ஸ்டேஷனுக்கு வரும்வழியில் முன் அச்சாரம் கொடுத்த சத்திரத்துச்சாப்பாட்டிற்குப் போனோம். அந்தச்சத்திரத்துத் தாழ்வாரத்தில் பந்தல் போடப்பட்டு அதில்சுரைக்காய்ச்செடி படர்ந்திருந்தது. அந்தப் பந்தலின்மேல் அப்போதுதான் அறுத்துச் செந்நீர் சிந்திக்கொண்டிருந்த ஒரு புள்ளிமானின் தோல் போடப்பட்டிருந்ததைக் காணச் சந்தேகம் ஜெனித்து, சத்திரத்துப் பங்காளப் பிராமணரை அழைத்துப் போஜனம் தயாராச்சுதாவென்று கேட்க, அவர் உள்ளேபோய் ஒரு பித்தளைத் தட்டில் கொஞ்சம் சாதமும், இரண்டு மூன்று பூரிகளும், இரண்டு வேவித்த உருளைக்கிழங்குகளும், சில வெள்ளெலும்புகள் வெட்டுடன் தோன்ற ஒருபிடி மாமிசமும், கொஞ்சம் துவரை பருப்புடன் கொண்டு வந்து தாழ்வாரத்தில் வைத்துச் சாப்பிடச்சொன்னார். அந்தோ! நாம் மாமிச பக்ஷணியல்லவென்று முன்னமே சொல்லியிருந்தும், அந்த மனுஷன் ஞாபகமிலோ அல்லது தப்பான தர்ஜமாவை ஊர்ஜிதமாகக் கொண்டோ மான் மாமிசத்துடன் அன்னமிட, மனஞ்சலித்து எமது பணத்தையாவது திருப்பிக்கொடுமென்று கேட்க, அவர் அதையும் திரும்பக் கொடேனென்று சாதிக்க, சிவமே யென்று வந்து வண்டியேறி ஸ்டேஷனைச் சேர்ந்து, இரண்டு கிச்சிலிப்பழங்களையும், கொஞ்சம் பாலையும் ஆகாரமாகக்கொண்டு புகைவண்டியேறி அன்று மத்தியானம் இரண்டு மணிக்குச் சந்திரநாகூர் என்னும் ஸ்டேஷனைச் சேர்ந்தோம். வழியில் பசி உபத்திரவம் அதிகமானபோதிலும் வழி முழுதும் கங்கை நதியோரமானதால், கண் எட்டுகிற தூரம் வரையில் எங்கே பார்த்தபோதிலும், நெல், கோதுமை, கடுகு முதலானவைகள் பயிர்செய்யப்பட்டுப் பார்க்கப் பார்க்கப் பசி உபத்திரவம் தோன்றவில்லை. கங்கைநீர் பாயும் பூமியானது பயிர் செய்வதற்கு அதிக வளப்பமாக இருப்பதால் பயிர் செய்யாத ஒரு துண்டு நிலமாவது காணக்கிடையாது.

CHANDRANAGORE.

சந்திரநாகூர்.

பசி வருத்தத்தைத் தணிப்பதற்கும், பீவர் பத்திரிகையின் ஆசிரியர் பாபு அமிர்தலால் ராய் என்பவரைக் காணக் கருதியும், பட்டணத்தின் அழகைப் பார்க்க விரும்பியும்

இந்தச் சந்திர நாகூரில் இறங்கினோம். இது ஊக்ளி நதியோரத்தில் கட்டப்பட்டுச் சுமார் 2330 ஏகரா விஸ்தீரணமும் கல்கத்தாவுக்கு 22-மைல்கள் தூரத்தில் இருக்கிறது. நமது சென்னை புதுச்சேரி கவர்னருடைய அதிகாரத்துக் குட்பட்டது. 1673ஆ பிரான்சுக்காரருடைய அதிகாரத்திலிருக்கும் அழகியபட்டணம். அங்கிலேயரும், பிரான்சுக்காரரும் இருக்கும் வீடுகளைத் தேவலோக கட்டிடங்களைப்போல அந்தஊக்ளி நதிக்கரையின்மேல் அழகான தோட்டங்களில் கட்டிக்கொண்டிருக்கின்றனர். இப்போது சுமார் 3,26,700 ஜனங்கள் வரையில் குடியிருப்பதாகத் தெரியவருகிறது. சுதேசிகளுடைய வீடுகள் பெரும்பாலும் சாதாரணமான குடிசைகளே. ஆனால் எங்குப் பார்த்தபோதிலும் வாழை,கமுகு தோட்டங்களிருப்பதால் ரம்மியமாக விருக்கிறது. பிராம்மணர் முதலான வைதிகர்கள் கங்கா ஸ்நானம் செய்வதற்கு அழகான படிக்கட்டுகள் கட்டப்பட் டிருக்கின்றன. இந்த அழகிய நகரம் கி. பி. 1703ஆ பிரான்சுக்காரர் வசத்தில்சேர்ந்து,டியூபில் (Duple) காலத்தில் சிறப்பைப் பெற்றது. 1757ஆ கிளைவ் துரையால் பிடிக்கப்பட்டு, 1763ஆ இங்கிலாந்தில் சமாதானமான போது மறுபடியும் பிரான்சுக்காரர் வசமாகி, 1893ஆத்தில் மறுபடியும் அங்கிலேயரால் பிடிக்கப்பட்டு, 1816ஆ நடந்த சமாதானத்தினால் பிரான்சுக்காரர் வசமாகிவிட்டது. இந்தப் பிரான்சுக்காரர் ரோமன் கத்தோலிக் மதஸ்தர்க ளானபடியினால், ஐரோப்பா கண்டத்தைச் சார்ந்த பாரீசு நகரத்திலிருக்கும் கிறிஸ்துகோயில்பாவனையாகச்சிற்பலங்காரமான கோயில் கட்டிக்கொண் டிருக்கிறார்கள்.இவ்விடத்திலும் நமக்குச் சாப்பாடுகிடைப்பது துர்லபமாகிவிட்டபடியால்,சுமார் ஐந்துமணிக்கு ஸ்டேஷனுக்கு வந்தோம். அந்த ஸ்டேஷன்மாஸ்டரும், அவருடைய உதவி உத்தியோகஸ்தர்களும் நம்மை உபசரித்துச் சிலசமாசார பத்திரிகைகளை வாசிக்கக் கொடுத்தார்கள். இனி கல்கத்தாவில் காங்கிரஸ் சபையார்கள்போய்த் தங்கும் பாபு ஜானகி நாதகோஷவாலவர்கள் உத்தியாவன வீடு எமக்குத்தெரியாது. இராத்திரிகாலத்தில் அந்தப் பென்னம்பெரிய பட்டணத்தில் அவர் வீட்டை எப்படித் தேடிக் கண்டுபிடிப்பதென்று நினைக்கும்போது பர்த்வான்ஸமஸ்தானத்தின் டிப்டி மாஜிஸ்திரேட்டானவர் தமது குமாரத்தியையும், மருமகனையும் கல்கத்தாவுக்கு அனுப்ப வழிவிட வந்தார். அந்த மருமகனுக்குச் சுமார் 25 வயது. காலேஜில் வாசிப்பதற்கு மாமனார் வீட்டிலிருந்து மனைவியோடு போகிற அவருக்கு பாபுஜானகி

நாத கோஷவர்கள் வீடு தெரியுமாகையால், அவரைத் துணைப் பற்றிப் போகும்படி, அந்த டிப்டி மாஜிஸ்திரேட்டும், ஸ்டேஷன் மாஸ்டர்களும் நமக்குப் பரிகூஷபம் செய்து வைத்தார்கள். அவர்கள் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறியபடியால், நாமும் 1½ ரூபாய் அதிகம் கொடுத்து அந்த வகுப்புச் சீட்டைவாங்கிக்கொண்டு அதே வண்டியிலேறிப்போய்ச் சுமார் 8 மணிக்கு(Howrah)ஹவ்ரா ஸ்டேஷன் என்னும் கல்கத்தாவைச் சேர்ந்தும், இரண்டுரூபாய் வாடகைக்குக் கோச்சு வண்டியை அமர்த்திக்கொண்டு நாமும் நமக்குத் துணைவர்களாக வந்த வாலிப சதிபுருஷர்களும் வண்டியேறினேம். ஹவ்ரா ஸ்டேஷன் பிரம்மாண்டமான கட்டிடம். அவ்விடமிருந்து கல்கத்தா பட்டணத்தைப் பார்த்தால், எங்குப் பார்த்தபோதிலும் தீப கோடிகளும், மாளிகை மண்டபங்களும், வண்டிகள் வாகனங்களும் நிறைந்து லண்டன் பட்டணத்தைப் பற்றிப் படித்ததைப்போ லிருந்தது. பிறகு ஊக்ளி நதியின்மேல் கட்டப்பட்ட முக்கால் மைல் தூரமுள்ள படகு பாலத்தின்மீது போய் அநேக பெரிய வீதிகள், மாடமாளிகைகள், கூடகோபுரங்களையெல்லாம் கடந்து கல்கத்தாபட்டணத்துக்குக் கடைசியிலிருக்கும் பாபுஜானகி நாத்கோஷவாலவர்கள் வீட்டுக்குச் சுமார் 10 மணிக்குப்போய்ச் சேர்ந்தோம். அவ்விடத்தில் வாந்திபேதி அதிகரித்தபடியால், காங்கிரஸ் சபையாருக்கு (Parke Street) அங்கிலேய துரைமார்களிருக்கும் வீதிகளில் விடுதிகள் தயார் செய்யப்பட்டதாகவும், எம்மையும் அவ்விடம் போகும்படியாகவும், ஜானகிலால் பாபவர்களுடைய சகோதரர் சொல்லி (ஒரு தர்வான்) சேவகனை எமக்குத் துணையாக அனுப்பினர்கள். இனி மறுபடியும் 7-8-மைல் தூரத்திலிருக்கிற பார்க்கு வீதிக்குப் பசியோடும் அலைச்சலோடும் போய்வரச் சம்பவித்தது. எமக்குத் துணையாகவந்த வாலிப புருஷனும் அவர் மனைவியும் பாலியர்களானபடியால், அவர்களை மறுபடியும் வருத்தக்கூடாதென்றெண்ணி அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய் அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு, எமக்குத் துணையாகவந்த சேவகனுடன் பார்க்கு வீதியில் 13-ம் நெம்பர் வீடாகிய பெரிய மாளிகைக்கு 12 மணிக்குப் போனேம். அலைச்சலினாலும், பசியினாலும், பிராணன் தத்தளித்தது. ஷை கட்டிடத்தின் வாசலில் ம-ா-ா-ஸ்ரீ. பி. வ. நாராயணசாமி செட்டியா ரவர்களும், பாபு கிரஜாபூஷன் மூகர்ஜி அவர்களும் இருந்து எமது பெயரைத் தங்கள் பட்டியில் தாக்கல் செய்துகொண்டு, மேல்மாடிக் கனுப்பினர்கள். அங்கு

ஒரு பெரிய ரூமில் ஸ்ரீ ஹானரபில் சுப்பிரமணியம் ஐயரவர்களும், இந்து பத்திராதிபர் ஸ்ரீ. ஜி. சுப்பிரமணியம் ஐயரவர்களும் அப்போது கப்பலில்வந்த அலேச்சலினால் படுக்கப்போகிறார்கள். எம்மைக் கண்டவுடனே ஆனந்த பரவசராகி கைலாகு கொடுத்து உபசரித்து க்ஷேமத்தைப் பேசினார்கள். பிறகு சாப்பிடப்போனால், அவ்விடத்திலும் பங்காளி பிராம்மணர்கள் பித்தளைத் தட்டுகளில் சாதம் வைத்துக்கொண்டிருந்ததைக்கண்டு சாப்பிடச் சரிப்படாமல் ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணியம் ஐயரவர்களுடைய சுயம்பாகினியிடம் கொஞ்சம் மிளகுரசச்சாதத்தை உண்டு அடுத்த ஹாலில் படுக்கப்போனோம். அந்த ஹாலில் ஐந்து கட்டில்கள் போடப்பட்டு, அவைகளில் ஒன்றில் பல்லாரி ம-ா-ா-ஸ்ரீ இராயபஹதூர் சபாபதிமுதலியாரவர்களும், ஒன்றில் பி. ஏ வெங்கடராயரவர்களும், ஒன்றில் ம-ா-ா-ஸ்ரீ இரங்கநாதமுதலியாரவர்களும் படுத்துப் பூரணநித்திரை செய்துகொண்டிருந்ததைக்கண்டு சந்தோஷப்பட்டு, காலியாகவிருந்த ஒரு கட்டிலில் நாமும் படுத்து மெய்ம்மறந்து தூங்கி மறுநாட்காலையெழுந்து நமது சிநேகிதர்கள் பலர் அங்கு இருக்கக் கண்டு ஆநந்தமடைந்தோம்.

CALCUTTA.

கல்கத்தா.

இந்தக் கல்கத்தாவானது பங்காள இராஜதானியைச் சார்ந்தது. அந்தப்பங்காளத்தில் கீழ்நாடுகளில் பங்காளம், ஓரிசா, பேகார், சோட்டா நாகப்பூர் என்னும் நான்கு மாகாணங்கள் ஒரு லெப்டினென்டு கவர்னரவர்களுடைய அதிகாரத்திற்குள்ளிருக்கின்றன. அவைகள் இந்தியாவில் அதிகவளப்பமுள்ளவைகளாகவும், கங்கை, பிரம்மபுத்திராதி நதிகளால் ஜலாதாரமுடையவைகளாகியும், 1,60,000 சதுரமைல் விஸ்திரணமும், அதற்குட்பட்ட குறுநில மன்னர்களுடைய நிலத்தோடு 2,00,000 சதுரமைல்களுள்ள விஸ்திரணமும், சுமார் 72 கோடி. ஜனவாசமுள்ளதும் அவைகளில் முக்கியமானது பங்காளமாகாணமுமாம். இது இமயமலையடிவாரத்துக்கும்,பங்காளகுடாக்கடல்களுக்கும்வடக்கேயுள்ள பாகங்களையுடையது. இம்மாகாணத்தில் ஏராளமாக நெல் விளைகின்றது. இதில் குடியிருக்கும் பங்காளிகள் 4 கோடியாக அதாவது இந்தியாவின்

குடிகளில் ஆறுபெயர்களில்ஒருவன் பங்காளி என்றுசொல்லலாம். இந்தக் கீழ்வங்காளத்தின் ரெவினியுவை வசூல் செய்யும் சுதந்திரம் 1765௵ ஷாஹாலம் சக்கிரவர்த்தியால் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. 1853௵ இம்மாகாணங்களுக்கு ஒரு லெப்டினெண்டு கவர்னர் நியமிக்கப்பட்டார். அதற்கு முந்தி இந்தக் கீழ்வங்காளம் கவர்னர் ஜனரலவர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டு, அந்தச் சிரேஷ்ட தேசாதிபதியவர்கள் இந்த மாகாணத்தின் சிறந்த பட்டணமாகிய கல்கத்தாவிலிருந்து செங்கோல் செலுத்தினார்கள்.

இந்தக் கல்கத்தாவுக்குக் கிழக்கேயிருக்கும் அதிக பாகங்களைக் கங்கை பிரம்மபுத்திரா நதிகளினாலும், அவற்றின் கிளை நதிகளினாலும் தண்ணீர் பாய்ச்ச ஏராளமாக நெல் முதலான பயிர்கள் செழிப்பாகவிளைகின்றன. இந்தக் கிழக்கு வங்காளத்தின் பெரும்பான்மையான ஜனங்கள் கிராமங்களில் குடிசைகளைக் கட்டிக்கொண்டு குடியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் சில விசேஷ பெரிய பட்டணங்களும் இருக்கின்றன. அவைகளில்,

(1) டாக்கா என்பது ஒரு விசேஷ பட்டணம். இது கங்கை பிரம்மபுத்திர நதிகளுக்கிடையில் இருக்கிறது. இது 12-வது நூற்றாண்டில் வங்கநாட்டில் மகம்மதியருடைய பிரதானபட்டணம். இவ்விடத்தில் விலையுயர்ந்த துணிகள் நெய்யப்படுகின்றன.

(2) ஆஸாம்: இது 1774௵ கீழ் வங்காளத்தை விட்டுப் பிரிக்கப்பட்டு, பிறகு ஷீல்ட்டு மாகாணத்துடன் சேர்க்கப்பட்டது. இப்படிச் சார்ந்த மாகாணம் 46,000 சதுர மைல்கள் விஸ்திரணமுள்ளதாயும், 5½-லக்ஷம் ஜனங்களுள்ளதாயும், ஷிளாங்கு, காஷிஇல்ஸ், செரபூஞ்சி முதலான இடங்களை உடையதாயும், நாகா, ஜயின்டியா, காசி, காரோ மலைகளையுடையதாயும், ஏராளமாக நெல்விளைவு உடையதாயும் இருக்கிறது. தேயிலைப் பயிர் இந்தியாவுக்குள் முதல்முதல் இந்த இடத்தில்தான் பயிர்செய்து பரிக்ஷிக்கப்பட்டது. அதற்கு ஷிலெட்டும், ஆரஞ்சிப் பழங்களுக்குச் சிறந்த காச்சாரும் தோட்டப்பயிர்களால் புகழ்பெற்றவை.

(3) ஒரிசாமாகாணம்: இது கீழ்ப்பங்காளத்தின் தென்மேற்குச் சமுத்திரக்கரையோரத்திலிருக்கிறது. இது 24,000

சதுரமைல்கள் விஸ்திரணமும் 5 லக்ஷம் குடித்தொகையு முள்ளது. இது ஆதியில் ஒட்டிரதேசத்தைச் சார்ந்தது. குடிகள் ஒரியாபாஷையைப் பேசுகிறார்கள். இதற்கு பாலசூர், கட்டாக், பூரி என்ற இடங்கள் ஜில்லாக்களாக இருக்கின்றன. அவைகளில் பூரியில் ஜகந்நாதர் கோயிலிருக்கிறது அதற்கு இலக்ஷக்கணக்கான யாத்திரைக்காரர்கள் போய்வருகிறார்கள்.

பூரி ஜகந்நாதத்தின் விருத்தாந்தம்.

ஒரிசா மாகாணமானது தென்மேற்கு வங்காளத்திற்குக் கரையோரமாகவும்,சுபான்ரோ,சில்காஏரிகளுக்குச்சற்றுத் தூரத்திலும் இருக்கிறது. அதன் சுற்றளவு 24,000 மைல்களும், சுமார்ஐந்துலக்ஷம் ஜனத்தொகையுமுள்ளது. ஆதியில் இதற்கு உத்கலதேசமென்று பெயர். இந்த மாகாணத்தில் பூரி, கொனாரக, புவனேசுவர் என்னும் மூன்று கோயில்கள் இருப்பதனால் இது சிறப்புப்பெற்றது. அவைகளில்,

(1) பூரி என்பது சமுத்திரக்கரையோரத்தில் 24,000 குடிகளுள்ளதாயும்,ஆதியில் நீலச்சிலா அல்லது நீலமலையென்று பெயரைபெற்றதாயுமிருந்தது. அதுசுமார் 20 அடிகள் உயரமுள்ள மணல்மேடே.ஆதியில் (கி.மு. 400 முதல் கி.பி. 200) பவுத்தருடையது. அதற்கு அசோகருடைய சாசனங்களே திருஷ்டாந்தமாகும். எப்படியெனில்,புத்ததேவருடைய சிடர்களில் ஒருவராகிய கேமா என்பவர், புத்தருடைய பற்களில் ஒன்றைக்கொண்டுவந்து, அக்காலத்தில் காலிங்கநாட்டில் ராஜனாக இருந்த பிரம்மதத்தனுக்குக் கொடுக்க, அவ்வரசன் அப்பல்லுக்கு ஓர் சிறந்த கோயிலைக்கட்டி, அதற்குத் தந்தபுரமென்று பெயரிட்டு வணங்கி வருகையில், பகையரசர்களுடைய சண்டைக்குப் பயந்து,அந்தப்பல்லை எடுத்துத் தன்குமாரத்தியின் தலையிருக்குள் மறைத்து இலங்கைப் புத்தருக்கு அனுப்ப, அவர்கள் அதிக மரியாதையோடு வாங்கி கோயில் கட்டி அதில் வைத்து இன்றளவும் வணங்கி வருகிறார்கள். பிறகு பிராம்மணர் புத்தரையும், விஷ்ணுவின் ஒரு அவதாரமாகக் கொண்டாடவே, இந்தப் பூரி முதலான இடங்கள் வைணவர் ஸ்தலங்களாயின. அப்படியாகவே, ஹுக்ளிமுதல் கோதாவரிவரையில் அரசுபுரிந்த இராஜா அணங்க பீமதேவர் கி. மு. 1174௵ ஆரம்பித்து 1198௵ வரையில் 7,50,000 ரூபாய் செலவுசெய்து அநேக சிற்பிகளைக்கொண்டு பதினான்குவருஷ

காலங்களாக இந்த ஜகந்நாதருடைய கோவிலைக் கட்டுவிப்பித்து அதற்கு நகை முதலான செலவுகளுக்காக பதினைந்து லக்ஷம் ரூபாய் சொத்தை மாணியமாகவிட்டார். அப்படிக் கட்டுவித்த இந்தக் கோயில் 652 அடிகள் நீளமும், 644 அடிகள் அகலமுமுள்ள பிரகாரமும், உள்பாகம் 22 அடிகள் உயரமுள்ள கல்சுவர் மதில்களால் கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பிரகாரத்துக்குள் அநேக கோயில்கள் இருக்கினும், அவைகளில் முக்கியமானது ஜகந்நாதருடைய ஆலயமேயாம். அதன் கோபுரம் 192 அடிகள் உயரமுள்ளதாகவும், செதுக்கிய கற்களால் சிற்பாலங்காரமாகக் கட்டப்பட்டதாகவுமிருக்கிறது. இப்படிக் கட்டப்பட்ட கோவிலுக்குள் கர்பக்கிருஹம் அதாவது ஜகந்நாதர், பலபத்திரர், சுபத்திரையின் விக்கிரகங்கள் இருக்கப்பட்ட மூலஸ்தான அறையும், சதுர் கச்சேரி அறையும், சபாமண்டப அறையும், ஸ்தம்ப வரிசைகளும் இருக்கின்றன. இந்த அரசன் 10 பெரியபாலங்களையும் 152 ஸ்நான கட்டடங்களையும் கட்டினாராம்.

இந்த ஜகந்நாத விக்ரகத்தின் விவரம்.

ஸ்ரீ கிருஷ்ணர் அம்பினாலடிபட்டு இறந்து ஒரு மரத்துக்கடியிலிருக்க, அவருடைய அங்கங்களைச் சேர்த்து விக்கிரகமாகச் செய்ய விரும்பிய இந்திரத்யும்னராஜன் விசுவகர்மாவை வேண்ட, அந்த விசுவகர்மாவும் சம்மதித்துத் தாம் சிருஷ்டிக்கும் விக்கிரத்தை 15 நாள்களுக்குள் எவரும் வந்து பார்க்கக்கூடாதென்று சம்பந்தம் செய்திருக்கையில், அவ்வரசன் ஆசையினாலும் ஆத்திரத்தினாலும் அந்த வாயிதாவுக்குள் விசுவகர்மாவைப் பார்க்க, அவ்விசுவகர்மா கோபித்து விக்கிரத்தை மூளியாகவும் விகாரமாயும் செய்தாராம்.

இப்படிப்பட்ட விக்கிரகமானது ஆறு அடி உயரமுற்றதாகவும், உருண்டைக் கண்களும், கூரிய மூக்கும், பிறைப்போன்றவாயும், கைகால்களற்றுக் கருப்பு வருணமுள்ளதாகவுமிருக்கிறது. பலபத்திரருடைய விக்கிரகமும் சற்றேறக்குறைய அதேவிதமாகவும், வளைந்த கைகளுள்ளதாகவும் சுமார் ஆறு அடிகள் உயரமுள்ள வெள்ளை மரக்கட்டையிற் செய்ததாகவும் இருக்கிறது. சுபத்திரையின் சிலை சுமார் ஐந்தடிகள் உயரமுள்ளதாகவும், சிறிய தலையும், மஞ்சள் வருணமுள்ளதாகவும் இருக்கிறது. இந்த விக்கிரகங்களை 16 அடிகள் நீளம்

4 அடிகள் உயரமுள்ள விசப்பலகையின்மீது வலது பக்கம் பலபத்திரரையும், இடது பக்கம் ஜகந்நாதரையும் மத்தியில் சுபத்திரையையும்வைத்துத்தினமொன்றுக்குப்பலதரம்துணி மணிகளால் அலங்கரித்துப் பூசைசெய்கிறார்கள். அப்பூசைகளில்மாலையிற்செய்யும்அலங்காரபூசையேசிறந்தது. இந்தஸ்தலத்தின் விசேஷங்களில் முக்கியமானது மஹாப்பிரசாதமே, அது தாழ்ந்த வகுப்பாரால் சமைக்கப்பட்டாலும் மஹாப்பிரசாதமாக சகல சாதியாரும் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இராசகுராடா என்பவர் பிரதிதினமும் பலவகை மிட்டாய்களைச் செய்தனுப்பி, பூஜையான பிறகு அவைகளை விற்று அவ்வரவை அந்த ராஜனுக்கு அனுப்புவது வழக்கமாம் உற்சவங்களில் உஷ்ண உடை உற்சவம், ஹோலிப் பண்டிகை, ஜாநஉற்சவம், ஸ்நாந உற்சவம், இரத உற்சவம். சிறந்தவைகள். இவைகளிற் சிறந்தது இரத உற்சவமே இது ஆவணி மாதத்தில் நடக்கிறது. இந்த இரதம் 45 அடிகள் உயரமுள்ளதாகவும் 16 சக்கிரங்களுடையதாகவும் இருக்கின்றது. இதை 4200 பெயர்கள் இழுக்கிறார்கள். அப்போது கூடும் கும்புக்குக் கணக்கேயில்லை. சிலர் மூட பக்தியினால் இரதச் சக்கிரத்திற் விழுந்து சாகிறார்கள். அப்படி இறப்பவர்கள் நேராக வைகுண்டம் போகிறார்கள் என்று நம்புகிறார்கள்.

கோனராகர் கோயில்.

இது கோனலாக இருக்கும் சூரியன் கோயில். இது பூரிக்கு 19 மைல்கள் தூரத்தில் கரையோரத்தில் 60 அடிகள் உயரமுள்ள மதில் சுவர்களும் அதற்குமேல் 64 அடிகள்உயரமுள்ளபுராதன கோபுரமும்,பலவித சித்திராலங்காரமுமுள்ள கருங்கல் கட்டடம். இதன் உள்பாகங்கள் காலமேற்றத்தினால் இடிந்துபோக, இப்போது ஒரு பெரிய அறைமாத்திரம் இருக்கிறது.

புவநேசுவரர் கோயில்.

இது கடகபுரிக்கு 20 மைல்கள் தூரத்திலிருக்கிறது. யயாதிகேசரிராஜன் காலத்தில் கி. பி. 500-ம்௵ இக்கோயில் வேலை ஆரம்பிக்கப்பட்டு கி. பி. 657 ௵ அவ்வரசன் நான்காம் சந்ததியால் முடிவுபெற்று கி. மு. 1099, 1104-ல் பலி

பீடம் கட்டப்பட்டது இதன் உயரம் 160 அடிகளாம். இதன் விக்கிரகம் 8 அங்குல உயரமுள்ளது. திரிபுவநேசுவரர் என்னும் இம்மூர்த்திக்குப் பிரதிதினம் 22 பூசைகள் நடக்கின்றன. இக்கோயிலைச்சார்ந்த விந்துசாகரம் என்பது விசேஷ தீர்த்தம். ஒருகாலத்தில் ஸ்தானகட்டடத்தில் ஆயிரக்கணக்கான கோவில்கள் இருந்தனவாம். இப்போது 500 அல்லது 600சில்லரைக்கோவில்களிருக்கின்றன. இந்தகல்கத்தாவுக்குப் பெங்கால் நாகப்பூர் ரெயில்வே ஸ்டேஷனாகவும் 311 மைல்கள் தூரமுள்ளதாகவும், மூன்றும் வகுப்புக்கு ரூபா 4-1-0 சார்ஜ் ஆகவும், சென்னைக்கு 774 மைல்கள் தூரத்திற்கு ரூபா 10-12-0 சார்ஜுள்ள இடமாகவும் இருக்கிறது. இதனருகே இருக்கும் சில்கா குளத்தில் ஸ்ரீ சைதன்யர் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஐக்கியமாயினராம். ஆகவே அநேக பெங்காளிகள் அடிக்கடி யாத்திரையாக வருகிறார்கள்.

CHOTANAGAPORE.
சோட்டா நாகப்பூர்.

இது பேகாருக்கும் மத்திய மாகாணங்களுக்கும் இடையிலுள்ள மலை நாடுகளையுடைய மாகாணம். இது உயர்ந்த மேட்டாந்தரை. இங்கு சந்தாலி, முண்டாரிகால் முதலான பல வகுப்பான குடிகள் கூடி 50,00,000 ஜனங்களிருக்கிறார்கள். மஹாராஷ்டிரர் படையெடுத்து வந்து தாக்கி பாழாக்கினார்கள். இங்கு பார்ஸ்நாதர் என்னும் ஒருமலை 4500 அடிகள் உயரத்திலிருக்கிறது. இது ஜைனமதஸ்தர்களுக்கு ஒரு விசேஷ ஸ்தலம். நிற்க,

CALCUTTA I. N. CONGRESS.
கல்கத்தா. இ. ந. காங்கிரஸ்.

1887ஆு டிசம்பர்மீ 27உ காலை பங்காள தேசீரைச் சாப்பிட்டு, சிநேகிதர்களோடு கூடிக்குலாவும்போது, இந்தக் காங்கிரஸ் சபைக்குப் போதுமான மகம்மதிய சகோதரர்கள் வராமையால், நமது சென்னை இந்து (The Hindu) பத்திரிகைக்கு மின் தபால் அனுப்ப யோசித்து ஷை பத்திரிகாசிரியரும், எமது ஆப்த சிநேகிதருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களுடன் மின் தபால் ஆபீசுக்கு (Telegraph Office) போனோம். அவ்விடத்தில் உத்தியோகஸ்தர்களுக்கு ஷை ஆபீசின் சட்ட திட்டங்களில் (Address) விலாச விஷயமாகத் தப்பான அபிப்பிராயமிருந்தபடியால், அதைப் பற்றிச் சற்றுநேரம்பேசி, சமாசாரத்தையனுப்பிவிட்டுத்திரு

ம்புகையில், ஸ்ரீமான் பண்டித சிவநாதசாஸ்திரியாரவர்களைப் (Pandit Sivanatha Sastri M. A.) பார்க்க ஆவல் அதிகரித்தது. ஏனெனில், நாம் காசியிலிருந்தும், கயாவிலிருந்தும் அவருக்குக் கடிதங்களெழுதியிருந்தபடியால், அவர் நமக்காக எங்கே வழிபார்த்துக்கொண்டிருக்கிறாரோ, அல்லது வெளியில் எங்கேயாவது போயிருக்கிறாரோ, என்று சந்தேகம் ஜனித்தது. மேலும் கோயமுத்தூர் முதலானவிடங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய கடிதங்கள் முதலானவைகளை அவர் பெயருக்கு அனுப்பும்படி திட்டம் செய்திருந்தோம். அன்றியும் கோயமுத்தூரை விட்டு கல்கத்தாவைச் சேருகிற வரையில் நமது இஷ்ட பந்துக்களுடைய சமாசாரங்களறிவதற்கு வகையில்லை. கடைசியாக, எமது கலாநிதி பத்திரிகை கிரமமாக நடந்துவரும் சங்கதியும் தெரியவில்லை. ஆகவே, இத்தியாதி கவலைகளைக்கொண்டு ஷை பண்டிதரவர்களைத் தேடிப் பார்க்க யோசித்தாலும், அந்தக் கல்கத்தா பட்டணமோ சாதாரணமாக சென்னை, பம்பாயைப்போல் சிறிய பட்டணமல்ல. பெரிய சமுத்திரத்தைப்போல பரந்த பிரம்மாண்ட பட்டணம்; மேலும் அப்போது காலை 8-மணிக்கு மேலாகிவிட்டது. 10-மணிக்கெல்லாம் (Government of India House) இந்த தேசத்தின் சிரேஷ்ட கவர்னர் ஜனரலவர்களுடைய வீட்டுக்குப்போகவேண்டிய விதியுமிருக்கிறது. இப்படிப்பட்ட கட்டாய ஸ்திதியோடு கருத்துகளைப் பல விடங்களிலும் போக்கிக்கொண்டு, கால் மைல்தூரம் வரவே, "கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்ததைப்போல" இரண்டு மூன்று நாள்களாக எமது வரவை எதிர்பார்த்துத் தேடிக்கொண்டிருந்த ஸ்ரீமான் பண்டித சிவநாத சாஸ்திரியாரவர்கள் அப்போதுதான் எமக்காக ஹவ்ரா ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு வர, இடையில் எம்மைக்கண்டு வண்டியை விட்டிறங்கி வந்து எம்மைக்கட்டித்தாவி, "சகோதரனே! எப்போது வந்தாய்! வருக! வருக!! உமது நல்வரவை இரண்டு மூன்று தினங்களாகத் தேடித்திரிகிறேன்" என்று சொல்லவே, பிரம்மானந்தத்தில் மூழ்கி, அவருடைய கோச்சு வண்டியிலேயே யேறிக்கொண்டு சாதாரண பிரம்மஸமாஜ ஆபீசுக்குப் போனோம். போய், அவ்விடத்தில் எமக்கு வந்திருந்த கடிதங்களைப் பெற்றுக்கொண்டு, திரும்ப "பார்க்கு" வீதியில் (Park Street) நாங்களிருக்கப்பட்ட இடத்துக்கு 9 மணிக்கு வந்து சேர்ந்தோம். அவ்விடத்தில் பங்காளிப் பிராமணர்கள் போஜனத்தைத் தயார் செய்து வைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் (Burdwan) பங்

காளிப் பிராமணர்களுடைய போஜனத்தைப் பார்த்ததுமுதல், அவர்களிடத்தில்ஜலத்தைக்கூடத்தொடுவதற்குமனம்வாராமை யால், சிறந்ததேசாபிமானியும்,தயை,கருமம்முதலான குணங் களிற் சிறந்தவரும், பல்லாரி முனிசிபல் சபாநாயகருமாகிய இராயபஹதர்ஸ்ரீமான் A.சபாபதிமுதலியாரவர்கள்,நாம்முன் பம்பாயில்உபசரித்த உதவியைப்போலவே, இவ்விடத்திலும் உபசரித்து உதவிசெய்ய, உடனே ஸ்நானம் செய்து சாப் பிட்டு ஷை முதலியாரவர்களும், ஸ்ரீமான் கே. வெங்கடராய ரவர்களும், டாக்டர் இரங்கநாத முதலியாரவர்களும், காலில் பூட்சு தவிர மற்ற உடுப்புகளையெல்லாம் நமது தக்ஷிண தேசா சாரத்தின்படி வேஷ்டி உருமாலைகளைக்கட்டிக்கொண்டு எமக் காகத் தயாராகவிருந்த கோச்சுவண்டியிலேறிக் கவர்னர் ஜனா லவர்கள் மாளிகைக்குப் போனோம். அப்படிப் போகவேண் டிய காரணம் முன்னமே தெரியாதாகையால், அநேகருக்குச் சந்தேகமும் சங்கடமும் உண்டாகிப் பலவிதமாக யோசித்துக் கொண்டு, அந்த அழகிய பிரம்மாண்டமான இராஜமாளிகைக் குப் போனோம். அந்தக் கட்டிடத்தின் வாசல் கமானைப்போல வளைந்து அந்தக் கமானின்பேரில் பிரம்மாண்டமான இராஜ பிருதாகிய சிங்கத்தின் பிரதிமையை நிற்க வைத்திருக்கிற தன்றியில், அநேக ஐரோப்பிய போர்வீரர்கள் உருவின கத்தி யுடன் உலாவிப் பாரா கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். இந் தக் கட்டிடத்தின் காக்ஷி குட்டிச்சுவர் குடிசைகளில் வாழும் பட்டிக்காட்டு பேதைகளுக்குப் பயங்கரத்தைக் கொடுக்கக் கூடும். ஆனால் கல்வியும் நாகரீகமும் தெரிந்தவர்களுக்கு ஆச்ச ரியத்தையும் ஆநந்தத்தையும் கொடுக்கிறது. இப்படிப்பட்ட கட்டிடத்தில் நாங்கள் போய்ச் சேர்ந்தவுடனே, அவ்விடத் தில் நமது சிரேஷ்ட தேசாபிமானியாகிய ஹானரெபில் தாதா பாய் நவரோஜியவர்கள் (Hon. Dada Bohyee Nowrojee) இருக்கக்கண்டு அதிகச் சந்தோஷமடைந்து, அவர் சீர்மையிற் செய்து வந்த காரியங்களைப்பற்றிச் சிலாகித்துப்பேசி, இந்தக் கவர்ன்மெண்டு மாளிகைக்கு வந்த காரணத்தைப் பூரணமாக விசாரிக்க "நமது தேச க்ஷேமத்தின் விருத்திக்கு விரோதி களான சிலர், இந்தக் காங்கிரஸ் சபையைச் சார்ந்தவர்கள் பள்ளிக்கூடத்துப் பசங்களென்றும், இவர்கள் குடிகளுடைய சரியான பிரதிநிதிகளல்லவென்றும் பிதற்றியபடியால், நமது சிரேஷ்ட தேசாதிபதியாகிய கவர்னர் ஜனரலவர்களே, இந்தச் சபையார்களை நேராகப் பார்த்துப் பேசி இவர்கள் பள்ளிக் கூடத்துப் பசங்களா? அல்லது பிரதிநிதிகளென்னும் பெய

ருக்குப் பொருந்தியவர்களா? என்று கண்டறியட்டுமென்றே இவ்விடம் வந்ததென்று தெரியவந்தது. பிறகு அவ்விடத்திலிருக்கும் புத்தகத்தில் எமது பெயர் விலாசம் முதலானவைகளை எழுதிவிட்டு நாங்கள் தங்குமிடத்துக்கு வந்தோம், அவ்விடத்தில் (Hon. A. Hume) கனம் ஹியூம், முதலான சில துரைமார்களும், அநேக பங்காளப் பிரபுக்களும், ஜமீன்தாரர்களும், படிப்பாளிகளும், பட்டவர்த்தனர்களும் வந்து பேசி குதூஹலமடையும்போது, இந்தச்சபைக்குவந்தவர்களென்று வியக்தமாக வெளியாருக்குத் தெரியும்படி எங்களுக்கெல்லாம் ஒரு பட்டு புஷ்பத்தைக் கொடுத்து அதை மார்பில் தரித்துக் கொள்ளும்படி செய்தார்கள். அந்தப் பட்டுப் புஷ்பம், அடிபாகம் (இளநீல) வர்ணப்பட்டியும், மேல்பாகம் இளஞ்சிவப்பும், அதன்மேல் பிங்கள வர்ணமான பட்டுத்துணியால் செய்துபார்வைக்கு வெகு அழகாகவிருந்தது. அதன்பொருள் என்னவென்று கேட்டதில், ஏழைக்குடிகளுடைய கண்ணீராகிய இளநீல வருணத்தில் தேசாபிமானிகளென்னும் செங்கமலங்கள் ஜனித்து, அவர்களுடைய குறைவுகளை நீக்குபவர்களென்றும், பொதுவாக இந்தச் சபையார்கள் இந்து தேசத்தின் புஷ்பங்களாவாரென்றும், பலவிதமாகச் சொல்லிக் கொண்டார்கள். யாரார் எப்படி யெப்படிச் சொன்னபோதிலும், அந்த வாடாத புஷ்பத்தை எமது மார்பில் தரித்துப் பார்க்க இந்திய நக்ஷத்திரம்போல் பிரகாசித்தது. பிறகு அவ்விடத்திலிருந்த எல்லோரும் கூடி கல்கத்தா நகர மண்டபத்துக்குப் போனோம். அந்தக் கட்டிடத்தைப்போல அவ்வளவு பெரிதும், அழகுமான கட்டிடத்தை இந்த இந்துதேசத்திலேயே கண்டதில்லை. அந்தக் கட்டிடத்தில் சுமார்மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் வந்து கூடினார்கள். இந்த மூவாயிரம் ஜனங்களில் பற்பல விதமான உடுப்புக்காரர்களும், தொப்பிக்காரர்களும், பாஷைக்காரர்களும், மீசைக்காரர்களும் ஜாதிக்காரர்களும், வேதக்காரர்களும், விதம் விதமாகவும், வேடிக்கை வேடிக்கையாகவும் உடைகளைத் தரித்துக்கொண்டும் "தேசாபிமானம்" என்னும் பொது விஷயத்துக்காக அநேக ஆயிரம் கணக்கான மைல்களைக் கடந்து வந்து கூடி தேவேந்திர சபையைப்போலிருந்தவினோதத்தை வர்ணிக்கக்கம்பநாட்டாழ்வார் ஜனித்து வந்தாலன்றி எம்மால் எழுதி முடியாது. இப்படிப்பட்ட சபையை இதற்கு முந்தியும் கண்டதில்லை; இனிக் காண்பதும் கஷ்டசாத்தியம், இப்படிப்பட்ட சபைக்கு வந்திருந்தவர்களில், (Raja Rajendra Narayen Dev) இராஜ இரா

ஜேந்திர நாராயண தேவர், (Mr. A. M. Rus'a n jee) ஏ. எம். ரஸ்டாஜி, (Baboo Joy Kristna Mukerjee) பாபு ஜாய் கிருஷ்ண மூகர்ஜி, (Rai Bahadoor Kunjee Lal Banerjee) இராயபஹதர் குஞ்ஜிலால் பானர்ஜி, (Hon. Peiarny Mohon Mukerjee) கனம். பியாரி மோஹன் மூகர்ஜி, (Baboo Raja Kumar Sarvadi Kari) இராஜகுமார சர்வாதிகாரி, (Kumar Nial Kristna Badoo) பாபு குமார நீல கிருஷ்ணர், (Mr. Manumahan Ghose), மனமோஹன் கோஸ், (Dr. Rajendra Lal Mitra L. L. D.) டாக்ட்டர் இராஜேந்திரலால் மித்திரர், (Raja Rampel Sing) இராஜா ராம்பல் சிங்கு, (Maharaja Jotindra Mohun Tagore) மஹாராஜா ஜோதிந்திர மோஹன தாகூர், (Dr. Mahendra Lal Sarcar) டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார், (Mr. W. C. Banerjee) மே. உமிஸ் சந்திரபானர்ஜி, (Hon. A. M. Bose M. A.) கனம். ஏ. எம். போஸ், (Pandit Sivanatha Sastry) பண்டிட் சிவநாத சாஸ்திரி, (Baboo Protab Chundra Moozoomdar) பாபு பிரதாப சந்திர முஜூம்தார், (Hon. Mohadev Govinda Ranade) கனம் மஹாதேவ கோவிந்தராநெடி, (Mr. Narayana Govinda Chandavarkar) நாராயண கோவிந்த சந்தா வர்க்கர், (Hon. Dada Bhai Nowrojee) கனம் தாதாபாய் நவரோஜி, லாகோர் (Murli Lal) முர்லிலால், சென்னை (Hon. S. Subramaniam Iyer) கனம் சுப்பிரமணியம் ஐயர், அயோத்தி நபாப் (Ruza Husan Khan) ரஜா உசேன்கான், (Hon. A. O. Humo) கனம் ஹியூம், (Mr. R. Knight) மே. நயிட்டு, (Mr. Cotton) காட்டன் முதலானவர்கள் இருந்தார்கள். இந்தச் சபைக்குக் கல்விக்கடலும் அனுபவ நிபுண சிரோன்மணியுமாகிய டாக்டர் இராஜேந்திரலால் மித்திரரை சபாநாயகராக விருக்கவேண்டுமென்று ம-ள-ள-ஸ்ரீ பம்பாய் சந்தாவர்க்கர் பிரேரேபிக்க, சென்னை ஸ்ரீ சுப்ரமணியம் ஐயரவர்கள் ஆமோதிக்க, அவரும் அங்கீகரித்துக்கொண்டு, அந்தச் சபையின் சிறந்த உத்தேசத்தைச் சிலாகித்துப் பேசினார். இவர் வயதில் விருத்தாப்பியராகவும், குள்ளமாகவுமிருந்தாலும், ஆடியாடிப் பேசும் சாமர்த்தியத்தை என்னென்று சொல்லலாம். பிறகு அவரிலும் அதிவயோதிபரும், கல்விக்கடலும், கோடீசுவரருமாகிய பாபு ஜாய் கிருஷ்ண மூகர்ஜி என்பவர் தேசாபிமானத்தைப்பற்றிப் பேசி, எப்படிப்பட்டவருடைய மனதும் கரையும்படிச் செய்து கனம் தாதாபாய் நவரோஜியவர்களை இந்த காங்கிரசுக்கு சபாநாயகராக வைக்கவேண்டுமென்று பிரேரேபிக்க, நவாப் ரெஜா உசேன்கான் உருது பாஷையில் ஆமோதிக்க, கனம் தாதா

பாய் நவரோஜி அவர்கள், சபாநாயகர் வேலையை அங்கீகரித்துக்கொண்டு பிரம்மானந்தமே பொழிவதைப்போல பிரசங்கித்தார். பிறகு மாலை 5-மணிக்குச் சபை கலைந்து, அவரவர்கள் தங்கள் இடங்களுக்குப்போய்ச் சாப்பிட்டு மறுபடியும் "டவுன் ஹால்" நகர மண்டபத்தில் லக்ஷக்கணக்கான (Electric Lights) மின்சார விளக்குகள் வைத்து, சூரியலோகத்தைப்போல் சிங்காரித்து, வாத்தியங்கள் ஒரு பக்கம் முழங்கவும், இனிய பதார்த்த சிற்றுண்டிகள் ஒரு பக்கத்தில் கொடுக்கவும், இஷ்டர்கள் ஒருவரோடு ஒருவர் கூடிக்குலாவி க்ஷேம சமாசாரங்களை விசாரித்தறிந்து ஆநந்தப்படவும், கண்டுகொண்ட சுகத்தை என்னென்று சொல்லுவோம். அப்போது எமது அப்த சிநேகிதராகிய (Baboo Bipan Chardre Pal) பிப்பன் சந்திர பால் என்பவர், அவ்விடத்தில் வந்திருந்த (Hon A. M. Bose) கனம் ஆனந்த மோஹன போஸ், (Mor. Mohun Bose) மன மோஹன் போஸ், (Baboo Kali Sunker Sukunl) காளி சங்கர் சுகுபல், (Baboo Surendra Nath Banerjee) சுரேந்திரநாத் பானர்ஜி, (Baboo Bejandra Nath Tagore) பஜிந்திர நாத தாகூர் (Dr. Mohini Mohan Bose) டாக்டர் மோஹினி மோஹன் போஸ், இன்னும் அநேக பெரிய மனுஷர்களையும் நமக்குப் பரிசயம் செய்து வைத்து, அவர்களுடன் பல விஷயங்களைப்பற்றிப்பேசிச்சந்தோஷமடைந்ததன்றியில் (Shambazaar Concert Party) சங்கீத கம்பெனியார் இங்கிலீஷ் வாத்தியக்கருவிகளைக்கொண்டு, சுதேச இராகங்களை வாசித்து ஆநந்த மூட்டினார்கள். அதன்கருத்து "இந்தியாவே விசனப்படாதே!" என்பது. பிறகு 12-மணியாகி விட்டபடியால், ம-ள-ள-ஸ்ரீ வீரராகவாசாரியார், பாபு சுரேந்திரநாத் பானர்ஜி, தஞ்சை ம-ள-ள-ஸ்ரீ S. A. சாமிநாதய்யரவர்கள் சேர்ந்து பூரண நித்திரை செய்தோம்.

1886௵ டிசம்பர்மீ 28உ விடியற்காலையில் எழுந்து ஸ்நானபானாதிகள் செய்து தேநீரைச் சாப்பிட்டோம். பிறகு எமது கள்ளிக்கோட்டை சிநேகிதராகிய கேரளோதய பத்திரிகாசிரியர், பி.ஏ. குஞ்சிராமனமேனன் என்பவருடன் கூடிக்கொண்டு (Upper Circular Road Calcutta) கல்கத்தா அப்பர் சர்க்குலர் வீதியிலிருக்கும் (Lily Cottage) என்னும் சுகந்த ரோஜாபுஷ்பாச்சிரமமாகிய ஸ்ரீபிரம்மாநந்தயோகி கேசவ சந்திரசேனர்அவர்களுடையதிருமாளிகைக்குப்போனோம். அது பெயருக்கு மாத்திரம் ஓர் ரிஷி ஆச்சிரமமாக விருக்கி

னும், உண்மையில் ஒரு இராஜனுடைய அரண்மனை யென்று
சொல்லலாம். இந்த ஆச்சிரமத்தின் மதில் சுவர்களுக்குள் கமல
சரோவர மென்னும் ஒரு அழகிய தடாகமும், அதற்கருகில்
அகல நீளத்திலும், அமைப்பிலும் அழகிலும் சிறந்த மூன்ற
டுக்குள்ள மச்சு மந்திரமும், அதைச் சுற்றிலும் மா, பலா,
வாழை, கமுகு, கதலி, அசோகாதி விருக்ஷங்களும், பருத்துப்
பெருத்துப் பூவும் பிஞ்சுகளாக கொஞ்சிக் குலாவவும்,பலவித
புஷ்பச்செடிகளும் கொடிகளும் பூத்துப் பரிமளிப்புடன் பிர
காசிக்கவும் பார்க்கப் பார்க்கப் அழகாக விருக்கின்றன. இவ
ற்றைப் பார்த்துக்கொண்டு அந்த அழகிய கட்டடத்தில்
பிரவேசிக்கவே, பிரம்மானந்தர் கேசவ சந்திரசேனருடைய
பிரதம புத்திரராகிய பாபு கருணா சந்திரசேனரும், அவரு
டைய இரண்டொரு சிநேகிதர்களும் ஓடிவந்து கைலாகு
கொடுத்து, உள்ளே அழைத்துக்கொண்டுபோய் உபசரித்து,
கேசவபிரம்மானந்தருடைய பாலிய தசையைக்காட்டும் படங்
களையும்,அவர் வானப்பிரஸ்தாச்சிரமத்தை யனுசரித்தபோது
எடுத்த படங்களையும் காட்டினார். பிறகு அடுத்திருக்கும் பிர
ம்மானந்தருடைய விட்டு தேவாலயத்தையும் காட்டினார்.
அந்தத் தேவாலயம் வெகு கம்பீரமாக விருக்கிறது. அந்த
ஆலயத்தின் மத்தியில், கேசவ பிரம்மானந்தர் உபந்நியாசம்
செய்து பிரம நிஷ்டையில் உட்காருவதற்காக வெள்ளை ஸ்ப
டிகக் கற்களால் உயர்ந்த மேடையாகப் பலிபீடம் கட்டப்பட்
டிருக்கிறது. இப்போது அந்த பலிபீடத்தின்மேல் கேசவ
பிரம்மானந்தருடைய பாதக்குறடுகளையும் நார்மடியும், ஓர் கம
ண்டலமும், ஏக்தார் என்னும் வாத்தியக் கருவியும், ஒரு புலி
த்தோலும் வைக்கப்பட்டு, அவைகளின்மேல் பலவித புஷ்ப
ங்களால் அர்ச்சிக்கப்பட் டிருக்கின்றன. அந்தப் பலிபீடத்
தைச் சுற்றிலும் பாகவதர்கள் உட்கார்ந்து பிரம்மப் பிரார்த்
தனையும், பிரம்மத் தியானமும் செய்யப் பலவித சர்மாசனங்
கள் போடப்பட் டிருக்கின்றன. அந்தப் பக்தர்கள் பிரம்ம
பஜனைக்கு உபயோகப்படுத்தும் பலவித வாத்தியக் கருவிகள்
அவரவர்கள் ஸ்தானத்தில் வைக்கப்பட் டிருக்கின்றன.
மேலும்; அந்தப்புர வாசிகளாகிய ஸ்திரிகளும் அந்த பிரம்ம
பிரார்த்தனையையும், பிரம்ம தியானத்தையும் செய்வதற்கு
வசதியாக அவ்விடத்தில் இடம் தயார் செய்யப்பட்டு, செம்
பட்டுத் துணியால் திரை போடப்பட் டிருக்கின்றது. அந்த
ஆலயத்துக்கு எதிரில் கேசவசந்திர பிரம்மானந்தருடைய
சல்லிய சாம்பல்களை வைத்து வெள்ளை ஸ்படிகக் கற்களால்

அழகான சமாதி பிருந்தாவனம் கட்டி அதில், அவரது ஜநந மரண காலத்தின் விவரத்தை ஸமஸ்கிருத பாஷையிலும், இங்கிலிஷ் பாஷையிலும் செதுக்கிப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்ற தன்றியில், அந்த விடமும் மகா பரிசுத்தமான விடமாகப் பாவித்துப் புஷ்பமாலைகளைப் போட்டுப் பூசித்து வருவதாகத் தோன்றுகின்றது. ஆனதுபற்றியே அந்த ஆலயத்தையும், அதற்கு எதிரிலிருக்கும் சமாதியையும் பார்க்க விரும்பியபோது, எமது காலில் தரித்திருந்த பூட்சுகளை (இங்கிலீசு பாதரக்ஷைகளை) கழட்டித் தூரத்தில்வைத்துவிட்டு வரச்சொன்னார்கள். இத்தியாதி வீண்காரியங்களைக் கூடாதென்று சண்டமாருதம்போல் பிரசங்கித்துப் போருடி வந்த கேசவ பிரம்மாநந்தருடைய பிள்ளைகளும், மற்றுமுள்ள சில சிடர்களும் அவரது கருத்துக்கு நேர் விரோதமாக, அவர் விஷயத்திலேயே இத்தியாதி வீண்சடங்குகளை யனுசரிப்பது பெரிய பிசகு. ஸ்ரீ கேசவசந்திரசேனர் சமரசவேத சத்சம்பிரதாயத்தை இத்தேசத்தாருக்குப் போதித்து, வீணசடங்குகளைக் கண்டித்திருக்க, அப்படிப்பட்ட உத்தமரை இக்காலத்தார், தென்தேசத்து வைணவர்கள் ஸ்ரீ ராமாநுசாரியாரவர்களை அவதார புருஷராகக்கொண்டு வணங்கி வருவதைப் போல, இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பங்காளபடிப்பாளிகள் அவரை (கேசவபிரம்மாநந்தரை) ஓர் அவதார புருஷராகக்கொண்டு வணங்கி வருவது எவ்விதத்திலும் சரியல்ல. ஆயினும் அவருடைய பிறப்பு வளர்ப்புகளையும் கல்வி கேள்விகளையும், பக்தியோக ஞானத்தையும் பலவருஷங்கள் அவருக்கு அருகிலிருந்து பிரத்தியக்ஷமாகப் பார்த்தவர்களும், பி. ஏ. எம். ஏ. பட்டம்பெற்ற படிப்பாளிகளும், அவரிடத்தில் இவ்வளவு பக்தி சிரத்தை வைத்திருப்பதைப்பற்றி ஆச்சரியப்படத்தக்கதே. ஆயினும் அவர்கள் செய்யும் வீண்சடங்குகளைப்பற்றிப் பேச அப்போது அவகாசமில்லாமையால், அவ்விடத்தில் சில புத்தகங்களை வாங்கப் பணத்தைக் கொடுத்துவிட்டு, பக்கத்திலிருக்கும் (Peace Cottage) சாந்திசாலையில் ஸ்ரீ பாபுபிரதாப சந்திர மஜும்தாரரைப் பார்க்கப்போனோம். அவர் அப்போது வீட்டிலில்லாமையால், பாபுகருணா சந்திரசேனரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு திரும்பினோம். இந்த பாபுகருணாசந்திரசேனர், கேசவ பிரம்மாநந்தருடைய ஜேஷ்ட புத்திரராகவும், பாலியராகவும், அழகிலும் அறிவிலும் சிறந்தவராகவும் மரியாதஸ்தராகவு மிருக்கிறார்.

பிறகு வரும்வழியில் சாதாரண பிரம்ம மந்திரத்தைப் பார்வையிட்டோம். இது (211, Cornwallies Street, Calcutta) கல்கத்தா 211-வது காரன்வாலீசு வீதியில் கட்டப்பட்டிருக்கிறது. இது முன் பார்வைக்கு அழகாகத் தோன்றாவிட்டாலும், உள்கட்டடம் பிரம்மாண்டமானதாயும், ஆயிரம் இரண்டாயிரம் ஜனங்கள் உட்காரக்கூடியதாயும், அந்தப்புரஸ்திரீகள் தனியாகவிருக்க மேல் கிராதியில் (Galery) போதுமான இடமுள்ளதாயும், சிற்பசாஸ்திர பத்ததியாகக் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடத்தின் மேல்மாடியின் ஒருபக்கத்தில், "Theistic Liberary" ஆஸ்திகமத புத்தகசாலையையும், ஒருபக்கத்தில் (The Indian Messenger Office) இந்தியன் மெஸஞ்ஜராபீசு மிருக்கிறது. இவ்விடத்தில் எமது சகோதரராகிய ஸ்ரீமான் பண்டிதர் சிவநாதசாஸ்திரியார் இருந்து ஷை கட்டடங்களையெல்லாங் காட்டி, இந்தச் சாதாரண சமாஜத்துக்கு ஒருவிசேஷ அங்கமாயும், திரவியஸ்தருமாகிய பாபுகுருசரன் மஹலானிபஸ் அவர்களுடைய திருமாளிகை அடுத்திருந்தமையால், அவர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போக, அப்போது அவர துஉத்தமபுத்திரிகல்வியில்சரசுவதியென்றுசொல்லத்தக்கசுமார்இருபது வயதுடைய குமாரத்திவாந்திபேதியாலிறந்ததினிமித்தம் வியாகூல சித்தராயிருந்தவரைப் போய்ப் பார்த்து, அவரைத் தேற்றிப் பிறகு, சிவநாத சாஸ்திரியாருடைய வீட்டுக்குப் போனோம். அவ்விடமிருந்து சாதாரண பிரம்ம சமாஜத்தாருடைய குடும்பத்தார் குடியிருக்க நூதனமாகக்கொண்ட பிரம்மாண்டமான மாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோக, அவ்விடம், பாபுபிப்பன்சந்திரபால்அவர்களும் அவருடைய மனைவியாரும்,எம்மையன்போடு உபசரித்தழைத்தார்கள். அப்போது,பம்பாயிலிருந்துசீமைக்குப் போய்வந்த ஸ்ரீ நாராயணகோவிந்த சந்தாவர்க்கரவர்களையும் பார்த்து மிகு சந்துஷ்டியடைந்தோம். பிறகு பத்து மணியாகிவிட்டமையால், தங்குமிடத்திற்கு வந்து, ஸ்நானம் செய்து புசித்து அன்று (British Indian Association) பிரிட்டிஷ் இந்திய அசோஸியேஷன் சபாமண்டபத்தில் கூடும் காங்கிரசு சபைக்குப் போனோம். அந்தக்கட்டடமும் பெரிதும் விசாலமுமானதுமாயிருந்தும், ஆயிரக்கணக்காக ஜனங்கள் வந்தபடியால், அநேக பிரதிநிதிகள் நிற்பதற்குக்கூட இடம் கிடைக்கவில்லை ஹானரெபில் தாதாபாய் நவரோஜியவர்கள் வந்துகாங்கிரஸின்சபாநாயகராக வீற்றிருக்க, அடியில் கண்ட சங்கதிகள் அன்று பேசித் தீர்மானிக்கப்பட்டன.

1-வது:—இந்த தேசத்தின் சக்கிரவர்த்தினி அவர்கள் சிங்காசனமேறி ஐம்பதாவது வருஷம் வரப்போகிறபடியால், இத்தேசத்தின் பலபாகங்களிலிருந்து வந்து இங்கு கூடி இருக்கிற பற்பலஜாதியார்களான காங்கிரஸ்சபையார் அந்த அம்மையாரவர்களுக்கு வந்தன வழிபாடுகளுடன் இராஜபக்தியைக் காட்டுவதாகத்தெரிவிக்கவேண்டுமென்று பம்பாய் ஸ்ரீ ரஹிமிதுல்லா சாயனி அவர்கள் பிரேரேபிக்க, சென்னை ஸ்ரீ. ஜி. சுப்பிரமணியம் ஐயரவர்கள் அதை ஆதரிக்க, லாகோர், ஸ்ரீலாலா முரலிதாரவர்கள் ஆமோதிக்க, சகலராலும் அங்கிகரிக்கப்பட்டது.

2-வது:—இத்தேசத்தில் வரவரப் பஞ்சம் அதிகரித்துக் குடிகள் வருந்துவதால், துரைத்தன சட்டநிருபண சபைகளில் இத்தேசத்துப் புத்திமான்களைத்தெரிந்தெடுத்துக் குடிகளால் நியமித்து, அவர்கள் கருத்தின்படி அரசு செய்தால் க்ஷாமம் நிற்குமென்று கவர்ன்மெண்டாருக்கும் தெரிவிக்க வேண்டுமாக, பம்பாய் டின்ஷா ஏட்லிஜி வாட்சா அவர்கள் பிரேரேபிக்க, சென்னை ஹானரெபில் சுப்பிரமணியம் ஐயரவர்கள் ஆதரிக்க, லக்ஷ்மணபுரி பண்டிதர் பிராணநாதர் ஆமோதிக்கச் சகலராலும் அங்கிகரிக்கப்பட்டது.

3-வது:—இந்தக் காங்கிரஸ் சபையார் சென்ற வருஷம் நிர்மானித்தபடி அதாவது இத்தேசத்தில் சட்டநிருபண சபைகளில் பேசி மெஜாரிட்டியாருடைய உத்தேசத்தின்படி காரியங்களை நடத்தவேண்டிய விதத்தைப்பற்றிச் சீமையில் ஹவுஸ் ஆப் காமன்ஸ் சபையாரில் ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டியதென்றும், அந்தக் கமிட்டியார், இத்தேசத்தின் சட்ட நிருபண சபையின் பெரும்பாலாருடைய கருத்தின் படியே சட்டங்கள் செய்யவேண்டுமென்றும், நிர்மானிக்க வேண்டுமென்றும், கல்கத்தா இராயகுஞ்சிலால் பானர்ஜி பஹதூரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, சென்னை பி. இரங்கய்ய நாயடவர்களால் ஆமோதிக்கப்பட்டு, பம்பாய் கணேசா நிலகண்டரவர்களால் ஆதரிக்கப்பட்டு, சகலராலும் அங்கிகரிக்கப்பட்டது.

4-வது:—இந்தத் நிர்மானத்துக்குக் காங்கிரஸ் சபையில் சப் கமிட்டியார் விதிக்கிற விதிப்படி அநுஷ்டிக்க வேண்டுமென்று கல்கத்தா பாபு சுரேந்திரநாத்பானர்ஜியவர்கள் பிரே

ரேபிக்க, பம்பாய் நாராயண கோவிந்த சந்தவர்க்கரவர்களால் ஆதரிக்க, பேஹார் ஷாப்டீன் அவர்கள் ஆமோதிக்கச் சகலராலும் அங்கீகரிக்கப்பட்டது.

5-வது:—இந்தச் சட்ட நிரூபண சபையில் தகுந்த பிரதிநிதிகளை வைத்துக்கொள்ள மாகாணமை தங்கிய கவர்னர் ஜனரலவர்கள் சீமை செக்ரிடெரியவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொள்ள, வேண்டிக்கொள்ளவேண்டுமென்று சுராசி. என். என். குப்தா அவர்கள் பிரேரேபிக்க,பூனா. நாம்ஜோஷியவர்கள் ஆதரிக்க, குமார் பிள்ளை கிருஷ்ணாரால் ஆமோதிக்கப்பட்டு சர்வசம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

6-வது:—இப்போது நடந்து வரும் பப்ளிக் சர்விஸ் கமிஷனர்களுடைய ரிபோர்ட்டைப்பற்றி யோசிக்க பம்பாய் தாதாபாய் நவரோஜி, சென்னை சுப்பிரமணியம் ஐயர், ஜி. சுப்பிரமணியம் ஐயர், கல்கத்தா பியாரி மோஹன மூகர்ஜி, பாபு மாதிலால் கோஸ், பாபு சுரேந்திரநாத் பானர்ஜி, லக்னோ கங்கா பிரசாத்வர்மா, காசி ராமகலிசவுதரி, பட்னா குருபிரசாத் சேன், லக்னோ பண்டிதர் பாரிநாத், அலகபாத் முன்ஷி காசிபிரசாத், லக்னோ நவாப் ராஜா அலிகான், அகமது அலி, அமிர்தசூர்லால் கன்னிலால், நாகப்பூர் கங்காதரராவ், பம்பாய் ருஷிமத்தல் சாயனி ஆகியவர்களைக் கம்மிட்டியாராக நியமிக்கவேண்டுமென்று கல்கத்தா பாபு சுரேந்திரநாத் பானர்ஜி பிரேரேபிக்க,புனா எம். பி. நாமஜோஷியவர்கள் ஆமோதிக்க, லாஹோர் பண்டிதர் சத்தியாநந்த அக்னிஹோத்திரி யவர்கள் ஆதரிக்கச் சகலராலும் அங்கீகரிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானங்கள் முடிவதற்கு மாலை 3½ மணி ஆகிவிட்டபடியால் மற்றத்தீர்மானங்களை மறுநாள் நடத்தச் சபை நிறுத்தி வைக்கப்பட்டது. ஆகவே இஷ்டர்கள் சிலருடன் கூடிக்கொண்டு (Zoological Garden) என்னும் பிராணிகளைவைத்துப் பாதுகாக்கும் (Park) உத்தியாவனத்துக்குப் போனேம். இது லக்ஷ்மி நதிக்குச் சமீபமாக அகலமாகவும், அழகாகவும் அமைக்கப்பட்ட தோட்டம். இதில் பலவித புஷ்பச்செடிகளும் விருக்ஷங்களும், பத்திரியாக வைத்துப் பயிர் செய்யப்பட்டிருக்கிறதன்றியே; புலி, சிங்கம்,யானை முதலான பலவித மிருகங்களும் வெள்ளை மயில் முதலான பலவித ஆச்சரியமான பக்ஷிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உத்தியாவனத்

துக்குள் பிரவேசித்துப்பார்க்க விரும்புவோர் நபர் ஒன்றுக்கு நாலணு கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுப்பதும் வீண் செலவல்ல. அங்கே அநேக அற்புத பிராணிகளைப் பார்க்கலாம். பிறகு மாலை 6 மணிக்கு எமது தங்குமிடத்துக்கு வந்து உண்டு, பல்லாரி இராயபஹதூர் ஸ்ரீசபாபதி முதலியாரவர்களும், ஸ்ரீ வெங்கடராயரவர்களும், கடப்பை ஸ்ரீகேசவபிள்ளையவர்களும் கூடிக்கொண்டு அங்கு மைதானத்தில் நடித்த (Chutterjee) சட்டர்ஜியென்னும் பம்பாய் தேசத்தானுடைய சர்க்கஸ் வித்தையைப் போய்ப் பார்த்தோம். அந்த ஆட்டத்தில், குதிரைகளும், குரங்குகளும், நாய்களும் அநேக வாலிபரான சிறு பையன்களும் செய்த ஆச்சரியமான சாமவித்தை நடனங்களைப்பார்ப்பவர்களுக்கே விவரமும் விந்தையுமாகுமேயன்றி எழுதி முடிக்க எம்மால் முடியாது. அந்த ஆட்டம் பார்க்க நபர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கொடுத்து டிக்கெட்டு பெற்றோம். பிறகு அந்த இராத்திரி 12-மணிக்கு எமது தங்குமிடம் போய்த் தூங்கி மறுநாள் காலை 1886௵ டிசம்பர்மீ 29உ படுக்கையை விட்டு எழுந்து நித்திய கருமங்களை முடித்து, காப்பிரைக்குடித்து, நகரமண்டபத்தில் கூடும் காங்கிரஸ் சபைக்குப் போனோம். இதற்கு மூந்திய நாள் கூடிய பிரிட்டிஷ் இன்டியன் அசோஸியேஷன் கட்டடத்தில்போதுமான இடமில்லாமையால், இந்த நகரமண்டபத்தில் மறுநாள் காலை 7-மணிக்குக் கூடப்பட்டது. கனம்தாதாபாய் நவ்ரோஜியவர்கள் சபாநாயகராக வீற்றிருந்தார். அப்போது,

7-வது:—கவினென்டாண்டு பரிக்ஷையில் சம்ஸ்கிருதமும், அரபிபாஷையும் கலந்து இந்த இந்துதேசத்திலேயே, சீமையிலிருப்பதுபோலவே ஒரேகாலத்தில்பரிக்ஷை நடத்தித் தேறினவர்களுக்குப் பெரிய உத்தியோகங்களைக் கொடுக்கவேண்டுமென்றும், அந்தப் பரிக்ஷைக்கு 19-முதல் 23-வரைக்கும் வயதை உயர்த்தவேண்டுமென்றும், கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் பாபு சுரேந்திரநாத்பானர்ஜியவர்கள் பிரேரேபிக்க, ஆனரெபில் சுப்பிரமணியம் ஐயரவர்கள் ஆமோதிக்கச்சர்வசம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

8-வது:—ஜூரிகளை வைத்துக்கொண்டு விசாரணைசெய்யும் காலம் வந்துவிட்டபடியால், அந்த வரத்தை இத்தேசத்தின் எல்லாவிடங்களிலும் ஸ்தாபிக்க வேண்டுமென்று தெரிவிக்கவேண்டுமென தஞ்சை ஸ்ரீ S. A. சாமிநாதய்யரவர்கள்

பிரேரேபிக்க, சூரத்து, H. H. துருவாவர்கள் ஆமோதிக்க, கல்கத்தா திரிலோகநாதமித்திரர் ஆதரிக்க, சர்வ சம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

9-வது:—இப்போது ஜூரிகளுடைய அபிப்பிராயத்தை மீறி செஷன் ஜட்ஜியவர்களும் ஐகோர்ட்டார்களும் செய்யும் அதிகார சுதந்திரத்தை நீக்கிவிடவேண்டுமென்று, மிஸ்டர் உமிஸ் சந்திரபானர்ஜியவர்கள் பிரேரேபிக்க, கனம் பியாரி மோஹன் மூகர்ஜி ஆமோதிக்க, காசி முனிஷி சாதுலாலவர்கள் ஆதரிக்க, சர்வ சம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

10-வது:—இங்கிலாந்தில் சம்மெரி ஜூரிஸ்டிக்ஷன் ஆக்ட்டில் கண்டிருக்கிறபடி, யாதாவது அபாயமான கேசில் சிக்கிக்கொண்டவன், தனது கேசின் விசாரணையை மாஜிஸ்திரேட்டினிடமிருந்து செஷன் கோர்ட்டுக்கு மாற்றிக்கொள்ளக் கேட்டால், அப்படியே செய்யவேண்டிய விதியை இத்தேசத்து குற்றவிஷயமான சட்டத்தில் நுழைக்கவேண்டுமென்று கல்கத்தா மனமோஹன்கோஷவர்கள் பிரேரேபிக்க, பல்லாரி சிதம்பரராவவர்கள் ஆமோதிக்க, டாக்கா காஜாசுப்தல் அலீம் அவர்கள் ஆதரிக்க, சர்வ சம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

இன்று மத்தியானம், காங்கிரஸ் சபையாருக்கு நாவிகா குதூஹலம் (Steamer Entertainment) கொண்டாட நியமித்தபடியால், மற்ற தீர்மானங்களுக்கு மறுநாளைக் குறித்துக்கொண்டு சபை நிறுத்திவைக்கப்பட்டது.

நாங்கள் தங்குமிடத்துக்கு வரயோசிக்கையில் எங்களுடைய உபயோகத்துக்காக விட்டிருந்த கோச்சுவண்டியானது வகை மோசமாகத் தப்பிவிட்டது. ஆகவே எமது இஷ்டர்கள் சிலருடன் பாதசாரியாய் நடந்துவரச் சம்பவித்தது. அப்படியே நடந்துவந்த வழியில் (The Indian Mirror Office) இந்தியன் மிரர் ஆபீசு தலைவரும் எமது இஷ்டருமான பாபு நரேந்திரநாதசேனரைப் பார்க்கப்போனதில் அவர் அகப்படவில்லை. அதற்குச்சமீபமாக (எமக்குப் பத்துப் பதினைந்து வருஷங்கள் உண்மையான சிநேகிதரும், உண்மையான கிறிஸ்தவருமாகவிருந்து சமீபகாலத்துக்குமுன் இறந்துபோன (Rev. C. H. A. Dall M. A.) கனம் டால் பாதிரியாரவர்களுடைய வீட்டுக்குப்போய், அவருடைய வநிதை, பாபு துவாரகநாத

கங்கூலியவர்களிடம் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு, எமது தங்குமிடம்வந்து, ஸ்நானம்செய்து புசித்து, கப்பல் உற்சவத்துக்குக் காலி கட்டத்துக்குப் போனோம். எங்களுக்குத் தயார் செய்யப்பட்ட புகைக்கப்பல் அபாலா (Abala) என்று பெயர்பெற்றது. இது பிரம்மாண்டமுள்ளதாகவும், சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் கொள்ளக்கூடியதாகவும், பலவித புஷ்பக்கொடிகளாலும், விருதுக்கொடிகளாலும், ஜண்டாக்களாலும் சிங்காரிக்கப்பட்டதாகவும் ஊக்ளி நதியில் மிதந்துகொண்டிருந்தது. நாங்கள் அந்தக் கப்பலில் பிரவேசிக்கவே, அதன் வாசற்படியில், பாபு கிரஜாபுஷன்முகர்ஜி, மஹாராஜ ஜோதிந்திரமோஹன் தியாகர், அபிலா என்னும் அந்தக் கப்பலுக்குச் சொந்தக்காரராகிய (Baboo Mahesi Chunder Chowdry) பாபு மஹிஷி சந்திரசவுதிரி அவர்களும் எங்களுக்குப் புஷ்பமாலைபோட்டு உபசரித்து அழைத்தார்கள். அங்குச் சேர்ந்த பிரதிநிதிகளின் பெருமையையென்னென்று சொல்லலாம். எங்குப் பார்த்தபோதிலும் பத்துபேர், இருபதுபேர் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து தம் தம் தேசக்ஷேமங்களையும், இராஜாங்க விஷயங்களையும், மதவிஷயங்களையும், விந்தியா விஷயங்களையும்பற்றி சர்ச்சித்துக்கொண்டும்; கமலா, ஆரஞ்சி, திராக்ஷம், பலவித பழங்கள், மிட்டாய் லட்டுகள், பலவித பானங்கள் இவற்றை உண்டு அருகில் (Shambazaar Concert Party) சாம்பஸார் சங்கீதக்காரர்கள் வாசிக்கும் விநோத சங்கீதங்களைக்கேட்டும், இனி எந்த ஜன்மத்தில் இவ்விதமாக அநுபவிக்கப்போகிறோமென்று சொல்லிக்கொண்டு சுமார் 25 மைல் தூரம் வரையில் அந்த ஊக்ளி நதியில் நாவிகாயாத்திரைசெய்தும் மாலை 7-மணிக்குத் திரும்பிவந்தோம். அன்று சங்கீத ஆநந்த மூட்டின இந்த (Shambazaar Concert Party) ஷாம்பஸார் கன்சர்ட் பார்ட்டியார் யாவரெனில், வங்காள பாபுகளில் சிலர் கம்பெனியாகக்கூடி இங்கிலீஷ் வாத்தியக்கருவிகளையும், சுதேச இரண்டு மிருதங்கங்களையும் கொண்டு ஹிந்து இராகங்களை வெகு இரமணியமாக வாசிக்கிறார்கள். அன்று யமுனா, கலியாணி இராகத்தில், "ஓ இந்தியாவே! பயப்படாதே! நினது ஏழைகளுடைய கண்ணீராகிய ஊக்ளி நதியில், தேசாபிமானிகளாகிய (Deligates) பிரதிநிதிகள் விழுந்து தவித்து உனது க்ஷேமத்தைக்கருதி நன்மைசெய்யப் போகிறார்கள், பயப்படாதே" என்றுபொருள் கொள்ளும் பாட்டைப் பாடியபோது எந்தச்சுதேசியின்நெஞ்சுதான் துடி

யாது. இந்தக் கீதத்தை யாம் கேட்டுக்கொண்டிருக்கும்போது பம்பாய் ஐகோர்ட்டு வக்கில் ஸ்ரீ பி. ஏ., பி. எல்., சாயராவ் விடலவர்கள் எமது கரத்தைப் பிடித்து "இந்தக் கீதம், கோயமுத்தூர் இராகவய்யர் கீதத்தைவிடச் சுகமாக இருக்கிறதா?" என்றார். பாருங்கள். நமது இராகவய்யர் பெயர் பம்பாயிலும், கல்கத்தாவிலும் வழங்கிவருகிறது. இப்படிப் பல சங்கதிகளைப் பேசிக்கொண்டு திரும்பிவரும்போது எங்களுக்கு மரியாதையாக அந்தப்பங்காளிகள் காளிகட்டம் முழுதும் பல வித தீபவிளக்குகள் வைத்து மரியாதை செய்தார்கள். இந்த மரியாதைக்கு என்ன பிரதி மரியாதை சென்னை இராஜதானி யார் செய்வார்களோ? அறிகிலேம். ஆறெல்லாம் பலவிதபழத் தோல்களால் நிறைந்திருந்தன. அப்போது எவ்வளவு பழங்கள் செலவாயிருக்குமென்பதை யோசிக்கலாம். பிறகு தங்குமிடம்வந்து உண்டு உறங்கினேம்.

1886ளு டிசம்பர்மீ 30உ யாகிய மறுநாள்காலையில் எழுந்து நித்தியாநுஷ்டானங்களை முடித்துத் தேநீரைக் குடித்து, மார்க்கட்டைப் பார்க்கப்போனேம். இப்படிப்பட்ட மார்க்கெட்டுகள் இந்தக் கல்கத்தாவில் எத்தனையோ இருக்கின்றன. இந்த மார்க்கெட்டில் அபரிமிதமான பதார்த்தங்கள் அகப்பட்டாலும், பம்பாய் காபோர்டு மார்க்கட்டைப்போல் சுத்தியாக வைக்கப்பட்டிருக்கவில்லை. எம்மோடுகூடவந்த ம-ா-ஸ்ரீ நாகப்ப முதலியாரவர்கள் வகைமோசமாகத் தப்பிப்போய் விட்டார். ஆகவே ஒண்டியாக அலைந்து வழிதெரியாமல் தப்பித்தடுமாறி அநேக கோமாமிசக் கடைகளும், வேசிகளும் நிறைந்த சந்துவீதிகளில் நடந்து தங்குமிடம் வர, அவ்விடம் போஜனம் தயாராக விராமையால் உடைகளைத் தரித்துக்கொண்டு (Town Hall) நகரமண்டபத்துக்குப் போனோம். அன்று கூடியசபையில்,

11-வது:—கனம் தாதாபாய் நவரோஜி அவர்களே சபா நாயகராக வீற்றிருக்க "ரெவினியூ உத்தியோகஸ்தர்களிடமிருக்கும் மாஜிஸ்திரேட்டு அதிகாரத்தைப் பிரித்துவிடவேண்டுமென்று பம்பாய் தாஜி அப்பாஜி அவர்கள் பிரேரேபிக்க, அலகாபாத்து முனிஷி காசிபிரசாத் அவர்கள் ஆமோதிக்க, லக்னோ ஸ்ரீராமர் ஆதரிக்க, அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டது.

12-வது:—ஐரோப்பாவில் குழப்பங்க ளுண்டாவதாகத் தோற்றுவதால் இத்தேசத்துக் குடிகளை வாலண்டியர்களாகச் சேர்த்து, யுத்தப்பயிற்சிசெய்வித்து ஆங்கிலேயருக்கு உபுத்த உதவிசெய்யவேண்டுமென்று, அயோத்தி இராஜாராம் சிங்கு அவர்கள் பிரேரேபிக்க, கல்கத்தா R. D. மேட்டா அவர்கள் ஆமோதிக்கச் சர்வ சம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது.

13-வது:—இந்தத் தேசத்தின் முக்கிய மாகாணங்களி லெல்லாம் இந்தக் காங்கிரெஸ் விஷயமாக ஒரு ஸ்டாண்டிங்கு கம்மிட்டியை நியமிக்க வேண்டுமென்று கல்கத்தா உமிஸ் சந்திரபானர்ஜி அவர்கள் பிரேரேபிக்க, பம்பாய் N. G. சந்தாவர்க்கர் ஆமோதிக்க, சர்வ சம்மதமாக அங்கிகரிக்கப்பட்டது.

14-வது:—மூன்றாவது காங்கிரஸ் சபையானது வருகிற டிசம்பர்மீ 27உ சென்னையில் கூடவேண்டுமென்று கனம் ஹியூம் துரையவர்கள் பிரேரேபிக்க, கனம் சுப்பிரமணியம் ஐயரவர்கள் ஆமோதிக்க, சகலராலும் அங்கீகரிக்கப்பட்டது.

15-வது:—இந்தச் சபையின் நடவடிக்கைகளை மகாராணியவர்களுக்கும், அவர்கள் ஸ்டேட்டு செக்ரிடரி யவர்களுக்கும் அனுப்ப, மாட்சிமை தங்கிய கவர்னர் ஜனரல் அவர்கள் கவுன்சலர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று ம-ள-ள-ஸ்ரீ இரங்கப்பநாயுடு அவர்கள் பிரேரேபிக்க, பம்பாய் சொராப்ஜி, பிரேம்ஜிபாடி அவர்கள் ஆமோதிக்க, சகலராலும் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு இந்தக் காங்கிரஸ் சபையாரைச் சேர்த்து இந்து தேசத்தில் சிறந்த ஒளிச்சித்திரக்காரனென்று பெயர்பெற்ற (Burn & Shepperd) பர்ன் & செப்பர்ட்டு கம்பெனியார் படம்பிடித்தார்கள். பிறகு சுமார் நான்கு மணிக்குப்போய்ச் சாப்பிட்டு ம-ள-ள-ஸ்ரீ திவான் நாராயணசாமி செட்டியார் முதலானவர்களோடு கூடிக்கொண்டு (Eden Garden) ஏடன் தோட்டத்துக்குப் போனோம். இந்தச் சிங்காரத் தோட்டமானது ஊக்ளி நதிக்கரையில் கம்பீரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் விந்தை விந்தையான புஷ்பச்செடிகளும், விருக்ஷங்களும் வைக்கப்பட்டும், தண்ணீர்க்குழாய்களும், விருக்ஷங்களும் பாண்டுமுதலான வாத்தியங்களும் மின்சார விளக்கு

களும்வைக்கப்பட்டும் இரமணீயமாகவும்இருக்கின்றன. பிரதி சாயந்திரம் ஐந்து மணிக்குப் பெரியதுரைகளும், துரைசானிகளும், சுதேச பிரபுக்களும் வந்து உலாத்துகிறார்கள். இந்தத் தோட்டத்துக்குள் போகவிரும்பும் சுதேசிகள் கட்டாயமாகக் காலில் பூட்ஸ்களைப் போட்டுக்கொண்டு போகவேண்டும். நாங்கள் போனபோது கல்கத்தா சர்வகலாசாலையின் ரிஜிஸ்டிராராகிய டாக்டர் பிரசன்னகுமார் இராய (Dr. Proasenna Komar Roy) என்பவர் தமது மனைவியோடு வந்து உலாவிக்கொண்டு இருக்க, எமது பங்காளசிநேகிதர் ஒருவர் அவருக்கு என்னைப்பரிசூபம் செய்துவைக்க, இருவரும் பிரம்மசமயவிஷயமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து வீட்டுக்குத் திரும்பினோம். பிறகு சாப்பிட்டுச் சில பங்காள சிநேகிதர்கள் (Star Theator) ஸ்டார் தியேட்டர் என்னும் நடனத்துக்கு அழைக்கப்போனோம். அந்தநடனமானது அங்கிலேயரால் வெகு ஆச்சரியகரமாக நடத்திக்காட்டப்பட்டது. பிறகு வீட்டுக்குத் திரும்பும்போது எங்கள் வண்டியானது கலிங்க பஜார்ரோட்டு(Calinga Bazaar Road) வழியாகவந்தது. அந்தரோட்டு சுமார் இரண்டொருமைல் நீளமிருக்கலாம். அந்த ரோட்டில் வங்காள, நேபாள, பர்மா, மஹாராஷ்டிர, குஜராத்தி முதலான இத்தேசத்து தாசிவேசிகள் பொம்மைகளைப்போலச் சிங்காரித்துக்கொண்டும்; இட்டலி, துர்க்கி, பிரான்சு, இங்கிலீஷ் முதலான தேசங்களின் கெட்டுபோன வேசிஸ்திரீகள் தேவலோக அரம்பைகளைப்போல் சிங்காரித்துக்கொண்டும், தங்களுடைய ஐந்தடுக்கு மெத்தைவீடுகளில் பலவித விளக்குகளையும், துணிமணிகளையும், சோப்பா, டேப்பாய்களையும் போட்டுக்கொண்டுப், வீதி வாசல்களில் நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டும், அந்தவீதியில் நடக்கப்பட்டவர்களைப்பார்த்து "பாஞ்சருபியா ஆவ்" ஐந்து ரூபாய்,வா என்று கூப்பிட்டும், ஒண்டி சண்டியாகப் போகப்பட்டவர்களைக் கைப்பிடித்து இழுத்தும்,வம்புகள் செய்துவருகிறார்கள். இந்த வீதியில் நடப்பதற்கும், வண்டி சவாரிசெய்வதற்கும் எப்படிப்பட்டவர்களும் பயப்படுவது சஹஜமாம். இந்தவீதியில் போகப்பட்டவர்களுடைய மனது கெட்டுப் புத்திமயங்கிப்போவார்களென்பதற்குச்சந்தேகமேயில்லை. இப்படிக்கெல்லாம் இருந்தும் பார்க் (Park Street) வீதிக்குப்போக இது சமீபவழியென்று இந்தவீதியில் எங்கள் வண்டிக்காரன் வரப்போய்ப்பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. கல்வியிலும் சீர்திருத்தத்திலும் சிறந்த கல்கத்தாவின் புத்தி

மான்களும், பெரியமனுஷர்களும்: ஜாதிபேதமும், குலபேதமும் லக்ஷ்யமற்று வீதியில் நடக்கப்பட்டவர்களுடைய புத்திரயக் கெடுக்கும்படியான இப்படிப்பட்ட பற்பலதேசத்து வேசிகள் வசிக்க இடங்கொடுத்தது சுத்த பிசகு. இதைக் கல்கத்தா முனிசிபாலிட்டியார் சிக்கிரத்தில் தருக்க முற்றிலும் சந்து இந்த துரதிர்ஷ்ட துஷ்டபிராணிகளை நகர் நடமாடும் நகரத்துக்குத் தூரத்திலாவது போய் வசிக்கச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் கல்கத்தாவின் வாலிபர்கள் இவர்கள் வலைகளுக்குத் தப்பிப்போக வகையில்லை. பிறகு அன்று இராத்திரி 12 மணிக்குமேல் வீட்டில்வந்து படுத்து நித்திரைசெய்தோம்.

மறுநாள் (1886ஹு டிசம்பர்மீ 31உ.) காலை எழுந்து தந்தசுத்திசெய்து, தேநீரைக் குடித்து ஸ்ரீ கேசவசந்திர பிரம்மானந்தர் திருமாளிகைக்குப் போனோம். அப்போது அவர் ஜேஷ்டகுமாரர் ஸ்ரீபாபு கருணை சந்திரசேனர் வீட்டிலில்லாமையால் அவர் சகோதரர், ஸ்ரீபாபு நிர்மலசந்திரசேனர் என்னும் வாலிபர் எம்மை மரியாதையுடன் வரவழைத்து அவ்விடம் வந்திருந்த ஸ்ரீ குருகோவிந்தராய உபாத்தியாயர், பாபு காந்தி சந்திரமித்திரர் முதலானவர்களுக்குப் பரிக்ஷயம் செய்துவைக்க, அவர்களோடு பிரம்மசமய விஷயமாகப் பேசி, பாபு பிரதாபசந்திர மஜூம்தாரரைப் பார்க்கப் போனதில், அவரும் வீட்டிலில்லாமையால், ஸ்ரீ கேசவ சந்திரசேனருடைய சகோதரரும், லிபரல் (Liberal) பத்திரிகாசிரியருமான பாபு கிருஷ்ணபிஹாரி சேனரையும், கேசவ சந்திரசேனருடைய ஜனன ஸ்தானமான பழைய வீட்டையும் பார்க்கப்போனோம். அது குளூதலா வீதியிலிருக்கிறது. நாம் போனவுடனே கிருஷ்ணபிஹாரிசேனர் எம்மை அன்போடு அழைத்து உபசரித்தார். அவருடைய முகம், பேசும்பாவனை முதலானவைகள் சாக்ஷாத் கேசவசந்திரசேனரைப்போலவே இருக்க, இரண்டு மணிகாலம் மதவிஷயமாயும், வித்தியாவிஷயமாயும், பத்திரிகைகளின் விஷயமாயும் பேசி உத்திரவுபெற்றுக் கொண்டு பண்டித சிவநாத சாஸ்திரியாரவர்கள் வீட்டுக்குப் போனோம். அங்கு பாபு பிப்பன் சந்திரபாலும் அவர் மனைவியும் பழவர்க்கங்களால் உபசரிக்க வாங்கியுண்டு, பார்க்கு வீதிக்குப்போய்ச்சாப்பிட்டு ம-ா-ா-ஸ்ரீ இராயபஹதூர் பல்லாரிசபாபதிமுதலியாரவர்களும், ம-ா-ா-ஸ்ரீ வெங்கடராயரவர்களும்,

டாக்டர் இரங்கநாதமுதலியாரவர்களுமாக, கல்கத்தாவில் நூதனமாக ஸ்தாபிக்கப்பட்ட (Jute Mill) கோணிப்பைசெய்யும் இயந்திரசாலைக்குப்போனோம். அவ்விடத்திலிருக்கும் இயந்திரம் சுமார் 2000 குதிரைகள் வேக பலமுள்ளது. அவ்விடத்தில், நாரைப்பிரிக்கும் விதத்தையும், அதை இயந்திரமூலயாகக் கோணிப்பைகள் செய்யும் விதத்தையும், மலைகளைப்போல கோணிப்பைகளை அடுக்கி இருக்கும் விநோதத்தையும் பார்த்துக்கொண்டு, மாலை 6-மணிக்குக் கல்கத்தா நகரவித்தியாசாலையில் (City College) ஸ்ரீ ராமமோஹனராயரைப்பற்றிப் பாபு காளிசரன்பானர்ஜியவர்கள் செய்த உபந்நியாசத்தைக் கேட்கப்போனோம். நாங்கள் போகுமுன்னமே அந்தச் சபையானது ஆயிரக்கணக்கான ஜனங்களால் நிறைந்திருக்க, அதில் அநேக பி. ஏ., எம். ஏ., பட்டம் தரித்த வங்கதேச குலஸ்திரீகளும் இருந்தார்கள். பம்பாய் நாராயணகோவிந்த சந்திரவர்க்கரவர்கள் சபாநாயகராக வீற்றிருந்தார். உபந்நியாசகரான காளிசரன் பானர்ஜி (சுதேசகிறிஸ்தவர்) எம். ஏ., பி. எல். பட்டம் பெற்று ஐகோர்ட்டு வக்கீலாகவிருப்பவர். இவரது உபந்நியாசம் தெளிவாகவும் உற்சாகத்தைக் கொடுக்கிறதாகவுமிருந்தது. பிறகு ஹானரபில் ஆநந்தமோஹன போஸவர்கள் எழுந்து உண்மையும் உறுதியும் உருவோவென்று சொல்லும்படியான பாஷையில் சபாநாயகருக்கு உற்சாகம் நிறைந்த வந்தனம் சொன்னார். சபாநாயகரும் எழுந்து "ஸ்ரீராம மோஹனர் ஒரு காலத்தில் இத்தேசத்திலிருக்கும் பற்பலவகுப்பான ஜாதியார்களும், மதஸ்தர்களும் ஒருவிடத்தில்கூடி சமரசமான சுகானந்தத்தையடையும்படியானகாலம்வரும்" என்றும், "அப்போதுதான் இத்தேசத்துக் குடிகளுக்கு க்ஷேமமுண்டாகுமென்றும் சொன்னார்; அந்தக்காலம்இப்போதுவந்தது" என்றும், "அவர், இத்தேசத்தின் கல்வி விஷயமாகவும், கைத்தொழில் விஷயமாகவும், இராஜாங்க விஷயமாகவும், மதவிஷயமாகவும் பாடுபட்ட சிறந்த தேசாபிமானியாகையால் அவரை இப்படிப்பட்ட ஜனசமூஹசபையாரால் கொண்டாடவேண்டும்" என்று சொல்லிமுடித்தார். பிறகு அன்று இராத்திரி பாபு நரேந்திரநாதசேனருடைய கிரஹமாகிய ஆரியவிலாசத்தில் தியசாபிகல் சபைகூடியது. பிறகு தங்குமிடம்போய்ச் சாப்பிட்டுத் தூங்கினோம்.

மறுநாட்காலை (1887ளு ஜனவரிமீ 1உ) சாதாரண பிரம்ம சமாஜமண்டபத்தில் நடக்கும் பிரார்த்தனைகளுக்கும் பண்

டிதசிவநாத சாஸ்திரியார்செய்த (The Future of India) இந்தியாவின் பிற்காலஸ்திதியைப்பற்றிச் செய்த உபந்நியாசத்துக்கும் போனோம். அந்தக் கட்டிடத்தின் பெருமையைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். காலை 7 மணிக்கெல்லாம் ஆலயத்தில் விருத்தரும், வாலிபரும், ஸ்திரிகளும், புருஷர்களும் ஆயிரக்கணக்காக வந்து நிறைந்திருந்தார்கள். சென்னை ஹானரபில் சுப்பிரமணியம் ஐயரவர்களும், இராயபஹதூர் சபாபதி முதலியாரவர்களும். இன்னும் அநேகரும் வந்திருந்தனர். பண்டித சிவநாத சாஸ்திரியார் மிக்க உருக்கமாக பிரார்த்தனை செய்து (The Future of India) "இந்ததேசத்தின் பிற்காலஸ்திதி" என்னும் விஷயமாகக் கல்லும் கரையும்படி உபந்நியாசஞ்செய்தார். அந்த உபந்நியாசத்தில், நமது நந் நாடானது நானாவட்டத்தில் கல்வி கேள்விகளிலும், இராஜாங்க சீர்திருத்தம் முதலான விஷயங்களிலும் விருத்தியாகிவருவது பிரத்தியக்ஷமென்றும், இவைகளோடுகூட, நீதியும் நந் நடக்கையும், பரிசுத்தமான ஈசுவரபக்தியும் விருத்தியாகிவந்தால் மாத்திரம் ஜனசமுகத்துக்குச் சவுக்கியமுண்டாகுமென்றும், இல்லாவிடில் நிரீச்சுரவாதம் அதிகமாகி நமதுதேச க்ஷேமம் குன்றுமென்றும், எவ்வித சீர்திருத்தத்திலும் தெய்வபக்தியும், தெய்வ பயமும், தெய்வ அருளும் இருக்கவேண்டுமென்றும் உபந்நியாசஞ்செய்து, பிறகு இத்தேசத்து ஜனசமுகத்தாருக்குச் சுகத்தையும், காங்கிரஸ் சபையாருக்குத் தேவஅருளையும் தரும்படி தயாநிதியாகிய ஈசுவரனைப் பிரார்த்தித்தார். பிறகு மேல்மாடியில், ஸம்ஸ்கிருத பிரம்மகீதங்கள் மிருதங்க வாத்தியங்களோடு பாடப்பட்டன. அந்தப் பாட்டுகளின் கருத்தாவது:— "பரமகிருபாநிதியாகிய பரம்பொருளே! பரதகண்டமாகிய இத்தேசத்தின்மீது நினது அருள்மழை பொழியச்செய்து இத்தேசத்தாரையாதரிப்பாய்" என்றுதிகளே. பிறகுபுகழுடம்பினரான ராஜாராயமோஹனராயருடைய திருமாளிகையைப் போய்ப்பார்த்தோம். அந்தப் பிரம்மாண்டமான திருமாளிகையானது எத்தனையோ லக்ஷம் ரூபாய்களைச் செலவு செய்து சித்திராலங்காரமாகக் கட்டப்பட்ட புராதன கிருஹம். அவ்விடத்தில் சற்றுத் தங்கிப் பிரம்மதியானம் செய்துகொண்டு பண்டித சிவநாத சாஸ்திரிகள் வீட்டுக்குப் போனோம். அவ்விடம் பம்பாய் நாராயண சந்தரவர்க்கர் முதலானவர்கள் கூடிப் பழவர்க்கங்களால் கூடிய சிற்றுண்டியைச் சாப்பிட்டு, பாபு பிபின் சந்திரபால் அவர்கள் கிருஹத்துக்குப் போ

னேம். அன்று அவர்கள் நமக்கு விருந்து செய்தார்கள். அப்படிச் செய்ததற்குக் காரணம்: அவர் விவாஹம் செய்துகொண்டு தம்பதி சமேதராகச் சென்னைக்கு வந்தபோது சென்னை வாசிகளும், கோயமுத்தூர் பிரம்மோபாசிகளும் கூடி ஒரு பெரிய விருந்து செய்தபடியால், அவருடைய மனைவியாரும் எங்களுக்கெல்லாம் திருப்திகரமான விருந்து செய்தார்கள். அந்த விருந்தில் பண்டிதர் சிவநாதரும் சென்னை ஸ்ரீ பார்த்தசாரதி நாயடு அவர்களும் இன்னும் அநேக பங்காள ஸ்திரீ புருஷர்களுமிருந்து சந்துஷ்டி யடைந்தோம். பிறகு (Calcutta Art Studio) கல்கத்தா சித்திராலயத்துக்குப் போய் ஸ்ரீ கேசவர் முதலானவர்களுடைய படங்களை வாங்கிக்கொண்டு சுமார் இரண்டு மணிக்குக் கல்கத்தா சிடிகாலேஜ் ஹாலில் கூடிய (Indian Religious Conference) இந்துதேசத்து மதவிஷயமாகக் கூடிய மஹா சபைக்குப் போனேம். அங்கு இந்த இந்து தேசத்தில், வைதிக விஷய சீர்திருத்தத்தை விரும்பும் தேசாபிமானிகளெல்லாரும் கும்பல் கும்பலாக வந்திருந்தனர். அவர்களோடு கூட, பி.ஏ., எம்.ஏ., பட்டம்பெற்ற பெங்காள ஸ்திரிகளெல்லாரும் விநோதமான உடைகளைத் தரித்துக்கொண்டிருந்தனர். அந்த மஹா சபைக்கு எம்மைச் சபாநாயகராக விருக்கும்படி பண்டிதர் சிவநாத சாஸ்திரிகள் கோர, பாபு பிப்பன் சந்திரபாலவர்கள் ஆமோதிக்க, சகலராலும் அங்கிகரிக்கப்பட்டது. ஆனால் எமக்கு மாத்திரம் அந்த உயர் நிலையை வகிக்க எள்ளளவும் துணிவு வரவில்லை. ஏனெனில், அந்தச் சபையில் சீமை ஆக்ஸ்போர்ட் காலேஜில் வாசித்து ராங்குலர் எம். ஏ., பட்டம்பெற்ற மஹா வித்வ சிகாமணியாயும், கல்கத்தா ஐகோர்ட்டு பாரிஸ்டருமாகிய ஹானரபில் ஆநந்த மோஹன போஸ் அவர்களும், கேம்பிரிட்ஜ் காலேஜில் எல். எல். டி., பட்டம் பெற்று பங்காள யூனிவர்ஸிடியின் ரிஜிஸ்டிரார் டாக்டர் பிரசன்ன குமாரராயரும், லாஹோர் பண்டிதர் சத்தியாநந்த அக்னி ஹோத்திரியவர்களும், பம்பாய் ஐகோர்ட்டு வக்கீலும், பம்பாய்ப் பிரதிநிதியாகச் சீமைக்குப் போய்ப் பிரக்கியாதி பெற்றவருமாகிய பி. ஏ., பி. எல்., நாராயண கோவிந்த சந்தாவர்க்கரும், பாஞ்சால தேச பிரசண்டமான பிரசங்கியாகிய லாலா முர்ஷிதா ரவர்களும், மஹரிஷி தேவேந்திர நாததாகூரவர்களுடைய புத்திரராகிய மஹா வித்வான் ஸ்ரீ பாபு ராபிந்திரநாத தாகூரவர்களும், சிந்து தேசத்து ஹரிநானந்த சங்கரம் அடானி அவர்களும், பண்டிதர்

நாகேந்திரநாத சட்டர்ஜி அவர்களும், எம். ஏ. சந்திரமுகி போஸ் அம்மாவவர்களும், சாரளாதேவி முதலான வித்தியா நிபுணஸ்திரீகளும் கூடியிருக்கும் மஹாசபையில் கல்விகேள்விகளிற் போதுமான சக்தியற்றும், இங்கிலீஷ் பாஷையில் பிசகறப் பேசத் தெரியாத எம்மை அந்தச் சபையில் சபாநாயகராக விருக்கச்செய்வது எத்தன்மையானதென்று சொல்லவும் வேண்டுமோ? ஆயினும், அந்த சபையார் எம்மைவிடவில்லை. முதல் நாள் இராமமோஹன ராயருடைய பிரசங்கத்தில், பம்பாய் தேசத்தாராகிய ஸ்ரீ சந்தாவர்க்கரைச் சபாநாயகராக வைத்து ஷை பம்பாய் தேசத்தைக் கவுரவப்படுத்தியதைப் போலவே, சென்னை இராஜதானியாரை கவுரவப்படுத்த எம்மைச் சபாநாயகராக வீற்றிருக்க வங்காள தேசத்தார் வற்புறுத்தும்போது சம்மதித்தே தீரவேண்டியிருந்தபடியால், ஈசுவரன்பேரில் பளுவைச்சுமத்திச்சபையின்மேடைமீதேறி நாற்காலியில் உட்கார, ஆங்கிலேய வாத்தியக் கருவியைக்கொண்டு ஹிந்து இராக இனிய கீதங்களால் ஈசுவர பிரார்த்தனை நடத்தப்பட்டது. இந்தக் கீதங்கள் இன்று கூடும் சபைக்கென்றே ஸமஸ்கிருத பண்டிதராகிய ஸ்ரீமான் இராபிந்திரநாத டாகூர் அவர்களால் நூதனமாக இயற்றப்பட்டு அச்சிடப்பட்டிருந்தன. அவைகளின் கருத்தாவன:—ஜகதீசுவரனாகிய தந்தையே! நினது மக்களாகிய இத்தேசத்தின் பல பக்கங்களில் வதிந்து வரும் சுதேசிகளும், இன்று தேசபேதம், ஜாதிபேதமற்று ஒரு நிழலில்கூடி நின்னைப் பிரார்த்திக்கும்படியானகாலம் வாய்த்ததைப்பற்றிக் கொண்டாடி நடித்து உன்னைத் துதிக்கிறோம்" என்றுதி கருத்துகளடங்கியிருந்தன. பிறகு வங்கதேசத்து குலஸ்திரீகளாகிய பி. ஏ., எம். ஏ., பட்டதாரிகள், கோகிலங்கள் கூடிப் பாடுவதைப்போல இனிய குரல்களால், ஹே கிருபாநிதி! என்னும் ஸமஸ்கிருத கிருதியை அவர்களுக்கு இயற்கையான பக்தியோடும், இராகத்தோடும் பிரமானந்தமே ஷை கட்டடத்தில் வந்து பொழிவதைப்போல் பாடி பரம சுகத்தையடையச் செய்தனர்கள். பிறகு சபாநாயகர் முறையைத் தழுவி ஸ்ரீ சத்தியானந்த அக்கினி ஹோத்திரியவர்களை அழைத்து, "பாஞ்சால தேசத்தில் ஈசுவர பக்திக்கான காரியங்கள் எப்படி இருக்கிறது?" என்று கேள்வி கேட்டோம். அவர் எழுந்து "பாஞ்சால தேசத்தில் இந்துமதம், மகம்மதுமதம், சிக்கர்மதம், பிரம்மமதம், ஆரிய சமாஜமதம் இவைதற்காலத்திலிருக்கும்ஸ்திதியைப்பற்றிவெகு

நேரம் பேசி, பிரம்ம மதமானது வர வர பெரிய மனுஷர்களும், படிப்பில்லாத பேதை ஜனங்களும் இப்போதுதான் தழுவ ஆரம்பிக்கிறார்கள்'' என்று சொன்னார்.

பிறகு ஸ்ரீ நாராயண கோவிந்த சந்தரவர்க்கரவர்களை அழைத்துப் "பம்பாய் தேசத்தில் மதவிஷயமான காரியங்கள் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டோம். அதற்கவர், "பம்பாய் தேசத்தில், படியாத மூட ஜனங்கள் கூடியவரையில் பக்திமான்களாயும், சத்தியத்தை அறிய விரும்புகிறவர்களாயும் இருக்க, இக்காலத்து இங்கிலீஷ் படித்து பரிக்ஷைகொடுத்தவர்கள் கேவலம் உலக சம்பந்தமான காரியங்களிற் பிரவேசித்து உள்ளமொன்றும், உதடுகளொன்றுமாகக்காலங்கழிக்கிறார்கள்'' என்றும், "பரிசுத்த மதவிஷயத்தில் துக்காராம்முதலான மஹாத்துமாக்களைப்போல் பக்திமான்களில் சிலரும், பிரம்மமதத்தில் உண்மை இருக்கிறதென்று கண்டுகொண்டாடும்போது, இங்கிலீஷ் படித்தவர்கள் அனுதாபப்படாதது ஆச்சரியமானகாரியம்'' என்றும் நெடுநேரம் பேசினார். பிறகு, "மத்திய இந்தியாவில் மதவிஷயத்தைப்பற்றி என்ன முயற்சிகள் செய்யப்படுகின்றன?'' என்று ஸ்ரீபண்டிதசிவநாதசாஸ்திரிகளைக் கேட்க, அவரும் நெடுநேரம் பேசித் தமது அனுபவத்தைச்சொன்னார். பிறகு "வங்கதேசத்தில்மதவிஷயமான காரியங்கள்எப்படி இருக்கின்றன?'' என்று, ஸ்ரீஆநந்தமோஹனபோஸ் அவர்களைக்கேட்க, அவரும் தமது அனுபவத்தைச்சொன்னார். பிறகு "தக்ஷண தேசத்தின் மத விஷயத்தைப்பற்றி நாமே சொல்லவேண்டி வந்தமையால், இந்த இராஜதானியில், பூர்வம் இந்து சமயம் இருந்த ஸ்திதியையும், மத்தியகாலத்து ஸ்திதியையும், அப்போது ஸ்ரீ மத்துவமத அநந்த தீர்த்தாசாரிய சுவாமிகள் ஜனித்து இந்த இராஜதானியை மாத்திரமன்றியில், இந்த இந்துதேசத்துக்கே அவர்களுடைய மத சித்தாந்தங்கள் சிரேஷ்டமானதாக்கி அநேக லக்ஷம் ஜனங்கள் தழுவி வருவதாகவும், ஆகவே, மலினமடைந்த இந்து மதத்தை சீர் திருத்தி மஹோத்தாரணஞ் செய்து இந்த இந்து தேசத்துக்கு நன்மை செய்தும்; ரோம், இட்டலி, ஜர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலான தேசத்துப் படிப்பாளிகளும், மதவாதிகளும் மெச்சும்படியாகவிருந்த மஹா புருஷர்களுக்கு ஜனன தேசமாகிய இந்த தக்ஷிணதேசத்தை, இராவண ராக்ஷஸ தேசமென்று சொல்லுவது பிசகென்றும், இந்த மஹாத்துமாக்க

ளன்றியில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலான மஹாத்துமாக்கள் இந்த இராஜதானியில் ஜனித்து, சைவம், வைணவம் முதலான மதங்களை வளர்த்தி அநேக லக்ஷம் ஜனங்களுக்கு பக்தி நிஷ்டையைக் காட்டியிருக்கிறார்களென்றும், பிறகு சென்னை இராஜதானியில், பிரம்ம சபை ஸ்தாபிக்கவிதமும் ஸ்தாபித்து அதற்காகப்பாடுபட்டவர்களுடையசரித்திரத்தையும், அந்தச்சபையின் தற்காலஸ்திதியையும், பிறகுதியசாபிகல் சபை ஸ்தாபித்த சரித்திரத்தையும் சொல்லி இன்னும் பி.ஏ., எம். ஏ., பட்டம்பெற்ற படிப்பாளிகள் மதவிஷயத்தில் பூரண பிரியத்தை யுடையவர்களாகிச் சீர்திருத்தம் செய்யாமலிருப்பது ஆச்சரியப்படத்தக்கதென்றும் சொல்லி முடிக்க, சபையார் எம்மைநோக்கி, உங்கள் தேசத்தில் ஸ்ரீ தாயுமானசுவாமிகள் என்பவர் கீதத்தைப் பாடும்படி கேட்க, நாமும், அதிக உருக்கமாகச் சில கீதங்களைப்பாட அநேகரும் ஆநந்தப்பட்டு அவற்றின் ஆழ்ந்த கருத்தைச்சொல்ல ஆச்சரியப்பட்டார்கள். பிறகு அங்கு வந்திருந்தவர்களுக்கு ஆரஞ்சி, கமலா முதலான பழங்களைக் கொடுத்தும், ஸ்திரீ புருஷர்கள் அனைவருக்கும் பரிஷயம் செய்து வைத்தார்கள். அப்போது மாலை ஆறு மணியாகிவிட்டமையால், இராபிந்திரநாத தாகூரவர்களுடன் கூடிக்கொண்டு எமது தங்குமிடம்போய்ச் சாப்பிட்டு அன்று இராத்திரி (The Hindu Teacher) இந்து நாடக கம்பெனியார் நடிக்கும் "சாவித்திரி" விலாசத்தைப் பார்க்கப்போனோம். அந்தக் கம்பெனியார் பிரதிதினமும் மாலை நான்கு மணிமுதல் இராத்திரி 12-மணிவரையிலும் இரண்டு மூன்று நாடகங்களை இடைக்கிடை கால் மணிநேரம் விட்டு வேறு வேறு நாடகக்காரரைக்கொண்டு ஆட்டுவிக்கிறார்கள். இந்த நடனசாலை தெய்வலோகத்தைப்போல் சிங்காரிக்கப்பட்டு முதல்வகுப்புக்கு ஐந்து ரூபாய் சார்ஜ் செய்கிறார்கள். இந்த நாடக்காரர் நீதிவிஷயமான சரித்திரங்களைப்பற்றி நடித்தாலும் நடிக்கும் பெண்கள் மாத்திரம் கெட்டுப்போன வேசிகளாகவும், நடனம் பார்ப்பவர் மனதைக் கொடுக்கக்கூடிய அழகுடையவர்களாகவு மிருப்பதால் இப்படிப்பட்ட நாடகத்தைப் பார்க்கக்கூடாதென்று திரும்பிவந்து படுத்து நித்திரை செய்தோம்.

மறுநாட் காலை (1887௵ ஜனவரி௴ 2௳) படுக்கையைவிட்டெழுந்து தந்தசுத்திசெய்து காப்பிநீரைக் குடித்துப்

பாபு பிப்பன் சந்திரபாலவர்களுடன் சித்திராலயத்துக்குப் போய்ப் படங்களை வாங்கிக்கொண்டு எமது ஆப்தசிநேகிதராக விருந்த (Late Rev. C. H. A. Dall) கனம் டாலவர்களுடைய வீட்டுக்குப் போனேம். அங்கு அவருடைய பாடசாலைத் தலைவி (Mrs. Tam King) தாம் கின்சு அம்மையையும், வேறு உத்தியோகஸ்தர்களையும் பார்த்து நெடுநேரம் பேசி, அந்த டால் பாதிரியாரவர்களுடைய புத்தகங்கள் மேஜை முதலானவைகள் அவர் ஜீவனோடு இருந்தபோது எப்படி வைக்கப் பட்டிருந்தனவோ அப்படியே இப்போதும் வைக்கப்பட்டிருக்கக்கண்டு, அவர் இறந்த சங்கடம் மனதில் தாக்கக் கண்ணீர் விட்டழுது, அவருடைய தொழிலைப்பற்றிச் சிந்தித்துத் திரும்பினேம். அன்று இந்ததேசத்தின் பல பாகங்களிலிருந்துவந்த பிரம்மோபாசிகளுக்கெல்லாம் சாதாரண பிரம்ம சமாஜத்தார் பிரீதிபோஜனம்செய்வதாக அழைத்திருந்தபடியால், அவ்விடத்துக்குப்போக, ஹானரபில் ஆநந்தமோஹனபோஸ் அவர்கள் எம்மவருக்கெல்லாம் புஷ்பமாலைகளைப்போட்டு அழைத்து மதவிஷயமான பலசங்கதிகளைப்பேசிப் பிறகு விருந்துண்ணப் போனோம். அந்த விருந்து: கேவலம் மிட்டாய் பழவர்க்கங்களே. எமது இடதுபக்கத்தில் ஆநந்தமோஹன போஸவர்களும், வலதுபக்கத்தில் பண்டிதர் சத்தியாநந்த அக்கினிஹோத்திரியும், எதிரில் பம்பாய் சந்தாவர்க்கரும் வீற்றிருந்து சாப்பிட்டார்கள். இப்படி நூற்றுக் கணக்கான பிரம்மோபாசிகளுக்கு, அந்த வங்கதேசத்துப் பிராம்மணஜாதியும்,பி.ஏ. பட்டம்பெற்ற ஸ்திரீகளும் பதார்த்தங்களைப்பரிமாறிஉபசரித்தார்கள். இந்தப் பிரீதிபோஜனத்தை யுண்டபிறகு, எல்லாருக்கும் சந்தன புஷ்ப தாம்பூலம் கொடுத்து மரியாதை செய்தனுப்பினார்கள். பிறகு (Messrs Burns Shepperd) பர்ன்ஸ்செப்பர்ட் ஷாப்புக்குப்போய்ப் படங்களைப் பார்த்துக்கொண்டு, தங்குமிடம் வர, அங்குவந்த தந்தி சமாசாரத்தினால் சென்னை இராஜதானியின் வாசிகளாகிய எல்லாரும் வியாகூலப்படலானோம். அதாவது:—சென்னை (Peoples Park) பீபில்ஸ் பார்க்கு தோட்ட வேடிக்கையில் தீப்பற்றி அநேகர் இறந்தார்களென்பதே. அப்படி இறந்தவர்களில் எமது ஆப்த சிநேகிதர்களுடைய பந்துக்கள் சிலர் போய்விட்டார்கள். பிறகு ஈசுவரனைத் தியானித்துவிட்டு டர்ம்தோலா வீதியிலிருக்கும் (Indian Mirror) இந்தியன் மிரர் பத்திரிகாசிரியர் நரேந்திரநாத சேனருடைய ஆரிய விலாசத்துக்குப்போய், அவருடைய க்ஷேமசமா

சாரத்தையும்பத்திரிகையின் ஸ்திதியையும்பேசிவிட்டுப் பிறகு தங்குமிடம்போய், இந்தப் பட்டணத்தைவிட்டு கயாவுக்குப் போக யோசித்தோம். ஆனால், அப்படி விட்டுப்போக மனம் வரவில்லை. ஏனெனில், இந்தக் கல்கத்தா நகரத்திற்குட்பட்ட சுற்றுப்பக்கங்கள் ஆதியில் விராடதேசமென்றும், கவுடதேசமென்றும் புராணப் பிரசித்திபெற்றதாகையாலும், தற்காலத்திலும் இங்கிலிஷ் கவர்ன்மெண்டின் பிரதான இராஜ தலைநகரமாயும், சிரேஷ்ட தேசாதிபதியாகிய கவர்னர் ஜனரல் இருக்கும் இடமாகையாலும் இதைப்பற்றிப்பின்னும் சுற்றிப்பார்த்தறிய விரும்பினேம். அதாவது:—

கல்கத்தாவின் பூர்வ சரித்திரம்.

இந்தப்பட்டணத்திற்குக் கல்கத்தாவென்று சொல்லுவதற்குக்காரணம்: காளிகாதேவியென்னும் மாயாசக்தியானவள் தனதுபிதாவாகிய தக்ஷன் தான்செய்தயாகத்தில் தனதுநாயகராகியசிவபெருமானை அழைக்காமல், அவமானப்படுத்தியதால், அந்த அவமானத்தைச் சகிக்கமுடியாமல் தனது உயிரைவிட, சிவன் கண்டு அவளுடைய உடலைத் தூக்கிக்கொண்டு தோளின் மீது போட்டுக்கொண்டு திரிய, விஷ்ணுவானவர் கண்டு அவ்வுடலைத் துண்டித்து விழுத்தியவிடமென்று ஒருபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருகாலத்தில் துர்க்காதேவியானவள் துஷ்டநிக்கிரகத்தின்நிமித்தம் ஒரு பெரிய பயங்கரமான தேகத்தைத்தரித்துக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் தனது பெரிய உருவம் தனக்கே அசங்கியமாகத் தோன்றியதினால், வேறு சிற்றுருவாகிய உருவத்துடன் துஷ்டநிக்கிரகம் செய்து வரும்போது, தனது நாயகரான பரமசிவமூர்த்தியானவர் கண்டு மோகித்து வந்து எடுத்து தமது அக்குளில் வைத்துக்கொண்டு பல தேசங்களுக்குப் போய்த் திரிந்துகொண்டிருக்க, அந்த லோகரக்ஷணியின் பிரிவினால் அவ்விடத்திய குடிகள் வருந்தியதாயும், அந்த வருத்தத்தைக் கண்டு சகியாத ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியானவர், சாம்பமூர்த்தியின் பின்தொடர்ந்து தம்முடைய சக்கிரத்தினாலே அந்தத் துர்க்கையைத் துண்டித்ததாயும், அப்போது அந்தக் காளிகாதேவியின் இடது காலின் இரண்டாம்விரல் கல்கத்தா என்னும் இந்த இடத்திலும், அந்தரங்க ஸ்தானமாகிய இந்த கல்கத்தாவுக்கு வடக்கே காமரூபமென்னும் இடத்திலும், இன்னும் மற்ற அங்

கங்கள் மற்றும் பலவிடங்களிலும் விழுந்து, அவ்விடத்திய ஜனங்களை யாதரித்துவந்ததாயும்; அந்த அங்கங்களில் ஒன்றாகிய இடதுகாலின் இரண்டாம் விரல் இவ்விடத்தில் ஊன்றி நின்றதனால், காளி கட்டம் அல்லது காளிகட்ட சத்திரம் என்று பெயர்பெற்று, பிறகு கல்கத்தா என்று பெயர் பெற்றதாய் அவ்விடத்திய ஸ்தலபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 300-வருஷங்கட்குமுன் கட்டிய இந்தக்கட்டடம் பார்வைக்கு அவ்வளவாக அழகானதாகத் தோன்றாவிட்டாலும் கர்ப்பக்கிரஹம், முகமண்டபங்கள் ஒருமாதிரியாக விருக்கின்றன. இந்தக் கோயிலுக்குச் சமீபத்தில் கங்கைநதியின் பெரிய ஓடையும் ஓடுகின்றது. இந்தக்கோயிலில் அந்த பங்காள பிராம்மண பண்டியாக்கள் பூஜைசெய்துவருகிறார்கள். பிரதிதினமும் கணக்கற்ற ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் பலி கொடுக்கிறார்கள். வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் பலிகளும் பூசைகளும் ஏராளமாகநடக்கின்றன. நவராத்திரி மகோற்சவகாலங்களில் எருமைகளையும் பலியிடுவதன்றியில், மகத்தான மகோற்சவம் நடத்தப்பட்டுவருகிறது. இந்தக் காளிகாதேவியானவர் பங்காளிகளுக்குப் பிரத்தியக்ஷதேவதையாகப் பாவிக்கப்பட்டிருப்பதால், அந்த நவராத்திரி உற்சவத்தை ஒரு ஜனசமூஹ உற்சவமாகக் கொண்டாடுவது வழக்கம். அந்தக்காலத்தில் தூரதேசங்களிற் பிரிந்திருக்கும் பந்துக்களும் உற்றார் பெற்றார் உரவோர் முதலானவர்களெல்லாரும் தம்தம் உத்தியோகத்தினின்றும், வேலைகளினின்றும், வர்த்தகங்களினின்றும்விடுமுறைபெற்றுவந்து குடும்பசமேதராகச்சேர்ந்து கொண்டாடுகிறார்கள். இந்தக்காலத்தில் அநேகர் ஜாதிபேதத்தையும் பெருப்பாலும் பாராட்டுகிறதில்லை. சிலர் குடித்துக் காமக்கூத்தாடுவதும் வழக்கம். இந்த ஆலயத்தைச்சுற்றிலும் அநேககடைகளிருக்கின்றன. பூஜைசெய்பவர்கள் ஆடு எருமைகளின் பலிகளன்றியில்; மிட்டாய்,பக்குவான்னம்,பச்சரிசி,பழவர்க்கங்கள் இவற்றையும்உபயோகப்படுத்துகின்றார்கள். கல்கிபுராணத்தின்படி இத்தேவதைக்குமான்மாமிசம், காண்டாமிருகத்தின் மாமிசம் இஷ்டபோஜனமென்றும், மூன்று மனிதர்களுடைய பலியும், பலிகொடுப்பவனுடைய சொந்த இரத்தமும் அதிகசிரேஷ்டமானதாகச் சொல்லப்பட்டிருக்கிறதன்றியில், புருஷவரம், பிள்ளைவரங்களுக்குக் கணக்கற்ற ஆட்டுக்குட்டிப் பலிகளையும் செய்யச்சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தத்துர்காதேவியின்பிரதிமைசுவர்ணத்தினால்எட்டு

புஜங்களுள்ளதாயும், நாக்கை நீட்டிக் காட்டிக்கொண்டும், செந்தூரப்பொட்டிட்டும், மண்டையோடுகளை மாலையாகத்தரித்துக்கொண்டும், ஒருகையில் கத்தியையும், ஒருகையில் தாம் வெட்டிக்கொன்ற அசுரனுடைய சிரசையும், காதுகளில் இரண்டு மாநுஷருடைய கபாலங்களைக் காதுக்கனிகளாகவும், தான் கொன்ற அசுரன் கைகளையே ஆடையாகவும், தனது கால்களில் ஒன்றைத் தன் கணவன் தொடைமீதிலும், மற்றதை அவன் புஜத்தின்மீதிலும் மிதித்துக்கொண்டிருக்கும் பாவனையாக இருப்பதைப்பார்க்கும்போது பயத்தையுண்டாக்குகிறது. அது முகமண்டபத்துக்குக் கர்ப்பக்கிரஹம் ஒருமாரளவு பள்ளத்திலிருக்கிறது. நவராத்திரி உற்சவகாலத்தில் மண்ணினால் ஒரு பெரிய காளிகாதேவியைப் பயங்கரமான உருவில்செய்து வர்ணம்பூசி அமளிகுமிளியுடன் ஊர்கோலம்செய்து பிறகு கங்கையில் போட்டுவிடுகிறார்கள். அந்த ஊர்கோல உற்சவகாலத்தில் மிதமிஞ்சிய மதுபானமும், விபசாரமும் நடப்பதனால் இது தென்தேசத்தார் பார்வைக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும். இந்தக் கோயிலில் பலிகொடுப்பவர், தலை ஒன்றுக்கு 4 அணா தட்சணையாகக் கொடுக்கவேண்டும், இதனால் பூஜாரிகளுக்கு நல்லலாபமானாலும் பலிகொடுக்கும் மண்டபம் கசாப்புக் கடைகளைப்போல் அசங்கிய நாற்றத்துடன் இருக்கிறது. இதுநிற்க,

கல்கத்தாவின் மத்தியகால சரித்திரம்.

சுமார் நூறு வருஷங்களுக்கு முன் இந்தக் கல்கத்தா ஒரு சிறு கிராமமாக விருந்தது. இந்தக் கல்கத்தா பங்காள இராஜதானியைச் சார்ந்து சுதேச அரசர்களால் ஆளப்பட்டு 1203ஹு மகம்மதியர் வசமாயின. பிறகு 1596ஹு ஆக்பர் பாதுஷாவின் சுவாதீனத்திலிருந்து, பிறகு அவருடைய சந்ததிகளுடைய சுவாதீனமாகியது. அப்போது கவூர், நதியா என்பவை முக்கிய பட்டணங்களாக இருந்து டாக்கா மூர்ஷடாபாத்து நகரங்கள் மகம்மதியருடைய முக்கியபட்டணங்களாயின. பிறகு சூரத்திலும், ஆக்ராவிலும் வியாபார விஷயமாக அங்கிலேயர் வந்திருந்த காலத்தில், பட்டணவில் அதிகாரம் பண்ணிக்கொண்டிருந்த பிரபுவுக்குக் கஷ்டசாத்தியமான வியாதி கண்டு வருந்தும்போது, ஓர் அங்கிலேய வைத்தியர் வந்து சுகப்படுத்தியதால் அந்தப் பிரபுவானவர், "உமக்கு என்ன

வேண்டும்?" என்று வினவ, அவர் "பிரான்சுக்காரரும், டச்சுக்காரரும் வர்த்தகம் செய்துகொண்டிருக்கும் பங்காள குடாக்கடல் ஓரமாய் இங்கிலீஷ்காரர்களும்போய் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்செய்ய இடம்வேண்டும்" என்றுகேட்க, அவரும்: அப்படியே கொடுக்க, அதன்மேல் டச்சுக்காரரும் பிரான்சுக்காரரும், அங்கிலேயரை யெதிர்த்து வம்பு சண்டைகள் செய்தார்கள். பிறகு டில்லி பாதுஷா தேக சவுக்கியமற்று வருந்தும்போது, வேறொரு அங்கிலேய வைத்தியரால் சவுக்கியப்பட, அங்கிலேயர் பின்னும் பல சுதந்திரங்களைப் பெற்றார்கள். அன்றுமுதல் இந்தவிடம் விஸ்தாரம் பெற்றும், ஜனபாஹுல்யம் பெற்றும் பிரகாசிக்கின்றது. 1700ௗ அரங்கசீபு குமாரராகிய அஜிம் ராஜனிடம் மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கினார்கள்.

இந்தக் கல்கத்தா பட்டணமிருக்கும் இடம் (President Charnock) தலைவர் சர்னக் என்பவரால் மேன்மை பெற்றதென்று சொல்லலாம். 1700ௗ அரங்கஸீபின் குமாரராகிய அஜீம் என்பவரால் ஈஸ்ட் இந்திய கம்பெனியாருக்கு வந்து, அப்போது அங்கிலேய தேசத்தில் ராஜனாகவிருந்த வில்லியம் என்பவர் பெயரால் ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டார்கள். 1756ௗ சுராஜடவுலா என்னும் சுபேதார், (Cossimbazaar காசிம்பஸாரில் இங்கிலீஷ்காரருக்கிருந்த வர்த்தக சாலைகளைப் பிடித்துக்கொண்டு, அங்கிலேயரைக் கைதிகளாக்கி வருத்தினார். ஒரு இருட்டு அறையில் 146 ஆங்கில உத்தியோகஸ்தர்களைப் பிடித்துமூட, அவர்களில் 23 பெயர் மாத்திரம் குற்றுயிரோடு தவிக்க, மற்றவர்கள் மடிந்துவிட்டார்கள். அப்போது 1757ௗ (Clive) கிளைவு என்பவர் சீமையிலிருந்து வந்து (Admiral Watson) அட்மிரல் வாட்சன் என்பவருடைய உதவியால் எதிர்த்து ஜயிக்கவே, பிரான்சுக்காரரும் இங்கிலீஷ்காரரோடு எதிர்த்துவர, பிளாசியில் நடந்த சண்டையினால் சுபேதாருக்கு விரோதமாக முடிந்தது. 1765ௗ டில்லி சக்கிரவர்த்தியினால், பெங்காளம், பேஹார், ஒரிசா மாகாணங்களை ரெவினியூ விஷயமாகக் கொடுத்துக் கடைசியாக அங்கிலேயர் வசமாகிவிட்டன. அப்போதுதான் முதல்முதல் லெப்டினெண்டு கவர்னர் நியமிக்கப்பட்டார். அதற்குமுன் 1707ௗ வரையில் கல்கத்தா சென்னை இராஜதானியின் அதிகாரத்துக்குள் இருந்தது.

கல்கத்தாவின் தற்கால ஸ்திதி.

இந்தக் கல்கத்தா பட்டணமானது கங்கையின் ஒரு கிளைநதியின் இடது பாகத்தில் கட்டப்பட்ட பிரம்மாண்ட பட்டணம். இந்தப் பட்டணத்துக்கும் பங்காளச் சமுத்திரக்கரைக்கும் சுமார் நூறுமைல்தூர மிருக்கலாம். கி. பி. 1858ஷ இந்தப் பட்டணம் நாலரை மைல் நீளமும் ஒன்றரை மைல், அகலமும் சுமார் 8 சதுரமைல் விஸ்தீரணமுமுள்ளதாகவிருந்து 1686-ம் வருஷத்தில் காளிகோயிலுக்கும் கல்கத்தாவுக்கும் மத்தியில் உள்ள இடம் ஒரு பயங்கரமான வனமாகவும், சதுப்பு நிலமாகவும் இருந்தது. அந்தப் பயங்கரமான வனத்தில் வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபு சில புலிகளைச் சுட்டுக்கொன்றார். அப்படிப்பட்ட காட்டையும் சதுப்பு நிலத்தையும் நாளாவட்டத்தில் சுத்தப்படுத்தியும் காடுகளை வெட்டியும் சமநில மாக்கியதனால், அவை சவுரங்கி, தியேட்டர் ரோட்டுகளுமாகி அந்த மைதானத்தில் இப்போதிருக்கும் அழகிய கதிடிரல் என்னும் பெரிய கிறிஸ்து கோவில் கட்டப்பட் டிருக்கிறது. இப்படியே நகரத்தின் பல பக்கங்களிலுமுள்ள காடுகரடுகளை எல்லாம் நீக்கிச் சுத்தப்படுத்தி நகர்வாசம் செய்யும்படியாகச் செய்வித்ததில் இப்போது கல்கத்தா அதிக விஸ்திரணமானதாகத் தோற்றுகிறது. 1742ஷ மஹாராஷ்டிரர்கள் இதன்மேல் படையெடுத்து வராதபடி, அந்த நதியின் வடபாகமுதல் கிழக்குப் பாகம் வரையில் கோணவாய்க்கால் ஒன்றை (Maharatha Ditch) வெட்டி பட்டணம் பாதுகாத்து வரப்பட்டது. இந்த மஹாராஷ்டிர வாய்க்காலுக்கு அப்புறமும், தற்காலத்து (Circular Road) வளைவு வீதிக்கும் இடையில் (Chitpore) சித்பூர் வடபாகத்திலும், (Nunden Bag) நந்தன் பாக், (Sealda) சில்தா, (Entaly) என்டாலி, (Bahar Simla) பாஹார் சிம்லா, (Ballygung) பாலிகஞ்சு தென்கிழக்காகவும்; (Bhavanipore) பவானிபூர், (Allipore) அல்லிபூர், (Kiddarpore) கிட்டார்பூர், தெற்குப் பாகத்திலுமாக அநேக பெரிய கிராமங்கள் சூழ்ந்திருக்கின்றன. நதிக்கு அக்கரையில் (Seebpore) சிப்பூர், (Howrah) ஹவ்ரா, (Sulke) சல்கி முதலான அநேக கிராமங்களும் உப்பளங்களும், ரேவுதுறை கட்டிடங்களும் நிறைந்

திருக்கின்றன. சமுத்திரத்திலிருந்து நதியில் நாவிகா யாத்திரைசெய்து வருவோருக்கு (Garden Reach) கார்டன் ரீச்சு வரையில் விசித்திர விநோதமான கட்டிடங்களும் தண்ணீர்க் கால்வாய்களும், ரேவு துறைகளில் ஏராளமாக இறக்குமதி ஏற்றுமதியாகும் விநோதமும் பார்க்கப் பார்க்க ஆச்சரியகரமாக விருக்கும். இந்தக் கார்டன் ரீச்சுக்கு வடக்கே கவரன்மெண்டு படகுகள் நிற்கும் துறை இருக்கிறது. இவ்விடமிருந்து (Tolly's Nulla) டோலிசு நல்லா என்னும் வாய்க்காலானது நதியில் சம்மந்தப்பட் டிருக்கிறது. இதை யடுத்து (Arsenal) இராணுவ முஸ்தீபுக ளிருக்கின்றன. இதற்கு மேலே தாண்டிப்போனால் (Fort William) போர்ட்டு வில்லியம் என்னும் இந்து தேசத்தில் பெருத்த தோர் பெரிய கோட்டையிருக்கிறது. இது பிளாசியில் (Plassey) நடந்த சண்டைக்குப் பிறகு (Lord Clive) கிளைவு பிரபுவினால் 15,000 ஜனங்கள் தங்கக்கூடிய விஸ்தீரணத்துடன் 1757ளு ஆரம்பிக்கப்பட்டு 2000000 பவுன் அல்லது 30000000 கோடிரூபாய் செலவிட்டு 1773ளு முடிக்கப்பட்டது இது 619 பீரங்கிகள் வைக்கக்கூடிய விஸ்தீரணமுள்ளது. இந்தக் கோட்டையினிடமிருந்து கல்கத்தாப் பட்டணத்தைப் பார்த்தால் பயங்கரத்தையும் ஆச்சரியத்தையும் கொடுக்காமற் போகாது. அடுத்திருக்கும் நதியில் ஏராளமான கப்பல்கள் நின்றிருப்பதைப் பார்த்தால் அவற்றின் கொடிமரங்கள் ஒரு பிரம்மாண்டமான வனத்தைப்போலிருக்கின்றன. ஹூக்ளி நதியின் இடதுபாகத்திலிப்படி யிருக்க, வலது பாகத்தில் (Chowringhee) சவுரங்கி டிஸ்டிரிக்டு அடுத்தடுத்து அடுக்கடுக்குகளாயுள்ள வீடுகளால் நிறைந்திருக்கின்றது. இதற்கு எதிரில் (Esplanade) எஸ்பிளநேட்டென்னும் பெரிய மைதானமிருக்கிறது. இந்தப்பாகத்தில்தான் பிரம்மாண்டமான (Town Hall) நகரமண்டபம், (Government House) இராஜமாளிகை, இன்னும் அநேக அற்புதமும் பிரம்மாண்டமுமான கட்டங்களுமிருக்கின்றன. இந்த மைதானத்துக்கு அடுத்த ஊக்ளி நதிக்கரையில் (Chandipal Ghaut) சந்திபால் காட்டு என்னும் ஜனங்கள் கப்பல் ஏறி யிறங்கும் இடமிருக்கிறது. இதுமுதல் (Custom House) சுங்கம் மாளிகை, (New Mint) நவநாணயச்சாலை முதலான கவரன்மெண்டு கட்டடங்களு மிருக்கின்றன. இவ்விடமிருந்து (Circular Canal) ஒரு வளைவு வாய்க்கால் கல்கத்தாப் பட்டணத்தையும், (Chitpore) சித்பூரையும் பிரித்து விடுகிறது. மேலும் இவ்விடமிருந்து

(Reepe Ross Ghaut) பிரான் காட் என்னும் நதிக்கரையிலிருந்து (Upper Circular Road) மேல் வளைவு வீதியானது சுதேசிகள் வசிக்கும் பாகத்துக்கும், ஐரோப்பியர் வசிக்கும் பாகத்துக்கும் எல்லையாக விருக்கிறது. இப்படியிருந்தபோதிலும், ஐரோப்பியர் வசிக்கும் பாகத்தில் இந்துக்களும் மகமதியரும், சுதேசிகள் வசிக்கும் பாகத்தில் பரங்கிக்காரர்களும் வசிக்கிறார்கள். சுதேசிகள் வசிக்கும்படியான பாகத்தில் வீதிகள் சிறியவைகளாகவும், அசங்கியமானவைகளாகவும் இருந்தாலும், திரவியவான்களுடைய கட்டடங்கள் அதிக உயர்வும், விஸ்தாரமுமாகக் கட்டப்பட்டிருப்பதால், மாளிகா நகரம் (City of Palaces)என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஐரோப்பியருடைய கட்டிடங்கள் (Grenam Style) கிரேக்தேசத்துசிற்பாலங்காரத்தின்படி பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது பூர்வ புராணங்களில் சொல்லப்பட்ட இலங்காபுரியோ, அல்லது மிதுலாபுரியோ, அல்லது அயோத்தியாபுரியோவென்று எண்ணவேண்டியிருக்கிறது. இவ்விடத்தில் ஊக்ளியின் ஜலம் கறுத்துக்குடிப்பதற்கு அசங்கியமாக விருப்பதால், 1043-பெரிய குளங்கள் வெட்டிக் குடிப்பதற்கு ஜலமெடுக்கிற தன்றியில், எந்த வீதியிலும் எந்த வீட்டிலும் குழாய் ஜலம் தாராளமாக அகப்படக்கூடிய அநுகூலமிருக்கிறது. வீதிகளிற்தெளிக்க ஆற்றின் ஜலத்தை இயந்திரங்களின் மூலமாகக் கொண்டுவருகிறார்கள். இந்தப் பிரம்மாண்ட பட்டணத்தின் குடித்தொகையை விவரமாகக்கண்டுசொல்வது கஷ்டசாத்தியம். ஏனெனில் 1850௵ 5950 ஒரு மாடியுள்ள வீடுகளும், 6438 இரண்டடுக்கு மாடி வீடுகளும், 721-மூன்றடுக்கு மெத்தை வீடுகளும், 10-நான்கு அடுக்கு மெத்தை வீடுகளும், 2-ஐந்தடுக்கு மெத்தை வீடுகளும், 49445-ஓட்டுவில்லை குடிசை வீடுகளும், இந்த வீடுகளுக்குள் 6233 ஐரோப்பியரும்,4615 பரங்கிக்காரர்களும்,892அமெரிகாதேசத்தார்களும், 847 சீனக்காரர்களும், 15342 ஆசியாவின்மற்றப் பாகத்தார்களும்,274335 இந்துக்களும், 110918 மகம்மதியருமாக 4,13,182 ஜனங்கள் வதிந்துவந்ததாகவும், சர்க்கார் கானிஸ்வாரியில் தெரிந்திருந்தாலும், 1876௵ 9,00,000 ஜனங்களென்றும் கண்டிருக்கிறது. 1891௵ கல்கத்தா முனிசிபாலிடிக்குள் 8,40,130 குடிகளும், ஹௌக்ளி உள்பட கிராமங்களில் 1,30,000 குடிகளும் இருந்ததாகக் கணக்கு எடுத்து இருக்கிறார்கள். இப்போதோவெனில் மிதமிஞ்சிய மாடமாளி

னைகளும், மனுஷ பிரபல்யமும் பத்துமடங்கு அதிகமாக விருப்பதாகச் சொல்லலாம். (Marquis Wellesly) மார்குவிஸ் வெல்லஸ்லி பிரபுவினல் 1,30,000 பவுன்கள் செலவழித்து ஆச்சரியமான இராஜமாளிகை கட்டப்பட்டது. இவைகளன்றியில், (Madrisa) மதிரீசிய (Hindu) இந்துகாலேஜுகளும், (Lamartinarere) லாமர்ட்டினெரிபாடசாலை, (Metcalf Hall) மெட்கால்ப் மண்டபம், 165 அடி உயரமுள்ள (Octorlony) அக்டர்லோனி ஞாபகமண்டபம், (James Prinsep) ஜேம்ஸ்பிரின்சிப்ஞாபகச்சின்னம், (Maharajapore) மகாராஜாபூர்மண்டபம், (Punniar) புன்னியார் மண்டபம், (Asiatic Society) ஆசியாடிக்சொசைடிகட்டடம் முதலான கட்டட ஞாபகச்சின்னமண்டபங்கள் ஆச்சரியகரமானவைகளாயிருப்பதன்றியில், (Bishop Wilson) பிஷப் வில்சனவர்களால் ஈஸ்டு இந்தியா கம்பெனியாரிடத்திலிருந்து 1,50,000 ரூபாய் உதவிபெற்றுக் கட்டுவித்த (St. Paul's Cathedral) செண்டுபால்தேவாலயம், (Scotch Church) ஸ்காத்திலாந்தியர் கோயில், (Writers Bulidings) இலேக்கரைர்களின் கட்டடம், பார்க்குவீதியிலும் சவுரங்கிவீதியிலும் (Theater Halls) நடனசாலைகள், (Bank of Bengal) பெங்காள பாங்கி கட்டடம், (Union Bank) யூனியன் பாங்கி கட்டடம், (Bengal Chamber of Commerce) பெங்காள வர்த்தகக்கூட்ட கட்டடம், (Bishops College) பிசப்ஸ் கலாசாலை, கெடல்ஸ்டன்ஹால், டெர்பிஷயர்ஹால், திப்புவின் சிங்காசனமண்டபம், கவுன்சிலரூம், பாலாடும்ரூம், புதுமார்க்கெட்டுகட்டடம், அநேக கிளப்புகள், ஸ்நானகட்டடங்கள், நீந்தும் சாலைகள், கரடிஸ்தானங்கள், புகைவண்டி தங்கும் ஸ்டேஷன்கள், ரேவுதுறைஸ்தான கட்டடங்கள், விளையாடும் கட்டடங்கள் முதலானவைகளை ஆச்சரியகரமான கட்டடங்களென்று சொல்லலாம். அன்றியும் இந்துக்களுக்கு 267 கோயில்களும், மகமதியருக்கு 168 கோயில்களும், சீனக்காரருக்கு 3 கோயில்களும் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் கிறிஸ்து சமயத்தைச் சார்ந்த (Church of England) இங்கிலாந்து சபையாருக்கு 8 கோயில்களும், (Church of Rome) ரோமசபையாருக்கு 5 கோயில்களும், (Church of Scotland) ஸ்காத்திலாந்தியருக்கு ஒன்றும், (Free Church) பிரீசர்ச்சுக்காரருக்கு ஒன்றும், (Jews) யூதருக்கு ஒன்றும், (Greek) கிரீக்கருக்கு ஒன்றும், (Armenian) ஆர்மீனியருக்கு ஒன்றும், (Bobitist) பாபிடெஸ்டுகாரருக்கு மூன்றும், (Unitarian) ஏகத்துவமார்க்கத்தாருக்கு ஒன்றும் ஆகக் கிறிஸ்துமத கோயில்களி

ருக்கிறதன்றியில், மூன்று மைல்கள் தூரத்தில் கிட்டர்பஸாரி லிருக்கும் புலிகைலாசக்கோயிலும், பதரிதாசருடையஜெயிநர் கோயிலும், சைவவைணவர் கோயில்களும், பிரம்மஸமாஜத் தாருக்கு மூன்று பெரிய பிரம்ம மந்திரங்களு மிருக்கின்றன. இவைகளன்றியில் (St. James Schools) செண்டு ஜேம்ஸ் தரும பாடசாலை, (European Female Orphan Asylum) யூரோபியன் ஸ்திரி தரும ஸ்தானம், (Benevolent Institute) உபகாரசபை, (Church Mission Alms House) சர்ச்சுமிஷன் தருமசாலை, (Leper Asylum) லிபர் தருமசாலை, (General Assembly's Institute) ஜெனரல் கூட்டசாலை, (Indian Reform Association) சீர்திருத் துஞ்சாலை முதலான தருமசாலைகளு மிருக்கின்றன. ஹூக்ளி நதியின் வடமேற்குப் பாகத்தில், (Botanical Garden) மூலிகா விருத்திதோட்டம் முதலானவைகளிருக்கின்றன. இதில் 138 வருஷ வயதுடைய ஓர்பெரிய ஆலமரம் இருக்கிறது. அது அநேக பட்டாளத்தாருக்கு நிழல்கொடுத்ததாம். இவைக ளன்றியில் இந்த இந்துதேசத்திற் சிறப்புப்பெற்ற அநேக கவர்னர்ஜனரல்களுடையவும், சுத்தவீரர்களுடையவும் பிரதி மைகள் பெரும்பாலும் மைதான பாகங்களில் அநேகம் நட் டப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு பெருமைபெற்ற கல்கத்தா பட்டணத் தில் வர்த்தக வியாபாரம் விசேஷமாக நடக்கின்றது. மாலை யைப் பார்க்கிலும் காலையில் அக்கம்பக்கத்துக் கிராமவாசிகள் கல்கத்தாவுக்கு வந்து ஏராளமான சரக்குகளை விற்றும், வாங் கியும் வியாபாரம் செய்கிறார்கள். இவைகளன்றியில், பருத்தி நூல் துணிகள், உலோகங்கள், இயந்திரங்கள், உப்பு. சாராய வகைகள் ஏராளமாக இறக்குமதியும்; அபினி, அரிசி, சணல், எண்ணெவித்துகள், அவுரி, பொட்டிலுப்பு, பட்டு, தோல்கள், தேயிலை முதலானவைகள் ஏராளமாக ஏற்றுமதியு மாகின் றன. இதனால் வருஷாந்திரம் வேறு நாட்டு வர்த்தகம், 56 கோடி ரூபாயாகிறது. அதாவது இந்தியாவின் மூன்றில் ஒரு பங்கு வர்த்தகம் இந்தக் கல்கத்தாவில் நடக்கிறதென்று சொ ல்லலாம். இந்தப் பிராந்தியங்களில் வசிக்கும் பெரிய மனு ஷர்களுக்குப் 'பாபுகள்' என்றும், பணத்திலும் அதிகாரத்தி லும் பெருமைபெற்றவர்களுக்கு 'சர்கார்' என்றும் பெயரை வைத்துக்கொண் டிருக்கிறார்கள். இவ்விடம் அநேக ஜமீன்தா ரர்க ளிருப்பதால், தேசம் செழிப்புடன் பிரகாசிக்கின்றது.

இந்தப் பங்காள பாபுகள் பார்வைக்கு அழகும் சுத்தியானவர்களுமல்ல. பெரும்பான்மையோர் தென்தேசத்துச் சட்டைக்காரரைப்போல் பூட்சும், சல்லடமும் ஒரு அரைச் சொக்காயும் மாட்டிக்கொண்டும், தலைமயிரைக் கத்தரித்துக்கொண்டும் தாடி மீசைகளை வைத்துக்கொண்டும் விகாரமாக விருக்கிறார்கள். பூர்வ கர்னாடக ஸ்திதியைப்பற்றி இருப்போரும் நான்கைந்து முழத்துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டும், தலைமயிரைக் கத்தரித்துக்கொண்டும் பூட்சுகளைப் போட்டுக்கொண்டும், நெற்றியில் சைவவைணவ மதக்குறிகளற்று லலாட சூனியர்களாகவே இருக்கிறார்கள். பலத்திலும் பம்பாய், சென்னை ராஜதானியின் ஜனங்களுக்குச் சமானமுள்ளவர்களென்று சொல்ல வகையில்லை. ஸ்திரிகளில் பெரும்பான்மையோர் நகைகளைத் தரிப்பதுங் காணோம். சிலர் தரித்துக்கொண்டிருந்தாலும் நாகரீகமான நகைகளல்ல. அநேக பங்காள ஸ்திரிகள் தங்கள் மூக்கின்மேல் பச்சையைக்குத்திக்கொண்டிருக்கிறார்கள். வைதீகராய் இருக்கிற சில ஸ்திரிகள் மாத்திரம் கலியாணமான பிறகு முகத்தின் உச்சியில் சிறிய செந்தூரப்பொட் டிட்டுக்கொண்டாலும், மூக்குப்பச்சையே பொட்டுக்குப் பதிலெனக்கொண்டிருக்கிறார்கள். அநேகஸ்திரிகள் உயரத்தில் குறைந்து, குண்டு (எலுமிச்சம்) பழங்களைப் போல ஒருவித அழகாகவிருந்தாலும், அவர்கள் கட்டிக்கொள்ளும் புடவை பன்னிரண்டுமுழமுடையதாகையால், அந்தப் பன்னிரண்டு முழமுள்ள வெள்ளைப்புடைவையை இடுப்பிற் கட்டி முக்காடு போட்டுக்கொண்டால் இயற்கையாக இருக்கும் அழகும் குறைந்து விகாரமாகக் காணப்படுகிறார்கள். இதனாலோ மற்றெதனாலோ புருஷர்களும் புருஷத்தனமில்லாதவர்களைப்போல் காணப்படுகின்றனர். இந்தப் பங்காளிகள், அரிசிச் சாதத்தையும், துவரம்பருப்புக் கூட்டையும் பூரியென்னும் கோதுமை அப்பத்தையும் விசேஷமாகச் சாப்பிடுவதன்றியில், மச்சமாமிசங்களையும் சாதாரணமாக (பிராமணர் முதலானவர்கள்) சாப்பிடுகிறார்கள். மேலும் உக்காக் குடியாதவர்களும், தாம்பூலம் போடாதவர்களும் இந்தப் பிராந்தியத்தில் அபூர்வம். இவர்கள் தாம்பூலத்தில் கொத்தமல்லி விதைகளை விசேஷமாகக்கூட்டி மென்றுவருகிறார்கள். இங்குத் திராக்ஷைப் பழம், ஆரஞ்சிப்பழம், வில்வப்பழம் விஸ்தாரமாக விளைவதால், விசேஷமாக உபயோகப்படுத்துகின்றனர். சாப்பாட்டிற்கு வாழையிலையே வியக்தமாக உபயோகிக்கிறார்கள். இந்தப்

பங்காளிகள் பயஸ்தராகவும் பலஹீனர்களாகவும் காணப்படு வதைப்போலவே, உஷ்ணத்தையும் அதிகமாகச் சகிக்கமாட் டாதவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்குத் திருஷ்டாந்த மாக, கடுகு எண்ணெயைத் தேகமெல்லாம் பூசிக்கொண்டு அதை சியக்காய் முதலானவைகளைப் போட்டுத் தேய்த்தக் கழுவாமல் வெறும் ஜலத்தால் கழுவிவிட்டுத் துடைத்துக் கொள்ளுகிறார்கள். இவ்விடத்தில் பெரும்பான்மையோர் சக்தி பூஜையை யநுசரிக்கும் சாக்தேயர்களாயும், சிறுபான் மையோர் சைதன்னியருடைய வைணவபக்தி மதத்தைத் தழுவி வருபவர்களாயுமிருக்கிறார்கள். இவ்விடத்தில் பானர்ஜி, சட்டர்ஜி, மூகர்ஜி, சட்டோபாத்தியாயர் முதலான பட்டங் களையுடையோர் பிராமணர்கள்; சேன், டாஸ் என்போர் வைத் தியர்கள்; போஸ், கோஸ், தத்தா என்போர் மற்றவகுப்பார் களாகவிருக்கிறார்கள். இவர்கள் தேகதாருட்டியம், அழகு, சுத்தி, குஷ்மபுத்தி முதலானவைகளில் பம்பாய் சென்னை ராஜதானியாருக்குத் தாழ்ந்தவர்களாகவிருந்தாலும், ஸ்ரீ ராம மோஹனர், பண்டித ஜீவானந்த வித்தியாசாகரர், தாரானாத தருக்காலங்காரர், தேவேந்திரநாதர், கேசவசந்திரர், கிருஷ்ண தாஸ்பால் முதலான மகா புருஷர்களுக்கு ஜனன இருப்பிட மாகி, இப்போது கல்வி நாகரிகம் முதலானவைகளிற் சிறந்த நகரங்களுக்குள் சிரோபூஷணமாகப் பிரகாசிக்கின்றது. இப் படிக் கல்கத்தா பட்டணம் பலவிதத்திலும் புகழ்பெற்றதாக விருப்பதால், இன்னும் பலநாள் இருந்துபார்த்து ஆநந்திக்க வேண்டிப் பிரியப்பட்டாலும் கயாவில் விட்டுவந்த பெண்டு பிள்ளைகளுடைய க்ஷேமசந்ததி எமக்கு எட்டாமையாலும் எமது மைத்துனருடைய திதி சமீபித்துவிட்டபடியாலும், இனி கல்கத்தாவில் காலதாமதம் செய்ய மனமற்று ஜனவரிமீ 3உ புறப்பட்டுவர யோசித்தோம். அப்படிவரும் வழியில் காளிகோயிலில் யாதோ ஒரு விசேஷ உற்சவத்தைக் கருதி ஏராளமான சுதேசிகள் கும்பல் கும்பலாகக் கூடிப்போகக் கண்டேம். உடனே பிரம்மதியானத்தில் புத்தி பிரவர்த்திக் கவே அடியிற் கண்டவிதம் அந்த ஸ்தலத்துக்குத் தக்கபடி பிரார்த்தனை செய்யலானேம்.

கல்கத்தாவில் செய்த பிரார்த்தனை.

சர்வ சக்தியாகிய ஓ சச்சிதாநந்தமே! ஜகத்திலிருக்கும் ஜனசமூகத்தார் நின்னைப் பலவிதமாக வணங்கித் தங்குறை

களை நீக்கிக் கொள்ளுகிற பெருமையை என்னென்பேம்! ஆண் பெண் அலி முதலான ஜாதிபேதமும், சிவப்பு, கறுப்பு முதலான ரூபபேதமுமற்றதாய் விளங்கும் அபாரசக்தியாகிய நின்னை ஜனங்கள் புருஷரூபமாகப் பாவித்து வணங்கிப் புருஷார்த்தத்தையும், நின்னைப் பெண்தெய்வமாகப் பாவித்துப் பேதைமை, பொறுமையாதிகளையும் பெற்றுப் பிரகாசிப்பதைப்போலவே, சத்தியத்தை ஸ்தாபிப்பதிற் சர்வசக்தியை யடைய விரும்பி நின்னைப் பயங்கரமான சக்திரூபமாக்கி வணங்குகிறார்கள். இப்படிப்பட்ட வணக்கங்கள் ஒருவகையில் மூடபக்திக்குரியனவாகவிருக்கினும், உண்மையில் மானவ ஜாதியாரின் புத்தியானது பூரண ஸ்திதியை யடையாததனால், இவ்விதமான குத்சிதகொள்கை யனுசரிக்கவேண்டிவந்தது. இவ்வித வணக்கம் கேவலம் மூடபக்தியாக விருக்கினும், கேவலம் பசுபாலிய பரகிருதியினால் ஞானமற்றவர்களாகி இவ்வித பக்தியினால் நின்னை எவ்விதமாக வணங்கினாலும் நீ அங்கீகரிப்பாயன்றோ? ஆகவே, நின்னை ஓ சர்வசக்தியே! என்று அழைத்து வந்தனம் செய்கின்றேம். அன்புடன் அங்கீகரித்து அடியாருடைய பாவ எண்ணங்களையும், பாவச் செயல்களையும், நினது சர்வ சக்தியினால் கண்டித்து க்ஷமித்து நினது சர்வசக்தியினால் பாதுகாப்பாய். ஓம் தத்சத்!

கல்கத்தாவைப்பற்றி.

ஓ காளிகட்டமே! நீ நகரத்திற் சிறந்த மாளிகாநகரம். நீ அங்கிலேயஇராஜாங்கம் தங்கிநிற்கத் தலைமைப்பட்டணமாக இருக்கிறாய். நீ ஆவிகூபதாமரைத் தடாகங்களாலும், மாடமாளிகை கூடகோபுரங்களாலும் கம்பீரம் பெற்ற கரைதுறை ஸ்தானம்; இம்மட்டோ! ஸ்ரீ ராமமோஹனர், தேவேந்திரநாதர், கேசவசந்திரர், கிருஷ்ணதாசர் முதலானவர்களுக்கு ஜனன வாசஸ்தானமுமாக விருக்கின்றதனால் நீ என்றும் பல்லாண்டாகப் பிரகாசிப்பாயாக.

கல்கத்தாவில் தங்குமிடங்கள்.

(1) இந்தக் கல்கத்தாவில் ஹவ்ரா ஸ்டேஷனுக்கருகில் இராஜா சிவபாகல் என்னும் இந்து ஹோட்டல் இருக்கிறது.

(2) ஷாமாபாய் வீதியில் பாபு மோதிசந்து நகத்துவர்களுடைய பராபஸார் ஹோட்டலிருக்கிறது. இங்கே இந்துக்களுக்கும் ஜைனர்களுக்கும் சாப்பாடு கிடைக்கும்.

(3) மூள்ளிக்கு வீதியில் இராஜா சுராஜஹாலருடைய தருமசத்திர மிருக்கிறது.

(4) தாராசந்த வீதியில் ஹாஜி ஷேக்புக்ஷி இலையாவால் மகம்மதியர்களுக்குத் தருமசத்திர மிருக்கிறது.

(5) ஷை வீதியில் மகம்மதியருக்கு முசபர்கானு தரும சத்திரம் இருக்கிறது. இந்தக் கல்கத்தாவானது ஈஸ்டு இந்தியா வெஸ்டு இந்தியா ரெயிலில் பஞ்சாபுக்கு 1213 மைல்கள் தூரத்திலும், பம்பாய் ஜி. ஐ. பி. ரெயிலில் 1349 மைல்கள் தூரத்திலும், சென்னைக்குக் கிரேட் இந்தியா, ஈஸ்டு இந்தியா ரெயிலில் 1032 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. இவை களில் முறையே ரூ. 11-15-0, ரூ. 13-3-0, ரூ. 13-7-0 கல் கத்தாவுக்கு ரெயில்சார்ஜ் ஆகிறது.

THE SEAT OF IMPERIAL GOVERNMENT.

இராஜாங்க தலைநகரம் மாற்றம்.

இந்த கல்கத்தா பட்டணம் இப்படிப் பிரபலமான கட்டி டங்களாலும் வர்த்தகவியாபாரங்களாலும் சிறந்தாவிர்த்தியாவ தற்குக் காரணம் இவ்விடம் இந்த இந்தியாதேசத்திற்கெல்லாம் சிரேஷ்ட தேசாதிபதியும் இராஜபிரதிநிதியுமாகிய மாட் சிமைதங்கிய கவர்னர்ஜெனரல் அவர்கள் வசிக்கும் ஸ்தலமாய் இருப்பதினாலேயாம்.

ஆனால் இந்தக் கல்கத்தாவானது இந்தியாவுக்கு வடகிழக்கு மூலையில் மற்ற மாகாணங்களுக்கும் பெருநில குருநில மன் னர்களுடைய சமஸ்தானங்களுக்கு நெடுந்தூரத்திலுள்ள தாயும், சிம்லா என்னும் உஷ்ணகால நிவாசஸ்தலத்திற்கு 42 மணிநேரம் ரெயில் யாத்திரை செய்து பிரதி வருஷம் அதிக பணச்செலவு செய்யவேண்டி யிருப்பதாயும், கி-பி. 1909ஹு சட்ட நிருபணசபை சட்டத்திற் கண்டபடி தனியான இட மாயில்லாததாயும் இருப்பதைக் கண்டு நாளது 1911ஹு டிசம்பர்மீ 12-ஆம் தேதி மங்களவாரத்தில் மகா மாட்சிமை பொருந்திய ஸ்ரீ ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் டெல்லிப் பட் டணத்தில் மகுடாபிஷேகம் செய்துகொண்டபோது அந்த டில்லிப்பட்டணத்தையே இனிமேல் இந்த இந்தியா தேசத் திற்கெல்லாம் ராஜாங்க சிரேஷ்ட பட்டணமாக்க நியமித்து அந்த டெல்லிப்பட்டணத்துக்கு அருகில் 25 சதுரமைல் விஸ்தீரணமுள்ள இடத்தைச் சேகரித்து அவ்விடத்தில் மாட்

கிமைதங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களும் அவர்கள் உத்தியோகஸ்தர்களும் வதிந்துவரத்தக்க கட்டடங்களைக்கட்ட ஸ்ரீ சக்கரவர்த்தியவர்களும் ஸ்ரீ சக்கரவர்த்தினியாரும் அஸ்திவாரக்கல் நட்டும் உற்சவத்தைக் கொண்டாடிவிட்டார்கள். இக்கட்டடங்களுக்குச் சுமார் 20-கோடி ரூபாய் செலவிட மதிப்பிட்டிருக்கிறது.

இப்படி இதுவரையில் ராஜாங்கத்திற்குத் தலைநகராயிருந்த கல்கத்தாவிலிருக்கும் ராஜாங்கத்தை டில்லிப்பட்டணத்திற்கு மாற்றியதில் கல்கத்தாவிலிருக்கும் வர்த்தகங்களுக்கும் வியாபாரிகளுக்கும் நஷ்ட முண்டாகலாம். ஆயினும் அவர்களுக்கு வேறொரு உபகாரத்தைச் செய்திருக்கிறார்கள். 1904, 1905-ம் வருஷங்களில் கர்ஸான் பிரபு கவர்னர்ஜெனரலாய் இருந்தபோது வங்காளத்தைப் பிரிவினை செய்ததைப்பற்றி ஜனங்களுக்குள் கஷ்டங்களும் அவற்றால் கூக்குரல்களும் உண்டாகிவந்தன. அவைகளை நீக்கி, இந்த மகுடாபிஷேககாலமுதல் பின்வருகிறபடி மாற்றிவிட்டார்கள். அதாவது:—

(1) பங்காள பாஷை பேசும் 42,00,00,000 ஜனங்களுள்ளதும், 70,000 சதுரமைல் விஸ்திரணமுமான பர்த்வான், டாகா, ராஜசாய், சிட்டகாங் டிவிஷன்களை ஒரு பெரிய மாகாணமாகவும் அதற்கு ஒரு கவர்னரும் சட்ட சபையாரும் இருந்து ஆண்டுவரவும் அவர்களுக்கு டாக்கா பிரதான நகரமாகவும்,

(2) சுமார் 35,00,000 குடிகளுள்ளதும் 1,13,000 மைல் விஸ்திரண முள்ளதுமான பேஷார், சோடா நாகப்பூர், ஒரிசா, பேட்ணு என்பவைகளைச் சேர்த்து அவைகளை ஒரு லெப்டினெண்ட் கவர்னரால் ஆளப்படவேண்டுமென்றும், அந்த லெப்டினெண்ட் கவர்னர் அவர்களுக்கு பாட்ணு தலைநகரமாயிருக்க வேண்டுமென்றும்,

(3) சுமார் 50,00,000 ஜனங்கள் வசிக்கப்பட்டதாயும் 56,000 சதுரமைல் விஸ்திரணமுள்ளதாயும் இருக்கிற ஆசாம் நாட்டை ஒரு சீப்கமிஷனருடைய அதிகாரத்திற்குள் இருக்க வேண்டுமென்றும் தீர்மானித்துவிட்டார்கள்.

இந்த மாற்றத்தினால் பங்காளப் பிரிவினையைப்பற்றிப் போராடிவந்த பங்காளிகளுக்குத் திருப்தி உண்டாகலாம். டில்லிப்பட்டணமானது புராதன பாண்டவர் ஆண்டபட்டணமாயும், பிறகு மகம்மதிய மொகலாயர் மராட்டியர் ஆண்டுவந்த

பட்டணமாயும், அநேக சுதேச சமஸ்தானங்களுக்கு மத்திய ஸ்தானமாயும், சீதோஷ்ண சமகாரியாயும், சிம்லாவுக்கு 14-மயில்தூரத்தில் ரயில்மார்க்கம் போகக்கூடியதாயும் இருப்பதால் இந்த மாற்றம் சகல ஜனங்களுக்கும் திருப்தியைத் தரக்கூடுமென்றே எண்ணுகின்றோம்.

DARGEELING.
டார்ஜிலிங்கு.

கல்கத்தாவுக்கு 364 மைல்கள் தூரத்தில் உஷ்ணகாலத்தில் தேகசுகத்திற்குச் சிறந்த டார்ஜிலிங்கு மலைப்பட்டணம் இருக்கிறது. இதை வில்லியம் பெண்டிக்கு பிரபு 1835௵ சிக்கிம் ராஜனிடம் விலைக்கு வாங்கினார். இமயமலையைச் சார்ந்த இந்த இடத்தில் 1856௵ தேயிலைப்பயிர் செய்யத்தொடங்கி 1875௵ 121 தோட்டங்களும் 24000 வேலைக்காரர்களும் இருந்தார்கள். 1862௵ கவர்ன்மெண்டார் தேயிலைத் தோட்டத்தோடு குவைனாதோட்டத்தையும் ஸ்தாபித்தார்கள். வெயிற்காலத்தில் லெப்டினெண்டு கவர்னர் தங்குமிடமாகிய இங்கே இமாலயத்தின் உன்னத சிகரமாகிய ஹெவரெஷ்டுமலையின் காக்ஷி அற்புதமானது.

KURSANG.
குருஷாங்கு.

டார்ஜிலிங்குக்குப் போகிற வழியில் அதற்கு 20 மைல்கள் தூரத்தில் இமயமலைச் சாரலில் 5000 அடிகள் உயரத்திலிருக்கும் குர்ஷாங்கு என்பது உஷ்ணகாலத்தில் மிதமான குளிர் உள்ள மலைநாடாகையால், அநேகர் இங்கு உஷ்ணகாலம் கழிக்க வருகிறார்கள். இதற்கு டார்ஜிலிங்கு இமயமலை ரெயிலில் 30 மைல்கள் தூரத்திலுள்ள சிலிகிரி ஸ்டேஷனிலிருந்து மாற்றப்படுகிறது. இந்தவிடத்தில் அநேக தேயிலைத் தோட்டங்கள் இருக்கிறதன்றியில், இமயமலையின் காக்ஷியும், சுற்றுப்பக்கத்துக் காக்ஷியும் கம்பீரமாக இருக்கிறது.

NEPAL.
நேப்பாளம்.

இந்த டார்ஜிலிங்குக்குப் போகிறவர்கள் அதற்கு மேற்கே இருக்கும் நேபாளத்தையும் போய்ப் பார்க்கலாம். இது

திபெத்துக்குத் தெற்கும், பிரிட்டிஷ் ராஜ்ஜியங்களுக்கு வடக்கும், சுமார் 460 மைல்கள் நீளமும், 150 மைல்கள் அகலமும், 54,000 சதுரமைல்கள் உள்ளதாயும், 20 லக்ஷம் குடித்தொகையும், சமுத்திரமட்டத்திற்கு 3000 முதல் 5000 அடி உயர்ந்த நகத்தான மலைநாடு. இதன் குடிகள் சிறு தார்த்தாரி வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்களில் முக்கியமானவர்கள் கூர்க்கர். அவர்கள் அதிக வீரராகையால் அநேகர் சிப்பாய்களாக இருக்கிறார்கள். அவர்களே இங்கு அரசு ஜாதியார். இந்த நேபாளத்தின் பிரதானபட்டணமாகிய காட்டமாண்டு என்பது 4500 அடிகள் உயர்ந்ததாயும், 50,000 குடிகளுள்ளதாயும் இருக்கிறது. காட்டமாண்டு என்றால் மரக்கட்டைகளால் கட்டப்பட்ட வீடுகளுள்ள நகரம் என்று பொருள். இதில் மஹாராஜர் அரண்மனை பெரிதாய் இருக்கிறது. அதற்கருகில் டாலிக்கி என்னும் பெரிய கோயில் அநேக கோபுர கலசங்களோடு கி. பி. 1549 வது இராஜனாக இருந்த இராஜாமஹேந்திரமாலி என்பவரால் பஞ்சநிவாரணத்திற்காகக் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கருகில் ஒரு கற்கம்பத்தில் பிரம்மாண்டமான மணியும், அதற்கடுத்த கட்டடத்தில் இரண்டு பெரியதும் 8 அடிகள் உள்ளனவாய் அகலமுள்ள நகார் நகபத்துக்களும் இருக்கின்றன. இது புத்தமதக் கோயிலாக இருந்தும் இந்து மதஸ்தர்களுடைய தேவவிக்கிரகங்களும் இருக்கின்றன. சில நேபாளிகள் காளி துர்க்கை முதலான தேவதைகளையும் வணங்கி வருகிறார்கள். என்றாலும் இது பவுத்த மதஸ்தருடைய தேசமேயாம். அவர்களுக்கு முக்கிய தெய்வம் மச்சிகடு இந்திரநாதர் என்று பெயர். நேபாளத்தில் 12வது கடும் பஞ்சம் உண்டானபோது கி. பி. 477வது நேபாள ராஜனாகிய நரேந்திரநாதர் ஆசாமுக்குப்போய் ஓர் புத்தஞானியை அழைத்து வந்து மழைபெய்யச் செய்வித்ததால் அவருக்குச் சந்தோஷமுண்டாக்க வருஷாவருஷம் உற்சவம் கொண்டாடி வருகிறார்கள். அந்தக்கோயிலுக்கடியில் தாரே என்னும் கால்நடைகள் மேயும் பசும்புல் மைதானமிருக்கிறது. அதற்கப்புறம் 3000 அடிகள் உயரத்தில் சாலு என்னும் விலையுள்ள விருக்ஷங்கள் விளைகின்றன. அதற்கப்புறம் 8000 அடிகள் உயரமுள்ள மலைச்சார்புகளில் ஆங்கிலேயர் வெயிற்காலத்திற்குப்போய்த் தங்குகிறார்கள். காட்டமாண்டு கோயிலுக்கு 200 கஜதூரத்தில் கோட் என்னும் பெரிய கட்டடம் இருக்கிறது. இங்கு கி. பி. 1846வது அநேக பெரிய மநுஷர்கள

கொல்லப்பட்டார்கள். பிரதான மந்திரியும் கொலை செய்யப்பட்டார். அப்போது ஜங்கபஹதூர் வந்து துஷ்டர்களைக்கொன்று அரசாளுநர். இந்த இமாலயத்தின்காக்ஷி கம்பீரமானது. இந்த நேபாளத்தில் பயங்கர மிருகங்கள்கூடிய காடுகளும் வளர்ந்திருப்பதால் 1911௵ டிசம்பர்௴ நமது சக்கிரவர்த்தி பெருமானாகிய 5-வது ஜார்ஜ் அவர்கள் அங்காடுகளுக்குப் போய் 39-புலிகளையும், 12-காண்டாமிருகங்களையும், அநேக கரடிகளையும் கலைமான்களையும் வேட்டையாடி கொன்றார். இந்தக் கல்கத்தாவிலிருந்து கங்கையின் வழியாக பாக்பூர், சிரப்பூர், சந்திரநாகூர், நதியா பாகிரதியின் மேற்கு மூர்ஷிடாபாத்து, பேஹார் சால்டால்ஸ், மாங்கிர் முதலான விடங்களைப் பார்க்கலாம். அவ்விடங்களில் விசேஷ தேவஸ்தானங்கள் இல்லாமையால் விவரமாக எழுதாமல் விட்டுவிட்டோம். இஷ்டமுள்ளவர்கள் போய்ப் பார்க்கலாம்.

கயா.

கல்கத்தாவில் பிரார்த்தனை செய்துகொண்டு மாலை 6 மணிக்கு ஹௌரா ஸ்டேஷனுக்கு வந்தோம், அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுவந்த பல பிரதிநிதிகள் வந்தமையால், எல்லோருங்கூடி இண்டர்மீடியட் கிளாஸ் என்றும் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறினோம். அந்த வண்டி சற்றேறக் குறைய சென்னைப்புகைவண்டியில் இரண்டாவதுவகுப்புவண்டியைப்போல் உட்காரவும்படுக்கவும் மலஜலபாதைகளைக் கழிக்கவும் மறைவுகள் சேர்க்கப்பட்டுச் சவுக்கியமாக விருக்கிறது. நாம் கல்கத்தாவிலிருந்து கயாவுக்கு வர ரூபா 9-4-3 கொடுத்து டிக்கெட் வாங்கி ஏறினோம். சுமார் காலை ஐந்துமணிக்கு மொகாமா ஸ்டேஷனுக்கு வந்து, 9 மணிக்கெல்லாம் பாங்கிபூருக்கு வந்தோம். வரவே பல்லாரி இராயபஹதூர் சபாபதி முதலியாரவர்களும், மற்றவர்களும் நேராகப் புறப்பட்டுப் போக, நாங்கள் கயா கிளை இருப்புப்பாதை வண்டியில் ஏறி கயா ஸ்டேஷனையடைந்து, அன்று சுமார் மாலை 2 மணிக்கு எமது பெண்பிள்ளைகளிருக்குமிடம்சேர்ந்து ஸ்நானம்செய்து சாப்பிட்டோம். பிறகு மாலை அந்தக் கயாபட்டணத்திற் பேர்போன புரோஹிதரும் கோட்டீசுவரருமான ஸ்ரீ பாபு கங்கா விஷ்ணு சோடேலால் அவர்கள் கிருஹத்தில் வந்து இறங்கியிருந்த, தஞ்சை ஸ்ரீ சாமிநாதய்யரவர்கள், சென்னை ஸ்ரீ வீரராகவாசாரியாரவர்கள், ஸ்ரீ சுப்பிரமணியம் ஐயரவர்கள் முத

லானவர்களைக் கண்டு குலாவிவிட்டு, எமதிருப்பிடம்வந்து சாப்பிட்டுச் சுகமாக உறங்கினேம். மறுநாட் காலை (1887௵ ஜனவரி௴ 4-ம் தேதி) பல்குணிநதியில் போய் எண்ணெயிட்டுக்கொண்டு ஸ்நானம் செய்து வந்து சாப்பிட்டு, கலாநிதிப் பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்களையும், கடிதங்களையும் எழுதிவிட்டு, கடைவீதிகளுக்குப் போய் வீடு வந்து உண்டு உறங்கினேம்.

1887௵ ஜனவரி௴ 5-ம் தேதி காலை எழுந்து பல்குணிநதியில் ஸ்நானம் செய்து வந்து, எமது மைத்துனருடைய கிரியை நடத்தினேம். இந்தக் கிரியை இந்த கயாக்ஷேத்திரத்தில் செய்கிற முறையை யனுசரித்துச் செய்தும், வடவிருக்ஷத்தினடியில் பிண்டப் பிரதானங்கள் செய்தும் சுபலம் பெற்று வீட்டுக்கு வரச் சுமார் 6-மணியாயிற்று. அன்று பகலெல்லாம் சாப்பாடில்லாமல் பட்டினியாகவிருந்து இராத்திரி 8-மணிக்குச் சாப்பிட்டுப் படுத்தேம்.

1887௵ ஜனவரி௴ 6-ம் தேதி காலை எழுந்து பல்குணிநதியில் ஸ்நானம் செய்து சாப்பிட்டு, குதிரை கட்டிய கோச்சு வண்டிக்கு 8 அணா விதம் வாடகைபேசி ஸ்ரீராமபருவத அடிவாரத்தண்டைபோய்க் கொஞ்சம் கஷ்டத்தோடு மலை ஏறிப் பார்த்துவிட்டு, மாலையில் மலையை விட்டு இறங்கிக் கடைவீதிகளைப் பார்த்துக்கொண்டு தங்குமிடம் வந்து இராமபாத கோயிலுக்குப்போய் ஸ்ரீ ராமபாதத்துணி பாதங்களை பெற்றுச் சாப்பிட்டுப் படுத்தேம்.

1887௵ ஜனவரி௴ 7-ம் தேதி காலை எழுந்து பல்குணிநதியில் ஸ்நானம்செய்து சாப்பிட்டபிறகு பிரம்மஸ்ரீ கிருஷ்ண படங்கர் பொன்ரூபமான இராமர் பாதத்தை எமக்கு வெகுமதியாகக் கொடுக்கச் சில புரோஹிதர்கள் நமது டாக்டர் முதலானவர்களிடம் தக்ஷிணைக்குச் சண்டைசச்சரவுகள் செய்ய இந்தக் கலகத்தினால் எமது நேர்த்தியான பட்டுக்கைக்குட்டையை இழந்துவிட்டோம். இதுபோல அதிக மூட்டைகளை எடுத்துக்கொண்டுவர அனுகூலப்படாமல் ரெய்ச்சூரிலிருந்து எல்லாமூட்டைகளையும் ஒருபையில்கட்டி கூட்ஸு வண்டியின் மூலமாகக் கயாவுக்கு அனுப்பினதில், பெண்டுகளுடைய உயர்ந்த விலையுள்ள பட்டுப்புடவைகளும் மோசமாகிவிட்டன. இவ்வாதி கஷ்டநஷ்டங்களையும், புரோஹிதர்களுடைய உபத்திரவங்களையும் சகிக்கக்கூடாமல் அன்றுமாலை 4-மணிக்கு அயோத்திக்குப்

போக யோசித்துக் கயா ஸ்டேஷனில் வசதியான வண்டியில் ஏறினோம் அந்த வண்டியில் நமது தஞ்சை ஆப்த சிநேகிதர் இராய்பஹதூர் ஸ்ரீ சாமிநாதய்யரவர்களும் சம்சார சமேதராகப் புறப்பட்டார்கள். மாலை ஏழரை மணிக்குப் பான்கிபூருக்கு வந்து இறங்கி, இராத்திரி பதினொன்றரை மணிக்கு ஈஸ்டரன் புகைவண்டியில் ஏறிப் பனியினால் பலவித கஷ்டப்பட்டு, காலை ஆறுமணிக்கு மோகல்ஷெரியையும், ஏழுமணிக்குக் காசிப் பட்டணத்தையும் சேர்ந்தோம்.

கயாக்ஷேத்திரத்திற் செய்த பிரார்த்தனை.

மகததேசத்திற் சிறந்த பட்டணமாகவும், ஜனகாதி மஹரிஷிகளுக்கு இருப்பிடமாகவும், ஸ்ரீ சீதாபிராட்டியாருக்குப் பிறப்பிடமாகவும், பூலோக பெரிய மதஸ்தாபகராகிய புத்தருக்குப் பிறப்பிடமாகவும், சம்பகாரணியம் என்கிற சிறந்த பெயரைப் பெற்றதாகவும், அசோகாதி அரசர்களால் ஆளப்பட்டதாகவும், பிரபோதசந்திரோதயம் பஞ்சதந்திர முதலான கிரந்தங்களின் கர்த்தர்களுக்கு உறைவிடமாகவும், பல்குனிநதிதீரமாகவும், விருத்தாப்பியமான வடவிருக்ஷத்தை யுடையதாகவும், பதின்மூன்று பிதுர் கர்மங்களைச் செய்வதற்குச் சிறந்தவிடமாகவும், பிரேத பருவதத்தைப் பெற்றதாகவும் இருக்கிற இந்த கயாக்ஷேத்திரத்தில் ஓ ஜகதீசனே! நின்னை இன்று பிரார்த்தனைசெய்யப் பாக்கியம் பெற்றேம். பிதாபக்தி, மாதாபக்தி, ஆசாரிய பக்தியினாற் பிடிக்கப்பட்ட பற்பலநாட்டின் பற்பல ஜனங்கள் இங்குச் சதாவந்து தம்மைப் பெற்றோரையும், பெரியோரையும் கருதிச் சதா சிராத்தங்களைச் செய்தும், பல்குனி முதலான தீர்த்தங்களில் மூழ்கியும், வடவிருக்ஷத்தின் அடியில் பிண்டங்கொடுத்து வணங்கியும் வருகிறார்கள். ஆ! என்ன பிதுர்வாஸ்சல்லியம். பெற்றோருக்கெல்லாம் பெற்றவராகவும், பெரியோருக்கெல்லாம் பெரியவராகவும், ஆசாரியருக்கெல்லாம் ஆசாரியராகவும் இருக்கும் உன்னை இந்தப் பரிசுத்தமான ஸ்தலத்தில் இன்று வணங்குகின்றேன். அநேக மஹான்களுக்கெல்லாம் ஜனனபூமியாகிய இந்தத்திவ்யதேசத்தில்வந்து நின்னைவணங்கும் அடியேனுக்கு அம்மஹான்களுக்குக் கொடுத்த மன உறுதியையும், பரிசுத்த எண்ணத்தையும், பக்திஞானத்தையும் எனக்குக் கொடுத்து அவற்றால் உன்னை உண்மையாக வணங்கி உசிதமான வாழ்வை யடையச்செய்வாய். ஓம் தத்சத்.

காசி க்ஷேத்திரம்.

(1887ஆ ஜனவரீமீ 8உ) காலை எட்டு மணிக்குக் காசியிலிருந்து அயோத்தியாபுரிக்குப் போகும் வண்டியேறப் பலவித பிரயத்தினங்கள் செய்தும், வண்டி அகப்படாமையால், அந்த அயோத்தியா ரோஹில்கண்டு ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் ஓர் விடுதி ஒரு தினத்துக்கு வாடகைக்குக் கொண்டும், கங்கையில் ஸ்நானஞ்செய்தும் சமைத்துச் சாப்பிட்டுக் காசிப் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்தோம். அன்று மாலை ஆறு மணிக்குக் கயாவில் எங்களைவிட்டு வகைமோசமாகப் பிரிந்த ஸ்ரீராமசாஸ்திரிகளும் காசிக்குவந்து நாம் கொடுத்த பொருள் போதாதென்று வாதாட அவருக்குத் திருப்தியாகக் கொடுத்து அனுப்பிவிட்டு இராத்திரி 9-மணிக்கு அயோத்திப் புகைவண்டியில் ஏறினோம். அந்த அயோத்தி ரோஹில்கண்டு புகைவண்டியானது தென்னிந்தியா புகைவண்டி மாதிரியாக இருக்கின்றது. காசியிலிருந்து அயோத்திக்குச் சுமார் 200 மைலாயிருப்பதால், பிரயாணி ஒன்றுக்குக் கீழ் வகுப்புவண்டி சத்தம் ரூபா 1—8—9 கொடுத்தோம். வண்டிகள் வசதியாயிருக்கினும், குளிரின்கஷ்டம் அதிகம். நாங்கள்போன வண்டியில் கூடலூர் ம-ா-ா-ஸ்ரீ தெய்வநாயக முதலியாரவர்கள், ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தசாமி நாயடுகாரு சென்னை, ம-ா-ா-ஸ்ரீ A. C. பார்த்தசாரதி நாயடுகாரு முதலானவர்களும் வந்திருந்தார்கள். நாங்கள் காலை ஐந்துமணிக்கு அயோத்தியா ஸ்டேஷனைச் சேர்ந்தோம்.

AYODIA.

அயோத்தியாபட்டணம்.

1887ஆ ஜனவரீமீ 9உ இந்த ஸ்டேஷனிலும் வாடகைக்குப் போக்குவரத்துசெய்ய குதிரைகட்டிய கோச்சுவண்டிகள் சரசமான வாடகைக்கு அகப்பட்டபடியால் இரண்டு வண்டிகளைக்கொண்டு லக்ஷ்மண கட்டத்துக்கு நேராகப்போனோம். அங்குச் சுமார் இரண்டுமைல் அகலமும் அழகுமுள்ள சரயு நதியையும், அதற்கு அக்கரையில் ஹிமாசல மலையின் அற்புதக் காக்ஷியையும், இக்கரையில் இணையற்ற ஸ்தானகட்டங்கள், ஜபகூடங்கள், யாகசாலைகள், யோகிகள் சோலைகள், பின்னும் பலவித மாடமாளிகைகளைக் கண்டு பிரமித்து இர

ண்டொரு மணிகாலம் சாப்பாட்டின்பேரிலும் பிரியமற்ற வர்களாகவிருந்தோம். அன்று சுத்த பவுர்ணமி விசேஷ தினமாகையால், லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் பல கும்பலாக வந்து சரயுநதியில் தீர்த்தமாடி ஸ்ரீ ராமபிரானைத் துதித்துக் கொண்டிருந்த பக்தி வைராக்கியத்தை வர்ணிக்க எம்மாலாகவில்லை. அப்படிப்பட்ட சரயூ நதியானது பனிகால மானபடியால் பாதி பாகம் உறைந்த பனியாகிப் பனிக்குக் கற்களைப் போல் பிரபாகரனால் பிரகாசிப்பதினால், தென்தேசத்தாராகிய நம்மவர் அந்த ஜலத்தை விரலில் தொட்டாலும், பத்தாயிரம் தேள்கள் கூடிக் கொட்டுவதுபோலிருந்தது. ஆகவே, குளிரின் உபத்திரவத்துக்குப் பயந்து கரையின்மேல் வெகு நேரம் குந்தியிருந்து, கடைசியாகச் சுமார் மத்தியானம் இரண்டு மணிக்குத் துணிந்துபோய்ச் சரயுநதியில் ஸ்நானம் செய்து, அருகிலிருந்த ஒரு பெரிய மாடிவீட்டிற் சமைத்துச் சாப்பிட்டு அந்த அயோத்தியாவின் க்ஷேத்திரங்களைத் தரிசிக்கப்போனோம். அப்படிப் போகையில் எமது (ஆப்த சோதரராகிய ஸ்ரீமான் டாக்டர் நாராயணசாமி பிள்ளையவர்களுடைய பத்தினியாகிய தஞ்சை ஸ்ரீமதி குந்தலம்மாளவர்களும், நாகபட்டணம் ஸ்ரீமதி நிலாயஜாக்ஷியம்மையவர்களும், யாதோ ஒரு மனக்குறைவால் காசிமுதலான திவ்ய தேசங்களைச் சுற்றிப்பார்த்து, இந்த அயோத்தியா பட்டணத்துக்குவந்து எங்கள் கூட்டத்தோடு சேர்ந்து, ஸ்ரீ குழந்தைவேலின் பிடிவாதத்துக்குச் சஞ்சலப்பட்டுவிட்டு, க்ஷேத்திரங்களைக் காணவந்தார்கள். இந்த அயோத்தியாவில் ஒன்று அல்லது பத்துக்ஷேத்திரங்களா யிருந்தால், சுலுவில் பார்க்கலாம். ஆனால், பட்டணத்தின் பெரும் பான்மையான கட்டிடங்களும், வீடுகளும், க்ஷேத்திரங்களாக விருக்கின்றன. அதாவது:—ஸ்ரீராமர் பிறந்தவிடம், அவர் வாசித்தவிடம், விளையாடியவிடம், குதித்தவிடம், தாயைக் கண்டவிடம், தந்தையைக் கண்டவிடம், குருவைக் கண்டவிடம் என்றுதிப் பல பெயர்களால் எந்த கட்டடத்தைப் பார்த்தபோதிலும் கோயிலாகவும், எந்தவிடம் பார்த்தபோதிலும் குரங்குகளின் கூட்டமாகவும், எந்தவிடம் பார்த்தபோதிலும் இடிந்த கட்டட குவியல்களாகவும் இருக்கின்றன. மேலும் இவ்விடத்திய கோயில்களும் கட்டடங்களும் காசி, கயா கட்டடங்களைப்போலவும், சாதாரண தென்தேசத்துக் கோயில்கள்போலவும் இராமல், பெரிய மாளிகை மண்டபங்களாகக் கட்டப்பட்டு மெத்தை, திண்டு திவாசுகள்

போட்டு நம்மவர்கள் நவராத்திரி கொலுவில் வைக்கும் பொம்மைகளைப்போல் வர்ணத்துடன் செய்துவைத்து வணங்கிவருகிறார்கள். இவ்விடத்திய புரோஹிதர்களும், ஸ்தானீகர்களும் அதிகமாகப் பண ஆசை கொண்டவர்களாகக் காணப்படவில்லை. இவ்விதமாக இருப்பதனால் யாத்திரைக்காரர் யாது தக்ஷிணையைக் கொடுத்தபோதிலும் திருப்திகரமாக வாங்கிக்கொண்டு கையிலிருக்கும் மயில் இறகு குச்சுகளால் தடவி வாழ்த்துகிறார்கள். இப்படிப்பட்ட கோயில்கள் அநேகமிருந்தாலும் ஒரு கோயிலில் சுமார் ஐந்துமுழ நீளமும், நான்குமுழ அகலமும் பூமிக்குமேல் ஐந்தாறு அங்குல உயரமுமுள்ள கல்லுக்குச் சுண்ணும்பு அடித்து, அதை ஸ்ரீராமர் பிறந்த இடமாகக்கொண்டு பூஜைசெய்து வருகிறார்கள். நகரத்தின் மத்தியிலிருக்கும் ஒரு சிறு மலையின்மேல் பெரிய அநுமந்தராயன் கோயில் கட்டப்பட்டு, அதற்கு வருஷத்தில் 50,000 ரூபாய் செலவில் பிரதிதினமும் 500 பைராகிகளைப் போஷிக்கும்படி (Sujah-ud-daulah) சூஜா உட்டவுலா காலத்தில் நியமிக்கப்பட்டு, இப்போதும் நடத்தப்பட்டுவருகிறது. இந்த மலைக் கோட்டையிலிருக்கும் கட்டடம் வெகு நேர்த்தியாகவிருக்கிறது. அநேக சாதுபுருஷர்கள் ஸ்ரீராம மந்திரத்தைப் படனம் செய்துகொண்டு காலம் கழிக்கின்றனர். இங்கே குரங்குகளின்கூட்டமும்,உபத்திரவமும் அதிகம். இந்த அநுமந்தராயன் கோயிலுக்குச் சமீபத்தில், பிரம்மாண்டமும் அழகுமான அயோத்தியா இராஜனுடைய அரண்மனையும் இருக்கின்றது. இதையும் அனைவரும் போய்ப் பார்க்கலாம். இந்த அரண்மனை வீதியிலிருக்கும் சில்லரைக்கடை வீதிகளைப் பார்த்துக்கொண்டு வந்தால், நமது தென்தேசத்து நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் அதிக பணத்தைச் செலவுச்செய்து ஒரு தருமசத்திரத்தைக் கட்டிவருகிறாகள். அடுத்த கடைகளில் புளி ஒன்று தவிர மற்றப்படி சகல சாமான்களும் சரசமான விலைக்கு அகப்படுகின்றன. மேலும் இவ்விடத்தில் ஸ்ரீ பரகால சுவாமிகள் மடமும் இருக்கின்றது. இந்தக் கடைவீதிகளை தாண்டிவந்தால், சுகிரிமிகில்லா, இராமபிரசாத்கதுகாணு, வித்தியாகுண்டம் என்றுதி விசேஷ விடங்களிலும் 200, 300 பைராகிகளை ஆதரித்துவருகிறார்கள். மேலும் லக்ஷ்மணகட்டத்தண்டை சுவர்ண ஸ்ரீ ராம லக்ஷ்மண விக்கிரகங்களின் கோயிலொன்று இருக்கின்றது. இந்த விக்கிரகம் உண்டானதற்குக் காரணம்: இந்த அயோத்தியை சுவர்ணமயமான

பட்டணமென்று புராணத்தில் சொன்னதை உண்மையாக்க, இந்தக் கலியுகத்தில் ஸ்ரீ ராமபிரான் சுவர்ணமயமாக வந்து சேவைசாதிப்பதாகச்சொல்லுகிறார்கள். இந்த விக்கிரகங்களைச் சேவிப்போர் ஆள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும். இந்தக் கட்டளை நியமனம் ஏகாதசியன்றுமாத்திரமில்லை. அந்தத்தினத்தில் அனைவரும் தாராளமாகப்போய்ச் சேவிக்கலாம். இந்தஅயோத்திக்கு 2-மைல்தூரத்தில் நந்திகிராமம் இருக்கிறது. அங்கிருக்கும் சதாகுண்டத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ பரதரையும் அநேகர் தொழுகின்றனர். இன்னும் பல விடங்களிருக்கின்றன. இந்த நகரில் உருவத்தில் பெருத்த பல்லாயிரம் குரங்குகளிருந்து,ஜனங்களுடையதட்டுமுட்டுச் சாமான்களைக் கொண்டுபோய் வருத்தினாலும், கடித்தல் முதலான கொடிய வேலைகளைச்செய்யக்காணோம். மேலும் இந்த நகரத்தில் பெரும்பான்மையான அநேக கட்டடங்கள் இடிந்துகிடப்பதால், இது ஒருகாலத்தில் பிரம்மாண்டமான பட்டணமாக விருந்திருக்கவேண்டு மென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகவே, இதன் ஆதி சரித்திரத்தை விசாரிப்போம்.

THE ANCIENT HISTORY OF AYODYA.

அயோத்தியாவின் பூர்வ சரித்திரம்.

இந்த அயோத்தியாபுரியின் ஸ்தலமகத்துவ புத்தகத்தில் இந்த நகரம் பலவிதத்திலும் புகழப்பட்டிருக்கின்றது. அதாவது:—இது ஸ்ரீ வைகுண்டத்துக்குச் சமமானதாகவும், இதன் முக்கிய பாகமானது சுவாயம்புமனுவால் பூலோகத்துக்குக் கொண்டுவரப்பட்டு, சரயுமாநதி தென்கரைமுதல் தமசாநிரம்வரையில் அகன்று ஆதிபகவானது அவதாரமாகிய மச்சாகாரமாய்,சாகேதம், சத்தி,விமலைஎன்னும்பெயர்களைக்கொண்டதென்றும், அவந்தியைத் திருவடியாகவும், காஞ்சியை இடையாகவும், துவாரகையை உந்தியாகவும், மாயை மருமமாகவும், மதுரையைக் கண்டமாகவும், காசியை நாசியாகவும் கொண்ட ஸ்ரீ நாராயணருக்கு இந்த அயோத்தி முகமாகவும், தாரகவாச்சியன் அவதாரஸ்தலமுதல் அயோத்தியாபீடம், இரத்தினமண்டபம், கனக மண்டபம், தருமஸ்நானம், அரிஸ்நானம், பிராட்டியார் யாகசாலை, பொக்கிஷச்சாலை, அக்கினி குண்டம், யாகவேதி, உத்தியானவனம், சித்ராபீடம், விஷ்ணுஹரிஸ்தானம், ரமணாஸ்தானம்,அகஸ்தியாச்சிரமம், பாராசரர் ஆச்ர

மம், மகஸ்தானம், சுக்கிரீவ அங்கதாதிஸ்தானம், வசிஸ்டஸ்தானம், கமேசஸ்தானங்களும்; தந்தாதாவனகுண்டமுதல், அநுமத்குண்டம், கஜேந்திரகுண்டம், சீதாகுண்டம், சுக்கிரீவகுண்டம், விபீஷணகுண்டம், வசிஷ்டதிலோத்தமைசங்கம், கருஜாகுண்டம், வித்தியாகுண்டம், தசரதகுண்டம், கோசலைகுண்டம், சுமித்திரா குண்டம், யோகினி குண்டம், ஊர்வசிகுண்டம், பிரகஸ்பதி குண்டம், ருக்மணி குண்டம், சக்கரதீர்த்தம், பிரம்மகுண்டம், ரண விமோசன குண்டம், இந்திரதீர்த்தம், குசுமாயுதகுண்டம், வைதரிணி தீர்த்தம், கோபிரதாதீர்த்தம், வால்மீக தீர்த்தம் முதலான பல விசேஷ தீர்த்தங்கள் உடையதெனவும், இக்ஷுவாகு பூபதியின் வேண்டுகோளின்படி பகவான் வசிஷ்டமாமுனிவர் மானத வாவியினின்று ஜனித்த சரயூநதி: வசிட்டை, இராமகங்கையென்று பெயர் பெற்றதென்றும் ஸ்தலபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனதுபற்றியே

காசிகாண்டம் சந்தபுரியின் சிறப்புரைந்த அத்தியாயத்தில்

"சரயுநதி புனல்படிந்து தென்புலத்தோர் கடன்கழித்துத்
 தழல்செய் வேள்வி
யருகலறை யோரினி துவப்ப வமுதுறமு மின்னடி
 சிலமை யூட்டிப்
பரிவினொடு மந்நகரிற் பஞ்ச சுராத்தி யுறைந்து பவ
 ளவஞ் சிந்தி
விரிகதிர் வெண்மணி கொழிக்கும் வீங்குபுனற்
 பிரயாகைகளின் மேவினுனே."

என்று சொல்லப்பட்டிருக்கின்றதுபோலும், இந்த அயோத்திநகரம் வைவசுவதமனுவினல் கட்டப்பட்டதென்று சில சாசனங்களாலும் காணப்படுகின்றதன்றியில், தொன்றுதொட்டு எல்லாம் வல்லோரான இராஜாதி ராஜர்களால் ஆண்டுவரப்பட்டதாகையால், "அயோத்தி" என்பதன்பொருள் ஜயிக்கப்படாதவிடமென்று புலவர் புகழ்கின்றனர். மேலும் இந்த பரதகண்டத்தில் (பிரபலமாக ஆண்டுவந்த சூரிய வமிசத்தார், சந்திரவமிசத்தார் என்னும் இரண்டு இராஜவமிசத்தார்களுக்குள்) சூரியவமிசத்தைச்சார்ந்த இக்ஷுவாகுமுதல் குட்சிவகுட்சி, பிரகளுபன், அனரணியன், பாணன், பிருது, திரிசங்கு, காகுஸ்தன், பிருதுஹாு, விசுவசந்தி, சாந்திரன், புவனேசுவரன், சிரவன், விரகதசவன், தன்டமாரன், கிருதாஸ்வன், ஹிரசவன், நிகும்பன், சிரஷசவன், சேனஜித்தன், யுவனசுவன், மந்தாத்திரி, பிருகுஸ்தன், திரிசியதிரசியன்,

அனாரணியன், ஹேரேசுவன், பிராருணன், திருவந்தவான், சத்தியவர்த்தனன், அரிச்சந்திரன், லோகிதாசன், ஹரிதன், சம்பகன், சுதேவன், விஜயன், பிருகன், விருகன், பஹூகன், சாகரன், அசமான், ஜரசன், அஞ்சமதன், பாகிரதன், சுதன், நபன், சிந்துதீபன், அவிதாயுசன், ரிதபான், சாருஷன், அஸ்மகன், மிசாக்கன், ஐநாபதி, விசுவாசு, சதுரங்கினன், திர்க்கபாகு, ரகு, அஜான், தசரதன், ஸ்ரீராமர் வரையில் சிறந்து ஆண்டதன்றியில், ஸ்ரீராமருக்குப் பிறகு குசன், அதிதி, நிஷாதன், நபாசன், பண்டாரிகன், சேமதுவசன், தேவக்னிகன், ஹானியகன், பரிபத்திரன், ரஞசலன், விசாணபன், அரசனசகுணன், விருதுதி, ஹிரணியபான், புஷியன், துருவசந்தன், சுதர்சனன், அக்கினவரணன், சிகரன், மாரு, பிரசசுருத, அமாசேனன், மஹாசுவேது, விசுவபாஹூ, பிரசன்னஜித்து, தாசகன், விருஹத்பலன், விரஹத்திரன், உருகிரிய, வடசவிருத்த, பிரதிவியோமன், பானு, தேவகன், சகாதேவன், வீரன், விரஹதேசுவன், பானுமதி, பிரதிகாசுவன், சபிரதிபன், மாருதேவன், சுசேஷத்திரன், புஷ்கரன், அந்திரிகாசன், சுதபசன், அமிருதஜித்து, விருஞத்துவஜ, பார்ஹி, குருந்தியஞ்சயன், திரானஜபன், சஞ்சயன், சுலோகியன், சத்துவோதான், வங்கலாடன், பிரசன்னஜித்து, க்ஷூதிரகா, சுமித்திரன் முதலான மகாராஜர்கள் ஆண்டுவந்த தேசம். இந்த மன்னர்களில் ஒருவராகிய ஸ்ரீராமரானவர், துஷ்டசம்ஹாரநிமித்தம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரமாகவந்து, பிதாவாக்கியத்தைப் பரிபாலனைசெய்யும்படி, தாடகை முதலான துஷ்டர்களைக் கொன்று, மிதிலாபுரியில் ஸ்ரீ ஜனகமகாராஜனுடைய குமாரத்தியாகிய சீதையை விவாகம் செய்துகொண்டு தென்தேசத்தை நாடி வந்து, இராவணாதி துஷ்டர்களைக் கொன்று, விபூஷணருக்கு இலங்காபுரி பட்டங்கட்டி, மறுபடியும் அயோத்திக்குத் திரும்பிப்போய் 12,000 வருஷகாலம் இராஜ்ஜியபாரம் செய்து, பிறகு தனது குமாரன் குசனிடம் இராஜ்ஜியத்தைக் கொடுத்துவிட்டு, தாமும் தம் தம்பிமார்களும் சரயுநதியில் இறங்கி உடத்தோடு வைகுண்டத்துக்குப் போனதாகக் கொண்டாடி வரப்பட்டதினால், இந்த அயோத்தியாபுரி இன்றளவும் சிரோபூஷணைப் பட்டணமாகக் கொண்டாடிவரப்படுகிறது. மேலும் ஸ்ரீராமருக்குப் பிறகு சூரியவம்சத்தைச் சார்ந்த 85 இராஜர்கள் இந்த அயோத்தியாபுரியிலிருந்து அரசாண்டுவந்ததாகச் சில புராதனகிரந்தங்களால் தெரியவருகிறபடியால், இது ஒரு காலத்

தில் பிரபஞ்சத்தில் பிரக்கியாதிபெற்ற பட்டணங்களில் புராதனமான பெரிய பட்டணமென்று தெரியவருகிறது. ஆனால் (Buchanan) பக்கானன், (Tod) டாட், (Wilford) வில்போர்ட் முதலான சிறந்த சரித்திரக்காரருக்கு அகப்பட்ட ரிகார்டுகளினால் கி. மு. 1366-வருஷங்களுக்குமுன் அதாவது சுமார் 400 வருஷங்களுக்குமுன் வைவஸ்தரால் இந்த நகரம் கட்டிவெக்கப்பட்டு, கி. மு. 775 - வருஷங்களுக்குமுன் ஸ்ரீராமருக்குப்பிறகு அவருடைய குமாரர்களுடைய கலகங்களினால் பட்டணம் பாழ்த்துப்போனதாகவும், கி. மு. 512-வருஷங்களுக்குமுன் விருதபால இராஜாகாலத்தில் புதுப்பிக்கப்பட்டாலும், மறுபடியும் சண்டை சச்சரவுகளால் சீர்கெட்டுப்போக, கி மு. 87-வருஷங்களுக்கு முன்பு விக்கிரமார்க்க ராஜனுடைய சுவாதீனமாகி, புதுப்பிக்கப்பட்டு 360-கோயில்கள்கட்டிவைக்கப்பட்டதாக எழுதியிருக்கிறார்கள். அப்போது இந்த அயோத்தியாபுரியானது 148 கோச (200 மைல்) நீளமும், 36 கோச அகலமும், 50209-பவுன் கந்தாயமுமுள்ள பிரம்மாண்ட பட்டணமாகவுமிருந்ததாகவும், காசி க்ஷேத்திரம் இதற்கு மயானமாக விருந்ததாகவும், இப்போதிருக்கும் அயோத்தியாபுரியானது ஒருசிறுகிராமமாகவுமிருந்ததாக (AyeanAkbery) அயின் ஆக்பரி கிரந்தத்திலும்,(Asiatic Reserches)ஆசியாடிக் ரீசர்ச்சஸ் கிரந்தங்களிலும் விவரமாகிறது. இப்படிப்பட்ட பட்டணமானது பேபர் சக்கிரவர்த்திகாலத்தில் பிடிக்கப்பட்டு, அரங்கஜிபு காலத்தில் கோயில்முதலான கட்டடங்கள் இடிக்கப்பட்டு, 14 கமான் வளைவு வாசல்களுள்ள மஸ்ஜிது கட்டப்பட்டது. அந்தக் கட்டடமும் இப்போது புராதனமாகிக் கிடக்கின்றது. இந்தக்கட்டடத்தில் ஒரு விசிறிகண்டு பிடிக்கப்பட்டது. அதை அனுமார் இலங்கையிலிருந்து கொண்டுவந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்தக் கோசலநாடு கி. மு. ஏழாம் நூற்றாண்டில் சீனதேசயாத்திரிகன் ஹியூண்டி சாங்கு வந்து பார்த்தபோது புத்தசமய ஸமஸ்தானமாக இருந்ததென்றும் இங்கு உபபுத்தமதக்கோயில்களும் 3000 குருமார்களும் இருந்ததாகவும் சரித்திரம் எழுதி இருக்கிறார்.

மத்தியகால ஸ்திதி.

இந்த அயோத்தியாவை மகமதுகோரி காலத்தில் சிரேஷ்ட தேசாதிபதியாகவிருந்த குத்பதீன் அபீக்குக்காக மகமதுபத்தியர்கில்ஜியால் முதலில் பிடிக்கப்பட்டு டில்லி சக்கர

வர்த்திகள் வசமாகியும், பிறகு சாடட் அலிகான், செப்டார் ஜங்கு, (1756௵) சூஜாடவுலா, (1775௵) இசப்டவுலா, (1799௵) விஜயாலி, (1798௵) சாடட்லி, (1814௵) காஜிடட்டீன் ஐதர், (1827௵) நசிரிட்டீன் ஐதர், (1837௵) மகமதலிசா, (1842௵) உமயுதசலிசா, (1847௵) வஜித லிசா முதலானவர்களால் ஆண்டுவரப்பட்டன. கி. பி. 1801௵ ஈஸ்டு இந்தியா கம்பெனியாரென்னும் அங்கிலேய ரிடம் ஒருவாறு சமாதானமாக வசமாகினாலும், 1856௵ பிப்ரவரிமீ பிரிடிஷ் கவர்ன்மெண்டில் சேர்த்துக்கொள்ளப் பட்டது. வேறொரு சாசனத்தினால் கி. பி. 1194௵ மகம் மதியர்வந்ததாகவும், 1732௵ பெர்சியாநாட்டு வர்த்தகனாகிய சாடட் அல்லிகானை சுபேதாராக நியமித்ததாகவும், பிறகு மகம்மதிய ராஜ்ஜியத்துக்குட்பட்டு 1856௵ அங்கிலேயர்வச மாகி 1877௵ சிப்சமிஷனர் அதிகாரத்துக்குள்ளாகிப்பிறகு வடமேற்கு மாகாணங்களோடு சேர்க்கப்பட்டதாம்.

தற்காலஸ்திதி.

அப்படிச் சேர்த்துக்கொண்டதுமுதல் குடிகள் கலகச் சங்கடங்களுக்குட்பட்டுச் சாகாமல், சுதந்திர சுகவாழ்க்கைப் பெற்றார்கள். இப்போது இந்த அயோத்தி மாகாணமானது 24,000சதுரமைல்விஸ்திரணமுள்ளதாகவும், 29,700,00ஜனங் கள் வசிக்கப்பட்டதாகவும், கோதி, நெல், சோளம், கொட்டை முத்து, கருப்பு, நிலி, அபினி, பேரி, கொய்யாப்பழம், இலந் தைப்பழம், பருத்தி, புகையிலை, வெட்டுமரங்கள், உப்பு முத லானவைகள் ஏராளமாக விளைவதாகவும், வர்த்தகவளமான தாகவும் இருக்கிறது. தேசமானது பெரும்பாலும் உஷ்ண பூமியாக விருந்தாலும், குளிர்காலத்தில் பனி அதிகம். இந்த மாகாணத்துக்கு இலக்ஷ்மணபுரி பிரதான பட்டணமாகவும், அயோத்தி, பைசாபாத்து, பாரியாகா, பிரதபகார், கோண்டா, சிதாபூர் முதலானவைகள் சிறந்த ஜில்லாப் பட்டணங்களாக வும் இருக்கின்றன. இப்போது இராமகோட்டை, நாகேசுவர நாதர்கோயில், மணிபிரபுத்த முதலானவைகள் இருக்கின்றன. தற்கால அயோத்தியாபுரியில் ஏராளமான யாத்திரைக்காரர் களும், முக்கியமாக பைராகிகளும் ஆயிரக்கணக்காக வருவ தன்றியில், சில பைராகிகள் பொந்தியோடு பரமபதமடைவ தாக எண்ணி, சரயூநதியிலிறங்கிவிடுகிறார்களாம். சித்திரை

மாதங்களில் நடக்கும் ஸ்ரீராமஜனன உற்சவத்திற்கு 5,00,000 ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். இந்த உற்சவத்திற்கு மஹாசிங்குக் கோவிலிலும், ஹநுமானகிரியிலும் வெகு பூஜைகள் நடக்கின்றன. பட்டணத்தில் முட்டகோஸ், உருளைக்கிழங்கு, கத்தரி முதலான காய்கறிகள் ஏதேஷ்டமாக விற்கப்படுகின்றன. பெரும்பான்மையான ஜனங்கள் விஷ்ணு பக்தர்களான படியினால், எவர் வாயிலும் "ஜே சீதாராம்" என்ற பாராயணமே இருக்கிறது; இத்தியாதிகளைப்பார்த்தே மகம்மதிய ராஜாக்களிற் சிறந்த சாடட் அலிகான் தென்மேற்கு முகமாகச் சுமார் 10-மைல் விஸ்தீரணமுள்ள பைசாபாத்து என்னும் நகரை (1730-ளு) கட்ட, சிப்டார்ஜங், சூஜாடவுலா, என்பவர்களால் பல கோட்டை கொத்தலங்களைக்கட்டிப் பிரபலப்படுத்தினார்கள். இந்த அயோத்தியா கல்கத்தாவுக்கு ஈஸ்டு இந்தியா ரோஹில்கண்டு லைனில் 545 மைல்கள் தூரத்திலும் இலக்ஷ்மணபுரிக்கு 46 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. இதற்கு ரெயில் சார்ஜ் ரூ 5-13-1, 1-3-0 ஆகிறது.

FIZABAD.

பைசாபாத்து.

இப்படிக் கட்டிப் பலவிதத்திலும் சிறப்பித்து ஆண்டு வருகையில், 1775ளு ரோகிலரோடு நடந்த சண்டையினால் லக்ஷ்மணபுரிக்குக் குடிபோய் விட்டார்கள். அன்றுமுதல் அதன் பிரதிஷ்டை குறைந்தாலும் இப்போதுங்கூட அந்தப் பட்டணத்தின் சுத்தியும் சுந்தரமும் பார்க்கப் பார்க்கப் பூரணநந்தத்தைக்கொடுக்கிறது. இவ்வளவு சுத்தியான முன்சிபல் பட்டணத்தை இந்தியாவில் நாம் கண்டது அபூர்வம். இந்தப் பட்டணத்திலிப்போது 1,00,000 ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் பித்தளை முதலான தட்டுமுட்டு சாமான்கள், ஆயுதங்கள், துணிகள் முதலான கைத்தொழில் வர்த்தகர்களென்று சொல்லலாம். மேலும் கோரக்பூரிலிருந்து வரும் சேனைதங்குவதற்குக் கன்டோன்மெண்டும் ஒன்று பெரிதாகி யிருப்பதால், போர்வீரரும், குதிரைகளும் இங்கே தங்குகின்றன. அன்றியும் அநேக உத்தியானவனங்களிருக்கின்றதன்றியில், இவ்விடத்தில் சரயூநதியானது சுமார் இரண்டு மைல் அகலமும், கப்பல் போகத்தக்க ஆழமுமுள்ளதாயிருக்கிறது. இந்த விடத்தில் கேதாரகட்டம் என்னும் பெய

ரால் ஸ்ரீராமர் சரயூநதியிலிறங்கியவிடமென்று அநேக ஸ்நான கட்டங்களும், மண்டப மாளிகைகளும் இருப்பதன்றியில், அக்கரையில் தோன்றும் இமயமலையின் சார்பு கம்பீர காக்ஷியுடையதாகவிருக்கிறது.

பைசாபாத்தின் தற்கால ஸ்திதி.

இந்த பைசாபாத்தானது கி. பி. 1030 - ம் வருஷம் சுல்தான் மகம்மதியருடைய ஷாலார்ஷன் குமாரர் சைய்த் ஷாலார் மாசத்து அயோத்தியாவின்மீது படை எடுத்து இந்த பைசாபாத்தின் வழியாகப்போனார். அவரை இராஜபுத்திர வீரர்கள் கொன்றுவிட்டார்கள். கி. பி. 1816-ம் வருஷம் ஷுஜாஉட்டௌன் மனைவி பாஹுபேகம் அம்மாள் இறந்தது முதல் பட்டணம் பாழாகியது. இங்கே அந்தம்மாளுடைய கோரியும் அவர் கணவனார் கோரியும் இன்றும் அநேக பள்ளிவாசல்களும் இருக்கின்றன. அயோத்தியாவின் முதல் பிரதிநிதியாகிய ஷுஜாஉட்டௌன் 1756௵ பிரதான பட்டணமாக இருந்த இது கி. பி. 1780௵ லக்ஷ்மணபுரிக்குச் சேர்த்தப்பட்டது. இதிலிருந்து சுல்தான்பூர், பிரடான்பார்காதி விடங்களுக்குப்போக நல்ல ரோட்டுகள் இருக்கின்றன. இது மோகல்ஷராய் ஜங்ஷனுக்கு, லக்ஷ்மணபுரிக்கு 80-மைல்கள் தூரத்திலும், கல்கத்தாவுக்கு ஷஹாரன்பூர் ஜங்ஷனில் 402-மைல்கள் தூரத்திலும் முறையே ரூ. 1-9-9, 4-9-0 சார்ஜ் கொடுக்கவேண்டும். இப்போது இது ஒரு கமிஷனர் அதிகாரத்தாக்குள் இருக்கிறது. 1887௵ ஜனவரிமீ 10௳ காலை இரண்டு கோச்சு வண்டிகளை 4-ரூபா வாடகைக்குக்கொண்டு அயோத்திக்குச் சுமார் 7-மைல்தூரத்திலுள்ள இந்த பைசாபாத்தென்னும் அழகிய நகரைக் கண்டு, கேதார கட்டத்தில் சரயூநதியில் ஸ்நானம் செய்து அடுத்திருக்கும் அசோக வனத்தில் பிரார்த்தனை செய்து போஜனம் செய்தோம்.

DEVOTION AT ASOK TREE OF AYODIYA.

அயோத்தியாவில் சரயுநதிதீரம் கேதார கட்டத்தில் ஓர் அசோக மரத்தடியில் செய்த பிரார்த்தனை.

ஓ! ஆநந்த ஸ்வரூபனே! நினது ஆஸ்திகத்துவத்தை துவேஷிக்கும் நாஸ்திகர்களும் நினது இருப்பை நம்பும்படி

சிருஷ்டிக்கப்பட்ட இந்த சரயுநதியின் அற்புத காக்ஷியை யென்னென்று சொல்லுவோம். இந்த சரயுநதிக்கு வடபாகம் பிரபஞ்சத்திலெல்லாம் பெரிய பருவதமாகிய ஹிமாசல மலை எவ்வளவு பயங்கரமாயும், பிரம்மாண்டமான பனிக் கட்டிகளால் பல பிரபாகர தேஜஸ்ஸுகளாகவும் பிரகாசிக்கின் றன. தெற்கொல்லையோ கவிகளால் புகழத்தக்க கோசல தேசமென்னும் அயோத்தியாநகரம் அலங்காரமாகத் தோற்று கின்றது. இவ்வெல்லைகளுக் கிடையில் சமுத்திரத்தைப் போல விரிவும், பலசூரிய குஞ்சுகளைப்போல் பிரகாசிக்கும் சிறுமணல்படர்ந்த சிறந்த மேடுபள்ளங்களுடனும் சிறுசிறு ப்பான சீதஜலத்துடனும் ஜ்வலிக்கும் இந்த பிரம்மாண்ட மான சரயுநதி ஓடுகின்றது. இந்த நதியின் இந்த கட்டத் தில்தான் ஸ்ரீராமர் வைகுண்டத்துக் கெழுந்தருளியதாக சாஸ்திரங்களாற் சொல்லப்பட்டு, அந்த உண்மையை நிலை நாட்டும்பொருட்டு அதிக ரமணியமும் விசாலமும் விநோதமு மான ஆவி கூப தாமரை தடாகங்கள், படிகள், ஜபமேடைகள் யோகிகளுக்கேற்ற குகைகள் இவை கட்டப்பட்டிருக்கின்றன. இப்படி அநேக விதங்களில் சிறந்த இந்த கட்டத்திலிருக் கும் அழகிய அசோக விருக்ஷத்தின் அடியில் அடியேமும் அடியேமைச் சார்ந்த சகோதரர்களும் கூடி நின்னைப் பிரார்த் தனை செய்யும்படியான பாக்கியம் பெற்றதற்கு நின்னை எவ்விதமாகத் துதித்துக் கொண்டாடுவேம். எம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம், எம்முடைய பாக்கியமே பாக் கியம், எமது ஜனனமே ஜனனம்! இனி இப்படிப்பட்ட காக்ஷி என்றுக் கிடைக்கும்! எப்போது கிடைக்கும்! எவ ருக்குக் கிடைக்கும்! எந்த சுத்தவீரன் கொடிய துஷ்டை யாகிய தாடகையை வதைத்தானோ? எந்த சுத்த சாமர்த் தியவாதி வில்லையொடித்துச் சீதையை மணஞ்செய்தானோ? எந்த உத்தம புத்திரசிகாமணி பிதுர் வாக்கியத்தை நிறை வேற்ற பாலியதசையையும், பிரபஞ்ச சுகத்தையும் வெறு த்துக் கேவலம் மரவுரி, சடாதாரியாகிக் காட்டில்பதினான்குவரு ஷங்களைக் கழித்தானோ? எந்த நீதி துறந்தரன் சகோதர வஞ் சனைவழக்குகளைத் தீர்த்துக் குறைந்த பலத்தையுடைய சுக்ரீ வனை யாதரித்தானோ? எந்த உத்தம கணவன் சீதைக்காகவும், துஷ்டத்தனத்துக்காகவும் இராவணாதி கொடிய இராக்ஷஸர் களைக் கொன்று கொடுமையை நீக்கினானோ? எந்த கருணாநிதி பகைவன் தம்பியென்று பாராட்டாமல் அபயமென்று வந்த

விபீஷணனுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்தானோ? எந்த தருமராஜன் குடிகளுடைய சுகதுக்கம் தனது சுகதுக்கமாகப் பாவித்து ஒற்றினாலன்றி தானும் ஏழைபோல் இராக் காலங்களில் வீதிகடோறும் திரிந்து, குடிகளுடைய அபிப் பிராயங்களை யறிந்து, செங்கோல் செலுத்தி வந்தானோ? எந்தக் குடிகளின் அடிமையைப்போல் உலகத்துக்குப் பயந்து மஹா பதிவிரதையாகிய சீதையைக் காட்டுக்கனுப்பினானோ? எந்த நீதிபோதகன் ஏகபத்தினி விரதமாகச் சீதையென்னும் தனது ஒரு ஸ்திரியைவிட வேறு ஸ்திரீகளை மாதாவைப்போல வெண்ணி வேறு விவாகமற்றுச் சுத்த ஏகபதிவிரதா தரும சாதனாக விருந்தானோ? எந்த குலசிரேஷ்டன் முனிகள், எதிகள், தபோநிதிகள் முதலான பெரியோர்களைப் பாது காத்து யாகயக்ஞ கர்மங்களையும், பிரம்ம பாராயணாதிகள் விசேஷித்தோங்கச் செய்தானோ? எந்த உத்தமன் சாக்ஷாத் மஹா விஷ்ணுவின் அவதாரமென்று நாளது வரையில் இந்த இந்து தேசமெங்கும் வணங்கப்பட்டு வருகின்றானோ? எந்த உத்தமபுருஷனுடைய சரித்திரத்தைச் சீர்திருத்தமுள்ள உல கத்தின் எல்லா தேசத்தார்களும் இப்போதும் கொண்டாடி வருகிறார்களோ அப்படிப்பட்ட ஸ்ரீராமருடைய ஜனன ஸ்தானமும், இராஜாங்க ஸ்தானமுமாகிய இந்த அயோத்திக்கு வரவே, சரித்திர சங்கதி உண்மையானதன்றியில், சாக்ஷாத் ஜகதீசுவரனாகிய நினது சிருஷ்டியின் அற்புத காக்ஷியைக் கண்டு ஆநந்தமடைகிறேம். இதோ எமக்கு முன்னாகத் தோன் றும் இந்த ஹிமவத்கிரியில் அல்லவா வியாசர், சுகர், பராச ரர் முதலான பிரம்மரிஷிகள் சதா தபோநிதிகளாகி நின்னை நேரில் கண்டு பேசிக்குலாவினார்கள்? ஆம்! பெருமை பெற்ற புத்தரும், அன்று இப்படிப்பட்ட அசோக விருக்ஷத்தினடி யில் உட்கார்ந்து பூரண பிரம்மத் தியானத்தால் நிர்வாண தசையை யடைந்தார். அப்படிப்பட்ட மஹாத்துமாக்களுக் கெல்லாம் நீ சர்வசிரேஷ்டனாகவும், சிநேகிதனாகவும் இருக்க, அடியேமிடத்தில் மாத்திர முனக்கு உபேக்ஷையேன்? அடி யேம் கல்வி கேள்வி யற்ற ஏழை! இது நீ யறிந்த விஷயம்? எம்மைப்போன்ற ஏழையை யாதரித்தல் உனக்குப் பெருமை. இனித்காமதமேன்! உன்னை நேரிற் கண்டு பேசி எம் பாப தாபங்களைப் போக்கிக்கொண்டு, சதா ஸாதுக்களுடைய சமா ஜத்திலிருந்து நின்னை ஸ்துதிசெய்யவேண்டுமென்றே கோய முத்தூரைவிட்டு எத்தனையோ மலைகளையும், எத்தனையோ

நதிகளையும், எத்தனையோ தேசங்களையும், எத்தனையோ சங்கடங்களையும் சகித்துக்கொண்டு ஹிமாசல பர்வத அடிவாரமாகிய இங்கு வந்தேம். இனி இந்த விடத்தை விட்டுப்போனால் உலக ஆசாபாசங்கள் பிடித்து வருத்தும். ஆகவே, எமக்குப் பிரத்தியக்ஷமாகியும், பிரம்மாண்டமாகியும், பலகோடி பிரபாகர பிரகாசமாகியும் சுத்த சைதன்ய பிரம்மாநந்தமே! யாம் நின்னை அடைக்கலம் புகுந்தேம். எம்மை அங்கீகரித்துக் கொள்வாய்! எமது கண்ணீரைத் துடைத்து முத்தமிட்டு உமது மகவைப்போல் ஆதரிப்பாய்! இனி யாம் இந்த ஹிமாசலப் பருவதத்துக்கு சீக்கிரம் வந்து நினது பக்த வைராகிகள் கோஷ்டியிற்சேர்ந்து சதா ஓம் சச்சிதாநந்த ஹரியாகிய நின்னைப்பாடி ஆநந்தக்கூத்தாடச் செய்வாய்! ஓ ஹிமாசல பருவதமே, நினக்கு மங்களம்! ஓ சரயு நதியே! உனக்கு மங்களம்! ஓ அயோத்தியா நகரமே நினக்கு மங்களம்! ஓ அஸோக விருக்ஷமே நினக்கு மங்களம்.—ஓம் தத் சத்.

பிறகு மாலை 4 மணிக்கு பைசாபாத்து நகரத்துக்குள் பிரவேசித்து அதன் பெருமைகளைப் பார்த்துக்கொண்டு வரவே, தமிழ்ப்பாஷையறிந்த இரண்டு சென்னை மகம்மதிய அன்பர்கள் அவ்விடத்தில் வியாபாரார்த்தமாக வந்திருப்பதினால், எம்மை அன்று இராத்திரி தங்கும்படி ஜாகை தயார் செய்தார்கள். ஆனால் காலவித்தியாசத்தை யனுசரித்து புகைவண்டி ஸ்டேஷனுக்குவந்து ஆள் ஒன்றுக்கு ரூ. 1-9-9 மேரை இலக்ஷ்மணபுரிக்கு டிக்கெட்டுகளைப் பெற்று, சுமார் பத்து மணிக்கு வண்டியேறி இரவெல்லாம் பனியால் வருந்திக்கொண்டே மறுநாளாகிய 1886ஹு ஜனவரிமீ 11உ காலை ஐந்து மணிக்கு இலக்ஷ்மணபுரியைச் சேர்ந்தோம்.

LUCKNOW.

இலக்ஷ்மணபுரியின் பூர்வ சரித்திரம்.

இந்த அழகிய பட்டணம் குமதைநதியின் தென்மேற்குப் பாகத்தில் ஸ்ரீ ராமருடைய சகோதரராகிய இலக்ஷ்மணரால் கட்டப்பட்டது. பிறகு சூரியவமிசத்தாருக்குத் தலைமை நகரமாகவிருந்து அரங்கஜீப்பால் பாழாக்கப்பட்டது. பிறகு கி. பி. 1798ஹு முதல் 1814-ம் வருஷம் வரையில் இதை யரசாண்ட நவாப் விஜபர் சாதத் அலி என்பவர் காலத்திலும், கி. பி. 1775ஹு முதல் 1797-ம் வருஷம் வரையிலரசாண்ட நவாப்

விஜயர் இசுபுடவுலா காலத்திலும் புதுப்பிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டது. இந்த மகம்மதிய ராஜாக்கள் சிற்றின்பத்தில் மூழ்கியவர்களாகி ஜன சவுக்கியத்தைக் கருதாமல் இரவும் பகலும் இந்திரசபாதி புது நாடகங்களை நடித்துக் கேளிகா விலாசத்தில் காலங்கழிந்து வந்தமையாலும், வேறு சில காரணங்களாலும் இங்கிலீஷ்காரர் வசமாகி இப்போது அயோத்தியா பாகத்துக்குத் தலைநகரமாகவிருக்கிறது.

இலக்ஷ்மணபுரியின் தற்கால ஸ்திதி.

இந்த இலக்ஷ்மணபுரியானது குமுதை நதியோரம் சுமார் பத்து மைல்தூரம் வரையில் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களையும், மற்றுமுள்ள வீடுகளையும் பார்ப்பவர்களுக்கு இது இந்துதேசத்தின் நடனசாலையென்றே சொல்லவேண்டும். நகரத்தின் உட்பிரவேச கேட்டுகளின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வேங்கைப்புலிகள் கட்டப்பட்டிருக்கின்றன. நகரத்திலிருக்கும் கட்டடங்கள் யாவும் ஆச்சரியமான மாடமாளிகை கூடகோபுரங்களால் பிரகாசிக்கிறதன்றியில், தெருவில் நடக்கும் கேவலமான சிறு பையன் வாயிலும் இந்திரசபாதிபாட்டுகளை பாடிக்கொண்டிருப்பதைக் கேட்கலாம். இதனால் இந்திரசபாதி நாடகங்கள் இந்த நகரத்தில்தான் முதல்முதல் ஆரம்பிக்கப்பட்டதென்பதற்குப் பல பிரபல ஆதாரங்களிருக்கின்றன. இது சுமார் 60 மைல்கள் தூரத்திலிருக்கும் அயோத்தியாவுக்குத் தலை நகரமாகவும் 36 சதுர மைல்கள் விஸ்தாரமுடையதாகவும் 2,72,000 ஜனங்கள் வாசமுடையதாகவும் நீர்வளம் பொருந்திய நிலப்பாங்கும், வர்த்தகவளமுள்ள பெரியபட்டணமாகவும், 1857ஞ் நடந்த சிப்பாய்க்கலக காலத்தில் உண்டான கலகச் சின்னங்களையுடையதாகவும், அநேக அற்புதக் கட்டடங்களை உடையதாகவும் இருக்கிறது.

இந்த நகரத்தில் பார்க்கத்தக்க விசேஷங்கள்.

(1) டில் குஷா அரண்மனை (The Dil Koosha Palace)—இது 1800 வருஷம் நவாப் சதத் அலிகானால் கட்டப்பட்ட அழகிய பிரம்மாண்ட கட்டடம். இவ்விடம் 1857ஞ் நவம்பர்மீ 24-தேதி ஸர் ஹென்றி ஹவ்லாக் (Sir Henry Havelock) என்பவர் இறந்தார்.

(2) லாமார்ட்டினியார் கலாசாலை—இது 1793ஹு கேவலம் சோல்ஜராக வந்து பிறகு கிரேஷ்ட பதிவியைப் பெற்ற ஜெனரல் கிளாடி மார்ட்டின் (General Claude Martin)என்னும் பிரான்சு தேசத்தானால் கட்டப்பட்டது. இவர் மகா உத்தம தருமப் பிரபுவென்று குடிகள் இன்றளவும் கொண்டாடி வருகிறார்கள். இவர் இந்த இடத்திலேயே இறந்து அடக்கம் செய்யப்பட்டார்.

(3) விங்குபீல்டு தோட்டம் (The Wingfield Market)—இது தேவேந்திரன் வசிக்கக்கூடியதைப்போலிருக்கும் சிங்கார நந்தவனம்.

(4) சிகண்டராபாக் (The Secendrabaugh) — இது கவர்ன்மெண்டாருடைய விசாரணையிலிருக்கும் பூங்காவனம். இவ்விடம் 1857ஹு நடந்த கலகத்தில் 200-பெயர்கள் இரண்டு மணிகாலத்தில் ஸர் காலின் காம்பெல் தளகர்த்தரால் (Sir Colin Campbell) 93-4-வது பட்டாளத்தைக்கொண்டு கொல்லப்பட்டார்கள்.

(5) பெயிலிகார்டு (Baileeguard the Residency)—என்பது ஸ்தானபதி தங்குமிடம். இவ்விடம் 927 ஐரோப்பியர் கலகக்காரரால் கொல்லப்பட்டு, சாடட் அலிகானால் 1880ஹு பெயிலிதுரையின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. இந்தவிடத்தில் சண்டைகாலத்தி லடிபட்ட துப்பாக்கிக் குண்டுகளின் குறிகளை இப்போதும் பார்க்கலாம்.

(6) கோட்டை—இப்போது இடிந்துகிடக்கிறது.

(7) முச்சிபவான் (Muchi Bavan)—இது பஞ்சகாலத்தில் 1,00,00,000 கோடி ரூபாய் செலவு செய்து 1784ஹு கட்டப்பட்ட பிரம்மாண்டமும் அதிசயமுமான கட்டடம். இதற்குள் இமாம்பரா (Imambura) என்னும் நாட்டாண்மை கட்டடம் இருக்கிறது. இவ்வளவு பெரிய கட்டடத்தில் மர வேலையே கிடையாது. சுவரின் அகலமே 16 அடிகளுள்ளது. இவ்வளவு விஸ்திரணமும், அற்புத அழகுமான கட்டடத்தைப்போன்ற கட்டடம் நமது இந்துதேசத்தில் மற்றெங்கும் கிடையாது. இதை அனைவரும் அகத்தியம் பார்க்கவேண்டும். இதில் நவாப் குருவின் வெள்ளி சிங்காசனம் வைக்கப்பட்டிருக்கிறது.

(8) உசேன்பாக் (Hoosinbaugh)—இது அயோத்தியாவின் நான்காவது நவாப் மகம்மது அலிசாவால் 1840ல் கட்டப்பட்ட நிபப்பிரகாச சிங்கார கட்டடம். இதுவும் பார்க்கத்தக்கது. இதில் சுமார் 12,000 ரூபாய் விலையுள்ள கிளாக்குலோப் லஸ்டர் விருக்ஷங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கட்டடத்தின் பெரும்பாகம் சலவைக்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றது. இந்நவாபின் குருமாரின் வெள்ளி சிங்காசனமும், நவாபின் விநோதகிரீடமும் வைக்கப்பட்டிருக்கிறதன்றியில் ஸர் ஹென்ரி லாரென்ஸ் (Sir Henry Lawrence), ஜெனரல் நீல் (General Neil), மேஜர் பான்கிஸ் (Major Banks) என்பவர்களை அடக்கம் செய்யப்பட்டுக் கல்லறைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

(9) லால் பாரடாரி (Lal Baradari)—என்பது அழகிய கண்காக்ஷி சாலை. இதில் பலவித காக்ஷிப்பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பார்க்கத்தக்கது. இவைகளன்றியில் சட்டர் முர்ஜில் (Chuttur Murjil), ஷா நிஜிப் (Sha Nijjip), மோட்டிமஹால் (Mottee Mohal), குராண்டிமன்சில் (Kurandi Munzil), கானிங்கு காலேஜ் (Canning College), கெய்ஸர்பாக் (Kaiserbaugh) ஹஜாத்பாக் (Hazart Baugh), சீனாபாக் (Chinabaugh) முதலான பல விநோத கட்டடங்கள் பார்க்கவேண்டியவைகளாக விருக்கினும், இரும்புப் பாலமும் (Iron bridge) நக்ஷத்திராலயக்கட்டடமும் முக்கியமாகப் பார்க்கவேண்டியவைகள். இந்தஇரும்புப்பாலத்தைகட்ட 1816ல் தருவிக்கப்பட்டது. அது இத்தேசம் வந்து சேர்வதற்குள் அதை இறக்குமதி செய்த இராஜனும் இஞ்சினீரும் இறந்துவிட்டபடியால், அவர்களுக்குப் பின் வந்தவர்கள் அசட்டையாக விட்டிருந்து, பிறகு 30 வருஷங்களான பிறகு கட்டினார்கள். இவ்விடத்திலிருக்கும் நக்ஷத்திரமண்டபமானது மிக்க சிரேஷ்டமானது. இதை மேஜர் வில்காக்ஸ் (Major Wilcox) பரிபாலித்து வந்தார். மேலும் ஜனங்களுக்கு அநுகூலமாக ஆஸ்பத்திரி முதலான கட்டடங்களுமிருக்கின்றன. இப்போது 30,00,000 முப்பது லக்ஷம் ஜனங்கள் வரையில் குடியிருக்கிறதாகத் தெரியவருகிறது. சகல பதார்த்தங்களும் நயமாக விற்கப்படுகின்றன. இந்த இலக்ஷ்மணபுரியை இப்போதும் இந்த இந்துதேச நடனசாலையன்றே சொல்லத்தகும். இது பெரிய பட்டணமானபடியால், மல ஜலபாதைகளைக் கழிக்கும் விடங்

கள் யாத்திரைக்காரருக்கு ஏராளமாக அகப்படுதல் அபூர்வம். புகைவண்டி ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கும் (Dar Vija Ganga Hari Choultry) துரை விஜய கங்கா சத்திரத்தில் தங்கினோம். இந்தச் சத்திரத்தில் அறை ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்குத் தினக்குடிக்கூலி காலணா தரவேண்டும். இதோடு கூடச் சமீபத்திலிருக்கும் கக்கூசுக்குப் போனால் ஜலபாதைக்குக்காலணாவும், மலபாதைக்கு அரையணாவும்முன்னடிகொடுக்கவேண்டும். இந்தக்கஷ்டத்தினால் அவ்விடமிருந்து சமையல் செய்து சாப்பிடப் பிரியப்படாமல், பழைய சாதத்தைச் சாப்பிட்டு 12 மணிக்கு ஸ்டேஷனுக்குப் போய் ஆள் ஒன்றுக்கு ரூபாய் 3-3-9 கொடுத்து கான்பூருக்கு டிக்கட்டு வாங்கினோம். அப்போது இராமநாராயணபலி என்னும் அத்தேசத்து இஷ்டர் சகாயத்தினால் நல்ல வண்டியிலேறி சுமார் 5 மணிக்குக் கான்பூருக்குவந்து இறங்கி, அந்நகரமத்தியிலிருக்கும் லாட்டி மோஹல்ஷரி என்னும் சத்திரத்துக்குப் போய்ச் சமைத்து இராத்திரி 11 மணிக்குச் சாப்பிட்டுப் படுத்துத் தூங்கினோம். இலக்ஷ்மணபுரியானது ஈஸ்டு இந்தியா ரோஹில்கண்டு ரெயில் மார்க்கமாகக் கல்கத்தாவுக்கு 619 மைல்கள் தூரத்திலும் பம்பாயிக்கு ஜி. ஐ. பி. ரெயில்மார்க்கமாக 885 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. அவைகட்கு முறையே ரூ. 6-7-0, ரூ. 10-4-0 மூன்றும் வகுப்பு சார்ஜ்ஜாம்.

இந்த இலக்ஷ்மணபுரியைத் தரிசித்தவர்கள் அங்கிருக்கும் அயோத்தி ரோகில்கண்டு ரெயில்மார்க்கத்திற் சஹாரன்பூருக்கு 45 மைல்கள் தூரத்தில், நிம்சார, ஹரிதுவார முதலான விடங்களையும் தரிசித்தல் நலம். எப்படியெனில், அயோத்தி ரோகில்கண்டு ரெயிலுக்கு ஆள் ஒன்றுக்கு ரூ.1. அ.8. பை. 3 வாடகை கொடுத்து பாலாமு என்னும் ஜங்ஷன் ஸ்டேஷனுக்குப்போய், அங்கிருந்து அ. 3. பை. 3. வாடகை கொடுத்து நிம்சாருக்குப் போகலாம்.

NIMSAR.

நிம்சாரம்.

இதைத்தான் உண்மையான நைமிசாரணியம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது அயோத்தியா மாகாணத்தைச் சார்ந்த கைராபாத்தில் குமுதைநதியின் இடதுகரையிற் கட்டப்பட்ட புராதனப்பட்டணம். நதிக்கரையின்மேலிருக்கும்

மணல்மேட்டின்மேல், அரைமைல், சதுரவிஸ்தீரணமுள்ள ஒருசெங்கல் கோட்டையும், அதன் நான்கு புறங்களில் இடிந்துகிடக்கும் வளைவு கோபுரங்களும் இருக்கின்றன. அருகிலிருக்கும் அழகியவிஷ்ணுசாகரமென்னும் தடாகத்தில் அநேகர் ஸ்நானம் செய்து விஷ்ணு பூஜை செய்து வருகிறார்கள். இந்த நிம்சாரிலிருந்து ஆள் ஒன்றுக்கு ரூ. 1. அ. 13. பை. 3. வாடகைகொடுத்து ஹரித்துவாரத்துக்குப் போகவேண்டும்.

HARIDWAR.

ஹ ரி த் து வ ா ர ம்.

இது புராதனமான மாயூரம் அல்லது மாயாபுரம் என்னும் விசேஷயாத்திரை ஸ்தலம். இந்த ஹரித்துவாரம்: மாயாதுவாரம், கங்காதுவாரம் என்றுதி பெயர்களால் சிறந்து பரமபதத்துக்கு ஏறும் ஏணியாகி, சப்தபுரிகளில் ஒன்றாகக் கொள்ளப் பட்டிருக்கிறது. இவ்விடத்தில்தான் கங்கைநதியானது இமய மலையிலிருந்து விழப்பட்ட இடம். இங்கு சுகப்பிரம்மரிஷியானவர் எழுந்தருளியிருந்த நிலதாரை என்றதலமும், பரிக்ஷித்து மகாராஜர் தபசுசெய்த கட்டமும், தக்ஷப்பிரஜாபதி யாகம் செய்த இடமும், மஹா விஷ்ணுவானவர் சயனித்திருக்கிற இடமும் இருக்கிறதாகப்புராணத்தில் சொல்லப்படிருக்கிறது. அதைப்பற்றி அக்பர் காலத்தில் பிரசித்திபெற்ற அபூல்சார் என்பவர் வந்துபார்த்தபோது இது 36 மைல்கள் விஸ்தீரணமுள்ள ஹரித்துவாரம் என்று சரித்திரம் எழுதியிருக்கிறார். பிறகு டாம்கோ ரய்டார்வர் வந்து பார்த்து இதை ஹரித்துவாரம் என்றும் சிவஸ்தலம் என்றுமெழுதியிருக்கிறார். இதனால் சைவர்கள் ஹரித்துவாரம் என்றும், வைணவர்கள் ஹரித்துவாரமென்றும் சண்டை சச்சரவுகள்செய்து இன்னும்முடிவு பெற்றார்கள் இல்லை. பவுத்தர்களும் தமது புண்ணியக்ஷேத்திரமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதைப்பற்றி யார் யார் எப்படிச் சொன்னாலும், இவ்விடம் கங்கையானது இமாலயபருவதப் பனிக்கட்டிகள் ஜலமாகமாறி முதலில் இவ்விடத்தில்தான் பூமியில் இறங்குவதால், இவ்விடத்தை விஷ்ணு பாததீர்த்தமென்றும் சிவதீர்த்தமென்றும் எண்ணி ஆயிரக்கணக்கான யாத்திரைக்காரர்கள் வந்துகொண்டே யிருக்கிறார்கள். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சீனதேசயாத்திரிகராக வந்த ஹியூன்தஸாங்கு என்பவர் இதைக் கபிலதானமென்றும் புத்தருடைய ஸ்தானமென்றும் எழுதியிருக்கிறார்.

இவ்விடத்தில் கங்கையின் இடது பக்கத்தில் சண்டி பிஹாரி, மாயாதேவி, சர்வநாத் ஹரிகாசுவரன், அல்லது கங்கை விழுமிடத்தில் ஒரு கல்லின்மேல் பதிப்பிக்கப்பட்டிருக்கும் விஷ்ணுபாதக்கோயில், முதலானவைகளே. அவைகளிற் சிறந்தது, விஷ்ணுபாதக்கோயிலாகிய கயாதுவாரமேயாம். அங்கே விஷ்ணுபாதங்களை ஒருகல்லில் பதித்துக் கோயிலின் கட்டடத்தின் சுவற்றில் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு யாத்திரைக்காரர்கள் நான் முன், நீ முன் என்று மேலேவிழுந்து முழுகசுவருவதில், சில சமையங்களில் உயிர்ச்சேதமுண்டாகிறது. இதனால் 1819-ம் வருஷம் 430 யாத்திரைக்காரர்களும், அவர்களுக்குக் காவலாயிருந்த சில சிப்பாய்களும் மடிந்துவிட்டார்கள். ஆனதுபற்றியே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இங்கு 100 அடிகள் அகலமுள்ள 60 படிகளைக் கட்டிவைத்ததில் இப்போது அவ்விதகஷ்டமில்லை. ஆயினும் 1760-ம் வருஷம் கடைசி உற்சவதினத்தில் கோஷாயிகளுக்கும், பைராகிகளுக்கும் பிரமாதச் சண்டைகளுண்டாகி 1800 பெயர் கொல்லப்பட்டதன்றியில் கி. பி. 1795-ம் வருஷம் சீக்குமத யாத்திரைக்காரர்கள் 500 பேரையும் கொன்றுபோட்டார்கள். இப்போதந்தப்பயமில்லை. பிரதி வருஷம் வைகாசி மாதத்தில் நடக்கும் கும்பமேலா உற்சவத்திற்கு ஆயிரக்கணக்கான யாத்திரைக்காரர் வருவதன்றியில் மாசி பங்குனி சித்திரை மாதங்களில் நடக்கும் ஹோலிகாம ஜாதிரா கட்டிய புண்ணிய உற்சவங்கள் ஹரித்துவாரத்துக்கு ஒரு மைல் தூரத்தில் நடக்கும்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். ஹரித்துவாரத்துக்கு 3 மைல் தூரத்திலிருக்கும் கனக்கால் என்னுமிடத்தில் தக்ஷப்பிரஜாபதி, சதிகுண்டம், லாந்தவுர, தக்ஷஸ்தானுதிக கோவில்களிருக்கின்றன. அந்த அரித்துவாரத்திற்குக் கங்கையானது 1024 அடிகள் தூரத்திலிருந்து வருகிறது. ருஷிகேஷமானது இந்த ஹரித்துவாரத்து சுமார் 15 மைல் தூரத்தில் கங்கைக் கரையின்மேல் இமயமலைச்சார்பிலிருக்கிறது. இதற்கருகில்பரதாழ்வான் ஆசிரமமிருக்கிறது. இங்கிருந்து பார்த்தால் இமயமலை பரிஷ்காரமாகத் தோன்றுகிறதன்றியில், அங்கே அநேக பெரியோர்களிருப்பதாகவும் வதந்தி. இந்த வழியாகப் போனால் தபோவனம் இமயமலைக்கு ஏறும் வழியிலிருக்கிறது.

இங்கே இலக்ஷ்மணர் கோயிலுமிருக்கிறதன்றியில், இவ்விருந்து தேவப்பிரயாகை, ஸ்ரீநகரம், நந்தபிரயாகை, கருண

பிரயாகை, ருத்திரபிரயாகை, விஷ்ணுபிரயாகை, ஜோஷியபிரயாகை, மகப்பண்டிகேசுரம் முதலான ஸ்தலங்களைப் பார்த்துக்கொண்டு பதரிகாச்சிரமத்துக்குப் போகவேண்டும். இந்த ஹரிதுவாரத்தில் ஆரியசமாஜத்தாருடைய குருகுலம் என்னும் ஓர் வைதிகபாடசாலை இருக்கிறது அதில் 250 வித்யார்த்திகள் வாசிக்கின்றனர். ஹரித்துவாரத்திற்குக் கிழக்கிலிருக்கும் (Ruki) ரூர்கிரியில் இஞ்சினீர் கலாசாலையொன்றிருக்கிறது. ஹரித்துவாரம்: கல்கத்தாவுக்கு 921 மைல்கள் தூரத்திலும், சாஹரன்பூருக்கு 49 மைல் தூரத்திலும் இருக்கிறது. அவைகள் மூன்றும் வகுப்புக்கு முறையே ரூ. 8. அ. 14, பிறகு அ. 11. பை. 2. கொடுக்கவேண்டும். இந்த ஹரித்துவாரத்துக்கு அடுத்த ஸ்டேஷனில் டேராடூன் என்னும் அழகியமலைநிவாசமிருக்கிறது.

DARAHDOON.

டேராடூன்.

இது சமுத்திர மட்டத்திற்குமேல் 2300 அடிகள் உயரத்திற் கட்டப்பட்ட சுகவாசஸ்தானம். இங்கே ஒரு விசேஷமான விஷ்ணுகோயிலும், அழகிய உத்தியானவனங்களும், வனபரிபாலன வித்தியா (பாரெஸ்டு) பாடசாலையு மிருக்கின்றன. இப்போது 25,000 ஜனங்கள் வதிந்துவருகிறார்கள். இவ்விடமிருந்து 6 மைல்கள் தூரத்திலிருக்கும் ரெய்பூருக்கும் அங்கிருந்து மஸ்ஸூருக்கும் போகலாம்.

MUSOORE.

மஸ்ஸூரி.

இது சமுத்திரமட்டத்திற்கு 7000 அடிகளுக்கு மேல் கட்டப்பட்டிருக்குமழகிய சுகவாசஸ்தானம். இதற்கு 40மைல்கள் சுற்றளவுக்குள் இராணிகட்டு, செகிரடாஸ் முதலான ஸ்தலங்கள் இருக்கின்றன. லாண்டோ என்பது சுகவாசஸ்தானம். இங்கிருந்துபார்த்தால் இமாசலத்தின் அற்புதகாக்ஷி ஆச்சரியமாக இருக்கிறது. டேராடூன், மஸ்ஸூரி முதலான மலைப்பிரதேசங்கள் யாவும் இமயமலையின் சார்புகளிலேயே கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஹிமாசலத்தின் பெருமையைப் பற்றியும், அதன்மீதிருக்கும் சில திவ்யஸ்தலங்களைப்பற்றியும் இதனடியிற் சங்கிரகமாகச் சொல்லுகிறோம்.

HIMALAYA.

ஹிமாசலமலை.

இது பூலோகத்திலுள்ள உயர்ந்த எல்லா மலைகளிலும் பெரிதும் பிரம்மாண்டமுமானது. இது சிந்துநதிக்கு மேற்கே வளைந்தும் கிழக்கே பிரம்மபுத்திரநதிக்குக் கீழ்வரையில்வளைந்தும் ஏறக்குறைய 1500 மைல் தூரமுள்ளதாயும், கிட்டத்தட்ட 200 மைல்கள் அகலமுள்ளதாயும் இருக்கிறது. இதன் வளைவுகள் கங்கை, சிந்துநதிகள் வரையிலும், வடவளைவுகள் திபேத்தின் பீடபூமி வரையிலும் சுமார் 300 மைல்கள் வரையில் விஸ்தரித்திருப்பதால் இந்தியாதேசத்திற்கு எதேஷ்டமான ஜலத்தைக் கொடுத்தும், திபேத்து முதலாக உள்ள உயர்ந்த நாடுகளிலிருந்து கடுங்குளிரை இந்தியாவுக்கு வராதபடி சுவர் போலிருந்து தடுத்தும் பாதுகாக்கின்றது. கீழ்நாடுகளிலிருந்து பார்ப்பவர்க்கு இம்மலையானது உண்மையான மலைகளோ அல்லது விண்ணுலகின் வெண்மேகங்களோவென்று பிரமிக்கும்படி தோன்றும். பிறகு அருகிற் போகப்போக உண்மையான பனி நிறைந்த மலைகள்பயங்கர உருவங்களோடுதோன்றும். பின்னும்சற்றுஏறிஓர்உன்னதசிகரத்திலிருந்துபார்த்தால் எங்கு பார்த்தபோதிலும், ஓர் அகன்ற பனிக்கட்டிக் கடலைப் போல்காணும். அப்படிக்காணும் பனிக்கட்டிகள்வெயிற்காலத்தில் உஷ்ணத்தினால் கரைந்து ஜலமாவதோடு, அங்கு பெய்யும் மழைஜலமும் சேர்ந்து, சிந்து, கங்கை, பிரமபுத்திராதிநதிகளாகி இந்நாட்டில் பாய்ந்து பெரும் பிரயோசனத்தைத் தருகிறது. மலையடிவாரத்தில் தர்ராய் என்னும் சதுப்புநிலமிருக்கிறது. அதற்கு 3000 அடிக்குமேலிருக்கும் காடுகளில் பிரம்மாண்டமாகப் பெருத்து விலையுயர்ந்த மரங்கள் விளைகின்றன. அதற்குமேல் 8000 அடிகள் உயரத்தில் பற்பலவிதப் பூண்டுகளும் செடிகளும் விளைகின்றன. அதன் சார்புகளில்தான் நைநிடால், டார்ஜிலிங் முதலான மலைநாடுகளிருக்கின்றன. பிறகு உயரப்போகப்போக ஐரோபா நாட்டுக்குரிய பையின் சிடார்முதலான விருக்ஷங்கள் விளைகின்றன. அதிக நீர்பாய்ச்சலுள்ள நிலங்களில் நெல்முதலான பற்பல தானியங்களும் தேயிலையும் விளைகின்றன. 1200 அடிகள் உயரத்தில் பார்லி தானியம் விளைகிறது. 1600 அடிகள் உயரத்திற்குமேல் எவ்வித பயிரும் விளைவதில்லை. 11 ஆயிரமுதல் 13 ஆயிரம் அடிகள் உயரத்தில் புற்பூண்டுகள் விளைவதால் ஆடு மாடுகள்

அங்குமேய்கின்றன. அங்கே சிறுத்தை, புலிமுதலான மிருகங்கள் விருத்தியாகின்றன. 20000 அடிகளுக்குமேல் திபேத்து முதலானதேசங்களுக்குப் போய்வர கணவாய்வழிகளிருக்கின்றன. அதற்குமேலே இருக்கும் வாயுவானது அதிக லேசாக இருப்பதால் நடப்பவர்களுக்கு அடிக்கடிமயக்கமும் தலைநோயுமுண்டாகத்தடுக்கிறது. மலையின் உன்னதமான சிகரங்கள் 48. ஏறக்குறைய 18 முதல் 30 ஆயிரம் அடிகள் உயரமுள்ளதாக இருக்கினும் அச்சிகரங்களில் முக்கியமான மனோமங்கலமென்னும்மலை 23900 அடி உயரமும், குணலாசுமலை 22513 அடி உயரமும், பதரிகாச்சிரமம் அல்லது பதரிநாதர்மலை 22513 அடிகளும், கேதாரநாதர்மேத்திரமலை 23562 அடிகளும், நந்தாதேவிமலை 25749 அடிகளும், ருத்ரஹிமாசலம் 22390 அடிகளும், சுவர்க்கலோகத்துவாரமலை 22906 அடிகளும், கங்கா பார்வதிமலை 27000 அகளும், யூகண்டமலை 20296 அடிகளும், விஷ்ணுலோகம் அல்லதுவைகுண்டஸ்தானமலை 25000 அடிகளும், நேபாளத்துக்குக் கிழக்கே இருக்கும் கிஞ்சின்ஜங்காமலை 28826 அடிகளும், யமுனுவுக்கருகில் கன்யோத்திரிமலை 21155 அடிகளும், காசிக்கு வடக்கில் காணும் தவளகிரிமலை 28826 அடிகளும், நேபாளத்துக்கு வடக்கில் காணும் எவரஸ்டுமலை 29002 அடிகள் அதாவது பூமிமட்டத்துக்கு 5 மைல்கள் உயரத்திலிருப்பதன்றியில் இந்த அற்புத மலையில் ஆதியில் இயற்கையாக விளைந்த நெல்முதலான தானியப்பயிர்களையும் காய்கனிவர்க்கங்களையும், மூலிகை முதலானவைகளையும் நரர் நாளாவட்டத்திற்கொண்டுவந்து இந்நாட்டில் பயிர்செய்யவே அவைகள் நமக்கு உணவு முதலான உத்கிருஷ்ட விளைவுகளாகின்றன. ஆகவே இம்மலை இந்தியாவுக்குத் தாய்வீடு என்றுசொல்லப்பட்டு, அநேகரிஷிகளும், தபோதனரும்வந்து தங்கி சதா பிரம்மநாமபாராயணம் செய்து உத்தம வாழ்வைப் பெற்றுய்யலானார்கள்.

ஹிமாசலமலையின் அடிவாரத்திற்செய்த பிரார்த்தனை.

ஓ ஹிமாசலமே! நீ இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பருவதங்களிலும் உயர்ந்தசிறந்தமலை. பதரிகாச்சிரமம், கேதாரம், ஹரித்துவாரம், நைமிசாரணியம், கபிலை முதலான திவ்விய ஸ்தலங்களுக்கெல்லாம் இருப்பிடம். மானச சரோவரம்,

சிந்து, கங்கை, பிரம்மபுத்திராதி நதிகளுக்கும் நீ ஆதாரஸ்தானம். உலகத்திலுயர்ந்த டியோடங்கா, கிஞ்சிங்கிங்கா, எவரஸ்டு முதலான உன்னத சிகரங்களால் விண்ணுலகை நாடிப்போகும் உத்கிருஷ்டமானமலை. பயங்கரமாகப் பெருத்து வளரும் விருக்ஷங்களாலும், இரமணியமான புஷ்பச் செடிகளாலும், மகிமையுள்ள முல்லைமலராதிகளாலும், கணக்கற்ற கந்தமூலங்களாலும் மகத்துவம்பெற்ற பெரியபருவதம். நின்னிடம் வசிக்கும் கிருமிகீடங்கள், பற்பலவிதமான பட்சிகள், மிருகங்கள் இவைகளுக்குக்கணக்கேயில்லை. நின்னிடம்அடைக்கலம் புகுந்து தவம்செய்து பிரம்மபாராயணம் செய்யும் ரிஷிகள், யோகிகள், முனிகள் அநேகர் கண்களை மூடிக்கொண்டு தவம் செய்கிறார்கள். நினக்குச் சதா குளிர்ச்சியைத் தரும் பனிக்கட்டிகள் பிரபாகரனுடைய பிரகாசத்தினால் பற்பல வருணங்களோடு ஜாஜ்வல்யோதியாக ஜொலிக்கின்றன. ஆசியா கண்டத்தின் தேசங்களுக்கும், இந்து தேசத்திற்கும் இடையில் ஒரு அற்புதமவுனயோகியைப்போல் சண்டமாருதத்திற்கும், மகத்தான மழைக்கும் சற்றும் சலிக்காமல் விண்ணுலக நாதரை சதாநாடிக்கொண்டிருக்கிறாய்! ஆனதுபற்றியே, அன்று வசிஷ்டர் பராசரர், வியாசர், சுகர் முதலான மகாரிஷிகள் நின்னிடம்வந்து தபோதனராகி, தயாசார சிந்துவாகிய சர்வேசுவரனை யடைந்து பரிபூரணானந்தத்தைப் பெற்றார்கள். இணையற்ற ஹிமாசலமே! இத்தியாதிகளைக் கேட்டு இன்று நானும் நின்னிடம் வந்தேன். வந்தாலும் என்ன? தேகதாருட்டியமும், மனவலிமையும், பரிசுத்த எண்ணமும், பக்தி வைராக்கியமும் அற்றுப் பாவதாபங்களால் பீடிக்கப்பட்டயான் நமது பரமபிதாவை எப்படி யடையக்கூடும்? ஓ அற்புதசிருஷ்டியே! உன்னைப்போல திடமான மனதையும், உயர்ந்த குணத்தையும், ஆழ்ந்த பக்தியையுமடைய உதவிசெய்வாய்! உனக்கு மங்களமுண்டாகுக?

ஓ அற்புதபுருஷா! உன்னை இந்த ஹிமாசலத்தில்வந்து பிரார்த்தனை செய்ய எத்தனையோ வருஷகாலங்களாக எண்ணி எண்ணி ஏங்கி எத்தனையோதூரத்திலிருந்து எத்தனையோ கஷ்டங்களைச் சகித்து இன்று இங்குவந்தேன். அங்கம் பரவசமானேன். பாதரசம்போல் பலபக்கங்களிலும் சுற்றிப் பிரகாசிக்கும்என் மனத்தை இமயத்தைப்போல்திடம்பெறவும், குறைந்திருக்கும் சற்குணங்களை உயரோங்கச்செய்தும், தாழ்ந்துகிடக்கும் பக்தியை நின்னிடம் ஆழ்ந்திருக்கச் செய்தும் நின்பேரா

நந்த பக்திரச பானத்தைச் சதாபருகிப் பேரானந்தமுறச்செய்வாய்! சுவாமி! உன்னத பருவதங்களின்மீது வந்து பிரார்த்தனைசெய்யும் பாகவதர்களைப் பாவனராக்கிப் பரமசுகமளிக்கும் பெரும்புகழோனே! நினது பரமசுகம் எங்கும், எப்போதும் பரிமளிப்பதாகப் பெருமலைகளிற் சிறந்த திருமலையாகிய இந்த ஹிமாசலம் என்னும் நின் பெரும்புகழைப் பாடிப் பல்லுயிரைப் பேரானந்த மடையச் செய்வதாக. ஓம் சாந்திః சாந்திః சாந்திః ஹரிః ஓம்.

இமயமலையின்மேல் இருக்கிற சில திவ்ய ஸ்தலங்களைப் பற்றிச் சொல்லுவதாக முன்னமே அறிவித்திருக்கிறோம். ஆகவே அவற்றின் விபரத்தை இதனடியிற் காணலாம்.

ஹரித்துவாரமானது இமயமலையில் உற்பத்தியாகும் கங்காநதி பூமியில் வந்துவிழும் இடமாகையால் அதை ஓர் விசேஷ தீர்த்தயாத்திரை ஸ்தலமென்று கொண்டாடி வருவதைப்போலவே அந்த கங்காநதி உற்பத்தியாகும் இடமாகிய கங்கோத்ரி என்னும் ஸ்தலத்தையும் ஓர் விசேஷ தீர்த்தஸ்தலமாகக்கொண்டு வணங்கிவருகிறார்கள்.

GANGODRI.

கங்கோத்ரி.

இது கார்வான் ஜில்லாவில் இமயமலையின்மேல் கங்கை உற்பத்தியாகும் ஸ்தலத்திற்கு 8 அல்லது 10 மைல் தூரத்தில், ஜலமட்டத்திற்கு 15 அடிகளுக்குமேல் பாகீரதிநதியின் வடகரையில் கட்டப்பட்டிருக்கும் ஒரு சிறிய கோயில். இந்தக் கோயிலானது காட்டுக் கருங்கற்களால் சுண்ணாம்பு கலந்து கட்டப்பட்ட பிரகாரத்துக்குள் அர்ச்சகர் குடியிருக்க ஒரு வீடும் கட்டப்பட் டிருக்கிறது. இந்தக்கோயில் சமுத்திர மட்டத்திற்கு 10319 அடிகளுக்குமேல் 20 அடி உயரமுள்ள சதுரவடிவானது. இதற்குள் கங்கை என்னும் பாகீரதி விக்கிரகங்களும் சாகரர் முதலானவர்களுடைய விக்கிரகங்களும் வைக்கப்பட்டு பூஜைகள்செய்து வருகின்றனர். யாத்திரைக்காரர் தங்குவதற்கு வீடுகளும் உணவுப்பொருள்களும் இல்லாமையால் அடுத்த மலைச் சிகரங்களில் சிறு மறைவுகளில் தங்கித்தவிக்கிறார்கள். கோயிலுக்கருகில் பாறைகளிலிருந்து பீறிக்கொண்டுவரும் ஜலமானது பிர்மகுண்டம் விஷ்ணுகுண்டம் என்னும் பெயர்களைப் பெற்றுப் பிரகாசிப்பதால் யாத்திரைக்

காரர் அவைகளில் ஸ்நானஞ்செய்து சிறு தட்டுகளில் புஷ்பங்களையும் சிறு கொடிகளையும் ஜலத்தில் மிதக்க விடுகிறார்கள். அப்போது அருகிலிருக்கும் புரோகித பிராமணர்கள் சங்கற்பஞ்சொல்லி அந்த ஜலத்தைக் குப்பிகளிலும் கூஜாக்களிலும் நிறைய எடுத்து அவற்றின் வாயைமூடிச் சீல்செய்து கொடுக்கிறார்கள். சிலர் அக்குப்பிகளை கீழே கொண்டுவந்து கங்கா உற்பத்தி ஜலரசம் என்னும் பெயரால் அநேகருக்கு விற்பனை செய்கிறார்கள்.

இந்தக் கங்கையானது ஓர் கோமுகத்தில் உற்பத்தியாவதாக எண்ணியிருக்கிறார்கள். உண்மையில் அது ஓர் பிரம்மாண்டமான மரமடர்ந்த வனத்திலிருக்கும் கெட்டத்தட்ட கோமுகத்தைப்போன்ற பனிக்குகையிலிருந்து உற்பத்தியாகிறது. அந்த கோமுகப் பாறையை உற்றுப்பார்த்தால், அது ஓர் ஓங்காரவடிவமாய்த் தோற்றுகின்றது.

இப்படி உற்பத்தியாகும் கங்காநதியானது தன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து பாயும்போது சிறு ஊற்றுகளிலிருந்து பிரிக்கொண்டுவரும் ஜலத்தோடு சேர்ந்து 100-மைல் தூரத்திற்கு மேல் கீழ் நோக்கிப் பாயும்போது பக்கங்களிலிருக்கும் பனிக்கட்டிகள் பிரபாகரனுடைய சுடர்களினால் ஜலமாகக் கரைந்து அதிற்சேர கங்கையானது பெருத்துப் பல பாறைக் கற்களில் ஊடுருவிக்கொண்டு 203 மைல் தூரம் கீழ் நோக்கிப் பாய்ந்து பரதகண்டமாகிய பூமியில் அரித்துவாரம் என்னுமிடத்தில் விழுகின்றது.

இந்த கங்கோத்ரிக்குப் போகும் வழியானது அதிக கஷ்டமானமலைச்சார்பாயும் அங்குப்போய்த் தங்குவதற்குப் போதுமான வீடு வாசல்கள் உணவாதி பொருள்கள் இல்லாமையாலும் ஏராளமான ஜனங்கள் போய் வருவது அபூர்வம்.

KEDARNATH.

கேதார்நாதம்.

இந்த கங்கோத்ரியைத் தரிசிப்பவர்கள் அருகிலிருக்கும் கேதார்நாதரையும் தரிசித்தல் உத்தமம். இந்தக்கேதார்நாதம் கார்வால் ஜில்லாவில் குமாயுனுக்குக் கிழக்குப்பாகத்தில் இமயமலையில் 22830 அடிகளுக்குமேல் இருக்கும் ஓர் உன்னதமலைச் சிகரத்தில் இருக்கிறது. இங்கிருந்த புராதன கோயில் பூகம்

பத்திரால் இடிந்துபோக இப்போதிருக்கும் பெரிதும் அழகுமான கோயில் சுமார் 30 வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டது. யாத்திரைக்காரர் பதரிகாச்சிரமத்தைத் தரிசிப்பதற்கு முன்னே இந்தகேதார்நாதரைத் தரிசிப்பது வழக்கம். இங்குக் கேதார்நாதர் ஒரு பெரும்பாறைக் கல்ரூபமாக இருக்கிறது. அதாவது ஒரு காலத்தில் பகைவரால் துரத்தப்பட்ட ஓர் எருமையானது இங்கு வந்து அடைக்கலம் புகுந்து அந்த எருமையின் பின்பாகம் பூமியில் மறைந்துவிட, மற்ற அங்கங்கள் நான்கு பிரிவுகளாகி மலையின் சார்புகளில் நான்கு கோயில்களாகப் பிரகாசிக்கின்றன. அவைகளுக்குப் பஞ்சகேதாரம் என்று சொல்லி அவைகளைப் பிரதட்சணம் செய்துவருகிறார்கள். இது ஓர் சிறந்த சிவஸ்தலம். கேதார்நாதருக் கருகில் மஹாபந்த் என்னும் பெயரால் ஓர்மலைச்சிகரம் இருக்கின்றது. அங்கு ஆதியில் பஞ்சபாண்டவர்கள் வந்து தங்கித் தவம் செய்து வைகுண்டம் அடைந்தார்களாம். இப்போது அங்கே வருஷப் பிரதிவருஷம் 20 அல்லது 30 பெயர் வரையில் அம்மலையின் உச்சியின்மீதேறி அடியிலிருக்கும் ஆழ்ந்த பள்ளத்தாக்கில் குதித்து விழுவதினாலும் அங்கிருக்கும் பயங்கரப் பனியினாலும் பசியினாலும்வருந்திப் பிராணனைவிட்டுவிடுகிறார்கள். இப்படிக் குதித்துச்சாகும் இடத்திற்குப் பையரவஜம்பு என்று பெயர்.

இப்படிச் செய்பவர்களில் குஜராத்திலிருந்தும் பங்காளத்திலிருந்தும் வரும் யாத்திரைக்காரர்களே முக்கியமானவர்களாம். இப்படிக் குதித்துச் சாவதினால் பொந்தியோடு பரமபதம் சேர்வதாக என்றுகிறார்கள்.

இந்தக்கோயிலில் பூஜைசெய்யும் சிரேஷ்ட அர்ச்சகருக்கு இருவான் என்று பெயர். அவர் தென் இந்தியாவைச் சார்ந்த மலையாள பிராமணர். இப்போது இந்தக் கோயிலுக்கு நித்ய நைமித்யாதி விஷயங்களுக்காகப் பிரதி வருஷமும் 6000 ரூபாய் செலவிட்டுவருகிறார்கள். இந்த மலை அதிக உன்னதமாக இருக்கிறும் கேதார்நாதர் கோயில் கட்டப்பட்ட இடமானது சமுத்திரமட்டத்திற்கு 11755 அடிகளுக்கு மேலுள்ள இடம். இந்த கேதார்நாதர் ஸ்தானத்தில்தான் ஆதி ஸ்ரீ சங்கராசாரியார் சமாதி அடைந்ததாகச் சில சரித்திரங்கள் சொல்லுகின்றன.

BADRINATH.

பதரிகாச்சிரமம் அல்லது பத்ரிநாதர்.

இது கார்வால் ஜில்லாவில் ஸ்ரீ நகரிலிருந்து மானஸேசுக்குப்போகும்வழியில் ஷை மானஸேசுக்கு 25 மைல்கள் தூரத்திற்குத் தெற்கும் ஸ்ரீ நகரத்திற்கு 55 மைல்கள் தூரத்தில் வடகிழக்கு மூலையில் இமயமலையில் சமுத்திர மட்டத்திற்கு 23210 அடிகளுக்குமேல் ஓர் மலையின்மீது நான்குமைல் நீளமும் ஒரு மைல் அகலமுமுள்ள ஒரு பள்ளத்தாக்கின் மத்தியில் கங்கையில் கலக்கும் அலக்நந்தாநதியின் ஒரு கிளை நதியாகிய விஷ்ணுகங்கா நதியின் வடகரையிற் கட்டப்பட்டிருக்கிறது.

அந்தப் பள்ளத்தாக்கு சமுத்திரமட்டத்திற்கு 10400 அடிகளுக்கு மேலிருக்கிறது. அதற்குச் சமதூரத்தில் கிழக்கு மேற்குப் பக்கங்களில் இரண்டு உன்னதமலைச் சிகரங்கள் இருக்கின்றன.

இந்த பத்ரிநாதருடைய கோயில் விஷ்ணுகங்கை நதியின் கரையின்மேல் 40 முதல் 50 அடிகள் உயரமுள்ள மேட்டாந்தரையில் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் முன் இருந்த புராதனமான கோயில் கட்டடங்கள் பூகம்பத்தினால் இடிந்துபோக இப்போதிருக்கும் கோயிலானது புது மாதிரியான வழக்கத்தை அனுசரித்து வாழைப்பூ வடிவமாகக் கட்டப்பட்டும், அதின்மேற்கூரை செம்புத்தகடுகளால் மூடப்பட்டும் அவைகளின்மேல் பொன்முலாம் பூசப்பட்டும் தங்கக் கலசத்தோடு பிரகாசிக்கின்றது.

இந்தக் கோயிலும் சில வருஷங்களுக்கு முன்பு பூகம்பத்தினால் சேதப்பட்டுச் சீர்திருத்தப்பட்டதாகத் தோன்றுகின்றது. இந்தக்கோயிலுக்குள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பத்ரிநாதர் நரநாராயணர் என்னும் பெயருடன் ஓர் இலந்தைமரத்தின்கீழ்ப் பத்மாசன கோலமாக எழுந்தருளியிருந்து நாரதருக்குப் பிரம்மோபதேசம் செய்ததாகச் சொல்லுகிறார்கள். அந்த விக்ரகத்தை ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகள் கங்கையில் பத்துதரம் மூழ்கிக்கொண்டுவந்து இங்கே பிரதிஷ்டை செய்துவைத்தாராம்.

இந்தக் கோயிலுக்கருகில் அரவிந்தவல்லி தாயார் சந்நிதியும் இருக்கின்றது.

இக்கோயிலுக்குச் சற்றுத்தூரத்தில் தபோகுண்டமென்னும் பெயரால் 30 அடி சதுர அளவுள்ள ஒரு சிறு தடாகமும் அத் தடாகத்தின்மேல் மரப்பலகைகளைக் கூரையாகப் போட்டு மூடப்பட்டிருக்கிறது. தடாகத்தின் அடிபூமியிலிருந்து கந்தகவாசனைப் புகையோடு பீறிக்கொண்டு வெந்நீர்ஜலம் வருகின்றது. அந்த ஜலம் அதிக உஷ்ணமா யிருப்பதனால் ஸ்நானபானாதிகள் செய்ய வகையற்றிருக்கிறது. அதற்கு அருகில் அதிக குளிர்ச்சியோடு பூமியிலிருந்து பீறிக்கொண்டு வரும் தண்ணீரைக் கலந்து ஸ்நானபானங்கள் செய்யவேண்டும். அந்த அதிக சீதமுள்ள நீர்க்கசிவுக்கு நாரதகுண்டம் என்று சொல்லுகிறார்கள். இவ்விருசுனைநீர்களின் கலப்பில் அநேக ஆண்களும் பெண்களும் அவஸ்தையின்றி ஸ்நானம் செய்ய அருகிலிருக்கும் அர்ச்சக புரோகிதர்களால் சங்கல்பம் சொல்லப்பட்ட பிறகு தக்ஷிணைகளைக் கொடுத்துவருகிறார்கள்.

இப்படி இந்த ஸ்நானம்செய்து வருபவர்கள் தமது பூர்வ பாவத்தையும் இப்போது செய்கிற பாவத்தையும் போக்கிக்கொண்டதாக என்னுகிறார்கள்.

இந்தப் பத்ரநாதருக்குப் பூசைசெய்யும் பண்டிபலாதி தளிகைகளை அவர் திருப்திகரமாக உண்டு உல்லாசம் அடையும்பொருட்டு பூஜை செய்தானவுடனே கோயில் கதவுகளை மூடிப்போடுகிறார்கள். பிறகு மாலைப்பொழுதில் மறுபடியும் கதவுகளைத் திறந்து மாலை போஜன பூஜைசெய்து பெருமான் நிம்மதியாகப் படுத்து உறங்கும்பொருட்டுப் பள்ளி அறையையும் படுக்கையையும் சிங்காரித்துவிட்டு மறுபடியும் கதவுகளை மூடிவிடுகிறார்கள்.

இக் கோயிலுக்குள் உபயோகப்படுத்தும் பாத்திரசாமான்கள்யாவும் பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் கோயில் வேலைக்காக அநேக சிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். முற்காலங்களில் கார்வால் நாட்டு அரசர்களுக்குப் போதுமான பணமில்லாத காலத்தில் தங்களுடைய கிராமங்களை இக்கோயிலுக்கு அடமானம் வைத்துக் கோயில்பணத்தை வட்டிக்கு வாங்கிக்கொண்டு வந்தார்கள். அப்பணத்தை மறுபடியும் திருப்பிக் கொடாமையால் 226 கிராமங்கள் கோயிலுக்குச் சொந்தமாகிவிட்டன. இவைகளால் வருஷம் ஒன்றுக்கு 5000 ரூபாய் வசூலாகி அத்தொகையோடு காணிக்கைத் தொகையைச் சேர்த்துக் கோயில்

கைங்கரியங்களைச் செய்துவருகின்றனர். இக்கோயிலுக்குச் சாதாரண காலங்களில் சொற்ப ஜனங்கள் வந்தாலும் 12 வருஷங்களுக் கொருதரம் நடக்கும் கும்பமேலா உற்சவத்தில் 45000 முதல் 50000 ஜனங்கள் வந்து தரிசிக்கிறார்கள். அவர்கள் அரித்துவாரம் உற்சவம் ஆனபிறகு தரிசித்துவிட்டு ஏப்ரல் மாதத்தில் அங்கிருந்து இமயமலையிலிருக்கும் தேவப்பிரயாக், ருத்ரபிரயாக், கேதாரநாதர் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்தபிறகு இந்தப்பதரிகாச்சிரமத்திற்குவந்து தரிசித்துத் திரும்பும்போது நானப்பிரயாக், கருணைபிரயாக் முதலான திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு தம் இடங்களுக்குப் போவது வழக்கம்.

இக்கோயில் காரியங்களை நடத்திவருபவர் தக்ஷணதேசத்து பிராமணர். இவருக்கு இராவாள் என்று பெயர். அவர் அதிகாரத்திற்குள் அநேக புரோகிதர்கள் இருக்கிறார்கள். அப்புரோகிதர்களுடைய பெண்டுகள் பனிபயங்கரமான இப்பதரிகாச்சிரமத்திற்கு வருவதில்லை. வராமையினாலே அப்புரோகிதர்கள் பிரம்மசாரிகளாகக் காலம் கழிக்கநேர்ந்து அவர்களிற் சிலர் துர்நடத்தைகளைச் செய்து வருவதாகக் கேள்வி.

இந்தப் பதரிகாச்சிரமத்தில் ஐப்பசிமீ முதல் பயங்கரமான பனிபெய்ய ஆரம்பிப்பதால் அக்கோயிலின் நகை, தட்டுமுட்டு தான்யாதி சாமான்களை ஓர் அறையின் அடியிற் புதைத்துவைத்துவிட்டுக்கோயிலைமூடிக்கொண்டு அதன்மேல் மெய் பூசிவிட்டு ஜோசிமடம் பண்டிகேசுரம் முதலானவிடங்களுக்குப் போய்விடுகிறார்கள். இதையறிந்த சிலமலைவாசிகள் ஒருகாலத்தில் எப்படியோ கோயிலுக்குள் புகுந்து அடி அறையில் புதைத்து மறைத்துவைத்திருந்த ரூபா 13500 விலையுள்ள சொத்துகளைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களிற் சிலர் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். பிறகு வெய்யில் காலம் ஆரம்பிக்க, பனி கரைந்துருகக் கோயில்மீது கட்டியிருக்கும் கொடிமரம் தெரிய மறுபடியும் ஜனங்கள் வரப் பிரயத்தனப்படுவார்கள்.

கோயிலுக்கு மேற்கே 6 மலையின் உன்னத சிகரங்கள் சிறந்த காட்சிகளோடு பிரகாசிக்கின்றன. அவைகள் முறையே சமுத்திரமட்டத்திற்கு 23441—23286—(அடிகள்) 22934—22754—22556 — 21895 — மேல் உயரமுள்ளவைகளாயிருக்கின்றன. தென்மேற்கேயிருக்கும் சிகரம் சமுத்

திரமட்டத்திற்கு 22385 அடிகள் உயரத்தில் இருக்கின்றது. இத்தஸ்தலம் 108 விஷ்ணு ஸ்தலங்களில் ஒன்று. இதற்குப் போய்வர வண்டிகள் போகும் வழியன்றி, டோளி முதலானவைகளிலும் சாமான்களை ஆடுமாடுகளின்மீதும் கொண்டு போகவேண்டும். வழியில் திருடர்பயமும் மிருகபயமும் சில சமயங்களில் உண்டு. ஹரித்துவாரத்திலிருந்தும் போகலாம். அப்படிப்போகிறவர்கள் அயோத்தியா ரோகில்கண்டு டார்க் கல் ரயில் வண்டியில் சஹரான்பூருக்கு 49 மைல்போய் பிறகு குமாயூன் ரோகில்கண்டு மார்க்கமாக 62 மைல்தூரம் போக வேண்டும். அவைகளுக்கு முறையே ரூ. 0—11—3, 1—8—6 சார்ஜ் செலுத்தவேண்டும்.

இந்தப் பதரிகாச்சிரம தரிசனத்தோடு இந்துக்களுடைய தீர்த்தஸ்தலம் மூர்த்திஸ்தலம் யாத்திரைஸ்தலம் முடிவுபெற்றதாக அநேகர் முக்கியமாகத் தென்தேசத்தார் எண்ணியிருக்கிறார்கள். ஆனால் வடதேசத்திலுள்ளார் இவ்விமயமலைக்குப் பின்பக்கத்திலிருக்கும் கைலாசம் மானசசரோவரமாகிய மூர்த்திஸ்தல தீர்த்தஸ்தலங்களைத் தரிசித்தால்மாத்திரம் திவ்ய தேச திவ்ய தீர்த்தயாத்திரை முடிவுபெறுகிறதாக எண்ணி அவைகளையும்போய்த் தரிசித்துவருகிறார்கள். அவைகள் இருக்கும் இடமானது பயங்கரமான பனிக்கட்டிகளால் சூழப்பட்டும் அவற்றிற்குப் போகும்வழிகள் கஷ்டசாத்யமானவைகளாகவும் இருப்பதனால் அநேகர் முக்கியமாகத் தென்தேசத்தார் போய்வரத் துணிவதில்லைபோலும். ஆயினும் அவைகள் மஹா சிறந்த திவ்யதேச திவ்ய தீர்த்தமானதையால் அவற்றிற்குப் போகும் வழியையும் அவற்றின் பெருமையையும் இதனடியிற் சங்கிரகமாக அறிவிக்கிறோம்.

THE KAILAS AND MANASASAROVARAM.

கயிலாசம், மானசசரோவரம்.

இவ்விடங்களுக்குப் போக நேபாளம், குமாயூன், ஆல்மோரா, காஷ்மீரம், சிம்லா, காங்கிரா, லடக் முதலான விடங்களின்மூலயமாய்ப் போய்வர வழிகளுண்டு. ஆயினும் பெரும் பான்மையான இந்துக்கள் போய்வரும் முக்கியமான வழி யாதெனில், குமாயூன் ஜில்லாவில் இருக்கும் மானச என்னும் நாட்டில் பாய்ந்தோடும் முற்சொன்ன அலக்நந்தா நதியின் ஓர் உபநதியாகிய விஷ்ணுகங்கா என்னும் நதியின்மேல் கட்

டப்பட்டிருந்தும் மூன்று கிராமங்களுக்குப் பக்கத்தின் வழியாக அந்நதியின் ஓரத்தில் குமாயூனிலிருந்து சிறு கார்த்தாரிக்குப் போகும் பயங்கர மலைபிடிக்கான கணவாய் மூலயமாய்ப் போகவேண்டும். அந்த விஷ்ணுகங்காநதிக்கு இவ்விடத்தில் சரஸ்வதிநதி என்று பெயர். அதனருகில் இருக்கும் மேற்சொன்ன 3 கிராமங்களில் முறையே 700 அல்லது 800 அல்லது 1000 குடிகள் இருக்கிறார்கள். அவர்களிற் பெரும்பான்மையோர் யாத்திரைக்காரர்களுக்குக் கூலிக்காரர்களாகவும், உதவி செய்பவர்களாயும் இருக்கிறார்கள். மானுபேஸ்என்னும்மானசசரோவரத்திற்குப் போகும் வழியானது அதிக உன்னதமலையின்மீதிருந்தபோதிலும் தென்பாகத்திலிருந்து சிறுகார்தாரிக்குப் போவதற்கு அதிக அனுகூலமான வழியாக இருப்பதால் இன்று யாத்திரைக்காரர் அதன் வழியாகவே மானசசரோவரத்திற்குப் போய் வருகிறது வழக்கம். அப்படிப் போகும் வழியானது சமுத்திரமட்டத்திற்கு 18000 அடிகளுக்குமேல் இருந்தாலும் அந்தமானசம் இருக்கும் பள்ளத்தாக்கு 10492 அடிகள் உயரமுள்ள இடத்தில் இருக்கிறது.

அந்த மானசசரோவரத்திற்குச்சமீபத்திலும் கூன்லூஸ் என்னும் குமாயூன் எல்லையில் சிந்துநதி உற்பத்தி ஸ்தானத்திற்கு வடகிழக்கு மூலையிலும் திபேத்தேசத்திற்குத் தென்மேற்கு எல்லையிலும் கயிலாசமலையும், குருளமாந்தாத்த மலையும் இருக்கின்றன. அவைகளில் முன்சொன்னது சமுத்திரமட்டத்திற்கு 22513 அடிகள் உயரமும் பின்சொன்னது அதற்குத் தென்கிழக்கே சமுத்திரமட்டத்திற்கு 21669 அடிகள் உயரத்திலும் இருக்கின்றன. இந்தத் திவ்யஸ்தலங்களையும் தீர்த்தத்தையும்ஆதிகாலம்தொட்டு ஆயிரக்கணக்கான யாத்திரைக்காரர் சதா போய்வந்துகொண்டிருக்கினும் அவற்றிற்குப் போகும் சுலப சாதனமான வழிகளையும் அங்குத் தங்கத்தக்க இடங்களையும் உணவுமுதலான வசதிகளையும் தரிசிக்க வேண்டியவைகளையும் திட்டமாகத் தெரிவித்தார்களில்லை. பெரும்பான்மையான பயிறுகிகளுக்குப் போதுமான படிப்பும் எழுதும் சக்தியுமின்மையால் இவைகளின் சரித்திரங்களை விபரமாக எழுதுவதில்லை. இவைகளை மிஸ்டர் வெல்பி, ஷெரங்கு, 1812ஞு மூர் கிராட்டு, 1846ஞு அக்டோபர்மீ ஹென்றி ஸ்டாசியும், 1904ஞு இனாடரும், கர்னல் பாரரடு, 1855ஞு பரியலி கமிஷனர் டிரமண்டு, ரைடர், ராலிங்கு 1867ஞு நயின்சிங் என்பவரும், 1872ஞு பண்டிட்சிங் என்பவரும், 1873ஞு

நயின்சிங்கென்பவரும், 1881-ல் கிருஷ்ணாசிங் அவர்களும், 1907, 1908-வருஷங்களில் முறையே லிட்டில்டேல், கால்பர்ட் ஹிடின் முதலானவர்கள் போய்ப் பார்த்துச் சில சரித்திரங்களை எழுதியிருக்கிறார்கள்.

THE KAILAS.

கயிலாச மலையின் அற்புதக் காக்ஷி.

இந்த அற்புத பருவதத்தையும், இதற்குத் தென்மேற்கிலிருக்கும் மானஸசரோவரத்தையும், 1907-8-ல் தரிசித்த சுவேதன் தேசத்து யாத்திரைக்காரராகிய டாக்டர் சுவின் ஹிடின் (Dr. Svan Hidin) என்பவர் சிம்லா வழியாகவே இந்தியாவுக்கு வந்தார். ஆகவே, சிம்லாவிலிருந்து (1) செல்பிக்கம்பா, (2) பெட்டாஷி சார்கிபோ, (3) ரிசிச்சங்கமா, (4) போகக்கா, மாஜியியாங்கு, (5) சுனிடிச்சோ, (6) மெண்டாங்கு, (7) டெரிஎம்டிலோ, (8) பாங்கிராயடிசோ, 9) கான்சாகாங்கி, (10) கர்லா, (11) லாம்லங்குலா, (12) பூமியாங்கிரி, (13) மோன்லாம் கோச்சா, (14) லடங்கலா, (15) கோவாசிக்கிங்கு, (16) சாகமெலா, (17) ஹாகங்குடிகா, (18) போங்காரா, (19) நகரோசங்கு, (20) கார்கோர முதலானவைகளின் வழியாகப்போனால் கயிலாசத்தைப் பார்த்து ஆநந்த மடையலாம்.

இந்தக் கைலாசம் ஹிமாசலத்திற்குள், வடக்கிலும் மானஸ சரோவரத்துக்குத் தென்மேற்கிலும், உயர்ந்த பீடபூமியாகிய மேட்டில் சமுத்திரமட்டத்திற்கு 20,266 அடிகளுக்குமேல், ஆறு சிகரங்களோடு பளிங்கு பர்வதம்போலப் பிரகாசிக்கின்றது. இந்த ஆறு சிகரங்களுக்குத் தெற்கே, ஹிமாசலம் ஓர் பெரும் சுவர்போ லிருப்பதன்றியில், வடக்கிலும் பிரம்மாண்டமான பாறை பர்வதச்சுவற்றாலும் காக்கப்பட்டிருக்கின்றது. கிழக்கு மேற்குத் திசைகளிலிருக்கும் மலைகளுக்குக் கணக்கே அகப்படவில்லை. எப்பக்கங்களிலும், எங்குப் பார்த்தபோதிலும், பருவத சமுத்திரமாகக் கணக்கற்ற மலைகள் இருக்கின்றன. இவைகளுக்கிடையில் ஆறு சிகரங்களாற் பிரகாசிக்கும் இக்கயிலாசத்தின் மத்திய சிகரமானது விண்ணுலகம் வரையில் வளர்ந்தோங்குவதாகத் தோன்றுகின்றதன்றியில், இம்மலைகளின்மேல் விண்ணுலகத்திலிருந்து சதா பனிபெய்து உளர்ந்து மண்ணுலகிற்கும், விண்ணுலகிற்கும்

ஒரே சம்பந்தமிருப்பதாகப் பிரகாசிக்கிறது. ஆகவே இதன் உயரத்தையும், அகலத்தையும் அளவிட்டுச் சொல்லுதல் அசாத்தியம். ஆயினும், பருவகாலத்தின் பனிக்கட்டிகள் கரைந்து துல்லியமாக இருக்கும் காலத்தில் அதிக சக்தியுள்ள கண்ணாடிக் கருவிகளைக்கொண்டு அளவெடுத்ததில், கைலாயின் ஆறு சிகரங்களில் நடுநாயகமாகி விண்ணுலகக் கம்பம்போல் இருக்கும் உன்னத சிகரம் 7000 முதல் 10,000 சதுர அடிகள் கனதியை யுடையதாகவும், 18,599 அடிகள் உயரமுள்ளதாகவும், அதன் சுற்றளவு 28 மைல்கள் உள்ளதாகவும், கணக்கிடப்பட்டிருக்கிறது. பாருங்கள். சமுத்திர மட்டத்திற்கு 20,266 அடிகள் உயரத்திற்கு மேலாக 18,599 அடிகள் உயரமுள்ள மலையின் பெருமை எவ்வளவு ஆச்சரியகரமானது. இப்படி அற்புதமாக அமைக்கப்பட்ட பிரம்மாண்ட மலையின் மீது போய்வர இம்மலையைச் சுற்றிலும், வளைவுள்ள வழிகளும், இடைக்கிடை பெரிய கோட்டைகளும், கொத்தலங்களும், கோபுரங்களும், மண்டபங்களும், குடைகளும், இயற்கையாலமைக்கப்பட்டும், அவைகளுக்குச் சமீபத்தில் கணக்கற்ற ஜல ஊற்றுக்கண்களிலிருந்து சுத்த வெள்ளிரசத்தைப் போன்ற தண்ணீர் பீறிக்கொண்டுவந்தும், அவ்வியற்கைக் கட்டடங்களுக்கு வேண்டிய ஜலத்தைக் கொடுத்தும், மீதியாகும் ஜலம் பர்வத அடிப்பிரதேசத்தில் விழுந்து சிற்றாறுகளாகவும் பேராறுகளாகவும், குளங்களாகவும் இருக்கின்றன. அப்படியாகிய குணங்களிலிருந்துதான் சட்லிஜ், சிந்து, பிரம்மபுத்திராதி பெரும் நதிகள் உற்பத்தியாகி இந்தியாதேசத்திற் பாய்ந்து பலபேரைப் பாதுகாக்கின்றன.

இந்தக் கயிலாசம் இந்து மதஸ்தர்களுக்கேயன்றி, புத்தமதஸ்தர்களுக்கும், ஒரு விசேஷ புண்ணிய ஸ்தலமென்று மேலே தெரிவித்தோம். அப்புத்தர்கள் இம்மலையை (Kanga Run Pochi) காங்கையரின் போச்சி என்னும் பெயரிட்டு ஒவ்வொரு அசுவகாலத்தில் ஆயிரக்கணக்கான ஆண் பெண் மக்கள் சமேதராகவந்து தரிசித்து, வணங்கி, எப்போதும், ஓம் மணி பாத்மனி ஹும்என்னும் மந்திரத்தைக் கோஷித்துக் கொண்டு இம்மலையைச்சுற்றி வருவதோடு, அநேக புத்தமத சந்நியாசிகள் மலையின்மேல் இயற்கையாலும், செயற்கையாலும் பிரகாசிக்கும் சந்நியாசஆச்சிரமங்களில்அமர்ந்து, தியானநிஷ்டர்களாகி அங்கிருக்கும் புத்ததேவருக்குப் பூஜை புனஸ்காரங்களைச் செய்துவருகின்றனர்.

இப்படிப்பட்ட சந்நியாச மடங்களும், ஆச்சிரமங்களும் அநேகமிருக்கினும், அவைகளில் முக்கியமானவை, நியாண்டி கொம்பா (Nyandi gonba) (இது பூட்டான தேசத்து இராஜருடைய அதிகாரத்திலிருக்கிறது).லாகாங்கு (Lhakang) இது பெரிய நான்கு கருங்கல் ஸ்தம்பங்களாற் பிரகாசிக்கிறது. இதற்கு தேவசபா மண்டபமென்று பெயர். இதிலிருக்கும் சக்கிய முனி விக்கிரகத்திற்கு எதிரில் ஒரு தூண்டாவிளக்கு எரிகிறது. இந்த விக்கிரகத்துக்குச் சீனதேசத்து விக்கிரகத்தைப்போல் பலவர்ணங்கள் பூசப்பட்டு விக்கிரகத்திற்கு எதிரில் ஒருபெரிய செம்பு அண்டாவும், அதில் பரிசுத்தநீர்த்தமும் வார்க்கப்பட்டும் இருக்கிறது.

இங்குவந்து வணங்குவோருக்கு அந்தத் தீர்த்தத்தைக் கொடுக்க, அதிற் சில துளிகளை வாயில் ஊற்றிக்கொண்டும், மற்றப்பாகத்தை கண்களிலும், சிரசிலும் வார்த்துக்கொள்ள, அருகிலிருக்கும் சந்நியாசி அவர்கள் தலையை மயில் இறகுக் கத்தையால் தடவிக்கொடுக்கிறார். இக்கோவிலின் வாசற்படிகளின் இருபக்கங்களிலும், இரண்டு யானைக்கொம்புகள் வைத்திருக்கிறார்கள். சந்நியாசிகள் சதா ஜபமாலைகளை வைத்துக் கொண்டு புத்த மந்திரங்களை ஜபித்துக்கொண்டிருக்கிறார்கள். இக்கோவிலுக்கருகில் தேசின் காங்கு மண்டபத்தில் (Tesn Kang mand) காங்குரிங்ரேகச்சி விக்கிரகமும், சோமாவாங் (Tsomavang) விக்கிரகமும், பொன் ஆடையாபரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விக்கிரகங்களுக்குப் பின்பக்கத்திலிருக்கும் ஓர் அறையில் அநேக, கத்தி, கட்டாரி, துப்பாக்கிகள், கேடயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

எதிரிலிருக்கும் அநேக செதுக்குக்கருங்கல் பலகைகளில் ஆறுகற்களில் மாத்திரம் ஓம் மணிபத்மணிஹும் என்ற மந்திரம் செதுக்கப்பட்டிருக்கிறது. அருகிலிருக்கும் அநேக கொடிமரங்களில்சித்திரப்பிரதிமைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கருகில் சுமார் 800-அடிகள் உயரத்திலிருந்து பனிக்குப் பனிக்கட்டிகள் கரைந்து பிறிக்கொண்டு விழும் மலை அருவியின் ஜலம் சுத்தமான பசும்பாலைப்போல வெளுத்துப் பிரகாசித்துக் குடிப்பவருக்குத் தேனிலும் இனியசுவையுள்ளதாய் இருக்கிறது. இவ்விடத்திய கல்மலையில் இக்ஜலம் அடிக்கடி விழுவதனால் கறுத்து எப்போதும் ஈரமாகவே இருக்கிறது. இங்கிருந்துபோகும் இபற்கைப் பாலத்தின்மேல் போய்

கைலாசத்தையும், அதன் சுற்றுப்பக்கங்களின் காக்ஷிகளையும் பார்த்தால் கடிதத்தில் எழுதிமுடியாத அற்புதமாக இருக்கின்றது.

பிறகு இந்த ஆச்சிரமத்தைத்தாண்டி பின்பக்கம்போனால் அங்கு டங்லங்கு (Dunglung do), சிலங்கு (Taclung), காண்டோசங்கலம் (Kando Sangalam), சும்டுலாபூ, (Sum-tut-pu) என்றுதி ஆச்சிரமங்களிருக்கின்றன. இவைகளில் சுத்த ஸ்படிகபீடத்தின் மத்தியிலிருக்கும் விக்கிரகம் 5-அடிகள் உயரத்தில் உட்கார்ந்திருக்கும் பாவனையாக இருக்கிறது. அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு யானைக்கொம்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆச்சிரமங்களும், விக்கிரகங்களும் புத்தமதஸ்தர்களைச் சார்ந்தவை.

இந்துமத யாத்திரைக்காரருக்கு இந்த ஆச்சிரமங்களுக்கெல்லாம் உயரமான கோவிலில் சிவசாம்பவர் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதுஎப்போதும்பளிங்கைப்போன்றபனிக்கட்டியினால் மூடப்பட்டு, யாதோ ஒருகாலத்தில் பிரகாசமாகிறதாம். அதைப்பார்ப்பதற்கு எண்ணிறந்த யாத்திரைக்காரர் இரவுபகலாகவந்து கைலையை அங்கப்பிரதக்ஷணமாகச் சுற்றியும், சிரசால் வணங்கியும், அருகிலிருக்கும் சிறு கற்களை எடுத்து மலையின்மேல் சிகரங்களைப்போ லடுக்கிக்கொண்டே ஹர ஹர சம்போ! சிவ! சதாசிவ! மஹாதேவா! என்று பாடிக்கொண்டே மலையை ஏறுகிறார்கள். சிலர் இடையிலிருக்கும் பாவபுண்ணிய ஸ்தம்பம் என்னும் கல்லில் வெண்ணெயைத் தடவி அதில் தமது தலைமயிரையும், ஆடும் பல்லுகளையும் பிடுங்கி ஒட்டிவைத்துக்கொண்டும், மலையை 13-தரம் சுற்றி வருகிறார்கள். சிலர் இம்மலையின் அபாயமான குகைகளுக்குள்ளும், மலை இடுக்குகளிலும் புழுவைப்போற் புகுந்து நகர்ந்துவருகிறார்கள். இந்தக் கயிலையை 13-தரம் சர்வாங்க பிரதக்ஷணம்வந்தால், பாவனராகிப் பரலோகப் பிராப்தியை பிரத்தியக்ஷத்தில் அடைவதாக எண்ணுகிறார்கள்.

இக்கயிலைமலை பெரும்பாலும் கருங்கற்களாற் சிருஷ்டிக்கப்பட்டதாகவிருக்கினும், இதைச் சூரியோதயகாலத்தில் பார்த்தால் செம்பொன் நிறமாகவும், சிலசமயங்களில் அக்கினி ஜுவாலரூபமாகவும், பொன்முலாம் பூசப்பட்டதாகவும், மத்தியான காலங்களில் கண்கள் கூச்சமாகும்படி பளிங்குப் பிரகாச பிம்பமாகவும், சாயரக்ஷையில் செந்தாமரைக் குன்ற

மாகவும், இரவில் சுத்த வெள்ளி விக்கிரகமாகவும் பிரகாசிக்கும் பெருமையைப் பென்சிலினாலும், பேனாவினாலும், பத்திரிகையினாலும் எழுதமுடியாது. வாக்குவல்லமைபெற்றவித்வான்களாலும்வர்ணிக்கமுடியாது. இது பிரபஞ்சத்தின் மத்தியில் பிரம்மலோகமே பிரத்தியக்ஷமாக வந்துநிற்பதாகப் பிரகாசிக்கின்றது. ஆகவே இச்சிறந்த பனிபூஷணமான மலையை வந்து பார்க்கும் ஐரோப்பாமுதலான அன்னிய நாட்டு யாத்திரைக்காரர்கள் இதைப்போல் கடல்ஞாலத்திலெங்கும் காணக்கிடைக்காத அற்புதமலை என்று புகழுகிறார்கள். இந்துக்களும், பக்தர்களும் இக்கயிலையையும், இதன் சுற்றுப்பக்கத்து இணையற்ற காக்ஷியையும் காணும்போது பிரமித்துப் பொறிபுலன்கள் பிரமைபடைய இதைப் பரலோகமென்றும், பரமேசுரன் வதிந்து வரும் விண்ணுலகமென்றும் வியப்படைந்து, தமது உடல், பொருள், ஆவியைப் பரமாத்துமாவிடம் தத்தம் செய்து பேரானந்த மடைகின்றனர்.

MANASA SAROVARAM.

மானஸசரோவரம்.

இந்த மாநசசரோவரம் ஹிமாசல பர்வதத்திற்குள் கயிலாசகிரிக்கு வடகிழக்காகவும், குருலமந்தாத அல்லது மெமோனானி மலைக்குத் தென்மேற்காகவும், மற்றிரு பக்கங்களிலும் பளிங்கைப்போன்ற பருவதங்களினாலும் சூழப்பட்டும், சமுத்திர மட்டத்திற்குமேல் 17384 அடிகள் உயர்ந்த பீடபூமியாகி மேட்டின்மேல் பிரகாசிக்கின்றது.

இந்தச் சிங்கார சரோவரம் வடபாகத்தைப் பார்க்கிலும் தெற்குப்பாகத்திற் சற்று குறுகியும், ஒரு முட்டை வடிவாகவும், சுமார் பதினைந்தரை மைல்கள் சுற்றளவுள்ள ஓர்சிறந்த சிறுகடலாகவும். 130 முதல் 268 அடிகள் ஆழமுள்ளதாகவும் கயிலாயகிரி குருளமந்தாதிப் பனிக்குபர்வதங்களின் சார்புகளில் சமுத்திர மட்டத்திற்குமேல் 15096 அடிகளுக்குமேல் அமர்வதிக்குத்தக்க(மாநசசரோவரத்தின்) அமைப்பைவிவரமாக வர்ணிக்க முடியாது! முடியாது!!

இந்தச் சரோவரத்திற்கு நான்கு பக்கங்களிலும், எல்லைகளாகச் சுற்றியிருக்கும் சுவர்க்கலோகச் சுவர்களைப்போன்ற கயிலாசம் குருலமாந்தாதாதி மலைகளின் ஸ்படிகம்போன்ற

பனிக்கட்டிகள் சூரியன் காங்கையாற் கரைந்துவிழும் ஜலமும், இப்பரிசுத்த பருவதங்களின்மேல் பெய்யும் மழையின் ஜலமும், மலைச்சார்புகளில் முத்துக்களைப்போலப் பீறிக்கொண்டு வரும் ஊற்றுக்கண்களின் ஜலமும் சதா சலசலவென்று பாடிப் பாய்ந்துக்கொண்டே இருக்கிறது. இப்படிப்பாயும், வெளி ஜலம் ஒரு நிமிஷத்துக்கு 19048 கன அடியும், 24 மணிகளுக்கு 94,590,000 கன அடியுமுள்ளதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது.

இப்படிச் சதா பாயும் ஜலத்தால் சரோவரம் பூரணமாக நிறையப்பெற்றாலும், மிதமிஞ்சிய ஜலம் அச்சரோவரத்தை விட்டுப்போக வழிகளற்றுப் பருவதங்களால் சூழப்பெற்றிருப்பதால், மிதமிஞ்சிய ஜலம் சரோவரத்திற் குள்ளாகவே அதிக ஆழமான விடங்களில் அந்தராளமாகச் சுரந்து பாதாளம் வரையிற்போய் அங்கிருந்து மறுபடியும் பர்வதப் பிரதேசங்களுக்கு வெகுதூரத்தில், ஊற்றுக்கண்களாகப் பீறிக்கொண்டு கிளம்பிவந்து, சிற்றாறுகளாகவும், பேராறுகளாகவும், குளங்களாகவும் பிரகாசித்துப் பள்ளத்தாக்குகளில் பாய்ந்தோடுகின்றன. அப்படிப் பாய்ந்தோடும் ஆறுகளில் பிரம்மபுத்திராவும், சிந்து, சட்லீஜ் முதலான நதிகளும் முக்கியமானவையாம். ஆகவே, இந்த மானசம்: பிரமபுத்திரா, சிந்து, சட்லீஜ் முதலான பிரபல நதிகளுக்கு உற்பத்தி ஸ்தானமாகவும் இருக்கிறது.

இப்படி இந்தச்சரோவரத்தின் மிதமிஞ்சியஜலமும், ஆழமும் அந்தராளமாக அடியிற் போய்விட, மேலே இருக்கும் ஜலம் பரிசுத்த ஸ்படிக ரூபமானதாகிக் குடிப்பவருக்கு முப்பழஞ்சாற்றில் தேனும் ஜீனியும் கலந்தால் எவ்வித ருசியையுண்டாக்குமோ அவ்விதமாக இருக்கிறதாம். இந்த அம்ருதமான ஜலத்தை ஒருதரம் குடித்தால் பிறகு உலகில் உள்ள நாள் உள்ளவரையில் இச்சரோவரத்தை விட்டு அப்புறம் போக மனமெழாது.

இதை வர்ணித்தெழுத எவராலும் முடியாத இயற்கையமைப்பின் அற்புத காக்ஷியாக இருப்பதால், இங்கு திரிமூர்த்திகளும், மற்ற சுரர்களும் வந்து அமிர்தபானம் செய்வதாகவும், இங்கு வருபவருடைய உலக ஆசாபாசங்கள் அடியோடு அகன்று ஆத்மோஜீவனம் பெற்று அமரர்களுடன் வாழலாமென்றும் எண்ணி ஆரியவர்த்தத்தின் அநேக பக்தி

மான்களும், சாதகர்களும், சந்நியாசிகளும், தபோதனரும், எதிகளும், முனிகளும், அல்மோரா முதலான வழிகளில்வந்து மனதை மருட்டும் மானசசரோவரத்தைப் பலதரம் சுற்றிப் பிரதக்ஷிணமாகவந்து தீர்த்தமாடி, சிறு தட்டுகளில் சாம்பிராணி சந்தனக்கட்டை கற்பூரம் தூபதீபங்களை மிதக்கவிட்டு பூஜித்து பேரானந்த மடைகின்றனர். இந்த அற்புத சரோவரம் இந்துக்களுக்கு மாத்திரமல்ல, பவுத்தமதஸ்தர்களும் இதற்கு ஸதேமவாங் (Tae Mavang) என்னும் பெயரிட்டுப் புகழ்ந்துவந்து மஹா பயபக்தியுடன் வணங்கிப் போவதன்றியில், சிலர் இச்சரோவரத்தின் சுற்றிலுமிருக்கும் பருவதப் பிரதேசங்களில் இயற்கையாகவும் செயற்கையாகவும், அமைந்துள்ள ஆச்சிரமங்களிலிறங்கித் தவம் செய்துகொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட ஆச்சிரமங்கள் அநேகமிருக்கினும் அவைகளில் எட்டு ஆச்சிரமங்கள் முக்கியமானவை. அவைகளில்:—

(1) கோசுல் கொம்ப (Gossul Gompa) என்னும் ஆச்சிரமம், இந்தச் சரோவரத்துக்கு அருகில் 130 அடிகளுக்கு முதல் 60 அடிகள் அகலத்தோடு ஒரு பருவதத்தின்மேல் பக்ஷியின் கூண்டைப்போல் பிரகாசிக்கிறது. இங்கு அநேக புத்தசந்யாசிகள் தவம் செய்கிறார்கள். இங்கு ஸ்திரீ சந்நியாசிகளும் தங்கும்படியான ஓர் தனி ஆச்சிரமும் இருக்கிறது.

(2) கியங்கோ கொம்ப (Ganggo Gomp) இந்த ஆச்சிரமத்தில் 13 சந்நியாசிகளும் ஒரு பெண் சந்நியாசியும் இருக்கின்றனர். இவர்களிற் சிலர் 500 ஆடுகளை வளர்த்து அவற்றின் மயிரைக் கத்தரித்து விற்பனை செய்கிறார்கள்.

(4) சிவகொம்பா (Chva Gompa) என்னும் ஆச்சிரமம் ஒரு செங்குத்தான மலையின்மீதிருக்கிறது. இங்கு 15 சந்நியாசிகளிருக்கிறார்கள். இவர்கள் 500 ஆடுகளையும், 100 வெள்ளாடுகளையும் வளர்த்து புராங்கு நாட்டுக்கு உப்பைக்கொண்டு போய்ப் பாலி தானியத்துக்கு விற்கிறார்கள்.

(5) லாங்கு போனன் (Long Bonan) என்னும் ஆச்சிரமத்தில் சுமார் 12 பெயர் சந்நியாசிகளிருக்கிறார்கள். இந்த ஆச்சிரமத்தின்மேல் அநேக பருந்துகளிருக்கின்றன.

இதே மாதிரியாகவே மற்ற மூன்று ஆச்சிரமங்களும் தனித்தனியாக இந்த அழகிய சரோவரத்துக்கு அஷ்டதிக் பாலர்களைப்போ லிருக்கின்றன.

டுகும்ப (Tugu Gompa) இதுவும் ஒரு விசேஷமான ஆச்சிரமம். இங்கு அநேக தபசிகள் இருக்கிறதன்றியில், இந்த ஆச்சிரமத்தின் இடதுபக்கத்துச் சுவரில் திபேத்து பாஷையில் சாசனக்குறிப்பு எழுத்துகள் செதுக்கப்பட் டிருக்கின்றன. அதன் கருத்தென்னவென்றால்:—

சோமவாங் (Tao marng) என்னும் இந்த மானசசரோவரம் பிரபஞ்சத்திற் சிறந்த பரிசுத்த தீர்த்தங்களென்றும், இதன் மத்தியில் நவரத்ன கசிதமான ஜகதீசன் ஆத்மஸ்வரூபியாக நடித்துவருகிறார் என்றும், இவருக்கருகில் 1022 கிளைகளையுடைய கற்பகவிருக்ஷமிருக்கிறதென்றும், அக்கிளைகளில் ஒன்று கயிலாசத்தைத் தாக்கியும், மற்றொருகிளை உலகத்தைக் கவர்ந்துமிருக்கின்றனவென்றும், மற்றக்கிளைகளெல்லாம் சுகுல்கும்ப ஆச்சிரமத்தை நாடிவர அக்கிளைகளிலும் இலைகளிலும் அநேக அமரர்கள்வந்து தங்கி இந்தத் தீர்த்தத்தைப் பானம் செய்கிறார்களென்றும், பூர்வத்தில் இந்த ஜலம் பரிசுத்தமான பொன்னூற்றாக இருந்ததென்றும் அதனால் இச்சரோவரத்தின் சேறானது சொர்ணப்பொடிகள் கலந்த பத்தரைமாற்றுத் தங்கச்சேறாக இருந்ததென்றும், அது அததேவனுடைய சொத்தென்றும், தக்ஷணதேவர்கள்வந்து இங்கு ஜலபானம்செய்து, இங்குவரும் யாத்திரைக்காரருக்கு அஷ்டைசுவரியமும், ஆயுளாரோக்கியமும் உண்டாகும்படி ஆசிர்வதிப்பதாகவும், இங்குஸ்நானம்செய்பவர்களுடையபிதுர் தேவதைகளும், தாமும் சகல பாவங்களை நீக்கிக்கொண்டு பிரத்தியக்ஷமாகப் பரமபத மடைவார்களென்றும், டர்ட்பிரமூநா காகா என்னும் ஞானியானவர் 50 யாத்திரைக்காரரோடுவந்து இங்கு ஸ்நானம்செய்து பொந்தியோடு தேவலோகம் போனாரென்றும், இங்கிருந்தே பிரம்மபுத்திரா இந்து உற்பத்தியாகிறதென்றும், பின்னும் பலவிதமாக வர்ணித்து எழுதப் பெற்றிருக்கிறது.

இந்த ஆச்சிரமங்களிலிருக்கும் பவுத்த சந்நியாசிகளும் இங்குவரும் இந்துமத யாத்திரைக்காரர்களும், ஜாதிமதபேதமற்றுச் சகோதர வாஞ்சையுடன்கூடி சர்வேசுவரனைத் தியானிக்கிறார்கள்.

இவ்வளவு பரிசுத்தமும், இனிமையுமான ஜலமும், சுற்றுப் பக்கங்களிலிருக்கும் பருவதங்களின் பிரதிபிம்ப காக்ஷிகளினால் சில சமயங்களில் இச்சரோவரம் இளநீல வர்ணமாகவும், சில சமயங்களில் மரகதம்போன்ற சுத்த பச்சை வருணமாகவும், சில சமயங்களில் இளஞ்சிகப்பான ரோஜாபுஷ்பத் தோட்டமாகவும், சில சமயங்களில் ஸ்படிக ரூபமாகவும், சில சமயங்களில் அமிர்தரசமான ஆவின் பாலாகவும், சுத்த வெள்ளிரசமாகவும், சிலசமயங்களிற் பொன்மயமாகவும் பிரகாசிக்கிறது.

இம்மட்டோ? தேவலோக இரம்பையோ, அல்லது சிறந்த மேனகையோ என்று சொல்லத்தக்க சுந்தரவதியைப் போன்ற இச்சரோவரம் ஜல அலைகளால், அடுத்திருக்கும் கயிலாயம், குருளமந்தாதாதிபருவதங்களும், பற்பல காலங்களிற் பற்பலவருணங்களைப்பெற்றுப் பிரகாசிக்கிறதன்றியில், அருணோதயகாலத்திற் பார்த்தால் அப்பர்வதங்கள் பவளக் கட்டி வர்ணங்களாகவும், செந்தீபற்றி எரியும் அக்கினி மலைகளைப்போலவும், பத்தரைமாற்றுள்ள பொன் நீரால் பூசப்பட்ட பிரம்மலோகங்களைப்போலவும் பிரகாசிக்கின்றது.

இச்சரோவரத்தின் கரையின்மீது நின்று இச்சரோவரத்தின் அமைப்பையும், அழகையும், அடுத்திருக்கும் பர்வதப் பிரதேசங்களின் அமைப்பையும் உற்றுப்பார்ப்பவருக்கு மண்ணுலகின் கவலைகளும் கஷ்டங்களும் கடந்து சதா சாந்தராகி, விண்ணுலகிலிருக்கிறதைப்போல் தோன்றும். சுரர்லோகத்தைப்போலிருக்கிற இந்தச் சரோவரத்தை ஸ்வின் ஹிட்டின் (Svan Hidin) சாஸ்திரியார் பார்த்து: (The Scene gradually changing as the hourse go by seems to belong not to earth, but to the outermost boundary of unattainable space as though it lay much nearer heaven the misty fairy land of dreames and imagination, of hope and yearning than to the earth with its mortals, its cares, its sins and its vanity. I can live and die on this heavenly lake without ever growing weary of the wonderful spectacle always presenting fresh surprises &c.)

காலத்துக்குக் காலம் இதன் அற்புதக்காக்ஷிகள் மாற்றம் பெற்று மதிமயக்கச் செய்கிறபடியால், இதை அடைவதற்கு அபூர்வமான பிரம்மலோகமைப்போ லிருக்கின்றது. ஆ ஹா! இது உலக விருப்பு வெறுப்புகளுக்கு வேறானதாகவும், தேவ

லம் கனவிலும், மனோராஜ்ஜியத்திலும் தோன்றும் அப்ஸர ஸ்திரீகள் வதியும்படியான இவ்விடத்தில் உள்ளநாள் உள்ள வரையில் உல்லாசமாக வாழ்வேன் என்றும் பலவிதமாக வர்ணித்து எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட அற்புத காக்ஷிகள் இவ்வுலகத்தில் மற்றெங்குமில்லை யாகையால் இந்து என்று உடம்பெடுத்த ஒவ்வொருவரும் இத்திவ்ய ஸ்தலங்களைத் தரிசித்து சுகாநந்த மடைவார்களாக.

CWANPOOR.

கான்பூர்.

1887ஹு ஜனவரிமீ 12வ காலையில் படுக்கையை விட்டெழுந்து தந்தசுத்தி செய்துகொண்டு அங்கு அபரிமிதமாக விருக்கும் அநேக கடைவீதிகளையும், மார்க்கட்டையும், போய்ப் பார்த்துக்கொண்டு, அந்த நகரில் தயார் செய்யும் ஒருவித அல்வாவை வாங்கியுண்டுச் சற்று இளைப்பாறித் தங்குமிடம் வந்து ஸ்நானம் செய்து சுமார் பதினொருமணிக்குச் சாப்பிட்டு, நகரத்தின் பெரியவீதியின்மூலமாகப் போய் நகரலக்ஷணத்தைக் கண்டு களித்து எஞ்ஜின்மில், விக்டோரியாமில், புருஷ்மில், தோல்பதனிடும் ஷாப்பு, சக்கரை செய்யும் கம்பெனி, இஞ்சினீர்வேலை, நூல்நூற்குமில்லுகள், (Muir Mills) மூயர்மில்ஸ் என்னும் மயிர் நூல் நூற்கும் பெரிய இயந்திரம் இவற்றைப் பார்க்கப் போய் அதன் பிரம்மாண்டமான வெளிக்கட்டிடங்களைக் கண்டு உள்ளே போய்ப்பார்க்க (Pass) பாஸ் கேட்டதில், அதன் மானேஜர் சற்று தாமதத்துடன் கொடுத்ததால் உள்ளே போய்ப் பார்க்காமல் வெளிப்பக்கத்தை மாத்திரம் பார்த்துவிட்டு (Memorial Garden) மெமோரியல் தோட்டத்தைப் பார்வையிட்டோம். இந்தத் தோட்டமானது இரண்டு மூன்றுமைல் சுற்றளவுள்ளதாயும், சுற்றிலும் இரும்புச்சலாக்குச் சுவர்களால் அடைக்கப்பட்டும், பற்பல விதமான சந்த மூலப் பழவர்க்கச் செடிகள் வைத்துப் பயிர்செய்யப்பட்டுமுள்ள ஒரு உத்தியானவனமாக விருப்பதன்றியில், தோட்டத்தின் மத்தியிலிருக்கும் ஒரு தெப்பக்குளத்தின் ஒரு பாகத்தில் கி. பி. 1857ஹு நானாசாகிப் கலகத்தில் மாண்ட அநேக ஐரோப்பியர்களுடைய ஞாபகச் சின்னங்களாக ஸ்படிகக் கற்களில் விக்கிரகமாகச்செய்தும் செதுக்கியும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஞாபக சின்னமானது ஒருவித சிலுவை பாவனையான கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தோ

ட்டத்தைப் பார்ப்பதற்கு கான்பூர் டிஸ்டிரிக்ட் கலெக்டரிடம் பாஸ் என்னும் சிட்டைப் பெற்றுக்கொண்டு போகவேண்டும். இந்தத் தோட்டத்துக்குச் சமீபத்தில் (Memorial Church) ஞாபகக்கோயிலொன்று கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலின் உட்பாகமெல்லாம் செதுக்கிய ஸ்படிகக் கற்களினால் சிங்காரமாகக் கட்டப்பட்டு, கி. பி. 1857 வருஷத்திய கலகத்தில் இறந்த இங்கிலீஷ் வீரர்களுடைய பெயர்களை நினைப்பூட்டும்படி குடிகளால் ஏராளமான பொருள் செலவிட்டுக் கட்டப்பட்டது. இதற்கு கவர்ன்மெண்டாரும் 5,00 ரூபாய் கொடுத்தார்கள். இந்த இந்துதேசத்தில் கிறிஸ்துமதஸ்தர்கள் கட்டியிருக்கிற கோயில்கள் பலவற்றிலும் சிங்காரத்தில் சிறந்த கட்டிடம் இதுவென்றே சொல்லலாம். இந்தக் கோயிலைப் பார்ப்பதற்கு யாதொரு பாசும் வேண்டியதில்லை. அவ்விடத்திலிருக்கும் வாசல்காரனுக்கு நான்கணா கொடுத்தால் தாராளமாகக் கொண்டுபோய்க் காட்டுகிறான். இந்தக் கோயிலைத் தாண்டிச்சற்று மேற்கேபோவோமாகில் (State Chowra Ghaut) ஸ்டேட் சவுரா காட்டு என்னும் பெயரால் கங்கைப்படுகை இருக்கின்றது. இந்தவிடத்தில்தான் சிப்பாய்க் கலகக்காரர்கள் அநேக ஐரோப்பிய ஸ்திரிபுருஷர்களைக் கண்டதுண்டமாக வெட்டிக் கங்கையில் போட்டுவிட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்தவிடத்தைப் பார்க்கப் பயத்தைக் கொடுக்கின்றது. இதன் றியில் (General Wheelers Entrenchment) ஜெனரல் வீலர்ஸ் என்ட்ரன்ச்மெண்டு, (The Elgin) எல்ஜின், புது முனிசிபல் மண்டபம், சர்க்கார் தோல்சாலை முதலானவைகள் பார்க்கத் தகுந்தவைகளாக விருக்கினும், கன்டோன்மெண்டென்னும் சிப்பாய்கள் தங்குமிடமே பலவிதக் கட்டிடங்களாலும், கொட்டடிகளாலும், காப்புச் சேனைகளாலும் சிறந்து விளங்குகின்றது. இந்த கன்டோன்மெண்டுக்குக் கிழக்குப் பாகத்தில் ஒரு புராதனமான கட்டிட மிருக்கிறது. அந்தக் கட்டிடத்தின் அடியிற் பலவித அறைகளிருப்பதாகவும், அது நானாசாகிபு இருந்த விடமென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அந்தக் கட்டிடம் இப்போது சிர்கெட்டு ஒரு பின்சன் சிப்பாயின் பார்வையிலிருக்கிறது. மேலும் அங்கிலேய பிரயாணிகள் போய்த் தங்க பெரிதான மூன்று ஹோட்டல்களிருப்பதன்றியில் (Kellners Refreshments Room) கெல்னர் ரிப்ரெஷ்மெண்டு சாலையுமிருக்கிறது.

கான்பூரின் தற்கால சரித்திரம்.

இந்த கான்பூரானது ஐக்கிய மாகாணத்தின் லெப்டினென்டு கவர்னருடைய அதிகாரத்துக்குட்பட்ட ஒரு டிஸ்திரிக்ட்டு. இது கங்கை யமுனைகளுக்கு இடையில் செழிப்புடன் சிறந்து விளங்குமிடம். இது சுமார் 2337 சதுரமைல்கள் விஸ்தீரண முள்ளதாயும், சுமார் 1,17,45,560 ஜனவாசமானவிடம். இதில் கங்கை யமுனை முதலான பெரியநதிகளும், ரிகிண்டு, சின்கூர், பாண்டு, ஈசன் முதலான சிறு நதிகளும் பாய்வதால் பூமியானது செழித்து, கோதுமை, பார்லி, சோளம், பயிர்வகை, கொட்டைமுத்து, கரும்பு, உருளைக்கிழங்கு, தினை; பருத்தி முதலானவைகள் எதேஷ்டமாக விளைந்து நாட்டில் வர்த்தகம் விசேஷித்து நடக்கிறது. நகரத்துக்குச் சமீபத்தில் கங்கைநதியோடுவதன்றியில், ஒரு பெரிய கங்கைக் கால்வாயும் நகரத்தின் மத்தியில் வெட்டப்பட்டிருக்கிறது. நாட்டகத்தில் பல பெரிய ரஸ்தாக்களும், பல பெரிய பண்டசாலைகளும், பாடசாலைகளும் பிரகாசிக்கின்றன. இப்பாடசாலைகளில் பார்சி, அரபி, இந்துவி, சம்ஸ்கிருதம், இங்கிலீஷ் முதலான பாஷைகளைக் கற்பித்துவருகின்றனர். இந்த நாட்டில் வசிக்கும் இந்துக்களுக்கு(சூத்திர சாமானியருக்கு)லாலாவென்ற பட்டமும், பிராம்மணர்களுக்கு பிரசாத் என்ற பட்டமும் வழங்கப்பட்டுவருகிறது. இது வர்த்தகவளமான பெரிய பட்டணமாகையால், எந்த வீதியிற் பார்த்தபோதிலும் கும்பல் கும்பலாக ஜனங்கள் நின்று வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார்கள் இவ்விடத்தில் ஓடும் கங்கையானது கப்பல் யாத்திரை செய்யக்கூடியதாயிருப்பதால், கங்கைக் கரையிலும் வர்த்தகம் அதிகம். சுதேசிகள் வசிக்கும் பாகம் அதிக நெருக்கமாகவும், அசங்கியமாகவும் இருந்தாலும், அங்கிலேயர் வசிக்கும் பாகம் பூங்காவன சோலைகளால் நிறைந்து அலங்காரமாக விருக்கின்றது. இவ்விடத்திலிருக்கும் கன்டோன்மெண்டானது ஆறுமைல் நீளமும், அரைமைல் விஸ்தீரணமு முள்ளதாயும் இருப்பதன்றியில், குதிரைப் பட்டாளங்களுக்குப் போதுமான கட்டிடங்களு மிருக்கின்றன. முன்சொன்ன கன்டோன்மெண்டில் மாத்திரம் 50,000 ஜனங்கள் குடியிருக்கிறபடியால் இந்தக் கன்டோன்மெண்டே ஒரு பட்டணமாகவிருப்பதன்றியில், 7000 சேனைகளும் அவர்களுக்கு வேண்டிய கடைகளும், தங்கும்படியான கட்டிடங்களுமிருக்கின்றன.

ஆனாபற்றியே இதை அளவிலும் குடித்தொகையிலும் இத்தேசத்தின் நான்காவது பட்டணமாகவும் ஒரு வேளை சோட்டா கல்கத்தாவென்றுஞ் சொல்லுகிறார்கள். இது கி. பி. 1777ஆம் பிரிதானியருக்கு ஒரு சேனை தங்குமிடமாக விருந்தது. பிறகு 1857ஆம் சிப்பாய்க் கலககாலத்தில் ஒரு விசேஷ பட்டணமாகியது. இப்போது பலவிதத்திலும் பெருமை பெற்றுப் பிரகாசிக்கின்றது. நகரத்திற்குள்ளிருக்கும் சக்கூசுகளில் மலஜலாதிகளைக் கழிக்க விரும்புவோர் தடவை யொன்றுக்குக்காலணா கொடுக்கவேண்டும். மற்றப்படி காய்கறிசாமான்கள் நயமான விலைக்குக் கிடைக்கின்றன. இவ்விடத்தில் இந்துக்களுக்கு விசேஷமான தேவஸ்தானம் பிரயாகை நாராயணன் என்னும் விஷ்ணு ஸ்தலமிருக்கின்றது. போக்குவரத்துச் செய்வதற்குக் குதிரைகள் கட்டிய கோச்சுவண்டிகள் ஏதேஷ்டமாகக் கிடைக்கின்றன. வண்டியின் சத்தம், காசியிலிருப்பதைப்போலவே இருக்கின்றது. இத்தியாதிகளைப் பார்த்துக்கொண்டு தங்குமிடம் போய்ச் சமயற்செய்து சாப்பிட்டுச் சற்றிளைப்பாற, நமது டாக்டருடைய வெள்ளிச்சாவிக்கொத்தை எமக்கு ஊழியக்காரியாகவிருந்த அத்தேசத்துப் பெண் திருடிக்கொண்டாள். பிறகு இராத்திரி பன்னிரண்டுமணிக்கு கான்பூர் கிழக்கிந்திய புகைவண்டி ஸ்டேஷனுக்கு வந்தோம். அந்த ஸ்டேஷனும் பிரம்மாண்டமும் அழகுமுள்ள கட்டடம். அந்த நடு இராத்திரியில் அந்த ஸ்டேஷன் மாஸ்டராகிய பங்காள பாபு நமக்குப் பலவித உபசாரங்கள் செய்தபோதிலும், டிக்கெட்டு கொடுக்கும் உத்தியோகஸ்தர்கள் பஞ்சைகளைப்போல டிக்கட்டு வாங்குபவர்களிடம் பிச்சை யெடுக்கிறார்கள். எம்மிடமும் ஒரு ரூபாய் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக்கொண்டார்கள். நாம் இந்த ஸ்டேஷனுக்கு வரவே நமது ஆப்த சிநேகிதர்களாகிய கடலூர் மகா-ள-ள-ஸ்ரீ தெய்வநாயக முதலியாரவர்களும், தஞ்சை மகா-ள-ள-ஸ்ரீ சாமிநாதய்யரவர்களும் சம்சார சமேதராக ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். நாங்கள் தலை யொன்றுக்கு ரூபாய் 2-1-3 கொடுத்து ஆக்ராவுக்கு டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு 12-30 மணிக்கு புகைவண்டி ஏறினோம். வண்டியில் போதுமான விடமிருந்தபடியால் யாதொரு கஷ்டமில்லாமல் நன்றாகப் படுத்துத் தூங்கினோம். இந்தக் கான்பூர்: கல்கத்தாவுக்கு 639 மைல்கள் தூரத்திலும், பம்பாய்க்கு 839 மைல்கள் தூரத்திலும், சென்னைக்கு 1451 மைல்கள் தூரத்திலும், மூன்றாவது வகுப்புக்கு

முறையே ரூ. 5-15-0, ரூ. 9-10-0, ரூ. 21-4-0 கொடுக்கவேண்டும்.

1887௵ ஜனவரி௴ 13௳ காலை 7-மணிக்கு ஆக்ரா கோட்டை ஸ்டேஷனில் வந்திறங்க, 9-மணி வரையில் வசதியானவிடம் அகப்படாமையால், சிறு மழையுடன் அவஸ்தைப்பட்டுக் கடைசியாக அந்த ஸ்டேஷனுக்கும், யமுனாநதிக்கும் அதிகச் சமீபமான மேட்டுபாவாவின் (Tharasari) தாரசெரி என்னும் மாடிவீட்டிலிறங்கிச்சமைத்துச்சாப்பிட்டோம்.

AGRA.

ஆக்ரா.

இந்த அக்ரா பட்டணமானது லெப்டினெண்டு கவர்னருடைய அதிகாரத்துக்குட்பட்ட ஐக்கிய மாகாணங்களில் ஒரு டிஸ்திரிக்ட்டு. இதற்கு வடக்கே மதுரா டிஸ்திரிக்ட்டும், கிழக்கே மினியூர் டிஸ்டிரிக்ட்டும், எட்வாவும் தெற்கே டோல்பூரும், மேற்கே பரதபூரும், கிழமேலாக 85 மைல் நீளமும், 38 மைல் அகலமுள்ளதாயும், யமுனை சாம்பல் முதலான நதிகள் பாயப்பட்டதாயும் இருந்தாலும், இந்த நதிகள் தரை மட்டத்துக்குத் தாழ்ந்திருப்பதால், பயிர் பச்சைகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வசதியற்றதாகவிருக்கின்றன. மேலும் பூமியானது மணற்பாங்காகவிருப்பதால், கிணற்று ஜலத்தையும் தக்கபடி பாய்ச்சுவதிலும் கஷ்டமிருக்குமென்று தோன்றுகிறது. சமீபத்திலிருக்கிற (Futtehpore Sikri) பட்டிப்பூர் சிக்கிரி என்னும் மலைத்தொடர்ச்சிகளில் உண்டாகும் கற்கள் செங்கல்களைப் போலவிருக்கினும் அவைகள் தினத்துக்கு தினம் வேறுபட்ட வர்ணங்களுடையதாகிப் பெரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு இன்றியமையாதவைகளாக விருக்கின்றன. தேசத்தில் சீதோஷ்ணம் சமரசமானதாகத் தோன்றினாலும், பனிகாலத்தில் குளிர் சகிக்கக்கூடாதவிதமாக விருப்பதன்றியில் இந்த நாட்டில் விசேஷமாக விளையும் வர்த்தகப் பொருளாகிய பருத்தியைக் கெடுத்துவிடுகிறது. போக்குவரத்துச் செய்வதற்குப் பலவித ரஸ்தாக்க ளிருப்பதன்றியில், யமுனை நதியில் பலவித படகுகளினாலும், ஈஸ்டு இந்தியர் புகைவண்டியின் மூலமாகவும் வரத்துப்போக்குச் செய்ய வசதியுமிருக்கிறது. இந்த ஆக்ராவில் 1852௵ 100,196,1 ஜனங்கள் குடியிருந்தார்கள், நெல்லும் கோதுமைமுதலான மற்ற தானியங்களும் விசேஷ

மாக விளைகின்றன. குடிகளில் பெரும்பான்மையோர் விவசாயக்காரர்கள்.

THE ANCIENT STATE OF AGRA.
ஆக்ராவின் பூர்வ சரித்திரம்.

அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வருவதற்குமுன் இந்தவிடத்தில் பாரசிகருடைய சேனைகள் வந்திருந்ததாக (Ferishta) பிரஸ்டா என்பவர் எழுதினாலும், கி. பி 1017 வருஷம் மகமதுகஜ்னி, கனோஜின் வழியாகப்போகும் போது இந்தவிடத்திற்கருகில் (Muhabun) முஹாபனோடு எதிர்த்ததாகவும், கி. பி. 1193௵ சாப்டீன் மகமதுகோரி கன்னோஜி, காசி முதலான விடங்களின் இராஜாவாகிய ஜயச்சந்திரனிடம் இவ்விடம் சண்டை செய்ததாகவும் சரித்திரத்தில் தெரியவருகிறது. 1488௵ முதல் 1511௵ வரையில் டில்லியில் அரசாண்ட சிகந்தர் லோடியானவர் இந்த ஆக்ராவைத் தமது வாசஸ்தானமாக்கிக்கொண்டு இவ்விடமே இறந்தார். கி. பி. 1526௵ பேபருடைய சுவாதீனமாகி, பிறகு உமையூனுக்குச் சுவாதீனமானாலும், (Shire Shah) சர்ஷா காலத்தில் உமையூனிட மிருந்து பிடுங்கிக்கொள்ளப்பட்டும், கி. பி. 1559௵ ஆக்பர் காலத்தில் மறுபடியும் சுவாதீனமாகி, அவரால் புதுப்பட்டணமாகக் கட்டப்பட்டும், இப்போது இங்கிருக்கும் சிங்காரமான பெரிய கோட்டையையும் கட்டி வைத்தார். கி. பி. 1658௵ அரங்குஜிப் காலத்தில் டில்லிப் பட்டணத்துக்கு மோகல் இராஜாங்க தலைமை ஸ்தானம் போகும் வரையில், இந்த ஆக்ரா பட்டணமே பிரதான பட்டணமாகவிருந்தது. கி. பி. 1761௵ பரதபூர் இராஜாவின் வசமாகி 1774௵ சாஹாலம் மந்திரியாகிய நஜிப்கானால் பிடித்துக் கொள்ளப்பட்டது. இந்த நஜிப்கான் இறந்த பிறகு, மஹாராஷ்டிர இராஜாவாகிய மாதாஜிசிந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டு அவர் தமையனார் குமாரர் டவுல்தராவ் சிந்தியா காலத்தில் (Perron) பேரன் என்னும் பிரான்சு யாத்திரைக்காரன்செய்த சேனை உதவிக்காகக் கொடுக்கப்பட்டது. 1830௵ சிந்தியாவுக்கும் ஈஸ்டிந்தியா கம்பெனியாருக்கும் சண்டைநடந்தபோது தானிய தலைகர்த்தனாகிய (Hessing) ஈசங் என்பவனால் தடுக்கப்பட்டுக் கடைசியாக ஜெனரல் லேக்கினால் பிடிக்கப்பட்டு இங்கிலீஷ் கவர்ன்மெண்டோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது.

THE PRESENT STATE OF AGRA.

ஆக்ராவின் தற்கால ஸ்திதி.

இப்போது இந்த ஆக்ரா பட்டணமானது யமுனை நதியின் வடகரையிற் காணும் பிரகாசம் பொருந்திய பட்டணமாக விருக்கிறது. இவ்விடத்தில் யமுனை நதியானது அரைமைல் அகலமுள்ளதாயும், கிழக்கிந்திய புகை வண்டிப்போக்குவரவு செய்யப் பெரிய பாலமும் உடையதாயுமிருக்கிறது. இந்தப் பாலத்தில் அடி அடுக்கில் புகை வண்டிகள் போக்குவரவு செய்யவும், மேலடுக்கில் ஜனங்கள் நடக்கவும், குதிரை முதலான வண்டிகள் போக்குவரவு செய்யவும் வசதியாகவும் கட்டியிருக்கிறார்கள். இந்தப் பாலத்தைத் தொடர்ந்து 80 அடி அகலமும், 2 மைல் நீளமுமான ஒரு ரோட்டு 1838௵ பஞ்சகாலத்துப் பஞ்சைகளாற் போடப்பட்டிருக்கிறது. இந்த ரோட்டானது சுங்கச்சாவடிமுதல் டாஜ்மஹால் வரையில் நேராகப் போகிறது. அந்த ரோட்டுகளுக்கு ஒருவிதமான கற்கள் போட்டுக் கெட்டித்திருப்பதில் பலகைக்கற்களால் மூடப்பட்டவைகளைப்போல் பலமாகவும், பசந்தாகவும், பிரகாசமாகவுமிருக்கின்றன. யமுனை நதிக்கரையில் ஸ்நான பானங்கள் செய்வோர்க்கு வசதியாக அநேக படிக்கட்டுகளைத் தருமவான்கள் ஏராளமான பொருளைச் செலவுசெய்து கட்டியிருக்கிறார்கள். அந்த யமுனைக் கரையோரத்திலிருக்கும் பழஞ்சுவர்களைப் பார்வையிட்டால், நான்கு மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் அதாவது பதினாறு சதுரமைல் விஸ்தீரணம் வரையில இந்த ஆக்ரா பட்டணம் ஒரு காலத்தில் பரவியிருந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இப்போது பாதிப்பாகந்தான் பட்டணமாகத் தோன்றுகிறது. ஆக்ரா கோட்டையிலிருந்து வடமேற்குப் பாகமாக நகரத்துக்குள் ஒரு அழகும், அகலமுமுள்ள ரோட்டுப் போடப்பட்டிருக்கிறது. இந்த ரோட்டின் இருபக்கங்களிலிருக்கும் வீடுகளும் மாட மாளிகை கூட கோபுரங்களும் ஏழடுக்குகளுக்கு மேலான பல அடுக்குகளுள்ளதாயும், சிங்காரமான சித்திராலங்காரமான சிற்பசாஸ்திர சம்மதமாயும் கட்டப்பட்டிருக்கிறதன்றியில், இந்தக் கட்டடங்கள் யாவும் பட்டிபூர் சிக்ரி மலைகளில் வெட்டியெடுக்கப்பட்ட பெரிய கற்களில் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் இந்தக் கற்பலகைகளால் இந்த ரோட்டு முழுதும் பரப்பப்பட்டுப் பார்ப்பதற்கும், நடப்பதற்கும், சவாரிசெய்வதற்கும்

திருப்திகரமாக இருக்கிறது. இவைகளன்றியில் சில்லரை விதிகளனந்தம். இந்த ஆக்ரா பட்டணமானது பருத்தி, உப்பு, சித்திரக் கற்கள், சரிகை, பாதரக்ஷை, வெடியுப்பு, சமுக்காளம் முதலான வர்த்தகப் பொருள்களுக்குப் பெயர் பெற்றதாகையால், வர்த்தகம் ஏராளமாக நடக்கின்றது. உணவுக்கு வேண்டிய சகல பதார்த்தங்களும் அதிக நயமாகக் கிடைக்கின்றன. இப்படிப் பல பதார்த்தங்கள் இருக்கினும், இந்தப் பட்டணத்தில் கட்டப்பட்டிருக்கும் சில கட்டடங்கள் சிற்பலங்கார சாஸ்திர சம்மதமாயும், இந்தப் பூலோகத்தில் அதிசயிக்கத்தக்க ஏழு அபூர்வங்களில் ஒன்றாகிய (Taj Mahal) டாஜ் மஹால் என்னும் ஆச்சரியமான கட்டடமும், மகா தரும சீலராகிய ஆக்பர் சக்கரவர்த்தியின் சமாதியும் இன்னும் பல சிறந்த கட்டடங்களு மிருப்பதால் சீர்திருத்தமறிந்த ஜனங்கள் உலகத்தின் பலபாகங்களிலிருந்து இவ்விடம் வந்து பார்த்து அதிசயப்பட்டு ஆநந்தமடைவதை யனுசரித்து நாமும் இந்த ஆக்ராவுக்கு வந்த (1887௵ ஜனவரிமீ 15௳) கொஞ்சம் மழை பெய்தமையால், வெளியில் தலையைக் காட்டக்கூடவில்லை. மேலும் கோயமுத்தூர் முதலானவிடங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய கடிதங்களை ஆக்ராவுக்கு அனுப்பும்படி கயா போஸ்டுமாஸ்டரிடம் சொன்னபடி, சில கடிதங்கள் வந்திருந்தாலும், அவைகளைப் போய் வாங்கிவர வேலைக்காரனும் அகப்படவில்லை. கோச்சு வண்டியும் கிடைக்கவில்லை. ஆகவே, சற்று நேரமிருந்து ஒரு எக்கா வண்டியிலேறி (Agra City Post Office) ஆக்ரா நகர தபாலாபீசுக்குப் போய்க் கேட்டதில், கன்டோன்மெண்டு தபாலாபீசுக்குப் போய்க் கேட்கக் கோயமுத்தூரிலிருந்து போட்ட நமது கடிதங்களும், நியூஸ் பேபர்களும், கல்கத்தா, கயா முதலான விடங்களுக்குப் போய்ச் சுற்றிப் பார்த்து இங்கு வந்து கிடந்தன. அவைகளில் நமது இஷ்டர் ஒருவர் கடிதத்தில் ம-ள-ள-ஸ்ரீ நாராயணசாமி நாயடவர்களுடைய அருமையான மைத்துனர் ம-ள-ள-ஸ்ரீ இராமசாமி நாயடவர்களுடைய மரணத்தைக்காண அதிக வியாகூலத்துக்குட்பட்டு, தங்குமிடம் வந்து, அந்த விசனத்தினால் எங்கும்போய் எவரையும் பார்க்க மனமெழும்பாமலிருந்து, அன்று சில கடிதங்களை யெழுதிக் காலம் போக்கி அன்று இராத்திரி உறங்கினேம். 1887௵ ஜனவரிமீ 15௳ காலை யமுனை நதியில் ஸ்நானம் செய்து, பழயசாதத்தைச் சாப்பிடக் கூடலூர் சிநேகிதர் ம-ள-ள-ஸ்ரீ தெய்வநாயக முதலியாரவர்களும், சென்னை

ஸ்ரீ பார்த்தசாரதி நாயடவர்களும் நாம் தங்கியிருந்த விடம் வந்து சந்தோஷமுற்றுத் தைரியங்கொண்டு, இரண்டு கோச்சு வண்டிகளுக்கு வண்டி ஒன்றுக்கு தினம் 4 ரூபாய் விதமாக வாடகைபேசி வேடிக்கைக் கட்டடங்களைக் காணப் புறப்பட்டோம்.

THE WONDERS OF THE AGRA.

ஆக்ராவில் பார்க்கத்தக்க அதிசயங்கள்.

1. The Tomb of Akbar near Secundra:—ஆக்பர் பாதுஷா அவர்களுடைய சமாதி.—இது ஆக்ராபட்டணத்துக்கு ஏழுமைல் தூரத்திலிருக்கிற சிகந்தர் என்னும் கிராமத்தினருகில் கால்மைல் சதுரங்கத்தில் கட்டப்பட்ட பிரம்மாண்டமான கட்டிடம். இந்தக் கட்டிடம் 300 சதுர அடி அகலமும், 100அடி உயரமும் வாசற்படிகளிற் பெரிய இரதங்கள் போய் வரக்கூடிய விசால முடையவைகளாயும், குரான் முதலானவைகளிலிருந்து சில முதுமொழிகளை வெள்ளை ஸ்படிகக் கற்களில் பூங்கொடி சித்திராலங்காரமாகச் செதுக்கிக் கட்டப்பட்டிருக்கிறது. உட்கட்டிடம் வெள்ளை ஸ்படிக்கற்களினாலும் பட்டிபூர் சிக்கிரிகற்களினாலும் அற்புதமாகக்கட்டப்பட்டு, அதற்குள் ஆக்பர் பாதுஷா அவர்களுடைய சமாதியை வெள்ளை ஸ்படிகக் கற்களால் விசித்திர விநோதமாகக் கட்டப்பட்டு, முகமேடையில், "May Your Glory Shine" "நினது மகிமை பிரகாசிப்பதாக" என்னும் பொருள்பட அரபிபாஷையில் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த சமாதி யிருக்கும்படியான இடம் குடைந்தெடுத்த குகையில் கட்டியதைப்போலிருப்பதால், ஆங்கிலேயர் முதலான அன்னிய தேசத்தார் அதைப் பார்க்காமல், அந்தச் சமாதி இருக்கும் கட்டடத்தின் மேல்மாடியில் அதே மாதிரியான சமாதி ஸ்படிகக் கற்களால் கட்டப்பட்டிருப்பதால், அதை அனைவரும் யாதொரு சிபார்சில்லாமல் தாராளமாகப் போய்ப் பார்க்கலாம். இந்த ஆக்பர் பாதுஷா அவர்களுடைய சமாதியைச்சுற்றிலும் அவரது பந்து மித்திரர்களுடைய சமாதிகள் பலவிருக்கின்றன. இந்தச்சமாதிகள் யாவையும் அடக்கிக்கொண்டிருக்கும் கட்டடமும் அகலத்திலும், உயரத்திலும், பிரம்மாண்டமானதாயும், அதிசயமான வேலைப்பாடுள்ளதாயு மிருக்கிறது. இந்தக் கட்டடத்தில் இந்துக்களும், மகமதியரும் ஆக்பர் பாதுஷா அவர்களுடைய

தருமகுணங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது புத்தி புளகாங்கிதங்கொண்டு பரமேசுவரனைத் தியானிக்கச் செய்கின்றது. இந்த எழுச்சியை அடக்க எம்மால் முடியாமையால், அவ்விடமே பரமேசுவரனைப் பிரார்த்தித்தோம். அந்தப் பிரார்த்தனை இது:—

ஓ ஆனந்தவாருதியே! அக்பர் பாதுஷாவின் அன்புமிகுந்த ஆக்ரா பட்டணத்தை மிதிக்கவும், அவரது ஆச்சரியமான சமாதியைக் கண்டு கையால் தொடவும் இன்று பாக்கியம் பெற்றோம். இந்த அக்பர் பாதுஷாவானவர் மகா கொடுங்கோலனாகிய தாயர்லேனுடைய சந்ததியாக விருந்தும், சுவாமி பக்தி, சத்தியம், சாந்தம், தயை, தருமம் முதலானவைகளைப் பிருதுக்கொடிகளாகக்கொண்டு மன்னுயிரைத் தன்னுயிரைப் போல் பாவித்துக் குடிகளுடைய கஷ்டநிஷ்டூரங்களை நீக்குவதிலேயே தமது காலத்தைக் கழித்து, இந்தவிடத்தில் சமாதியானதன்றியில், மதவிஷயத்தில் தன் மதமென்றும், பிறர் மதமென்றும் பேதம் பாராட்டாமலும், சமரசவேத சன்மார்க்க சமயத்தை யனுசரித்து சகலருடைய பூஜ்யதைக்கும் பாத்திரரான புகழுடம்பெடுத்த விடமிதுவன்றோ! இந்தப் புகழுடம்பினருடைய பிரதாபம் பிரபஞ்சமெங்கும் பரவிப் பிரகாசிப்பதைப்போல, இன்று இந்தப் பரிசுத்தமான விடத்தில் பிரத்தியக்ஷமாக எமக்குப் பிரகாசிக்கின்றது. ஆகவே, இந்தப் புகழுடம்பினரையும், இந்தப் புகழுடம்பை அடக்கஞ் செய்யப்பட்ட விடத்தையும் ஆசிர்வதிப்பாயாக. எமக்கு இந்தப் புகழுடம்பினருடைய குணச்சிறப்புகளையும், முக்கியமாக மதவிஷயத்தில் இவருக்கிருந்த சமரசஞானமும் உண்டாகும்படி பிரசாதித்துச் சுகமாக வாழச்செய்வாயாக. ஓம் தத் சத்.

இந்தக் கட்டிடத்தைப் பார்த்துக்கொண்டு நகரத்திலிருக்கும் (ஆக்ராவின்) அழகிய கோட்டையைப் பார்க்க வந்தோம்.

Agra Fort—ஆக்ரா கோட்டை—இந்த ஆக்ரா கோட்டையானது பதினாறாம் நூற்றாண்டின் கடைசியில், அக்பர் பாதுஷா அவர்களால் பட்டிபூர் சிக்கிரிமலையில் வெட்டியெடுக்கப்பட்ட ஒருவித செங்கற்களாற் கட்டப்பட்ட அழகிய பெரிய கட்டடம். இது ஐந்து பர்லாங்கு நீளமுள்ளதாயும், அகலத்தில் இரண்டு பர்லாங்கும் ஆக ஒரு மைல் விஸ்தீரணமுள்ளதாக 40 அடிகள் உயரமுள்ள சுவர்களுள்ளதாக விருக்கிறது.

கி. பி. 1803௵ லார்டுலேக் என்பவருடைய சேனைகள் இவ்விடத்தில் தங்குவதற்கு அனுகூலமாக விருந்ததன்றியில், இருபது பவுண்டுகுண்டு பீரங்கிகளைவைத்துச்சுடும்படியான வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. அப்போது ஆறாயிரம் மஹாராஷ்டிரர் சேனைகளையும் இந்தக் கோட்டையிற் பிடித்து வைக்கவும், 26,40,000 இலக்ஷம் ரூபாய் பொக்கிஷமாக வைக்க வசதியுமிருந்தது. இந்தக் கோட்டைக்குள் (Shajehan Palace) சாஜிஹான் அரண்மனை, (Moteo Musjid) முத்து மஸ்ஜீது என்னும் கட்டடங்கள் சிறந்தவை. இதிலிருக்கும் முத்துமஸ்ஜிதானது கிழமேலாக 240 அடிகளும், தென் வடலாக 190 அடிகளுமுடைய முழு ஸ்படிகக் கற்களினால் ஆச்சரியகரமானதாகக் கட்டப்பட்டிருக்கிறது.

இவைகளில் இந்த சாஜிகான் அரண்மனையானது சிறியதாயும், இருபக்கங்களில் ஸ்படிகக் கற்களினாற் கட்டப்பட்ட அறைகளாலும், அடிப்பாகம் வெளளை கறுப்பு சதுரம் தீர்த்த ஸ்படிகக் கற்களாற் பரவப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடத்தின் சுவர்களிலும், மூலைகளிலும் தங்க முலாமில் பூங்கொடி வேலைகள் செய்யப்பட்டிருக்கிறதன்றியில், இந்த அரண்மனையின் உட்பாகத்தில் சாஜிஹானுடைய மனைவியார் தங்கியிருக்கும் அழகிய சிறிய அறை இருக்கின்றது. இந்தக் கட்டடத்தையும், அருகிலிருக்கும் தோட்டத்தையும் பார்க்க பிரமிப்பையும்கொடுத்து இப்படிப்பட்ட கட்டடமும் உலகத்திலுண்டோவென்று வியப்பையும் கொடுக்கின்றது. இவ்விடத்தில் ஸ்படிகக் கல்நிரையிற் பார்த்தால் யமுனை நதி தெரிகின்றது. இந்தவிடத்தில்தான் சாஜிஹான் சக்கிரவர்த்தி தனது குமாரனாகிய அரங்கஜீபுவால் பிடிக்கப்பட்டு இறந்தது. இந்த அரண்மனைக்கு எதிரில் நாற்பது அடி சுற்றளவுள்ள ஸ்நான ஸ்படிகக் கல்லிருந்ததாக (Tavernier) திராவினர் என்னும் யாத்திரைக்காரர் சொல்லியிருக்கிறார். இந்த அரண்மனையில் சாஜிஹான் உட்காரும் இடத்திலிருந்த கமான் வளைவுகளுக்கு இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் சுவர்கள் வைத்து ஜன்னல்களாகவும் வெடி மருந்து முதலானவைகளை வைக்கும் கிடங்குகளாக்கிவிட்டார்கள். இப்போது ஆக்ரா டிஸ்டிரிக்டு கஜானாதிரவியத்தையும் இவ்விடம்தான் வைக்கப்பட்டிருக்கிறது.

Motoo Musjuid--முத்து மஸ்ஜிது—இதன் வெளிப்பக்கத்துச் சுவர்கள் பட்டிப்பூர் மலையின் செங்கற்களாற் கட்டப்

பட்டும் உட்பாகமெல்லாம் வெள்ளை ஸ்படிகக் கற்களாற் கட்டப்பட்டுமிருக்கிறது. கட்டடத்தின்வாசலுக்கு இருபுறங்களிலும் தண்ணீர்த் தடாகங்கள் கட்டப்பட்டு, வாசற் பாகத்துச் சிலபல படிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடமிருந்து உள்ளே பிரவேசித்தால், பிரம்மாண்டமான கல் ஸ்தம்பங்களால் கட்டிடம் சப்பிரமாகக் காண்கின்றது. கட்டடத்தின்மேல் ஹிந்து தேவாலயங்களில் கட்டப்பட்டிருக்கிறதைப்போல, வாழைப்பூ வடிவமான கோபுரங்களும், அவற்றின்மேல் தங்கமுலாம் பூசிய கலசங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டடம் பார்ப்பவர் பார்வைக்கு ஆநந்தத்தைக் கொடாமல் போகாது. இதைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு சுமார் இரண்டு மைல் தூரம் வருவோமாகிற் பிரபஞ்சத்திற் புகழ்பெற்ற டாஜ்மஹால் தெரிகிறது.

Taj Mahal—டாஜ் மஹால்—இந்த ஆச்சரியமான கட்டடம் யமுனா நதியின் வடகரையில் தேவேந்திர விமான மந்திரத்தைப்போற் கட்டப்பட்டிருக்கிறது. இதன் வெளிப்பாகத்துச் சுவர்கள் பத்துப்பதினைந்து அடி அகலமுள்ள பட்டிபூர் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது இந்தக் கட்டடமானது கிழமேல் 964 அடியும், தென் வடல் 329 அடியுமுள்ள விஸ்தீரணமுள்ளது. இந்தக் கட்டடத்தை நகர்ப்புறத்திலிருந்து பார்ப்பதிலும், யமுனா நதியிலிருந்து பார்ப்பவருக்கு ஆச்சரியமான தோற்றத்தைக் கொடுக்காமற் போகாது. இந்தக் கட்டடப் பிராகாரத்தின் உட்பாகத்தின் நான்கு மூலைகளிலும் பொன்முலாம் பூசிய மூன்று கலசங்களோடும், பட்டிபூர் கற்களில் வெள்ளை ஸ்படிகக் கறகளை நடைழத்துச் சித்திராலங்காரமாகக் கட்டப்பட்ட மஸ்ஜிதுகளிருக்கின்றன. இந்த நான்கு மஸ்ஜிதுகளில் மேற்குப்பாகத்திலிருக்கும் கட்டடத்தை மாத்திரம் இப்போது மஸ்ஜிதாக உபயோகபபடுத்தி வருகிறதாகத் தோற்றுகின்றது. இந்தக் கட்டடங்களுக்கு நடுநாயகமாக விருக்கும் டாஜ்மஹாலானது யமுனா நதியை நோக்கிய பாவனையாகப் பிராகாரத்தின் வடபாகத்திற் பிரகாசிக்கிறது. இந்தக் கட்டடத்தின் பின் பாகத்திலிருக்கும் பிரம்மாண்டமான ஸ்படிகப் பாடசாலைகளும், இந்த உலகத்தில் ஆச்சரியமான பலவித புஷ்பச்செடிகளும், இலைகளும், செடிகளும் வைத்துப் பயிர் செய்யப்பட்டும், உலகத்துக்கே உசிதமான உத்தியானவனங்களும், இடையில் நக்ஷத்திரங்களைப்போல் பிரகாசிக்கும் விளக்குகளோடும், பொன் வெள்ளி மீன்களோடும் கூடிய தாம

லைத் தடாகமும் பிரகாசிக்கின்றது. இந்தத் தடாகத்தின் முகப்பிலேயிருக்கும் ஸ்படிகக் கற்படிகளில் ஏறிப்போவோமாகில், 400 அடி சதுரமும், 60 அடி உயரமுமான ஆச்சரிய ஸ்படிகச் சதுரங்கம் கட்டப்பட்டு, அதில் கறுப்பு ஸ்படிகங்களில் சித்திராலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சதுரத்தின் நான்கு மூலைகளில் 100 அடி உயரமுள்ள சித்திர ஒலி ஸ்படிகக் கற்களால் மினரெட்ஸ்களென்னும் நீண்ட கோபுரங்கள் கட்டப்பட்டு,மேல் உச்சியில் எட்டு ஸ்படிகக் கம்பங்களாற் கட்டப்பட்ட வாழைப்பூ வகையான கோபுரங்களும், அவற்றின்மேல் பொன்முலாமிட்ட கலசங்களும் பிரகாசிக்கின்றன.இந்த மினரிட்ஸ் கோபுரங்களுக்குள் வளைவுப்படிகளை வைத்தும்,போதுமான வெளிச்சமும் விடப்பட்டும் இருப்பதனால், பயமில்லாமல் மேலே ஏறிப் பார்க்கலாம். ஏறிப்பார்ப்பவர்களுக்கு யமுனையின்கம்பீரமும், ஆக்ரா பட்டணத்தின் அமைப்பையும்,கோட்டையின் கம்பீரத்தையும், சுற்றுப்பக்கங்களின் காக்ஷியையும் கண்டு ஆநந்தமடையலாம். இந்த நான்கு மினரிட்ஸ் கோபுரங்களுக்கு இடையில் போதுமான இடத்தைவிட்டு, மத்தியில்மஹால் என்னும் கட்டடத்தை 70 அடி சுற்றளவுள்ளதாயும்,260அடி உயரமுள்ளதாயும், இரண்டு பொன்முலாம் பூசி ஒன்றின்மேலொன்றாக வைத்து அதற்குமேல் மூன்றாம்பிறைச் சந்திரனைப்போன்ற கலசத்தோடும் சிற்பசாஸ்திரமே சிரித்துச் சபாஷ் என்று சொல்லும்படியான ஸ்படிகக்கற்களால் ஒட்டுத்தெரியாமலும், பெரும் ஸ்படிகப்பருவதத்தில் பலவித புஷ்பக்கொடிகளோடு குடைந்தெடுத்தாற்போல விசுவகர்மாவே வந்து கட்டிவைத்ததைப்போலிருக்கிறது. அடிப்பாகம் எட்டுக்கோண சதுரமாகவும், சதுரம் ஒன்று 24 அடி நீளமாகவும், ஸ்படிகக் கற்களாலேயே கட்டப்பட்டிருக்கிறது. இதற்குள் சாஜிஹான் பாதுஷாவுடையவும், அவர் அன்புக்குகந்த மனைவியாகிய அர்ஜிமாண்டு பானு என்றும் மும்முடாஜி என்றும், மும்முடாஜி ஜேம்மாணி என்றும் பலவித பெயர்களாற் சொல்லப்பட்ட அவர் மனைவியாருடையவும் தேகங்களை அடக்கம் செய்து, அபூர்வமான ஒரே ஸ்படிகக்கல்லால் சமாதிகளாகக் கட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச்சமாதிக் கற்களின்பேரிற் செய்திருக்கிற சித்திரச் சிற்பலங்காரத்தைச்சொல்லி வர்ணிக்க நம்மால் முடியாது. இந்தச்சித்திரப் பூக்கொடிகள் பார்வைக்குக் கேவலம் சித்திரங்களாகத் தோன்றினும், அவைகள் குரான்முதலா

வைகளிலிருந்தெழுதப்பட்ட மூதமொழிகளே. சிற்பியின் சாமர்த்தியத்தினால் பூக்கொடிகளைப்போல் செதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. இந்த இரண்டு சமாதிகளில் சாஜிஹான் பாது ஷாவின் சமாதி சற்று உயர்ந்துஞ் சற்றுக்குறைந்த சித்திர வேலைப்பாடுள்ளதாகவு மிருக்கிறது. இந்தச் சமாதிகளுக்குச் சுற்றிலும் ஸ்படிகக்கற்களாற் குடைந்தெடுத்துப் படல்களைப் போற் செய்யப்பட்ட கிராதிகளால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குமேல் ஒரு சிரகத்தைப்போன்ற ஸ்படிக புஷ்பக்கொடி மறைவுபோலிருக்கிறது. அதாவது, பரலோக புஷ்பக்கொடி கிரஹவாசம்செய்யும் பாவனையென்று சொல்லலாம். இந்தச்சமாதிகளும், தூபிகளும், மற்றுமுள்ள கட்டடங்களும் பல்லாயிரம் ஸ்படிகக்கற்களினால் கட்டப்பட்டிருந்தாலும், அந்தக்கற்கள் துண்டித்த விதமும், குடைந்தெடுத்த விதமும், ஒட்டிய விதமும் தெரியாமல், பூவோடு பூவும், காயோடு காயும், கனியோடு கனியும், இலையோடு இலையும், கொடியோடு கொடியும் பொருந்தும்படி எப்படிச் செய்தார்களோ எமது புத்திக்கு எட்டவில்லை. இந்தக் கட்டடத்தை சாஜிஹான் 1648வருஷம் தமது அன்புள்ள மனைவியாகிய டாஜி அவர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்து, இருபத்திரண்டு வருஷகாலங்களாக, 2,000,000 இருபது லக்ஷம் ஜனங்களைக்கொண்டு, 2,000,000 பொன்னைச் செலவழித்துத் தாமே தமது மற்றெல்லா விசேஷ வேலைகளையும் விட்டொழித்து, அருகிலிருந்து கட்டி வைத்ததாக (Tavernier) டிவர்னியர் என்னும் பெரிய யாத்திரைக்காரர் பார்த்ததாக தமது யாத்திரைக்கிரந்தத்தில் சொல்லியிருக்கிறார். இந்த ஆச்சரியமான கட்டடத்தின் வெண்மையையும், வேலைத்திறத்தையும், பரிசுத்தத்தையும், சுகத்தையும் பிரத்தியக்ஷத்தில் கண்டவர்களுக்கன்றி இந்தச்சிறுகிரந்தத்திற் சொல்ல நம்மாலாகாது. இந்தக் கட்டிடம் கட்டத் துருக்கி, கனிஸ்தாந்திகோபில் முதலான விடங்களிலிருந்து 800 பிளான்கள் (நக்ஷா) வந்தபோதிலும், இத்தேசத்தில் தயாரான பிளானைக்கொண்டே இத்தேசத்து வேலைக்காரர்களால் கட்டப்பட்டதாகத் தெரியவருகிறபடியால், இத்தேசத்து இந்துக்களும் மகமதியரும் இத்தக்கட்டடத்தைப் போய்ப்பார்த்துத் தம் முன்னோருடைய வேலைத்திறத்தைக் கண்டு பெருமைபடையவேண்டுமே யொழிய எம்மால் எழுதிமுடியாது.

ஆக்ராவுக்கு வடகிழக்குப்பாகத்தில் அதாவது யமுனை நதிக்கு அக்கரைக்கரையல (Rawa Bhug) இராமபாக் என்ற

சிங்காரவனமிருக்கிறது. இது ஒருகாலத்தில் வெகு இரமணியமான தோட்டமாகவிருந்து, இப்போது சீர்கெட்டுவருகிறது. இந்தத் தோட்டத்திலிருந்து பாதுஷாவின் கோஷா ஸ்திரீகள் யமுனையில் ஸ்நானம்செய்யப் பலகைக்கற்களால் நிலவறைகள் கட்டப்பட்டு, சிலபாகங்களில் இடிந்துகிடக்கின்றன. இந்தத் தோட்டத்துக்குப் போவோர் ஆற்றுப்பாலத்துக்கு வண்டி ஒன்றுக்கு 8 அணு சுங்கம் கொடுக்கவேண்டும். இந்தப்பாகத்தைப் போய்ப் பார்த்துவருகையில், வழியில் நமது சிநேகிதர் ஸ்ரீ ஹானரபில் சுப்பிரமணியம் ஐயரவர்களையும், ஸ்ரீ என். சுப்பிரமணியம் ஐயரவர்களையும் கண்டு கைகுலுக்கி ஆநந்தித்தோம். கோட்டைக்குச் சமீபத்தில் (Jama Musjid) ஜம்மாமஸ்ஜீது என்னும் பெரிய பள்ளிவாசலிருக்கிறது. இது சற்றேறக்குறையக் கோட்டைக்குள்ளிருக்கும் மஸ்ஜீதைப் போலவே இருக்கின்றது. (Mausolemn Edmad-oo-dowla) முசலிம் இட்மட்-உட்-டவுலா என்பதும் ஒரு சிங்காரமான கட்டடம். இந்தக் கட்டிடத்தை சாஜிஹானுடைய மந்திரி கட்டினதாகச் சொல்லுகிறார்கள். இப்போது இந்தக் கட்டடத்தின் சிலபாகங்கள் இடிந்துகிடக்கின்றன. பட்டிபூர் சிக்காரி என்ற ஒருகிராமம் ஆக்ராவுக்கு 20 மைல் தூரத்திலிருக்கிறது. இது ஆக்பர் பாதுஷாவுக்குப் பிரியமான ஸ்தானமாக விருந்தபடியால், இவ்விடத்திலும் ஒரு அழகான மஸ்ஜீதும், அற்புத சிற்பலங்காரத்தோடு கட்டிவைத்திருக்கிற தன்றியில், இந்த மலையின்மேல் தமது மூன்று மனைவிகளும் வசிக்கும்படி கோபுரவடிவான அலங்கார அரண்மனைகள் கட்டிவைத்திருக்கின்றனர். இங்கே கட்டிவைக்கப்பட்டிருக்கும் மஸ்ஜீதின் தெற்குவாசல் வழியிலிருந்து கூடி கட்டடத்தைப் பார்ப்பவர்களுக்கு, இவ்வளவு அழகான மஸ்ஜீது இந்த இந்துதேசத்தில் எங்கும் கிடையாதென்றே சொல்லவேண்டிவரும். இந்த இடத்திலிருக்கும் பஞ்சமஹால் (Panch Mahal) அதாவது ஐந்தடுக்கு மாடி மந்திரம் என்னும் கட்டிடத்தையும் (Hyde Seek Palace) ஒளிந்துக்கொண்டவரைக் கண்டுபிடிக்கும் அரண்மனையையும் முக்கியமாகப் பார்க்கவேண்டும். இதில் சிற்பவேலைகள் சிங்கார பூஷணங்களோடு சிரித்துச்சந்தோஷத்தை யடையச்செய்கின்றன. இவைகளன்றியில் சில்லரைக் கட்டடங்கள் சிலவிருக்கின்றன. இங்கிலீஷ் கவர்ன்மெண்டு ஸ்தாபிதமான பிறகு தருமகுணமுடைய இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் டாஜ்மஹால், சிகண்டர், ஆக்பர் சமாதி கட்டடம்,

பட்டிப்பூர் அரண்மனைமுதலானவைகளுக்குத் தக்க ரிபேர்களை செய்வித்துப்பாதுகாத்துவருவதன்றியில், இக்கட்டடங்களைப் போய்ப்பார்ப்பவர்களுக்கு யாதொரு பணச்செலவு வைக்காமற் சகலரும் போய்ப்பார்த்துச் சந்தோஷமடையச் சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சில பக்கிரிகள் டாஜ் மஹால் முதலான சில விசேஷ கட்டடங்களிடத்தில் பாத்தியாவுக்கென்று இரகசியமாக இனாம்கொடுக்கச்சொல்லிக் கேட்கிறார்கள்.

இங்கிலீஷ் கவர்ன்மெண்டு ஸ்தாபிதமான பிறகு சில கட்டடங்கள் இவ்விடம் கட்டப்பட்டன. அவைகளில் பார்க்கத்தக்கவை:—(Metcalfe Testimonial) மெட்கஸ் ஞாபகச் சின்ன கட்டிடம், (Agra College) ஆக்ரா கலாசாலை, (Government House) லெப்டினெண்டு கவர்னர் தங்குமிடம், (Agra Bank) ஆக்ரா பாங்கி என்னும் திரவிய சேகரசாலை, (Agra Church) ஆக்ரா கிறிஸ்து தேவாலயம், (The Orphan Institution) அனாதரக்ஷணசாலை, என்பவைகள் பார்க்கத் தகுந்தவைகள். இவைகளில் மெட்காப் ஞாபகசாலை நடன காலக்ஷேபத்துக்குப் பொருந்தும்படி கட்டப்பட்டிருக்கிறது. கோட்டைக்கு ஒன்றரை மைல் தூரத்தில் பட்டாளம் தங்குமிடம் இருக்கிறது.

இந்தப் பட்டாளத்திலும் நகரத்திலும் சுமார் 16,86,62 ஜனங்கள் வசிக்கிறதாகத் தெரியவருகிறது. இந்த ஆக்ரா பட்டணத்தின் கடைவீதி வெகுவிசாலமானதாயும், வீதிமுழுதும் பலகைக் கற்களால் பரவப்பட்டதாயும், பக்கங்களிலிருக்கும் கடைகளும் கட்டடங்களும் முழுக்கற்களால் பல அடுக்குகளுடன் கட்டப்பட்டு விலையுயர்ந்த பொருள்களை வைத்து விற்கப்பட்டும் வருகிறதைப் பார்க்கப் பசந்தாகவிருக்கிறது. இந்தக் கடைவீதிகளிலிருக்கும் மெத்தை மாடிகளிலும் வடதேசத்து வழக்கப் பிரகாரம் வெய்யோனைப்போல வெளுத்த வேசி தாசிகள் சித்திரப்பூம்பட்டாடைகளைக் கட்டிச் சிங்காரித்துக்கொண்டு வழிப்போக்கர் பார்க்கும்போது சிரித்து வருவதன்றியில், இந்த ஆக்ராவில் தங்குவதற்கு ஜாகைகளைத் தயார் செய்து கொடுக்கும் ஏஜண்டுகளும் சிலர் துர்நடத்தைகளை யனுசரிப்பவர்களாக விருக்கின்றனர். மேலும் நாம் தங்குமிடங்களிற் பலவித தட்டுமுட்டு பெட்டி பொம்மைப் படங்களைக் கொண்டுவந்து மிதமிஞ்சிய விலைகளைச் சொல்லித் துட்

டைப் பிடுங்கப் பார்க்கிறார்கள். ஆகவே வாலிப யாத்திரைக்காரர் ஜாக்கிரதையாக விருத்தல் நலம். பம்பாய்ப்பட்டணத்தைப்பார்க்கிலும் பலவிதத்திலும் சிறந்த ஆக்ரா பட்டணமானது யமுனை நதியை ஒரு பர்லாங்கு தூரத்தில் ஒடப்பெற்றிருப்பதனால் இது நிலவளத்தோடு நீர்வளம் பொருந்தி இரமணியமாக விருக்கிறது. யமுனாநதிக்கு வடகரையிலிருக்கும் பட்டிஸா என்னும் இடத்தில் வருஷாவருஷம் கூடும் பெருஞ்சந்தையில் கணக்கற்ற கால்நடைகளும், குதிரைகளும், ஒட்டகங்களும் வந்து வியாபாரம் நடக்கிறபடியால் அவைகளுக்காக 15,000 ஜனங்கள் வந்துகூடுகிறார்கள். இந்த ஆக்ராவில் பெரிய இந்திய பெனின்சுலா, ஈஸ்டு இந்தியா பம்பாய், பரோடா, சென்டிரல் இந்தியா ஆக்ரா டெல்லி கார்டு ரெயில் வண்டிகளின் ரோட்டுகள் கூடுகின்றன. துண்டுலா ஸ்டேஷனுக்கு 15 மைல்கள் தூரத்திலும் பம்பாயிக்கு 839 மைல்கள் தூரத்திலும் அலகாபாத்துக்கு 279 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. ஆக்ராவின் அதிசயங்களைப்பார்க்க விரும்புவோர் ஆக்ரா கோட்டைக்குப் போதலே நலம். சென்னையிலிருந்து ஆக்ரா கண்டோன்மெண்டுக்கு, 447 மைல்கள் தூரமும், மூன்றாவது வகுப்புக்கு ரூ. 21-3-3-ம்சார்ஜ் ஆகிறது. அதற்கு 400 கெஜங்கள் தூரத்தில் லாலா ராமகிருஷ்ணதாஸ் சரோகி என்பவரால் கட்டப்பட்ட அழகிய சத்திரமிருக்கிறது. இந்தப் பட்டணத்தில் நாங்கள் தங்கியிருந்தவிடத்திற்கு மூன்று தினங்கட்கு இரண்டு ரூபாய்வாடகைகொடுத்தோம். இடமும் கூடியவரையில் இலக்ஷணமாகவும் மனோகரமாகவும் இருந்தது.

GWALIOR.

குவாலியூர்.

ஆக்ராவுக்கு 65 மைல்கள் தூரத்தில் குவாலியூர் என்னும் சுதேச சமஸ்தான நகரமிருக்கிறது. இங்கு ஒரு மலைகரட்டின் மேல் ஒன்றரைமைல் நீளமும், 300 கஜ அகலமும் 40' அடிகள் உயரமுமுள்ள மலைக்கோட்டை இருக்கிறது. இந்தப் பெரியநகரத்தில் அநேக இந்துமதக்கோயில்களும் ஒரு ஜைனமதக் கோயிலும்இருக்கிறது. இவ்விடம் 60 அடிகள் சதுரமும் கிழக்கே 11 அடி கல்பிதுக்கி 30அடி கன உயரமுள்ள வாணியன் கோயிலிருக்கிறது. இது பத்தாம் நூற்றாண்டில் ஒரு திரவியஸ்தனான வாணியனாற் கட்டப்பட்டதாம். கி. பி. 1093வருத்

தில் ஜைநமதஸ்தரால் சாஸ்பாஹு கோவில்கட்டப்பட்டது. அதில் ஜைநருடைய ஆறுவது தீர்த்தங்காரராகிய பத்மநாபருடைய விக்கிரகம் இருக்கிறது. இந்தக் கோவில் இப்போது சீர்கெட்டு 100 அடிகள் நீளமும் 63 அடிகளுமுள்ள சுவர்கள் மாத்திரம்இருக்கின்றன.மேல்மெத்தைகளுள் மூன்றடுக்குகள் மாத்திரம் சுமாராக இருக்கின்றன. அவற்றின் மத்திய ஹால் 30 சதுர அடிகள் அகலமுள்ளதாக இருக்கின்றது. இந்தக்கோவிலைச் சுற்றிலும் அநேக சிற்பாலங்கார சித்திரப் பதுமைகள் ஏராளமாகக் கிடக்கின்றன. மேலும் இந்த குவாலியூரின் மலைகளில் அநேக ஜைநர் கோயில்களும் சித்திர வேலைகளும் இருக்கின்றன. சில பாறைக் கற்களில் 100 அடிகள் நீளம் 57 அடிகள் உயரமுள்ள குடைந்தெடுத்த குகைகளும் அவற்றில் ஆள் உயரமுள்ள ஆதிநாதர் விக்கிரகமும் 30 அடிகள் உயரமுள்ள நேமிநாதர்விக்கிரகமும் இருக்கிறது. இவைகள் கி. பி. 1441-74 வருஷங்களில் செய்விக்கப்பட்டன. இவைகளன்றியில் ஜெயினர்களுடைய சாசனக் கட்டிடங்களும் இருக்கின்றன.

இந்தக் குவாலியூரானது சிந்தியா சமஸ்தானாதிபதியைச் சார்ந்தது. இவர்மராட்டியர். இவருடைய ஆதிபிதா பாலோஜி பெஷ்வாவின் வேலைக்காரனான இராநோஜி சிந்தியா என்பவராம். இந்தக் குவாலியூர் ஸம்ஸ்தானம் 29000 சதுரமைல்கள் விஸ்தீரணமும், 1881ல் 3030743 குடிகளும், 125 லக்ஷம் ரூபாய் வருமானமுமுள்ளது. நாட்டில் பல தானியங்கள், பருத்திக்கொட்டை முத்து முதலானவைகள் ஏராளமாக விளைகின்றன. முக்கிய நகரமாகிய குவாலியூர் 6 மைல்கள் சுற்றளவும் 33000குடிகளுமுள்ளது. தென்பக்கத்தில் ஜெயப்பூர் ஜெயசிங்கு கட்டிய நக்ஷத்திரமண்டப மிருக்கிறது.

BAHRATPUR.

பரதப்பூர்.

இந்த ஆக்ராவுக்கு 33 மைல்கள் தூரத்தில் பரதப்பூர் இருக்கிறது. இது நான்குபக்கங்களிலும் மண் சுவர்களாலும், காடுகளாலும் சூழப்பட்ட 8மைல் சுற்றளவுள்ள பட்டணம். கி.பி. 1805ல் லார்டுலேக்கு முற்றுகைப்போட்டு சமாதானமாகிவிட்டது. இவ்விடத்திய கற்கள் கட்டடத்திற்குச் சிறந்தவைகள். இந்த ஸமஸ்தானதிபதி வைணவமதஸ்தர். இந்தப்

பாரதப்பூர் ஸமஸ்தானம் 1974 சதுர மைல்களும் 1891ஆ 640,620 குடிகளும், 27 லக்ஷம் ரூபாய் வருமானமுமுள்ளது. இது பாகவதத்தில் கூறப்பட்ட பிரஜா அல்லது பிஹாரி நாடென்னும் கிருஷ்ண பிரியான நாடு.

ALWAR.

ஆள்வார்.

இந்தப் பரதப்பூருக்கு வடக்கே ஆள்வார் என்னும் இராஜபுத்திர ஸமஸ்தானம் இருக்கிறது. இவ்விடம் 1000 அடிகள் உயரமுள்ள மலையின்மேல் அரணான கோட்டையொன்று கட்டப்பட்டிருக்கிறது. அதன்மேலேறிப்பார்த்தால் சுற்றுப்பக்கத்தின் காக்ஷி கம்பீரமாகத் தோன்றுகிறது. மலையடிவாரத்தில் இராஜருடைய அழகிய அரண்மனை இருக்கிறது. இந்த ஆள்வாரில் ஸ்ரீமஹாராஜபக்தாவார்சிங் அவர்கள் சமாதி ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அது அநேக கோபுரங்கள் கலசங்களோடு பிரகாசிக்கிறது. இந்த ஆள்வார் ஸமஸ்தானம் 3024 சதுரமைல்களுள்ளதாயும், 1891ஆ 769080 குடிகளுள்ளதாயும், 2658000 ரூபாய் வருமானமுள்ளதாயுமிருக்கிறது. நகரத்தில் 1891ஆ 52000 குடிகள் இருந்தார்கள். இங்கு பக்தவார்சிங்கு சமாதி சிறந்தது.

MATHURA.

வடமதுரை, பிருந்தாவனம்.

மறுநாட்காலை (1888ஆ ஜனவரிமீ 5உ) மதுராபுரிக்குப் புறப்பட யோசித்து ஆக்ரா கோட்டைக் கருகிலிருக்கும் ஸ்டேஷனுக்கு வந்தோம். அங்கு நமது ஆப்தர்களாகிய ஸ்ரீ திவான் நாராயணசாமி செட்டியாரவர்களையும் ஸ்ரீ தேவநாயக முதலியாரவர்களையும் சந்தித்து ஆள் ஒன்றுக்கு 0-6-6 விதம் சார்ஜ் கொடுத்து டிக்கட்டுகளைப் பெற்றுக்கொண்டு சிற்றிருப்புப் பாதை வண்டி யேறினோம். அந்தவண்டிகள் தென்னிந்தியா புகை வண்டிகளைப்போலவும் ஜனக்கும்பல் அதிகமாகவும் இருந்தன. இந்த வண்டியிலேறி (Achauirnyen) ஆச்சனெறியன் ஜங்ஷனிடம் வந்து மதுரைக்குத் திரும்பி, சுமார் மத்தியானம் ஒரு மணிக்கு வண்டியைவிட்டிறங்கி, ஒன்றரை ரூபாய் சத்தத்தில் இரட்டைக் குதிரைகள் கட்டிய

இரண்டு கோச்சு வண்டிகளைக் கொண்டு ஏறி, சுமார் மூன்று மணிக்கு மதுராபுரியை யடைந்து, அவ்விடத்து நகர மத்தியில் சுமார் நாற்பது கெஜ தூரத்திலோடும் யமுனா நதியின் சுவாமி கட்டத்தண்டையில் பிரகாசித்த ஸ்ரீரங்கஜிமடம் என்றுசொல்லும் ஸ்ரீரங்காசாரியருக்கு அவ்விடத்து கோடீசுவரரான சேட்ஜி அவர்கள் கட்டிக்கொடுத்த பிரம்மச்சாரி மந்திரத்தி லிறங்கினேம். அந்த மந்திரத்துக்கு அதிகாரியாக விருக்கிற ஸ்ரீ ஜனார்த்தனதாஸ் பிரம்மச்சாரி சுவாமிகள் எம்மைக் கண்டவுடனே கட்டடத்தின் மேல்மாடியின் அறைகளையும், மற்றவிடங்களையும் சுத்திசெய்வித்துக்கொடுத்தாலும், விடாது செய்த யாத்திரையினால் சோம்பலும் அசிரத்தையும் கண்டு, கேவலம் தாகசாந்திக்காகக் காப்பிநீரை மாத்திரம் தயார் செய்து குடித்து இளைப்பாறி அன்று இராத்திரி சமைத்துச் சாப்பிட்டு உறங்கினேம்.

1887ௐ ஜனவரீமீ 16உ காலையில் படுக்கையைவிட்டெழுந்து சிங்காரமான யமுனா நதியைத் தரிசித்துப் பிறகு க்ஷவரம் செய்துகொண்டேம். பிறகு மூன்று மணிக்குச் சாப்பிட்டு கலாநிதி பத்திரிகைக்குக் காவி பக்ஷிகள் சமாசாரம் எழுதியனுப்பிவிட்டு, இராத்திரி 9 மணி வரையில் கடைவீதிகளைச் சுற்றிப்பார்த்துச் சாப்பிட்டு உறங்கினேம்.

1887ௐ ஜனவரீமீ 17உ காலை எழுந்து கடைவீதிகளைக் கடந்து தபாலாபீசுக்குப்போய்க் கடிதங்களை யனுப்பிவிட்டுப் பிறகு வந்து சாப்பிட்டு மதுராபுரியின் மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் கட்டடங்களையும் சந்து பொந்துகளிற் போய்ச் சுற்றிப்பார்த்து, அங்கு மாடமாளிகைகளின்மீது பலவிதப் புறாக்களும், பலவிதப் பஞ்சவர்ணக்கிளிகளும் எதேச்சையாகப் பாடியாடிப் பறக்கவும், பலவித ரூபலாவண்ணியமுள்ள புருஷர்களும், பெண்களும் பலவித சிங்காரமான உடைகளையும், நகைகளையும் தரித்துக்கொண்டு, சுந்தரமுகங்களுடன் நடப்பதையும் கண்டு ஆநந்தப்பட்டு, அவ்விடத்தில் விசேஷமாக விருக்கும் பல கடைவீதிகளைப்பார்த்தும், ஒருஅழகான இலாந்தர் ரூ. 1-12-0க்கு வாங்கிக்கொண்டு மாலை 8 மணிக்குத் தங்குமிடம் வந்து சாப்பிட்டுச் சற்றுநேரம் படித்துப் பிறகு படுத்தேம். அன்று இராத்திரி யாது காரணத்தினாலோ நல்ல தூக்கம் வரவில்லை.

1887 வருஷம் ஜனவரிமீ 18உ காலை எழுந்து யமுனா நதிக்குப் போய்க் காலக்கடனை முடித்து ஸ்நானம் செய்து விட்டிறந்த வேண்டிய பதார்த்தங்களுக்குப் பணங் கொடுத்து விட்டு பலநாள்களாகப் பத்திரிகைகளைப்பார்த் தானந்தமடையாத வைத்தியத்தினால் பட்டணத்தைச் சுற்றித்திரிகையில், அவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆரியசமாஜத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீ ராதா லால் சர்மா அவர்களுக்கு அவ்விடத்திய போஸ்டு மாஸ்டர் பரிசூஷபம்செய்து வைத்தமையால், அவர் எம்மைத் தமது சபைக்கு அழைத்துக்கொண்டு போய்ப் பழைய (Indian Mirror) இந்தியன் மிரர், (Arya Patrika) ஆரிய பத்திரிகை முதலானவைகளைக்கொடுத்து உற்சாகப்படுத்தி, இந்த மதுராபுரியின் சரித்திரத்தைச் சுருக்கமாகச்சொன்னார். பிறகு யமுனாநதியின்கரையில் சுவாமி கட்டத்தண்டை இருக்கும் பெரிய சத்திரத்தின் மடாதிபதி ஸ்ரீ லாலாகோவிந்த சாஹிப் டான்ஜாப்என்பவர் சந்திக்க சிநேகிதரானார். இவர் வைதிக சுவாமிகளாக விருந்தாலும், கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் சபையின் நடவடிக்கைகளையெல்லாம் வாய்ப்பாடமாகச் சொன்னார். மேலும் ஸ்ரீராஜாராம்பல் சிங்கவர்களால் பிரசுரிக்கப்பட்ட இந்துஸ்தானி என்னும் பத்திரிகையைக்காட்டி, அதில் இன்கம்டாக்ஸ் வரியைப்பற்றி எழுதியிருப்பதை உருது பாஷையில் வாசித்து உற்சாகப்படுத்தி, இந்த மதுராபுரியில் ஸ்ரீகிருஷ்ணன்பிறந்த விடத்தையும், மற்ற வைபவங்களையும் சொன்னார். பிறகு தங்குமிடம்போய்ச்சற்று இளைப்பாறி, அங்கும் நமக்கு நேசரான தாடி ஸ்ரீநிவாச ஐயங்காரோடுகூடிக்கொண்டு மதுராபுரி மத்தியில் கம்சராஜனுடைய புராதனமான கோட்டையையும், ஸ்ரீகிருஷ்ணருடைய ஜனனஸ்தானத்தையும், அவரது தந்தை வசுதேவர் முதலானவர்களைச் சிறையில் வைத்திருந்த இடத்தையும், அந்த ஸ்ரீ கிருஷ்ணருடைய துணிகளைச் சுத்திச்செய்த தெப்பக்குளத்தையும், ஸ்ரீகிருஷ்ணர் பிறந்தவிடத்தில் இப்போது மகம்மதியர் விரோதத்தின்பேரில் கட்டிய மஸ்ஜீதையும் பார்வையிட்டோம். இந்தக் கம்ச மகாராஜாவின் கோட்டையானது பல நூற்றாண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதாகையால், இப்போது அந்தக்கோட்டையின் மதில்களிலுள்ள கருங்கல்லுகள் மண்ணாகி உதிர்ந்துவருகின்றன.

அப்படிக்கிருந்தும் பூர்வ சரித்திரத்தை நிலைநிறுத்தும்படி அந்தப்பழைய கோட்டையை இந்துக்கள் பாதுகாத்து

வருகிறார்கள். அந்தவிடத்தில் இந்துமதஸ்தர்களுக்கு விரோதமாகக் கட்டிய மஸ்ஜிதும் புராதனமாகிப் போதுமான பார்வையும் சிகிச்சையும் இல்லாமையால் சீர்கெட்டு வருகிறது. அருகிலிருக்கும் பெரிய தெப்பக்குளத்தைக் குவாலியர் மகாராஜரால் செப்பனிடப்பட்டிருக்கிறது. இந்தத் தெப்பக்குளம் அதிக விஸ்தீரணமுள்ளதாக விருக்கிறது. இவ்விடத்தில் சில ஏழைப்பிராமணர்கள் சில சிறிய கட்டடங்களில் இராதா கிருஷ்ணர் விக்கிரகங்களைச் செய்து வைத்துக்கொண்டு கிருஷ்ணர் பிறந்தவிடமென்று சொல்லிப் பணம் பிடுங்குகிறார்கள். இவ்விடம் கோயில் ஒன்றுக்கு இரண்டணு கொடுத்தால்போதும். இத்தியாதிகளைப் பார்த்துக்கொண்டு, கடைவீதிகளின் வழியாகவந்தால் மதுராபுரி மதிலுக்கு வெளியில் போஸ்டாபீசுக்கு அருகில் ஸ்ரீ கிருஷ்ணர், கம்சனைக் கொன்ற ஆயாசத்தினால் யமுனாதீரத்தில் போய்ப்படுத்த கட்டம் இருக்கிறது. இந்தக் கட்டத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் பள்ளிகொண்ட பாவனையாக ஒரு விக்கிரகத்தோடு அழகிய சிறியகோயில் கட்டப்பட்டு ஆயிரக்கணக்கான ஜனங்களால் வணங்கப்பட்டு வருகிறது. இங்கிருக்கும் யமுனை கட்டத்தில் பிரம்மாண்டரூபமான ஆமைகள் படிக்கட்டுகளில் வந்து மொய்த்துக்கொண்டிருக்கின்றன. இவைகளை இவ்விடத்தியஜனங்கள் போஷித்துவருகிறார்கள். இங்குப் பிச்சைக்காரர் உபத்திரவம் அதிகம். இவைகளைப் பார்த்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்புகையில், இவ்விடத்தில் ஒரு ஸ்ரீமான்வீட்டில் ஒருகலியாணம் நடந்து பவனி வந்தார்கள். விவாககாலத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் இவ்வளவு வைபவத்தோடு பவனிவந்ததை யாம் எங்கும் பார்த்ததில்லை. அதாவது:—நூற்றுக்கணக்காக அலங்கரிக்கப்பட்ட அசுவங்கள் அணிபணியாக நிற்கவும், ஜோடிக்குதிரைகள் கட்டிய பீட்டன்கள் கோச்சுவண்டிகள் நூற்றுக்கணக்காகவும், மெய் யானைகள், பொய்யானைகள், மெய் ஒட்டகங்கள், பொய் ஒட்டகங்கள், நடன வேஷக்காரர்கள், கூத்தாடிகள், பலவித வாத்தியக்காரர்கள், நடிக்கும்பெண்கள் பலவர்ணக் கடிதங்களால்செய்த விசித்திர புஷ்பச்செடி, மத்தாப்பு, பாணவேடிக்கை முதலானவைகள் பந்து மித்திராதிகளோடு சுமார் ஒரு மைல்தூரம் வரையில் அணியணியாக நின்றுவந்தது. இராஜ பவனியைப் போலிருந்தது; இவ்வளவும் ஒரு சாதாரண மனுஷனுடைய விவாஹக் கோலமாம். இனிப் பணக்காரருடைய விவாஹம் எப்படி யிருக்குமோ தெரியாது. இத்தியாதிகளைக் கண்டு

ஆரம்பித்து இந்த மதுராபுரியின் சரித்திரத்தை ஆதியோடந்தமாக விசாரித்தறிய விருப்பங்கொண்டு வீட்டுக்குப்போய் உண்டு உறங்கி இந்தப் பட்டணத்தின் பூர்வஸ்திதி தற்கால ஸ்திதிகளை அவ்விடத்திய ஸ்தலபுராணாதிகளையும் மற்றவைகளையும் ஆதாரமாகக்கொண்டு விசாரிக்கப் புகுந்ததில் அடியிற் கண்ட சங்கதி வெளியாகியது.

THE ANCIENT HISTORY OF MATRA OR MADURA.

வடமதுரையின் பூர்வசரித்திரம், இதற்கு மதுராபுரி என்று பெயருண்டானதற்குக் காரணம்.

ஸ்ரீ அயோத்திக்கு அரசராகிய ஸ்ரீராமர் செங்கோல் செலுத்திவருங் காலத்தில் யமுனாநதிக் கரையோரத்திலிருந்த ஓர் பிரம்மாண்டமான வனத்தில் மது என்னும் கொடிய இராக்ஷஸன் வசித்துவந்தான். ஆகவே இந்தவிடத்திற்கு மதுவனம் என்று பெயருண்டாயிற்று. அந்தக் கொடிய இராக்ஷதன் இறந்தபிறகு அவனைப்போலவே காதகனாகவிருந்த அவன் மகனாகிய லவணன் மதோன்மத்தனாகித் தனக்கு ஒப்பும் உயர்வுமான அரசன் கிடையாதென்று பறைசாற்றி வரும்போது இந்தக் கொடிய காதகனுடைய கொட்டத்தை யடக்கிக் குடிகளைப் பாதுகாக்கக் கருதிய ஸ்ரீ ராமரானவர் தமது தம்பியாகிய சத்துருக்னனை அனுப்ப, அந்த சத்துருக்னனும் வந்து இந்தக் கொடுங்கோலனைக் கொன்று, இவனிருந்த வனத்தை யழித்து, அங்கு மதுபுரி என்னும் பெயரால் ஒரு சிறந்த நகரத்தைக் கட்டிக் கொஞ்சகாலம் ஆண்டுவந்து அந்த லவணன் தம்பியாகிய ஹரியசுவனுக்குப் பட்டங்கட்டி இராஜநீதிகளைப் போதித்துத் தருமத்தைக் காட்டி அயோத்திக்குச் சென்றார்.

யாதவர் விவரம்.

இந்த ஹரியசுவன் யாதவகுலத்தைச் சார்ந்தவன். இந்த யாதவர்கள், சூரிய வமிசத்து க்ஷத்திரியர்கள். இந்த வமிசத்தைச் சார்ந்த ஆதிபுருஷனாகிய இக்ஷுவாகினால் மது இராக்ஷதனும், அவனுடைய இரண்டு குமாரர்களாகிய லவணன், ஹரியசுவன் என்பவர்களில் கொடுங்கோலனாகிய லவணனை சத்துருக்னர் கொன்று ஹரியசுவா என்பவனுக்குப் பட்டங்

கட்ட, அவன் மநுமதி என்னும் பெண்ணை மனைவியாகக் கொண்டு கடைசி காலத்தில் கோவர்த்தனத்தில் அரசாண்டு வரும்போது, அவன் வயிற்றில் மாதவனும், மாதவன் வயிற்றில் பிமனும் பிறந்து, அவன் மதுராபுரிக்கு அரசனானான். அவன் வயிற்றில் அநந்தகனும், அவன் வயற்றில் ரேவதியும், அவன் வயிற்றில் விசுவகர்மனும், அவன் வயிற்றில் வாசுசூரனும் பிறந்தார்கள். இந்த வாசுசூரன் வயிற்றில் வசுதேவன், பிரதபாண்டு, சுப்பிரபானு என்னும் மூன்று பிள்ளைகள் ஜனித்து, இம்மூவரில் வசுதேவனுக்கும், தேவகிக்கும் ஸ்ரீகிருஷ்ணரும்; பிரதபாண்டுவுக்கும் குந்திதேவிக்கும்: கர்ணன், உதிஷ்டிரன், பீமன், அர்ஜுனன் முதலானவர்களும் பிறந்தார்கள். சுப்பிரபானுக்கும் தாமகோஷாவுக்கும் சிசுபாலன் பிறந்தான். இதுதான் ஸ்ரீகிருஷ்ணருடைய தந்தை வருக்க வம்சவிருக்ஷமென்று பாகவதம், பாரதம், ஹரிவம்சம், விஷ்ணுபுராணம் முதலான கிரந்தங்களாலும், மதுராபுரியில் செப்பேடு முதலான சிலாசாசனங்களாலும் தெரியவருகிறதென்று (Mr. F. S. Grouse C. S.) மிஸ்டர் கிரவுசி என்னும் பெயருடன் வடமதுரையில் கலெக்டராகவும் டிஸ்டிரிக்டு மாஜிஸ்திரேட்டாகவும் இருந்து அநேக கிரந்தங்களையும் முக்கியமாக மதுரா டிஸ்திரிக்டு மானியூயெலென்னும் மதுராபுரி வைபவத்தையும் விவரமாக அறிந்து பிரகடித்த பெரிய புத்தகத்தினால் தெரியவருகிறது. மேலும் அந்தப்புத்தகத்தில் ஸ்ரீ கிருஷ்ணருடைய தாயாருடைய வம்ச விருக்ஷத்தையும் விவரமாக எடுத்து எழுதியிருக்கின்றனர்.

அதாவது:—பிரஹஸ்பதியின் மனைவியாகிய தாரையானவள் சந்திரன்மேல் மோகப்பட்டுக் கூடிப் புதனைப்பெற்றதாகவும், அந்த புதன், இளை என்பவளைக் கூடி புரூருவன் பிறந்ததாகவும், புரூருவன் ஊர்வசியோடு கூடி ஆயுசனும், இவன் வயிற்றில் நஹுஷனும், இவன் வயிற்றில் யயாதியும், இவன் வயிற்றில் யாதவனும், இவன் வயிற்றில் விதர்ப்பனும், இவன் வயிற்றில் அண்டகனும், இவன் வயிற்றில் அபிஜித்தனும், இவன் வயிற்றில் போஜன் என்னும் ஆஹுகனும், இவன் வயிற்றில் தேவகன் உக்கிரசேனன் என்னும் இரண்டு குமாரர்களும் பிறந்து, இவர்களில் தேவகனுக்குத் தேவகி என்கிற பெண் பிறந்து வசுதேவருக்குக் கொடுக்கப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்ததாகவும், இந்தக் கிருஷ்ணர் விதர்ப்பதேசத்து இராஜனாகிய பிஷ்மகன் குமாரத்தி ருக்மணிதேவியை விவா

கஞ்செயதுகொண்டு, பிரத்யும்னன் என்னும் குமாரன் பிறந்து ருக்மணிதேவியின் சகோதரன் ருக்மனுடைய குமாரத்திக்கு விவாஹம் செய்ய, அனிருத்தன் பிறந்ததாகவும், இந்த அனிருத்தன் உஷா என்பவளை விவாஹம் செய்து வஜ்ஜிரன் என்பவனைப்பெற்றதாகவும், இந்த வஜ்ஜிரன்தான் ஸ்ரீகிருஷ்ணருக்குப் பிறகு மதுராபுரியை ஆண்டு வந்ததாகவும், ஸ்ரீகிருஷ்ணருடைய பிதாவாகிய வசுதேவர், ரோஹிணி என்னும் மாதை முன் விவாஹம் செய்துகொண்டதில் பலராமனைப் பெற்றதாகவும், முன்சொன்ன ஆஹுகா என்பவன் வயிற்றில் பிறந்த இருவரில் வசுதேவருடைய கிளை இப்படியிருக்க, ஷை மற்றொரு மகனாகிய உக்கிரசேனன் மதுராபுரிக்கு அரசனாகி ஆண்டுவரும்போது, அவன் வயிற்றில் கம்சன் என்பவன் பிறந்து, மகததேசத்துக்கரசனாகிய ஜராசந்தன் குமாரத்தி இராஜீவலோசனி என்னும் பெண்ணை விவாஹம் செய்துகொண்டதாகவும், ஆக இவர்கள் யாவரும் ஸ்ரீ கிருஷ்ணருடைய தாயார் சந்ததியாகிய சந்திரவமிசத்து க்ஷத்திரியர்களென்றும், ஷை நூலினால் தெரியவருகிறது. இந்த யாதவகுலத்தின் வமச விருக்ஷத்தின் கிளைகளும், பெயர்களும், தென்தேசத்தில் வழங்கிவரும் திராவிட தெலுங்கு பாரதபாகவதாதி கிரந்தங்களுக்குச் சற்று வித்தியாசப்படுகிறதாக வதந்தி.

ஆனால் மிஸ்டர் கிரவுசி என்பவர் சம்ஸ்கிருத கிரந்தங்களையும், செப்பேடு சிலாசாசனங்களையும் ஆதாரமாகக்கொண்டு தமது நூலை எழுதியிருப்பதால் கூடியவரையில் சரியாக இருக்கலாமென்று நம்புகிறோம்.

இந்த வமிச விருக்ஷத்தைப்பற்றிப் பலர் பலவிதமாகச் சொன்னபோதிலும், யாதவகுலத்திற் சிறந்த போஜராஜனாகிய ஆஹுகனும் இந்தமதுராபுரியைப் பலவருஷங்களாண்ட பிறகு அவன் குமாரனாகிய உக்கிரசேன மகாராஜனும இந்த மதுராபுரியை ஆண்டுவந்தது பல சரித்திரங்களிலும் பரிஷ்காரமாகிறது.

இந்த உக்கிரசேனனுடைய மகனாகிய கம்சன் காலநேமியே அவதாரமாக வந்தபடியால், சிறுபிராயமாய் இருக்கும்போதே தன் தந்தையைச் சிங்காதனத்திலிருந்து நீக்கிவிட்டு, தானே அரசனாகிக் கொடுங்கோல் செலுத்திவர, குடிகளை குய்யோமுறையோவென்று அழுது கடவுளைப் பிரார்த்திக்க, இவன் கொட்டத்தையடக்க வசுதேவருக்கும், அவர் மனைவி

யும் உக்கிரசேன ராஜனுடைய அண்ணன் குமாரத்தியுமாகிய தேவகிக்கும் எட்டாவது திருக்குமாரன் பிறக்கப்போகிறானென்று ஆகாயவாணி சப்திக்க, அதை யறிந்த கம்சன் அப்போது கோவர்த்தனகிரியில் குழந்தையில்லாக் குறையால் தெய்வமேயென்றிருந்த வசுதேவரையும் தேவகியையும் தருவித்துத் தனது கோட்டையின் ஒரு அறையில்போட்டு மூடிக் கடுங்காவலில் வைத்தான். இந்தக் காவலிலிருக்கும்போது தேவகியானவள் ஒவ்வொரு குழந்தையாக ஆறு குழந்தைகள் வரையில் பெற, பெற்றவுடனே அக்குழந்தைகளைக் கம்சனிடம் கொண்டுபோக, அந்தப் பாதகன் கொன்றுகொண்டு வர, ஏழாவது கர்ப்பம் தரிக்க அந்தப் பிண்டமானது அற்புதமாக யமுனாநதியின் அக்கரையில் கோகுலத்திலிருக்கும் வசுதேவருடைய மற்றொரு மனைவியாகிய ரோஹிணி வயிற்றிற் புகுந்து பலராமன் என்னும் பிள்ளை பிறந்தான். இக்குழந்தை அற்புத பிண்டமாக மாற்றப்பட்டதினால் இவனுக்கு சங்கர்ஷணன் என்றும் சொல்வதுமுண்டு. இந்த மாதிரியாக ஏழு பிள்ளைகளும் கழிய, எட்டாவது கர்ப்பமாகி, பரிதாபி வருஷம் ஆவணி மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி ரோஹிணி நக்ஷத்திரம் கூடிய தினத்தில் ஸ்ரீகிருஷ்ணர் பிறந்தார். இக்குழந்தையானது அபூர்வ ரூபலாவண்ணியமுடையதாகவிருந்தபடியால் இதைக் கொடுங்கோலனாகிய கம்சன் காதில் கேட்பதற்கு முன் காணாமல் மறைத்துவிட எண்ணி, அந்தக் குழந்தையைக் கைகளில் ஏந்திக்கொண்டு வர, கத்தியும் கையுமாகவிருந்த காவல்காரர்கள் மாயாமயக்கத்தினால் மெய்மறந்து தூங்கவும் கனத்த கதவின் பூட்டுகள் தற்செயலாகத் திறந்துகொள்ளவும் கண்டு சந்தோஷத்தோடு யமுனைக்கரைக்கு வர, அப்போது யமுனையானது இருகரைகளும் புரண்டு பிரவாகிக்க, வசுதேவர் அந்தப் பிரவாகத்திலிறங்க, அந்தப் பிரவாக நீர் பாலகிருஷ்ணருடைய பாதத்திற்பட, பிரவாக ஜலமானது பாலகிருஷ்ணர் பிதா போகத்தக்க பாதையைப்போல் விலக, அப்பிதா ஆநந்தத்தால் நடந்து அக்கரையிலிருக்கும் கோகுலம் என்னும் கிராமத்தில் பெரிய குடித்தனக்காரனாகிய நந்தன் வீட்டுக்கு நேராகப்போக, அங்கு அவன் மனைவி அப்போதுதான் ஒரு பெண் பிள்ளையைப்பெற அவ்விடத்தில் பாலகிருஷ்ணனை யாருக்கும் தெரியாமல் போட்டுவிட்டு, அங்கிருந்த பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து தன் மனைவியிடம் போட, அந்தப் பெண் வீறிட்டழ, வீரர்களான

காவற்காரர் திடுக்கிட்டெழுந்து பார்த்து அப்பெண் குழந்தையை யெடுத்துக்கொண்டுபோய் படுபாவியாகிய கம்சனிடம் வைக்க அவன் "இதுதான் தன் பிராணனை வாங்க வந்த பொல்லாப் பிள்ளையென்று பூமியில் வாறியடித்து, வாளால் வெட்டப்போக, அந்தப்பெண்குழந்தை விறிட்டழுது, பிறிட்டெழும்பி பிரபாகர னுலகை நாடிச்சென்று கீழே கம்சனை நோக்கி, "அடா கொடியா! உன்னைக் கொல்லப்பிறந்த கிருஷ்ணன் கோகுலத்தில் வளருகிறான். நீ யேன் துள்ளுகிறாய்" என்று சொல்லித் தான் தூர்க்கையாகி மறைந்தாள்.

இந்த வார்த்தையைக்கேட்ட கம்சன் கொடிய கோபமித்தனாய், கோகுலத்திலும மற்றும் சுற்றுப்பக்கங்களிலும் பிறந்த நூதன குழந்தைகளைக் கொன்றுவிடும்படியும், வசுதேவரையும் தேவகியையும் சிறையைவிட்டு விடுதலை செய்யும்படியும் உத்திரவளித்து ஆஸ்தான மண்டபத்துக்கேகினான். அப்போது கோகுலநந்தன், தனது கப்பப் பணத்தைக் கம்சனுக்குக் கட்டவந்தபோது, வசுதேவர் நந்தனைப் பார்த்து, "அடா நந்தா! உனக்குக் கிருஷ்ணன் என்னும் ஆண் குழந்தை பிறந்த சங்கதியைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன்; ஆனால் கோகுலத்திலிருக்கும் பலராமன் என்னும் எனது குழந்தையையும் உனக்குத் தருகிறேன். நீ வளர்த்துக்கொள்" என்று சொல்ல, அவன் சந்தோஷமாக அங்கீகாரம் செய்து தன் மனைவியாகிய எசோதையினிடம் சொல்ல, அவள் கிருஷ்ணனையும் பலராமனையும் பிரியத்தோடு வளர்த்துவந்தனள்.

இப்படி வளர்த்து வரும்போது, கம்சனுடைய சதிமோசத்தினால் பூதகி முதலானவர்கள் கிருஷ்ணனைக் கொல்லப பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. கிருஷ்ணனுக்கு வயது விருத்தியாக விளையாட்டுகளும் சில சமயங்களில் அதிகமாகி அண்டை அயல் வீட்டுக்காரர்களுக்கும், கிரமேண கோகுல கிராமத்தாருக்கும் வம்புகள் செய்து வந்ததில், அவர்கள் வந்து முறையிட்டதனாலும், அந்தக் கோகுலத்தில் நந்தகோபனுடைய கோமுதலான கால்நடைகளுக்குப் போதுமான மேய்ச்சலகப்படாமையாலும் இடையர் வழக்கப்படி அந்தக் கிராமத்தை விட்டு அடுத்தக் கிராமமும், மேய்ச்சலதிகமாயுள்ள பிருந்தாவனத்துககு நந்தகோபன் தன் மனைவி மக்களோடு குடிவந்துவிட்டார்கள்.

இந்த பிருந்தாவனத்துக்கு வந்தும் கிருஷ்ணன் தனது துடுக்கு விளையாட்டுகளை விட்டவனல்லன். அவ்விடம் தன்

லைப்போல் மாடுமேய்க்கும் இடையர் மக்களுக்குத் தலைவனாக நின்று கதம்பமரங்களில் ஏறி விளையாடியும், அங்கு யமுனா தீரத்தில் குளிக்கவரும் ஸ்திரீகளுடைய துணிகளையெல்லாம் எடுத்துக்கொண்டுபோய் மரத்தில் ஒளித்துவைத்துப், வம்புகள் செய்தும் அடுத்திருக்கும் காளிங்க மடுவிலிருக்கும் காளிங்கன் என்னும் பெரிய பாம்பின்மீதில் குதித்து நடித்தும்வருகையில், கம்சன்கேட்டு, பகாசுரன், அகாசுரன் முதலானவர்களால் கொல்ல ஏவியும் முடியவில்லை. இப்போது கிருஷ்ணனுக்குப் பன்னிரண்டு வயதாகவே, பாகவதபுராணத்தில் கண்டபடி பலவித அற்புதங்கள் செய்து வருவதோடுங்கூட, கிருஷ்ணன் வேணுநாதம் வாசிப்பதில் ஒப்புயர்வற்றவனாகவிருந்தபடியால், அந்தப் பிருந்தாவனத்தில் வதிந்துவந்த விராஜ குலத்தின் மாதர்கள் யாவரும் மோகித்து இப்படிப்பட்ட நாயகனை அடைதலே மானவஜாதியின் சிரேஷ்ட சுகமென்று கருதி கிருஷ்ணனோடுவந்து பகலென்றும் இரவென்றும் பாராமல் ராசகிரீடை முதலான நாட்டியங்களையாடி யானந்த மடைந்துவந்தனர்.

இந்த பிருந்தாவனத்தின் இடையர்கள், தமது பசுக்களைப் பிருந்தாவனத்திலும் சிலசமயங்களில் அதை யடுத்த கோவர்த்தனகிரியிலும் மேய்த்துவருவது சகஜமானபடியால், அந்த கோவர்த்தனத்தில் வருஷத்துக் கொருதடவை இந்திரனுக்குப் பொங்கல்வைத்து பூஜை செய்துவருவது வழக்கம். அந்தப் பூஜையை கிருஷ்ணன் தனக்கே செய்யும்படி செய்ததில், இந்திரனுக்குக் கோபம் ஜனித்துப் பிரம்மாண்டமான மழை பெய்யும்படி செய்ய, ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தனத்தையே தன் கைவிரலால் தூக்கிக் குடையாகவைத்து, கோ கூட்டங்களை ஆதரித்ததாகப் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க,

கம்சன் இந்தக் கிருஷ்ணனுடையவும், பலராமனுடையவும் விருத்தாந்தங்களையெல்லாம் கேள்விப்பட்டு பயந்து, இவர்கள்தான் வாசுதேவனுடைய மக்களென்று தீர்மானித்து, இவர்களையும் வாசுதேவனையும் உடனே கொன்றுவிட யோசித்து, தனது சமஸ்தானத்துக்கு வீரர்கள் வேண்டுமென்றும், அவர்கள் தனது வில்லைவளைத்தால் தனது சேனையில் சேர்த்துக்கொள்ளப்படுமென்றும், மோசக்கருத்தாக அக்ரூரனைக்கொண்டு கிருஷ்ணன் பலராமனை மதுராபுரிக்கு

அழைப்பிக்க, அவர்களும் வந்து வில்லைவளைத்து அருகில் நின்ற துஷ்டர்களைக் கொல்ல, கம்சன் கோபங்கொண்டு இந்த கிருஷ்ணனையும், பலராமனையும் கொல்லும்படி யானை முதலான தண்டுகளை யேவ, கிருஷ்ணன் இவர்களைக்கொன்று சிங்காதனத்தின்மீதிருந்த கம்சனைக் குடுமியைப் பிடித்திழுத்து கீழேயடித்துக்கொன்று பிரேதமாக்கி யமுனாநதியில் போட்டு அவன் மனைவிகளைக் கூப்பிட்டுக் கருமாதிகாரியங்களைச் செய்துவைத்து மதுராபுரியின் பழைய இராஜனாகிய சிறையிலிருக்கிற உக்கிரசேனனுக்குப் பட்டங்கட்டிவைத்தான்.

இத்தியாதிகளைக்கண்ட கம்சனுடைய மனைவிகள் தமது தந்தையாகிய மகததேசத்து இராஜன், ஜராசந்தனிடம் முறையிட, ஜராசந்தன் உக்கிரசேனன்மீதும், கிருஷ்ணன்மீதும் படையெடுத்து வர, அவன் படையைக் கிருஷ்ணன் கண்டதுண்டமாக்கி ஜராசந்தனையும் சிறையில் வைத்துப் பரிதாபத்தினால் விடுதலைசெய்ய, அவன், அவன் பழியைத்தீர்க்கப் பதினேழு தடவை மதுராபுரியின்மேல் படையெடுத்து வந்தும், பதினேழுதடவையும் கிருஷ்ணனால் தோற்கடிக்கப்பட்டான். இப்படித் தோற்கடிக்கப்பட்டாலும், கடைசியாக மதுராபுரியானது ஜராசந்தனுடைய வசமாகி அந்த மதுராபுரியில் உக்கிரசேனன் கட்டிவைத்த கோயிற்கோபுர கட்டிடங்களை இடித்துப்பட்டணத்தைப் பாழாக்கிவரும்போது, கிருஷ்ணன் பார்த்து, இனி இரவும் பகலும் இங்குச் சண்டைசெய்வதே உத்தமமல்லவென்று யோசித்து, உஜ்ஜயினி பட்டணத்துக்குப் போய் உபநயனம் செய்துகொண்டு சாந்திபினி ரிஷியாகிய காஸியபரிடம் வேதாகம சாஸ்திரங்களைக் கற்று, குச்சுதேசத்துக்கடுத்த கடலோரத்திலிருக்கும் துவாரகைக்கேகி தனக்கிருந்த 16,000 மனைவிகளன்றியில், விதர்ப்பதேசத்து இராஜனாகிய பீஷ்மருடைய குமாரத்தி ருக்மணியையும் விவாகம் செய்துகொண்டு 1,80,000 மக்களையும்பெற்று பெரியபாரதயுத்தத்தில் பாண்டவர்களுக்குத் துணையாக நின்று ஜயம்பெற்று, தனது பழைய பகையரசனாகிய ஜராசந்தனுடைய பழியைத்தீர்க்க, அருஜ்ஜுனனையும்பீமனையும்கூட்டிக்கொண்டு போய் மகததேசத்தை மண்ணாக்கி ஜராசந்தனைப் பிடித்துக் கொன்றான். பிறகு கிருஷ்ணர் மதுராபுரிக்கு வரவேயில்லை.

மதுராபுரியில் புத்தமதம் ஸ்தாபித்தது.

அநந்தரம் இந்த மதுராபுரியில் ஜராசந்தனுடைய குமாரனும், குருவமிசத்தாருக்கு நேசனுமாகிய காருணியன் என்னும் சஹதேவன் அரசாண்டுவந்தான். காருணிய ராஜனும், இவன் தந்தை ஜராசந்தனும் புத்தமதத்திற் சிறந்த மகத தேசத்தாராகவும், இவர்களும் புத்தமத பிரசாரகர்களாகவும் இருந்தபடியால், அவர்கள் அந்த புத்தமதத்தையே இந்த மதுராபுரியின் ஜனங்களனுஷ்டிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்திப் பிராமண மதக்கோயில்களை இடித்துத்தள்ளி ஜாதிபேதம், குலபேதம், ஆசாரபேதங்களைக் கண்டித்து பவுத்தமத ஆசாமங்களையும் மண்டபங்களையும் கட்டுவித்தார்கள். இத்தியாதிகளால் இந்த மதுராபுரி இந்த ஜம்புத்வீபத்தில் புத்தமதஸ்தர்களுக்குப் பிரதான பட்டணமாகியதால், சீனதேசத்து யாத்திரைக்காரராகிய (Fa Hain) பாஹெயின் என்பவர் ஆதி புத்தர் இறந்த பிறகு கி. பி. 400-ம் வருஷம் இந்த மதுராபுரியை வந்து பார்த்தபோது, இங்கு இருபது பிரம்மாண்டமான புத்த ஆச்சிரம கட்டிடங்களும் 3000 புத்த சன்னியாசிகளும், ஆறு உயர்ந்த கோபுரகட்டிடங்களும் கட்டி, ஆநந்தர், மூதகுலபுத்திரர், அபிதாமன், சூதிரன், விரனயன் முதலான சிரேஷ்ட குருமார்களுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததாகவும், தன் சரித்திரத்தில் எழுதியிருக்கிறதன்றியில், கி. பி. 629ஸு (Heven Thsang) ஹெவன் ஸ்தாங் என்னும் யாத்திரைக்காரர் இத்தேசத்தில் பதினாறு வருஷங்கள் வரையிலிருந்தபோது, இந்த மதுராபுரியில் பாஹெயின் குறித்த கட்டிடங்கள் யாவும் இருந்தனவென்றும், அசோகமகாராஜன்கூட மூன்று பிரம்மாண்ட ஸ்தூபிகளை இங்குக் கட்டிவைத்திருப்பதாகவும், அப்போது இந்தமதுரா பட்டணம் மாத்திரம் 4 சதுரமைல் சுற்றளவுள்ளதாயிருந்ததாகவும், அப்போது உபகுப்தர், அரஹதர்பதவியைப்பெற்று சிரேஷ்ட குருவாகவிருந்தாரென்றும் சரித்திர மெழுதியிருக்கிறார். இத்தியாதி கட்டிடங்களையும் காரியங்களையும் கி. பி. 1853ஸு (General Cunningham) கன்னிங்ஹாம் என்பவர் இப்போதிருக்கும் கேசவதேவர் கோயிலுக்குச் சமீபத்தில் வெட்டிப்பார்த்தபொழுது செப்பேடுகளாலும் சிலா சாசனங்களாலும் கி. பி. 1860ஸு மதுராபுரியில் கலெக்டர்.

கச்சேரிகட்டக் கடைக்காலிட வெட்டியபோதும் அகப்பட்ட சாசனங்களாலும் ஊர்ஜிதமாயிற்று.

இப்படி இந்த மதுராபுரியானது ஜராசந்தனுடைய சந்ததியாரால் 400வருஷ காலம் ஆளப்பட்டு அவர்களது புத்தமதமும் பிரபலமாகி பிராமணமதம் மதுராபுரியில் முக்காலே மூன்றரை வீசமும் மங்கலடையும்போது காஷ்மீர தேசத்து இராஜனாகிய கோநந்தனன் என்பவன் பிராம்மண மதஸ்தனானபடியால், மதுராபுரியைப் பிடித்து அதைப் பிராம்மண மதமாக்கப் பிரவர்த்தித்தும் முடியவில்லை. பிறகு அவன் குமாரனாகிய தாமோதரனும் படையெடுத்து வந்தும் முடியவில்லை. பிறகு காஷ்மீர தேசத்து ஜயபிதாமகாராஜன் படையெடுத்து வந்து ஜெயப்பூர் இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து அங்கு அச்சேசுவரர் என்னும் பெயரால் மஹாதேவர் கோயிலைக் கட்டிவைத்தான்.

அநந்தரம் இந்த மதுராபுரியில் கானிஷ்கன் என்பவனும் அவனுக்குப் பிற்பாடு அவிசேகனும் பல வருஷங்களாண்டபிறகு இந்த அவிசேகனுடைய குமாரனாகிய வசுதேவனாண்டான். இந்த வசுதேவன் காலத்தில் அநேக பிராம்மண மத சித்தாந்தமான கோயில்கள் கட்டப்பட்டன. பிறகு பிரமோத மகாராஜன் அரசாண்டு வருங்காலத்தில் புத்தமதஸ்தர்களுக்கும் பிராம்மண மதஸ்தர்களுக்கும் பிரமாத சண்டைகளுண்டாகி இவர்களுக்குப் பிறகு மதுரையிலாண்ட இராஜாக்களுடைய பெயர் முதலானவைகளைக் காட்டும் சரித்திர மகப்படவில்லை. சரியான சாசனங்களு மகப்படவில்லை. ஆயினும் இப்படிப்பட்ட கலககாலத்தில் மகம்மதியர்கள் இதன்மேல் படையெடுத்து வந்தார்கள்.

மதுராபுரி, மகம்மதியர்களாற் கெட்டது.

இந்த மதுராபுரியில் குலச்சந்திரமகாராஜன் ஆண்டுவருங் காலத்தில் கி. பி. 1017வருஷ மகம்மது குஜினி படையெடுத்து வந்து 50,000 ஜனங்களைக்கொன்று கொள்ளையடிக்க, மகமது குஜினி செய்யும அவமானத்துக்குப் பயந்து குலச்சந்திரன் தன் கத்தியினால் தன் மனைவி மக்களைக்கொன்று தானும் குத்திக்கொண்டிறந்தான்.

அப்போது மகம்மது குஜினி அந்த இராஜாவின் 185 பெரியயானைகளையும், பொன்முதலிய சொத்துக்களையும் எடுத்

துக்கொண்டு மதுராபுரியிலிருந்த ஆயிரக்கணக்கான கோயில் களை இடித்து விக்கிரகங்களையும் விலையுயர்ந்த நகைகளையும் எல் லாங்கூட்டி 30,00,000 ரூபாய் சொத்துக்களோடும் 5000 இந் து அடிமைகளோடும் தன் தேசம் போனன். பிறகு அக்பர் சக்கிரவர்த்தியாகிற வரையில் பலவருஷங்கள் மதுராபுரிக்கே ஹிந்து அரசனற்று சில்லரை மகம்மதியர்களுக்குட்பட்டு இந் துக்கள் பலவித கஷ்டங்களை யனுபவித்து வந்தார்கள். இது விஷயத்தையும் விவரமாகத்தெரிவிக்கும் சரித்திர மகப்பட வில்லை.

பிறகு கி. பி. 1488ஞ முதல் 156ஞ வரையில் சுல் தான் சிகந்தர்லோடி மதுராபுரியிலிருந்த இந்துமதக்கோயில் களை யெல்லாம் இடித்து, இந்துக்கள சிரார்த்தாதி கர்மங்களு க்கு க்ஷவரம் செய்துகொள்ளாமல் எல்லாரும் தாடி வைக்க வேண்டுமென்று கட்டளை கொடுத்தான். பிறகு 1661ஞ மதுரையில் கவர்னராக விருந்த அப்தன் அன்நபி, கம்சனு டைய கோட்டைக்குள் கிருஷ்ணர் ஜனித்தவிடத்தில் ஒரு பெரிய மஸ்ஜிதைக் கட்டுவித்து அடுத்த இடங்களை கசாப்புக் கடைகளுக்கு விட்டான். இந்த அப்த அன்நபிகாலத்தில்கி. பி. 1583ஞ ஒரு பிராம்மணன் மகம்மது மதத்தை தூஷித்து மஸ்ஜிது கட்டுவதற்கு வைத்திருந்த கற்களைக்கொண்டு கோவி ந்த தேவர் கோயிலைக் கட்டப் பிரயத்தனப்பட்டதில், அந் தப்பிராம்மணனைக் கொன்றுவிட உத்திரவு கொடுக்கவேண்டு மென்று அக்பர் பாதுஷாவுக்கு எழுதினன். அந்த உத்தம சக்கரவர்த்தி உத்திரவு கொடுக்கவில்லை. அப்படியிருந்தும், இந்த அப்த அன்நபி அந்த பிராமணனைக் கொன்றதினுல் அக்பர் பாதுஷா கோபங்கொண்டு அன்றுமுதல் அவனுடன் பேசவேயில்லை. இதனுல் அக்பர் பாதுஷாவினுடைய பெரிய ஹிருதயம் இப்படிப்பட்டதென்று பரிஷ்காரப்படுகின்றதல் லவா? ஆ என்ன கம்பீரமான ஹிருதயம்! இந்த அக்பருக் குப்பிறகு சக்கிரவர்த்தியாகவந்த ஜிஹாங்கியரும் கூடியவரை யில மதவிஷயத்தில் சற்று சமதரசியாக விருந்தாலும், சாஜ ஹான் காலத்தில் கி. பி. 1636ஞ முர்ஷத் அலிகான் என் பவனுக்கு 2000 குதிரைவீரரைக் கொடுத்து மதுராபுரிக்கு அனுப்பி அவ்விடத்தில் தப்பித் தவறியிருந்த இந்து தேவா லயங்களையெல்லாம் இடித்துவிடும்படி கட்டளையிட்டபோதி லும், ஔரங்கஜீபினுல் இந்த மதுராபுரியிலிருந்த இந்து தேவா லயங்கள் யாவும இடிக்கப்பட்டு இந்தப் பட்டணத்துக்கு இவ்

லமாபூர் அல்லது இஸ்லமாபாது என்று பெயரிடப்பட்டது. இந்தவிடத்தில் அரங்கஜீபின் குமாரனாகிய மகமது சுல்தான் கி. பி. 1639௵ பிறந்ததன்றியில், கி. பி. 1658௵ அரங்கஜீபு, மரோத் என்றும் தன் சகோதரனிடம் சண்டையும் செய்தான். இந்தச்சண்டைக்குப் பிறகு கி.பி 1661௵ அப்து அன்நபி என்பவன் இப்போது இந்த மதுராபுரி நகரமத்தியிலிருக்கும் ஜிம்மா மஸ்ஜிதைக் கட்டிவைத்து ஒரு சண்டையில் குண்டு அடிபட்டு இறந்துபோக, சாப்சிக்கந்தருக்குப் பட்டங் கட்டப்பட்டது. இந்த அரசனும் கி. பி. 1669௵ நீக்கப்பட்டு, அசன் அலிகானுக்கு பவுஜுதார் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்தக்காலத்தில், ஜாத்என்னும் யாதவகுலத்தானான கோகிலராஜன் எழுந்து மகமதியர்களை எதிர்த்துச் சண்டை செய்து அநேகரைக் கொன்றதன்றியில், அப்து அன்நபியையும் கொல்வதற்குக் காரணனாயிருந்தான் என்று சந்தேகப்பட்டு இவனை ஷேக்ராஜி உட்டமன்என்பவன் பிடித்துக்கொண்டு போய் ஆக்ராவில் தூக்கிற்போட்டுக் கொன்றுவிட்டான். அடுத்த பிப்ரவரிமீ ரம்ஸான் பண்டிகையானபடியால் அப்போது அரங்கஜீபே நேராக மதுராபுரிக்கு வந்து, பந்தலா தேசத்து பீர்சிங்கு தேவர், ஜிஹாங்கர் சக்கிரவர்த்தி காலத்தில் 36 லக்ஷம் ரூபாய் செலவிட்டுக் கட்டியிருந்த கேசவதேவர் கோயிலை இடித்துப் பாழாக்கி, அங்கிருந்த விக்கிரகங்களை ஆக்ராவுக்குக் கொண்டுபோய் நபாப் குதசியாபீகம் மஸ்ஜிதுக்குப்படிக்கட்டுகளாகப்போட்டான். இந்த அரங்கஜீபு 1707௵ இறந்துபோக, மதுராபுரி மறுபடியும் ஜாட்ஸ் என்னும் யாதவராஜன் வசமாகியது.

இந்த ஜாத்ஸ் ஜாதியாருக்குத் தலைவனான சூராமணி என்பவன் கள்ளர்க் கதிபதியாக விருந்தபோதிலும் மகா வீரசூர தீரனானபடியால் அரங்கஜீப்பைத் தடுத்துச் சண்டை செய்ததன்றியில் அரங்கஜீபின் குமாரர்களான அஜாம், மவுஜிம் என்பவர்களோடும் பிரமாத சண்டைகள் செய்து இரண்டு கோட்டைகளைக் கட்டி வைத்ததன்றியில், அம்பர் கோட்டைக் கதிபதியாகிய ஜெய்சிங்கு மகா இராஜனோடும் சண்டை செய்து அவனுக்குதவியான தனது தம்பியாகிய மதனசிங்கையும் தோற்கடித்தான். பிறகு தனது மகனாகிய மூகாம் என்பவனுடைய கோழைத்தனத்தினால் கி. பி. 1712௵ பயந்து ஓடிப்போக மதனசிங்கு என்பவன் தாகூர் என்னும் பிருது பட்டத்துடன் மதுரைக்கரசனானான். இந்த மதனசிங்கு தாகூர் மது

ராபுரியில் சில பெரிய மாளிகைகளேயும், தரும சத்திரங்களே யும் கட்டிவைத்துக் குளங்களேயும் வெட்டுவித்தான். இவன் கட்டிய பெரியமாளிகை யொன்றில் இப்போது தாசில்தாரர் கச்சேரியிருக்கிறது. பிறகு இந்த மதனசிங்கு தாகூர் தன் குமாரர்களில் பிரதாப்சிங்குக்கு மதுராபுரியும், சுராஜமஹால் என்பவனுக்குப்பரதபூரும் ஆண்டுவரும்படிகொடுத்துத் தான் வானப்பிரஸ்தாச்சிரமத்தை யனுசரித்தான். இந்த சுராஜ மஹால் என்பவனுடைய மனைவிகளில் குருமினி,மாலினி என் பவர்கள் சரியான க்ஷத்திரிய ஜாதியைச் சார்ந்தவர்களல்ல வென்று இனத்தார் வெறுத்தாலும் 1748௵ ரோஹிலர் படையெடுத்து வந்தபோது சக்கிரவர்த்தியாகவிருந்த அஹ மத்ஷா என்பவன், இந்த சுராஜமகாலே, சாபத்ஜங்ஹோல்கார் முதலானவர்களோடு சண்டை செய்ய உதவிசெய்தான். அப் படி உதவிசெய்தும் காஜி உட்டீன் என்னும் அயோத்தியா வின் நபாப் படையெடுத்து வந்து பரதப்பூரைப் பிடித்துக் கொண்டு 1754௵ அகமத்ஷா சக்கிரவர்த்தியை சிங்காசனத் திலிருந்து நீக்கி 2-வது அல்மகிர் என்பவனேச் சக்கிரவர்த்திப் பட்டத்தைப்பெற உதவிசெய்தான். அப்படிச் செய்தாலும், அகமத்ஷா துராணி என்பவன் பந்தாரிலிருந்து பெரியசேனே யோடு வந்து காஜி உட்டீனேத் தோற்கடித்துப் பரதப்பூரைப் பாழாக்கி மதுராபுரியின்குடிகளே மாண்டுசாகும்படிசெய்தான். 1759௵ 2-வது அலிகரை கொலேசெய்துவிட்டான். இந்தக் காலத்தில் சுராஜமஹால் ஆக்கிராவுக்குப்போய்ப் பிடித்துக் கொண்டாலும், மகம்மதியருடைய விருத்தியை மஹாராஷ்டி ரர்களாலும் கண்டிக்கக்கூடாதபடி யிருந்தபடியால், ஆக்ராவை விட்டு மதுரைக்கு வரச்சரிப்படவில்லே. இந்தக்காலத்தில் துராணி என்பவன் ஷாஹாலம் என்பவன்தான் சக்ரவர்த்தி பட்டத்துக்குரியவனென்று முடிசூட்டிஅலகாபாத்தில்வைக்க, அவன்மகனுகிய மிர்ஜாஜாவான்பாகது என்பவனே ரோஹில ருடையவும், நஜிபுட்டவுலாவுடையவும் உதவியினுல் டில்லியில் அரசாக்ஷி செய்யும்படி நியமித்தான், இப்போது சுராஜமஹா னுக்கு தைரியம் அதிகமாகி பிரான்க் நகர் பவுஜதாரி அதி காரம் தனக்குவேண்டுமென்றுகேட்க அதவிஷயமாகப் பேச வந்த தானுதிபதியை சுராஜமஹால் தகுந்த மரியாதை செய் யாமல் சதுரங்கமாடிக்கொண்டிருந்தபடியால், மோகலா அறு தரவாகவிருந்த சுராஜமஹானுடைய தலையை 1764௵ வெட் டிக் கொடியாகத் தூக்கிக்கொண்டுபோய் அவன் மகனை ஜவா

ஹிர்சிங்கிடம் காட்டி அவமானப்படுத்தினார்கள். இந்த ஜவாஹிர்சிங்கு இந்த விசனத்தினால் புஷ்கர தடாகத்துக்கு ஸ்நானத்துக்குப் போக, அங்கு ஜெயபூர் இராஜா தடுக்க, அங்கு மார்வாடி ஜாதி இராஜா விஜயசிங்கு என்பவன் துணைசேர இருவரையும் ஜயப்பூர் ராஜன் தோற்கடித்து ஆக்ராவுக்கு ஓட்டி அங்கு 1765ஹு ஜவாஹிர் ராஜாவைக் கொன்றுவிடும்படி செய்துவிட்டான்.

சுராஜமஹால் ராஜனுக்கு, ஜவாஹிர்சிங்கு, ரத்தினசிங்கு, நாவல்சிங்கு, இரஞ்சிதசிங்கு என்ற நால்வரும் வேட்டையாடும்போது கண்டெடுத்த ஹரிதேவபக்தர் என்பவனும் கூடி ஐந்து மக்களில் ஜவாஹிர்சிங்கு இறந்துபோக இரத்னசிங்குக்கு மதுராபுரிபட்டம் கட்டப்பட்டது.

அப்போது இரசவாதகாரனாக வேஷம் போட்டுக்கொண்ட ஒருவன் இந்த இராஜனை பிருந்தாவனத்துக்கு அழைத்துப்போய்க் கொன்றுவிட்டான். இபபோதும் பிருந்தாவனத்தில் இந்த இராஜன் கட்டிய மதனமோஹன சோயில் பூர்ணமாகக் கட்டிமுடியாத காரணம் தெரிகிறது. கி. பி. 1768ஹு இரஞ்சிதசிங்கின் குமாரனாகிய கேசரிசிங்குக்குப் பட்டம் கட்டப்பட்டாலும், நாவல்சிங்கே இராஜ்ஜியத்தை ஆண்டுவர, பிறகு மஹாராஷ்டிரர்களும் முக்கியமாகச் சிந்தியாவும் படையெடுத்துவந்து நியாகானுடைய உதவியினால் கொள்ளையிட்டுக் கோட்டையைப் பிடித்துக்கொண்டார்கள். இந்த மதுராபுரியானது சிந்தியமகாராஜாவுக்குப் பிரதான பட்டணமாகவே, மகம்மதிய சக்கிரவர்த்தியின் தளகர்த்தனான ஜாபிதாகான் குமாரன் குலாம்காதர் என்பவன் இந்த மஹாராஷ்டிரருக்கும் மகம்மதிய சக்கிரவர்த்திக்கும் இருக்கும் சிநேகததைக் கெடுத்துவிட பல பிரயத்தனங்களைச் செய்தும் மகமதியர்கள் ஒத்துக்கொள்ளாமற்போகவே, அந்தப்பட்டணததைத் தாக்க சின்னபின்னமாக்க இந்தச் சதிமோசக்காரனுடைய நடவடிக்கை யாருக்கும் பிடிக்கவில்லை. இப்படிப்பட்ட தருணத்தில் குலாம்காதர் ஒருநாள் இராத்திரி குதிரையின்மேல திருட்டுததனமாக வர, வழியில்தவறி மதுராபுரியில் ஒரு கிணற்றில்விழ, அதையோர் பிராம்மணன் சிந்தியா மகாராஜனுக்கு அறிவிக்க, அந்த குலாம்காதர் உண்ட வீட்டிற்கு இரண்டகஞ்செய்யப்பட்டவனென்று அவனைக் கழுதைமேலேற்றி அங்கங்களைச் சின்னபின்னமாகத் துண்டிதது டில்லி சக்கிரவாத்திக்குக்

காட்ட டில்லிக்கனுப்பினான். அந்த டில்லி சக்கிரவர்த்தி மகமதியனாகவிருந்தும் குலாம்காதரை அப்படிச் செய்தது சரியான தண்டனையென்று சம்மதித்துக்கொண்டானாம்.

மதுராபுரி இங்கிலீஷ்காரர் வசமானது.

பிறகு, டில்லி சக்கிரவர்த்திக்கும் மஹாராஷ்டிரருக்கும் பிரமாத சண்டைகள் நடக்க, பிரான்சுதேசத்தானாகிய M. பிரனன் என்பவன் டவுல்தராவ் சிந்தியாவை முறியடித்துப் பிரபலமாக டில்லிச் சக்கிரவர்த்திக்குச் சகாயம்செய்ய, அப்போது அங்கு வர்த்தகம் செய்துகொண்டிருந்த அங்கிலேயருடைய உதவியைநாட, அவர்களும் தக்கஉதவிசெய்ய அந்த உதவிக்காக 1803ஆ மதுராபுரி இங்லீஷ்காரர் வசமாகி இங்குச் சேனைகள் தங்க கண்டோன்மெண்டைக் கட்டினார்கள். அக்காலத்தில் சிந்தியாவைத் தோற்கடிக்க 5000 குதிரைகளோடு உதவிசெய்ய இரஞ்சித சிங்குடனும் ஆக்கிராவில் ஜெனரல் லேக் என்பவரால் சமாதானம் செய்யப்பட்டது.

இந்த 1803-ம் வருஷம் செப்டம்பர்மீ ஜசவந்தராவ் ஹோல்கார் வந்து மதுராபுரியைப் பிடிக்க அவனையும் துரத்தியடித்ததில் அவன் டில்லியை நாடிச்செல்ல; அக்டர்லோனி, லேக், பிரேசர் முதலானவர்களால் தோற்கடிக்கப்பட்டு பரதப்பூருக்குப்போய் இரஞ்சிதசிங்கிடம் அடைக்கலம்புக, ஜெனரல் லேக்குக்கும் ரஞ்சிதசிங்குக்கும் பிரமாதசண்டை நடக்க இரஞ்சிதசிங்கு சேனையில் 3000பேர்மடிய, 1805ஆ மேமீ 4-ம் தேதி சமாதானம் செய்து இருபதுலக்ஷம் ரூபாய் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அந்த வருஷமே இரஞ்சிதசிங்கு இறந்தான். இவனுக்கு இராதா, பலதேவன், அரிதேவன், இலக்ஷ்மணன் என்ற நான்கு குமாரர்களிருந்தார்கள். இவர்களில் இராதா சிங்காசனம் ஏறி 1822ஆ இறந்துபோக, பலதேவன் வந்தான்; அவன் 18 மாதததி லிறந்துபோக, சுமார் 6 வயதுள்ள குழந்தையாகிய பலவந்து என்பவனுக்குப்பட்டம் கட்டப்பட்டது. இக்காலத்தில் துர்ஜனசால் என்னும் பந்துவானவன் பட்டம் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று படையெடுத்துவர டில்லியிலிருந்து ஸ்ரீ அக்டர்லோனி பெருஞ் சேனையோடுவந்து துர்ஜனசாலைப பிடித்து அலகாபாத்திற் சிறையில் வைக்கப் பலவந்துராவ் கொஞ்சகாலம் ஆண்டு கி. பி. 1853ஆ இறந்தான். அதன்மேல் ஜச

வந்தசிங்கு என்பவன், 1974 சதுரமைலும், 6,50,000 ஜனவாசமும், 2100000 ரூபாய் வருஷ வரும்படியுமுள்ள நாட்டிற்கு இராஜனுக்கப்பட்டான்.

1804ளூ சண்டை சச்சரவுகளில்லாமற்போக மதுராபுரியை ஒரு பெரிய ஜில்லாவாகப் பிரிக்கப்பட்டுக் குடிகளுக்கு நன்மைசெய்யவேண்டிய முயற்சிகள் செய்துவரும்போது, 1857ளூ கலக சந்தியானது அந்த வருஷம் மேமீ 14-ம் தேதி மதுரைக்கு எட்ட, அப்போது அந்த டிஸ்டிரிக்டு கலெக்ட்டராகவிருந்த மிஸ்டர் மார்க்கு தாரனஹில்லும், டிப்டிகலெக்டர் குலாம் உசேன் சாயிபும், உதவிக்காக பரதப்பூருக்குத் தெரிவிக்க, அங்கிருந்த காப்டன் நிகலிசனு சர்தார் ரத்னசிங்குடனும், பஜ்ஜகாரி கோவர்த்தன் சிங்குடனும் வர அப்போது மதுரா டிஸ்டிரிக்ட் கஜானாவிலிருந்து ஐந்தரைலக்ஷம் ரூபாயில் நாலுலக்ஷம் ரூபாயை பந்தோபஸ்துக்காக ஆக்ரா கோட்டைக்குக் கொண்டுபோக, அப்போது கலகக்காரருடைய தூண்டுதலுக்குட்பட்ட ஒரு சர்கார் வழியில் ஜாடைசெய்ய, உடனே மறைவில் ஒளித்திருந்த கலகக்காரர் துப்பாக்கியினால் த்ரவிபத்தோடு போன லெப்டினெண்டு பால்டனைக் கொன்று கஜானாவைக் கொள்ளையிட்டு எடுத்துக்கொண்டுவந்து, மதுரா மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கு நெருப்பை வைத்து ரிகார்டுகளை பஸ்மமாக்கி ஜெயிலை யுடைத்து அங்கிருந்த கைதிகளைத் துணையாக அழைத்துக்கொண்டு கஜான்ஜியையும் கொன்று கோசிக்குப்போய் அவ்விடமிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கும் சுங்கம் ஆபிசுக்கும் நெருப்பு வைத்துத் தாசில் கச்சேரியையும் கொள்ளையிட்டார்கள். அங்கு அப்போது 150 ரூபாய்தானிருந்தது. குடிகள் இப்போது இங்கிலீஷ் ராஜபக்தியுள்ளவர்களாய் வேண்டிய உதவிசெய்ய அவர்களுடைய கிஸ்தியைத் தளளியும் கிராமத்தலைவருக்கு ஆள் ஒன்றுக்கு 50 ரூபாயும் இனமாகக் கொடுக்கப்பட்டது. மிஸ்டர் தாரன்வில என்னும் கலெக்டர் மதுரையில் இலக்ஷ்மிசெந்து சேட்டவர்கள் வீட்டில் அடைக்கலம்புக அவரும் உண்மையான இராஜபக்தியோடு பாதுகாத்தார். இந்தக்காலத்தில் தேவிசிங்கு என்பவனை மதுரைக்கு ராஜனுக்கக் கலகக்காரர் நியமிக்கப் பிரயத்தனப்பட்டாலும், கோர்ட்டார் உதவிச்சேனையானது வந்து தடுத்துவிட்டது.

ஜூலை மாதம் 6-ம் தேதி மொரார், நிமச்சு முதலான விடங்களின் கலகக்காரர் மதுராபுரியில் பிரவேசித்து அக்கிர

மஞ்செய்யப் பிரவர்த்திக்க மிஸ்டர் தாரன்ஹில் ஒரு துலுக்கப்பக்கிரிபோல வேஷம்போட்டுக்கொண்டு திலவர்கான் ஜமேதாரோடு ஆக்ராவுக்கு ஓடிப்போகப் புறப்பட, எதிரில் கலகக்காரர் சந்தேகப்பட்டுத் தடுக்க, திலவர்கான் வெகு புத்திசாலித்தனமாகத் தப்புவித்து ஆக்ராவில் கொண்டுபோய்ச் சேர்த்தான். இந்த இராஜபக்திக்காக இவனுக்குப் பிருந்தாவனத்துக்கருகில் மானிய பூமியும் விடப்பட்டிருக்கிறது. கலகக்காரர் மதுராபுரியில் கொள்ளையிடாதபடி மங்கிலால் சேட்டும், லக்ஷ்மிசெந்து சேட்டும், தருந்தவர்களைப்போட்டு ஆட்களைத் தயார்படுத்திக் கொள்ளைக்கிடங்கொடாமல் தடுத்ததன்றியில், தாசில் மியர் இமாத்அலிகான் சாயபும் கஷ்டப்பட்டுக் கொள்ளைக்கிடமில்லாமல் தடுத்ததால் அவருக்கு டிப்டி கலெக்டர் வேலை கொடுக்கப்பட்டது.

செப்டம்பர்மீ 26-ம் தேதி கலகக்காரர் டில்லியிலிருந்து திரும்புப்போது மதுரையில் எட்டுநாள் தங்கிக் குடிகளை வருத்தினார்கள். ஆனால் அவர்களில் ஹிராசிங்கு என்பவன் இந்த பிருந்தாவனம் புண்ணிய பூமியானபடியால் இதில் கொள்ளையிடக் கூடாதென்று தடுத்தாலும் சதர்மீன், தாசில்தார் கிரஸ்தாதார் முதலான மனோஹர்லால், வசிர் அலி முதலான உத்தியோகஸ்தர்களைப் பிடித்து அடித்துப் புது ராஜாங்கம் செய்யப்படி செய்ததன்றியில், முனுவிகார்மத் அலியைப் பிடித்துக் கொண்டுபோய் மதுரையின் நகரமத்தியிலிருக்கும் ஜும்மாமஸ்ஜிதில், டில்லிச்சக்கிரவாத்தியின் பிரதிநிதியென்று பட்டமும் கட்டினார்கள். பிறகு பிருந்தாவனத்தில் பணக்கொள்ளையிட்டுக்கொண்டு அதராஸ், பார்லி முதலான விடங்களுக்குப் போனார்கள்.

இப்படிப்பட்ட காலத்தில் மிஸ்டர் தாரன்ஹில் ஆக்ராவிலிருந்து பெரிய சேனையைக் கூட்டிக்கொண்டுவர மியா அமீதலியும், சேட்டும் மதுரைக்குத் திரும்பி வந்தார்கள். பிறகு இவர்கள் கோசி முதலான விடங்களுக்குப்போய்க் கலகக்காரரை யடக்கி மியர் இமாது அலிக்கு குண்டு அடிபட்டும் தப்பிப் பிழைத்துக்கொண்டார். அவருக்கு டிப்டி கலெக்டர் வேலையேயும் 150 ரூபாய் நன்கொடையும், C. S. I. பட்டமும் கொடுக்கப்பட்டது. இந்தக் கலககாலத்தில் சர்க்கார் கஜானவை சேட்டவர்கள் வீட்டில் பாதுகாக்கப்பட்டது. நவம்பர் மாசத்தில் கலகமடங்கினாலும் 1858ரு ஜூலை

மாதம் எங்கும் சமாதானமாகவே, கஜானு போலீஸ் டவுனுக்குக் கொண்டுவரப்பட்டது.

1859ஆம் கவர்னர் ஜனரலவர்களே வந்து தர்பார் கூடி ஹகராஸ் ராஜாவாகிய ராஜகோவிந்த முதலானவர்கள் ராஜபக்தியைக் காட்டியதற்கு மானியங்களும் கொடுக்கப்பட்டன. இப்படி இந்த மதுராபுரிபட்டணம் கொள்ளைக்காரர்களாலும், கொடுங்கோல் மன்னர்களாலும் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல; இப்படிப்பட்ட கஷ்டங்களை விவரமாக அறிவிக்கும் சரித்திரங்களும் நமக்கு அகப்படவில்லை; ஆனால் மதுராபுரியில் 17-ம் நூற்றாண்டி லாண்டுவந்த மகம்மதியர்கள் சரித்திரம் மாத்திரம் சற்று தெளிவாகத் தெரியவருகிறன. அதாவது:—

கி. பி. 1629ஆம் த்தில் மிர்ஜாஈசாதர்கான் மதுராபுரியை ஆண்டு வந்து ஹான்ஸ்கஞ்ஈ என்னும் ஈசாபூரை யமுனையின் அக்கரையில் ஒரு (கிராமமாக) உண்டாக்கினன்.

கி. பி. 1636ஆம் த்தில் முர்ஹித்குலிகான் அரசனாகி 2000 குதிரை வீரர்களோடு வந்து இந்த தேவாலயங்களை இடித்து மூர்ஷதபூர் கிராமத்தை யுண்டாக்கினன்.

கி. பி. 1639ஆம் த்தில் அலிவர்த்திகான் அரசாண்டு வந்து இராஜதுரோகத்தை நாடியதனல் டில்லிக்கு அழைக்கப்பட்டான்.

கி. பி. 1642ஆம் அஜாம்கான்மீர் மகமதுபகீர் அரசாண்டு வந்தான் இவன் இந்த தேவாலயங்களை இடித்து விடவில்லையென்று வரவழைக்கப்பட்டு ஜாவான்பூருக்கு அனுப்பப்பட்டான். இவன் காசிப்பட்டணத்துக்குச் சமீபத்தில் அஜம்கார் கிராமத்தை ஸ்தாபித்து 1648ஆம் இறந்தான்.

கி. பி. 1645ஆம் த்தில் மகிராமத்கான் அரசனாகி மதுரையைக் கெடுத்தார். கி. பி. 1658ஆம் அலிவர்த்திகானுடைய குமாரனாகிய ஜாபர்கான் ஆண்டுவந்தார்.

1659ஆம் காசிம்கான் அரசாண்டுவந்து மூஷ்டாபாத்துக்கு மாற்றியபோது வழியில் கொல்லப்பட்டான்.

1660ஆம் அப்தல் அன்நபி என்பவன் அரசனாகி ஜிம்மாமஸ்ஜிதைக் கட்டிவைத்தான்.

1668௵ சாப்ஷிக்கன்கான் அரசனாகி உட்கலகங்களை யடக்கச் சக்தியற்றுப்போனதினால் வேலையிலிருந்து நீக்கி விடப்பட்டான்.

1669௵ அசன் அலிகான் அரசாண்டு வந்தான். இவன் காலத்தில்தான் கேசவதேவன் கோயிலை இடிக்கப்பட்டது.

1676௵ சுல்தான் டுலிகான் அரசாண்டு குடிகளுக்குப் பலவித வரிகளைப் போட்டுப் பாடுபடுத்தி வந்தான். பிறகு இந்த மதுராபுரி அங்கிலேயர் வசமாகி மங்காத புகழ்பெற்ற அவர்கள் செங்கோல் ஸ்தாபிதமாகிறவரையில் குடிகளுக்குச் சரியான உணவும், உரக்கமும், உல்லாசமும் கிடையாது. இடைக்கிடை சில சிற்றரசர்களுக்கும், குறுநிலமன்னர்களுக்கும் ஸ்வாதினமாகிய சொல்லற்கரிய கஷ்ட நிஷ்டூரங்களை யனுபவித்து வந்த குடிகளுக்குக் கடவுளே அடைக்கலம் கொடுத்ததைப்போல 1803௵ முதல் ஆங்கிலேயர் பாதுகாப்புக்குள் வந்து இந்தப் பரதகண்டத்தில் புராதன இந்து பட்டணங்களில் ஒன்றாகப் பரிமளித்துப் பிரசித்திபெற்றது.

அங்கிலேயர் அதிகாரத்துக்குட்பட்ட மதுராபுரியின் தற்கால சரித்திரம்.

இப்போது இந்த மதுராபுரியானது வடமேற்கு மாகாணத்தைச் சார்ந்த ஆக்ரா வகுப்பின் ஐந்து மாகாணங்களில் ஒன்றாகி 1453 சதுரமைல் விஸ்திரணமும், 6,7i 690 ஜனங்களுமுள்ள ஒரு ஜில்லாவாக விருக்கிறது. இதில் பெரும்பான்மையான (6,11626-குடிகள்) ஹிந்துக்கள்.

1803௵ இதன் விஸ்திரணமும், குடித்தொகையும், அதிகமாக விருந்தது. ஆனால் கிரமமாக அரசாக்ஷி செய்யும் பொருட்டு 1832௵ இதை ஒரு இராஜ சைனியத் தங்கும் மத்திய டிஸ்டிரிக்ட்டு ஆக்கி, யமுனாநதியின் வலதுபாகத்திலிருக்கும் ஆரிங்கு, ஸஹார், கோஸிம், யமுனையின் இடதுபக்கத்திலிருக்கும் மாத, நோஹஜில், மஹாவனம், அதாபாத் ஜால்சர் என்னும் ஏழு தாலூக்காக்களையும் சேர்க்கப்பட்டது.

1860௵ மாதையும் நோஹஜிலையும், 1868௵ ஆரிங்கையும் ஒன்றாகச் சேர்த்தாலும் ஜில்லாவின் விஸ்திரணம் மாத்திரம் மாறவில்லை. இந்த மதுராபுரிக்கு அலிகரும், பரதப்பூரும் வெகு சமீபத்திலிருக்கின்றன.

இந்த மதுராபுரியானது பார்வைக்கு மூன்றாம் பிறைச் சந்திரனைப்போலிருக்கும். இதன் கிழக்குப் பாகத்திய பூமிகளுக்கும் நதி, கால்வாய், குளம் முதலான ஜலம் எதேஷ்டமாகப் பாய்வதால் பூமியானது செழிப்புடன் பல வஸ்துக்களைப் பயிர்செய்ய வசதியாக விருக்கிறது. மேற்குப்பாகத்தில் தக்கபடி பயிர் செய்ய வசதியில்லாவிட்டாலும், புராதனமான சாசனங்களை யடக்கிக்கொண்டிருப்பதால் அதுவும் ஓர் விசேஷமாயிருக்கிறது. பொதுவாகக் கோதுமை, முதல்தரமான பருத்தி, பருமனுள்ள காய்கறிகள், செழிப்புடன் வளருவதன்றியில், மாங்கனிகள் எதேஷ்டமாக உண்டாகின்றன.

இவ்விடத்திய ஜனங்கள் சதா சாதுக்களாகியும், சொல் வார்த்தை தவறி நடக்காதவர்களாகியும், ஈஸ்வர பக்தியில் அதிக ஈடுபட்டவர்களாகியும் சுந்தரமுகமும், சுகுண குணங்களும் உடையவர்களாக விருக்கிறார்கள். இவர்கள் பேசப்பட்ட பாஷை ஹிந்தி. இதில் பெரும்பான்மையாக ஸம்ஸ்கிருத பதங்களும், பார்சி பதங்களும், கலந்திருக்கின்றன. ஹிந்துக்களில் பெரும்பான்மையோர் பிராமணர்களும், பனியர்களும், தாகூர்களும், சிறுபான்மை யாதவருமாக விருக்கிறார்கள். இந்த யாதவர்கள் பிராமண பிதாவுக்கும் க்ஷத்திரிய மாதாவுக்கும் பிறந்தவர்களாம். இப்போது இவர்களுக்குட்பல வகுப்புக்காரர்களாகிவிட்டார்கள். இவர்களன்றியில் சவுபிஸ் என்ற ஒருவிதமான பண்டாக்கள் 6000 வீட்டுக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் யாத்திரைக்காரரை யழைத்துக் கொண்டுபோய்ப் புரோகிதம் முதலான வைதிக கருமங்களைச் செய்வித்தும் தேவாலயங்களைக்காட்டியும் துட்டுச்சம்பாதிக்கப்பட்டவர்கள். இவர்களில் அநேகர் கோடீஸ்வரர்கள். இவர்களன்றியில் அஹிவாசிஸ் என்ற ஒருவகுப்புப் பிராமணர்களிருக்கிறார்கள். இவர்கள் உப்பு வியாபாரத்தைச் செய்துவருகிறார்கள். தாகூர் என்பவர்கள் அருத்தத்தோடு அதிகாரம்பெற்றவர்கள். இவர்களில் ஒரு தலைவன்தான் இராஜா என்ற பெயரைப்பெற்று அரசனானான். பனியர்களுக்குள் அகிரவாலஸ் என்றும், சேட்டுகளென்றும் இரண்டு பிரிவுகளிருக்கின்றன. இவர்களில் பெரும்பான்மையோர் ஜயின சமயத்தார்கள். சுவேதாம்பரரைச்சார்ந்த பாரிசுவநாதருடைய சீடரில் ஒருவர் சுதர்மா என்னும்பெயரால் இப்போதும் இருக்கிறார். இது நிற்க.—இந்த மதுராபுரி ஜில்லாவில் 5,8088 மகம்மதியாகளிருந்தாலும், இவர்களில் பிரபல கோடீஸ்வரர்கள் கிடை

யாது. இப்போது மதுராபுரியில் இந்துக்களில் பிரபல கோடீ
ஸ்வரர் மனிராம், லக்ஷ்மிசெந்தென்பவர்கள். இவர்களுடைய
தனாதிகள் இந்தியாவின் பிரபல பட்டணங்களிலெல்லாம்
காணலாம். இவர்கள் குவாலியர் ராஜாவினிடத்திற் பொக்கி
ஷாதிபதியாக விருந்த ஒருபிராமணர் தமக்குப் புத்திர பந்து
மித்திரர்களின்மையால் சமது உண்மையான உத்தியோகஸ்
தர்களான இந்த ஜயினர்களான மனிராம் லக்ஷ்மி சந்துக்கு
ஆஸ்தியைக் கொடுத்தார். 1836௵ மனிராம் இறந்துபோக,
சொத்துக்கள் யாவும் லக்ஷ்மிசந்து வசமாகியது. இந்த லக்ஷ்மி
சந்தும் 1866௵ இறந்துபோக, அவரது ஒரே குமாரனாகிய
இரகுநாததாசுக்கு யாவும் சேர்ந்தது. இவருக்குச் சொத்தைப்
பாதுகாக்கும் வகைதெரியாமல், கோவிந்ததாசு இராதாகிருஷ்
ணர் என்னும் இவரது தாய் மாமன்மார் வசத்தில் விட்டு விரு
த்தியாக்கப்பட்டது. இவர்கள் ஸ்ரீ கோவர்த்தனம் இரங்கா
சாரியார் ஜயின மதத்திலிருந்து வைஷ்ணவ மதத்தில் திரும்
பப்பட்டவர்கள். 1859௵ இராதாகிருஷ்ணர் இறந்துபோக
சொத்து முழுதும் கோவிந்ததாசர் வசமாகியது. இவருடைய
தரும கைங்கரியங்களுக்கு மெச்சி நமது மஹாராணியவர்கள்
1877௵ சக்கிரவர்த்தினிப்பட்டம் கட்டிக்கொண்டபோது
இவருக்கு ராட்டுப்பட்டம் கட்டப்பட்டது. இவரும் இந்தப்
பட்டம் கட்டிய 12 மாதங்களுக்குள் இறந்துவிட்டார். இவரு
க்குப்பிறகு இவர் தமது அண்ணன் குமாரர் இரகுநாததாசு.
தன் குமாரனை லக்ஷ்மணதாசு என்பவர்களிடம் சொத்தை
யொப்புவைக்க, மங்கிலால், நாராயணதாஸ், ஸ்ரீனிவாசதாஸ்
என்னும் மானேஜர்களால் திரவியமானது திருப்திகரமாகப்
பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இந்தச்சேட்டுக்குடும்பத்தை
சார்ந்த ஆதிலக்ஷ்மிசந்து சேட்டவர்கள் 1857௵ கலகக்
காலத்தில் இங்கிலிஷ் கவர்ன்மெண்டாருக்குச்செய்த உதவிக்
காக 5000 ரூபாய் இனாமும், இராயபஹதூர் பட்டமும், வரு
ஷம் 16125 ரூபாய் கொடுக்கும் ஜாகிரை தன் காலமளவு
அநுபவிக்கவும் தன்பின் சந்ததி பாதி வருமானத்தை யநு
பவிக்கவும் கொடுக்கப்பட்டது. இந்தச்சேட்டுக் குடும்பத்தார்
கள் ஸ்ரீ விலியம் மூவர் அலகாபாத்துக் கலாசாலை கட்டும்
போது 2500 ரூபாயும், 1874௵ பஞ்சகாலத்தில் 7100 ரூபா
யும், மதுரைக்கும் ஹதராசுக்கும் புகைவண்டிபோட ஒன்ற
ரை லக்ஷம் ரூபாய் பங்குசேர்ந்து உதவிசெய்தும், பிருந்தா
வனத்தில் 45 லக்ஷம் ரூபாயில் பெரிய வைணவகோயிலையும்

கட்டிவைத்ததன்றியில், மதுராபுரியிலிருக்கும் அநேகவிநோத கட்டிடங்களையும், பாலங்களையும், தரும சத்திரங்களையும் கட்டி, மகா தருமவான்களென்று பிரதிஷ்டை பெற்றிருக்கிறார்கள். மேலும் மதுராபுரியில் ரோமன் கத்தோலிக் மிஷன் சங்கத்தார் தங்கள் கோயிலைக் கட்டியபோது 1100 ரூபாயும் தருமமாகக் கொடுத்தார்கள். இதனால் இவர்கள் மதத்தில் வைணவர்களாயிருந்தாலும் மற்ற மதங்களிலும் நல்ல கருத்துகளிருக்கிறதைக் காணும் சமதரிசிகளென்று சொல்லத்தடையென்ன. இந்தமதுராபுரியில் இந்தசேட்டு வகுப்பார்கள் கோடீஸ்வரர்களாகி, அநேக தரும சத்திரங்களையும், தருமஸ்தாபனங்களையும்செய்து, வைணவ யதோத்தராகப் பிரகாசிக்கின்றனர்.

இந்தக் கோடீஸ்வரர்களைப் போன்ற வேறொரு வகை தனகனவான்களும் இந்தமதுராபுரியில் அநேக தரும கட்டிடங்களையும், காரியங்களையும், செய்திருக்கிறார்கள். அவர்கள் யாவரெனில் Jat என்னும் யாதவகுலத்தார்களே; இவர்களில் ஆதி பிதாவாகிய மோகஞ்சிங்கு என்பவர் 1860ஞு இராஜபுடானவிலிருந்து வந்து மதுராபுரிக்கடுத்த ஹதராசியில் குடிபுகுந்தார்.

இவரது முப்பேரனாகிய தாகூர் நந்தாராம் 1696ஞு பறுஜாதாரியாகவிருந்து இறந்தார். இவருக்கு 14-குமாரர்கள் இருந்தார்கள். இவர்களில் ஜலகர்னசிங்கும், ஜயசிங்கும், சிரேஷ்டராகிப் பிரகாசித்தார்கள். இவர்களில் ஜலகர்னசிங்கின் பேரனாகிய பகவந்தசிங்கு முரசனமாகாணத்துக்கு முகாமியாகியும், ஜயசிங்கின் பேரனாகிய தாகூர் தயராமசிங்கு ஹதராசுக்குராஜாவானார். இங்கிலீஷ்காரர் மதுராபுரியைக்கொண்டபோது, இந்த இரண்டு குறுநிலமன்னர்கள் தேசத்திலும் திரவியத்திலும் சிறந்து விளங்கினார்கள். 1817ஞு பிப்ரவரிமீ 17உ இராஜ சுதந்தரத்துக்காகச் சண்டைசெய்ய, தயராமசிங்கு இங்கிலீஷ்காரரை யெதிர்க்க இஷ்டமில்லாதிருந்தும் தன் தாசியின் குமாரனாகிய நிக்ஷயராமசிங்கனது புத்தியைக் கேட்டு எதிர்த்ததினால் மேஜர் ஜனரல் மார்ஷலால் முறியடிக்கப்பட்டுத் தயராம் ஜயப்பூருக்குப்போய் அடைக்கலம்பெற அங்கிலேயரே அந்தத் தயராமுக்கு மீ 10,000 ரூபா பென்ஷன்கொடுத்து அவன்சொத்தை சண்டைச்செலவுக்கும் வேறு செலவுக்கும் ஜப்திசெய்து எடுத்துக்கொண்டார்கள். இந்தத் தயராம் 1841ஞு இறந்துபோக இவன்குமாரன் தாகூர்

கோவிந்தசிங்கு தன் பிதாவின் சொத்துக்குப்பாத்தியஸ்தனுகி சாஹாகர் என்னும் கிராமத்தின் ஒருபாகத்தைத் தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு காலம்போக்கி வரும்போது, 1857௵ கலகம் அதிகமாகும்போது ஆங்கிலேயர்உண்மையான ராஜபக்திபுடன் ஆங்கிலேயருடன் சேர்ந்து கலகக்காரரை யடித்துமிரட்டி அவர்கள் வலிமையை பொடித்து ஓட்டி இங்கிலீஷ் ராஜாங்கத்தாருக்கும் பொதுவாகக்குடிகளுக்கும் அதிகக் கெடுதிகள வராதபடி உண்மையாக உழைத்து வரவே, கலகக்காரர் பிருந்தாவனத்திலிருந்த இவனுடைய மாளிகையைக் கொள்ளையடித்தும் 30,000 ரூபாய் சொத்துக்களைச் சூறையிட்டுச் செய்யாத கொடுமைகளைச் செய்தும் வந்தார்கள். அவைகளைப்பொருட்டாக என்னுமல் இங்கிலீஷ்காரர் பக்கத்தில் உறுதியாக நின்றதற்காக, 1858௵ ஜூன்மீ 25௳ லார்டு கானிங்கு பிரபுவினால் 50,000 ரூபாய் ரொக்கமாயும், பெரிய மானிய பூமிகளும், இராஜா என்னும் பிருது பட்டமும் கொடுத்து மரியாதைசெய்யப்பட்டது. இந்தக்கோவிந்தசிங்கு பாதபூர் ஸமஸ்தானபதிக்குத் தாய் மாமனுகி சவுதாரிசான்சிங்கு குமார்த்தியாகிய குண்வார் மஹாராணியை விவாகம்செய்ததில், ஒரு ஆண் குழந்தைபிறந்து, 1861௵ இராஜனும் மகனும் இறந்துபோக, இந்த இராஜனிஷ்டப்படி தன் பிதுர் சந்ததியைச்சேர்ந்த (1863௵) ஜனித்த இராஜா ஹரிநாராயணசிங்கை தத்துவாங்கிக்கொள்ள, தயராமசிங்கின் வைப்பாட்டி மகனை ஜெகுபராமசிங்கின் மக்களாகிய கேசரிசிங்கு தடுத்து விபரீதப்பிச்செய்ய 1872௵ நவம்பர்மீ ஆக்ரா கோர்ட்டு ஜட்ஜியினால் அவ் விவகாரத்தைஸ்திரப்படுத்தப்பட்டது. மகாராணியவர்களுக்கு 1877௵ சக்கிரவர்த்தினிப் பட்டம் கட்டியபோது இந்த ஹரிநாராயண சிங்குக்கு இராஜாபட்டம் பிராணனுள்ள மட்டும் அனுபவிக்கக் கொடுக்கப்பட்டது. இப்போது இந்த இராஜ குமாரனும் தாகூர் மகாராணியம்மாளவர்களும் பிருந்தாவனத்தில் பெரிய மாளிகையில் குடியிருந்துகொண்டு அநேக தருமங்களைச் செய்து வருகிறார்கள். இப்போது மதுரா டிஸ்டிரிக்டில் மகம்மதியர்களிற் கோடீஸ்வரராகவிருப்பவர்களைக் காண்பது அபூர்வம். சடாபாதத்திலிருக்கும் லால்கான் குடும்பத்தார்தான் சிரேஷ்டர்களென்று சொல்லலாம். இவர்கள் இராஜபுத்தானவின் குன்வர் பிரதாபசிங்கின் 11-ம் சந்ததியார்கள். இந்தச் சந்ததியில் லாலாசிங்கு என்பவனுக்கு அக்பர் சக்ரவர்த்தி கான் என்ற

பட்டத்தைக் கொடுத்தார். இவனது பேரன் இப்மாதுரயா என்பவன் அரங்கசீபு சக்கிரவர்த்தி காலத்தில் மகம்மது மதத்தை அநுசரித்தான். இவனது ஏழாவது சந்ததிநஹா அலிகான் தன் அண்ணன் குமாரன் டண்டிகானேடு சேர்ந்து பாலந்துபூருக்கடுத்த குமானு கோட்டையில் ஆங்கிலேயருக்கு விரோதமாசச் சண்டைசெய்ய, ஆங்கிலேயர் முறியடித்துப் பிடித்துக்கொண்டார்கள். இவனது குமாரனுகிய மார்த்தனலிகான் தன் சொத்துக்களை ஹூசேசன் அலிகானுக்குக் கொடுத்தப் பின்னேயும், விதந்துவான தாயாரும், 26 கிராமங்களில் வரும் 48,569 ரூபாயை யநுபவித்துவந்தார்கள். இப்போது இந்த குடும்பத்தில் புத்திரசந்தான மில்லாமையால் அண்ணன் குமாரனை ஸ்ரீகாரம் செய்துகொள்ளப்பட்டு ரிவாப்சபர்ஜி அலிகான் தலைவராக அநுபவித்து வருகிறார். இவர்கள் மதத்தில் மகம்மதியர்களானாலும், ஆதி சந்ததி இந்துக்களானபடியால் குனவார், தாகூர் என்ற பிருதுக்களையும், இன்னும் சில இந்து சமய சடங்குகளையும் அநுசரித்துவந்து, இப்போது இந்தக் குடும்பத்தார் மகம்மது வகுப்பிலொன்றுகிய வஹாப்பிகள் மாதிரியாக வசித்து வருகிறார்கள்.

இந்த மூன்று குடும்பத்தாரைவிட மதுரா ஜில்லாவில் வேறு பெரிய குடும்பத்தார் அபூர்வம். இந்த மதுராபுரியில் யமுனா நதியின் ஜலம் பாய்ச்சிப் பயிர் செய்யப்பல சாதனங்களிருந்தும் பூமியானது மேடுபள்ள முள்ளதாக விருப்பதால் தக்கபடி பயிர்செய்ய வகையற்று அடிக்கடி பஞ்சம் புகுந்து பேதை ஜனங்களைப் படுபாடு படுத்தியதுண்டு. அதாவது 1813-14௵மும், 1825-26 வருஷமும் 1860-61 வருஷமும் 1877௵மும் காலமழையில்லாமையால் கடும் பஞ்சங்கள் சம்பவித்துக் கணக்கற்ற பிராணிகளைக் கொன்றுவிட்டது. 1860-61 வருஷத்திய பஞ்சத்தில் 2000 ஜனங்கள் பஞ்சத்தால் இறந்தார்கள். அப்போது 29528 ரூபாய் செலவில் பஞ்சைகளுக்கு பாட்டைகள் போடக் கூலிகொடுத்து உதவிசெய்யப்பட்டது. குடியானவர்களுக்கு விதைத் தானியத்துக்கு 5000 ரூபாய் கொடுக்கப்பட்டது.

1877௵ சம்பவித்த பஞ்ச காலத்தில் 17762 ரூபாய் செலவழிக்கப்பட்டு 20483 பிராணிகள் பாதுகாக்கப்பட்டன. 1879௵ வந்த பஞ்சத்தில் 43070 ரூபாய் செலவு செய்து பஞ்ச பாளயத்தை ஸ்தாபித்து 395824 ஜனங்களைப் போஷிக்கப்பட்டது. இந்தப் பஞ்சத்தின் செலவு குடிகள் 2990

ரூபாய் தருமமாகவும் முனிசிபாலிட்டியார் 35000 ரூபாயும் கொடுத்து உதவினார்கள். இப்படி அடிக்கடி பஞ்சம் சம்பவியாதபடி மதுராபுரியின் மேற்குப் பாகத்தில் ஆக்ரா வாய்க்கால் ஒன்றை 1874௵ சர் வில்லியம் மூவர் துரையவர்களால் ஆரம்பிக்கப்பட்டு 1875௵ முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த இராஜ வாய்க்கால் 140 மைல் நீளமுள்ளதாயும், 2,50,000 எக்ரா பூமிகளுக்கு நீர்பாய்ச்சக்கூடியதாயும், 5,80,000 ரூபாய் வரும்படியைக் கொடுக்கக்கூடிய அதாவது நூற்றுக்கு 8 வட்டிக்கட்டிக் கொடுக்கக் கூடியதாயுமிருக்கிறது. இதற்குச் செலவான தொகை 71,00,000 ரூபாயிக்குமேல் செலவிடப்பட்டது. இந்த வாய்க்காலில் 6070 அடி உயரம் ஜலம் ஓடிக்கொண்டிருப்பதால் சிறு படகுகளினால் அக்கரை இக்கரை வியாபாரமும் நடக்கிறது. இந்த மதுரை டிஸ்டிரிக்டுக்குப் பெருத்த உபகாரம்.

அன்றியும் 1875௵ அக்டோபர்௴ 19௳ மதராசு வழியாக ஈஸ்ட் இந்திய புகைவண்டியுடன் 29½ மைல் தூரம் சிற்றிருப்புப்பாதை போடப்பட்டது. இதற்கு மைல்ஒன்றுக்கு 30000 ரூபாய் விழுக்காடு 95,5868 ரூபாய் செலவிடப்பட்டது. இதில் 3,24,100 ரூபாய் உள்ளூர்க்குடிகள் பங்குகளாகக் கொடுத்தகன்றியில் சர்க்காரில் 631763 ரூபாய் கொடுக்கப்பட்டது. இதில் போதுமான லாபம் கிடைக்காதென்று கண்டு பஞ்சகாலத்தில் இராஜபுட்டாணா ரெயில் பாட்டையில் 5,00,000 ரூபாய் செலவிட்டுச் சேர்க்கப்பட்டது. இதனால் ஏழைகளுக்கு ஜீவனம் கிடைத்தது.

இப்போது இந்த மதுராபுரி ஒரு முனிசிபல் பட்டணம். இந்த முனிசிபாலிட்டியில் வருஷம் ஒன்றுக்கு ரூ.50,000 வருவாகிறபடியால் நகரத்தை வெகு லக்ஷணமாக வைக்கப்பட்டிருக்கிறதன்றியில் இதில் 55,763 இந்துக்கள் குடியிருந்து இங்கிலீஷ் இராஜாங்கத்தால் சகல சுதந்திரங்களைப் பெற்றுச் சுகமாக வாழ்வதால் இதை இப்போது இந்த இந்துதேசத்தில் இந்துமதஸ்தர்களுக்குச் சிறந்த இந்துபட்டணமாகப் பிரகாசிக்கிறது. இந்த ஸ்தலத்தைப்பற்றி பாகவதம், பாரதம், விஷ்ணுபுராணம் முதலானவைகளில் பிரபலமாகப்பிரஸ்தாபித்திருந்தாலும் வராஹபுராணத்தில் அதிக விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் புராணத்தை யநுசரித்து இப்போது அநுஷ்டானத்திலிருந்துவரும் மதுராபுரி மஹாத்துவம் என்னும் கிரந்தம் எழுதப்பட்டு ஏழைகளும் வாசிக்கும்படி

யான விலைக்கு விற்கப்படுகிறது. அது 29 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு அந்த அத்தியாயங்களில் இந்த மதுராபுரியின் சில தேவாலயங்களையும், இதைச் சுற்றிலும் ஐந்து சிரேஷ்ட பருவதங்களையும், 11-உபபர்வதங்களையும், நான்கு சரோவரங்களையும் 84 - திவ்விய மடுக்களையும், 12-தடாகங்களையும், 12-திவ்விய வனங்களையும், 24 - உபவனங்களையும், அநேக தீர்த்த கட்டடங்களையும், ஸ்ரீ கிருஷ்ணருடைய லீலா விநோதங்களையும் பற்றிச் சொல்லியிருக்கிறது. மேலும் அந்தப் புராணத்தில் "காசி காஞ்சாம் ஆகிய திவியோதியா துவாரவதி யபி, மதுராவந்தி காசயதா சப்தபுரியோ திரமோக்ஷதா" &c., என்கிற சுலோகத்தினால் காசி, காஞ்சி, மாயா, (அரிதுவாரம்) அயோத்தியா, துவாரகை, மதுரை, அவந்திகை, (உஜ்ஜினி) என்று ஏழு நகரங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் திவ்விய தேசங்கள என்று சொல்லப்பட்டிருப்பதினால் இந்த மதுராபுரியை இந்தப்பரதகண்டத்திலிருக்கும் பல வகுப்பான ஹிந்துக்கள யாத்திரை செய்துகொண்டுவந்து இந்தமதுராபுரியில் தேவாலயங்களையும், தடாகங்களையும் தீர்த்தங்களையும், வனங்களையும், பர்வதங்களையும், சதா தரிசித்து ஸ்நானம் செய்து வருகிறார்கள். இந்த யாத்திரைக்காரர்கள் இந்த இங்கிலீஷ் கவர்ன்மெண்டின் சமரச செங்கோலினால் பெரும்பாலும் யாதொரு திருடர் முதலான பயங்களற்றும், இதர மதஸ்தர்களுடைய வய்பு வழக்குகளற்றும், தங்கள் சொந்த வீட்டுக்குப்போய் வருவதைப்போல் சுதந்தரம் பெற்றிருப்பதால் இந்த மதுராபுரியில் ஆதியில் மகம்மதியர் முதலானவர்கள் காலத்தில் இடிபட்டுப் போனவைகள் போகத் தப்பித் தவறியிருந்த சில தேவாலயங்களுடன் மத்தியகாலத்திலும் இப்போது கட்டப்பட்ட அநேக தேவாலயங்களை தரிசித்து ஆனந்தயடைகின்றனர்.

மதுராபுரியிலிருக்கும் தேவாலயங்கள் முதலியன.

கேசவ தேவர் ஆலயம்.

இந்த பிரம்மாண்டமான கோயில் 1669ல் அரங்கஜீபினால் இடிக்கப்பட்டதென்று முன்னமே சொலலியிருக்கின்றோமல்லவா? இது மதுராபுரிக்கு மத்தியில் கத்திரி என்னும் கம்சனுடைய கோட்டைக்குள் கட்டப்பட்டிருந்தது. இப்போது

இது 104-அடிகள் நீளமும், 653-அடிகள் அகலமுமுள்ள நீண்ட வடிவான கட்டிடம். இந்தக் கட்டடத்தின் மத்தியில் 172 அடிகள் நீளமும், 86 அடிகள் அகலமுமுள்ள ஒரு மாடி இருந்தது. அந்த மாடியின்மேல் 60 அடிகள் விஸ்தீரணமுள்ள ஒரு மஸ்ஜிதை மகம்மதியர்கள் 1663௵ கட்டிவிட்டார்கள். இந்த மஸ்ஜிதுக்குப் பின்பக்கத்திலிருந்த சுவரானது 163 அடிகள் வரையிலிருந்ததாக 1664௵ யாத்திரைசெய்த (Birnier) பெர்னியர் என்னும் யாத்திரைக்காரர் சொல்லியிருக்கிற தன்றியில், 1650௵ இந்த மதுராபுரியைப் பார்த்த (Tavernier) தாவர்னியர் என்னும் யாத்திரைக்காரர் இந்தக் கோயிலானது சுமார் ஐந்தாறு குரோசதூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கும்பரிஷ்காரமாகத்தோன்றும் பிரம்மாண்ட உருவமும் உயரமுமுடைய கோயிலென்றும், இந்தக் கோயிலுக்குள் போகவேண்டுமானால்அநேக படிக்கட்டுகள் ஏறிப்போகவேண்டுமென்றும், கட்டடத்தின் இருபக்கங்களில் இரண்டு கோபுரங்களிருந்து அவைகளின்மீ தேறிப்போக அநேக படிக்கட்டுகளிருந்தனவென்றும், இந்தக் கோயிலுக்கருகில் யமுனையாறும் ஓடிக்கொண்டிருந்தமையால், சுசிகரமாக ஸ்நானம் செய்து கோயிலுக்குட்போக அநுகூலமிருந்ததென்றும், கோயிலுக்குள் மூலஸ்தானம் பத்துப் பதினைந்துஅடிகள் விஸ்தீரணமுள்ளதாகவிருந்து அதில் கரும் ஸ்படிகக்கல்லினால் ஸ்ரீ ராமர் விக்கிரகமும், இருபக்கங்களிலும் சீதா லக்ஷ்மணர் விக்கிரகங்களிருந்ததாகவும் சொல்லியிருக்கிறார். மதத்துவேஷத்தினால் மகம்மதியர்கள் கோயிலை இடித்த இடிபாடுகள் இன்னும் பார்க்கலாம். ஆனால் யமுனைநதி இப்போது அக்கோயிலுக்குச் சுமார் ஒருமைல் தூரத்தில் ஓடுகிறபடியால் இந்த நதி யாது காரணத்தினால் இவ்வளவு தூரமாக ஓடச் சம்பவித்ததோ தெரியவில்லை. இது விஷயத்தில் இஞ்சினீர்களும் வித்தியாசமான அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோயிலை அரங்கசீப் கொள்ளைபடிக்க வருகிற சங்கதியை முன்னடியாக அறிந்த (Mevar) மீவார் தேசத்துக்கு அதிபதியாகிய இராணாராஜசிங்கர் இதிலிருந்த கேசவதேவர் விக்கிரஹத்தையும், நவநீதநாதர் விக்கிரஹத்தையும், மதுராநாதர் விக்கிரஹத்தையும், துவாரகநாதர் விக்கிரஹத்தையும், பாலகிருஷ்ணர் விக்கிரஹத்தையும், கோட்டாவிலிருந்த விட்டலநாதர் விக்கிரஹத்தையும், பிருந்தாவனத்திலிருந்த மோஹனநாதர் விக்கிரஹத்தையும், கோகுலத்திலிருந்த கோகுலநாதர் விக்கிரஹத்

தையும், இன்னும் பல விக்கிரஹங்களையும் எடுத்துக்கொண்டு போய் உதயபூருக்கு (Udayapur) 22 மைல் தூரத்திலிருந்த பனுசு என்னும் கிராமத்தில் மறைத்துவிட்டார்கள். இவைகளில் கோகுலநாதர், மோஹனநாதர் விக்கிரஹங்களை ஜெயபூர் மஹாராஜர் கொண்டுபோய்ப் பல வருஷங்கள் வரையில் தமது நாட்டில் வைத்திருந்து பிறகு மதுராபுரிக்குக் கொண்டு வந்து ஸ்தாபித்ததாகத் தெரியவருகிறது. இப்போது கத்திரா வென்னும் கோட்டை மதிலுக்குப் பின்பக்கத்தில் கேசவதேவருடைய நூதனகோயில் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக்கோயில் மதுராபுரிக்குத் தூரத்தி லிருப்பதால் விசேஷ உற்சவ காலங்களிலன்றி சாதாரண காலங்களில் ஏராளமாக ஜனங்கள் வருவதாகக் காணோம். இந்தக் கோயிலின் செலவுக்காக வருஷம் 1027-ரூபாய் வருமானத்தைக் கொடுக்கத்தக்க, உண்டி (Unde), சட்டா (Chatta) என்கிற கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன.

போத்ர குண்டம்.

இந்தக் கேசவதேவர் கோயிலுக்குப் பக்கத்தில் போத்ர குண்டம் என்னும் பிரம்மாண்டமான தெப்பக்குளம் இருக்கிறது. இதைச் சுற்றிலும் பலவித அசோகாதி விருக்ஷங்களினால் காண்பதற்குச் சிறந்த காக்ஷியாக விருக்கிறது. இந்தத் தெப்பக்குளத்தில்தான் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தபோது தேவகியம்மாள் உடுத்திக்கொண்டிருந்த சீலையையும், ஸ்ரீ கிருஷ்ணர் ஜனிப்பதற்குக் கீழேபோட்டிருந்த பிரசவ சீலைகளையும், துவைத்து சுத்தியாக்கியதாகச் சொல்லி, இதைப் பரிசுத்த தீர்த்தமாக வணங்கி வருகிறார்கள். இதை 1850ஆம் குவாலியூர் ஸமஸ்தானாதிபதி ஏராளமாகப் பொருள் செலவழித்துச் செப்பனிட்டிருக்கிறார். இப்போது இதில் அதிக ஜலம் கிடையாது.

காராகிரஹம்

அல்லது

கிருஷ்ணருடைய ஜனன பூமி.

இந்தத் தெப்பக்குளத்தின் கரையில் அதிக புராதனமான ஒரு கட்டடமிருக்கிறது. இந்த இருள்நிறைந்த கட்ட

டத்தில்தான் வசுதேவரையும், தேவகியையும் காவலாக அடைக்கப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்த ஜன்மபூமியென்று சொல்லுகிறார்கள். இப்போது இந்தக் கட்டிடம் சீர்கெட்டுக் கிடக்கிறது. சில பிராமணர்கள் குழந்தை வடிவான ஸ்ரீ கிருஷ்ண விக்கிரஹத்தை வைத்து வணங்கிவருகிறார்கள்.

மல்லர்புரம்.

இந்த ஜன்ம பூமிக்குச் சமீபத்தில் (Mullpurum) மல்லர்புரம் என்னும் சிறு கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்தில்தான் கம்சனுடைய வஸ்தவதிகளான சனூரா, முஸ்திகன் என்ற வீரர்கள் குடியிருந்து மதுராபுரியைப் பாதுகாத்து வந்தார்களாம். இதற்குச் சமீபத்தில் (Dulkot) டுல்காட்டு என்ற சிறுகிராமம் இருக்கிறது. இங்கு பலபத்திரகுண்ட மென்னும் தெப்பக்குளமும், புத்த மதஸ்தர்களுடைய பெரிய கட்டடங்களும், விக்கிரகங்களும் இருந்தன. இப்போது ரெயில்வே இஞ்சினீர் கட்டடமிருக்கிறது.

புத்திசுவர மஹாதேவர்.

இப்போது இடிந்துகிடக்கிற பலபத்திர குண்டத்தண்டை இந்தக்கோயிலானது இருக்கிறது. இது நூறு வருஷங்களுக்குமுன் மஹாராஷ்டிரரால் கட்டப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணர் மதுராபுரியில் ஜனிப்பதற்கு முந்தி இந்த மஹாதேவ புத்திசுவரர்தான் மதுராபுரிக்கு முக்கிய தெய்வமாக வணங்கப்பட்டவர். அந்தக்காலத்தில் காமா என்னும் கிராமத்திலிருந்த காமேசுவரரும், கோவர்த்தனத்தில் சககிசுவரரும், பிருந்தாவனத்தில் கோபேசுவரும் மஹாதேவர்களாக வணங்கப்பட்டு வந்ததன்றியில், இப்போது பலபத்திர குண்டத்தண்டை சிராவணம் உற்சவங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இப்போது புத்திசுவர மஹாதேவர் கோயிலானது மதுரைக்கு ஒரு மைலுக்கு அதிகமான தூரத்திலிருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. இவைகளன்றியில் இந்தப் பலபத்திர குண்டத்துக்கருகில், பலராமர், நரசிங்கர், கணேசர் முதலான சில சிறு கோயில்களு மிருக்கின்றன.

இந்தக்கோயிலுக்குச் சமீபத்தில் (Kojis Baugh) காஜிபாக் என்னும் சிங்காரத்தோட்டமிருக்கிறது. இதற்குள் இந்து

சிற்பசாஸ்திரயுக்தமாகக்கட்டப்பட்ட மகமதியர் கோரி ருனூர் செங்கற்களாற் கட்டப்பட்டிருக்கிறது.

இவைகளைப் பார்வையிட்டுக்கொண்டு மதில் வழியை விட்டு டில்லிவழியாக வந்தால் குபஜாகுளம் என்னும் சிறிய கிணறு இருக்கின்றது. இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் கூனி கன்னிகையாரோடு கைகோர்த்துக்கொண்டு ஆடியவிடமென்று சொல்லுகிறார்கள்.

அங்கிருந்து வலதுபுரமாகப் பிருந்தாவனத்துக்குப்போகும்வழியாக வந்தால் அவ்விடம் அம்பிரிஷி மலைக்கரடும், சஹகஞ்சுசரீயும் இருக்கின்றன. இந்தக் கட்டடங்கள் இப்போது இடிந்துகிடக்கின்றன. இந்தவீதிக்கு எதிரில் மகமதியர்கள் மசானமும், ஒரு அழகான சத்திரமும், அலிகானால் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ரோட்டுக்கருகில் சரஸ்வதி சங்கமும், அதற்கருகில் 1849ஸு லக்ஷுமிசந்து சேட்டவர்கள கட்டிய அழகிய பாலமும் இருக்கின்றன.

மஹாதேவர் கோயில்.

இந்தப் பாலத்துக்கு வலதுபாகத்தில் 1850ஸு இலக்ஷுமணபுரியின் அயோத்தியபிரசாதவர்களாற் கட்டப்பட்ட பெரிதான மஹாதேவர்கோயி லிருக்கின்றது. இந்தக் கட்டடத்தின் முன்பாகத்தின் காக்ஷி அதிக அசங்கியமாக விருக்கிறது. இந்தக் கோயிலுக்கருகில் இராதாகிருஷ்ணரால் ஸ்ரீ கோபாலருடைய கோயில கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலைச்சுற்றிச் சிங்காரமான பூந்தோட்டம் வெகு ரமணியமாக விருக்கிறது. இங்குப்பிச்சைக்காரருக்கு சதாவத்து தருமம் செய்துவருகிறார்கள்.

இந்தக்கோயிலுக்கருகில் கைலாசம் என்னும் ஒரு சிறு பர்வதமிருக்கிறது. இந்த மலை யடிவாரத்தில் பிரம்மாண்ட உருவமுள்ள கண்களும், காதுகளும், பற்களும், மயிருமுள்ள முகமும், ஒருகையில் பாத்திரமும், ஒருகையில் புஷ்பக்கொடியும் கொண்டிருக்கிற இராக்ஷஷ விக்கிரஹம் இருக்கிறது. இந்தவிக்கிரஹம் அதிக புராதனமாகையால் கருங்கற் சித்திரவேலையும் மண்ணாக உதிர்கின்றது. இந்தப்பயங்கர விக்கிரஹத்துக்கு இருபக்கத்திலும் சதிபார்வதி என்னும் ஒன்றரையடி உயரமுள்ள இரண்டு சிறிய விக்கிரஹங்க ளிருக்கின்றன. இந்த விக்கிரஹங்களில் ஒன்றுக்கு வலது கை ஒடிந்துவிழுந்து

விட்டது. இங்கே கவுதமருடைய சமாதி என்னும் பெயரால் ஒரு உயர்ந்த சமாதி கருங்கல்லினால் கட்டப்பட்டு வணங்கி வருகிறார்கள். இவைகள் யாவும் ஒருகாலத்தில் புத்த மதஸ்தர்களுடைய விக்கிரஹங்களாக விருக்கலாமென்று தோன்றுகின்றன.

இங்கிருக்கும் பாலத்துக்கருகில் கார்க்கிசார்கி என்னும் கோயிலிருக்கிறது. இங்கே முன்சொன்ன கோகர்னனுடைய மனைவிமார்களாகிய பெண்தெய்வ விக்கிரஹங்களிருக்கின்றன. இந்தக் கோயிலுக்கருகில் சிதலதேதி, மாசனி என்ற புத்திதேவிகள் கோயில்களிருக்கின்றன. கைலாச பருவதத்துககருகில் ஒரு அழகான மைதானமிருக்கிறது. இதற்கு ராமலீலா என்ற பெயரிடப்பட்டு தசரா பண்டிகை காலத்தில் பலவித உற்சவங்கள் நடந்துவருகின்றன. இதற்கருகில் 125 அடி விஸ்திரணமுள்ள சரஸ்வதி குண்டம் இருக்கிறது. இது சோடிலால், முனிலாலவர்களால் 2735 ரூபாய் செலவழித்துக் கட்டப்பட்டது.

இந்த குண்டத்துக்கருகில் மஹாதேவர் கோயிலிருக்கிறது. இந்த விக்கிரஹத்தைப் பஞ்சபாண்டவர்கள் ஸ்தாபித்ததாகச் சொல்லுகிறார்கள். இதை சுமார் நூறு வருஷங்களுக்கு முன் பேஷ்வா மஹாராஜா துருஸ்து செய்திருக்கிறார். இது சுமார் 40 அல்லது 50 படிக்கட்டுகளுள்ள ஒருசிறு மலைக்குன்றத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது. இதற்குக் கீழ்பாகத்திலிருக்கும் பயங்கரவனத்தில் மாயாதேவி கோயில் கட்டப்பட்டுச் சித்திரை வைகாசி மாதங்களில் விசேஷ உற்சவங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதுவும் புத்த விக்கிரகமாகத்தான் தோன்றுகிறது. இந்தச்சரஸ்வதி சங்கமத்துக்கு அருகில் ஜெயசிங்கபுரகார் இருக்கிறது. இதற்கருகில் மஹாவத்திப மலையுமிருக்கிறது. இதற்கருகிலிருக்கும் மங்கிலால் சேட்டுதோட்டத்தில் அநேக புத்த விக்கிரஹங்களும் ஸ்தாம்பாதி கட்டட கற்களும் கண்டு எடுக்கப்பட்டபடியால் இந்தக் கிராமமும் ஒருகாலத்தில் புத்தருடைய விடமென்று தோன்றுகிறது.

இதற்கருகில் அநேக திவ்விய தீர்த்த ஸ்தலங்களிருக்கின்றன. இவற்றில் சிவஸ்தலம் என்பது சிரேஷ்டமானது. இது ப எழுத்துப்போன்ற வடிவாகிப் பார்வைக்கு விநோதமானபடிக்கட்டுகளோடுகட்டப்பட்டகட்டடமாகவிருக்கிறது.

இந்தக்கட்டடம் இராஜபட்டிணமால் பகதுராவர்களால் ஏராளமானபொருள் செலவழித்துச் சிற்பாலங்காரமான கோயில்களைக் கட்டிவைத்ததன்றியில் தான் குடியிருக்க ஓரழகிய மந்திரத்தையும் கட்டியிருக்கிறார். இந்த ஸ்தலத்தில் அச்சலேசுவர் என்னும் விக்கிரஹமிருக்கிறது. இந்த ஆலயத்தைக் கட்டிவைத்த ராஜா சாப்பாட்டையும் விரும்பாமற் கிட்ட இருந்து கட்டினமையாற் காலையில் சாப்பாடில்லாமல் இவர் பெயரைச் சொன்னால் அன்று போஜனம் அகப்படாதென்று சொல்லுகிறார்கள். இப்படி இந்தமதுராபுரிக்கு மத்தியிலிருக்கும் கத்ரா என்னும் மதிலுக்குக் கிழக்கேபோகும் விசாலமானரோட்டில் நடந்துவந்தால் அநேக கல்தச்சர்கள் வீடுகளும், பழைய கொத்தவால் கச்சேரியும் இருக்கிறதன்றியில், ஷாமகமதுஷா அபுதராசிதித்து என்பவரால் கி. பி. 1745வரு கட்டிய ஒரு பெரிய மஸ்ஜிதிருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டுவந்தால் பரதபூர் மஹாராஜருடையவும், புருஷோத்தம கோஷாயிகளுடையவும் விநோதமான கட்டடங்களிருக்கின்றன. இந்த ரஸ்தாவுக்கு எதிரில் பொன்டூன்பாளம் என்னும்பெயரால் ஒரு வாராவதி 1870வரு கட்டப்பட்டது. இங்கே இருக்கும் சுங்கச்சாவடியில் வரு 40,500 ரூபாய் வசூலாகக் கூடியதாகவிருந்தும், தகுந்தஅஸ்திபாரமிட்டு அணைகட்டாமையால் 1871வரு ஆகஸ்டுமீ 13உ இடிந்துவிழ, 1,15,566 ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்டது. இப்போது 4044 ரூபாய் வசூலாகிறது.

இந்த மதுராபுரியானது யமுனையாற்றின் வடகரையோரம் சுமார் ஒன்றரை மைல் தூரம் வரையில் சுற்றிப்பரவியிருப்பதால் யமுனைக் கரையோரத்திலிருக்கும் கட்டடங்களின் காக்ஷி கம்பீரமாகவிருக்கிறது. யமுனையின் கரையிலிருந்து பார்த்தால் கம்சனுடைய புராதனக்கோட்டை தெரிகிறது. இதைப்பற்றி ஸ்தலபுராணங்களில் பிரபலமாகச்சொல்லப்பட்டிருந்தாலும், இதை ஜயபூர் தேசத்தின் மணிசிங்கு மகாராஜரால் புதிப்பிக்கப் பட்டதென்று சரித்திரத்தினால் வெளியாகிறது. இந்தராஜன் சிறந்த கோளசாஸ்திரியானகையால், ஜயபூர், காசி, டில்லி, உஜ்ஜயனி முதலானவிடங்களில் நக்ஷத்திர கணிதமண்டபம் கட்டியதைப்போலவே இந்த மதுராபுரிக்கோட்டையிலும் கட்டுவித்தார். யமுனையாற்றின் கரைமத்தியில் விஸ்ராந்தி கட்டம் என்னும் பெயராற் பிரம்மாண்டமான படிக்கட்டுகளும், கோயில்களும், மண்டபங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணர் கம்சனைக்கொ-

ன்ற ஆயாசத்தினால் இந்தவிடத்தில் வந்து சற்றுப்படுத்து இளைப்பாறியதாகவும், இந்தவிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணருடைய சிறந்தகோயிலும், ஸ்படிகக்கற்களால் விசித்திர வேலைப்பாடுள்ள வளைவான கமான்களும் பார்க்கப்பார்க்க விநோதமாகவிருக்கின்றன. இவ்விடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இரவும் பகலும் வந்து ஸ்நானம்செய்து பூஜைசெய்கிறார்கள். இந்தக்கட்டத்தில்தான் பெரிய உருவமான ஆமைகளிருக்கின்றன. அவைகளை யாத்திரைக்காரர்கள் போஷித்துவருகிறார்கள். இந்தக்கட்டத்திற்கு அதிகசமீபத்தில் கம்ஸகார் என்னும்பெயரால் சிறுவாய்க்கால் ஓடுகின்றது. இந்த வாய்க்காலில்தான் கம்சனுடைய பிரேதத்தை இழுத்துக்கொண்டுவந்து யமுனைக்கரையில் தகனம் செய்ததாம்.

இந்த விஸ்ராந்த கட்டத்தில்தான் கேசவபட்டரென்ற ஒரு வைணவசிகாமணி பக்திமாலா முதலான கிரந்தங்களை இயற்றி, தான் தரிசித்த ஸ்தலங்களையெல்லாம் வைணவ ஸ்தலங்களாக்கிக்கடைசியில் அநேக வித்துவான்களை ஜயித்து ஏழு வயதுடைய சைதன்னியரை ஜயிக்கமாட்டாமல் அதேவிசனத்தினால் வந்து யோகநிலையில் நின்றதாகவும், பிறகு காஸ்மீர தேசத்துக்குப்போக மகம்மதியர்கள் வந்து இநத விஸ்ராந்த கட்டத்தை இடித்துப் பாழாக்கும்போது தாமே சில சீடர்களான பக்தர்களைக்கூட்டிக்கொண்டுவந்து மகம்மதியரைத் துரத்தியடித்து ஜயித்ததாகவும், ஸ்தலபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது இந்த விஸ்ராந்தகட்டம் மஹா புண்ணிய தீர்த்த புண்ணிய ஸ்தலமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இந்தக் கட்டத்துக்கு இருபக்கங்களிலும் பக்கம் ஒன்றுக்கு 12 கட்டங்களாக இருபக்கங்களில் 24 கட்டங்களிருக்கின்றன. வடக்கே இருப்பவைகளுக்கு கணேஷ கட்டம், மானச கட்டம், தாசாசுவமேத கட்டம் (இவைகள் அம்பிரிஷா மருத்துவார்த்தமாகக்கட்டியிருக்கின்றன), சக்கிர தீர்த்த கட்டம், ஸ்ரீகிருஷ்ணகங்கா கட்டம்,(இதில் கலியாண ஈசுவரர் சன்னதியுமிருக்கிறது), சோமதீர்த்த கட்டம் (இதை வசுதேவகட்டம் என்று சொல்வதுமுண்டு), பிரம்மலோக கட்டம், தண்டாபரண கட்டம், தாரபட்டண கட்டம், சங்கமதீர்த்த கட்டம் (அல்லது வைகுண்ட கட்டம்), நவதீர்த்த கட்டம், அரிகுண்ட கட்டம் கட்டப்பட்டிருக்கின்றன.

தெற்கே: அவிமுக கட்டம், திண்டுக்கட்டம், விஸ்ராந்தி கட்டம், பிராககட்டம், கனககட்டம், சூரியகட்டம், சிந்தாமணிகட்டம், துருவகட்டம், ரிஷிகட்டம், மோசஸ்கட்டம், கோடிகட்டம், புத்தகட்டம் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்தக்கட்டங்களில் கணேச கட்டத்தண்டை முதலில் ஸ்நானம்செய்துகும்பிட்டுப்பிறகுதான்மற்றக்கட்டங்களுக்குப் போகிற வாடிக்கை. யோக கட்டத்தண்டை எசோதையின் பெண்சிசுவைக் கம்சன் கொல்லப்போய் அது துர்க்கையாக மாறியதால் இவ்விடத்திற் காளிகோயில் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் இங்கிருக்கும் இரண்டு மூன்று கட்டங்கள் சிவஸ்தல கட்டங்களானபடியால் இராமேசுவர, மஹாதேவர், பிபாலேசவர மஹாதேவர், பக்தநாதர் விக்கிரஹங்களை வைத்து அநேகர் வணங்கி வருகிறார்கள். சக்கிர தீர்த்தமானது அம்பரீஷர் மலைக்கருகிலிருக்கிறது. இந்த மலை 60 அல்லது 70 அடிகள் உயரந்தான். இங்கு தூருவாசரைக் கண்டித்து அம்பரிஷரைப் பாதுகாக்க மஹாவிஷ்ணுவின் சக்கிரம விடப்பட்டதாகச் சொல்லி ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. சுவாமி கட்டத்தண்டை பாசன்னுவைச்சார்ந்த ரூபாராம் என்பவருடைய பெரிய அழகான மந்திரம் இருக்கிறது. இங்கே பெங்காலிகளுடைய கட்டமென்னும் பெயரால் ஒரு சிறிய கட்டமுமிருக்கிறது. இந்தச்சுவாமிக் கட்டத்தண்டை ஹிராதுதேசத்து மகதூம்ஹாவிலாயத் என்னும் மகமது ஞானியாருடைய மஸ்ஜிதும், சில சிறிய கோரிகளும் கட்டப்பட்டிருககின்றன. இதனால் இந்துக்களுக்கும், மகம்மதியர்களுக்கும் மனஸ்தாபங்களுண்டாகி ஸ்ரீமான் சேட்டினுடைய எஜண்டாகிய விலையதுசேன் சாயிபு 1875 ஹு யாதொரு மதஸ்தர்களுக்கும் மனவருத்தமில்லாமல் அந்தக் கட்டடங்களைப் புதுப்பித்து ஒரு பெரிய மினரெட் என்னும் கோபுரத்தைக் கட்டிக்கொண்டு வரும்போது 1879ஹு இறந்துவிட்டார். அந்த வேலை முற்றும் முடியவில்லை.

கங்காகிருஷ்ண கட்டத்தில் காலஞ்சிசுவரர் என்னும் பெயரால் பலதேவவியாசர் வெகு விநோதமும் அமைப்பும் அழகுமான சிவஸ்தலத்தைக் கட்டிவைத்திருக்கிறார்.

கண்டாபரண கட்டத்தில் ஒரு பெரிய மணி கட்டப்பட்டிருக்கிறது. இதை ஸ்ரீ கிருஷ்ணர் கார்த்திகை மாதத்தில் தூங்குவதை எழுப்பும்படி கட்டப்பட்டதாகச் சொல்லுகிறார்கள்.

தராபத்தன கட்டத்தில் ஒரு காலத்தில் யாரோ ஸ்திரி கங்கைக்கரையிலிருந்து இந்தமதுராபுரிக்குப்படகின்மீதில் வரத்தவறி ஆற்றில் விழ, அவள் பாவம் போக மறுஜன்மத்தில் காசிராஜாவின் குமாரத்தியாகப் பிறந்து தன்னைப்போலவே நைமிசாரணியத்திலிருந்து வந்த ஒருவன் யமுனையில் விழுந்து பாவம் நீங்க இராஜகுமாரனாகியபடியால் இருவருக்கும் விவாஹமாகி இந்தக் கட்டத்தைப் பெருமைப்படுத்தியதாகச் சொல்லுகிறார்கள்.

துருவ கட்டத்தில் உத்தமபாதராஜனுடைய குமாரர் துருவன் சிறிய தாயாரால் படுங்கஷ்டங்களைச் சகியாதபடி சுசிலமுடைய பல தேசங்களைச்சுற்றி வரச்சே, மரீசி, அத்திரி, ஆங்கிரசர், புலஸ்தியர், புலஹவதர், வசிஷ்டர் முதலானவர்களாகிய சப்தரிஷிகளின் உத்தரவின்படி இந்த மதுராபுரியைத் தரிசிக்க விஷ்ணுவானவர் பிரத்தியக்ஷமாகி அவரை அழியாத துருவநக்ஷத்திரமாக்கியதாக ஸ்தலபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் துருவ கட்டத்துக்குப் பின்பக்கத்தில் துர்வாசர் கோயிலிருக்கின்றது. இந்தக்கோயில் பூஜாரிகளாகிய தாமோதரதாஸ், சோட்டாலால் என்பவர் நிம்பார்க்கருடைய பிரதம சிடராகிய கேசவபட்டருடைய சந்ததிகளாம். இந்த வகுப்பான வைணவமதஸ்தர்கள் இங்கு அநேகரிருக்கிறார்கள்.

இவர்கள் ஆதி சந்ததி வம்ச விருக்ஷமாவது:—ஆதியில் அம்சாவதாரரும், அவரால் சனகாதியும், அவரால் நாரதரும், அவரால் நிம்பார்க்க சுவாமியும் அவதாரம் செய்தார்களாம். இந்தநிம்பார்க்கசுவாமி(வைணவ)சித்தாந்தத்தை(1)ஸ்ரீநிவாசாசாரியார், (2) பீஸ்வாசாரியார், (3) புருஷோத்தமர், (4) விலாசர், (5) சாரூபர், (6) மஹாதேவர், (7) பலபத்திரர், (8) பதமர், (9) சியாமர், (10) கோபாலர், (11) கிருபாலர், (12) தேவர் ஆகிய இவர்கள் ஆசாரியபுருஷர்களாயும்,

(1) சுந்தரபட்டர், (2) பத்மநாபர், (3) ஸ்ரீராமசந்திரர், (4) வாமனர், (5) ஸ்ரீ கிருஷ்ணர், (6) பத்மாகரர், (7) சரவணர், (8) பூரி, (9) மஹாதேவர், (10) சியாமர், (11) கோபாலர், (12) ஸ்ரீபாலர், (13) கோபிநாதர், (14) கேசவர், (15) கங்கலர், (16) கேசவகாஸ்மீரர், (17) ஸ்ரீ பகத்தர், (18) ஸ்ரீ கேசவபிமானர் ஆகிய இவர்கள் பட்டர்களாயும்,

(1) கிரதாகோஷாயி, (2) வல்லபலாலர், (3) நந்தலாலர், (4) மோஹனலாலா, (5) இராமஜிலாலா, (6) மனுலாலா, (7) முகுந்தலாலா, (8) இராதலாலா, (9) கனியலாலா, (10) தாமோதிரதாஸ் இவர்கள் கோஷாயிகளாயும், இவர்கள் அனைவரும்கூடி அந்த நிம்பார்க்கருடைய குருபர பிரபுக்களென்று தெரியவருகிறது. இவர்கள் அருணமகாரிஷிக்கும், ஜயந்தி தேவிக்கும் ஜனித்தவர்களென்று கேள்வி.

திண்டு கட்டத்தில் ஒரு நாவிதன் பாஞ்சால தேசத்திலிருந்து வந்து தபசு செய்து யமுனையில் மூழ்கப் பிராமணனாகப் பிறந்தானும்.

அசிகுண்ட கட்டமாவது:—சுமதி என்னும் ஒரு இராஜன் இந்த மதுராபுரிக்கு யாத்திரை செய்துகொண்டு வரவே, வழியிலிறந்துபோக அவன் குமாரன் பிருமதி என்பவன் பட்டத்தைப் பெற, நாரதருடைய சதிமோசக் கருத்தினால் திவ்விய தேசங்களைக் கொள்ளையடித்துத் தகப்பன்கடனைத் தீர்க்கும்படி சொல்ல, அதை அங்கீகரித்துக்கொண்டு இந்த மதுராபுரியைக் கொள்ளையடிக்க வர, அப்போது விஷ்ணுவானவர் கரடியவதாரமெடுத்து வந்து அசியென்னும் தனது ஆயுதத்தால் இங்கே கொன்றபடியால் அசிகுண்ட கட்டமென்று சொல்லப்படுகிறது. இன்னும் இதேமாதிரியாகவே பல கட்டங்களுக்கும் பலவித காரணங்களைப்பற்றிப் பெயரிடப்பட்டிருக்கின்றன.

இந்தக் கட்டங்களுக்கருகே சதிபுருஷ் என்னும் விநோதமான கட்டட மிருக்கிறது. இது ஜயபூர் ஸமஸ்தானபதியாகிய ஸ்ரீராஜா பகவான்தாஸவர்களுடைய தாயாரும், ஸ்ரீராஜா பிஹாமால் என்பவருடைய மனைவியின் சமாதியாம். இதை கி. பி. 1570ஹு 55 அடிகள் உயரமும், நான்கு அடுக்கு சிங்காசன மண்டபமாய் வெகு விநோத வேலைபாடுகளுடன் கட்டப்பட்டிருக்கிறது. மேற்கலசம் அரங்கஜீபு காலத்தில் இடிந்துவிட்டது. இதைத் தற்காலத்து ஜயபூர்ராஜா புதிப்பித்ததால் அவர்களுடைய பூர்வ சந்ததியின்பெயர் பிரகாசிக்கும். இந்தச் சமாதியினால் இந்தக்கட்டம் ஒரு காலத்தில் மசானமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இப்போது அருகில் அநேக சிறிய சமாதிகளும், சத்திரங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் இரண்டு கி. பி. 1581,1638 வருஷங்களில் கட்டப்பட்டவை

அலங்காரமான சமாதிகள். மற்ற சில சிறிய சமாதிகளை இடித்து 1875௵ ரஸ்தா போடப்பட்டிருக்கிறதன்றியில், இவ்விருக்கும் சத்திரங்களில் யாத்திரைக்காரர் இறங்கிவாழச் சிறு அறைகளாகத் தடுத்துக் கட்டப்பட் டிருக்கின்றன. இந்தக் கட்டங்களுக்கும் சதர்பஸாருக்கும் இடையில் சுமார் 6000 குடிகள் வசிக்கப்பட்ட சஹர் இருக்கின்றது. இது மதுராபுரிக்கும் மற்றும் ஆங்கிலேயர் முதலான அன்னிய ஜாதியார்களிருக்கும் பாகத்துக்கும் சம்பந்தப்படாமல் தனியாக விருக்கிறது. இதில் ஸ்ரீ சேட்டவர்களுடைய குடும்பாதிபதி பார்க்ஜி என்பவர் ஞாபகார்த்தமாகக் கட்டிய ஜம்னுபாக் என்னும் இரமணியமான நந்தவனமும் இணையற்ற அலங்காரமுடைய ஆநந்த மண்டபமும் கட்டப்பட் டிருக்கின்றது. இந்தக் கட்டடத்தின் அழகை எழுதிமுடியாது. இது 1837௵ பஞ்சகாலத்தில் அநேக லக்ஷம் பொன்னைச் செலவழித்துக் கட்டப்பட்டது. இந்தச் சிங்கார நந்தவனத்துக் கருகில் பின்னுமொரு அழகான ஆநந்தவனமிருக்கிறது. இங்கு ஒரு அழகிய மந்திரமும் அதற்கருகிலிருக்கும் வெள்ளை ஸ்படிகக்கல்லில் இங்கிலீஷில் ஞாபகச்சின்னங்கள் செதுக்கப்பட் டிருக்கின்றன. அதாவது மஹாராஜ டவுலதராவ்சிந்தியா அவர்களுடைய சேனைத்தலைவனாகவிருந்து 1804௵ ஜூலை௴ 20௳ இறந்த (Robert Southerland) இராபர்ட்டு சதர்லாண்டு என்பவருடையவும், 1801௵ அக்டோபர்௴ 14௳ இறந்த 3-வயதுடைய அவர் குமாருடையவும் ஞாபகச்சின்னமாக இந்தத்தோட்டம் உண்டாக்கப்பட்டதாம். இதை நகரமத்தியிற் பார்த்தால் கி. பி. 1661௵ அபத்து அன்நபிகானல் கட்டப்பட்ட ஜம்மா மஸ்ஜிது தெரிகிறது. இந்த மஸ்ஜிதுக்கு 14,50,000 ரூபாய் சாமான்களைக்கொண்டும் 1[illegible],00,000 ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்டது என்று சொல்லுகிறார்கள். கட்டடம் அவ்வளவாகச் சிறந்த கட்டடமல்லாவிட்டாலும், நான்கு பக்கங்களிலும் இருக்கும் மினரெட்ஸ் என்னும் கோபுரங்கள் கம்பீரமான காக்ஷியாக விருக்கின்றன. இந்தக்கட்டிடமும் அருகிலிருக்கும் இன்னும் சில பெரிய கட்டடங்களும் 1803௵ செப்டம்பர்௴ 24௳ கண்ட பூகம்பத்தினல் சேதப்பட்டாலும் மறுபடியும் புதுப்பித்திருக்கிறார்கள். இந்தமஸ்ஜிது கட்டப்பட்ட இடத்திலும் கேசவர் ஆலயம் என்னும் பெயரால் ஒருபெரிய இந்து ஆலயம் இருந்து அதை மகம்மதியர்கள் இடித்துவிட்டு கசாப்புக்கடைகள் கட்டிவிட்டதாகவும்,பிறகு அந்தக்கசாப்புக்

கடைகளைவாங்கி இந்த மஸ்ஜிதைக் கட்டியதாகவும் தெரிய வருகிறது. இப்போது சில கசாப்புக்கடைக்காரர்கள் இருக்கிறார்கள்.

இந்த மஸ்ஜீது மதுராபுரியின் சதுரங்க மத்தியிலிருப்பதால் இவ்விருந்து பிருந்தாவனத்துக்கும், பரதபூருக்கும், டிக்கோட்டை முதலானவைகளுக்குப்போக பல புதுரஸ்தாக்கள் 24 அடிகள் அகலமுள்ளவைகளாய் 1843ஹு மிஸ்டர் டெயிலர் (E. E. Taylor) துரையினால் அநேக வீடுகளை விலைக்கு வாங்கி இடித்துப்போடப்பட்டன. இந்தப் புதுரஸ்தாக்கள் போட்டதில் ஸ்ரீ சேட்டவர்களுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் பெறும்படியான வீடுகட்டடங்கள்நஷ்டம். இப்படிப்போடப்பட்டரஸ்தாக்களைமதுராபுரியின்முனிசிபாலிட்டியார் 1857ஹு பரதபூரிலிருந்து 138663 ரூபாய் விலையுள்ள செங்கருங்கற் பலகைகளைத் தருவித்து ரஸ்தாக்களைப்போட்டு அந்தக்கற்களின்பேரில் பலவித சித்திராலங்கார மொக்குகளும் கோலங்களும் போடப்பட்டு நடக்கப்பட்டவர்களுக்கும், வண்டிச் சவாரி செய்யப்பட்டவர்களுக்கும் சுகத்தை யுண்டாக்கி இருக்கிறார்கள். இப்படி நகரத்தின் பிரதான ரோட்டுகளுக்கெல்லாம் பலகைக் கற்கள் போட்டுப் பசந்து செய்திருப்பதற்கேற்க அந்தந்த ரஸ்தாக்களின் பக்கங்களிலிருக்கும் வீடுகளும் கணக்கற்ற கோயில்களும் மண்டபங்களும் பிரம்மாண்டமானவைகளாகவும், செங்கருங்கற்களில் விசித்திர விநோதசிற்பாலங்காரமான வேலைப்பாடுகளோடு கூட ஏழடுக்கு எட்டடுக்கு மெத்தைகளோடு பிரகாசிக்கும் நகரத்தின் அழகை யென்னென்று எழுதலாம். இப்படி விநோதமாக விருக்கும் அழகிய கட்டடங்க ளெல்லாம் ஆங்கிலேய ராஜ்யம் மதுராபுரியில் ஸ்தாபித்த சுமார் 80 வருஷகாலங்களில் கட்டப்பட்டதென்று சொல்லலாம். இப்படி கட்டிய நூதன கட்டடங்களில் துவாரகதாசர் கோயில் விசேஷமானது. இது வல்லாபாசாரி கோஷாயிகளுடைய பார்வையில் விடப்பட்டு ஸ்ரீமான் சேட்டவர்கள் தம் பெரியோர்களுடைய பெயர்களை நிலைநிறுத்த வருஷம் 25000 ரூபாய் வருமானத்தைக் கொடுக்கும் கிராமங்களை விட்டிருக்கிறார்கள். இது குவாலியூர் ராஜாவின் பொக்கிஷாதிபதி பாரிக்ஜி என்பவர் கட்டியது. சிந்தியா மகாராஜாவின் பொக்கிஷாதிபதி கோகுலபதி சிங்கரால் கட்டிய கட்டடமும் ஆச்சரியமும் அலங்காரமுமானது.

இதற்கெதிரில் பரதப்பூர் முதலான ராஜாக்களால் அநேக சிங்கார மந்திரங்களும், மண்டபங்களும் கட்டப்பட் டிருக் கின்றன. இந்த இராஜபாட்டைக்கும் நகரத்துக்கும் மத்தியில் இராஜா பவந்துசிங் அவர்களால் விநோதமான (கேட்)வாசல் செங்கருங்கற்களில் விசித்திராலங்காரமாகக் கட்டப்பட்டிருக் கிறது. அதற்கருகில் ஸ்ரீசேட்டவர்களுடைய வாசாமந்திரம் 10,00,00 ரூபாய் செலவில் சிற்பாலங்காரச் சித்திரகூடம்போ லக் கட்டியிருக்கிறார்கள். மேலும் சோட்டாபஸார் வீதியில் 1871௵ தேயசந்துபஹா என்பவரால் கட்டப்பட்ட நூதன கட்டடமும் ஆநந்தத்தைக் கொடுக்கிறது.

இந்த மதுராபுரியைச் சுற்றிலும் மத்தியிலிருப்பதோடு கூட நகரத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமானால் பிரதான (கேட்)வாசல் வழியாகத்தான் போகவேண்டும். அந்தக்கேட்டு க்கு ஹோலிகேட்டு என்றுபெயர். அந்தக் கேட்டின் அலங் கார வாசற்படியை மதுராபுரியில் பலவருஷங்களாக கலெக்ட் டராகவிருந்த (Mr. Bradferd Hardinge) மிஸ்டர் ஆர்டிங்கி அவர்கள் முயற்சியினால் முனிசிபல் சிற்பசாஸ்திரி யாகுப்கா ன் பிளான் தயார் செய்து கட்டப்பட்டது. இந்த (கேட் டும்) வாசலும் இதற்குமேல் கட்டப்பட்ட ஸ்தூபிகளின் அழ கும் பார்ப்பவர்களுக்குமாத்திரம் பிரத்தியக்ஷமாகுமேயொ ழிய எழுத எம்மாலாகாது. இந்தக் கேட்டுவாசலுக்கு மாத்தி ரம் செலவான ரூபாய் 13731.

இந்தக் கற்களில்செய்திருக்கும் சித்திர அலங்காரவேலை களைப் பார்ப்பவர்களுக்கு இதிற் சிறந்த சிற்பசாஸ்திரிகள் அநேகர் இருக்கிறார்களென்று நம்பியே தீரவேண்டும். இதற் குத் திருஷ்டாந்தமாக இந்தக் கேட்டுக்கு அருகில் அநேக சித்திர வேலைக்காரர் பித்தளை முதலான உலோகங்களினால் பலவிதப் பிரதமைகளையும் பாத்திரங்களையும் வெகு விநோத மாகச் செய்து விலைக்கு விற்கிறார்கள்.

இதுநிற்க, 1870௵ ஜனவரிமீ 21௳ (Sir William Muir) ஸ்ரீ வில்லியம் மூவரவர்களால் 13,000 ரூபாய் செல வில் ஒரு பாடசாலை கட்டிவைக்கப்பட்டது. இந்தத் தொ கையில் 2000 ரூபாய் குடிகளாலும், 3000 ரூபாய் முனிசி பாலிட்டியிலிருந்தும், 8000 ரூபாய் கவர்ன்மெண்டிலிருந்தும் கொடுக்கப்பட்டது. கனகதிலா ஸ்தலத்துக்கருகில் ஒரு தரும வைத்தியசாலைகட்டப்பட்டிருக்கிறது. மதுராபுரிக்கும் ரெயில்

வே ஸ்டேஷனுக்கும் மத்தியில் இங்கிலீஷ் இராணுவக் குதிரைகள் தங்குவதற்குக்கண்டோன்மெண்டு பார்கஸ்கள்கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ராவ் கட்டங்களைத் தாண்டிப்போனால் கலெக்டர் கச்சேரி இருக்கிறது. இது கர்னாடக கட்டிடமாகவும், டிப்டிகலெக்டர் முதலான பெரிய உத்தியோகஸ்தர்கள் தவிர மற்றவர்கள் தரையின்மேல் மெத்தை திண்டு துவாசுகளைப்போட்டு உட்கார்ந்துகொண்டு சிறு முக்காலி மேஜைகளில் எழுதிவருகிறார்கள்.

1856ஆ டிசம்பர்மீ (Bishop Dialtry) பிஷப் டில்டிரி என்பவர் முயற்சியினால் இங்கிலீஷ் (English Church) கிறிஸ்துகோயில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. 1874ஆ ஜனவரிமீ 15உ (St. Francis) செண்டு பிரான்சிஸ் என்பவரால் ரோமன் கத்தோலிக்கோயில் கட்டப்பட்டது. அது சற்றேறக் குறைய இந்து சிற்பசாஸ்திரத்தை யனுசரித்துக் கட்டப்பட்டிருக்கிறது. இந்த கத்தோலிக் கட்டிடத்திற்கு 18100 ரூபாய் செலவிடப்பட்டது. இந்தச் செலவுக்கு ஸ்ரீ சேட்டவர்களும், ஹாதராஸ் இராஜா அவர்களும் திரவிய உதவிசெய்ததன்றியில், கோயில் பிரதிஷ்டைசெய்த தினத்தில் அந்தத் தனவான்களும் வந்திருந்து வேடிக்கைப் பார்த்தார்கள்.

1861ஆ மதுரா டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டும் கட்டப்பட்டு கம்பீரமாக விருக்கிறது.

இந்த கோர்ட்டுக்குச் சமீபத்தில் கோணல் வடிவான தாசில் கச்சேரி இருக்கிறது. இதற்கு அதிக சமீபத்தில் மதுரா கன்காசஷிசாலை கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு 44,000 ரூபாய் செலவிடப்பட்டு ஆச்சரியப்படத்தக்க சிற்பசாஸ்திர சித்திர வேலைகளால் சிங்காரிக்கப்பட்டிருக்கிறது. இந்த கன்காசஷிசாலையில் பலவித விநோதப்பொருள்களை வைத்திருக்கிறதன்றியில், புத்தசமயத்தாருடைய பலவித விக்கிரஹங்களைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்.

இந்தக் கட்டிடங்களன்றியில் மதுராபுரியிலிருந்து ஆக்ராவுக்குப் போகிற வழியில் 13731 ரூபாய் செலவிட்டு (Hardinge Arch) ஹார்டிங் வாசற்படியும், சோத்தாபஸார் கடைவீதியில் 1870-71ஆ 40,000 ரூபாய் செலவில் தேவசெந்து என்பவர் பெயரால் கட்டிவைக்கப்பட்ட இராதாகிருஷ்ணர் கோவிலும், சத்கரமஹால் என்னும் இடத்தில் 65,000 ரூபா செலவிட்டு விஜயராம்போரா என்பவரால் கட்டிவைக்கப்

பட்ட விஜயகோவிந்தர் கோவிலும், கம்சன் சங்கார கடைவீதியில் 1865-குசலராமபோரா என்பவரால் 25000 ரூபா செலவிட்டுக் கட்டிய பல்தேவர்கோயிலும் பார்க்கத்தகுந்தவைகள்.

அன்றியும் லோஹார் என்னுமிடத்தில் விஷ்ணுலால் கத்திரியவர்களால் 10000 ரூபாய் செலவிட்டுக்கட்டிய பைரவிநாதர் கோயிலில் சர்வர் சுல்தான் என்னும் ஓர் மகமதிய ஞானியின் பெயரால் ஒரு மண்டபம் கட்டப்பட்டு 1650-ஸ்திரி புருஷர் முதலான ஏழைகளுக்குப் பிரசாதம் கொடுக்கப்பட்டுவருகிறது. இதற்குக் கவர்ன்மெண்டில் 350 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்தக் கோவிலுக்குப் பாஞ்சாலம், சிந்து முதலான ஊர்களிலிருந்து வருஷாவருஷம் 2,00,000 இந்துக்கள், மகமதியர், சிக்கியர் முதலானவர்கள் வந்து தொழுகிறார்கள். மேலும் விசராந்த கட்டத்தில் 1800ஞ *பிராணநாத சாஸ்திரிகளால் 25000 ரூபாய் செலவில் கட்டிய கட்டாசரம கோவிலும், அசிகுண்ட பஸார்வீதியில் 1815ஞ பார்சஜியால் 20,000 ரூபாய் செலவில் கட்டிய துவாரகாதி சேட்டுகோவிலும்,

பலவிந்தசிந்துவால் புதுப்பிக்கப்பட்ட பரதப்பூர் மஹாராஜருடைய மாளிகையும்,

1845ஞ 1,00,000 ரூபாய் செலவில் லக்ஷ்மிசந்துசேட்டவர்கள் கட்டிய கட்டமும,

1859ஞ சாமீகட்டத்தில் 20,000 ரூபாய் செலவில் அந்தராமசவுரி சேட்டவர்கள் கட்டிய மதனமோஹனர் கோவிலும்,

1830ஞ பாபு க்ஷுதர்பார்தார் ராஜ் சேட்டவர்கள் கட்டிய கேசவர்த்தனநாதர் கோயிலும்,

1850ஞ சக்கிலால், கனியலால் என்பவர்கள் சாமிகட்டத்தண்டை 25,000 ரூபாய் செலவில் கட்டிய கிஹாரிஜீ கோயிலும்,

1843ஞ நாகர்சசிதிலா என்னுமிடத்தில் குருசயபால், கோபாலசயாம தாசரால் கட்டிய கோவிந்ததேவர் கோயிலும்,

1866ஞ சாமிகட்டத்தண்டை 30,000 ரூபாய் செலவில் கூல்ராஜ, ஜுகநாதசேட்டுகளாற் கட்டிய கோபிநாதர் கோவிலும்,

1820ஆ ஹார்டிங்கு வாசற்படியண்டை 1820ஆ லக்ஷமி சந்து சேட்டவர்களின் வேலைக்காரரான பாலா, அஹிர் என்பவர்களால் 50,000 ரூபாய் செலவில் கட்டிய மந்திரமும்,

1818ஆ கிருபராம்போர என்பவரால் கட்டிய மோஹனஜின் கோவிலும்,

அசிகுண்ட யஹாலுக்கருகில் தனராஜபோரா அவர்களால் கட்டப்பட்ட மதனமோஹனர் கோவிலும்,

கம்சசங்கார கடைவீதியில் தேவதாசரால் கட்டிய கோவர்த்தனநாதர் கோவிலும்,

பரதபூருக்குப் போகிற வழியிலிருக்கும் காசிராஜா பட்டினமாலவர்களால் கட்டிய திர்க்சுவிஷ்ணு கோவிலும்,

1570ஆ ராஜாபகவான் தாசுவினால் கட்டப்பட்ட பாஸ்பமண்டபமும்,

1652ஆ அப்டுநபிகானவர்களால் கட்டப்பட்ட மஸ்ஜிதும்,

1669ஆ அரங்கஜீபுனல் கேசவ தேவாலயத்தண்டை கட்டிய மஸ்ஜிதும்,

சிற்பசாஸ்திரத்தைச் சிறப்பிக்கும்படியான கோவில்களும் கட்டிடங்களுமா யிருக்கிறபடியால் யாத்திரைக்காரர் முக்கியமாகப் பார்க்கத்தக்கவைகள்.

இவைகளன்றி இந்த மதுரா (இந்து) பட்டணத்திலிருக்கும் ஒவ்வொரு இந்து குடும்பவாசியும் தனது வீட்டின் முன்பாகத்தை ஸ்ரீகிருஷ்ணர் கோவிலாகவமைத்துப் பிரதிதினமும் எட்டுமுறை பூஜைசெய்து சகலரும் தரிசிக்கும்படி இடங்கொடுப்பதன்றியில், உற்சவ காலஙகளில் நடக்கும் விசேஷ பூஜைகளுக்கும், வேடிக்கைகளுக்கும் கணக்கேயில்லையென்று தோற்றும். ஆகவே இந்த மதுராபுரியில் ஒரு வருஷத்தில் நடக்கும் சில விசேஷ உற்சவகாலங்களையும், உற்சவங்களையும் காட்டுவோம்.

(ஏப்ரல்மீ 1உ முதல் 12உ வரையில்)

சித்திரைமீ 8உ மஹாவித்தியதேவி கோவிலில் விசேஷ உற்சவமும்,

சித்திரைமீ 9உ இராமதேவர் கோவிலில் ஸ்ரீராமநவமியும்,

(ஏப்ரல் மே மாதங்களில்)

வைகாசிமீ 14உ துவாரகதாசர் கோவிலில் நரசிங்கர் லீலையும்,

ஷை மீ பவுர்ணமிதினம் விஸ்ராந்த கட்டத்திலிருந்து வனவிஹார உற்சவமும்,

ஆனிமீ 10உ ஜேஷ்தசார பண்டிகையும் கோகர்னேசுவரர் மலைமேல் காற்றடி விடுதலும்,

ஆனி பவுர்ணமிதினம் மதுராபுரியிலிருக்கும் ஸ்திரி புருஷர் சமேதராக யமுனாஜலத்தைக் கொண்டுவந்து கிருஷ்ணாபிஷேகஞ் செய்தலும்,

(ஜூன் ஜூலை மாதங்களில்)

ஆசுரசுத்தி 11-ல், மதுரா பிருந்தாவன ஜனங்கள் ஸ்ரீ கிருஷ்ணருடைய நான்குமாத தூக்கத்தைக் காக்கப் பல திவ்விய க்ஷேத்திரங்களையும், தீர்த்த கட்டங்களையும் ஸ்திரிபுருஷர் சமேதராக 20 கோசம் சுற்றிவருதலும்,

ஆசுரபவுர்ணமி தினம் காலசுத்தி ஸ்நானம்செய்து குருமாரை வணங்க மலைகளின்பேரிலும், மாடிகளின்பேரிலுமிருந்து மழை எப்போதுவருமென்று காற்றுவீசும் திசையாலறியும் உற்சவமும், காற்று வடக்கே வீசினால் சுபிக்ஷகாலமாம்.

(ஜூலை ஆகஸ்டு மாதங்களில்)

சிரவணமீ 3உ பிரிதரிசுவரர் கோயிலண்டை கரடிகுஸ்தி முதலான விளையாட்டுகளை நடித்தல்.

ஷை மீ 5உ பஞ்சதீர்த்தமேலா என்னும் பெயரால் விஸ்ராந்த கட்டம், ஞானவாபி, கோகர்ணேசுவரர் முதலான திவ்ய தீர்த்த ஸ்தலங்களை ஐந்துநாட்கள் சுற்றிவந்து வணங்குகிறார்கள்.

ஷை மீ 11உ மதுராபுரியைப் பத்துத்தரம் சுற்றிச்சுற்றிப் பூணூலைத் தரித்துக்கொள்ளல்.

சிரவண பவுர்ணமியன்று புத்திரீசுவரர் கோயிலுக்கடுத்த கிராமங்களில் மல்யுத்தங்கள் செய்யல்.

(ஆகஸ்டு செப்டெம்பர் மாதங்களில்)

புரட்டாசிமீ 8உ ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்மதினம்.

மேமீ 11உ மதுவனம், தலவனம், குமுதவனம் முதலான விடங்களுக்கு யாத்திரையும், 15 தினங்கள் வரையில் மதுராபுரியைச் சிங்கார கலியாணமண்டபங்களாகச் சிங்காரித்துப்பலவித உற்சவங்கள் நடனங்கள் வேடிக்கைகள் செய்தல்.

ஷை மீ 14உ ஆநந்தசவுதி என்னும் பெயரால் காலை முதல் மாலைவரையில் ஸ்திரிபுருஷர்கள் யமுனாநதியில் நீந்தி விளையாடி ஆநந்தமடைந்து மாலை நூதனவஸ்திராபரண புஷ்ப சந்தனாதிகளை யணிந்து பானவேடிக்கை செய்யல்.

(செப்டெம்பர் அக்டோபர் மாதங்களில்)

ஐப்பசிமீ 8உ மதுராபுரியைப் பலதடவை சுற்றிவருவதன்றியில் ஸ்ரீ கிருஷ்ணரைப்போலவும் கோபிகளைப்போலவும் விக்கிரகங்களைச் செய்துவைத்து வணங்கி ஸ்திரிபுருஷர்கள் கைகோர்த்து ரசக்கிரீடை நடித்தல்.

ஷை மீ 9உ சுமகநாத லீலா என்னும் பெயரால் ஸ்ரீ மஹாவித்தியர்கோயிலண்டை ஸ்ரீ இராம இராவணநாடகமாடி இராவணனுடைய குமாரன் மேகநாதன் இறந்ததைக் கொண்டாடல்.

ஷை மீ 10உ கும்பகர்ணன் லீலா என்னும் பெயரால் கும்பகர்ணன் சாவைப்பற்றிக் கொண்டாடல்.

ஷை மீ 11உ தசார்உற்சவம் என்னும் பெயரால் மேனுமஸ்ஜீதண்டை சிங்கார கொட்டகை கட்டி அங்கு இராமாயண நடனமாடுதல்.

ஷை மீ சுத்த பவுர்ணமி சாரத் புண்ணியம் என்னும் பெயரால் எல்லாக் கோவில்களில் விசேஷ பூஜைகளும் வேடிக்கைகளும் நடத்தல்.

(அக்டோபர் நவம்பர் மாதங்களில்)

கார்த்திகைமீ தீபாவளி, நகரமெங்கும் தீபகோடிகளில் வெளிச்சமும் புது வருஷமும்.

ஷை மீ 3உ கோவர்த்தன உற்சவம்.

கார்த்திகை சுத்தம் பிருந்தாவனத்துக்குப் போகும் வாசலில் ஸ்ரீ கிருஷ்ணர் கம்சனுடைய வண்ணானை யடித்ததாக டோபிமான லீலையைக் கொண்டாடல்.

ஷை மீ 8உ ஆக்ராவுக்குப் போகிற வழியில் கோசரன் என்னும் பெயரால் கோபாலா தோட்டத்தில் கோக்களைப் போஷித்தல்.

ஷை மீ சுத்தம் 9உ அக்ஷயநவமி என்னும் பெயரால் மதுராபுரியை ஸ்திரிபுருஷர்கள் நடுராத்திரியில் சுற்றிவரல்.

ஷை மீ 10உ கம்ஸபாதகமேலா என்னும் பெயரால் கம்சனைப்போல் ஒரு பெரிய பூதத்தைச் செய்துகொண்டு வந்து, ஸ்ரீ கிருஷ்ணர், பலராமர் வேஷங்களைச் சிறுபையன்கள் இருவருக்குப்போட்டு யானையின்மேலும் குதிரையின் மேலும் கொண்டுவந்து அந்தப் பூதத்தைச் சின்னபின்னப் படுத்தல்.

ஷை மீ 11உ ஸ்ரீ கிருஷ்ணருடைய நான்குமாத தூக்கத்திலிருந்து எழுப்பல்.

(ஜனவரி பிப்ரவரி மாதங்களில்)

மகசுத்தம் 5உ வசந்தபஞ்சமி என்னும் பெயரால் விடியற்காலத்தில்யமுனையில் ஸ்நானம்செய்து எதிர்ப்படும்கோவில்களுக்குப்போய் ஸ்ரீ கிருஷ்ணருடைய கதைகளைக் கீதங்களின் மூலமாகக் கேட்டல்.

(பிப்ரவரி மார்ச்சு மாதங்களில்)

பால்குணபவுர்ணமியன்று ஹோலி பண்டிகை. இந்த உற்சவத்தில் ஸ்திரிபுருஷர்கள் பலவர்ண சாயத்துணிகளைக் கட்டிக்கொண்டு காமவிகாரப் பாடல்களைப் பாடல்.

(மார்ச்சுமீ 13உ முதல் 30உ வரையில்)

கேசவதேவராலயத்தில் ஸ்திரிபுருஷர்கள் கும்பல் கும்பலாகக் கூடிப்பாடி நடித்தல்.

ஸ்திரிபுருஷர்கள் சந்தனபுஷ்ப தாம்பூலங்களோடும் சங்கீதங்களோடும் வீதிகளில் ஆநந்த பரவசமாகி நடித்துக்கொண்டு வந்து அநேக கோயில்களைத் தரிசித்தல்.

இன்னும் அநேக உற்சவங்களுண்டு.

இந்த மதுராபுரியில் வருஷ மாச வார தின உற்சவங்களும் வேடிக்கைகளும் பலவிதமாகக் கொண்டாடி வருவதன்றியில் பின்னும் பல விசேஷ உற்சவங்களுண்டு.

அவைவயெவையெனில்: இராஜமண்டலம், வனஜாத்திரை யோகி உற்சவங்களாம். அதாவது இந்த மதுராபுரியின் மேற்குப் பாகத்தில் யமுனை யாற்றங்கரையோரமாகச் சுமார் 42 மைல் நீளமும், 30 மைல் அகலமுமுள்ள இடத்தில் கோசி சாட்டா, மாதா, ரோஜில், மதுவனம் முதலான கிராமங்களிலும், கோகுலம், பிருந்தாவனம் முதலான இடங்களுக்கு 84 கோசதூரமுள்ள விடங்களிலும் ஸ்ரீ கிருஷ்ணரும், பலராமரும் தமது மாடுகளை மேய்த்தும், பலவிதமாக லீலைகளை நடத்தி வந்த விடங்களென்றும் கொண்டு ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருஷமும் பல உற்சவங்களைக் கொண்டாடிவருகின்றனர்.

இவ்விடத்தில் யமுனாநதியானது பிரம்மாண்டமும், இரமணியமுமானதாக விருப்பதால், அதன் ஜலத்தின் அழகும், மணலின் அழகும், கரையின் அழகும், கரையின்மேலிருக்கும் விருக்ஷங்கள், வனங்கள், பருவதங்கள், தடாகங்கள் முதலானவைகளின் அழகும் ஒப்பற்றவைகளா யிருக்கின்றன. இவைகளைச் சாதாரண ஜனங்கள் வந்து பார்த்தபோதிலும் பேரானந்தமடையும்படி செய்யும்போது, ஜகதீசுவரனே சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணாவதார மெடுத்துவந்து லீலைகளைச் செய்ததாக நம்பியிருக்கும் வைணவமத பக்திமான்கள் இந்த விநோதங்களைக் கண்டு வணங்காதிருப்பார்களோ? இந்த வனஜாத்திரையில் முக்கியமாகத் தரிசிக்கவேண்டியவைகளெவையெனில்,

மதுவனம், சுதலவனம், குமதவனம், பஹுலவனம், கதம்பவனம், கதிரவனம், பிருந்தாவனம், வில்வவனம், லோஹவனம் என்னும் 12 பெரிய வனங்களையும்; கோகுலம், கோவர்த்தனம், வாரசானம், நந்தகிராமம், சங்கேதம், பரமோத்திரம், அரிங்கவனம், சேஷாவனம், மதுவனம், அன்சகிராமம், கெலவனம், ஸ்ரீ குண்டம், காந்தர்வவனம், பாசவிவனம், விலக்குவனம், பக்காவனம், அதியதிரவனம், காமல்வனம், அசோகவனம், பைசியவனம், கோகுலவனம், ததிகிராமம், கட்டவனம், இராவலவனம் முதலான உபவனங்களும் தரிசிக்கவேண்டிய புண்யஸ்தலங்களென்றும், அந்த ஸ்தல புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கி. பி. 1553ஹு பிரகாசித்த நாராயண பட்டரென்னும் மஹாவைணவ மதாசாரியர் எழுதிய விரஜாபக்தவிலாசம் என்னும் கிரந்தத்தில், பரமான்ச சம்ஹிதையின்படி இந்த மதுராபுரி

யைச் சுற்றிலும் 133 புண்ணிய வனங்களும், இவைகளில் 91 யமுனையின் வடகரையின்மேலும், 42 யமுனையின் இடது கரையின்மேலு மிருக்கிறதாகவும் அவற்றின் பெயர்களைப் பின் வருகிறமாதிரி எழுதியிருக்கின்றனர்.

1. மஹாவனம், காமியவனம், கோகிலவனம், தலவனம், குமுதவனம், பாந்தரிவனம், சதாவனம், கதலிவனம், லோஹவனம், பாத்ரவனம், பஹுலவனம், வில்வவனம், பல்லவ வனம் என்ற பெரிய வனங்களும்;

2. பிரம்மவனம், அபஸரவனம், விஹலவனம், கதம்ப வனம்,சுவர்ணவனம். சுராபிவனம்,பிரேமவனம், மயூரவனம், மானங்கதிவனம், சேஷசாயிவனம், நாரதவனம், பரமாநந்த வனம் என்றும் 12 உபவனங்களும்;

3. பிரதிவனம், இரங்காவனம், வார்த்ரவனம், கோல வனம், காமியவனம், அஞ்சனவனம், காமவனம், கிருஷ்ண சிங்காரவனம், நந்தபிரகாசனவனம், இந்திரவனம், சிக்ஷா வனம், சாந்திரவதிவனம், லோஹாவனம் என்றும் 12 பிரதி வனங்களும்;

4. மதுரை, இராதாகுண்டம், நந்திகிராமம், கதஸ்தானம், லலிதாகிராமம் விருஷபானுவனபுரம், கோகுலம், பலதேவம், கோவர்த்தனம், ஜவாவனம், பிருந்தாவனம், சங்கீத வனம் என்றும் 12-ம் ஆதிவனங்களென்றும், இவைகளன்றியில்,

5. 12 தபோவனங்களும், 12 மோக்ஷவனங்களும், 12 காமவனங்களும், 12 அர்த்தவனங்களும், 12 தருமவனங்களும், 12 சித்திவனங்களும், சேவியவனங்களென்றும் இவைகளைத் தரிசித்துச் சுற்றி வருவதினால், சகல பாவங்களைப்போக்கி ஜன்மசாபல்லியம் கொடுக்கும் என்றும் ஷை கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன ஒவ்வொரு சிங்கார வனமும் ஒவ்வொரு தேவதையின் பெயரால் வணங்கப்பட்டுவருகின்றது.

அதாவது:—மஹாவனத்தில் பலதேவருக்கும், கம்ப வனத்தில் கோபிநாதரையும், நடவீரியருக்குக் கோகிலவனத்தையும், தாமோதரருக்குத் தலவனத்தையும், கேசவதேவருக்கு குமுதவனத்தையும், ஸ்ரீதாருக்குப் பண்டரிவனத்தையும், பத்மநாபருக்கு பஹுலவனத்தையும்;ஜனார்த்தனருக்குப் பல

வனத்தையும், ஆதிபுத்திசுவரர்க்குப் பரமாநந்தவனத்தையும், பரமேசுவரருக்குக் கதம்பவனத்தையும், யசோதாநந்தனருக்கு நந்தகிராமத்தையும், கோகிலசந்திரருக்குக் கோகுலத்தையும், முரளிதாரருக்குக் காளவனத்தையும், லீலாகமலலோசனருக்கு ஹாசியவனத்தையும், லோகேசுவரருக்கு உபகாரவனத்தையும், இலங்காதிலீப குலதுவனிசிதாதருக்கு ஐஹ்னுவனத்தையும், ஸ்ரீ லக்ஷ்மணமூர்த்திக்கு பஹுலவனத்தையுமாக ஒவ்வொரு வனத்துக்கு ஒவ்வொரு மூர்த்தியை ஸ்தாபித்துக் கணக்கற்ற ஜனங்கள் கண்டு வணங்கிவருகிறார்கள். எப்படியெனில்,

முதலில் யாத்திரைக்காரர் மதுராபுரியைவிட்டு அதற்குத் தென்மேற்குத்திசையில் ஐந்துமைல் தூரத்திலிருக்கும் மஹோலி என்னும் கிராமத்துக்கடுத்த மதுவனத்துக்குப் போய் அங்கு சத்ருக்னன், லாவண இராக்ஷஸனைக் கொன்றவிடத்தில்போய் சுத்தி ஸ்நானஞ்செய்து வணங்க, அந்த வனத்தைச் சுற்றிவந்து அதற்குத் தெற்கேயிருக்கும் ஈச்சம் பனைமரங்களடர்ந்த திலவனத்துக்குப் போகவேண்டும். அங்கு பலராமர் தேனுகாசுரனென்னும் இராக்ஷஸனைக் கொன்றபடியால் ஸ்நானஞ்செய்து வணங்கி அந்த வனத்தைப் பலதடவைச் சுற்றி அடுத்திருக்கும் குமுதவனத்துக்குப் போகவேண்டும்.

இங்கே பலவிதத் தாமரைகளால் சிறந்த தடாகத்தில் குளித்துச் சுற்றிவந்து பிறகு அடுத்திருக்கும் பஹுலவனத்திற்குப் போகவேண்டும். இந்த பஹுலவனத்தில் ஒரு காலத்தில் ஓர் கொடிய புலி மேய்ந்துகொண்டிருந்த பசுவைத் தாக்க, அது தன் இளங்கன்றுக்குப் பால் கொடுத்து வருவதாகச் சத்தியம் செய்துபோய்த் திரும்பி வந்துபார்க்க புலியைக் காணாமல் பாலகிருஷ்ணர் இருக்கக்கண்டு பசு சரணாகதியடைந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்த வனத்திலிருக்கும் கிருஷ்ணகுண்டத்தின் கரையின்மேல் கட்டப்பட்ட கோயிலில் வணங்கிச் சுற்றிவந்து பிறகு தாசி, ஜர்கி கிராமம், முகாரி முதலான கிராமங்களைத் தாண்டி இராதாகுண்டத்துக்கு வரவேண்டும். இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் அரிஸ்தா என்னும் இராஜன் விருஷப வேஷமாக வந்தவனைக் கொன்று தீட்டைப் போக்க இரண்டு தீர்த்தங்களையுண்டாக்கியதாகச் சொல்லுகிறபடியால், இந்தத் தடாகங்களில் ஸ்நானம்செய்து வணங்கிப் பலதடவைகள் வரையில் சுற்றிவந்து கோவர்த்தனத்துக்குப் போகவேண்டும். அங்கு குல்லாலகுண்டம், மதுவனகுண்டம்,

சந்திரசரோவரம், மானஸசரோவரம் முதலான தடாகங்களில் ஸ்நானம் செய்து, ஷை சந்திரசரோவரத்தண்டை பிரம்மாவானவர் ஒரு இராத்திரியை ஆறுமாதகாலம்வரையில் நீடிக்கச் செய்து கோபிகைகளோடு நடித்து ஆநந்தப்பட்டதால் அந்த விடத்தை விசேஷமாக வணங்கிச் சுற்றிவரவேண்டும். இந்த சரோவரத்துக்கு இராஜா நபார்சிங்கு, பரதப்பூர் மஹாராஜர் சிங்காரமான படிக்கட்டுகளைக் கட்டிவைத் திருக்கின்றனர். இந்த சரோவரத்துக்கு அருகிலிருக்கும் பேய்தா அதாவது இந்திரன் கோபாலர்கள்மீது கோபித்துக்கொண்டு இடியும் மழையும் பெய்யும்படி செய்தபோது கோபாலர்கள் வந்து தங்கியவிடத்தைத்தரிசித்துப் பலதடவை சுற்றிவந்து கிராகா ஜா என்னும் மலையின்மீது ஏறி அப்புறத்திலிருக்கும் அனியார் என்னும் இடத்துக்கு வரவேண்டும். இதே மாதிரியாகவே சுசந்திசிலா, சிந்தாசிலா, சுந்தர்சிலா மலைகளையும் பார்த்துச் சுற்றி வணங்கிக்கொண்டு அடுத்திருக்கும் கோவர்த்தனநாதர், கோபாலபூர் முதலான தேவஸ்தானங்களைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் இராதாவுக்குத் திருமங்கல்யம் தரித்த சிந்தூரி என்னும் இடத்திற்கு வரவேண்டும்.

இப்படி கிருஷ்ண இராதா குண்டங்களில் ஸ்நானம் செய்து வணங்கித் திருக்கோவில்களைச் சுற்றிவந்து திரும்பினால், கம்பவனம் தோன்றுகிறது. இங்கு பரதப்பூர் தாசில்தாரர் கச்சேரி தோன்றுகிறது. இதற்கும் மதுராபுரிக்கும் 39 மைல்தூரம். இங்கு லோகலோகா குகையும், அகிகவரர் குகையும் இருக்கின்றன. இவைகளைப் பார்த்துக்கொண்டு கனவர் கிராமத்தின் மேல்வந்தால் பலதேவருடைய புராதன கோயிலிருக்கிற அன்ச கிராமத்துக்குக் கொண்டுவந்துவிடுகிறது. இங்கிருக்கும் பெரிய மலையின்மேலேறிப்போனால் வாசன்வம் என்னும் இடமிருக்கிறது. இந்த விடத்தில்தான் இராதாதேவியை வளர்க்கப்பட்டதாம். அருகில் சக்கசவுளி என்னும் இடமிருக்கிறது. இந்த இடத்தில் எசோதை தயிர் கடையும் மத்தைக் கழுவியதாகச் சொல்லுகிறார்கள். மேலும் இந்த விடத்தில் இராதாவும் கிருஷ்ணரும் அன்னியோன்னிய சிநேகிதராக ஆடிக்கொண்டிருக்கும்போது இவர்கள் மனைவியும் புருஷனுமாகிவிடுவார்களென்று எண்ணியதாகச் சொல்லுகிறார்கள். இவ்விடத்திலும் ஒரு பிரமசரோவர மிருக்கிறது. இந்த விடத்தில்தான் ஸ்ரீகிருஷ்ணர் ராதையோடு இரகசிய சிநேகம் செய்தவிடமாம். பிறகு சங்கேத விடத்தைத் தரிசிக்கவேண்

டும். இந்த இராதாவின் பிரியசகி சந்திராவளி பிறந்தவிடமாகக் கொண்டாடிவருகிறார்கள்.

பிறகு நந்தகிராமத்துக்குப் போகவேண்டும். இங்கு நந்தனும் எசோதையும் பல வருஷங்களாக வாழ்ந்துவந்த விடமாகையால் இதையும் வணங்கிச் சுற்றிவரவேண்டும். இங்கே இருக்கும் மலையடிவாரத்தில் பான்சரோவரம் என்னும் தடாகமிருக்கிறது. இவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் மாடுகளுக்குத் தண்ணீரைக் காட்டிக்கொண்டு வந்தமையால் இதையும் வணங்கிச் சுற்றி வரவேண்டும். பிறகு அடுத்திருக்கும் கேரளமென்னும் இடத்தைத் தரிசிக்கவேண்டும். இங்கே காமினி என்னும் இராதாவின் சகிக்கு ஸ்ரீ கிருஷ்ணர் பிரத்தியக்ஷமாகிச் சுகங்கொடுத்தாராம். இந்த இடத்திற்குச் சமீபத்தில் அஞ்சநீகம் என்னும் இடமிருக்கிறது. இங்கே இராதாவின் நேத்திரத்தில் கண்ட நோயைத் தீர்த்தவிடமென்று வணங்கிவருகிறார்கள். பிறகு அடுத்திருக்கும் கதரிவனமென்னும் அசோகவனத்தைச் சுற்றிவரவேண்டும். இங்கு கிருஷ்ணன், வசந்தகாலத்தில் இராதையோடு நடித்ததாக வதந்தி. பிறகு குமாரவனம், ஜாவகாதி வனங்களைத் தரிசிக்கவேண்டும். இந்த வனங்களில் ஸ்ரீ கிருஷ்ணர் இராதையின் கால், கை நகங்களுக்கு மருதாணி வருணம் பூசியதாக வதந்தி. பிறகு அருகிலிருக்கும் கோகிலவனத்தைத் தரிசிக்கவேண்டும். இங்கிருக்கும் சிங்காரவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் வேணுநாதத்தை வாசித்தபோதே இந்திரன் ஐராவதயானையின்மேல் வந்துகேட்டு ஆனந்தமடைந்தார். இங்கு ஸ்ரீ கிருஷ்ணருடைய பாதம் வைத்திருப்பதால் வணங்கிச் சுற்றிவரவேண்டும். பிறகு யாத்திரைக்காரர் அடுத்திருக்கும் ததிகிராமத்துக்குப் போகவேண்டும்.

இங்கு கிருஷ்ணர் பலராமரைப் பசுக்களோடு அனுப்பிவிட்டுப் பால்காரிகளனேகருக்குத் தெரியாமல் மறைந்திருந்து அவமானப்படுத்தியவிடமென்று ஒரு கோயிலிருக்கிறது. இதை வணங்கிச் சுற்றிவந்து வடமூலையிலிருக்கும் கடவனத்துக்குப் போகவேண்டும். இந்தவிடத்தில் கிருஷ்ணர் தனது நிஜஸ்வரூபத்தைக் காட்ட ஸ்ரீமந்நாராயண அவதாரம் பூண்டு ஆதிசேஷாவதாரமாகச் செய்ய கோபி ஸ்திரீகள் பயந்து பூஜை செய்தபடியால் இங்கிருக்கும் கோயிலைத் தரிசித்துப் பலதடவை சுற்றிவரவேண்டும். பிறகு யாத்திரைக்காரர் யமுனையாற்றங் கரையோரத்திலிருக்கும் கேளிகவனத்திற்கு வரவேண்டும். இந்தவிடத்தில் கிருஷ்ணர் கோபிகளுடைய சேலை

களை எடுத்து நந்திகிராமத்துக்குக் கொண்டுபோனபடியால் இந்தப் படிக்கட்டுகளிலும் பலதடவை சுற்றிவந்து வணங்க வேண்டும். பிறகு யாத்திரைக்காரர் பக்காவனத்துக்குப் போக வேண்டும். இந்தவிடத்தில்தான் பகாசுரன் வதைக்கப்பட்டதும், கம்சனுல் கொல்லப்பட்ட அக்குரூரார் முதலானவர் வந்து சந்தித்ததும், கோபிஸ்திரீகள் முதல்முதல் கிருஷ்ணருக்கு அடிமைப்பட்டதுமான விடமாகையால், இவ்விடத்தில் பல விடங்களில் தீர்த்தமாடி வணங்கிச் சுற்றிவரவேண்டும். பிறகு ஆற்றைக் கடந்து பலிவனம், பண்டிர் வனங்களுக்குப் போக வேண்டும். இவ்விடத்தில் பலவிடங்களில் தீர்த்தமாடி வணங்கிச் சுற்றிவரவேண்டும். பிறகு ஆற்றைக் கடந்து பலிவனம், பண்டிர்வனங்களுக்குப் போகவேண்டும். இவ்விடத்தில் மானசசரோவரமிருக்கிறது. இதைப் பார்க்கப்பட்டவர்களுக்குப் பரமாநந்தத்தைக் கொடாமலிராது. பிறகு பஹுலாவனத்துக்குப் போகவேண்டும். இங்கு இராதாவின் தாயார் வீடு இருக்கிறது. இதைச் சுற்றிவந்து வணங்கவேண்டும். இந்த வனத்துக்கருகில் புரீபகேர என்னும் கிராமமிருக்கிறது. இது இராதாவின் முக்கிய சகியாகிய மானவதி என்பவளுடைய ஜனனஸ்தானம். இவளை, கிருஷ்ணர் அவளது சொந்த புருஷனைப்போல வேஷம்போட்டுவந்து எடுத்துக்கொண்டுபோய்விட்டார். பிறகு யாத்திரைக்காரர் பண்டிகிராமத்துப் போகவேண்டும். இங்கு எசோதையின் தாதிகளாகிய பண்டி, ஆநந்தி என்பவர்கள் பிறந்ததன்றியில் இதற்குச் சமீபத்தில் பலதேவருடைய பிரபலமான கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இதைத் தாண்டிவந்தால் சிந்தாஹராம் பிரம்மாண்டம் என்னும் இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. இங்கு கிருஷ்ணர் மண்ணைத்தின்றதாகக் காட்டாளிகள்போய் எசோதையினிடம் சாடிசொல்லி எசோதை ஒரு சிறுகோலெடுத்து அடிக்கவர, அப்போது கிருஷ்ணர் வாய் திறந்து காட்ட, அந்த வாய்க்குள் அண்டபிண்டசராசரங்க ளிருந்தனவாம். இங்கிருக்கும் கோயில்களைச் சுற்றி வணங்கிக்கொண்டுவந்தால் பக்கத்தில் மஹாவனம், கோகுலம் முதலான பின்னும் விசேஷமான புண்ணிய ஸ்தலங்களும், தீர்த்தங்களும், தடாகங்களும், மதனமோஹனர், மாதவராயர், விரஜேஸ்வரர், கோகுலநாதர், நவநீதப்பிரியர், துவாரகநாதர் முதலான கோயில்களைச் சுற்றித் தரிசித்துக்கொண்டு யாத்திரைக்காரர் கடைசியாக மதுராபுரிக்குத் திரும்பி விஸ்ராந்தகட்டமென்னும் கிருஷ்ணர் இளைப்

பாதி வந்துவிடுவது வழக்கம். இப்படி இந்த மதுராபுரியில் சுற்றி வரவேண்டிய திவ்வியஸ்தல திவ்விய தீர்த்தங்கள் அநந்தமாக இருப்பதன்றியில் விசேஷ உற்சவ பண்டிகைகளும் அநந்தம். அவைகளில் முக்கியமானது ஹோலிபண்டிகை.

இந்த பண்டிகையானது பரசன்னு என்னும் கிராமத்தில் பெப்பிரவரிமீ 22உ இரங்கியாஹோலி என்னும் பெயரால் கொண்டாடப்பட்டது. அந்தக்கிராமத்தை யடுத்த ஒரு மைதானத்தில் பிரமாண்டமான கோயில்களும் மண்டபங்களுமிருக்கின்றன. அந்தவிடத்துக்கு அந்தகிராமத்திலும் அடுத்த கிராமத்திலும் இருக்கும் ஸ்திரிபுருஷர்கள் பலவித வர்ணங்களாலும், சரிகைகளாலும் செய்யப்பட்ட துணிகளையும் ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு கும்பல் கும்பலாக வந்து எதிரிலிருக்கும் ஒரு சிறுமலையின்மேலேறி பெரியமூங்கில் தடிகளைக்கொண்டு சாலா சாலா என்றுதி வெட்கக்கேடும், வண்டைத்தனமுமான பாட்டுகளைப்பாடி கீழேபடித்தாடிக்க, அவர்களுடைய புருஷர்கள் எதிரில் நின்று அதேமாதிரியாகவே பாடித் தடிகொண்டு அடித்து நடிக்கிறார்கள். இப்படியடித்து நடிப்பதற்குக் காரணம்: இந்தக் கிராமம் ஸ்ரீ ராதாவின் ஜனன ஸ்தானமாகவும், இவ்விடத்திய ஜனங்கள் இராதாவின் சகோதரர்களாகவும், அடுத்திருக்கும் நந்தகிராமத்தின் ஜனங்கள் கிருஷ்ணருடைய சகோதரர்களாகவும் கொண்டு மாமன் மச்சான் சண்டையென்று சொல்லுகிறார்கள். இதேமாதிரியாகவே நந்தகிராமத்திலும் பிரதிவருஷம் நடக்கிறது.

பிப்ரவரிமீ 27உ பேலன் என்னும் கிராமத்தில் ஒரு ஹோலி பண்டிகை நடந்தது. அந்த பண்டிகையில் சுமார் 5000 ஜனங்கள் சாயந்திரம்கூடி பிரஹலாதர் ஹிரணியகசிபனைக் கொல்லுவதற்குக் காரணமாகவிருந்த நரசிம்மநாடகத்தை வெகு விநோதமாக நடத்தினார்கள். அதாவது ஒரு பெரிய அக்கினிகுண்டமுண்டாக்கி பெருநெருப்புப் பிரகாசிக்கச்செய்து அதைச்சுற்றி ஆண்மக்களும் பெண்மக்களும் சுற்றிச்சுற்றி வந்து சிலசமயங்களில் குதித்துக்கொண்டாடுகின்றார்கள். இதேமாதிரியாகவே கோசிமுதலான கிராமங்களிலும் பலவித புராண கதைகளை ஆதாரமாகக்கொண்டு பலவித வேடிக்கைகளைச் செய்வதன்றியில் பிருந்தாவனம் முதலான சிலவிடங்களில் இராஜலீலா நடனம் அதாவது 17-ஆம் நூற்றாண்டின் கடைசியில் பிறந்த ஒரு கோஷாயினால் எழுதப்பட்ட பக்திமாலா என்னும் பாட்டுகளைப பாடிக்கொண்டும்

சுந்தரமான ஸ்திரீபுருஷர்கள் சிங்காரமான ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டும் பெரிய கோயில்களிலும் வனங்களிலும், ஸ்திரீ புருஷர்கள் பேதமற்றுக் கைகளைக் கோர்த்துக் கொண்டும் இராதா கிருஷ்ணருக்குப் பிரதிநிதிகளாகக் காமவிகாரமான பாட்டுகளைப் பாடிக்கொண்டு சங்கீத வாத்தியங்களோடு கூடிப்பதை என்னென்று சொல்லலாம். போய்ப்பார்ப்பவருக்கே விளங்கும். இப்படி இந்த மதுராபுரியும், இதைச்சுற்றியிருக்கும் யாத்திரைஸ்தலங்களையும், உற்சவவேடிக்கைகளையும் பார்ப்பவருக்கு இந்த மதுராபுரி இந்த இந்துதேசத்தில் சிறந்த பரிசுத்தமான இந்துப்பட்டணமாகத் தோன்றி இங்கேயே குடிபுகுந்து காலத்தைப்போக்கத் தீர்மானிப்பர். பூமியானது யமுனையாற்றின் சமீபத்திலிருப்பதோடுகூட பலவித நீர்ப்பாய்ச்சலினால் சகல பதார்த்தங்களும் செழிப்புடன் வளர்ந்து நயமான விலைக்கு அகப்படுவதன்றியில், மதுராபுரி பட்டணமே பார்வைக்குப் பிரம்மாநந்தத்தைக் கொடுக்கும். எங்கே பார்த்தபோதிலும் வழுடுங்கு எட்டடுக்கு மேடை மெத்தைகளும், அந்த மெத்தைகளின்மீது பலவிதத்திலும் சிறந்தபெண்களும், பஞ்சவர்ணக்கிளிகளும், புறக்களும், சிங்காரமாக வீற்றிருந்து பார்ப்பவர்பார்வைக்குத் தேவருலகம்போலத் தோன்றுவதன்றியில் வீடுகளிலும், வீதிகளிலும் அநேக உத்தமகுல ஸ்திரீகள ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றிப் பலவிதமாக ஆடிப் பாடி ஆநந்தத்துடன் யமுனையாற்றிற் குளித்து, கும்பல் கும்பலாகவும் கட்பிரமாகவும் நடந்துவருவதையும், இப்படி நடந்துவரு மங்கையர், ஸ்ரீ கிருஷ்ணர் பக்தியினால் ஆடிப்பாடி ஆநந்தபரவசமாகி மெய்மறந்து கீழேவிழ, மற்ற மங்கையர் தாங்கி கிருஷ்ணபஜனை செய்வதையும் காணும் எவர் மனதுக்குத்தான் ஆநந்தத்தைக் கொடுக்கமாட்டாது. இந்த மதுராபுரியில் ஒவ்வொரு பசுமாடு மநுஷப்பிரமாணத்துக்கு உயரமாக வளர்ந்து செழிப்புடன் கும்மாளம்போடும் பெருமையை யாம் எங்கும் கண்டதில்லை. இங்கு பசுக்கள் பிரம்மாண்டமாக வளர்ந்து ஏதேஷ்டமாகப் பாலைக்கொடுப்பதால் இரமணீயமான பால்கட்டித் தயிரானது கடைவீதிகளில் அதிக நயமான விலைக்கு விற்கப்பட்டுவருகிறது. ஸ்திரீபுருஷ ஜனங்களும் அதிக தேன்புடனும் சுந்தரமுகத்துடனும் சதா ஸ்ரீ கிருஷ்ணருடைய பக்தியில் ஈடுபட்டவர்களாகித் தங்கள் வீடுமாடிகளில் உட்கார்ந்து கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று கீதங்கள் பாடிக் காலங்கழிக்கின்றனர்.

இந்த மதுரா (பரகன்னு)கஸ்பாவானது இந்த ஜில்லாவுக்கும் தாலூக்காவுக்கும் பிரதான பட்டணமாயும், 401 சதுர மைல் விஸ்தீரணமுள்ளதாயும், 220307 குடிகள்வசிக்கப்பட்டதாயும், 247 கிராமங்களுக்கு முக்கிய பட்டணமயும், வருஷம் ஒன்றுக்கு 214336 ரூபாய் நிலக்கந்தாய வருமானத்தைக் கொடுப்பதாயும், கலெக்டர் கச்சேரி, ஜட்ஜி, முனிசிபு, தாசில், போலீசு முதலான கச்சேரிகளை யுடையதாயும், குடிகளுடைய சுகத்துக்குவேண்டிய பலவித சாதனங்களை யுடையதாயுமிருக்கிறது. இவ்விடம் ஆரிய சமாஜசபை இருப்பதோடுகூட மதுராவிருத்தாந்தமென்னும் பத்திரிகையும்பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. இந்தப்பட்டணத்தைச் சார்ந்த கோகுலத்தில் ஸ்ரீகிருஷ்ணர் வளர்ந்தும், அதையடுத்த பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் லீலைகளைச்செய்தும், அதற்கடுத்த கோவர்த்தனத்தில் அநேக அற்புதங்களைச்செய்தும் வந்தபடியால், ஸ்ரீ கிருஷ்ணருடைய அவதார ஸ்தானமாகிய மதுராபுரியின் சரித்திரத்தை இம்மட்டோடே விட்டு, இனி ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்த உடனே அவரது திருத்தகப்பனரால் கொண்டுபோகப்பட்டு எசோதையினால் வளர்க்கப்பட்ட கோகுலம் என்னும் இடத்தையும் அதையடுத்த விசேஷ விடங்களையும் பற்றிச் சொல்வோம்.

மஹாவனம், கோகுலம், பலதேவம்.

ஸ்ரீ கிருஷ்ணர் வளர்ந்த விடமாகிய கோகுலமென்னும் கிராமமானது மதுராபுரிக்குச் சுமார் ஐந்தாறு மைல் தூரத்திலிருக்கும் மஹாவனம் என்னும் ஒரு பெரிய கிராமத்துக்கு அடுத்து ஓடும் யமுனையாற்றங்கரையிலிருக்கும் ஒருசிறு கிராமம். இந்த மஹாவனமானது ஒரு காலத்தில் பிரம்மாண்ட புலிக்காடாக இருந்ததென்று சரித்திரம் முறையிடுகின்றது. அதாவது, கி. பி. 1634௵ சாஜிஹான் சக்கிரவர்த்தி வேடிக்கையாக வேட்டைக்கு வந்தபோது இங்கே ஒரேநாளில் நான்கு வேங்கைப் புலிகளைக் கொன்றதாகத் தெரியவருகிறது. இம்மட்டேயல்ல, 1234௵ மகமது கஜினி படையெடுத்து இந்த பிராந்தியங்களுக்கு வந்து கொள்ளையடித்தது முதல் 1526௵ பேபர் படையெடுத்து வந்தபோதுங்கூட இந்தவிடத்தில் பிரம்மாண்ட வனங்களிருந்ததாகச் சரித்திர மூலமாகத் தெரியவருகிறது. அப்போது இந்தப் பிராந்தியங்களில் அநேக பெரியகோவில்கள் கட்டப்பட்டிருந்தன. பிறகு

மகமதிய அரசர்கள் அடிக்கடி படையெடுத்துவந்து கொள்ளை யிட்டுக் கோவில்களை இடித்துவிட்டபடியால் அந்தக் கோவில்கள் இருந்த இடமே தெரியவில்லை. இப்போது மதுராநாதர் கோவில் மாத்திரம் பிரம்மாண்ட உருவுடையதாய்ச் செங்கற்களினால் கட்டப்பட்ட பழைய கோவிலாக விருக்கிறது. இந்தக் கோவிலில் பூஜை செய்யும் பூஜாரிக்குத் தினம் ஒன்றுக்கு இரண்டு ரூபா சம்பளம் இந்திய மஹாராஜா கட்டளையால் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த மஹாவனத்தின் பெரும் பாகம் மலைநாடாக இருக்கிறதன்றியில், ஸ்ரீ ராணுகத்தார் இராஜாவால் கட்டப்பட்ட பழையகோட்டை யொன்றிருக்கிறது. இதற்குச் சமீபத்தில் சயம்லாலா அவர்களால் கட்டப்பட்ட பழைய கோவிலொன்று இருக்கிறது. இந்தவிடத்தைத்தான் எசோதையானவள் தன் பெண்குழந்தையாகிய துர்கையைப் பெற்றவிடமென்று சொல்லுகிறார்கள். இங்கு ஸ்ரீகிருஷ்ணர், கட்டிலில் தூங்குவதைப்போல ஒருசிறுகட்டிலில் ஸ்ரீகிருஷ்ண விக்கிரகத்தைப் போட்டு இருபக்கங்களிலும் எசோதையும் நந்தனரும் தாலாட்டும் பாவனையாக இரண்டு சிலிட்டுப் பிரதமைகளைச்செய்து நிற்கவைத் திருக்கின்றனர். இங்கே பிள்ளைகளைப் பெற்ற பெண்கள், பெற்ற ஆறும்நாள் வந்து தம் குழந்தையை ஸ்ரீகிருஷ்ணர் பாதத்திற்போட்டு வணங்குகிறார்கள்.

இந்தக் கோயிலுக்குச் சமீபத்தில் அசிகம்பா என்னும் நந்தகோபனுடைய 80 கம்பங்களுள்ள அரண்மனை இருக்கிறது. இதையும் அரங்கஜிபினால் இடித்துக்கிடந்த சாமான்களைக் கொண்டே பக்கம் ஒன்றுக்கு 26 கம்பங்களாக ஐந்து வரிசையாக ஒரு மஸ்ஜிது கட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் கம்பங்களில் முதலிலிருக்கும் நான்கு கம்பங்களுக்குச் சத்தியயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுக கம்பங்களென்று சொல்லுகிறார்கள். இந்தக் கட்டிடங்களின் கீழே வெட்டிப்பார்த்தால் அநேக புத்தமத விக்கிரகங்களகப்படுவதால் இந்த மஹாவனமும் ஒரு காலத்தில் புத்தருடைய சுவாதீனத்தி லிருந்திருக்கவேண்டுமென்று தோற்றுகின்றது. இந்த மஹாவனத்தைப்பற்றிப் பிரம்மாண்ட புராணத்தில் பிரபலமாகச் சொல்லப்பட்டு இதைச் சுற்றில் இருபத்தொரு தீர்த்தங்களும் ஸ்தலங்களு மிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இங்கே யமுனைக்கரையிலிருக்கும் பிரம்மாண்ட கட்டடத்தில் இராசக்கிரீடை உற்சவத்

பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடத்தப்பட்டுவருகிறது. இதற்காக மிருத்திகபிஹாரி என்னும் ஒரு பெரியகோயில் முகுந்தசிங்கு என்பவரால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த இடத்திற்கும் இராமனசெட்டி என்னும் இடத்திற்கும் இடையில் சேரல்வனம் என்று ஒரு அழகிய பூவரசுமரங்களின் தோப்பும் இருக்கிறது. இங்கே கோபிகட்டம் என்னும் சிறிய தடாகமும் இருக்கிறது. இந்த மஹாவனத்தில் இராமலீலா என்னும் உற்சவத்தை விசேஷமாகக் கொண்டாடிவருகிறார்கள். இப்போது இந்த மஹாவனம் ஸ்ரீகிருஷ்ணர் பாலலீலைகளைச்செய்து தமது மாடுகளை மேய்த்துவந்தவிடமாகையால், இந்த மஹா பரிசுத்தவிடமாக வணங்கிவருகிறார்கள். இதில் 6182 ஜனங்கள் குடியிருக்கிறார்கள். இவர்களில் மகமதியர்கள் 1704 பெயர். இவர்களும் சிறிய மஸ்ஜீதுகளையும் கோவில்களையும் கட்டிக்கொண்டு கொண்டாடிவருகிறார்கள்.

கோகுலம்.

இந்தக் கோகுலகிராமம் யமுனையாற்றங்கரையில் தூரத்திலிருந்து பார்ப்பவர் கண்ணுக்குப் பல விநோதங்களோடு தோன்றும் சிறு கிராமம். இப்போது இதில் 4012 குடிகள் தான் வதிந்து வருகிறார்கள். இவர்களில் முக்காலே மூன்று வீசம்பெயர் யாதவரென்னும் இடையர்கள். இவ்விடத்திலிருந்து தயிர் பால்நெய் முதலானவைகளை மதுராபுரிக்குக்கொண்டு போய் விற்றுவிட்டு வருகின்றனர். இவ்விடத்திய ஸ்திரீகள் சுந்தரவதிகளாக இருக்கிறதோடுகூட பூர்வகால வழக்கப்படி தங்களுடைய பாவாடை இரவிக்கைகளை அவிழ்த்து யமுனையாற்றங்கரையில் போட்டுவிட்டு நிர்வாணமாக நடந்துபோய்ச் சுமார் முக்கால்மைல் தூரத்திலோடும் யமுனையாற்றில் ஸ்நானம் செய்கிறார்கள். பரபுருஷர்கள் பக்கத்தில் போனாலும், பக்கத்திலிருந்து குளித்தாலும் சுபாவமான லஜ்ஜையென்பதே கிடையாது. இப்படி வெட்கம் கெட்டு நிர்வாணமாகப் போய்க் குளிப்பது தகாத வழக்கமென்று கவர்ன்மெண்டார் கண்டித்து வந்தாலும் பண்டைய பழக்கவாசனை சீக்கிரத்தில் மாறுமென்று தோற்றவில்லை. இந்த சுந்தரவதன ஸ்திரீகள் ஸ்நானபானத்துக்குப் போகும்போது ஸ்ரீ கிருஷ்ணா! ஸ்ரீ கிருஷ்ணா!! என்கிற முடிவோடுகூடிய கீதங்களைப் பாடிக்கொண்டே போகிறதன்றியில் மிதமிஞ்சிய பக்தியினால் நின்றவி

டத்தில் நிர்வாணமாகவே நின்று கரங்களாலும் கண்களாலும் அபிநயங்களைக் காட்டி ஸ்ரீ கிருஷ்ணனைப்பாடி நடக்கின்றார்கள். அப்படி ஆடும் அரிவையருடைய அழகு பெற்ற அவயவங்களைக் காண்போருக்குக் கேவலமான காம இச்சையில் கருத்துப் போகாமல், கர்த்தருடைய லீலாவிபூதியென்று கண்ணீர்வடித்து பக்தி அதிகரிக்கின்றது. இந்தக் கோகுலத்தின் வீதிகளும், சந்துகளும், வீடுகளும் சுத்த ஆபாசமாகவிருக்கின்றன. மழை காலத்தில் பாட்டைசாரிகளுக்குப் பலவித கஷ்டங்களுண்டாகும். சன்னுசேட்டென்பவர் ஒரு பெரிய தெப்பக்குளத்தைக் கட்டியிருக்கிறார். இதில் பல வர்ணமான நீர்க்கோழிகள் எதேஷ்டமாக மேய்ந்து திரிவது பார்ப்பவருக்கு அழகாகவிருக்கின்றன.

இவ்விடத்தில் 2440 ரூபாய் செலவில் ஒரு புது பாடசாலை கட்டப்பட்டிருக்கிறது. 1511ல் இங்கு கட்டப்பட்ட கோகுலநாதர், மதனமோஹனர், விட்டலநாதர் என்னும் மூன்று பெரிய கோயில்கள் தவிர மற்றக் கோயில்களெல்லாம் சிறியவைகளும் அழகற்றவைகளுமாகவிருக்கின்றன. இம்மூன்றில் விட்டலநாதர் கோயில் யமுனையாற்றங்கரையில் யசோத கட்டத்திலிருக்கிற கட்டடம். இதுவும் இடிந்துகொண்டு வருகிறது. எசோத கட்டமானது யமுனையாற்றங்கரையில் ஒரு சிறு கோட்டையைப்போல் கட்டப்பட்டபெரியமந்திரம். இவ்விடத்தில்தான் எசோதை பலராமரையும், ஸ்ரீ கிருஷ்ணரையும் பால் குடிக்கச்செய்து கட்டிலிற் போட்டு வெளியே போக, ஸ்ரீ கிருஷ்ணர் எழுந்து குதித்து பாலைத்திருடிக் குடித்தவிடமாம். இந்த இடத்தில் அர்ச்சகர்கள் யாத்திரைக்காரருக்கு ஸ்ரீ கிருஷ்ணர் நடமாடிய விடத்தின் மிருத்திகையென்ற மண்ணைக் கொடுக்கிறார்கள். இந்தக் கட்டிடமும் இடிந்துகொண்டு வருகிறது. இந்தக் கோவில்களன்றியில் 1546ல் கட்டிய துவாரகநாதர் கோவிலும், 1666ல் கட்டிய நவநீதநாதர் கோயிலும் சிறந்தவைகள். இந்தத் துவாரகநாதர் கோயிலுக்கு வருஷம் 4420 ரூபாய் வருமானமுண்டு. நவநீதப்பிரியர் என்னும் கோவில் கிரிதரஜி என்பவருடைய சுவாதீனத்திலிருக்கிறது. இதற்கு வருஷம் 9382 ரூபாய் வருமானம். கோகுலநாதஜி கோஷாயின் வசத்தில் ஞானசாயாமன கோவில் இருக்கிறது. இதற்கு வருஷம் 10650 ரூபாய் வருமானமுண்டு. இவைகளன்றியில் வருஷம் 4950 ரூபாய் வருமானமுள்ள ஸ்ரீ சந்திராமர் கோயிலும்,

நவநீதலாலர், நாட்டார், மதுரசி, கோபாலநாதர், விரஜேசுவரர் முதலான கோவில்கள் தற்காலத்துக் கோவில்களெனத் தோன்றுகின்றன. 1602௵ விஜயசிங்கு மகாராஜரால் மஹாதேவருக்காக இரண்டு கோவில்கள் கட்டப்பட் டிருக்கின்றன.

இந்தக் கோகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி உற்சவத்தை வெகு சப்பிரமாகக் கொண்டாடி வருகிறார்கள். கார்த்திகை மாதத்தில் (திரிணவர்த்த) உற்சவம் கொண்டாடப்படுகிறது. இந்தக் கோகுலத்தி லிருந்து யமுனையாற்றைப் பார்ப்போமானால் அதன் சிங்கார அழகைப் போய்ப் பார்ப்பவர்களுக்கு மாத்திரம் திருப்தியைக் கொடுக்குமேயொழிய எழுதி முடியாது. இந்தக் கோகுலத்தில் வெள்ளி பித்தளை முதலான லோகங்களினால் பலவிதச் சித்திரப் பதுமைகள்செய்து சுலப விலைக்கு விற்கிறார்கள். இந்தப் பிரதிமைகளை யாத்திரைக்காரர் ஏராளமாக விலைக்கு வாங்குகிறார்கள். இங்கு வரும்யாத்திரைக்காரரில் பெரும்பாலார் குஜராத்தியரும் பம்பாய்க்காரர்களும்தான். இவர்கள் ஏன் வருஷாவருஷம் கும்பல் கும்பலாக இங்கு வருகிறார்களெனில், இந்தக் கோகுலஸ்தானமானது வல்லபாசாரிகளுடையதாகையால், அந்த மதஸ்தர்களாகிய குஜராத்தியர்களுக்கு இது விசேஷஸ்தலமாகவிருக்கிறது.

வல்லபாசாரி மதம்.

இந்த வல்லபாசாரியார் யாரெனில், ஸ்ரீ விஷ்ணுசுவாமி சம்பிரதாயகரான இலக்ஷ்மணப்பட்டரென்னும் தெலுங்கர்கள் தேசத்துப் பிராமணருடைய குமாரராக கி. பி.1479௵ ஜனித்தவர். இவர் சம்பகாரணியம் என்னும் காசிப்பட்டணத்துக்குச் சமீபமான ஒரு வனத்தில் ஜனித்தவர். இவர் தந்தை காசிப்பட்டணத்தில் மதக் கலகத்தினால் சம்சாரத்தை இட்டுக்கொண்டு ஷீவனத்தின் மூலமாக ஓடும்போதுகர்ப்பம் தரித்த எட்டாவது மாதத்தில் பிறந்துவிட்டபடியால் இந்தச் சிசுவை ஒருமரத்தடியில் போட்டுவிட்டுப்போய்ச் சிலநாள் காலங்கழித்து வந்து பார்த்தபொழுது சிசுவுக்கு யாதொரு அபாயமுமில்லாதிருக்க எடுத்துக்கொண்டுவந்து வளர்த்து, கோகுலத்துக்கு வந்து நாராயணபட்டரிடம் வேதம் ஓதவிட அவர் நான்கு மாதங்களில் சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தெளிந்துவரவே, அவர் தகப்பனார் இறந்துபோக, 11-ம் வயதிலே மதாசாரியர் வேலைசெய்யப் புறப்பட்டார்.

முதலில் தக்ஷிண தேசத்தை நாடிவந்து தம் மதத்தைப் போதிக்கத் தாமோதரதாஸ் என்பவரைத் தமது முக்கியசிடனாக்கொண்டு தனது தாயார் தேசமாகிய விஜயநகரத்திற்கு வர, அங்கே அநேக ஸமஸ்தான வித்துவான்களை ஜயித்து அந்தேசத்து இராஜனாகிய கிருஷ்ண தேவரையும் தன் மதத்திற் சேர்த்துச் சிட்டனாக்கொண்டு உஜ்ஜயினி, காசி, ஹரித்துவாரம், அலகாபாத்து முதலான இடங்களுக்குப்போய்த் தமது மதத்தைப் பிரசங்கித்து, அநேகரைத் தமது மதத்தில் சேர்த்துக் கொண்டு வந்தார். இவருக்குப் பிரம்மசாரி ஆச்சிரமத்தில் விருப்பமில்லாமையால் காசிப்பட்டணத்தில் கலியாணஞ் செய்து கொண்டு இரண்டு குமாரர்களுக்குத் தந்தையானார். இவர் குமாரர்களில் கி. பி. 1511௵ கோபிநாதரும், 1516௵ விட்டலநாதரும் பிறந்தார்கள். 1520௵ வல்லபாசாரியார் கோவர்த்தனத்தில் ஸ்ரீநாதருடைய கோயிலைக் கட்டி பிருந்தாவனத்துக்கு வர, சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணரே பிரத்தியக்ஷதரிசனம் கொடுத்துத் தம்மைப் பாலகிருஷ்ணராகவும் பாலகோபாலராகவும் பாவித்துக் கோவிலைக்கட்டி வணங்க உத்திரவளித்தார். இவர் கட்டிய இந்தக் கோவிலும் இப்போது இவரது சந்ததியார்களால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. கடைசியாக் காசி க்ஷேத்திரத்தில் போய்க் குடியிருந்துகொண்டு பகவத் கீதைக்குச் சுபோதினி என்னும் வியாக்கியான கிரந்தத்தை எழுதி அங்கேயே 1531௵ பரமபதமடைந்தார்.

இவருக்குப் பிறகு இவரது இரண்டாவது குமாரராகிய விட்டலநாதர் அந்தப் பட்டத்தையடைந்து தக்ஷிண மேற்குத் தேசங்களுக்குப் போய்ப் போதிக்க 256 விசேஷ சிடர்கள் சேர்ந்தார்கள். இவர்களுடைய சரித்திரம் தூதசங்க்ரகமென்னும் கிரந்தத்தில் விஸ்தரிக்கப்பட் டிருக்கிறது. இந்த விட்டலநாதர் கடைசியாக கி. பி. 1565௵ கோகுலத்துக்குக் குடிவந்து தமது எழுபதாவது வயதில் கோவர்த்தனத்துக்குப் போய்ப் பரமபத மடைந்தார். இவருக்கு இரண்டு மனைவிகள். இவர்களுக்குக் கிரிதரர், கோவிந்தர், பாலகிருஷ்ணர், கோகுலநாதர், இரகுநாதர், மாதவநாதர் என்கிற ஏழு குமாரர்கள் பிறந்து நான்காவது குமாரராகிய கோகுலநாதர் பிரபலராகிப் பரிமளித்தார். இவரது கடைசி சந்ததி இப்போது பம்பாயில் கோஷாயிபட்டமுடையவரா யிருக்கிறார்.

இந்த வல்லபாசாரிமத கோஷாயிகள் மற்ற இந்து மடாதிபதிகளைப்போலப்பிரம்மசாரி சந்நியாசி ஆச்சிரமங்களைத்தழு

வாமல், இல்லறத்தாராய் உலக சுகங்களை முற்றுமுடிய அநுபவித்தாலொழிய மன துவிரக்திதசையை யடையமாட்டாதென்றுசொல்லி இராஜபோகங்களை யனுபவித்து வருகிறார்கள். இவர்களைச் சார்ந்த சிலர் கவுரவ கர்வத்தினாலும் காம வெறியினாலும் விகாரமான காரியங்களைச் செய்யத் தலைப்படவே வைணவ மதத்துக்கே கெடுதிவரச் சம்பவித்ததன்றியில், இந்தியாதிகளைக் கண்ட ஜயபூர் மகாராஜா தனது அரண்மனையிலிருந்த கோகுலசந்திரமன் என்னும் விஷ்ணுவிக்கிரஹத்தை யெடுத்துவிடும்படியாயும் தனது ஸமஸ்தானத்தில் வைணவ மதக்குறிகளை வைத்துக்கொண்டு வருவோர்மீது அசூசை கொண்டு சைவமதத்தை யனுசரிக்கக் கட்டாயப்படுத்தினார்.

இந்த மதத்தின் கருத்து.

ஒருசரவண சுக்லபக்ஷமி 11-ம் தேதி நடு இராத்திரி ஸ்ரீ கிருஷ்ணர் இம்மதாசாரியருக்குச் சித்தாந்த ரஹஸியத்தை நேராக வந்து போதித்ததாகவும், அந்த இரகசியத்தின் கருத்து:—உடல், பொருள், ஆவியாகிய அனைத்தையும், ஸ்ரீபகவானுக்குச் சமர்ப்பித்துவிட்டு, பிரம்மசம்பந்தமென்னும் ஜீவனும் பரமனும் ஒன்றாகிறானென்றும், அப்போது தேகத்தாலும், ஆத்மாவினாலும் செய்த சஞ்சித, பிராரத்துவ, ஆகாமியாதி கர்மங்களனைத்தும் மற்றும் எல்லாவித பாவங்களும் அற்றுப்போகுமென்றும் ஷை இரகசியத்திலசொல்லியிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்தச் சித்தாந்தத்தையே அனைவரும் தழுவி நடக்கவேண்டுமென்று அந்த மதத்தைச் சார்ந்தோர் சிறு குழந்தைகளாக விருக்கும்போதே அவர் கழுத்தில் துளசிமணி மாலையைப் போட்டு ஸ்ரீ கிருஷ்ணசரணம் மாம என்ற அஷ்டாக்ஷர மந்திரத்தைப் போதித்து விடுகிறார்கள். இந்த சித்தாந்தத்தினால் ஒரு மனுஷன் தனதுடல், பொருள், ஆவி அவைகளாலுண்டாகும் நன்மை,தீமை முதலான சர்வ தர்மங்களை ஸ்ரீகிருஷ்ணருக்குச் சமர்ப்பித்துக் கேவலம சேவகர்களாக வேண்டுமென்றும், அப்படிப்பட்ட சேவகர்களில் சிறந்தவர் ஸ்ரீவல்லபாசாரியென்றும், அவர் ஈசுவரனுக்கும், ஜனங்களுக்கும் மத்தியஸ்தராகவிருந்து ஜன்ம சாபல்லியமாக்கச் சக்தியுடையவராகநியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், ஆகவே ஆசாரியர் ஸ்ரீ கிருஷ்ணரிலும் சிறந்தவரென்றும், ஸ்ரீ கிருஷ்ணருக்குக் கோபம உண்டாகும்படி நடந்

தாலும் ஆசாரியர் சமாதானப்படுத்திவிடுவாரென்றும், ஆசாரியர் கோபமடைந்தால் அதை நீக்க யாவராலும் முடியாதென்றும் பின்னும் பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறதன்றியில் இந்த வல்லபாசாரியாரும் இவரது சந்ததிகளும் சீடர்களும், சாக்ஷாத் தேவசம்பந்திகளுக்குப் பிரபஞ்சத்தில் பிரதிநிதிகளென்றும், இவருக்குத் திருப்திகரமாக நடந்தால் பரத்தில் ஜீவனும் பரமனும் ஒன்றாகுமென்றும், ஆகவே இந்த மதாசாரியர்களுக்கு எவர் சந்தோஷமுண்டாகும்படி தமது அழகும் புருஷ ஸஹ போகமறியாத குமாரத்திகளையும், தமது புதுமனைவிகளையும், தமது சம்பத்தால் உண்டாகும் பலனால் சுகிர்தத்தையும் தத்தம் செய்கிறார்களோ அவர்கள் சிரேஷ்டர்களென்றும், இந்த கோஷாயிகள் செய்யும் இப்படிப்பட்ட விபசாரங்கள் பாபகிருத்தியங்களாகக் கொள்ளக் கூடாதென்றும், சவராசி விரதாதி நூல்களில் கண்டிருக்கிறதாம். இத்தியாதி இரகசிய கிரந்தங்களை இந்த மதஸ்தர்களுடைய சீடர்களன்றி ஏனையோர் வாசிக்க இடங்கொடுப்பதில்லை. அமிர்தசரிலிருந்த ஒரு மஹான் கிரிபிரசாத் அச்சுக்கூடத்தில் இந்த மதவிஷயமான இரண்டொரு புத்தகங்களைப் பதிப்பித்திருக்கிறதாகக் கேள்வி. அப்புத்தகங்கள் நமக்கு அகப்படவில்லை. விட்டலநாதருடைய குமாரரின் ஆறாம் சந்ததியாகிய கோஷாய் புருஷோத்தமலாலவர்கள் இப்போது கோகிலத்துக்குச் சொந்தக்காரராய், நவநீதப்பிரியர் கோவிலுக்குத் தலைவராக விருக்கிறார். இவர் மகா உத்தமர். இவருக்கு இராஜாதர்கர் என்ற பட்டமும் வருஷம் 900 ரூபாய் சாஸ்வித வரும்படியும் இந்திய மகாராஜரால் விடப்பட்ட அநேக மானியங்களையும் யனுபவித்துக்கொண்டிருக்கிறார்.

இந்த வல்லபாசாரிகளுடைய கோவில்களில் பிரதிதினமும் எட்டுத் தடவைகள் பூஜைகள் நடந்து வருகின்றன. அவை யெவையெனில்,

(1) காலையில் மங்களசேவை, அதாவது:—இராத்திரியெல்லாம் தூங்கின சுவாமி படுக்கை விட்டு எழுந்து சுத்திஸ்நானம் செய்தல்.

(2) சிங்கார சேவை, அதாவது:—ஏழு அல்லது எட்டு மணிக்குச் சுவாமியைப் பலவித வஸ்திராபரணங்களோடு சிங்காரித்துச் சிங்காதனத்தின்மீது வைத்தல். பிறகு முக்கால் மணி நேரம் கழிந்த பிறகு,

(3) குவாலா என்று சுவாமி பசுக்கன்றுகளை மேய்க்க பர்ஜா வனம் போதல், பிறகு மத்தியானம்,

(4) இராஜபோக சேவையாதியாகிய சகலவித போஜனங்களை வைத்து பூஜை செய்து அந்த உபயம் செய்தவர்களுக்குப் போஜனமிட்டு மரியாதை செய்தல். மத்தியானம் மூன்று மணிக்குச் சாப்பிட்ட மயக்கத்தால் சற்றுப்படுத்து இளைப்பாறும் சேவையாகிய,

(5) உத்தபான் சேவை செய்தல்.

(6) சாயரக்ஷை போக் என்கிற உல்லாச உலாத்தல்.

(7) மாலை சந்தியா சேவை செய்தல்.

(8) இராத்திரி சயனம் என்று தூங்கல். ஆக எட்டுவித பூஜைகளும் சேவைகளும் கோஷாயிசள் செய்துவருகிறார்கள். மேலும் பிரதி வாரங்கள் மாதங்களில் பலவித உற்சவங்கள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறதன்றியில், ஆனி ரேஷ பவுர்ணமி தினத்தில் விவசாய பலனையறிய ஒருவருஷ உற்சவம் கொண்டாடி வருகின்றனர்.

இந்த வல்லபசாரிய மதஸ்தர்களுக்கு இருமூன்றுவித கிரந்தங்கள் விசேஷமாக விருக்கின்றன. அவைகளில் வல்லபாசாரி சுவாமிகளால் செய்யப்பட்ட சமஸ்கிருத கிரந்தங்கள் இரண்டு வகுப்புகளாம். அதாவது பகவத்கீதா மஹாசுபோதினி, வியாச சூத்திர பாஷியம், ஜயமுனி சூத்திர பாஷியம், தத்துவதீப நிபந்தனம் என்னும் நான்கும் முதல் வகுப்பைச் சார்ந்தவைகளென்றும்; சித்தாந்த ரஹசியம், சித்தாந்த முக்தாவளி, புஷ்டி பிரவாஹ மரியாதை, அந்தக்கரண பிரபோதா, நவரத்தனம், விவேக தைரியவசியம், கிருஷ்ணாசரியம், பக்திவர்த்தனி, ஜாலபேதம், சந்நியாச நிர்ணயம், நிரோத லக்ஷணம், சேவபலம், பாலபோதம், சதுர்சுலோகி, பஞ்ச சுலோகி, யமுனாஷ்டகம், புருஷோத்தம சஹஸ்ர நாமம் முதலான 17 கிரந்தங்கள் இரண்டாவது வகுப்பென்றும்,

2-வது—ஸ்ரீ வல்லபாசாரி சுவாமிகளுடைய பிரதம சீடர்களால் செய்யப்பட்ட சமஸ்கிருத கிரந்தங்களில் அக்கினிகுமாரர் சர்வோத்தம ஸ்தோத்திரத்தையும், விட்டலநாதர் இரத்தன விமானத்தையும், கோகுலநாதர் பக்திசித்தாந்த விவர்த்தியையும், விட்டலநாதர் வல்லபாஷ்டகத்தையும் கிருஷ்ண பிரேமாமிர்தத்தையும், கோகுலநாதர் சிக்ஷாபத்திரத்

தையும், கோகிலாஷ்டகத்தையும் பிரேமாமிர்தத்தையும், ஹரிதாசரால் ஸ்ரீ வல்லப பவாஸ்தகத்தையும், பின்னும் சிலரால் மதுராஸ்டகத்தையும், சிறாஸ்தகத்தையும், நாமாவளி ஆசரணையையும், நாமாவளி ரோகாயிலையையும், சித்தாந்த பவனத்தையும், விரோதலக்ஷணத்தையும், ஸ்ரீ நகராச மண்டலத்தையும், சரணோபதேசத்தையும், இரஜசிந்துவையும், கல்பதருமநூலையும், மாலா பிரசங்கத்தையும், சித்த பிரபோதத்தையும் பரமபிடர்களுடைய சிரேஷ்ட கிரந்தங்களென்றும்,

3-வது—மத்திய காலத்தில் பிரஜ பாஷையில் எழுதப்பட்ட நிஜவிருத்தம், சவுராசி விருத்தம், துசோபவன விருத்தம், துவாதச குஞ்ஜ பவித்திர மண்டலம், புராணமசி, நித்தியசேவ பிரகாசம், கோகுலநாதர்செய்த இராசலவணம், வசனமிர்தம், பிரஜவிலாசம், வனஜாத்திரா, வல்லபகியான டோலா, நிதிபபதம், ஸ்ரீ கோவர்த்தனநாத்ஜீகா பிரசாத்தியா, கோஷாயன்ஜி பிரசாத்தியா, லீலாபவனம், சுவரூப பாவனம், குருசேவா, சேவபிரகாரியா, மூலபுருஷ தாசமர் மர வைஷ்ணவ பக்ஷி லக்ஷணா, சவுராசி சிக்ஷா, உத்சவபாதம், யமுனாஜியாநம் முதலான கிரந்தங்கள் மூன்றாந்தரமான கிரந்தங்களென்றும் இந்த கோகுலத்திலிருக்கும் அநேக பக்தர்புருஷர்கள் கொண்டாடி வருகிறார்கள்.

பலதேவம்.

இந்த மஹா வனத்திற்கு ஆறுமைலுக்கு அப்புறம் பலதேவம் என்கிற கிராமமிருக்கிறது. இதில் இப்போது 2535 ஜனங்கள் குடியிருக்கிறார்கள். இந்தவனத்தைப்பலதேவர் அல்லது பலராமர்தமக்கு அதிக முக்கியஸ்தானமாகக் கொண்டிருந்தமையால் ஸ்ரீ கிருஷ்ணரும் அதிகப் பிரியத்துடன்போய் மாடுமேய்த்த இடமாம். இவ்விடத்தில் பலதேவருடைய பெரிய கோயிலொன்று இருக்கிறது. இந்தக் கோயிலுக்குப் பாகத்தில் 80 கஜ சுற்றளவும் செங்கற் காரையினால் கட்டப்பட்ட க்ஷீரசாகரம் அல்லது பலபத்திரகுண்டம் என்னும் தெப்பக்குளமிருக்கிறது. இந்தக் குளத்தின் பல பக்கங்கள் இடிந்து பாசத்தால் மூடப்பட்டுக் கிடக்கிறது. இந்தவிடத்தில் சில வருஷங்களுக்குமுன் பெரிய பலதேவர் விக்கிரகம் இருக்கிறதாக ஒருகோஷாய்க்கு அருள்வாக்கால் வெளியாகித் தோண்டிப் பார்க்கும்போது அப்படியே இருந்தது. அது பிரம்மா

ண்டமான விக்கிரகமானபடியால், அதைக் கோவிலத்துக்குக் கொண்டுவரப் பல வண்டிகள் போயும்முடியவில்லை. அவ்விடத்திலே வைத்து ஒரு பெரிய கோவில் கட்டப்பட்டது. இந்தக் கோவில் அவ்வளவு அழகானதாக இராவிட்டாலும் பதினொரு உறல்களோடு கூடிய பெரிய சதுரங்க கட்டடம். இந்தப் பதினொரு மஹால்களில் முதலாவது கி. பி. 1817ஷு ஆக்ரா ராக்லாலால கூ்ஷமண லாலா அவர்களாலும், 2-வது 1825ஷு ஹதராக பாஞ்சயராலும், 3-வது 1868ஷு ராவல்கரணபாஞ்சயராலும், 4-வது 1828ஷு மதுரை பீமசேனர், ஹாலசராயர் வர்த்தகர்களாலும், 5-வது 1801ஷு ஆக்ரா கத்திரியராலும், 6-வது 1799ஷு ஜயப்பூர் பட்டாசாரியராலும், 7-வது ஷெயூர் கோபால பிராமணராலும், 8-வது 1778ஷு மதுரை சிமான்லர்லவர்களாலும், 9-வது 1768ஷு ஆக்ரா தேசத்து சதாரம் கத்திரிவர்களாலும், 10-வது 1808ஷு பரதபூர் சுன்னு ஆலமேல அவர்களாலும், 11-வது 1801ஷு மஹாவனம் புராணசந்து பசூரியவர்களாலும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கோவிலின் கர்ப்பக்கிரஹம் சுமார் நூறுவருஷங்களுக்கு முன்பு டில்லிப்பட்டணம் சாமிதாசு சேட்டவர்களால் கட்டி வைக்கப்பட்டது. இந்தக் கோவிலில் பண்டாக்களென்னும் பூஜாரிகளும் யாத்திரைக்காரரும் தங்கி சமைத்துச் சாப்பிடுகிறார்கள். இந்தக்கோவில் சம்பந்தமாக வருஷத்தில் இரண்டு பெரிய உற்சவங்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தத் தேவதையை சகலரும் பிரியத்தோடு வணங்கி வருவதால், வருஷத்தில் 30,000 ரூபாய்க்குக் கட்டளை யிருக்கிறது. இதில் 300 வீட்டு பண்டாக்கள் (பூஜாரிகள்) பங்கு போட்டுக்கொள்ளுகிறார்கள். ஆக்ராவிலிருக்கும் சுராஜவானர் என்னும் வர்த்தகர் 4000 ரூபாய் நகைகளைக் கொடுத்திருக்கிறார். இப்படித் தக்க வருமானமிருந்தும் பண்டாக்களில் சிலர் யாத்திரைக்காரருடைய கழுத்தில் கையைப் போட்டு நகைகளைத் திருடுகிறார்கள். இவர்களை சிக்ஷிப்பாரில்லை. இந்தக்கோவிலுக்குள் ஒரு போலிசு ஸ்டேஷன் அகத்தியம் இருக்கவேண்டும்.

இந்த மஹாவனம், கோகுலம், பலதேவம் ஆகிய ஸ்தலங்களைவிட பிருந்தாவனம் பலவிதத்திலும் சிரேஷ்டமானதாகையால் இனி அதன் விபரத்தைப்பற்றி எழுதுகிறோம்.

25

பிருந்தாவனம்.

ஸ்ரீ மதுராபுரிக்குச் சுமார் ஆறு மைல் தூரத்தில் யமுனை நதியின் வடகரையில் பரியாய நிபம்போலப் பிருந்தாவனம் என்னும் புண்ணிய க்ஷேத்திரம் இருக்கின்றது. இது பல்லாண்டு பல்லாண்டாகப் பிரபஞ்சத்தில் பிரபலமான பரதகண்டத்தில் புகழ்பெற்ற தீர்த்த யாத்திரை திவ்விய ஸ்தலமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இப்போது இது ஒரு அழகிய முனிசிபல் பட்டணம். இந்த ஸ்தலத்தை அடுத்து ஓடும் யமுனையின் அழகை எழுதி முடியாது.

மதுராபுரியிலிருந்து பிருந்தாவனத்துக்குப்போக வசதியான ரஸ்தா இருக்கிறது. சீக்கிரத்தில் ஜயப்பூர் முதலான மகாராஜாக்கள் புகைவண்டி யோடும்படி பிரயத்தினம் செய்து வருகின்றனர். இப்போது பிருந்தாவனத்துக்குப் போகும் இரஸ்தாவானது ஜயசிங்கபுரம், அஹல்யகஞ்சு என்னும் இரண்டு கிராமங்களுக்கு இடையிலிருக்கிறது. இந்தக் கிராமங்களுக்குச் சமீபத்தில் ஒரு பிரம்மாண்டமான தெப்பக்குளத்தை டில்லியிலிருக்கும் ஓர் தருமவான் செய்த உபயமென்றும், அடுத்திருக்கும் பெரிய பாலமானது குவாலியூர் மகாராஜருடைய குமாரத்தியின் உபயமென்றும் அவ்விடங்களிலுள்ள சாசனங்களால் தெரியவருகின்றது. அந்தப் பாலத்தின்மேல் நடந்தும், வாகன வண்டிகளினால் சவாரிபோயும் யாத்திரைக்காரர்களைக் கணக்கிடமுடியாது. இப்படி இந்த ஸ்தலத்துக்கு இரவும் பகலும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் யாத்திரை செய்வதினால் இதை இந்துக்கள் மகா புண்ணியக்ஷேத்திரம் என்று கொண்டாடி வருகிறார்களென்பது பிரத்தியக்ஷம்.

இதற்குப் பிருந்தாவனம் என்று பெயர் வந்ததற்குப் பல காரணங்களைப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள்.

1. பிரம்மகைவர்த்தபுராணத்திற் சொல்லுவதாவது: பரமபதத்திலிருந்த ஸ்ரீ ராதாதேவியானவள், இந்தப் பிரபஞ்சத்தில் ஜகந்நிவாஸன் ஸ்ரீ கிருஷ்ணனாகப் பிறப்பதினால் அவனைச் சேர்ந்து சுகமடையக் கேதன்னுடைய குமாரியாக இந்தவிடத்தில் ஒரு துளசி—பிருந்தாவனத்தில் பிறந்தபடியால் இந்த வனத்துக்கே விநோதமுண்டாகி இப்பெயர் இடப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

2. வேறோர் புராணத்தில், பிருந்தம் என்பது நெரிஞ்சில் முள்ளென்றும், இந்த விடமானது ஒருகாலத்தில் நெரிஞ்

சில் முட்கள் நிறைந்த பயங்கர வனமாகவிருக்க, ஸ்ரீ கிருஷ்ணர் அந்த முட்களையெல்லாம் பசும்புட்களாக மாற்றிக் கோக்களைப் பாதுகாத்து வந்த பிறகு பக்குவகாலம் வந்தபோது தமக்கு அத்தியந்த பிரியமான துளசி வனமாக்கி அந்த வனத்திற் பல விடங்களில் நடித்தபடியால் மகா புண்ணிய க்ஷேத்திரமாயிற்றென்றும், ஸ்ரீ பத்மபுராணத்தில் மகாவிஷ்ணுவானவர், ஜலந்திரனுடைய மனைவியாகிய பிருந்தா என்பவள் மேல் மோகித்துத் தவித்தபோது அவர் காமத்தைத் தணிப்பிக்கும்படி தேவர்கள் ஸ்ரீ லக்ஷ்மிதேவியை நோக்கி வணங்க, அந்த லோகமாதாவானவள் இங்கே சில விதைகளைக் கொடுத்துப் பயிர்செய்யும்படி உத்திரவு கொடுக்க, தேவர்களும் அப்படியே செய்ய, அந்த விதைகளிலிருந்து, துளசி, மாலத்தி, தத்திரி செடிகள் முளைத்து இம்மூன்றும் கூடி ஒருஇணையற்ற அழகோடு கூடிய ஸ்திரியாக ரூபமெடுக்க, ஸ்ரீ விஷ்ணுவானவர் அவளை அத்தியந்த பிரிய நாயகியாகக்கொண்டு இந்த விடத்தில் சுகித்து வாழ்ந்தபடியால் இந்தவிடத்திற்குப் பிருந்தாவனமென்று பெயருண்டாயிற்றென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்போது இந்த வனத்தை எங்கு நின்று பார்த்தபோதிலும் திவ்வியமான துளசிச்செடிகள் பெருத்து பெரிய வனங்களாகப் பிரகாசிக்கின்றபடியால் இதற்கு (பிருந்த்=துளசி என்னும் பதப்பொருளால்) பிருந்தாவனம் என்னும் பெயர் வழங்கி வருவதாகத் தோற்றுகிறது.

இப்படி இந்தவிடத்திற்குப் பிருந்தாவனம் என்னும் பெயருண்டானதற்குப் பல காரணங்களும், கருத்துகளுமிருக்கினும், இது தொன்றுதொட்டு இந்துக்களுக்கு (முக்கியமாக வைஷ்ணவர்களுக்கு) பிரத்தியக்ஷ வைகுண்டத்துக்குச் சமமாகவும், இந்தவிடத்தைத் தரிசித்து இங்கு மரணமடைவோருக்குப் பரமபதம் பிரத்தியக்ஷத்தில் கிடைக்குமென்று பல நூல்களாலும் ஸ்பஷ்டமாகிறது. இதை கி. பி. 1754ஸ் (Father Tiffenthaler) டிபந்தலர் என்பவர் யாத்திரை செய்து பார்த்த காலத்தில் இங்கு இருந்த ஒரே வீதியில் மாத்திரம் பிரம்மாண்டமான கோவில்களும், மண்டபங்களும், வீடுகளும் இருந்ததாகவும், கணக்கற்ற ஜனங்கள இந்த விடத்தில் வந்து மரணமடைய யாத்திரை செய்துகொண்டு வந்ததாகவும் சொல்லியிருக்கிறார்.

ஆனால் 1820ஆ யாத்திரை செய்தகொண்டு (Victor Jacquumont) விக்ட்டர் ஜாக்குமாண்டு என்பவர், இந்தப் பிருந்தாவனத்தைப் போன்ற அவ்வளவு பரிசுத்தமான புண்ணிய ஸ்தலம் இந்துக்களுக்கு வேறு கிடையாதென்றும், ஏனைய மதஸ்தர்களாலும் மகமதாதி இதர மதஸ்தர்களாலும் தாக்காத சுத்த இந்துமத தேசமென்றும் இவ்விடத்திலிருந்த சில சிறந்த கோயில்களைப்பற்றியும் யமுனா நதியோரத்தில் கட்டப்பட்ட மாடமாளிகை கூடகோபுர கட்டடங்களைப் பற்றியும் விஸ்தாரமாக எழுதியிருக்கின்றனர்.

இப்போது இந்தப் பிருந்தாவனத்தின் (முனிசிபல்) எல்லைக்குள் ஆயிரத்துக்கு மேற்பட்ட பெரிய கோயில்களும், யமுனாநதியின் கரையோரத்தில் சுமார் ஒன்றரை மைல் தூரமாகிய 32 கட்டடங்களும் இரண்டு விசேஷ தடாகங்களும் இருக்கின்றன. இந்தத் தடாகங்களில் ஒன்று ஸ்ரீசேட்டவர்கள் பெரிய கோயிலுக்குப் பின்பக்கத்தில் பிரம்ம குண்டம் என்னும் பெயரால் பிரகாசிக்கிறது. மற்றொன்று மதுராபுரிக்குப் போகும் வழியோரத்தில் கோவிந்தகுண்டம் என்னும் பெயரால் பிரகாசிக்கிறது.

இந்தத் தடாகத்தைப் பெங்காளத்தைச் சார்ந்த இராஜாஷாமின் சவுதாரணிகாளிசுந்தரி தேவியவர்களால் 3000 ரூபாய் செலவிட்டு ரிபேர் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் தடாகத்துக்குச் சமீபத்தில் கவரிவனம் என்னும் பெயரால், கதம்பம் முதலான மரங்களோடு கூடிய சிங்கார வனம் இருக்கிறது. இங்கே யாத்திரைக்காரர் சற்றுத் தங்கி அருகிலிருக்கும் மதனமோஹனரையாகிலும்,தேவனங்பியாரி சுவாமியையாகிலும் தரிசித்துப் போவதுண்டு இந்த வனத்துக்குப் பக்கத்தில் ஒரு சிங்கார நந்தவனமிருக்கிறது. இந்த நந்தவனத்தில் குரங்குகளும் மயில்களும் கணக்கற்றிருக்கின்றன. இந்த வனம் ஸ்ரீ கிருஷ்ணருண்டாக்கி விளையாடியதாகச் சொல்லுகிறார்கள்.

இப்போது இந்தப் பிருந்தாவனத்தில் 21,000 ஜனங்கள் குடியிருக்கிறார்கள். இதில் பாதிப்பெயர் பிராமணர்கள். மற்ற பாதி பைராகிகள், கோஷாயிகள், வைணவ பக்தர்கள் என்று சொல்லலாம். இந்த ஜனங்கள் யாவரும் சர்க்கார் முதலான உத்தியோகங்களைச் செய்து வராமலும் மற்ற தொழில்களைச் செய்யாமலும் கோயில் வருமானங்களிலும் யாத்திரைக்காரர்

களுடைய திரவிய சகாயத்திலும், பழைய ராஜாக்கள் தரும மானியங்களிலும் காலங்கழிக்கிறார்கள். இப்போது 50 தரும சத்திரங்கள் சகலவித இந்துக்களுக்கும் பொதுவாக விருக்கின்றன.

இப்படிப்பட்ட இந்த நகரத்தை மகமதியர்கள் பிடித்து இதற்கு மூமினாபாத் என்னும் பெயரை வைக்கப் பிரயத்தினப்பட்டும் முடியவில்லை. இப்போது, சுண்ணாம்பு சுடுதல், எண்ணெய் காய்ச்சுதல் முதலான சிறு வியாபாரங்களைச் செய்யும் ஐம்பது மகமதியர்கள் நகரத்துக்கு வெளியில் குடியிருக்கிறார்கள். இவர்களுக்கு மஸ்ஜீது முதலான கோவில்களில்லை.

இப்போது இந்தப் பிருந்தாவனத்தில் வைணவ மதத்தைப் பற்பலவிதச் சித்தாந்திகளும் தம் தம் சித்தாந்தங்களுக்குத் தக்கபடி கோயில்களைக் கட்டிவைத்தும் நித்திய கர்ம நைமித்திகாதி காரியங்களை தம் தம் சித்தாந்தங்களின்படி நடத்திவருகிறார்கள். அவர்களில் ஸ்ரீ சம்பிரதாயகர்களான ஸ்ரீ ராமாநுஜருடைய சித்தாந்தத்தைச் சார்ந்தவர்களும், நிம்பார்க்க வைணவர்களும், விஷ்ணு சுவாமிகளெனும் ஸ்ரீ வல்லபாசாரி வைணவர்களும், கவுரிய வைணவர்களும், இராதா வல்லபர்களும், முக்கியமானவர்கள். இவர்கள் ஸ்ரீ சம்பிரதாயகர்கள் யாவரெனில் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் கடைசியில் தக்ஷண இந்துதேசமாகிய நமது தென்னிந்தியாவில் ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்த ஸ்ரீராமாநுஜாசாரியாரவர்கள் ஸ்ரீபாஷியம், கீதாபாஷியம், வேதாந்தசங்கிரகம், வேதாந்த பிரதீபம், வேதாந்தசாரம் முதலான கிரந்தங்களால் வெளியிடலான விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைத் தழுவிவரும் வைணவர்களாம். இந்த வைணவமத சித்தாந்தமானது ஸ்ரீ ரங்காசாரியரவர்களாற் பிரபலமாக்கப்பட்டது.

ஸ்ரீ கோவர்த்தனம் அரங்காசாரியாருடைய சரித்திரம்.

இவருடைய சரியான சரித்திரத்தை யறியப் பலவிதமாகப் பிரயத்தினப்பட்டும் தகுந்த ஆதாரங்களகப்படவில்லை. ஆயினும், அவரது காலத்தில் அநுபவத்தாற் கண்டறிந்த சில சங்கதிகளைக் கேட்ட சில கனவான்களால் நமக்குத் தெரிய வந்த சங்கதியாவது:—

இந்த ஸ்ரீரங்காசாரியானவர் ஸ்ரீகாஞ்சீபுரத்துக்கடுத்த ஒரு சிறு கிராமத்தில் ஜனித்து சிறு பிராயமாக விருந்தபோதே பெற்றோர்களை இழந்துவிட்டபடியால் தமயனாருடைய சம்ரக்ஷணையி லிருந்ததாகவும், இந்தச் சம்ரக்ஷணையி லிருந்த போது ஒருநாள் யாதோ ஒரு பதார்த்தத்தினிமித்தம் தமக்கும் தமது தமையனார் மனைவிக்கும் விரோதமுண்டாக அந்தம்மாளிடம் இருக்க மனதற்றவராய் ஒண்டி வழியாகப் புறப்பட்டு ஸ்ரீகாசிக்கு வந்துவிட்டதாகவும், அங்கு ஒரு எதிந்திரர் இவரை தமது சிடனாகக்கொண்டு ஸமஸ்கிருத பாஷையைப் போதித்து வந்ததாகவும், அப்போது கோவர்த்தனத்திலிருந்த ஒரு எதிந்திரருக்கு ஒருசிடர் வேண்டியிருந்து முன்சொன்ன காசி க்ஷேத்திர சந்நியாசியவர்களுக்குத் தெரிவிக்க, அவர் இந்த ஸ்ரீரங்காசாரியை சிபார்சு செய்து கோவர்த்தனகிரிக்கு அனுப்ப, இவரும் பிரியத்தோடுவந்து கோவர்த்தன எதிந்திரருக்குத் தொண்டுசெய்து பல நூல்களைக் கற்றுக்கொண்டு வரவே அந்த எதிந்திரருக்கு அசாத்தியமான வியாதி சம்பவித்தபடியால், அவர் தமது சந்நியாச மடத்தையும், ஆச்சிரமத்தையும் இந்த ஸ்ரீரங்காசாரியருக்குக் கொடுத்துவிட்டுப் பரமபதமடைந்தார். அன்றுமுதல் இந்த ஸ்ரீரங்காசாரியருக்குக் கோவர்த்தனம் (ரங்கஜி) ஸ்ரீ ரங்காசாரியார் என்று பெயரிடப்பட்டு ஸ்ரீ ராமாநுஜருடைய ஸ்ரீ சம்பிரதாயத்தை வடதேசத்தாருக்குப் போதித்தும், ஜயப்பூர் சைவபண்டிதர், வைணவ மதத்தைத் தூஷித்து எழுதிய எட்டு கேள்விகளுக்கு விடையாக "துர்ஜனகாரி பஞ்சானனம்" என்னும் ஸம்ஸ்கிருத கிரந்தத்தை எழுதினார். இந்தப் புஸ்தகத்தின் கருத்துகள் ஜயப்பூர் மகாராஜருக்குப் போதுமான திருப்தியைக் கொடாமையால், சஜ்ஜன மனோரஞ்சனம் என்னும் கிரந்தத்தைச் சில பண்டிதர்களைக்கொண்டு எழுதி வெளிவிட்டார். அதன்மேல் ஸ்ரீ ரங்காசாரியர் "வியாமோஹ விதாவனம்" என்னும் கிரந்தத்தை எழுதி அதில் வைணவ மதத்தை மேன்மைப்படுத்திப் பல ஆதாரங்களைக் காட்டிப் பிரசுரம் செய்தார்.

இப்படிச் சத்காலக்ஷேபம் செய்துவரவே, ஸ்ரீ மதுராபுரியில் மஹா கோடீசுவரரான ஸ்ரீ லக்ஷ்மீசந்து சேட்டவர்களுடைய சகோதரர்களும், சமணமதஸ்தர்களுமாக விருந்த ஸ்ரீகோவிந்ததாஸ், ஸ்ரீராதாகிருஷ்ண சேட்டவர்கள் வைணவ மதத்தின் ஸ்ரீஸம்பிரதாயத்தில் பிரியமுடையவர்களாகி இந்த

ரங்காசாரி சுவாமிகளின் சிஷ்யர்களானார்கள். அவர்களுக்கு ஸ்ரீ ஸம்பிரதாயத்தைத் தக்கபடி போதித்து ஞானவான்களாகப் பிரகாசிக்க, அவர்கள் பிருந்தாவனத்தில் ஸ்ரீஸம்பிரதாயத்தைத் தழுவிய கோயிலைக் கட்டுவிக்கப் பிரியப்பட, இந்த ஸ்ரீ ரங்காசாரி சுவாமிகள் அந்த சிரேஷ்ட சிஷ்யர்களைத் தக்ஷிணதேசத்துக்குக் கூட்டிக் கொண்டுவந்து இவ்விடங்களி லிருக்கும் சில சிறந்த கோயில்களைக்காட்ட அவர்கள் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தின் படி பிளான்களையும் வேலைக்காரர்களையும் தயார்செய்து கொண்டு போய் கி. பி. 1845௵ கடைக்கால்போட்டு கி. பி. 1851௵த்துக்குள்ளாக 45 லக்ஷம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட்டுப் பிரம்மாண்டமான கோயில் கட்டிவைத்தார்கள் இந்தக் கோயிலின்பெருமையைப் பிறகு விவரமாகத்தெரிவிப்போம். இப்படி இந்த ஸ்ரீரங்காசாரியர் தனவான்களான தமது சிஷ்யர்களைக்கொண்டு அநேக கோயில் கோபுரங்களையும் வானிகூப உத்தியாவனங்களையும் தயார்செய்தாலும், சந்நியாச ஆச்சிரமத்தை யனுசரித்த இவரை கிரஹஸ்தாச்சிரமத்தி லிருக்கவேண்டுமென்று சிஷ்யர்கள் விரும்ப, ஸ்ரீரங்காசாரியரும் தக்ஷிணதேசத்தில் தமது பந்துக்களில் ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொள்ள, அந்த மனைவியார் வயிற்றில் ஓர் ஆண் குழந்தை பிறந்து, அப் பிள்ளைக்குப் பாட்டனார் பெயராகிய ஸ்ரீநிவாசாசாரியர் என்று நாமம் சாற்றப்பட்டு ஸமஸ்கிருத பாஷையைப் போதிக்கப் பிரயத்தனப்பட, அவருக்குக் கல்வியில் கருத்தில்லாமையால் கலியாணம் செய்விக்கப்பட்டது. அப்படிச் செய்வித்த கலியாண மனைவி வயிற்றில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் கல்வியை விரும்பாத இந்த ஸ்ரீநிவாசாசாரியார் தனது தகப்பனாருடைய யோக்கியதைக்கும், அவரது சிஷ்யர்களுடைய யோக்கியதைக்கும், தனது ஜாதியோக்கியதைக்கும் பயப்படாமல், பட்டப்பகல் படாடோபஞ் செய்து டம்பாகாரமாகத் திரவியத்தையெல்லாம் வாரித் தாசி வேசிகளுக்குத் துலைத்துவந்ததன்றியில், கீழ் ஜாதியான ஸ்திரிகளோடும் சம்பந்தம் செய்யப் பிரவர்த்தித்து பிதா மாதாக்களுடைய பெயரையும் பங்கப்படுத்தப் பிரயத்தனப்பட்டதால், பிதாவாகிய ஸ்ரீ ரங்காசாரியானவர் நொந்து இனித் தமது சிஷ்யர்களாற் கட்டிவைத்த கோயில் முதலான கட்டடங்களையும், தானிய திரவியங்களையும் தொண்டு மூண்டைகளுக்குத் தொலைத்து விடுவானென்று பயந்து கி. பி. 1863௵ இந்தக் கோயிலையும், இதைச் சார்ந்த லக்ஷக்கணக்கான சொத்

துகளையும் தமக்குப் பிற்பாடு ஆறுபேரடங்கிய கமிட்டியா ரால் பரிபாலனம் செய்விக்கவேண்டுமென்றும், தமது குமார ருக்குச் சாப்பாட்டுச் செலவுக்குமாத்திரம் கொடுக்க வேண்டு மென்றும் மற்றும் மதவிஷயமான ஆசாரிய கைங்கர்யங்களைச் செய்யத் தகுந்த தேசத்திலிருந்து நூதனமான ஆசாரிய புருஷரைத் தருவித்து வைத்துக்கொண்டு நடத்தவேண்டு மென்றும், 2000 ரூபாய் சாபா காகிதத்தில் எழுதிக் கொடு த்துவிட, இது விஷயமாகப் பிதாவுக்கும் புத்திரருக்கும் பல சச்சரவுகள் நடக்க இந்த வியாகூலத்தினாலேயே ஸ்ரீரங்காசாரி யர் 1874௵ மார்ச்சுமீ 26ௗ பரமபதமடைந்தார்.

இவர் பரமபத மடைந்த பிறகு இவர் குமாரன் ஸ்ரீநிவா சாசாரியார் இந்தக் கோயில் முதலான சொத்துகள் தமக்குச் சேரவேண்டு மென்று வாதாடிக் கொண்டிருந்து சில வருஷ ங்களுக்குள்ளாக அவரும் பரமபத மடைந்துவிட்டார். இப் போது சுமார் 10வயதையுடைய இவர் குமாரர் இருக்கிறார். அவ ரது போஷணைக்கும் படிப்புக்கும் சேட்டவர்கள் மாதம் 1-க் குச் சுமார் 300 ரூபாய் வரையிற் கொடுத்துக் கவுரவப்படுத்தி வருகிறார். இந்தச் சேட்டவர்கள் கோயிலிலும் சுற்றுப்பக்கங் களிலும் சுமார் 100 ஸ்ரீவைணவ பிராம்மணர்கள் தென் தேச த்திலிருந்துபோய் ஸ்ரீ ராமாநுஜருடைய சம்பிரதாயப்படிக்கு நித்திய நைமித்திகாதி விஷயங்களைத் தென்தேசத்து வைண வர்களின் ஸ்தலங்களில் செய்யும் பத்ததிகளின்படி செய்து ஸ்ரீ ராமாநுஜருடைய சித்தாந்தத்தைச் சிறப்பித்து வருகிறார் கள். இந்தப் பிருந்தாவனத்தில் ஸ்ரீ ஸம்பிரதாய வைணவர்க ளைத் தவிர நிம்பார்க்க வைணவர்களு மிருக்கிறார்கள்.

நிம்பார்க்க வைணவத்தின் சரித்திரம்.

இந்த மதாதிபதியாகிய ஸ்ரீ பாஷ்கராசாரியார் ஒரு நாள் ஒரு பைராகியைச் சாப்பாட்டிற் கழைக்க அவரும் சம்மதித் துக்கொண்டுபோய் சாயரக்ஷவரையில் வராமையால், பாஷ் கராசாரியரும் சாயரக்ஷவரையிற் சாப்பிடாமல் சங்கடப் படவே, சூரியாஸ்தமாகிவிட்டது. சன்னியாசிகள் சூரியாஸ்த மானும் சாப்பிடக்கூடாதாகையால் சங்கடத்தோடு சூரிய நாராயணனைப்பிரார்த்திக்க, அப்போது சூரியன் நிம்பவிருக்ஷ மென்னும் வேப்பமரத்தின்மீது ஒரு பொந்தில் பிரகாசிக்க, பாஷ்கராசாரியர் தமது உணவை எடுத்துக்கொண்டு வேப்ப

மரத்தின்மீது வீசிய சூரிய பிரகாசத்தில் வைத்துக்கொண்டு உண்டார். ஆகவே, இந்த மதாதிபதிக்கு நிம்பார்க்கர், நிம்பாதித்தர் என்று பெயருண்டாயிற்று. இந்த மதத்தைச் சார்ந்தவர்கள் மகா சாந்தமும் பக்தியுமுடையவர்கள். இவர்களுக்கு விசேஷமாக மதகிரந்தங்கள் கிடையா. இருந்த சில கிரந்தங்களையும் அரங்கசீபு கொள்ளையிட்டுக் கொளுத்திவிட்டான். இந்த மதஸ்தர்களில் அநேகர் கோகிலவனம் முதலான இடங்களிலிருக்கும் குகைகளில் சுத்த சாது சன்னியாசிகளாகவிருந்து காலத்தைக் கழிக்கின்றனர்.

இந்த மதத்தார் ஜகதீசுவரன் ஒருவனே இருக்கிறதாகவும், அவனை இப்போது பார்த்து ஆநந்தமடைவதைப்போலவே பரலோகத்திலும் பார்த்து ஆநந்தமடையலாமென்றும், இப்படி யடைவதற்குக் கேவலம் பக்தியே முக்கியமானதென்றும், ஸ்ரீராதாகிருஷ்ணருடைய லீலாவிபூதிகளை ஜீவாத்துமா பரமாத்துமா விஷயமாகப் பொருள்கொண்டு பிரமமாநந்தமடையவேண்டுமேயொழியச் சிற்றின்ப விஷயமாகவும்; உலக விவஹார விஷயமாகவும் கொள்ளக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். இந்தச் சம்பிரதாயத்தை யநுஷ்டிக்கும் கோவர்த்தனதாசு என்பவர் ஜோதிப்பூர் மாகாணத்திலிருக்கிறார். இவருக்கு பகவத்கீதை முழுதும் மனப்பாடமாகத் தெரியும்.

மேலும் இந்த மதத்தைப் போதிக்கும் சித்தாந்த ரத்ஞஞ்சரி கிரிவஜாம், இரத்தினமாலா, சேதுகம், ஜாவளி இரத்தினமஞ்சரம் முதலான கிரந்தங்களைக் குருட்டுப்பாடமாக ஒப்பிக்கக்கூடியவர். இந்த மதஸ்தர்களும் பிருந்தாவனத்தில் சில கோயில்களுக்கு அதிகாரிகளாகித் தங்கள் சித்தாந்தங்களைப் போதித்து வருகின்றனர்.

இவர்களன்றியில் இந்தப் பிருந்தாவனத்தில் துவைத சித்தாந்திகளென்னும் ஒரு வகுப்பார் இருக்கின்றனர். இவர்கள் கி. பி. 1199 வருஷம் தக்ஷணத்தில் உடுப்பியிற் பிறந்து தமது ஒன்பதாம் வயதிலேயே சகல சாஸ்திரங்களையும் கற்றுப் பகவத்கீதைக்குத் துவைத சித்தாந்தமாக அதாவது ஜீவாத்துமா வேறு, பரமாத்துமா வேறு என்று வித்தியாசப்படுத்தி பாஷ்யம் செய்து பிரகாசித்த மாத்துவாசாரியர்களுடைய சீடர்கள். இவர்களுக்கு இந்தப் பிருந்தாவனத்தில் பிரபலமான கோயில்களும் கட்டிடங்களுமில்லை. இங்குமங்குமாகச் சிலர் இருந்துகொண்டு துளசிவன யாத்திரை செய்துகொண்டிருக்கிறார்கள். அன்றியும்,

இந்தப் பிருந்தாவனத்தில் பங்காளி அல்லுகவுரிய வைணவர்களென்னும் இராதாவல்லபர்களும், சுவாமி அரிதாசர்களுமாக இன்னும் பல வைணவசம்பிரதாயஸ்தர்களிருக்கிறார்கள். இவர்களில் பங்காளி வைணவர்கள் இந்தப் பிருந்தாவனத்தில் அதிக பிரபலமாய் இருக்கிறார்கள். இவர்கள் சைதன்னியருடைய மதத்தை அவலம்பித்து வருகிறார்கள்.

சைதனியர் மதம்.

சைதன்னியரானவர் கி. பி 1485௵ கிரஹண விடுதலை காலத்தில் வங்கதேசத்தைச் சார்ந்த நதியா மாகாணத்தில் பிறந்தவர். இவர் பாட்டனாராகிய உபேந்திரமிசார் என்பவர் மகா பக்திமானாக சில்லெட்டு டிஸ்டிரிக்டில் குடியிருந்தார். இவர் தந்தையாகிய ஜகநாத மிசிரரும் மகா பக்திமானாகி பாகிரதி நதிக்கரையாகிய நத்தாவில் தங்கி தபசு செய்தார். இந்தச் சைதன்னியருடைய தாயாராகிய சசிதேவியார் வயிற்றில் விஸ்வரூபரென்னும் சகோதிரரும் பிறந்து சிறு வயதிலேயே வைணவசந்நியாசியாகிவிட்டார். சைதன்னியர்ஸம்ஸ்கிருதபாஷையில் பூரண பண்டிதராகிப் பாகவதம், பகவற்கீதை முதலான கிரந்தங்களை முக்கிய பாராயண கிரந்தங்களாகக் கொண்டு சிறந்த வைணவமதாசாரியராகி அப்போது வங்கதேசத்தில் மலிந்திருந்த தாந்திரிக சாக்தேய மதஸ்தர்களைக் கண்டித்து ஜாதி பேதத்தை நீக்கி, பிரபல வித்துவானாகவும் பிரகாசித்து கயா க்ஷேத்திரத்துக்குப்போய்த் தமது தந்தைக்குப் பிண்டத்திதியைச் செய்தார். அப்போது நித்தியானந்தர் என்னும் ஒரு பக்தர் ஆசாரியராக வைணவத்தை அவருக்குப் போதிக்க இந்தக் குருவே இவருக்குச் சீடராகிவிட்டார். பிறகு ஸ்ரீ வல்லபாசாரியருடைய குமாரத்தியாகிய லக்ஷ்மிதேவியை விவாஹம் செய்துகொண்டார். இந்த மனைவி சீக்கிரம் இறந்துபோக விஷ்ணுபிரியை என்னும் வேறொரு பெண்ணை விவாஹம் செய்யப்பட்டது. அப்படி விவாஹம் செய்துகொண்டாலும் தமது 24-வது வயதில் சுத்த சன்னியாசத்தை அநுசரித்து மனைவியையும் மாதாவையும் மற்றுமுள்ள சகல உலக சுகங்களையும் தொலைத்துவிட்டு முதல் முதல் (Guor) கவுரி என்னும் இடத்தில வைணவ சமரச ஞானத்தைப் போதிக்க அங்கு இரண்டு மகமதியர்கள் இவர் உபதேசத்தில் நம்பிச் சீடரானார்கள். அவர்களுக்குச் சநந்தர், ரூபர் என்று பெயர். பிறகு சாந்திபூர், பூரி முதலான இடங்களைத் தரிசித்து அங்கு சார்வபவுமன்

என்னும் சிறந்தபட்டாசாரியைச் சிடனுக்கிக்கொண்டு தக்ஷண தேசயாத்திரை செய்து இராமேசுரத்தைத் தரிசித்தார். பிறகு காசி, மதுரை முதலான திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு ஜாதிபேத மற்ற சமரச மதாசாரியரானார். ஸ்ரீ மதுரா பிருந்தாவனத்துக்கு வந்து, பிறகு ஜகந்நாதம் வரையிலுள்ள சகல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து தமது 30-வது வயதில் நலாசெலா என்னும் இடத்தில் ஸ்ரீ சச்சிதாநந்தமான விஷ்ணுவை சதா தியானித்து அங்கம் பரவசமாக ஆடிப்பாடி காலங்கழித்து வருநாளில் கி. பி. 1511ஆு தமது 48-வது வயதில் கண்களுக்ககப்படாமல் மறைந்தார். இவர் எந்த ஜலத்தைக் கண்டபோதிலும் யமுனாநதியாகவும் எந்த வஸ்துவைக் கண்டபோதிலும் ஸ்ரீ கிருஷ்ணரைப்போலவும் பாவித்திருந்தபடியால் ஓர் பூரண சந்திர பிரகாசமுள்ள ராத்திரியில் சில்கா ஏரிக்கரையின்மேல் பாடிக்கொண்டு போகையில் அந்த ஏரியின் ஜலம் சந்திர பிரகாசத்தினால் யமுனாநதிபோல் தோன்றவும் அதில் பிரகாசிக்கும் சந்திர பிம்பத்தின் பிரதிபிம்பம் ஸ்ரீகிருஷ்ணரைப்போல நடிக்கத்தோன்றவும்ஓடிப்போய்க் கட்டித்தாவ அப்படியே விழுந்து பரமபதமடைந்து மறுநாள் மீன் பிடிப்பவர்வலையிலகப்பட்டு மேலே கொண்டுவர உடனே எழுந்து ஹரிபோலோ! ஹரிபோலோ! என்று சொல்லிக்கொண்டு மறைந்துவிட்டாராம். இவருடைய சிடராகிய ஸ்ரீ கிருஷ்ணதாசர் சைதன்னியர் சரித்திராமிர்தம் என்னும் பெயரால் வங்கபாஷையில் ஒரு சிறந்த கிரந்த மெழுதி யிருக்கிறார். இந்தசைதன்னியருடைய சகாயர்களான அத்வைதாநந்தரும், நித்தியாநந்தரும்,வங்கதேசத்தில் மஹாபிரபுக்களாயிக் தமது மதத்தை ஸ்தாபிக்கப் பிரவர்த்திக்க, மற்ற ஆறு கோஷாமிகளும் இந்தப் பிருந்தாவனத்துக்குவந்து தங்கி தமது சித்தாந்தத்தைப் போதித்து வந்தார்கள.

இவர்கள் சதா ஸ்ரீகிருஷ்ண நாமத்தைப் நடனம்செய்து கொண்டும், நெற்றியில் இரண்டு வெள்ளைக் கோடுகளோடும் கையில் 108 துளசிமணிகள் கோர்த்த ஜபமாலையை வைத்துக்கொண்டும் கேவலம் பக்தியினாலேயே பரமபதமடையலாமென்று சொல்லுகிறார்கள். இவர்களன்றியில் இந்தப் பிருந்தாவனத்தில் ரூபர், சநந்தனன் என்பவர்கள்தான் முக்கிய குருமார்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றனர். மேலும் கி. பி. 1619ஆு உஜ்ஜயினி பட்டணத்திலிருந்து இந்தப் பிருந்தாவனத்துக்கு வந்த யாதவரூபர் என்பவர் மஹாத்துமாவாக

விருந்தபடியால் அக்பர், சாஜிஹான் முதலான சக்கிரவர்த்தி களும் வந்து அவரை தரிசித்துப் போனதாகச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முன்சொன்ன ரூபருடைய அண்ணன் குமாரர் ஜீவர் என்பவர் பிருந்தாவனத்தில் ராதா தாமோதிரர் கோயிலைக் கட்டிவைத்தார். இவரைச்சார்ந்த கோபாலபட்டர் இராதாராமர் கோயிலைக் கட்டிவைத்தார். இவ்விருவரைப்பற்றி பக்திமாலா என்னும் கிரந்தத்தில் புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறது.

இராதவல்லபர் சரித்திரம்.

சம்வச்சரம் 1559ல் சஹரான்பூர் ஜில்லா தேவவனம் என்னும் இடத்தில் வியாசர் என்னும் கவுரப்பிராமணர் குழந்தையில்லாக் குறையால் தவித்துக்கொண்டிருந்ததோடு டில்லி சக்கிரவர்த்தியிடம் உத்தியோகமமர்ந்து ஆக்ராவழியாகப் போகும்போது அவருடைய மனைவியாகிய தாராதேவியின் வயிற்றில் கர்ப்பம் தரித்து ஸ்ரீமதுரைக்கடுத்த வனம் என்னும் கிராமத்தில் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு ஹரிவம்சர் என்று பெயரிட்டு வளர்ந்து வந்து ருக்மணி என்னும் ஒரு பெண்ணைக் கொண்டு விவாஹம் செய்து வைக்க, அந்த ருக்மணி வயிற்றில் இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்து, மூத்த குமாரனாகிய மோஹனசந்திரர் மகவில்லாமல் மரணமடைய, இளைய குமாரருடைய சந்ததி கோபிநாதர் என்பவர் இப்போது தேவவனத்திலிருக்கிறார். இந்த ஹரிவம்சர் தனது குமாரத்திக்கு விவாகம் செய்வித்த உடனே சந்நியாசத்தை யநுசரித்து பிருந்தாவனத்தை நாடி வருகையில் ஒரு விருத்தப்பிராமணர் சந்தித்து தனது இரண்டு குமாரத்திகளையும் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும் அப்படிச் செய்துகொள்ள அருள்வாக்குக் கிடைத்ததென்றும் சொல்லி இராதாவல்லபர் என்னும் ஒரு கிருஷ்ண விக்கிரகத்தைக் கொடுத்து பூஜை செய்யும்படி உத்திரவளிக்க அவரும் சம்மதித்து அந்தப்படியே இரண்டு பிராமண குமாரத்திகளையும் விவாகம் செய்துகொண்டு ஸ்ரீராதாவல்லபர் கோவிலை பிருந்தாவனத்தில் கட்டி ஸ்ரீராதாதேவ முக்கிய பிராண தேவதையாகக்கொண்டு பல இனிய கீத கிரந்தங்களை யியற்றினார். இவர் ஆதியில் துவைத சித்தாந்தத்திலும் பிறகு நியபார்க்க சித்தாந்தத்திலும் பிரியமுடையவராகவிருந்து அநந்தரம் ஸ்ரீராதாவல்லபரென்னும் காமசாந்தத்தில்,

பிரியப்பட்டார். ஆகவே இவர் இராதசுதாநிதி என்றுதிச் சிங்காரக் கவிகளைப்பாடி ஆநந்த நடனமாடினார். இவர் பாட்டுகளை பக்திமாலா என்னும் கிரந்தத்திற் பார்க்கலாம். இந்தப்பாட்டுகள் யாவும் சிங்கார அலங்கார நூல்களை யநுசரித்துப் பாடப்பட்டிருக்கினும் காமவிகாரமான கவிகள் என்பதற்குச் சந்தேகமில்லை. இவரது பிரதம சீடர் வியாசஜி என்பவருக்கு அநேக மகிமைகளைக் காட்டினார். இவரது சமாதியும் இப்போது பிருந்தாவனத்தி லிருக்கிறது.

இந்த இராதாவல்லபருடைய இரண்டாவது சீடர் துருவதாஸ் என்று பெயர் பெற்றவர். இவர் 1. ஜீவதசை, 2. வேதகானம், 3. மனசிக்ஷா, 4. பிருந்தாவன சத்து, 5. பக்திநாமாவளி, 6. பிரஹதபிமான புராணம், 7. கியால் உலாசம், 8. சித்தாந்த விசாரம், 9. பிரீதி சோவனி, 10. ஆநந்த சதகம், 11 பஜனசதகம், 12. பஜனகுத்து, 13. ஸ்ரீரங்க சதகம், 14. மனோசிங்காரம், 15. ஹிதசிங்காரம், 16. சபாமண்டலம், 17. இராஜமுக்தாவளி, 18. பஜனகுண்டலம், 19. இராசபிரயாவளி, 20. இராச இரத்னாவளி, 21. பிரேமாவளி, 22. ஸ்திரிபிரிய ஜிகநாமவளி, 23. ரஹஸியமஞ்சரி, 24. சுகமஞ்சரி, 25. இரதிமஞ்சரி, 26. நேமஹமஞ்சரி, 27. வனவிஹாரம், 28. இராவிஹாரம், 29. இரங்கவிலாசம், 30. இரங்கவிஹாரம், 31. இரங்கவிநோதம், 32. ஆநந்தரசம், 33. இரஹஸியலதம், 34. ஆநந்தலதம், 35. அநுராகலதம், 36. பிரேமலதம், 37. இராசாநந்தம்,—ஜலகேலதியானம், 38. நிருத்தவிலாசம், 39. தனலீலை—மனலீலை, 40. விரஜலீலா என்றுதி கவி கிரந்தங்களை யியற்றியிருக்கின்றனர்.

இவைகளன்றியில் தாமோதர தாசரால் வல்லபராசிக பானி குருப்பிரதாபம் என்னும் கிரந்தங்களும், தாமோதர சுவாமியால் ஹரிநாமமஹிமா என்னும் கிரந்தமும், ஹிதவல்லபரால் ஸ்ரீ நவலால் ஜிகஸ்தா என்னும் கிரந்தமும், பிருந்தாவனதாசரால் ஹரிநாமபலி, ஸ்ரீ லால்ஜிபாதி என்ற கிரந்தமும் விசேஷமான கிரந்தங்களாகக்கொண்டு பிருந்தாவனத்திலும் ஸ்ரீ மதுரையிலும் சகலராலும் படிக்கப்பட்டு வருகின்றன.

சுவாமி ஹரிதாசருடைய சரித்திரம்.

இந்தச் சுவாமி ஹரிதாசருடைய சித்தாந்தத்தைச் சார்ந்த வைஷ்ணவர்களும் பிருந்தாவனத்தில் அநேகர் இருக்கின்ற

ணர். இங்கே இவர்களுடைய முக்கியமான கோயிலுக்கு பிபார்ஜீ என்று சொல்லப்பட்ட பிரம்மாண்ட மந்திரமிருக்கிறது. சமீபகாலத்துக்கு முன் 70,000 ரூபாய் செலவு செய்து ரிபேர் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வைணவர்கள் சந்ததியார் 500 பெயர்கள் பெண்சாதி பிள்ளைகளோடு வாழ்ந்து வருகிறார்கள்.

ஸ்ரீ மதுராபுரிக்குச் சமீபத்தில் கோல் என்னும் கிராமத்தில் பிரம்திகா என்னும் பெயருடைய சநந்த பிராம்மணர் அந்த கிராமத்தில் கிரிதரன் என்னும் பெயரால் ஸ்ரீ கிருஷ்ணரை வைத்து வணங்கிவரும்போது, பிருந்தாவனத்துக்கடுத்த இராஜபூ கிராமத்தில் கங்காதரன் என்னும் பிராமணருடைய குமாரத்தியை விவாகம் செய்ய சம்வச்சரம் 1441ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ஸ்ரீ ஹரிதாசன் என்று பெயரிடப்பட்டது. அந்தக் குழந்தை சிறு பிராயத்திலேயே விஷ்ணுபக்தியிற் சிறந்ததாகிப் பெற்றோர்களுடைய இஷ்டப்பிரகாரம் கிரஹஸ்தாஸ்ரமத்தைத் தழுவாமல் சந்நியாசியாகி, பிருந்தாவனத்துக்கும் யமுனைக்கும் மத்தியிலிருக்கும் மானசரோவரத்தில் தபசுசெய்துகொண்டு காலம் போக்கிப் பிறகு நிதவனத்துக்குவர அவர் தாய்மாமனாகிய விட்டலபூபாலர் பிரதம சீடரானார். இந்த ஹரிதாசருடைய மகத்துவம் நாலாபக்கத்தில் பரவ டில்லியிலிருந்த தயால்தாஸ் என்பவர் தமக்கு ஒரு மகான் கொடுத்திருந்த தங்கம் செய்யும் கல்லை எங்கேயோ போக்கடித்துவிட்ட விசனத்தினால் இவரிடம் வந்து முறையிட, இவர் அந்த தயாலதாசரைக் கூப்பிட்டு யமுனையிலிருக்கும் மணலில் ஒரு பிடி மணலையெடுக்கும்படி செய்ய அவர் அப்படியே எடுத்துப் பார்க்க ஒவ்வொரு மணலும் தாம் முன் போக்கடித்த தங்கம் செய்யும் கற்களாக விருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டு இவருக்குச் சீடரானார். இந்த ஹரிதாசரிடத்தில் ஒரு சாலக்கிராமம் இருப்பதினால்தான் இப்படித் தங்கமாகிறதென்று எண்ணிய சில திருடர்கள் அந்த சாலக்கிராமத்தை எடுத்துக்கொண்டுபோய் அது பிரயோஜனந் தராமையால் ஒரு புதரில் எறிந்துவிட்டார்கள். இந்த சங்கதியை ஹரிதாசர் ஞானதிருஷ்டியினால் அறிந்து அதை அவ்விடத்திலேயே இருக்கும்படி செய்து தினம் ஒன்றுக்குக் கோயில் பூஜைக்கும் குரங்குகள் முதலானவைகளுக்கும் ஆகாரம் வைக்க ஒரு பொற்காசு பெற்றுக்கொண்டு வரும்படி செய்தார்.

ஒருநாள் தனது சீடர் 2000 ரூபாய் அத்தர் வாங்கிவந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்விக்கவேண்டுமென்றிருக்க இந்த ஹரிதாசர் அதையெல்லாம் மண்ணில் கொட்டிவிட்டாராம். சீடர் கண்டு வியாகூலப்பட அவரைக் கூட்டிக்கொண்டுபோய்த் தமது கோயிலில் நிறுத்த அங்கு அந்தக் கோயில் முழுதும் அத்தர்மயமாக விருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டார். இப்படி இவர் செய்த மகிமைகள் அநந்தமாகையால் டில்லி சக்கிரவர்த்திகளும் இவரைத் தரிசித்ததாகத் தோன்றுகின்றது.

இவர் சம்வச்சரம் 1537ஆறு பரமபதமடைய இவர் பிரதம சீடரும் மாமனுமாகிய விட்டல்பூபாலர் இந்த மஹந்து பட்டத்தை யடைந்தார். பிறகு பிஹாரிதாசர் மஹந்து பட்டத்தை யடைந்தார். பிறகு நகரிதாஸ், சரசுதாஸ், நாவல்தாஸ், நரஹரதாஸ், ரசிக்தால்ல லிதகிஹாரி முதலானவர்கள் வரிசையாக மஹந்து பட்டங்களைப் பெற்றார்கள். இந்த ஹரிதாசருடைய மதம் சைதன்னியருடைய பக்தி வைணவ மதமாகவிருக்கினும் அதைவிட தத்துவஞான விசாரணையும் சர்வ தாம்பரித்தியாகஞ்செய்து சுத்த சந்நியாச மடையும்படியான மதமாக விருக்கிறது. இவர்களுடைய முக்கியமத கிரந்தங்களாகிய சாதாரண சித்தாந்தம், இரசிகபதம் என்னும் நூல்களைப் படிப்போருக்கு தேகேந்திரியங்களின் உணர்ச்சியைப் பற்றியும் ஈசரஹிதமான நாமங்களை யடையவேண்டியதுமாகிய ஞானம் சவிஸ்தாரமாகவும் உறுக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போதிருக்கும் இந்த மதஸ்தர்களில் சிலர் காமவிகாரத்திலும் உலக சிற்றின்பங்களிலும் பிரவேசித்துவிட்டார்கள். இவர்களன்றியில் இந்தப் பிருந்தாவனத்தில் முலிக்தாசிகள் என்னும் பெயரால் வேறொரு வகுப்பு வைணவர்களிருக்கிறார்கள். இந்த மதாதிபதியாகிய முலிக்தாசி என்பவர் அரங்கஜீபு காலத்திலிருந்தவராம். இவர் மதமும் கிட்டத்தட்ட ஹரிதாசருடைய மதம்போலிருந்தாலும் இவர்கள் ஸ்ரீகிருஷ்ணநாமத்துக்குப் பதிலாக ராமநாமத்தைத் தியானிக்கிறார்கள். இவர்களுக்கு இப்போது இராமஜி என்னும் பெயரால் ஒரு பெரிய கோயில் பிருந்தாவனத்திலிருக்கிறது. இவர்களது முக்கிய கிரந்தம் தசரதனம் என்று சொல்லுகிறார்கள். மேலும் பிராணநாஸ்திகளென்றும் வேறொரு வகுப்பு வைணவர்கள் இந்தப் பிருந்தாவனத்தி லிருக்கிறார்கள். இவர்கள் எல்லா மதங்களிலும் சத்திய மிருக்கிறதென்றும் இந்து வேதாந்த சாஸ்திரங்களின் கருத்தே கொரானிலும்

யையிலிருக்கிறதென்றும் சொல்லி எல்லாமதங்களையும் சமரசப்படுத்தப் பிரயத்தினப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். இந்தமதாதிபதி நானூறுவருடங்களுக்குமுன்க்ஷத்திரிய வமிசத்தில் ஜனித்து பந்தல்குந்து ராஜாவின் சகாயத்தைக் கொண்டு தனது மதத்தைப் பிரபலமாக்கினார். இவர்களுக்குச் சாமிகளென்று பெயர்; அதாவது கடவுளுடைய மக்களென்று பொருள். இவர்கள் விக்கிரகங்களைக் கும்பிடுவதில்லை. இவர்கள் கோவில்களில் மதாசாரியருடைய புத்தகங்களை மாத்திரம் வைத்துவணங்கிவருவதாகத் தோன்றுகின்றது. அந்தப் புத்தகங்களையெனில்:-1. இரசம், 2. பிரகாசம், 3. சத்ருதம், 4. கலசம், 5. சநந்தம், 6. கீர்த்தனம், 7. குலாம், 8. சேலபதம், 9 பிரசர்மஇல்லாயிதலாம், 10. சாகரசிங்காரம், 11. பாரிசிங்காரம், 12. சித்திபாஷா, 13. மரபத்துசாகர், 14. கியாமத்நாமா என்பவைகளே. இந்தக் கிரந்தங்களின் ஆதாரத்தைக் கொண்டே வியாமசாரம், குனிசாரம் என்ற சிறந்த நூல்களை ஹைதராஸ்நாட்டின் தாகூர் தயராமவர்களுடைய வேண்டுகோளின்படி அவரது குரு பகதாவர் என்பவர் இயற்றியிருக்கிறார். இவைகளில் இந்து வேதத்தின் கருத்துகளும் கொரானின் கருத்துகளும் அடங்கியிருக்கின்றன. இந்த மதத்தாரைச்சிலர் நாஸ்திகரென்றும், சிலர் அத்வைதிகளென்றும், சிலர் சார்வாகர்களென்றும், சிலர் உலகாயிதர்களென்றும், சிலர் பரிசுத்த வைணவர்களென்றும், சிலர் சமரசவேதிகளென்றும் சொல்லிவருகிறார்கள். பிருந்தாவனத்தில் பிரபலமாகவிருக்கும் பற்பலவிதமான வைணவ மதாசாரியர்களுடைய சரித்திரங்களையும், அவர்களுடைய சித்தாந்தங்களையும் சுருக்கமாகச் சொன்னோம். இனி இந்த மதஸ்தர்களாற் கொண்டாடப்படும் தேவர்களையும் அவர்களுடைய கோவில்களையும் பற்றிச் சொல்வோம்.

பிருந்தாவனத்திலிருக்கும் பிரபலமான கோவில்கள்.

யாத்திரைக்காரர் பிருந்தாவனத்துக்குள் பிரவேசித்தால் முதலில் காணப்படும் கோவில் பிருந்தாதேவி சந்நிதியே. இது ராசமண்டலத்துக்கருகில் அழகாகவிருக்கும் சிவகுஞ்சம் என்னும் சிங்காரத்தோட்டத்தில் கோஷாயிகளாற் கட்டப்பட்டிருக்கிறது. இது பேர்பெற்ற கோவிலானபடியால் கி. பி.

1573 ஆக்பர் பாதுஷா அவர்கள் வந்து தரிசித்துப்போன தாகச் சரித்திரத்தில் கண்டிருக்கிறது. இப்படி சக்கிரவர்த்தியே தரிசித்தபடியால் இந்த பிருந்தாவனத்தில் விசேஷமான நான்கு கோயில்களைக் கட்டப்பிரயத்தனப்பட்ட இராஜாக்களுக்கு இவர் உதவி செய்யத் தூண்டப்பட்டாராம். இந்த நான்கு கோவில்களாவன கோவிந்ததேவர் சந்நிதி, கோபிநாதர் சந்நிதி, ஜுகல்கிஷோர் சந்நிதி, மதனமோஹனர் சந்நிதி என்பவைகளே. இந்த நான்கு கோயில்களில் கோவிந்த தேவர் சந்நிதி எவ்விதத்திலும் சிறந்த கட்டிடம். இந்தக் கட்டிடத்தின் வெளிப்பக்கத்துச் சுவர்கள் கிரேக்கருடைய சிற்பசாஸ்திர இலக்ஷணப்பிரகாரம் அடுக்கடுக்காகச் செங்கருங் கற்களால் கட்டப்பட்டு, நூறு அடிகள் நீளமும் அதற்கேற்ற அகலமும், பற்பல அடுக்குகளுடனும், கமான் வளைவுகளுடனும், இந்த சிற்பசாஸ்திர சம்பந்தமாகக் கட்டப்பட்ட பலமான மந்திரம்.

இந்தக் கட்டடத்துக்குள் மூன்று கர்ப்பகிரகங்களிருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் 40 அடிகள் நீளமும் 20 அடிகள் அகலமுமுள்ள விஸ்தீரணமுள்ளவைகளாகவும், எதிரிலிருக்கும் மண்டபம் பலவிதக் கொத்து வேலைப்பாடுகளுள்ள கற்களாற் கட்டப்பட்டிருக்கின்றதன்றியில், கட்டிடத்தின்மேல் ஐந்து அடுக்கு மாடிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த மேல்மாடிகளுக்கு ஏறிப்போகவும் இறங்கி வரவும் இரண்டு பக்கங்களிலும் வசதியான படிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கிரஹத்தின்மீது கோபுரம்கட்ட உத்தேசித்துத் தகுந்த அஸ்திபாரமும் போடப்பட்டிருந்தும் ஏன் கட்டப்படவில்லையோ தெரியவில்லை. இந்தக்கோயில் மேற்சுத்தாழ்வாரத்தின் ஒருபாகத்தில் ஸம்ஸ்கிருத பாஷையில் சிலாசாஸனம் செதுக்கப்பட்டிருக்கிறது. அதன் கருத்தாவது :—

ஸ்ரீ ரூபர், சநந்தானர் என்னும் குருமார்களுடைய உத்திரவின்படி கி. பி. 1590 ஆக்பர் பாதுஷா சிங்காசன மேறிய 34 மஹாராஜ பிரதிராஜ குடும்பத்தைச் சார்ந்த மகாராஜ பகவான்தாசருடைய குமாரர் ஸ்ரீ மகாராஜ மனசிங்க தேவரவர்கள் ஏராளமானபொன்னைச்செலவழித்துக் கலியாணதாசரைத் தலைவராகவும், மாணிக்குசந்திர சோபாரியை உதவி விசாரணைக்கர்த்தராகவும், டில்லி கோவிந்ததாசரைச் சிற்பியாகவும், குரதாசரைக் கொத்துமேஸ்திரியாகவுங் கொண்டு இ

தக் கோயிலை கட்டிவைத்தார் என்று பொருளாகிறது. இந்த மனசிங்கதேவருடைய ஆதி பிதாவாகிய இராஜாபிரதிசிங்கு அவர்கள் இப்போதிருக்கும் ஜெயப்பூர் ராஜாவின் ஆதிபிதா. அவருக்கு ஏழு குமாரர்கள இருந்தார்கள். அவர்களில் 12 பெயர் மனசிங்கருடைய சொத்துக்குப் பாத்தியஸ்தரானார்கள். இந்த மனசிங்கு மகாராஜருடைய மூன்றும் பேரனாகிய மனசிங்கு என்பவர் அக்பர் காலத்தில் சிந்தநதியின் கரைக்கடுத்த பட்டணங்கள் காபூல் முதலான விடங்களுக்கும் ஒரிசா முதலான வங்கநாட்டு மாகாணங்களுக்கும் இராஜாவாகி, குச்சு பேஹார் மகாராஜாவாகிய லக்ஷ்மிநாராயணருடைய சகோதரியை விவாஹம் செய்துகொண்டார்.

இவரால் கட்டப்பட்ட இந்த அழகிய கோயிலை அரங்கசீப்பு பலதடவைகளில் படையெடுத்துவந்து தாக்கிக் கட்டடங்களிலிருந்த சிற்ப விஞ்ஞான பதுமைகளின் மூக்கு முதலானவைகளை யிடித்து அலங்கோலமாக்கினான். இதையறிந்த இந்துக்கள் கோயிலுக்குள்ளிருந்த விக்கிரகங்களையும் மற்றுமுள்ளவைகளையும் எடுத்துக்கொண்டுபோய் ஜயபூரில் ஒளித்துவிட்டார்கள். அந்த விக்கிரகங்களிருந்த கர்ப்பகிரஹத்தைக் கெடுத்துவிடவே கி. பி. 1854-ம் வருஷம் செங்கற்களால் கார்பாதி கட்டிடங்களைக் கட்டி ஜயப்பூரிலிருந்து கிரிதரர் என்னும் விக்கிரகத்தை இங்கே கொண்டுவந்து வைக்கப்பட்டது. இந்த விக்கிரகத்துக்கு இருபக்கங்களில் சைதன்னியர், சத்தியானந்தர் என்பவர்களுடைய விக்கிரகங்களை வைத்திருப்பதனால், இது ஒருகாலத்தில் சைதன்னிய வைணவர் கோவிலாக விருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. இந்தக் கோவிலானது தொன்றுதொட்டு கோஷாயிகள் வசத்தில் விடப்பட்டது. இப்போதிருக்கும் கோஷாயின் பெயர் சியாமசுந்தார் என்று சொல்லப்படுகிறார். இதை இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் 1873௵ 132851 ரூபாய் செலவுசெய்து ரிபேர் செய்திருக்கிறார்கள்.

இந்தக் கோவிலுக்குச் சமீபமாகத் தெற்குப் பாகத்தில் ஒரு அழகிய சத்திரம் கட்டப்பட்டிருக்கின்றது. இது கி. பி. 1556௵ சாஹிஜிகான் சக்கிரவர்த்தி காலத்தில் இராணு அமர்சிங்கருடைய குமாரரும் இராஜாபிம் சிங்கு மனைவி இராணி இரம்பாவதி என்னும் விதந்து ஸ்திரீயால் கட்டப்பட்டதாகச் சிலாசாசனமிடப்பட்டிருக்கிறது.

இந்தக் கோவிலின் வருஷாந்திர செலவுக்காக ஆள்வார் ஜயபூர் முதலான விடங்களில் சில கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன. அந்தக் கிராமங்களால் வருஷம் 17500 ரூபாய் வசூலாகிறது. இதில் சுமார் 13,000 ஆயிரம் ரூபாய் உண்டியால் வருகிறதாகத் தோன்றுகிறது. இந்தக் கட்டிடத்தின் அடி அஸ்திபாரம் கிறிஸ்துமதகோயில் அஸ்திவாரம்போல் இருந்தாலும் மத்திய இந்தியாவில் இவ்வளவு அழகும் கெட்டியுமான கோயிலை கிடையாதென்று சொல்லலாம்.

இனி இந்தப் பிருந்தாவனத்தில் புராதனமாக இரண்டாவது கோயிலெதுவெனில் மதன மோஹனர் கோயிலே.

மதனமோஹனர் கோவில்.

இது பிருந்தாவனத்தில் காலிங்கன மர்த்தன கட்டத்துக்குச் சமீபத்தில் நகரத்தின் மேல்கோடி மூலையில் கட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் கோயில் கட்டிய காரணம் நந்தகிராமத்தில் ஒரு மாட்டுக்கொட்டத்தில் சந்தானர்என்னும் பக்திமான் போய்ப் பார்க்கையில் கோவிந்தஜி என்னும் ஓர் விக்கிரகமகப்பட்டு அதை எடுத்துக்கொண்டு வந்து பிருந்தாவனத்தில் இந்தப் பிரம்மகுண்டத்தண்டை வைத்து இதற்கு ஒரு கோயிலைக் கட்ட யோசித்திருக்கையில் இராமதாஸ் என்னும் மூல்தான் தேசத்து வர்த்தகன் நூறு படகுகளில் வர்த்தகப் பொருள்களை யமுனையாற்றின் மூலமாக ஆக்ரா பட்டணத்துக்குக் கொண்டுபோகும்போது படகுகள் மணல்மேடுகளில் தாக்கப்பட்டு நஷ்டமடையும்படி சம்பவிக்கவே படகை விட்டுக் குதித்துப் பிரம்மகுண்டத்தண்டைபோய்அழுகையில்சந்தானர் அழவேண்டாமென்று சொல்லி இந்தக் கோயிலைக் கட்டி வைக்கும்படி சொல்ல, வர்த்தகன் சம்மதிக்க படகுகள் கிரமமாகப்போய்ச் சேர்ந்து அதிகலாபம் வர, அவர் மகிழ்ந்து இந்தக் கோயிலைக் கட்டிவைத்ததாக இலக்ஷ்மீ தாசரால் இயற்றப்பட்ட பக்திசிந்து கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இப்போது இந்தக் கோவிலானது 57 அடிகள் நீளமும் 20 அடிகள் அகலமுமுள்ளதாயும் மூன்று பக்கங்களிலும் திறக்கப்பட்டதாயும், ஒவ்வொரு பக்கத்திலும் ஒன்பது

அல்லது பத்து அடிகளுள்ள வாசல்களுள்ளதாயும், 22 அடிகள் உயரமுள்ளதாயு மிருக்கிறது. மேல்கோபுரம் இடிந்து போயிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. இப்போதிருக்கும் வாழைப்பூவைப்போன்ற ஸ்தூபிகளும் பார்வைக்கு ஒரு விநோதமான கட்டடங்களாக விருக்கின்றன. இந்தக் கோவிலுக்கு வருஷம் 10100 ரூபாய் வருமானமுண்டு. இதில் 8000 ரூபாய் உண்டிகையால் வசூலாகிறது. 2100 ரூபாய் பூஸ்திதிகளினால் வசூலாகிறது. இந்தக் கோவிலும் அதிகமாகச் சீர்கெட்டுவிட்டபடியால் 1875ஆம் மதுரா கலெக்டர் மிஸ்டர் கிரவுசி துரையவர்களால் ரிப்பேர் செய்விக்கப்பட்டதன்றியில், முனிசிபாலிடியாராலும் 200 ரூபாய் செலவிடப்பட்டு ரிப்பேர் செய்விக்கப்பட்டது. இந்த மதனமோஹனருடைய புராதன விக்கிரகம் மகம்மதியருடைய பயத்தினால் கி. பி. 1725 முதல் 1757வரை கவுராலிக்கு இராஜாவாகவிருந்த இராஜகோபால ஸிங்கர் தமது மைத்துனராகிய ஜயப்பூர் இராஜாவிடம் பெற்றுத் தம்மிடமே ஒரு புதுக்கோயிலைக் கட்டிப் பூஜைசெய்துவந்தார். இதற்காக வருஷம் ஒன்றுக்கு 27000 ரூபாய் செலவு செய்து ஏழுதரம் பூஜை செய்வித்துவந்தார். இந்த மதனமோஹனருடைய மகிமையைப்பற்றி அங்கு வசிக்கும் ஜனங்கள் பலவித விநோத சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

கோபிநாதர் சந்நதி.

இது ரேய்ஸாஜி மகாராஜரால் கட்டப்பட்டது. இவர் கச்சவாஹா தாகூர் குடும்பத்தைச்சார்ந்தவர். இவர் ஆக்பர் சக்கிரவர்த்தி காலத்தில் அசாதாரணமான சாமர்த்தியங்களைக் காட்டியபடியால், ஆக்பர் சக்கிரவர்த்தி இவருக்குத் தர்பாரி என்று பட்டங்கட்டி, காபூல் முதலானவிடங்களுக்குப் படையெடுத்துப்போக உத்சாகப்படுத்தினார். இந்த மகா வீரனால் கட்டப்பட்ட இந்தக்கோவில் கிட்டத்தட்ட மதனமோஹனர் கோவிலைப்போலவே இருக்கின்றது. இந்தக் கோவிலுக்குட் பிரவேசிக்க மூன்று அழகிய வளைவான கமான் கேட்டு வழிகள் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் மூன்று அடுக்கு மாடிகள் கட்டப்பட்டிருந்தாலும், அது அதிக புராதனமாயி அபாயஸ்திதிக்கு வந்துவிட மதுரா கலெக்டர் மிஸ்டர் கிரவுசி துரையவர்கள் சர்க்கார்ப்பணத்தைச் செலவிட்டுச் செப்பனிட்டதன்றியில், 1821ஆம் நந்தகுமார கோஸ்வாமியென்பவர் மதன

மோஹனருடைய புதிய கோவிலைக் கட்டும்போது இந்தக் கோவிலின் கட்டடங்களையும் கட்டிவைத்தார். இப்போது இந்தக் கோவிலுக்கு வருஷம் ஒன்றுக்குக் காவிரிகையால் 3000 ரூபாயும் பூஸ்திதிகளால் 1200 ரூபாயும் வருமானம் கிடைக்கிறது.

ஜோபிந்திஜீ கோயில்.

இது மான்கரன் என்னும் சவுபான தாகூரால், அக்பர் சக்ரவர்த்தி காலத்தில் கி. பி. 1627ல் கட்டிவைக்கப்பட்ட பழைய கோவில். இவர் கோபிநாதருடைய தமயனர். இது 25 சதுர அடிகள் விஸ்தீரணமான பல மண்டபங்களும் கர்ப்ப கிரஹமுமுள்ள அழகிய கட்டடம். இந்தக் கோவிலுக்குட் பிரவேசிக்கும் வாசல் நிலைக்குமேல் ஸ்ரீகிருஷ்ணர் கோவர்த்தனகிரியைத் தூக்கிக்கொண்டிருக்குமபடியான பிரதிமை சிங்காரமாகச் செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தக்கோயிலில் புறாக்கள் மிதமிஞ்சியிருப்பதால் கண்டவிடமெல்லாம் அசங்கியமாயிருக்கின்றது. உடனே தக்கமுயற்சி செய்து சுத்தி செய்யவேண்டும். இந்த நான்கு கோயில்களைப்போலவே அதிக புராதனமான இராதாவல்லபருடைய கோவிலொன்றிருக்கிறது. இது பெரிய கோயில். இதன் முன் தாழ்வாரம் 34 அடிகள் அகலமும், கட்டடத்திற்குள்ளிருக்கும் மத்தியஹால் 63 அடிகள் அகலமுமுள்ளது. இதற்கு மேல்மாடி கட்டடமும் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடத்தைத் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு மகம்மதியர் மஸ்ஜிதுபோலத் தோன்றும். இதுவும் ஜீரணதசையடைந்து விட்டபடியால் சமீபகாலத்துக்கு முன் 4500 ரூபாய் செலவிட்டு ரிபேர் செய்யப்பட்டது. இந்த ஐந்து கோயில்களும் பிருந்தாவனத்தில் மகா புராதனமான கோவில்களாக மதிக்கப்பட்டிருக்கின்றன. மத்தியகாலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் அவ்வளவாகச் சிற்பசாஸ்திர லக்ஷணங்களுக்குப் பொருந்தியவைகளல்ல. மதனமோஹனர் கோவிலுக்குச் சமீபத்திலிருக்கிற ஸ்ரீநகர்பட்டர் கோவில் மத்தியகாலத்தில் பெங்காளிகளால் கட்டப்பட்டு அதினுல் சேர்ந்த 13000 ரூபாய் கடனுக்காக வேண்டி வருமானத்துக்காக ஜாங்கபூர் கிராமங்களை மானியங்களாக விட்டிருக்கிறார்கள்.

இந்த மத்தியகாலக் கோயில்களில் இராதா தாமோதரர் கோயிலும் சிரேஷ்டமென்றே சொல்லவேண்டும். இந்தக்

கோயிலில் மதாதிபதியாகிய ஜீபருடையவும் அவர் மாமனர்களாகிய ரூபர், சநாதருடையவும் அஸ்தி சாம்பல்களைக் கொண்டுவந்து சமாதிகட்டிப் பூஜைசெய்து வருகிறார்கள். இந்த மதாசாரியர்கள் ஜயப்பூர் மகாராஜாவினால் சைவர்களாகி விட்டதாகவும், ஆகவே அவர்களுக்கு அந்தப் பூஜைசெய்யத் தகாதென்றும் 1875௵ இராதா தாமோதர மகாந்தர் என்பவர் எழுந்து கலகஞ்செய்தார். ஆகவே இப்போது இந்தக்கோவிலில் வங்கதேசத்து வைஷ்ணவர்கள்தான் விசேஷமாக வணங்கி வருகிறார்கள். அப்படி ஆதிகாலத்திலும் மத்தியகாலத்திலும் கட்டியிருக்கும் கட்டடங்களைப் பார்க்கிலும் சென்ற நூறு வருஷங்களுக்கு முன் அநேக நூதன கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளுள் சிரேஷ்டமானவைகள் ஐந்து. அவைகளாவன:—

தற்காலத்துக் கோவில்கள்.

1-வது—கி. பி. 1840௵ லாலாபாபு என்னும் கிருஷ்ண சந்திரசிங்கு என்னும் பங்காளி பிரபுவினால் கிருஷ்ணசந்திரமர்கோவில் கட்டிவைக்கப்பட்டது.

இக்கக் கோவிலானது ஒரு பெரிய சிங்கார தோட்டத்திற் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக்கோவில் 160 அடிகள் நீளமும், முன்பக்கத்தில் மூன்று சிறந்த கமான் வளைவான வாசல்களை யுடையதாய் விசித்திர விநோதமான வேலைப்பாடுளைதாகவு மிருக்கிறது.

இந்தக் கோயிலைக் கட்டிவைத்தவர்களுடைய தந்தையாகிய பாபுமூர்வி மோஹனசிங்கு என்பவர் வங்கநாட்டில் புகழ்பெற்ற மூர்ஷடாபாத்திலுள்ள காண்டி என்னும் கிராமத்தில் ஒரு பெரியவர் தநா பிரபுவான ஹரிகிருஷ்ண சிங்கருடைய குமாரர். இவருடைய தாயாதிகளாகிய பிஹாரிலால் சிந்துக்கு, இராதா கோவிந்து, கங்கா கோவிந்து, இராதா சரன் என்னும் மூன்று மக்களிருந்தார்கள். இவர்களில் இராதா சரனுக்குப்பிதாரார்ஜி கசொத்துகள்யாவும்சேரக்குடும்பத்தை விட்டுப்பிரிந்து மூர்ஷடாபாத்தின் நபாபுக்களாகிய அலிவர்த்திகான், சுராஜடவுலா என்பவர்களிடம் மேன்மையான உத்தியோகத்தி லமர்ந்து இராதாவல்லபர் கோவிலுக்கருகில் ஒரு பெரிய தருமசாலையைக் கட்டிவைத்திருக்கிறார். இவர் இறந்து மக்களில்லாமையால் சொத்துகளை யாவும் இவர் சகோதரர்

கங்கா கோவிந்தருக்குச் சேர்ந்தன. இவர் 1828௵ லார்டு பெண்டிங் பிரபு காலத்தில் பங்காள செட்டில்மெண்டு வேலையைத் திருப்திகரமாகச் செய்து சிறப்புப்பெற்றதன்றியில், இவர் நதியா ஜில்லாவில் யாத்திரைக்காரருக்கு அநேக தருமசாலைகளைக் கட்டிவைத்தும், அநேக சம்ஸ்கிருத பாடசாலைகளை ஸ்தாபித்தும், தனது தகப்பனாருடைய வருஷாந்திர திதிக்கு லக்ஷம்ரூபாய் செலவிட்டும்வந்தார். இவருடைய குமாரராகிய பிராணகிருஷ்ண சிங்கவர்கள் தந்தையைவிட அதிக தரும செலவுகள் செய்துவந்தார். இவருடைய குமாரர்தான் முன் சொன்ன கிருஷ்ண சந்திரையர் கோயிலைக் கட்டிவைத்தவர். இவர் பர்த்துவான் ஒரிசாமுதலான விடங்களிற் பல வேலைகளைச் செய்துவந்து தமது முப்பதாம் வயதுவரவே, சன்னியாசியாகி இந்தப் பிருந்தாவனத்துக்கடுத்த விராஜாவிற்கு வந்துவிட்டார். இப்போது இந்த பிருந்தாவனத்துக் கோயிலுக்கருகில் ஒரு பெரிய சத்திரத்தைக் கட்டிவைத்து கணக்கற்ற யாத்திரைக்காரரைப் போஷித்து வருகின்றனர். இதற்கு வருஷம் ஒன்றுக்கு 22;000 ரூபாய் செலவாகிறது. மேலும் லக்ஷம்ரூபாய் செலவுசெய்து அருகிலிருக்கும் இராதா குண்டத்தைப் புதுப்பித்தார். பிறகு தமது நாற்பதாம் வயதாகவே உலகசம்பந்தமான சகலவித அவஸ்தைகளையும்விட்டு, பைராகியாகி விராயாமுதலான காடுகளிற் பிச்சையெடுத்து உண்டு 2 வருஷம் காலம்போக்கி வரவே, கோவர்த்தனத்துக்குப் போனபோது, ஒரு குதிரையால் உதைக்கப்பட்ட அடியால் பரமபதமடைந்தார். இவர் சந்நியாசியாகத் திரியும்போது, மதுராபுரி ஸ்ரீமான் சேட்டு லக்ஷ்மிசந்து அவர்களுடைய தந்தையாகிய மனிராமசேட்டவர்களும் சந்நியாசியாகி இவரோடு கூட பிருந்தாவனங்களைச் சுற்றிவந்தார். இந்தக் கிருஷ்ண சந்திரமர் மதுராபுரி ஜில்லாவிற் பத்துவருஷங்களாகச் சும்மாவிருக்கவில்லை. தான்செய்துவந்த தருமகாரியங்கள் சாஸ்விதமாக நடக்கும்படி கோசிபா கன்னுவில், ஜவகிராமம் சட்டா, நந்தகிராமம், பிரசன்னம், சானகிதம், காரணம், காரி, ஹதியா ஜப்த, போஹலி, நமிபூர், பிரபூர், குலாபூர், சமராகரி, திமிரி முதலான 72 கிராமங்களையும் இன்னும் சில ஜமீன்களையும் வெகு நயமான விலைக்கு வாங்கித் தருமகாரியங்களுக்கு விட்டார். இவருடைய குமாரராகிய பாபு ஸ்ரீ நாராயணசிங்கா மைனராயிருந்து அவருடைய தாயார் சம்ரக்ஷணையி லிருந்தபோது சில கிராமங்கள் ஏலம் போடப்பட்டன. இவர் தமது முப்ப

நாவது வயதில் சந்ததியில்லாமல் இறந்துபோக இவரது மனைவிகள் பிரதாபசந்திரரை ஸ்வீகாரம்செய்து வளர்த்து வந்தார்கள். இவர் பெரியவரானபோது கண்டி கிராமத்தில் ஒரு இங்கிலீஷ் பாடசாலையும், கல்கத்தாவில் ஒரு ஆஸ்பத்திரியும் கட்டி வைத்தார். இவர் பங்காள சட்டநிருபண சபையில் ஒரு மெம்பராக நியமிக்கப்பட்டதன்றியில் பஹதூர் என்கிற பட்டத்தையும், C. S. I. என்றும் பிருதும் பெற்றார். 1867ல் இறந்துபோக கிரிஸ்சந்திரர், பூரணசந்திரர், காந்திசந்திரர் சாரதசந்திர ரென்னும் இவர்கள் நான்கு பெயரும் அன்னியோன்னியமாக வாழ்ந்துவர ஈசுவரசந்திர ரென்னும் கிரிஸ்சந்திரரின் ஸகோதரர் இறந்துபோக, அவர் பாகம் அவர் குமாரர் இந்திரசந்திரருக்கும் மற்றவர்கள் தம்தம் பாகத்தை வைத்துக்கொண்டு வாழ்ந்துவருகிறார்கள். இப்போது பிருந்தாவனத்தில் கட்டிய கோவிலுக்கும் தருமசத்திரங்களுக்கும் வருஷம் 76738 ரூபாய் வசூலாகிறது. ரோட்டு செஸ்ஸால் 40496 ரூபாயும் எல்லாங்கூடி 240193 ரூபாய் இப்போது அதிக விர்த்தியாகியதினால் வருஷம் ஒன்றுக்கு 3,80,892 ரூபாய் வசூலாகித் தருமகாரியங்கள் நடந்துவருகின்றன.

ஸ்ரீ இரங்கநாதர்கோவில்.

பிருந்தாவனத்திலுள்ள தற்காலத்துக் கோவில்களில் இரண்டாவது ஸ்ரீ இரங்கநாதர் க்ஷேத்திரமே. இது ஸ்ரீகோவர்த்தனம் இரங்காசாரியா ரவர்களுடைய கருத்தின்படி, அவரது உத்தம சிஷ்யர்களும் ஸ்ரீமதுராபுரியின் மஹான்களுமாகிய ஸ்ரீ சேட் லக்ஷ்மிசந்து அவர்களுடைய குமாரர்களுமாகிய ஸ்ரீகோவிந்ததாஸ், ஸ்ரீராதகிருஷ்ணதாஸ் சேட்டவர்களால் 45,00,000 ரூபாய் செலவிட்டுத் தக்ஷிண தேசத்திலுள்ள ஸ்ரீ இரங்கநாதர் க்ஷேத்திரத்தின் (பிளான்) மாதிரி கட்டிய பிரமாண்டமாகும் அழகுமான கோயில். இந்தக்கோயில் வெளிப்பிராகாரம் 773 அடிகள் நீளமும், 440 அடிகள் அகலமும், இந்தப் பிராகாரத்துக்குள்ளாக ஸ்ரீ இரங்கநாதர், ஸ்ரீதிருப்பதி ஸ்ரீநிவாசர், இராமானுஜ கிருஷ்ணர், ஆழ்வாராசாரியர்கள் முதலான அழகிய பல கோயில்களும், அழகிய சந்திர புஷ்கரணி, சூரிய புஷ்கரணித் தடாகங்களும், சிங்காரத் தோட்டங்களும், அன்றியும் பூஜாரிகளும், பாகவதர்களும், யாத்திரைக்

காரர்களும் சவுக்கியமாக வாழத் திருமாளிகைகளும் அடங்கியிருக்கின்றன. இந்தக் கோயிலுக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் துவஜஸ்தம்பம் 60 அடிகள் நீளமும், பூமிக்குள் 24 அடிகள் நீளமும் ஆக 84 அடிகள் நீளமுமுள்ளனவாய்த் தங்கமுலாம் பூசப்பட்டுக் கம்பீரமாகவிருக்கின்றது. இதற்கு மாத்திரம் செலவான தொகை 10,000 ரூபாய். இந்த துவஜஸ்தம்பத்துக்குக் கிழக்கு மேற்குப் பிரகாரங்களில் தக்ஷண தேசத்துக் கோபுரங்களைப்போன்ற பிரம்மாண்ட கோபுரங்களைக்கட்டி இருக்கின்றனர். இந்தக்கட்டடங்களின் சுவர்கள் முதலானவைகள செங்கருங் கற்களினால் கட்டப்பட்டிருக்கிற தன்றியில் முதற்பிரகாரத்தின் மதில் கோபுரம் அத்தேசத்துச் சிற்ப சாஸ்திர சிங்காரத்தின்படி 93 அடிகள் வரையில் உயர்ந்து பல அடுக்குகளுடையதாகிக் கம்பீர காட்சியைக் கொடுக்கின்றன.

இந்தப் பிரகாரத்துக்குள்ளெல்லாம் பெரும்பாலும் செங்கருங்கற்களையும், கீழே சிறு பளபளப்பான ஸ்படிக கற்களையும்பதித்துத் தகதகவென்று தோற்றுகின்றன. கோயிலுக்குள்ளிருக்கும் விக்கிரகங்களும் தென்தேசத்து விக்கிரகங்களைப் பார்க்கிலும் சிறந்த வடிவுடையவைகளாயும், நவரத்தினங்களாற் செய்து முடித்த அநேக ஆபரணங்களையும் விலையுயர்ந்த வஸ்திரங்களையுடையவைகளாயும் ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கொண்டு ஸ்ரீ சம்பிரதாயத்தின்படி அபிஷேக பூஜை முதலான சகல காரியங்களும் திருப்திகரமாகச் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் கோயிலில் ஆழ்வார் ஆசாரியர்கள் சன்னதிக்கருகில், ஸ்ரீ கோவர்த்தனர் இரங்காசாரியா ரவர்களைப்போல ஸ்படிகக்கல்லால் ஒரு விக்கிரகத்தைச்செய்து மற்ற ஆழ்வார் ஆசாரியர் பூஜைசெய்து வருகிறார்கள். விக்கிரகமும் லக்ஷணமாக விருக்கிறது. கோயிலின் கிழக்குப் பாகத்தில் கஜானா கச்சேரி இருக்கின்றது. இங்கே ஸ்ரீ கோவிந்ததாஸ், ஸ்ரீராதாகிருஷ்ணதாஸ் சேட்டவர்களுடைய பாவனைப் படங்கள் இருக்கின்றன. மற்றோர் பாகத்தில் ஒரு சிறு அறையில் ஸ்ரீ கோவர்த்தனம் இரங்காசாரியர், அவர் குமாரர் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலானவர்களுடைய படங்களிருக்கின்றன. இந்தக் கட்டடத்துக்குச் சமீபத்தில் ஒரு மாடி வீட்டில் ஸ்ரீநிவாஸாசாரியருடைய மனைவியும், அவர் குமாரர் சுமார் பத்துவயதுடைய சிறு வாலிபரும் குடியிருக்கிறார்கள். இந்த வாலிபருக்கு ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்பித்து வருகிறார்கள். இவர் வீட்டு

க்குச் சற்றுத்தூரத்தில் சிங்காரமான ரதமும், வாகன மண்டபங்களுமிருக்கின்றன. இந்த ரதத்தை 690 அடிகள் தூரத்திலிருக்கும் சேட்டவர்களுடைய சிங்கார தோட்டம் வரையில் இழுத்து உற்சவம் செய்து வருகிறார்கள். இந்தச் சிங்காரவனம் அதிக விஸ்தீரணமாயிருக்கிறது. அங்கு அநேகவித புஷ்பச்செடிகளும் பழந்தரும் மரங்களும் வரிசைவரிசையாக வைத்துப் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த வனத்துக்கு மத்தியில் செங்கருங்கற்களால் கட்டப்பட்ட பிரம்மாண்ட மண்டபமும், இதற்கு இருபுறங்களிலும் தாமரைத் தடாகங்களும், இவைகளுக்குப் போக வரிசைவரிசையாக ரோட்டுகளும் சாலைகளும் சிங்காரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சேட்டவர்கள் கோயிலில் அன்னதரித்திரமே கிடையாது. அதாவது பிரதிதினம் காலை 8 மணிக்கெல்லாம் நூற்றுக்கணக்கான பசுக்களின் பாலைக்கொண்டுவந்து கற்கண்டு போட்டு ஸ்படிகக் கட்டிகளைப்போல் காய்ச்சி வாசனையேற்றிச் சுவாமிகளுக்குப் பூசைசெய்து சகலருக்கும் வாரிவாரிக் கொடுக்கிறார்கள். அதை வாங்கி உண்டவர் அந்தவிடத்தைவிட்டு வேறு விடங்களுக்குப் போக விரும்புகிறதில்லை. பிறகு 12 மணிக்கு ஸ்வாமிகளுக்கு அபிஷேகமான உடனே புளியோதரை, ததியோதனம், சர்க்கரைப்பொங்கல், ஒப்பட்டு, வடை, சுண்டல் முதலானவைகள் தயார்செய்து ஜாதிபேதத்தையும், அந்தஸ்து பேதத்தையும் பாராட்டாமல் ஆயிரக்கணக்காக வரும் அதிதிகளுக்கு வாரிவாரிக் கொடுக்கிறார்கள். பிறகு மத்தியானம் 3 மணிக்கு வடதேசத்து யாத்திரைக்காரருக்குக் கோதுமை மாவினாற் செய்த பிடா முதலான அப்பங்களும், காய்கறிகளும், தென்தேச யாத்திரைக்காரருக்குத் திவ்வியமான அரிசிச் சாதம் காய்கறி குழம்புச்சாதமும் திருக்கண் அமுது முதலானவைகள் தாராளமாகக் கொடுக்கிறார்கள். யாத்திரைக்காரர் குடும்பஸ்தர்களாக விருந்தால், அவர்கள் தங்கியிருக்கும்படியான இடங்களுக்குக் கொண்டுபோய்க்கொடுத்து உபசரிக்கிறார்கள். பிறகு மாலை 5 மணிக்குக் கற்கண்டு முதலானவைகள் கலந்த சுக்குக் கஷாயத்தை யாவருக்கும் தாராளமாகக் கொடுக்கிறார்கள். மறுபடியும் இராத்திரி இந்தக் கோயிலில் இனிய குரல் படைக்கப்பெற்ற பண்டிதர்கள் பெரிய தம்பூர்களை வைத்துக்கொண்டு ஸ்ரீஹரி கீர்த்தனைகளையும், ஸ்ரீகர்ணாமிர்தசுலோகங்களையும்பாடுவதைக் கேட்கில் எவர் மனதுதான் உருகாது.

இரதோற்சவ காலத்திற் பரதப்பூர் முதலான மகாராஜாக்கள் வந்து வேடிக்கை பார்க்கிறதன்றியில், கருடவாகனம், அநமந்த வாகனம், புண்ணியகோடி, கல்பவிருக்ஷம் முதலான அநேக வாகனங்கள் பொன் முலாம் பூசப்பட்டவைகளாகையால் ஒவ்வொரு இரத உற்சவத்திற்கு 5000 ரூபாய் செலவிடப்படுகிறது. கோயிலுக்கு வருஷம் ஒன்றுக்கு 57,000 ரூபாய் செலவுசெய்யப்பட்டு வருகிறது. இதில் 30,000 ரூபாய் தளிகைச் சாப்பாட்டிற்குச் செலவாகிறது. இந்தப் பண்டியிருந்துதான் பிரதிதினம் 500 ஸ்ரீவைணவர்களுக்குத் தளிகையும் அநேக பைராகிகளுக்குக் கோதுமை மாவும் கொடுத்து வருகிறார்கள்.

இந்தக் கோயிலுக்கு மதுரை, பிருந்தாவனம், ஆக்ரா முதலானவிடங்களில் 1,17,000 ரூபாய் வரும்படியைக் கொடுக்கத்தக்க 33 கிராமங்களை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். இந்தத் தொகையில் கவர்ன்மெண்டுக்கு 64,000 ரூபாய் போய்விடுகிறது. காணிக்கையால் வரவு 2000 ரூபாய். வருஷாந்திர வட்டி வாடகையால் 11,800 ரூபாய் வருகிறது. 1868-ம் வருஷம் ஸ்ரீ ரங்காசாரி சுவாமிகள் இந்தக் கோயிற் சொத்தைத் தமது குமாரருடைய பயத்தினால் 2000ரூபாய் சாபாகாகிதப் பத்திரத்தினால் ஆறு தருமகர்த்தர்களை நியமித்து சாசனம் செய்து கொடுத்துவிட்டார். இவர்களில் ஸ்ரீ சேட்டு நாராயணதாஸ் என்பவரை முக்கியஸ்தராக நியமித்து 20,00,000 இருபது லக்ஷம் ரூபாய் விலையுள்ள கோவிற் சொத்துக்கள் இவரிடம் ஒப்புவிக்கப்பட்டன. இப்போது தருமவான்களாகிய சேட்டவர்களுடைய முயற்சிகளினால் நாளுக்குநாள் கோவிற் சொத்துக்கள் விருத்தியாகிச் சிறப்புப்பெற்றிருக்கிறது. இந்தக் கோவிலைக் கட்டின பிறகு அனேகதனவான்கள் சிங்காரமான புதுக் கோயில்களைக் கட்ட ஆரம்பித்தார்கள். இப்படிக் கட்டியவைகளில் இராதாராமர் கோயில் சிரேஷ்டமானது. இது லக்ஷ்மணபுரியின் பிரபுவான சாது குந்தனலாலா அவர்களால் கட்டப்பட்ட ஆச்சரியமான கட்டடம். இந்தக்கட்டடத்தின் முன்பாகங்களும் பின்பாகத்தின்பெரும்பாகமும்வெள்ளை ஸ்படிகக்கற்களால் விசித்திரமான வேலைப்பாடுகளுடன் தேவேந்திர விமானம்போல் பிரகாசிக்கின்றன. இந்தக் கட்டடத்தின் ஸ்தம்பங்கள் பிரம்மாண்ட நீளமும் ஒற்றை ஸ்படிகக் கற்களால் விசித்திர வளைவுகளுடன் நடப்பட்டு அதன்மேல் அலங்காரமான மாடி மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த

மண்டபங்களின்மேல் சாக்ஷாத் தேவலோக ரம்பைகளைப் போன்ற ஸ்திரீ பதுமைகள் சரியான ஸ்திரீ உயரமுள்ளவை களாய் ஸ்படிகக்கற்களாற் செய்து நிறுத்தப்பட்டிருக்கின் றன. இந்த ஸ்படிக ஸ்திரீ பதுமைகள் நிர்வாணமாகவும், வலது கைகளைச் சிரசுக்குமேல் நீட்டி ஸ்ரீ கிருஷ்ணரைக் கூப் பிட்டழைக்கும் பாவனையாகவும் இருப்பதைத் தூரத்திலிரு ந்து பார்ப்பவர்களுக்குப் பிரத்தியக்ஷ(பிரவிடை) ஸ்திரீகளைப் போலவே தோன்றுகின்றன. இந்தப் பிரதிமைகளைச் செய்த சிற்பசாஸ்திரியின் பெருமை பலவிதத்திலும் கொண்டாடக் கூடியதே.

இந்தக் கோயிலுக்கு எதிரில் ஸ்படிகக் கற்களால் அமை த்த சிறந்த சிறிய தடாகங்களும், சிங்காரத்தோட்டங்களும் இருக்கின்றன. கோயிலுக்குள் பத்தாயிரம் 10,000 ரூபாய் விலையுள்ள நூற்றுக்கணக்கான கிளைவிளக்குகளுடைய பொன் முலாம் குலைப் விருக்ஷங்களும், விலையுயர்ந்த நகைகளும் ஸ்படிகங்களாற் செய்து வைக்கப்பட்ட விக்கிரகங்களும் இருக் கின்றன. இந்தக் கோயிலானது பூர்வத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் கோபிகளோடு கூடி இராசக்கிரீடை செய்த கோயிலுக்கு வெகு சமீபத்திலிருப்பதாலும், அந்த இடம் இப்போது புரா தனமானதாகித் தகுந்த ரிபேரில்லாமல் கேவலம் ஜனங்கள் வந்து அந்த இராஜக்கிரீடை மேடையின்மீதில் ஏறி இடிக்காத படி சுற்றிலும் கிராதிபோட் டிருப்பதாலும், அந்த இராசக் கிரீடை இடத்தைப் பார்க்கவருகிற யாத்திரைக்கார ரெல்லா ரும் இந்த ராதாராமர் கோவிலுக்கு வந்துபார்த்து சந்தோ ஷப்படுகிறார்கள். இந்த அழகிய சிங்காரஸ்படிக கோயிலுக்கு 100000 ரூபாயிக்கு அதிகமாகவே செலவிடப்பட் டிருக்கிற தன்றியில், இன்னும் கட்டிடத்தின் பின்பக்கத்தின் வேலை நடந்து வருகின்றது. இந்தக கோவிலைக் கட்டிவைத்த சாது குந்தனலால் அவர்கள் அயோத்தியா மாகாணத்தைச் சார்ந்த லட்சுமண புரியில் ஒரு தனவான். இவர் சில வருஷங்களுக்கு முன் பிருந்தாவனத்துக்கு யாத்திரையாக வந்தபோது சேட் டவர்களுடையவும் மற்றவர்களுடையவும் கோவில்களைக் கண் டவுடனே தாமும் ஒரு அழகிய கோவிலைக் கட்டவிரும்பி அங்கேயே சந்நியாசியாகித் தமது மக்களுக்குக் கடிதம் எழுத, அவர் மக்களும் தகப்பனாருடைய கருத்துக்கு விரோதப்படா மல் தங்கள் ஜீவனத்துக்கு வேண்டிய சில சொத்துகளை வைத்துக்கொண்டு மற்ற சொத்துகளை யெல்லாம் கொண்டு

வந்து இந்தக் கோவிலைக் கட்டிவைத்தார்கள். சாது குர்தனலாலவர்கள் இன்னும் கேவலம் ஒரு சன்னியாசியைப்போலிருந்து கட்டிடவேலையை நடத்திவருகிறார்.

இராதா கோபாலர் கோவில்.

இந்த ராமர்கோவிலின் கட்டடத்தைப் பார்த்த சஹரன்பூர் சுஜான்சிபாகிய லால்கிரஜாகிஷோர் என்பவர் கடைவீதியில் கி. பி. 1873 வருஷம் இராதா கோபாலருடைய கோவிலைக் கட்டியிருக்கிறார். இது பல அடுக்குகளுடன் கட்டப்பட்ட அழகிய நேர் கட்டிடம். இந்தக் கட்டிடங்களிலிருக்கும் ஒவ்வொரு கம்பங்களிலும் ஒவ்வொரு சசிலை (ஸ்திரீலை) சித்திராலங்காரமாகக் கடைந்து செய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இராதா இந்திரகிஷோர் கோவில்.

கயா க்ஷேத்திரத்தின் திக்ஙிரி கிராமத்தைச் சார்ந்த ஹிதகாமர் என்னும் பிராமண ஜமீன்தாரருடைய மனைவியாகிய இராணி இந்திரஜித் குளவார் அம்மையவர்களால் ஆறுவருஷகாலங்களாகக் கட்டி 1871ஆம் முடிக்கப்பட்டது. இது 70 அடிகள் விஸ்தீரணமும் மூன்று விசேஷ வாசல்களும் பல அழகிய மண்டபங்களுமுடைய கட்டிடம். கோவிலின் கோபுரத்தின் மேலிருக்கும் கலசம் செம்பினால் செய்து 5000 ரூபாய் செலவிட்டுப் பொன்முலாம் பூசப்பட்டிருக்கிறது. இந்தக் கோவிலின் ஸ்தம்பங்கள் பரதப்பூரிலிருந்து கொண்டுவந்து ஒவ்வொரு கம்பத்துக்குள்ளும் நன்னான்கு சிறு கம்பங்களுடையனவாகி விநோத வேலைப்பாடுகளுடன் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்குச் செலவான தொகை 3,00,000 ரூபாய்.

இராதா கோபாலர் கோவில்.

குவாலியூர் மகாராஜர் தமது குருவாகிய ஸ்ரீ பிரம்மச்சாரி கிரிதாசவர்களுடைய கருத்தின்படி கட்டிய இராதா கோபாலருடைய கோயிலும் சிரேஷ்டமான கோவில். இந்தக்

கட்டடத்தின் உட்பாகம் இத்தாலியர் தேசத்துக் கோவில்களைப்போல பிரம்மாண்ட ஹால்களும் கமான் வளைவுகளும் சுத்தகாற்றும் வெளிச்சமும் உள்ள அழகிய பெரிய கோவில். இந்தக் கட்டடத்தின் மத்தியஹால் 58 அடிகள் நீளமும் 21 அடிகள் அகலமும் சுத்திபுமாக விருக்கின்றன. இந்தக் கோயில் 1860ஹு கிரஹப்பிரவேசம் செய்யப்பட்டது. இதற்குச் செலவான தொகை 3,00,000 ரூபாய். இந்தக் கட்டடத்தின் முன்பாகம் பார்வைக்கு அழகாக இராவிட்டாலும் உட்பாகம் இலக்ஷணமாக விருக்கிறது. இந்தக் கோவிலில் பிரதிதினம் இராத்திரியில் இராதாகிருஷ்ணர் நடனம் கம்பீரமாக நடந்து வருகிறது.

இவைகளன்றியில் இந்த பிருந்தாவனத்தில் புராதனமும் நூதனமுமான அநேக கோவில்களிருக்கின்றன. இந்தக் கோவில்களன்றியில் பிருந்தாவனத்திலிருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நந்தவனத்திலும், ஒவ்வொரு தடாகத்தினிடத்திலும் யமுனைக்கரையோரமாகக்கம்பீரமாகக் கட்டப்பட்டிருக்கும் மண்டபங்களிலும்கட்டடங்களிலும் கணக்கற்ற கோவில்கள் இருக்கின்றன. இவைகளை எண்ணிக் கணக்கிட எம்மாலும் முடியாது மற்றெவராலும் முடியாது. பிருந்தாவனத்தில் யார்வீடாக இருந்தபோதிலும் வீட்டின் முன் கட்டடத்தில் அழகிய மண்டபம்கட்டி அதில் கோபால கிருஷ்ணன், இராதாகிருஷ்ணன், மோஹனகிருஷ்ணன், மதன மோஹனன், இராதாநேசன், பிருந்தாவனலோலன் என்றாதி பெயர்களால் பல விக்கிரகங்களை வைத்துப் பகலும் இரவும் பாடியாடி ஆநந்தமடைவதே முக்கிய வேலையாகவிருக்கிறார்கள். இந்தப் பிருந்தாவன வாசிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணனைவிட தேவனும் பாகவதத்தைவிட புத்தகமும் சிறந்தது உலகிலுண்டென்று தெரியாமல் சதா கிருஷ்ணபூஜையிலேயே காலத்தைப்போக்கி வருகிறார்கள். இப்படிப் பெரும் பாகவதர்கள் நிறைந்துள்ள இந்தவிடத்தில் லௌகிக விஷயமாகக் கட்டப்பட்ட கட்டடங்களதிகமில்லை.

கி. பி. 1721—28 வருஷங்களில் பிரபலரான ஜயப்பூர் ஸமஸ்தானத்தை ஸ்தாபித்த சுவாமி ஜயசிங்கவர்கள் அடிக்கடி இந்த பிருந்தாவனத்துக்குவந்து காலம் போக்கி வந்தமையால் அவர் தங்குவதற்கு கோரா என்னும் பிரம்மாண்ட கட்டிடத்தை யமுனாநதி தீரத்தில் கம்பீரமான கட்டிடமாகக்

கட்டியிருக்கிறார். இது பெரிய மதில்களுள்ளதாயும் உட்பாகத்தில் ஐந்து பெரிய ஹால்களுள்ளதாயும் செங்கருங் கற்களால் ஏராளமான பொன்னைச் செலவழித்துக் கட்டப்பட்டிருக்கிறது. இதில் யாத்திரைக்காரர் பிரவேசித்துக் கண்டவிடத்தில் அடுப்புவைத்துச் சமைத்துப் புகையடர்ந்து கருத்துச் சித்திர வேலைகள் மறைந்துபோகும்படி செய்துவிட்டார்கள்.

பிருந்தாவனத்தை யடுத்த யமுனைக் கரையோரத்தில் சுமார் ஒன்றரை மயில் தூரம் வரையில் பல இராஜர்களாலும் பக்தர்களாலும் கட்டிவைத்திருக்கும் கோபுரங்கள், மண்டபங்கள், படிக்கட்டுகள் பார்க்கப்பார்க்க பரமானந்தத்தைக் கொடுக்கின்றன. இந்தக் கட்டிடங்களும், யாத்திரைக்காரர் வந்து கண்டவிடங்களிற் சமைப்பதினா லுண்டாகும் புகையினால் கறுத்துக் கெட்டுவருகிறதன்றியில் கட்டிடக்கற்களையும் பிடுங்கி அடுப்புவைத்து அவகோலமாக்கி விடுகின்றார்கள். இந்த யமுனா நதியோரத்திலிருக்கும் கட்டடங்களில் அதிக உயர்ந்தது காளிங்கன கட்டம். இந்தக் கட்டம் அதிக ஆழமுள்ளதாயும் அநேக கதம்பவிருக்ஷங்களால் சூழப்பட்டதாயும், பிரம்மாண்டமான நாகப்பாம்பு விக்கிரகம் கருங்கல்லினால் செய்துவைக்கப்பட்டதாயு மிருக்கிறது. இந்தக் கட்டத்துக் கருகிலிருக்கும் பெரியமைதானத்தில் ஆபிரக்கணக்காக அரச விருக்ஷங்களைவைத்துப் பயிர்செய்திருப்பதினால் ஆற்றங்கரைக்கும் மைதானத்துக்கும் தக்கபடி பயங்கரக்காற்று எப்போதும் வீசுவதனால் காற்றின் கஷ்டம் சக்கக்கூடவில்லை. உடனே தலைநோய் வந்துவிடுகிறது. இதற்குக்காளிங்கன் என்னும் பாம்பு பூர்வத்தில் கக்கிய விஷக்காற்றென்று சொல்லுகிறார்கள். இந்த மடுவில் இப்போது ஜலமில்லை. இந்தக் கட்டத்தை விட வரிசையில் தாழ்ந்திருப்பது கேசி கட்டம். இது ஸ்ரீ கிருஷ்ணர் கேசியைக் கொன்றவிடம். இங்கே கதம்ப விருக்ஷங்களும், அசோக விருக்ஷங்களும் கம்பீரமாக விருக்கின்றன. இங்கே ஸ்திரீகள் பூர்வ வழக்கத்தின்படி தங்கள் உடைகளைக் கழற்றி கரையின்மீதில் போட்டுவிட்டு நிர்வாணமாகப்போய் முழுகுகிறார்கள். இந்தக்கட்டத்துக்கருகிற் பாதப்பூர் இராஜர்களாகிய இரஞ்சிதசிங்கு, இராண்டியர் சிங்கு என்பவர்கள் மனைவிமார்களாகிய யாதுஸ்திரீ லக்ஷ்மிதேவி, கிஷோரிதேவிமார்கள் ஏராளமான பொருளைச் செலவழித்து இரண்டு மாளிகைகளைக் கட்டிவைத்திருக்கின்றனர். இந்தக் கட்டிடங்களின்

கடைந்தெடுத்த சித்திர வேலைப்பாடுகளும் ஐந்து கமான் கேட்டுகளும் கம்பிரமானவைகளாக விருக்கின்றன.

யமுனையின் கடைசிப்பாகத்திற் பரதப்பூர் ஆதி இராஜா சூராஜுமால் தந்தை தாகூர் வதனசிங்கு கட்டிவைத்த சாமியார் கோவிலுக்கருகில் கட்டப்பட்டிருக்கும் ஓசாகட்டமும் கம்பிரமானது. கடைசியாக சூராஜுமால் இராஜருடைய மனைவியாகிய கங்காமோஹினிதேவி அவர்களாற் கட்டப்பட்ட குஞ்சம் என்னும் மண்டபக்கட்டிடம் எல்லாவற்றிலும் சிறந்த வேலைப்பாடுள்ளது. இந்த இராஜருடைய குமாரர் இரத்தினசிங்கு என்பவர் மதனமோஹனர் கோவிலுக்கருகில் தமது சமாதிக்கென்று கட்டியும் கூடாமல்விட்ட சமாதி கட்டடமும் சிற்பலங்காரமானது. இந்தக்கட்டிடம் இப்போது கெட்டுப் போய்க் கிடக்கிறது. இந்த யமுனையாற்றில் ஜலக்கிரீடா கட்டத்தண்டை கோபிகள் குளிக்கும்போது ஸ்ரீ கிருஷ்ணர் அவர்கள் ஆடைகளையெடுத்து மரத்தில்கட்டிக் கூத்தாடிய கட்டம் கம்பிரமாக விருக்கிறது. அங்கு கதம்பம், வன்னி, அசோகம் முதலான மரங்கள் புராதனமானவைகளாகவும் அந்தக்கட்டம் இரமணியமாகவு மிருக்கிறது. இப்போது அந்த மரங்களில் சிலபல துணிகளை அவ்விடத்துப் பண்டாக்கள் கட்டிவைத்து யாத்திரைக்காரரிடம் காசைப்பிடுங்குகிறார்கள்.

இந்தப்பிருந்தாவனத்தில் முனிசிபல் சபை ஸ்தாபித்த பிறகு பட்டணம் கூடியவரையில் சுத்தியாக வைக்கப்பட்டிருக்கிறது. முனிசிபல் ஆபீசுக்கும் வெள்ளைக்காரர் வந்தால் தங்குவதற்கும் உபயோகமாகும்படி சித்திரவேலை தீர்ந்த கல் ஸ்தம்பங்களால் கட்டப்பட்ட கட்டிடம் ஒன்றிருக்கிறது. 1868௵ ஆங்கிலோ தேசபாஷா பாடசாலை கட்டப்பட்டது. இந்தக் கட்டிடத்துக்கு சுவாமி ரங்காசாரியவர்கள் 500 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தார். இந்தப் பிருந்தாவனத்திலிருக்கும் முக்காலே மூன்றுவீசம் வாசிகள் பண்டாக்களென்னும் பெயரால் யாத்திரைக்காரருக்குக் கோவில்களையும் கட்டங்களையும் காட்டிக் காசு சம்பாதிப்பதில் கருத்தைச் செலுத்துவதால் கல்விவிஷயத்தில் கருத்தைச்செலுத்துவதே அபூர்வம். மேலும் 1868௵ 1943 ரூபாய் செலவுசெய்து ஒரு ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறார்கள். இந்த ஆஸ்பத்திரியில்கூட யாரும் வந்து மருந்துவாங்குவது அபூர்வம். ஏனெனில் இந்த பரதகண்டத்தில் சிறந்த இந்த பிருந்தாவனம் பிரத்தியக்ஷ

பரமபத ஸ்தானமென்றும், இங்கு வந்து சாகவேண்டுமென்று பல்லாயிரம் மைல்கள் தூரங்களிலிருக்கும் பக்திமான்களும் முக்கியமாக பங்காளிகளும் இங்குவந்து குடியிருந்துகொண்டு தபசுசெய்து எப்போது மரணம் வருமோவென்று எதிர்பார்க்கும் சாதுக்களுக்கு வியாதிகளே சம்பவிப்பதில்லை. தப்பித் தவறி சம்பவித்தாலும் மரணத்தை மனமுவந்து விரும்பியிருப்பதினால் மருந்துமுதலானவைகளைச்சட்டைபண்ணுகிறதில்லை. ஆகவே இந்த ஆஸ்பத்திரி திரசருக்கு அதிக வேலையில்லை. இப்போது இந்தப் பிருந்தாவன முனிசிபல் எல்லைக்குள் 21,467 ஜனங்களிருக்கிறார்கள். இவர்களில் 794 மகம்மதியர்கள். மற்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் பிராமணர்கள். இவர்களில் அநேகர் காஷ்மீரம் டில்லி முதலானவிடங்களில் வாலிபகாலத்தில் விதந்துக்களான ஸ்திரீகள் இங்கே ஓடிவந்து சன்னியாசிகளாகக் காலம் கழிக்கிறார்கள். சிலர் விபசாரிகளென்று கேள்வி. 1871—72வு முனிசிபல் வரவு ரூ. 17,454. இதில் 16,666 ரூபாய் பட்டுமுதலான சுங்கங்களாலும், 13,248 ரூபாய் காய்கறி கடைகளாலும் வரியாக வசூல் செய்யப்பட்டு வருகிறபடியால் இதில் யாதொரு விசேஷ வர்த்தக வியாபாரமின்றி குடிகள் யாவரும் கோவில்களின் ஆதரவினால் காலங்கழிப்பதாகத் தோன்றுகிறது.

கி. பி. 1786வு டவுலதராவ் சிந்தியா காலத்தில் இங்கே ஒரு தங்கச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. அந்தச்சாலையில் அச்சடிக்கும் பிருந்தாவன ரூபாய் நமது இங்கிலீஷ் ரூபாய்க்கு 4 அணா குறைந்தது. 12 அணாவிற்கு விற்கப்படுகிறது. இந்த நாணயத்தைக் கலியாணம் முதலான சுபகாலங்களில் உபயோகப்படுத்துகின்றனர். இந்த இராஜ்ஜியம் யாதவர் சுவாதீனமான போது இந்த நாணயச்சாலையைப் பரதப்பூருக்குக் கொண்டு போய்விட்டதாகக் கேள்வி.

இனி இந்தப் பிருந்தாவனத்தில் வருஷத்தின் பலமாதங்களிலும் வாரம் திதிகளிலும் நடக்கும் உற்சவங்களைப்பற்றி எழுதுவோம்.

(1) சித்திரை சுத்தம் 3 (ஏப்ரல்மீ 1 முதல் 15)

கங்காவர் உற்சவம். இதற்கு சௌபாக்கியவதி சயனமென்றுபெயர். அதாவது விவாஹம் செய்துகொண்ட ஸ்திரீகள் விதந்துகளாகாமலிருக்க வேண்டுமென்று கணபதியையும்

கவுரிதேவியையும், அருந்ததியையும் 15 தினங்கள் வரையில் ஸ்திரீகள் கும்பிட்டுக் கொண்டாடுகிறார்கள்.

(2) சித்திரை சுத்தம் 9

ஸ்ரீராமநவமி. ஸ்ரீராமர் பிறந்தநாளைப் பத்து தினங்கள் வரைப் பிரபலமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

சித்திரை சுத்தமீ 11உ புலடாலா என்னும் உற்சவம் கொண்டாடுகிறார்கள்.

(3) வைசாகம் (ஏப்ரல் அண்டு மேமீ)

வைசாகம் சுத்தம் 3 தேதி அக்ஷதிக் என்னும் பெயரால் விவசாயக்காரரெல்லாம் பழைய வருஷத்து வரவுசெலவு கணக்குகளைச் சரிபார்த்து, பிஹாரிநாத சுவாமியைத் தரிசித்து வணங்கி அந்த விக்கிரகத்துக்குச் சந்தனக் குழம்பைத்தடவி வெள்ளரிக்காய் சோறுடையாவிற் சர்க்கரை நெய்போட்டுப் பிசைந்து சாப்பிட்டுக் கொண்டாடுகிறார்கள்.

வைசாக சுத்தம் 9 தேதி: ஜானகிநவமி என்னும்பெயரால் ஸ்திரீகள் யாவரும் கும்பல் கும்பலாகக் கூடி அக்ரூர கட்டத்தண்டை சீதாதேவியின் ஜனனத்தைக் கொண்டாடுகிறார்கள்.

வைகாசி 10 தேதி : ஹிட்ஜிதி உதஸ்சவ என்னும் கோஷாய் ஹரிவம்சருடைய வருஷோற்சவத்தைக் கொண்டாடுகிறார்கள்.

வைகாசி 14உ நரசிங்காவதாரர் என்று பிரஹலாதருடைய சரித்திர கடாலக்ஷேப உற்சவத்தைக் கொண்டாடுகிறாகள்.

ஜேஷ்ட 5 (மே & ஜூன்)

ஜேஷ்டபாதிரம் 2 தேதி: பனிஹாரிகா பராகிரமா என்னும் பெயரால், ஸ்திரிபுருஷர்கள் சிங்கார ஆடையாபரணங்களைப்பூண்டு அதிவேகத்துடன் ஆநந்த கீதங்களோடு பிருந்தாவனத்தில் ஐந்தாறு மைல்கள் தூரம் வரையில் சுற்றிச்சுற்றி வந்து கொண்டாடுகிறார்கள்.

ஜேஷ்ட 5உ: அதே உற்சவத்தையே இராத்திரி காலத்தில் கொண்டாடி வருகிறார்கள்.

10௳ இராசமண்டலம் என்னும் பெயரால் ஸ்திரீபுருஷர் அபேதமாகக் கைகளைக் கோர்த்துக்கொண்டு கீதவாக்கியங்களோடு நடித்து ஆநந்தமடைந்து வருகிறார்கள். இந்த ஆனந்த நடனத்தில் சில புருஷர்கள் மீசை தாடிகளை யெடுத்துவிட்டு மஞ்சள்பூசிக் குங்குமம் வைத்து மற்றும் இராதாளைவப்போல ஸ்திரீவேஷம்பூண்டு ஸ்திரீகளையாகிலும் புருஷர்களையாகிலும் கைகோர்த்துக்கொண்டு நடிக்கிறார்கள்.

11௳ ஜலஜாத்திரா என்னும் பெயரால் ஸ்திரீ புருஷர்கள் யமுனைநதியோரம் ஸ்ரீ கிருஷ்ணரைப் பாடிக்கொண்டு நடந்து போய் வருகிறார்கள். இந்தப் பவுர்ணமி காலத்தில் சேட்டவர்கள் கோவிலுக்குப் பின்பாகத்திலிருக்கும் தடாகத்தில் முதலைக்கும் யானைக்கும் சண்டைவிட்டுப் பார்த்து விஷ்ணுபூஜை செய்கிறார்கள்.

(ஆசிரேஷம் (ஜூன் & ஜூலை).

ஆசிரேஷ சுத்தம் 2௳ இரதஜாத்திரா என்னும் உற்சவத்தில் சுவாமிகளுக்கு மாம்பழம், சிதா, இலந்தைப் பழங்களை வைத்துப் பூஜைசெய்து கொண்டாடுகிறார்கள்.

ஷை மாதம் பவுர்ணமிதினம் ஷயோடியோகமிலா என்னும் பெயரால் மதன்மோஹனர் கோவிலில் பாவனபரிக உற்சவம் கொண்டாடுகிறார்கள்.

சிராவணம் (ஜூலை & ஆகஸ்டு).

சிராவண பதிரம் 5-ம் தேதி.—இராதாராமன் ஜிகடியோடியோ என்னும் கோபாலபத்தருடைய மரணத்துக்காக அழுது துக்கம் கொண்டாடுகிறார்கள்.

ஷை மீ 8-ம் தேதி கோகுல நந்தன குடியோடுபோய் கோஷாய் கோகுல நந்தனர் மரணத்துக்காகத் துக்கம்கொண்டாடுகிறார்கள்.

சிராவண சுத்தம் 3-ம் தேதி இன்டோல், ஜூலூ என்னும் ஒருவிதசெடலைக்குந்திக்கொண்டு தொங்கியாடுகிறார்கள்.

ஷை மீ 9௳ பிரம்மகுண்டத்தண்டை ஸ்திரீ புருஷர் சமய சந்தோஷ சந்தை கூடுகிறார்கள்.

ஷை மீ 11௳ பவித்திர தாரணம் என்னும் பூணூல் போட்டுக்கொள்ளல்.

பவுர்ணமி தினம் கியானகுதாரியிடத்தில் சமய சந்துஷ்டி சாசகடன சந்தைகூடி யாடுகிறார்கள்.

புரட்டாசி (ஆகஸ்டு & செப்டம்பர்)

8-ம் தேதி ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்மோற்சவம். இந்த உற்சவத்தைப் பலவித விநோதங்களுடன் கொண்டாடுகிறார்கள். பார்ப்பவர்களுக்கே திருப்தியாகுமேயொழிய எழுதி முடியாது.

9-ம் தேதி உரியடித்தல். இந்த உற்சவம் ஸ்ரீரங்காஜிபவர்கள் கோவிலில் உயரமான ஒரு வழுக்கு மரத்தை நாட்டி அதின் உச்சியில் 5 சேர் மிட்டாயும், 5 ரூபாயும் ஒரு உண்டியைச் சொம்பிற் கட்டிவைத்து அடிக்கடி தண்ணீர் வாரியடிக்க பொருட்செய்யாமல் ஏறி எடுத்தல். இது மத்தியானத்தில் நடக்க, மாலைச்சிங்கார்பட்டத்தில் நந்தோற்சவம் நடக்கிறது. இந்த உற்சவத்தில் ஸ்திரீ புருஷர்கள் சகித வாத்தியங்களோடு நடுராத்திரியில் நடிக்கிறார்கள்.

சுத்தப் 8-ம் தேதி இராதாஷ்டமி என்னும் இராதாபிறந்த நாளையில் ஸ்திரீகள் பலவிதமாகப்பாடி நடித்துக்கொண்டாடல். இந்தத்தினத்தில் நிதிவனத்தில் முனிதாங்கு தபதி என்னும் பெயரால் மவுனஞ்சாதித்த ஒரு சுவாமிகளைக் கொண்டாடுகிறார்கள்.

11-ம் தேதி ஜால்ஜோல்னிமேலா என்னும் கிருஷ்ணர் நான்கு மாதத்துக்கொருதடவை திரும்பியமட்டுக்கும் உற்சவத்தை ஸ்திரீகள் கொண்டாடுகிறார்கள்.

ஐப்பசி (செப்டம்பர் & அக்டோபர்)

11-ம் தேதி சஞ்சி என்னும் பெயரால் 5 தினங்களுக்கு பிரம்ம குண்டத்தில் உற்சவம் கொண்டாடுகிறார்கள்.

14-ம் தேதி நாகலீலா என்னும் பெயரால் காளிமர்த்தன கட்டத்தண்டை ஸ்திரீ புருஷர்கள் கூடிப் படகுகளில் ஏறிக் கொண்டாடுகிறார்கள்.

மார்கழி (நவம்பர் & டிசம்பர்)

பாத்தினதம் 1உ பாதலாகாமேலா என்னும் பெயரால் ராஜ மண்டபத்திலும், சென்று கட்டத்திலும் கலியாண

மஹோற்சவங் கொண்டாடல்.

ஷைமீ 5ௗ இராமலீல உற்சவத்தைக் கொண்டாடுகிறார்கள். பவுர்ணமியன்று ஷவுல்ஜிகாமேஸா என்றுபலராமருடைய உற்சவத்தைக் கொண்டாடல்.

5ௗ பிஹாரி, பஹாதமிலாபவர்களுடைய ஜன்மோற்சவம்.

தைமீ (டிசம்பர் & ஜனவரி.)

தைமீ 5ௗ முதல் 11ௗ வரையில் தனுர்மாத உற்சவம் என்னும் பெயரால் சேட்டவர்கள் கோயிலில் வைகுண்ட வாசலில் ஸ்ரீகிருஷ்ணர் உற்சவம். இராதாவல்லபர் கோவிலில் கிச்சிடி முதலானவைகளைக் கொடுத்து உபசரித்துப் பொங்கல் உற்சவத்தைக் கொண்டாடி நடிக்கிறார்கள்.

மாசிமீ (ஜனவரி & பிப்ரவரி.)

மாசிமீ 5ௗ வசந்த உற்சவம் கொண்டாடல். 11ௗ மானச சரோவரத்தில் ஆநந்த நடனமாடி வருதல்.

பங்குனி (பிப்ரவரி & மார்ச்சு.)

பங்குனிமீ 11ௗ புல்டோலா உற்சவமும் பவுர்ணமியன்று ஹோலிபண்டிகையும் விநோதமாகக் கொண்டாடுகிறார்கள்.

பாத்ரபதம் 1-டவுரண்டி என்னும் பெஜண்டா பொடி கலந்த சாயத்தையும் மஞ்சள் பொடியையும் ஸ்திரீ புருஷர்கள் தெளித்துக்கொண்டு நடித்தல்.

5ௗ காளிதஹன உற்சவத்தைக் கொண்டாடல். சேட்டவர்களுடைய கோவிலில் உற்சவாதி பிரம்மோற்சவங் கொண்டாடி வருகிறார்கள். இவைகளன்றியில் சில்லரை உற்சவங்களை யமுனாநதி கட்டத்தில் பிரதிதினம் செய்வதற்குக் கணக்கேயில்லை. அப்படிப்பட்ட உற்சவ கட்டங்களில் 32 சிரேஷ்டமானவை முப்பத்திரண்டு கட்டங்கள். அவை எவையெனில்,

1. மதனகா கட்டம்,—இது பண்டிதர் மோடிலாலவர்கள் கட்டிவைத்தது.

2. இராமகோல் கட்டம்,—இது பிஹார்ஜி கோஷாய் கட்டி வைத்தது.

3. காளிதான கட்டம்,—இது ஹோல்காரால் கட்டியது.

4. கோபால கட்டம்,—இது மதனபாலராஜர் கட்டியது.

5. நபவாலா கட்டம்,—இது ராஜா ஹிரசிங்கர் கட்டியது.

6. பிரசகண்டன கட்டம்,—இது மதனமோஹனர் கோஷாய் கட்டியது.

7. சுராஜ கட்டம்.—

8. சோரிய கட்டம்,—இது கோல்கோஷாய் கட்டியது.

9. ஜோகுல கட்டம்,—இது ஹரிதாஸ் கோவிந்ததாசர் கட்டியது.

10. துசர கட்டம்,—

11. நிபாயகட்டம்,—இதுகோஷாய் பஜனலால்கட்டியது.

12. ஸ்ரீரிஜி கட்டம்,—இது ஜயப்பூர் ராஜா கட்டியது.

13. பிஹார் கட்டம்,—இது தக்ஷின் சுப்பராம் கட்டியது.

14. துர்வாச கட்டம்,—இது இராஜாரண்டர்சிங்கு கட்டியது.

15. நகரிதாஸ் கட்டம்,—

16. பிமா கட்டம்,—இது கோடாராஜர் கட்டியது.

17. அந்தகார கட்டம்,—இது ஜயப்பூர் மஹாராஜா கட்டியது.

18. திஹரிவார் கட்டம்,—இது திரிவிரிஹாராஜர் கட்டியது.

19. இமலா கட்டம்,—

20. பர்த்வான்கட்டம்,—இது பர்த்வான்ராஜா கட்டியது.

21. பர்வார் கட்டம்,—

22. இரணவத்கட்டம்,—இது உதயபுர இராஜாகட்டியது.

23. சிங்கார கட்டம்,—இது சிவிகர்பட்டு கோஷாய் கட்டியது.

24. கங்காமோஹன கட்டம்,—இது பாதப்பூர் ராணி கட்டியது.

25. கோவிந்த கட்டம்,—இது ஜயப்பூர் மணிராஜ் கட்டியது.

26. ஹிமத்பஹதர் கட்டம்,—இது ஹிமத்பஹதர் கோஷாய் கட்டியது.

27. சிர கட்டம்,—இது முராஹரி ஹோல்கார் கட்டியது.

28. ஹநுமான் கட்டம்,—இது ஜயப்பூர் ஜெசிங்கு கட்டியது.

29. பானரா கட்டம்,—இது ஜயப்பூர் ஜேசிங்கு கட்டியது.

30. கிசாராணி கட்டம்,—இது பாதப்பூர் கிஷாராணி கட்டியது.

31. பாண்டவர் கட்டம்,—இது லக்னோ ஜகநாத சவுத்ரி கட்டியது.

32. கேசி கட்டம்,—இது பாதப்பூர் வாணிலக்ஷ்மீ தேவி கட்டம். இன்னும் அநேக சில்லரைக் கட்டங்களுமுண்டு. இப்படி வருஷம் முழுதும் வணங்கி உற்சவம் கொண்டாடுவதற்குப் பிருந்தாவனத்தில் பல கட்டங்கள் மாத்திரமல்ல, பல புண்ணிய ஸ்தலங்களும் இருக்கின்றன. அவை எவையெனில்.

(1) ஞானகுதாரி, (2) ரோபிசா மஹாதேவர், (3) வான்சி கட்டம், (4) கோபிநாதர்தோட்டம், (5) கோபிநாதர்கடை, (6) பிரம்மகுண்டம், (7) இராதாநிவாசம், (8) நிதிவனம், (9)பாதரி புரம், (10) நகர் கோபிநாதர், (11) கோர கோபிநாதர், (12) நகரகோபாலர், (13) சிரகட்டம், (14) மந்திதர்வாஸ், (15) கோரகோவிந்தஜி, (16) நகரகோவிந்தஜி, (17) நாவிதகாஸ்ரமம், (18) ராமஜீ துவாரம், (19) காந்திவாரகடை, (20) சேவகுஞ்சம், (21) குஞ்சகாலி, (22) ஸாரெக்கொரா, (23) சிங்கார தோட்டம், (24) இராஜமண்டலம், (25) கிஷாரபுரம், (26) டோபிவாரிகாலி, (27) ரங்கிலாலகிகாலி, (28) சுகனமதகாலி, (29) புரானசாஹா, (30) லாரியவாராகாலி, (31) கபுதாகிகாலி, (32) கோவர்த்தன் தர்வாகா, (33) அஹிர்பாரா, (34) துசத்து அல்லது சந்தத், (35) மஹாலாபார்வாராவனம், (36) கோரமதனமோஹனர், (37) பிஹாரிபுரம், (38)புரோஹிதவாம், (39) மனிபாரம், (40) கவுதம்பாரா, (41) அதகம்பம், (42) கோவிந்தா தோட்டம், (43) லோயிபஜாகம்பினி கட்டம், (44) ரெதியா கடை, (45) வனகண்டிமகாதேவர், (46) சிப்பிகிகல்லி, (47) ரிவாரிகல்லி, (48) பண்டிலிகாபாக், (49) மதுராதர்வாஜா, (50) கொராசாலி ஜெயிசிங்கு, (51) திகாசாபியர், (52) மவுன்தாஸ் கித்தி, (53) கவுரிவனம், (54) கோவிந்த குண்டம், (55) இராதாநந்தவனம், இன்னும் அநேக சிங்காரதுளசி நந்தவனங்களும், கட்டடங்களும் உற்சவங்களுக்குத் தயாரா யிருக்கின்றன.

இவைகளைத் தக்கபடி பாதுகாக்க முயற்சி இல்லாமையால் குரங்குகளும் மயில்களும் அபரிமிதமாகிக் கெடுத்து வருகின்

றன. யமுனையாற்றின் கரைமேலிருக்கும் விஸ்தாரமான மைதானங்களில் புருஷரைப் பார்க்கிலும் உயர்ந்த பசுமாடுகள் ஏராளமாக மேய்ந்துகொண்டும், மேய்ப்போன் இடைக்கிடை பூர்வகாலத்து வாடிக்கைப்படி புள்ளாங்குழலை இனிய ராகங்களால் ஊதிச் சிதரிப்போகும் பசுக்களை யழைப்பதும், அந்த யமுனையாற்றின் கரைகளில் அசோகம், புன்னை, மா, கமுகு முதலான விருக்ஷங்கள் நிறைவாகப் பூத்துப் பிஞ்சும் காயும் கனிகளும் தொங்க அவைகளுக்கருகில் கருத்த வண்டுகள் ரீங்காரம் பாடிக்கொண்டு தேனைபருந்தவும், பற்பலவித பக்ஷிகள் அந்த மரங்களில் வந்துதங்கி இனிய இராகங்கள் பாடியாடவும், யமுனையின் கரையின்மீது பிரபாகரனுடைய பிரகாசத்தினால் பொன் வெள்ளி புஷ்பம்போன்ற மணல்கள் பலவித வர்ணங்களாகத் தோன்றவும், கம்பீரமாகிய யமுனாநதியானது இளநீல வர்ணத்துடனும் பால்போன்ற உருசியுடனும் துலங்கவும், அதிரூபலாவண்யமுள்ள சுந்தரவதிகளான ஸ்திரீகள் தேவலோக காந்தர்வஸ்திரிகளைப்போற் குதித்து நீந்தி ஆநந்திக்கவும், அருகிலிருக்கும் அழகிய பண்டாக்கள் செந்தூரம்முதலான பொட்டுகளை இட்டு யமுனைக்கு புஷ்பசமர்ப்பணம் செய்யவும், கரைகளில் கதம்ப விருக்ஷங்களால் மூடப்பட்ட கட்டங்களில் யாத்திரைக்காரர்களும், எதிகளும் தபோநிதிகளும் ஸ்நானபானம் செய்து ஈசுவர தியானம் செய்யவும், அவர்களை உத்சாகப்படுத்த தென்றற்காற்று சுவாசனையோடு வீசவும், திரும்பிப் பார்த்தால் அருகில் பிரமாண்டமான ஆவி கூடகோபுர மந்திரங்கள் கலசங்களால் கம்பீரமாகத் தோன்றவும், எங்கு பார்த்தபோதிலும் கோபிஸ்திரிகளும், கோஷாயிகளும் கிருஷ்ணா! கிருஷ்ணா!! என்று பாராயணஞ் செய்யவும், அடிக்கடி சாமவேதமும், சங்குநாதமும் கேட்கவும், இன்னும் பலவித ஆச்சரியங்களைக் கண்டு கேட்டால், இந்தப் பிருந்தாவனத்தை யார்தான் புகழமாட்டார்கள். இது சிற்றின்பத்தில் காலம் போக்கும் சிலருக்கு இது தேவலோக பாக்கியங்களை யனுபவிக்கத் தகுந்த இடமாயிருப்பதன்றியில், பரலோக நாதனாகிய பரமேசுவரனுடைய பேரின்பத்தை விரும்பும் பரமஹம்சரான பக்திமான்களுக்கும் இது பலவிதத்திலும் சிறந்த க்ஷேத்திரமானதால் தென்தேசத்து இந்துக்கள் முக்கியமாக வைணவர்கள் இதைத் தரிசிக்கவேண்டும். இதன் பெருமையைப்பற்றி

ஸ்ரீகோதையார் திருவாய்மலர்ந்தருளிய விருந்தாவனத்தே பட்டிமேய்ந்தோர் என்னும் பரந்தாமற்கண்ட

கலி விருந்தங்களாவன:

அபரூபராகம்-ரூபகதாளம்.

பட்டிமேய்ந்தோர் காரேறு பலதேவற்கோர் கீழ்க்கன்றாய்
இட்டீறிட்டு விளையாடி யிங்கே போதக்கண்டீரே
இட்டமான பசுக்களை யினிதுமறித்து நீரூட்டி
விட்டுக்கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே.(௧)

அனுங்கவென்னைப் பிரிவுசெய் தாயர்பாடி கவர்ந்துண்ணும்
குணுங்குநாறிக் குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே
கணங்களோடு மின்மேகம் கலந்தாப்போல், வனமாலை
மினுங்கநின்று விளையாட விருந்தாவநத்தே கண்டோமே. (௨)

மாலாய்ப்பிறந்த நம்பியை மாலேசெய்யும் மணாளனை
ஏலாப்பொய்க ளுரைப்பானை யிங்கேபோதக் கண்டீரே
மேலால்பரந்த வெயில்காப்பான் விநதை சிறுவன் சிறகென்[னும்
மேலாப்பின்கீழ்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே.(௩)

கார்த்தண் கமலக்கண்ணென்னு நெடுங்கயிறுபடுத்தி என்னை
ஈர்த்துக்கொண்டு விளையாடு மீசன்றன்னைக் கண்டீரே
போர்த்தமுத்தின் குப்பாயப் புகர்மால் யானைக்கன்றேபோல்
வேர்த்துநின்று விளையாட விருந்தாவநத்தே கண்டோமே (௪)

மாதவனென் மணியினை வலையிற்பிழைத்த பன்றிபோல்
ஏதுமொன்றுங் கொளத்தாரா வீசன்றன்னைக் கண்டீரே
பீதகவாடை யுடைதாழப் பெருங்கார்மேகக் கன்றேபோல்
வீதியார வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. (௫)

தருமமறியாக் குறும்பனைத் தன்கைச்சார்ங்க மதுவேபோல்
புருவவட்டமழகிய பொருத்தமிலியைக் கண்டீரே
உருவுகரிதாய் முகஞ்செய்தா யுதயப்பருப்பதத்தின்மேல்
விரியுங்கதிரேபோல்வானை விருந்தாவநத்தே கண்டோமே. (௬)

பொருத்தமுடைய நம்பியைப் புறம்போலுள்ளுங் கரியானைக்
கருத்தைப் பிழைத்துநின்ற அக்கருமாமுகிலைக் கண்டீரே
அருத்தித் தாராகணங்களால் ஆரப்பெருகுவானம்போல்
விருத்தம்பெரிதாய் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே. (ஏ)

வெளியசங்கொன் றுடையானைப் பீதகவாடை யுடையானை
அளிநன்குடைய திருமாலை யாழியானைக் கண்டீரே [ள்மேல்
களிவண்டெங்குங்கலந்தாப்போல் கமழ்பூங்குழல்கள்தடந்தோ
மிளிரநின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே. (அ)

நாட்டைப்படையென் றயன்முதலாத் தந்தநளிர்மாமலருந்தி
வீட்டைப்பண்ணி விளையாடும் விமலன்றன்னைக் கண்டீரே
காட்டைநாடித் தேனுகனுங் களிறும்புள்ளுமுடன்மடிய
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தே கண்டோமே. (கூ)

பருந்தாள்களிற்றுக்கருள்செய்த பரமன்றன்னைப், பாரின்மேல்
விருந்தாவனத்தேகண்டமை விட்டுசித்தன் கோதைசொல்
மருந்தாமென்று தம்மனத்தே வைத்துக்கொண்டுவாழ்வார்கள்
பெருந்தாளுடையபிரானடிக்கீழ்ப்பிரியாதென்றுமிருப்பாரே.()

இப்போது இந்த பிர்ந்தாவனத்துக்கும் மதுரைக்கும் புகைவண்டி ரோடு போடப்பட்டிருப்பதால் பிரயாணிகள் சுகமாக போய்வரலாம். ரயில் சார்ஜ் சுமார் நான்கணா.

இனி ஸ்ரீ கிருஷ்ணருடைய லீலாவிபூதியாகிய சாமார்த்தியத்தைக் காட்டிய கோவர்த்தனத்தைப்பற்றி எழுதுவோம்.

கோவர்த்தனம்.

இந்தக் கோவர்த்தனம் ஸ்ரீ மதுராபுரியைச் சார்ந்த புண்ணிய பருவதங்களாகிய நந்தகமனம், விரசனனமுதலான மலைச் சார்புகளைச்சார்ந்த ஸ்தலம். இதற்கு மதுராபுரியிலிருந்து புறப்பட்டால் சுமார் மூன்றுமைல் தூரத்தில் சாதுகா என்னும் கிராமமிருக்கிறது. இந்தக் கிராமத்துக்கு அருகில் சநந்தன குண்டம் என்னும் தடாகமிருக்கிறது. இந்தத் தடாகக்கரையில் சந்தனராஜன் பிள்ளையில்லாக் குறைவால் பலநூற்றாண்டுகளாகத் தங்கித் தவஞ்செய்யும்போது, ஸ்ரீகங்கையானவள் கூடியிஷ்டர் பிறந்தாராம். ஆகையால் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிள்ளை வரத்துக்காகப் பல ஸ்திரிகள்வந்து வணங்கிப் போகிறதன்றியில், சமய சந்தையும் கூடி நடிக்கிறார்கள். இந்தத் தடாகம் பிரம்மாண்டமானது. அம்பர் கோட்டையின் மகாராஜா ஜெசிங்கவர்கள் இதை ரிப்பேர் செய்தாலும் இப்போது சீர்கெட்டிருக்கிறது. இந்தத் தடாகத்துக்கு மத்தியில்

சிறு பருவதமும் அந்தப் பருவதத்துக்குப்போக ஒரு சிறு பாளமும் கட்டப்பட்டிருக்கிறது. இந்தப்பாளத்தின் வழியாகப் போய் ஐம்பது படிகளை யேறிப்போனால் மேலே சிறு கோயில் இருக்கிறது. இந்த மலைக்கோயிலிற் பிள்ளை வரத்துக்குப் போகும் ஸ்திரிகள் சுவஸ்திசத்தியம். என்னும் பதத்தைப் பூமியில் எழுதி அதைச் சுற்றிவந்து வணங்குகிறார்கள். இந்தக் கோயிலைத் தாண்டிக்கொண்டு பற்பல விநோத காக்ஷிகளுள்ள ரோட்டில் பத்து மைல் தூரம் போனால் கோவர்த்தனம் என்னும் கிராமமிருக்கிறது. கோவர்த்தனம் என்றால் கோ=பசுக்களை, வர்த்தனம்=போஷித்தல், அதாவது பசுக்களைப் பாது காக்கும் இடமென்று பொருளாகிறது.

இது மதுராபுரித் தாலூக்காவைச் சார்ந்த ஒரு பெரிய கிராமம். இது தென்கிழக்காக நான்கைந்து மைல் நீளமுடன் மதுராபுரி பூமி மட்டத்துக்கு 100 அடிகள் உயரமான மேட்டு நிலம். இதில் இப்போது 4944 ஜனங்கள் குடியிருக்கிறார்கள். இது ஒருகாலத்தில்ஒரே பெரியமலையாகவிருந்து தேவேந்திரன் விரஜகுலத்தார்மீது கோபித்து ஏழுநாள் இரவும் பகலும் இடி மின்னலோடு கூடப்பெய்த மழையால் வருந்தாமற் பாதுகாக்க ஸ்ரீ கிருஷ்ணர் தமது சுண்டுவிரலால் தூக்கிக் குடையாக ஏழுநாட்கள் வைத்திருந்ததாகப் பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப்பருவதமுழுவதும் நசுங்கி சிறு கற்களும் துண்டுகளுமாக மாறி ஒரு சாதாரணக் கற்கள்மேடாக விருப்பதால் ஆவலோடு கோவர்த்தனத்தைப் பார்க்க வரும் யாத்திரைக்காரருடைய மனம் பொக்கென்று போகும் படியாகிவிடுகின்றது. இதற்குக் காரணம், இந்தக் கலியுகத்தில் யமுனாநதியின் ஜலம் எப்படிக் குறைந்து சிற்றாறாக மாறிவருகிறதோ அதேமாதிரியாகவே இந்தக் கோவர்த்தனமும் நாளுக்குநாள் தாழ்ந்து குறைந்து தரைமட்டாகித் தரைபோலாகி வருகிறதென்று சொல்லுகிறார்கள். இதை நம்பவும் ஏது இருக்கிறது. எப்படி ஆறங்கு = அகண்டம் என்னும் நான்கைந்து மைல் தூரம் வரையில் அகன்று ஓடிய யமுனை நதியானது இப்போது இங்கு முக்கால் மைல் அகலமுள்ளதாகி விட்டதோ அப்படியே இந்தக் கோவர்த்தன பருவதமும் ஒரு காலத்தில் பெரிய பருவதமாக விருந்து இப்போது இந்த ஸ்திதியாகிவிட்டது என்று சொல்லத் தடையில்லை. இப்போது கூட இந்தக் கற்கள்மேட்டிலிருக்கும் சிறு கற்களை ஜனங்கள் எடுத்து வேறே காரியங்களுக்கு உபயோகப்படுத்தாமல் மகா

பரிசுத்தமானவைகளாகப் பாதுகாத்து வருகிறார்கள். இந்த மலைநாடு ஜாந்பூர், அளியார் என்ற கிராமங்கள்வரையில் தெற்குப் பாகத்தில் தொடர்ந்து மலை வரிசையாக விருக்கின்றது. இந்த மலைபடிவாரத்தில் கோகுலம் வல்லபாசாரி சுவாமிகளால் கி. பி. 1520 ௵ கட்டிய ஸ்ரீநாதசுவாமியின் புராதனக் கோயி லிருக்கின்றது. அரங்கஜீபு சக்கிரவர்த்தி இந்தக் கோயிலைக் கொள்ளையிட வந்தபோது இதிலிருந்த ஸ்ரீநாதர் விக்கிரகம் உதயபுரியைச் சார்ந்த நத்தட்வாரா கிராமத்திற்குக் கொண்டுபோய் மறைத்து வைக்கப்பட்டது. இப்போது அந்த விடத்தில் வேறு கோயில் கட்டப்பட்டு அந்த விக்கிரகம் அங்கேயே வைத்துப் பூஜை செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, கிரிராஜராகிய ஸ்ரீநாதருடையகோயில் கெட்டு இடிந்து அதன் வெளிப்பிரகார அஸ்திவார வரிசை மாத்திரம் தெரிகிறது. இந்தக் கோவர்த்தனத்திலிருந்து சுற்றியிருக்கும் மதுரை, பாதப்பூர், டிக்கோட்டை, கந்தகமனம், பிரசனை முதலானவைகளைப் பார்த்தால் கம்பீர காக்ஷியாக விருக்கிறது.

இந்த மலைபடிவாரத்தில் ஜாதிபுரா கிராமத்தில் அநேக புராதன கோயில்களிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது கோகுலநாதர் சன்னதியே. இதன் தலைவர் ஒரு கோஷாய். இதில் வருஷாவருஷம் தீபாவளி முதலான இரண்டொரு விசேஷ உற்சவங்களை விநோதமாகக் கொண்டாடி வருகிறார்கள். இதின் முதல் உற்சவம் கிரிராஜன் பூஜையென்று பருவதத்தைப் பூசை செய்து உற்சவம் செய்தாலும், இரண்டாவது அன்னகூடம் என்னும் பெயரால் ஸ்ரீ கிருஷ்ணர் பூஜை உற்சவஞ் செய்துவருகிறார்கள்.

இந்த ஸ்ரீநாதரின் விக்கிரகத்தை உதயப்பூருக்குக் கொண்டு போய்விட்டபடியால் தீபாவளி முதலான உற்சவ காலங்களில் கோகுலத்திலிருக்கும் கோகுலநாதர் விக்கிரகத்தைக் கொண்டுபோய் வைத்துப் பூஜைசெய்து வந்ததில் அந்த கோஷாயிகளுக்குள் பிரமாத சண்டை சச்சரவுகள் வருஷாவருஷம் நடந்துகொண்டே வருகின்றன. இப்போது இங்கே இருக்கும் கோஷாய் பூர்வதாமோதர கோஷாயின் சந்ததி. அதாவது, தாமோதர கோஷாயிக்குப் பிறகு லக்ஷ்மனஜீ, கோவிந்தராய் கோஷாய்கள் பட்டத்தை யடைந்தார்கள். இவர்களுக்குப் பிறகு கரிபாலால், கிரிதாஜி கோஷாய்கள் பட்டமடைய இப்போது இவர்கள் சிடர் புருஷோத்தம கோஷாய் பட்டத்தைப் பெற்றிருக்கிறார்.

ஜாதிபுரா கிராமத்துக்கு எதிரில் அனிபார்கிராமமிருக்கிறது. அனியார் என்றால் கோவர்த்தனத்தில் கடைசிபாகமென்று பெயர். இந்தவிடத்திலும் ஸ்ரீ நாதர்கோயிலிருக்கிறது. இந்தக்கோயிலுக்குப் பக்கத்திலிருக்கும் பச்சிரீ கிராமந்தான் கோவர்த்தனத்துக்குக் கடைசி எல்லை.

இந்தக் கிராமம்வரையில் யாத்திரைக்காரர் கார்த்திகை மாதத்தில் தண்டாவதிபரிகர்மா என்னும் உற்சவம் கொண்டாடுகிறார்கள். அதாவது பூர்வ ஜன்மத்தில் செய்த பாவத்தைப் போக்க இந்தக் கோவர்த்தனத்தைச் சுற்றிச் சுமார் 12 மைல்கள் தூரம் வரையில் ஒருவாரம் அல்லது பக்ஷத்துக்குள்ளாகத் தினம் 108 தடவை கீழே விழுந்து கோடு கிழித்த பிறகு அந்தக் கோட்டிலிருந்து மறுகோடு வரையிலும் பிறகு இப்படியே இடைவிடாமல் தண்டால் செய்து வருகிறார்கள். இந்தக் கஷ்ட பிரார்த்தனையைப் பணக்காரர்கள் செய்துமுடிக்கச்சக்தியற்று அங்கிருக்கும் பிராமணருக்கு 50 அல்லது 100 ரூபாய் கொடுத்து தங்களுக்குப்பிரதிநிதிகளாகச்சொல்லித் தமதுபாவத்தைப் போக்கிக்கொள்ள முயன்று வருகிறார்கள். இந்த விதமான பிரார்த்தனை செய்வோர் கிட்டத்தட்ட 1000 ரூபாய் வரையில் செலவு செய்து வருகிறார்கள்.

இவ்வித உற்சவங்களுக்கும், பிரார்த்தனைகளுக்கும், சிறுமலைகளுக்கும், மத்தியஸ்தானமாகிய கோவர்த்தனம் மானசகங்கை யென்னும் பல கோணமுள்ள பெரிய தடாகத்துக்குப் பக்கத்திலிருக்கிறது.

இந்த மானசகங்கையானது ஸ்ரீ கிருஷ்ணர் மனதில் நினைத்த உடனே உண்டானபடியால் இந்தப்பெயர் வழங்கி வருகிறதாம். இந்தத் தடாகத்துக்கு ஒரு பக்கத்தில் சிறுமலைகளினத்தாக்கு எல்லைகளும் மற்றப்பக்கங்களில் பலமான பல படிக்கட்டுகள்கட்டி ஏறி இறங்கும்படியாகவிருக்கிறது. இந்தப் படிக்கட்டுகள் ஜயப்பூர் மனிசிங்கு மகாராஜா அவர்களால் கட்டப்பட்டிருக்கிறதன்றியில் அவரே கரையின்மீது அரிதேவர் கோயிலென்னும் பிரம்மாண்ட கட்டிடத்தைக் கட்டிவைத்திருக்கிறார். இந்தத் தடாகத்துக்கு ஊற்று ஜலமும் வாய்க்கால் ஜலமும் இல்லாமல் கேவலம் மழைகாலத்தில் மாத்திரம் மழைநீர் தங்குகின்றது. பிரதிவருஷம் மழைகாலமான உடனே தீபாவளிப் பண்டிகை யாகிறபடியால் அந்த ராத்திரி ஆயிரம் பத்தாயிரம் விளக்குகள் அந்தப் படிக்கட்டுகளிலும் மண்டபக்கட்டி

டங்களிலும் வைக்க அவைகளின் உதவியால் இந்த ஜலத்தில் விநோதமாக ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்நானம் செய்கிறார்கள். பிறகு ஆறு மாதங்களுக்கு ஜலமில்லாமல் வரண்டுகிடக்கின்றது. இதனால் புண்ணிய காலங்களில் ஜலமில்லாமல் குடிகள் தவிப்பதைக்கண்டு 1871௵ 50 அடிகள் சதுரத்துக்குக் குட்டைகளை இந்தத் தடாகத்தில் வெட்ட அதில் கண்டசேற்று ஜலத்தை ஆயிரக்கணக்கான பக்திமான்கள் தலையில் தடவிக்கொண்டு போகிறார்கள். இப்படி இந்த தடாகத்தில் ஜலமில்லாதிருக்க அபிபுல்லா உதா என்னும் மகமதியர் சாபமிட்டாராம். அதாவது இந்த மகமதியர் இந்த மலையின்மேல் ஒரு கோயிலண்டை மாம்சபக்ஷணம் செய்து வந்ததைப் பார்த்த இந்துக்கள், அவர் அவ்விடம் விட்டுப்போக முயற்சிசெய்ய அவர் சபித்துவிட்டுப் போய்விட்டதாகச் சொல்லுகிறார்கள்.

இந்தத் தடாகத்துக்கு அருகிலிருக்கிற கம்பீரமான அரிதேவர் கோயில் ஆக்பர் சக்கிரவர்த்தி காலத்தில் அம்பர் பகவானிஜி தாசரால் கட்டப்பட்டதாம். இது 68 அடிகள் நீளமும், இருபது அடிகள் அகலமும், உள்ளே இருபது அடிகள் விஸ்தீரணமுமுள்ள கோவில். இதற்கு நாலு பக்கத்தில் வாசல்களும் 30 அடிகள் உயரமுள்ள முதல் வாசலின் இருபுரத்திலும் யானைகள் சிங்கங்கள் முதலானவைகளைக் கற்களிற் குடைந்து எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. கட்டடத்தில் இரண்டு வளைவு மாடிகட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றதனால் அவை கம்பீரமான காக்ஷியைத் தருகின்றன. கட்டிடம் முழுதும் பாதப்பூர் செங்கருங்கற்களாற் கட்டப்பட்டிருப்பதால் பலமான கட்டடமாக விருக்கிறது. இந்தக் கோவிலுக்கு பாகோஷா, லோடிபுரி யென்ற கிராமங்கள் விட்டிருப்பதால் வருஷம் 2300 ரூபாய் வசூலாவதோடுகூட பாதப்பூர் ராஜர் பிரதிதினம் பூசைக்கு ஒரு ரூபாய் கொடுத்து வருகிறார். அப்படிக்கிருந்தும் இந்தக் கோயிலின் கோஷாய் இந்த வருமானத்தைத் தக்கபடி செலவு செய்யாமல் சொந்தச் செலவு செய்து வந்தபடியால் கட்டடம் சீர்கெட்டுப்போக 1872-ம் வருஷம் கவர்ன்மெண்டாரால் 3000-ரூபாய் செலவில் ரிப்பேர் செய்யப்பட்டது.

மானசகங்கைக்கு எதிரில் பாதப்பூர் ராஜாக்களான இராண்டிபர்சிங்கு, பலதேவசிங்கவர்களாற் கட்டப்பட்ட பிரம்மாண்டமும் அழகுமான சத்திரங்களிருக்கின்றன. கி. பி. 1825-26 வருஷங்களில் மேற்படி இராஜாக்கள் இறந்துபோக அவர்கள் சந்ததிகளால் இந்தச் சத்திரங்களுக்குப் பலவித கோபுரகலசங்

களும் சித்திராலங்கார வேலைகளும் செய்யப்பட்டன. இந்தக் கட்டடத்தின் சுவர் கதவுகளில் ஸ்ரீகிருஷ்ணருடைய லீலைகளும் இங்கிலீஷ்காரரது உருவமும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த கோவர்த்தனத்துக்குச் சுமார் ஒருமைல்தூரத்திலிருக்கும் இராதாகுண்டத்தின் கரையில் கி. பி. 1764௵ டில்லிபட்டணத்திலிருந்த சராஜமகால் ராஜாவின் ஞாபகச்சின்னமாக ஸ்ரீ ஜவகரி சிங்கு மகாராஜாவர்கள் கட்டிய பிரம்மாண்ட கட்டடமிருக்கிறது. இந்தக் கட்டடங்களுக்குள் ௸ ராசருடைய ஒரு சமாதி வெகு நேர்த்தியாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இந்தச் சமாதியானது 57 சதுர அடிகள் உள்ளதாயும் உட்பாகம் கம்பீரமான காக்ஷியுடையதாயும் முடிவான வேலைப்பாடுள்ளதாயும் இருக்கிறது.

இந்த இராஜ சமாதிக்கு இருபக்கங்களிலும் அவரது மனைவிகளாகிய அம்ஜியா, கிஷாரி மகாராணிகளுடைய சமாதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தச் சமாதிகளிருக்கும் மேடையானது 460 அடிகள் நீளமுள்ளதாயும் அதன்மேல் பெரிய கொட்டகைபோன்ற கூரைக்கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. அம்ஜியா மகாராணியின் சமாதிக்கருகில் அவரது உண்மையான தோழியின் சிறிய சமாதியொன்று கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டிடங்களுக்குப் பின்பக்கத்தில் பிரம்மாண்டமும் பிரம்மானந்தத்தைத் தரும்படியானதுமான சிங்கார நந்தவனம் அசோகாதி விருக்ஷங்களாலும் மல்லிகை முல்லை ஜாதி முதலான செடிகளோடும் நிறைந்து கம்பீரகாக்ஷியைக் கொடுக்கிறது.

முற்கூறிய கட்டடங்களுக்கு எதிரில் செயற்கையாலமைக்கப்பட்ட குஷ்மசரோவரம் என்னும் பலவித படிகளாலும் தாமரைமுதலானவைகளாலும் விசித்திர விநோதவேலைகளாலும் பிரதிமைகளாலும் அலங்கரிக்கப்பட்ட தடாகம் இருக்கின்றது. இது 460சதுரஅடிகள் விஸ்தீரணமுள்ளதாயும், தென்தேசத்துத் தெப்பக்குளங்களைப்போல் நான்கு பக்கங்களிலும் இறங்கி ஏற நான்கு வரிசைப் படிக்கட்டுகளின் அடுக்குகளாலும் சிறந்திருக்கிறது. கரையிலிருந்து தண்ணீர் இருக்கும் இடத்திற்கு மத்தியில் 60 படிக்கட்டுவரிசைகளிருக்கின்றன. தடாகத்தின் வடக்குப்பாகத்தில் ஜவா சிங்கவர்கள் ஒருபெரிய தருமசத்திரம் கட்ட முயன்று கட்டிட வேலை ஆரம்பிக்க மகம்மதியர்கள் படையெடுத்து வந்த பயத்தினால் கட்டாமல் விட்டுவிட்டார். இந்தப் பாகத்திலிருக்கும் ௸ குஷ்மசரோவரம்

ஓரத்தின் கட்டத்தை கோஷாய் ஹிமத்பஹாதூர் பிடுங்கிக் கொண்டுபோய் பிருந்தாவனத்தில் ஒரு கட்டம் கட்டிவிட்டார். அன்றுமுதல் இது ரிபேர் செய்யப்படாமல் கிடக்கிறது. இந்தக் கோஷாயைத் தக்கபடி கண்டிக்காமல் விட்டதனால் அலிபக்தர் என்பவனைத் தூக்கிவிட்டு சிந்தியா மஹாராஜாவின்மேல் சண்டைக்குப் போகும்படிசெய்து கி.பி. 1802 ல் அலபக்தர் இறந்துபோக 1805ஹு வெல்லஸ்லி பிரபுவால் சமாதானம் செய்யப்பட்டது.

இனி இந்தக் கோவர்த்தனத்தில் விசேஷமான கோயிலெதுவெனில் சக்கிர சரோவர மஹாதேவர் கோயிலே. இங்கே ரோகமோசனம், பாபமோசனம், ரிணமோசனம் என்னும் பெயர்களால் நான்கு சிறு தடாகங்க ளிருக்கின்றன. இவைகளில் மழைக்காலங்களிலன்றி மற்றக்காலங்களில் ஜலம்கிடைப்பது அபூர்வம். இங்கிருக்கும் கோயிலும் சாதாரணமான சிறிய கோயில். இந்த மலைத்தாக்கிலிருந்து மதுரைவழியாக டிக்கோட்டையை நாடிச்சென்றால் தனகாட்டு இருக்கிறது. இங்கே ஸ்ரீ கிருஷ்ணர் தங்கியிருந்து இந்த வழியாக வரும் கோபிகளிடத்தில் பாலைச் சுங்கமாக வாங்கினாராம். இப்போது இந்த இடத்தில் ஒரு பிராமணர் இருந்துகொண்டு யாத்திரைக்காரர்களிடத்தில் பைசா தம்பிடிகளை வாங்கிக்கொண்டு விடுகிறார். இந்த மலைத்தாக்குச்சிகரத்தில் தனராயர்கோவில் தெரிகிறது. இங்கே இருக்கும் ஒரு குகையில் ஒரு பெரியவர் சென்ற ஐம்பது வருஷங்களாக பத்மாசனம் போட்டு உட்கார்ந்துகொண்டு தபசு செய்கிறார். அவர் யாரிடமும் பேசுகிறதில்லை. அவருக்கருகிலிருக்கும் ஒரு தபசிமாத்திரம் யாத்திரைக்காரரிடம் பேசுகிறார்.

இந்தக் கோவர்த்தனத்தை 1805ஹு சிந்தியா மகாராஜரிடம் பெற்ற உடனே பாதப்பூர் இராஜாவாகிய கவுரி லக்ஷ்மண சிங்கு அவர்களுக்கு இதை இனமாக இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் கொடுத்தார்கள். ஆனால் 1826ஹு அவர் இறந்துபோக, இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் மறுபடியும் வாங்கி அக்ரா மாகாணத்துடன் சேர்த்துக்கொண்டார்கள். இந்தக் கோவர்த்தனத்தில் பாதப்பூர் மகாராஜர்களுடைய அநேக கட்டடங்களிருப்பதால் இந்த ஸ்தலத்தை இந்தப் பாதப்பூர் இராஜாக்களுக்கே கொடுத்துவிட்டால் அவர்கள் அடிக்கடி ரிபேர் செய்து காப்பாற்றிவைக்க அநுகூலப்படுமென்றும் அதற்குப் பதிலாய் அந்த வரும்படியைக் கொடுக்கும்படியான வேறு

விடத்தைக் கொடுப்பதாக இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரைக் கேட்டதற்கு நாளதுவரையில் கொடாதது தருமமல்ல.

மேலும் கோவர்த்தனமானது ஆதியில் ஸ்ரீராமர் அயோத்தியாவுக்கு அரசரான காலத்தில் இங்கு மது இராக்ஷஸனும், லாவணனும் செய்துவந்த கொடுமைகளை நீக்கித் தமது தம்பியைவிட்டு துஷ்டர்களைக் கண்டித்து மதுராபுரியையும், கோவர்த்தனத்தில் கிரிவா கோட்டையையும் கட்டிவைத்தது இது பரிசுத்தமான ஸ்தலங்களென்று ஹரிவம்ச புராணம் 94 வது அத்தியாயத்தில் விஸ்தாரணமாகச் சொல்லப்பட்டும் அப்படிப் பட்டவிடத்தில் அநேக விசேஷ தரும கட்டடங்களைக் கட்டிக் கும்பிட்டுவரும் இடத்தைக்கொடுத்தால் அதற்குத்தக்க வரும்படியைக் கொடுக்கும் இடத்தைக் கொடுக்கச் சம்மதிக்கும் பரதப்பூர் ராஜாவின் வேண்டுகோளின்படி அங்கிலேய கவர்ன்மெண்டார் இசைந்து நடந்தால் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருக்கு இன்னும் நல்ல பெருமை யுண்டாகாமற் போகுமோ?

இனி ஸ்ரீ கிருஷ்ணருடைய முக்கிய பிராண நாயகியாகிய இராதாவின் ஜனன ஸ்தானத்தைப்பற்றி சற்று எழுதுவோம்.

பிரசன்ன.

ஸ்ரீ இராதாவின் ஜனனஸ்தானமாகிய பிரசன்ன என்னும் கிராமமானது பரதப்பூர் எல்லையின் சட்டாபர்கன்னவுக்குப்போகிற மலைச்சார்பில் 200 அடிகள் உயரமுள்ளதும் தென்மேற்குப் பாகமாகக் கால்மைல் நீளமுள்ளதுமான கிராமம். இந்தவிடத்தில் இப்போது 2773 ஜனங்கள் குடியிருக்கிறார்கள். இங்கிருக்கும் புராதன மதிலின்கண் வட்டாரத்துக்குள் ஸ்ரீ ராதாதேவியின் அநேக கோயில்கள் இருக்கின்றன. இதில் முக்கியமான இராதாவின் கோயில் ஒரு பெரியபாரையின்மேல் கட்டப்பட்டிருப்பதால் இங்கே போய்ப் பார்த்தால் சுற்றுப்பக்கங்களின் காக்ஷி கம்பீரமாக விருக்கிறது. இந்தக் கோயிலிலிருந்து மேல் படிக்கட்டுகளின்மீ தேறிப்போனல் இராதாவினுடைய பாட்டனாராகிய மஹிபனர் கோவிலிருக்கிறது. இந்தப்பக்கத்திலிருந்து கீழே இறங்கினல் இரண்டு புராதன கோவில்களிருக்கின்றன. இவைகளில் ஒன்று இராதாவின் சகிமார்களுடைய கோவில். இந்தச் சகிகளில் லலிதா, விசேஷா, சம்பகலதா, இரங்கதேவி, சித்திரலேகா, துங்கா, சுதேவி, சந்திராவளி முதலானவர்களை முக்கியமானவர்களாக வைத்துப் பூஜைசெய்

கிறார்கள். மற்றொரு பக்கத்துக் கோவிலில் பிரதாபனர் என்னும் இராதாவினுடைய பெரிய பிதாவின் விக்கிரகமும், இராதா விக்கிரகமும், ஸ்ரீ ராமர் விக்கிரகமும் வைத்துப் பூஜை செய்கிறார்கள். இந்தவிடமானது பிரமாண்டமான புராதன கட்டடங்களாலும் மாளிகை மந்திரங்களாலும், உத்தியாவனங்களாலும், சிங்கார கட்டடங்களாலும் சிறப்புற்றிருப்பினும், இடிந்து கிடப்பதால் இது ஒருகாலத்தில் விசேஷமானதாக இருந்திருக்க வேண்டும். இது ரூபராம காலத்திலும் இந்தியா ஒல்கார் இராஜாக்களுடைய பார்வையிலிருந்த காலத்திலும் அதிகமேன்மையாக வைக்கப்பட்டிருந்தது. இவர்களில் ரூபராமர், லாலிஜி என்னும் இராதாவின் முக்கிய கோவிலையும், ஒருபெரிய கடைவீதியையும் 64 சுவர்களுள்ள சிங்கார நந்தவனத்தையும் தமக்கு ஒரு சிங்கார மாளிகையையும் கட்டினார். அருகிலிருக்கும் கற்களால் சுற்றிக் கட்டப்பட்ட பெரிய தடாகத்துக் கெதிரில் ரூபராமருடைய ஞாபகச்சின்னமாக அநேக கோபுரங்களையும், கமான் வளைவுகளையுமுடைய பெரிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தடாகத்துக்குக் பிரகாபன் தடாகமென்னும் இராதாவின் தகப்பனர் பெயர். அருகில் இராதாவின் தாயாராகிய கிரதா தடாகமிருக்கிறது. பெரிய தடாகத்தின் கரையில் மூன்றடுக்கு மெத்தையுள்ள ஜால் மேஹால் என்னும் சிங்கார சுகபாளிகை கட்டப்பட்டிருக்கிறது. இந்த மாளிகையிலிருந்து ஸ்திரீகள் நிர்வாணமாகப்போய் நீராட உயரமான சுவர்கள் பந்தோபஸ்தாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அன்றியும், இந்த ரூபராமர் அடுத்த கிராமத்திலிருக்கும் ஜனங்களுக்கு உபயோகமாக ரூபசாகரம் என்னும் தடாகமும், காஜிப்பூருக்குப் போகிற வழியில் பிமாகிசரோவரம் என்னும் தடாகமும் உண்டாக்கினார். இந்த சரோவரத்துக்கு எதிரில் கிசோரருடைய பாவனையான ஞாபகக் கட்டம் கட்டியிருக்கிறார். இந்த ரூபராமரன்றியில் வேறு இரண்டு பெரிய குடும்பத்தார்களும் இங்கே அநேக தருமங்களைச் செய்திருக்கின்றனர்.

அவர்களில் ஒருவரான மோஹனராமர் என்பவர் கேவலஸ்திதியிலிருந்து லக்ஷ்மணபுரிக்கு வர்த்தகவிஷயமாகப் போய் அவ்விடத்திய நவாபின் சிநேகிதத்தைப் பெற்று அநேக திரவியங்களைச் சம்பாதித்துக்கொண்டுவந்து இந்த விடத்தில் பிரம்மாண்டமான மாளிகையையும், சிங்காரமான இரண்டு தடாகங்களையும் கட்டிவைத்திருக்கிறார். இவர்கட்டிய பெரிய தடாகமா

கிய பிரியகுண்டம் கம்பீரமானது. அதையடுத்த மலையடிவாரத்தில் கம்பீரமான மாளிகைக்கு லாவனியம் என்று பெயர். இப்போது இந்த சந்ததியைச் சார்ந்த ஸ்ரீ ராமநாராயணர் இந்தப் பாகத்துக்குத் தாசில்தாரா யிருக்கின்றனர். இந்தவிடமானது பிரம்மாவினுடைய வாசஸ்தானமென்றும், ஆகவே பிரம்மசந்நதி என்னும் பெயர் கெட்டுப் பிரசன்னம் என்று மாறிவிட்டதாகவும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த மலைக் கிராமத்தினால் கவர்ன்மெண்டாருக்கு வருஷம் 3109 ரூபாய் வருலாகிறது. இந்த பிரசன்னம் என்னும் மலையின் நான்கு உயர்ந்த மனிமந்திரம், தனகரம், மாருகுட்டி, லார்லிஜி என்பவைகள் பிரம்மாவின் நான்கு முகங்களென்று கொண்டாடுவதன்றியில், அடுத்த மலையாகிய சங்கரிகார மலையின்மேல் புரட்டாசிமீ 13உ ஒரு விசேஷ உற்சவம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஸ்திரி புருஷர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த உற்சவம் ஸ்ரீ கிருஷ்ணருக்கும், இராதாவுக்கும் மரியாதை செய்கிறதென்ற பூரிலீலா என்கிறார்கள். இங்கே இரண்டு கோயில்களிருக்கிறதன்றியில் இதை உற்சவத்துக்கென்று கட்டப்பட்ட கொட்டகைக்கு ஸ்ரீ கிருஷ்ணராதா விக்கிரகங்களைக் கொண்டுவந்து வைத்து ஒவ்வொரு புருஷனும் ஸ்திரியும் ஜதை ஜதையாக நின்று ஆடி இதற்கென்று தயார்செய்து கொண்டுபோன பண்டுபலாதிகளைத் தெவிட்ட உண்டு பல குன்றுகளின்மீது ஏறி விளையாடி காமசாந்தி செய்துகொண்டு சுகப்படுகிறார்கள். இங்கே விபசாரதோஷ மில்லைபோலும். அடுத்த மனமந்திரம், மொரகுட்டிமலை சிகரங்களுக் கிடையில் காவார்வன மிருக்கிறது. இங்கே ஒரு திவ்வியமான தடாக மிருக்கிறது. முன் சொன்ன பூரிலீலா உற்சவகாலத்தில் பிரபுக்கள் சுமார் 150 அடிகள் கீழே இந்த தடாகக்கரையிலிருக்கும் மயில்மாளிகை மேடையின்மீது வந்து உட்கார்ந்து மிட்டாய் சாப்பிடுகிறார்கள். இந்த பிரசன்னவுக்கு நேரெதிராகச் சுமார் ஐந்துமைல் தூரத்தில் மலை நாடாகவுள்ள நந்தகமனம் என்னும் ஸ்ரீ கிருஷ்ணரை வளர்த்த நந்தகோபருடைய கிராம மிருக்கிறது.

நந்தகமனம்.

இதுவும் ரமணீயமான காக்ஷியையுடைய மலைநாடு. இதில் 3253 ஜனங்கள் குடியிருக்கிறார்கள். இவ்விடத்தில் நந்தவாஜி கோயில் புராதனமானதாகி அழகற்ற கட்டடமாக

விருக்கிறது. இந்த சின்சின்வார் யாதவர் சந்ததியாகிய ரூபசிங்கரால் கட்டப்பட்டது. இந்தக் கோயிலின் முதற்பாகத்தில் பிரம்மாண்டமான ஹாலும், இரு பக்கங்களில் ரோசேய்சி ஜேமஹால் என்னும் சமையற் கட்டடமும் பள்ளியறையும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலைச் சுற்றிப் பெரிய மதில்கள் கட்டப்பட்டிருக்கிறதன்றியில், இரண்டு பக்கங்களிலும் கலசஸ்தூபிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தூபிகளின்மீதேறிப் பார்த்தால் பாதப்பூர் ஸமஸ்தானத்தின் எல்லையும் மதுபுரியின் கட்டடங்களும் தெரிகின்றன. இந்தக் கிராமம் மலைத்தாக்காகவும் சிறியதாகவும் இருந்தாலும் சில பெரிய கட்டிடங்களுமுடையதாக விருக்கின்றன. இந்தக் கட்டடங்களில் விசேஷமானது ரூபராமராற் கட்டியதே. இங்கிருக்கும் மானசதேவி கோயில் ஒன்று தவிர நாசிங்கர், கோபிநாதர், நிருத்தியகோபாலர், கிரிதா, நந்தாநந்தர், எசோதநந்தனர், இராதாமோஹனர் முதலானவை சிறிய கோயில்கள். இந்தக் கோயில்களுக்கு ஏறிப்போக, கி. பி. 1818௵ கல்கத்தா பிரபு கவுரிபிரசாதர் பாதப்பூர் செங்கற்களால் 114 விசாலமான படிகளைக் கட்டியிருக்கிறார். அடிவாரத்தில் யாத்திரைக்காரர்களும் கடைக்காரர்களும் தங்கும்படி சுராஜமால் ராஜாவும் க்ஷத்ராணியவர்களும் பிரம்மாண்டமான கட்டடங்களைக் கட்டியிருக்கின்றனர். இந்தக்கட்டடங்களுக்குப் பின்பக்கத்தில் பாதப்பூர் ராஜா சிங்கார தோட்டம் செய்திருக்கிறார். இதற்குக் கொஞ்சம் தூரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் மாடுகளுக்குத் தண்ணீரைக் காட்டிய பான்சரோவரம் என்னும் தடாகமிருக்கிறது. இதை கி. பி. 1747 ௵ பர்தவான் ராணியவர்கள் ரிபேர் செய்வித்தார்கள். இது 810 அடிகள் நீளமும் 378 அடிகள் அகலமும் 6 ஏகரா விஸ்திரண முள்ளதாகவும் விருக்கின்றது.

இந்தத்தடாகம் சிரேஷ்டதடாகங்களாகிய பரசோவி சந்திர சரோவரம், காஜிபூர் பிரேமசரோவரம், அவுரா மானச சரோவரம் என்றவைகளில் ஒன்று. இந்த நந்தகமனத்தில் மாத்திரம் பூர்வத்தில் 56 புண்ணிய தீர்த்தங்களிருந்து இப்போது அவை மறைந்துவிட்டனவாம். இந்த நந்தகமனத்தை கி. பி. 1811௵ லால்பாபு அவர்கள் ஜமீன்தாரர்களிடம் வாங்கினர். இப்போதிருக்கும் பூஜாரிகள் பரமாநந்தர் இராமகிருஷ்ணர்கள் சந்ததியாரால் அலம்ஷாகாலத்திற் பெற்றதாகச் சாசனம் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட விடங்களிலிருக்கும் சிறந்த கோயில்களைத் தற்காலத்து இந்து ராஜாக்கள் தக்கபடி ரிபேர் செ

ய்து பெரியோர்களுடைய பெருமையைப் பிரதிஷ்டைப்படுத்தாமல் நூதனமும் கேவலம் சிற்றின்பத்திற் கேதுவான கட்டடங்களில் காலத்தைக் கழிக்கிறார்கள்.

இந்த நந்தகமனத்தைச்சுற்றிலும் ஸ்ரீகிருஷ்ணரும் ராதாவும் சுற்றித் திரிந்த அநேக புண்ணிய ஸ்தலங்களும் தீர்த்த தடாகங்களும் பலவிருக்கின்றன. அவைகளைப் பாதுகாப்போரில்லாமற் பாழ்த்துப்போகின்றன. ஆகவே, யாத்திரைக்காரர் அந்த விடங்களைக் கண்டுபிடித்துப்போய்த் தரிசிப்பது கஷ்டசாத்தியமாகையால் ஸ்ரீ கிருஷ்ணருடைய பிறப்பு வளர்ப்பு விளையாட்டு விபூதிகளையுடைய இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தின் சரித்திரத்தை இம்மட்டில் முடித்திருக்கிறோம். திரேக சக்தியும் திரவிய சக்தியும் உடைய சுதேசிகள் இவைகளை நேரில் போய்ப் பார்த்து ஆநந்த மடைவார்களாக.

இவ்வித சங்கதிகளைக் கேட்டு ஆநந்தமடைந்து 1887 ளு ஜனவரிமீ 19உ பத்துமணிக்குக் கோகுலத்துப் போனோம். அன்று கொஞ்சம் மழை பொழிந்துகொண்டிருந்தமையால் கோச்சு வண்டிகள் வாடகைக்கு அகப்படாமல் ஒரு ரூபாய் சத்தத்தின்மேல் இரண்டு எக்காவண்டிகளை வாடகைக்குக் கொண்டு ஏறிப்போனோம். வழியில் இடைக்கிடை மழை பெய்ததினால் துணிமணிகள் நனைந்தன. 12 மணிக்குக் கோகுலத்துக்குப் போனோம். இந்த வழி முக்கால் பாகம் வண்டிகள் போக்குவரத்துச்செய்ய அநுகூலமாக விருக்கிறது. கொஞ்சப் பாகம் வண்டிகள் போகத்தக்க பாதை கெட்டுப் போயிருப்பதால் நடந்து போகவேண்டும். இங்கு யமுனைக் கால்வாய்க்கு ஒரு படகு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. பாலத்தின்மீது நடந்து போவோர் நபர் ஒன்றுக்குக் காலணா சுங்கம் கொடுக்க வேண்டும். இங்கு யமுனையானது அதிக விஸ்தீரணமுள்ளதாயும் அழகுள்ளதாயு மிருக்கிறது. அக்கரையில் எசோதையின் வீடு ஒரு கோட்டைப்போல் தோன்றுகிறது. அருகில் போய்ப் பார்த்தால் இடிந்த கட்டடமாகவும் விகாரமாகவு மிருக்கிறது. இங்கே பிச்சைக்காரர்களுபத்திரவம் அதிகம். மழையினால் ரோட்டுகள் யாவுங் கெட்டு நடப்பதற்குக் கஷ்டமாய் விட்டன. இங்கிருக்கும் கோபில்களைப் பார்த்துக்கொண்டு திரும்ப மதுராபுரிக்கு மாலை மழையில் நனைந்துகொண்டே வந்து இருப்பிடம் சேர்ந்தோம்.

ஜனவரிமீ 20உ காலை படுக்கையை விட்டெழுந்து பசியினால் பழைய சாதத்தை உண்டு எக்கா ஒன்றுக்கு 14

அறு விதப் சத்தம் பேசி, பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டு அன்று மாலை 5 மணிக்குப் பிருந்தாவனத்திற் சேர்ந்து ஸ்ரீ சேட்ஜீ அவர்களுடைய பெரிய கோவில் காரியஸ்தர் ம-ா-ா-ஸ்ரீ அப்பாசாரியாரவர்களைப் பார்க்க அவர் வந்து அந்தக்கோவிலுக்குள்ளாகவே பெரிய மெத்தைவீட்டை நமக்குத் தயார்செய்து கொடுத்தார். உடனே கடைவீதிக்குப் போய் வேண்டிய சாமக்கிரிகைகளைக் கொண்டுவந்து சமைத்துச் சாப்பிட்டு மாடி ஹாலில் படுத்ததில் அன்று காற்றோடு கூடப் பெய்த பனியினால் பட்டபாட்டைச் சொல்லி முடியாது. எம்மிடமிருந்த உயர்ந்த விலையுள்ள கம்பிளிகளனைத்தும் போட்டு மூடியும் நெருப்பைக் கனப்பாக்கி அருகில் வைத்தும் குளிர் தீரவில்லை. இந்தக் குளிரினால் கந்த நோயும், தலை நோயும் கண்டு தூக்கமும் வரவில்லை. ஆகவே, அன்றிரவெல்லாம் அவஸ்தைப்பட்டோம்.

ஜனவரிமீ 21உ காலை எழுந்து யமுனைக் கரைக்குப் போக அங்கு கேசரி கட்டத்தண்டை ஸ்திரி புருஷர்கள் ஆயிரக் கணக்காக ஸ்நானம் செய்ய, எமக்கிருந்த வியாதியையும் பாராமல் ஸ்நானம் செய்து தங்குமிடம் போய்ச் சில பூரிகளைச் சாப்பிட்டு ஸ்ரீரங்காசாரியவர்களுடைய கோவில்வைபவங்களைக் கண்டு அதிசயித்துப் பிறகு வீட்டிற்குவர அங்கு நமக்கு மரியாதையாக அனுப்பியபால் கோவாவைப் புசித்தோம். உடனே கோவிலில் தயார் செய்த காய்கறி பதார்த்தங்களோடு தளிகை முதலானவைகளை எமது ஜாகைக்கு அனுப்ப அவைகளையும் கொஞ்சம் சாப்பிட்டு, பிருந்தாவனக் கடைவீதிக்குப் போய் 4½ ரூபாயில் ஒரு நல்ல வெள்ளைக்கம்பளியை வாங்கிக்கொண்டு வரும் வழியில் குந்தனலாலவர்களுடைய ஸ்படிகக் கோவிலையும் ஸ்ரீ கிருஷ்ணர் ஜலக்கிரீடை, இராசக்கிரீடை செய்த இடங்களையும் பார்த்துக்கொண்டு பிறகு பங்காளி கோவில் பிரம்மச்சாரி சுவாமி மடக்கோவில்களைத் தரிசித்துக்கொண்டு யமுனை நதிக்கரையி லிருக்கும் கட்டங்களின்மீது வெகுதூரம் நடந்து வீட்டுக்கு வர ஒன்பது மணியாயிற்று. அன்று வெள்ளிக்கிழமை ஆனபடியால் பிரம்ம பிரார்த்தனை செய்து பிறகு சாப்பிட்டுச் சுகமாகத் தூங்கினோம். பல்வலி அதிகரித்துவிட்டது.

ஜனவரிமீ 22உ காலையிலெழுந்து சந்திரபுஷ்கரணியில் ஸ்நானம் செய்து ஸ்ரீ ரங்காசாரியர் கோவிலிலிருக்கும் அவருடைய படங்களையும், ஸ்ரீ சேட்டவர்கள் படங்களையும் நந்தவனங்களையும் பார்வையிட்டுவரும்போது வீட்டில் கோவில் பொங்கல் தயாராகவந்திருந்தது. உடனேசாப்பிட்டு ஸ்ரீகிருஷ்

ணர் இரசகிரிடை செய்தபழையபிருந்தாவனமாகிய ஜோலாகின் டோலா என்னும் தோட்டத்துக்குப் போனேம். அங்கு துளசி, மல்லிகை, கதம்பம் முதலான செடிகள் செம்மையாகப் பயிர் செய்விக்கப்பட்டிருக்கின்றன. இடையில் சிங்காரமான சிறிய காரைகிணறுஇருக்கின்றது. இதில் ஸ்ரீ கிருஷ்ணர்ராதாவோடு சுற்றி வந்து ஆடியதாக ஐதிகம். இப்போது இங்குக் குரங்குகளும் மயில்களும் ஆயிரக்கணக்காக வந்து புகுந்து தோட்டத்தைக் கெடுத்துவருகிறது. பிறகு காளிங்கன் மடுவைப்போய்ப் பார்த்துக்கொண்டு ஸ்ரீ ரங்காசாரிய ரவர்களுடைய சிங்கார தோட்டத்துக்குப் போகவே அங்கிருக்கும் பலவித புஷ்பாதி செடிகளையும் தீர்த்தங்களையும் பார்த்து ஆநந்தமடைந்து அருகிலிருக்கும் இராஜகுண்டல மேடையில் உட்கார்ந்து அடியில் வருகிறபடி பிரம்ம பிரார்த்தனை செய்தோம்.

பிருந்தாவனத்தில் செய்த பிரார்த்தனை.

(உவமை அலங்காரம்).

ஓ பிரியமான சகோதரர்களே! இந்தப் போக பூமியாகிய பிருந்தாவனத்தைப் பார்க்க என்ன புண்ணியஞ் செய்தவர்களானேம்! இந்தப் பிருந்தாவனத்தில் ஓடும் யமுனை நதியின் பரப்பும், பிரகாசமும், அழகும், அமைப்பும் என்னவென்று சொல்லுவோம்! இந்தப்பிருந்தாவனத்திலிருக்கும் புஷ்பாதி செடிகள் குப்பெனப் பூத்து நேத்திரோற்சவ மடையச் செய்வதன்றியில், அவற்றின் தேனை உண்ணும் வண்டுகள் ரீம், ரீம் என்று இனிய கீதங்களைப் பாடிச் செவிக்கானந்த மூட்டுகின்றன. பார்க்கும் பிரதி வீடும் பெருமையுள்ள கோவிலாக இருப்பதன்றியில், பிரம்மாண்டமான பெரிய கோவில்களனேகம் தமது உயரமும் உத்கிருஷ்டமுமான கோபுரங்களினாலும், மாட மாளிகையாதிகளாலும் மகிழ்ச்சியைத் தருகின்றன. அம்மாட மாளிகை கூடகோபுரங்களிலும், மரப்பொந்துகளிலும் மாடப்புறுக்கள் மதிக்கும் பல வருணக்கிளிகள், மயில்கள், மந்திகளாதிகள் புகுந்து நடமாடுகின்றன. கோவில்களின் கண்டாமணியோசை ஓய்வற்று அடித்து யாவரையும் அழைக்கின்றன. மாந்தருடைய மனதை மருட்டி வருந்தச் செய்யும் மாரனுடைய வில்லடியை மல்லரைப்போல் நின்று தடுக்க வல்லவரென்னும் தார்போற்றும் கொங்கைகளையுடைய கோகுலத்தின் ஸ்திரிகள் கீதங்கள் பாடி நடிக்கின்றனர். உலக நடனங்களை வெறுத்தும், அலகிலா விளையாட்டுடையானையே இரவும்

பகலும் தியானிப்பதே உத்தமமெனக் கண்டுந்தெரிந்த யதிகள், சந்யாசிகள், சதா சர்வேசுவரனை ஸ்மரணை செய்துகொண்டிருக்கின்றனர். ஆ! என்ன விசேஷமான இடம்! ஆ! என்ன பக்திக்கு உகந்த உற்சவ ஸ்தலம்! இப்படிப்பட்ட ஸ்தலத்திலன்றோ அன்று ஸ்ரீ கிருஷ்ணர் கோபிகா ஸ்திரிகளுடன் இராஜகிரீடை செய்ததாகச் சொன்னதை நம்பி இன்றும் அநேக புருஷ பக்தர்கள் ஸ்திரிகளைப்போல் வேடந்தரித்து ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர வந்திருக்கின்றனர். இது உலகார்த்தம். ஆம்! இது சாதாரண ஜனங்களின் கருத்து. சகல புவன சராசரங்களைப் படைத்து ஆதரித்துவரும் ஜகதீசுவரன் கேவலமான கோகுல ஸ்திரிகளுடன் காமக்கூத்தாடினானென்று சாதாரண ஜனங்களும், கிறிஸ்தவாதி ஏனையமதஸ்தர்களும் சொல்லி நிந்திப்பது உண்மை யறியாத உலகார்த்தமே! உண்மையும், தத்துவார்த்தமும் விசாரிப்பவர்களுக்கு அதன் கருத்து விசதமாகும். அதாவது, பரமாத்துமாவாகிய புருஷன், ஜீவாத்மாக்களாகிய ஸ்திரி கூட்டங்களுடன் கூடி இரமித்து ஆநந்த நடனமாடுவதே அதன் உண்மையான கருத்து. சாக்ஷாத் ஜகதீசுவரனைத் தந்தையாகவும், தாயாகவும், தமயனாகவும், சிநேகிதனாகவும், இராஜனாகவும், இரக்ஷகனாகவும், கடைசியாகத் புருஷனாகவும் இன்னும் பலவிதமாகப்பாவித்து அந்தப் பரமாத்மாவை யடைவதற்குப் பலவித சாதனங்களைப் பூர்வம் ஆரியர் ஸ்தாபித்தார்கள். இவ்வித வழக்கம் இந்த ஹிந்து தேசத்தாருக்கு மாத்திரமல்ல. கிரேக்கதேசத்தில் ஜகதீசுவரனைச் சிற்ப விஞ்ஞான சாஸ்திரோக்தமாக வழங்குவது வழக்கம். ரோமக தேசத்தில் ஈசுவரனை புஜபல காத்திர பலாஸ்டிகனாக வணங்குவது பிரத்திபக்ஷம். இப்படி ஈசுவரனை வணங்குவதில் அந்தந்தத் தேசத்து ஜனங்களுடைய மனோவிசாலத்தின்படி நடந்து வருவதாக உலக சரித்திரம் முறையிடுகின்றது. ஆகவே, இந்தப் பிரபஞ்ச சுகத்திலெல்லாம் சிறந்த சுகம் ஸ்திரீயின் சுகமென்று கண்ட இத்தேசத்து ஒரு சாரார், ஜீவாத்துமாக்களாகிய தம்மை நாயகிகளாகவும், பரமாத்துமாவை புருஷனாகவும் பாவித்துக் கூடிக் குலாவி ஆநந்தமடைய இது ஓர் வழியாக வைத்துக்கொண்டனர். இப்படி வைத்துக்கொண்டதில் பாதகமில்லை, சாதகமுண்டு. ஆ! சகோதரர்களே! இது அநுபவசாலிகளுக்கு மாத்திரம் விளங்கும். அநுபவ மற்றவருக்கு அர்த்தமாகா. அர்த்தம் தெரியாமையால் அடிமை பிரம்மோபாசி யல்லவென்றும், அஞ்ஞானியென்றும், பைத்தியக்காரனென்றும் அண்டத்தார் சொல்லிப் பரிகசிப்பார்கள்.

அந்தோ! அண்டத்தாருக்கு எமது பாஷை விளங்கவில்லை. எம் கருத்து அர்த்தமாகவில்லை. ஆகவே அவர்கள் எம்மைப் பக்தி பயித்தியம் பிடித்தவரென்று பேசுவார்கள். அப்படிப் பேசுவதினால் பாதகமில்லை. பக்த சிரேஷ்டர்களாகிய பிரம்மோபாசிகளே! இதோ இந்தப் பிருந்தாவனத்தின் கமல சரோவரம் என்னும் ஆவிகூப தாமரைத்தடாக உத்தியானவனத்தில் சாக்ஷாத் பரமாத்துமா வேணு=(பக்தர்களை யழைக்கும் தேவ கட்டளை) நாதத்துடன் நடிக்கின்றனர். அவரைச் சுற்றிலும் வியாசர், பராசர். நாரதர், கின்னரர், கிம்புருஷர், ஆஹா, ஊஹூ, நாகசரணியர், தத்திலர் முதலானவர்களும், சைதன்னியர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருப்பாணாழ்வார், சங்கரர், இராமாநுஜர், ஆநந்ததீர்த்தாசாரியர், வல்லபாசாரியர், இராமாநந்தர், இராமதாசர், துக்காராம், துளசிதாஸ், நந்தர், கபீர்தாஸ், குருகோவிந்தர், தாயுமானவர், கேசவர் முதலான இத்தேசத்து மஹாத்மாக்கள் வேணு, மிருதங்கம், முரளி, வீணை, தம்பூர் முதலான வாத்தியங்களைக்கொண்டு வாசித்து ஆநந்த நடனமாடி வருகிறார்கள். பாருங்கள்! ஆம், இதோ பாருங்கள்! அந்த மங்கள வடிவுள்ள பரமாத்துமாவைச் சுற்றிலும் அரிஸ்டாட்டல், சோகிரடஸ், பிலேடோ, சிசிரோ, பிதாகரசு, கானிபியூசஸ், ஜோராஷ்டர், ஏசுநாதர், மோசே, சாலோமான் முதலான ஏனைய தேசத்து மஹாத்துமாக்களும் தம் தம் வாத்தியங்களைக்கொண்டு வாசித்து அங்கம் பரவசமாகி, இரு கண்களிலும் நீர் பெருக, இரைந்து மனதுருகக் குதித்துக் குதித்துக் கொண்டாடி நடித்து எம் பெருமானைச் சுற்றியாடி வருகின்றனர். பாருங்கள் இவ்விடம் வைகுண்டம் கொள்ளையாகிவிட்டது. பரமண்டலம் பலருக்கும் பொதுவாகிவிட்டது. கைலாசம் கடல் ஞாலத்தாரின் கைக்கு எகப்பட்டுவிட்டது. ஆகவே, ஒ உலகத்தாரே! வாருங்கள்! உலக காமிய வஸ்துக்களின்பேரில் இனி எத்தனை காலந்தான் பிரியம்வைத்துக் காலத்தை வீண்காலமாக்குவீர்கள்! இந்தப் பிருந்தாவன நடனத்தைப் பார்த்து ஆநந்தித்து உலக உஷ்ணத்தைப் போக்கிக்கொண்டு சாந்தியை யடைந்து விடாய் தீர்த்துக்கொள்ளுங்கள். இந்தப் பேரின்ப நடனவிடம் ஒரு தேசத்தாருக்காவது, ஒரு ஜாதியாருக்காவது ஒரு பாஷைக்காரருக்காவது, ஒரு மதஸ்தருக்காவது சொந்தமென்று சந்தேகிக்கவேண்டாம். இந்தப் பிருந்தாவனம் எல்லாத்தேசத்தாருக்கும், எல்லா ஜாதியாருக்கும், எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவான விடம். இப்போது இங்கு நடனமாடும் எம்

பெருமான் எல்லாருக்கும் பொதுவான ஏகமேவாத்விதியன், எல்லா மதாதிபதிகளும், எல்லா மகாசாரியர்களும், எல்லாத் தத்துவ ஞானிகளும், எல்லா பக்திமான்களும் இங்கு ஆத்ம சொரூபிகளாகப் பரமாத்மாவைச் சுற்றி நடித்து பிரும்மா நந்த மடைகின்றனர். ஆகவே, ஜகத்தாரே! வாருங்கள்! நாமும் பலவித வாத்தியக் கருவிகளுடன் இன்னிசைகளைப் பாடி எம் பெருமானைச் சுற்றி ஆநந்த நடனமாடி, அங்கம் பரவசமாகி, சுகாநந்த போகத்தை யடைந்து நித்திய சூரியர்களைப்போலப் பிரகாசிப்போம். ஓம் தத்சத்.

பிறகு தங்குமிடம் போய்ச் சாமான்களைத் தயார் செய்து கொண்டு இரட்டைக் குதிரைகளைக் கட்டிய இரண்டு கோச்சு வண்டிகளுக்கு வண்டி ஒன்றுக்கு இரண்டு ரூபாய் விகமாகச் சக்கம் பேசி, ஏறி மாலை ஏழுமணிக்கு மதுராபுரிக்குத் திரும்பி வந்துவிட்டோம். மீண்டும் தந்தநோய் அதிகரித்து வருத்திய படியால், உண்ணுமல் உறங்கினேம். ஜனவரிமீ 23உ காலை எழுந்து மதுரா மெடிகல் ஹால் என்னும் வைத்திய சாலைக்குப் போய் அங்கிருக்கும் வங்காளி வைத்தியருக்குத் தக்க நோயின் உபத்திரவத்தைச் சொல்லிக் காட்ட அவர் அன்புடன் பொட்டிலுப்பு திராவகத்தை எடுத்து நோகும் பல்லின் சதை மேல் வைக்க, நாலைந்து துளி நீர் மாத்திரம் வடிந்ததே யொழிய நோய் தீரவில்லை. பிறகு வீட்டில் வந்து சாப்பிட நமது மதுராபுரி சிநேகிதராகிய ஸ்ரீ பண்டிதராதலால் சர்மா அவர்களும், ஸ்ரீ பண்டிதர் கங்காலால் சர்மா அவர்களும் நாம் தங்கியிருந்த இடத்துக்கு வந்து, அன்று மாலை மதுரா கவர்ன் மெண்டு ஐஸ்கூல் ஹாலில் மதவிஷயமாக எம்மைப் பிரசங்கம் செய்ய வேண்டினார்கள். எமக்குத் தந்தநோய் இருந்தும், இஷ்டர்கள் கோரிக்கையை நிறைவேற்றக் கருதி அந்த இடத்திற்குப் போனேம். அந்த ஐஸ்கூல் ஹாலில் அந்த மதுராபுரியி லிருக்கும் அநேகபடிப்பாளிகளும், வடமதுரையின் ஜமீன்தாரரும் ஆரிய சமாஜத்தின் உதவி சபாநாயகருமாகிய ஸ்ரீ திருபுவன நாத முனிஷியவர்கள், பண்டிதர் இராதாலால் அவர்கள், பண்டிதர் ஜகன்னாதவர்மா, நாகூர் கிருஷ்ணலாலவர்கள், பாபு இரகுநாத பிரசாதவர்கள் இன்னும் அநேக பெரிய மனுஷர்களும் வந்திருந்தார்கள். பண்டிதர் திரிபுவனநாத முனிஷியவர்கள் சபாநாயகராக வீற்றிருந்து, கவர்ன்மெண்டு டிரான்சிலேட்டரும் அநேக கிரந்தங்களின் கர்த்தருமாகிய பாபு காசிநாத கத்திரியவர்களை யழைத்து, ஆரியர் மதம் வடதேசங்

களில் எப்படி யிருக்கிறதென்பதைப்பற்றி உபந்நியாசிக்க வேண்டுமென்று சொல்ல, அவரும் ஹிந்திபாஷையில் உபந்நியாசித்தார். பிறகு இத்தேசத்தின் பூர்வமதத்தையும், இப்போதிய மதத்தையும்பற்றி உபந்நியாசிக்கும்படி எம்மை அழைக்க, அவர்களிஷ்டப்படி பிரசங்கம் செய்தேம்.

அந்த உபந்நியாசத்தின் கருத்தாவது.

ஆரியர் தேசமாகிய இத்தேசத்தில் ஆதியிலிருந்த மகரிஷிகள் (தமது பாலிய தசைக்குத் தக்கபடி) ஒரு காலத்தில் வானாதிபஞ்சபூதங்களைப்பிரம்மமாகப் பாவித்து வணங்கிவந்து, பிறகு காணப்படும் பூதங்களும் சூரிய சந்திரன் முதலானவைகளும் அபரிபூரணமும் பாதந்திரமுமானவைகளெனத் தெரிந்து, இவைகளுக்கு மேலானதும், பரிபூரணமும் சுதந்திரமுமான ஒரு தனிப்பொருள் இருக்கிறதாகக் கண்டு உபநிஷத்துகளில் பாடிவரவே, கவுதமர், கநாதர், கபிலர், பதஞ்சலியர், ஜயமுனி, வியாசர் (பதிராயனர்) முதலான தத்துவஞானிகள் எழுந்து வைதிகவிஷயங்களைப்பற்றிப் பல தத்துவகிரந்தங்களையுண்டாக்கவே, சாதாரண ஜனங்கள் மதிமயங்கிப் பல சமயங்களைத் தழுவிவர, பவுத்தர் ஜனித்து தமது மதத்தை இத்தேசத்தில் பரவிவரச்செய்ய, சங்கரர் ஜனித்து அத்வைத சித்தாந்தத்தையும், இராமாநுஜர் தோன்றி விசிஷ்டாத்வைதத்தையும், மாத்துவாசாரியர் ஜனித்து துவைத சித்தாந்தத்தையும், ஸ்தாபிக்க, இந்தத் தேசத்தில் ஒரு காலத்தில் துவைதாத்துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களெங்கும் பரவி, இவைகளின் தத்துவார்த்தங்களைச் சாதாரண ஜனங்கள் அறிந்துகொள்ள சத்தியற்றிருந்தபடியால், வல்லபாசாரியர், சைதன்னியர், கபீர், துக்காராம், துளசிதாசர், இராமாநந்தர் முதலானவர்கள் வடதேசத்தில் வைஷ்ணவ ஆழ்வார்களும், தென்தேசத்தில் சைவ நாயன்மார்களும் பக்தி மார்க்கத்தை ஸ்தாபித்து விருத்தியாக்கிவர, அதில் வீணை விக்கிரகாராதனை முதலான சடங்குகள் அதிகரித்து வரும்போது அந்நிய நாட்டாரும் இத்தேசத்தைக் கைக்கொண்டு அவர்களில் முக்கியஸ்தர்களான மகம்மதியர்களும், கிறிஸ்து மதஸ்தர்களும் தம் தம் மதங்களை இத்தேசத்தாருக்குப் போதிக்க ஆரம்பிக்க, இருமதஸ்தர்களுக்கும் சண்டை சச்சரவுகளுண்டாக, குருகோவிந்தர் இந்து மதத்துக்கும் மற்ற மகமதாதி மதங்களுக்கும் சமரசவாஞ்சையுண்டாக்க சீக்மதத்தை ஸ்தாபித்தாலும் அந்த மதஸ்தர்களில் அனேகர்

இராஜகிய காரியங்களில் பிரவேசிக்கவே, அது பிரபலமாகாமலிருந்து வரவே, இராமமோஹனர் தோன்றி சமரச மதமாகிய பிரம்மசமாஜத்தை ஸ்தாபிக்க, அதன் கருத்தையே ஆரிய ரீதி வரும் அநுஷ்டிக்க தயாநந்த சரஸ்வதி ஆரியசமாஜத்தை ஸ்தாபித்தபடியால், இன்று இந்த மந்திரத்தில் ஆரியசமாஜத்தாரும் பிரம்மசமாஜத்தாரும் ஒருமிக்கக்கூடி நமது தேசத்தின் ஆதி மதம் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி பலபடிகளாக மாறினாலும், இப்போது சமரசமதமாக வந்து நம்மை சந்தோஷப்படுத்தி வைப்பதற்காக அந்த ஜகத்பிதாவை எல்லோரும் எழுந்து வணங்கவேண்டுமென்று சொல்லி முடித்தோம்.

பிறகு இராத்திரி ஒன்பது மணிக்குமேல் பனியால் நனைந்துகொண்டு தங்குமிடம் வரவே தந்தநோய் அதிகரித்து உபந்நியாசத்தினால் பலஹீனப்பட்டு இரவெல்லாம் தவித்தோம்.

ஜனவரி மீ 24உ பல் நோயினால் வெளியில் போகச் சக்தியற்றுத் தவித்துப் புளியும் உப்புங் கலந்து தந்தங்களின்மீது வைக்க அன்று மாலை நோய் தீர்ந்து தூக்கம் வந்தது. ஜனவரி மீ 25உ காலை எழுந்த உடனே அதிக பலஹீனத்தினால் வெளியிற் போகச் சக்தியற்றிருக்க நமது இஷ்டர் பண்டிதர் ராமேதலாலவர்களும் சிநேகிதர்களும் வந்து நம்மைப் பார்த்து உற்சாகப்படுத்தி வாசித்துப் பொழுதுபோக்கச் சில பத்திரிகைகளையும் கொடுத்து குமாயூன் தேயிலையைப் பானம் செய்யும்படி அனுப்பினார்கள் இந்தத் தேயிலை நல்லதாகவிருந்தும், பலவீனத்தினால் இருமல் கண்டு இராத்திரி முழுதும் வருந்தினேம்.

ஜனவரி மீ 26உ காலை எழுந்து ஸ்நானஞ்செய்து சாப்பிட்டு வண்டி 1 - க்கு ரூபா 2–4–0 விதமாக இரண்டு கோச்சு வண்டிகளைத் தயார் செய்துகொண்டு கோவர்த்தனத்துக்கு 2 மணிக்கு போய்ச் சேர்ந்து, அங்கு ஸ்ரீ கிருஷ்ணர் குடையாகத் தூக்கிய கோவர்த்தன பருவதத்தில் அவர் விரல் குறியிருக்கும் சுமார் நான்கைந்து அடி உயரமுள்ள குன்றண்டை போய் அதற்குப் பால் வார்த்து அபிஷேகம் செய்து மிட்டாய்களை வைத்து பூஜை செய்வதையும் அருகிலிருக்கும் மானசகங்கா, பாதப்பூர் ராஜாக்களுடைய கட்டடங்களையும் தடாகத் தோட்டங்களையும் பார்த்துக்கொண்டு திரும்பினேம். சுமார் மாலை ஆறுமணிக்கு வீடுவந்து சேர்ந்து கடைவீதிகளைச் சுற்றிப் பார்த்துவந்து உண்டு உறங்கினேம்.

ஜனவரிமீ 27உ காலை எழுந்து ஸ்நானஞ் செய்து சாப்பிட்டு டில்லிக்குப் போகச் சாமான்களைக் கட்ட நம்மிட மிருந்த சென்னை நோட்டுகளைக் கடைவீதியில் யாவரும் வாங் காமல் தடைசெய்தமையால் சுமார் இரண்டு மைல் தூரத்தி லிருக்கும் கலெக்டர் கச்சேரிக்குப் போய் அவ்விடத்திய டிஷுரி டிப்டி கலெக்டரிடம் போராடி அவர் சிலவற்றிற்கு வடமேற்கு மாகாணங்களின் நோட்டுகளையும், சிலவற்றிற்கு ரொக்கமும் கொடுக்க வாங்கிக்கொண்டு வரும் வழியில் டில்லிக்கு நபர் 1-க்கு ரூபா 1-9-0 விதம் கொடுத்துப் புகைவண்டி டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு வந்து தங்குமிடத்தில் நாமிருந்த காலம்வரை யில் நமக்குவேண்டிய உதவிகளைச் செய்துவந்த வேலைக்காரர் களுக்கும், சத்திரத்தின் காரியஸ்தர் ஸ்ரீ ஜனார்த்தன பிரமசாரி சுவாமிகளுக்கும் இனமாகச் சுமார் 10 ரூபாய் வரையில் கொடு த்துவிட்டு இரவு 10 மணி வண்டியில் ஏறினோம். அப்போது பண்டிதர் ராதேலால்சர்மா முதலானவர்கள் வந்து நமக்கு டில் லிக்குச் சிபார்சு கடிதம் கொடுத்து வந்தனத்துடன் வழிவிட் டார்கள். இவர்கள் நமக்குச் செய்த உதவி மறக்கத்தக்கதன்று. பிறகு இராத்திரி முழுதும் புகைவண்டியில் பனியினாலும் ஜன நெருக்கத்தினாலும்வருந்திய கஷ்டம்கொஞ்சமல்ல. இந்தப்புகை வண்டியானது கிழக்கிந்திய புகைவண்டியோடு கூடும் ஹத் ராஸ் ஜங்ஷன் ஸ்டேஷனைப்போலக் கெட்ட ஸ்டேஷனை யாம் எங்கும் கண்டதில்லை. இந்த ஸ்டேஷனுக்குச் சுமார் அரை மைலில்தூரத்தில் மதுரைப் புகைவண்டிநின்றுவிடுகிறபடியால், இரவு 12 மணிக்குமேல் பயங்கரமான பனியில் பிரயாணிகள் தமது மூட்டைகளையும், குழந்தைகளையும் எடுத்துக்கொண்டு இவ்வளவு தூரம் நடந்துவந்து வேறு வண்டியில் ஏறுவது மெத்த கஷ்டமாகவிருக்கிறது. மேலும் அந்த ஸ்டேஷன் தாழ் வாரத்துக்கு யாதொரு கூரையும்போட்டு மூடாமல் பொட்டை யாக விட்டிருப்பதில் பிரயாணிகள் படுங்கஷ்டம் கொஞ்சமல்ல. இந்த மதுராபுரியில் நூல் நூற்கும் இரண்டு மில்லுகளும், மாவு செய்யும் தொழிற்சாலைகளும் இருப்பதால் வர்த்தகம் ஏராள மாக நடந்துவருகின்றது. இந்த மதுராபுரி பெரிய இந்திய பெனின்சுலா, பம்பாய், பரோடாமத்திய இந்திய புகைவண்டி ரோட்டுகள் கூடும் இடம், பெரிய இந்திய ரெயில்வே வழியாக பம்பாயிக்கு 868 மைல்கள் தூரத்திலும், டில்லிக்கு 89 மைல் கள் தூரத்திலும் இருக்கிறது. இவைகட்கு மூன்றும் வகுப்பு வண்டி. சார்ஜ் முறையே ரூபா 10-11-0, 1-6-0. சாதாரண வண்டிக்கு ரூபா 9-1-0, 1-4-0 கொடுக்கவேண்டும். இப்படிப்

பட்ட கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொண்டு காலை ஆறு மணிக்கு டில்லி ஸ்டேஷனுக்கு வந்தோம்.

டில்லி.

புராதனமும் பாழ்த்தும்போய்க் கிடந்த இந்தப்பட்டணத்தை கி. மு. 50வது டில்லு என்னும் இராஜாவினால் புதுப்பிக்கப்பட்டு இராஜநகரமாக ஸ்தாபிக்கப்பட்டபடியால் டில்லி என்னும் பெயருண்டாகியதாம். இந்த டில்லி ரெயில்வே ஸ்டேஷன் பிரமாண்டமானது. ஆனால் அலகாபாத்து, கான்பூர் முதலான ஸ்டேஷன்களைப்போல அவ்வளவு அழகானவைகளாக இராவிட்டாலும், கல்கத்தா ஹவரா ஸ்டேஷனைப்போல வெள்ளைக்காரையாற் கட்டப்பட்ட பழையகாலத்துக் கட்டிடங்களைப்போல இருக்கிறது. வண்டி விட்டிறங்கி இரண்டு இரட்டைக்குதிரைகள் கட்டிய கோச்சுவண்டிகளை வாடகைக்குக்கொண்டு நகரத்துக்குட் பிரவேசிக்கவே, இரண்டு சேவகர்கள் வந்து எமது வண்டிகளைத் தடுத்து எங்கள் மூட்டைகளைச் சோதனை செய்தார்கள். நாம் காசியிலிருந்து வாங்கிய மிக வேலைப்பாடுள்ள பித்தளைச் சந்தனக்கிண்ணம் அடக்கஞ்செய்திருந்த பெட்டியை எடுத்துக்கொண்டுபோய் அடுத்திருந்த சுங்கச்சாவடிக்காரனிடம் கொடுக்க அந்த உத்தியோகஸ்தன் நிறுத்துப்பார்த்து "இரண்டணா சுங்கம் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் நீங்கள் டில்லியைவிட்டுத் திரும்பிப்போகிறவரையில் இந்தக் கிண்ணம் இந்தச் சுங்கச்சாவடியிலேயே இருக்கவேண்டும்" என்று சொல்ல, இந்த இரண்டணாவுக்குப் பார்த்தால் வரும்போது வருந்த வேண்டுமென்ற எண்ணத்தினால் இரண்டு அணா கொடுத்து சாமான்களை வாங்கிக்கொண்டோம். இப்படிசுங்கம்வாங்குவதற்குக்காரணந்தெரியவில்லை. ஒருவேளைநாம் கொண்டுபோனகிண்ணம் புதுச்சாமான் ஆனபடியினால் விற்பதற்குக் கொண்டுபோவதாகப் பாவித்து வர்த்தகப் பொருள் சுங்கமாக வாங்கினார்களென்று தோன்றுகின்றது. மற்றப்படி எம்மிடமிருந்த பழைய சாமான்களுக்கு எவ்வித வரியும் வாங்கவில்லை. பிறகு டில்லிப் பட்டணத்தின் மத்தியிலிருக்கும் மஹாதேவர் சத்திரத்தில் இறங்கப்போனோம். இது பிரம்மாண்டமும், அழகுமுடைய தோட்டத்தில் கட்டப்பட்ட கோயிலும் சத்திரமுமாக விருந்தாலும், இவ்விடத்தில் பெண்டுகள் கும்பல்கும்பலாகக்கூடி சுவாமியைக் கும்பிட வந்துகொண்டும் போய்க்கொண்டு மிருந்தபடியால், இந்த லஜ்ஜைக்குப் பயந்து டில்லி நகர மத்தியில் சவுகி

என்னும் கடைவீதியில் பிரம்மாண்டமான ஒரு உத்யாவனத்தில் சென்னிலால் முவிக்தர்வாசர் கத்தியர் என்னும் ஸ்ரீமான் அவர்களால் தற்கால நாகரிகத்தை யனுசரித்துத் தண்டவாள ஸ்தம்பங்களை நாட்டி அதன்மேல் மகா விசாலமும் விமரிசையுமாகக் கட்டப்பட்டு வழிப்போக்கருடைய உதவிக்காக விடப்பட்ட பெரிய மாடிமெத்தை சத்திரத்துக்குப் போனோம். அந்த சத்திரக்காரன் உடனே எமது சம்சாரத்துக்குத் தக்கபடி சமையலுக்கு ஒரு பெரிய வீடும், பெண்டுகள் படுக்க உடுக்க விசாலமான விடுதியும், புருஷர்கள் படுக்க உடுக்க பெரிதான வீடுகளும் தயார்செய்து கொடுத்தான். இந்தக் கட்டிடத்தில் ஆயிரக்கணக்கான புராக்கள் வந்து தங்கித் தரையை முற்றும் அசங்கியப்படுத்திருந்தாலும், நாம் வடதேச யாத்திரை செய்த காலத்தில் இவ்வளவு விசாலமும் வசதியுமான கட்டடம் எங்கும் காணப்படவில்லை. இந்தக் கட்டடத்தில் சாமான்களைக் கொண்டுவந்து வைத்துவிட்டு ஸ்நானம்செய்து சமையலுக்கு வேண்டிய பதார்த்தங்களுக்காக வெளியிலிருக்கும் கடைவீதிக்கு வர பிரம்மாண்ட விசாலமான இந்தக் கடைவீதியில் எங்கு பார்த்தபோதிலும் அரிசி, கடலை, துவரை, பச்சைப்பயிர், உளுந்து, கோதுமை முதலான தானிய வகைகளும்; கத்திரி, உருளைக்கிழங்கு, முட்டகோஸ், காபேஜ் முதலான காய்கறிகள் பெரிய மலைகளைப்போலக் குவித்து வைத்துக்கொண்டு வியாபாரம் செய்துவருவதையும் பார்த்துப் பிரமித்து வேண்டிய வஸ்துக்களைக் கொண்டுவந்து சமைத்துச் சாப்பிட்டு நித்திரையில்லாததினால் அசக்தியாகிச் சற்றுப்படுத்து ஆயாசம் தீர்த்துக் கொண்டு இந்த டில்லிபட்டணத்தின் பிரபாவத்தை விசாரிக்கப் புகுந்தோம்.

டில்லியின் பூர்வசரித்திரம்.

இந்த டில்லிபட்டணம்தான் பாதகண்டத்தில் பூர்வம் பிரபலமாகவிருந்த இந்திரப்பிரஸ்தம். இது கி. பி. முன் 4988 வருஷங்களுக்கு முன்பு பஞ்சபாண்டவர்கள் அஸ்தினபுரத்தினின்று ஸ்ரீகிருஷ்ணரைத்துணையாகக்கொண்டு காண்டவபிரஸ்தமென்னும் இங்கிருந்த பிரம்மாண்டவனம் வர, அந்த வனத்திலே அந்தப் பாண்டவர்கள் வசிக்கவேண்டி ஸ்ரீ கிருஷ்ணர் தேவதச்சனுகிய விசுவகர்மாவை யழைத்து இந்திரன் பட்டணம்போல் ஒரு சிறந்த நகரத்தைக் கட்டவேண்டுமென்று கட்டளையிட அந்த விசுவகர்மாவும் இங்கிருந்த வனத்தை அழித்துச்

சிறந்த நகரத்தை யுண்டாக்க, ஸ்ரீ கிருஷ்ணர் மகிழ்ந்து இத ற்கு இந்திரப்பிரஸ்தம் என்று பெயரிட்டு இதற்கு உதிஷ் டிரனை ராஜனாக்கி வாழும்படி செய்தவிடம். இந்த இந்திரப்பிரஸ் தத்துக்குக் கிழக்கு எல்லையாக மீரத்துப் பட்டணத்துக்குச் சுமார் 20 மைல் தூரத்தில் ஹஸ்தினபுரம் இருக்கின்றது. இத ற்கு ஆதியில் ஸ்ரீ சுவயம்பு மனுவால் ஸ்தாபிக்கப்பட்டு பாஞ் சால தேசத்துக்குப் பிரதான பட்டணமாக்கி பல நூற்றாண்டுக ளாண்டுவந்த பிறகு, இவரது ஐந்தாவது சந்ததியாகிய பரத மகாராஜன் பிரபலமாக ஆண்டுவருங்காலத்தில் இந்த இந்து தேசத்துக்கே சிரேஷ்ட பட்டணமாகி இந்த இந்தியாவுக்கே பரதகண்டமென்னும் பெயரிடப்பட்டதாகவும், பிறகு இவ ருடைய சந்ததிகளில் சிரேஷ்டரான ஹஸ்திமகாராஜன் காலத் தில் ஹஸ்தினபுரமென்று பெயரிடப்பட்டு, பிறகு பல நூற் றாண்டுகள் கழிய இவரது சந்ததிகளாகிய பாண்டவ குருகுலத் தார் தோன்றிப் பின்னும் சிறப்புப்பெற்றதாகச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இது கங்கைக் கரையிற் கட்டப்பட்ட சிறிய பட்டணம். சுற்றிலும் பயங்கரமான காடு களால் மூடப்பட்டு யானைகளால் நிறைந்திருப்பதால் இந்தப் பெயரிடப்பட்டதோவென்று சந்தேகிக்கவேண்டி யிருக்கிறது. இப்போது இந்து தேவாலயங்க ளிருக்கின்றன. இந்த ஹஸ் தினபுரத்தையும் இதையடுத்த இந்திரப்பிரஸ்தத்தின் பூர்வ காலத்துப் பெருமையையும்பற்றி பாரதம் பாகவதம் முதலான கிரந்தங்களில் பிரபலமாகச் சொல்லியிருப்பதால் இவ்விடத்தில் விரித்துரைக்காது விடுகிறோம்.

இந்த யுதிஷ்டிராதி பாண்டவர் குருமக்களுக்குப் பிறகு கி. மு. 2567 வருஷங்களுக்கு முன்பு அநங்கபால் என்பவன் படையெடுத்துவந்து வசப்படுத்தப் பிறகு செப்கநிருயர் வச மாகிப் பிறகு இந்த இந்திரப்பிரஸ்தத்தில் ஆண்ட இந்து ராஜாக்களுடைய சரியான சரித்திர மகப்படவில்லை. ஆயினும் சிந்து நதிக்கு வடக்கேயுள்ள மாகாணங்களைக் கேதராஜன் என்னும் இந்துராஜன் சுமார் 43வருஷ ஆண்டுவந்து சந்ததியில் லாமல் இறந்துபோக அவனுடைய தளகர்த்தனாகிய ஜெயசந் திரன் அரசனாகி 60 வருஷங்களாண்டு பிறகு இறந்துபோக அவன் குமாரன் பட்டத்தை யடைந்தான். இவன் காலத்தில் ஜெயசந்திரனுடைய தம்பியாகிய டேறு என்பவன் பட்டாபி ஷேகம் பெற்றுப் பிரபல வீரனாகவும் பிரபல தருமவானாகவும் இருந்து இந்திரப்பிரஸ்தமாகிய இந்தப் பட்டணத்தைச் சிங்

காரநகரமாகக்கட்டிக் குடிகளுக்குப்பல உபகாரங்களைச்செய்து டெலு மகாராஜன் என்று பிரபலமாகப் பல வருஷங்கள் ஆண்டுவந்தமையால், இந்தப் பட்டணத்துக்கு டில்லி என்று பேராயிற்று. இந்த இராஜன் காலத்தில் இவன் பந்துவாகிய பூர் மகாராஜன் ஜயித்துப் பட்டத்தைப்பெற பாரசிகத்திலிருந்து டௌராஸ் முதலான அன்னிய தேசத்தார்கள் படையெடுத்துவந்து இந்த டில்லிப்பட்டணத்தைப் பிடித்து ஆண்ட மகமதியர்கள் வசமாகியது.

டில்லியின் மத்தியகால ஸ்திதி.

இந்த டில்லி பட்டணத்தில் முதல்முதல் படையெடுத்து வந்த மகம்மதிய அரசன் பேயர் மகமது குஜினி. இவன் கி. பி. 1008 வருஷம் இந்தப் பட்டணத்தை வசமாக்கினான். கி. பி. 1191௵ கோரி வமிசத்தைச் சார்ந்த ஸாஹபுடின் என்பவன் படையெடுத்து வரும்போது ஆஜ்மீர் தேசத்துச் சதிபதியும், டில்லிக்குச் சொந்தக்காரனுமான பிருதிமன்னன் என்னும் இராஜபுத்திரவீரன் 30,000 குதிரைகளோடும் 3000 யானைகளோடும் பலமான பதாதிகளோடும் வந்து மும்முரமாகச் சண்டைசெய்து கடைசியில் தோல்வியடைந்துபோக, சாஹபுடீனுடைய உதவி தளகர்த்தனாகிய குத்புதீன் என்பவன் டில்லிபட்டணத்தில் கோரியின் அடிமை ராஜர் அரசன்மனை ஆக்கினான். இப்படியிருக்க கி. பி. 1288௵ ஆப்கன் தேசத்தைச் சார்ந்த கில்ஜிவம்சத்தார் படையெடுத்து வந்து இந்த டில்லியைப் பிடித்து, தமது வமிசத்தானாகிய ஜலாலுடீன் என்பவனுக்குப் பட்டங்கட்டிப் பட்டணத்தை கி. பி. 1321௵ வரையில் கில்ஜிவம்சத்தார் வசமாக்க, டோக்லாக் வம்சத்தார் படையெடுத்துவந்து அந்தப் பழைய அரசனைக் கொன்று கெயிசு உட்டீன் தோக்லாக்குக்குப் பட்டம் கட்டினார்கள். பிறகு தாமர்லேன் என்னும் தார்த்தாரி தேசத்தரசன் படையெடுத்துவந்து கி. பி. 1398௵ டில்லி பட்டணத்துக்கு நெருப்பை வைத்து 1,00,000 இந்துக்களைக் கைதிகளாக்கிக் கொன்று பிரேதங்களைப் பக்ஷிகளுக்கும் மிருகங்களுக்குப் போட்டுப் பட்டணத்தைப் பாழாக்கிவிட்டுப்போக, சுமார் ஐம்பது வருஷகாலமாக நகரத்தில் நாதனற்று நாசமாகிக் கிடக்க, லோடி வம்சத்தைச் சார்ந்த பிஹிலால் என்பவன் கி. பி. 1450௵ பட்டணத்தைப் பிடித்து அரசாக்ஷி செய்து

தன் பேரனை இபராமிடம் இராஜ்ஜியத்தைவிட கி.பி.1526௵ பேர்பெற்ற பேபர் படைபெடுத்துவந்து பானிப்பட்டில் பெரிய சண்டைசெய்து டில்லியில் மோகல் ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தான். கி. பி. 1540௵ பேபர் மகனை உமாயூன் பட்டத்தைப் பெற, சிபர்கான் என்னும் பட்டாணி வந்து உமாயூனைத் துரத்திவிட, உமாயூன் 1554௵ பார்சிகளுடைய உதவியால் வந்து சண்டை செய்து டில்லியை வசமாக்கினன். பிறகு அக்பர் டில்லியில் சிங்காசனம் ஏறி டில்லியின் குடிகளுக்குச் சுகவாழ்வையுண்டாக்க மோகல் ராஜ்ஜியம் இந்த இந்து தேசம் எங்கும் பரவி பிரபலப்பட்டது. இவர் காலத்தில் 9,07,43,881 ரூபாய் கந்தாய வசூலாயின. இந்த உத்தம ஆக்பர் காலத்தில் 4,10,000 பதாதிகளும், 2,00,000 குதிரைவீரர்களும் இருந்து இராஜ்ஜியத்தைப் பாதுகாத்து வந்ததாகச் சரித்திரம் தெரிவிக்கின்றது. பிறகு டில்லி: ஜிஹாங்கிர், சாஜிஹான் அரங்கஜிப் முதலானவர்களுடைய வசமாகியது. இவர்களில் சாஜிகான் காலத்தில் தனது கெட்டிக்காரனை அலிமர்த்தனகான் என்பவனுடைய யோசனையினால் கி. பி. 1631௵ இந்த டில்லிபட்டணத்தின் பழைய கட்டடங்களை இடித்துப் புதுக் கட்டடங்களைக் கட்டிவைத்து ரோட்டுகளைச் சிராக்கிநகரத்தை ஏழு மைல்கள் வரையில் பிரபலமாக்கி யமுனைநதி எல்லையோடு மூன்று பக்கங்களிலும் பிரம்மாண்டமான சுவரை வைத்து பந்தோபஸ்து செய்ததன்றியில், சுற்றுப் பக்கங்களில் சில்லரைக் கோட்டைகளைக் கட்டிவைத்து ஒவ்வொரு கோட்டையில் ஒன்பது பிரங்கிகள் வைக்கப்பட்டன. மேலும் குடிகளுடைய ஜலசவுக்கியத்தைக் கருதி சாஜிஹானல் கங்கையிலிருந்து 70 மைல்கள் தூரம் நீர் பாய்ச்ச வெட்டியிருந்த கால்வாயிலிருந்து 25 அடிகள் அகலமும், 25 அடிகள் ஆழமுமுள்ள ஜலதாரையொன்று மூன்று மைல் தூரம்வரையில் டில்லியில் பிரவேசிக்கச்செய்து, கோட்டைக்கொத்தளங்களுக்கும் குடிகளுக்கும் சதா நல்ல ஜலம் கிடைக்கும்படி வெட்டியும் டில்லியைப் பெருமைப்படுத்த அநேக புதுக்கோவில்களையும் கட்டிடங்களையும் கட்டிவைத்தபடியால், இந்த டில்லி பட்டணத்திற்கு சாஜிஹான் பட்டணம் என்னும் புதுப் பெயரிடப்பட்டது.

இந்த சாஜிஹானுக்குப் பிறகு டில்லியில் சிங்காசனம் ஏறினவர்களில் அரங்கஜிப் தவிர மற்றவர்கள் நெடுநாள் ஆளவில்லை. இந்த அரங்கஜிபும் கி. பி. 1807௵ இறந்துபோக

அவனது சந்ததியார்கள் ஐந்து பெயர் சிங்காசனம் ஏறின போதிலும், அவர்களும் சீக்கிரத்தில் இறந்துபோனார்கள். இந்தக் காலங்களில் இராஜபுத்திரர், சீக்கியர், மஹாராஷ்டியர்கள் இடைக்கிடை சண்டைகள் செய்து வந்தபோதிலும் கி. பி. 1737ஞு பாஜிராவ் என்னும் மஹாராஷ்டிர வீரன் டில்லி பட்டணத்தின்மேல் படையெடுத்துப் போய்த் தாக்கி மகம்மதியர்களுடைய பலத்தைக் கண்டிக்க, பார்சிக தேசத்திலிருந்து ஆப்கானிஸ்தானத்தின் பெரும்பாகத்தை கைக்கொண்ட நாதர்ஷா என்பவன் 1739ஞு பிப்ரவரீ 13உ டில்லிக் கோட்டையைப் பிடித்துப் படுபாடுபடுத்திக் குடிகளுடைய சொத்துகளையும் பிராணனையும் கொள்ளைகொண்டும் அகப்பட்டவரையில் வாரிக்கொண்டும் வந்த வழிபாகப்போக, மோகல் ராஜாங்கம் தத்தளிக்க, கி. பி. 1749ஞு டொரானியர்கள் சுவாதீனராகி டில்லியைக் கட்டிக்கொண்டார்கள். இப்படியாகவே மஹாராஷ்டிரர் 1758ஞு சதாசிவாராவைத் தலைவனைக் கொண்டு 70,000 குதிரைப் பட்டாளங்களோடும், 30,000 சேனைகளோடும் டில்லியிலிருந்த இகமதுஷாடொரானி என்பவனோடுசண்டைசெய்துவரத்தோற்கடிக்கப்பட்டதினால் பாதுஷா ஷாஹாலம் என்னும் மோகலர் சந்ததியான் வங்காளத்திலிருந்தபடியால் அவனது குமாரனாகிய சாஜிஹான் என்னும் 13 வயது வாலிபன் டில்லி சக்ரவர்த்தி சிங்காசனத்திலேற்றப்பட்டான். அப்படி ஏற்றப்பட்டதும் பாதுஷா என்ற பட்டம் ஷாஹாலமே வகித்துக்கொண்டு 1160ஞு பாட்னவில் ஈஸ்டு இந்திய கம்பெனியாராகிய இங்கிலீஷ்காரரைத் தாக்க, தோற்கடிக்கப்பட்டு வருஷம் 1-க்கு ரூபாய் 2,600,000 பெற்றுக்கொள்வதாகவும் பேஹார், வங்காளம், ஒரிசா மாகாணங்களை அவர்கள் விட்டுவிடுவதாகச் சமாதானம் செய்துகொண்டாலும், 1771ஞு தான் அங்கிலேயருக்கு விட்ட நாடுகளை மஹாராஷ்டிரருக்கு விட்டுவிட நினைத்து இந்த டில்லிக்கு வர அங்கே மாதிரஜிசிங்கு டில்லியை வசமாக்கிக்கொண்டிருந்தான். இதனால் ஷாஹலம் நொந்து அங்கிலேயர் தமக்குக் கொடுக்கத் நிர்மானித்திருந்த தொகையைக்கூட வாங்காமல் தரித்திரத்தால் கஷ்டப்பட்டான். இப்படிப்பட்ட காலத்தில் குலாம்சிகந்தர் என்பவன் சிந்தியாவை அதிக தொந்திரவும் சதிமோசமும் செய்ய சிந்தியாவும் அவனைப் பிடித்துக் கொன்றுவிட்டான். பிறகு மஹாராஷ்டிரர்கள் (Perron) பிரன் என்னும் பிரான்சு வீரனுடைய உதவியைக்கொண்டு மோகல் வமிசத்தாரையும், ஆங்கிலேயரையும் எதிர்க்க கி. பி. 1803ஞு

ஜெனரல் லேக் என்பவர் பலமான சேனையோடு படையெடுத்து வந்து டில்லிபட்டணத்தைப் பிடித்து ஈஸ்டு இந்தியா கம்பெனியார் வசமாக்கி மொகல் சக்கிரவர்த்திபாருக்கு பென்ஷன் கொடுத்துக் காப்பதாகச் சமாதானப்படுத்தினார்கள். அப்படியிருந்தும் ஜஸ்வந்தராவ் ஹோல்கார் 70,000 பதாதிகளோடும், 130 பிரங்கிகளோடும் இங்கிலீஷ்காரர்மேல் எதிர்த்துவந்தும், கர்னல் பரன் என்னும் இங்கிலீஷ் வீரனால் தோற்கடிக்கப்பட்டு ஓட்டம் பிடித்தான். 1806-ம் வருஷம் ஷா ஆலம் சக்கரவர்த்தி தனது 80-ம் வயதில் இறந்துபோக இவனது குமாரனாகிய அக்பர் என்பவனுக்குப் பெயருக்கு மாத்திரம் பட்டங்கட்டப்பட்டு அந்த மொஹலனும் தனது 80-வது வயதாகிய 1837ஆவது இறந்துபோக, இவனது குமாரன் மகமது பகதூர் பாதுஷாவுக்குப் பட்டங்கட்டப்பட்டது.

இவருக்கு வருஷம் 12 லக்ஷம் ரூபாய் செலவுக்குக் கொடுத்துவந்ததில் போதாமையால் மனவருத்தமடைய பின்னும் மூன்று லக்ஷம் சேர்த்துக்கொடுத்து, டில்லிபட்டணத்தைமுழுதும் இங்கிலீஷ்காரருடைய ஆதிக்கத்திலேயே வைத்துக்கொண்டார்கள். இப்படி இந்த டில்லிபட்டணம் மொகலருடைய அதிகாரத்தில் மகோன்னதமான பதவியைப் பெற்று இந்த இந்துதேசமுழுதும் அதற்குக் கீழ்ப்பட்டு நிற்கச்செய்து பிறகு அந்தப் பெரிய மொகல ராஜ்யமே பலவிதத்தில் பங்கப்பட்டு மறைந்துவிடவே டில்லியின் மேன்மை குறைந்துவிட்டது. இப்படி மகம்மது ராஜாக்களுடைய காலத்தில் குடிகள் சில காலம் சுகப்பட்டாலும், பெருங்காலம் பலவிதமாக வருந்தி வந்தார்கள். கடைசியாக அங்கிலேயர் வசமாகக் குடிகளுக்கு சுகவாழ்வு உண்டாகியது.

டில்லிபட்டணத்தின் தற்கால ஸ்திதி.

இப்போது இந்த டில்லிபட்டணமானது பஞ்சாபு மாகாணத்திற் சிறந்த டில்லி ஜில்லாவுக்குப் பிரதான பட்டணம். இந்த ஜில்லா 7890 சதுரமைல்களுள்ளதாயும், வடக்கே பானிப்பட்டும், கிழக்கே யமுனையும், தெற்கே புல்லபகர்க்கும் மேற்கே ரோட்டக்கும் எல்லைகளால் சூழப்பட்டு சுமார் 50,00,0000 ஜனவாசமுள்ளதாயிருக்கிறது. ஜில்லாவின் கிழக்கு வடக்கு வடமேற்குப் பாகங்களுக்கு யமுனா நதியின் ஜலம் பாய்ச்சப்பட்டு பலவிதபயிர்கள் செழிப்பாக வளர்ந்தாலும் தெற்குப்

பாகம் காடுகளால் நிறைந்த பாகங்களாகவிருக்கின்றது. இந்தக் கல் குன்றுகளால் வெயிற்காலத்தில் உஷ்ணமதிகம். ஆகவே கோதுமை, துவரை, கடலை முதலானவைகள் மாத்திரம் ஏராளமாக விளைகின்றன. 1848வரு கவர்ன்மெண்டாருக்கு 3,49,670 ரூபாய் கந்தாயமாக இருந்தாலும் 1870வரு முதல் அதிகமாகியது. இந்த ஜில்லாவுக்கும், இந்த தாலுகாவுக்கும் பிரதான பட்டணமாகிய இந்த டில்லிநகரமானது யமுனாநதியின் வடகரைக்குச் சுமார் ஒருமைல் தூரத்தில் கம்பீரமான காக்ஷியையுடையதாயும் சுமார் ஏழுமைல் சுற்றளவுக்குள் அநேக மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், மஸ்ஜீதுகளும் நிறைந்திருப்பதோடுகூட காஷ்மீரம், லாஹோர், காபூல், பதிராஜே, ஆஜ்மீரம், தாகோமான், டில்லி, நெகம்பாத், லால்கைலா என்ற பதினொருகேட்டு வாசல்களுடையதாகவு மிருக்கின்றது. இந்தக் கேட்டுகள் கட்டிய காரணம் என்னவென்று விசாரித்ததில், மோகலர் அதிகாரம் மேன்மையான ஸ்திதியிலிருந்தபோது அந்தச் சக்கிரவர்த்திகள், தமக்குப் பிரியமான ஜாதியார்களைத் தருவித்து அவர்கள் இந்த டில்லிபட்டணத்தில் தமக்குச் சமீபத்தில் வாழும்படி தனித்தனியான பிராகாரம் அல்லது பேட்டைகளைக் கட்டிக்கொடுத்து அந்தப்பேட்டைகளில் குடியிருக்கும் ஜாதியார்களின் பெயர் வழங்கும்படி இவ்வித கேட்டு வாசல்கள் கட்டிவைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இப்போது இந்தக் கேட்டுகளில் சில இடிந்து விழுந்துகொண்டிருக்கின்றன. காஷ்மீர கேட்டுக்குள்ளிருக்கும் வீதிகள் சிறியவை. அரண்மனை கேட்டிலிருந்து டில்லி கேட்டு வரைக்கும் போகும் ரோட்டாகிய சாண்டி சவுக்கு (Chandi Chowk) என்பது ஆச்சரியமான வீதி. இது 50 கஜங்கள் அகலமுள்ளதாயும், சுமார் முக்கால் மைல் நீளமுள்ளதாயும், வீதியின் இருபக்கங்களிலும் ஏழடுக்கு எட்டடுக்கு மெத்தை வீடுகளும், வரிசைவரிசையாக இருக்கும்கடைகளில்சகலபதார்த்தங்களும் நயமான விலைக்கு விற்கப்படுவதோடுங்கூட வீதியின் இடையில், குதிரைவண்டிகளும், மாட்டுவண்டிகளும், மனுஷர்களும் போகவர வசதியாகும்படி தனித்தனியாக வகுத்து, இவ்வகுப்புகளைக் காட்ட, அசோக விருக்ஷங்களால் பயிர் செய்விக்கப்பட்டுப்பார்வைக்குக் கம்பீரமாகவிருக்கிறது. இந்தச் சண்டி சவுக்குக்கருகில் பிரம்மாண்டமான இராஜ அரண்மனை ஒரு பட்டாணியால் கட்டிவைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு மைல் சுற்றளவுள்ளதாயும் 40 அடிகள் உயரமுள்ளதாயும் செங்கருங்கற்களாற் கட்டப்பட்டு அநேக கலசங்களை யுடையதாகவு

மிருக்கிறது. இதற்கு மூன்று பக்கங்களிலும் அரணான சுவர்களிருப்பதன்றியில் ஒருபக்கத்தில் யமுனாபாற்றின் கிளைநதியானது எல்லையாக அமைந்திருக்கிறது. இந்தக் கோட்டையில் இரண்டு விசாலமான கேட்டுகள் கட்டப்பட்டு கோட்டைக்குள் (Dewan Khas) திவான்காஸ் என்னும் அந்தரங்க மந்திராலோசனை சபாமண்டபம் வெள்ளை ஸ்படிககற்களாலும், குரான் வாக்கியங்களோடு கூடிய பூங்கொடி சித்திராலங்கார வேலைகளாலும் கட்டப்பட்டிருக்கின்றது. இந்தச்சிங்காரமண்டபத்தின் ஒருபக்கம் பகிரங்க மைதானமாகவிட்டு, ஒருபக்கம் சிங்காரப் பூந்தோட்டமும், இந்தத் தோட்டத்தில் ஸ்படிக நீரூற்றும் சாதனங்களாலும் சிறந்துவிளங்குகின்றன. இந்த அரண்மனையைத் தக்கபடி உபயோகப்படுத்தாமல் விட்டுவிட்டபடியால் பக்ஷிகளின் மலங்களாலும் குப்பைகளாலும் நிறைந்து அசங்கியமாகவிருக்கின்றது. இந்தச் சிங்காரகட்டத்தின் இருபக்கங்களிலிருக்கும் சிறந்த கோபுரகலசங்களையும்,கட்டடத்தில் செய்திருக்கிற கமான் வளைவுவேலைகளையும்,ஸ்தம்பங்களின் சிங்காரவேலைகளையும் கட்டடத்தின் மேல்பாகத்தில் பொன் வெள்ளி முலாம் பூசப்பட்டிருப்பதையும்பார்க்கப்பார்க்க ஆனந்தமுண்டாகிறது. இந்தக்கட்டிடத்துக்குள்ளிருக்கும்ஸ்படிக ஸ்நானபடிகளும் நீரூற்றும்ஸ்நாபிகளும்சிறந்தவேலைக்காரரால் செய்யப்பட்டவைகள். இந்த சிங்காரமண்டபத்துக்கருகில் (Mote Musjid) மோட்டி மஸ்ஜித் என்னும் முத்து மஸ்ஜித்கோயிலும் ஸ்படிகக்கற்களால் கட்டிய கட்டடம். இந்தக் கோவிலையும் தக்கபடி உபயோகப்படுத்தாததினால் சீர்கெட்ட ஸ்திதியிலிருக்கிறது. இந்தக்கோயிலுக்கருகில் (Dewanium) திவானியம் என்னும்மந்திராலோசனை சபாமண்டபமும் ஸ்படிகக்கற்களால் கட்டப்பட்ட அழகிய கட்டடம். இந்தக் கட்டடத்தில்தான் (Peacock Throne) பீகாக் துரோன் என்னும் 60,00,00,000 ரூபா செலவில் செய்த மயில் சிங்காசனமிருந்தது. இதை நாதர்ஷா 1739 பிடித்து இதிலிருந்த ஆபரணங்களையெல்லாம் எடுத்துக்கொண்டுபோய்விட்டாலும், கட்டிடத்தின் கம்பீர காக்ஷிக்குக் குறைவில்லை.

இந்த அரண்மனைக்குச் சமீபத்தில் (Rochun-u-Dow'ah) ரோஷன் உட்டவ்லா என்னும் கோவிலிருக்கிறது. இந்தக்கோவிலில் நாதர்ஷா உட்கார்ந்துகொண்டு தன்சேனைகள் டில்லி ஜனங்களைக்கொன்று கொள்ளையிட்டதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இந்தக்கட்டிடத்தை ஷாஜிஹானால் கோட்டையாக

வும் அரண்மனையாகவும் உபயோகப்படும்படி கட்டிவைத்த தாகத் தெரியவருகிறது.

இதற்குச் சமீபத்தில் ஜம்மா மஸ்ஜீது (Jumma Musjid) என்னும் பெரிய கோயில் தோன்றுகிறது. இது பூமிமட்டத் துக்கு முப்பது அடிகள் உயரமுள்ள மண்மேட்டில் 450 அடி கள் சுற்றளவுள்ள செங்கருங் கற்களால் கட்டப்பட்ட கம்பீர மான கட்டடம். இந்தக் கட்டடத்துக்குப் போகவேண்டுமா னல் அநேக படிக்கட்டுகளில் ஏறிப்போகவேண்டும். அப்படி ஏறிப்போனால் மகம்மதியர்களுக்காக ஸ்படிகக் கற்களாற் கட்டப்பட்ட செயற்கைத் தடாகம் இருக்கிறது. இந்தத்தடா கத்துக்கு வேண்டிய ஜலத்தைப் பக்கத்திலிருக்கும் ஒரேகல் லில் குடைந்து கிணராகச் செய்திருக்கும் கேணியிலிருந்து சூத்திரக்கருவியால் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறது. இந் தத் தடாகத்தைத் தாண்டி சில படிக்கட்டுகள் ஏறிப்போனால் பிரதான கோவில் 261 அடிகள் நீளமுள்ளதாகவும் சுற்றிலும் கம்பீரமான கமான்மேடை வரிசைகளுள்ளதாகவும், முன்பாக மெல்லாம் 900 வெள்ளை ஸ்படிகக்கற்களால் மூடப்பட்டு மேல் கார்னீஸ் மேடைகளில் 4 அடி நீளமும் இரண்டரையடி அகல முமாக வகுக்கப்பட்டும் அந்தப்பாகங்களில் குரானிலிருந்து அநேக பிரார்த்தனைகள் மேற்கோள்கள் ஸ்படிகக் கற்களால் குடைந்து செதுக்கி அரபி பாஷையில் சிங்காரிக்கப்பட்டுமிருக் கிறது. இந்த மஸ்ஜீதின் இருபக்கங்களிலும் 140 அடிகள் உயர முள்ள வெள்ளை ஸ்படிகக் கோபுர கலசங்கள் கட்டப்பட்டிருக் கின்றன. இந்தக் கட்டடத்தி னுட்பாகத்தில் 130 அடிகள் ஏறி மேல்மாடிக்குப்போய் டில்லிப்பட்டணத்தை பார்த்தால் இந்தப் பட்டணத்தின் மாடமாளிகை கூடகோபுரங்களின் காக்ஷி கம் பீரமாகத் தோற்றுகின்றது. இந்த மஸ்ஜீதை சாஜிஹான் சக் கிரவர்த்தி 10,00,000 ரூபாய் செலவிட்டு ஆறுவருடங்களில் கட்டி முடித்தானம்.

இந்த மஸ்ஜீதுக்குச் சற்று தூரத்தில் கலாமஸ்ஜீது (Kala Musjid) என்னும் கறுப்பு மஸ்ஜீது கோவிலிருக்கிறது. இந்தக் கட்டடமுழுதும் அரபிதேசத்தார் சிற்பசாஸ்திரப்படியாகவும், கர்னாடக வழக்கமாகவும் கட்டப்பட்டு கறுப்புச்சாயம் பூசப் பட்டிருக்கிறது. இதை ஆப்கானிய அரசர்கள் கட்டிவைத்த தாகக் கேள்வி.

இதைப் பார்த்துக்கொண்டு காஷ்மீர கேட்டுக்கருகில் வரு வோமானல் அங்கே 1,00,000 ரூபாய் செலவில் கர்னல் ஸ்கின்

னர் முயற்சியினால் ஒரு கிறிஸ்துவின் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. மற்றபடி இந்த டில்லிபட்டணத்தில் இந்து மதஸ்தர்களுடைய கோவில்களும் கட்டடங்களும் விசேஷமாக இல்லை. மகம்மதிய ராஜாக்களுடைய காலத்தில் இந்த டில்லி பட்டணத்தைச் சுற்றி சுமார் 30 மைல்கள் தூரம் வரையில் பல அற்புதமான கட்டடங்கள் கட்டப்பட்டன. அவைகளிற்பெரும் பாகம் போதுமான பார்வையும் பாதுகாப்புமின்றிப் பாழ்த்துப் போயின. இப்போது டில்லிபட்டணத்துக்கு வடமேற்குப் பாகத்தில் சுமார் ஒன்பது மைல்களுக்குள் குதப்மினார்வரையில் அநேக கோரிகள், பூந்தோட்டங்கள் சிங்காரமண்டபங்கள் முதலானவைகளெல்லாம் தினத்துக்கு தினம் சீர்கெட்டுப் பாழ்த்துப் போகின்றன. டில்லிபட்டணத்துக்குத் தெற்கே நாலுகெஜ தூரத்தில் (Kotela) கோடிலா என்னும் பிரம்மாண்ட புராதன கோட்டை இருக்கிறது. இது பிரோஜஷா சக்ரவர்த்தியால் கட்டிவைக்கப்பட்டது. இது இன்னும் பலமான கட்டடமாக விருப்பதன்றியில் கோட்டையின் மத்தியில் (Lath) லாத்து அல்லது பிரோஜஷாவின் ஜயஸ்தம்பம் நாட்டப்பட்டிருக்கிறது. இப்போது இது 37 அடிகளுள்ளதாயும் 10 அடி 4 அங்குலசுற்றளவுள்ளதாயும்யமுனையாற்றங்கரையில்ராஜப்பூருக்குச் சமீபத்தில் சிவாலிக்மலையில்வெட்டியெடுக்கப்பட்டதாயுமுள்ள செங்கற்கம்பம். இது2200வருடங்களுக்குமுன் அசோகமகாராஜனால் கட்டப்பட்டதாக அதிலிருக்கும் பலி பாஷையின் சாசனத்தினால் தெரியவருகிறது. இந்தக் கல் ஸ்தம்பத்துக்குத் தெற்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் உமாயூன் சமாதியிருக்கிறது. இது 200 அடிகள் சுற்றளவுள்ள செங்கருங் கற்களால் கட்டப்பட்ட மேடையின்மேல் சுற்றிலும் பற்பலவிதமான மண்டபங்களுடையனவாகி மத்தியில் ஸ்படிக சமாதிக் கட்டடத்தில் உமாயூனின் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சமாதியைச் சுற்றிலும் அவரின் பந்துக்களுடைய சமாதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தச் சமாதிக்கு மேற்கே சுமார் நாலுகெஜ தூரத்தில் நைஜாம்உட்டின் என்னும் ஒரு மகம்மதிய ஞானியின் சமாதி வெள்ளை ஸ்படிகக் கற்களால் சிங்காரமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதைச் சுற்றிலும் மொகலர் சர்தியார்களுடைய சமாதிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் சாஜிஹான் சக்ரவர்த்தியின் குமாரத்தியாகிய ஜாஹனா என்பவருடைய சமாதியும், உமாயூனுடைய சமாதிக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள சாப்டர் ஜங்கு (Safdar Jung) என்னும் மந்திரியின் கோவிலும், சிங்

காரத் தோட்டங்களும் ஸ்படிகக் கற்கள் வேலைகளால் பிரகாசிக்கின்றன. டில்லி பட்டணத்துக்கு மேற்கே கொஞ்சதூரத்தில் ஜேய்சிங்கு மகாராஜாவால் கட்டிவைக்கப்பட்ட நக்ஷத்திர மேடையொன் றிருக்கிறது.

டில்லிபட்டணத்துக்குத் தெற்கே பதினொரு மைல் தூரத்தில் குதப்மினர் (Kutab Minar) என்னும் இந்தப் பூலோகத்திலெல்லாம் உயர்ந்த கோபுர ஸ்தம்பமிருக்கிறது. இது, அடிபாகத்தில் சுமார் 120 ஜனங்கள் சுற்றி நிற்கும்படியான விஸ்திரணமுள்ளதாயும், பலவிதஉருளைகளும் திரளையுமுள்ளஐந்துஅடுக்குகளுள்ளதாயும், மேல்சிகரம் 30சதுரஅடிகள்அகலமுள்ளதாயும இருக்கிற ஆச்சரியமான கட்டடம். இது எதன்பொருட்டுக் கட்டப்பட்டதோ தெரியவில்லை. இது கி.பி. 1193-ம்வருஷம் இந்துக்களாற் கட்டப்பட்டதாக ஒரு சரித்திரம் முறையிடுகின்றது. வேறொரு சரித்திரத்தில் சம்ஷூடின் ஆல்டமஷ் அரசாளுகை செய்யும்போது (அதாவது கி. பி. 1210வருஷ முதல் 1231வருஷத்தில்) குத்பதீன் என்னும் ஞானியின் ஞாபகச்சின்னமாகக் கட்டப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கி. பி. 1206-ம்வருஷ கோரி வமிசத்தாருக்குப் பிறகுவந்த குதப் என்பவன் காலத்தில் கட்டப்பட்டதாகத் தோன்றுகிறது. இந்தக் கட்டடத்திற்குச் சமீபத்தில் ஷாஆலம் சக்கிரவர்த்தியின் சமாதியும் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குச் சற்று தூரத்தில் 60 அடிகள் உயரமுள்ள இரும்பு ஜயஸ்தம்பம் ஒன்று இந்துக்களால் அலாவுதின் கேட்டண்டை கட்டப்பட்டிருக்கிறது.

இம்மட்டேயல்ல. டில்லிபட்டணத்துக்கு 4 மைல் தூரத்தில் டோக்லாக் பட்டணமும் அங்கு டோக்லாக்கின் கோரியுமிருக்கின்றது. இவ்வித கட்டடங்களாலும் சுற்றிலும் இடிந்து கிடக்கிறஅநேககட்டடங்களின்இடிபாடுகளாலும், இந்த டில்லி பட்டணம் ஒருகாலத்தில் சுமார் 30 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயும், இந்தப் பூலோகத்தில் ஒரு பிரபலமான நகரமாயும் இருந்திருக்க வேண்டுமென்று உறுதியாகச் சொல்லலாம். இந்த டில்லிபட்டணத்தின் சவுகரியமானது 74 அடிகள் விஸ்தீரணமானதா யிருக்கிறதன்றியில் இங்கிலீஷ்காரர்களுக்கு முக்கியமான ஸ்தானமாயுமிருக்கின்றது. இங்கு கோட்டாவளி என்ற சர்க்கார் கட்டடம் இருக்கிறது. இங்கேதான் இங்கிலீஷ்காரரை எதிர்த்துச் சண்டை செய்யவந்த பகைவரை மடியச்செய்த தன்றியில் 1876வருஷ லார்டு லிட்டன் பிரபு மகாராணியவர்களுக்கு சக்கிரவர்த்தினிப் பட்டம்கட்டி தர்பார் கூடியது.

இம்மட்டோ. இந்த டில்லிபட்டணத்தில் இன்னும் அநேக புராதன கட்டடங்களும் கோயில்களும் இருக்கின்றன.

இங்கிலிஷ் கவர்ன்மெண்டு ஸ்தாபிப்பதற்குமுன் இந்த டில்லிபட்டணத்தை ஏழுதரம் இடிக்கப்பட்டும், தீயினால்சாம்பலாக்கப்பட்டும் ஏழுதரம் கட்டப்பட்டதனால் குடிகளடைந்திருக்கவேண்டிய கஷ்ட நிஷ்டூரங்களை எழுதாமல் விடுவதே போதும். இந்த இங்கிலிஷ் ராஜாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு குடிகளுக்குச் சுதந்தர சுகவாழ்வு உண்டானதன்றியில் சில புதுகட்டடங்களும் கட்டப்பட் டிருக்கின்றன. அவை யெவை யெனில், டில்லிபட்டணத்தைப்பிடித்த (General Nicholson) ஜனரல் நிக்கோல்சன் சமாதிபடங்கிய ஆங்கிலேயர் மசானம், ஜண்டாமண்டபம், 1857ஆம் கலகத்தைக்காட்டும் ஞாபக கட்டடம், கிறிஸ்து கோயிலில் (Northbrook Rooms) நார்த்தபர்க்கு தங்கும்சாலை, (United Service)ஐக்கியமந்திரம்முதலான கட்டடங்களும் டிஸ்டிரிக்டு கோர்ட்டு கச்சேரி முதலானவைகளுமே. டில்லிபட்டணம் இப்போது முனிசிபல்பட்டணமாகையால் இந்த முனிசிபல் எல்லைக்குள் 2,25000ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்களிற் பாதிபேயர் இந்துக்களும் மற்றப் பாதிபேயர் மகம்மதியர்களுமாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் கொஞ்சம் பேயர்தானிருக்கிறார்கள். இந்தப்பட்டணமானது அநேக பெரிய ரோட்டுகளினாலும், மாடமாளிகை கூடகோபுரங்களாலும் அழகான மாடிமெத்தைகளாலும் அழகான ஸ்திரிபுருஷர்களாலும், அழகிய தோட்டங்கள் உத்தியாவனங்களாலும் சிங்காரமாகப் பிரகாசித்தாலும் இரண்டு அசங்கியங்கள் அபரிமிதமாக விருக்கின்றன. அவையாவன:—

இந்த டில்லிபட்டணத்தில் அநேக பெரிய வீதிகளிலிருக்கும் மாடிகளின்மீது சிந்து, காஷ்மீரம், பங்காளம், மஹாராஷ்டிர முதலான தேசத்தின் கெட்டுப்போன விபசார ஸ்திரிகள் தேவலோக ரம்பைகளைப்போன்ற அழகுடனும், சிங்கார ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டும், நாற்காலிகளின்மீதும் சோபாக்களின்மீதும் கால்மேல் காலைப்போட்டு உட்கார்ந்துகொண்டும், சாய்ந்து கொண்டும், உக்காக்களைக் குடித்துக்கொண்டும், சாரங்காக்களை வாசித்துக்கொண்டும், பாட்டைசாரிகளைப் பார்த்துச் சிரித்து ஜாடை காட்டி அழைப்பதோடுகூட அநேக துஷ்டப்பயல்கள் வந்து பேரம் பேசுகிறார்கள்.

மற்றொன்றாவது :—இந்தப்பட்டணம் முனிசிபல் நகரமாகவிருந்தும், ஆடுகளுடையவும் மாடுகளுடையவும் மாமிசத்தை அறுத்துப் பகிரங்கமாகவைத்துப் பாட்டைசாரிகள் பார்வைக்கு அசங்கியத்தை யுண்டாக்குகிறார்கள். இப்படி இரண்டொரு அசங்கியங்களிருக்கினும், பொன், வெள்ளி, மணிகளால் ஆச்சரியமான ஆபரணங்களையும் ஆயுதாதி கருவிகளையும் புதிது புதிதாகவும், புத்தி நுட்பமாகவும் செய்து சுலபமான விலைக்குக் கொண்டுவந்து விற்கிறார்கள்.

இவைகளால் இந்த டில்லிபட்டணத்தில் பற்பலவித கைத்தொழிலாளர்கள் ஆதியில் வந்து குடியிருந்து இப்போது போதுமான போஷணையற்றுத் தவித்து வருகிறதாகத் தோற்றுகின்றது. சாப்பாட்டிற்கு வேண்டிய சகலவித போஜன பதார்த்தங்கள் நயமான விலைக்கு அகப்படுகின்றன. இவ்விடத்திலும் இரண்டு குதிரைகள் கட்டிய கோச்சுவண்டிகள் தாராளமாகவிருப்பதால் தினம் ஒன்றுக்கு 4 ரூபாய் சத்தத்தில் முதல்தரமான வண்டியை வாடகைக்குக்கொண்டு விநோதங்களைப் பார்த்து வருவதற்கு அநுகூலமாக விருக்கின்றன.

ஆகவே ஜனவரிமாதம் 29-ம் தேதியாகிய சனிக்கிழமை காலை தந்தசுத்திசெய்துகொண்டு, தேநீருந்தி டில்லிபட்டணத்தின் பிரதான வீதிகளில் நடந்துபோய்ப் பார்த்துக்கொண்டு வந்து சாப்பிட்டு இரண்டு குதிரைவண்டிகளை வாடகைக்குக் கொண்டு சண்டி சவுக், ஜம்மாமஸ்ஜீது, டிவான்காஸ், முத்து மஸ்ஜீது முதலான விநோதங்களைப் பார்த்துக்கொண்டு சாயரக்ஷை விக்டோரியா தோட்டத்துக்குவந்து, அங்கிருக்கும் புலிகள், யானைகள், பற்பலவிதமான குரங்குகள், பலவிதமான பக்ஷிகள் உத்தியாவனங்கள் முதலியவற்றைப் பார்வையிட்டோம். இந்தத் தோட்டத்துக்குள் ஷாஜிஹான் காலத்தில் கருங்கல்லாற் செய்யப்பட்ட யானை உருவம் ஒன்றிருக்கிறது. இது பார்வைக்குப் பிரத்தியக்ஷமான யானையைப்போலவே தோன்றுகிறது. தோட்டத்துக்கு வெளியில் விக்டோரியா ஹால் என்னும் சிங்காரமண்டபம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதைத்தான் நகரமண்டபமாக உபயோகப்படுத்திவருகிறார்கள். தோட்டம் பிரம்மாண்டமானதா யிருப்பதோடு கூட அழகிய பல பூஞ்செடிகளும், தடாகங்களு மிருப்பதால் பார்ப்பதற்கு இரமணியமாக விருக்கின்றன. ஆகையால் ஈசுவர பிரார்த்தனைக்கும் தியானத்துக்கும் இது தக்கவிடமாக விரு

ந்தமையால் பரமேசுவரன்மீது பக்தி அதிகரிக்கவே பக்கத்திலிருந்த பூங்காவனத்துக்குட் புகுந்து பிரார்த்தனை செய்தோம்.

அந்தப் பிரார்த்தனை இது:— ஓ கிருபாநிதியே! சுயம்பு மனுமுதல் பரதாதி மஹாபுருஷர்களும், பஞ்சபாண்டவாதி தருமராஜாக்களும் பிரியத்தோடு வசித்து வந்த பாஞ்சால தேசத்தின் திலகமான (அஸ்தினாபுரம்) டில்லியாகிய இந்தப் பட்டணத்தைத் தரிசிக்கப் பாக்கியமானோம். எமது தேகஸ்திதியை அறிந்து இப்படிப்பட்ட ஸ்தலத்தையும் தரிசிக்க எம்மால் முடியுமோவென்று பலவருஷங்கள் ஏக்கமுற்று, ஏதோ எம்மால் முடியாதென்றிருந்தோம். அந்த ஏக்கத்தை இன்று விட்டோம். பெருமைபெற்ற இந்த டில்லிபட்டணம் மகா தருமராஜருடைய பாதங்கள் பட்டவிடமல்லவா? அப்படிப் பட்ட இந்த இடத்தை எமது பாதமும்பட அந்தத் தருமநந்தனருடைய பட்ட அணுக்களான மண்ணாவது எம்மீது விழுந்து அதனால் அவருடைய தருமகுணத்திற் கிஞ்சித்தாவது எமக்குண்டாக வேண்டுமென்று வேண்டுகிறோம். அடியேமுக்கு அந்த ஆசை திரும்படி தருமகுணத்தைத் தந்தருள்வாயாக. ஓம் தத் சத்.

பிறகு அந்த சிங்காரத்தோட்டத்தை விட்டு சில இந்து 'தேவஸ்தானங்களுக்குப் போனோம். அங்கே பூஜைகள் பிரபலமாக நடத்தி வருவதோடுங்கூட, பாகவதம் பாரதம் முதலியவற்றைப் பூரணமாகப் படித்தறிந்த பண்டிதர்களில் அநேகர் காவியுடை தரித்துக்கொண்டு ஒவ்வொரு மண்டபத்தின் மத்தியில் அலங்காரமான சிங்காசனங்களைப்போன்ற பீடங்களைப் பரப்பி யதன்மேல் உட்கார்ந்து பாகவதாதி புராணங்களைப் படித்துப் பிரசங்கஞ்செய்ய நூற்றுக்கணக்கான இந்து ஸ்திரீகள் வந்து கீழேசுற்றிலும் உட்கார்ந்து கேட்டு சந்தோஷப்படுகிறார்கள். இந்த வழக்கம் தென்தேசத்தின் தேவாலயங்களில் சிலவற்றிலிருக்கினும் அதிகமாக அநுசரித்தால் அதிகபிரயோஜனமுண்டு. இத்தியாதிகளை எல்லாம் பார்த்து ஆநந்தமடைந்து தங்குமிடம்வந்து சாப்பிட்டு இந்த டில்லிபட்டணத்துக்குச் சமீபத்திலிருந்த அரித்துவாரம், ரிஷிகேசம், தபோவனம் பதரிகாச்சிரமம் முதலான திவ்விய ஸ்தலங்களைப் பார்க்க விருப்பங்கொண்டோம். இவைகளில் அரித்துவாரமானது மாயாதுவாரம், கங்காதுவாரம் என்ற பெயர்களால் சிறந்து பரமபதத்துக்கு ஏறும் ஏணியாகிச் சப்தபுரிகளில் ஒன்றாகக் கொள்ளப்

பட்டிருக்கிறது. இவ்விடத்தில்தான் கங்காநதியானது இமய மலையிலிருந்து பூமியில் விழுப்பட்ட இடம். இங்கு சுகப் பிரம்மரிஷியானவர் எழுந்தருளியிருந்த நீலதாரை என்ற தலமும், பரிக்ஷித்து மகாராஜர் தபசுசெய்த ஸ்நாந கட்டமும், தக்ஷ பிரஜாபதி யாகம் செய்த இடமும், மஹாவிஷ்ணுவானவர் சயனித்திருக்கிற இடமும் இருக்கிறதாகப் புராணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

PANJAB PROVINCE.

பஞ்சாபு மாகாணம்.

இந்த டில்லிபட்டணம் பஞ்சாபு மாகாணத்தைச் சார்ந்த ஒரு பெரியபட்டணம். ஆகவே அந்த பஞ்சாபின் பெருமையைப்பற்றிச் சங்கிரகமாகத் தெரிவிக்கிறோம்.

இந்துதேசத்தின் வடமேற்கோ ஜீலம், சினப், ராவி, சட்லிக், சிந்து என்னும் சிறந்த பஞ்சநதிகள் பாயும் இடத்திற்கு பஞ்சாபு என்று பெயர்.

LAHORE

லாகூர்.

—:0:—

பஞ்சாபுக்கு லாகூர்என்பது பிரதானபட்டணம். இது ஆதியில் ஸ்ரீராமருடைய புதல்வனை லவன் என்பவனால் கட்டியாண்டதாகப்புராணமிருக்கிறது. பிறகு கவுன இராஜபுத்திரர்கள் வசமாகி ஆண்டுவரவே மகம்மது குஜினி படையெடுத்துவந்து பிடித்து மகம்மதிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தான். பிறகு மோகல் ராஜ்யம் ஸ்தாபிதமாகி ஆக்பர், ஜிஹாங்கிர், சாஜிஹான், அவுரங்கசிபு முதலானவர்களுக்கு முக்கிய ஸ்தானமாக இருந்தது. பிறகு மோகலர் அதிகாரம் மங்கலடையவே கி. பி. 1797ஹு சிக்கியர் பிரபலராக அவர்களில் இரஞ்சிதசிங்கு அரசாண்டுவந்தான். பிறகு கி. பி. 1846ஹு பிரிடிஷ் கவுன்சில் நியமிக்கப்பட்டு கி. பி. 1849ஹு டுலிப்சிங்கு காலத்தில் இங்கிலீஷ்காரர் வசமாகிவிட்டது. இது 640 ஏகர் விஸ்திரணமும் 75 அடிகள் உயரமுமுள்ள செங்கல் சுவர்களாற் சூழப்பட்டு, 15 கேட்டுகளும் உயர்ந்தவீடுகளும் குறுகிய ரோட்டுகளுமுள்ள பட்டணம். இவ்விடத்தில் ஜனங்கள் பெரும்பாலும் மகம்மதியருடைய நடை உடைகளை அனுசரித்தவர்களாக இருக்கிறார்கள்.

இங்கே பார்க்கத்தக்கவைகளில் முக்கியமானவை:—ஜெனரல் போஸ்டாபிசு, பஞ்சாப் சிப் கோர்ட்டு, கவர்ன்மெண்டு மாளிகை, சென்டுஜேம்ஸ் கோயில், அநேக கலாசாலைகள், லாரேன்ஸ் ஹால், தோட்டங்கள், விக்டோரியா விக்கிரகங்களன்றியில் கி. பி. 1761ளு அகமதுசாஹிபினற் செய்யப்பட்ட சம்சாமா என்னும் பெரிய பிரங்கி, அனர்கலி சமாதி ஆகிய இவைகளேயாம். இது லெப்டினெண்டு கவர்னர் தங்கும் ஸ்தானம். கி. பி. 1891ளு 1,77,000 குடிகளிருந்தார்கள். இந்த லாகூரில் மார்ச்சு, பிப்ரவரி மாதங்களில் கூடும் சந்தைகளில் 90000-50000 ஜனங்கள் கூடுகிறார்கள். லாகூருக்குச் சில மைல்கள் தூரத்தில் மைன்மீர் என்னும் மிலிடெரி ஸ்தானமிருக்கிறது. இந்த லாகூர் டில்லிக்கு 349 மைல்கள் தூரத்திலும், கல்கத்தாவுக்கு 1213 மைல்கள் தூரத்திலும், பம்பாயிக்கு 1306 மைல்கள் தூரத்திலும், சென்னைக்கு 1866 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. அவைகளால் மூன்றும் வகுப்புக்கு முறையே ரூ 3-8-0, 11-15-0, 13-9-0, 26-10-3 சார்ஜ் கொடுக்கவேண்டும்.

AMIRTASAR.

அமிர்தசாரம்.

இந்த லாகூருக்கு இரண்டாம்தரமான பட்டணம் அமிர்தசாரமென்று சொல்லலாம். இது ரவி, பியாசு என்னும் இரண்டு நதிகளுக்கு மத்தியிற் கட்டப்பட்டிருக்கிறது. சிக்மத குருமார்களில் நான்காம் குருவாகிய இராமதாசு என்பவர் ஆக்பர் பாதுஷாவிடம் ஒருகாலி இடத்தைப்பெற்று கி.பி.1586ளு அங்கு ஒரு தடாகத்தை யுண்டாக்கினர். அதற்கு அமிர்தசரம் என்னும் பெயரிட்டு ஒரு சிறந்த நகரத்தையும் கோவிலையும் கட்டினர். கி. பி. 1762ளு அகமத்ஷா என்பவன் படை எடுத்து வந்து கோவிலை இடித்துக் கொள்ளையாடிக் கெடுக்க, கி. பி. 1802ளு இரஞ்சிதசிங்கு அரசனானபோது அக்கோவிலைத் தக்கபடி ரிபேர்செய்து செம்புத்தகடுகளின்மேல் பொன் முலாம் பூசிய கூரையைப்போட்டு அலங்கரிக்கவே, அன்று முதல் அக்கோவிலுக்குத் தங்கமபக்கோயில் என்னும் பெயராகியது. இக் கோயிலின் அடித்தளம் தாஜ்மஹாலைப்போல் வெள்ளை ஸ்படிக கற்களாற் பரப்பப்பட்டு, அவைகளின்மேல் வெள்ளி தங்கம் நவரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்

றது. கோயிலின் கர்ப்பகிரஹத்தில் குருவானவர் உட்கார்ந்து சீக்கியர் மதகிரந்தங்களை வாத்தியக் கருவிகளோடு வாசித்துப் பாட, பல்லாயிரம் ஆண் பெண்கள் வந்துகேட்டு ஆநந்த மடைகிறார்கள். இப்போது இது 1547 சதுரமைல்களுள்ளதாயும் 1819ல் 14,000 குடிகளுள்ளதாயும், காஷ்மீர் சால்வைகள், ஜோராக்கள் செய்து விற்கும் இடமாகவும் இருக்கிறது. ஐப்பசி வைகாசி மாதங்களில் நடக்கும் உற்சவங்களுக்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். இதற்கு மூன்று மைல்கள் தூரத்தில் கேவிந்தகிராமம் என்னும் கோட்டையொன்று இருக்கிறது. இவ்விடத்தில் அநேக தருமசாலைகள் இருக்கினும், முக்கியமானது லாலா சுந்தராராமருடையது சிரேஷ்டமானது. இங்கே பார்தன்கோட்டை ரெயில்வண்டிகள் தங்கும் ஸ்டேஷன் இருக்கிறது. லாகூரிலிருந்து இதற்கு மூன்றாம் வகுப்புக்கு 6 அணா சார்ஜ். இந்த அமிர்தசரம் சென்னைக்கு 1847 மைல்கள் தூரத்திலிருக்கிறது. மூன்றாம் வகுப்புக்கு சார்ஜ் ரூபா 26-9-3 ஆகிறது.

PANIPAT.

பானிப்பட்டு.

இது டில்லிக்கு வடக்கே 60 மைல்கள் தூரத்திலிருக்கின்றது. இது ஆதியில் தருமர் துரியோதனனிடம் சமாதானத்துக்காகக் கேட்ட இடமாம். இதையே குருக்ஷேத்திரம் என்று சொல்லுகிறார்கள். இது யமுனையின் பழைய கரையோரமாக இருக்கிறது. 1891ல் 8106 இந்துக்களும், 18680 மகம்மதியரும், 761 ஜயினர்களும் இருந்தார்கள். நல்லவர்த்தக வளமுள்ளது. இது டில்லி அம்பாலா குல்கா ரெயிலில் 53 மைல்கள் தூரத்திலிருக்கிறது. 11 அணா சார்ஜ்.

THANESWAR.

தானேஸ்வர்.

இந்தப் பானிப்பட்டுக்கு 25 மைல்கள் தூரத்தில் தனேஸ்வர் பட்டணம் இருக்கிறது. சரஸ்வதிநதி கரையோரமாக இருக்கும் இதையும் குருக்ஷேத்திரத்தைச் சார்ந்ததென்றும் இங்கு ஸ்நானம் செய்பவர் சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த

பலனை யடையலாமென்றும் கிரஹணாதி காலங்களில் ஏராளமான ஜனங்கள் வந்து ஸ்நானம் செய்துபோகிறார்கள்.

SIMLA.
சிம்ஹலம்.

இது பஞ்சாபு மாகாணத்தைச் சார்ந்த மேற்கு ஹிமாசலத்தில் 7084 அடிகள் முதல் 8000 அடிகள் வரையில் உயர்ந்த மலைநாடு. கி. பி. 1819ஹு லெப்டினென்டு ராஸ் என்பவர் முதல்முதல் இங்கு ஒரு வீடுகட்ட, 1827ஹு கவர்னர் ஜனரலாக இருந்த ஆமர்ஹாஸ்டு பிரபு இதை சுகவாச ஸ்தானமாகக் கொள்ள, அன்றுமுதல் கிரேஷ்ட தேசாதிபதியுள்பட இந்திய கவர்ன்மென்டாருக்கு வெய்யிற் காலவாச ஸ்தானமாகிவிட்டது. ஐரோப்பியர் மலைமேராத்திற் பிறைவடிவான மேட்டின்மேல் 5 மைல்கள் தூரம் வரையில் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்துவருகிறார்கள். அவ்விடத்தின் சுற்றுப் பக்கத்தின் காக்ஷி அற்புதமாக இருக்கிறது.

வெயிற்காலத்தில் இதன் குடித்தொகை 20,000. இதற்கு டில்லி அம்பாலகால்கா ரெயில்வண்டி போகிறது. கால்காவுக்கு 57 மைல்கள் தூரம்வரையில் நல்ல ரோட்டு டாங்காக்கள் போக்குவரவு இருக்கின்றன. இந்த டாங்காக்கள் சிம்ஹலத்திற்கும் கால்காவுக்கும் மத்திபஸ்தானமாகிய சோலன் என்னும் இடத்தில் தங்கி இளைப்பாறிப்போதல் வழக்கம். கல்கத்தாவிலிருந்து சிம்ஹலம் 1135 மைல்கள் தூரமும், மூன்றாம்வகுப்புக்கு ரூபா 14–1–0 சார்ஜ்ஜுமாகிறது. இந்த சிம்ஹலத்தின் வழியாக ஹிமாசலத்தைக்கடந்த கைலாச பருவதத்தையும், மாநசசரோவரத்தையும், திபேத்தையும் பார்க்கலாம்.

UMBALLA.
அம்பாலா.

இந்த சிம்மலத்திற்கு 98 மைல்கள் தூரத்தில் அம்பாலா என்னும் ஜில்லா நகரம் இருக்கிறது. இது 14-ம் நூற்றாண்டில் அம்பா மகாராஜா என்னும் இராசபுத்திர வீரனால் கட்டப்பட்டது. இது பழைய பட்டணமென்றும், நகருக்கு 5 மைல்கள் தூரத்தில் புதுப்பட்டணமென்னும்கன் டோன்மென்ட்டு இருக்

கின்றது. இது அழகுள்ள பெரியரோட்டுகளோடும், தோட்டங்களோடும் பிரகாசிக்கின்றது. பழையபட்டணம்குறுகிய ரோட்டுகளுடையதாக இருக்கினும் தானியம், துணிகள், பட்டு, கம்பிளி, இரும்பு, மாமுதலான வியாபாரம் பிரபலமாக நடக்கிறது. ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடக்கும் பவுனதுவா•சி தினம் ஐம்பதினாயிரம் ஜனங்கள் கூடுகிறார்கள். அன்று தாகூர் பவனி உற்சவங்கள் நடக்கின்றன. இது லாகூருக்கு 182 மைல்கள் தூரத்திலும் டில்லிக்கு 163 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. இவைகளில் மூன்றும் வகுப்பு வண்டிக்கு ரூபா 2–2–3, ரூபா 1–5–3 மாக சார்ஜ் தரவேண்டும்.

KANGRA.

காங்கிரா ஜில்லா.

இது பஞ்சாபு மாகாணத்தின் வடகிழக்கில் ஹிமாசலம் திபேத்து எல்லை வரையிலிருக்கும் புராதன பட்டணம். இது ஆதியில் ஜாலந்தர் இராஜபுத்திரர்களுடைய ஆக்ஷிக்குட்பட்டிருந்தது. இங்கே ஒரு மலைக்கோட்டை இருக்கிறது. அக்கோட்டைக் கருகில் நாகர்கோட்டைக் கோவிலும், தேவிகோவில்களும் இருக்கின்றன. அக்கோவில்களை மகம்மது குஜினி கி. பி. 1000ஷு படை எடுத்து வந்து தாக்கிக் கொள்ளையிட்டு தேவிவிக்கிரகத்தையும், ஆடையாபரணங்களையும் எடுத்துக்கொண்டு போனான். பிறகு 35 வருஷங்கள் கழிந்தமேல் அவ்விடத்திய இந்துக்கள் டில்லிராஜனுடைய உதவியினால் மகம்மதியரைத் துரத்தியடித்துப் பழைய விக்கிரத்தைப்போலவே ஒரு புது விக்கிரகத்தைச் செய்துவைத்தார்கள். கி. பி. 1360-ம் வருஷம் மகம்மது டோக்லாக் வந்து கொள்ளையிட்டு, அந்த விக்கிரகத்தை மெக்காவுக்கு அனுப்பினான். கி. பி. 1556ஷு ஆக்பர் படை எடுத்துப்போய் கங்கிராகோட்டையைப் பிடிக்க, பிறகு ஆங்கிலேயர் வசமாக, கி. பி. 1905ஷு உண்டான பயங்கர பூகம்பத்தினால் பிராணச்சேதம் அதிகமாகி இப்போது நல்ல ஸ்திதியில் இருக்கிறது. அந்த பூகம்பத்தினால் அங்கிருந்த புராதனமான விஜயேசுவரி தேவியின் கோவில் இடிந்து விழுந்துவிட்டது. இது மஹாபாரதப் போர்காலத்தி லுண்டானதாம். இதை மகமது குஜினி கொள்ளையடித்துப் பாழாக்கினதும், பூகம்பத்திலுண்டான சேதம் அதிகம். அக்கோயிலைத் தக்கபடி கட்ட நான்கு லக்ஷம் ரூபாய் மதிப்பிடப்பட்டு ஒரு

லக்ஷம் ரூபாய் வசூலாகி அதில் 33,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இன்னும் அதிக தொகை வேண்டியபடியால் பஞ்சாபு கவர்ன்மெண்டார் காங்கார்கோட்டையை இடித்து அதிற் கிடைக்கும் சாமான்களை ஷை கோயிலுக்கு உபயோகித்துக் கொள்ள கி. பி. 1911ஷ உத்திரவு கொடுத்திருக்கிறார்கள்.

இது அமிர்தசரோவரம், பதன்கோட்டை ரெயிலுக்கு 60 மைல்கள் தூரத்திலிருக்கிறது, மூன்றும் வகுப்புக்கு அணா 0-12-6 சார்ஜ் ஆகிறது.

RAVALPINDI AND ATTACK.

அட்டாக்கு இராவல்பிண்டி.

லாகூருக்கு 174 மைல்கள் தூரத்தில் இராவல்பிண்டி என்னும் மிலிடெரி ஸ்டேஷன் இருக்கிறது. இது ஆதியில் காக்கார் ஜாதியரால் ஆளப்பட்டு, பதினைந்தாம் நூற்றாண்டில் மோகலர் வசமாகியது. இப்போது 7000வீடுகளும் அவைகளில் 7,3?95 குடிகளும் இருக்கிறார்கள். இவர்களில் மகம்மதியர் அதிகம். இங்கே முறுட்டுத் துணிகள், சோப்புகள், செருப்புகள், சீப்புகள், பொடி முதலான பொருள்கள் ஏராளமாக வியாபாரமாகின்றன. பி-ஜெமாசியவர்கள் ஞாபகச்சின்னமாகக் கட்டியிருக்கும் கமான் வளைவு சர்தார் சுஜான் சிங்கவர்களால் 2 லக்ஷம் ரூபாயில் கட்டிய மார்க்கெட்டும் பார்க்கத்தக்கவை. இதற்கு 58 மைல்கள் தூரத்தில் அட்டாக்கு இராவல்பிண்டிக்கு 58 மைல்கள் தூரத்திலிருக்கிறது. இந்த அட்டாக்குக் கோட்டையானது சிந்துநதிக்கு எதிர் நோக்கி கபூல்நதி சேருமிடத்தில் ஒருமலை உச்சியில் ஆக்பர் பாதுஷாவால் கட்டப்பட்டிருக்கிறது. இதில் இப்போது 2000 குடிகள் வசித்து வருகிறார்கள். இதை மகம்மதியர் அட்டாக் பனாரஸ் கட்டாக் பனாரஸ் என்று சொல்லுகிறார்கள். இந்த அட்டாக்குக்கு 4 மைல்கள் தூரத்தில் பெஷ்வா என்னும் புஷ்பபுரி இருக்கின்றது.

PESHWAR.

பெஷ்வார்—புஷ்பபுரி.

இந்த புஷ்பபுரி அட்டாக்குக்கு 46 மைல்கள் தூரத்தில் மேற்கே கைபர்பாசுவரையிலும், கிழக்கே இந்துநதிவரைக்கும் நீண்டு கபூல் நதிக்கரைக்கருகி லிருக்கிறது. இது பூர்வத்தில்

காந்தர்வ ராஜ்யத்திற்குப் பிரதானபட்டணமாக இருந்து பிறகு ஆப்கானியர், பட்டாணிகள் வசமாகி, கி.பி. 1818ல் சீக்கியர் தங்கள்வசமாக்கிக்கொண்டாலும் கி. பி. 1848ல் ஆங்கிலேயர் வசமாகியது. இந்தப் பட்டணம் சுற்றிலும் 15 அடிகள் உயரமுள்ள செங்கற் சுவர்களால் சூழப்பெற்றும், 16 கேட்டுகளையுமுடையதாக இருக்கிறது. இப்போது இதில் 84,000 ஜனங்கள் வசித்து வருகிறார்கள். அவர்களிற் பெரும்பான்மையோர் மகம்மதியர். இவ்விடம் சூரத்து, காபூல், சிந்து முதலான நதிகளின் ஜலப்பாய்ச்சலும் கிணறுகளின் ஜலமும் அதிகமாகையால், நீரகம் பொருந்திய தேசமாக இருக்கிறது. இங்கே கோர்கத்திரி என்னும் புத்தமதக்கோவிலும் இந்துமதக் கோவிலும் இருக்கின்றன. சமீபகாலத்துக்கு முன் ஒரு கோவில் குகையில் பவுத்தருடைய அஸ்திசாம்பல் கண்டெடுக்கப்பட்டு அதை பர்மாவுக்குக் கொடுக்கப்பட்டது. ஜண்டா, காகாசாஹிபு, பீர்பாபா, சகிசரோவரம் முதலான உற்சவங்கள் ஜனவரி மாதத்தில் நடக்கும்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து சேருகிறார்கள். இங்கிருந்து மத்திய இந்தியா ஆப்கானிஸ்தானங்களுக்குக் கோதுமை, நெய், தேயிலை, துணிகள் ஏற்றுமதியாகின்றன. காபூல் பொக்காரா தேசங்களிலிருந்து வெள்ளித்தங்கச் சரிகைகள், கழுதைகள், தோல்கள், பழங்கள் முதலானவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

நகரத்தின் முக்கியமான வீதி 50 கஜ அகலமுள்ளதாகவும், அநேக மஸ்ஜீதுகள் சிங்காரத் தோட்டங்களாற் சூழப்பட்டதாகவுமிருக்கிறது. நகரத்துக்கு 2 மைல்கள் தூரத்தில் கண்டோன்மெண்டும், அதில் கமிஷனர், டிப்டி கமிஷனர், மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு கச்சேரி கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த பெஷ்வாரிலிருந்து கைபர்பாஸ் வழியாக காபூல், ஆப்கான் ஸ்தானங்களுக்குப் போகும் வழியாக இருப்பதால், அந்த வழியைப் பாதுகாக்க பலமான தண்டு தளமும் இருக்கின்றன. இங்கே வாழும் எல்லைமாகாணத்துக் குடிகள் அடிக்கடி திருட்டு முதலான குற்றங்களைச் செய்து குடிகளை வருத்துவதனால் ஆங்கில கவர்ன்மெண்டார் அவர்களைக் கண்டித்து வருகிறார்கள். இது லாகூருக்கு 288 மைல்கள் தூரத்திலிருக்கிறது. மூன்றும் வகுப்பு வண்டிக்கு ரூபா 3-6-0 சார்ஜ் ஆகிறது.

CASHMERE.

காஷ்மீரதேசம்.

காஷ்மீரம் என்பது பஞ்சாபு மாகாணத்தின் வடகிழக்கே இருக்கும் ஓர் பெரிய சுதேச ஸமஸ்தானம். இது ஜம்பு, லாடகடீ நாடுகள் சேர்ந்து பதினைந்து லக்ஷம் குடிகளையுடைய சிறந்த நாடு. இதற்கு 11,500 அடிகள் உயரமுள்ள பீயர் பஞ்சால் என்னும் மலைவரிசையைத் தாண்டிப் போகவேண்டும். அந்த உன்னதமான சிகரத்தில் பீயருடைய கோரி இருக்கிறது. அதன் மினாரிஸ் கோபுரங்கள் 130 மைல்கள் தூரம் தெரிகின்றன. இந்த காஷ்மீரம் இமயமலைக்குத் தெற்கே 5200 அடிகள் உயரமுடையதும், 100 மைல்கள் தூரமும், 25 மைல்கள் விஸ்தீரணமும் வெயிற்காலத்தில் மோகலாய் அரசர்கள் தங்கும் ஆரோக்கிய ஸ்தானம். இதன் பிரதான பட்டணமாகிய ஸ்ரீ நகரம் என்பது ஜீலம் நதியோரத்திலிருக்கிறது. பெரும்பான்மையான வீடுகள் மரப்பலகைகளால் மூன்றடுக்குமுதல் ஏழடுக்குக் கட்டடங்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்த ஸ்ரீநகருக்கருகில் நகரக்குளம் இருக்கிறது. அதில் தெப்பத்தோட்டங்களுண்டாக்கி ஏராளமான வெள்ளரி கர்பூறகாய்க்கனிகளைப் பயிரிட்டு வருகிறார்கள். தாகித் சுலைமான் என்பது அசோக மஹாராசனுடைய குமாரன் கி. பி. 200ஞ கட்டிய கல் கட்டடம் ஓர் மலை உச்சியிலிருக்கிறது. இங்கே மகம்மது நபியின் பாத்தியஸ்தருடைய ஷாஹமாதான் என்னும் மஸ்ஜீதும் இருக்கிறது. இவ்விடத்தில் உயர்ந்த வேலைப்பாடுள்ள சால்வைகளும் ஓர்விதமானகாயிதங்களும் செய்து விற்கிறார்கள். இது சிறந்த நிலவளமுள்ள நாடானபடியால், பதினைந்தாம் நூற்றாண்டில் மகம்மதியர் படையெடுத்து வந்தார்கள். கி. பி. 1752ஞ அகம்மதுஷா படையெடுத்து வந்து பிடித்தான். 1819ஞ வரையில் ஆப்கானியர் வசத்திலிருந்தது. பிறகு சீக்கியர் வசமாகி குலாபுசிங்குவின் ஆட்சியில் இருந்தபிறகு அங்கிலேயர் வசமாகியது. அதையடுத்த ஹிமாசலத்தின் காக்ஷி அற்புதமானது. வர்ணித்தல் அசாத்தியம்.

இந்த காஷ்மீரத்தில் பார்க்கத்தக்க அதிசயங்கள் பலவிருக்கினும் அவற்றிற் சிறந்தவை (Mishat) மிஸ்ஹேட், (Shalamar) ஷாலமார் என்னும் சிங்கார உத்யான வனங்களும் கட்டடங்களுமேயாம். நிஷாபாக் அல்லது ஆனந்தவனம் ஷாலமாருக்கு 2 மைல் தூரத்திலிருக்கிறது. அது ஜிஹாங்கிர் சக்கர

வர்த்தியின் மனைவி நூர்ஜிஹானின் சகோதரன் அஸப்ஜா என்பவரால் நியமிக்கப்பட்டது. இது 595 கஜம் நீளமும் 360 கஜ அகலமும் முன்பக்கம் 13 அடிகள் உயரமுமுள்ள கற்சுவர்களால் சூழப்பெற்றது. இதில் பத்து அடுக்குகளுள்ள அழகிய கட்டடமும் இருக்கிறது. அந்தத் தோட்டத்தைச் சுற்றிலும் வரிசை வரிசையாக அநேக சரோவரங்களும் அவைகட்குச் சதா நீர் பாய 13 அடி அகலமும் 8 அங்குலம் ஆழமுமுள்ள வாய்க்கால்களும் அவற்றின் இருபக்கங்களிலும் 12 அடிகள் அகலமுள்ள அழகிய பாதைகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அழகிய தோட்டத்தின் மேற்பக்கத்திலும் கீழ்ப்பக்கத்திலும் அழகிய கொட்டகைகள் கட்டப்பட்டிருக்கின்றன. தோட்டத்தைச் சுற்றிலும் பலவித கந்தமூலங்களால் மூடப்பட்ட உன்னத பருவத சிகரங்கள் கம்பீர காக்ஷியுடையவைகளாய் இருக்கின்றன.

சலாமார் தோட்டமென்றால் சுகவனமாம். இது ஒருமைல் நீளமும் 12 அடி அகலமுமுள்ள கால்வாயினால் சம்பந்தப்பட்டிருக்கிறது. வாய்க்காலின் இருபுறங்களில் பருத்துப் பறந்து விரிந்து வளர்ந்தோங்கிய விருக்ஷங்களால் சூழப்பெற்ற பாதைகளும் அது ஒரு குளத்தில் விழுமிடத்தில் ஒரு புராதன கேட்டும் (Gate) கட்டப்பட்டிருக்கின்றது. இத்தோட்டம் 590 கஜ நீளமும் மேல் முடிவு 26 கஜ அகலமும் கீழ் முடிவு 207 கஜ அகலமும் இருக்கின்றன. இத்தோட்டத்திலும் 14 அடிகளுக்கொன்றாகப் பல சரோவரங்களும் அதற்குத் தண்ணீர் பாய 14 கஜ அகலமுள்ள வாய்க்கால்களு மிருக்கின்றன. இங்கிருக்கும் 4 அடுக்கு உயரமுள்ள அழகிய கட்டடம் பார்க்கத்தக்கது. மேல் மாடியில் அந்தப்புர ஸ்திரீகள் ஆடிப்பாடி ஆனந்த மடையத்தக்கவிதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இங்குதான் ஜிஹாங்கீர் நூர்ஜிஹானோடு கோபங்கொண்டாராம். இக்காஷ்மீரத்தை ஆண்ட குலாப்சிங் ஆங்கிலேயருக்கு அன்பானர். அவர் குமாரர் ரணவீரசிங்கும் அவர் குமாரர் இப்போதிருக்கும் பிரதாப்சிங்கும், அவர் குமாரரும் ஆங்கில கவர்ன்மெண்டாரிடம் அன்பு வைத்திருக்கிறார்கள். இந்த காஷ்மீரத்தை அடுத்த லாடக்கி வழியாகக் கைலாசம், மானசசரோவரம், திபெத்து முதலான இடங்களுக்குப் போக வழி யிருக்கின்றது.

காஷ்மீரத்திற்குப் போய்வரச் சிந்தமாக இருக்கும் வழிகளும், பயணச்செலவுகளின் விபரமும்.

இந்த காஷ்மீரத்திற்குப் போய்வர பல வசதியான வழிகளிருக்கின்றன. ஜீலம் பள்ளத்தாக்கிலிருந்து போய்வரும் வழியானது அற்புதமான இயற்கைக் காக்ஷிகளை உடையது. ஆனால் எப்ரல்ஆகஸ்டுமாதங்களில்மிதமிஞ்சிப்பெய்யும் மழைகளினால் வழிகள் கெட்டும் சிறு குன்றுகள் இடம்பெயர்ந்தும் விழுவதனால் சில சமயங்களில் அபாயங்கள் உண்டாகலாம். இவ்விடமிருந்து கூடாரங்களை எடுத்துக்கொண்டு போகும் கூலிக்காரர்களுக்குத்தினம்ஒன்றுக்கு 4 அணா கூலிகொடுத்தால்போதும். டாங்கா வண்டியில் ஏறிப்போவோர் ஆள் ஒன்றுக்கு மைல் ஒன்றுக்கு 0-3-6 கொடுக்கவேண்டும். ஸ்பெஷல் டாங்காவில் 3 பேர் ஏறிப்போனால் மைல் ஒன்றுக்கு 10 அணா வீதம் கொடுக்கவேண்டும். அவசரமாகப் போகவேண்டியவர்கள் ஸ்ரீ நகருக்கு ராவல்பிண்டியிலிருந்து மோடார் வண்டியில் ஒரேநாளில் போய்ச் சேரலாம். நிம்மதியாகப் போக விரும்புகிறவர்கள் இரண்டு அல்லது மூன்றுநாளில் டாங்கா வண்டியிலேயே போய்ச் சேரலாம். அப்படிப் போவோர்களுக்கு வழியில் தங்குவதற்கு வசதியான முசாபுரி பங்களாக்களும் அவைகளில் உணவு முதலியவைகளும் இருக்கின்றன. சுமார் 196 மைல்கள் தூரமுள்ள ஸ்ரீநகரத்திற்குப் போகப்பட்டவர்கள் 15 தங்குமிடங்களை நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். டாலௌசியிலிருந்து ஸ்ரீநகரம் 209 மைல் தூரத்திலிருக்கிறது. அவ்வழியில் 15 தங்குமிடங்கள் இருக்கின்றன. பென்ஹால்பேஸ் வழியானது 163 மைல்கள் தூரத்திலிருக்கின்றது. அவ்வழியில் 11 தங்குமிடங்களிருக்கின்றன. குஜராத்தியிலிருந்து பூன்ச் வழியாக ஒருவழி போகிறது. 173 மைல் தூரமும் 14 தங்குமிடங்களுமிருக்கின்றன.

டில்லி பட்டணத்தைவிட்டு மற்றொரு பாதை வடமேற்கு மாஹாண ரயில்வேயைச் சார்ந்த சிஹாலா ஸ்டேஷன் வழியாகப் போகிறது. 178 மைல் தூரமும் 14 தங்குமிடங்களும் உடையதாய் இருக்கின்றது. இவைகளிலெல்லாம் ராவல்பிண்டியிலிருந்து போகும் வழியானது அதிக வசதியுள்ளதும் சுகந்தருவதுமாய் இருக்கிறது. அதாவது 64 மைல் தூர

த்திலுள்ள கொஹலாவுக்குப் போய், அங்கிருந்து 69 மைல்கள் தூரத்திலுள்ள பூரிக்குப் போய், அங்கிருந்து 63 மைல்கள் தூரத்திலுள்ள ஸ்ரீநகருக்குப் போய்ச்சேரலாம். இவ்வழியாய்ப் போகிறவர்கள் 3 தங்குமிடங்களில் தங்கினால்போதுமானதாம். ஆகவே ராவல்பிண்டிக்கு அருகிலுள்ள ஜனங்கள் 10 நாள் ரஜாவில் 52 ரூபாய் செலவில் காஷ்மீரதேசத்திற்குப் போய்வருகிறார்கள். பாரமுலாவிலிருந்து போய்வர டிக்கெட் ஒன்றுக்கு 63 ரூபாய் கொடுக்கவேண்டும். டாங்காவண்டி ஒன்றுக்கு 3 ஜனங்கள் ஏறக்கூடியதாயிருப்பதோடு $2\frac{1}{2}$ மணங்கு சாமான்களை ஏற்றிக்கொண்டுபோகலாம். பாரமுலாவுக்கு டாங்காவில் ஆள் ஒன்றுக்கு 35 ரூபாயும் அங்கிருந்து ஸ்ரீநகருக்கு 42 ரூபாயும் கொடுக்கவேண்டும். ஸ்பெஷல் டாங்காவானால் 106, 124 ரூ முறையே சத்தம் (Charge) கட்டவேண்டும். யாண்டுவண்டியில் சாமான்களைக் கொண்டுபோனால் மணங்கு 1-க்கு $3\frac{3}{4}$, $4\frac{1}{4}$ ரூ முறையே கொடுக்கவேண்டும். டாங்காமூலமாகக் கொண்டு போகும் சாமான்களுக்கு ரூபாய் 1-க்கு 5 சேர் கொண்டுபோகலாம். அவசரமில்லாமல் சாவகாசமாய்ப் போகப்பட்டவர்கள் ஐந்துநாள் பிரயாணத்தில் ஆள் 1-க்கு 40 ரூபாய் செலவில் பாரமுலாவுக்குப் போய் அங்கிருந்து 45 ரூபாய் செலவில் ஸ்ரீநகருக்குப் போகலாம். எக்காவண்டி மூலமாகப் பாரமுலாவுக்கு 25 ரூபாய் செலவிலும் ஸ்ரீநகருக்கு 28 ரூபாய் செலவிலும் போகலாம். ராவல்பிண்டிக்குக் கல்கத்தா மெயில் வண்டியானது ராத்திரி 8 மணிக்கு மேலாக வருகிறது. பம்பாய் மெயிலானது மோரேஸ் டேஷனுக்கு மாலைப்பொழுதில் வந்து சேருதவால் அதுவே யாத்திரைக்காரருக்கு ஏற்றதாயிருக்கிறது.

டில்லிபட்டணத்திற்கு இப்போது வந்த நல்லகாலம், அல்லது புது டில்லிமாநகரம்.

ஆதியில் ஆரிய அரசர்காலத்தில் அதிக பிரபலமாக இருந்துமத்தியில் மகமதியர்முதலான மன்னர்களால்மகிமைபெற்று இடையில் சீர்கெட்ட பஞ்சாபு லாகோர் மாகாணத்துக்குள் ஒரு ஜில்லாவாகி இருந்த இந்தப் பட்டணத்தை 1911ஞு டிசம்பர்மீ 12உ ஸ்ரீ ஐந்தாம் ஜார்ஜ் பிரபு அவர்கள் இந்திய சக்கிரவர்த்தி மகுடாபிஷேக மகோற்சவத்தைக் கொண்டாடியதுமுதல் இந்த இந்தியா தேசத்திற்குச் சிறந்த தலை நகரமாக்கப்பட்டது. அப்போது அந்த டில்லிக்குப்போய் அதன் ஆதி

கால சரித்திரத்தையும், மத்தியகால சரித்திரத்தையும், தற்கால மகுடாபிஷேக உற்சவ விநோதத்தையும் கண்டு சென்னை சுதேசமித்திரனுக்கு எழுதிவிட்ட நிரூபங்களின் கருத்துக்களை இதனடியிற் பதிப்பிக்கின்றனம்.

டில்லிபட்டணத்துச் சரித்திரம்.

[சுதேசமித்திரன்: 1911ஞு நவம்பர்மீ 20உ.]

வருகிற டிசம்பர்மீ 12உ சக்கரவர்த்தி பட்டாபிஷேகம் செய்துகொள்ளப்போகும் டில்லிபட்டணமானது, மகாபாரதத்தில் கதாநாயகர்களாய் விளங்கும் பாண்டவர்களால் இந்திரப் பிரஸ்தம் என்கிற பெயருடன் ஸ்தாபிக்கப்பட்டது. அஸ்தினாபுரத்து அரசனை திருதராஷ்டிரன் பாண்டவர்களை யழைத்துத் தெற்கே 50 மைல் தூரமுள்ளதும் யமுனை நதிக்கரையிலுள்ளதுமான காண்டவவனத்தில்போய் அங்கு ராஜ்யம் ஸ்தாபித்துச் சுகமாய் விற்றிருங்களென்று சொல்ல, பாண்டவர்கள் கிருஷ்ணனுடன் ஆலோசனை செய்து அப்படியே காண்டவ வனம் சென்றார்கள். அங்கு கிருஷ்ணன் இந்திரனைத் தியானிக்க, இந்திரன் விஸ்வகர்மாவாகிய தேவதச்சனை யழைத்து, "நீ காண்டவ வனத்துக்குப் போய் அங்கு இந்திரப்பிரஸ்தம் என்கிற பேருடன் ஒரு பட்டணத்தை நிர்மாணித்துக்கொடு" என்று கட்டளையிட்டார். இவன் நிர்மாணித்த பட்டணம் வெகு அலங்காரமாயும் சிறப்பாயும் தேவலோகத்து அமராவதிபோலவும் நாகலோகத்து போகவதிபோலவும் விளங்கிற்று. இப்பட்டணத்தின் சிறப்பைப்பற்றி மகாபாரதத்தில் விஸ்தாரமாக எழுதப்பட்டிருக்கின்றது. இங்கே யுதிஷ்டிர சக்கரவர்த்தி ராஜஸூயயாகம் முதலியவை செய்து தர்ம நெறிதவறாமல் ஜனங்களைப் பரிபாலித்துவந்தார். இப்படியிருக்கும்போது, பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம் நடந்து பாண்டவர்கள் வெற்றிபெற்று அஸ்தினாபுரத்தில் பிரவேசித்து அங்கு ராஜ்யபாரம் செய்துவந்தார்கள். இந்திரப் பிரஸ்தத்தில் பாண்டவர்களுக்குப் பிறகு யாதவர்களின் அரசனான அநிருத்தாவின் குமாரன் வஜ்ஜிரன் அங்கே ஆட்சி புரிந்தானென்று மகா பாரதத்தில் சொல்லப்படுகிறது. பாண்டவர் காலத்தில் இந்திரப்பிரஸ்தம் வெகு சிறப்புற்றிருந்ததென்று தெரிகிறது. ஆயினும், பாரத யுத்தத்துக்குப் பிறகு இந்திரப்பிரஸ்தம் என்னுயிற்றேவென்று சரித்திரம் சொல்ல

வில்லை. அது முதல் பதினோராம் நூற்றாண்டு வரையில் அதைப் பற்றி நமக்கொன்றுந் தெரியவில்லை.

இந்த நூற்றாண்டில் அனங்கபால் என்ற ராஜபுத்திர ஜாதியைச்சேர்ந்த ஒருவர் இந்திரப்பிரஸ்தம் இருந்த இடத்தில் ஒரு கோட்டை கட்டி ஒரு பட்டணத்தையும் ஸ்தாபித்தார். இவர் வடமதுரையிலிருந்து இப்போது டில்லியில் பேர்போன இரும்புத்தூணைக் கொண்டுவந்து ஸ்தாபித்தார். இந்த இரும்புத்தூணைச் சுற்றிப் பல ஹிந்து தேவாலயங்களிருந்து அவைகளுக்கு இது ஓர் அலங்காரமாயிருந்தது. பின்னால் வந்த மகமதிய அரசர்கள் இந்த ஹிந்து தேவாலயங்களை இடித்து அவைகளின் சாமான்களை மசூதிகள் கட்ட உபயோகப்படுத்தினார்கள். இந்த இரும்புத்தூணில் சந்திரகுப்தன் விக்கிரமாதித்தன் இவர்களுடைய பிரதாபங்கள் வெட்டெழுத்தில் வரையப்பட்டிருக்கின்றன. அனங்கபால் அரசன் ஆட்சிபுரிந்த தேசமானது வடக்கே ஹன்ஸியும் கிழக்கே கங்காநதியும் தெற்கே ஆக்ரா அல்லது யமுனா நதியும் மேற்கே ஆஜ்மீரும் எல்லைகளாகக்கொண்ட சிறிய ராஜ்யம். இவருடைய வமிசத்தார் ஏறக்குறைய நூறு வருஷம் டெல்லியில் ஆண்டார்கள். பிறகு டில்லி ஆஜ்மீர் தேசத்துச் சிற்றரசனான விசால்தேவனால் டில்லி ஜயிக்கப்பட்டது. இவருடைய பேரன் பிரிதிவிராஜ் அல்லது ராய்பிதோரா வட இந்தியாவில் இப்போதும் ஜனங்கள் கொண்டாடும் பேர்பெற்ற அரசன். இவர் டில்லிக்கும் ஆஜ்மீருக்கும் அரசனாயிருந்து இவர் டெல்லியில் கட்டின பட்டணத்தின் மதில்கள் இடிந்து கிடப்பதை இப்போதும் பார்க்கலாம். இவர் கனோஜ் அரசன் மகளை 1175-ல் பலாத்காரமாகக் கொண்டுவந்து விவாகம் செய்துகொண்டார். ஏழுவருஷத்துக்குப் பிற்பாடு கனோஜ் அரசனாகிய சண்டெல்ல ராஜாவைத் தோற்கடித்தார். ஆனால் இவருடைய கீர்த்தி அப்போது இந்தியாவின்மீது படையெடுத்துவந்த மகமதியர்களை எதிர்த்ததால் உண்டாயிருக்கிறது. இவர் காலத்தில் பஞ்சாப்தேசத்தை மகமதியர் கட்டியாண்டுவந்தார்கள். அவர்களுக்கு அரசனாயிருந்த மகமத்கோரி ஒரு பெரிய சைனியத்தை விதண்டா (Bitunda) என்ற இடத்தில் ஸ்தாபித்திருக்க, பிரிதிவிராஜ் சுற்றுப்பக்கத்து ஹிந்து ராஜாக்களை ஒன்றுசேர்த்து அவர்களுடன் சென்று மகமத்கோரியையும் அவன் துருப்புகளையும் முறியடித்தான். ஆனால் மகமத்கோரி அதுமுதல் டில்லியில் கண்வைத்து அதை ஜயிக்க வேண்டுமென்று எண்ணத்தால் வருந்திக்கொண்டிருந்தார்.

இரண்டு வருஷத்துக்குப் பிறகு மறுபடியும் ஒருபெரிய சைனியத்தைத் திரட்டிக்கொண்டு டில்லிமீது சென்று பிரிதிவிராஜாவைச் சண்டைக்கிழுக்க, அவரும் முன்போல பெரிய சைனியத்தைச் சேர்த்துக்கொண்டு வெகு மூர்க்கமாய்ச் சண்டை செய்தாலும், பிரதிவிராஜ் சண்டையில் அகப்பட்டு மகமத்கோரியினால் தலை துணிக்கப்பட்டார். மகமத்கோரி கனோஜ் ராஜ்யத்தையும் ஜயித்துப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் சிலரைக் கொலைசெய்து சிலரை அடிமைகளாகக் கொண்டுபோனார். மகமத்கோரியின் அடிமையாகிய குத்புத்தின் டில்லியைப்பற்றிக் கொண்டு அதில் மகமதிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

இவ்வாறு 1206-ம் வருஷத்தில் ஸ்தாபிக்க, அதுமுதல் 19-ம் நூற்றாண்டில் மொகலாயச் சக்கரவர்த்தியின் கடைசி வமிசத்தான் அப்பட்டணத்தின் ஆட்சியை இழந்தகாலம் வரையில் டில்லிப்பட்டணம் மகம்மதியரால் ஆளப்பட்டு வந்தது. குத்புதின் வமிசத்தினரும் அவர்களுக்குப் பிறகு வேறு பல மகமதிய வமிசத்தினரும் டில்லியில் ஆண்டு வர, மொகலாய வமிசத்தைச்சேர்ந்த பேபர் 1526-ம் வருஷத்தில் லோடி வமிசத்தினரிடமிருந்து டில்லியைக் கைப்பற்றி மொகலாய ராஜ வமிசத்தை ஸ்தாபித்தார். குத்புத்தின் முதல் இப்ராஹீம் லோடி வரையில் மகமதிய ஆட்சி டெல்லியில் ஸ்தாபிதம் பெற்றிருந்த 320 வருஷகாலத்தில் டில்லிப்பட்டணம் நானாவிதக் காட்சிகளைக் கண்டது. சில அரசர்கள் மதாவேசத்தால் மூர்க்கங்கொண்டு ஜனங்களை இம்சித்தார்கள். சில அரசர்கள் மூடர்களாய்த் தேசத்தின் ஆட்சியில் குழப்பம் உண்டாக்கினார்கள். வேறு சிலர் ஜனங்களிடத்தில் அபிமானம் வைத்து அவர்களுடைய க்ஷேமத்துக்காகப் பாடுபட்டு வந்தனர். இவர்களில் ரிஸியா பீகம் என்ற ஒரு அரசிபேரைச் சொல்லவேண்டும். இவள் ஜாதியில் ஸ்திரீயாய்ப் பிறந்ததைத் தவிர, ராஜஸ்தானத்துக்குரிய பல ஆண்மைக் குணங்களைப் பெற்றிருந்தனள். இவள் படுதாவின்பின் மறைந்திருந்தவளல்ல. ஆண்போல் உடையுடுத்து யானைமேல்சவாரிபோய்த்தம்மைப்பார்க்கவந்தவர்களுடன் பகிரங்கமாய்ப் பேசினவள். ஒரு அபிஸீனியா தேசத்து அடிமையிடத்து இவள் அதிக பிரியம் வைத்திருந்தபடியால் இவள் பேரில் சிலர் கலகஞ்செய்து சிறைப்படுத்த, இவள் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு டில்லியின்மீது இரண்டுமுறை சண்டைசெய்தாள். கடைசியில் சண்டையில் பட்டு சத்துருக்களால் கொல்லப்பட்டாள்.

டில்லிபட்டணத்துச் சரித்திரம்.

[சுதேசமித்திரன்: 1911ளு நவம்பர்மீ 27உ.]

தாமர்லேன் சந்ததியானுகிய பேபர் டில்லிமீது படை யெடுத்து லோடி வமிசத்தரசனைத் தோற்கடித்து 1526-ம் வருஷத்தில் சிம்மாசனம் ஏறினர். அவர் 5 வருஷம் ஆண்ட பிறகு, மாண்டுபோக, அவர் மகன் ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தார். இவர் இந்திரப்பிரஸ்தம் இருந்த ஸ்தலமாகிய புராணகில்லா அல்லது பழைய கோட்டையைப் புதுப்பித்தார். இவரை ஷெர்ஷா என்ற அப்கானியன் 1540-ம் வருஷத்தில் ஜயித்து காபூலுக்குத் துரத்திவிட்டான். ஷெர்ஷா டில்லிபட்டணத்தைச் சுற்றி மதில்கள் எழுப்பி அரண் செய்தார். அவர் பிள்ளை ஸலிம்கர் என்ற கோட்டையைக் கட்ட, அது இன்னும் அந்தப் பேருடன் விளங்குகின்றது. டில்லியில் புகும் வழியில் இவர் கட்டின லால் தர்வாஜா அல்லது சிகப்பு வாசற்படி ரோட்டுக்குப் பக்கத்தில் ஜயிலுக்கு எதிராக இன்னுமிருக்கின்றது. ஹுமாயூன் திரும்பி டில்லியைப்பிடித்துக்கொண்டு சிலதினங்களுக்கெல்லாம் இறந்துபோனர். அவருக்குப் பிறகு மகா கீர்த்தியுள்ளவராயும் மொகலாய சக்கரவர்த்திகள் எல்லாரையும்விட நல்லவராயும் குடிகளிடத்தில் அபிமானத்திலும் ராஜதந்திரத்திலும் உலகத்தில் உயர்வில்லாதவருமான அக்பர் சக்கரவர்த்தி 1556-ம் வருஷத்தில் பட்டத்துக்கு வந்தார். ஆனல் இவர் ஆண்ட 50 வருஷகாலமும் ஆக்ராபட்டணத்தில் வசித்து அங்கேயே இறந்துபோனர். இவர்காலத்தில் அரண்மனை வித்துவானுயிருந்த அபுல் பேஸல் டில்லியைப் பற்றி எழுதியிருப்பதில் டில்லி பழையகாலத்துப் பேர்போன பட்டணங்களில் ஒன்றென்று சொல்லுகிறர். யுதிஷ்டிரன் முதல் ஷெர்ஷா வரையில் அந்தந்த ராஜாக்கள் கட்டின பட்டணங்களைச் சொல்லி, இவைகளெல்லாம் மனுஷருடைய வாழ்க்கை அற்பமென்று காட்டினபோதிலும் ஷெர்க்கான் கட்டின பட்டணம் இப்போது அழிந்து போயிற்றென்றும், ஆனலும் மகமதிய அரசர்களும் புண்ணியவான்களும் புதைக்கப்பட்டிருக்கும் சமாதிகளைச் சுற்றி ஜனங்கள் கூட்டமாய் வசிக்கிறர்களென்றும் சொல்லுகிறர். அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த ஜிஹாங்கீரும் ஆக்ராவில் வசித்தார். அவர் காலத்தில் ஓர் ஆங்கிலேயன் ஆக்ராவுக்கு வந்து அங்கிருந்து நாகூருக்குப் போகும் வழியில் டில்லியில் தங்கினன். டில்லியிலும் டில்லி

யைச் சுற்றியும் 20 பட்டாணி அரசர்களின் சமாதிகள் நல்ல நிலைமையில் சேர்த்தியா யிருக்கின்றனவென்றும், இந்தியச் சக்கரவர்த்திகள் அனைவரும் டில்லியில் முடி சூட்டிக்கொண்டாலொழிய அவர்கள் சிம்மாசனத்தை அக்கிரமமாய்ப் பற்றிக்கொண்டவர்களெனப்படுவார்களென்றும் சொல்லுகிறார். ஜிஹாங்கிர் மகன் ஷாஜிஹான் ஆக்ராவில் வசிக்காமல் பழைய அரசர்களைப்போல் டில்லியில் வசித்தார். இப்போதிருக்கும் டில்லிபட்டணத்தை இவரே நிர்மாணித்து அதற்கு ஷாஜிஹானாபாத் என்று பேர்வைத்தார். இவர் தன் அரண்மனையைக் கட்டினதன்றி ஜம்மாமஸ்ஜித் என்ற பேர்போன மசூதியையும் கட்டினார். கட்டிடங்களுக்குச் சாமான்கள் அழிந்துபோன பிரோஸபாத்திலிருந்தும் ஷேர்கான் கட்டின புதுப் பட்டணத்தினின்றும் கொண்டுவரப்பட்டன.

ஷாஜிஹான் காலமுதல் டில்லிபட்டணம் மொகலாயச் சக்கரவர்த்திகளின் தலைநகரா யிருந்தது. ஷாஜிஹான் கடைசி மகன். அவுரங்கஸிப் 1658-ம் வருஷத்தில் பட்டத்துக்கு வந்து 1707-ம் வருஷம் வரையில் ஆட்சிபுரிந்து மாண்டார். இவர் காலத்தில் டில்லி மகோன்னத நிலைமையில் இருந்தது. இங்கேதான் இவரை பர்னியர், டாவர்னியர் என்ற இரண்டு ஆங்கிலேயர்களும் பார்த்தார்கள். மொகலாய அரசை அழிப்பதற்கு முக்கியகாரணமாயிருந்த மகாராஷ்டிர அரசன் ஸிவாஜியும் டில்லிக்குக் கொண்டுவரப்பட்டார். இவர் காலத்தில் ஷாஜிஹானாபாத்தில் சக்கரவர்த்தியும், அவரைச் சேர்ந்தவர்களும் வசிக்க, பழைய டில்லிபட்டணத்தில் சாமானிய ஜனங்களும் உயர்குலத்தோரும் வசித்தார்கள். இவர் டில்லியை விட்டு ஆமத்நகரிலிருந்து 1683-ம் வருஷத்தில் ஒரு பெரிய படையுடன் தக்ஷணத்துக்குப்போய் அங்கே தனக்கு அடங்காதிருந்த சிலமகம்மதிய அரசர்களையடக்கினலும் மகாராஷ்டிரத்தலைவனை ஸிவாஜியை அடக்க முடியாமல் இவர் வார்த்திகபருவம் ஏமாற்றத்திலும் மனவருத்தத்திலும் செல்ல மறுபடியும் ஆமத்நகர் வந்து இறந்துபோனார். அவுரங்கஸிபுக்குப் பிறகு பகதூர்ஷா பட்டத்துக்கு வந்து 1712-ம் வருஷம் இறந்துபோனார். அவருக்குப் பிறகு அடுத்த ஏழு வருஷத்தில் நாலு சக்கரவர்த்திகள் சிம்மாசனத்தைவிட்டு நீக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். கடைசியில் டில்லிக்குச் சக்கரவர்த்தியென்று உண்மையில் அதிகாரம் செலுத்தின மகமத்ஷா 30வருஷம் ஆண்டு 1748-ம் வருஷத்தில் இறந்து போனார். இவர் காலத்தில் மொகலாய

ஏகாதிபத்தியம் பல பாகங்களாகச் சிதைவுற்றுப் பல கவர்னர்களும் விஜயர்களும் சுவாதீன மன்னர்களானார்கள். மகாராஷ்டிரர்கள் சில பாகங்களைப் பிடுங்கிக்கொண்டார்கள். பெர்ஷியா தேசத்தரசன் நாதர்ஷா 1739-ம் வருஷத்தில் டில்லிமீது படையெடுத்து, அவனுக்கு முன்னால் தாத்தர் அரசன் தாமர்லேன் செய்ததுபோல, பட்டணத்தைக் கொள்ளையிட்டுக் குடிகளையும் கொன்றார். இவர் 58 நாள் ஜனங்களைப் பணக்காரரென்றும் ஏழைகளென்றும் பாராமல் கொள்ளையடித்து 90 லக்ஷம் மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்டுபோனார். கடைசி சக்கரவர்த்தியாக மகமத்ஷா வீற்றிருந்த மயிலாசனத்தை இந்தக் கொடியோன் அப்போது கொண்டுபோனார். அவர்மகன் ஆமெத்ஷா பட்டத்துக்கு வர, அவனை 1754-ம் வருஷத்தில் சிம்மாசனத்திலிருந்து இறக்கி அலாங்கிருக்குப் பட்டம்சூட்டினார்கள். 1756-ல் ஆமெத்ஷா தூரானி என்ற அப்கான் அரசன் டில்லிமீது படையெடுத்து வந்து குடிகளைக் கொன்றான். மூன்று வருஷத்துக்கெல்லாம் சக்கரவர்த்தியே கொல்லப்பட்டுப் போனார். மகாராஷ்டிரர்கள் டில்லிப்பட்டணத்தை கைப்பற்றிக் கொண்டார்கள். ஷாஅலம் சக்கரவர்த்தியை அவர்கள் தங்கள் சம்ரட்சணையில் வைத்துக் கொண்டும் அப்கான் அரசன் ஆமெத்ஷா தூரானி மறுபடியும் படையெடுத்துப் பானிப்பட் என்ற ஊரில் 1761-ல் மகாராஷ்டிரரைத் தோற்கடித்தார். 1770-ம் வருஷ சந்தர்ப்பத்தில் பவானி மஹால் நவாப்பும், குலாம்காதர் என்னும் பாபியும் சில கொள்ளைக்காரர்களுடன் டில்லி அரண்மனையில் சென்று பெண்டுகளைக் கெடுத்துக் கூரூரப்படுத்த சிந்தியா மகாராஜா இவர்களைப் பிடித்துக் கொன்றுவிட்டார். 1771-ம் வருஷத்தில் மகாராஷ்டிரர் டில்லியை வசப்படுத்திக்கொண்டு ஷாஅலமைச் சிம்மாசனத்தில் ஏற்றினார்கள். இந்த ஷாஅலமே பெங்கால் பேகார் ஓரிஸ்ஸா என்ற மூன்று மாகாணங்களில் வரி வசூல் செய்து பெற்றுக்கொள்ள ஆங்கிலேயருக்கு அனுமதி கொடுத்தார்.

டில்லி மயிலாசனம்.

ஷாஜஹான் என்னும் மொகலாய அரசர் கி. பி. 1627-ம் வருஷ முதல் 1658-ம் வருஷம் வரையில் டெல்லி சக்கரவர்த்தியாக விருந்தார். அவருடைய ஆட்சியில் ராஜ்யம் சமாதானத்தையும் விசேஷ செல்வத்தையும் பெற்றிருந்தது. அக்காலத்தில்

தான் அநேககட்டடங்கள் டில்லியில் கட்டப்பட்டன. ஆக்ராவில் இன்றளவும் அதிசயம் விளைவிக்கும் மனோஹரமான பெரிய கட்டடங்களைக் கட்டினதற்கும் அவரே காரணம். டெல்லியில் அவர் கட்டியிருக்கிற அரண்மனையைப்போல் அருமை பெருமை வாய்ந்தது உலகத்தில் வேறெங்கும் இல்லை. அந்த அரண்மனையில் சலவைக் கல்லாலேயே ஒரு மண்டபம் கட்டியிருக்கிறார். அதில் செய்திருக்கிற சித்திர அலங்காரம் மிகவும் அற்புதமானது. இந்த மண்டபத்தில்தான் ரத்னங்கள் இழைத்து உயிருள்ளவைபோல் செய்த இரண்டு மயில்கள் தாங்கியிருக்கும் ஸிம்ஹாஸனம் ஒன்று அமைத்திருந்தார். இந்த மண்டபமே அவர் தம்மைக் காண வருகின்ற அரசர் முதலானவர்களைக் கண்டு பேசுகின்ற இடம். அதன் கூரையில் பாரஸீக பாஷையில் "பூமியின்மீது ஒரு ஸ்வர்க்கம் உண்டென்றால் அது இதுவே, அது இதுவே, அது இதுவே" என்று எழுதுவித்திருந்தார். ஜம்மா மசூதி (Jumma Musjid) என்ற பள்ளிவாசல் அவர் கட்டுவித்ததே. உலக சரித்திரத்தில் ஷாஜஹானுக்கு உள்ள பெருமை யெல்லாம் தாஜ்மஹாலை (Taj Mahal) கட்டினதால் உண்டான பெருமையே.

மும்தாஜ்மஹால் என்னும் அவருடைய பிரிய மனைவியின் பெயரே தாஜ்மஹால் என்று சுருக்கமாக வழங்கலாயிற்று. அவள் எட்டாவது பிள்ளையைப் பெறும்போது இறந்துபோனள். இறப்பதற்கு முன்னே கணவனைப்பார்த்து வேறு விவாகம் செய்துகொள்ளவேண்டாம் என்றும், தன்னுடைய பெயர் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும்படி தன்னை அடக்கம் செய்கிற இடத்தில் ஒரு கோரி கட்டிவைக்கவேண்டும் என்றும் அவள் கேட்டுக்கொண்டாள். அந்தப் பிரகாரமே அவரும் அவ்விருப்பங்கள் இரண்டையும் நிறைவேற்றினர். அப்படியே அவளை அடக்கம் செய்தவிடத்தில் ஓர் கோரி கட்டினர். உலகத்தில் வேறெந்த ராணிக்கும் இவ்விதமான கோரி கட்டினதே இல்லை. அதை நேரில் நிலாவெளிச்சத்திற் பார்த்தே அதன் அருமை பெருமையை மதித்தறிய வேண்டும். பிரசித்தமான இக்கோரி யமுநாநதி தீரத்தில் சிலகாலம் ராஜதானியாக இருந்த ஆக்ரா நகரத்தில் கட்டியிருக்கிறது. சுற்றிலும் செழிப்பான நந்தவனங்களும் சோலைகளும் வைத்து, பதினெட்டடி உயரம் சலவைக்கல்லால் தளம் போட்டு அதன்மேல் அந்தக்கட்டடம் சலவைக்கல்லால் கட்டியிருக்கிறது. அக்கட்டடத்திலிருக்கும் ஸ்தூபிகளைப்போன்ற ஸ்தூபிகள் இந்தியாவில் வேறே இல்லை.

அதில் ஒரு ஸமாதி கட்டியிருக்கிறது அந்த சமாதியில்தான் இந்த மகமதிய ராணியையும் அவள் புருஷனையும் புதைத்து வைத்திருக்கிறார்கள். தாஜ்மஹால் கட்டி இருநூற்றறுபது வருஷங்கள் ஆகியும் அக்கட்டடம் இன்றைக்குத்தான் புதிதாகக் கட்டி முடிந்ததைப்போ லிருக்கிறது. இதை வெளிதேயத்து யாத்திரைக்காரர் இன்றைக்கும் பார்த்து மலைக்கிறார்கள் என்றால் இதன் பெருமையை என்னென்று சொல்வது. அதைக் கட்ட முப்பது வருஷகாலம் சென்றது. முப்பது லக்ஷம் ரூபாய் பிடித்தது.

டில்லியிலுள்ள ஜும்மாமசூதியும் ஆக்கிராவிலுள்ள மோதி மசூதி என்னும் முத்துப்பள்ளி வாசலும் இவர் கட்டினவைகளே.

உலகத்திலுள்ள ஏழு அற்புதங்களில் இந்தியாவில் உண்டானது மூன்று. அவற்றில் குதுப்மினார்(குதிபுத்தின் ஸ்தூபி). இது குத்புதின் என்பவரால் கட்டப்பட்டது. அதன் உயரம் 238 அடி. அது சந்தனக்கல்லாலும் சலவைக்கல்லாலும் கட்டியிருக்கிறது. அந்த ஸ்தூபி ஐந்து நிலைகளாக வகுத்திருக்கிறது. 375 படிகள் உள்ள வளைவான படிக்கட்டு கட்டியிருக்கிறது. மற்ற இரண்டும் ஷாஜஹான் அவர்களால் கட்டுவித்த தாஜ் மஹால் மயிலாசனம் என்பவைகளே.

இதுவரையில் கட்டடசம்பந்தமானதைக் குறித்துப் பிரஸ்தாபித்தோம். இனி ஷாஜஹான் அவர்களால் நிர்மாணிக்கப் பட்ட மயிலாசனத்தைப்பற்றிக் (Peacock throne) கூறுவோம். இதுவும் உலகத்திலுள்ள அற்புதங்களிலொன்று. ஏழு ஆச்சரியங்களில் மூன்று நம்மிந்தியாவி லுண்டானதால் அதைப் பற்றி நாம் கர்வப்படாமலிருக்கமுடியாது. அதில் மகம்மதுஷா என்னும் சக்ரவர்த்திதான் கடைசியாக மயிலாசனம் ஏறினவர் என்று சரித்திரக்காரர்கள் வரைந்திருக்கிறார்கள். கி. பி. 1739-ம் வருஷத்தில் நாதர்ஷா என்னும் பாரஸீக அரசன் படை எடுத்தபோது டெல்லியில் கொள்ளையடித்தான். அப்போது மயிலாசனத்தை அவன் எடுத்துக்கொண்டு போனான் என்று மெஸ்ஸர்ஸ் சிங்க்லர் (Sinclair) மார்ஸ்டன் முதலிய சரித்திரக்காரர்கள் எழுதியிருக்கிறார்கள். பிறகு அது இருக்கும் இடத்தைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள். ஆனால் நாம்கேள் விப்பட்டபட்டில் டில்லியிலிருந்து அதை நாதர்ஷா எடுத்துக் கொண்டு போனபோது வழியில் சிக்கியர் பிடுங்கிக்கொண்ட

தாகவும், பஞ்ஜாபை ஆங்கிலேயர் 1849-ம் வருஷத்தில் சேர்த்துக் கொண்டபோது அதை இங்கிலாந்துக்கு எடுத்துக்கொண்டுபோய் பிரிட்டிஷ் மியூஸிய (காட்சிசாலை) த்தில் வைத்திருப்பதாகவும் கேள்விப்படுகிறோம்.

1788-ம் வருஷத்தில் ஒரு மகாராஷ்டிரப் படை சக்கரவர்த்தியின் அரண்மனையைக் கட்டிக்கொண்டு பிறகு 15 வருஷ காலம் வட இந்தியாவில் அவர்கள் மேன்மை பெற்றிருந்தார்கள்.

1803-ம் வருஷத்தில் லார்ட் லேக் என்ற ஆங்கிலேய ஜெனரல் டில்லிப் பட்டணத்தில் மகாராஷ்டிரரை சண்டையில் தோற்கடித்துப் பட்டணத்தில் பிரவேசித்து சக்கரவர்த்தி ஷா அலம் என்பவனைச் சிம்மாசனமேற்றினர். அது முதல் ஆங்கிலேயர் மகமதியச் சக்கரவர்த்தியின் பேரால் டில்லிப்பட்டணத்தை ஆண்டுவந்தார்கள். ஷா அலம் சக்கரவர்த்தி 1806-ம் வருஷத்திலும், இரண்டாவது அக்பர் 1837-ம் வருஷத்திலும் அதாவது விக்டோரியா மகாராணி பட்டம்பெற்ற வருஷத்தில் இறந்துபோனார்கள். பிறகு பகதூர்ஷா என்பவர் ஆண்ட காலத்தில் 1857-ம் வருஷத்தில் சிப்பாய்க் கலகம் நேரிட்டது. இந்தக் கலகத்தின் பலனாக சக்கரவர்த்தி பகதூர் ஷா சிம்மாசனத்தை விட்டு நீக்கப்பட்டு ரங்கூனில் சிறையாக அடைத்து வைக்கப்பட்டு அங்கேயே 1862 - ம் வருஷத்தில் இறந்துபோனார். அக்கலகத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் டில்லிப்பட்டணம் யாதொரு கலகமும் இல்லாமல் அமைதியாய் இருந்து வருகிறது. காலஞ்சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தி இளவரசராயிருந்தபோது 1876-ம் வருஷத்தில் இந்தப் பட்டணத்துக்கு வந்தார். 1877-ம் வருஷம் ஜனவரி மாசம் முதல் தேதி காலஞ்சென்ற விக்டோரியா மகாராணி இந்திய சக்கரவர்த்தினியாகப் பட்டம் பெற்றதை அப்போது கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் லிட்டன் டில்லியில் ஒரு தர்பார் கூட்டி விளம்பரப்படுத்தினர். பிறகு 1903-ம் வருஷம் ஜனவரி மாசத்தில் லார்ட் கர்ஸன் இந்தியா கவர்னர் ஜெனரலாயிருந்தபோது அங்கே ஒரு தர்பார் மறுபடியும் கூட்டப்பட்டு எட்வர்ட் சக்கரவர்த்தி பட்டம்பெற்றது விளம்பரப்படுத்தப்பட்டது. அநந்தரம் 1911ஆம் டிசம்பர்மீ 12உ லார்டு ஹார்டிஞ்சு கவர்னர்ஜெனரல் காலத்தில் மாட்சிமை தங்கிய 5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தி யவர்கள் தமது பத்தினி பார்சமேதராகச் சீமையைவிட்டு இந்த டில்லிபட்டணத்

தூக்கு நேராகவந்து மகுடாபிஷேக மஹோற்சவத்தை நேரில் பார்த்து சுதேசமித்திரனுக்கு எழுதிய நிரூபத்தின் சங்கிரகத்தை இதனடியிற் காணலாம்.

டில்லி தர்பார்
காம்புகளின் சிறப்பும் அலங்காரமும்.

மகுடாபிஷேக தர்பார் காம்புகள் சம்பந்தமான சகல வேலைகளும் சாவகாசமாக நடைபெற்றும் வெகு சிறப்பாயும் கண்ணைக் கவரும்படியாயும் இருக்கின்றன. புதிதாய் ஏற்படுத்திய பசுமையான தோட்டத்தில் ஒழுங்காயும் வரிசையாயும் அமைக்கப்பட்ட வெண்ணிறமான கூடாரங்களின் அழகும், ராஜத்துவாரம், ராஜகுமாரசாலை, வரிசையாக அமைக்கப்பட்ட கூடாரங்களுக்குச் செல்லும் பின்னல் வலைபோன்ற கம்பீரமான பல தெருக்கள், இவைகளின் விசித்திர தோற்றமும், இராக்காலங்களில் காம்புகளிலும் தெருக்களிலும், ஏற்றிவைக்கும் பிரகாசமான தீபங்களின் அழகும், வர்ணிக்க முடியாததா யிருக்கின்றன. முதலில் பத்திராதிபர்களுக்கும், இம்பிரியல் கேடட் ஆபீஸர்களுக்கும், தந்தி டிபார்ட்மெண்டாருக்கும், சிவில் செக்ரிடேரிகளுக்கும் தனித்தனியாக காம்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கப்புறம் கூடார நகரத்தின் மத்தியில் மகாராணியின் திவ்யாலங்காரமான அறைகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அதனருகில் ராஜ சக்கரவர்த்தி யவர்களின் வரவேற்பு கூடாரம் ஏற்பட்டிருக்கிறது. அதில் 3000 ஜனங்கள் வரையிலும் தங்கும்படியாக அவ்வளவு விசாலமாய் இருக்கின்றது. அக் கூடாரங்களைச் சுற்றிலும் பரவியிருக்கும் காம்பில்தான் சக்கரவர்த்தி யவர்கள் இருந்து வருவார். ராஜப்பிரதிநிதிக்கும் ஆலோசனைச் சபை மெம்பர்களுக்கும் உயர்ந்த பதவியையுடைய ராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் காம்புகள் பக்கத்தில் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவர்கள் தங்கிவரும் காம்புகளுக்கும் ராஜ சக்கரவர்த்தி யவர்கள் தங்கும் காம்புக்கும் வித்தியாச முண்டு. இதற்கு இடது கைப்புறத்தில் பரவியிருக்கும் காம்புகளில் பல மாகாணக் கவர்ன்மெண்டார் இருந்தார்கள். பர்மா, பம்பாய், மதராஸ், அஸ்ஸாம், பங்காளம், முதலிய மாகாணங்களைச் சேர்ந்த கவர்னர்கள் தங்கும் காம்புகளுக்குச் சிற்சில அடையாளங்கள் குறிப்பிடப்பட் டிருக்கின்றன. சேனைத் தலைவர்களுக்குச் சாதாரணமாய் யுத்த வீரர்களுக்கு ஏற்பட்ட கூடாரங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

இவைகளுக்குச் சமீபத்திலேயே, இந்த மைதானத்தைச் சேர்ந்த இந்த பாகத்திலேயே பாரன் ஆபீஸர்களுக்கும், தெற்கு வடக்குப் பாகங்களிலுள்ள சேனைகளுக்கும், கமான்டர்-இன்-சீப்புக்கும் காம்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜலம் நன்றாய்ப் பாயப்பெற்ற பசும் புற்றரைதான் போலோ விளையாட்டு பூமியாக உபயோகப்பட்டுவந்தது. இந்தக் காம்புகளுக்கு நெடுந் தூரத்தில் தேசமன்னர்களின் காம்புகள் ஏற்பட்டிருக்கின்றன. தேவ தச்சனால் இயற்றப்பட்டிருக்கின்றனவோ என்று பார்ப்போர் அதிசயிக்கும்படியாய் இந்தியாவின் சிற்ப வேலைத் திறமை, சித்திர வேலைத்திறமை முதலியவைகளைக் காட்டிக் கொண்டு அந்த அரசர்களின் காம்புகள் விளங்குகின்றன. இந்தக் காம்புகளில் பலவித விருக்ஷங்கள், பசும்புற்றரை, ஜல வசதி, சிங்காரத் தோப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இதற் கப்புறம் 50,000 துருப்புகள் அல்லது சேனைகள் வந்து தங்குவதற்கு அலங்காரமான மைதானம் ஏற்பட்டிருக்கின்றது. ராஜ சக்ரவர்த்தியின் காம்பிலிருந்து தேசமன்னர்கள் இறங்கும் காம்புகளுக்கு மத்தியில் தர்பார் நடக்கும் விசித்திர மண்டபம் ஏற்பட்டிருக்கின்றது. தேச மன்னர்கள் இறங்கும் காம்புகளுக்கும், சேனைகள் இறங்கும் மைதானத்திற்கும் மத்தியில் பலவிசித்திரமான புஷ்பச் செடிகளும், விருக்ஷங்களும், கொடிப் பந்தல்களும், வளைவுப் பந்தல்களும் ஏற்பட்டிருக்கின்றன. லார்டு கர்ஸனால் ஏற்கெனவே கட்டப்பட்ட குதிரைக் குளம்பு போன்ற அலங்கார கட்டிடம் ஒன்றைத் தற்காலம் விஸ்தரித்து அலங்கரித் திருக்கின்றனர். அதில் இப்பொழுது பல்லாயிரம் பேர் தங்கி யிருக்கலாம். தென் கூரையின்மீது தங்கரேக்குகள் அடித்திருப்பதால், வெயில் காயும்பொழுது, பளபளவென ஜொலிக்கும். இதில்தான் இந்துதேசத்து மன்னர்கள் தங்கி தர்பாரின்போது வேடிக்கை பார்த்து வந்தார்கள். இதற்கெதிரில் அமைத்திருக்கும் விசித்திர கட்டிடம் அனேக தூரம் பரவி யிருக்கிறது. இதில் 10,000 எண்கொண்ட வடபாகம் தென்பாகம் சேனைகள் அடங்கலாக 60,000 ஜனங்கள் நின்று தர்பார் சமயத்தில் வேடிக்கை பார்த்தார்கள். ராஜ தம்பதிகள் தர்பாரில் வீற்றிருப்பதையும் ராஜ சக்கரவர்த்தியவர்கள் அச்சமயம் அட்ரெஸ் வாசிப்பதையும் சகலரும் கண்டு களிக்கும் படியாய் அவ்வளவு புத்தியையும் யுக்தியையும் உபயோகித்து அமைத் திருக்கிறார்கள். இந்த மண்டபத்திற்கு வலதுபுறமாய் நதிவரையிலும் எட்டியிருக்கும் மூன்றுமைல் விஸ்தீரணத்திலும், மற்றொரு பக்கமாய் மோகலாய பகுதிவரையிலும் எட்டி

யிருக்கும் ஏழு மைல் விஸ்தீரணத்திலும், ஏகமாய்ச் சமுத்திரம் போல் துருப்புகள் வரிசைக்கிரமமாய் அணிவகுக்கப்பட்டிருக்கின்றன. மூன்று ரயில் பாதைகளும் பல கிளைப் பாதைகளும் சேனை காம்புகளுக்கும் மைதானத்திற்கும், தர்பார் மேடைக்கும் இடையே போடப்பட்டிருக்கின்றன. தர்பாரின்போதும், பட்டணப் பிரவேசத்தின்போதும், சக்கரவர்த்தி தங்குவதற்கென்று ஏற்பட்ட ஸ்டேஷனில் கொஞ்சநேரம் தாமதிக்கும்போதும், பவனி வரும்போதும், ஜம்மா மசீது வழியாகவும் கோட்டையின் வழியாகச் செல்லும்போதும் துருப்புகள் காவலாகநின்றன. கோட்டைக்கு உட்புறத்தில் நடந்தேறும் தோட்டக் கச்சேரி விசேஷமாக இருந்தன. அன்று இரவு கோட்டைக்கு வெளியே வாணவேடிக்கைகள் நடந்தேறின. ராஜ சக்கரவர்த்தியின் காம்பில், ராஜாங்கவிருந்து நடந்தேறின.

ஜலவசதியும் சுகாதாரமும் கவனிக்கப்பட்டுவரும் காம்புகள், தோட்டங்கள், கட்டிடங்கள், சாலைகள், பாதைகள், மின்சார விளக்குகள், தந்தி, தபால், ரெயில்பாதை முதலியவைகளும் ஏற்பட்டுவிட்டன. இவ்வளவு ஏற்பாடும் மிக்க மேதாவிகளாகிய கமிட்டியால் செய்யப்பட்டிருக்கின்றன. மோட்டார் முதலிய வண்டிகளும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு சிறந்த ஏற்பாடுகள் இதுவரையிலும் எப்பொழுதும் செய்யப்பட்டு வரவில்லையென்று இந்தியா கர்வப்படுவதற்கு நியாயமுண்டு. ராஜதம்பதிகளை இங்கு விஜயம் செய்யப்போகிறபடியால் இவ்வளவு சிறந்த சம்பிரமம் எங்கும் காண்பது அரிது.

டில்லி தர்பார் காம்பு.

(6-ந்தேதி முதல் 9-ந்தேதி முடிய விஷயங்கள்.)

காலநிலை.

மாலை 5 மணி முதல் மறுநாட் காலை 9 மணி வரையிலும் குளிர் மிகுதி. பனி அதிகம். பகலில் வெயில் நன்றாகக் காய்கிறது. ஆகாயம் சுத்தமாயிருக்கிறது.

சுகாதாரம்.

சுகாதார விதிகள் எள்ளளவேனும் குறைவின்றி அநுசரிக்கப்பட்டு வருகின்றன. தெருக்களிலும் கூடாரங்களிலும் உள்ள குப்பை முதலியவைகளை அடிக்கடி வெளிப்படுத்துவ

தற்கும், மல ஜலங்களை உடனுக்குடனே அப்புறப்படுத்துவதற்கும், தெருக்களில் ஜலத்தைத் தெளிப்பதற்கும் வேண்டிய கூலியாட்களை நியமித்துக் கண்டிப்பாய் வேலை வாங்கி வருகின்றனர். ராஜ தம்பதிகள் விஜயஞ்செய்யும் பட்டணத்தில் சுகாதாரத்தைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? காயலா முதலியவைகள் ஒன்றும் கிடையா. சகலரும் முகமலர்ச்சியுடன் சுகமாயும் சுறுசுறுப்பாயும் இருக்கின்றனர்.

கூடாரங்கள்.

சர்க்கார் விருந்தினர்களாக வந்திருக்கும் அனைவருக்கும், தனித்தனியே கூடாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கூடாரத்தின் முன்புறத்தில் கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கும்படி பச்சைப்பயிர்களும் புஷ்பச்செடிகளும் வைத்து வளர்க்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கூடாரத்திலும் படுக்கை அறை, சாமான்கள் வைக்கும் அறை, ஸ்நான அறை, மலஜலோபாதைக்கு ஒதுங்க இடம், இரண்டு மேஜைகள், முகக்கண்ணாடி, பீரோ, பிங்கான்கள், தொட்டிகள், படுக்கக்கட்டில், உட்கார நாற்காலிகள், குளிர்காய நெருப்புக்கணப்புகள், வேலையாட்கள், எழுதுவதற்கு வேண்டிய சாமான்கள், ஸ்நானபானங்களுக்குக் குழாய் ஜலம், (உஷ்ண ஜலம் பச்சை ஜலம்), முகம் கழுவ சோப்பு, துவாலைகள், மின்சார விளக்குகள், டெலிபோன்கள், தபாற்பெட்டிகள் முதலிய சகல சௌகரியங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

சாப்பாடு சௌகரியம்.

விருந்தாளி ஒவ்வொருவருக்கும், கூடவந்த இருவருக்கும், காப்பிக்கும், பருகுவதற்கும் வேண்டிய அளவு பால், சர்க்கரை, அரிசி, பருப்பு, புளி, இலை, வெற்றிலைப்பாக்கு, சோடா, லெமனேட்பாட்டல்கள், விதம் விதமான பழவர்க்கங்கள், காய்கறிகள், நெய், பால், தயிர் முதலியவைகளும் சப்ளைசெய்து வருவதும் தவிர, வெளியேபோய் வருவதற்கு மோட்டார் வண்டிகள், குதிரைவண்டிகள், வாகனங்கள் முதலிய சகல சௌகரியங்களும் சரிவர நடந்தேறி வரும்படியாய்க் கவனிக்கப்பட்டு வருகின்றன.

டில்லி காம்பு கூடாரங்களில் ஜனங்கள்.

நாளைபதினம் இங்கு விஜயஞ் செய்யப்போகும் ராஜதம்பதிகளின் வரவை எதிர்நோக்கிக் கூடாரங்கள் அனைத்திலும்

காலியில்லாமல் ஜனங்கள் வந்து கூடிவிட்டனர். காம்புகளின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலுமுள்ள பாதைகள் முழுவதிலும் பலவித வண்டிகள் வந்து ஏராளமாய்க் கூடிவிட்டன. தர்பார் காலத்தில் நடந்தேறவேண்டிய சகல சுபகாரியங்களை இன்று காலையில் ஒருமுறை அதேமாதிரி நடத்திக்காட்டவேண்டியே துருப்புகள் அனைத்தும் வரவழைக்கப்பட்டன. 12-ந்தேதி நடக்கப்போகிற மாதிரி சரிவர நடந்துவருகிறதா என்று ஒருவாறு தாம் கண்டு திருப்தி அடைவதற்காக வைஸிராய் தாமே நின்று பார்வையிட்டனர்.

அவ்வாறே சகல காரியமும் திருப்திகரம் என்று வைஸிராய் கண்டுகளித்தனர். இந்த சம்பிரமத்தைப் பார்க்க அனேக சுதேச மன்னர்கள் விஜயஞ்செய்தனர். 12-ந்தேதியில் தேச மன்னர்கள் தாங்கள் ராஜ சக்ரவர்த்திக்குச் செய்துகாட்டவேண்டிய மரியாதைகளை வைஸிராய் முன்னிலையில் செய்துகாட்டினர். இன்று போபால் பீகம் தம்முடைய வழக்க முகவாடையுடன் விஜயஞ்செய்து தாமும் மரியாதைசெய்து காட்டினது மிக நேர்த்தியாக இருந்தது. தேசமன்னர்கள், லெப்டினண்டு கவர்னர்கள், வைஸிராய், கவர்னர்களின் நிர்வாகச் சபையைச் சேர்ந்த மெம்பர்கள் இவர்கள் அனைவரும் ஒருமுறைக்கு இருமுறையாய் மரியாதைசெய்து காட்டவேண்டியதை முன்னரே செய்துபார்த்து முடிப்பதற்கு நெடுநேரஞ் சென்றது. என்றுலும், வெகு திருப்திகரமாக இருந்தன.

தேர் மாஜெஸ்டீஸ் டில்லி காம்பிற்கு விஜயம்.

டிசம்பர் மாதம் 7-ந்தேதி.

ஹிந்துக்கள், மகமதியர்களின் பூர்வீக தலைமை நகரமாகிய டில்லி, ஜென்மாந்திரத்தில்செய்த பூஜாபலத்தினல் இன்று ராஜதம்பதிகளைத் தன்பால் விஜயஞ்செய்யும் பாக்கியம்பெற்றது. ராஜதம்பதிகளை வரவேற்பதற்குச் செய்யவேண்டிய சகல காரியங்களும், துருப்புகளை வரிசையாக ஒழுங்குசெய்து நிறுத்துவதற்குவேண்டிய ஏற்பாடுகள் இராமுழுவதும் செய்யப்பட்டன. சூரியோதயமானவுடனே துருப்புகள் நிறுத்தப்பட்ட அழகும், ஜனங்கள் இருபுறமும் நின்ற அழகும், மோட்டார் வண்டிகளும் மற்ற வாகனங்களும் வரிசையாகப் பல மைல்கள் வரையில் நின்ற அழகும், முன் அணியில் ராஜதம்பதிகளை வரவேற்க நிற்கும் பிரமுகர்களின் அழகும் வர்ணிக்க முடியாது.

சாமள நிறமுள்ள ஜலத்தையுடைய யமுனாநதியை நோக்கி நிற்கும் ஸெலிம்கார் பாஸ்டியனில் (Selimgarh bastion) நின்ற துருப்புகள் இந்தியாவில் 70 வருஷகாலமாகச் சண்டை போட்டு பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீர்த்தியைச் சம்பாதித்துக் கொடுத்தன. அவ்விதத் துருப்பில் சீக்கியரும், கூக்காகளும், பட்டாணியர்களும், ஹிந்துக்களும், முஸல்மான்களும், கிறிஸ்துவர்களும் உட்பட 800 யுத்தவீரர்கள் தங்கள் தங்கள் உடைகளுடன் தயாராக அணிவகுத்து நின்றனர். மேஜர் ஜெனரல் ஹண்டரால் நடத்தப்பட்ட சிறு எண்கொண்ட ஐரோப்பியத் துருப்புகளும் அணிவகுத்து நின்றன.

ரயில் பிளாட்பாரத்தில் கவர்னர்-ஜெனரல், லேடி ஹார்டிஞ்ஜ் இவர்களைத் தலைமையாகக்கொண்டு சிவில் மிலிட்டெரி உத்தியோகஸ்தர்கள் பலர், ராஜதம்பதிகளின் வரவை எதிர்பார்த்து நின்றனர். ராஜதம்பதிகளின் வண்டிக்கு முன்னால், 2-வது பட்டாலியன் ராயல் துருப்புகள் அவர்களுக்கு மரியாதைசெய்யத் தயாராக நின்றிருந்தன.

பெரிய இன்ஜின் மாட்டிய ராயல் ஸ்பெஷல் ஜாக்கிரதையாக நடத்தப்பட்டு கிங்ஸ் ஸ்டேஷனில் வந்துசேர்ந்தது.

ராஜ சக்கரவர்த்தி பீல்ட்-மார்ஷல் உடையுடனும், இந்திய ஸ்டார் அடையாளமிட்ட உடையுடனும் முதலில் வண்டியை விட்டுக் கீழ் இறங்கினர். அதன்பின், மிருதுவான வெள்ளைச் சாடின் உடுப்புகளில் அனேக அடையாளங்கள் அமைக்கப்பெற்ற விசித்திர அலங்கார உடுப்புகளுடன் ராஜசக்ரவர்த்தினி வண்டியை விட்டுக் கீழே இறங்கினர்.

லார்டு ஹார்டிஞ்ஜின் குமாரத்தியான ஹானரபில் டயமண்டு, ராஜ சக்ரவர்த்தினிக்கு புஷ்பச்செண்டைக் கொடுத்தனர்.

தேர் எக்ஸலென்ஸிகளான லார்டு ஹார்டிஞ்ஜும் அவர் பத்னியாரும் முன்சென்று ராஜதம்பதிகளை வரவேற்றார்கள். பிறகு சகல வாத்தியங்களும் முழங்கின. மரியாதைக் குண்டுகள் போடப்பட்டன. நாஷனல் ஆந்தம் வாசிக்கப்பட்டது. பிறகு கவர்னர் ஜெனரல் அவர்கள் ராஜதம்பதிகளுக்கு, பிளாட்பாரத்தில் நின்றிருந்த கவர்னர்கள், லெப்டினண்டு கவர்னர்கள், பெங்காளம் சிப் ஜஸ்டிஸ், கவர்னர், கவர்னர் ஜெனரல்களின் நிர்வாகச் சபைகளைச்சேர்ந்த மெம்பர்கள் முதலியவர்

களை அறிமுகம் செய்வித்தனர். பிறகு வலதுபுறம், இடதுபுறம் இடைப்புறம் இன்னின்னார்கள் ராஜதம்பதிகளைப் பின்தொடர்ந்து வரவேண்டும் என்று ஏற்பட்ட பிரகாரமே, அவரவர்கள் பின்தொடர, ராஜதம்பதிகள் ஸெஸிம்கார் பாஸ்டியன் வழியாகக் கோட்டைக்குள் புகுந்து, தேசமன்னர்கள் ராஜதம்பதிகளின் வரவை எதிர்நோக்கி, தங்கியிருந்த உபசார மண்டபத்திற்குச் சென்றனர். கோட்டைக்குள் வரவே கொடிகள் உயர்த்தப்பட்டன. உபசார மண்டபத்தண்டை வரவே, இந்திய மன்னர்களைச்சேர்ந்த காலாட்படைகளால் வந்தனம் செய்யப்பட்டு உபசாரமண்டபத்தை யடைந்தனர். வந்ததும் ஸ்தல பொலிடிகல் ஆபிசர்களின் உதவியைப்பெற்ற சகலவித சுபகாரியங்களை நடத்திவைக்கும் மாஸ்டரால் ராஜதம்பதிகளுக்குத் தேசமன்னர்களை அறிமுகம் செய்விக்கப்பட்டது. வழி நெடுகவும் துருப்புகளால் அணிவகுக்கப்பட்ட பாதை வழியாக ராஜதம்பதிகள், டில்லிக்கோட்டைத் துவாரம், காஸ்சாலை, ஜம்மா மஸ்ஜித்து, எஸ்பிளனேட்சாலை, பாட்டிப்பூர் காந்தி சௌக்கு, கடைத்தெருவு, க்வின்ஸ் சாலை, டப்பரிங்கு பாலம், சௌபுர்ஜாசாலை இவைகளின் வழியாகச் சென்று, ராஜதம்பதிகளின் காம்புக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

தேசமன்னர்களின் அரண்மனைகளும் காம்புகளும்.

பொதுவாக எல்லா காம்புகளிலும், மின்சார விளக்குகள் ஏற்பட்டிருந்தபோதிலும், தேச மன்னர்களின் காம்புகளில் ஏற்றும் மின்சார விளக்குகள் கண்ணைக் கவரத்தக்கவைகளாக இருக்கின்றன. உதாரணமாக: பாடியாலா மகாராஜாவின் காம்பில், மின்சார விளக்குகளினுலேயே பாடியாலா மகாராஜா என்று எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறு சில காம்புகளில் மின்சார விளக்குகளால் "கடவுள் ராஜ தம்பதிகளை ஆசீர்வதிப்பாராக" முதலிய பல ஆங்கில வசனங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. காச்மீர காம்பின் முன்புறத்தில் கார்வெட் உட்டு கேட் (Carwed wood Gate) விசித்திர அலங்காரத்துடன் செய்த வேலைப்பாட்டைப் பார்த்துப் பிரபுக்களும் பிரமிக்கும்படியாய் இருக்கின்றது. இரவில் மின்சார விளக்கை ஏற்றுவித்த அலங்காரத்தைப்பார்த்து அப்படியே கால் மணி நேரம் ஆனந்த சாகரத்தில் மூழ்கி யிருந்தோம். தவிர ராஜதம்பதிகளின் ஊர்கோலத்தன்று எல்லைப்புறத்திலுள்ள ஆப்கன் தலைவர்கள், பரோடா மகாராஜா முதலிய பம்பாய்

ராஜதானி மன்னர்கள் பலர், பொபால்பிகம் இவர்கள் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட புராதன ஜாதிபச் சின்னங்கள் அமைக்கப்பட்ட உடுப்புகளுடன் விளங்கிய அழகை வர்ணிக்க யாவராலும் முடியாது என்று சொல்லுவேன்.

ராஜதம்பதிகள், தேசமன்னர்கள் இவர்களின் சந்திப்பால் படிப்பினை.

டில்லிமாநகரில் இவ்வளவு தேசமன்னர்கள் ராஜதம்பதிகளின் முடிசூட்டு வைபவத்தைக் கொண்டாடுவதின் பொருட்டு ஒன்று கூடினதில் ஜனங்களும் மன்னர்களும் அடியில்கண்ட மூன்று முக்கிய விஷயங்களை மனதில்கொண்டவர்களாயினர். அவையாவன:—

(1) ராஜசக்ரவர்த்தி சுமார் 8000 மைல் தூரத்திலுள்ள தமது ஜென்ம பூமியைவிட்டு, இந்தியாவிற்கு விஜயம் செய்ததைக் கண்டு தேசமன்னர்கள் இனித் தாங்களும் தங்கள் ராஜ்ஜியத்திலுள்ள சகலபாகங்களையும் சுற்றிப் பார்த்துத் தங்கள் குடிகளின் க்ஷேமத்தைக் கவனித்து வரவேண்டும் என்பதை அறிந்தார்கள்.

(2) தங்கள் ராஜாக்களே பயபக்தியுடன் ராஜசக்ரவர்த்தியவர்களுக்கு வணங்கி மரியாதைசெய்து வருவதைப் பார்த்திருந்த குடிகள் தங்கள் தங்கள் ராஜாவிடத்தில் முன்னதிலும் பணிந்தடங்கு அதிக பக்தி ராஜவிசுவாசம் வைக்கவேண்டும் என்றும், தங்கள் ராஜாக்களைவிட உயர்ந்த படியில் இருக்கும் ராஜ சக்ரவர்த்தியினிடம் வைத்திருக்கும் ராஜவிசுவாசத்தை அதிகரிக்கவேண்டும் என்றும், தோட்டிமுதல் ராஜசக்ரவர்த்தி வரையிலும் தாரதம்மியம் ஏற்பட்டிருக்கிறதென்றும், சக்ரவர்த்திக்கும் மேலான வஸ்து ஒன்று இருக்கிறதென்றும் அறிந்தார்கள்.

(3) தேச மன்னர்களும் பிரஜைகளும் அவரவர்களுக்கு ஏற்பட்ட அந்தஸ்தைப்பற்றியிருந்த கர்வம் குறைவுபட்டு, அடக்கமும் சாந்தமும், பரஸ்பர விசுவாசமும், பரோபகாரச் சிந்தையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றும் அறிந்தார்கள்.

மகுடாபிஷேகச் செய்திகள்.

பிரிடிஷ் இந்தியாவின் விஞ்ஞாபனப் பத்திரம்.

ராஜதம்பதிகள் டில்லிமாநகருக்குள் பிரவேசம் செய்த போது அவர்களுக்கு வரவேற்புப்பந்தலில் இந்தியா சட்டசபை வைஸ் பிரெஸிடெண்ட் ஆனரெபில் மிஸ்டர் ஜெங்கின்ஸ் பிரிடிஷ் இந்தியாவின் விஞ்ஞாபனப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்தாரென்று நேற்றுச் சொன்னோம். அச்சமயம் அவர் வரவேற்புப்பந்தலின் நடுவே சிவப்பு மகமல் போட்டு மூடப்பட்டிருந்த உயர்மேடையில் பொலிடிகல் உடுப்புடன் (Political Uniform) நின்றது அவருக்கு ஒருவித கம்பீரத் தோற்றத்தைக் கொடுத்தது. அவருக்குப் பின்னே இந்தியா சட்டசபை (ராஜப்பிரதிநிதிச் சட்டசபை) மெம்பர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவருடைய வலதுபக்கத்திலும் இடபக்கத்திலும் மாகாணத் தலைவர்கள் அவரவர்களுடைய சட்டசபை மெம்பர்களுடனும் பெரிய நியாயாதிபதிகள் முதலாயுள்ள மற்ற மாகாண உத்தியோகஸ்தர்களோடும் நின்றுகொண்டிருந்தார்கள். ராஜபவனி அந்த சிங்காரப்பந்தலுக்குள் நுழைந்து ராஜதம்பதிகளிருவரும் ஆனரபில் மிஸ்டர் ஜெங்கின்ஸ் நிற்கும் இடத்துக்கு நேராகவந்து நின்றுகொண்டதும், அவ்வதிகாரி பிரிடிஷ் இந்தியாவின் விஞ்ஞாபனப் பத்திரிகையைத் தம்மால் எவ்வளவு தெளிவாயும் தாட்டியாயும் வாசிக்க முடியுமோ அவ்வளவு தெளிவாயும் தாட்டியாயும் வாசித்துவிட்டு அதனைச் சக்கிரவர்த்திக்கு ஸமர்ப்பித்தார். அவர் அதனை யேற்றுக்கொண்டு சுருக்கமாய்ப் பதில் சொன்னார். அப்பதில் வெகு சமீபத்திலிருந்தவர்களுக்குக்கூடக் கேட்டிருக்குமோ, கேட்டிராதோ என்று சந்தேகிக்கும்படியாய்த் தாழ்ந்த தொனியில் சொல்லப்பட்டிருக்குமென்று யாரும் நினைக்கக்கூடாது. சக்கரவர்த்திப் பெருமான் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் கேட்போர் காதில் கணீர் என்று படும்படி செம்மையாய் உச்சரிக்கப்பட்டபடியால் அவர் பேசிய பேச்சை வரவேற்புப் பந்தலில் கூடியிருந்த ஜனங்கள் மட்டுமேயன்றிப் பக்கத்திலிருந்த ஜம்மா மசூதியின் உயர்ந்த படிக்கட்டுகளிலிருந்த ஜனங்கள்கூடக் காது குளிரக்கேட்டு ஆனந்தித்தார்கள். சக்கரவர்த்தியின் கருணைப் பெருக்கெடுத்த பேச்சைக் கேட்டு ஜனங்கள் சந்தோஷமேலிட்டால் புளங்காங்கித மானார்களென்று நாம் சொல்வோமானால் அது மிகுதிச் சொல்லாகமாட்டாது.

விஞ்ஞாபனப் பத்திரம் வைத்துக் கொடுக்கப்பட்ட தட்டு.

பிரிடிஷ் இந்திய மகாஜனங்களின் விஞ்ஞாபனப் பத்திரிகையை ஆனரபில் மிஸ்டர் ஜெங்கின்ஸ் ஒரு நேர்த்தியான தட்டில் வைத்து ஸமர்ப்பித்தார். அத்தட்டு கோழிமுட்டை வடிவாய் வெள்ளியால் செய்யப்பட்டிருந்ததுமன்றி அதன் மேல் வைத்தவிரல் சறுகிப்போம்படியாய் அவ்வளவு வழுவழுப்பாக மெருகிடப்பட்டுமிருந்தது. அதனில் அடியிற் கண்டபடி எழுத்துக்களும் வெட்டப்பட்டிருந்தன.

"பிரிட்டிஷ் இந்திய மகாஜனங்களின் பேரால் 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ந் தேதி மாட்சிமை பொருந்திய சக்கிரவர்த்தி தம்பதிகள் டில்லிமாநகரின்கண் பிரவேசித்த சமயம் கவர்னர் ஜெனரல் சட்டசபை மெம்பர்களால் ஒரு விஞ்ஞாபனப் பத்திரிகையோடு வழங்கப்பட்டது."

தேச மன்னர்களுக்குப் பேட்டி.

நகரப் பிரவேசத்தன்று பிற்பகல் மாட்சிமை பொருந்திய ஜார்ஜ் சக்கரவர்த்தி தேசமன்னர்களுக்குப் பேட்டி கொடுத்தார். அம் மன்னர்கள் ராயல் காம்பின் முகப்பில் வந்து சேர்ந்ததும் அத்தாணி மண்டபத்துக்கு (Audience Chamber) அழைத்துக்கொண்டு போகப்பட்டார்கள். அவர்களைச் சக்கிரவர்த்திப்பெருமான் ஒருவர்பின் ஒருவராய் வரவேற்றார்.

அடியில் நாம் குறித்திருக்கும் கிரமத்தில் தேசமன்னர்களுக்குச் சக்கிரவர்த்தி பேட்டி கொடுத்தார்.

ஹைதராபாத் நிஜாம்
பரோடா மகாராஜா
மைசூர் மகாராஜா
உதயபுரம் மகாராஜா
ஜெயப்பூர் மகாராஜா
ஜோட்பூர் மகாராஜா
பூண்டி மகாராஜா
பிக்கானீர் மகாராஜா
கோட்டா மகாராஜா
கிஷன்கார் மகாராஜா
பாத்பூர் மகாராஜா
ஜஸ்ஸல்மீர் மகாராஜா
ஆல்வார் மகாராஜா
டோல்பூர் மகாராஜா (ராணா)
ஸிரோணி மகாராஜா
தங்கர்ப்பூர் மகாராஜா
கோலாப்பூர் மகாராஜா
இடார் மகாராஜா
கட்ச் ராவ்
கெய்ர்ப்பூர் மீர்

உதயபுரம் மகாராஜா.

உதயபுரம் மகாராஜா ரூலிங்க் சீப் இன்வெயிடிங்க் (Ruling Chief in Waiting) என்னும் முறையில் (ஹோதாவில்) சக்ரவர்த்தியின் சிப்பந்திகளில் ஒருமெம்பராய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சக்கரவர்த்திக்கு ஆனரேரி எய்டிகாங்குகள்.

கர்னல் நவாப் ஸர் ஹாபிஸ் மகம்மது அப்துல்லாகானும், கர்னல் நவாப் ஸர் மகம்மது ஆஸ்லாம்கானும் ஜார்ஜ் சக்கிரவர்த்திக்கு கௌரவ எய்டிகாங்குகளாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எட்வர்ட் சக்கரவர்த்தியின் எல்லா இந்திய ஞாபகப் பட்டயம்.

நேற்றுக்காலமே தம்மைக் காணவந்த தேசமன்னர்களுக்குச் சக்கரவர்த்தி பேட்டி கொடுத்துக்கொண்டிருந்தார். ராஜப்பிரதிநிதியோமுதல்நாள் சக்ரவர்த்திப்பெருமானைவந்துபேட்டி கண்டுபோன தேசமன்னர்கள் இறங்கியிருக்கு மிடங்களுக்குச் சென்று அவர்களை மறுபேட்டி கண்டுகொண்டிருந்தார்.

நேற்று ஜார்ஜ்சக்கரவர்த்தித் தம்மைப் பார்க்கவந்த தேசமன்னர்களுக்குப் பேட்டிகொடுத்ததுந் தவிர, வேறொரு முக்கிய காரியமுஞ் செய்தார். டில்லி கோட்டைக்கும் ஜம்மா மசூதிக்கும் இடையேயுள்ள மைதானத்தில் பார்ப்போர் கண்ணைக் கவரும்படியாக வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கும் சிங்காரத்தோட்டத்தில் எட்வர்ட் சக்ரவர்த்திக்கு எல்லா இந்திய ஞாபகச்சின்னமாக எழுப்பப்படப்போகிற வெண்கலச் சிலைக்கு அஸ்திவாரமாக ஒரு பட்டயக் கல்லை அதைப்பதிப்பதற்குக் குறித்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் பதித்துத் திறந்து வைத்தார். அந்த வெண்கலப் பதுமை இன்னும் செய்து முடிக்கப்பட்டுவந்து சேரவில்லை. அந்தச் சிங்காரத் தோட்டத்துக்குள்ளே பலதேச மன்னர்களும், மாகாணத் தலைவர்களும், உயர் பதவி உத்தியோகஸ்தர்களும், அந்த ஞாபகச்சின்ன நிதிக்குப் பொருளுதவி செய்தவர்களும் வந்து கூடி யிருந்தார்கள். அதற்கு வெளியிலோ பொதுஜனங்கள் கூடி யிருந்தார்கள். சக்கரவர்த்தி பெருமான் காலஞ் சென்றுவிட்ட எட்வர்ட் சக்கரவர்த்தியின் ஞாபகச்சின்ன வெண்கலப் பதுமையின் அஸ்திவாரப் பட்டயக்கல்லை அச்சிங்காரத் தோட்

டத்தின் மத்தியில் பதித்துத் திறந்துவைக்கவரும் வைபவத்தைப் பார்க்க ஜனங்கள் வீடுகளின் கூரைகளின்மேல் கூட ஏறி நின்றுகொண் டிருந்தார்கள்.

சக்கரவர்த்திப் பெருமான் அந்தச் சிங்காரத் தோட்டத்துக்கு எழுந்தருள்வதற்குச் சற்றுமுன்னமேயே கவர்னர்ஜெனரலும் லேடி ஹார்டிஞ்சும் அங்கேவந்து காத்துக்கொண் டிருந்தார்கள். அப்பால் சக்கிரவர்த்தி தம்பதிகள் ஊர்கோலமாய் அத்தோட்டத்துக்கு வந்துசேர லார்ட் ஹார்டிஞ்ச் அவர்களிருவரையும் வரவேற்று இந்தியா கவர்ன்மெண்ட் ரெவினியூ மெம்பர் ஆனரெபில் மிஸ்டர் கார்லயில (Hon'ble Mr. Carlyle) தலைமையாய்க்கொண்டு நின்ற ஞாபகச்சின்னக் கமிட்டி மெம்பர்களை அத்தம்பதிகளுக்கு அறிமுகம் செய்துவைத்தார். பின்பு தம்பதிகளிருவரும் அவர்கள் உட்கார்ந்து கொள்வதற்கு அமைக்கப்பட்டிருந்த உயர் மேடைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டார்கள். அங்கே அவர்கள் தங்களுக்கிடப்பட்டிருந்த ஆஸனங்களில் அமர்ந்ததும் எக்காளக்காரர்கள் தங்கள் கொம்புகளை யெடுத்து ஊத லார்ட் ஹார்டிஞ்ச் சிறிது முன்னுக்குத் தள்ளிவந்து ஓர் அட்ரெஸ் வாசித்து, சக்கரவர்த்திப் பெருமானை அந்த ஞாபகச் சின்னப் பட்டயத்தை பூமியிற் பதித்துத் திறந்து வைக்கும்படியாய்க் கேட்டுக்கொண்டார். லார்ட் ஹார்டிஞ்ச் பேசி முடித்ததும் ஜார்ஜ் சக்கரவர்த்தி அவருக்குப் பதில் சொல்லிவிட்டு, அந்தப் பட்டயக்கல் அண்டை சென்று அதனைத் தம் கையால் பதித்துத் திறந்து வைத்தார். அப்போது அச்சிங்காரத் தோட்டத்தில்வந்து கூடியிருந்தவர்களெல்லோரும் எழுந்து நிற்க, பாண்டுவாத்தியக்காரர்கள் ராஜகீதம் வாசித்தார்கள். 101 குண்டுகள் போடப்பட்டன. ஞாபகச்சின்னக் கமிட்டியைச்சேர்ந்த சீனியர் மெம்பர் அந்த ஞாபகச்சின்னத்தின் சிற்றுருவம் (Meniature Memorial) ஒன்றைக் கவர்னர் ஜெனரலிடம் சேர்ப்பிக்க, அவர் அதனைச் சக்கரவர்த்திப் பெருமானுக்கு ஸமர்ப்பித்தார்.

அதனோடு அந்த ஞாபகச் சின்னம் சம்பந்தமான நடவடிக்கைகள் முடிந்துபோய்விட, சக்கரவர்த்தி தம்பதிகள் ஊர்கோலமாகவே ராஜபாதைக் குண்டுகள் போடப்பட தங்கள் காம்புக்குத் திரும்பினார்கள்.

சக்கரவர்த்திப் பெருமான் பதித்துத் திறந்து வைத்த ஞாபகச் சின்ன பட்டயக்கல் வடக்குமுகமாய் நிற்கின்றது. இனி இதன்மேல் கொண்டுவந்து வைக்கப்படும் எட்வர்ட்

சக்கரவர்த்தியின் வெண்கலப்பதுமையும் வடக்கு முகமாகவே வைக்கப்படும்.

டில்லியில் ராஜதம்பதிகள்.

காரொனேஷன் சுபகாரியங்கள்.

(1) ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும் மினிஸ்டர்-இன்-அட்டென்டென்சும் 12-12-11 காலை 10-45 மணிக்கு ராஜ சக்கரவர்த்தியின் காம்பைவிட்டுப் புறப்பட்டு கிங்க்ஸ்வேவழியாகத் தர்பார் மண்டபம் வந்து சேர்ந்தனர். பிறகு அவரவர்கள் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட ஆசனத்தில் அமர்ந்தனர்.

(2) தேர் எக்ஸலென்ஸிகளான கவர்னர் ஜெனரலும் அவர் மனைவியாரும் ராஜ சக்கரவர்த்தியின் காம்பைவிட்டு காலை 11-10 மணிக்குத் துருப்புகளுடன் தர்பார்மண்டபம்வந்துசேர்ந்ததும், கவர்னர் ஜெனரலின் பரிவாரங்கள் அவர்களை வரவேற்றார்கள். தேர் எக்ஸலென்ஸிகள் வந்தவுடனே அங்குள்ளவர்கள் அனைவரும் எழுந்துநின்றனர். அவர்கள் உட்கார்ந்தவுடன் மற்றவர்கள் உட்கார்ந்தனர்.

(3) இன்று காலை 11-30 மணிக்கு ராஜதம்பதிகள் தங்கள் காம்பைவிட்டுச் சகல ராஜசின்னங்கள் விருதுகள் துருப்புகளுடனும் புறப்பட்டுக் குறிப்பிட்ட சாலைவழியாகவந்தனர். வழி நெடுகவும் இருபுறத்தில் துருப்புகள் அணிவகுத்து நின்றன.

(4) தர்பார் மண்டபம் வந்து சேர்ந்ததும் 101 மரியாதை குண்டுகள் போடப்பட்டன. பாண்டுகள் முழங்கின. கீர்த்தனங்கள் பாடப்பட்டன. கவர்னர் ஜெனரல் ராஜதம்பதிகளை வரவேற்று அவர்களைச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்படி செய்தனர். ராஜதம்பதிகள் வந்ததும் அனைவரும் எழுந்துநின்றனர். அவர்கள் சிம்மாசனம் ஏறி உட்கார அனைவரும் தங்கள் ஆசனங்களில் அமர்ந்தனர்.

தர்பார் ஆரம்பம்.

(5) தர்பார் ஆரம்பகாலத்தில் சகல மங்கள வாத்தியங்களும் கோஷித்தன. சுபகாரியங்களை நடத்த ஏற்பட்டிருக்கும் மாஸ்டருக்கு தர்பார் காரியங்களை நடத்தும்படி ராஜசக்கரவர்த்தி கட்டளையிட்டனர். பின் ஒருமுறை சகல மங்கள வாத்தியங்களும் கோஷித்தன.

(6) பிறகு கவர்னர் ஜெனரலும், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களும் தேசமன்னர்களும் வரிசைக்கிரமமாய் ராஜதம்பதிகளுக்கு மரியாதை செய்தனர். இவ்வித சுபகாரியங்கள் முடிவுபெற்றவுடனே ராஜதம்பதிகள் கைகோர்த்துக்கொண்டு தர்பார் மண்டபத்தைவிட்டு ராயல் மண்டபத்திற்கு ஊர்கோலம் புறப்பட்டனர். அப்பொழுது அவர்களுடைய விலையுயர்ந்த உடைகளைப் பணியாட்களாய் (Pages ராஜாக்கள்) பிடித்துச் சென்றனர். அச்சமயம் ராஜதம்பதிகளுக்குத் தங்கக்குடைகள் பிடிக்கப்பட்டன. சிம்மாசனம் விட்டுப் புறப்பட்டு ராயல் மண்டபம் வந்துசேர்ந்து அங்கு ஆசனங்களில் வீற்றிருக்கும் வரையிலும் அனைவரும் நின்றுகொண்டிருந்தனர். செல்லும்பொழுது ராஜதம்பதிகளுடன் கவர்னர் ஜெனரலும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட இடத்தில் நின்று பிறகு பின்தொடர்ந்தார்கள். அனைவரும் வீற்றிருந்த பிறகு

(7) பிராக்ளமேஷன் வாசிக்கப்பட்டது.

(8) ராஜ சக்கரவர்த்தியின் உத்தரவுப்படி கவர்னர் ஜெனரல் பகிரங்கப்படுத்தினர்.

(9) தர்பார் மண்டபத்திற்குத் திரும்பினர்.

(10) பின்னர் தேர் மெஜெஸ்டிகள் காம்புக்குச் சென்றனர்.

இந்தியன் பிரெஸ்காம்பில் சௌகரியங்கள்.

மற்ற காம்புகளில் உள்ளோர் பல விஷயங்களில் தங்களுக்குக் குறைவும் அசௌகரியங்களும் ஏற்பட்டிருக்கின்றன என்று முறையிட்டுவருகிறார்கள்.

இந்தியன்பிரெஸ் காம்பில் உள்ளவர்களுக்குச் சகல சௌகரியங்களும் இருந்துவருகின்றன. முறையிடுவதற்கு வழியில்லாமல் செவ்வையாக மானேஜ்மெண்டு செய்துவருபவர்களின் காரியங்கள் மெச்சத்தக்கவை.

டில்லியின் பாக்கியம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு குருக்ஷேத்திர பூமியில் உபதேசஞ் செய்யும்பொழுது, விருக்ஷங்களில் அஸ்வத்த விருக்ஷம் சிறந்ததென்றும், யானைகளில் ஐராவதம் என்றும், இவ்விதமாகச் சிரேஷ்டமான பதார்த்தங்கள் அனைத்

தும் தன் ரூபமேயென்றும் சொல்லிவந்திருக்கிறதை ஜனங்கள் அறிவார்கள். இன்று விளங்கும் சுபகாரியங்கள், டில்லியின் காட்சியைக் காணும் எவரும், வருஷங்களில் சிறந்தது 1911-ம் வருஷம் என்றும், மாதங்களில் சிறந்தது டிசம்பரீ என்றும், தேதிகளில் சிறந்தது 12-ந்தேதி என்றும், ராஜசக்கரவர்த்திகளுள் சிறந்தவரும் தெய்வத்தன்மையுள்ளவரும் ஐந்தாவது ஜார்ஜ சக்ரவர்த்தியென்றும், பட்டணங்களில் சிறந்தது டில்லிநகர் என்றும் சொல்லாமல் இருக்கமாட்டார்கள். ஆ ஆ என்ன காட்சி, என்ன நேத்திரானந்தம், என்ன ஜனக்கூட்டங்கள், என்ன வைபவம், என்ன சிறப்பு, என்ன ஐஸ்வரியம், எத்தனை மோட்டார்வண்டிகள், எத்தனை விசித்திரமானவண்டிகள், எவ்வளவு வித்தியாசமான ஜனங்கள்! ராஜசக்கரவர்த்தி சக்கரவர்த்தினியவர்கள் இன்று தர்பாருக்குச் செல்லும் வழிகளில் அணிவகுக்கப்பட்டு நின்ற துருப்புகளின் அழகென்ன; ராஜதம்பதிகளின் சிறந்த உடுப்புகளின் அழகென்ன; ஆ! ஆ! என்னால் சொல்லவும் எழுதவும் முடியாது. எவராலும் இன்று காக்ஷியைப் பூர்த்தியாக எழுதமுடியாது. கண்ணால் பார்த்து ஆனந்தம் அடைவதே சரி. அன்று சம்பிரமத்தைப் பார்த்துக் களிக்கத் தேவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் வாகனமேறி டில்லிக்கு வந்திருக்கின்றனரோ என்று சொல்லும்படியாய் இருக்கிறது. இந்தச் சம்பிரமத்தின் பிரபாவம் தேவலோகத்திற்கு எட்டியிருந்தாலும் இருக்கும். ஆ டில்லியே! உனக்குச் சுபம் உண்டாகுக! ராஜதம்பதிகளே! உங்களுக்குச் சுபம். தேசமன்னர்களே! உங்களுக்குச் சுபம். கவர்னர் ஜெனரல், கவர்னர்கள், லெப்டினெட்டு கவர்னர்கள், அவர்கள் பரிவாரங்கள், இம்பீரியல் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் மெம்பர்கள் முதலிய சகலருக்கும் சுபம் உண்டாகுக! நேத்திரானந்தம் நேத்திரானந்தம். இன்று இவ்விதம் எழுதவேண்டும் என்று தோன்றுமலே எழுதியிருக்கிறேன். சுபம். சுபம். சுபம்.

டில்லி தர்பார்.

12-12-11-ல் தர்பார் மண்டபத்தில் அமைக்கப்பட்ட சிம்மாசனங்களிலே ராஜ சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் வீற்றிருக்கையில், முதல் முதல் கவர்னர் ஜெனரல் அவர்கள் திவ்விய அலங்காரத்துடன் வந்து, ராஜ சக்கரவர்த்திக்கு முன்னின்று வந்தனஞ் செய்து சென்றனர். அதன்பிறகு தேச மன்

ளர்கள், தங்கள் தங்கள் பூர்விக சம்பிரதாயத்தை அநுசரித்துத் திவ்வியமான உடைகளுடன் வந்து அவரவர்களின் வழக்கப்படி வந்தனஞ்செய்து சென்றனர். ஹைதராபாத்து நிஜாம், காஸ்மீர தேசத்து மகாராஜா, பரோடா மகாராஜா, மைசூர் மகாராஜா, ஜெயப்பூர், ஜோத்பூர், குவாலியர், போபால் பிகம் முதலிய சகல மன்னர்களும், கவர்னர்கள், லெப்டினண்டு கவர்னர்கள், இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் கவுன்சல் மெம்பர்கள், கவர்னர்களின் ஆலோசனைச்சபையைச் சேர்ந்த மெம்பர்கள் முதலியவர்கள் ராஜாதிராஜனை வணங்கிய காட்சி மிக நேர்த்தியாக இருந்தது.

இதன் கருத்து:— கடவுள் சகலவல்லமையுள்ளவர். சகலமும் அறிந்தவர். எங்கும் உள்ளவர். அவரின்றி ஓர் அணுவும் அசையாது என்பதும், அவருக்குக் கீழ் வரிசையாகப் படிப்படியாய்க் கீழ் அந்தஸ்துள்ளவரும், அவர் அம்சம்பொருந்தியவரும், பலர் தாரதம்மியமாய் அமைக்கப்பட்டுளர் என்பதையும், ராஜசக்ரவர்த்தி முதல் தோட்டிவரையிலும் படிப்படியாய் அந்தஸ்து குறைந்துகொண்டுவருவதையும், குறைந்த அந்தஸ்துள்ளவர்கள் மேல்அந்தஸ்துள்ளவர்களுக்கு மரியாதை செய்து வரவேண்டியது கடமை யென்பதும் வெளியாகிறது. இது தான் துவைத மதத்தில் கூறிய தாரதம்மியக் கிரமம்.

13-12-11-ல் தோட்டக் கச்சேரி:—இன்று நடந்தேறிய தோட்டக் கச்சேரிக்கு ராஜசக்ரவர்த்தியவர்கள் உள்பட சகல மன்னர்களும் ஆஜராயிருந்தனர். இன்று, நேற்று மாதிரியாகத் தாரதம்மிய பேதத்தைப் பாராட்டாது, அத்வைதத்திற் கூறியபடி சர்வமும் ஒன்றே என்பதைக் காட்டிக்கொண்டு ராஜசக்ரவர்த்தி முதல் கீழ்ப்படியிலுள்ள அனைவரும் ஒருவரோடொருவர் சமமாக உட்கார்ந்து, உல்லாசமாகப் பேசி, உண்டு களித்தனர். இன்று காட்சி மிகச் சிறந்தது. இன்று இரவு டில்லிப்பட்டணம் முழுவதும், தீபம் ஏற்றப்பட்டன. இன்று இப்பட்டணம் கண் எட்டினவரையிலும் எங்கு பார்த்தாலும் தீபத்தின் பிரகாசமாக ஜொலித்துக்கொண்டிருக்கிறது. இன்று நடந்த விசேஷம் அத்வைதக்கொள்கையிற் கூறியதை அநுசரித்ததாகும். ஆகையால், துவைதம். அத்வைதம் இவ்விரண்டு மதக் கொள்கைகளையும் டில்லிதர்பார் விளக்கிற்று.

இந்தியன் பிரஸ் காம்பில் பரோடா மகாராஜா:—இந்தியன் பிரெஸ் காம்புக்கு அடுத்துள்ள ஓர் சிறந்த மண்டபத்தில் பரோடா மகாராஜா அவர்கள் விஜயஞ் செய்து இந்தியன்

பிரெஸ் காம்புகளில் வந்திருக்கும் பத்திராதிபர்கள் அனைவரையும் வரவழைத்து, வேடிக்கையாகப் பேசிக்கொண்டு சிறிது நேரம் இருந்த பிறகு பரோடா மகாராஜா அவர்கள் தம் அரண்மனைக்குச் செல்ல, அவரவர்கள் தம் இருப்பிடம் சென்றனர். இவ்விதச் செய்கையைப்பற்றிப் பத்திராதிபர்கள் அனைவரும் மகாராஜா அவர்களைப் புகழ்ந்து பேசினர்.

சக்கரவர்த்தியின் மகுடாபிஷேகம்
பாத்ஷாஹி மேலா.

சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக காலத்தில் டில்லியில் நடக்கும் வேடிக்கைகளில் பாத்ஷாஹி மேலா என்று சில வேடிக்கைகள் யமுனா நதிக்கரையில் டில்லிக்கோட்டை மதில்களின் கீழ் நடக்கும். இங்கேதான் யுதிஷ்டிர சக்கரவர்த்தி அஸ்வமேதயாகம்செய்து அவர்க்கு மகுடாபிஷேகம் நடந்தது. மொகலாய சக்கரவர்த்திகளும் அவர்களுடைய விளையாட்டுகளை நடத்தின இடமும் இதுதான். இந்த வேடிக்கைகள் டிசம்பர் மாதம் 10-ந் தேதி முதல் 18-ந்தேதி வரையில் விசேஷமாய் நடக்கும். இந்தவேடிக்கைகள் நடக்கும்போது, தேர் இம்பீரியல் மாஜெஸ்டிஸ் சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி இருவரும் மொகலாய சக்கரவர்த்திகள் ஜனங்கள் பார்க்கும்படி மேலேயுள்ள ஜன்னலில் வந்து காட்டிக்கொள்வதுபோல் காட்டிக்கொள்ளச் சம்மதித்ததினால், ஜனங்கள் இவர்களைப் பார்த்துச் செல்லும் படி ஏற்பாடு செய்யப்பட்டன. ஹிந்துக்கள், மகம்மதியர், சீக்கியர், ஆரிய சமாஜத்தார், ஜயினர் ஆகிய பற்பல மதத்தினர் 13-ந்தேதி அவரவர்கள் மதப்படி ஆராதனைகள் செய்துவிட்டு மேலா நடக்குமிடத்து வந்து சக்கரவர்த்தி சக்கரவர்த்தினியைத் தரிசித்தார்கள். குஸ்திகள், சர்க்கஸ் ஆட்டங்கள், வாண வேடிக்கைகள், பாண்டு வாத்தியங்கள், ஆட்டுச்சண்டைகள், கத்திபாட்டங்கள் முதலிய வேடிக்கைகள் நடந்தன. வேடிக்கை செய்கிற கூட்டத்தார் பலர் இந்தச் சமயத்தில் வந்து பல வேடிக்கைகள் நடத்துவதாக ஒப்புக்கொண்டனர். சிண்டியா மகாராஜா ஒரு கோட்டையைத் தாக்குவதுபோலக் காட்டும் வேடிக்கைகளும் நடந்தன.

மகுடாபிஷேகத் திருத்தங்கள்.

இந்தியாவுக்கு ராஜ ஸ்தலம் இனி டில்லி.
வேங்காளப் பிரிவினை ரத்து செய்யப்பட்டது.

சக்கரவர்த்திபவர்கள் நேற்று முன்தினம் தர்பார் முடிவில் சில முக்கியமான நிர்வாகத்திருத்தங்களுக்குத் தாம் அனுமதி கொடுத்திருப்பதாக விளம்பரப்படுத்தினார்கள். இந்தத் திருத்தங்கள் பின்வருமாறு சக்கரவர்த்தியினால் வெளியிடப்பட்டன:—

"தர்பார் முடிவில் நமது ஜனங்களுக்கு நாம் வெளியிட விரும்புவதாவது:—ஆலோசனைச் சபையிலுள்ள நமது கவர்னர் ஜெனாலோடு ஆலோசனைசெய்து நம்மந்திரிகள் நமக்குச் சொன்னபடி இந்தியாக்கவர்ன்மெண்டின் ராஜஸ்தலம் கல்கத்தாவிலிருந்து பழைய ராஜஸ்தலமாகிய டில்லிக்கு மாற்றுவதாக நிச்சயம் பண்ணிவிட்டோம். அதேகாலத்தில் இந்த மாறுதலின் பயனாக, வேங்காளமானது ஒரு பிரசிடென்ஸியாக்கப்பட்டு அதற்கு ஒரு கவர்னர் நியமிக்கப்படுவார். பேஹார், ஒரிஸ்ஸா, சோடா நாக்பூர் இந்த மூன்று மாகாணங்களையும் சேர்த்து ஒரு லெப்டினென்ட் கவர்னரும் நிர்வாக சபையும் நியமிக்கப்படுவார்கள். ஆஸாம் மாகாணம் ஒரு சீப் கமிஷனருக்குள் இருக்கும். இப்படிப் புதிதாய் சிருஷ்டிக்கப்பட்ட மாகாணங்களின் எல்லைகளும் நிர்வாகமும் ஆலோசனை சபையிலுள்ள நமது இந்தியா செக்ரிடெரியின் சம்மதத்தின்பேரில் ஆலோசனைச்சபையிலுள்ள நமது கவர்னர் ஜெனரல் அவசியமானபடி அமைப்பார். இந்தத் திருத்தங்களால் இந்தியா இப்போதைவிட நன்றாய் நிர்வகிக்கப்பட்டு நமது அன்புள்ள பிரஜைகளின் அதிகமான வளப்பத்துக்கும் சந்தோஷத்துக்கும் அவைகள் ஹேதுவாகுமென்று நாம் மனப்பூர்வமாய் விரும்புகிறோம்."

இப்படி மகா முக்கியமான ராஜாங்க நிர்வாகத் திருத்தங்களைச் சக்ரவர்த்தி வெளிப்படுத்தினது, கேட்டிருந்த லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு ஆரம்பத்தில் பிரமையை உண்டுபண்ணிற்றென்று நாம் சொல்லவேண்டியதில்லை. சென்ற 150 வருஷங்களாகப் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ராஜஸ்தலமாக விளங்கின கல்கத்தா இனி அந்தப் பதவியை இழந்து டில்லிமாநகரம் ராஜஸ்தலமாகி, கவர்னர் ஜெனரல் அவருடைய நிர்வாக சபை,

சட்ட சபை இவைகள் அதை இருப்பிடமாகக்கொள்ளும். வெங்காளத்திலுள்ள கல்கத்தாவிலிருந்து இந்தியாக் கவர்ன்மெண்ட் டில்லியில் வசிக்கும்போது வெங்காளத்தின் பிராதான்னியம் சற்றுக்குறையுமானதால், அதைச் சென்னை பம்பாய் இரண்டையும்போல ஒரு பிரசிடென்ஸியாக்கி, அதற்கு இப்போதுள்ள லெப்டினன்ட் கவர்னர் ஆளுவோராயில்லாமல் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படும் கவர்னர் ஒருவர் ஆளுவோராயிருப்பார். இந்தப் புது பிரசிடென்ஸியில் வெங்காளி பாஷைபேசும் ஜனங்கள் வசிக்கும் கல்கத்தா, பரத்வான், டாக்கா, ராஜ்ஷாய், சிட்டகாங் ஆகிய மாகாணங்கள் அடங்கியிருக்கும். புதிதாய் ஏற்படுத்தப்படும் லெப்டினன்ட் கவர்னர் ஆளுகையில் பேகார், ஒரிஸ்ஸா, சோடா நாக்பூர் இந்தமூன்று மாகாணங்களும் இருக்கும். இந்த லெப்டினன்ட் கவர்னருக்குச் சென்னையிலும் பம்பாயிலும் இருப்பதுபோல ஒரு நிர்வாக சபையும் இருக்கும். இதற்கு முதலாவது லெப்டினன்ட் கவர்னராக இப்போது கிழ் வெங்காளத்திலிருக்கும் ஸர் C. பெய்லி நியமிக்கப்படுவார். வெங்காளத்துக்குப் புதுக்கவர்னர் இங்கிலாந்தில் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்டு அவர் ஒரு லார்டாயிருப்பார், அல்லது நியமனமானதும் லார்டாக்கப்படுவார். ஆஸாம் மாகாணம் வெங்காளப்பிரிவினைக்கு முன்னாலிருந்ததுபோல ஒரு சீப் கமிஷனர் வசத்தில் வைக்கப்படும். இவ்வாறு திருத்தங்கள் செய்யப்பட்டது ஒருவரும் எதிர்பாராதது. சக்கரவர்த்தியவர்கள் ஒருபெரும் சமயத்தில் ஒரு பெருங்காரியத்தைச் செய்து அதை முக்கியமாக்கிவிட்டார். இந்தத்திருத்தங்கள் விளம்பரப்படுத்தப்பட்டதும் டில்லியில் கூடியிருந்த சகல ஜனங்களும் தர்பாரின் சிறப்பின் ஞாபகம்போய் இவைகளைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போதுண்டான மனக்கிளர்ச்சியும் பிரமையும் சந்தோஷமும் சொல்லமுடியாதென்று டில்லியில் இருந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த மகா முக்கியமான திருத்தங்களை லார்ட் ஹார்டிஞ்ஜ் பிரேரித்து லார்ட் க்ரூவுக்கு நவம்பர்மாசம் முதல்தேதி எழுத அன்றே லார்ட் க்ரூ அவைகளுக்குச் சம்மதித்துப் பதில் எழுதினார். டில்லிமாநகரம் யுதிஷ்டிரச்சக்கரவர்த்திமுதல் வெகு நூற்றாண்டுகளாய் ஹிந்துராஜாக்களின் முக்கிய ஸ்தலமாகவும் பிறகு மகமதிய அரசர்கள் அநேக நூற்றாண்டுகளாக ஆட்சிபுரிந்த ஸ்தலமாகவும் இருந்தது. பிறகு மொகலாயச் சக்கரவர்த்திகள் மகா வல்லமை யுள்ளவர்களாய் அளவற்ற செல்வமும்

கீர்த்தியும் படைத்து பல ஆடம்பரங்களுடன் ஆண்ட ராஜ ஸ்தலமாயும் இருந்தது. பிரிட்டிஷ் ராஜாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு இரண்டு தடவைகளில் ராஜ விளம்பரம் செய்யவேண்டி நேரிட்டு அதற்குப் பொருத்தமான ஸ்தலம் டில்லியைத் தவிர வேறில்லையென்று நிச்சயிக்கப்பட்டது. இப்போது ஜார்ஜ் சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி இவர்களின் மகுடாபிஷேகத்துக்கு உரித்தான ஸ்தலம் அதுவேயென்று தெரிந்தெடுக்கப்பட்டது. இத்தியாதி காரணங்களால் இந்தியாவுக்கு ராஜஸ்தலம் கல்கத்தா அல்லவானால் டில்லியைத் தவிர வேறு ஸ்தலமில்லை இப்போது இந்தியாக் கவர்ன்மெண்டும் வங்காளக் கவர்ன்மெண்டும் ஒரே இடத்திலிருப்பதால் பல நிர்வாக அசௌகரியங்கள் உண்டாகின்றனவென்று லார்ட் ஹார்டிஞ்ஜும் லார்ட் க்ரூவும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தியாக் கவர்ன்மெண்ட் டில்லிக்கு ஸ்திரமாய்ப் போய்விடுமானால் வெங்காளத்தின் அந்தஸ்து இப்போதைவிட உயரும். சுமார் 150 வருஷகாலத்துக்கு மேல் பிரிட்டிஷ் இந்தியாவின் சரித்திரத்தில் பல மேதாவிகளான பிரிடிஷ் ராஜதந்திரிகள் ராஜ்யம் நடத்தி, இப்போதும் வியாபாரம் தொழில் முதலியவைகள் விசேஷமாய் நடந்து, செல்வவான்கள் பலர் வசிக்குமிடமா யிருப்பதால் கல்கத்தா இனி பேரிலும் முக்கியத்திலும் குறைந்துபோமென்று நினைக்க நியாயமில்லை.

இந்தத் திருத்தங்களால் லார்ட் கர்ஸன் செய்த வெங்காளப் பிரிவினை முற்றிலும் மாறிவிட்டது. வெங்காளி ஜனங்கள் சென்ற ஏழு வருஷங்களுக்கு அதிகமாய் வெகு சிரமப்பட்டு முயற்சி செய்து கோரினது இப்போது கைகூடிற்று. இவர்களுக்குள் இந்த சம்பவம் அடங்காத ஆனந்தத்தையுண்டுபண்ணி யிருக்கிறதென்று நாம் நம்பலாம். பேகார், ஒரிஸ்ஸா, சோட்டா நாக்பூர் இந்த மூன்று மாகாணங்களும் வெங்காளி ஜனங்கள்போலிராமல் பேசும் பாஷைகளிலும் ஜன உற்பத்தியிலும் விவசாயம் முதலிய தொழில்களிலும் பேதப்பட்டிருப்பதால், அவர்களுக்குத் தனியான கவர்ன்மெண்ட் வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தது போல இப்போது செய்தாகிவிட்டது. கிழ் வெங்காள மகமதியர் சிறிது மனவருத்தப்படலாம். தங்களுக்குத் தனியான கவர்ன்மெண்ட் கிடைத்ததென்றும் இனி முன்னுக்கு வரலாமென்றும் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த சந்தோஷத்துக்கு இனி குறைந்த ஹேது உண்டாக வில்லையானாலும்

அவர்கள் மகத்தினர் அநேக நூற்றாண்டுகளாக ராஜ்யபாரம் செய்த டில்லிக்கு இப்போது நேரிட்ட புது மகாத்மியத்தை ஈடாகக் கொள்வார்கள்.

இப்படி சக்கரவர்த்தி தமது கவர்னர் ஜெனரலும் மந்திரிகளும் ஆலோசனை சொன்னபடி விளம்பரப்படுத்தின திருத்தங்கள் இந்தியாவில் எப்படியோ அப்படி இங்கிலாந்திலும் பிரமையை உண்டுபண்ணின. பார்லிமெண்ட்டு இரண்டு சபைகளிலும் இதைப்பற்றிப் பிரஸ்தாபங்கள் நேரிட்டன. லார்ட்ஸ் சபையில் லார்ட் லான்ஸ்டௌனும் லார்ட் கர்ஸனும் பேசினார்கள். மகா முக்கியமும் அபிப்பிராய பேதமுள்ளனவுமான இந்தத் திருத்தங்களில் மகாராஜாவை சம்பந்தப்படுத்தினது ஆட்சேபத்துக் கிடமானது. ஆயினும் இப்போது மகாராஜா இந்தியாவி லிருப்பதனாலும் அவர் இந்தியாவுக்குப் போயிருக்கும் சமயம் எல்லோரும் சந்தோஷங்கொள்ளக்கூடிய சமயமாயிருப்பதனாலும் மகாராஜாவின் வாக்கைக் கௌரவப்படுத்துவது அவசியமானதினாலும் இப்போது அவைகளைப்பற்றி விவகரிக்காமல் பின்னால் ஒருசமயத்தில் நிர்பந்தங்களில்லாமல் விவகரிக்க வேண்டியது அவசியமென்றார்கள். காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஆஸ்க்வித் இந்தத் திருத்தங்கள் முக்கியமானவை யென்றும் இவைகளைப்பற்றிவிபரங்கள் இங்கிலாந்துக்கெட்டின பிறகு பேசுதல் பொருந்துமென்றும் சொல்ல, மிஸ்டர் பானர்லாவும் அப்படியே அபிப்பிராயப்பட்டு, மகாராஜா இப்போது இந்தியாவிலிருப்பதால் பின்னால் ஒருசமயம் விவகரிப்பதே நலமென்று இருவரும் சொன்னார்கள். பத்திரிகைகள் அநேகம் இந்தத் திருத்தங்கள் நல்ல பலன்களை விளக்குமென்றே எழுதுகின்றன.

ஒரு ராஜவிருந்து
தேர்மாஜெஸ்டீஸ் வரவேற்றது.

செவ்வாயன்று சாயந்திரம் தேர்மாஜெஸ்டீஸ் ஒரு ராஜவிருந்து நடத்தினார்கள். அதில் கவர்னர் ஜனரலும் லேடி ஹார்டிஞ்ஜூம் அன்று கௌரவங்கள் பெற்றவர்களிற் பலரும் மொத்தம் 2000 பேர் வரையில் வந்திருந்தார்கள். அப்போது லார் ஹார்டிஞ்ஜ் சக்ரவர்த்தி தம்பதிகளின் சுகத்தைக்கோரிப்பேசினதில்:—"டில்லி நகரத்தில் அநாதிகாலந்தொட்டு பல படையெடுப்புகள் நேரிட்டுச் சிலர் நாசம் செய்துவிட்டுப்போக, சிலர்

ராஜ்யம் ஸ்தாபித்தார்கள். அநேக பெருங்காரியங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இப்போது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் தங்களிடத்தில் அளவற்ற அன்பும் நிஷ்டையும் வைத்திருக்கும் பிரஜைகளிடத்தில் பட்சம்பாராட்டி அவர்கள் மத்தியில் மகுடாபிஷேகம் செய்துகொள்ள வந்ததைப்போலப் பெருங்கொண்டாட்டம் எப்போதும் நேரிட்டதில்லை. சக்கரவர்த்தி விளம்பரப்படுத்தின திருத்தங்களை இந்தியாக்கவர்ன்மெண்ட்டு பக்தியுடன் ஏற்கின்றது. இவைகள் சக்கரவர்த்தியின் திருவாக்கிலிருந்து வந்தபடியினால் அவைகளின் முழுப்பலன்களையும் ஜனங்கள் உணர்வதுபோல வேறு எவர்கள் சொல்லியிருந்தாலும் உணரமாட்டார்கள். இந்திய ஏகாதிபத்தியத்தின் நல்ல ஆட்சிக்கும் வளப்பத்துக்கும் இந்தத் திருத்தங்கள் அவசியமென்று இந்தியாக் கவர்ன்மெண்ட்டு நம்புகின்றது" இப்படிப் பேசி லார்ட் ஹார்டிஞ்ஜ் சக்கரவர்த்திக்குச் சுகம் வேண்டுமென்று பிரேரித்தார்.

மகுடாபிஷேகச் செய்திகள்.

சக்கரவர்த்தி வங்காளத்தாருக்குச்செய்த சாசுவத நன்மை.

மகுடாபிஷேகமகோற்சவதினமாகிய இன்று காலமே சக்கரவர்த்திப்பெருமான் தர்பாருக்கு வருவதற்குமுன்னே ராஜப்பிரதிநிதியையும் இந்தியா மந்திரியையும் சபைகூட்டி மந்திராலோசனை செய்தாரென்று தெரியவந்ததானாலும், தர்பார் நடந்து முடியும் வரை இன்ன விஷயத்தைக் குறித்து அவர் மந்திராலோசனை செய்திருக்கக் கூடுமென்று திட்டமாய் ஊகிக்க முடியவில்லை. அதுபற்றி அவர் தர்பார் நடந்து முடிந்ததும் திருவாய்மலர்ந்தருளிச் செய்திட்ட அறிக்கை தர்பார் மண்டபத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் மனதில் ஒருவிதக் கிளர்ச்சியை யுண்டாக்கிற்று. அக்கிளர்ச்சி இப்படிப்பட்டதாகுமென்று சொல்வதற்கில்லை.

சக்கரவர்த்திப்பெருமான் வங்காளவாசிகளிடம் முதிர்ந்த பழுத்த அருள் மேலிட்டு, லார்ட் கர்ஸன் செய்து வைத்துவிட்டுப்போன வங்காளப் பிரிவினையை நாம் ரத்து செய்திருக்கிறோமென்றும், இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானத்தை கல்கட்டாவைவிட்டு டில்லிக்கு மாற்றியிருக்கிறோமென்றும், வங்காளமாகாணம் ஒரு கவர்னரின் ஆட்சிக்கு உட்படுத்

தப்படுமென்றும், அஸ்ஸாம் நாடு பண்டுபோல ஒரு சிப் கமிஷனரால் நிருவகிக்கப்படுமென்றும், பீகாரும் சோட்டா நாகப்பூரும் ஒரிஸ்ஸாவும் ஆலோசனை சபையோடுகூடிய ஒரு லெப்டினன்ட் கவர்னரின் கீழ் வைக்கப்படுமென்றும், இந்திய ஆட்சி முறையில் இப்போது நாம் செய்திருக்கும் திருத்தங்கள் இவ்விந்திய நாடு இதுவரை ஆட்சிபுரியப்பட்டு வந்ததை விட நன்றாய் ஆட்சி புரியப்படுவதற்கும், இந்தியர்கள் முன்னை விட விசேஷ சுபிட்சத்தையும் சந்துஷ்டியையும் அடைவதற்கும் ஏதுவா யிருக்கவேண்டுமென்பதே நமது மனப்பூர்வமான விருப்பமென்றும் திடீரெனத் திருவாய்மலர்ந்தருளியதைத் தங்கள் செவிநிறையக் கேட்கப்பெற்ற ஜனங்களின் மனநிலை அச்சமயம் இன்னவிதமா யிருந்ததென்று எடுத்துச் சொல்ல யாருக்குத்தான் சாத்தியமாகும்?

சக்கரவர்த்திப் பெருமான் வங்காளப் பிரிவினையானது லார்ட் கர்ஸன் காலத்தில் செய்யப்பட்ட பெருத்த ராஜ்யப் பிசகாகுமென்று உணர்ந்து அதனைத் தமது மகுடாபிஷேக மகோற்சவம் இந்தியாவிற் கொண்டாடப்பட்டசமயத்தில் ரத்து செய்துவிட்டார். சக்கரவர்த்திப் பெருமானின் இப் பெருந்தகைமைச் செயலை வங்காளத்தார் கற்பகோடிகாலத்துக்கு மறக்கமாட்டார்கள். 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தியை வங்காளத்தார் கோவிலில் வைத்துக் கும்பிடவேண்டிய தெய்வமாகவே மதிப்பார்கள். சக்கரவர்த்தி தம்பதிகள் இன்னும் சில தினங்களில் கல்கட்டாவுக்கு விஜயஞ் செய்யும்போது வங்காளிகள் அவர்களிருவரையும் தங்கள் தோளில் தூக்கிச் சுமப்பதற்குக் கூடப் பின்வாங்கமாட்டார்கள். இது நிற்க.

தர்பார் மண்டபத்தில் கிளர்ச்சி.

தர்பார் மண்டபத்தில் ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்திய ஆட்சி முறையில் இம்மாதிரி திருத்தங்கள் செய்யப்படுமென்று திருவாய்மலர்ந்தருளியபோது அம் மண்டபத்திற் கூடியிருந்த ஜனங்களுக்குள் நிகழ்ந்த கிளர்ச்சியை இங்கு ஒருவாறு குறிப்பிடுகிறோம். இனி டில்லிதான் இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானம் ஆகுமென்று கேள்விப்பட்ட மாத்திரத்தில் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த தேச மன்னர்களும், ராஜபுதனத்தைச் சேர்ந்த தேசமன்னர்களும் அடக்கமுடியாத சந்தோஷத்தை யடைந்தார்கள். மகம்மதியர்களோ பண்டைக் காலத்தில் மொகலாயச் சக்கரவர்த்தியின் ஆட்சி ஸ்தலமாயிரு

ந்த டில்லி இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானமாக்கப்பட்டுப் போயிற்றென்று இறுமாந்தே போனார்கள். அவர்கள் சென்ற சில வருஷங்களுக்குள்ளாக இந்தியாவில் பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் முடிசூட்டுக்கு ஏற்றவிடமாக இரண்டு முறை டில்லியை இந்தியா கவர்ன்மெண்டார் பொறுக்கி யெடுக்கவேண்டியதா யிருந்ததே, டில்லியை இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானமாக்கிவிட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டியதற்கு மேலாகு மென்கிறார்கள். இவ்வூரிலுள்ள பிகார் வாசிகளும் தங்களுக்கு ஓர் லெப்டினண்ட் கவர்னர் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர் பாட்னா (பாடலிபுரம்) விலிருந்து ஆட்சி செலுத்துவாரென்றும் கருதி சக்கரவர்த்திப் பெருமான் வெளியிட்ட நற்செய்தியை விருப்பாய் ஏற்று மிகுதியும் பாராட்டுகின்றார்கள். இந்தியப் பத்திராசிரியர்களின் கூடாரத்தில் உள்ள இந்தியப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் சக்கரவர்த்தி வெளியிட்ட நற்செய்தியைப்பற்றிப் பலவிதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானம் கல்கட்டாவை விட்டு டில்லிக்கு மாற்றப்பட்டிருப்பதனால் மொத்தத்தில் அநுகூலமுண்டென்றும், வங்காள மாகாணத் தலைவர் இப்போதைப் போல இனி மழுக்கடைந்து போகாமல் பிரகாசத்தை யடைந்து சுவேச்சாதிகாரம் செலுத்தக் கூடிய ஸ்திதியி லிருப்பாரென்றும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

சக்கரவர்த்தி டில்லி சென்னை டெபுடேஷன்களுக்குச் சொன்ன பதில்கள்.

டில்லி முனிசிபாலிடியும் சென்னை முனிசிபாலிடியும் டெபுடேஷன்கள் மூலமாய் சக்கரவர்த்திக்கு விஞ்ஞாபனம் செய்துகொள்ள, சக்கரவர்த்தி மனமுவந்து பதில்சொன்னதை இன்று பெயர்த்து எழுதுகிறோம். இரண்டு விஞ்ஞாபனப் பத்திரங்களிலும் சக்கரவர்த்தியினிடத்தில் பூரணமான பக்தியைத் தெரிவித்து நாம் மகுடாபிஷேகம் செய்துகொண்டதை இந்தியர்களுக்கு நேரில் அறிவிக்கும்படியாக இந்தச் சமயம் இங்கு வந்தது இந்தியரிடத்தில் அவர் வைத்திருக்கும் அருளையும் அன்பையும் காட்டுகிறதென்று சொல்லித் தம்மைப் பார்க்கும்படி இருந்த இரண்டு டெபுடேஷன்களுக்கும் அநுமதி கொடுத்தது அழியாத அந்த நன்றிக்குக் காரணமாகும்.

சொன்னார்கள். சென்னை அட்ராஸுக்குச் சக்கரவர்த்தி கூறிய பதில் நேற்று 'மெயில்' பத்திரிகையில் வந்திருக்கின்றது. ஆகையால், இரண்டு பதில்களையும் இன்று நாம் எழுதக்கூடும். டில்லி அட்ராசுக்குச் சொன்ன பதிலாவது:—

"உங்களுடைய விக்ஞாபனப் பத்திரத்தில் கண்ட வரவேற்புக்கும் நற்சிந்தனைக்கும் நானும் சக்கரவர்த்தினியும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். சில மாசங்களுக்கு முன்னால் இந்தியாவில் தோன்றும்போலிருந்த எப்போதுமில்லாத வரட்சியால் நாங்கள் இத்தேசத்துக்கு வரும் சமயம் சந்தோஷமற்றுப்போமென்று பயப்பட்டோம். ஜனங்களுடைய க்ஷேமமானது பருவமழையினாலும் பூமியின் நல்ல விளைச்சலாலும் பாதிக்கப்படுகிறபடியால் நம்பிரஜைகளின் பெரும்பான்மையோருக்கு இந்த வரட்சி துக்ககரமான ஆபத்தாய் முடியுமென்று பயந்தோம். இப்போது இந்த வரட்சியானது விஸ்தீரணத்தில் குறைந்துபோயிற்றென்றும், போக்குவரத்து வசதிகளும் பாசனவேலைகளும் அதிகப்பட்டிருப்பதால் பூர்வம் பஞ்சத்தால் ஜனங்கள் வருந்தி மாண்டதுபோல இப்போது வருந்தி மாளமாட்டார்களென்றும் சந்தோஷப்படுகிறோம். மற்ற வழிகளிலும் இந்தியாவின் விவசாயநிலைமை திருந்தியிருக்கின்றது. விவசாயிகளின் அனுஷ்டானங்கள் பழைய வழக்கத்தைப் பற்றினவாயிருந்தாலும் பொறுமையும் உழைப்பும் சாமர்த்தியமும் உள்ளவர்கள். சமீபத்தில் சாஸ்திரத்தின் சாதகங்களால் விவசாயம் நன்மைபெற்றிருக்கின்றது. பூமி வளப்பத்தை அதிகப்படுத்துவதிலும் கால்நடைகளின் வியாதிகளுக்குச் சிகிச்சைசெய்வதிலும் பூமியைப் பயிரிடுவோருக்குப் பயங்கரமான விரோதியாயிருக்கும் பூச்சிகளைக் கொல்லுவதிலும் சாஸ்திரப் பிரயோகத்தினால் பெரும் பலன்கள் பெறக்கூடுமென்று சில தினங்களாக நிரூபணமாயிருக்கின்றது. ஜனங்களுக்குள் ஐக்கிய முறையை யுண்டுபண்ணி முழுமையும் உபயோகப்படுத்தக்கூடுமானால் இத்தேசத்து விவசாய உரிமைகள் இனி பெருமையும் மகிமையும் பெறுமென்று நினைக்கிறேன்.

"எங்கள் வரவைநோக்கி உங்கள் நகரத்தை அலங்காரங்களால் தயார்செய்ய நீங்கள் செய்த முயற்சிகள் பயன்பட்டதை நாங்கள் உணர்கிறோம். சென்ற இருபது வருஷகாலமாகச் சுகாதார நிலைமையைச் சீர்ப்படுத்துவதில் நீங்கள் அசிரத்தையாயிருக்கவில்லை. உங்களுடைய வடிகால்களைச் செப்பனிட்டு நல்ல பயனைப் பெற்றிருக்கிறீர்கள். சுத்த ஜலத்தைப்பெற்று

காலராமுதலிய தொற்று வியாதிகள் தோன்றாமற் செய்ததால் அதற்கான செலவுகள் நல்ல செலவுகளாகவே ஆயின. டில்லியில் காடும் சதுப்புமாயிருந்த பூமியை விசாலமான தோட்டமாக்கி மேலாவைச் சுத்தப்படுத்தினபடியால் விஷஜுரம் எப்போதும் காணுவதுபோல் இந்த வருஷம் காணவில்லையென்று அறிகிறேன். என்னுடைய இந்தியப் பிரஜைகளுக்கு நல்ல சரீர சுகமும் பத்திரமும் உண்டாகும்படி இங்குச்செய்த மாதிரி எங்கும் செய்யப்படுமென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன். இந்தப்பயங்கரமான வியாதிகளாகிய பிளேக், விஷஜுரம், காலரா இவைகள் வாராமலிருக்கும் உபாயம் ஜனங்களாலும் அவர்களுடைய தலைவர்களாலுமே செய்யப்படவேண்டும். அதிகாரிகள் செய்யும் சாஸ்திர பூர்வமான முயற்சிகளோடு இவர்கள் மனமொப்பி ஒத்துழைக்க வேண்டும். இந்தக் கொடும்வியாதிகளின் காரணங்கள் ஸ்தல நிலைமைகளைக் கற்பதாலும் ஆராய்ச்சியினாலும் வெகுவாய் அறியப்பட்டிருக்கின்றன; ஆனாலும், இன்னும் செய்யவேண்டியதுண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக, சாமானிய ஜனங்களுக்கு அறிவையூட்டி அவர்களுடைய சாவதானத்துக்கும் க்ஷேமத்துக்கும் தகுந்த முன் ஜாக்கிரதைகளை அறிந்து அனுசரிக்க ஆரோக்கிய சாஸ்திரத்திலும் வீட்டுச் சுகாதாரத்திலும் மூலாதாரங்களை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

"உங்களுடைய பழைய கீர்த்திபெற்ற நகரத்துக்கு மறுபடியும் வரப்போவதைப்பற்றிச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தோம். இத்தேசத்தின் சரித்திரத்தில் ஞாபகமிருக்கக்கூடிய சம்பவங்களுக்கு அது ஸ்தலமாயிருந்தது. இவைகளிற் சில என்னுடைய வம்சத்தோடும் சிம்மாசனத்தோடும் நெருங்கிச் சம்பந்தப்பட்டவைகள். இனி எங்களுக்குள்ள சம்பந்தம் இன்னும் நெருங்கியதாகும். உங்கள் நகரத்தின் பூர்வ சரித்திரத்தால் அதற்கு விநோதமான கவர்ச்சி யுண்டாயிருக்கின்றது. பூர்வகாலத்து ராஜவமிசங்களின் சின்னங்கள் எங்குபார்த்தாலும் கண்ணில் விழுகின்றன. சிறப்பான மாளிகைகளும் ஆலயங்களும் காலத்தாலுண்டாகும் நாசத்துக்குத் தப்பியிருக்கின்றன. இவைகளெல்லாம் பூர்வகாலத்துப் பெருமைக்கு நிதர்சனங்கள். இந்தியாக் கவர்ன்மெண்டுக்கு ஒரு மத்தியஸ்தலமான ராஜநகரத்தை நிச்சயம் செய்ததில் இந்த பழைய நிலைமைகளும் லக்ஷணங்களும் நான் சமீபத்தில் வெளியிட்ட தீர்மானத்துக்கு முக்கிய காரணங்கள். இன்றுமுதல் இந்திய

ஏகாதிபத்தியத்துக்கு டில்லி ராஜஸ்தலமாயிருக்கும். இந்த அழகான நகரம் பஞ்சாப் மாகாணத்தில் சேர்க்கப்பட்ட 50 வருஷ காலத்தில் அதைப் பிரபலப்படுத்திச் செய்த முயற்சிகளை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதனுடைய பூர்வீக சரித்திரச் சின்னங்களைக் காப்பாற்றி டில்லி இந்திய ஏகாதிபத்தியத்துக்கு ராஜஸ்தலமாகி அதனுடைய பூர்வீக கௌரவமான நிலைமைக்கு இப்போது அதை உயர்த்த உங்கள் கவர்ன்மெண்ட் கவலைப்பட்டிருக்கின்றதையும் அறிவேன். இந்த மாறுதலால் ராஜாங்க நிர்வாகத்தில் பல புதுமைகள் செய்யும்படி நேரிடும். ஆயினும் டில்லி மாகாணக் கவர்ன்மெண்டின் முக்கிய ஸ்தலமாகவிருந்து அதனுடைய பழைய பெருமையையும் ஜனங்களின் க்ஷேமத்தையும்பற்றி ஜாக்கிரதை பெற்றதுபோல இம்பீரியல் ராஜஸ்தலமாக அதே ஜாக்கிரதையைப் பெறுமென்பதில் சந்தேகமில்லை. டில்லி இப்போது எந்த ஏகாதிபத்தியத்துக்கு ராஜஸ்தலமாயிற்றோ அதில் அமைதியும் முற்போக்கும் நீதியும் வளப்பமும் நிலைநின்று அது, உங்கள் நகரத்தின் பூர்வீகப் பேருடன் இன்னும் அதிகப் பெருமையும் மகிமையும் தங்கிய சரித்திரத்தையும் உண்டாக்குமென்று நான் பிரார்த்திக்கிறேன்."

சென்னை அட்ரஸுக்குப் பின்வருமாறு சக்ரவர்த்தி பதில் அருளினர்.—"சென்னை ராஜதானியின் ஜனங்கள் பேரால் நீங்கள் செய்திருக்கும் பக்தியும் அடக்கமுமுள்ள விக்ஞாபனப் பத்திரத்துக்கு நானும் சக்கரவர்த்தினியும் சந்தோஷப்படுகின்றோம். நமது இந்தியசமஸ்தானங்களில் பழையராஜதானியாகிய சென்னையில் வசிக்கும் ஜனங்களுடைய பக்தியால் எங்கள் மனம் நெகிழ்கின்றது. இதில் வசிக்கும் நான்குகோடி ஜனங்கள் எங்களிடத்தில் நேரான பிடிப்பிருப்பதைக் காட்ட ஒன்று சேர்ந்ததற்காக நன்றிகொள்ளுகிறோம். தென்னிந்தியாவில் பல ஜாதிமத ஜன வேற்றுமைகளைக் காட்டிக் கையெழுத்திட்டிருப்பது நீங்கள் எங்களை வரவேற்றதற்கு விலைபெற்ற அத்தாட்சியாகச் சேமிக்கப்படும். இந்தியாவுக்கு இப்போது வந்த சமயத்தைப்பற்றி நீங்கள் சொல்லியிருக்கும் வார்த்தைகளையும் 1906-ம் வருஷத்தில் சென்னையில் நாங்கள் இருந்ததை நீங்கள் பட்சமாய் நினைத்திருப்பதையும் நாங்கள் பூராவாய் அறிகிறோம். எங்களுக்கு அப்போது நீங்கள் செய்த உபசாரத்தை நாங்கள் மறக்கவில்லை. உங்களுடைய பேர்பெற்ற நகரத்தை நாங்கள் திரும்பிப்பார்க்கவேண்டுமென்று நீங்கள்

கேட்டுக்கொண்டதற்கு இணங்குமாறு எங்களுக்கு அவகாசமில்லாததைப்பற்றி நாங்கள் விசனப்படுகிறோம். இந்திய ஏகாதிபத்தியத்தில் எனக்குப் பிரியமான பாட்டியாரும் பிதாவும் காட்டின ஒற்றுணர்ச்சியையும் கரிசனத்தையும்பற்றி நீங்கள் சொல்லுவதைக் கேட்க எனக்கு ஆழ்ந்த திருப்தியுண்டாகின்றது. அவர்களுடைய உணர்ச்சிபோல என்னுடையதும் இருக்கிறதென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. என் இந்தியப் பிரஜைகளின் க்ஷேமமும் வளப்பமும் என்னுடைய மனப் பூர்வமான கவலைக்கு விஷயங்களாயிருக்குமென்று நான் சொல்ல வேண்டியதில்லை."

மகுடாபிஷேகச் செய்திகள்.

சென்னை விஞ்ஞாபனப்பத்திரம்.

இந்தவாரம் புதன்கிழமையன்று மிஸ்டர் A. E. லாஸனைத் தலைவராய்க் கொண்டுசென்று சென்னை மாகாணத்தாரது விஞ்ஞாபனப்பத்திரத்தை ஸமர்ப்பித்த சென்னை டெபுடேஷனுக்கு சக்கரவர்த்தி ஒருபதில்சொன்னார். அந்தப்பதிலில் அவர், நீங்கள் எங்களுடைய தற்போதைய இந்தியா விஜய சந்தர்ப்பத்தைச் சுட்டிப் பேசியிருக்கும் மாதிரியையும், நாங்களிருவரும் 1906-ம் வருஷத்தில் சென்னைக்கு விஜயஞ்செய்து அங்குச் சில தினங்கள் தாமதித்ததை இன்னும் மறக்காமல்ஞாபகத்தில் நீங்கள் வைத்துக்கொண்டிருப்பதாய்ச் சொல்லியிருப்பதையும் நானும் சக்கரவர்த்தினியும் மிகுதியும் பாராட்டுகிறோமென்று சொன்னதுமன்றி, அப்போது நீங்கள் எங்களிருவரையும் மனப்பூர்வமாய் நல்வரவு கூறி ஏற்றதை நாங்கள் மறந்துவிடவில்லையென்றும், இப்போது உங்கள் விருப்பம் பூர்த்தியாகும்படி பிரசித்திபெற்ற உங்கள் நகரத்துக்கு வந்துவிட்டுப் போகச் சாவகாசமில்லாமலிருப்பதில் எங்களுக்கு வருத்தந்தான் என்றும் தெரிவித்தார்.

சக்கரவர்த்தினி இந்திய ராஜஸ்திரீகளுக்குக் கொடுத்த பேட்டி.

புதன்கிழமையன்று ஜார்ஜ்சக்கரவர்த்தி வாலண்டியர் படையைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ராணுவத்தைச் சேர்ந்த இந்திய உத்தியோகஸ்தர்களுக்கும் சென்னை டில்லி டெபுடேஷன்களுக்கும் பேட்டிகொடுத்துக்கொண்டிருந்தபோது

மேரி சக்கரவர்த்தினி பெருமாட்டி டில்லி ஸர்க்கிட் ஹவுஸில் (Circuit House) தேச மன்னர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 120 ராஜஸ்திரிகளுக்குப் பேட்டி கொடுத்துக்கொண்டிருந்தார். அப்போது லேடி ஹார்டிஞ்சும், டெவன்ஷைபர் டச்சஸ் ஸூம், லேடி மாக்மோகனும் சக்கரவர்த்தினி பெருமாட்டியோடுகூடவே யிருந்தார்கள். அந்த 120 ராஜஸ்திரிகளில் விஜயநகரம் ராணி ஒருவர். அச்சீமாட்டி தமது குழந்தைகள் இரண்டையும் தமது கூடவே அழைத்துக்கொண்டுபோயிருந்தார்கள். சக்கரவர்த்தினி பெருமாட்டி அக்குழந்தைகளிரண்டையும் தம்முடைய சிம்மாதனத்தின் கீழேயே உட்கார்ந்து கொள்ளச் சொன்னார்கள். சிறிதுநேரம் பரஸ்பரம் குசலப்பிரஸ்னம் செய்துகொள்வதில் கழிந்தது. அப்பால் விஜயநகரம் ராணி சக்கரவர்த்தினியைப் பார்த்து,—

"சக்கரவர்த்தினி பெருமாட்டியின் இப்போதைய விஜயத்தை இந்திய மாதர்கள் வெகு மங்களகரமான நற்சகுன நிகழ்ச்சியாய்க் கருதுகிறார்கள். அவர்கள் சக்கரவர்த்தினி பெருமாட்டி இந்நாட்டுக்கு இரண்டாந்தடவை விஜயஞ்செய்யக் கிருபைகூர்ந்ததற்கு அப்பெருமாட்டிக்குப் போதுமானபடி நன்றிசெலுத்த முடியாதவர்களாயிருக்கிறார்கள். சக்கரவர்த்தினி பெருமாட்டி இவ் விஜயத்தால் இந்தியா முழுமையையும் கௌரவப்படுத்தி யிருப்பதோடு, இன்றைக்கும் அப் பெருமாட்டியின் முதல் விஜயத்தை மிகுதியும் பேணி ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிற இந்திய மாதர்கூட்டத்தைக் கௌரவப்படுத்தி யிருக்கிறார்கள். நேற்று சக்கரவர்த்திப் பெருமானும் சக்கரவர்த்தினி பெருமாட்டியும் நடத்திய தர்பாரை வேறெதுவும் இந்திய ஜனங்கள் மனதில் நன்றாய்ப் பதியும்படி அவ்வளவு ராஜ கம்பீரத்தோடு கூடியதாயிருக்கவில்லை. தங்களுக்கு ஒரு அரசனும் அரசியும் இருக்கிறார்களென்று இந்திய ஜனங்களுக்கு இப்போது நன்றாய்த் தெரியவருகிறது. டில்லி தர்பார் தலைமுறைக் கணக்காய் ஜனங்கள் ஞாபகத்திலிருக்கும். அது இந்திய ஜனங்கள் பிரிடிஷ் அரசரிடம் வைத்திருக்கும் மதிப்பால் ஏற்படக்கூடிய ராஜ விசுவாசத்தைக் கயிறுகட்டி இழுத்து நெருங்கிவரும்படி செய்யும். போன வருஷம் இந்த மாதவாக்கில் நான் லேடி ஹார்டிஞ்சினிடம் சக்கரவர்த்தினியின் பணி மாதர்களில் ஒருத்தியாய் இன்னும் சில இந்திய மாதர்களுடன் சேவிக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கிருப்பதாய் அப் பெருமாட்டிக்குத் தெரியப்படுத்தும்படியாய்க் கேட்டுக்கொண்

டேன். ஆனால் என் பிரேரணை ஒப்புக்கொள்ளப்படவில்லை. இந்திய மாதர்கள் தங்களுக்குச் சக்ரவர்த்தினியிடமிருக்கும் பக்தி விசுவாசத்தைத் தெரியப்படுத்திக்கொள்ள ஏதேனும் ஒருசமயம் கிடைத்தால், அம்மாதிரி சமயம் கிடைத்ததைப் பற்றி அவர்கள் கர்வங் கொள்வார்களென்று இச்சமயம் நான் உறுதிகூறத் துணிகிறேன்" என்று வெகு சாதுரியமாயும் சமயோசிதமாயும் பேசினார். அப்படி விஜயநகரம் ராணி பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த சக்கரவர்த்தினி பெருமாட்டி அந்த ராணியைப் பார்த்து டில்லிதர்பாரால் நன்மைகள் விளையுமென உங்கள் வாய்ப்படக்கேட்க எனக்குச் சந்தோஷமாயிருக்கிறதென்று சொல்லி அந்த ராணிக்கு நன்றிசெலுத்திவிட்டு அச்சீமாட்டியின் மூத்த பிள்ளையைப்பற்றி விசாரித்தார்கள். அப்போது விஜயநகரம் ராணி தமது மூத்தபையன் ஆஜ்மீர் மேயோ காலேஜில் வாசித்துக்கொண்டிருப்பதாயும் சக்கரவர்த்தினி பெருமாட்டி அந்த காலேஜுக்குப் போகும்போது அவன் அப்பெருமாட்டியை வந்து சேவாஞ்சலிசெய்து கண்டு கொள்வானென்றும் தெரிவித்தார்கள். விஜயநகரம் ராணி சக்கரவர்த்தினி பெருமாட்டியை அச்சமயம் ரூபா 2000 காணிக்கைவைத்துக் கண்டார்கள். அதனை அப்பெருமாட்டி ஏற்றுக்கொண்ட பாவனையாய்க் கையால் தொட்டுத் திருப்பினார்கள். அதன்மேல் அந்த ராணி, "சக்ரவர்த்தினி பெருமாட்டியை நேரிற்கண்டு சம்பாஷிக்கும்படியாய் இன்று நான் அடைந்துள்ள மகோன்னத பதவியையும் பெருமையையும் குறிக்கும் ஞாபகார்த்தமாய் இத்தொகையைத் தருமத்துக்குக் கொடுத்துவிடப் பிரியப்படுகிறேன்" என்று சொன்னார்கள்.

படைக்காட்சி.

இந்த வாரம் வியாழக்கிழமை காலமே படைக்காட்சி நடந்தது. சக்கரவர்த்தி தம்பதிகள், படைகள் அணிவகுத்து நிற்பதும் ராணுவகோலமாய் அணிவகுத்து நின்ற இடம்விட்டுப் பெயர்ந்து செல்லுவதுமாகிய அற்புதக்காட்சிகளைப் பார்க்கச் சரியாய் 10-மணிக்கு பரேட் கிரௌண்டுக்கு வந்தார்கள். அவர்கள் வந்துசேர்ந்ததும் மரியாதைக்குண்டுகள் போடப்பட்டன. சக்கரவர்த்தி முதலில் படைகளைப் பார்வையிட்டுவிட்டு ராயல் பிளாக் பறக்கவிடப்பட்டிருந்த இடத்தில் வந்து உட்கார, அணிவகுத்துநின்ற படைகள் இடம்விட்டுப் பெயர்ந்து ராயல்பிளாக் நாட்டப்பட்டிருந்த இடத்திலிருந்து 200 கஜ தூரம் வரையில் மார்ச்சு செய்துகொண்டு வந்தன. இந்தியச் சேனாதிபதி அப்

போது சக்கரவர்த்தி தம்பதிகளுக்கு ஜே கூறும்படி துருப்புக்களுக்குச் சொல்ல 50,000 ராணுவ வீரர்கள் தங்கள் தலைக்கவசங்களை யெடுத்துவிட்டு ஏககாலத்தில் சக்கரவர்த்தி தம்பதிகளுக்கு ஜே என்று ஜேயொலி செய்து கோஷித்தார்கள். அக்காட்சியை எதிரிலிருந்து பார்த்தவர்கள் எளிதில் மறக்கமாட்டார்கள். அது நடந்து முடிந்ததும் தேசமன்னர்கள் தங்கள் துருப்புகளைச் சக்கரவர்த்திபெருமான் முன்னே நடத்திச்சென்றார்கள். அக்காட்சியும் வெகு நன்றாய்த்தானிருந்தது. 8 வயதுள்ள பாவல்பூர் நவாப் தமது ஒட்டகைப்படையை நடத்திக்கொண்டு ஒரு ஒட்டகையின்மேல் சென்றதையும், வயதிற் சிறிய ஜோட்பூர் மகாராஜா தாம் ஏறிச்சென்ற குதிரை நான்கு கால் பாய்ச்சலில் போகத் தமது படைகளை நடத்திக்கொண்டு சென்றதையும் பார்த்திருந்த ஜனங்கள் கைகொட்டி சந்தோஷித்தார்கள்.

பட்டச்சூட்டு.

வியாழக்கிழமை இரவு ஜார்ஜ் சக்கரவர்த்தி தர்பார் சமயத்தில் கௌரவப்பட்டங்கள் அளிக்கப்பட்டவர்களில் அனேகர்களுக்குத் தர்பார் கூடாரத்தில் வந்திருந்து பட்டச்சூட்டு நடத்தினர். அக்காட்சியும் வெகு நேர்த்தியாகத்தானிருந்தது. பட்டஞ் சூட்டப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் சக்கரவர்த்தி பெருமானின் கையை முத்தமிட்டுச் சென்றது, இந்தியாவில் நடத்தப்படும் பட்டச்சூட்டுக்களில் கையை முத்தமிடுதல் கிடையாதாதலால், வேடிக்கையாகவே யிருந்தது.

ஒரு கூடாரத்தில் நெருப்பு.

தர்பார் கூடாரத்தில் பட்டச்சூட்டு நடந்துகொண் டிருக்கும்போது ஏதோவொரு கூடாரத்தில் தீப்பிடித்துவிட்டதற்கு அறிகுறியாய்ச் சீட்டிகள் அடிக்கப்பட சிலர் பயந்துபோய்த் தங்களிடங்களைவிட்டு எழுந்தார்கள். ஆனால் அந்த நெருப்பு ராயல் பாவிலியனுக்கு அப்பால் தள்ளியிருக்கும் கூடாரத்தில் பிடித்ததாய்த் தெரியவந்ததும் எல்லாருக்கும் தைரியம் உண்டாயிற்று. தீப்பிடித்த கூடாரம் இந்தியா மந்திரியின்பிரைவேட் செக்ரிடெரியாகிய மிஸ்டர் ஹாகாலின் கூடாரம். அந்தக் கூடாரத்திலிருந்த அபிஷல் தஸ்தாவேஜுகள் ஒன்றும் எரிந்துபோய்விடவில்லை. மிஸ்டர் ஹாகாலின் சொந்த சாமான்கள் சேதமாய்ப் போய்விட்டன. நெருப்பவிக்கும் துருப்புகள் உடனே வந்து அந்தக் கூடாரத்தை துண்டித்துவிட்டு நெருப்

யை அவித்தார்கள். மிஸ்டர் ஜூகாஸுக்குப் புதிதாய் ஒரு கூடாரம் அடிக்கப்பட்டது.

டில்லி புதியநகருக்கு அஸ்திவாரம்.

நேற்றுக்காலமே ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த படி சக்ரவர்த்தி தம்பதிகள் டில்லி புதிய நகருக்கு இப்போது இந்தியா கவர்ன்மெண்ட் கூடாரம் அடிக்கப்பட்டிருக்கும் இடத்தில் அஸ்திவாரக் கற்கள் நாட்டினார்கள். அப்போது மாகாண கவர்ன்மெண்டுகளின் தலைவர்களும், தேசமன்னர்களும் ராஜப்பிரதிநிதியும், இந்தியா கவர்ன்மெண்ட் மெம்பர்களும் ஆஜராயிருந்தார்கள். கட்டியக்காரர்கள் கொம்பு வாத்தியக்காரர்களோடு ஆஜராயிருந்தார்கள். சக்ரவர்த்தி தம்பதிகள் வந்து சேர்ந்ததும் கவர்னர் ஜெனராலும் இந்தியா கவர்ன்மெண்ட் மெம்பர்களும் அவரை வரவேற்றார்கள். 101 மரியாதைக் குண்டுகள் போடப்பட்டன. சக்ரவர்த்தி தம்பதிகள் அஸ்திவாரம் நாட்டப்போகிறார்களென்பதற்கு அறிகுறியாய்க் கொம்பு வாத்தியக்காரர்கள் தங்கள் கொம்புகளை எடுத்து ஊதினார்கள். உடனே ராஜப்பிரதிநிதி எழுந்துநின்று சிறிது பேசிவிட்டு, இந்தியா மகாராஜா சக்ரவர்த்தி தம்பதிகளின் விஜய ஞாபகமாகவும் இந்தியா கவர்ன்மெண்டின் ராஜஸ்தானம் டில்லிக்கு மாற்றப்பட்டதன் ஞாபகமாகவும் புதிய டில்லியில் நாட்டப்படுவதற்கு சக்ரவர்த்தியின் உருவச்சிலையொன்றை செய்துதர இசைந்திருக்கிறோமென்று தெரிவித்தார். அவர் பேசி முடிந்ததும் சக்ரவர்த்திபெருமான் சுருக்கமாய்ப்பேசிவிட்டுத் தாம் ஒருகல்லை நாட்டினார். சக்ரவர்த்தினி பெருமாட்டியும் தமது கையால் ஒரு கல்லை நாட்டினார். அவர்கள் தங்கள் கைப்பட இரண்டு அஸ்திவாரக் கற்களை நாட்டிவிட்டுத் தங்கள் இடத்துக்குத் திரும்பினதும் கட்டியக்காரர்கள் சக்ரவர்த்தியின் அனுமதியைப் பெற்று அஸ்திவாரம் நன்றாய்ப் போடப்பட்டு முடிந்ததென்று முதலில் ஆங்கிலத்திலும் அப்புறம் உருதுவிலும் பகிரங்கமாய் வெளியிட்டார்கள். கொம்புவாத்தியம் வாசிக்கப்பட்டது. பஞ்சாப் லெப்டினெண்ட் கவர்னர் சக்ரவர்த்தி தம்பதிகளுக்கு ஜே என்று ஜெயொலி செய்யச் சொல்ல அங்குக் கூடியிருந்தவர்கள் எல்லோரும் அப்படியே ஜெயொலி செய்தார்கள்.

மகுடாபிஷேகச் செய்திகள்.

இரண்டு டெபுடேஷன்கள்.

மகுடாபிஷேக மஹோற்சவத் தினத்துக்கு அடுத்த தினமாகிய இந்த வாரம் புதன்கிழமை ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு ஓய்வுநாளாய் இருந்திருக்கவேண்டுமென்று யாரும் நினைக்கக்கூடும். ஆனால் அன்றையதினம்கூட அவருக்குத் தாமே கவனித்துச் செய்யவேண்டியதாயிருந்த வேலைகள் சில இருந்தன. அன்றையதினம் காலையில் டில்லி முனிசிபாலிடியாரின் டெபுடேஷனும் சென்னை மாகாணத்தாரின் டெபுடேஷனும் தம்மைக் கண்டுவிட்டுப்போக சக்ரவர்த்திபெருமான் அந்த இரண்டு டெபுடேஷன்களுக்கும் பேட்டிகொடுத்து டில்லியார் சமர்ப்பித்த வந்தனோபசாரப் பத்திரத்துக்குப் பதில் கூறினார். டில்லி முனிசிபாலிடியாரின் டெபுடேஷனுக்குத் தலைவராய் அந்த முனிசிபாலிடி பிரெஸிடெண்ட் சென்றிருந்தார். சென்னை மாகாணத்தாரது டெபுடேஷனின் தலைமை சென்னை ஷெரிப்பும் சென்னை மெயில் பத்திரிகையின் ஆசிரியருமாகிய மிஸ்டர் A. E. லாஸனால் வகிக்கப்பட்டது. சென்னை மாகாணத்தாரின் டெபுடேஷனுக்கு ஜார்ஜ் சக்கரவர்த்தியை நேரில்பார்த்துத் தங்கள் மாகாணத்தின் வந்தனோபசார விஞ்ஞாபனப் பத்திரத்தைச் சமர்பிக்கச் சந்தர்ப்பமும் சௌகரியமும் ஏற்பட்டிருக்கவே மாட்டாது. டில்லி மகுடாபிஷேக மஹோற்சவத்துக்குச் சமீபகாலம்வரைச் சென்னைக் கவர்னராயிருந்த ஸர் ஆர்தர் லாலி போயிருந்தபடியால் சென்னை மகாணத்து டெபுடேஷனுக்கு ஜார்ஜ் சக்ரவர்த்தியை நேரில் பார்த்துத் தங்கள் விஞ்ஞாபனப் பத்திரத்தை அவருக்கு ஸமர்ப்பிக்கும்படியான சௌகரியமும் சந்தர்ப்பமும் வாய்த்தது. ஸர் ஆர்தர் லாலி ஜார்ஜ்சக்ரவர்த்தியின் திவ்யசன்னிதானத்தின் முன்னே தோன்றி அவர்களுடைய வந்தனோபசார விஞ்ஞாபனப் பத்திரத்தை ஸமர்பிக்க, சென்னை மாகாணத்தாரின் டெபுடேஷனுக்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று இந்தியா மந்திரியிடம் ஒரு வார்த்தை தாங்கிச் சொல்ல, அப்படியே அநுமதி கொடுக்கப்பட்டது. இரண்டு டெபுடேஷன்களின் விஞ்ஞாபனப் பத்திரங்களுக்கும் ஜார்ஜ் சக்கரவர்த்தி உற்சாக மூட்டும் பதில்களை சொல்ல டெபுடேஷன் மெம்பர்கள் மனவெழுச்சியோடும் முகமலர்ச்சியோடும் திரும்பினார்கள்.

புது டில்லிக்கு சக்கரவர்த்தி அஸ்திவாரம் போட்டது.

இந்த மாதம் 15-ந் தேதி காலையில் சக்கரவர்த்தி இந்தியாவுக்கு இப்போது தலைநகராய்விட்ட டில்லியில் புதுப்பட்டணம் ஒன்று நிர்மாணிக்கும் நோக்கத்தோடு தர்பார் நடந்த இடத்தில் அஸ்திவாரக்கல் நட்டார். இந்தச் சமயத்தில் லார்ட் ஹார்டிஞ்ச் பேசினதையும் சக்கரவர்த்தி பேசினதையும் கீழே வரைகிறோம். லார்ட் ஹார்டிஞ்ஜ் பேசினது:

"காரோனேஷன் தர்பாரின்போது இந்தியாவுக்கு டில்லி இனி தலைநகராகுமென்று விளம்பரப்படுத்தினதற்கு இப்போது யுவர் இம்பீரியல் மாஜெஸ்டி இந்தத் தலைநகரத்தில் புதிதாய் நிர்மாணிக்கப்படப்போகும் புதுப் பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நட இசைந்தது முத்திரை வைத்ததுபோலாகின்றது. அந்தச்சமயம் ஒப்புயர்வற்ற சிறப்புடன் நிறைவேறினதைவிட அதனால் கிளப்பப்பட்ட ராஜபக்தியினால் எப்போதும் அது ஞாபகத்திலிருக்கும். டில்லியைச் சுற்றிப் பல தலைநகர்கள் அப்போதப்போதுண்டாகி அவைகள் ஆதிகாலத்துச் சரித்திரத்தில் மறைந்திருக்கின்றன. ஆயினும் இவைகளில் எதுவும் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டி இப்போது செய்யப்போகிற சடங்குகளைவிடப் பிரகாசமான சடங்குகளுடன் உண்டானதில்லை. எதுவும் பிற்காலத்து வளப்பமும் மகிமையும் நிலைக்கும்படியான சந்தர்ப்பங்களுடன் உண்டானதில்லையென்பது நிச்சயம்.

"கல்கத்தாவிலிருந்து தலைநகரத்தை டில்லிக்கு மாற்றுவது பூரணமான கவலைபெற்ற யோசனையின்றிச் செய்யப்படவில்லை. இதுபோன்றயோசனைகள் 1868-ம் வருஷமுதல் கடந்துபோன பல தடவைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. விவாதத்துக்குரிய அம்சங்கள் பலவற்றைப்பற்றிச் சரியான அபிப்பிராயங்கள் செய்ய ஏற்கெனவே சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எந்தப் பெரிய மாறுதலும், அது எவ்வளவு நலந்தரத்தக்கதாயிருந்தபோதிலும் சில உரிமைகளுக்கு நஷ்டமில்லாமலாவது ஸ்தல உணர்ச்சிகளுக்கு விரோதமில்லாமலாவது செய்யப்படுதல் கஷ்டம். ஆனாலும் என் ஆலோசனைச்சபையிலுள்ள மெம்பர்கள்போலும் என் போலும் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியினுடைய பிரதிநிதியாக நான் பேசக்கூடுமாயின்,

எந்த மாறுதலும் இதைப்போல் பலருக்கு நன்மை செய்வதாய் இருந்ததில்லை; சிலருக்கு நேரிடுமென்று நினைக்கக்கூடிய தீங்குகள் சில காலத்துக்கு மட்டும் நேரிட்டு பின்னால் கிடைக்கக்கூடிய நன்மைகளில் மறைந்துவிடும். யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியின் மந்திரிகளுடைய ஆலோசனையின்பேரில் கான்ஸ்டிடூஷன் (ராஜாங்கமுறை) படி செய்த தீர்மானம் அதனால் அவசியமா யுண்டாகக்கூடிய மாறுதல்களோடு இந்திய ஏகாதிபத்திபத்தின் கவர்ன்மெண்ட் முறைகளில் விசாலமான முற்போக்குள்ள திருத்தமாய் முடியும்; போட்டியையும் விரோதத்தையும் இல்லாமற் செய்து, பொதுவாய் அமரிக்கையும் திருப்தியும் குடிகொண்ட சகாப்தத்தை யுண்டுபண்ணும் என்று சொல்ல விரும்புகிறேன்.

"இந்தத் தீர்மானம்செய்த விதத்தைத்தவிர, அபிப்பிராய பேதமாவது விவாதமாவது இல்லாமலும் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியின் பக்தியுள்ள பிரஜைகளிற் பல வகுப்பாரும் உற்சாகத்துடனும் விசுவாசத்துடனும் ஆதரிக்கக் கூடியபடியும் வேறு விதமாய்ச் செய்தல் சாத்தியமல்ல. இந்தக் கல்லுகள் நடப்படும் ஸ்தலத்தைச் சுற்றி நாம் நிர்மாணிக்கக் கருதியிருக்கும் மகா பட்டணமானது அதன் உற்பத்தியான சமபத்துக்கு உற்றதாயிருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். இந்த பழைய நாகரிகத்துக்கும் ஏகாதிபத்திபத்துக்கும் ஸ்தானமாயுள்ள இடத்தில் யுவர் இம்பீரியல் மாஜெஸ்டி நடும் கல்லுகளே யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியின் அருளுள்ள பிரசன்னத்திற்கும், யுவர் இம்பீரியல் மாஜெஸ்டியினுடைய பிரஜைகளுக்கு விளம்பரஞ்செய்து பிரசுரிக்கப்பட்ட மகா முக்கியமான தீர்மானத்திற்கும் அடையாளமா யிருக்கும்."

சக்கரவர்த்தியின் பேச்சாவது:—"சக்கரவர்த்தினிக்கும் எனக்கும் டில்லியைவிட்டுப் போவதற்கு முன்னால் நாம் நிற்கும் இடத்தில் நிர்மாணமாகப்போகிற பட்டணத்துக்கு அஸ்திவாரக்கல் நடக்கூடியதா யிருப்பது பெரும் திருப்தியா யிருக்கின்றது. மூன்று தினங்களுக்கு முன்னால் என்னுடைய காரொனேஷன் தர்பார் சிறப்பாயும் எங்கள் மனதில் உறுத்தும்படியாயும் இருந்த சமயத்தில் நான் செய்த முக்கியமான பிரசித்தமானது பூர்த்திபெற இது முதலெடுப்பாகும். இப்போது செய்யப்படப்போகும் பெரும் மாறுதல்களால் எதிர்பார்க்கக்கூடிய நலந்தரத்தக்கனவாய் நெடுந்தூரம் செல்லத்தக்க பலன்கள் பூர்த்திபெறுமென்றும் இந்தியாவுக்குத் திருத்

தம் பெற்ற நிர்வாகத்தையும் ஜனங்களுக்கு அதிகமான சுகத்தையும் வளப்பத்தையும் கொடுக்குமென்றும் நான் மனப்பூர்வமாய்க் கோருகிறேன். இங்கு கட்டப்படும் பட்டணத்தின் பிளானும் டிஸைனும் தக்கபடி யோசனையுடனும் ஜாக்கிரதையாயும் செய்யப்படுமென்றும் அந்தப் புது சிருஷ்டியானது இந்த அழகான நகரத்துக்குப் பொருந்தியதா யிருக்குமென்றும் கோருகிறேன். இன்று இவ்வளவு மங்களகரமாய் ஆரம்பிக்கும் வேலைக்கு ஈஸ்வரகடாக்ஷம் பூரணமாயிருக்க வேண்டுகிறேன்."

மகுடாபிஷேகச் செய்திகள்.

டிசம்பர் 18-ம் தேதி

போலிஸ் படைக்காட்சி.

வெள்ளிக்கிழமை சக்கரவர்த்தி பெருமான் டில்லி புதிய நகருக்கு அஸ்திவாரம் போட்டுவிட்டு போலீஸ் படைகளைப் பார்வையிட்டார். அவர் சரியாய்க் காலமே 11 மணிக்கு ராயல் காம்பைவிட்டுப் புறப்பட்டு போலோ கிரௌண்டில் அடிக்கப் பட்டிருந்த ராயல் பவிலியனுக்கு பிரிடிஷ் சயினியத்தைச் சேர்ந்த பீல்ட்மார்ஷல் (Field Marshal) உடையுடன் குதிரை மேல் சவாரியாய்ச் சென்றார். அவரோடுகூட கவர்னர் ஜெனரலும்போனார். சக்ரவர்த்தினிபெருமாட்டி வண்டியில் சென்றார். அவர்க ளெல்லோரையும் தர்பார் கமிட்டி பிரெஸிடெண்ட் ஸர் ஜான்ஹிவெட்டும், பஞ்சாப் லெப்டினெண்ட் கவர்னர் ஸர் லூயி டேனும், இந்தியா கவர்ன்மெண்ட் ஹோம் செக்ரிடெரி ஸர் ஆர்ச்டேல் ஏர்லும் வரவேற்றார்கள். சக்கரவர்த்தி பெருமான் போலோ கிரௌண்டை ஒரு சுற்றுச் சுற்றி வந்தார். அங்கு 2700 போலீஸ் படைகள் அணிவகுத்து நின்றன. இடது பக்கக் கோடியில் போலீஸ் பதக்கங்கள் பெறவிருந்த போலீஸ் பரேடுக்கு (Parade) பஞ்சாப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கமாண்டராயிருந்தார். படைகளைச் சக்கரவர்த்தி பார்வையிட்ட பிறகு ஒவ்வொரு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் தம் கீழ் உத்தியோகஸ்தர்களைச் சக்கரவர்த்திமுன் அவர்களுடைய பதக்கங்களைப்பெற ஆஜர்படுத்தினார். ஸர் ஆர்ச்டேல் ஏர்லும், இன்ஸ்பெக்டர் ஜெனரல்களும், பதக்கங்களைப் பெற்ற ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தரும் செய்த புகழ்ச்சிக்குரிய வேலைகளை படித்துச் சொன்னார்கள். அப்பால் போலீஸ்

படைகள் சக்கரவர்த்திக்கு ஜேயென்று ஜேயொலி செய்து ஆரவாரிக்க, சக்கரவர்த்தி பரேட் கிரௌண்டைவிட்டு நீங்கினர்.

பிரேஸ் காம்புகள்.

அன்று சாயங்காலம் ஜார்ஜ் சக்கரவர்த்தி ஐரோப்பிய பிரெஸ்காம்புக்கு ஒரு எடிகாங்கையும் இந்திய பிரெஸ்காம்புக்கு ஒரு எடிகாங்கையும் அனுப்பி மகுடாபிஷேக மகோற்சவ சமயத்தில் பிரஸ் பிரதிநிதிகள் விசேஷ ஊக்கங்காட்டிச் சலியாது அம்மகோற்சவ நடவடிக்கை விசேஷங்களைப்பற்றிப் பல இடங்களுக்குச் செய்தி யனுப்பியதற்காக அப்பிரதிநிதிகளுக்கு நன்றி செலுத்திவிட்டு வரும்படி ஆஜ்ஞாபிக்க, அவர்கள் அப்படியே செய்துவிட்டு வந்தார்கள். இந்திய பிரெஸ் காம்பில் அந்த காம்புவாசிகளின் பிரதிநிதியாய்ப்பேசிய திவான்பகதூர் கருணாகரமேனன் சக்கரவர்த்தி தம்பதிகளுக்குத் தங்களுடைய ராஜவிசுவாச வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்படி எடிகாங்கைக் கேட்டுக்கொண்டார்.

நேபாளத்துக்குப் புறப்பாடு.

சனிக்கிழமை காலையில் சக்கரவர்த்திபெருமான் நேபாள நாட்டுக்கும் சக்கரவர்த்தினி பெருமாட்டி ஆக்ராவுக்கும் புறப்பட்டுப்போனார்கள். ராஜப்பிரதிநிதி முதலான உயர்பதவி உத்தியோகஸ்தர்கள் கூடவே வந்திருந்து வழியனுப்பினார்கள். அவர்கள் புறப்பட்டுப் போகும்போது வழி நீள பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் மொய்த்து நின்று ஜேயொலி செய்து ஆரவாரித்தார்கள். சக்கரவர்த்தி பெருமானும் சக்கரவர்த்தினி பெருமாட்டியும் ஸெலிம்கார் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டுப் போகும்போது பஞ்சாப்லெப்டினண்ட் கவர்னர் ஸர் லூயிடேன் ஜேயொலி செய்யும்படி குறிப்பிட வழியனுப்ப வந்திருந்தவர்கள் எல்லோரும் ஜேயொலிசெய்து வழியனுப்பினார்கள். சக்கரவர்த்தி தம்பதிகள் வண்டியில் ஏறிக்கொள்வதற்கு முன் தங்களை வழியனுப்ப வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்களாயுள்ளவர்கள் எல்லாரோடும் கைகுலுக்கிவிட்டு விடைபெற்றுக்கொண்டார்கள். அப்புறம் சிறிதுநேரம் கழித்து ராஜப்பிரதிநிதி பாரக்பூருக்கு ஒரு ஸ்பெஷலில் புறப்பட்டுச் சென்றார்.

இந்தியா மந்திரி.

இந்தியா மந்திரி தமது பிரைவேட் செக்ரீடேரியின் கூடாரம் நிப்பிடித்ததில் தமக்கு இந்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த நல்வரவுத்தந்திகளும் கடிதங்களும் எரி

ந்துபோய் விட்டபடியால், தமக்கு அவைகளை அனுப்பினவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதில் எழுத முடியாமற் போய்விட்டதென்றும், தமக்குத் தந்திகளும் கடிதங்களும் அனுப்பினவர்களுக்குத் தாம் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துவதாகவும், அதனை எல்லோரும் அங்கிகாரம் செய்து கொள்ள வேண்டுமென்றும் சமாசாரப் பத்திரிகைகளுக்கு ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறார்.

நமது சக்கரவர்த்தி அவர்களின் மகுடாபிஷேக வாழ்த்து.

அஷ்டாவதானம்

பூவை. கலியாணசுந்தர முதலியார் அவர்களியற்றிய வாழ்த்துகலிப்பா.

ஓங்குக செங்கோல் ஓங்குக செங்கோல்
பாங்குறு முலகில் பல்லாண் டோங்குக
பாதக மடக்குப் பாங்குறு டில்லியில்
நவமணி மகுடம் நன்கு தரித்துச்
சக்கர வர்த்தியாய்த் தன்னே ரின்றித்
திக்கு முழுதுநின் செங்கோ லோங்குக
கணக்கில் லாத கப்பற் படைநிறை
அலைகடல் மீதும் ஆடுக நின்கொடி
அருந்ததிக் கொத்த அன்னையா யார்க்கும்
பொருந்திய மேரிப் புண்ணிய வதியின்
மனதுக் குவந்து மருவி வாழும்
தனதனை நேர்ந்த ஜார்ஜ்பூ பால!
வாழிநின் செங்கோல் வாழிநின் செங்கோல்
ஆழியைக் கடந்தும் ஆளுக ஆளுக
இந்திய தேயத் திருக்கு மாந்தரை
மைந்தரைப் போலவே மனத்தி னுன்னுக
பூமகள் போன்று பொறுமை யுற்றுக்
கலைமக ளென்னக் கல்வி நிறைந்து
திருமகள் நேராச் செல்வம் வாய்ந்தவெம்
தாய்விக் டோரியாள் தன்னுளம் களிக்க
வாய்மை தோய்ந்து மன்னிய பௌத்திர!
இன்பமார் எட்வர்ட் ஏந்த லோடும்

அன்புரு வான அலெக்ஜாண் ட்ரியாவும்
விரதப் பலனுய் விளங்கி ஞானச்
சாதம் அமைந்த சற்குண புத்திர!
வாழ்கநீ டூழி வாழ்கநீ டூழி
சூழ்கநின் கீர்த்தி தொல்லுல கனைத்தும்
குற்றஞ் செய்யினும் குணமாக் கொண்டு
பெற்றோர் புதல்வரைப் பேணுதல் போல
நினது குடைக்கீழ் நிலவுங் குடிகளை
அணைத்துக் காத்தல் ஐயநின் கடனே
துணைக்குனை யன்றிச் சொல்லுவ தேது
சாதி வேற்றுமை சமய வேற்றுமை
ஏதும் நோக்கா திருந்த நாளும்
நீதி யொன்றே நிலைத்து நிற்கத்
தீதில் அரசு செலுத்தி வாழும்
பாம்பரை தன்னில் பழகிய வேந்தே!
வரம்பிலாத் தேயம் வகித்தகோ மானே!
ஆங்கி லர்க்குள் அருமை மணியே!
தீங்கில் குணத்தோய்! தெய்வ கற்பகமே!
நகைமுகம் காட்டும் நற்குண நிதியே!
பகைவர் அஞ்சும் பண்புறு சியமே!
மைந்தரும் வாழ்க்கைத் துணைவியு மாக
சிந்தை மகிழ்வாய்ச் சிறந்துவா ழியவே.

தெற்கு விருதாங்கன் கிராமத்திலுள்ள வித்தியாசாலைத்
தலைமை உபாத்தியாயரால் இயற்றப்பட்டது.

ஆசிரியப்பா.

பூமகள் வாழப் புகழ்மக ளோங்க
நாமகள் துதிக்க நல்வித்தை குதிக்கச்
சிங்கப் பதாகை யெங்கும் பறக்க
ஆன்றமை செங்கோல் வான்றலத் துட்புக
வானம் வழங்க மாநிலஞ் செழிக்கக்
காவலன் மன்னர் கனிந்துவாழ்த் தெடுப்பப்
பூவின் மாந்தர் புதுக்களி கூர
வீரர்க ளார்ப்பும் வெள்வளை முரல்வும்
பேரிகைச் சத்தமும் பெருங்களிற் றொதையும்

கடவுள் வாழ்த்தைக் காட்டுமா னிரட்டும்
வெடியதிர் சும்மையும் மின்வா ளுழும்விராய்த்
திக்கெல்லாம் பரவியப் பக்கமும் செல்ல
மாகதர் வாழ்த்த வந்திபர் போற்றப்
பூகதர் யாரும் புரிந்துகொண் டாட
இன்ன வைபவத்துடன் நன்ன ரமர்ந்தாங்
காங்கில வருடத் தாயிரந் தொடர்ந்த
வெண்பா னூற்றோ டுறுபன் னொன்றில்
டிசம்பர் மதியிற் றெய்தி யீராறில்
மங்கள வாரநன் மங்கள மாகக்
கொண்டனர் தர்பார்க் கோலம் அதனைக்
கண்டவர் பண்டைநாட் காகுத்தன் கொலுவின்
மாட்சி தன்னினுங் காட்சிநன் றிண்டெனப்
போற்றிக் களிப்ப வீற்றிருந் தருளுநம்
மன்னவர் கோமான் வயக்கிழை யாய
மேரித் திருவோடும் விளங்குபல் சேயொடும்
சுற்றமுந் துணையுமா வுற்றஇப் புவியொடும்
ஊழி யூழி வாழிய நிலத்தெனை
ஆழியா னடிக்கட் டாழ்குவம் யாமே.

மகுடாபிஷேகத்துக்குப் பின்.

மகுடாபிஷேக மகோற்சவம் டில்லியில் முடிந்து போய்விட அவ்வூரை விட்டு ஜார்ஜ் சக்கரவர்த்தி நேபாளத்துக்கும், மேரி சக்கரவர்த்தினி ஆக்ராவுக்கும் சனிக்கிழமையன்று புறப்பட்டுப் போனதாக நேற்றுச் சொன்னோமாதலால் மகுடாபிஷேகச் செய்திகளென்ற தலைப்பின் கீழ் இனி நாம் எழுதுவதற்கில்லை. இன்று மகுடாபிஷேகத்துக்குப் பின் என்ற தலைப்பின் கீழ்ச் சிலகுறிப்புகளெழுதுகிறோம். அவை பின் வருமாறு:—

சக்கரவர்த்தித் தம்பதிகள் டில்லியைவிட்டுப் புறப்பட்டுப் போவதற்குமுன் சனிக்கிழமை காலையில் ஹிந்துக்கள், மகமதியர்கள், சிக்கியர்கள் இவர்களின் தலைவர்களை பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னர் சக்கரவர்த்தி தம்பதிகளுக்கு அறிமுகம் செய்துவைத்தார். முதலாவது ஹிந்துக்களின் தலைவராகிய தர்பங்கா மகாராஜாவை அறிமுகம் செய்து வைத்தார். அப்புறம் மகமதியர்கள், சிக்கியர்கள் இவர்களின் தலைவர்களை அறிமுகம்

செய்துவைத்தார். அத்தலைவர்கள் சக்கரவர்த்தி தம்பதிகளுக்குத் தாங்கள் சாகித்யஞ்செய்திருந்த ஆசீர்வசன ஸ்தோத்ரங்களை ஸமர்ப்பிக்க, அவைகளை அத்தம்பதிகள் மிகுந்த சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டார்கள்.

சனிக்கிழமை சாயங்காலமுதல் டில்லியைவிட்டு மகுடாபிஷேக மகோற்சவத்தைப் பார்க்கச் சென்ற ஜனங்கள் புறப்பட்டவண்ணமா யிருக்கிறார்கள். டில்லி ரெயில்வே ஸ்டேஷன்களில் வெளியூர்களுக்குப் புறப்பட்டுச் செல்லும் ஜனங்களின் கூட்டம் அதிகம். அன்று (சனிக்கிழமை) இரவு தர்பாருக்கு வந்திருந்த அநேக தேசமன்னர்களும் விருந்தாளிகளில் பலரும் தங்கள் ஊர்களுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். ஆஜ்மீர் மேயோ காலேஜில் வாசிக்கும் தேச மன்னர்களின் சிறுவர்கள் கூட அன்றிரவே ஒரு ஸ்பெஷலில் ஆஜ்மீருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஸர்ஜான் ஹிவெட் அன்றிரவே டில்லியைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். இந்தியா கவர்ன்மெண்ட் மெம்பர்கள் ஞாயிற்றுக்கிழமைகாலமே டில்லியைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். வங்காள லெப்டினண்ட் கவர்னர் டில்லியை விட்டு ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் 2-37 மணிக்குப் புறப்பட்டார். பம்பாய்க் கவர்னர் சனிக்கிழமை சாயங்காலம் 4-55 க்கு டில்லியைவிட்டுப் பிரயாணமானார். பர்மா லெப்டினண்ட் கவர்னர் ஞாயிற்றுக்கிழமை காலமே 11 மணிக்குக் கல்கத்தாவுக்குப் பிரயாணமானார். கீழ்வங்காள லெப்டினண்ட் கவர்னர் நேற்று முற்பகல் 10-30 மணிக்கு டில்லியை விட்டு கல்கத்தாவுக்குப் புறப்பட் டிருக்கவேண்டும். பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னர் நேற்று இரவு டில்லியைவிட்டு இன்று காலமே லாடியானு போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். சென்னைக் கவர்னர் டில்லியை விட்டு இப்போது புறப்பட்டாரென்று தெரியவில்லை. ஆனால் அவர் நாளை வியாழக்கிழமை காலமே சென்னை வந்து சேரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சக்கரவர்த்தினிப் பெருமாட்டி சனிக்கிழமை பிற்பகல் 1-30-க்கு ஆக்ராவுக்குப் புறப்பட்டுச் சென்றதாய்ச் சொன்னோம். அங்கே அப்பெருமாட்டியை ஆக்ரா டிவிஷன் கமிஷனர் தமது சிங்கார மாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். அன்று சாயங்காலம் அப்பெருமாட்டி தாஜ்மஹாலைப் பார்வையிட்டார்கள். பிறகு அக்கம்பக்கங்களிலுள்ள சிறு

பெரு மன்னர்களுடைய சமஸ்தானங்களைத் தரிசித்து மகிழ்ந்தனர்.

டில்லி நகரம்.

டில்லி:—கி. மு. 50-வது வருஷத்தில் டில்லு என்ற ராஜாவால் இந்நகரம் ஸ்தாபிக்கப்பட்டபடியால், இதற்கு டில்லி என்ற நாமம் வழங்கி வருகிறது. கி. பி. 1640 - ல் ஷாஜிஹானால் டில்லிப்பட்டணம் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. இதில் சிவாஜிகானுவும் ஹுமாயூனின் மசூதும், கோட்டைக்கு எதிரிலுள்ள ஐம்மா மஸ்ஜிதும், உலகத்திலுள்ள ஸ்தம்பங்களுள் மிக்க உயர்ந்ததென்று சொல்லப்படும் 238 அடி உயரம் உள்ள குதுப்மினாரும், குட்ஸியா தோட்டங்களும், மோரி கேட்டும் பார்க்கக்கூடிய விசேஷங்களாகும். க்வீன் விக்டோரியா அரசாட்சிக்கு முந்தி இந்த டில்லி நகரைச் சுல்தான் ரிஜியா என்ற பெண் அரசி ஆண்டுவந்தாள். டில்லிப்பட்டணம் வியாபாரத்தில் சிறந்தது. 1908-ம் வருஷத்தில் மின்சாரவண்டிகள் ஏற்பட்டன. 1901-ம் வருஷத்திய கணக்குப்படி டில்லியின் ஜனத்தொகை, 1,14,417 ஹிந்துக்களும், 88,460 மகம்மதியர்களும், 5,698 கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் என்று சொல்லப்படுகிறது.

டில்லியில் யமுனாநதிப்பாலம்:—டில்லிக்குப் பக்கத்தில் யமுனாநதிக்குக் கட்டப்பட்ட பாலத்தின் நீளம் 2640 அடி. 211½ அடியுள்ள 12 வளைவுகள் இருக்கின்றன. இப்பாலத்தின் மேல் ரயில் ரோட்டும் கீழ்ப்பாகத்தில் வண்டிப்பாதையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப் பாலம் கட்டி முடிப்பதற்குச் செலவான தொகை 16,60,355 ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தப்பாலம் 1867 வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியில் கட்டப்பட்டது.

புதிய டில்லிமாநகரம்.

இப்போது கல்கத்தாவிலிருக்கும் ராஜப்பிரதிநிதியவர்களுடைய வாசஸ்தானம் ஆபீஸ் முதலான கட்டடங்கள் சுமார் 12 லக்ஷம் ரூபாய் விலையுள்ளவைகளாக மதிப்பிடப்பட்டிருக்கின்றன. இனி டில்லிப்பட்டணம் ராஜப்பிரதிநிதியின் தலைநகரமாக்குவதற்கு ஆறு அல்லது ஏழு கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே டில்லிப்

பட்டணத்திற்குச் சமீபத்தில் ஓடும் யமுனா நதிக்கரை ஓரம் சுமார் 150 சதுரமைல்களுள்ள இடத்தைச் சேகரித்து அங்கு ராஜப்பிரதிநிதியவர்களின் வாசஸ்தானமும் அவர்களுடைய சிப்பந்திகளுக்கு வாசஸ்தானங்களும் ஆபீஸ் முதலான கட்டடங்களும் சுகாதார சாஸ்திரோக்தமாகவும் சிற்பாலங்கார சாஸ்திரோக்தமாகவும் கட்டுவிக்கச் சீமையிலிருந்து சில இன்ஜினீயர்களையும் சிற்பசாஸ்திரிகளையும் டில்லிக்கு அனுப்ப உத்தரவு செய்திருப்பதால் இனி அவர்கள் கூடிய சீக்கிரம் வந்து டில்லியை ஓர் அற்புத புதுப்பட்டணமாக நிர்மாணிக்கப்போகின்றனர். அப்போது டில்லிபட்டணம் இப்பூலோகத்திலுள்ள பிரபல பட்டணங்களில் ஓர் சிறந்த பட்டணமாகப் பிரகாசிக்கும்.

இப்போது சிரேஷ்ட தேசாதிபதியவர்களுடைய வாசஸ்தானத்திற்காகவும் மற்ற சிப்பந்திகளுடைய வாசஸ்தானமாகவும் ஆபீஸ்களுக்கும் தக்க கட்டடங்களைப் பழைய பட்டணத்தில் தயார் செய்துகொண்டிருந்தாலும் புதுப்பட்டணத்தைக் கட்ட மிஸ்டர் ஸ்விண்டன், மிஸ்டர் பிரௌன் முதலான சிற்பசாஸ்திரிகளும் இன்ஜினீயர்களும் சுகாதார டாக்டர்களும் அநேகர் சீமையிலிருந்து வந்து புதுநகர நிரூபண இடத்தையும் நிலவளம் நீர்வளம் முதலான சாதனங்களையும் பார்த்து பிளான்கள் தயார்செய்து வருகிறார்கள். தயார்செய்து வந்ததில் இப்போதிருக்கும் டில்லிமாநகருக்குத் தென்மேற்கும் யமுனாநதிக்கரைக்கு மத்தியிலுள்ள மேட்டாந்தரையில் ஸ்ரீ கவர்னர் ஜெனரலவர்களுடையவும் செக்ரிடேரிகளுடையவும் சேனுவீரர்களுடையவும் மற்றப் பெரிய உத்தியோகஸ்தர்களுடையவும் வாசஸ்தலங்களையும், பிறகு வடக்கே வரவர கச்சேரி ஆபீஸ்களையும் கட்டி இக்கட்டடங்களுக்கும் பழைய டில்லி நகரத்திற்கும் இடையில் ஓர் அலங்கார உத்யான வனத்தையும் ஸ்தாபிக்கத் நிர்மானித்திருக்கிறார்கள். இப்படிக் கட்டப்படும் கட்டடங்கள் இரண்டரைமைல்நீளமும் 4 மைல் அகலமுமுள்ள இடத்தில் அமைக்கப்படும். இடையில் அநேக புகைவண்டிகளும் மோட்டார்வண்டிகளும் குதிரைவண்டிகளும் போக்குவரவு செய்ய அகலமும் விசாலமுமான வீதிகளையும் எலெக்ட்ரிக் ஸ்காந்த விளக்குகளையும் தண்ணீர்க்குழாய்களையும் ஸ்தாபிக்கலாகும். இப்போது இப்படிப் புதுக் கட்டிடங்களைக் கட்டுமிடமே பூர்வம் இந்திரப்பிரஸ்தமிருந்த இடமென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் இப்போது கட்டும்

ஸ்ரீ ஜார்ஜ் மாநகரம் ஜெகத்தில் ஓர் பிரபல பட்டணமாகிப் பல்லாயிரம் பிரஜைகளுக்குப் பல சுகவாழ்வுகளைப் பிரசாதிக்கு மென்பது திண்ணம் திண்ணம்.

இப்படி ஒருகாலத்தில் அதிக பிரபலமாக இருந்து சுமார் 54 வருஷங்களாகப் பஞ்சாபு மாகாணத்தின் ஒரு ஜில்லாவாக மாற்றப்பட்ட இந்த டில்லிமாநகருக்கு நல்லகாலம் இப்போது உண்டாகி இது இப்பிரபஞ்சத்தில் ஓர் பிரபல பட்டணமாகப் பிரகாசிக்கச் சம்பவித்தது. எப்படியெனில்,

ஸ்ரீ ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்களுடைய நியமனப்படி டில்லிப் பட்டணத்தைக் கைக்கொண்டு செங்கோல் செலுத்த 1912-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 23-ம் தேதி கனம் சிரேஷ்ட தேசாதிபதியவர்களாகிய ஹார்டிஞ் பிரபு தம் பரிவாரத்துடன் 50 யானைகள்மீது பவனியாக சண்டி. சவுக்கு வீதியில் வருகையில் யாரோ ஒரு கொடும்பாவி ஒரு வெடி குண்டை வீச அதுவெடித்து பூச்சக்கிரக்குடையைப் பிடித்துக்கொண்டு போன ஒரு ஜமேதாரைக்கொன்றதன்றியில் சிரேஷ்ட தேசாதிபதி லார்ட் ஹார்டிஞ் அவர்களுக்கும் இரண்டு மூன்று இடங்களில் காயம் உண்டாக்கியதைக் கேட்டு மிகவும் விசனிக்கிறோம். இப்போது தினேதினே சுகம்பெற்றுவருவதைக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். மகா தருமப்பிரபுவும் ஜனோபகாரியுமாகிய ஸ்ரீ ஹார்டிஞ்சு பிரபுவுக்கு அநியாயம்செய்த கொடிய பாதகர்கள் பிடிக்கப்பட்டுத் தக்கபடி சிக்ஷிக்கப்படுவார்களென்பது திண்ணம்.

இப்படி ஊர்கோலத்தில் வம்புகள் விளைந்தாலும் மற்ற உத்தியோகஸ்தர்கள் அதைக் கிரமமாக நடத்திக்கொண்டுபோய்த் தக்குமிடம்சேர்ந்து பஞ்சாப் கவர்ன்மெண்டாரிடம் சுமார் 54 வருஷங்களாக இருந்த டில்லிப்பட்டணத்தை இந்தியா கவர்ன்மெண்டார் அன்றுமுதல் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள். தெய்வானுகூலத்தினால் தேக சுகத்தைப்பெற்ற ஸ்ரீ ஹார்டிஞ் பிரபு அவர்கள் 1913-ம் வருஷம் ஜனவரி மாதம் 27-ம் தேதி டில்லிமாநகரில் முதல்முதல் கூடிய சிரேஷ்ட சட்ட நிரூபண சபைக்கு வந்திருந்து உபந்நியாசம் செய்து ஜனசமூகத்தாரை சந்தோஷமடையச் செய்தனர். டில்லி பட்டணமே உனக்கு மங்களம் உண்டாவதாக.

இந்த டில்லியானது பம்பாய் பரோடா மத்திய இந்தியா, கிழக்குஇந்தியா, வடமேற்கு இந்தியா, அயோத்தியா ரோஹில்

கண்டு, பெரிய இந்திய ரெயில்வண்டி ரோட்டுகள் சேரும் இடம். இது கல்கத்தாவுக்கு 903 மைல்கள் தூரத்திலும், பம்பாயிக்கு 957 மைல்கள் தூரத்திலும் ஆக்ராவுக்கு 122 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. இவைகட்கு முறையே மூன்ரும் வகுப்புக்கு 8-1-6, 9-15-0, 8-1-0, 1-15-0, சார்ஜ் ஆகிறது. சென்னைக்கு 1569 மைல்கள் தூரத்திற்கு மூன்ரும் வகுப்பிற்கு ரூபா 23-2-8 சார்ஜ் ஆகிறது. மேலும் இந்த டில்லியிலிருந்து ஆல்மோராவழியாக ஒரு ராத்திரி பிரயாணத்தில் ஹரித்வாரத்திற்குப் போகலாம்.

டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு டில்லியை விட்டுப் புறப்பட்டுப் பனியில் அவஸ்தைப்பட்டு ஜனவரி மாதம் 30௳ சனிக்கிழமை காலை 10 மணிக்கு வந்து (Bindiko) பாண்டிகு ஸ்டேஷனில் இறங்கினேம். இந்த ஸ்டேஷன் பெரிதாக விருந்தாலும் பிரயாணிகள் வண்டிவிட்டிறங்கும் இடம்அநுகூலமானதல்ல; மேலும் அங்கு விசேஷமான போஜன பதார்த்தங்களகப்படாமையாலும், சமயல்செய்யப் போதுமான காலமில்லாமையாலும், தந்தசுத்தி செய்துகொண்டு தண்ணீர் குடித்துத் திருப்தியடைந்தோம். பிறகு மத்தியானம் இரண்டு மணிக்கு ஆள் ஒன்றுக்கு 12 அணு 6 பை வீதம் ஜயப்பூருக்கு டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு வண்டியேறினேம். வண்டி சிற்றிருப்புப்பாதை வண்டி யாகையால் கும்பலதிகம். இந்த வண்டியில் பிரயாணம்செய்த ஒரு ஐரோப்பிய துரைமகன் எம்மிடத்தில் அதிகபிரியமுடன் பேசி எமது குளிரைத் தீர்த்துக்கொள்ளும்படி ஒரு புகைச் சுருட்டைக் கொடுத்தார். பிறகு ஐந்தரைமணிக்கு ஜயப்பூர் ஸ்டேஷனி லிறங்கினேம். இந்த ஸ்டேஷன் சிறியதாக விருக்கினும் சிங்காரமானதாக விருக்கிறது. உடனே இரண்டு கோச்சு வண்டிகளுக்கு வண்டி ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வாடகைபேசி ஏறி நகரத்துக்குள்போக வழியில் சுங்கச் சாவடிக்காரன் தடுத்து எமது சாமான்களைப் பரிசோதித்து 8 அணு சுங்கம் வாங்கிக்கொண்டான். பிறகு சுமார் இரண்டு மைல்தூரத்திலிருக்கும் ஜயப்பூரில் (Nath Mull Jahar Makkan) ஸ்ரீநாத்முல் ஜஹார் மக்கான் என்னும் பிரம்மாண்ட சிங்காரவன சத்திரத்தில் 8 மணிக்கு இறங்கி, சாமக்கிரியைகளைத் தயார்செய்து சமைத்துச் சாப்பிட்டு உறங்கினேம்.

ஜயப்பூரின் பூர்வசரித்திரம்.

இந்த ஜயப்பூரானது இராஜபுட்டாணா மார்க்கத்தைச் சார்ந்தது. இந்த மாகாணம் ஆக்ராவுக்கு மேற்கும், பஞ்சாபுக்குத் தெற்கும், 18 சுதேச குருநிலமன்னர்களுடையதாயும் ஏறக்குறைய சென்னை இராஜதானியின் அளவுள்ளதாயும் சுமார் 1,20,00,000 ஜனங்களுடையதாயும், ஆரவல்லி மலையினால் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டதாயும் குவாலியூர், பரதப்பூர், அல்வார், அஜ்மீர், மைர்வாரா, உதயப்பூர், ஜயப்பூர் என்னுஞ் சிறந்த நாடுகளை யுடையதாயும் இருக்கிறது. இந்நாடுகளில் குவாலியூர், பரதப்பூர், ஆல்வார் நாடுகளைப்பற்றி ஆக்ரா பட்டணத்தின் வைபவத்திற்கு அடியிற்சொல்லியிருக்கிறோம். இப்போது இராஜபுட்டாணா மாகாணத்திற் சிறந்து பிரகாசிக்கும் ஜயப்பூரின் பெருமையைச் சொல்லிவிட்டு, பிறகு மற்ற அஜ்மீர் முதலான இராஜ புத்திரர்களுடைய நாடுகளை விவரிப்போம். இந்த இராஜபுட்டாணா மாகாணம் ஒரு காலத்தில் மஹா சுத்த வீரர்களான இராஜபுத்திரரென்னும் இந்த அரசர்களாற் கப்பிரமாக ஆண்டுவந்து பிரபஞ்சம் எங்கும் புகழ்ப் பெற்றது. நிற்க,

சூரியவம்சத்து இராஜாதி ராஜராகிய ஸ்ரீராமருடைய இரண்டாவது குமாரராகிய குசல மகாராஜருடைய சந்ததிகளில் சிறந்த அம்பரீஷமகாராஜன் பலவருஷங்களாண்டுவந்த காலத்தில் க்ஷத்திரியராகிய இந்த ராஜபுத்திரர்கள் ஒருவரோடொருவர் பிரமாத சண்டைகள் செய்துவந்து கடைசியாக கி. மு. 967 வது அந்தக் குசலருடைய சந்ததியாகிய (Dhola Rai) டோலா இராயகாலத்தில் டூண்டார் என்னும் அம்பர் கோட்டையைப் பலப்படுத்திக் தமக்கு எதிரிகளாகவிருந்த மீனுஸ், பில்குதுர்களை வென்று ஜயசீலராக விருந்தார். இவர் சந்ததிகளும் ஒருவரோடொருவர் சண்டை செய்துகொண்டு வரவே கி. பி. 1200 வருஷம் டில்லி அரசனாகிய அலாவுதீன் பட்டாணி பெருஞ் சேனையோடுவந்து சண்டைசெய்து ஜெயித்தவா இந்த இராஜபுத்திர அரசன் பேபருடைய சகாயத்தால் மறுபடியும் அம்பர்கோட்டையைத் தம்வசப்படுத்திக்கொண்டு 1532 வது உமாயூன் சக்கரவர்த்தி காலத்தில் 50,000 ஜனங்களுக்குத் தலைவனாக மங்காத புகழைப்பெற்றுப் பிரகாசித்தான். இந்த க்ஷத்திரிய ராஜனுடைய சந்ததியான ஆக்பரின் குமாரனாகிய சலீம் அல்லது ஜிஹாங்கிருக்குத் தனது குமாரத்தியை

விவாகம்செய்துவைத்தான். இவனுடைய குமாரத்திக்குப் பிறந்த குஷ்ரூ என்பவன் தன் பாட்டனாகிய ஆக்பருடைய சக்கரவர்த்தியின் சிங்காசனத்தில் ஏறப் பிரயத்தனப்படவே, இராஜபுத்திரர்களுக்கும் மகம்மதியர்களுக்கும் பிரமாத சச்சரவுகள் உண்டாகி, குஷ்ரூ என்பவன் ஜெயிலில் போடப்பட்டு பாஜிறானால் கொல்லப்பட்டான். அவனது தாயார் பாஷாணத்தை உண்டு இறந்தாள். இதனால் இராஜ புத்திரர்கள் மறுபடியும் கலகங்கள்செய்து இவர்களில் மகா வீரதீரனாகிய ஒருவன் மறுபடியும் அம்பர்கோட்டையைப் பிடித்து ஆண்டு வந்தான். அவன் செய்யும் சண்டைகளிலெல்லாம் ஜெயசீலனாகிச் சிறந்து விளங்கியபடியால், அவனுக்கு ஜெயசிங்கு மகாராஜன் என்கிற பெயருண்டாயிற்று. அரங்கஜீபு சக்கரவர்த்தியானவன் தன் சகோதரனாகிய டோரா என்பவனால் கஷ்டப்படும்போது அந்த ஜெயசிங்கு ராஜனுடைய உதவியால் டோராவை ஜெயித்தபடியால், இந்த ஜயசிங்குக்கு 7000 போர்வீரரைக் கொடுத்துப் பிரதிஷ்டை பண்ணினான். இந்த ஜயசிங்கு மகாராஜன் இறந்தபோது, அவனது குமாரனாகிய இரண்டாவது ஜயசிங்கு மகாராஜன் பட்டத்தைப் பெற்றுப் பிரபலமாகவிருக்கவே, அரங்கஜீபின் குமாரர்களான அஜீம் மோஜீம் என்னும் சகோதரர்கள் சிங்காசனத்துக்குச் சண்டை செய்யவே பட்டத்துக்குப் பாத்தியஸ்தனான அஜீமுக்கு உதவி செய்து வந்தும், அஜீம் இறந்துவிட்டபடியால், மோஜீம் என்பவன் அந்த ஜயசிங்கு ராஜனையும் அவனைச் சார்ந்த இராஜபுத்திர வீரர்களையும் கஷ்டப்படுத்தியதால் அவர்கள் ஒருமிக்கத் திரண்டு சண்டை செய்து பிரோகஷியரைச் சிங்காசனத்திலேற்ற உதவிசெய்து சாமர்த்தியத்தைக் காட்டிவந்தாலும், இந்த பிரோகஷியரும் கொல்லப்பட்டமையால் ஜயசிங்கு மகாராசன் அம்பர் கோட்டைக்கு வந்து பூர்வ சுதந்திரங்களை யனுபவித்துக்கொண்டுவந்தான். அவன் டிலராய் சந்ததியில் 30-வது சந்ததி. டில்லி மகமது சக்கரவர்த்தியினால் ஸவாய் என்னும் பிருதையும் பெற்று 1699வ௵ பட்டத்துக்கு வந்தான். அந்த ஜயசிங்கு மகாராஜன், சிறந்த ககோள சாஸ்திரநிபுணனானமையால் அப்பிரோகஷியருக்குப் பதிலாகச் சிங்காசனமேறிய மகமதுஷா என்பவன் ஜயசிங்குராஜனைத் தக்கபடி மரியாதை செய்து தனது ராஜாங்கத்தில் வழங்கும் ஜோதிட சாஸ்திரங்களைச் சீர்திருத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, காசி, மதுரை, டில்லி, உஜ்ஜயினி முதலானவிடங்களில் பிரம்மாண்ட உயரமான ஜோதிட சாஸ்திர மண்டபங்களைக் கட்டுவித்து அநேகபஞ்சாங்கங்களைத்

திருத்திச் சக்கரவர்த்தியின்பெயரால் (Zig Mohamad Sahib) ஜிக் மகமது சாகிப் என்னும் ககோள கணித கிரந்தம் தயார் செய்து இதைச் சரிபார்த்துத் திருத்துவதற்குத் தனது அம்பர்கோட்டையின் மலையடிவாரத்தில் 1728ல ஒரு நக்ஷத்திர மண்டபங் கட்டி, அதைச் சுற்றிலும் சிற்பசாஸ்திரமும் வெட்கப்படும்படியான சிங்கார பட்டணத்தை யுண்டாக்கி, அதற்கு ஜயப்பூர் என்கிற தனது பெயரு மிட்டான். இந்தப்பட்டணம் செல்வத்திலும், சுகத்திலும் சிறந்து விளங்கியதனால், வடக்கே டில்லிமுதலான விடங்களில் ஜயசிலர்களாகவிருந்த மகாராஷ்டிரர்களும், அவர்களதிபனுகிய சிந்திபாவும் ஜயப்பூரை நாடி வந்து சண்டைசெய்து தனக்குக் கீழ்ப்பட்டுக் கப்பம்கட்டும்படி பாதிப் பாகத்தைக் கேட்கவே, பக்கத்திலிருந்த மால்வார் நாட்டுக்காரர் வந்து அவனைத் தோற்கடித்து கி. பி. 1790ல இந்தப் பாகத்தை வசப்படுத்திக்கொண்டு வாடகைக்குவிட்டுக் கப்பங் கேட்டார்கள். இந்தக் காலத்தில் துக்கோஜி ஹோல்காரரும் பல மகாராஷ்டிரர்களோடு படையெடுத்துவந்து மற்றப் பாதிப்பாகத்தைப் பிடித்துத் தமக்குக் கப்பங் கட்டும்படி கேட்டுக் கடைசியாக அமீர்கானுக்கு விட்டுவிட்டார்கள். இந்தக் காலத்தில் ஜயப்பூரின்மேல் பலரும் படையெடுத்துப் பங்கப்படுத்த ஜெயசிங்கு ராசனுக்கு டில்லியிலிருந்த மகமதியர்களுடைய சகாயமில்லாமற் போகவே 1803 வருஷம் ஆங்கிலேயருடைய உதவியை நாடினுன்.

ஜயப்பூரின் மத்தியகால ஸ்திதி.

இந்த உதவிக்கு லார்டுலேக் (Lord Lake) சஹகாரியாக விருந்தும், சர் ஜார்ஜு பார்லோ என்னும் கவர்னர் ஜனரல் சம்மதிக்காமையால், மகாராஷ்டிரர்கள் மறுபடியும் வந்து தாக்க, அந்தக் காலத்தில் ராசனுகவிருந்த ஜகத்சிங்கு மகாராசன் 1818ல மறுபடியும் அங்கிலேயரை உதவியாக நாடினுன். அங்கிலேயர் ஒத்துக்கொண்டாலும் இராஜ்ஜியத்தில் கலகங்கள் நிற்கவில்லை. இந்தச் சமாதானமான ஒரு வருஷத்துக்குள் ராசனும் இறந்துபோக, அவர் மனைவி கற்பத்திலிருந்த புத்திரன் 1819ல முதல் 1830ல வரையில் 2-வது இராம்சிங்கு பிறந்த பிறகு பேருக்குமாத்திரம் பட்டங் கட்டப்பட்டு மஹாராணியே இராஜ காரியங்களைப் பார்த்துக் கொண்டுவந்து, 1831ல அந்த இராஜமகிஷியும் இறந்துபோக,

இராஜ்ஜியத்தில் பிரம்மாண்டமான கலகங்களுண்டாகிக் குடிகள் பலவிதமாக வருந்தவே, அங்கே ஒரு பட்டாளமிருக்க வேண்டுமென்று ஸ்தாபிக்கப்பட்டாலும், சுற்றுப் பக்கத்துத் தாகூர்கள் சதிமோசங்களைச் செய்தும் மந்திரியின் சகாயத்தினால் பல அக்கிரமங்களைச் செய்தும் கவர்னர் ஜனரலுடைய ஏஜண்டுகளாகிய மேஜர் அவ்விஸ், பிளாக் என்பவர்களைக் கொல்லப் பிரயத்தினப்பட்டு, மிஸ்டர் பிளேக்கைக் கொன்றுவிட்ட தன்றியில் மந்திரியே வாலிபனை இராஜனை பாஷாணமிட்டுக் கொல்லும்படி செய்துவிட்டான். இந்த இராஜனுக்கு ஒரு சிறு ஆண் குழந்தையிருந்தும் பட்டத்தை வகிக்க யாருமில்லாமற் போய்விட்டார்கள். ஆகவே, ஆங்கிலேயர் இராஜகுமாரனைத் தங்கள் போஷணையில் வைத்துக்கொண்டு, ஆங்கிலேயப் பத்ததிப்பிரகாரம் கச்சேரி கோர்ட்டு தருமவைத்தியசாலைகள் முதலானவைகளை ஸ்தாபித்துக் கலகங்களை யடக்கிக் கந்தாயத் தொகையைத் தக்கபடி வசூல்செய்து பழைய மந்திரி ராஜனுக்குக் காட்டாயல் புதைத்து வைத்திருந்த 7,32,414 ரூபாயைக் கண்டுபிடித்து, இராஜகடன்களைத் தீர்த்து 1845-46-ம் வருஷத்தில் 5,14,012 ரூபாய் வரையில் அதிக வரும்படியைக் காட்டி வாலிபராஜன் தனது 18-ம் வயதாகிய உடனே 1851வருஷம் சிங்காசனத்திலேற்றி இராஜ்ஜியத்தைச் சுவாதீனப்படுத்திச் சுகபரிபாலனம் செய்துவரும்படி செய்தார்கள். இப்போதிருக்கும் இராஜராஜேந்திர ஸ்ரீ மஹாராஜாதி இராஜாவே, ஸர். மாதோ சிங்கு பஹதூர் G.C.S.I., G.C.I.E., கச்சவ ராஜபுத்திரர் 1860வருஷம் இராஜா குடும்ப தாகூர் பகர்நாத் சிங்கின் குமாரர். இறந்த இராமசிங்கு ராஜா சுவீகாரம்செய்து 1880வருஷம் செப்டம்பர்மீ 24உ மைனர் ராஜாவாகி 1882வருஷம் செப்டம்பர்மீ பட்டமேறினார். இவர் பிருந்தாவனத்தில் நேர்த்தியான கோயிலையும், ஜயப்பூரில் மேயோ (Mayo) ஆஸ்பத்திரியையும் ஸ்படிகக்கற்களால் கடியாரக்கூண்டோடு கட்டுவித்ததன்றியில், தமது தாலுக்காக்களில் 26 சிறு ஆஸ்பத்திரிகளையும் கட்டியிருக்கிறார். ஜயப்பூர்மஹாராஜா காலேஜ் அலஹாபாது சர்வகலாசாலைஅல்லதுசிற்பசாஸ்திரசாலையில்பற்பல கைத்தொழில்களும் தருமமாகக் கற்பிக்கிறார். பெரிய தரும புஸ்தகசாலையையும் ஸ்தாபித்திருக்கிறதன்றியில், நகருக்கு வெளியில் 70 ஏகராவில் உத்தியாவனத்தை 4,00,000 ரூபாய் செலவிட்டு அதை வருஷம் 1-க்கு 30000 ரூபாய் செலவில் காப்பாற்றியிருக்கிறார். பிரின்ஸ் அப் வேல்ஸ், இங்கே வந்தகாலத்தைக் குறிக்க (Alburt Hall) ஆல்பர்ட்டு ஹாலை 5,00,000 ரூபாயில் ஸ்படி

சக்கரங்களால் கட்டிவைத்தார். தமது அரண்மனையில் ஒரு அறையில் 15 வருஷகாலமாகச் சித்திரங்கள் எழுதிவைத்து வருகிறார். அரண்மனையில் 300 குதிரைகளும் 50 யானைகளும் சிறுத்தைகளும் புலிகளும் இருக்கின்றன. இவருக்கு வேட்டையில் பிரியம் அதிகம். முக்கியமான வீதிகள் இரண்டு மைல் நீளமும், 111 அடிகள் அகலமுமுள்ளதாக இருக்கின்றன. இந்த ராஜா டிராப் சிட்ரல் (Tirab Cietrol) சண்டைக்கு 922 பதாதிகளையும் 1105 குதிரைகளையும் 491 வண்டிகளையும் ஆங்கிலேயருக்கு உதவியாக அனுப்பினார். இந்தியாவில் நேர்ந்த பஞ்சத்துக்கு 2,00,000 பவுன்கள் கொடுத்தார். சென்ற 30 வருஷ காட்டில் தண்ணீர் வசதிக்கு 50 லக்ஷம் ரூபாய் செலவிட்டார். ஸ்ரீ எட்வர்ட் பட்டங் கட்டிக்கொண்டபோது சீமைக்கு 30 லக்ஷம் ரூபாய் செலவில் போனார். அங்கு ஆஸ்பத்திரிக்கு 70,000 ரூபாய் கொடுத்தார்.

ஜயப்பூரின் தற்கால வ்ஸ்திதி.

இந்த ஜயப்பூர் ஸமஸ்தானமானது கிழ்மேலாக 150 மைல் நீளமும், தென்வடலாக 140 மைல் அகலமும், 14,465 சதுரமைல்கள் விஸ்திரணமுமுள்ள இராஜபுத்திரர்களுடைய மாகாணங்களில் முக்கியமானதாயிருக்கிறது. இதின் வடமேற்குப்பாகங்கள் பற்பல விநோத பருவதங்களால் பிரகாசித்தாலும், தென்கிழக்குப்பாகங்கள் மணற்பாங்கான வனமாக இருக்கின்றன. பெய்யும் மழையை மணல்உறிஞ்சிக்கொள்வதனால்,சில பாகங்களில் விசேஷமாகப் பயிர் பச்சைகள் செய்யப்படாமல், கால்நடைகள் மேயும் மைதானங்களாகவிருக்கின்றன அப்படிக் கிருந்தும் கிணறுகளை வெட்டினால் வெகு சமீபத்தில் ஜலம் விழுவதால், பலவித தானியங்கள் பருத்தி புகையிலை முதலானவைகள் ஏராளமாக விளைகின்றன.

இந்தப் பொருள்களால் 1801-2-ம் வருஷ 83,000 ரூபாய் சுங்கவரி வசூலாகவும், ஜாகிர் தருமகட்டளைகளால் 45,83,950 ரூபாய் வசூலாவதாகக் கேள்வி. 1818 வருஷ ஈஸ்டு இந்தியா கம்பெனிக்கு உட்பட்டபோது செய்த தீர்மானத்தினால், இந்த ஸமஸ்தானத்தில் வருஷா வருஷம் விருத்தியில் 40 லக்ஷம் ரூபாய் வசூலாகலாமென்றும், அதில் லக்ஷம் ரூபாய் கப்பங் கட்டவேண்டுமென்று தீர்மானித்தாலும், 1842 வருஷ 46 லக்ஷம் வரையில் பாக்கி நின்றுவிட்டபடியால், இனி வருஷம் 4 லக்ஷம்

ரூபாய் கப்பம் வாங்கிக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டதாம். இவ்விடத்தில் குடியிருப்போர் முக்கியமாக இராஜபுத்திரர்களாக இருக்கினும், மீனாஸ் என்பவர்களும், யாதவர்களும், அபுமலையிலிருந்து சில நூற்றாண்டுகளுக்கு முன் குடிபுகுந்த கஸ்சலா சாதியார்களும் அதிகமாக இருக்கிறார்கள். மேலும், பனியாஸ், தாகூர்கள், குஜராரஸ் என்னும் தாழ்ந்த வகுப்பான ஜனங்களும் இருப்பதால், இந்த சமஸ்தானத்தில் சுமார் 25,34,357 ஜனங்கள் வரையில் குடியிருப்பதாகத் தோன்றுகிறது. இந்த சமஸ்தானத்தைப் பாதுகாக்க 2096 குதிரைவீரர்களும் 18,337 பதாதிகளும், 692 பீரங்கி வீரர்களும், 126 போலீசும், 22,000 வீரர்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதன்றியில், சமஸ்தானம் சொந்தத்திற்கு 5690 சேனைகளும் இருக்கின்றன. எல்லாச் சேனைகளும் கூடி 32,248 பேர்.

ஜெயப்பூர் என்னும் நகரமானது தெற்குப்பாகம் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் கரடுப்பாறைகளாலும் பெரிய கல்மலைகளாலும் சூழப்பட்டுச் சுமார் இரண்டு மைல் நீளமும், சுமார் ஒருமைல் அகலமும், சுற்றிலும் பிரம்மாண்டமான மதில் சுவர்களால் சூழப்பட்டும், அந்தச் சுவர்களின்மேல் பீரங்கிகள் வைத்துச் சுடும்படியான பத்தேரிகள் கட்டப்பட்டும் ஏழு விசாலமான வாசல்களையுடையதாயும் கட்டப்பட்டிருக்கிறது. கோட்டையைப்போன்ற இந்தப் பட்டணத்துக்குள் கிழக்கே இருந்து மேற்குப்பாகமாக இரண்டுமைல்கள் தூரம் நீளமும் 40 கஜ அகலமுமுள்ள அழகான ரோட்டுகளும் இந்த ரோட்டுகளிலிருந்த அநேக ரோட்டுகள் சதுரம் தீர்த்தபடி போடப்பட்டு, ஒவ்வொரு ரோட்டும் போய்ச்சேரும் மூலைகளில் சிங்கார நந்தவனமும் ஜல ஊற்றுப் பீடங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதன்றியில், ரோட்டுகளின்மீது நயமான கற்களைப் பரப்பி, குதிரை வண்டிகள் போக்கு வரத்துச்செய்து வருவதற்குத் தனியாகவும், கட்டை வண்டிகள் போவதற்குத் தனியாகவும், ஜனங்கள் நடப்பதற்குத் தனியாகவும் வகுத்து, ஜோதியான மின்சாரத் தீபஸ்தம்பங்கள் கிட்டக்கிட்ட நடப்பட்டும், தண்ணீர்க் குழாய்களால் நல்ல ஜலம் கொண்டுவரப்பட்டும், வீதிகளின் இருபக்கங்களிலும் ஒரே மாதிரியான ஏழடுக்கு மெத்தை வீடுகள் கட்டப்பட்டும், பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தையும் ஆநந்தத்தையும் கொடுக்கத்தக்கதாக விருக்கிறது. இது சிற்பசாஸ்திர யுக்தமாகவும், சிங்கார அலங்கார சாஸ்திர சம்மதமாகவும் கட்டப்பட்ட பட்டணம். இதன் இராஜ

வீதியானது கிழக்கு மேற்காக இரண்டு மைல்கள் நீளமும், 111 அடிகள் அகலமும், வடக்குத் தெற்கு வீதிகள் ஒன்றரை மைல் நீளமும் 111 அடிகள் அகலமுமாகிச் சதுரம் நிர்த்த வீதிகளாக இருக்கின்றன. மற்ற வீதிகள் 55 அடிகள் அகலமும் ஒன்று ஒன்றரை மைல்கள் நீளமுள்ளவைகளாகவும் போடப்பட்டுச் சதுரங்கப்பட்டணமாகப் பிரகாசிக்கிறது இவ்வித அழகான பட்டணம் இந்த இந்தியாவில் மற்றெங்குமில்லையென்று அநேக ஆங்கிலேயர்கள் சரித்திரத்திலும் எழுதி ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த நகரத்திலிருக்கும் சிறு சந்துக்கள்கூட சீராகவும், வரிசையாகவும், நேராகவும் கோலமிடுவதைப்போ லிருப்பதன்றியில், இந்த சிங்காரக் கோல பட்டணத்தின் மத்தியில் சுமார் அரை மைல் விஸ்திரணத்தில் சிங்காரத்தோட்டம் செய்யப்பட்டு, அதில் கம்பீரமும் ஆச்சரியமும் கொடுக்கத்தக்க இராஜ அரண்மனை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அரண்மனை, கணக்குக்கு மூன்று அடுக்குக் கட்டடமாகவிருக்கினும், உன்னத கோபுர கலசங்களிலிருந்து எண்ணினால் பன்னிரண்டு அடுக்கென்று ஸ்பஷ்டமாகும். இந்த அரண்மனைக் கோபுரக் கட்டடத்தை என்னவென்று சொல்லக் கூடும். கட்டடத்தின் உறுதியையும், அழகையும் போய்ப் பார்ப்பவருக்குத்தான் தெரியும். இங்கே பிரம்மாண்டமான நக்ஷத்திர மண்டபம் கட்டிவைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கப்போகிறவர்கள் அங்கிருக்கும் காவல்காரனுக்குக் கால் ரூபாய் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தாலும் கட்டடத்தின் மேல்மாடியி லிருக்கும் ககோளகணித கருவிகளைப் பார்ப்பதினால், இந்தச் சிங்காரமண்டபத்தையும் நகரத்தையும் கட்டிய சிவேய் ஜயசிங்கு மகாராஜருடைய பிரதாபத்தைப் பார்க்கலாம். இந்த அரண்மனைக்குள் விநோதமான பன்னிரண்டு அரண்மனைக் கட்டடங்க ளிருக்கின்றன. அவைகளில் "சுகநிவாசம்" என்னும் கட்டடம் விசுவகர்மாவே வந்து சித்திராலங்காரமாகக் கட்டிவைத்தாரோ என்று சொல்லும்படியாக இருக்கிறது. திவான்காஸ் என்னும் இராஜசபாமண்டபம் நீளப்போக்கானதாகச் சுத்தவெள்ளை ஸ்படிகக் கற்களைக்கொண்டு விசித்திரமான சித்திரவேலைகளால் கட்டப்பட் டிருக்கின்றது. இந்தக்கட்டடத்தைத் தாண்டிக் கொஞ்சதூரம் போனால் இந்த இந்துதேசத்தில் இணையற்ற சிங்கார நந்தவனமும், அந்த வனத்தில் நாம் கண்டும் கேட்டுமறியாத அநேக கந்தமூலங்களை வரிசை வரிசையாகவும் விநோத விநோதமாகவும் பயிர்செய்யப்பட்டு, இடைக்கிடை வெள்ளை ஸ்படிக கலசஸ்தூபிகளில்

எப்போதும் ஜலம் புஷ்பமாரி பெய்துகொண்டும் இருக்கிற தைப் பார்த்துக்கொண்டு நேராகப் போனால் ஜலக்கிரீடைத் தடாகங்களும், சந்திரப் பிரகாசத்தைப்போல் பிரகாசிக்கும் குளோப் முதலானவைகள் வைக்கப்பட் டிருக்கிறதையும், அதற்குச் சமீபத்தில் ஆங்கிலேய விருந்தாளிகள் வந்தால் அவரவர்களுக்குப் போஜனமிட்டு மரியாதை செய்யும் கம்பீரமான பெரிய கட்டடம் பலவிதமான கண்ணாடி ஜன்னல்களோடு கட்டப்பட்டிருக்கிறதையுங் காணலாம். அந்த ஜன்னலைத் திறந்து பார்த்தால் பிரம்மாண்டமான ஏரிதடாகமும் அதற்கு மூன்றுபக்கத்தில் கம்பீரமான கல்மலைகளும் சூழப்பட்டிருக் கிறது. இங்கிருந்து இராஜ அரண்மனையின் கட்டடச் சிறப்பை யும், கலசங்களின் அழகையும், நந்தவனத்தின் அழகையும், அந்த நந்தவனங்களுக்கிடையிலிருக்கும் ஜலதாமரைத் தடாகங் களையும், வீதியையும், அந்த வீதியின் கடைசியில் அதாவது அரண்மனைக்கு நேர் எதிரில் சிங்காரமான மதன கோபாலர் என்னும் விஷ்ணு சந்நிதியையும், அதற்குப் பக்கத்திலிருக்கும் ஆங்கிலேயர் விருந்து மண்டபத்தையும், அதற்குப் பக்கத்தி லிருக்கும் பிரம்மாண்டமான ஏரியையும், அதற்கு எல்லைகளாக விருக்கும் பருவதங்களையும் பார்த்தால் இத்தியாதி விநோத காக்ஷிகள் இப்படி இருக்கிறதென்று எழுத எம்மாலாகவில்லை. போய்ப் பார்ப்பவருக்கே பிரத்தியக்ஷமாகும். இந்த அரண் மனையின் ஒருபக்கத்தில் அடுத்த மலைகளிலிருந்து கின்டி எடுக்கப்பட்ட ஒருவித செவந்த கற்களைச் சாணையில் வைத் துச் சீமை நகைகளைப்போலச் செய்து மோதிரங்கள் முத லான பலவித ஆபரணங்களை பொன் வெள்ளியினால் சிறந்த ஆங்கிலேயருடைய மேல்விசாரணையில் செய்து விற்கிறார்கள். இந்தக் கட்டடத்தைப் பார்த்துக்கொண்டு வடக்கு வாசலில் வந்தால் அங்கேயிருக்கும் பிரம்மாண்டமான கட்டடகச்சேரி களில், ஜில்லா கோர்ட்டு, முனிசிப்கோர்ட்டு. தாலூகாகச்சேரி, போலீசு முதலான கச்சேரிகளிருக்கின்றன. இந்தக் கட்டடங் களைத்தாண்டிக்கொண்டுபோனால்(Maha Rajah's Theatrical Hall) இராஜ நடனசாலை யொன்று சிங்காரமாகவும் பெரிதாக வும் கட்டப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்துக்கொண்டு வெளி யில் வந்தால் எதிரில் (Jeyapur College) ஜெயப்பூர் காலேஜ் என்னும் இராஜாவின் சர்வகலாசாலைக் கட்டடம் கம்பீரமாக விருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு சற்றுதூரம் போனால் (Jayapur Arts School) இராசகீயக் கைத்தொழிற் சாலை யொன்று கம்பீரமாகக் கட்டப்பட்டு அங்கு விசித்திர விநோத

மான கத்தி கேடயம் துப்பாக்கி முதலான ஆயுதங்களையும், சித்திரப்படங்களையும், பிரதிமைகளையும் செய்து பழகிக்கொடுக்கிறார்கள். அதைப் பார்த்துக்கொண்டு பக்கத்துச் சந்தில் போனால் நாணயச்சாலை யிருக்கிறது. இங்கு செய்யும் ரூபாயானது சுத்தவெள்ளியாகவும், இங்கிலீஷ் ரூபாயைப்பார்க்கிலும் ஒருஅணுஅதிகவிலையுள்ளதாகவும், அழகாகவும், கெட்டியாகவுமிருக்கிறது. இந்த ரோட்டிலிருந்து நேராக மதில்ரோட்டு வரையில் போனால் அங்கு பிரம்மாண்டமான புலிகள், சிறுத்தைகள், சிங்கங்கள் முதலான மிருகங்களை வளர்க்கிறார்கள். கடை வீதிகளிலோ விசித்திர வினோதமும் நயமுமான பேர் போன ஜெயப்பூர் ஜோடுகளும், பலவித பித்தளைச் சாமான்களும், உக்காக்களும், விசித்திரவினோதமான பலவர்ண துணிமணிகளும் ரூபியல் குவிபலாகக் கொட்டிவைத்துக்கொண்டு விற்பதன்றியில். புளி ஒன்று தவிர மற்ற போஜனபதார்த்தங்கள் ஏராளமாக விற்பனைசெய்து வருகிறார்கள். இவ்விடத்திய ஸ்திரிகளுடைய சுந்தரங்களையும், அலங்காரமான அணிமணிகளையும் பார்ப்போர் தேவகன்னிகள் என்று சொல்லுவார்கள். புருஷர்கள் கிழவனானாலும், குமரனானாலும் சரி, மீசையையும் தாடியையும் வளர்த்து முறுக்கிவிட்டு சுத்த வீரர்களைப்போற் கர்ஜித்து கத்தியும் கட்கமும் கையுமாக வெளியில் வருகிறதைப் பார்த்தால் விநோதமாக விருக்கும். இத்யாதிகளைக் கேட்டும் கண்ட யாம் இந்த ஜயப்பூரில் தற்காலத்தில் இராஜ ராகவிருக்கிறவரைப் பார்க்க ஆவல்கொண்டதற்கு ஆண்டவர் சகாயம் செய்தருளினார். அதாவது,

இந்தமகாராஜர் வருஷத்தில் தசராபண்டிகை பானுசப்தமி என்னும் இரண்டு தினங்களில் மாத்திரம் வெளியில்வந்து குடிகளுக்குப் பேட்டிகொடுப்பது வழக்கமானபடியால் நாம் ஜயப்பூருக்குப் போன மறுநாளே அப்படிப்பட்ட பேட்டிகிடைக்கும் என்ற சங்கதிகேட்டு ஜனவரி 30 தேதியாகிய திங்கட்கிழமை அதிகாலையிலெழுந்து தந்தசுத்திசெய்து திருமண்காப்புத் தரித்துக்கொண்டு இரண்டுவண்டிகளைத் தயார்செய்து இராஜா வருகிற இராஜவீதிக்குப் போனோம். நாங்கள் போவதற்கு முந்தியே என்றும் கண்டிலாத அப்ஸரஸ்திரிகளைப்போன்ற அந்த சமஸ்தானத்தின் சுமங்கலியஸ்திரிகளும் புருஷர்களும் விசித்திரவிநோதமான வர்ண உடுப்புகளைத் தரித்துக்கொண்டு அந்த விசாலமான வீதியிலுள்ள மாடமாளிகை கூடகோபுரங்களிலும், ரோட்டிலும் சனங்கள் வந்து மொய்த்துக்கொள்வதைப்

போலவந்து நிறைந்துவிட, உடனே பீரங்கிவெடிகளும், அதிர்வெடிகளும் அநந்தமாகக் கர்ச்சித்தன. அந்த வீதிமுழுதும் நயமானகற்கள்போட்டு மூடப்பட்டிருந்தமையால், சுத்தஜலத்தால் கழுவிக்கோலமிடப்பட்டிருந்தது. நாங்கள் ஜயப்பூருக்குப் புதியவரானபடியால், போதுமான சிபார்சு பெற்றுப் பெரிய மாடியின் மேல் போவதற்குக் காலமும், அநுபோகமும் இல்லாமலிருந்தும், ஒரு சிறிய மெத்தையின்மீது ஏறி உட்கார்ந்திருந்தோம். சுமார் காலை ஏழுமணிக்கெல்லாம் இராஜா சூரிய தரிசனத்துக்கு வெளியில் புறப்படுங் குறிப்பறிவிக்க பீரங்கி வெடிகளும், பலவித கினகாப்புகளாலும், ஆபரணங்களாலும் சிங்காரிக்கப்பட்ட யானைகள் நூற்றுக்கணக்காக ஜயகோஷங்களுடன் வர அவைகளுக்குப்பிறகு நூற்றுக்கணக்கான ஆபரணங்களால் சிங்காரிக்கப்பட்ட குதிரைகளும் அணியணியாக வரவும், அவைகளுக்குப் பிறகு அங்குக் கினகாப்பு ஆபரணங்களையுடைய யானைகளின்மீதும் ஒட்டகங்களின் மீதும் நகார், நகபத்து தாரை, எக்காளம், பேரி, மிருதங்கம், பெரியமேளம், சின்னமேளம், சங்குநாத முதலான முப்பத்திரண்டு வாத்தியங்கள் வரிசைவரிசையாகவும் அணிபணியாகவும் வந்து சகல வாத்தியங்கள் முழங்கவும், அவர்களுக்குப் பிறகு பாதாதிகளும், குதிரை வீரர்களும், ஒட்டைவாகன வீரர்களும், யானை வாகன வீரர்களும், கத்தி, துப்பாக்கி, கேடயம், சூலம், சக்கரம், தண்டம் முதலான அவர்கள் ஆயுதங்களுடனும், வாகனங்களுடனும் அணியணியாக வரவும், பிறகு இராஜசேவகர்கள், உத்தியோகஸ்தர்கள், கவிகள், வித்துவான்கள், நாட்டியஸ்திரிகள், ஹாஸ்யம் செய்வோர், எச்சரிக்கை செய்வோர் முதலானவர்கள் அடுக்கடுக்காகவும் அணியணியாகவும் வரவும், அவர்களுக்குப் பிறகு வேதகோஷ்டிகள், சாஸ்திரபுராண இதிகாச பண்டிதர்கள் முதலானவர்கள் அணியணியாகவும், இவர்களுக்கு இராஜ பட்டபகுதிரைகள், யானைகள், இராஜ இரதம், இராஜபல்லக்குகள் அடுக்கடுக்காகவும், அவர்களுக்குப்பிறகு மந்திரி பிரதானி முதலானவர்களும், அவர்கள் பந்துக்களும், அவர்களுக்குப் பிறகு எச்சரிக்கைப்போடுவார் இராஜ உயிர் காப்போரும், இவர்களுக்குப் பிறகு மகாராஜா சாக்ஷாத் ஸ்ரீராமரைப்போல் கிரீடம் முதலான ஆபரணங்களையணிந்துகொண்டு மேகவாரணத்தைப் போன்ற குதிரைமேலேறி வரவும், அக்குதிரையானது பலவித இரத்னாபரண கலிகிதராய்களுடன் குலுங்கி நடித்து நடக்கவும், இருபக்கங்களிலும் பொன்ரத்ன மயமான சூரியபிறை சந்திரபிறை பூச்சக்கரக்குடை பிடிக்கவும்,

இந்த ராஜரை நோக்கி விஜயிபவ விஜயிபவ என்று கோஷமிட்டுக் கும்பிடும் குடிகளைப்பார்த்துப் பதில் கும்பிடுபோட்டும், மாடி மேடைகளிலிருந்து உத்தமகுல ஸ்திரீகள் விஜயிபவ என்று சொல்லிப் புஷ்பங்களைத் தூவி மங்கலம் ஆலாத்தி எடுப்பவரை அங்கிகரிப்பதாகத் தலைகுனிந்து பார்த்துக்கொண்டுபோக, பின் பக்கத்தில் அவரது நெருங்கிய பந்துக்களும் சிநேகிதர்களும் குதிரைகள்மீது வரவும், பிறகு முன்போலவே பதாதிகள், புரவிகள், புரவி வீரர்கள், ஒட்டகங்கள், ஒட்டகவீரர்கள், யானைகள், யானைவீரர்கள் அணியணியாக வரவும் இப்படி இரண்டு மைல் தூரம் வரையில் நிறைந்து வந்து மகாராஜர் ஸ்ரீ சூரியர் கோயிலுக்குப் போய் வணங்கி அந்தச் சூரிய விக்கிரகத்தைக் கோஷா ஸ்திரீகள் வணங்கும்படியாக ஒரு சிங்காசனப்பிரத்தில் ஏற்றிக்கொண்டு மறுபடியும் அதேவழியில் ஆயிரம் பதினாயிரம் ஜனங்களுக்குப் பேட்டி கொடுத்துக்கொண்டு சுமார் பத்து மணிக்குத் தமது அரண்மனையைச் சேர்ந்தார். இந்து ராஜர்களுடைய பவனியைப்பற்றிப் பூர்வ சரித்திரங்களில் படித்ததுண்டு. இப்படிப் பிரத்தியக்ஷத்தில் இன்று பார்க்கப் பாக்கியம் பெற்றோம். பிறகு இராஜ அரண்மனைக்குள்ளிருக்கும் கட்டடக் காட்சிகளைக் காண ஆவலடைந்து அந்த இராஜாங்கத்தில் பிரதான உத்தியோகஸ்தராகிய பங்காள பாபுவர்கள் வீட்டுக்குப் போனோம். அந்தப் பாபு உயர்ந்த உத்தியோகஸ்தராயும், புதிய மனுஷராயும் இருந்தும் எம்மீது அதிக பக்ஷத்தைக் காட்டி ராஜ அரண்மனையிலிருக்கும் கட்டடங்களைக் காணவும், மறுநாள் அம்பர் கோட்டையைக் காணவும் ஒரு யானையையும், இரண்டு ஜவான்களையும். ஒரு மாவுத்தரையும் எமது வசத்தில்விட்டு, எமக்கு வேண்டிய உதவிகளைத்தும் இராஜ அதிகார தோரணையில் செய்யச் சித்தமாக இருப்பதாக உத்சாகப்படுத்தினர். ஆகவே அந்த ஆள்களைத் துணையாகக்கொண்டு அரண்மனைக்குள் போய்ப் பார்க்கவேண்டிய சகல வைபவங்களையும் களிக்கும்படியாகப் பார்த்துச் சந்தோஷப்பட்டு, சாயரக்ஷை தங்குமிடம் வந்து சாப்பிட்டுச் சற்று ஆயாசந்தீரப் படுத்தோம். நாம் இறங்கியிருந்த கட்டடத்தின் பக்கத்துக் கட்டடத்தில் கேசரி, கவுரி என்ற இரண்டு தாசிகளும், சுண்டாரி என்னும் சாரங்கா வித்துவானும் இராஜபேட்டிக்காக வந்திறங்கியிருந்தபடியால், அவர்களுடைய சங்கீதவித்தையைத் தென்தேசத்தாராகிய எமக்குத் தெரிவிக்கப் பலவிதமாகக்கெஞ்சி, நாங்கள் படுத்திருக்கும் இடத்திற்கே வந்து பிடித்துக்கொண்டார்கள். நாங்கள் யாத்திரைக்காரரான

படியால் யாத்திரை செய்யும்போது இப்படிப்பட்ட காரியம் செய்யச் சரிப்படாதென்று பலவித நியாயங்கள் சொல்லியும் கேட்கவில்லை. கடைசியாகச் சாரங்த வாத்தியத்துடன் சுத்தமான இந்துஸ்தானி டப்பா முதலானவைகளைத் தேட்டையாகவும் சுகமாகவும் பாடினார்கள். இந்தப் பாட்டுகம்பெனியில் கேசரி என்பவள் சுமார் 16 வயதுடைய வாலிபப்பெண். இவள் முகம் சந்திர பிம்பம்போலும், கண்டம் குயிலைப்போலும், தபோநிதிகளுடைய புத்தியையும் பிரமிக்கச் செய்யும்படியான அழகும் அமைப்பும் அபிநயமு முள்ளவள். இவளது உபாத்தியாயர் பார்வைக்கு மகமதியனைப்போ லிருந்தும் சாதியில் ஹிந்து. இவரது சாரங்தாவில் கமுகமும் ரவைகளும் கம்பீரமாகி இப்படிப்பட்ட வாத்தியமும் தெளிவான இந்துஸ்தானி பாட்டுகளும் தென்தேசத்தில் கேட்டதில்லை. இவர்களுக்குத் தென்தேசத்தார் மாதிரியாகச் சுரங்கள் பாடத் தெரிந்தாலும் அவ்வளவாகச் சுகப்படவில்லை. ஆயினும் இந்துஸ்தானி ராகங்களைச் சாரங்தா வாத்தியத்தோடும் அபிநயத்தோடும் பாடுவதைப் பார்க்கவும் கேட்கவும் ஆனந்தத்தைக் கொடுக்கிறது. பிறகு இராத்திரி 12 மணிக்கு மேலாகிவிட்டபடியால் மரியாதைக்கு ஐந்து ரூபாய் கொடுத்து அவர்களை யனுப்பிவிட்டு உண்ணுமல் உறங்கினோம்.

ஜெயப்பூர் அம்பர் கோட்டை.

பிப்ரவரி௴ 1௳ காலையில் எழுந்து தந்தசுத்தி செய்துகொண்டு ஒரு ரூபாய் வாடகையில் ஒரு கோச்சு வண்டியை அமர்த்திக்கொண்டு சுமார் இரண்டு மைல் தூரத்திலிருக்கும் அம்பர்மலைக் கோட்டைக்குப் போகும் அடிவாரத்துக்கு ஏழு மணிக்கெல்லாம் போய்ச் சேர்ந்தோம். அங்கு நமக்காக ஸ்ரீ மகாராஜருடைய பெரிய யானையொன்று அம்பாரி கட்டி இரண்டு ஆட்களுடன் வந்து காத்துக்கொண்டிருந்தது. உடனே வண்டியைவிட் டிறங்கி யானையின்மே லேறினோம். அந்த யானையானது பெரிய உருவமா யிருந்தபோதிலும் செங்குத்தான மலையின்மேல் தாராளமாக ஏறிப்போகின்றது. இந்த அம்பர் கோட்டையானது அடிவாரத்திலிருந்து ஏழு மைல்கள் தூரத்தில் இருக்கிறது. இந்தக் கோட்டையானது அநேக மலைகளுக்கு மத்தியமலையில் கட்டப்பட்டிருப்பதால், முதலிலிருக்கும் மலைகள் சுமார் இரண்டு மைல்கள் தூரம் வரையில் செங்

குத்தாகவும், பயங்கரமான பள்ளங்களாலும், மலைகளாலும் சூழப்பட்டிருப்பதால் எப்படிப்பட்ட யானையும் அதிக கஷ்டத்துடன் ஏறிப்போகவேண்டியிருக்கிறது. அடிவாரத்திலிருந்து இரண்டு மைல்கள் வரையில் குதிரைகள் போவதும் கஷ்டம், மனிதர்கள் நடப்பதுங் கஷ்டம். ஆகவே எமக்கு வழிகாட்டிகளாகவும் துணைவர்களாகவும் வந்த மகாராஜருடைய சேவகர்கள் வாலிபராகவிருந்தும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அம்பர் கோட்டையைக் கட்டப்பட்டிருக்கும் மலையானது கிட்டத்தட்ட ஒரு சுவற்றைப்போலிருக்கிறபடியால் யானை ஏறுவதுங் கஷ்டம். யானையை ஓட்டும் மாவுத்தனும் பயப்படுகிறான். யானைமேல் யாம் உட்கார்ந்திருந்த அம்பாரியும் அசைந்தசைந்து ஆட்டங்கொடுத்துவிட்டது. அங்கே யானைமீதிருந்து அடியில் பயங்கரமான பள்ளத்தாக்கைப் பார்த்தால் எப்படிப்பட்டவருடைய நெஞ்சமும் நடுங்காமல் இராது. அப்படிப்பட்ட கஷ்டங்களும் அபாயமும் பலவிருக்கினும் ஜகதீசுவரனுடைய கிருபையால் சுமார் 10 மணிக்குக் கோட்டைக்குப் போனோம்.

இந்த அம்பர் கோட்டையானது அநேக செங்குத்தான மலைகளால் சூழப்பட்ட மத்திய மலையின் வளைவில் கட்டப்பட்ட பிரம்மாண்ட கோட்டை. இந்தக் கோட்டைக்கு எதிரில் விசாலமும் விநோதமுமான பெரிய தடாகமும், அந்தத் தடாகத்தின் கரைமேல் பிரம்மாண்டமான கோவில்களும் மாடமாளிகைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளைச்சுற்றி அநேக சிறியவீடுகள் அதிக புராதனக் கட்டிடங்களாகிவிட்டன. இந்தத் தடாகத்துக்கு மேற்குப் பாகத்திலிருக்கும் மலைச்சார்பில் அம்பர் கோட்டையின் முக்கிய கட்டிடம் கட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கோட்டை வாசலுக்குள் நுழைந்து வெகுதூரம் போனால் எதிரில் எல்லையாகவிருக்கும் ஒரு பெரிய மலையின் மேல்(Zenana) அம்பர் மகாராஜருடைய மனைவிகளாகிய இராஜமஹிஷிகளிருக்கும் இராணி வாசஸ்தான கோட்டை கட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கோட்டைக்கு நான்குபக்கங்களிலும் உயர்ந்த பத்தேரி கோபுரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டடத்தில் நுழைந்துபோனால் இதற்கு எல்லையாகவிருக்கும் மற்றொரு பெரியமலையின்மேல் ஆச்சரியமான ஆகாயக்கோட்டையைப் பிரம்மாண்டமான கருங்கற்களால் கட்டி அதற்கு நாலாபக்கங்களில் பீரங்கிகளையேற்றிச் சுடும்படியான பத்தேரிகளும் கோபுர ஜன்னல்களும் மத்தியில் சிங்காரமான கோபுரக் கலசமும் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கோட்டைக்

குள் கேவலம் யுத்தத்துக்கு வேண்டிய பீரங்கி துப்பாக்கி கத்தி முதலான சாமான்களைவைக்கக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த கோட்டையில் இருந்து சுற்றுப் பக்கங்களின் காக்ஷியையும் கீழேயிருக்கும் கிடுகிடுப் பள்ளங்களையும் பார்க்கும்போது அந்த காக்ஷியின் ஆச்சரியத்தையும், பள்ளங்களின் பயங்கரத்தையும் இப்படிப்பட்ட மலையின்மேல் இவ்வளவு பலமான கற்களைப்போட்டு, இந்த மலைக்கோட்டைகளை கட்டியிருக்கும் சாமர்த்தியத்தையும் இந்தச் சிறு புத்தகத்தில் எழுத எம்மாலாகாது. இவ்வளவு சிறந்த காக்ஷியை யாம் இந்த இந்துதேசத்தில் எங்கும் கண்டதில்லை. இப்படிப்பட்ட கோட்டைக்குள் ஒரு தூர்கா (காளிகா) தேவியின் பெரிய சந்நிதி கட்டப்பட்டு இதில் பயங்கரமான ரூபத்தையுடைய ஒரு விக்கிரகத்தைவைத்துச் சிலபிராமணர்கள் வாசற்படிகளில் உட்கார்ந்து கொண்டு சக்திபரமான வேதசுருதிகளைப் பாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அதிக சமீபத்தில் அப்போதுதான் வெட்டப்பட்ட ஆடு தலை வேறாகவும் முண்டம் வேறாகவும் கிடக்கின்றது. இந்தக் கோவிலுக்குள் போகலாமென்று என் காலிலிருந்த பூட்ஸைக் கழற்ற யோசிக்கையில், எமக்கு வழிகாட்டியாக வந்தவர்கள் கழற்றவேண்டாமென்றும், தாராளமாக உள்ளே போய்ப் பார்க்கலாமென்றும் சொன்னார்கள். ஏனெனில் அப்போது நான் போட்டிருந்த பூட்சும் சல்லடமும் கோட்டும் தொப்பியும் ஒரு சட்டைக்காரனைப்போலிருந்தமையால், எமது உடுப்பே இந்த ஜயப்பூரில் மரியாதையையும், கவுரதையையும் சம்பாதிக்கக்காரணமாயின. இதற்குத்திருஷ்டாந்தமாக, அன்று எம்மோடுகூட வந்திருந்த எமது டாக்டர் சுதேசியைப்போல ஜல்லடம்சொக்காய் உருமாலையைத் தரித்துக்கொண்டும் காலில் சுதேச சடாய் போட்டுக்கொண்டும் வந்திருந்ததில், அவரை அலக்ஷ்யமாக எண்ணி அவர்காலிலிருந்த சடாவைக்கழற்றிக் கோட்டைக்கு வெளியிலேயே வைத்துவிட்டு வரும்படி சொல்லிவிட்டார்கள். ஆ! ஹா! எமது பூட்சுக்கும், தொப்பிக்கும் இந்துவந்த மகிமையே மகிமை! பிறகு இந்தக் கோவிலைப் பார்த்துக்கொண்டு அருகிலிருந்த (Dewan Kushn) என்னும் இராச சபாமண்டபத்தைப் பார்த்தோம். இதுவும் ஜயப்பூரிலிருந்ததைப்போலவே வெள்ளை ஸ்படிகக் கற்களால் கட்டப்பட்ட சிங்கார மண்டபம். இங்கிருக்கும் ஜன்னல்களின் வழியாகக் கீழே இருக்கும் காக்ஷியைப்பார்த்தால் சொல்லிமுடியாத சுகத்தைக் கொடுக்கிறது. இதற்குப் பக்கத்தில் (Masulas Vilas) மாசுலாஸ் விலாஸ் என்னும் அன்னிய ஜாதியார் வந்தால் தங்கு

வதற்குக் கட்டப்பட்ட பிரம்மாண்ட கட்டடமிருக்கிறது. இந்தக் கட்டடத்தைத் தாண்டிப்போனால் துலாராமர் தோட்டம் என்னும் சிங்கார நந்தவனமானது பற்பலவிதமான புஷ்பச் செடிகளால் சிறந்து விளங்குகின்றது.

இந்தத் தோட்டத்துக்கு எதிரில் (Mohana Vadi) மோஹனவாடி என்னும் சிங்கார வசந்தமண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குப் பக்கத்தில் (Jamandira Mandir) ஜாமந்திர மந்திரம் என்னும் பெயரால் கண்ணாடி மண்டபமிருக்கிறது. இந்தக் கட்டடத்தின் கீழும் மேலும் சுவர்களிலும் கண்ணாடிப் பில்லைகளைப் பதிப்பித்து, யாராவது போய் உட்கார்ந்தால், அவரைப்போல் பத்தாயிரம் பிரதிபிம்பங்களால் பிரகாசித்து, பிரமானந்தத்தைக் கொடுக்கிறது. இதற்குப் பக்கத்தில் (Zenana Mandir) இராணிவாச மந்திரம் முழுதும் வெள்ளை ஸ்படிகக் கற்களால் கட்டப்பட்டு இராஜருடன் இராஜ மகிஷிகள் விளையாடுவதற்கு அடி அறைபக்க அறைகளும், பொய் அறைகளும் ஆச்சரியமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்குப் பக்கத்தில் (Jas Manpir) என்னும் இஷ்டதேவதா கிரஹம் இருக்கின்றது. இதற்குச் சமீபத்தில் (Sivasar Mandir) சிவேசுவர மந்திரம் என்னும் சிவஸ்தலமிருக்கிறது. இதற்குப் பக்கத்தில் (Suka Mandir) சுகமந்திரம் என்னும் இராசர் படுக்கை விடும், உல்லாசமாகக் காலங்கழிக்கும் கட்டடமும் கண்ணாடிச் சுவர்களால் பிரகாசிக்கிறது. இந்தியாதி கட்டடங்களை எவ்வளவு பொருள் செலவிட்டு, எத்தனை வருடகாலம் கட்டினார்களோ தெரியவில்லை. இந்தக் கட்டடத்திற்குள் வர எமனுக்கும் கஷ்டமென்றே சொல்லலாம். இவ்விடத்திலிருக்கும் காளிகா தேவியாகிய அம்மனுக்கு முற்காலத்தில் பிரதிதினமும் ஒரு நரபலி கொடுத்துக்கொண்டு வந்ததாகக் கேள்வி. இந்த அம்மன் ராஜனுக்குப் பிரத்தியக்ஷமாகிப் பேசியதால், இந்த இடத்திற்கு அம்பர் என்ற பெயர் மருவி வந்ததுபோலிருக்கிறது. இத்தியாதி வைபவங்களைப் பார்த்துக்கொண்டு அங்கிருந்த காவல்காரர்களுக்கு இரண்டு மூன்று ரூபாய் சில்லரை இனாம் கொடுத்து இறங்கிவந்தும், யானையைப் பின்னாலே கொண்டுவரும்படி சொல்லி அம்பர் தடாகத்துக்குப் போனோம். அந்தத் தடாகத்தின் தெற்குப்பாகத்தில் அசோகம், புன்னை, மந்தாரம், பாதிரி, பன்னீர், சம்பகம் முதலான விருக்ஷங்களால் நிறைந்த சோலையில் போய் உட்கார்ந்து, தடாகத்தில் பால்போலிருக்கும் தண்ணீரைக் குடித்து ஓர் பெரிய அசோக விருக்ஷத்தினடியில் சற்

றுப் படுத்து இளைப்பாறிச் சுற்றுப்பக்கங்களிலிருக்கும் மலைகளின் காக்ஷிகளையும், கோட்டைகளின் கம்பீரத்தையும், சிங்காரவனத்தின் சிறப்பையும், அந்த வனத்தில் மான்கள், மயில்கள், மாடப்புறாக்கள், மைனாக்கள், கோகிலங்கள் முதலியன யாதொரு பயமின்றி எதேஷ்டமாகத் தின்று தேக்கரித்து உல்லாசமாகப் பாடியாடுகிறதையும், தடாகத்தில் ஜலபக்ஷிகள் ஒன்றுக்கொன்று குதித்து விளையாடி நிர்ப்பயமாய்ப் பாடி ஆனந்திக்கிறதையும் பார்க்கப் பார்க்க, பரமேசுவரனை ஏகாந்தமாகவிருந்து தியானிக்க இதைவிட சிறந்த இடம் வேறில்லைபோல் தோன்றியது. ஆம், இந்த இடத்தில் பழியும், பாவமும், கோபமும், தாபமும், துக்கமும், காமமும் வருவதற்கும், உலக ஆசாபாசங்கள் புகுவதற்கும் இடமில்லை. ஆ! என்ன ஏகாந்தமான பரிசுத்த ஸ்தலம். ஆகவே எழுந்து உட்கார்ந்து அடியில் கண்டபடி பிரார்த்தனை செய்தோம்.

(ஜெயப்பூர்) அம்பரில் செய்த பிரார்த்தனை.

ஓ! அப்பனே! எப்பக்கங்களிலும் மலைகள் சூழ, மத்தியில் ஒப்பற்ற தடாகமும், நந்தவனங்களும் நிறைந்த இந்த அம்பர் என்னும் ஸ்தலம் எவ்வளவு சிறப்பாகவிருக்கின்றது! இந்தச் சிறந்தவிடத்தைப் பார்க்க எவ்வளவோ கஷ்டப்பட்டு யானையின்மீது வந்தோம். வருந்தி வந்த வருத்தம் ஒருபக்கமிருக்க, இந்தத் தடாகத்தையும், நந்தவனங்களையும், சுற்றுப்பக்கங்களிலிருக்கும் அற்புதக் கட்டடங்களையும், பருவதக் காக்ஷிகளையும், பக்ஷிகளின் நடனங்களையும் பார்க்குந்தோறும் எமது கண்ணுங்கருத்தும் நின்னை நாடி வருகின்றன. இப்படிப்பட்ட அற்புத படைப்புகளுக்குமுன் யாம் என்ன யோக்கியதை யுடையேம்! எமது ஜனமும் எமது ஜாதியும், எதிற்கொப்பிடக்கூடும். அற்பமாகிய யாம் நினது குன்றா வளம் பொருந்திய மகத்துவத்தைப்பற்றி எப்படி வர்ணிப்போம். இந்தக் காக்ஷியைக் கருதி வர்ணிக்க பாஷையில்லை. ஆகவே, நீ வாசாமகோசரன் என்று சொல்லி நினது அபாரசக்தியைக் கொண்டாடி ஆநந்திக்க அருள்புரிவாய். ஓம் தத் சத்.

(ஜெயப்பூர்) இராம நிவாஸ்.

பிறகு பொழுதாகிவிட்டபடியால், யானைமீதேறிக் கீழே இறங்கிவந்தோம். உடனே அடிவாரத்திலிருந்த கோச்சுவண்டி

யிலேறித் தங்குமிடம் வந்து நமக்குத் துணையாக வந்த சேவகர்களுக்கும், மாவுத்துக்காரனுக்கும் ஆள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் இனும் கொடுத்தனுப்பிவிட்டு, சாப்பிட்டு மகாராஜருடையசிங்காரத்தோட்டமாகிய இராமநிவாஸ் என்னும் தோட்டத்துக்குப் போனேம். இது சுமார் 70 ஏகரா விஸ்தீரண முள்ளதாயிருக்கிறது. இந்த இந்தியாவுக்குள் சிறந்த தோட்டம் இதைவிட வேறெங்கு மில்லையென்றே சொல்லலாம். இதைத் தற்காலத்து இராஜன் 4,00,000 ரூபாய் செலவு செய்து (Dr. De Febeck) டி. பிபக் என்பவருடைய மேல் பார்வையால் பூலோகத்திலிருக்கும் பலவித செடிகளையும் பக்ஷிபாதி மிருகங்களையும், தக்கவிடங்களில் வைத்துப் பார்க்கப்பார்க்க பசியும் எடுக்காதவிதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு அழகான தோட்டத்தின் அமைப்பை இந்த இந்து தேசத்திலேயே யாம் எங்கும் கண்டதில்லை. எங்கும் இல்லையென்றே ஏனைய யாத்திரைக்காரரும் சொல்லி யிருக்கிறார்கள். இந்தச் சிங்காரத் தோட்டத்தில் இராமநிவாசம் என்னும் பெயரால் வெள்ளை ஸ்படிகக்கற்களினால் பிரம்மாண்ட உருவமும், பல விசித்திர விநோதமான வேலைப்பாடுகளோடும்கூடியஓர்சிங்காரமண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இதன் உட்பாகம் நமது சக்கரவர்த்தினியவர்களுடைய பிரதம குமாரரும், இளவரசருமாகிய பிரின்ஸ் அப் வேல்ஸ் (H. R. H. Prince of Wales) அவர்கள் இந்த ஜெயப்புரை 1876ஹு தரிசித்த ஞாபகச்சின்னத்திற்காக (Albert Hall and Musium) ஆல்பிரட் மண்டபமும், விநோத சாலையும், 1876ஹு அவரால் கடைக்கால் போடப்பட்டு 1887ஹு பிப்ரவரிமீ 21உ (Col. Bradford) கர்னல் பிராட்போர்டவர்கள் முன்னிலையில் கிரஹப்பிரவேச உற்சவம் செய்யப்பட்டது. இந்தக் கட்டடத்திற்கு 1887ஹு ஜனவரிமீ 31உ வரையில் செலவான தொகை 4,28,084 ரூபாய். பிரதி தினம் 80 கல்லுடையும் சிற்பிகள் வேலைசெய்து வருகிறார்கள். ஆக்ராவிலிருக்கும் டாஜ்மஹாலை இந்த உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கொண்டாடினாலும், இதையும் உலகத்தில் வியக்கத்தக்க விநோத ஸ்படிக சித்திர சிங்காரக்கட்டிடமென்று சொல்லத் தடையில்லை. கட்டிடத்தின் வெளிப்பாகத்தூண்கம்பங்கள், சுவர்கள் யாவும் வெள்ளை ஸ்படிகக்கற்களாகவும், விசுவகர்மாவே வியக்கும்படியான விசித்திரவேலைப்பாடுகளோடும் செய்திருக்கிறதன்றியில், உட்பாகத்தின் சுவர்களில் இராமாயணம், பாரதம், பாகவதம் முதலான சரித்திரங்கள் சித்திரபாவனையாகச் சிறந்த வேலைக்காரரைக்கொண்டு எழுதப்

பட்டிருக்கின்றன. இந்த விநோத சாலைக்குள் 3,00,000 ரூபாய் விலையுள்ள 2,400 வித காக்ஷிப்பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காக்ஷிப்பொருள்களில் ஆக்பர் சக்கரவர்த்தியால் சித்திரப்படங்களோடு எழுதி ஆதி ஜெயப்பூர் ராஜருக்கு வெகுமதியாகக் கொடுத்த மகாபாரத புஸ்தகமும் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு விலையே கிடையாது.

இத்தியாதி வைபவங்களைப் பார்த்து ஆனந்தப்பட்டுக்கொண்டு தங்குமிடத்திற்கு வரும் வழியில், புலிகள் யானைகள் அடைக்கப்பட்ட விடங்களையும் விசேஷ கடைவீதிகளையும் பார்த்துக்கொண்டு வந்தோம். இந்த ஜயப்பூரில் இருக்கும் ஸ்திரீ புருஷர்கள் உல்லாச குணமுடையவர்களாதலால் எவர்களைப் பார்த்தபோதிலும், சரிகைத் துணிகளையும், சரிகை ஜோடுகளையும் பலவர்ணத் துணிகளையும் தரித்துக்கொண்டு, தேவலோகத்தாரைப்போ லிருக்கின்றனர். பெரும்பான்மையான ஸ்திரிகளின் முகாரவிந்தங்கள் திவ்விய சுந்தரமாகவிருக்கினும், இடுப்பில் சீலைகளைக் கட்டாமல் புருஷர்களைப்போல நிஜார்களைப் போட்டுக்கொண்டும், ஜோடுகளைப் போட்டுக்கொண்டும் நடப்பதைத் தூரத்திலிருந்து பார்த்தால் புருஷவீரர்களைப்போலவே யிருக்கின்றனர்.

இந்த ஜயப்பூரில் போஜன பதார்த்தங்கள் ஏராளமாக விற்றாலும், நல்ல அரிசி அகப்படுவது கஷ்ட சாத்தியம். எல்லா வகுப்பாரும் கோதுமை கடலைமா பதார்த்தங்களைச் சாப்பிட்டு வருவதினால், ஜயப்பூர் கடைகளில் அரிசியை ஒரு சிறுபையில் கட்டி மருந்து வஸ்துக்களைப்போல அபூர்வமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அரிசியும் புழுத்துக் கெட்டுப் போயிருப்பதோடுங்கூட தொரசில் போட்டுப் பொன் வெள்ளியைப்போல நிறுத்து விற்கிறார்கள். மேலும் புளி மருந்துக்கும் அகப்படுகிறதில்லை. ஒரு பெரிய கடையில் பத்துப்பதினைந்து வருஷங்கள் சென்ற மாங்காய்த்தோல் மாத்திரம் கொஞ்சம் விலைக்கு அகப்பட்டது. அதைக்கொண்டு சமைத்து அன்று சாயந்திரம் 6 மணிக்குச் சாப்பிட்டு அலைச்சலினால் படுத்துத் உறங்கினோம்.

பிப்ரவரி மீ 2வ காலை எழுந்து ஸ்நானம் செய்து ஸ்ரீ மகாராஜருடைய அரண்மனைக்குள்ளிருக்கும் இராதாகிருஷ்ணர்கோவிந்தாஜி கோயில்களைத் தரிசிக்கப்போனோம். போய்ச் சேரச் சற்றுத் தாமதமாகிவிட்டபடியால், பகல் ஒருமணி வரை

யில் காத்திருந்து பூஜை செய்யும்போது பார்த்தோம். இந்த விக்கிரகம் சுமார் நான்கைந்து முழ நீளமுள்ளதாய், மதுராபுரியிலிருக்கும் மதனமோஹனர் திருக்கோலமாகவிருக்கிறது. இந்த விக்கிரகத்துக்கு பூஜை செய்யும்போது அரண்மனைக்குள் ஸ்ரீராஜரும், இராஜமஹிஷிகளும் தரிசித்துச்சாப்பிடுவது வழக்கமாம். பிறகு ஸ்ரீமகாராஜாவர்களுடைய பேட்டியைப் பார்த்து பேச ஆவல்கொண்டு வெகுநேரம் இருந்தும், சில அசந்தர்ப்பங்களால் சரிப்படாமையால், சாயாகைஷ தங்குமிடம் வந்து சுமார் 5½ மணிக்குச் சாப்பிட்டு அழகிய சிங்காரவனத்தையும், அநேக புறக்களும், மயில்களும், மான்களும் சதாநடித்து ஆநந்தக் கூத்தாடும் ஜயப்பூரின் வேடிக்கைகளையும் பார்த்துக்கொண்டு நகரைவிட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்து ஆள் ஒன்றுக்கு ரூபா 3-15-0 கொடுத்து உஜ்ஜயினி பட்டணத்துக்கு டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு இராத்திரி 10 மணிக்கு வண்டியேறி இரவெல்லாம் பனியாலும் வண்டியில் இடமின்மையால் தூக்கமில்லாமையாலும் வருந்தி, காலை ஆறுமணிக்கு ஆஜ்மீரம் என்னும் பெரிய ஸ்டேஷனில் இறங்கி, ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இராஜாஜி லக்ஷ்மணதாஸ் அவர்களுடைய பெரிய சத்திரத்திற்போய்த் தங்கினோம். இந்த ஜெயப்புரானது இராஜபுட்டான மால்வா ரெயில்ரோட்டு பரதப்பூர் ஸ்டேட்டு ரெயில் ஸ்டேஷன் கூடும் இடமாகவும், பம்பாயிக்கு 699 மைல்கள் தூரத்திலும், டில்லிக்கு 191 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. இவைகட்கு மூன்றும் வண்டிக்கு முறையே ரூ. 6-15-0, ரூ. 2-0-0 சார்ஜ் கொடுக்கவேண்டும்.

AJMIR—ஆஜ்மீரதேசத்தின் பூர்வ சரித்திரம்.

ஸ்ரீராமருடைய குமாரரில் ஒருவராகிய குசலருடைய சந்ததியாரில் ஒருவர் இந்த ஆஜ்மீர் டிஸ்டிரிக்டைச் சூழ்ந்திருக்கும் பிரம்மாண்ட மலைகளில் ஒன்றாகிய(Ajeepal Hills) அஜிப்பால் மலைமேல் தங்கிப்பல நூற்றாண்டுகள்வரையில் செங்கோல் செலுத்தி வந்தார். அவருடைய கடைசி சந்ததியாகிய அஜாபிலர் என்பவர் சிங்காசனமேறின பிறகு உண்மையான க்ஷத்திரிய ஜாதியார்களைப் பரிபாலித்து அவர்களுடைய சுகத்தைக் கருதி காலாபக்ஷமும் சூழ்ந்திராநின்ற பலமான பர்வதங்களுக்கு மத்தியில் கோட்டையையும், அதைச்சுற்றி ஒரு சிறந்த

நகரத்தையுங் கட்டினார். அன்றுமுதல் இதற்கு அஜாமிர் பட்டணம் என்று பெயர்பெற்றுப் பிறகு ஆஜ்மீரம் என்று பெயராகிவிட்டதாம். மேற்சொன்ன அஜாமிலருடைய சரித்திரத்தையும், அவர் சந்ததியார்களுடைய சரித்திரத்தையும் விவரமாகத் தெரிவிக்கும் நூல்கள் அகப்படவில்லை ஆயினும், இந்தசந்ததியைச் சார்ந்த விசோலதேவராஜர் அல்லது அஜாராஜர், கி. பி. 145 வரு இந்தப் பட்டணத்தைப் பெரியதாக்கி, சுற்றிலும் எழெட்டு பிரம்மாண்ட சுற்சுவர்களையும், அவைகளுக்கு ஏழெட்டு கேட்டு வாசல்களையும் கட்டிவைத்ததன்றியில் பட்டணத்தைச் சுற்றிப் பலமான பாதுகாப்பாக அமைந்திருக்கும் பர்வதங்களிலும் பிரம்மாண்டமான கோட்டைகளைக் கட்டிவைத்தார். மேலும் அஜீபால் மலைகளிலிருந்து விழும் ஜலத்தை செயற்கை நதிகளாகவும், செயற்கைத் தடாக ஏரிகளாகவும் செய்வித்துக் குடிகளுடைய க்ஷேமத்தை விருத்தியாக்கினார். அன்றியும் நகரத்துக்குக் கிழக்கே சுமார் அரைமைல் தூரத்தில் பெசில் தாலோ என்னும் பெயரால் பின்னும் ஒரு ஏரியைக் கோழிமுட்டை ரூபமாகவும் கருங்கற்களால் பந்தோபஸ்தாகவும் இரண்டரை மைல் விஸ்திரணமுள்ளதாகவும் கட்டிவைத்தார். நகரத்துக்கு வடகிழக்கே தாராகுர்என்னும் மலைத்தொடர்ச்சி இருக்கின்றது. நகரத்துக்கு மேற்கே ஆறு மைல்கள் தூரத்தில் அன்னசரோவரம் என்னும் பெயரால் சிறந்த செயற்கை ஏரியிருக்கிறது.

இந்தச் சரோவரத்துக்கு 600 கஜநீளமும் 100 கஜ அகலமுள்ள செயற்கைக்கரை யிருக்கிறது. மழைக்காலத்தில் இந்தச் சரோவரம் ஆறுமைல் விஸ்திரணம் வரையில் ஜலத்தால் நிறைந்து பார்வைக்குப் பூர்வ பம்பா தீர்த்தமோ அல்லது மானசசரோவரமோ என்று சொல்லும்படியாகப் பிரகாசிக்கும். இந்தச் சரோவரம் அன்னதேவ மகாராஜர் காலத்திற் கட்டப்பட்டது. இந்த ஏரிக்கரையில் 16-ம் நூற்றாண்டில் ஜிஹாங்கிர் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட டவுல்தாபாக் என்னும் ஸ்படிக மாளிகை ரமணீயமாக இருக்கிறது. இதில் சீப் கமிஷனர் வசிந்து வருகிறார். இந்தக் கட்டடத்தை நேரில் பார்ப்பவருக்கே வியப்பாகும். நகரத்தின் மதில்களுக்கு வெளியிலும் தாராகுர் மலைக்குச்சமீபத்திலும் ஜெயினர் கோயிலொன் றிருக்கிறது. ஆகவே இவ்விடத்திய இராஜாக்களில் சிலர் ஜயின மதஸ்தர்களாக இருந்திருக்கவேண்டும். இவ்வளவு ஏரிகளோடும்பருவதங்களோடும், கோட்டைகளோடும் சிறந்த காக்ஷியாக விளங்குவ

தோன்றுகூட அதிபால் மலையிலிருந்து லூனி என்னும் சிங்காரமான உப்புநீர் ஆறு ஓடுகின்றது. லூனி என்பதற்கு உப்பென்று பெயர். இப்படிப்பட்ட பட்டணத்தைப் பாதகண்டத்தில் புருதிவிராவ்மகாராஜருடைய ஆளுகைக்கு வந்தகாலமாகிய கி. பி. 1191 ௵ கோரிவம்சத்தைச் சார்ந்த மகம்மது சுல்தான் படையெடுத்துவந்து சண்டை செய்ய, இந்தப் பலமான மலைக் கோட்டையையும் பலசாலிகளான ராஜபுத்திரர்களையும் வெல்ல முடியாமல், மறுபடியும், தந்திரகோலமாகத் தனிரூபர் என்னும் இடத்தின் வழியாகப் பலமான சேனையோடு கடும்போர் செய்ய, இந்துக்கள் தோற்கடிக்கப்பட்டு இராஜனைச் சிறையில் வைத்துக் கொன்று அநேக இந்துக்களையெல்லாம் வேட்டையாடி, கடைசியாகப் பலமான கப்பத்தை வாங்கிக்கொண்டு, இராஜனுடைய சந்ததியானுக்குப் பட்டங்கட்டிப்போனான். அன்றுமுதல் இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் திராப்பகைபுண்டாகி, இருதிறத்தாரும் பயங்கரமான சண்டைகள் செய்துவர, ஆக்பருடைய தர்ம இராஜாங்க காலத்தில் இந்த கோட்டையானது யாதொரு சண்டை சச்சரவுகளின்றி அவர் வசமாகி, இதை ஒரு விசேஷ காப்புஸ்தலமாக்கி மீவார், பார்வார், உதயபூர் முதலான ஸ்தலங்களைச் சேர்த்துப் பிரபல ராஜாங்கமாக்கினார். அந்தக்காலத்தில் இந்த ஆஜ்மீர் நகரத்துக்கு வெளியில் ஆக்பர் அரண்மனையொன்று கட்டப்பட்டு, இப்போது யுத்த விஷயத்துக்கு வேண்டிய வெடிமருந்து, துப்பாக்கி முதலானவைகளை வைக்கும் கிடங்காக உபயோகப்படுத்தி வருகிறார்கள். மேலும் நகரத்தின் மதில் சுவர்களுக்கு வெளியில் ஷாஜிஹான் அரண்மனையொன்று கட்டப்பட்டிருப்பதால், இந்த ஆஜ்மீரானது ஆக்பர் சந்ததிகளிடத்திலும் சில வருஷங்களிருந்தது. ஆனால் டில்லிச் சக்கரவர்த்தியின் சிங்காசனம் அகமத்ஷாதுராணி என்பவன் வசமாகவே, இந்த ஆஜ்மீரத்தைத் தக்கபடி பாதுகாக்காமல் விட, கி. பி. 1809 ௵ தவுல்தராவ் சிந்தியாவானவன் பலமான மகாராஷ்டிர படையெடுத்துவந்து பிடித்துத் தனது சகோதரன் பாபுராவு சிந்தியாவின் ஆளுகையில் விட, இது ஜயப்பூர், ஜோதிப்பூர் முதலான விடங்களைக் கொள்ளையடிக்க முக்கியப்பட்டணமாகிவிட்டது. 1817 ௵ மகாராஷ்டிரர்களோடு பெரிய சண்டை நடக்கும்போது இந்த ஆஜ்மீர் மாகாணம் ஈஸ்டு இந்தியா கம்பெனியாருக்கு விடப்பட்டது.

ஆஜ்மீரத்தின் தற்கால ஸ்திதி.

இப்போது இந்த ஆஜ்மீரானது மாகாணங்களிற் சிறந்த ஒரு பெரிய டிஸ்டிரிக்ட்டு. இதற்குக் கிழக்கே இராஜபுத்திர மாகாணங்களாகிய ஜயப்பூர், கிஷ்னகர் முதலான மாகாணங்களும், மேற்கும், வடமேற்கும் மயிர்வாரா ஜோத்பூரும் இருக்கிறதன்றியில், தென்மேற்கு முதல் வடமேற்கு வரையில் 80 மைல் நீளமும், 50 மைல் அகலமும் 2029 சதுரமைல் விஸ்திரணமுமுள்ள மாகாணம். தென்கிழக்குப்பாகம் பூமி மனற்பாங்கும் தாழ்ந்த நிலப்பாங்குமாக விருக்கிறது. வடக்கிலும் வடமேற்கு மாகாணங்களிலும் ஆரவல்லிமலைத் தொடர்ச்சிகளால் சூழப்பட்டுக் காக்ஷிக்குக் கம்பீரமாக விருக்கிறது. மேலும் சமுத்திரத்திற்கு மேல் 3000 அடிகள் உயர்ந்திருக்கிறதன்றியில், பர்வத பாகங்கள் பூமி மட்டத்துக்கு 1000 அடிகள் உயர்ந்திருக்கிறது. இந்த மலைத்தொடர்ச்சிகளிற் சிறந்த தாராகுர் மலையில் ஏராளமாக இரும்பு சன்னமும், ஈயம், தாம்பிரம், ஸ்காந்தம் முதலான லோகங்களும் அதிகமாக விருக்கின்றன. ஆகவே, இந்த மலையில் ஜனித்து நகரத்தில் பாய்ந்தோடும் கோரி என்னும் நதியின் ஜலமானது கார்பானிக்சோடா கலந்திருப்பதால் மழைக்காலத்திலன்றி மற்றக்காலத்திற் குடிக்க உதவாது. அன்னசாகாத்திலிருந்து ஓடும் லூனி என்னும் ஆறானது குச்சுக்கடலில் விழுகின்றது. பெசிலதோலா சரோவரத்திலிருந்து சாகர் முக்தி என்னும் சிற்றாறு ஓடுகின்றது.

புஷ்காம் என்னும் மூன்றாவது சரோவரத்திலிருந்து சாஸ்வதி என்னும் மற்றோர் சிறு ஆறும் ஓடுகிறது. இது ஆஜ்மீருக்குத் தென்மேற்கே ஏழு மைல்கள் தூரத்திலிருக்கிறது. இந்தப் புஷ்கா சரோவரமும் மஹா புண்ணிய தீர்த்தமென்று சொல்லப்படுகின்றது. இங்குப் பிரம்மாவானவர் பெரும் தவஞ்செய்து சித்தி பெற்றமையால் அவருக்கு ஒருகோவிலுங் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது நவம்பர் மாதம் நடக்கும் உற்சவகாலத்தில் ஏராளமான குதிரைகள் வியாபாரம் நடக்கிறது. இது நகரத்திலிருந்து நான்கு மைல் தூரத்திலிருக்கிறது. இதில் 25,000 ஜனங்கள்வரையில் குடியிருக்கிறார்கள். ஜனங்களின் முக்காலே மூன்றரைப் பாகம் இராஜபுத்திரர்களே. இவர்களுடைய நடையுடை பாவனைகள் ஜயப்பூராரைப் போலவே இருக்கின்றன. இதில் ஜயப்பூரைப்போல சிங்கார

மான கட்டடங்கள் இல்லாவிட்டாலும், சில மஸ்ஜீதுகளும் கோயில்களும் மண்டபங்களும் அழானவைகள். இந்தக்கட்டடங்களிற் சிறந்தது (Adai Deneke Jopree) அடேய் டின்கி ஜோபிரீ என்ற கட்டடம். இராஜபுத்திரர்களுடைய குமாரர்கள் வாசிப்பதற்கு மேஜர் மாண்டு (Major Maut) என்பவர்காலத்தில் கட்டப்பட்ட (Mayo College) மேயோ காலேஜ்என்னும் கலாசாலை இருக்கிறது. காஜாசாஹின் கோரி ஒன்றிருக்கிறது. இதில் இந்துக்களும் மகம்மதியரும் வணங்கி வருகிறார்கள்.

இந்தப் பட்டணத்தின் இரண்டொரு வீதிகள் தவிர, மற்ற வீதிகளும் கடைகளும் வரிசையாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாதிகளைக் கண்டும் கேட்டும் ஆநந்தித்து இன்னும் சுற்றிப்பார்க்க ஆவல் கொண்டு பிப்ரவரிமீ 23உ ஒரு எக்காவண்டியை 8 அணாவுக்கு வாடகைக்குக் கொண்டு தனியாக ஏறி நேராக அன்னசரோவரத்துக்குப் போய்ப்பார்க்க பிரயாணத்தைக் கொடுத்து, சரோவரத்தின் கரைகளில் அவ்விடத்திய இராஜபுத்திர ஸ்திரீகள் குந்திக்கொண்டு ஸ்நானபானங்களைச் செய்து சுவாமியை வணங்குவதைப் பார்த்தால், அவர்களுடைய பாலைப்போல் வெளுத்த தேகங்கள் தேவேந்திரனுடைய தடாகத்தில் அன்னபக்ஷிகள் வந்து குந்திக் கூத்தாடுவதைப்போலத் தோன்றின. அப்போது காலை ஏழுமணியானபடியால், பால சூரியன் தனது திவ்யமான கலைகளோடு ஜனித்து இந்த சரோவரத்தைச் சுற்றிலு மிருக்கும் பருவதங்களின் சந்துகளில் பிறிக்கொண்டுவந்து பிரகாசிப்பது அந்த சூரியனும் இந்த சரோவரத்தில் ஸ்நானம்செய்ய வந்ததைப்போல் இருந்து ஜலத்தில் பிரதிபிம்பித்து, அந்த பிரதிபிம்பத்தின் பிரகாசமானது இந்த ஜலத்தையே பாலைப்போல பிரகாசிப்பித்தும், பக்கங்களிலிருந்த ஸ்திரீ புருஷ பக்ஷி கந்த மூல பர்வதாதிகளில் தாக்கி, பார்க்கப் பார்க்க பரவசமடையச் செய்தபடியால் உடனே வண்டியைவிட்டிறங்கி சரோவரத்தில் ஸ்நானம்செய்து, அருகிலிருந்த அரசமரத்தடியில் உட்கார்ந்து பிரம்மப் பிரார்த்தனை செய்தோம்.

அன்ன சரோவரத்திற் செய்த பிரார்த்தனை.

அருள்வேந்தே! அருணோதயமான இந்தக் காலையில் இந்த அன்னசாகரத்தில் நின்னைத் தியானிக்கிறோம். நின்னைத் தியானிப்பதற்குப் பல சிறந்த விடங்க ளிருக்கினும், நதிதீரங்

களும், சரோவரங்களும் சிறந்த விடங்களாக விருக்கின்றன. ஏனெனில், நீர்: சகல ஜீவகோடிகளுக்கும் பிராணுதாரமென்பது பட்டப்பகலாகத் தெரிந்தவிஷயம். நீரின் முக்காலே மூன்றுபாகம் பிராணிகோடிகள் அதில் வசிக்கவும், குடிக்கவும், அதில் வசிக்கும் ஜந்துக்களைப் பக்ஷிக்க அநேக பக்ஷி முதலான மிருகங்களும் வந்து சேருகின்றன. அதுபோலவே பரமாத்துமாவாகிய நினது இருப்பிடம் சகல ஜீவகோடிகள் வந்து கூடித் தமது விடாய் தீர்த்துக்கொள்ளும்படியாக விருப்பதால் பூர்வகவிகள் நின்னை ஜலமயமாகவும் விஷ்ணு ரூபமாகவும் வர்ணித்தார்கள். எப்படி ஜலமில்லா விட்டால் யாதொரு பிராணியும் ஜீவிக்காதோ, அப்படியே நீ இல்லாவிட்டால் இந்த மண்ணுலகமேது? இந்த விண்ணுலகமேது? எல்லாம் நின்னையே பற்றிக்கொண்டு பிரகாசிக்கின்றன. நீ எல்லா ஜீவிகளுக்கும் அன்னமயமாக விருக்கின்றாய். ஆகையால் அடியேமுடைய ஆசை தீரும்படி நினது அன்னமயத்தின் தத்துவார்த்தத்தை யறிவித்து ஆசீர்வதித் தருள்வாய். ஓம் தத் சத்.

மெயர்வாரா.

இந்த ஆஜ்மீருக்குத் தென்மேற்கே மெயர்வாரா என்னும் மலைநாடு இருக்கின்றது. இந்நாட்டின் ஜனங்கள் ஆதியில் கொள்ளைக்காரராக இருந்து, இங்கிலீஷ்காரர் வசமானபிறகு கெப்டன் ஹால் (Captain Hall) என்பவர் காலத்தில் அடக்கப்பட்டார்கள். அவருக்குப் பதிலாகவந்த காப்டன் டிக்ஷன் (Captain Dixon) கி. பி. 1835-ம் வருஷத்தில், அக் குடிகளை விவசாயத்திற் புகும்படி செய்து வர்த்தக வியாபாரஞ் செய்யச்செய்தார்.

உதயப்பூர் அல்லது மெய்வார்.

உதயப்பூரானது மெய்வார் நாட்டிற்குப் பிரதான பட்டணமாயும், கடல் மட்டத்திற்குமேல் 2064 அடிகள் உயர்ந்து ஆரவள்ளி மலைகளாற் சூழப்பட்ட சிறந்த காந்தியை யுடையதாயும், 46,690 குடிகள் வசிக்கப்பட்டதாயும், இராஜபுட்டாவின் காஷ்மீரம் அல்லது சூரியன் உதயமாகும் புரி என்றும் சொல்லப்பட்டதாயும் அற்புதக் காக்ஷியுடையதாயும் இருக்கிறது. இதை ஆளும் இராஜபுத்திர அரசர் ஸ்ரீராமர் பிறந்த சூரிய வமிசத்தைச் சார்ந்த சுத்தராஜபுத்திரரென்றும், மகம்

மதிபருக்குப் பெண்களைக் கொடாத இரணவீர இராஜாவென்றும் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நாட்டின்மேல் கி. பி. 1294௵ கில்ஜி வமிசத்தைச் சார்ந்த அல்லாவுதீன் பீமராஜனுடைய மனைவி பத்மினி என்பவருடைய அழகைக் கேட்டு அவரைக் காணவிரும்பி படை யெடுத்துப் போகையில் அரசன் தமது மனைவி முதலான பெண்டுகளை அக்கினிக்கு இரையாக்கி யுத்தத்தில் சுத்த வீரனாக இருந்து மடிந்தான். இப்போது இவ்விடம் ஸ்ரீ ஜகந்நாதர் கோயிலும், இராஜ அரண்மனைத் தோட்டங்களும் பார்க்கத்தக்கவைகளாக இருக்கின்றன. இது ஜி. ஐ. பி. காண்டவா ரெயில் ருட்லாம் சித்தூர் ரெயில் ஸ்டேஷனுக்கு டிபாரிவழியாக ஒன்பது மைல்கள் தூரத்தி லிருக்கிறது.

பிறகு சரியான உடைகளைத் தரித்துக்கொண்டு நகரத்துக்குட்பிரவேசிக்க, இந்நகரத்தில் சிலவீதிகளில் கோஷா ஸ்திரீகள் நடமாடுவதினால் புருஷர்கள் போகக்கூடாதென்று வண்டிக்காரன் சொன்னான். ஆயினும், நாம் பூட்சும் ஜல்லடமும் தொப்பியும் போட்டுக்கொண்டு சட்டைக்காரனைப்போ லிருந்தமையாலும், உடுப்புப் போட்டுக்கொண் டிருப்பவர்களைக் கண்டால் வடதேசத்தில் பயமும் மரியாதையும் அதிகமானபடியாலும், இந்த நகரத்தில் இங்கிலீஷ் ரெசிடெண்டு என்னும் ஸ்தானாதிபதி இருப்பதாலும், யாதொரு பயமற்று வண்டியைவிட்டிறங்கி கால் நடையாகவே அநேக வீதிகளில் நடந்து திரிந்து சந்தோஷப்பட்டுச் சலித்து, எமது பெங்களூர் பிரம்மோபாசியும், எமது ஆப்த சிநேகிதரும், அவ்விடத்திய இஞ்சினீராபிசில் பிரதான உத்தியோகஸ்தருமாகிய ஸ்ரீமான் அண்ணாசாமி முதலியாரவர்கள் இந்த நகரத்தில் குடியிருப்பதால், அவரைக் காணப்போனதில் அவர் சர்க்கூட்டாக வெளியிற் போயிருந்தபடியால், ரெயில்வே ஸ்டேஷனுக்குத் திரும்பி, முன் இறங்கியிருந்த கிருஷ்ணாஜி கோவிந்தாஜி சத்திரத்திற்கே வந்து சமையற்செய்து சாப்பிட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தோம். அங்கு நமது சென்னை சிநேகிதராகிய ஸ்ரீமான் இரங்கய்ய நாயடு அவர்கள் தமது சம்சாரத்துடன் வண்டியேற வந்திருந்தார். மேலும், சேலம் ஜில்லா தருமபுரியிலிருந்து சிறு வயதில் பிசகிப்போன ஸ்ரீ ராமகிருஷ்ணய்யர் என்னும் எமது பால்ய சிநேகிதர் இந்த ஆஜ்மீர் ஸ்டேஷனில் மின்தபால் உத்தியோகஸ்தராக இருப்பதால், அவர் எமது அடையாளத்தைக் கண்டுபிடித்துப் பேசி ஸ்டேஷனுக்குள்

கூட்டிக்கொண்டு போனார். இந்த ஆஜ்மீர் ஸ்டேஷனானது இராஜபுடானா புகைவண்டித் தொடருக்குப் பிரதான கூட்டு ஸ்டேஷனானபடியால், ஸ்டேஷன் கட்டடம் பிரம்மாண்டமும், அழகுமான கட்டடமுமாக விருந்தும், ஆயிரக் கணக்கான ஸ்திரி புருஷர்கள் சதா போக்குவரத்தா யிருப்பதினால், போதுமான தங்குமிடமில்லை. பெண்டுபிள்ளைகள் காலை வெய்யிலில் நின்று கஷ்டப்பட்டுக்கொண்டிருந்து, 9 மணிக்கு வண்டியேறி, அன்று இரவு ஒருமணி வரையில் போதுமான இடமில்லாமையால், தூக்கமற்றுப் பனியால் பலவிதமாக வருந்தி, காலையில் ருட்லாம் என்னும் ஸ்டேஷனில் பிப்ரவரிமீ 4உ இறங்கி, பக்கத்தில் இருக்கும் உஜ்ஜயினி ஸ்டேட் கிளைப்பாதையிற் கொஞ்சதூரம் நடந்துபோய் உஜ்ஜயினி புகை வண்டியில் ஏறி, சுமார் பனிரெண்டுமணிக்கு உஜ்ஜயினி ஸ்டேஷனைச்சேர்ந்தோம். இந்த ஸ்டேஷன் பெரிதாக விருக்கினும், நல்ல வண்டிகள் கிடைக்காதபடியால், இரண்டு கட்டை வண்டிகளை வைத்துச் சாமான்களைப் போட்டுக்கொண்டு நகருக்குள் நடந்து போய்ச் சுமார் 4 மணிக்கு சூபிராநதிக் கரையில் புராதனமான கட்டடத்தில் இறங்கினோம். இரண்டு நாளாக நல்ல போஜனமும், தூக்கமு மில்லாமையால், மயக்கம் அதிகரித்து உடனே தேநீரைத் தயார்செய்து குடித்து ஆபாசத்தைத் தீர்த்துக்கொண்டோம். பிறகு கையிலிருந்த அரிசி முதலான பதார்த்தங்களைக்கொண்டு இரவு 9 மணிக்குச் சமைத்துச் சாப்பிட்டு மோசக்காரரான பண்டாக்களுடைய வார்த்தையை நம்பி இறங்கிய பயங்கரமான பழைய கட்டடத்தில் குளிரினாலும் குப்பைகளினாலும் வருந்திப் படுத்துறங்கினோம்.

UJJAIN—உஜ்ஜயினிபட்டணத்தின் பூர்வசரித்திரம்.

இந்த உஜ்ஜயினி பட்டணமானது இந்துக்களுக்கு முத்தி தரும் ஏழிலொன்றாகிய அவந்திகா என்னும் புண்ணிய ஸ்தலத்துக்குப் பதினாறு மைல் தூரத்திலிருக்கிற புராதனமான பட்டணம். எசோதையின் வயிற்றில் ஜனித்த துர்க்கையாகிய குழந்தையைக் கம்சன் ஆகாயத்தின்மீது வீசி கத்தியால் வெட்ட, அந்தச் சிசுவானது பிறிட்டெழுந்து கம்சனை வெட்சச்செய்து ககனமார்க்கமாக வந்து இந்தவிடத்திற் குதித்து ஜயகோஷமிட்டபடியால் இதற்கு உஜ்ஜயினி என்று பெயருண்டாகியதாம்.

இந்த உஜ்ஜயினி நகரவாசியாகிய சாந்தீப மகரிஷியினிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணரும், பலராமரும் வேதாத்தியயனம் செய்தார்கள். மேலும், இந்த உஜ்ஜயினியைச் சார்ந்த அவந்திகாபுரியின் மலைச்சார்பில் தாபசிபல்லி என்னும் கிராமத்தில் சுதாமர் (குசேலர்) என்பவர் பிறந்து, மேற்சொன்ன ஸ்ரீ கிருஷ்ண பலராமருடன் கூடி சாந்திபரிடம் வேதங்களை வாசித்து மத்தியகாலத்தில் குசேலர்=குறுகிய சீலையை யுடையவரென்கிற ஏழையாகி ஸ்ரீ கிருஷ்ணரால் சம்பன்னரானர்.

இந்த ஸ்தலத்தின் பூர்வ சங்கதிகள் அதிகமா யிருப்பதால், பாரதம், பாகவதம், இராமாயணம் முதலான கிரந்தங்களைப் பார்வையிட்டால் போதுமான சரித்திரம் தெரியவரும். ஆகையால், அந்தச் சங்கதிகளை இங்கு விரிக்காது தற்கால சரித்திரத்தில் கண்ட சங்கதியை மாத்திரம் சற்று எழுதுகிறோம். கி. பி. முன் 325 வருஷங்களுக்கு முன் அதாவது 2213 வருஷங்களுக்குமுன் இந்த உஜ்ஜயினி பட்டணமானது குறைவற்ற செல்வமும் சிறப்பும் பெற்றுப் பிரகாசிக்கும்போது, சந்திரகுப்தமகாராஜனுடைய பேரனும், பாடலிபுரத்தின் இராஜனுகிய பிந்துசாரனுடைய குமாரனுமாகிய தனமகோசன் என்னும் அசோகன் தனது தந்தைக்கு அதிக வருத்தங்கள் செய்து வந்தபோது, பூர்வகாலத்து வழக்கப்படி காட்டிற் சஞ்சரித்துக் காலங் கழிக்கும்படி ஓட்டிவிட, அந்த அசோகன் இந்த உஜ்ஜயினி பட்டணத்துக்கு வந்து பிடித்து இராஜனுகி அரசாண்டு வந்ததாக இலங்கைத்தீவில் பவுத்தர் கோயிலிலகப்பட்ட மஹாவம்சம் என்னும் ரிகார்டினல் வெளியாகியது. அந்தக் காலத்தில் இந்த உஜ்ஜயினி பட்டணமும், இதைச் சார்ந்த அக்கம் பக்கத்து நாடுகளெல்லாம் புத்தசமயத்தை அனுசரிப்பதாகிவிட்டன. அசவே கி. மு. 157-ம் வருஷம் தாமரகிதரென்னும் பவுத்தமத சிரேஷ்ட குருவானவர் தக்கினி க்ஷேத்திரமென்னும் இந்த உஜ்ஜயினி பட்டணத்திலிருந்து 40,000 புத்த சீடர்களைக் கூட்டிக்கொண்டு இலங்கையில் அநுராதபுரத்தில் பெரிய புத்தமதக் கோயிலைக் கட்டக் கடைக்கால் போட்டதாகத் தெரியவருகிறது. பிறகு இந்த உஜ்ஜயினி பட்டணத்திலிருந்த பவுத்தமத இராஜர்களும், பவுத்தர்களும் என்ன கதியை யடைந்தார்களோ தெரியவில்லை. கி. மு. 57 வருஷம் அதாவது 1945 வருஷங்களுக்கு முன்பு விக்கிரமார்க்க மஹாராஜன் சிங்காதன மேறி, கல்வியிலும் செல்வத்திலும் சிறந்து, இந்த இந்து தேசத்திற் சிறந்த 56 இராஜாக்களையும்

ஜயித்துக் கப்பம் வாங்கிக் கம்பீரமாக வாழ்ந்துவரவே, காளிதாசன், தண்டி, பவபூதி, வரருசி முதலான மஹாகவித்துவ சிகாமணிகள் இந்த இராசாங்கத்தில் பிரபல கீர்த்திபெற்று சாகுந்தலம், உத்தரராமசரித்திரம் முதலான சிறந்த கிரந்தங்களை இயற்றினார்கள். இந்த விக்கிரமார்க்க மகாராஜன் இந்த உஜ்ஜயினி பட்டணத்தையே புதிப்பித்துப் பெரிய கோட்டையையும், அநேக கோபுர கட்டடங்களையுங் கட்டிப் பலவிதத்திலும் கீர்த்திபெற்று, நாடாறுமாதங் காடாறுமாதங்களாக நின்று அரசு செய்யும்போது, இந்த இராஜன் அயோத்தி, மதுரை, மாயாபுரி முதலான விடங்களில் அநேக திவ்ய க்ஷேத்திரங்களையும், ஸ்தலங்களையும் கட்டி கீர்த்திபெற்று வந்தபடியால், இந்துக்கள் இவனை ஓர் அவதாரபுருஷனாகக்கொண்டு, இவன் பட்டாபிஷேகம் பெற்ற நாள்முதல் விக்கிரம சஹாப்தம் என்னும் பெயரால் வருஷக் கணக்கை இன்றளவும் எண்ணிக் கணக்கிட்டு கவுரவப்படுத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட இராஜனை சாலிவாஹனன் கொன்றதாகச் சிலர் சொன்னாலும், சரித்திரத்தில் விவரமாகவில்லை.

இந்த விக்கிரமார்க்கனுடைய குமாரன் சந்திரசேனன் சிறு குழந்தையாக இருந்தபடியால், போஜராஜன் பட்டத்தைப் பெற்று விக்கிரமார்க்கன் காலத்திலிருந்த காளிதாசன் தண்டி பவபூதி முதலானவர்களைப் போஷித்து வந்ததன்றியில், அவர்களால் போஜசம்பு முதலான கிரந்தங்கள் எழுதப்பட்டன. பிறகு விக்கிரமார்க்கனுடைய குமாரனாகிய சந்திரசேனன் இந்தப் பரதகண்டத்துக்கே பிரதான அரசனாகிப் பிரகாசித்தான். இவனுக்குப் பிறகு இந்தப் பட்டத்தையடைந்தவர்களுடைய சங்கதி தெரியவில்லை. பதினோராம் நூற்றாண்டில் மகமது குஜினி இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது, இந்த உஜ்ஜயினி பட்டணமானது மால்வாநாட்டில் பிரதான பட்டணமாகவிருந்தது. கி. பி. 1317-ம் வருஷம் இதுவும் மகமதியர்கள் வசமாகி, 1318-ம் வருஷம் கிலார் கோரி என்பவன் கைக்கொண்டான். 1561-ம் வருஷம் ஆக்பர் சக்கிரவர்த்தி வசமாகிவிட்டது. பிறகு மத்தியகாலத்தில் மகாராஷ்டிரர் வசமாக,1810-ம் வருஷம் டவுல்தராவ் குவாலியூரைப் பிடித்தபோது, இந்தியமகாராஜாவுக்குப் பிரதானபட்டணமாக விருந்தது. இந்த உஜ்ஜயினி பட்டணமானது நக்ஷத்திராதி கோளசாஸ்திர ஞானத்திற்கு வசதியான மத்திய இடமாகையால், ஜயசிங்கு மகாராஜனாகிய மகமதுஷா சக்கிரவர்த்தியின்

மந்திரி இந்த விடத்திலும் ஒரு பிரம்மாண்டமான நக்ஷத்திர மண்டபம் கட்டியிருக்கிறான். நகரத்தின் வெளிகளில் புத்த மதஸ்தர்களுடைய அநேக கோயில் விக்கிரக கட்டடங்கள் இடிந்து கிடக்கின்றன.

உஜ்ஜயினி பட்டணத்தின் தற்கால ஸ்திதி.

இப்போது இந்த உஜ்ஜயினி பட்டணமானது க்ஷிப்ராநதிக் கரையில் கட்டப்பட்டு, குவாலியர் மகாராஜருடைய மாகாணத்துக்கடுத்த ஸிந்தியராஜ குடும்பத்தைச் சார்ந்த சிறந்த நகரம். இது ஆறுமைல் சுற்றளவுள்ளதாய், நகரத்தைச்சுற்றிலும் பிரம்மாண்ட மதிற்சுவராற் சூழப்பட்டு முட்டைவடிவாக இருக்கின்றது. இந்த மதிற்சுவர்களின்மேலே அநேக கொத்தலங்கள், கோபுரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மையான வீதிகள் இரண்டு மூன்று அடுக்குகளுடையனவாகவும், மண்ணினாலும், செங்கல் சுண்ணாம்பினாலும், மரங்களினாலும் கட்டப்பட்டவைகளாக விருக்கினும், பிரதான கடைவீதியானது பலவித ஜனங்களால் நிறைந்திருக்கின்றன. வீதிகளிலெல்லாம் கருங் குண்டுகற்களைப் புதைத்திருப்பதினால் நகரத்துக்குள் குதிரை வண்டிகள் போக்கு வரத்துசெய்வது கஷ்டம். கடைவீதி கட்டடங்களின் மேல்மாடிகளிலிருக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரரும், கீழ்க்கட்டடங்களில் ஏராளமான கடைகள் வைத்துக்கொண்டிருக்கின்றனர். நகரத்தில் நான்கு பெரிய மஸ்ஜீதுகளிருக்கிறதன்றியில், விஷ்ணு, சிவ தேவஸ்தானங்கள் பல சிங்காரமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. நகரத்திற்கு நதியின் ஜலமன்றியில், சமீபத்திலிருக்கும் இரண்டு ஏரிகளின் ஜலமும் அனுகூலப்படுவதினால், அநேக சிங்கார நந்தவனங்கள் சிறந்து விளங்குகின்றன. மேலும் ஐயசிங்கு மகாராஜருடைய சிங்கார அரண்மனை பொன்று கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடத்துக் கருகில் ஒரு புராதனமான கோட்டை இருக்கிறது. இது விக்கிரமார்க்கன் கட்டிவைத்ததாகச் சொல்லி வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருகிறார்கள். இந்த அநேக தோட்டங்களிருக்கினும் டவுல்தாரவ்பாக்கும், அறப்பாக்குஎன்னும் தோட்டங்களும் பார்க்கத்தக்கவைகள். இந்தத்தோட்டங்களில் மகம்மதியர் காலத்தில் முக்கியமாய் பேர்காலத்தில் செய்யப்பட்ட தோட்டங்கள்தான் சிறந்தவைகள். இந்து இராஜத் தோட்டங்களும் சில இருக்கின்றன. நகரத்துக்குச் சமார் ஒருமைல் தூரத்தில் மால்வா பட்டணமிருக்

கிறது. இங்குக் காளி ஒங்காளி கோயில் பிரம்மாண்ட உருவுடனிருக்கிறது. இந்த விடத்திலிருந்துதான் வாந்திபேதி வியாதி ஜனித்ததாகச் சொல்லுகிறார்கள். ஒருகாலத்தில் இந்தப்பட்டணத்தில் தேவி கோபத்தினால் மண்மாரி பெய்து பட்டணமே பாழ்த்துப் போய்விட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். நகரத்துக்கு வடக்கே ஐந்துமைல் தூரத்தில் க்ஷிப்ராநதியானது இரண்டுகிளைகளாகப் பிரிந்து ஓடுவதினால், இடையிலிருக்கும் மணற்குன்றத்தில் ஒரு பெரிய அரண்மனை பாதி கட்டியும் கட்டாமலும் போட்டுக்கிடக்கின்றது. இந்தக் கட்டடத்துக்குக் கொண்டுவந்த சாமான்கள் பூர்வத்தில் ஒங்காளியம்மன் கோயில் கட்டடத்தைச் சார்ந்ததினால் அதைப்பிடுங்கியதனாற்றான் வாந்திபேதி ஜனித்ததென்றும் மண்மாரி பெய்ததென்றும் சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இப்போது இந்த உஜ்ஜயினிப்பட்டணத்தில் வருஷம் சுமார் 2,00,000 ரூபாய் வருமானமாகிச் சிந்திய மகாராஜாவுக்குச் சேருகின்றது. இப்போது இந்த நகரத்தைத் தக்கபடி சுத்திசெய்யப் போதுமான பந்தோபஸ்தற்று அசங்கியமாக விருக்கிறது. சீக்கிரத்தில் குவாலியூர் மகாராஜாவே இந்த விடத்திற்குக் குடிபுகுவதாகப் பிரஸ்தாபம். அப்போது நகரமும் க்ஷேமமடையக்கூடும். இல்லாவிட்டால், அவந்திகவிலாசபுரி யென்று பெயர் பெற்ற இந்தப் பூர்வ ஸ்தலத்தை இந்து ராஜாக்களுடைய காலத்திலேயே இப்படி அசட்டையாகவிட்டால் யாத்திரைக்காரர் விசனப்பட்டுத்தூஷிக்கவிடமாகும். இது விஷயத்தில் தற்காலத்து குவாலியூர் மகாராஜர் கவனிப்பார்களென்று நம்புகிறோம். பிப்ரவரி மாதம் 6-ம் தேதி காலையில் எழுந்து க்ஷிப்ராநதியில் ஸ்நானம் செய்து அந்த அழகிய நதியைப் பார்த்து ஆனந்தமடைந்து பிரம்ம பிரார்த்தனை செய்தோம்.

உஜ்ஜயினி பட்டணத்திற் செய்த பிரார்த்தனை.

ஓ! அன்பர்களே! அவந்திகமென்னும் இந்த உஜ்ஜயினி பட்டணம் மோக்ஷசாதகங்களான சப்தபுரிகளிலொன்று. மேலும் விக்கிரமார்க்கன், போஜன் முதலான மஹாராஜாக்களும், காளிதாசன், பவபூதி, தண்டி முதலான ஸம்ஸ்கிருத கவிகளும், பண்டிதர்களும் சிறந்து வாழ்ந்தவிடம். இந்தவிடத்தில்தான் ஆரியர் பரப்பிரம்மத்தைப் பராசக்தியாகவும், பெண்பாலாகவும் வர்ணித்து வழங்கி வந்தார்கள். ஆகையால் இப்

படிப்பட்ட திவ்விபஸ்தலத்தில் பிரார்த்தனை செய்வோம். இந்தச் சூபிரா நகிரிரத்தி ஓட்காருங்கள். ஓ பராசக்தியே! உன்னை வணக்குகின்றோம். பரப்பிரமமாகிய உன்னை உலகத்தார் பெண்பாலாகவும், பத்திரகாளியாகவும், பராசக்தியாகவும் வர்ணித்து வணங்கி வந்தார்கள். நாங்களுன்னைப் பெண்ணென்றும் ஆணென்றும் அலியென்றும் பாவித்துப் போர்புரியாமல், கேவலம் சர்வசக்தியே என்று வணங்கி எமது அஞ்ஞானமாகிய இராக்ஷதனைக் கொன்று ஞானவான்களாக்கி நின்னையறிந்தானந்தப்படச் செய்வாய்! மிகசக்தியையுடைய நாங்கள் நின்னையன்றி யாது காரியம் செய்யவல்லோம்! நினது அருள்சக்தியைப் பிரகாசிப்பாய். ஓம் தத் சத்.

பிறகு பக்கத்திலிருந்த பிராமணர்கள் நாம்கொடுத்த தக்ஷிணையை வாங்கமாட்டோமென்று வாதாடியபடியால், அவர்களிஷ்டப்படிக்குக் கொடுத்து நகரத்தின் மத்தியிலிருக்கும் இராதாகிருஷ்ணர் கோயிலையும், இன்னும் பல கோயில்களையும் பார்த்துக்கொண்டு தங்குமிடம் வந்து சாப்பிட்டோம்; இவ்விடத்தில் ஸ்திரி புருஷர்கள் மகா சுந்தரமுக முடையவர்களாக விருந்தும், கொடுத்ததை வாங்கிக்கொள்ளாமல் வம்பாட்டாங்கள் செய்து வருத்துவதினாலும், பண்டாக்கள் மோசடியாகப்பேசி நல்ல வீட்டிற்கொண்டுபோய் இறக்காமல், பயங்கரமான பாழ்வீட்டில் விட்டபடியாலும், இனி நகரத்தில் தங்க இஷ்டமில்லாமற் சாமான்களைக் கட்டிக்கொண்டு புகை வண்டிக்கு வந்தோம். வந்து சேருவதற்குமுன் புகைவண்டி போய் விட்டபடியால் அன்று இராத்திரி பன்னிரெண்டு மணிவரையில் அங்கேயே பண்டாக்களிடத்தில் மனஸ்தாபஞ் செய்துகொண்டு அவர்களிஷ்டப்படி பணங்கொடுத்து இந்தூருக்கு ஆள் ஒன்றுக்கு எழுரூ விகம் டிக்கட்டு வாங்கி வண்டியேறி, ஜாமம் மூன்றுமணிக்கு இந்தூர் ஸ்டேஷனில் இறங்கி, மகாராஜருடைய சத்திரத்திற் றங்கப்போனோம். அன்று இராத்திரி பனியினால் வருந்திப் பதைத்ததுபோல் இந்தப்பாதகண்டத்தி லெங்கும் எப்போதும் பட்டதில்லை. அப்போது தெர்மாமிடர் 54 டிக்கிரியிலிருந்தது.

பிப்ரவரி மாதம் 6-ம் தேதி காலை எழுந்து குளிரின் உபத்திரவம் சகிக்கக்கூடாமல் உடனே தேனீர் தயார்செய்து குடித்தோம். உடனே உடுத்திக்கொண்டு நமது நவமணிகளில் கணமணியும், சிறந்த தேசாபிமானியுமாகிய ஸ்ரீ திவான்பஹதூர் இரகுநாதராயரவர்கள் இந்தச் சமஸ்தானத்தில் பிரதமமந்

திரியாக விருப்பதால் அவரைத் தரிசிப்பதற்காக ஒரு ரூபாய். சத்தத்தில் குதிரை கட்டிய பெட்டிவண்டியில் ஏறிப்போனோம்: அந்த வண்டிக்காரன் திவான்பஹதூர் ரகுநாதராயருக்குப் பதிலாக, நகரமத்தியிலிருந்த ஸமஸ்தானத்தின் ஒருபெரிய உத்தியோகஸ்தர் வீட்டிற் கொண்டுபோய்விட்டான். அந்த எஜமானரும் அந்த வீட்டின் ஓர் தாழ்வாரத்தில் ஒரு கனப்புச் சட்டிவைத்துக் குளிர் காய்ந்துகொண்டிருந்தார். அவரிடம் எமதுதரிசனச் சீட்டைக்கொடுத்தனுப்ப, அவருக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாமையால், சீட்டைவாங்கி வைத்துக்கொண்டு எம்மை உள்ளேவரும்படி சொல்ல, நாமும் போய் நமஸ்காரம் செய்து அருகிலுட்கார்ந்தோம். அவர் திவான்பஹதூராவர்களுடைய காரியஸ்தரோ, வீட்டுக்குஉள்ளிருக்கும் திவான்பஹதூராவர்களுக்குத் தெரிவிப்பாரோவென்றிருந்தோம். ஆனால் அவருக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாமையாலும், எமக்கு மஹாராஷ்டிர பாஷை தெரியாமையாலும், இருவர் கருத்தும் அறிய இரண்டொரு மணிகாலம் ஒருவர் முகத்தை ஒருவர்பார்த்து மயங்கிக்கொண்டிருக்கும்போது, இங்கிலீஷ்பாஷை தெரிந்த ஒரு பெரியவர் வந்து அவரிடத்தில் எமது அபிப்பிராயத்தைச் சொல்ல அவர் விசனப்பட்டு திவான்பஹதூராவர்கள் லால்பாக் என்னும் தோட்டத்தில் குடியிருப்பதாகச் சொல்ல, உடனே புறப்பட்டு வந்து வண்டியேறி அந்நகரத்தைக் கடந்து லால்பாக் தோட்டத்திற்குப் போனோம். அங்குப் பல பாரா சிப்பாய்களால் காக்கப்பட்ட சிங்காரகட்டிடம் தோன்றியது. கட்டிடத்தின் வெளியில் அநேக ஜட்ஜி முதலானவர்கள் திவான்பஹதூராவர்களுடைய பேட்டிக்காகக் காத்துக்கொண்டிருக்குமிடத்தில் யாமும் போனோம். உடனே மாளிகையிலிருந்த ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணராயராவர்கள் ஓடிவந்து எம்மைக் கட்டித்தாவி மேல்மாடிக்கு அழைத்துப்போனார். உடனே வெளியில் போயிருந்த திவான்பஹதூராவர்கள் வந்து எம்மைக் கண்டு ஆனந்தித்து, கைகுலுக்கி யாம் வடதேசத்திற்செய்தயாத்திரையின் விசேஷத்தையும், ஸ்தலமஹத்துவங்களையும், புருஷர்களுடைய பெருமையாதிகளையும்பற்றி வெகுநேரம் பேசி, அவர் எம்மை நோக்கித் தங்களுக்கு யாதாவது வேண்டுமோ என்று கேட்க, அதற்குப்பதிலாகத் தங்கள் பேட்டியேபோதுமென்று சொல்லி வெகுநேரம் பேசினோம். இந்த இந்தூர் ஸமஸ்தானத்தில் இன்னும் இரண்டொருநாளிருந்து வேடிக்கை விநோதங்களைப்பார்க்கும்படி சொல்ல, பார்க்கவேண்டியவைகளையெல்லாம் பார்த்தாய்விட்டன. தென்தேசத்தைவிட்டுத் திங்களிரண்டு

மென்று கூறி விட்டபடியால் இனித் தாமதிக்கச் சரிப்படாதென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு தங்குமிடம் வந்து அவ்விடத்திய ஈக்களுடைய உபத்திரவத்தைச் சகித்துக்கொண்டு சாப்பிட்டுச் சற்று இளைப்பாறினேம்.

இந்தூர் சமஸ்தானத்தின் பூர்வஸ்திதி.

இந்த இந்தூரானது பற்பல ஆண்டுகளும், தாமுமான ஸ்ரீ ஹோல்கருடைய சமஸ்தானம். இந்த சமஸ்தானம் 8318 சதுரமைல்களுள்ளது. இந்தச் சமஸ்தானத்தின் வடபாகம் சாம்பல் நீர் பாய்ச்சப்படுகிறது. தென்பாகம் நர்மதை நதியினால் பாய்ச்சப்பட்டுக் கோதுமை, தானியங்கள், கசகசா, அபினி, கரும்பு, பருத்தி, புகையிலை, மொச்சை முதலான கொட்டைகள் இவை அபரிமிதமாக விளைகின்றன. சமஸ்தான வடபாகமும் கிழ் மேற்குப் பாகமும் விந்திய பருவத சார்புகளாகவும், தென்பாகம் சாத்பூரா மலைச்சார்பாகவுமிருப்பதால் பூமிகளுக்கு முதல்தரமான எருவு முதலான வசதிகளுண்டு.

விந்தியமலை.

இந்த மலையானது இந்தியாவின் வடபாகத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் மத்தியில் எல்லையாக முக்கோண வடிவாயிருக்கிறது. இது நர்மதாநதிக்கு வடஎல்லையாகவும், மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி கணவாய்களைச் சேர்க்கும் மலையாகவுமிருக்கிறது. இது குஜராத்திற்கு மேற்கும் கன்னைக்குக் கிழக்குமாகப் படர்ந்து இருக்கின்றது.

ஆரவல்லிமலை.

இது மேற்கிந்தியாவில் செய்பினிருந்து வடகிழக்காக இருக்கும் மலைத்தொடர்ச்சிகளாம். அது மேற்கில் விந்தியமலை போய் சேர்கின்றது. இதன் அடிச்சார்பில் உதயப்பூர் மார்வாரி முதலான பட்டணங்கள் இருக்கின்றன. அதன் உன்னத சிகரத்திற்கு அபுவென்றுபெயர். அது சமுத்திர மட்டத்திற்கு 5000 அடிகள் உயரமுள்ளது.

நர்மதா.

இந்த விந்தியமலையின் 3400 அடிக்குமேலிருக்கும் அமரகண்டிகை என்னுமிடத்திலிருந்து உற்பத்தியாகி, ஜப்பல்பூர் ஓசங்கப்பேட்டை வழியாகப் பாய்ந்து, சாத்பூரா மலைத்தொடர்ச்சிகளில் பயங்கரமான காடுகளில் புகுந்து, அநேக சிறிய உபநதிகளோடு சேர்ந்து; 801 மைல் தூரம் ஓடி காம்பேக் குடாக்கடலில் விழுகின்றது. இந்நதியின் மத்தியகளாதிரமான மாந்தாத்தா என்பது ஒரு விசேஷ சிவஸ்தலம்.

தபதி.

—()—

இந்த மலைபானது சாகூர் நர்மதா கரைபோரங்களில் இருக்கும் மோலடா என்னும் இடத்தில் உற்பத்தியாகி சாத்பூரு அடிவாரமாகப் புரேனபூர் வழியாக ஓடிப் பிறகு பரோடா குவாயிர், சூரத் நாடுகளின் வழியாகச் சுமார் 441 மைல் தூரம் ஓடி, காம்பேக் குடாக்கடலில் பாய்கின்றது. இந்நதியோரத்தில் அநேக சிவஸ்தலங்கள் இருப்பதன்றியில் புகைவண்டி விஷயமாக அநேக பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்விடம் விந்திய பருவதத்தின் உன்னத சிகரங்கள் 1500 முதல் 2000 அடிகள் வரையிலும், சாத்பூராமலையின் உன்னத சிகரங்கள் 2500 அடிகள்வரையிலும் உயர்ந்திருக்கின்றன. இந்தச் சமஸ்தானம் மகாராஷ்டிரருடைய அதிகாரத்திலிருந்தாலும் இதில் கொஞ்சம் மகம்மதியரும், காண்டுகள், பில்கள்என்றஒருவகைவனவேட ஜனங்களும்ஏராளமாக இருக்கிறார்கள். இவர்கள்தான் இந்தப் பிராந்தியத்தின் ஆதி குடிகள். இப்போது 81,51,640 ஜனங்கள் குடியிருக்கிறார்கள். 1886-87-ம் வருஷம் 74,18,200 ரூபாய் வருமானமுள்ளது. இந்தூர், மண்டலசர், இராமபூரா, பாம்பூரா என்பவை பிரதான பட்டணங்கள்.

இந்தச் சமஸ்தானத்தின் முதல் இராஜாவாகிய மிலஹரி ராவ் ஹோல்கார் என்பவர் தக்ஷணதேசமஹால் என்னும் கிராமத்தில் 1693௵ பிறந்து, ஒரு குடியானவனாயிருந்து, ஆடு மேய்ப்போனாகிப் பிறகு சிப்பாய் ஆகி, நிஜாம் உல்முல் உடன் எதிர்த்துச் சண்டை செய்ததினால் பெஷ்வாவினால் 500 குதிரைகளுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். 1728௵ வடமதுரைக்கு வடக்கே 12 டிஸ்டிரிக்டுகளை ஜாகிராகப்

பெற்று, 1831௵ பின்னும் 7 டிஸ்ட்ரிக்டுகளைப் பெற்று, மாலவா நாட்டுக்குப் பிரதானியானான். 1737 வருஷம் இந்தூர்கொடுக்கப்பட்டு, இந்த ஸ்தானத்தில் தான் சாகும் 1767-ம் வருஷம் வரையில் பேர்போன மஹாராஷ்டிர வீரனாகப் பிரகாசித்தான். இவனுக்குக் குண்டேராவ் என்று ஒரு குமாரன் பிறந்து, அவன் காலத்திலேயே இறந்துபோக, இவன் குமாரனாகிய மாலிராவ் பட்டத்தை யடைந்தான். இவனும் மதியீனனாகவிருந்து சில மாதங்களில் இறந்துபோக, இராஜ்ஜியம் அவன் தாயார் அஹல்யாபாய்வசமாகியது. இந்த அம்மாள் துக்கோஜிஹோல்காருக்கு அதிகாரம் கொடுத்து நடத்திவர, 1797௵ இறந்துபோன துக்கோஜியின் குமாரர்களாகிய காசிராவ், முலஹரிராவ் என்பவர்கள் பட்டத்திற்காக ஒருவரோடொருவர் சண்டைசெய்துகொள்ள, துக்கோஜியின் அபிமான மனைவி பிள்ளைகளாகிய இடோஜி ஜஸ்வந்தராவர்களும் எழுந்து பட்டத்துக்குச் சண்டைபோட்டார்கள். இவர்களில் பெஸ்வாவானவன் யானையின் காலில் மிதிக்கவிட, ஜஸ்வந்தராவ் முலஹரிராவைக் கொன்று நாகப்பூர் ராஜாவினிடம் போய் அடைக்கலம் பெற்றான். பிறகு 30000 வீரர்களோடு வர, இந்தியாவினால் தாக்கப்பட்டு, ஐரோப்பிய வீரர்களைக்கொண்டு கவாத்து செய்வித்து, 1802௵ புனாவில் சிந்தியா, பெஷ்வா மன்னர்களோடு பிரமாத யுத்தஞ்செய்து, ஜயசீலனாகிக் கொள்ளையடிக்க, லார்டு லேக் அவனைக் கண்டிக்கப்போய்த் தோல்வி யடைந்ததினால், மகாதீரனாகி மதுராபுரியைப் பிடித்து டில்லிப் பட்டணத்தைத் தாக்கிப் புகழ்பெற்றான். அப்போது இவனிடம் 92,000 வீரர்களிருந்தார்கள். இவர்களில் 66,000 பேர் குதிரை வீரர்கள், 7000 பேர் பீரங்கிக்காரர்கள், 19,000 பதாதிகள், 190 ஆர்டினென்ஸ்களிருந்தார்கள். இப்படிப் பிரதாபசாலியாகி 1806௵ நியாயமான காசிராவ், குண்டேராவ் என்பவர்களைக் கொன்று, பிறகு 1811௵ சித்தப்பிரமையினால் இறந்துபோக, ஜஸ்வந்தராவின் அபிமானஸ்திரீ துளசிபாய்ப்பட்டத்தைப்பெற்று ஆண்டுவரவே, மலஹரிராவ் ஹோல்கா என்பவனைச் சுவீகாரம் பெற்றுக்கொள்ள, 1817௵ உட்கலகங்கள் சம்பவித்துத் துளசிபாயைக் கொன்றுவிட, இந்த உட்கலகங்களை யடக்க 1818௵ ஆங்கிலேயருடன் சமாதானம் செய்ய உதவி பெறப்பட்டது. இந்த மலஹரிராவும் 1833௵ இறந்துபோக, இவன் தாய் மாஜிபாய் இராஜ்ஜியத்தைப் பாதுகாத்துக்கொண்டு, பாபு ஹோல்கார் என்னும் தூரபந்துவின் பிள்ளையைச் சுவீகாரம் செய்துகொண்டார். இந்தக்காலத்தில் இறந்துபோன ராஜாவின் மனைவி

களில் ஒருத்திக்குக் கர்ப்பந்தரித்து ஆண்குழந்தை பிறந்தாலும், அதை மறைத்துவிட்டு, தத்து புத்திரனாகிய மார்த்தண்டராவ் ஹோல்காருக்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டார் சிங்காசனம் கொடுத்தார்கள். இந்தக் காலத்தில் இறந்துபோன ராஜாவின் சமீப பந்துவாகிய ஹரிராவ் ஹோல்கார் என்பவன் எழுந்து, தான் பட்டத்துக்கு உரியவனென்று கலகஞ்செய்து குழப்பமாக்கினான். இதை இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் அடக்கிவிட்டார்கள். மார்த்தண்ட ஹோல்கார் ராஜ்ஜியத்தைக் கிரமமாகச் செய்யவில்லை. தனது அந்திமகாலத்தில் குமதி ஹோல்கார் என்னும் வாலிபனைத் தத்து வாங்கிக்கொண்டான். இந்த தத்து புத்திரனும் சீக்கிரம் இறந்துபோக, இந்தூர் ஸமஸ்தானத்துக்குப் பாத்தியஸ்தர் ஒருவரும் இல்லாமற் போய்விட, இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் தருமார்த்தமாக முல்காஜி என்பவனுக்குப் பட்டங்கட்டி, ஜசவந்தராவினுடைய மனைவியாகிய மாயிசாகிபியா அம்மாளுடைய போஷணையில் விடப்பட்டுத் தக்க கவுன்சிலர் சபையினால் இராஜ்ஜியம் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தது. இதற்குள்ளாக முல்கார்ஜீக்குப் போதுமான படிப்புச் சொல்லிக்கொடுத்து, 1852ஸ் பிப்ரவரிமீ சரியானவயதுவந்த போது, இராஜ பட்டாபிஷேகம் செய்துவைக்கப்பட்டது. இவருடைய சந்ததியார்கள்தான் இப்போது இராஜ்ஜிய பரிபாலனம் செய்துவருகிறார்கள்.

இந்தூரின் தற்கால ஸ்திதி.
மத்திய மாகாணம்.

இந்த இந்தூரானது மத்திய இந்தியாவி லிருக்கும் 71 போஷணை நாடுகளில் ஒன்று. இதுவும் இதைப்போன்ற நாடுகளும் இப்போது இந்தூரிலிருக்கும் கவர்னர்ஜனரலவர்களுடைய ஏஜண்டின் பார்வையில் விடப்பட்டிருக்கின்றன. அவைகளில் கிழக்கிலிருக்கும் ரிவா, பண்டல்கண்டும், வடக்கே இருக்கும் குவாலியூரும், தெற்கே இருக்கும் பூபாலும், இந்தூரும் முக்கியமானவைகள். இம்மத்தியநாடுகள் ஏறக்குறைய 89,000 சதுர மைல்கள் விஸ்தீரண முள்ளனவாகவும், ஒரு கோடி ஜனங்களையுடையனவாகவு மிருக்கின்றன. ரிவா என்பது 10,000 சதுர மைல்களும், 1,50,514 குடிகளும், 13,81,000 ரூபாய் வருமானமுமுள்ளது. இது ரோஹில்கண்டு ஏஜண்டுக்கு முக்கிய பட்டணம். இந்தப் பட்டணம் கி. பி. 1618 வருஷம் விக்கிரமாதித்தனால் ஸ்தாபிக்கப்பட்டு 22,000 குடிகளுள்ளது. இதன் ராஜா. வெங்கடேசராமன் பஹதூர் அவர்கள்.

பண்டல்குந்து—என்பது யமுனைக்கும், மத்தியமாகாணங்களுக்கும் இடையிலுள்ள பல துண்டு பாளையப்பட்டுகள். இது 10,227 சதுர மைல்கள் சுற்றளவும், 14,16580 குடிகளுமுள்ளது. இவற்றில் அஜிகார், பிஷாவர், சார்காரி, சத்திரபூர், டாட்டியா, ஓர்சா, பாரு முதலானவை சிறந்தவைகளாம். குவாலியூர் ஸமஸ்தானத்தைப்பற்றி முன்னமே ஆக்ரா வைபவத்திற்குக் கீழ் சொல்லியிருக்கிறோம்.

பூபாலஸமஸ்தானம்—இது சமுத்திர மட்டத்துக்குமேல் 17,000 உயரத்தில் பெட்டவந்தியின் ஜலத்தால் செய்கைகளாக ஏறில் பிரகாசிக்கும் ஓர் அழகிய ஏரியின் கரையின்மேற் கட்டப்பட்டிருக்கிறது. இது 9000 சதுர மைல்கள் விஸ்திரணமும், 47 லக்ஷம் குடிகள் வசித்து வருகிறதுமான பட்டணம். இது ஆதியில் இராஜபோஜரால் கட்டப்பட்டதாயினும், இப்போது சுல்டானா இராஜா ஷேஜஹபிகம் அம்மா அவர்களுடைய ஆக்ஷியில் இருக்கிறது. நகரத்தின் மத்தியில் ஜம்மாமஸ்ஜீது என்னும் அழகிய கோவில் உயர்ந்த படிகளால் கட்டப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் அநேக அபாணக்கடைக ளிருக்கின்றன. நகரத்திற்குச் சற்றுத் தூரத்திலிருக்கும் மலையின்மேல் பிஹாடாபர்க் என்னும் கோட்டை கம்பீரமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இது பம்பாயிக்கு 521 மைல்கள் தூரத்தில் ரூபா 5-10-0 ரெயில் சார்ஜில் இருக்கிறது. இந்நாடுகளிற் சிறந்தது இந்தூர்.

NAGPUR.

நாகப்பூர்.

இந்த மத்தியமாகாணத்தில் நாகப்பூர் என்னும் மற்றுமோர் விசேஷபட்டணம் இருக்கிறது. இது 84,000 சதுர மைல்கள் விஸ்திரணமும், பத்துலக்ஷம் குடிகளுமுள்ளது. இது ஜூடிஷியல் கமிஷனர், சிப் கமிஷனர்களுக்குப் பிரதான பட்டணம். இவ்விடத்திய ரோட்டுகளும், குளங்களும் கிணறுகளும் கம்பீரமாக இருக்கின்றன. சிதாபாத்தி என்னும் மலையின்மேல் ஓர் கோட்டை இருக்கிறது. இது சிவில் பட்டணம். இந்த மலையின்மேல் கி. பி. 1877 ௵ இராஜா அம்பாசாஹிப் பவுன்சிலே என்பவர் ஸ்தாநாதிபதியைத் தாக்க, உடனே ராஜன் சிறைப்படுத்தப்பட்டான். இந்தக் கோட்டை கி. பி. 1818-ம் வருஷம் கட்டப்பட்டது. இப்போது இந்த நகரத்தில் கண்காக்ஷிசாலை, புத்தகசாலை, நான்கு உத்தியானவனங்கள்,

மஹாராஜர் தோட்டம், துளசிபாக், பால்டிகாரடி, டெல்லன் கரி, ஹிச்லாப், மாரிஸ் கலாசாலைகள், இரண்டு நூல் நூற்கும் மில்லுகள், எம்பிரஸ் ஸ்வதேசிசாலைகள், நகரமண்டபம் முதலானவை பார்க்கத்தகுந்தவைகள். நாட்டிலுண்டாகும் தானியங்கள், விதைகள், தேக்குமரம், ஆரஞ்சிப்பழங்கள் இவை ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. இவ்விடத்திய ஆரஞ்சிப்பழங்கள் மிக்க உருசிகரமானவைகள். இந்த நாகப்பூர் ஜி. ஐ. பி. பெங்கால் நாகப்பூர் ரெயில்கள் சந்திக்குமிடம். இது கல்கத்தாவுக்கு 701 மைல்கள் தூரத்திலும், பம்பாயிக்கு 520 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. ரூபா 7-S-0, 5-7-10 சார்ஜ் ஆகிறது.

இப்போது இந்நூரானது குட்கிநதி கரையின்மேல் கட்டப்பட்ட 1000 சதுர கசமுள்ள சிறிய பட்டணம். கடைகளும் கட்டடங்களும் பார்வைக்கு அழகானவைகள் அல்ல. ஆனால் அநேக பணக்காரர்கள் குடியிருந்து அடுத்த நாட்டுக் கருவிலிருக்கும் மன்னர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். இராஜருடைய அரண்மனையும் சாதாரண கட்டடம். பழைய ராஜா பருத்தி யந்திரம் முதலானவைகளை வைத்துக் கோமிட்டியைப் போல் தொகையைச் சேர்த்துவைத்துவந்தார். இவருடைய குமாரர் வாலிபராகவிருந்து சீமைமுதலான தேசங்களைப்போய்ப்பார்த்துவந்தாலும், ஜோசியம் முதலானவைகளை நம்பி இராஜ்ஜிய காரியங்களைச் சரியாகப் பார்த்துவாராமையால், இவரது சிறந்த மந்திரியாகவிருந்த ஸ்ரீ திவான்பகதூர் இரகுநாதராயரவர்களும் விசனத்தோடு திரும்பிவந்துவிட்டார்கள். இப்போதிருக்கும் பட்டணம் 1767 வருஷம் அஹல்யாபாயவர்களால் கட்டப்பட்டதேயொழிய இவர் காலத்தில் விருத்தியாக்கப்படவில்லை. இந்தப் பட்டணத்தில் கிட்டத்தட்ட 15,000 ஜனங்களிருக்கிறார்கள். இவ்விடத்தில் குளிர் அதிகம். ஈக்களுடைய உபத்திரவம் சொல்லிமுடியாது. இராஜருடைய சத்திரம் அவ்வளவு சிறப்புடையதன்று. இவ்விடத்தில் பிரிடிஷ் ஸ்தானாபதி இருக்கும் கட்டடமும், இராஜ அரண்மனையும், லால்பாக் தோட்டமும் அதிலுள்ள கட்டடமும், பிராணிகளும், நாணயசாலையும், பருத்தி இயந்திர கட்டடங்களும் மேற்கே மான்களோடு சிறுத்தைகள் வேட்டையாட விட்டிருக்கும் இடமும் பார்க்கத்தக்கவைகள். இந்த ஸ்தானாதிபதியின் அதிகாரத்துக்குள் இராஜ குமாரர் கலாசாலை இருக்கிறது. இப்படியிருந்தும் குளிரின் உபத்திரவத்தைச் சகிக்கப் பயந்து உடனே புறப்பட்டு மன்மார் ஸ்டேஷனுக்கு ஆள் ஒன்றுக்கு ரூபாய் 3, அணா 15

கொடுத்து புகை வண்டி ஏறினோம். இந்த இடத்துக்குச் சற்று நேரம் பொறுத்து வந்து கஷ்டத்தோடு ஏறியதால், அழகிய பிரப்புத் தடியைப் போக்கடித்துவிட்டோம். இந்தப் புகைவண்டியானது சுமார் நான்கு மணிக்கு 13 மைல் தூரத்திலிருக்கும் மாஹெள என்கிற இடத்துக்கு வந்தது.

MHOW.

மாஹெள.

இது பம்பாய் இராஜதானியின் இராணுவங்கள் தங்கும் உன்னதமான சிறந்த இடம். இது சிம்ரோல் காட்டுக்கு மூன்று மைல் உயர்ந்திருப்பதால், பின்புமலை மேட்டை ஏறிப்போவது கஷ்டம். ஆகையால் பிரயாணிகளை இறக்கி வண்டிகளைக் குறைத்துக்கொண்டு போகிறார்கள். வண்டியிலிருந்து பார்த்தபோதிலும் மாஹெள மேட்டின்மேல் கட்டப்பட்ட இராணுவ சேனைகளுடைய கட்டடங்கள் கம்பீரமாகத் தோற்றுகின்றன. வண்டி போகப்போக சுற்றுப்பக்கங்களிலிருக்கும் மலைகளின் காக்ஷி கடிதத்தில் எழுதிமுடியாது. இவ்விடத்தில் நான்கு பெரிய மலைகளை உடைத்துப் பாலமாக்கி இருட்டில் வண்டிகள் போகும்போது ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. இவ்வளவு அற்புதமான காக்ஷியைக் காண்பது அபூர்வம். பிறகு இரவு 12 மணிக்குக் காண்டுவா ஸ்டேஷனைச் சேர்ந்தோம்.

KHANDWA.

காண்டுவா.

இது மத்திய மாகாணத்தில் நிமார் ஜில்லாவைச் சார்ந்த பிரதான பட்டணம். இவ்விடத்தில் நாங்கள் ஏறிவந்த சிற்றிருப்புப்பாதை வண்டியும் ஜி. ஐ. பி. பெரிய புகைவண்டியும் சந்திக்கிறது. இது பூர்வத்தில் ஜயினர்களுடைய கோயில்களால் நிறைந்த சிறந்த பட்டணம். நகரத்திற்குள் அநேக சிவாலயங்கள் இருக்கிறதன்றியில், நான்கு பக்கங்களிலும் நான்கு தடாகங்களிருக்கின்றன. கோவில் கட்டடங்கள் விசித்திர வேலைகளால் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் பெரிய ஸ்டேஷனும், சத்திரமும் இருக்கிறதன்றியில், இராணுவ வீரர்கள் தங்க அநேக கட்டடங்களிருக்கின்றன. இந்த மாகாணம் 1554 சதுர மைல்களுள்ளது. 344 இதில் கிராமங்களும்,

20,613 வீடுகளும் இருக்கிறதன்றியில் 1,09,622 ஜனங்களும் குடியிருக்கிறார்கள். நகரத்திற்கும் ஸ்டேஷனுக்கும் 2 மைல் தூரமிருந்தபடியால் நகரத்துக்குள் போகாமல் ஸ்டேஷனிலிருந்து பனியால் வருந்தினோம். பிறகு ஜி. ஐ. பி. வண்டியேறி மறுநாள் பிப்ரவரிமீ 7உ பகல் 12 மணிக்கு மன்மாடுக்குப் போனோம்.

MANMAD.

மன்மாட்.

இது டாண்டு கிளை வண்டியும் வடகிழக்குத் தென்கிழக்கு ஜி. ஐ. பி. வண்டிகளும் வந்து தங்குமிடம். இங்கு இராணுவங்கள் தங்குமிடமாகையால் அநேக கட்டடங்கள் இருக்கின்றன. சுமார் 4 மைல்கள் தூரத்தில் 800 அடி உயரத்தின்மேல் அனகிடன்கே கோட்டை இருக்கிறது. மலைமேலேறிப்போனால் இந்து சன்னியாசிகள் குகைகளில் மகமதியர் கோட்டையும், இராமகுலனி என்னும் 80 70 அடி உயரமுள்ள சிங்கார மலைகளுமிருக்கின்றன. ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கும் சத்திரத்தில் தங்கித் தேநீர் சாப்பிட்டுப் பிறகு சமைத்துப் சாப்பிட்டு இளைப்பாறினோம். இவ்விடத்திலும் அதிக குளிர். மாலை 4 மணிக்கு ஊரைச் சுற்றிப் பார்த்தோம்.

பிப்ரவரிமீ 8உ காலை எழுந்து ஸ்நான பானம் செய்து சாப்பிட்டு ஸ்டேஷனுக்குப்போய் நாம் முன் போக்கடித்த தூரதிருஷ்டிக் கண்ணாடிக்காக ஸ்டேஷன் மாஸ்டரை விசாரிக்க, துப்பு அகப்படாமையால், விசனத்துடன் நாசிக்கு என்னும் பஞ்சவடிக்குப் பத்து மணிக்கு ஆள் ஒன்று 10 அணு டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு வண்டியேறினோம்.

NASIK.

நாசிக் பஞ்சவடி.

இந்த விடத்திற்கு அன்று மத்தியானம் இரண்டரை மணிக்கு வந்துசேர்ந்து ஸ்டேஷனுக்கருகிலிருக்கும் தபாலாபீசில் நமக்காக சேலத்திலிருந்து வந்திருந்த கடிதங்களை வாங்கிக்கொண்டு குதிரை கட்டிய வண்டிகளை வண்டி ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வாடகைபேசி ஏறினோம். இவ்விடத்தில் குதிரைகளுக்கு நகத்தடியை மாடுகளுக்கு வைத்துக் கட்டுவதைப்

போல கட்டிச் சவாரி விடுகிறார்கள். இப்போது ஸ்டேஷனுக்கும் நகருக்கும் டிராம்வே வண்டியை நியமித்திருக்கிறார்கள். இந்த ரெயில்வே ஸ்டேஷனில் பிராமண புரோகிதர்கள் ஏராளமாக விருக்கிறார்கள். ஸ்டேஷனிலிருந்து ஊருக்குப்போகும் பாட்டையானது இருபக்கங்களிலும் ஆலமரங்கள் வைத்துப் பயிர்செய்யப்பட்டுப் பார்க்கப்பார்க்க அழகாகவிருக்கிறது. ஊருக்குச்சமீபித்த உடனே முனிசிபல் சுங்கக்காரர் ஆள் ஒன்றுக்கு 4 அணா வரியாகச் சுகாதாரவரி என்னும் அளிபாயவரி வாங்கிக்கொண்டு விட்டார்கள். பிறகு கோதாவரி நதியின் அணையின்மேலே போய்ச் சுமார் 5 மணிக்குக் கோதாவரி நதிக்கரையில் அழகாகக்கட்டப்பட்டிருந்த ஜீவாசிவனமலே கோபாலதர்மசாலா என்னும் வசதியான கட்டடத்திலிறங்கிச் சற்று இளைப்பாறிக்கொண்டு நகரமத்தியிலிருக்கும் அழகிய ரஸ்தாவில் வெகுதூரம் நடந்துபோய் பெரியபோஸ்டாபிசில் நமக்காகக் கோயமுத்தூரிலிருந்து வந்த சமாசாரபத்திரிகைகளை வாங்கிக்கொண்டுவந்து சாப்பிட்டு இரவெல்லாம் தூக்கமற்றிருந்தோம்.

நாசிக் பட்டணத்தின் பூர்வசரித்திரம்.

இது ஒருகாலத்தில் இராவணனுக்கு வடக்கு எல்லையாகவிருந்தது. அப்போது அன்னியர் தனது ராஜ்ஜியத்துக்குள் பிரவேசியாதபடி கரதூஷணர்களைக் காவலாக வைத்திருக்கச் சீதாலக்ஷ்மண சமேதராக ஸ்ரீராமர் வனவாசம் செய்யவந்தபோது, தவஞ்செய்வதற்கு இதுதகுதியானயிடமென்றெண்ணிச் சிலகாலம் இங்கு தங்கியபோது, சூர்ப்பநகைவந்து ஸ்ரீராமர்மேல் மோகங்கொள்ள, இலக்ஷ்மணரால் மூக்கறுபட்டு மூளியாக்கப்பட்டபடியால், அன்றுமுதல் இதற்கு நாசிக்கு என்ற பெயருண்டாயிற்று. மேலும் ஸ்ரீராமர் கரதூஷணர்களோடு சண்டைசெய்தபோது, சீதாதேவியை ஐந்து பெரிய விழுதுகளுள்ள ஆலமரத்தின் கீழிருந்த குகையில் இருக்கச்சொல்லி, இலக்ஷ்மணரைக் காவல் வைத்தமையால், இதற்குப் பஞ்சவடி என்று பெயருண்டாயிற்று. மேலும் சங்கரர் பிரமஹத்தியால் பிடிக்கப்பட்டகாலை அவரது இடபம் அவரைப்பிரிந்து இந்த நாசிகைக்கு வந்திருந்தபோது, இந்த விருஷபத்தை உழவதற்குப் பிடிக்கவந்த பிராமணர்களையெல்லாம் அது கொன்றதினால் அந்தபிரமஹத்தி நிவர்த்தியாகும்பொருட்டு இராமதீர்த்தத்தில் நீராடி, பஞ்சவடியில் மஹாவிஷ்ணுவை 1000 சண்பகமலரால் பூசிக்க, ஒருநாள் ஒரு புஷ்பங்குறையத் தனது நாசியையறுத்துப் பூசி

க்கதாக ஸ்ரீ வடகூர் கோபால் மகாபாகவதர் சொல்லுகிறார். இது எந்தப்புராணத்திலிருக்கிறதோ தெரியவில்லை.

நாசிகைக்கு எட்டு மைல் தூரத்திலிருக்கும் கங்காப்பூரில் கோதாவரிநதி மலையின்மீதிருந்து விழுவது விநோத தோற்றமாக விருக்கின்றது. அங்கு ஒன்பது கோயில்களிருக்கின்றன. இரண்டு மூன்று மணி காலத்துக்குள் போய்ப்பார்த்துவரலாம். நாசிகைக்கு ஈசானிய மூலையில் சுமார் 8 மைல்கள் தூரத்திலிருக்கும் விநு குகைகளில் புத்த மகஸ்தர்களுடைய சிற்பவேலைகளடங்கிய பிரதிமைகள் இருக்கின்றன. இங்குப் போவதற்கு நல்ல மார்க்கங்கள் கிடையா. நாசிகைக்கு 20 மைல் தூரத்தில் கோதாவரி உற்பத்திஸ்தானமாகிய திரியம்பக மிருக்கிறது. இதற்கும் நல்ல வழிகளில்லை. வடமேற்கு தேசத்தாருக்கு நாசிகைப்பட்டணமானது காசிக்ஷேத்திரமாகவும், கோதாவரியைக் கங்கையாகவும் கொண்டாடி இதற்கு விருத்த கங்கை என்றும் சொல்லுகிறார்கள். இது நகரமத்தியில் ஓடுவதால் ஜனங்கள் இடைக்கிடை பல தொட்டிகளாகவும் படிக்கட்டுகளாகவும் கட்டி அவைகளுக்கு இராமதீர்த்தம், இலக்ஷ்மண தீர்த்தம், சீதா கட்டமென்று பல பெயர்களிட்டு முழுகிவருகிறார்கள்.

கோதாவரி நதி.

இந்தகோதாவரி நதியானது தக்கணத்தைச்சார்ந்த ஆமத்நகர் ஜில்லாவுக்கருகில் மேற்கு மலைத்தொடர்ச்சியின் கிழக்குப் பாகத்தில் நாகப்பட்டணத்தின் சமீபத்தில் உற்பத்தியாகிறது. அந்த இடமானது அரபிக்கடலுக்கு 50 மைல் தூரத்திலிருக்கிறது. இந்த கோதாவரியானது தென்கிழக்குப் பாகமாய் 100 மைல் ஓடி நைஸாம் சமஸ்தானத்தின் மேற்கெல்லையிலிருக்கும் பொலிடாப்பாவைச் சார்ந்து, பிறகு அதேவழியாக 90 மைல் ஓடி ஆமத்நகருக்கும் நிஜாம் நாட்டிற்கும் எல்லையாகிப் பிறகு 10 மைல்தூரத்தில் மாங்கிஎன்னும்படியான இடத்தில் பெப்ரு என்னும் உபநதியோடு சேர்ந்து, அங்கிருந்து சுமார் 160 மைல் வரையில் கிழக்கே ஓடி தாத்ரு என்னும் உபநதியோடு சேர்ந்து, அங்கிருந்து தென்கிழக்குப்பாகமாக 85 மைல்தூரம் ஓடி பிறகு மஞ்சாரு என்னும் உபநதியோடு சேர்ந்து, அங்கிருந்து 170 மைல் கிழக்கே வீல்சாகாம் வரையில் ஓடி மனியூர் என்னும் உபநதியோடு சேர்ந்து, 20 மைல் ஓடி அந்த வாணிகங்காவோடு சேர்ந்தும், அங்கிருந்து 170 மைல் காட்டேர்வரையில்

போய் பொலேலாவரம்வழியாய் 23 மைல்ஓடிப் பிச்சாக்காலங்கா என்னுமிடத்தில் நதியானது இரண்டாகப் பிரிந்து, அவற்றில் ஒன்று அங்கிருந்து 55 மைல் ஓடி வங்காளக் குடாக்கடலில் பாய்கிறது. மற்றொன்று 55 மைல் ஓடி நாசப்பூருக்கருகில் கடலில் பாய்கின்றது இந்த கோதாவரியின் முழுநீளம் 898 மைல்களாம். இந்தச்சங்கமஸ்தானத்தினருகில் விவசாய விருத்திபைக்கருதியும்வர்த்தகவிருத்திபைக்கருதியும்1846ஹு சம்பர்மீ ஒரு பெரிய அணைபைக்கட்ட கோர்ட் ஆப் டைரெக்டர்கள் 47,500 பவுன் செலவிட்டு வேலை ஆரம்பித்தார்கள். அத்தொகை போதாமையால் மறுபடியும் 1848ஹு 13,900 பவுன் செலவிட்டு 4200 கஜநீளமுள்ள ஓர் பேரணைபைக்கட்டி அங்கே தங்கும் ஜலத்தைப் பலவாய்க்கால்கள் வழியாக விவசாயத்துக்குக் கொண்டுபோவதோடு, மரம் முதலான சரக்குகளைப் படகுகளின் மூலமாகக் கொண்டுபோய் வர்த்தக விருத்தியையும் உண்டாக்கிவருகிறது. இந்த அற்புத கட்டட முயற்சியானது ஸ்ரீ ஆர்த்தர்காட்டன் துரையவர்களால் முடிவுபெற்றமையால் அவரை ஓர் அவதாரபுருஷனைக் குடிகள் கொண்டாடிவருவதோடு கவர்ன்மெண்டுக்கும் நல்ல லாபம் கிடைத்துவருகிறது.

பஞ்சவடியானது சிறிய ஊர். இங்கு ஆலமரத்துக் கடியிலிருக்கும் குகையைப்போன்ற சுரங்கத்தில் போய் சீதா லக்ஷ்மணர் விக்கிரகத்தைப் பார்க்க விரும்புவோர் நபர் ஒன்றுக்குக் காலணவிதம் காணிக்கை கொடுத்துப் போகவேண்டும். இந்தக் குகை ஊருக்குச் சற்றுத் தூரத்திலிருக்கிறது. நகருக்கும் நதிக்கும் சமீபத்தில் அழகிய கருங்கல் முன் மண்டபத்துடன் இராமர் கோயிலிருக்கின்றது. இது புனசிமந்தரால் கட்டப்பட்டு, நித்திய பூஜைசெய்து வருகிறார்கள். ஊருக்கு நாலைந்து மைல் தூரத்தில் தபோவனம் இருக்கிறது. இங்கு இரண்டு சிறிய மண்டபங்களும், ஸ்படிகக் கற்களால் செய்த ஸ்ரீராமர் முதலான விக்கிரகங்களும் இருக்கின்றன. சில சந்நியாசிகள் ஜபம் செய்துகொண்டிருக்கிறார்கள். இங்குதான் ஸ்ரீராமர் தங்கியிருந்தாராம். இந்த விடத்திற்குப்போய் வருவதற்குச் சரியான ரோட்டுகளில்லாமல் சில காடு காடுகளில் விழுந்து போகவேண்டும். இராத்திரி காலத்தில் திருடர் பயம் அதிகம். பகல் காலத்தில் போதல் உத்தமம்.

நாசிக் பட்டணத்தின் தற்கால ஸ்திதி.

இப்போது இந்த நாசிக் பட்டணம் பம்பாய் இராஜதானியைச் சார்ந்த அஹமத்நகர் ஜில்லாவைச் சார்ந்தது. இது பேஷ்வா காலத்தில் மேன்மையானதமான ஸ்திதியிலிருந்தது. இதைப்புண்ணியக்ஷேத்திரமென்று கருதி இவ்விடத்திலிருந்த அநேக சர்க்கார் கச்சேரிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டன. இது 1840வருஷ பிரிடிஷ் சப்கலெக்டர் டிவிஷனாகச் செய்யப்பட்டு, இப்போது கலெக்டர் ஹெட் குவார்ட்டராகச் செய்யப்பட்டது. இதைச் சுற்றிலும் ஐந்து மைல் தூரத்திலிருக்கும் தேவாரஜலினை என்னும் மலைக்காடுகளில் புத்தமதஸ்தர்களுடைய விக்கிரகங்களும், கோயில்களும், குகைகளும் இருக்கின்றன.

1881வருஷ கானிஸ்வாரி கணக்கின்படி 44,000 ஜனங்கள் வரையில் குடியிருக்கிறார்கள். இவர்களில் 10,000 பெயர் பிராமணர். இந்த அழகிய சிறிய பட்டணத்தில் இவ்வளவு ஜனங்களிருப்பதற்குக் காரணம் இது புண்ய தீர்த்த ஸ்தலமாகவிருப்பதினாலேயே. இவ்விடத்தில் கோதாவரி நதியானது நடு நகரத்தில் கம்பீரத்தோடு ஓடுவதினால் அதில் எண்ணிறந்த ஜனங்கள் வந்து ஸ்நானம் செய்து அருகிலிருக்கும் கடைகளில் வேண்டிய வஸ்துக்களை வாங்கிக்கொண்டு கோயில்களுக்குப் போய்க் கும்பிடுங் காக்ஷி கம்பீரமானது. இவ்விடத்தில் பெரிய கடை வீதிகள், பெரிய வர்த்தக சாலைகள், வாசகச்சாலைகள் (General Library) முதலானவைகளிருக்கின்றதனாலும், சுற்றுப்பக்கங்களில் மலைகள் சூழப்பட்டிருந்தாலும் சீதோஷ்ணம் சமமாக விருப்பதாலும் இதை இந்த இங்கிலீஷ் கவர்ன்மெண்டுக்குப் பிரதான பட்டணமாக்கலாமென்று ஒரு யாத்திரைக்காரரும் சொல்லியிருக்கிறார். இங்குச் செழிப்பான காய்கறிகளும், சிறந்த திராக்ஷைப்பழங்களும் விளைவதுடன், செம்பு பித்தளை வியாபாரம் அதிகமாக நடக்கிறது. இந்தப் பட்டணத்தில் பிப்ரவரிமீ 6உ தைலம் தேய்த்து ஸ்நானம் செய்து ஸ்ரீராமர் முதலான கோயில்களைப் பார்வையிட்டுத் தபாலாபீசுக்குப்போய்ச் சேலத்திலிருந்து நமக்கு வந்திருந்த 100 ரூபாய் மணிஆர்டரைப் பெற்றுக்கொண்டுவந்து கலாநிதிக்குச் சங்கதி எழுதினேம்.

பிப்ரவரிமீ 10உ கோதாவரியில் ஸ்நானம் செய்து ஸ்ரீரங்கய்ய நாயுடு முதலானவர்களைச் சந்தித்துச் சாப்பிட்டு

இலக்ஷ்மணர் சீதையைப் பறிகொடுத்த தபோவனத்துக்குப் போனோம். இது கிட்டத்தட்ட 2 மைல் தூரமிருக்கும்.

பிப்ரவரியீ 11உ காலை ஸ்நானம் செய்து சாப்பிட்டு (General Library) என்னும் வாசகச் சாலைக்குப் போனோம். அங்கு அபிரக்சணைக்காக ஆங்கிலேய புத்தகங்களும் பத்திரிகைகளும் இருக்கக்கண்டு சந்தோஷப்பட்டுப் படித்தோம். பிறகு அந்த நகரவாசியும் எமது இஷ்டருமாகிய நாராயண வாமன காரிகா என்பவர் எம்மை அந்த நகரத்திலிருக்கும் அநேக பெரிய மனுஷர்களுக்குப் பரிசஷபம் செய்துவைத்தார். அவர்களில் அந்த நகரத்து சப்ஜட்ஜ் ஸ்ரீமான் பி. ஏ. பி. எல். லால்சங்கர் உமாசங்கர் என்பவர் எம்மை ஒரு உபந்நியாசம் செய்யும்படி கேட்டுக்கொண்டார். தேக அசவுக்கியத்தால் செய்யவில்லை. பிறகு கடைவீதிகளைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு தங்குமிடம் வந்தோம்.

நாசிக் பஞ்சவடியில் செய்த பிரார்த்தனை.

ஏ நாதா! கோதாவரி தீர்த்தமாகிய இந்தத் தபோவனத்தில் நின்னைத் தியானிக்கப் பாக்கியசாலியானோம். இந்த வனமன்றோ அன்று அயோத்திக்கு அரசராகிய உத்தமபுருஷரும் ஏகபத்தினி விரதத்தைக் கொண்டவருமாகிய ஸ்ரீராமர் தபசு செய்தவிடம். இந்த விடத்திலன்றோ சூர்ப்பனகை ஸ்ரீராமர்மீது காமங்கொண்டு வர, அவர் அதற்கு இடங்கொடாமல் கண்டித்துப் பரிசுத்தத்தை ஸ்தாபித்தவிடம். இப்படிப்பட்ட இடத்தில் நின்னைப் பக்தி பூர்வகமாகப் பிரார்த்திக்கின்றனம். ஸ்ரீராமருக்கிருந்த பரிசுத்த எண்ணத்தை எமக்குக் கொடுத்துப் பாதுகாப்பாய் சுவாமி. ஓம் தத் சத்.

இந்த நாசிக்கு பட்டணம் பம்பாயிக்கு ஜி. ஐ. பி. ரெயிலில் 117 மைல்கள் தூரத்திலிருக்கிறது. மூன்றும் வகுப்புக்கு ரூ. 1-13-0, ரூ. 1-4-0 கொடுக்கவேண்டும்.

பிப்ரவரியீ 12உ காலை ஸ்நானபானம் செய்து புளியோதரையைச் சாப்பிட்டு ஸ்டேஷனுக்குப் போய் ஆள் ஒன்றுக்கு ரூ. 1-13-0 கொடுத்துப் பம்பாயிக்கு டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு வண்டியேற, இராத்திரி 9 மணிக்கு பூரிபண்டருக்குப் போய்த் தங்குமிடமில்லாமல் தவித்து மூல்ஜீ ஜாட்டாவர்களுடைய புறதிசுவார் தர்மசாலா மாடியிலிறங்கிப் பழைய புளியோதரையைச் சாப்பிட்டுச் சுகமாகத் தூங்கி எழுந்தோம்.

BOMBAY.

பம்பாய்.

பிப்ரவரிமீ 13உ காலை உடுத்திக்கொண்டு நாம் இறங்கியிருந்த தருமசத்திரக்காரர் வீட்டுக்குப்போய் அதற்குத் தற்கால எஜமானராகிய ஸ்ரீ துவார்கதாஸ் நாராயணனைக் கண்டு பேச, அவர் எமக்கு ஷை சத்திரத்தின்மீது இரண்டு அழகிய அறைகளையும் பித்தளைச்சாமான்களையும் கொடுத்தார். உடனே திரும்பிவந்து சமையலுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு க்ஷவரம் செய்துகொண்டு சாப்பிட்டுக் கோயமுத்தூருக்கு கடிதங்களை எழுதிவிட்டு பிறகு சமுத்திரக் கட்டத்துக்குப் போய் காபோர்டு மார்க்கெட்டு முதலானவைகளைப் பார்த்துக் கொண்டு தங்குமிடம் வந்து சாப்பிட்டுப் படுத்தோம்.

பிப்ரவரிமீ 14உ காலை யெழுந்து தேநீர் குடித்து இந்து பிரகாஸ் அச்சுக்கூடத்துக்குப்போய் 50 தரிசன கார்டுகளை பதிப்பித்துக்கொண்டு வந்து சாப்பிட்டு டேவிட் சாஸூன் பட்டு இயந்திர கம்பெனிக்குப் போய்ப் பார்த்து 18 ரூபாயில் ஒரு வெள்ளை பட்டுப்புடவையை வாங்கிக்கொண்டு, வருகிற வழியில் புஷ்ப படங்களையும் வாங்கிக்கொண்டு வந்து பழைய சாதத்தையுண்டு படுத்துத் தூங்கினோம்.

பிப்ரவரிமீ 15உ காலை யெழுந்து டிராம்கார் வண்டியிலேறி கர்காம காயித இயந்திரசாலைக்குப்போய்ப் பார்த்துக் கொண்டுவந்து சாப்பிட்டுப் பம்பாய்ப் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்துத் தங்குமிடம் வந்து சாதத்தை யுண்டு படுத்துத் தூங்கினோம். இந்தப் பம்பாய்ப் பட்டணத்தை 1886௵ காங்கிரஸ் சபை கூடிய காலத்தில் நாம் வந்துபார்த்து ஆநந்தித்தமையால் அப்போது எழுதிய சங்கதியை இதனடியில் மறுபடியும் பதிப்பித்திருக்கிறோம்.

1885௵ டிசம்பர்மீ 27, 28, 29, 30உ களில் இந்தப் பம்பாய் பட்டணத்தில் கூடும் முதல் காங்கிரஸ் சபைக்கு எம்மைக் கோயமுத்தூர் பிரதிநிதியாகக் குடிகள் தெரிந்தெடுத்து நியமித்தபடியால் 1885௵ டிசம்பர்மீ 24உ மாலை சென்னையிலிருந்து ஷை காங்கிரஸ் சபைக்குப் புறப்பட, மகாராஜராஜஸ்ரீகளாகிய, இரங்கய்ய நாயடவர்கள், ஹானரேபில் சுப்பிரமணியம் ஐயரவர்கள், திவான் பகதூர் இரகுநாதராயரவர்கள், ராயபகதூர் அனந்தாசார்லு முதலான இருபத்

தோழருடன் நாமும் சென்னையிலிருந்து ரெய்ச்சூர் வரைக்கும் 5 ரூபாய் செல்வானங்கொடுத்து மூன்றாவது வகுப்பு வண்டியேறியதில் போதுமான சவுக்கியமில்லாமையால், ரெய்ச்சூரிலிருந்து ரூபா 26-14-0 கொடுத்து இரண்டாவது வகுப்பு வண்டியேறிப் போனோம். இடையில் மகாராஜராஜஸ்ரீகளாகிய திவான் பஹதூர் இரகுநாதராய ரவர்களுடையவும், ராய்பஹதூர் சபாபதி முதலியாரவர்களுடையவும் சகாயத்தினால் நல்ல போஜனமும் தின்பண்டங்களும் கிடைக்கப் பெற்றோம். டிசம்பர்மீ 26உ ஞாயிற்றுக்கிழமை பகல் சுமார் 12 மணிக்குப் பம்பாயைச் சேர, அங்கு ஆனரபில் காசிநாத் திரும்பக் திலாங்கு, ஆனரபில் ஹியூம் முதலானவர்கள் எங்களை மரியாதையுடன் அழைத்துக் கொண்டுபோய் கோகுலதாஸ் தாஜிபால் என்பவருடைய சிங்கார மாளிகையில் விட்டுப் போஜன முதலானவைகளைக் கொடுத்து மரியாதை செய்தார்கள்.

அந்தத் திருமாளிகை ஸ்ரீமாந் சேட்கோகுலதாஸ் தாஜிபால் என்னும் தருமப் பிரபுவின் சொந்தமானது. அந்தப் பிரபுவானவர் கோமசுவாராக விருந்தபடியால், தம் பந்து மித்திரர்களுக்குக் கொடுக்கவேண்டிய சொத்துகளைக் கொடுத்து மீதியான திரவியத்தில் ஏழைப் போஜன கல்விச்சாலைக்கு 1,60,000 ரூபாய், விதந்து போஷணைக்கு 50,000 ரூபாய், பேதைப் பெண்கள் விவாகத்துக்கு 25,000 ரூபாய், அநாதைப் பிணங்களை அடக்கஞ் செய்ய 5000 ரூபாய், அநாதைப் பிணங்கள் கருமாந்திர பண்டுக்காக 50,000 ரூபாய், பேதைப் பிள்ளைகளுக்கு உதவிபண்டு 25,000 ரூபாய், செமினெரி பள்ளிக்கூடத்துக்கு 20,000 ரூபாய், அங்கிலோ வர்னகுலர் ஸ்கூலுக்கு 20,000 ரூபாய், ஸமஸ்கிருத காலேஜுக்கு 80,000 ரூபாய், பெண்கல்விச்சாலைக்கு 40,000 ரூபாய், வாலிபப் பெண்கள் பண்டுக்கு 4000 ரூபாய், குஞ்சுமாதேவி ஸமஸ்கிருத கல்வி 30,000 ரூபாய், குஞ்சுமாதேவி இங்கிலீஷ் கல்விக்கு 30,000 ரூபாய், ஜாதகோகல்விபண்டுக்கு 10,000 ரூபாய், கோதாரஸ்கூல் பண்டுக்கு 10,000 ரூபாய், நாவிப ஸ்கூல் பண்டுக்கு 10,000 ரூபாய், தரும வைத்தியம் வக்கில் பண்டுக்கு 50,000 ரூபாய், ஜமனுபாய் தரும பண்டுக்கு 20,000 ரூபாய், மீனாட்சிபாய் பண்டுக்கு 20,000 ரூபாய், லக்ஷுமி நாராயண தருமத்திற்கு 20,000 ரூபாய், மாது ஸ்ரீ கங்காபாய் தருமத்திற்கு 24,000 ரூபாய், தருமகட்டடங்களுக்கு 3,00,000 ரூபாய், பின்னும் பலவித தருமங்களுக்கும் சேர்ந்து 17,59,168—8—10

செலவிட்டிருக்கிறார். இந்தத்தருமபண்டில் சேர்ந்ததுதான் நாங்கள் தங்கியமாளிகை. இந்தமாளிகையின் பெருமையை யென்னவென்று சொல்லுவோம். இந்த மாளிகையின் மத்தியஹால் நீண்டு அகன்று ஆயிரக்கணக்காக ஜனங்கள் தங்கும்படியான விசாலமுள்ள சபாமண்டபம். இந்த ஹாலுக்கு வலது பாகத்திலும் இடது பாகத்திலும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் தங்கும்படியான ஹால்களிருக்கின்றன. இந்த ஹாலுக்குமேல் மூன்றடுக்கு மெத்தையும் ஹால்களுமிருக்கின்றன. ஹாலுக்கு எதிரில் மானசம் பம்பா தீர்த்தங்களைப்போன்ற ஓர் தடாகமிருக்கின்றது. இந்த மாளிகை சற்று உன்னதமான மலைமேட்டின்பேரில் கட்டப்பட்டிருப்பதனால் மாளிகையைச் சுற்றிலும் தேவேந்திர வனத்தைப்போன்ற பற்பல புஷ்பச்செடிகளும், மா, வாழை, தென்னை, பலா, பொமனிமாஸ், கொய்யா, கிச்சிலி முதலான பழந்தரும் விருக்ஷங்கள் கொப்புங்கிளைகளாலும் அடர்ந்து படர்ந்து அவற்றின் கனிகள் பெருத்துப் பழுத்துப் பிடுங்குபவாற்றுத் தொங்கியாடிக்கொண்டிருக்கின்றன. இடைக்கிடை திவ்யமான ஆவிகூபங்கள் அழகாகப் பிரகாசிக்கின்றன. அதற்கப்புறம் விஸ்தாரமான காலி ஜாகாவும் கக்கூஸ் முதலானவைகளும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. தண்ணீர்க் குழாய்கள் எப்போதும் ஜோவென்று கூவிக்கொண்டு திவ்யமான ஜலத்தைக் கொட்டிக்கொண்டே யிருக்கின்றன. மாளிகையின் மத்திய ஹாலின் சுவர்கள் ஸ்படிகக் கற்களால் கட்டியதைப்போ லிருந்ததன்றியில், அநேக ஆயிரம் பெயர் ஏககாலத்தில் தங்கும்படியாக ஓரேவிதமான நூற்றுக் கணக்கான நாற்காலிகளையும் பிரம்மாண்டமான மேஜைகளையும் பல வர்ணப்பட்டு சோபாக்களையும் போட்டிருந்தன. அடியில் பளிங்குக்கல் தரையின்பேரில்போட்டிருந்த பலவர்ண இரத்தினக் கம்பளங்கள் மஹம்மல்லிலும் உயர்ந்ததென்று சொல்லவேண்டும்.

இந்த இரத்தினக் கம்பளங்களுக்கே அநேக ஆயிரம் ரூபாய் விலை யிருக்கலாம். ஹால்களின்மேல் பலவித வர்ணங்களும், பலவித கிளைகளுமுள்ள குலோப் லஷ்டர்களைக் கட்டி இராக்காலங்களில் அவைகளில் விளக்குகளை வைக்கவே அந்த மாளிகையேஜகஜ்ஜோதியாகவிளங்கித் தேவலோகம்போலிருந்தது. நாங்கள் யாவரும் தேவலோகத்தில் சொர்க்காதி பதவிகளை யனுபவிப்பவர்களாகவே மதித்துவிட்டோம். மேலும் அந்தத் தேவர் சபைக்குப் பிரதிநிதிகளாகப்போன எம்மவர்

ஒவ்வொருவருக்கும் சயனிப்பதற்கு மெத்தை, ஜாலரை, அஸ்
மானகிரி, துப்பட்டி புள்பட சுத்தியும் சுகமுமான கட்டிலும்,
அருகிலொரு மேஜையும், அதன்மேரில் பலவித கடிதங்களும்,
கவர்களும், பேனாக்களும், பென்சல்களும், பலவித இங்கிப்
புட்டிகளும், முகம் பார்க்கும் கண்ணாடிகளும், படிப்பதற்கு
புது நியூஸ்பேபர்களும் வைக்கப்பட்டிருந்த தன்றியில், நான்கு
நாற்காலிகளும், ஒரு மேஜையும், அந்த மேஜையின்மேரில் முகந்
துடைக்கச் சுத்தமான துவாலையும், கால் கைகள் துடைக்க
முரட்டுத் துவாலையும், பால், காபி முதலானவைகளைச் சாப்
பிடக் கோப்பைகளும், பிலேட்டுகளும், கிராப்பு முதலான
வைகள் கூடிய ஏலம் தாம்பூலம் முதலானவைகளும் வைக்
கப்பட்டிருந்தன. இம்மட்டோ! குக்கிர கடாயில் சுடுஜலம்
எப்போதும் தயாராகக் காய்ந்துகொண்டே யிருந்தது. குளிர்
ந்த ஜலம் வேண்டியவர்களுக்குக் குளிர்ந்த ஜலமும், அழுக்
கை நீக்க உயர்ந்த சோப்புக் கட்டிகளும், ஸ்நானம் செய்து
வைக்க வேலைக்காரர்களும் இடுப்பைக் கட்டிக்கொண்டு தயா
ராக யிருந்தார்கள். இப்படி ஸ்நானம் செய்பவர்கள் இஷ்
டப்பிரகாரமெல்லாம் ஜலமாட நடையாவியும் கட்டி யிருக்கிறார்
கள். இவ்விதமாக ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பாட்டிற்குப்
போனால், அந்தச் சமையல் கட்டடத்தின் விஸ்தீரணத்தையும்
சொகுசையும் வசதியையும் சொல்லவும்வேண்டுமோ. போன
வர்களுக்கெல்லாம் பிரம்மாண்டமான வாழை இலைகளைப்போட்
டுப் பலவித லட்டுகள், பேணிகள், தூத்பேடா, பாமேலாட், நெய்
போட், பிருஞ்சுகள், பலவித கனிவர்க்கங்களுடன் கூடை
கூடையாக வட்டிப்பதன்றியில், திவ்வியமான அரிசிச்சாதத்
தையும், மோர் சாம்பார், பலவித சட்னிகள், காய்கறிகள், கட்
டித்தயிர், பால், பாயசம் முதலானவைகளைக் கணக்கு வழக்கி
ன்றி வட்டித்துக்கொண்டே யிருந்தார்கள். எங்களுக்கு குஜ
ராத்தி, மராட்டி, இந்துஸ்தானி முதலான அந்தேசத்து
பாஷைகள் அடியோடு தெரியாதென்று கண்டு, அந்தேசத்
து அந்த பாஷைகள் தெரிந்த பி. ஏ. முதலான பரிக்ஷை
களைக் கொடுத்த கல்விமான்களை எங்களுக்குத் துபாசிகளாக
நியமித்திருந்தார்கள். இந்த பி. ஏ. பட்டம் பெற்றவர்கள் எங்
களுக்கருகில் இடுப்பைக் கட்டிக்கொண்டு நின்று எங்களுக்கு
எது வேண்டுமென்று சொல்லுகிறோமோ அதைச் சொல்லி
வாய்மூடுமுன் உடனுக்குடனே சொல்லியும், செய்வித்தும்
சோதித்துக்கொண்டு மொரு குறைவுக்கும் வழியில்லாமல்
கவனமாகக் காரியத்தை நடப்பித்துவந்தார்கள். சாப்பிட்டான

வுடனே சுருட்டுப் பிடிப்போருக்குச் சுருட்டும், உக்கா பிடிப்போருக்கு உக்காவும், தாம்பூலம் போடப்பட்டவர்களுக்குத் தாம்பூலமும் சுத்தஞ் செய்துகொண்டு வந்தார்கள். இதன்றியில் க்ஷவரம் செய்து கொள்பவர்களுக்குத் தயாராக மாசுநிப்போர்களும், வெளியில் போகவேண்டுமானால் குதிரைகள் கட்டிய சாரட்டுகளும், கோச்சுகளும் தயார் செய்யப்பட்டிருந்தன. விருந்தாளிகளாகிய எங்களுக்கு இவ்வித மரியாதைகள் செய்வித்தவர்கள் யாவரெனில், இந்த மஹாநாட்டுக்குப் பம்பாய்ப் பிரதிநிதிகளாக நின்ற கனவான்களே. அவர்கள் யாவரெனில்,

சட்ட நிரூபண சபையின் மெம்பராகிய கனம்பொருந்திய தாதாபாய் நவரோஜி, சட்டநிரூபண சபையின் மெம்பரும் எம். ஏ., பி. எல். பட்டதாரியும், பகவத்கீதையை இங்கிலீஷ் கவிகளில் மொழிபெயர்த்தவரும், கனம் பொருந்திய காசிநாத் டிம்பக் தெலாங்கு, பாம்பே முனிசிபல் பிரசிடெண்டும் பாரிஷ்டருமாகிய மெஸர்ஸ் பெரோஜஷா மெர்வாஞ்சி மீட்டா, பம்பாய் பிரசிடென்சி சபையின் காரியதரிசி டின்ஷாஜி வாட்ஸா, ஐகோர்ட்டு சாலிசிட்டா டின்ஷாஜி பெஸ்டோன்ஜி காங்கா, ஐகோர்ட்டு வக்கிலாகிய காநக்ஷாம், நீலகநாத் நாட்கானி, ஐகோர்ட்டு சொலிஸிடர் மூல்ஜிபவானி தாஸ பார்பாயர், மகா வர்த்தகர்களாகிய திரிபுவனதாஸ், மங்கல்தாஸ் நாதுபாய், ஜிஹாங்கிர் பிவாச்சா, ரொஜனிதிலாம்சா, சொலிசிடரும் ஷெரிபுமாகிய ஸபானிசா, பாரிஸ்டர் பால்முங்கில் வக்கீல், பாரிஸ்டர் ஏ. கே. குகனு, ஸ்பெக்டேடர் பத்திரிகாசிரியர் பி. எம். மலபாரி, ஐகோர்ட்டு வக்கீல் காமிஸ்ராம சந்திரகிரலோஸ்கார். சொலிசிடர் அப்துல்லா மெஹராலி தாராமசி, பெரிய வர்த்தகராகிய ஜவரிலால் உமயசிங்கர்யாஜி பின்னும் அநேக பெரிய உத்தியோகஸ்தர்களும், வர்த்தகர்களும், இந்தக் கனவான்களுக்குப் பக்கத் துணையாக நின்று இந்தச் சபையை ஸ்தாபிக்கத் தூண்டியவர் மஹாரிஷியாக விருக்கும் மிஸ்டர் ஹியூம் என்பவர். இவர் அநேக வருஷங்களாக இந்தியா கவர்ன்மெண்டு செக்ரிடெரியாகவிருந்து இப்போது உபகார சம்பளத்துடன் நமது தேசத்திலே தங்கி நம்மவருக்குதவி செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டு இரவும் பகலும் நமது தேசத்தாருக்கு உதவி செய்வதே கருத்தாகக்கொண்டு வேண்டிய சாதனங்களைத் தேடி வருகிறார். இவருக்கு வயது 60-க்கு மேலான போதிலும் பாலியனைப்போல் சுறுசுறுப்புடன் வேலை செய்வ

தன்றியில் நமது தேசத்தாரின் பேரில் அவருக்கிருக்கும் அன்பை அளவிடப்படாது. இந்த மஹாத்மாவுக்கு அநுகூலமாக ஐகோர்ட்டு ஜட்ஜ் சர் வில்லியம் வெட்டர்பான் துரையவர்களும், மகாவித்வசிரோன்மணியும், எல்பின்ஸ்டோன் காலேஜ் பிரதம பண்டிதருமாகிய பிரபலர் வொர்ஸ்வர்த்து என்பவரும் முன் சொன்ன மஹாரிஷியைப்போலவே நமது தேசத்து ஜனங்களிடத்தில் அத்யந்த கருணையுடையவராகி, நமக்காகப் பாடுபடும் பெருந்தன்மையை யென்னென்று சொல்லுவோம்! சத்தியம், சாந்தம், தருமம், தயை முதலான குணங்களெல்லாம் திரண்டு உண்மையான உருவெடுத்த இந்தத் துரைமார்களுக்கு நிகரான வேறு துரைமார்களை எமது ஜன்மத்திற் கண்டதில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு இடையில் பிரகாசிக்கும் கனம்பொருந்திய தாதாபாய் நவ்ரோஜி யென்பவர் ஒரு மஹாரிஷியென்றே சொல்லலாம். இவருக்கும் வயது 60-க்கு மேலுண்டு. இவர் இங்கிலீஷ் பாஷையைப் பேசும் சாமர்த்தியத்தைச் சொல்லி முடியாது. இவர் இந்தேசத்து ஏழைக்குடிகளுடைய கஷ்டத்தை நீக்கவேண்டுமென்று கனவிலும் நனவிலும் கருத்தாகக்கொண்ட மஹாதாதா. இதற்கென்று ஆறு தடவை சீமைக்குப் போய் அவ்விடத்தில் துரைமார்களிடம் சண்டை போட்டும் அநேக திரவியத்தைச் செலவு செய்தும் வந்ததன்றியில், ஏழைக் குடிகளுக்காகக் கண்ணீர் விட்டழப்பட்ட பரமபுருஷர். இவருக்குத் தாதாபாய் என்று பெயர் இயற்கையாக அமைந்தது ஈசன் கருத்தாக விருக்கலாம். மிஸ்டர் பெரோஜஷா மெர்வாஞ்சிமீடா என்பவர் அதிக வருமானத்தையுடைய பாரிஸ்டராயிருப்பதன்றியில் அந்த பம்பாய் பட்டண முனிசிபாலிட்டியின் சபாநாயகராக விருந்தபோதிலும் டம்பம் பெருமை யென்பது கொஞ்சமு மற்றவர். இவர் பேசுவதில் மகா சமர்த்தர். இவரது சப்தம் இடியிடிப்பதைப் போலிருக்கிறது. இவர் பேசும்போது எங்கும் நிஸ்ஸப்தமாக விருக்கிறது. கனம்பொருந்திய காசிநாத் டிம்பக் டிலாங்கு என்பவர் சுந்தர புருஷர். வாலிபராயினும் வித்தியாசாமர்த்தியமும் உன்னத பதவியும் உடையவர். பிரபல பிரசங்கர். இவர் நாவாடலால் நாடெல்லாம் ஆடும். இவரது கொஞ்சு மொழிகளைக் கேட்கக் குயில்களும் கிளிகளும் வெட்கும். எப்போதும் சுறுசுறு பரபரவென்று ஓடி நாடி வேலையைச் செய்துகொண்டேயிருக்கிறார். இவர் சிக்கிரத்தில் இந்த இந்து தேசத்துக்கே ஓர் சிரோ பூஷணமாகப் பிரகாசிப்பாரென்று சொல்லலாம். இவர்களன்றியில் கனம்பொருந்திய ரான்டேடி

பாரி, டாக்டர் ஆத்மாராம் பண்டோரங்கு, ஸம்ஸ்கிருத பண்டிதர் இராமகிருஷ்ண பண்டார்கர் முதலானவர்களுடைய பெருமையை யென்னென்று சொல்வோம். இப்படிப்பட்ட கனவான்கள்தான் எங்களுக்கு முன்சொன்ன மரியாதைகள் செய்வித்தனர். இவ்வித மரியாதைகள் எங்களுக்கு மாத்திரமல்ல, எங்களைப்போலவே இந்த இந்தியா தேசத்தின் பல விடங்களிலிருந்து வந்த பல ஜாதி, பலமத பிரதிநிதிகளுக்கும் இவ்விதமாகவே மரியாதை செய்வித்தார்கள். இனி எங்களைவிட வேறு விடங்களிலிருந்து அங்குவந்த பிரதிநிதிகள் யாவரெனில்:—

குராச்சியி லிருந்துவந்த பிரதிநிதிகள்:—ம-ா-ா-ஸ்ரீ டயராம் ஜதுமால் வக்கீல், ம-ா-ா-ஸ்ரீ உடாராம்மூல் சண்டவக்கீல்.

வீரமகம் என்னும் பட்டணத்திலிருந்து வந்த பிரதிநிதி: மிஸ்டர் ஹரிலாம் மயாராம், வக்கீலும் முனிசிபல் கமிஷனரும்.

சூரத்திலிருந்து வந்த பிரதிநிதிகள்:—வக்கீலும் முனிசிபல் கமிஷனரும், பிரஜஹித் வர்த்தக சபையின் கமிட்டி மெம்பருமாகிய மிஸ்டர் எச். எச். தர்வா, பி. ஏ., பி. எல்., பிரஜஹித் வர்த்தக சபையின் காரியதரிசியாகிய தமஸதர் மஞ்சர்ஷா பல்லஞ்சி கெய்கோபாட் அவர்கள், வக்கீலும் முனிசிபல் கமிஷனருமாகிய மிஸ்டர் கோகுல்தாஸ் பைதாஸ் அவர்கள், மிஸ்டர் மஞ்சசங்கர் ஜிவன்ராம், பி. ஏ., பி. எல்., அவர்கள், மிஸ்டர் ஹோராசாஞ்சி பூஜர்ஜி, பி. ஏ., பி. எல்., பிளீடரும் வர்த்தகரும் பிரிஜஹிர்தகசபையின் அக்கிராசனாதிபதியுமாகிய மிஸ்டர் நாரன்தாஸ் புருஷோத்தமதாஸ் அவர்கள்.

பூனாவிலிருந்து வந்த பிரதிநிதிகள்:—பூனா சர்வஜனிக் சபையின் அக்கிராசனாதிபதியாகிய ராய்பஹதூர் கிருஷ்ணாஜி லெஷ்மன் நூலகர், டிஸ்திரிக்ட் கோர்ட்டு பிளீடர் கங்காராம் போமாஸ்கி அவர்கள், நியான் பிரகாச பத்திரிகையின் மஹாராஷ்டிர பாகத்துப் பத்திரிகாசிரியராகிய மிஸ்டர் ராமசந்திர மோரிஷ்வார்சேன், பூனா சர்வஜனிக் சபையின் கௌரவ காரியதரிசியும் மும்மாதத்துக்கு ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும் பூனா சர்வஜனிக் சபையாரின் பத்திரிகையின் ஆசிரியருமான மிஸ்டர் சீதாராம்ஹரி சிப்ளாங்கர் அவர்கள், பூனா சர்வசனிக் சபையின் காரியதரிசியாகிய மிஸ்டர் சிவராம் ஹரி சேத, டாக்டர் பாண்டுராம் கோபால், ஜி. ஜி. எம். சி., பெர்குஷன் காலேஜ் ப்ரின்சிபலும் புதிய இங்கிலீஷ் ஸ்கூல் சூபரின்டெண்டுமாகிய மிஸ்டர் வாமன் சிவராம் அப்தி எம். ஏ.,

டிஸ்திரிக்ட்டு கோர்ட்டு ப்ளீடராகிய மிஸ்டர் இராமசந்திர கோஷாலிடியாகி, பொருஷன் காலேஜ் ப்ரொபெஸர் மிஸ்டர் கோபால் கானிஷ் அசர்கர்.

கல்கத்தாவிலிருந்து வந்த பிரதிநிதிகள்:—ஐகோர்ட்டு பாரிஸ்டர் மிஸ்டர் டப்ளியூ சி. பானர்ஜி, ஐகோர்ட்டு வக்கில் மிஸ்டர் G. P. மூகர்ஜி, இந்தியன் மிரர் பத்திரிகையின் ஆசிரியரான மிஸ்டர் நரேந்திரநாத் சேன்.

ஆக்கிராவிலிருந்து வந்த பிரதிநிதிகள்:—பிளீடரும் முனிசிபல் கமிஷனரும் நாசி என்னும் பத்திரிகையின் ஆசாரியருமாகிய மிஸ்டர் பாபு ஜெமேன்தாஸ், மிஸ்டர் பாபு ப்ராடயால் சௌதரி, பிளீடர்.

காசியிலிருந்து வந்த பிரதிநிதி:—பென்ஷன் பெற்றுக்கொண்டு வேலையைவிட்டு நீங்கிய ஸப் ஜட்ஜியாகிய மிஸ்டர் ராம்காலி சௌத்ரி.

லக்னோவிலிருந்து வந்த பிரதிநிதிகள்:—ஹிந்துஸ்தானி பத்திரிகையின் சொந்தக்காரரான மிஸ்டர் முன்ஷி கங்கா பிரசாத் வர்மா, லார்ட் கானிங் காலேஜ் உபாத்தியாயராகவிருக்கும் மிஸ்டர் ப்ராணுநாத் பண்டித்.

லாகோரிலிருந்து வந்த பிரதிநிதிகள்:—பாபு முந்திஸிதார், பிளீடர் பாபு சத்தியானந்த ஹக்னி ஒத்திரி பிராமோ மிஷனரி.

அலகாபாத்திலிருந்துவந்த பிரதிநிதி:—மிஸ்டர் கோசால்.

அமதபாத்திலிருந்து வந்த பிரதிநிதிகள்:—வக்கிலும் முனிசிபல் கமிஷனருமாகிய மிஸ்டர் கிஷாலால் மோடிலால், மிஸ்டர் மஹேருஜ்ஜி, மோடி, வக்கில். இன்னும் பல நாடுகளிலிருந்தும் பலர் வந்திருந்தார்கள்.

டிசம்பர் 28உ பகல் 12 மணிக்கு காங்கிரஸ் சபை கூட்டப்பட்டு, வங்காளத்திலிருந்து வந்த உமிஸ் சந்திர பானர்ஜி சபாநாயகராக நியமிக்கப்பட்டுப் பின்வருகிற தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவையாவன:—

1. இந்தியாவின் இராஜ்ஜிய காரியங்களை விசாரிக்கச் சீமையில் இராயல் கமிஷன் நியமிக்க வேண்டுமென்று கனம் சுப்பிரமணிய ஐயர் பிரேரேபிக்க, கனம் பெரோஜ்ஷாமேட்டா ஆமோதிக்கச் சகலராலும் அங்கிகரித்துக் கொள்ளப்பட்டது.

2. சீமையிலிருக்கும் இந்தியா விசாரணைச் சங்கத்தை எடுத்துவிட வேண்டுமென்று ஸ்ரீ பிலாங்கர் பிரேரேபிக்க, ஸ்ரீ அநந்தாசார்லு அவர்களால் ஆமோதிக்கச் சகலராலும் அங்கிகரித்துக் கொள்ளப்பட்டது.

3. இந்தியா சட்ட நிரூபண சபையில், குடிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு சட்டதிட்டங்களைச் செய்யவேண்டுமென்றும், சர்க்கார் வரவு செலவு கணக்குகளை அவர்கள் சம்மதியின்படி செய்ய வேண்டுமென்றும் கனம் காசிநாத்திரம் தெலாலவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, கனம் சுப்பிரமணியம் ஐயர், தாதாபாய் நவரோஜி அவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சகலராலும் அங்கிகரித்துக்கொள்ளப்பட்டது.

4. கவினெண்டாண்டு சிவில் சர்விஸ்பரிக்ஷை இந்து தேசத்திலேயும் நடத்த வேண்டுமென்றும், ஷை பரிக்ஷைக்குப்போகும் வயதை 23 செய்ய வேண்டுமென்றும் கனம் தாதாபாய் நவரோஜீ அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ம-௱-௱-ஸ்ரீ வீரராகவாசாரியா ரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சகலராலும் அங்கிகரித்துக் கொள்ளப்பட்டது.

மேலும், லைசென்சு டாக்ஸ் வரியை இன்கம்டாக்சு வரியாகப் போடவேண்டுமென்றும், சுதேசிகளை வாலண்டியர் கோரில் சேர்த்துக்கொள்ளச் சுதந்திரம் தரவேண்டுமென்றும், பர்மாதேசத்தை இத்தேசத்து வரவு செலவோடு சேர்க்கக் கூடாதென்றும் தீர்மானித்து, அனைவராலும் அங்கிகரித்துக் கொள்ளப்பட்டது.

1885௵ டிசம்பர்௴ 29௳ மத்தியானம் ஒரு மணிக்கு பம்பாயிக்குத் தென்கிழக்குப் பாகமாகச் சுமார் ஆறு மைல் தூரத்தில் சமுத்திர மத்தியிலிருக்கும் கேவசாப் எலிபண்டா யானைகுகை நிபத்தின் விநோதவேடிக்கையைப் பார்க்கும்பொருட்டு எங்களை ஒரு புகைக் கப்பலில் ஏற்றிக்கொண்டுபோனார்கள். எங்களுடைய கப்பலில் பம்பாய் ஐகோர்ட்டு ஜட்ஜியாகிய ஸ்ரீ வெட்டர்பர்ன், ஸ்ரீ ஹியூம் முதலான துரைமார்களும், ஸ்ரீ இரகுநாதராயரவர்கள் முதலான கனவான்களும் வந்திருந்தார்கள். அப்படிவந்த நூற்றுக் கணக்கான பிரதிநிதி கனவான்களுடன் கப்பல் யாத்திரை செய்யும்போது கண்ட காக்ஷியை என்னவென்று சொல்லலாம். கப்பலைவிட்டிறங்கித் தீவைச் சேர்ந்த உடனே நாங்கள் இளைப்பாறக் காப்பி, தே

நீர், பழம், மிட்டாய் வகைகள் தயாராக வைத்திருந்து கொடுக்கப்பட்டன. உண்ட உடனே ஷெடிலிலிருக்கும் காக்ஷிகளைக் காண நான்கணு டிக்கெட்டுகளை எமக்குக் கொடுக்க அவைகளைப் பெற்றுக்கொண்டு போய்ப் பார்த்தோம். அந்தக் குகையாகிய குன்று 130 அடி ஆழமும் 130 அடி அகலமும் 20 அடி உயரமுள்ளதாகக் குடைந்து வெட்டப்பட்டு, அதில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் முதலான கோயில்களும் விக்கிரகங்களும் ஸ்தம்பங்களும் கொத்தி, சித்திராலங்காரமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இதே மாதிரியாகவே சுற்றுப் பக்கங்களிலிருக்கும் குன்றுகளிலும் இப்படியே செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச்சித்திராலங்காரங்களையும் சுற்றுப்பக்கங்களிலிருக்கும் விநோத காட்சிகளையும் கண்களால் பார்த்தவர்களுக்கன்றி எழுதி அறிவித்தல் அசாத்தியம். பிரஹ்மத்தியானம் செய்யப்பட்டவர்களுக்கு இது சிறந்த விடம். ஆகவே, அடியிற் கண்ட பிரம்மபிரார்த்தனை செய்தோம்.

பம்பாயிக்கடுத்த கேவஸாப் எலிபண்டா என்னும் திவில் செய்த பிரார்த்தனை.

ஓ! புருஷோத்தமா! இந்தப்பம்பாய் பட்டணத்தின் பிரம்மாண்டமும், பிரகாசமும், பசந்துமான கட்டடங்களையும், பிரஜைகளுடைய சுந்தர முகாரவிந்தங்களையும், சுறுசுறுப்பான தொழில் முயற்சிகளையும் கண்டு வியந்தோம். இந்தப்பட்டணத்தில் ஸ்ரீலக்ஷ்மிப் பிரசன்னமாகப் பிரகாசித்துப் பிரஜைகளைப் பிரபலப்படச் செய்திருக்கின்றாய். இதற்குக் காரணம், இந்தப் பிராந்தியங்களிலிருக்கும் பிரஜைகள் நினது பக்தர்களாயிருப்பதோடுங் கூட நினது பிரதிக்ஞைகளில் பிரதான பிரதிக்ஞையாகிய தேகத்தொழில் முயற்சி என்பதை நன்கறிந்து நாடி வருவதால் அவர்கள் நினது லக்ஷ்மிவிலாசத்துக்குப் பாத்திராகிப் பிரகாசிக்கின்றனர். இதை யறியாத உலகத்தார் சிலர் நின்னை சதாவணங்கிப் பூஜை செய்யும் காரியந்தான் தேவகட்டளையாகக்கொண்டு தேகமுயற்சி தொழில் முயற்சிகளைத் தொலைத்துவிட்டுத் தவிக்கிறார்கள். நின்னைச் சதாவணங்கும் உத்தமத் தொழிலைப்போலவே, தேகமுயற்சியும் தொழில் முயற்சியும் நினது கட்டளையின் உத்தம தொழிலாக விருக்கிறது. இந்த உண்மையை யறிந்த பம்பாய் முதலான தேசத்

தார்கள் நினக்கு இருவகையிலும் சிறந்த பக்தர்களாகிய நினது லக்ஷ்மிவிலாசத்துக்குப் பாத்திரரானார்கள். இவ்வித யோக்கியதைக்கு யாமும் எமது தேசத்தாரும் தக்கவர்களாகும்படி இந்தக் கடல் சூழ்ந்த சிங்காரத்தீவில் நின்னை ஹிருதய பூர்வகமாகப் பிரார்த்திக்கின்றோம். நினது லக்ஷ்மிவிலாசத்துக்கு எம்மைப் பாத்திரராக்குவாய். ஓம் தத் சத்.

பம்பாயின் விநோதங்கள்.

பம்பாய் என்னும் பதத்திற்குப்பொருள் (Fair Heaven) அழகிய தேவலோகம் என்று சிலர் கொண்டாலும், இது இந்த உலகத்தில் மிக்க வசதியான கரைதுறைப்பட்டணமென்று பொருள்பட வழங்கிவருகிறார்கள். இது மூன்று சிறிய தீவுகளாகவிருந்து பின்பு செயற்கை யுக்திகளால் பரியாய தீவாகி வடகிழக்குமுதல் தென்மேற்கு வரையில் எட்டுச் சதுரமைல் உள்ள பட்டணம். இது பூர்வத்தில் பலவிதத்திலும் சிறந்து விளங்கி பிறகு அக்கினி முதலானவைகளால் சீர்கெட்டு, கி. பி 1661-ம் வருஷம் போர்த்துக்கேசருக்குச்சுவாதீனமாகி, அவர்கள் மூலமாக ஆங்கிலேயதேசத்து இராஜனாகிய இரண்டாவது சார்லெஸ் என்பவருக்குக் கி. பி. 1668-ம்வரு கொடுக்கப்பட்டது. அவர் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்குக் கொடுக்க அவர்கள் மூலமாக மஹாசக்கரவர்த்தினி விக்டோரியா இராஜ்ஜியத்திற்குச் சேர்ந்து அன்றுமுதல்தான் இந்தப் பம்பாய் பட்டணமானது நாகரிகத்திலும் செல்வத்திலும் சிறந்து விளங்குகின்றது. ஆனால் இந்துதேசத்திலேயே மற்ற அநேக விசேஷமான பட்டணங்களிருக்க இதற்கு மாத்திரம் இவ்வளவு சிறப்பு வருவானேனெனில், இதன் கரைக்கடுத்த கடல் 6 அல்லது 7 பாதம் ஆழமுள்ளதாக ஏற்றுமதி இறக்குமதி முதலானவைகளுக்கு மிகவும் வசதியாகவிருப்பதனால் பற்பல தேசத்தாருடைய கப்பல்கள் இரவும்பகலும் கும்பல் கும்பலாக வந்து தங்கி ஏராளமான வர்த்தகம் செய்விக்க விடமுண்டானதினாலேதான் இவ்வளவு சிறந்து விளங்குகிறதென்று சொல்லலாம். இப்படிப் பலதீவுகளாலாகிய பம்பாயின் வடதென்பாகத்தின் குறுகிய போக்கும், மேற்குப் பாகத்திலிருக்கும் மலபார், ஒர்லிமலை மேடுகளும், கிழக்கே இருக்கும் சின்சுபூகில் பாகமும் தவிர மற்றப்பாகமெல்லாம் கருங்கல் களிமண் கலந்த தட்டைப் பூமியாக விருப்பதால் மழைக்காலங்க

னில் சமுத்திர ஜலம் நகரத்துக்குள் பிரவேசிப்பதுண்டு. மேலும் பட்டணத்தின் பெரும்பாகம் சமுத்திரக்கரைகளால் சூழப்பட்டு, எப்போதும் குளிர்ச்சியான நல்லகாற்று வீசுவதனால் ஜனங்களுக்குப் போதுமான சுகத்தைக் கொடுத்து வருகின்றது. வியாதியும் அதிகமில்லை. சாவும் கொஞ்சம். ஆனது பற்றியே அனேக ஐரோப்பியர்களும், பார்சிகளும், மற்ற பற்பலவிதமான ஜாதியார்களும், ஏராளமாக வந்து வர்த்தகம் முதலானவைகளைச் செய்துகொண்டிருக்கின்றனர். 1891ல் 8,21,764 குடிகள் இருந்தார்கள். இவர்களில் 5,00,000 இந்துக்களும், 1,54,000 மகம்மதியர்களும், 45,000 கிறிஸ்தவர்களும், 47,000 பார்சிகளுமாக இருந்தார்கள். இந்தப் பட்டணத்திற்குப் பார்சிகள் ஆயிரம் வருஷங்களுக்குமுன் வந்து குடியேறினார்கள். அவர்கள் வந்தது முதற்கொண்டுதான் வர்த்தகமும் விருத்தியாகியது. வர்த்தகம் அதிகமாக விருத்தியானநிலைலேதான் இந்தப் பட்டணத்து ஜனங்கள் குபேர சம்பத்துள்ளவர்களாகி ஏழு அடுக்கு, எட்டு அடுக்கு, பத்தடுக்கு, பனிரெண்டடுக்கு மெத்தை வீடுகளையும் மேடை மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எங்கே பார்த்தபோதிலும் பிரம்மாண்டமும் சித்திராலங்காரமுமான கட்டடங்களும், அந்தந்தக் கட்டட அடுக்கு மாளிகை ஜன்னல்களில் பொம்மைகளைப் போல் பெண்கள் சிங்காரித்துக்கொண்டு வரும் பாட்டைசாரிகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் வேடிக்கை விநோதங்களை என்னவென்று சொல்லலாம். இத்தேசத்திய சாதாரண ஜனங்களுக்குப் பம்பாய்ப்பட்டணம் தேவலோகம் போலவும், கம்பநாட்டாழ்வார் புகழ்ந்த கோசலதேசமாகவும், அதிவீரராம பாண்டியர் புகழ்ந்த அயோத்தியாபுரியென்றும் புகழேந்திப் புலவர் புகழும் பாண்டிய நாடென்றும், பிள்ளைப்பெருமாள் புகழும் பெரும்பட்டணங்களில் ஒன்றென்றும் சொல்லுவார்கள். சற்று சீர்திருத்தமுள்ளவர்கள் இந்த பம்பாய்ப் பட்டணத்திலுள்ள பெரிய கட்டடங்களைப் பார்த்தால் பிரமிப்புக்கொள்வார்கள். சீர்திருத்தத்தில் சிறந்தவர்கள் இந்தப் பட்டணத்துச் சிங்காரத்தின் பெருமையைக் கண்டு ஆநந்தப்படுவார்கள். இந்த பம்பாயில் சிறந்து விளங்கும் விசேஷ கட்டடங்கள் எவையெனில்:—

பம்பாய் விநோதகாக்ஷி சாலை, கிரந்தங்கள் சாலை, நகர மண்டபம், அதையடுத்த நாணயச்சாலை, செண்ட்தகமஸ் கிரு

ஸ்து கோயில், கவர்ன்மெண்டு படகு தங்குமிடம், ஒக்க வாடை, மாரமக்தூசாலை, மின்சார தபாலாபீசு, செக்ரிடேரி ஆபீசு, ஐகோர்ட்டு, தபாலாபீசு, எல்பின்ஸ்டன் தோட்டம், கிராபோர்டு மார்க்கெட், சாரூன் இயந்திரசாலை, ஹரிதாஸ் ஜிஜிபாய் பஞ்சு இயந்திரசாலை, கிராண்டு வைத்தியசாலை, ஜம ஸ்டிஜி ஜிஜிபாய் ஆஸ்பத்திரி, விக்டோரியா தோட்டம், ஆல்பர்ட்டு விநோதசாலை, கொலாபா மெமோரியல் கோயில், டேவிட் சாரூன் கைத்தொழில் சாலை; டார்டோ, கர்காம், பாரெல் முதலான விடங்களிலிருக்கும் பஞ்சுநூல் இயந்திரசாலைகள், பிரேம்சி கேசவாசிசாலை, கோபிதாஸ், பானசாபூல், பிராணிகளின் ஆஸ்பத்திரி, இராணிபவர்களுடைய பிரதிமை, நார்துபாகு தோட்டம், ஆகியவைகளாம். பெரிய இந்திய புகைவண்டி ஆபீசு கட்டடம்: இது ஆச்சரியமான கட்டடம். இதன் முழு நீளம் 1500 அடிகள். இதைக்கட்டுவதற்குப் பத்துவருஷங்கள் சென்றதோடு 27 லக்ஷம் ரூபாய் செலவாயினவாம். இதன் கலசங்கள் 16 அடிகள் 6 அங்குலம் உயரமுள்ளன. இந்தக் கலசங்களினடியில் விவசாயசாஸ்திரசம்பந்தமான சித்திராலங்காரப் பிரதிமைகள் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. வாசல்களின் இருபக்கங்களில் ஒரு வேங்கைப்புலியும், ஒரு சிங்க உருவமும் கம்பீரமாகச் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டிடத்துக்குள் ஸ்படிகக்கற்களால் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டிடத்தின் வேலையை மேல்விசாரணை செய்த மிஸ்டர் ஸ்டீவின்ஸன் துரைக்குக் கம்பெனியார் 5000 ரூபாய் இனாம் கொடுத்தார்கள். சித்ரவேலைகள் மிஸ்டர் எமிர்சன் துரையவர்கள் விசாரணையில் ஐரோப்பிய சிற்பிகளைக்கொண்டு திருப்திகாமாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

இவைகளன்றியில்இன்னும்அநேகஹோட்டல்களும், பாங்கிகளும், கிளப்புகளும், பிரமாண்டமும் வியக்கத்தக்க விநோதகரமானவைகளாகவும் இருக்கின்றன. மேலும்கிராண்டுரோட்டிலிருக்கும் பயிகல்லா வென்னும் புகைவண்டி தங்கும் ஸ்டேஷன் பிரம்மாண்டமான கட்டிடம். பெரிய இந்தியா ரெயில்வே புகைவண்டி தங்குவதற்குப் பம்பாய் கோட்டைக்கு வடக்கேயிருக்கும் பூரிபண்டர் ஸ்டேஷனும் பிரம்மாண்டமானது. இவ்விடத்தில் பரோடா மத்திய இந்திய முதலான விடங்களுக்குப் போகும் புகைவண்டிகள் தங்கும். பிரதி தினமும் சுமார் 60 புகைவண்டிகள் போகவும் வரவுமிருந்தால் அந்தப்பட்டணத்தின் பெருமையைச்சொல்லவும் வேண்டுமோ! கிராபோ

ர்டு மார்க்கெட்டின் பெருமையைப் பிரத்தியட்சமாகப்போய்க் கண்டாலொழிய எழுதித் தெரிவிப்பதனால் முடியாது. ஷெ மார்க்கெட்டானது யாதொரு தம்பங்களுமறு இருப்புக்கூரைகளால் மேயப்பட்டு அடியில் ஸ்படிகக்கற்களால் தளம்போடப் பட்டிருக்கிறது. இந்த மார்கட்டைப் பார்த்தால் அதுவே விநோதமான புது உலகம்போ லிருக்கிறது. ஒரு பாகத்தில் பற்பல விதமான பழங்கள் அடுக்கடுக்காகவும், அணியணியாகவும்சிங்காரித்துவைக்கப்பட்டிருக்கின்றன. அத்தேசத்தின் கத்திரிக்காய் நமது தேசத்துச் சுரைக்காய் அவ்வளவு பெருத்திருக்கில் மற்றக்காய்கறி கிரைவகைகளின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ! ஒருபக்கத்தில் பற்பல விதமான புஷ்பங்கள் செண்டு செண்டுகளாகவும் கொத்துக்கொத்துக்களாகவும் கட்டி தேவேந்திர வனத்தைப்போல் சிங்காரித்து ஒரு பைசாவுக்கு விற்கிறார்கள். ஒருபாகத்தில்பற்பல விதமான உயிருள்ள பட்சிகள் மிருகங்கள் முதலானவைகளைச் சிங்காரமாக வைத்து விற்கிறார்கள். ஒருபக்கத்தில் மாமிச பட்சணங்களையும் மீன் முதலானவைகளையும் ஏராளமாக விற்கிறார்கள். ஒரு பக்கத்தில் பிராமணர் முதலானவர்கள் காப்பித் தேயிலைநீர் முதலானவைகளைச் சுடச்சுடத் தயார்செய்து காலணா அரையணாவுக்கு விற்கிறார்கள். இந்த மார்க்கெட்டில் இராக்காலங்களில் காஸ்லயிட்டு மின்சார விளக்குகளை வைப்பதினால் அந்த மார்க்கட்டே ஓர் விண்ணுலகம்போ லிருக்கிறது. மேலும் இந்தப் பம்பாயில் ஏராளமான அரபிக்குதிரைகள், ஆஸ்திரேலியாக் குதிரைகளைக் கொண்டுவந்து 200 ரூபாய் முதல் 2000 ரூபாய்வரையில் ஒரு குதிரையின் விலையாக விற்கிறார்கள். மற்றப்படி துணிவகைகளின்ஏராளத்தைச்சொல்லவேண்டியதில்லை. எங்கே பார்த்தாலும் கடைகளும் கைத்தொழிற் சாலைகளும் ஏராளமாகவிருப்பதால் பம்பாய்ப் பட்டணத்தைப் பூலோகக் கடை என்று சொல்லலாம். இந்தப் பட்டணத்தில் துரைமார்களும், பிரபுக்களும், மலபார் ஹில்சா என்னும் உன்னதமேட்டின்மேல் குடியிருக்கிறார்கள். அது சற்றேறக்குறைய 5 மைல் சுற்றளவும் 500 அடி உயரமு முள்ளது. அது அதிக மேட்டுப் பாங்கானதாகையால் அவ்விடத்தில் குடியிருப்பவர்கள் இரட்டைக்குதிரை வண்டிகளை வைத்திருக்கவேண்டும். மேலும் அது சுகானுகூலமான விடமாயிருத்தலால் மாதமொன்றுக்கு 200 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரையில் விட்டுவாடகை கொடுக்க வேண்டும்.

இவ்விடத்திலும் மற்றப்படி சுற்றுப்பக்கங்களிலும் இருக்கும் ஜனங்கள் மாலை ஐந்து மணிக்கெல்லாம் சிங்காரித்துக்கொண்டு விமானங்களைப்போன்ற வண்டிகளிலேறிக் கடற்கரைக் காற்றுக் காஷிக்கு வந்து சுகப்படுகிறார்கள். அதற்குச் சமீபத்தில் ஆயிரம் முதல் ஐம்பதினாயிரம் ரூபாவரையில் செலவிட்டு நாடகச்சாலைகளைக்கட்டிப் பிரதிதினமும் பலநாடகங்களையாடி யாநந்தத்தை மூட்டுகின்றனர். எம்மைச் சில நண்பர்கள் விக்டோரியா தியேட்டர் நாடகத்துக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அந்த நாடகச்சாலை நான்கு அடுக்கு சுற்று வளைவான கட்டடம். அது நாடகசாலைக்கென்று கட்டி, பத்துமுதல் பதினாறு வயதிற்குட்பட்ட பெண்பிள்ளைகளுக்குப் பலவிதவிநோதமான கீதங்களைக் கற்றுக்கொடுத்து விலையுயர்ந்த ஆடையாபரணங்களாற் சிங்காரித்து நடிப்பிக்கிறார்கள். நடனசாலை முழுதும் மின்சார விளக்குகளால் சிங்காரித்து நவநவமான விநோத திரைகளைக்கொண்டு இந்திரசபா நடனத்தை வெகு சிறப்பாக நடத்தி ஆநந்த மூட்டினார்கள். இப்படிப்பட்ட பட்டணத்திலிருக்கும் சுதேசகனவான்களுடைய பெருமையை முன்னமே விவரமாக சொல்லிவிட்டோம். அந்தப்பட்டணத்தில் ஒண்டி எருதுவண்டிகளாவது ஜட்காவண்டிகளாவது மருந்துக்கும் கிடையா. எங்கேபார்த்தபோதிலும் அதிக சுல்ப வாடகைக்கு இரட்டைக்குதிரை கோச்சுகளும் விக்டோரியா என்னும் பீட்டன்களும் தயாராகவிருக்கின்றதன்றியில் டிராம்வே கார் என்னும் குதிரைகள் இழுக்கும் சிற்றிருப்புப்பாதை வண்டிகள் சிங்கார ரதங்களைப்போல் அணி அணியாகப்போய்க்கொண்டேயிருக்கின்றன. அதன்வாடகையோ 2,3 அணாதான். பம்பாயிக்குச் சமீபத்திலிருக்கும் துளசிச்சேரவாம் என்னுமிடமிருந்து குழாய் ஜலத்தைக் கொண்டுவந்து வீடுகள்தோறும் வீதிகள்தோறும் நிறப்பியிருப்பதால் ஜலசவுக்கியம் ஜனங்களைச்சிறப்பிக்கின்றது. கேவலமான சுடுகாட்டுகளைக்கூட எவ்வளவோ சீர்திருத்தமாக செய்திருக்கிறார்கள். ஒருநாள் பார்சிகளுடைய "டவர் ஆப் சைலென்ஸ்" என்னும்மசானத்தைப் போய்ப்பார்க்கும்படி பாரிஷ்டர் பெரோஜஷா மேட்டா என்பவர் சிபார்சு கடிதத்தைக்கொடுத்தனுப்பினார். அதைப்போய்ப் பார்த்தோம். அது ஒரு மலையின்பேரில் சுண்ணாம்பு உருளைக் களஞ்சியங்களைப்போல் ஐந்து சமாதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் 8 அடிஉயரமும் 20 அடி அகலமுமுள்ளன. அவற்றின்மேல் பெருத்த உருவமுடைய கழுகுகள் தயாராகக் குந்திக்கொண்டே யிருக்கின்றன. அந்தக் கட்டடத்துக்குள் மூன்று அடுக்கு

கள். முதலடுக்கில் புருஷப்பிரேதங்களையும் இரண்டாவதில் ஸ்திரீபிரேதங்களையும், மூன்றாவதில் வாலிப பிரேதங்களையும், கொண்டுபோய் வைக்கிறார்கள். இந்த நிமிஷங்களுக்குள் கழுகுகள் யாவும் வந்து புசித்து எலும்புகளை மாத்திரம் விட்டுவிடுகின்றன. பிறகு எலும்புகளை எடுத்துவிடுகிறார்கள். இந்த மசானத்தின் காக்ஷி கம்பீரமானது.

இப்படியே இந்தப் பம்பாயில் இருக்கும் சகல விஷயங்களும் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அத்தேசத்தில் அபரிமிதமாய்த் திரவியமும் சுதந்தரவாழ்க்கையும் காரணமாக இருக்கின்றன. இப்படிச் சுதேசிகள் சுதந்திரப்பிரபுக்களாக இருப்பதால் அவ்விடத்திய ஆங்கிலேயரும் சுதேசிகளை அதிகமரியாதையாக நடத்திவருகிறார்கள் அதற்குத்திருஷ்டாந்தமாக 1895௵ டிசம்பர் 8-ம் தேதி பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜ் பண்டிதராகிய வித்வான் ஓர்ட்ஸ் ஓர்த் அவர்கள் எங்களை அன்னிபோன்னிய விருந்துக்கூட்டத்திற்கு வரும்படியழைத்தபடியே அன்று மாலை அவர் வீட்டுக்குப் போனோம். எங்களோடுகூட பம்பாய் ஐகோர்ட்டு ஜட்ஜிகளாகிய ஸ்ரீ வெட்டர்பர்ன், ஸ்ரீ ஸ்காட், ஸ்ரீ ஹியூம், இலங்கைக்கவர்னராகிய ஸ்ரீவில்லியம் கிரிக்கோரி முதலான துரைகளும் ஆனரபில் ராய்பகதூர் மஹாதேவ் கோவிந்தரானடி, ஆனரபில் தாதாபாய் நவுரோஜி, ஆனரபில் காசிநாத் டிம்பக் திலாங், ஆனரபில் சுப்பிரமணியம் ஐயர், டாக்டர் ஆத்மாராம், பாண்டுரங் பாரிஷ்டர், உமெஸ் சந்திரபானர்ஜி, ராய்பஹதூர் கே. மூலர், சிதாநாத் சிப்லான்கா, நரேந்திரநாத் சேனர், ஜி. சுப்பிரமணிய ஐயர், வீரராகவாசாரியார், ஸ்ரீ ஆர்வே. சபாபதிமுதலியார் இன்னும்சிலருமாகப்போனோம். அவர்கள் எங்களிடம் யாதொரு பேதத்தைப் பாராட்டாமல் தங்களுக்குச் சமானமானவர்களாகவே பாவித்து மரியாதை செய்து அழைத்து இனிப்பாறப் பலவித பழங்களைக் கொடுத்து உபசரித்தார். இம்மட்டோ! அநேக பார்ஸி பெண்டுகளும் பம்பாய்ப் பெண்டுகளும்வந்து பகிரங்கமாக ஆங்கிலேய பாஷையைச் சிங்காரத்துடன் பேசிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் யாவரும் போய் ராஜகீயவிஷயமான அநேக காரியங்களைப்பேசி இராத்திரி 12 மணிக்குத்திரும்பினோம். இத்தியாதிகளால் பம்பாய்த் துரைமார்கள் சுதேசிகளைத் தகுந்த மரியாதையுடன் கவுரவிக்கிறார்களென்பது பிரத்தியக்ஷம். இப்படிச் சுதேசிகள் கௌரவமடைவதற்கு அந்தேசத்தாருடைய செல்வமும் சுவாதீனமுமேகாரணம். அந்தச் செல்வமும் சுவாதீனமும் விருத்தி

யாகக் கைத்தொழில், வர்த்தகம், விடாமுயற்சி, உழைப்பு, உண்மை இவையே காரணம் என்று தோற்றுகிறபடியால் சென்னை இராஜதானியாராகிய சுதேசிகள் அந்த மகோன்னத தசையையடைய இடைவிடாமல் முயலவேண்டும். இந்த பம்பாய் டில்லிக்கு 957 மைல்கள் தூரத்திலும், லக்ஷ்மணபுரிக்கு 885 மைல்கள் தூரத்திலும், ஐப்பல்பூர் வழியாக ஹவராவுக்கு 1349 மைல்கள் தூரத்திலும், லாகோருக்கு 1306 மைல்கள் தூரத்திலும், இவைகளால் முறையே ரூபா 10-3, 13-3, 13-9, 11-10, 13-12, 16-6, 16-5 சார்ஜ் ஆகிறது.

SIND.

சிந்துநாடு.

இவ்வளவு அழகான பம்பாயைப் பார்த்தவர்கள் இந்த இராஜதானியைச் சார்ந்த சிற்சில நாடுகளைப் பார்ப்பதும் கடனும். அவைகளில் சிறந்தது சிந்து நாடு. இங்கு இந்து அல்லது சிந்துநதி பாய்வதால் இது சிரேஷ்டமான தேசமாகியது. பஞ்சாப் மாகாணத்தின் வழியாக இங்குவரும் சிந்துநதியானது கைலாசமலைக் கருகில் 16,000 அடி உயரத்தில் உற்பத்தியாகி 1800 மைல்களோடு அரபிக்கடலில் விழுவதால், இதுவே இந்தியாவுக்குப் பெரிய நதியாம். இது சில இடங்களில் 2000 கஜ அகலமும் 4 முதல் 24 அடிகள் ஆழமுமுள்ள அழகிய நதியாம். இதன் கரையில் இருக்கும் சிந்து நாடு 54,000 சதுர மைல்களும், இரண்டரை கோடி ஜனவாசமுள்ளது இது ஆதியில் இந்து மன்னர்களிடமிருந்து முதல் முதல் கி. பி. 712ல் மகம்மதியரால் பிடிக்கப்பட்டு, கி. பி. 1842ல் ஆங்கிலேயர் வசமாயிற்று. இந்நாட்டில் முக்கியமானவைகள்: ரோரி, ருக், சுக்கூர், ஐதிராபாத்து, கராச்சி, உமர்காட்டு, குச்சு, கத்தியவார், கின்னர் முதலானவைகளாம். இவைகளில் ஐதிராபாத்து கராச்சியிலிருந்து கோட்டிரிக்குப்போய்ப் பிறகு சிறு கப்பலேறிப் போகவேண்டும். இங்கு கோட்டையின்மேல் 65 படிகளுள்ள மீநாட்கோபுரமிருக்கிறது. கத்தியவார் என்பது ஒரு சுதேச மன்னருடைய ஆளுகையில் இருக்கிறது. இதையே சவுராஷ்டிர தேசமென்று சொல்லுகிறார்கள்.

இந்த கத்தியவார் 188 சிறு நாடுகளாக வகுக்கப்பட்டு அவைகளில் 96 நாடுகள் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டிவருகின்றன. 70 பரோடா ராஜாவுக்குக் கப்பம் கட்டுகின்றன. இவ்

விடம் இராஜகுமாரர் கலாசாலை இருக்கிறது. பவுனகிரி சிறந்தது. முதல்முதல் புகைவண்டி போட்டதாம். கச்சு அல்லது குச்சுதேசம் அதிக வர்த்தக வளமுள்ளது.

சோமநாதபுரம்.

இது கத்தியவாருக்குத் தெற்கே பழைய நாகர் நாட்டைச் சார்ந்தது. சமுத்திரத்திற்கும் நகரத்துக்கும் மத்தியில் ஒரு விசேஷ சிவஸ்தலமிருக்கிறது. இதைத்தான் கி. பி. 1026 ல் மகம்மது கஜினி யென்பவன் தாக்கிக் கோயிலின் பெரும்பாகத்தை இடித்து உள்ளிருந்த விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு போனான். அவன் இடித்த இடிபாடுகளை இன்றும் காணலாம்.

துவாரகை.

இது கத்தியவாருக்கு மேற்குமூலையி லிருக்கிறது. இதை ஸ்ரீ கிருஷ்ணர் கட்டி, மதுராபுரியிலிருந்து யாதவரைக் குடியேற்றித் தாமே ராஜனாக இருந்து ஆண்டு, கடைசிகாலத்தில் அவர் பரமபதமடைய, அந்தத் துவாரகையும் சமுத்திரத்தில் மூழ்கிவிட்டதாம். இந்துக்களுடைய சப்த மோக்ஷஸ்தானங்களில் இதுவும் ஒன்று. இப்போது இங்கிருக்கும் கோவில் 60 கருக்கள் கம்பங்களோடும் 170 அடிகள் உயரமுள்ள கோபுரத்தோடும், 100 அடிகள் உயரத்தில் ஐந்தடுக்குள்ள கட்டடமாக இருக்கிறது. பிரதிவருஷம் 1,00,000 ஜனங்கள் வந்து தரிசிக்கிறார்கள். இந்தத் துவாரகாபுரிக்கு ஜரிஞ நகருக்கு 4 மைல்கள் தூரமுள்ள பெடிபந்தருக்குக் கப்பல் மூலமாகப் போதல் நலம். ஜாம்நகர் பாவா நகருக்கு 203 மைல்கள் தூரத்தில் ரூபா 3-0-0 ரெயில் சார்ஜ்ஜு கொடுக்கவேண்டும்.

GUJARAT.

குஜராத்து நாடு.

குஜராத்து நாடு பம்பாய் ராஜதானியின் வடக்கே தப்தி, நர்மதா, மாஹி முதலான நதிகளால் நீர்வளமுள்ள செழிப்பான நாடு. இது 10,000 சதுரமைல்கள் விஸ்தீரணமும், ஒரு கோடி குடிகளுமுடையது. இதைச்சார்ந்த ஸூரத்து நகரம் பம்பாயிக்கு 167 மைல்கள் தூரத்தில் பருத்தி முதலான வர்த்தகத்திற் சிறந்

ந்தது. பரோசு: இது சூரத்துக்கு 37 மைல்கள் தூரத்திலிருக்கிறது. இது துணிவர்த்தகத்திற் சிறந்தது.

பரோடா.

இது பரோசுக்கு 43 மைல்கள் தூரத்திலுள்ள கைக்வார் மஹாராஜரின் சமஸ்தானபட்டணம். இதில் கி. பி. 1720ஙு சுதேச ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது. நாஜுசாயபு கலகத்தில் கண்டோராவ் இங்கிலீஷ் கவர்ன்மெண்டுக்கு உதவிசெய்ததால் சிறப்புப்பெற்றார். இந்தச் சமஸ்தானம் 570 சதுரமைல்களுள்ளதும், 1891ஙு கணக்கின்படி 2,41,22,000 குடிகளுள்ளதும், 140 லக்ஷம் ரூபாய் வருமானமுள்ளதுமாம். இந்தச் சமஸ்தானத்தின் மஹாராஜர் மஹா புத்திசாலியானபடியால் உலகமெல்லாம் சுற்றிப்பார்த்துத் தனது ஸமஸ்தானத்தைப் பலவிதத்திலும் சிறப்பித்துக் குடிகளுடைய க்ஷேமத்தை விருத்தியாக்குகின்றார்.

அஹமத்நகர்.

இது பரோடாவுக்கு 62 மைல்கள் தூரத்திலிருக்கின்றது. சப்தமதிக்களாயிருக்கும் இது கி. பி. 1314ஙு அகமதுஷாவினால் ஸ்தாபிக்கப்பட்டு, கி. பி. 1573ஙு ஆக்பர்ஷாவால் பிடிக்கப்பட்டது. பிறகு கி. பி. 1757ஙு மஹாராஷ்டிரரால் பிடிக்கப்பட்டு, கி. பி. 1818ஙு ஆங்கிலேயர் வசமான வர்த்தக வளமுள்ள பட்டணம். இது சிறப்பில் பம்பாயிக்கு மூன்றாவது பட்டணமென்று சொல்லலாம்.

பிப்ரவரிமீ 16உ காலை ஸ்நானம் செய்துகொண்டு சாப்பிட்டு பூரிபண்டர் ரெயில் ஸ்டேஷனுக்கு வந்து நபர் ஒன்றுக்கு ரூபா 3-1-0 சார்ஜ் கொடுத்து, பார்சி ரோட்டுக்கு டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு 8 மணிக்குப் புகைவண்டி ஏறினோம். அந்த வண்டி அன்று மாலை 6 மணிக்குப் பூனா ஸ்டேஷனுக்கு வந்தது. அன்று மகாராணியின் ஜூபிலி உற்சவகாலமானபடியால் அந்த ஸ்டேஷனிலும் அடுத்திருக்கும் டேவிட் சகூன் தர்மவைத்திய சாலையாதி கட்டடங்களிலும் ஆயிரங்கணக்காக விளக்குகள் வைத்துக் கொண்டாடினார்கள்.

POONA.

பூனவின் பூர்வ ஸ்திதி.

இது மேற்கு இந்தியாவில் புராதனமான இந்து பட்டணம். இதன் ஆதி சரித்திரம் அவ்வளவாகத் தெரியவில்லை. கி. பி. 1604ஆ அகமத்நகர் சுல்தானல் மகாராஷ்டிர வீரனாகிய சிவாஜி மகாராஜனுடைய பாட்டன் மல்லாஜி என்பவனுக்கு ஜாகிராக விடப்பட்டது. 1637ஆ சிவாஜியின் தந்தையாகிய சாஹாஜி என்பவனுக்குக் காயம் செய்யப்பட்டது. 1663ஆ அரங்கசீபினல் சிவாஜி பிடிக்கப்பட்டும் இந்தப் பட்டணத்தை சயிஸ்தாகான் என்னும் டில்லி பாதுஷாவின் பிரதிநிதியால் இந்தப் பட்டணமும் பிடுங்கிக்கொள்ளப்பட்டது. பிறகு 1667ஆ அரங்கசீபு பூன பட்டணத்தை சிவாஜிக்குக் கொடுத்தாலும் அவன் புத்திரனாகிய சம்பாஜி காலத்தில் பாதுஷாவின் ஏஜண்டாகிய காஜிஹானல் மறுபடியும் பிடித்துக் கொள்ளப்பட்டது. பேஷ்வா என்பவன் மஹாராஷ்டரில் மேன்மையோடு பிரகாசித்தபோது சத்தாராபட்டணத்திலிருந்த ராஜ்ஜிய பீடம் பூனவில் ஸ்தாபிக்கப்பட்டது. 1763ஆ ஹிதராபாத்து நிஜாமலி என்பவன் படையெடுத்து வந்து பட்டணத்திற்கு நெருப்பு வைத்துப் போசுக்கினன். பிறகு பேஷ்வாக்களுடைய பட்டத்துக்காகப் பிரதிநிதிகளாலும் சிந்தியா ஹோல்கார் மகாராஜாக்களாலும் பூன பட்டணம் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. 1802ஆ பாசினில் நடந்த சமாதானத்தினல் பிரித்தானிய உதவி சேனை இங்கு வைக்கப்பட்டது. பாஜிராவின் காரியத்தை முடித்த பிறகு இது இங்கிலீஷ் சிவில் பட்டணமாக்கப்பட்டு தக்காணில் இது ஒரு பிரதான சேனு பட்டாளம் தங்குமிடமாக்கப்பட்டது. இந்தப் பூன பட்டணத்தின் பூர்வசரித்திரம் முழுதும் எழுதாவிட்டாலும் இதில் வசித்துவந்த மாலோஜி, சாஹோஜி, சிவாஜி, சம்பாஜி, பாலாஜிபிஸ்வந்து, பாஜிராவ், மாதுராவ், நாராயணராவ், இரகோபா, மோரபா, நானபவசி, மாதவராவ், நாராயண, டிரம்பக் ஜிடங்கிலா, கங்காதர சாஸ்திரி முதலான மஹாராஷ்டர வீரர்களுடையவும், பிரதிநிதிகளுடையவும் சரித்திரங்களை விவரமாக எழுதினல் இது ஒரு பெரிய புராணமாக முடியுமென்று விட்டுவிட்டோம்.

பூனாவின் தற்கால வஸதி.

இது இப்போது பம்பாய் இராஜதானியைச் சேர்ந்த ஒரு பெரிய ஜில்லாவாகியும், வடக்கே அகமத்நகர் ஜில்லா வரையிலும், கிழக்கே அகமத்நகர் சோளப்பூர் ஜில்லா வரையிலும், தெற்கும் தென்மேற்கும் சத்தாரா ஜில்லாவரையிலும், மேற்கே டாணா ஜில்லா வரையிலும் பரவி 5278 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. நாட்டின் கிழக்கு எல்லையில் மேற்கு மலை வரிசைத் தொடர்ச்சிக ளிருந்தாலும், சுற்றிலும் சில பல குன்றுகளால் சூழப்பட்டும், மூலமுட்டா, கூர், இபல், நீர் முதலான சிறு நதிகளால் பாயப்பட்டும் நடு நிலைமையான சீத உஷ்ணமும் பூசாரமுமான நாடு. சில்லரைத் தானியங்கள் சாதாரணமாக விளைந்தாலும் உருளைக்கிழங்கு எதேஷ்டமாக விளைந்து பம்பாயிக்குப்போய்ச் செலவாகின்றன. பருத்தி விளைவு சிரேஷ்டமானதல்ல. இந்நாட்டில் குடியிருப்போரில் பெரும்பாலார் மஹாராஷ்டிரர். கொங்கோணி நாட்டிலிருந்து குஜராத்தியர் முதலானவர்களும் கொஞ்சம் பாகத்தில் மகமதியரும் வந்து வசிக்கிறார்கள். இந்தப் பாகத்தில் மகமதியர் உபத்திரவம் அதிகமாகத் தாக்காமையால், பெரும்பான்மையான ஜனங்கள் இந்து மதாசாரப்படி இத்தேசத்தின் வட பாகங்களில் சுத்தியாகவும் சுந்திரமாகவும் இருக்கிறார்கள். மூட்டா நதியின் சமீபத்தில் கட்டப்பட்ட இந்த பட்டணம் அழகான பட்டணம். 1841 முதல் 1846 வருஷங்களுக்குள் அநேக புது வீடுகளும், கடைகளும், கட்டடங்களும் கட்டப்பட்டன. நகரில் தானிய வர்த்தகம் செய்ய நக்ஜாரி நலிலா கல்பாலம் கட்டப்பட்டிருக்கிற தன்றியில் இடிந்துபோன மகாராஷ்டிர பாலம் 47,000 ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்டிருக்கிறது. பூர்வம் பேஷ்வாவினுற் கட்டப்பட்ட பழைய அரண்மனை மரஸ்தம்பங்களால் கட்டப்பட்டிருக்கிறது. இதில் இப்போது ஆசுபத்திரி, ஜெயில், பயித்தியக்காரர் ஆசுபத்திரி இருக்கின்றன. நகரத்துக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் கண்டோன்மெண்டிருக்கிறது. இது வெகு நேர்த்தியான அமைப்பு. கிறிஸ்துகோயில் அவ்வளவாகச்சிறந்த கட்டடமல்ல. இங்கு மகாராஷ்டிர இராஜாக்கள் இருந்தபோது 15,000 ஜனங்கள் இருந்தார்கள். இப்போது சுதேசிகளாக மாத்திரம் 1,00,000 பேர் இருக்கலாமென்று தோன்றுகிறது. 1845ஸு ஜல சவுக்கியத்தை விருத்திபாக்க ஸ்ரீ ஜமிஸ் டிஜி ஜீஜிபாய் என்பவர் 1,75,000 ரூபாயும், 1847ஸு கவர்ன்மெண்டார் 37,755

ரூபாயும் உதவிசெய்திருக்கிறார்கள். 1846ஆம் இங்கிலிஷ் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. 1821ஆம் ஸம்ஸ்கிருத காலேஜ் ஸ்தாபிக்கப்பட்டது. 1851ஆம் பழயபெண் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு டெக்கான் காலேஜும் சிவில் இஞ்சினீரிங்கு காலேஜும் ஸ்தாபிக்கப்பட்டன. தானிய வர்க்கத்தோடுகூட புது வேஷ்டிகளும் புடவைகளும் பொம்மைகளும், பாதாட்சைகள், பித்தளைப்பாத்திரங்கள் முதலான சாமான்களும் ஏராளமாக வர்த்தகம் செய்யப்பட்டு வந்து இப்போது சீமைச் சாமான்களின் வரவினால் சுதேச வர்த்தகம் குன்றிவருகிறது. பக்கத்திலிருக்கும் பார்வதி பர்வதத்தின் அடிவாரத்தில் ஹிராபாக் என்னும் சிங்காரத்தோட்டமும் பேஷ்வாவின் அரண்மனையும் இருக்கிறது. இப்போது அதைச் சிங்காரத்தோட்டத் தரிசனத்துக்கு உபயோகப்படுத்தி வருகிறார்கள். பண்டு என்னும் இடத்திலிருக்கும் சர்க்கார் தோட்டமும், கணேஷ் குண்டத்துக்கருகிலிருக்கும் கவர்ன்மெண்டு அரண்மனையும், கவுன்சில் ஹாலும், அதிலுள்ள படங்களும், எர்வாடாசெயில் வரவுசெலவு கட்டடம்முதலானவைகளும், சாஸுன் ஆசுபத்திரி, தபாலாபீசு, பல கலாசாலைகள், கிரிகி மிலிடெரி டிபார்ட்மெண்டு கவர்ன்மெண்டு கட்டடம் முதலானவைகளும் பார்க்கத்தகுந்தவை. கணேஷ் வசுதேவ ஜோஷியர்கள் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட சங்கித சபையும், பிரார்த்தனை சமாஜமும் பார்க்கத்தகுந்த சபைகள். மஹாராட்டி என்றுதி அங்கிலேய மராட்டிய பத்திரிகைகளும் இருக்கின்றன. பூனா ஜனங்கள் பார்வைக்குப் பலசாலிகளாயும், புத்திமான்களாயும் தோற்றுகிறார்கள். ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் அழகிய தருமசாலை இருக்கிறது.

இந்தச் சாலையில் சாப்பிட்டு வண்டி ஏறி ஜாமம் 2 மணிக்கு பார்சிரோட்டிலிறங்கி மூன்று மாட்டுவண்டிகளுக்கு ரூ. 3-8-0 கொடுத்து பண்டரிபுரத்துக்குப் புறப்பட்டோம். வழியில் கட்டை வண்டிகளாலும் பனியினாலும் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. பூனாஸ்டேஷன் பம்பாயிக்கு 119 மைல்கள் தூரத்திலிருக்கிறது. மூன்றும் வகுப்புக்கு சார்ஜ்ஜு ரூபா 1-4-0.

AHMEDNAGAR.
அஹமத்நகர்.

பம்பாயிக்கு 130 மைல்கள் தூரத்தில் சினா நதிக்கரையிற் கட்டப்பட்டிருக்கும் அஹமத்நகரமும் ஓர் சிறந்த பட்டணம். இது கி. பி. 1491ஆம் அகமது நைஸாம் சாஹிபினாலுண்டாக்

கப்பட்டது. இந்நகரைச் சுற்றி கி. பி. 1562ஆ மண்சுவர் சாஜிஹானல் கட்டப்பட்டாலும், கி. பி. 1759ஆ பெஷ்வா என்பவனால் தாக்கப்பட்டு, கி. பி. 1803ஆ ஆங்கிலேயர் வசமாகிவிட்டது. இப்போது இதில் 40,000 குடிகள் வசித்து வருகிறார்கள். இது மிலிடெரி, சிவில் பட்டணமாகி இதற்கு 14 மைல்கள் தூரத்திலிருக்கும், ஹாபிவாலி என்னும் இடம் உஷ்ணகால வாசஸ்தானமாகிவிட்டது. கண்டோன்மெண்டு மூன்று மைல்கள் தூரத்தில் இருக்கின்றது. ரெயில் ஸ்டேஷனுக்கு 5 மைல்கள் தூரமிருக்கிறது. நகர் நபாபுகளால் கட்டப்பட்ட கோட்டை அலங்காரமானதாக இருக்கிறது. அதற்கு ஆறுமைல்கள் தூரத்திலிருக்கும் சலபத்கானுடைய கோரி கம்பீரமாக இருக்கிறது. இப்போது இந்த அகமத்நகர் டிஸ்டிரிக்ட்டுகலெக்டரும் ஜட்ஜியும் தங்கும் ஸ்தானமாக இருப்பதோடு, இதில் ரெவினியு கச்சேரிகளும், பாடசாலைகளும், கோவில்களும் இருக்கின்றன. இது ஜி. ஐ. பி. ரெயில்மார்க்கமாகப் பம்பாயிக்கு 257 மைல்கள் தூரத்திலும், டோண்டு மன்மாடுக்கு 218 மைல்கள் தூரத்திலும் இருக்கிறது. இவைகளுக்கு முறையே ரூ. 2-10-0, 2-5-0 மூன்றும் வகுப்பு சார்ஜ்ஜு கொடுக்க வேண்டும்.

பிப்ரவரிமீ 17 தேதி மத்தியானம் 14 மைல் தூரத்தில் சேட்கோபால சத்திரமென்னும் இடைவெளியில் காணப்பட்ட ஒரு பழைய கட்டடத்திலிறங்கி சமைத்துச் சாப்பிட்டு வண்டி ஏறினேம். கடைகளில் போதுமான அரிசி, பருப்பு, காய்கறி, தயிர் கிடையா. போகப்போக வழியில் குடிக்கவும் ஜலம் கிடைக்கவில்லை. தங்குவதற்கு மரநிழலும் அகப்படவில்லை. அத்துவானகாடாகவிருந்தபடியால், சுமார் 31 மைல்கள் தூரம் கஷ்டத்துடன் கடந்து மாலை வெளிச்சமில்லாமல் தவித்து பீமா நதியைக் கடந்து, இராத்திரி 11 மணிக்குப பண்டரிபுரத்தைச் சேர்ந்து நரஹரிராவ் வீட்டுக்குப் போய்க் கொஞ்சமாகவிருந்த உணவை உண்டு இருமலோடு வருந்தித் தூங்கி எழுந்தோம்.

பண்டரிபுரத்தின் பூர்வ சரித்திரம்.

இது பம்பாய் இராஜதானியைச்சேர்ந்த சத்தாராவின் வடகிழக்குப் பாகத்திற் சோளப்பூர் ஜில்லாவைச் சார்ந்தது. இது கிருஷ்ணாநதியின் கிளை நதியாகிய பீமாநதியின் கரையின்மேற் கட்டப்பட்ட புண்டலீகர் ஸ்தானம். இங்கு 1851ஆ கைகோ

வா மந்திரியாகிய கங்காதர சாஸ்திரி வந்து குடியிருந்துகொண்டும் ஸ்ரீகிருஷ்ண பூஜை செய்துகொண்டும் வந்து, டிரம்பக்ஜி டாங்கிலா என்பவன் இரண்டு மூன்று கொலைபாதகரைவிட்டுச் சதிமோசமாக வெட்டிக்கொல்லச்செய்தான். அப்போது இந்த நகரத்தில் 20,000 ஜனங்கள் வசித்துவந்தார்கள். இந்த ஜூலை நவம்பர் மாதங்களில் பெரிய சந்தைகள் கூடுகின்றன.

இந்த ஸ்தலம் தொன்றுதொட்டு ஸ்ரீ கிருஷ்ணருடைய க்ஷேத்திரம். இந்த இந்து தேசத்திலிருக்கும் கிருஷ்ண விக்கிரகம் கருத்தவருணமாயிருத்தல் சஹஜம். கிருஷ்ண வருணம் என்றால்=கறுப்பு வர்ணம். இந்தப் பண்டரிபுரத்திலிருக்கும் ஸ்ரீகிருஷ்ணர் மாத்திரம் வெள்ளை வருணமாக விருப்பதனாலும் வெள்ளை வருணத்திற்கு ஸம்ஸ்கிருத பாஷையில் "பாண்டு வர்ணம்" என்று சொல்வதனாலும், ஆகவே வெள்ளைவருணமுடைய ஸ்ரீகிருஷ்ணரிருக்கும்இந்தவிடத்திற்குப் பண்டரிபுரம் என்று பெயர் வைத்திருப்பதாகத் தோன்றுகிறது. மேலும் மானவ ஜாதியாருடைய அஞ்ஞானமென்னும் உலக இருளை நீக்க, சுத்த சைதன்னியமாக ஸ்ரீ கிருஷ்ணர் இங்கு எழுந்தருளியபடியால், இந்த இடத்தைத் தரிசிப்போருடைய அஞ்ஞான இருளைநீக்க ஸ்ரீ கிருஷ்ணர் வெள்ளை வருணத்தோடு வந்து தரிசனை கொடுப்பதால் பண்டிரிபுரமென்று பெயர்பெற்றதாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அன்றியும், புண்டரிகன் என்னும் ஒரு பக்தன், தனது பிதாமாதாக்களைக் காவடியில் கட்டித் தூக்கிக்கொண்டுவந்து, ஆற்றங்கரையில் இறக்கிப் பூசை செய்யுங்காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஓடிவந்து தரிசனைகொடுக்க அவர் ஜலத்தில் நிற்பதைப் பார்க்கச் சகியாமல் ஒரு செங்கல் எடுத்துப்போட்டு அதன்மேல் நிற்கும்படி கேட்டுக்கொண்ட வண்ணம் செய்ததாகவும், ஆகவே ஸம்ஸ்தானத்தில் செங்கல்லுக்கு இஷ்டிகையென்றும், அது மஹாராஷ்டிர பாஷையில் விட் என்றும் மருவியதாகவும், அந்த விட்மீதுநின்ற அதாவது செங்கல்லின்மீது ஏறிநின்ற ஸ்ரீ கிருஷ்ணருக்கு விடோபா—செங்கல்லின்மேல் ஏறிநின்ற, பா—ஐயா—என்று பெயர் வழங்கிற்றென்றும். புண்டரிகன் பிரத்தியட்சத்தில் கண்டு பிரதிஷ்டை பெற்றமையால் இந்த இடத்திற்கு ஆதியில் புண்டரீகபுரமென்று வழங்கிவந்து பிறகு பண்டிரிபுரமென்று பெயர் பெற்றதாகவும் சிலர் சொல்லுகிறார்கள். மேலும் ஞானமற்ற மூடர்களாகிய ஜனங்களுக்குங்கூடபக்தியையுண்டாக்கிப் பாது காக்கும் தன்மையால் விடல்—அதாவது வி—ஞானம், ட—

இல்லாதவர்களுக்குக்கூட, ல—ஞானபக்தியைக் கொடுப்பதாக, இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் எழுந்தருளியபடியால் இவருக்கு விட்டலநாதரென்றும் சொல்லுகிறார்கள்.

பண்டரிபுரத்தின் மஹாத்துவம்.

இந்தப் பண்டரிபுரத்தின் மஹாத்துவத்தைப்பற்றி வித்யா விஹாரணியில் சொல்லியிருப்பதை இதனடியில் சங்கிரகித்து எழுதுகின்றோம். சில நூற்றாண்டுகளுக்குமுன் மகாராஷ்டிரத்தில் புண்டரிகனென்றொருவனிருந்தான். அவன் பெற்றோர்கள் மிக்க வயது முதிர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் மகனாகிய புண்டரீகனை மிக்கசெல்வமாக வளர்த்து வந்தாராயினும், புண்டரிகன் அவர்களை ஒருபொருட்டாக எண்ணவில்லை. என்றாலும் இதைப்பற்றிக் கொஞ்சமும் அவர்கள் சலிப்படையாமல் தருணத்தில் புண்டரீனுக்கு விவாஹமும் செய்து வைத்தார்கள். புண்டரீகனைப்போலவே அவன் மனைவியும் தன்மாமனார் முதலானவர்களை மதியாமலிருந்தாள். சாதாரணமாக இது உலக வழக்கந்தானே! ஒரு வீட்டில் முதியோர்களும் இளையவர்களுமிருந்தால், இளையவர்கள் முதியோர்களைப் பார்த்துச் சிரிப்பதும், வேறு சேஷ்டை செய்வதும் எப்பொழுதும் காணும் லக்ஷணம்.

இப்படியிருக்க, இவர்கள் தங்கள் முதியோர்களை நாளுக்கு நாள் அதிகமாகத் தொந்தரை செய்துகொண்டு வந்தார்கள். எப்பொழுதும் புண்டரிகன் தன்பெற்றோர்களைத் திட்டுவதும், கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதுமாகவிருந்தான். இவைகள் பெற்றோர்க்குச் செய்யும் பூஜையென்று நினைத்துக் கொண்டிருந்தான் போலும். அவன்தாய் தந்தையர்களோ இதையெல்லாம் பொறுக்க முடியாமலிருந்தும் ஏதோ ஒருவாறாகப் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். என்ன செய்வார்கள் பாபம்! ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போவதே பலஹீனர்களுக்கு மிகக் கஷ்டம். அதிலும் தங்கள் மகனும் மருமகளும் சேர்ந்து திட்டுவதும் தள்ளுவதும் அவர்கள் பலத்தை அதிகமாய்க் குறைத்துவிட்டது.

இந்த ஸ்திதியில் இவர்கள் இருக்க, ஒருநாள் புண்டரீகன் இவர்களிடம் வந்து, இவர்கள்மேல் அசாத்திய கோபங்கொண்டு, இவர்களைக் கண்டபடி திட்டிக் கடைசியாய்க் கழுத்தைப் பிடித்துத் தள்ளி "எங்கேயாவது போய்ப் பிழைத்துக்

கொள்ளுங்கள்" என்று கூறினான். பலஹீனர்களான அந்தவிருந்தர்கள் நாங்கள் இவனிடத்திலிருந்து இவ்விதம் கஷ்டப்படுகிறதைவிட, வெளியே எங்கேயாவது யாத்திரை போய்ப் பிழைக்கலாமென்றெண்ணி, ஒரே மனதோடு இருவரும் வீட்டை விட்டுப் புறப்பட்டு வெளியே மிகக் களிப்புடன் பெருமூச்சு விட்டுக்கொண்டு செல்லலானார்கள். வழியில், ஏதாவது சத்திரத்தைக் கண்டால் இரண்டுநாள் அங்கே தங்குவதும் பிறகு வேறோர் சத்திரத்தைக் காணும்வரையில் பிரயாணம் செய்துகொண்டேபோவதுமா யிருந்தார்கள். இவர்கள் கதி இங்ஙனமாக, புண்டரிகனும் அவன் பெண்ஜாதியும் பெரியவர்களை வெளியே துரத்திவிட்டு வீட்டில் சந்தோஷமாயும் சுகமாயும் காலம் கழிக்கலானார்கள். ஒருநாள் அவன் பெண்ஜாதி "கிழங்கள் இரண்டும் யாத்திரைமார்க்கமாகப்போயின. நாம் ஏன்போகக்கூடாது?" என்று கேட்க, புண்டரிகன் "அப்படியே செய்யலாம். ஆயினும் அவர்கள் நடந்து சென்றார்கள்? நாம் குதிரைமேற் செல்லலாம்" என்று சொல்லி, இரண்டு குதிரைகளைக் கொண்டுவந்து வாசற்படியண்டை நிறுத்தினான். உடனே பெண்ஜாதியும் வழிப் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்து அவைகளைக் குதிரையின்மேற்போட்டு இருவரும் ஏறிக்கொண்டு சென்றார்கள். சிலநாள் பிரயாணஞ்செய்து பிறகு இவர்கள் ஓரூரை யடைந்தார்கள். அவ்வூரின் ஓர் வீதியின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு சத்திரத்தின் திண்ணையின்மீது தன் பெற்றோர்கள் மிகவும் களைத்து உட்கார்ந்திருப்பதைப் புண்டரிகன் பார்த்தான். பார்த்துத் தன் பெண்ஜாதியைக் கூவி, "இவர்கள் இவ்விடம் தங்கியிருக்கிறார்கள். ஆகையால் நாம் மற்றோர் சத்திரத்தில் தங்குவோம்" என்று சொல்லித் தன் பெற்றோரைப் பார்க்காமலே மற்றோர் சத்திரஞ் சென்று அவ்விடத்தில் தங்கினான். பிறகு சமையலுக்கு வேண்டிய சாமான்களைத் தான் வாங்கிக்கொண்டு வருவதாய்ச் சொல்லிப் புறப்பட்டு வெளியே போனான். அப்படியே போகும் வழியில் அவனுக்கு எதிராக ஓர் நந்தவனம் மிக்க மனோஹரமாயிருந்தது. அதைப் பார்க்கவேண்டுமென்று ஆவலுடன் அவன் உள்ளே நுழைந்தான். அப்பொழுது புண்டரிகனுக்கு ஒரு காக்ஷி தென்பட்டது. அது என்ன காக்ஷி. ஐந்தாறு தேவஸ்திரிகள் தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்து அவ்வதிகாலை நேரத்தில் நந்தவனத்திற்குப் போய்க்கொண்டிருப்பது அவன் கண்ணுக்கு மின்னலைப்போலத் தோன்றி மறைந்துவிட்டது. அப்பொழுது புண்டரிகன் "நீங்கள்

யாரம்மா? தேவஸ்திரிகளைப்போலிருக்கிறீர்கள். இருந்தாற்போ லிருந்து என் கண்ணுக்குத் தோன்றி மறைந்துவிட்டீர்கள்" என்று கேட்டான்.

அப்பொழுது, அந்த தேவஸ்திரிகள், "புண்டரீகனே! இந்த நந்தவனத்தில் ஒரு மஹாத்துமா இருக்கிறார். அவர் சதாகாலமும் தன் பெற்றோரைப் பூஜித்துக்கொண்டிருப்பார். அவருக்கு நாங்கள் பணிவிடை செய்யப்போகிறோம். பணி விடைசெய்து எங்கள் பாபத்தைத் தீர்த்துக் கொள்ளலா மென்று நாங்கள் பிரதிதினம் இவ்விடத்திற்கு அதிகாலையில் வருவது வழக்கம். நாங்கள் தேவலோகத்து ஸ்திரிகள்தான். நாங்கள் ஒருவர் கண்களுக்கும் புலப்படமாட்டோம். ஏதோ நீ பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணிய பலத்தினால் உன் கண் ணுக்குப் புலப்பட்டோம். இச் சன்மத்தில் உன்னைவிட நீசன் கிடையாது. நீ உன் பெற்றோர்களைத் துறத்திவிட்டனையன்றோ? பெற்றோர் வார்த்தையைத் தடுக்காமல் அவரைப் பூஜைசெய்வ தால் பரமசிவனும் அடிமையாக வருவானன்றோ. நாங்கள் இப் பொழுது அவ்விடத்திற்குச் செல்லுகிறோம்? பெற்றோரை உப சாரம்செய்து அவரைப் பூஜித்துக்கொண்டிருக்கிற மஹானுக் குப் பணிவிடை செய்யப்போகிறோம். இதெல்லாம் உணராமல் நீ உன் பெற்றோரைத் திட்டி அவர்களை வீட்டினின்றும் துரத்திவிட்டாய். எப்பொழுது நீ இப்படியெல்லாம் செய்தாயோ அப்பொழுது உன்னை பார்க்கவும் கூடாது. உன்னைப் பார்த்தால் அப்பாவம் எங்களைச் சூழ்ந்துகொள்ளும். அதினால்தான் நாங் கள் உன் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்துவிட்டோம்" என்று சொல்லி நந்தவனத்திலிருக்கும் குடிசைப்புறமாய்ப் போய்விட்டார்கள்.

இதைக் கேட்டதும் புண்டரீகன் மனம் சற்று ஊசலாடத் தொடங்கியது. அவன் அவர்கள் சொன்னதை விடாமல் நினை த்துக்கொண்டிருந்தான். கோபம் ஒருபக்கம் வெட்கம் ஒருபக் கம் அவனைச் சூழ்ந்துகொண்டது. ஆகவே அவன் தலையைக் குனிந்துகொண்டு இந்நந்தவனத்தில் இன்னும் என்னவிசே ஷங்க ளிருக்கின்றனவென்று பார்ப்பதற்காக உள்ளே சென் ருன். அவ்விடத்தில் ஒருகுடிசையில் ஒரு மஹாத்துமா தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டும், அவரைச் சூழ்ந்து அநேக தேவர்களும் தேவஸ்திரீகளும் இன்னும் அநே கரும் அம் மஹாத்துமாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு மிருப்பதைப் பார்த்து அவன் மனம் பூரித்துவிட்டது. உடனே

புண்டரிகன், "பெற்றோரைப் பேணுதலினாலுண்டாகும்பயன் இவ்வளவென்று தெரியாமற்போயிற்றே" என்று அழுதான். தன் மனைவியின் பேச்சைக்கேட்டுப் புத்தியில்லாமல் தந்தையை அடித்தேனே யென்று தன்முகத்தி லறைந்துகொள்வான். பெற்றோர்களிடத்திற்குப் போகலா மென்றால் அவர்கள் முன் சென்றால் என்ன சொல்லுவார்களோ என்று பயப்படுவான். என்ன புத்தியில்லாத காரியம் செய்தேன் என்று தலை குனிந்து வெட்கப்படுவான். இப்படி யோசித்துக்கொண்டே அக்காக்ஷியைப் பின்னும் பின்னும் பார்த்து நின்றான். இது நிற்க, அம்மஹான் இவன் வந்திருக்கிறதை ஊகித்தறிந்து "இவன் மஹா துஷ்டன். இவனைப் பார்க்கவுமாகாது. இவனுடன் பேசவுமாகாது. இவன் தந்தை தாய்களைப் பூஜைசெய்யாமல் அவர்களை விட்டைவிட்டுத் துரத்தியிருக்கிறான். ஆகையால் இவனை இந்த நந்தவனத்திலிருந்து வெளியேபோகச் சொல்லுங்கள்" என்று சொன்னார்.

இதைக்கேட்டதும் தடியாலடிபட்ட சர்ப்பம் போல் புண்டரிகன் ரோஷங்கொண்டு அவ்விடத்தைவிட்டு அதிகவேகமாய்த் தன் பெற்றோர்களிறங்கியிருக்கும் சத்திரத்திற்குப்போய் அவர்களை நமஸ்கரித்து "என்னைப்பெற்ற பெரியோர்களே! நான் இத்தனை நாள் தங்களுக்குச் செய்துவந்த கொடுமையைப் பொறுத்தருளவேண்டும். நான் புத்தியில்லாமல் செய்தகாரியத்தை மன்னித்து என்னை ஆசிர்வதிக்கவேண்டும். எனக்கு இத்தனை நாள் புத்திமயங்கியிருந்தது. இத்தனைநாள் பெற்றோரைப் பேணுதலினாலுண்டாகும் பலன் தெரியாமற்போய்விட்டது. இப்பொழுது அதைவிட மேலான தருமம் ஒன்றுமில்லை யென்று அறிந்துகொண்டேன்" என்று சொல்லித் தன் பெற்றோர் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டு நின்றான். பெற்றோர்களும் அவனை மன்னித்து ஆசிர்வதித்தார்கள். அவன் குணங்கள் மாறியதைப் பற்றி அவர்கள் மிக்க சந்தோஷத்தையும் அடைந்தார்கள். அன்றுமுதல் அவன் தினந்தோறும் தன் பெற்றோர்களை யமுனையாற்றில் ஸ்நானஞ்செய்வித்து எப்பொழுதும் மற்ற நேரங்களிற் பணிவிடை செய்து கொண்டிருப்பான்.

ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவனுடைய பக்தியைப் பரிசோதிக்க வேண்டி இவன் தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கும்போது வந்தார். புண்டரிகன் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்தும் தன் மனதில் பெற்றோர்

ரையே தனக்கு முதல் தெய்வமாக எண்ணி அவரைக் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கும்படி ஜாடைகாட்டித் தன்னருகிலிருக்கும் ஒரு செங்கல்லை யெடுத்து ஸ்ரீகிருஷ்ணனிருக்குமிடத்திற் போட்டு, அதன்மேல் அவரை உட்காரும்படி சொல்லித் தன் பெற்றோருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். ஸ்ரீ கிருஷ்ணன் இவனுடைய பக்தியை மெச்சி இவனுக்குக் காக்ஷி தந்தருளினர். இத்துடன் கதை முடிகிறது.

பண்டரிபுரமென்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் புண்டரீகன் எறிந்த செங்கல்லின்மேல் நின்றுகொண்டிருப்பதைக் காணலாம். அவர் சிறிய உருவத்தோடும் சிரித்த முகத்தோடும் தன் இரண்டு கைகளையும் தொடையின்மேல் வைத்துக்கொண்டு நிற்கிறார். இக்கோவிலுக் கருகில் புண்டரீகன் தன் பெற்றோருக்குப் பணிவிடை செய்துகொண் டிருப்பதையும் காணலாம்.

இப்படி இந்தப் பட்டணத்துக்குப் பண்டிரிபுரமென்பதற்குப் பலர் பலவிதமாக அபிப்பிராயப்பட்டாலும் இவ்விடத்தில் பீமாநதிக் கரையின்மீதிருக்கும் பண்டிரிநாதர் க்ஷேத்திரம் 350 அடிகள் நீளமும் 170 அடிகள் அகலமுமுள்ளதாகவும், உள்ளிருக்கும் ஸ்ரீ பாண்டுரங்க விட்டலர் விக்கிரகம் சுமார் 12 வயது குழந்தையைப்போலவும், வெள்ளை வர்ண விக்கிரமாகவுமிருக்கிறது. இதைப் பூசைசெய்யப் பல பண்டாக்களென்னும் பூசாரிக ளிருந்தாலும் யாவரும் யாதொரு ஜாதிபேதம், மத பேதமில்லாமலுள்ளேபோய்த்தொட்டுக்கட்டித்தாவிக் கும்பிடலாம். இதற்கு அரையணு செலவு. மேலும் பக்தர்கள் தங்கள் தங்கள் வீடுகளில் சமைக்கும் பதார்த்தங்களைக் கொண்டுவந்து காட்டி, விட்டல! விட்டல! பாண்டுரங்க விட்டல! என்று பாடிக்கொண்டும், காதாளம் போட்டுக்கொண்டும், ஆடி யானந்திக்கிறார்கள். அக்கம்பக்கங்களில் அம்மன்கோயிலும், சில்லரை விக்கிரகங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மேற்குப்பக்கத்திலிருக்கும் பெரிய தாழ்வாரத்தில் சதா ஹரிபஜனை செய்துகொண்டிருக்கின்றனர். முதல்பிரகாரத்தின் படியில் பிராணதேவர் முதலான தேவர்களுடைய சிரசுகளைப் பித்தளையால்செய்து வைத்துக்கொண்டுகாலணு காணிக்கை வாங்குகிறார்கள். இதுமேற்குத் தேசத்தில் மகாபக்தி ஸ்தலமானபடியால் ஜயதேவர், துளசிதாசர், இராமதாசர், நாமதேவர், பிராணதேவர், நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானுதேவர், முக்தாபாய், நாகநாதர், கூர்மதாசர், ராக்காதேவர், கோராகும்பர், பரிசாபாகவதர், சக

மித்திரர், சோகாபரமானந்தர், சக்குபாய், தாமாஜிபக்தர், நரஹரிபக்தர், சனிபாய், மச்சேந்திரநாதர், சாரங்கதேவர், சோகாமேளர், பதுமநாபர், பிபாஜிராஜர், நரசிம்மமேதா, ஏகநாதசுவாமி, துக்காராம்சுவாமிகள் முதலான மகாத்துமாக்கள்வந்து தரிசித்து மேன்மை யடைந்ததன்றியில், அநேக பக்திமான்கள் இங்கு முக்தியும் சமாதியும் அடைந்திருக்கிறார்கள். இந்த ஊர் கருங்கற்களால் கட்டப்பட்ட அநேக வீடுகளையும், மண்டபங்களையும் உடையதாய்ப் புராதனபட்டணமாக இருக்கிறது. சகலபதார்த்தங்களும் விலைக்குக் கிடைக்கின்றன. சுரைக்காய்க் குடுக்கைகளால் தம்பூர், சித்தாரி முதலானவைகளைச் செய்து சரசமான விலைக்கு விற்கிறார்கள். தம்பூர் செய்து விற்று ஜீவனம் செய்யும் ஜனங்களை ஒரு வீதிக்காரர். இவ்விடத்திய சுரைக்காய்கள் அதிக பருமனுடையதாக விருக்கின்றன. இது ஓர் பக்தஸ்தலமென்று தாராளமாகச் சொல்லலாம். ஆயினும் இதை யடுத்த நாடுகளில் விதவாவிவாஹம் இல்லாமையால் அநேக பாலிய விதவைகள் அக்கிரம புணர்ச்சியினால் கர்ப்பவதிகளாகி, இந்தப் பரிசுத்த ஸ்தலத்திற்கு யாத்திரை போவதாக வந்து பிள்ளைகளைப் பெற்று எறிந்துவிடுவது வழக்கமாம். இப்படிப்பரிதாபமான பாலியவிதந்துகளையும்,அவர்கள் பெற்ற பிள்ளைகளையும் பாதுகாக்கப் பம்பாய்ப் பிரார்த்தனை சமாஜத்தார் பொருளுதவி செய்துவருகிறார்களாம்.

இந்தப் பண்டரிபுரம் பம்பாயிலிருந்து பார்ஸி ரோட்டு வழியாக 264 மைல்கள் தூரத்தில் மூன்றும் வகுப்புக்கு ரூபா 2-14-0 சார்ஜில் இருக்கிறது.

பண்டரிபுரத்தின் பீமாநதிக்கரையில் செய்த பிரார்த்தனை.

ஓ! பரமதயாளுவே! உலகத்தார் இலக்கிய இலக்கண தத்துவசாஸ்திரங்களை அறிந்தவர்கள் மாத்திரம் நின்னை யறிந்து ஆனந்தமடையக் கூடுமென்று சொல்லுகிறார்கள். இது கேவலம் உலக நியாயம். இலக்கண இலக்கிய தத்துவசாஸ்திரங்களை யறிந்து தலைகளை யடிந்துக்கொள்வதைப் பார்க்கிறோம், நின்னையே நம்பி நினது பக்தியில் மூழ்கிப் போனந்தம் பெற்றவர்கள் பலர். அப்படிப்பட்ட பக்தசிகாமணிகளாகிய துக்காராம், நாமதேவர், பிராணதேவர், துளசிதாஸர் முதலானவர்கள் ஒருகாலத்தில் இந்த பீமாநதிக்கரையில் நின்னிடத்தில்

பூரண பக்திபராளாய் நினது குன்றுவளம்பொருந்திய பரிபூரண பக்திரசமென்னும் பெருவெள்ளத்தில் மூழ்கி, ஆசைதீர உண்டு, அங்கம் பரவசமாகி, ஆநந்தக் கூத்தாடி, ஏனையோரும் அவ்வித சுகாநந்தத்தை அடையும்படி அழைத்தார்களன்றோ! அவர்களது அன்பான அழைப்பை அசட்டைசெய்து அலைந்து இன்று வந்தேம். அடியேம்மீது அருள்மழை பெய்து அகங்காரத்தைக் கழுவி, நினது பக்திரசமென்னும் இனிய பானகமுண்டு ஆநந்தமடையச்செய்வாய் சுவாமி. ஓம் தத் சத்.

பிப்ரவரிமீ 18வ காலையிலெழுந்து நேரீர் சாப்பிட்டுக் கண்ணில் விழுந்த மண்ணால் உபத்திரவப்பட்டு, அரையணாவுக்கு ஒரு சிறுகாண்டி விளக்கெண்ணையை வாங்கிப் பாலில் கலந்து போடப்பட்டது. பிறகு பீமாநதியில் ஸ்நானம் செய்து பண்டரிநாதரைப் பார்த்தும், நகரத்தைச் சுற்றிப்பார்த்தும், ஒரு தம்பூரையும், ஏகதாரையும் வாங்கிக்கொண்டு வந்தோம். இராத்திரி மூட்டுப் பூச்சிகளாலும் எறும்புகளாலும் வருந்தித் தூங்காமல் தவித்தோம்.

பிப்ரவரிமீ 20வ காலை எழுந்து நாங்கள் தங்கியிருந்தவீட்டுக்கார நாரஹரிக்கு இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டு, பண்டரிபுரத்துக்கு 25 மைல் தூரத்திலிருக்கும் (Mohud) மோஹட் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டோம். ரோட்டில் தங்க மரநிழலும் கிடையாத மைதானம். இடைக்கிடை சில சிறு கிராமங்களிருந்தும் அங்குள்ளவர்கள் யாவரும் நிலக்கடலையை வாங்கிப் போசனமாகச் சாப்பிடுகிறார்கள். குடிப்பதற்கு நல்ல ஜலமும் கிடைப்பதருமை. இவ்வித கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு இராத்திரி 11 மணிக்கு ஸ்டேஷனுக்குப் போயும் புகைவண்டி தப்பிவிட்டபடியால் அன்றிரவெல்லாம் சாப்பாடில்லாமல் பனியால் வருந்தினோம்.

பிப்ரவரிமீ 21வ காலை எழுந்து அருகிலிருந்த பாழுஞ் சத்திரத்திற் போய்த் தேநீர் பருகிப் பின்னர் சமைத்துச் சாப்பிட்டு, சாயந்திரம் ஐந்துமணிக்கு ஆள் ஒன்றுக்கு ரூபா 1-10-0 கொடுத்து டிக்கெட்டுகளைப் பெற்றுக்கொண்டு சுமார் 12 மணிக்குச் சோளப்பூருக்கு வந்தோம்.

SHOLAPUR.
சோளப்பூர்.

இந்தப் பண்டரிபுரத்துக்கு டிஸ்டிரிக்ட்டு பட்டணமாகிய சோழப்பூர் ஓர் வர்த்தகவளமுள்ள பட்டணம். இங்கு ஜனவரி மாதத்தில் சித்திசுவார் குளக்கரையில் நடக்கும் மகாசங்கிராந்தி உற்சவம் ஒரு மாதகாலம் வரையில் நடப்பதால், அப்போது பலவகைத் தானியங்கள், துணிகள், பித்தளை, செம்பு, கண்ணாடி சாமான்கள் ஏராளமாக விற்பனையாகின்றன. இங்கு சுமார் 400 வருடங்களுக்குமுன் பிஜாப்பூர் இராஜர்களால் கட்டப்பட்டகோட்டை ஸ்டேஷனுக்குஅருகிலிருக்கிறது. இங்கே நூல் நூற்று நெய்யும் இயந்திரசாலைகள் அநேகம் இருக்கின்றன. நகரத்துக்கு மூன்றுமைமைல்கள் தூரத்திலிருக்கும் எக்ருக்கு அல்லது ஹிப்ராஜிகுளமானது ஏழுமைல்கள் சுற்றளவுள்ளது. நல்ல ரோட்டுகளும், தருமசாலைகளும் இருக்கின்றன. இந்தச் சோழப்பூர் ஜி. ஐ. பி. ரெயில் மார்க்கமாகப் பம்பாயிக்கு 283 மைல்கள் தூரத்திலிருக்கின்றது. அதற்கு ரூபா 4-7-0. சாதாரண வண்டியில் ரூபா 2-15-0 சார்ஜ் கொடுக்கவேண்டும்.

HYDERABAD.
ஐதிராபாக்கம்.

மத்திய மாகாணங்களுக்கு வடகிழக்குப் பாகத்தில் கிருஷ்ணா நதியின் ஒரு கிளையாகிய முசிநதியின் கரையிலிருக்கும் ஐதிராபாக்கம் மகம்மதியருடைய ஒரு விசேஷ ஸமஸ்தானம். அந்த முசிநதி 400 முதல் 500 அடிகள் அகலமானபடியால், அதைக் கடக்க மூன்று பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கடல் மட்டத்துக்கு 1700 அடிகள் உயரத்திலிருக்கும் ஐதிராபாக்கம் சுகவாசமானது. இது கி. பி. 1589வருஷம் குதப்சா மகம்மது கடலி என்பவர் கோல்குண்டாவில் ஜலசவுக்கியமில்லாமையால் இதைக் கட்டினார். நகரம் 6 மைல்கள் சுற்றளவுள்ளதாயும், அதைச் சுற்றிலும் கருங்கல் சுவர்களுள்ளதாயும், சட்டர்காட்டு, டில்லி அப்தரில், சம்பா, சார்மஹால், புரானபூல், தாதளி அலிபாபாத், சாக்பூர், காஜிபாண்டு, மியர்ஜுமலா, யாகத்பூர், தாந்துபூர் முதலான கேட்டுகளை யுடையதாயும், நல்ல ரோட்டுகளும், நல்ல பெரிய கட்டடங்களும், கடைகளும், உத்தியான வனங்களும், ஜல ஊற்றுக் குழாய்களும்

சவுக்குகளும், சகலவிதமான ஜாதியார்களும் குடியிருப்பதாயும் இருக்கிறது. நாலாபக்கங்களிலிருக்கும் சிறு மலைகளுடையவும் குன்றுகளுடையவும் காக்ஷிகள் கம்பீரமானவை. பிரிட்டிஷ் தானபதியின் கட்டடம் நகரத்துக்கு ஒன்றரைமைல் தூரத்தில் சத்திரகாட்டில் கட்டப்பட்டிருக்கிறது. நகரத்துக்கு ஐந்து அல்லது ஆறு மைல்கள் தூரத்தில் சிகிந்திராபாக்கம் பட்டணம் அழகாக இருக்கிறது.

SECUNDERABAD.
சிகந்திராபாக்கம்.

இது ஐதிராபாக்கத்துக்குக் கன்டோன்மெண்ட்டு ஸ்டேஷன். இங்கு 75,000 குடிகள் இருக்கிறார்கள். இதுநைஜாம் சிகக்தர்ஜாப் கட்டியது. இதற்குத் தெற்கே 13 மைல்கள் சுற்றளவுள்ள ஹரிசேன் சாகரம் என்னும் செய்கைக் குளம் ஒன்று இருக்கிறது. இங்கு 7 முதல் 8 ஆயிரம் சிப்பாய்கள் கவாத்து செய்யும்படியான இடமிருக்கிறது. அதற்கு வடக்குப் பாகத்தில் பொதுக் கட்டடங்கள் இருக்கின்றன. அவைகளில் நாடக சாலைகளும், புத்தகசாலைகளும் சிரேஷ்டமானவை. அதற்குச் சமீபத்தில் அநேக சமாதிகள் இருக்கின்றன. இப்போது இங்கே பார்க்கத்தக்கவை கோர்ட்டுகள், செண்ட்டு ஜான் கோயில், அனுதர்சாலை, விக்டோரியா தியேட்டர், புத்தகசாலை, வாசகசாலை, வாலண்டியர் பட்டாளம் கிளப்பு, மெசோனிக்கு லாட்ஜரி, முசாபுரி பங்களாக்கள் இவைகளேயாம். இந்த சிகிந்திராபாக்கமும் ஐதிராபாக்கம் பம்பாயிக்கு 491 மைல்கள் தூரத்திலும், சென்னைக்கு 532 மைல்கள் தூரத்திலும் இருக்கின்றன. இவைகட்கு முறையே இரண்டாவது வகுப்பு ரெயில் சார்ஜ் ரூபா 86-45-12 ஆகிறது.

இப்போது ஐதிராபாக்கத்திலும் ஸெக்கந்திராபாக்கத்திலும் அடிக்கடி வெள்ளச் சேதங்களுண்டாகாமல் தடுப்பதற்காகவும் மேற்கண்ட இரண்டு பட்டணங்களிலும் போதிய ஜல வசதி யுண்டுபண்ணுவதற்காகவும் "மூஸினி" என்கிற பெரிய ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டுவதற்காக 1913 மார்ச்சுமீ 22உ நிஜாம் அரசர் தமது கையால் அஸ்திவாரக்கல் நாட்டினர். இந்த அணையைக்கட்ட 40 லட்சம் ரூபாய் பிடிக்கும். இது கட்டி முடிய 4 வருஷம் ஆகுமாம்.

பிப்ரவரி மீ 22வ காலை 6 மணிக்குக் கிருஷ்ணா ஸ்டேஷனிலிறங்கி, நதியில் ஸ்நானஞ்செய்து, எமது பழைய சிநேகிதர்களைக் கண்டு பேசிப் பழைய சாதத்தைப் புசித்தோம்.

கிருஷ்ணாநதி.

கிருஷ்ணாநதியானது தக்ஷணத்தைச் சார்ந்த மஹாபலீஷ்வரம் மலையாகிய மேற்குமலைத் தொடர்ச்சியில் 4500 அடி உயரத்திலிருந்து உற்பத்தியாகிக் கடைசியில் வங்காளக்குடாக்கடலில் விழுகின்றது. இதன் முழு நீளம் 800 மைல்களாம். இது முதலில் தென்கிழக்குத் திசையில் 150 மைல் தூரத்தில் சதாரா என்னும் பட்டணத்தின் வழியாகப்பாய்ந்து, அந்தத் தென் மஹாராஷ்ட்ர தேசத்திலிருந்து பிரித்துக்கொண்டு வருணா என்னும் உபநதியோடு சேர்ந்தும், பெல்காம் வழியாகப் பாய்ந்தும், பிறகு காட்பூரு என்னும் உபநதியைப் பெற்றும், சோலாப்பூரையும் பெல்காமையும் தெரிவித்துக்கொண்டும், சிற்சில உபநதிகளைப்பெற்று நைஸாம் சமஸ்தானத்திற்கு அருகில் ஓடியும், பிறகு துங்கபத்ரா, சென்ட்டபிலிடிண்டி, பெஜவாட, ஹால்லி, மூசி, பாவாமுளியார் முதலான உபநதிகளைப் பெற்றும், பிறகு நைஸாம் சமஸ்தானத்திற்கும் கர்னூல் குண்டூருக்கும் எல்லையாகியும், போபர்லண்காவுக்கருகில் இரண்டு பிரிவாகப் பிரிந்து ஒன்று 25 மைல் தூரம் ஓடியும், மற்றொன்று 30 மைல் தூரம் ஓடியும் வங்காளக் கடலில் பாய்கின்றது. வருஷத்தில் இதில் இரண்டு பெரிய வெள்ளங்கள் உண்டாகின்றன. இது கப்பல் யாத்திரைக்கு வசதியானதன்று. இதன் ஜலத்தால் மசூலிப்பட்டணம், குண்டூர் ஜில்லாக்களில் அதிக வெளாண்மை செய்துவரப்படுகின்றது. இதைத் தெலுங்குநாட்டார் பரிசுத்தமான கங்காநதியைப்போல் பாவித்து ஸ்நான சந்தியா கர்மங்களைச் செய்து கொண்டாடி வருகிறார்கள். உண்மையில் இதன் ஜலம் துல்லியமாகவும் மனோகரமாகவும் இருக்கிறது.

இந்த நதியானது தொன்றுதொட்டுப் பாரத பாகவத இதிகாச புராணாதிகளில் மகா புண்ணிய தீர்த்தஸ்தலமென்று சொல்லப்பட்டிருப்பதனால், இந்தக் கிருஷ்ணையுடன் அதன் கிளை நதியாகிய பீமாநதியும்வந்து கூடும் இடமாகிய கூடுதலை ஸ்தானத்தில் இந்தப் பாரதகண்டத்தின் பல பாகங்களிலிருக்கும் அநேக தீர்த்த யாத்திரைக்காரர்கள் வந்துகொண்டிருக்

கிறார்கள். அவர்களுக்கு ஸ்நானம் முதலானவைகளைச் செய்வித்து, சங்கல்பாதிகளைச் செய்விக்க அநேக ஏழைப்பிராமணர்கள் அந்தத் தீரத்தில் குடியிருப்ப தன்றியில், பரம பாகவதர்களான சில பிராமண பாகவதர்கள் தாளம் முதலான கருவிகளைக்கொண்டு சதா ஹரிபஜனை செய்துகொண்டேயிருக்கிறார்கள். தீர்த்தவாசிகள் ஏழைகளாகவிருந்தால் அவர்களே தமது இஷ்டப்படி ஸ்நானம்செய்து அந்தத் தீர்த்தத்திற்குச் சமீபத்தில் ஒரு தருமவானால் கட்டியிருக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலிற்போய் வணங்கிவிட்டுப்போகிறார்கள். ஆனால் கொஞ்சம் சம்பத்துள்ள தீர்த்தயாத்திரைக்காரர்கள் வந்தால், அவ்விடத்திலிருக்கும் மாசு நீப்போர் சர்வாங்க க்ஷவரம் செய்விக்கச் சில புரோகிதர்கள் வந்து மந்திர சுலோகங்களைச் சொல்லி ஸ்நானசங்கல்பாதிகளைச் செய்விக்கிறார்கள். அதற்கு யாதாவது சொற்ப தொகையைக் கொடுத்தால் திருப்திகரமாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

இந்த நதியானது காவேரி நதியைப் பார்க்கிலும் இரண்டொரு மடங்கு பெரிது. இந்த நதியையும் அதையடுத்த அக்கப்பக்கத்துக் காக்ஷியையும் பார்க்கப் பார்க்க ஆநந்தத்தைக் கொடுக்கிறது. இதன்மேல் கட்டியிருக்கும் புகைவண்டிப்பாலம் ஆச்சரியகரமான அமைப்பு. இந்த நதியை நம்மவர் யாவரும் தரிசிக்கவேண்டும். இந்த நதிதீரத்தில் நாம் செய்த பிரார்த்தனை இது,

கிருஷ்ணாநதி தீரத்தில் செய்த பிரார்த்தனை.

கம்பீரம் பொருந்திய ஓ கிருஷ்ணாநதியே! இன்று நின்னைக் காண்பதற்கு வந்தேம். உன்னைக் காணவேண்டுமென்று எத்தனையோ வருஷங்களாக ஆவலோடு காத்துக்கொண்டிருந்தேம். இன்றுதான் உன்னை எமது ஆசைதீரக் கண்டு பாக்கியவானானேம். நீ பலவிதத்திலும் புகழத்தக்க பிரமாண்டமாகிய ஜீவநதி; உனது பெயரைச் சொல்லி எத்தனையோ கோடி ஜீவ ஜெந்துக்கள் நினது ஜலபானத்தால் ஜீவிக்கின்றன. எத்தனையோ கோடி கந்த மூலாதிகள் நினது ஜலத்தால் களைதீரக் குடித்துத் தழைத்துத் தாண்டவமாடுகின்றன. நினது அற்புதக் காக்ஷியை என்னென்று சொல்லுவேம்! நீ இந்தப்பிரபஞ்சத்தில் ஜனித்துப் பல்லாயிரம் நூற்றாண்டுகளாகியும் இன்னமும் விருத்தாப்பிய தசையை யடையாமல் வாலிய தசையிலேயே யிருக்கின்றாய். நினது பெருமையைப் பார்ப்பதற்குப் பல்லாயிரம் ஜன

ங்கள் வந்துகொண்டேயிருக்கிறார்கள். ஆம் பல்லாயிரம் ஜனங்கள் வந்து நின்னை ஓர் தெய்வமாக வணங்கித் தம் பிதா மாதாக்களுக்கு நின்னைப்போன்ற நித்திய ஜீவனைக்கொடுக்க வேண்டுகிறார்கள். இப்படி நீ பெருமையடைவதற்குக் காரணம் யாதென்று நிரந் தெளியப்பார்ப்பதற்கு அந்தக்காரணம் கரதலாமலகம்போலக் காணப்பட்டது. அதாவது நீ சதா ஜோ! ஜோ! என்று பாடிக்கொண்டு இருப்பதேயல்லவா? இந்த ஜோ! ஜோ! என்னும் சப்தம் ஜகத்தாருக்குக் கேவலம் ஜலசப்தமாகவிருக்கிறதாகத் தோன்றுகிறது. ஆனால் தத்துவார்த்தமாகக் கண்டோருக்கு உண்மை வெளியாகின்றது. அதாவது ஜோ! ஜோ! என்னும் சப்தத்தில் ஜய கோவிந்தம்! ஜய கோவிந்தம்! ஜய சச்சிதானந்தம்! என்னும் பொருளே பூரணமாகப் பிரகாசிக்கின்றது. இப்படிப் பரமபதநாதனை நீ சதா ஸ்துதிசெய்து சகலருக்கும் போதிப்பதினால்தான், இவ்வளவு மேன்மையும் இவ்வளவு மகிமையும் பெற்றாய்! ஆம், நீ ஜீவநதியாக ஜ்வலிக்கின்றாய். ஆகவே நின்னைச் சிலர் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். யாம் உன்னை ஓர் தெய்வமாகக்கொண்டாடாவிட்டாலும், உன்னைப் பரமபாகவதனாகவும், சிறந்த ஆசாரியனாகவும் கொண்டாடி எமது தேக சுத்தியையும் மனோசுத்தியையுஞ் செய்விக்கவேண்டுமென்று மன்றாடுகிறோம். அதாவது நினது பரிசுத்தமான ஜலத்தினால் எமது தேகத்திலிருக்கும் அழுக்குகளை நீக்கிச் சுத்திசெய்விக்க வேண்டுவதன்றியில், ஜயகோவிந்தம் ஜயசச்சிதானந்த ஹரி என்று சதா பாடிப் போதிக்கும் பாரமார்த்திக ஞானத்தினால் எமது மனதை மருட்டும் பொய், கொலை, காமக்குரோத லோபாதிகளை நீக்கவேண்டுகிறோம். இப்படி எமது தேக அழுக்குகளையும், மனோ விகாரங்களையும் நீக்கி நின்னோடு கூடி நமது பரமபிதாவாகிய சர்வலோக சரண்யனைத் துதிக்கத் துணைபுரிவாய்! ஜோ! ஜோ! என்று நீ பாடும் பாட்டுகளைக் கேட்டு நினதருகிலிருக்கும் விருட்சங்களின் இளந்தளிர்களும் இலைகளும், காற்றில் நடித்து நினது இசைக்கொக்க ஈசனைப்பாடுகின்றன. இந்த மனோகரமான விருக்ஷங்களில் வந்திருக்கும் பற்பலவிதமான பட்சிகளும் நினது பாட்டுகளுக்கொக்க களிப்புடன் கீதங்களைப் பாடுகின்றன. நின்னைத் தரிசிக்கும் புஷ்பங்களிலிருக்கும் மதுவை வண்டுகள் உண்டு மயங்கிப் பாடுகின்றன. நீயோ எமது பார்வைக்கு ஓர் பெரிய சமுத்திரம்போலப் பிரகாசிக்கின்றாய். பிரபாகரன் பூரண தேஜசுடன் நின்மீது பிரகாசித்து மரியாதை செய்கிறான். யாம் நினது இடையில் ஓர் சிறு குழந்தையைப்போ லாட்

கார்ந்துகொண் டிருக்கின்றனம். எம்மைச் சுற்றிலும் பரம பாகவதர்களான பிராமண சாதுக்கள் கரதாள கஞ்சதாளங்களுடன் ஹரிபஜனைசெய்து ஆனந்த மூட்டுகிறார்கள். இனி யாம் காலம் கழிப்பது காரிய நஷ்டம். ஆகையால், இதோ நின்னிடம் யாம் முழுகுகின்றோம். ஹே கிருஷ்ணா! ஹரி ஹே, கங்கா ஹரி! ஹே யமுனா! ஹரி ஓ! சுந்தர தீர்த்தமே! நினது சுத்தமும், ஜிலுஜிலுப்பும் என்னென்று சொல்லுவோம். எமது தேக அசுத்தங்கள் நீங்கிற்று. உன்னிடத்தில் மூழ்கி உலக ஆசாபாசங்களைவிட்டொழித்து உள்ளம்சுத்தியாகி உள்ளமறிய உத்தமனைத் தரிசிக்கின்றோம். ஆம் உத்தமன் இதோ எதிர் நிற்கின்றான். யாம் உன்னிலும், நீ எம்மிலும் கலந்து நம்மிருவருக்கும் கர்த்தனாகிய புருஷோத்தமனை ஒருமனப்பட்டுத் துதிக்கும் இந்தத் தினமே சுகதினம். இப்படிப்பட்ட தினம் என்று வருமோ என்று பல வருஷங்கள் எதிர்ப்பார்த்திருந்ததற்கு இன்று பாக்கியனானோம். ஹா என்ன சுகம்! ஹா என்ன ஆநந்தம். ஆம், இதைவிட வேறு சுகம் வேண்டாம். இதுவே பிருந்தாவன சுகம். இதுவே பரலோக சுகம். ஹே, ஜீவநதியாகிய திவ்விய நதியே! இன்று உனது இடையில் பரிசுத்தமாகிய பரமபிதாவைத்தரிசித்து ஆநந்திக்கவந்தஎமக்கு இன்னமும் ஓர் ஆசை ஜனிக்கிறது. அதாவது எம்மை அருமையாகப் பெற்றெடுத்து வளர்த்து இப்போது நின்னிடத்தில் வந்து ஆநந்திக்கும்படி செய்த எமது பிரத்தியக்ஷ தேவர்களாகிய எமது தாய்தந்தைகள் பரலோகத்திற்கு எழுந்தருளிப் பலவருஷங்களானபடியால் அந்தப் பிதுர்தேவதைகளுடைய நினைப்பு இப்போது வந்திருக்கிறது. ஆகவே அந்த உத்தம பிதுர் தேவதைகளுக்கு எமது நன்றியறிந்த வந்தன சிரத்தையை ஜீவநதியாகிய நினக்கெதிரில் காட்டுகின்றனம். நீ பரிசுத்தமான ஜீவநதியாகையால் அவர்களும் ஜீவிக்கும்படி நினது கீதகோவிந்தமாகிய ஸ்தோத்திரங்களால் சர்வ ஸ்வாமியை நோக்கி சிபார்சு செய்து சுகாநந்தமுய்யச்செவ்வாய்! அவர்கள் சர்வ ஸ்வாமியினிடம் சுகாநந்த மடைந்தால் அவர்கள் சந்ததியாகிய எமது குடும்பம் விருத்தியாகும். எமது குடும்பம் விருத்தியானால் எமது சந்ததியார் உனது பேருபகாரத்தை மறக்காமல் நினது மகிமையை உலகமெல்லாம் அறிவித்து நின்னை யனைவரும் விரும்பிவர, நின்னால் தேகசுத்தியும் மனோசுத்தியும் பெற்றுப் பரிசுத்தவர்களாகிப் பரமபிதாவை வணங்கி, அவரது பரமராஜ்ஜியத்தைப் பிரபஞ்சம் யாவும் ஸ்தாபித்துச் சுகாநந்தமுறச் செய்யலாம். ஓம் தத் சத்.

இந்தக் கிருஷ்ணா நதிக்கு 16 மைல்தூரத்தில் ரெய்ச்சூர் இருக்கிறது. இங்கு வந்திறங்கிச் சமைத்துச் சாப்பிட்டுச் சேலத்திலிருந்துவந்த மனியார்டரைப் பெற்றோம். இந்த ரெய்ச்சூரின் விவரத்தை முன்னமே சொல்லியிருக்கிறோம். இதைத் தாண்டிவந்தால் துங்கபத்திராநதி இருக்கிறது.

இங்கும் ரெயில்வே ஸ்டேஷனிருக்கிறது. இந்த ஸ்டேஷனுக்கும், ஸ்நானபானம் செய்யும் கட்டத்துக்கும் அரைமைல் தூரமிருக்கிறது. அங்கு சிறு பார்ப்பனச்சேரியும் தருமசாலையும் இருக்கின்றன. இந்த நதியில் ஸ்நானத்திற்கு மாத்திரம் இறங்கலாமே யொழிய போஜன முதலானவைகளுக்கு அரிசி முதலானவைகளைக்கூடக் கொண்டுபோகவேண்டும். வழி முழுதும் கருங்கல் குத்து ஜல்லிகளானபடியால் கஷ்டத்துடன் நடந்து போகவேண்டும். வண்டியும் வாகனமும் கிடையா. இந்த நதியை விக்கிரமாதித்தன் முதலானவர்கள் வந்து மகிமைப்படுத்தியதாகத் தெரியவருகிறது.

TUNGABUDRA.
துங்கபத்திரை.

இந்தத் துங்கபத்ரா நதிகளானவை மைசூர் மலைநாடுகளில் உற்பத்தியாகி இரண்டும் கூடித் தென்பாகமாக 42 மைல்கள் ஓடி, பிறகு வடகிழக்காக 15 மைல்கள் ஓடி, பிறகு 45 மைல்கள் வடக்கே பாய்ந்து, பிறகு வாதா என்னும் உபநதியோடு சேர்ந்து, பிறகு வடகிழக்காக 220 மைல்கள் ஓடி, கிருஷ்ணா நதியில் சேருகின்றன. இதன் முழுநீளம் 325 மைல்களாகினும் அதில் சிறந்த பத்ரா நதி 95 மைல்கள் அதிகமாய்ப் பாய்ந்தோடுவதனால் இதன் முழுநீளம் 420 மைல்கள் உள்ளதாம். இதன் கரையோரங்களில் முதல்தரமான தேக்கு முதலான மரங்கள் விளைந்தாலும் நதியின் பெரும்பாகம் பாறைக் கற்களாலும் செக்குத்தான கற்களாலும் நிறைந்திருப்பதால் இந்நதியின் மூலமாகக் கிருஷ்ணா நதிவரைக்கும் மரங்களைக்கொண்டுபோக வசதியில்லை. ஆயினும் இந்தத்துங்கபத்திராநதிக்கரையில்தான் இராமாயணத்தில் சொல்லப்பட்ட கிஷ்கிந்தாபுரி, ஹம்பி, மாலவதம், ஏமகூடம், பசுவசிரங்கம், மதங்கபருவதம் முதலான ஸ்தலங்கள் இருக்கின்றன. இதற்கருகில் இருக்கும் ஆனேகுந்தி என்னும் ஸ்தலத்துக்கருகில் கி.பி. 1274ஆ ஆந்திர குலதிலகராகிய இராமதேவராயலு பூபராயலு என்பவர்கள் விஜயநகர

மென்னும் ஒருசிறந்த பட்டணத்தைக்கட்டி ஆண்டுவருகையில் மகம்மதியரால் தோற்கப்பட்டுப் பாழ்த்துப்போக, பிறகு வித்தியாரண்யசுவாமிகள் காலத்தில் புதுப்பிக்க, அதற்கு வித்தியாநகரமென்று பெயரிடப்பட்டு, அங்கு ஹரிஹரிராயிலு, புக்கராயிலு, மல்லிகார்ஜ்ஜுனராயிலு, விருபாக்ஷிராயிலு, தேவராயிலு முதலான சங்க ஜாதியைச்சார்ந்த யாதவர்கள் ஆண்டுவர, மறுபடியும் ஆந்தா பலிஜ ஜாதியைச்சார்ந்த வீரநரசிம்ம தேவராயிலு (கி. பி. 1497வரு), கிருஷ்ண தேவராயிலு (1509வரு), அச்சுத தேவராயிலு (கி. பி. 1530வரு), இராமராயிலு (கி. பி. 1542வரு), வெங்கடபதிராயிலு (கி.பி. 1542வரு), முதலானவர்கள் பிரபலமாக ஆண்டுவர, அவர்களுடைய சந்ததிகளே மதுரையில் விஸ்வநாத நாயடு திருமலைப நாயடு முதலானவர்களும், தஞ்சையில் அச்சுதப்ப நாயடு விஜயராகவனு நாயடு முதலானவர்களும் தென்தேசத்தில் நாயடுகாரு சமஸ்தானத்தை ஸ்தாபித்தார்கள். இந்தத் துங்கபத்ரா நதிதீரத்திலிருக்கும் திரிலிங்கம் என்னுமிடத்தில் ஆதி ஆந்திரர் வந்து குடியேறியபடியால் அவர்களுக்குத் திரிலிங்கர் அல்லது தெலுங்கர் என்றபெயர் உண்டாகியது. திரிலிங்கம் என்றால் (1) ஸ்ரீ சைலபருவதம், (2, காளேசுவரம், (3) பீமேசுவரம் என்னும் மூன்று இடங்களாகும். இவ்விடங்களில் சிவபெருமான் மல்லிகார்ச்சுனன், காலநாதன், பீமேசுவரன் என்ற முப்பெயர்களோடும் பிரகாசிக்கும் மூன்று சிவஸ்தலங்கள் இருக்கின்றன. திரிலிங்கம் என்னும் படியான வார்த்தையே தெலுங்கு என்னும் பதமாக மருவியதாம். இதைவிவரமாக அறிய விரும்புவோர் எமது தக்ஷண இந்தியா சரித்திரத்தைப் பார்க்கலாம்; அல்லது தக்ஷண திவ்விய தேசயாத்திரை க்ரந்தத்தில் காணலாம். மேற்சொன்ன வித்தியாரண்ய சுவாமிகள் ஹரிஹரி புக்கனுக்கு மந்திரியாயிருந்ததோடு ஆதி ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளின் ஓர் மடாதிபதியாகவும் இருந்தார்.

சிருங்கேரி.

இது மைசூர் சமஸ்தானத்தைச் சார்ந்த கோடூர் ஜில்லாவில் துங்க பத்ர என்னும் இரண்டு நதிகள் சேருமிடத்தில் இருக்கும் ஓர் அழகிய புராதன ஆச்சிரமம்.

இந்த சிருங்கேரி மடத்துக்கு மடாதிபதிகளாய் வந்தவர்களின் ஜாப்தா.

(1) ஸ்ரீ சங்கராசாரியர்: கி. மு. 36 முதல் 12வது வரையிலும்.

(2) சுரேஸ்வராசாரியர்: கி. மு. 28 முதல் கி. பி. 773வது வரையிலும்.

(3) நித்யபோத ஞானசாரியர்: கி. பி. 758வது முதல் 848வது வரையிலும்.

(4) ஞானஞானசாரியார்: கி. பி. 846 முதல் 910வது வரையிலும்.

(5) ஞானோத்தம சிவாசாரியர்: கி. பி. 905வது முதல் 953வது வரையிலும்.

(6) ஞானகிரியாசாரியர்: கி. பி. 949 முதல் 1038வது வரையிலும்.

(7) சிம்ஹகிரியாசாரியர்: கி.பி. 1036 முதல் 1098வது வரையிலும்.

(8) ஈஸ்வரதீர்த்தர்: கி. பி. 1097 முதல் 1146வது வரையிலும்.

(9) நரசிம்மதீர்த்தர்: கி. பி. 1145வது முதல் 1228வது வரையிலும்.

(10) வித்யாசங்கரதீர்த்தர்: கி.பி. 1228 முதல் 1333வது வரையிலும். இவர் காலத்தில்தான் வித்யாரண்ய சுவாமிகள் மடாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

(11) பாரதி கிருஷ்ணதீர்த்தர்: கி. பி. 1328வது முதல் 1380வது வரையிலும்.

(12) ஸ்ரீ வித்யாரண்ணியர்: கி. பி. 1331வது முதல் 1386வது வரையிலும்.

(13) சந்திரசேகரபாரதி: கி.பி. 1368வது முதல் 1389வது வரையிலும்.

(14) நரசிம்மபாரதி: கி. பி. 1387வது முதல் 1408வது வரையிலும்.

(15) புருஷோத்தமபாரதி: கி.பி. 1406ஆ முதல் 1448ஆ வரையிலும்.

(16) சங்கரானந்தர்: கி. பி. 1428ஆ முதல் 1454ஆ வரையிலும்.

(17) சந்திரசேகரபாரதி: கி. பி. 1449ஆ முதல் 1464ஆ வரையிலும்.

(18) இரண்டாவது நரசிம்மபாரதி: கி. பி. 1464ஆ முதல் 1479ஆ வரையிலும்.

(19) இரண்டாவது புருஷோத்தமபாரதி: கி.பி. 1472ஆ முதல் 1517ஆ வரையிலும்.

(20) இராமசந்த்ரபாரதி: கி. பி. 1508ஆ முதல் 1560ஆ வரையிலும்.

(21) மூன்றாவது நரசிம்மபாரதி: கி. பி. 1557ஆ முதல் 1573ஆ வரையிலும்.

(22) நிருசிம்மபாரதி: கி. பி. 1563ஆ முதல் 1576ஆ வரையிலும்.

(23) இம்முடி நரசிம்மபாரதி: கி. பி. 1576ஆ முதல் 1599ஆ வரையிலும்.

(24) இரண்டாவது இம்முடி நரசிம்மபாரதி: கி. பி. 1576ஆ முதல் 1599ஆ வரையிலும்.

(25) அபிநவ நரசிம்மபாரதி: கி. பி. 1599ஆ முதல் 1622ஆ வரையிலும்.

(26) அபிநவ சச்சிதாநந்தபாரதி: கி. பி. 1622ஆ முதல் 1663ஆ வரையிலும்.

(27) இரண்டாவது நரசிம்மபாரதி: கி. பி. 1663ஆ முதல் 1705ஆ வரையிலும்.

(28) சச்சிதாநந்தபாரதி: கி. பி. 1705ஆ முதல் 1741ஆ வரையிலும்.

(29) இரண்டாவது அபிநவ சச்சிதாநந்த பாரதி: கி. பி. 1741ஆ முதல் 1767ஆ வரையிலும்.

(30) இரண்டாவது அபிநவ நரசிம்மபாரதி: கி. பி. 1767ஆ முதல் 1770ஆ வரையிலும்.

(31) மூன்றாவது அபிநவ சச்சிதாநந்த பாரதி: கி. பி. 1814ஆ முதல் 1817ஆ வரையிலும்.

(32) நான்காவது நரசிம்மபாரதி: கி. பி. 1817ஹு முதல் 1879ஹு வரையிலும்.

இப்போதைய மடாதிபதியின் முழுப்பெயர் ஸ்ரீ சச்சிதானந்தசிவாபிநவ நரசிம்மபாரதி சுவாமிகள். சமீபகாலத்தில் ஸ்ரீ காலடி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஆதி சங்கராசாரியர் ஜனித்த இடமென்றுகொண்டு அவர் பெயரால் ஒரு கோயிலையும் ஸ்ரீ சாரதாம்பாள் கோயிலையும் கட்டுவித்து பிரதிஷ்டை செய்வித்தனர். இவர் 1912ஹு மார்ச்சுமீ 20உ காலை 11 மணிக்குப் பரமபத மடைந்துவிட்டார். அப்போது இவருக்கு வயது 51. இவருக்குப் பிற்பாடு தக்க சிடரைத் தமது ஸ்தானத்துக்கு நியமிக்காமல் இருந்தது மிக்க குறைவு. இந்த சிருங்கேரி மடத்துக்குச் சமீபத்தில் சில திவ்ய ஸ்தலங்கள் இருக்கின்றன. அவற்றின் விபரம் நமது தென்தேச யாத்திரை சரித்திரப் புத்தகத்தில் காணலாம்.

புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட சிருங்கேரி குரு.

ஏப்ரல் மாதம் 4-ந் தேதியில் மைசூர்க் கவர்ன்மெண்டார் கெஜட் எக்ஸ்ட்ராடினெரியில் அடியிற்கண்ட விளம்பரத்தைப் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள். சிருங்கேரி மடம் பீடத்தில் விளங்கிவந்த ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ஹ பாரதி ஸ்வாமிகள் தமக்குப்பின் பட்டத்திற்கு இன்னவர் வரவேண்டும் என்று நியமனம் செய்யாமலே சித்தியடைந்து விட்டதைக் கேட்டு மைசூர் மகாராஜா அவர்கள் மிகவும் துக்கப்பட்டார். இவரிடம் விளங்கிவந்த தவம் முதலிய நற்குணங்களைக் கண்டு சிடகோடிகள் மாத்திரம் அன்று, இவரைத் தரிசித்த அனைவரும் துக்கப்படுகிறார்கள். இவர் மரணத்தால் ஹிந்து உலகத்திற்கும் மதத்திற்கும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது என்று மைசூர் மகாராஜா உணர்ந்திருக்கிறார்.

2. கோபி சாஸ்திரியின் குமாரரான நரசிம்ம சாஸ்திரிகளைத் தமக்குப் பின் நியமிக்கவேண்டும் என்ற எண்ணம் காலஞ்சென்ற ஸ்வாமிகளின் மனதில் நெடுநாள் இருந்துவந்தது என்பதை மகாராஜா அறிவார். பெங்களூரிலுள்ள சிருங்கேரி மடப்பாடசாலையில் நரசிம்ஹ ஸ்வாமிகள் மீமாம்சம் வேதாந்தமுதலிய சாஸ்திரங்களை அப்பியசித்துவந்தார். இவர் ஆசாரசீலர். பிரம்மசரியத்தை ஆசரிப்பவர். இவரை, காலஞ்சென்ற ஸ்வாமிகள் சிருங்கேரிக்கு வரும்படி லிகிதமூலமாய்க்

கட்டளையிட்டிருந்தார். இரண்டு நாட்களுக்கு முந்தியே இவர் சிருங்கேரி போய்ச் சேர்ந்திருந்தால், காலஞ்சென்ற ஸ்வாமிகளிடமிருந்தே நேராக உபதேசம் பெற்றிருப்பார். இக்காரணங்களை மைசூர் மகாராஜா அறிந்தவ ராகையால், காலஞ்சென்ற ஸ்வாமிகளின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவதின் நிமித்தம் சிருங்கேரி மடம் பீடத்தில் நரசிம்ம சாஸ்திரிகளை நியமனம் செய்து, அவருடைய பட்டச்சூட்டு மகோற்சவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடவேண்டும் என்று சந்தோஷத்துடன் ஆக்ஞாபித்தார்.

சிருங்கேரி ஜகத்குருபீடத்திற்கு ஒரு புதிய யதி.

சென்ற 1912வரு ஏப்ரல்மீ 7உ முழுவதும் சிருங்கேரிக்கு ஒரு சுதினமாக விளங்கிற்று. விடிந்ததுமுதல் ஊரிலுள்ள ஜனங்கள் யாவரும் மடத்து வாசலில்கூடிப் புதிதாக ஆச்சிரமம் வாங்கிக்கொள்ள விருக்கும் பிரம்மஸ்ரீ நரசிம்ம சாஸ்திரியாரின் ஆச்சிரம ஸ்வீகாரத்தைக் காண ஆவல் கொண்டவர்களாய் அவருடைய கல்வி ஞான வைராக்கியங்களைப் புகழ்வதும் மகிழ்வதுமாக விருந்தார்கள். சமாதியடைந்த பூர்வ குருவினால் பிரம்மஸ்ரீ நரசிம்ம சாஸ்திரியார் சிருங்கேரி பீடத்திற்குக் குறிப்பிடப்பட்டவ ராதலால், அவர் அன்று காலையே ஆறு மணிக்குள் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பிரம்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரியாரோடு, பூர்வ குரு பரலோகம் சென்ற அறையில் நுழைந்தார். பிரம்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரியாரோ சிருங்கேரி மடத்திற்கு ஸ்ரீகாரியம் பார்ப்பவர். அவருக்குப் பூர்வ குருவால் மந்திரோபதேசம் முதலியன நடந்திருந்தன. ஸந்நியாஸம் பெற்றுக்கொள்ள விருக்கிற பிரம்மஸ்ரீ நரஸிம்ம சாஸ்திரிகளை அவ்வறையில் அவர் அழைத்துக்கொண்டு சென்றதும், பூர்வ குரு தேகவியோகமான விடத்தில் அவரது பாதுகையைக் காட்டி, அவற்றின் முன்னிலையில் ஸந்நியாஸத்திற்குரிய சகல மந்திரங்களையும் மடத்தின் பிராசீன வழக்கப்படி. உபதேசித்தார். இது ஆகி முடிவதற்கு 3 மணி நேரம் பிடித்து 10 மணி சுமாருக்கு முடிந்தது. அப்பொழுது மைசூர் மகாராஜாவினல் அனுப்பப்பட்ட சமஸ்தானத்துப் பிரதம கவுன்ஸிலர் மிஸ்டர் H. V. நஞ்சுண்டையா பிரம்மஸ்ரீ நரசிம்ம சாஸ்திரிகளைக் கண்டு சிலநேரம் பேசிவிட்டுச் சில புத்திகளைச் சொன்னர். அதன் பிறகு புது குரு சந்திரமௌலீசுவர ஸ்வாமிகோவிலுக்கும் பூர்வகுரு ஸமாதிபெற்ற ஸ்தலத்திற்கும் அழைத்துச் செல்லப்பெற்றார். ஆங்கு அவர் நமஸ்

கரித்துவிட்டு, பிரம்மசர்யத்திலிருந்து ஸந்நியாஸம் பூணுவதற்குச் செய்யவேண்டிய கர்மாக்களைச் செய்யத்தொடங்கினார். பல்லாயிரம் பிராமணர்கள் மத்தியில் பிரம்மஸ்ரீ நரஸிம்ம சாஸ்திரியார் ஆத்ம தர்ப்பணம், நவசிராத்தம், விராஜஹோமம் முதலிய வைதிகக் கிரியைகளைச் செய்து, லோகத்தை த்யஜித்ததான மகா ஸந்நியாஸத்தை மேற்கொள்ளத் தயாரானார். இவை ஆனபிறகு சகல பிராமணர்களும் மைசூர் கவர்ன்மெண்டு பிரதிநிதிகளான மெஸ்ஸர்ஸ் H. V. நஞ்சுண்டய்யர், B. ராமஸ்வாமி ஐயர், ஸ்ரீ கௌநிசுவர ஐயர், A. சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களும் சிருங்கேரி மடத்துத் தென்னிந்தியாவிலுள்ள பல சிஷ்யர்களும் பின் தொடர்ந்துவர, துங்கா நதிக்கரைக்குச் சென்று இந்த மகா ஸங்கத்தின் மத்தியில் உரத்த குரலோடு கையை உயரத் தூக்கிக்கொண்டு, "விட்டேன் உலகம், வேண்டேன் பொருள் மனைவாழ்க்கை" என்று மும்முறை கதறிவிட்டு, அவற்றைத் தொலைத்ததற் கடையாளமாக நதியிலிறங்கித் தலைமுழுக ஆரம்பித்தார். ஸ்நானமான பிறகு மார்புமட்டும் ஜலத்தில் நின்றுகொண்டு ஸந்யாஸ மந்திரத்தை மறுபடி ஜபித்துக் கடைசியில், ஆத்மார்த்தமாக ஸ்வானுபவத்தோடு ப்ரோஷ மந்திரத்தை மும்முறை உச்சரித்தார். 19 வயதுள்ள கட்டைக் கடுங்காளைப் பருவமுள்ள ஒரு யுவா லோகத்தையே வெறுத்து ஸந்யாஸம் பூணத் துணிந்து, ப்ரோஷ மந்திரத்தைச் சொல்லுவதைக் கேட்டால் யார் மனந்தான் இளகாது! பிள்ளையைப் பெற்றோர் மனம் எப்படி யிருக்கும்! அங்கு ஜலத்தில் நின்றபடியே தன் தலையில் மிச்சமாயிருந்த இரண்டொரு மயிரையும் பிடுங்கி அவற்றைத் தனது எஜ்ஞோபவீதத்தோடு ஆற்றில் வீசியெறிந்தார். உடனே தமது வெள்ளையுடையை அவிழ்த் தெறிந்துவிட்டு, காஷாயம் தரித்துக்கொண்டார். ஸந்யாஸ தண்டத்தைக் கைகூப்பி நமஸ்கரித்து, விருப்பமுடன் கையில் தாங்கிக்கொண்டு, ஜனங்க ளெல்லாரும் அண்டமதிரப் பெருமுழக்கஞ் செய்யக் கரை யேறினார். அங்கிருந்து, பூர்வகுரு ஸமாதியடைந்த ஸ்தலத்திற்கு அவரை அழைத்துச் சென்றதும், அங்கே அப்பூர்வ குருவால் சொல்லப்பட்ட மகாவாக்கியம் அவருக்கு உபதேசிக்கப்பட்டது. இது ஆனதும் புதுக்குரு மகா ஸமாதிக்குப் பூஜை செய்தார். அதன் பிறகு பர்யங்க ஆசௌசத்தையும் அதன் பிறகு யோகபட்டாவையும் செய்தார். பூர்வகுரு இவருக்குச் சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் என்று நாமகரணம் செய்யவேண்டுமென விரும்பியிருந்ததால், அதன்படியே இவர் அந்நாமத்தைக் கொண்டார்.

அது மடத்து நிர்வாககர்களாலும், கட்டியக்காரர்களாலும் ஸபையோ ரனைவருக்கும் பயிரங்கமாகச் சொல்லப்பட்டது.

இவ்வாறு வைதிகக் காரியங்கள் ஒரு முடிவுக்கு வர ஜனங்களெல்லாரும் ப்ராஸாதத்திற்குக் காத்துக்கொண்டிருக்கையில் சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் தம்மால் அப்பொழுதே கவனம் செய்யப்பட்ட 10, 12 சுலோகங்களைத் தம் குருவின் ஸ்தோத்திரமாகச் சொல்லி அவற்றின் பொருளை விளக்கிக் கன்னடத்தில் பேசினார். திடீரென்று இப்படி அவர் சொல்லக் கேட்ட ஜனங்களனைவரும், அவரது கவன சக்தியையும், குரு பக்தியையும் கண்டு வியந்து, அவரிடத்தில் வெகு மதிப்புடனும், பக்தியுடனும் தத்தம் இல்லம் சென்றனர். அதன் பிறகு சந்திரசேகரபாரதி ஸ்வாமிகள், வித்யா ஸங்கார் கோவிலுக்கும் ஸ்ரீ ஸாரதாம்பாள் கோவிலுக்கும், பூர்வகுருவுக்கு முந்திய குருவின் ஸமாதி ஸ்தலத்திற்கும் சென்று நமஸ்கரித்துவிட்டுத் திரும்பினார். பிறகு மாத்தியாங்கிக ஸ்நானம் செய்துவிட்டுச் சந்திரமௌளீசுவர ஸ்வாமிக்குப் பூஜை நடத்தினார். அதுவும் ஆனபிறகு மாலை 5 மணி சுமாருக்குப் பிரதம பிக்ஷைக்குச் சென்றார். அதன்பிறகு 2000 பிராமணர்கள் போஜனம்செய்விக்கப்பட்டார்கள். அத்தோடு அன்றைய மகோத்ஸவம்முடிந்தது.

7-ம் தேதி இரவு முழுமையும் 8-ம் தேதி காலை 8 மணி வரையிலும் நூதனமாக ஸந்யாஸம் பெற்ற குருவை சிருங்கேரிப் பீடத்தில் எழுந்தருளச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்தன. புதுக்குருமடத்து வரிசைகளுடன் 8-ந் தேதி காலை 10 மணிக்கு மடத்தைச் சேர்ந்த எல்லாக் கோவில்களுக்கும் எழுந்தருளினார். கடைசியில் ஸ்ரீ சாரதாம்பாள் சந்நிதிக்குச் சென்றதும் அம்மனுக்கு வலபுறத்தில் ஒரு ஹோமம் நடக்க, அவர் ஒரு வெள்ளிப்பீடத்தில் அவ்ஹோமாக்கினி முன் வீற்றிருந்தார். இங்கே சுவர்ணதானம் முதலிய ஷோடசதானமும் நடந்தன. அதன் பிறகு அவர் சகல விருதுகளுடனும் சாரதா தேவிக்கு எதிரிலுள்ள ரஜிதமயமான ஆசனத்திற்கருகில் அழைத்துச்செல்லப்பெற்றார். அவ்வாசனத்தில் ஸ்வாமிகள் ஏறுமுன்னே அதற்குபூஜைநைவேத்தியங்கள் நடந்தன. அதன் பிறகு பிராமணர்கள் ஆசிகூறி ஆசவாரிக்க ஸ்வாமி V. P. மாதவராவால் ஆஸனத்தில் இருத்தப்பெற்றார். அவர் ஏறியிருந்ததும் மைசூர் ஸமஸ்தானத்து உத்தியோகஸ்தர்களும், தென்னிந்தியாவிலுள்ள சிருங்கேரிமட சிஷ்யகோடிகளும் ஒரு புறம் வீற்றிருக்க, மற்றொருபுறம் புரோஹிதர்களும், மற்ற பிராமணர்களும் வீற்றிருந்தார்கள். சரியாக 12 மணியானதும்

ஸம்ப்ரோக்ஷணைத் தீர்த்தம் ஸ்வாமி சிரசில் தெளிக்கப்பட்டது. அதை அடுத்து ஸ்வர்ணாபிஷேகமும் லஜாபிஷேஹாமமும் செய்யப்பட்டன. அவை அங்குக் கூடியிருந்த பிராமணர் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. உடனே மடத்துப் பூர்வாசாரப்படி ராஜகம்பீரம் பொருந்திய மடாதிபதி யலங்காரம் அவருக்குச் செய்யப்பட்டது. இவ்வலங்காரத்தைக் கண்ட சமஸ்த ஜனங்களும் அவருடைய காம்பீரியத்தையும் தேஜஸ்ஸையும் கண்டு ஆனந்தித்து ஆரவாரம் செய்தார்கள். அப்பொழுதும் பலவகையான தானங்கள் வழங்கப்பட்டன. ஸாரதாம்பாளுக்கும் பூஜை நடந்தது. குருவின் ஆக்ஞையின்மேல் மிஸ்டர் V. P. மாதவராவ் பிரம்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகளை மடத்து ஸ்ரீகாரிய அதிகாரியாக ஸ்வாமிகள் நியமித்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். அடுத்தாற்போல மடத்து சகல முத்திரைகளும் ஸ்வாமிகளிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இது நடந்ததும் ஸ்வாமிகளுக்குக் காணிக்கைகளும் நஜ்ஜார்களும்பலபல சிற்றரசர்களாலும், இராஜகுமாரர்களாலும், ஜமீன்தார்களாலும், இந்தியாவின் ஆஸேது ஹிமாலயபரியந்தமுள்ள ஸமஸ்த சிஷ்யர்களாலும் ஸமர்ப்பிக்கப்பட்டன. இவற்றிற்கெல்லாம் தலைவராக இருந்தவர் மைசூர் மகாராஜாவே. நகர ஜனங்கள் உடனே பாதபூஜை செய்தார்கள். அவர்களுக்கும் பிறருக்கும் தீர்த்தப் பிரஸாதம் அருளிவிட்டு ஸ்வாமிகள் கோவிலுக்கு வெளியே சென்று பிராமணர் அல்லாதவர்களும் சிருங்கேரி ஜாகிர்தார்களும் சமர்ப்பித்த காணிக்கைகளை ஏற்றார். அதன் பிறகு ஸகல விருதுகளுடனும் ஸ்வாமிகள் தமது வாசஸ்தலமான ஸச்சிதானந்த விலாஸத்திற் கெழுந்தருளினர். இவ்வாறு சிருங்கேரி மடத்து 34-வது பட்டாபிஷேக மகோத்ஸவம் நடந்து முடிந்தது. 5000 பிராமணர்களுக்கு ஷட்ரஸ போஜனமும் தக்ஷிணைகளும் அளிக்கப்பட்டன.

இரவு 7 மணியானதும் ஸ்வாமிகள் தமது தங்கப்பல்லக்கிலேறி, ஸகல மடத்துக்கு விருதுகளுடனும் நகர்வலம் வந்தார். சுவாமிகள் ஸச்சிதானந்த விலாசத்திற்குத் திரும்பும்போது இரவு நடுச்சாம மிருக்கும்.

இந்தத் துங்கபத்திரியைத் தாண்டி வந்தால் அடோனி, குத்தி, குண்டக்கல், கடப்பை முதலான விடங்களிருக்கின்றன. குண்டக்கல் ஜங்ஷனிலிறங்கி பல்லாரிக்குப் போகலாம்; அங்கிருந்து தென்மாடா வண்டியேறி ஒபட்டு ஸ்டேஷனுக்குப் போய் அவ்விடத்திருந்து எட்டு மைல் தூரத்திலிருக்கும் அம்பிக்குப் போகலாம். இந்த அம்பியைத்தான் கிஷ்கிந்தாபுரி என்று

சொல்லுகிறார்கள். இங்குதான் ஸ்ரீராமர்: அநுமார் சுக்கிரீவன் முதலானவர்களைக் கண்டு சீதையைத் தேடப் பிரவர்த்தித்த தாக இதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதும் இவ்விடத்தில் பலவித குரங்குக ளிருக்கின்றன. இந்த கிஷ்கிந்தை துங்கபத்திரா நதிக்கரையின் மேல் பலவித சோலைகளால் சூழப்பட்டு பார்வைக்கு இரமணீயமாக விருக்கின்றது. சுற்றுப்பக்கங்களில் ரிஷியமுகம் முதலான சிறு காடுகளிருக்கிறதோடுகூட, சீதாராமர் நரசிம்மன் முதலான சந்நிதிகளுமிருக்கின்றன. மாசிமாதத்தில் உற்சவங்களும் நடக்கின்றன. இந்தக் கிட்கிந்தைக்குச் சமீபத்தில் பம்பாதீர்த்த மிருக்கிறது. சவுரி ஆச்சிரமு மிருக்கின்றது. இவற்றின் மகிமைகளை இராமாயணத்தில் பரக்கக் காணலாம். இத்தியாதிகளைப் பார்த்துக் கொண்டு திரும்பிச் சென்னை ரெயில்வண்டி யேறி சில ஸ்டேஷன்கள் வந்தால் ரேணுகுண்டா வென்னும் திருப்பதிக்குப் போகும் ஸ்டேஷனிருக்கிறது. இந்த ஸ்டேஷனிலிறங்கி நான்கு மைல் தூரம்போனால் கீழ் திருப்பதி அல்லது கோவிந்தராஜர் பட்டணம் இருக்கிறது. இந்தத் திருப்பதிமலை வடவேங்கடம், சேஷாசலம் முதலான பல பெயர்களாற் புகழப்பட்டது. இந்த ஸ்தலத்தின் மகிமையைப்பற்றி, இந்தப் புத்தகத்தின் இரண்டாவது வாலியத்திற்காணலாம். அல்லது எம்மால் பதிப்பிக்கப்பட்டிருக்கும் திருப்பதி மகத்துவத்தைப் பார்த்தால் விவரமாகும். இந்தத் திருப்பதி ஸ்டேஷனை விட்டுவந்தால், நாராயணவரம், திருத்தணி முதலான ஸ்தலங்களிருக்கின்றன. அவைகளின்விவரங்களை இரண்டாவதுவாலியத்தில்காணலாம்.

பிப்ரவரிமீ 23௳ காலை எழுந்து சமைத்துச் சாப்பிட்டு 12 மணிக்கு ரெய்ச்சூரிலிருந்து கோயமுத்தூருக்கு $7\frac{1}{2}$ டிக்கட்டுகளுக்கு 45 ரூபாய் கொடுத்துப் பெற்று நல்ல கம்பார்டுமெண்டிலேறி மாலை நான்குமணிக்குக் கெத்தலுசெரு ஸ்டேஷனில் எமது சகோதரன் திருமலைச்சாமியைக் கண்டு பேசி, இராத்திரி 12 மணிக்கு ரேணுகுண்டா ஸ்டேஷனில் சிறிய தாயார் தம்பி வெங்கண்ண நாய்க்கரைக் கண்டு பேசிக்கொண்டு காலை 5 மணிக்கு அரக்கோணத்தி லிறங்கினோம்.

பிப்ரவரிமீ 24௳ காலை ம-ா-ா-ஸ்ரீ குப்புசாமி முதலியார் வீட்டி லிறங்கிச் சமைத்துச் சாப்பிட்டுச் சிநேகிதர்களைக் கண்டுபேசிப் பொழுது போக்கி, இரவு 8 மணிக்குச் சென்னை மெயில் புகைவண்டி யேறி, 9 மணிக்கு ஆற்காட்டில் எமது தமையனர் முதலானவர்களைக் கண்டு பேசிக் குலாவி வண்டியில் சுகமாய்த்தூங்கி, மறுநாள் பிப்ரவரிமீ 25௳ சுக்கிரவாரம்

காலை 10 மணிக்குக் கோயமுத்தூரில் வந்திறங்கிப் பந்துமித்திரர்களுடன் சேர்ந்து சுகமடைந்தோம்.

முடிவுரை.

இவ்விதமாக நாம் வடதேசயாத்திரை செய்துவந்ததற்கு கோயமுத்தூர் மஹாஜனங்கள் மனமுவந்து மரியாதைசெய்த சங்கதியை 1887ளு மார்ச்சுமீ முதல்தேதி கலாநிதி பத்திரிகையிலிருந்து இங்குப பதிப்பிக்கிறோம்.

"சே. ப. நரசிம்மலுநாயுடு அவர்கள் கல்கத்தாவிலிருந்து திரும்பிவரும்போது நாயுடுகாரை ஜனங்கள் மங்கள மேளவாத்தியங்களுடன் மரியாதை செய்து அழைத்துவர பலவித பிரயத்தனங்கள் செய்தார்கள். அப்படி மேளவாத்தியங்களுடன்வர அவருக்கு இஷ்டமில்லாமையால், 1887ளு மார்ச்சுமீ 12உ நமது நகர் முதல் வகுப்பு வக்கிலும் பகவத்கிதார்த்த நிபுணரும் ஆரியமத சித்தாந்தம் பஞ்சதசோபநிஷத்து முதலிய கிரந்தங்களின் கருத்தருமாகிய ம-ள-ள-ஸ்ரீ வி. குப்புசாமி ஐயரவர்களால் பிரசித்தப்படுத்திய அறிக்கையின்படி ம-ள-ள-ஸ்ரீ சே.ப. நரசிம்மலுநாயுடு அவர்களுடைய பிரசங்கத்தைக்கேட்கவும், அவர் வட இந்தியாவுக்குச் சென்றிருந்து நமது தேசத்திற்குச் செய்திருக்கிற நன்மைக்காகவும், அவருக்கு வந்தனம் செய்யவும், சுமார் ஆயிரம் பேர்கள் கோயமுத்தூர் காலேஜ் ஹாலில்கூடினார்கள். அப்படிக்கூடினவர்களுள் ம-ள-ள-ஸ்ரீகளாகிய முனிசிபாலிடியின் சபாநாயகரும், டிஸ்டிரிக்ட்டு ரிஜிஸ்திராருமாகிய ராய்பகதூர் எ. பெரியசாமி முதலியாரவர்கள் பி. ஏ., எக்சிகியூடிவ் இஞ்சினியராகிய சுப்பராய ஆசாரியார், பி. சி. இ. அவர்கள், பப்ளிக் பிராசிகியூடரும் ராவ் சாகிபுமாகிய என். அண்ணாசாமி ராயரவர்கள், ஹுசூர் சிரஸ்தேதாராகிய நாட் ஸ்ரீநிவாச ராயரவர்கள், ஹெட்குவார்ட்டர் இன்ஸ்பெக்டராகிய டி. எம். நாராயணசாமி நாயுடுகார், ஐகோர்ட்டு வக்கில் எஸ். கஸ்தூரிரங்கையங்கார், B. A., B. L. அவர்கள், ஐகோர்ட்டு வக்கில் ராமசந்திரராயர் அவர்கள், ராவ்சாகிபும் சூபெரின்டெண்டிங்கு இஞ்சினீர் ஆபீசு மானேஜருமாகிய பி. அருணாசல முதலியாரவர்கள், எ. பொன்னரங்க முதலியாரவர்கள், கிருஷ்ணசாமி முதலியாரவர்கள், ராவ்சாகிப் புஜங்கராவு, B. A., அவர்கள், சமஸ்கிருத பண்டிதர் கே. சுப்பராயரவர்கள், ராமய்யரவர்கள், கோயமுத்தூர் காலேஜ் J. வெங்கடராம நாயுடுகார், ராகவாசாரியார் B. A. அவர்கள், நேடிவ்

ஐஸ்கூல் விஜயேந்திரராவ் அவர்கள், கிருஷ்ணராவ் அவர்கள், டாக்டர் நாராயணசாமி பிள்ளையவர்கள், லண்டன் மிஷனைச் சார்ந்த கனம் டேவிட் பாதிரியாரவர்கள், எக்ஸிகியூடிவ் இஞ்சினீராபிசு கான்சாகிபு அப்துல் ரஜாக் சாகிபவர்கள், பார்த்தசாரதி முதலியாரவர்கள், ரத்தினமுதலியாரவர்கள், நாகோஜிராவ் அவர்கள், இராமசுப்பய்யர் B. A. அவர்கள், வெங்கடராமஐயர் B. A. அவர்கள், இராயப்பப் பிள்ளையவர்கள், நஞ்சப்பசெட்டியாரவர்கள், ஜனோபகாரநிதியின் காரியதரிசியாகிய சதாசிவ முதலியாரவர்கள், ஆப்காரி கன்ட்ராக்ட்டர் சோ.விஜயரங்கமுதலியாரவர்கள், ராவ் சாகிப் ராமசாமி செட்டியாரவர்கள், ந. இரங்கே கவுண்டரவர்கள், குப்புசாமி செட்டியாரவர்கள், இன்னும் பலரும் வந்திருந்தார்கள். காலேஜ் ஹால் வாழை, கமுகு முதலியவைகளால் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. ம-া-া-ஸ்ரீ வி. குப்புசாமி ஐயரவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க, ம-া-া-ஸ்ரீ சேலம் பகடால நரசிம்மலு நாயடவர்கள் எழுந்திருந்து இந்தியா நாஷனல் காங்கிரஸ் என்னும் மஹா சபையின் உத்தேசத்தையும், அதன் உபயோகத்தையும், தீர்மானங்களையும் அதற்காகக் கல்காத்தாவுக்குப் பிரயாணம் செய்யும்போது வழியில் நாகூர், பர்த்வான், பாட்னு, கயா, காசி, அலகாபாத், அயோத்தி, பைஷாபாத்து, லட்சுமணபுரி, கான்பூர், ஆக்ரா, வடமதுரை, பிருந்தாவனம், கோவர்த்தனம், டில்லி, ஜயப்பூர், ஆஜ்மீர், உஜ்ஜயினி, ஹிந்தூர், பஞ்சவடி, பம்பாய், புனு, பண்டரிபூர் முதலான இடங்களில் தாம் கண்ட சில அதிசயங்களைப்பற்றியும் கைதொழிலானுண்டாகும் நலத்தைப்பற்றியும் நேர்த்தியாக இரண்டுமணிநேரம் உபந்நியாசித்தார். பிறகு முனிசிபல் சபாநாயகராகிய ஏ. பெரியசாமி முதலியாரவர்கள் உபந்நியாசகரவர்களுக்கும் சபாநாயகரவர்களுக்கும் பன்னீர் தெளித்துப் புஷ்பமாலைகளைச் சூட்டித் தாம்பூலம் சந்தன புஷ்பம் முதலியன கொடுக்கப்பட்ட தன்றியில், வந்திருந்தவர்களெல்லாம் உபந்நியாசகரின்மீது புஷ்பங்களைத் தூவி ஆசிர்வதித்தார்கள். உடனே சபாநாயகர் எழுந்து சபையாரை நோக்கி இத்தினம் கோயமுத்தூருக்கு ஓர் சுபதினம் என்றும், ஏனெனில் இத்தினத்தில் நமது நகரத்தின் சிறந்த தேசாபிமானியாகிய ஸ்ரீமான் சே. ப. நரசிம்மலு நாயுடுகாரு இந்த டிஸ்டிரிக்ட்டின் பிரதிநிதியாக வங்காள மாகாணத்தைச் சார்ந்த கல்கத்தாவுக்குச்சென்றும், அங்கு தேசோபகாரார்த்தமாகக் கூடிய இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகாசபையைச் சார்ந்தும், அங்கு நமதுதேசத்தாரனைவருடைய க்ஷேமத்தைக்

கருதி, பரதகண்டத்தின் பல பக்கங்களிலிருந்து பிரதிநிதிகளாகவந்த பல பெரிய மனுஷர்களால் பேசித் தீர்மானித்த விஷயங்களைப்பற்றியும், அவர் போய்வந்த வழிகளிலிருக்கும் கல்கத்தா, கயா, காசி, அயோத்தி, அலஹாபாத், கான்பூர், ஆக்ரா, மதுராபுரி, பிருந்தாவனம், கோவர்த்தனம், டில்லி, ஜயப்பூர், அஜ்மீர், உஜ்ஜயினி, இந்தூர், பஞ்சவடி, பம்பாய், புனா, பண்டரிபுரம் முதலான ஸ்தலங்களின் மஹத்துவங்களைப் பற்றியும், அவ்வவ்விடங்களுக்கு யாத்திரைக்காரர் போக வேண்டிய வழி வண்டி சத்தம் போஜன வசதிகளைப்பற்றியும், அவ்விடங்களின விவசாய கைத்தொழில் வர்த்தக லாபங்களைப் பற்றியும், அவற்றால் அந்நாடுகள் செல்வத்தால் செழித்துச் சிறப்புற்றிருப்பதைப்பற்றியும், அப்படிப்பட்ட செல்வமும் சிறப்பும் கோயமுத்தூரிலும் இதையடுத்த தென்னாடுகளிலும் விருத்தியாக்க வேண்டுமானால் அநேக நூல் நூற்கும் யந்திரங்களையும் சர்க்கரை செய்யும் யந்திரங்களையும், காகிதம் முதலானவைகளைச் செய்யும் யந்திரங்களையும் ஸ்தாபித்து, தேசக்ஷேமத்தை விருத்தியாக்க வேண்டுமென்றும், அதிக உருக்கமாகச் சுமார் இரண்டுமணி காலமாக உபந்நியாசம் செய்ததை நாம் யாவரும் கேட்டு ஆனந்தமடைந்தோம். நமது நண்பராகிய ஸ்ரீ சே. ப. நரசிம்மலு நாயடுவர்கள் பல வருஷங்களாக நமது தேசத்து க்ஷேமத்தைக் கருதி இரவும் பகலும் உழைத்துவருவதோடு, பல விடங்களுக்குப் போய்ப் பிரபலமாகப் பல பிரசங்கங்களைச் செய்தும், அநேக புஸ்தகங்களையும் கலாநிதி என்னும் பத்திரிகையையும் பதிப்பித்துவருவது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதுவரையில் இப்படி நமது கோயமுத்தூரிலிருந்து வடநாடுகள் பலவற்றிற்கும் துணிந்து போய்ப் பார்த்து, தாம் ஆனந்தம் அடைந்ததைப்போலவே மற்றவர்களும் அந்நாடுகளுக்குப் பயமில்லாமல் போய்ப் பார்த்து ஆனந்தமடைய இவரே முதல்முதல் நம்மவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார் என்று உறுதியாகச் சொல்ல மாட்டுவேன். இனி அநேகர் இவரைப் பார்த்து இவரைப்போலவே வடநாடுகளுக்குப் போய்வந்து தேசக்ஷேமத்தை விருத்தியாக்கக் கூடுமென்று எண்ணுகிறேன். தேசாபிமானமெல்லாம் திரண்டு ஓர் அவதாரமாக ஜனித்த ஸ்ரீமான் சே. ப. நரசிம்மலு நாயுடவர்களுக்கு நாம் என்ன பிரதி உபகாரம் செய்யப்போகிறோம். அவர் கருத்தின்படி நாமும் தேசக்ஷேமத்துக்கு உதவியாக உழைத்தலே பிரதி உபகாரமாகும். இப்படிப்பட்ட அரிய பெரிய தேசாபிமானமுள்ள சே. ப. நரசிம்மலு நாய

டவர்களுக்கு ஜகதீஸ்வரன் நீடித்த சுகவாழ்வைப் பிரசாதிக்கும்படிப் பிரார்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று சொல்ல சபையாரனைவரும் எழுந்து நின்று "அப்படியே ஆகுக" எனக் கரகோஷம் செய்தபின்னர் அச்சபை கலைந்தது.

இதுவிஷயமாகக் கூடிய மற்ற சபைகள்.

மேலே சொன்ன சபைமுடிந்த 8-ம் நாள் கோயமுத்தூர் சுதேச திரவிய சேகரநிதி ஹாலில் ம-ா-ா-ஸ்ரீ வி. எல். திருவேங்கடசாமி முதலியாரவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க, விவசாயம் வர்த்தகம் உத்தியோகத்திற் சிறந்த அநேக பெரிய மனுஷர்கள் வந்து கூடியிருக்க, ஸ்ரீமான் சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்கள் மற்றுமோர் பெரிய உபந்நியாசத்தைச் செய்தார். அந்த உபந்நியாசத்தில் வடநாடுகளில் நூல் நூர்த்துத் துணிகள் நெய்யும் இயந்திரா திஸ்தாபனங்களினால் உண்டாகும் செல்வச் செருக்கையும் சுதந்திர சுகவாழ்வையும்பற்றிச் சவிஸ்தாரமாக 2 மணி நேரம் உபந்நியாசம் செய்தும், காலமழை மோசம் செய்வதினால் குடியானவர்கள் தவித்துத் தத்தளிக்கும் இக்கோயமுத்தூரிலும் அப்படிப்பட்ட நூல் நூற்கும் இயந்திரங்களை ஸ்தாபித்தால், இந்த ஜில்லாவில் பருத்தியைப் பயிர் செய்யும் பேதைக் குடிகளின் பருத்திக்கு நல்ல விலையும், உற்சாகமும் உண்டாவதோடு நூல் நூற்கும் இயந்திரங்களை ஸ்தாபிக்கும் கம்பெனியாருக்கு வேலையும் கிடைக்குமென்று வற்புறுத்திச் சொல்ல, அங்கிருந்த பெரிய மனுஷர்களில் சிலர் எழுந்து அப்படிப்பட்ட நூல் நூற்கும் கம்பெனியை இக்கோயமுத்தூரில் ஸ்தாபிக்கவேண்டுமென்று பிரேரேபணை செய்து சபாநாயகருக்கும் உபந்நியாசகருக்கும் வந்தனம் சொல்லப்பெற்றுச் சபை கலைந்தது. அன்று அவ்விடம் செய்த பிரேரேபணையின்படி அடுத்த வாரம் ம-ா-ா-ஸ்ரீ சவுகார் சதாசிவ முதலியாரவர்கள் மாடி ஹாலில் ஓர் சபை கூடி, இந்தக் கோயமுத்தூரில் ஓர் நூல்நூற்கும் இயந்திர கம்பெனியைச் சுமார் 6,00,000(ஆறுலட்சம்) ரூபாய்செலவில் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அக்கம்பெனிக்கு ஸ்ரீமான்களாகிய சே. ப. நரசிம்மலு நாயுடுகாரும், வி. யல். திருவெங்கடசாமி முதலியாரவர்களும் செக்ரிடேரிகளாகவிருந்து பங்குக்கையொப்பத்தைச் சேகரிக்கவேண்டுமென்றும் தீர்மானித்ததன்றியில், அன்று அங்கு வந்திருந்த சில கனவான்கள் சுமார் 70,000 பங்குகளுக்குக் கையொப்பமிட்டார்கள். இப்படி ஸ்ரீமான் சே. ப. நரசிம்மலு நாயுடுகாரு உபன்னியாசங்களைச் செய்து வருவதை

வந்துகேட்ட ஈரோடு, திருப்பூர், பல்லடம், தாராபுரம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி முதலிய இடங்களின் வாசிகள் நாயுடவர்களைத் தத்தம் இடங்களுக்குவந்து வடதேச யாத்திரையைப்பற்றி உபந்நியாசிக்கவேண்டுமென்று வருந்திகேட்டுக் கொண்டமையால் ஸ்ரீமான் நாயுடவர்களும் முதலில் ஈரோடுக்குப் போய் அங்குக் கோட்டைப் பருத்திக் கிடங்கு ஹாலில் ம-ா-ா-ஸ்ரீ கே. கிருஷ்ணையரவர்கள்சபாநாயகராகவீற்றிருக்க, ம-ா-ா-ஸ்ரீ களாகிய திருவம்பலம்பிள்ளையவர்கள், சந்திரசேகரம் பிள்ளையவர்கள், அல்லாவுதின் சாயபு அவர்கள், தாசப்பய்யர் அவர்கள், குப்புசாமி அய்யங்கார் அவர்கள், சின்னசாமி நாயுடு முதலான அநேக சனதனவான்கள் கூடிய சபையில் நாயுடவர்கள் பிரபலமாக உபந்நியாசம் செய்ததன்றியில், மறுநாள் மார்கெட் மைதானத்தில் ம-ா-ா-ஸ்ரீ தாசப்ப அய்யரவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க நாயுடவர்கள் பெரிய உபந்நியாசம் செய்தனர். பிறகு தாராபுரம் ம-ா-ா-ஸ்ரீ ராமசாமி நாயுடுகாரு சத்திரத்தில் ம-ா-ா-ஸ்ரீ தாசில்தார் பிளகிரி அய்யங்காரவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க, சேர்மென் ம-ா-ா-ஸ்ரீ அனகிரிசாமி நாயுடுகாரு, டி. ரிஜிஸ்ட்ரார், சப் ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ சுப்பராவ் அவர்கள், தாஸில்தார் ம-ா-ா-ஸ்ரீ ஷண்முகம் பிள்ளையவர்கள் முதலான உத்தியோகஸ்தர்களும் அநேக வர்த்தகர்களும் வந்திருந்த சபையில் ம-ா-ா-ஸ்ரீ. சே, ப. நரசிம்மலுநாயுடுகாரு ஓர் பிரபல பிரஸங்கம் செய்துவிட்டு, பல்லடத்துக்கு வந்து சந்தைப்பேட்டையில் தாசில்தார் ம-ா-ா-ஸ்ரீ சிதாராம அய்யரவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க, அநேக கனதனவான்கள் வந்திருக்க, நாயுடவர்கள் ஓர் உபந்நியாசத்தைச் செய்துவிட்டு, திருப்பூரில் ம-ா-ா-ஸ்ரீ அங்கப்பசெட்டியாரவர்கள் சத்திரத்தில் மிஸ்டர் ஸ்டேன்ஸ் துரையவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க, நாயுடவர்கள் ஓர் உபந்நியாசம் செய்தனர். பிறகு இதே மாதிரியாகப் பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை முதலான இடங்களில் உபந்நியாசங்கள் செய்து கோயமுத்தூருக்குத் திரும்பி வந்து இயந்திரசாலை ஸ்தாபிக்க உழைக்கலானார். உழைத்தாலுமென்ன. இயந்திரக் கருவி கைத்தொழிலின் உபயோகம் படித்தறிந்த அநேக புத்திமான்களுக்கே தெரியாத விஷயமாயிருக்க படிப்பு வாசனையற்ற பட்டிக்காட்டு ஜனங்கள் நம்பிப் பங்குக்காரராகச் சேராமையால் நாயுடவர்கள் இது விஷயமாகச் சென்னைக்குப் போய் அங்கு ம-ா-ா-ஸ்ரீ இராஜா மாதவராவ் அவர்களையும், ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் இரகுநாதராயரவர்களையும்,

ம-ா-ா-ஸ்ரீ ஸர் பாஷியமய்யங்காரவர்களையும், இராஜா சவலை இராமசாமி முதலியாரவர்களையும் கண்டு பேசி,செங்காங்கடை கோவிந்தராவு நாடகசாலையிலும் ஓர் உபன்னியாசம் செய்து விட்டும், கடைசியாக ஆர்பெத்நெட் கம்பனிக்குப்போய் அப்போது அதன் முக்கியஸ்தராயிருந்த கனம் மாக்பைடீன் அவர்களிடம் கண்டு பேச,அவர் இந்தக் கம்பெனிக்கு 50,000 ரூபாய் பங்கு எடுத்துக்கொண்டதோடு தாமே சீமைக்குப் போய் நல்ல இயந்திர சாமான்களை வாங்கி அனுப்புவதாகவும் அந்த அர்பெத்நெட் கம்பெனியாரே ஏஜெண்டாகயிருந்து பண உதவி செய்வதாகவும் சொல்லி உற்சாகப்படுத்த, நாயுடாவர்கள் கோயமுத்தூர் வந்து மேற்படி கம்பெனி மிஸ்டர் ஆர்பெத்நெட்டை இந்த கம்பெனிக்குப் பிரஸிடென்ட்டு ஆகவும் மிஸ்டர் ஸ்டேன்ஸை செக்ரிடெரியாகவும், நாயுடவர்களையும் வேறு சிலரையும் டைரெக்டர்களாகவும் நியமித்துச் சட்ட திட்டங்களை ஸ்தாபித்ததோடு, நாயுடவர்களுடைய உள்ளூர் தோட்டத்தில் பாதிபாகத்தை இக்கம்பெனியாருக்குச் சுலப விலைக்குக் கொடுத்தும், கலெக்டர் மிஸ்டர் ஸ்டர்க் துரையவர்களைக்கொண்டு கடைக்கால்போட்டுக் கட்டடம்கட்ட ஆரம்பிக்கவே, டைரெக்டர்களில் இரண்டொருவருடைய நடவடிக்கைகள் திருப்தியாக இல்லாமையால் நாயுடவர்கள் தமது டைரெக்டர் வேலையிருந்து விலகிக்கொள்ள விருப்பம் கொண்டாலும், தாம்கஷ்டப்பட்டு ஸ்தாபித்த இந்நல்லகம்பெனியின் காரியம் கெட்டுப்போகுமோ என்றகவலையினால் சத்திய சாந்தராகிக் கட்டடவேலை முடித்து இயந்திரங்கள் பூட்டப்பட்டு நூல் நூற்கும் வேலை ஆரம்பித்தபிறகு தாம் கைக்கொண்ட காரியம் நிறைவு பெற்றதெனக் கண்டு களித்துவிட்டு தமது டைரெக்டர் வேலையிலிருந்து விலகிக்கொண்டார். இதற்காக நாயுடரவர்கள் செலவிட்ட பொருளும் செய்த பிரஸங்கங்களும் பதிப்பித்த பத்திரிகைகளும் கொஞ்ச நஞ்சமல்ல. இப்படிக்கெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்த நாயுடவர்களுக்கு யாதொரு பிரதிபலன் அக்கம்பெனியார் செய்தார்களில்லை. ஆயினும் அந்தக் கம்பெனியின் வரும்படி அதிகமாகி, அதில் சுமார் 1200 வேலைக்காரர்கள் உழைத்துவருவதையும் கண்டு அக்கம்பெனியார் வேறோர் உதவி யந்திரசாலையையும் ஸ்தாபிக்க, அதிலும் நல்ல லாபமும் அநேக ஜனங்களுக்கு வேலையும் கிடைத்து வருவதைப்பற்றிச் சிலநாட்டுக்கோட்டைச்செட்டிமார்கள் காளேஸ்வரமில்லை ஸ்தாபித்து நல்ல லாபத்தையும், அநேக ஜனங்களுக்கு வேலை கிடைத்து வருவதன்றியில், மத்தியில் ஸ்தாபித்த

மால்மில் என்னும் நூனிசெய்யும் கம்பெனியிலும் அநேக ஜனங்கள் உழைக்க, மேற்சொன்ன நான்கு யந்திர சாலைகளின் பங்குக்காரர்களுக்கு நல்லலாபமும் பருத்திப் பயிரிடுவோருக்கு வருமான உற்சாகமும் அநேக ஆயிரம் வேலைகாரர்களுக்கு உத்தியோகமும் கிடைத்து வாழ்ந்து வருவதைக் காண்பதே நாயுடு அவர்கள் தம்முடைய உழைப்புக்குப் பிரதிபலனாக எண்ணி ஆனந்தம் கொண்டார். இம்மட்டோ. இயந்திர கருவிகளின் உபயோகத்தைப்பற்றி நாயுடு அவர்கள் மேட்டுப்பாளையம், வட்டமலைபாளையம், செங்காளிபாளையம், பாப்பநாய்க்கம் பாளையம், ஆவாரம்பாளையம், பிளைமேடு முதலான இடங்களுக்குப் போய் உபன்னியாசங்கள் செய்ததில் ஜனங்கள் உற்சாகமடைந்து பங்குகள் சேர்த்து பிளைமேடு முதலிய இடங்களில் ஜின்னிங் மில்லுகளையும், பருத்தியையும் கொட்டையையும் பிரிக்கும் யந்திரங்களையும் ஸ்தாபிக்க நல்ல லாபமும் அநேக ஏழைகளுக்கு வேலையும் கிடைத்துச் சுகப்படுகிறார்கள். அன்றியும் போத்தனூரில் ஸ்தாபித்திருக்கும் சர்க்கரை கம்பெனிக்கு நாயுடவர்களை ஓர் முக்கியஸ்தராகவும் முதல்டைரெக்டராகவும் இருந்து உழைத்தவர். இப்போது நாயுடு அவர்கள் கருத்தை அறிந்தே குனியமுத்தூரில் நெல்குத்தும் யந்திரசாலையும், வேறு இடங்களில் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களையும், ஓடு செய்யும் இயந்திரங்களையும், எண்ணெய்வடிக்கும் யந்திரங்களையும் ஸ்தாபித்துக்கொண்டு சுகப்படுகிறார்கள். இப்படி இயந்திர கருவிகளை ஸ்தாபிப்பதற்கு முதற்காரணராகிய நாயுடு அவர்கள் இத்தனை ஜனங்கள் அவைகளால் சுகப்பட்டு வாழ்வதைக் கண்டும் கேட்டும் தமது உழைப்பிற்குப் பிரதிபலனாகக் கொண்டு ஆனந்தம் அடைகிறார். ஆகவே திவ்விய தேசயாத்திரை செய்வதினால் அவ்வவ் விடங்களிலுள்ள வைதிக லெளகிக விஷயங்களைத் தெரிந்து ஆனந்த ..டவ தோடுகூடத் "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்னும் முறையின்படி திரவியப் பெருக்கையும் பெற்று இந்நாட்டார் சுதந்தர சுகவாசிகளாக வாழலாமென்பது திண்ணம், திண்ணமேயாம். இத்துடன் சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்கள் இந்தியாவின் வடக்கு, கிழக்கு, மேற்கு முதலான விடங்களில் செய்த திவ்விய தேசயாத்திரை சரித்திரத்தின் முதற்பாகம் முற்றிற்று. இனி நாயுடு அவர்கள் தென்தேசத்தில் செய்த திவ்விய தேசயாத்திரையை இதன் இரண்டாம் புத்தகத்தில் காணலாம். இந்தியா என்னும் திவ்விய தேசமாகிய தாய் உனக்கு மங்களம் உண்டாவதாக.